Commentary & Principles on Jane Austen's Pride & Prejudice

Volume IV

By Karmayogi

The Mother's Service Society
No 5 Puduvai Sivam Street
Venkata Nagar
Pondicherry, India
www.mssresearch.org, www.motherservice.org

© The Mother's Service Society, Pondicherry, India October 2017

CONTENT

Chapter 14: The Hunsford Trip comes to an End 3
ஹன்ஸ்போர்டில் தங்குவது முடிவடைதல்
Chapter 15: Elizabeth leaves Hunsford........ 88
ஹன்ஸ்போர்டிலிருந்து எலிசபெத் கிளம்புதல்
Chapter 16: Jane and Elizabeth Return Home 133
ஜேனும், எலிசபெத்தும் வீடு திரும்புதல்
Chapter 17: Elizabeth Confides in Jane 188
ஜேனிடம் எலிசபெத் வெளிப்படையாகப் பேசுதல்
Chapter 18: Lydia is Invited to Brighton 250
பிரைட்டனுக்கு வரும்படி லிடியாவிற்கு கிடைக்கும் அழைப்பு
Chapter 19: Elizabeth Visits Pemberley 363
பெம்பர்லிக்கு எலிசபெத் செல்லுதல்
Index 443

Chapter 14: The Hunsford Trip comes to an End
ஹன்ஸ்போர்டில் தங்குவது முடிவடைதல்

Summary: The next morning, Darcy and Fitzwilliam leave Rosings and Lady de Bourgh invites Collins and his family to dinner. She attempts to keep Elizabeth around for one more month, but Elizabeth is intent on leaving as planned. Elizabeth and Maria receive advice on how to pack for their return trip and travel home.
மறுநாள் காலை டார்சியும், பிட்ஸ்வில்லியமும் ரோசிங்ஸிலிருந்து கிளம்புகின்றனர். லேடி டீ பர்க் அவர்களையும் காலின்ஸ் குடும்பத்தையும் விருந்துண்ண அழைக்கிறாள். எலிசபெத்தை மேலும் ஒரு மாதத்திற்கு தங்க வைக்க முயற்சி செய்கிறாள். ஆனால் அவளோ தீர்மானம் செய்தபடி கிளம்ப ஆயத்தமாகிறாள். அவர்களை இறுதி வாரங்களில் அடிக்கடி விருந்துண்ண அழைத்து எவ்வாறு பிரயாணம் செய்ய வேண்டும், எவ்வாறு தங்களது உடைமைகளை பெட்டியில் அடுக்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி அவர்களுக்கு அறிவுரை வழங்குகிறாள்.

The two gentlemen left Rosings the next morning, and Mr. Collins having been in waiting near the lodges, to make them his parting obeisance, was able to bring home the pleasing intelligence of their appearing in very good health, and in as tolerable spirits as could be expected, after the melancholy scene so lately gone through at Rosings. To Rosings he then hastened, to console Lady Catherine and her daughter; and on his return brought back, with great satisfaction, a message from her ladyship, importing that she felt herself so dull as to make her very desirous of having them all to dine with her.
அவ்விரு ஆடவரும் மறுநாள் காலை ரோஸிங்ஸை விட்டு கிளம்பினர். அவர்கள் கிளம்பும் பொழுது, அவர்களுக்கு மரியாதை செலுத்தவேண்டி அவர்கள் தங்கியிருந்த விடுதிக்கு அருகே நின்றிருந்த காலின்ஸால், ரோஸிங்ஸில் நடந்த வருத்தம் தோய்ந்த விடைபெறுதல் காட்சிக்குப் பிறகு அவர்கள் எவ்வளவு உற்சாகமாக இருக்க முடியுமோ, அவ்வளவு உற்சாகமாகவும் நலமாகவும் காட்சியளித்தனர் என்ற சந்தோஷமான செய்தியை தன்னுடைய இல்லத்தில் இருப்பவர்களுக்குச் சொல்ல முடிந்தது. லேடி காதரினையும், அவளது மகளையும் சமாதானப்படுத்த அவன் ரோஸிங்ஸிற்கு விரைந்து சென்றான். திரும்பி வரும் பொழுது, லேடி காதரின் மிகவும் மனச்சோர்வுற்று இருந்ததினால் அனைவரும் விருந்துக்கு அங்கு வர வேண்டும் என்று ஆவலாக இருக்கிறாள் என்ற செய்தியை மிகுந்த திருப்தியுடன் கொண்டு வந்தான்.

1. The snob lives a vicarious life.
   குழைபவன் பிரதிநிதியாக வாழ்கிறான்.
2. one such a snob. He feels all the emotions his superiors feel. Also, he imagines emotions, service, pleasures they do not feel. The squeamishness, obsequiousness issue out of this loyalty. This is the nether side of loyalty, submission in the follower, the subordinate, the children, the wife, the citizen at large. One golden rule works everywhere: it is ultimately what determines is Man's personality. Man's personality has size, strength, intensity, structure, constitution, motives, skills, etc. This is what he inherits and pours into the mould of his own. Each man is unique in everything, he calls it his own. Nature fixes it, he nourishes it, he has the freedom to leave Nature behind and move into consciousness or being. Nature has smaller directing units of society, community, family. The snob becoming an individual is a landmark in social evolution. In the snob, lazy man, idiot, madman, one can find the greatest personal organisation. In all great works of His centre of life is his boss or superior. As it is a vital life, it lives on the excess energy coming from above. Collins is Shakespeare, there comes a fool, known for his wisdom. The creation of such a character in any fiction can be done only by great writers. He can emerge only into a great story. To know the story from his own point of view is to know it as exhaustively as the author has conceived. In Pride and Prejudice, in this sense, Mr. Collins is the most central character. Next in importance comes Mrs. Bennet who has raw energy untempered by any values of the Mind. Mr. Collins' send off to the two gentlemen and his reporting about it to Charlotte is one such episode. We see Mr. Collins in full performance.
   எஜமானனையும் அல்லது அவனுக்கு மேலே உள்ளவர்களையும் சுற்றியே அவனுடைய வாழ்க்கை இருக்கும். அது உணர்வுரீதியான வாழ்க்கை, ஆதலால் மேலிருந்து வரும் அதிகப்படியான சக்தியுடன் உயிர் வாழ்கிறது. காலின்ஸ் அது போல் வாழும் ஒருவன். மேலிருப்பவர்களின் எல்லா உணர்வுகளையும் அவனும் உணர்கிறான். அவர்கள் நினைத்துப் பார்க்காத உணர்ச்சிகள், சேவை மற்றும் இன்பங்களையும் அவன் கற்பனை செய்து கொள்கிறான். அவனுடைய விசுவாசத்தினால் பணிவாகவும் நன்றிக் கடன் தீர்ப்பவனாகவும் இருக்கிறான். தன்னை பின்பற்றுபவர், உடன் வேலை செய்பவர்கள், குழந்தை, மனைவி, குடிமக்கள் இவர்களிடம் பணிவது, விசுவாசத்தின் தாழ்ந்த நிலைகளாகும். தீர்மானமாக ஒரு சட்டம் எல்லா இடங்களிலும் செயல்படும். இறுதியாக தீர்மானிப்பது மனிதனின் ஆளுமையே. அளவு, வலிமை, அமைப்பு, தீவிரம், நோக்கங்கள், திறமை, இவை எல்லாம் மனிதனின் ஆளுமையில் உள்ளன. இதனை வழி வழியாகப் பெற்றுக் கொண்டு தன்னுடையதாக்கிக் கொள்கிறான். ஒவ்வொரு மனிதனுக்கும் எல்லாவற்றிலும் தனிச் சிறப்புண்டு, அதனை அவன் தன்னுடைய சுபாவம் என்கிறான். இயற்கை அவனிடம் பொருத்துவதை அவன் பேணிப் பாதுகாக்கிறான், அவனுக்கு

இயற்கையை விட்டு ஜீவியத்திற்கோ அல்லது ஜீவனுள்ளோ செல்வதற்கு சுதந்திரம் இருக்கிறது. சமூகம், சமுதாயம், குடும்பம் இவற்றை இயக்கும் சிறிய பிரிவுகள் இயற்கையில் உள்ளன. குழைவது, சமூகப் பரிணாமத்தில் தனிமனிதனாக மாறுவது, ஒரு அடையாளமாக மாறுகிறது. குழைபவனிடமும், சோம்பேறி, முட்டாள், பைத்தியக்காரன், இவர்களிடம் தனிப்பட்ட முறையில் சிறந்த ஒழுங்குமுறை இருக்கும். ஷேக்ஸ்பியரின் எல்லா சிறந்த நாவல்களிலும் மதிநுட்பத்தில் சிறந்தவன் எனப் பெயர் பெற்ற ஒரு முட்டாள் வருவான். இது போன்ற ஒரு கதாபாத்திரத்தை பெரிய எழுத்தாளர்களால்தான் உருவாக்க முடியும். அவனும் பெரிய படைப்பில்தான் வெளி வர முடியும். அவனுடைய கண்ணோட்டத்தில் கதையை புரிந்து கொள்வது கதாசிரியரின் எண்ணங்களை விரிவாக இந்த கதையில் புரிந்துகொள்வது போலாகும். இந்த விதத்தில் பார்த்தால் இக்கதையில் காலின்ஸ்தான் மையமான கதாபாத்திரம். அடுத்து வருவது திருமதி பென்னட், அவளுடைய சக்தி மனத்தின் பண்புகளினால் பாதிக்கப்படாமல் இருக்கிறது. அவ்விரு ஆடவர்களை காலின்ஸ் வழி அனுப்பிவிட்டு, அதை ஷார்லெட்டிடம் கூறுவது இது போன்ற ஒரு சம்பவம். காலின்ஸ் சுறுசுறுப்பாக செயல்படுவதைப் பார்க்கிறோம்.

3. Eating in rich houses is an occasion to overcome dullness.
   சோம்பேறித்தனத்தை வெல்வதற்கு செல்வந்தர்கள் வீட்டில் விருந்து உண்பது ஒரு சந்தர்ப்பமாக அமையும்.
4. Mr. Collins is a dull man, a personification of dullness, trying to remove the dullness from a household of organised dullness. Authority is organised dullness.
   காலின்ஸ் மந்த புத்தியின் உருவகமாக இருக்கிறான், முறைப்படுத்தப்பட்ட மந்த நிலையில் உள்ள ஒரு குடும்பத்தின் மந்த நிலையினை அகற்ற முயற்சி செய்கிறான். அதிகாரம் என்பது முறைப்படுத்தப்பட்டுள்ள மந்த நிலையாகும்.
5. "To make them the parting obeisance."
   Fulfillment arises when the force expresses in form – the swabhava formulating itself into its swarupa.
   This continues till the form becomes a perfect form.
   Socially we see superiority and inferiority; ethically it is right or wrong; spiritually it is each expressing its truth in force and form.
   All truths being equal, all men are equal.
   The honour of an aristocrat and the squeamishness of a snob are two expressions of the truth.
   Further he who expresses the falsehood and who does so his truth is not different.
   Falsehood is the truth of darkness.
   In carnatic music, there are 72 ragas.
   The acme of music can be expressed through any one of the ragas thus eliminating grades.
   From such a point of view Elizabeth and Lydia both are expressions of spirit.
   God resorted to creation for the delight of Self-discovery through Spiritual evolution.
   Spirit evolves from Inconscience to Superconscience.
   The movement from Brahman to Ishwara through Purusha is one fact of it.
   It can be seen in ego, Nature, divine Nature, the three stages of evolution.
   Ego is an attitude; Nature is a status.
   Ego is a self-ignored attitude; therefore, it can be withdrawn.
   Nature being an evolutionary status, it can be overcome only by evolution.
   What evolves is consciousness; but it is really the evolution of the Spirit.
   He calls His yoga the yoga of spiritual evolution.
   The same movement can also be understood as the reconciliation of the Individual, universal and the transcendent in their nodus of life.
   The separative divisions are many.
   It is Mind that divides.
   It is the ego that separates.
   The division proceeds till we reach the infinitesimal.
   The origin of the division is the apprehending Supermind.
   We witness it in Purusha-Prakriti.
   The parts of the being are thus divided.
   The planes are divided – gross, subtle, causal.
   Psychological ignorance is due to the division of the intra conscient, circumconscient.
   Mind is divided from the senses.
   The senses are further divided.
   The divisions continue till the cell is reached or the atom is touched.
   Every divided status becomes unique.
   In each unique situation Nature's evolution attempts perfection.

Perfection in form is completed by the Spirit.
Collins is a unique character trying to express higher education in the form of squeamish submissiveness to rank.
His waiting for the parting is the parting obeisance.
Farewell becoming obeisance is the social function changing into its psychological poise.
In Collins Jane Austen has produced a great character of a smaller mould.
Perhaps Charlotte has felt that greatness in £ 2000.
Collins belongs to the type of Falstaff only that he brings up the rear.
He is conscious of condescension.
Condescension becoming conscious in a small character is pomposity.
In his experience, which is his view, pompous behaviour is the perfect expression of status of wealth and education in low social context.
His self-oblivious self-righteousness is self-evident for this view.
His submissiveness is domination in disguise.
“அவர்கள் கிளம்பும்பொழுது அவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக.”
சக்தி, வடிவம் பெறும்பொழுது மனநிறைவு எழுகிறது.—சுபாவம், ஸ்வரூபமாக மாறுகிறது.
வடிவம், செம்மையான வடிவமாக மாறும்வரை இது தொடரும்.
சமூகத்தில் உயர்ந்ததையும், தாழ்ந்ததையும் நாம் பார்க்கிறோம்; நியாயப்படி இது சரி அல்லது தவறு; இவை ஒவ்வொன்றும் ஆன்மீகத்தில், அதனுடைய உண்மையை சக்தியிலும், வடிவத்திலும் வெளிப்படுத்துகிறது.
எல்லா உண்மைகளும் சமமாக இருக்கும்போது எல்லா மனிதர்களும் சமம்.
உயர்குடியினரின் மரியாதையும், குழைபவனின் பணிவும், உண்மையின் இரு வெளிப்பாடுகள்.
பொய்மையை வெளிப்படுத்துபவருக்கும், உண்மையை வெளிப்படுத்துபவருக்கும் வித்தியாசம் கிடையாது.
இருளின் உண்மையே பொய்மையாகும்.
கர்னாடக சங்கீதத்தில் 72 மேளகர்த்தா ராகங்கள் உண்டு.
எந்த ஒரு ராகத்தின் ஒரு சாயலின் மூலமும் இசையின் சிகரத்தை வெளிப்படுத்தலாம்.
இந்தக் கண்ணோட்டத்தில் எலிசபெத்தும், லிடியாவும் ஆன்மாவின் வெளிப்பாடுகள்.
ஆன்மீகப் பரிணாமத்தின் மூலம் தன்னைத்தானே கண்டுபிடிப்பதில் உள்ள சந்தோஷத்திற்காகவே இறைவன் சிருஷ்டியில் ஈடுபட்டான்.
ஆன்மா பாதாளத்திலிருந்து பரமாத்மாவிற்கு வளர்கிறது.
புருஷன் மூலமாக பிரம்மம் இறைவனை நோக்கிச் செல்வது இதற்கு ஒரு சாட்சி.
பரிணாமத்தின் மூன்று நிலைகளான அகந்தை, சுபாவம், தெய்வீகச் சுபாவம் இவற்றில் இதனைப் பார்க்கலாம்.
அகந்தை ஒரு மனப்பான்மை; சுபாவம் என்பது ஒரு நிலை.
தன்னையே புறக்கணிக்கும் மனோபாவமே அகந்தையாகும்; அதனால் அதனை விலக்க முடியும்.
சுபாவம் வளரும் தன்மையுடையதால் அதனை பரிணாமத்தில்தான் வெற்றி கொள்ள முடியும்.
வெளிவருவது ஜீவியம்தான், ஆனால் அது உண்மையிலேயே ஆன்மாவின் பரிணாமம்.
பகவான் தன்னுடைய யோகத்தை ஆன்மீகப் பரிணாமம் என்கிறார்.
இதே இயக்கத்தை தனிமனிதன், பிரபஞ்சம், பிரம்மம் இவைகளுடைய மையத்தின் சமாதானம் எனவும் புரிந்து கொள்ளலாம்.
பல பிரிவினைகள் உள்ளன.
மனம் பகுக்கிறது.
அகந்தை பிரிக்கிறது.
மிகச் சிறியதாகும்வரை பகுப்பது தொடர்கிறது.
பிரிவினையின் பிறப்பிடம் வரப்போகும் (apprehending) சத்திய ஜீவியம்.
இதனை நாம் புருஷ-பிரகருதியில் பார்க்கலாம்.
ஜீவனின் பகுதிகள் இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன.
நிலைகள்—ஜடம், சூட்சுமம், காரணம் என்று பிரிக்கப்பட்டுள்ளன.
மனோரீதியான அஞ்ஞானத்திற்கு காரணம், கரணங்களின் ஜீவியத்திற்கும் சூழலின் ஜீவியத்திற்கும் உள்ள பிரிவினையே ஆகும்.
புலன்களிலிருந்து மனம் பிரிக்கப்பட்டுள்ளது.
புலன்கள் மேலும் பிரிக்கப்பட்டுள்ளன.
இந்தப் பிரிவினை உயிரணு அல்லது அணுவினைத் தொடும்வரை தொடரும்.
பிரிந்த ஒவ்வொரு நிலையும் தனிச் சிறப்பு வாய்ந்தவை.
ஒவ்வொரு சிறப்புவாய்ந்த நிலையிலும் இயற்கையின் பரிணாமம் பூரணத்துவத்தை எய்த முயலுகிறது.
வடிவத்தில் பூரணத்துவம் ஆன்மாவால் பூர்த்தி செய்யப்படுகிறது.
உயர் கல்வியை அதிகாரத்திற்கு பணிவுடன் அடிபணிவது என்ற வடிவத்தில் வெளிப்படுத்த முயலும் வித்தியாசமான மனிதன் காலின்ஸ்.
விடை அளிப்பதற்காகக் காத்திருப்பது விடை அளிக்கும் மரியாதையாகும்.

விடைபெறுவது மரியாதையாக மாறுவது சமூக நிகழ்ச்சி மனோரீதியான நிலையாகிறது.
சிறிய வடிவத்தில் பெரிய குணாதிசயத்தை காலின்ஸ் பாத்திரத்தில் ஜேன் ஆஸ்டின் உருவாக்கியுள்ளாள்.
ஷார்லெட் £ 2000ல், ஒருவேளை அந்தச் சிறப்பை உணர்ந்திருப்பாள்.
ஷேக்ஸ்பியர் எழுதிய கதையில் வரும் பால்ஸ்டாப் போலானவன் காலின்ஸ், ஆனால் கடைசி வரிசையில் நிற்கும் வகையைச் சேர்ந்தவன்.
அவன் காட்டும் பரிவு அவனுக்குத் தெரிந்திருந்தது.
பரிவை வெளிப்படையாக உணர்வது சிறிய மனிதனிடத்து பகட்டாக வெளிப்படும்.
தாழ்ந்த சமுதாயக் கண்ணோட்டத்தில், பணம் மற்றும் கல்வியின் அந்தஸ்தினை சரியாக வெளிப்படுத்துவது பகட்டான நடத்தையே என்பது அவனது அனுபவம், அதுவே அவனுடைய கருத்துமாகும்.
தன்னையே அறிந்து கொள்ளாது, தான் சரி என்ற எண்ணம், இந்த கண்ணோட்டத்திற்காக அவனிடம் இருப்பது இங்கு வெளிப்படையாகத் தெரிகிறது.
அவனுடைய அடிபணிதல் மறைந்திருக்கும் அதிகாரமே.

6. "After the melancholy scene so lately gone through."
Man sees what he believes in, even if it is not there.
The extent to which senses can distort is seen in the pencil in the water.
Here, of course, the light rays are deflected.
To see affability in a Lady Catherine, one should be a genius of deception.
Now he can see melancholy in Darcy's parting from his aunt.
He has the genius to see and sense what he thinks and his thoughts are resourceful.
Raghukalam, if it has real power, it must affect all.
It is real in India, not in England.
Even in India it is not real to the westerner.
Mind in Europe rises above life.
Vital belief in India makes life act according to their belief.
Collins, in spite of his education, remains vital.
Mental Man has no way of knowing the reality of Supermind at all.
It is His grace that makes Man sees the presence of Supermind in one act.
Our concentration goes deep enough to solve a problem, never keeps us for a while at that plane to convince us of its Reality.
The Reality for Man who sees his problems vanish by Supermind is the mental plane he is in, not the descent of power from above.
His writings offer us the power to see directly by the sense Mind, but we end up understanding the explanation.
We do not identify with the power of the atmosphere of His writings, but we read the sentences.
David was able to know Agnes to be his good angel, not able to see her love.
Her manners were more real than what she was to him in her inner truth.
The difference in their status turned off his Mind.
To wipe off such a difference, Mother gives us Her TOUCH. We still do not see it.
Man sees the fast multiplying Money, not the fast growing Individual.
A Man's education can be seen on his face, but not all see it.
A Man's mental capacity is very much around him, but no one sees it.
Man can know the Absolute, as the faculty to know it must be in him and is in him.
Man sees what he chooses to see; Shankara saw illusion.
Man can raise himself to Supermind, but transformation requires descent.
Darcy's transformation was made possible by the descent of the Force from the French Revolution.
Elizabeth's change has the flavour of self-exceeding Nature in that she exerted herself to rise out of vital infatuation to Mental rationality.
Charlotte could not even concede the falseness of her position mentally.
Left to itself life will stay put for centuries and millennia.
In that evolutionary sense, this is truly the Hour of God.
Her grace laden declaration that She holds herself responsible to all those whom She has seen even for a second has the other side to it.
He says those who are strong but are not ready will be crushed under the wine press.
Therefore the Force knows no gradual change. It can act only as a lightning flash.
To go deep down crossing the surface Mind has no alternative.
It is not only into the inner Mind one enters. He enters the subliminal and touches the Psychic.

No devotee can say it is not possible for him to meet the psychic action, if not the Psychic, once.

For the vast majority of the population, it matters not.

“வருத்தம் தோய்ந்த காட்சி நடந்து முடிந்த பிறகு.”

ஒரு விஷயம் அங்கு இல்லாவிடினும் மனிதன் தான் நம்புவதையே பார்க்கிறான்.

எழுதுகோல் நீரில் வளைந்து இருப்பது போல் பார்ப்பது, நமது புலன்கள் எவ்வளவு தூரம் மாற்றிக் காட்டவல்லது என்பதைக் காண்பிக்கின்றது.

இங்கு ஒளிக் கதிர்கள் திசை மாறுவதால் அவ்வாறு தெரிகிறது.

லேடி காதரினிடத்து பிரியத்தைப் பார்ப்பதற்கு, ஒருவர் ஏமாற்றுவதில் வல்லவராக இருக்க வேண்டும்.

சித்தியிடமிருந்து பிரியும்பொழுது டார்சிக்கு வருத்தம் எழுவதை அவன் பார்க்கிறான்.

அவன் நினைப்பதை பார்ப்பதற்கும், உணர்வதற்கும் உரிய மேதாவித்தனம் அவனிடம் இருக்கிறது, அவனுடைய எண்ணங்கள் வளமானவை.

ராகு காலத்திற்கு உண்மையான சக்தி இருந்தால் எல்லோரையும் பாதிக்க வேண்டும்.

இந்தியாவில் அது உண்மை, இங்கிலாந்தில் அல்ல.

இந்தியாவில் இருக்கும் ஐரோப்பியர்களுக்கு இது உண்மையல்ல.

ஐரோப்பாவில் மனம் வாழ்வுக்கு மேல் உயர்கிறது.

உணர்வுகளின் நம்பிக்கை, இந்தியாவில் அவர்களது நம்பிக்கைக்கு ஏற்றார் போல் வாழ்வை செயல்பட வைக்கிறது.

கல்வி பெற்றிருந்தாலும் காலின்ஸ் உணர்வுபூர்வமாக இருக்கிறான்.

மனத்தாலான மனிதன் சத்திய ஜீவியத்தின் உண்மை நிலையை அறியவே முடியாது.

இறைவனின் அருளே ஒரு செயலில் சத்தியஜீவியம் இருப்பதை மனிதனைப் பார்க்க வைக்கிறது.

ஒரு பிரச்சினையைத் தீர்க்கும் அளவிற்கு நமது மன ஒருமைப்பாடு ஆழத்திற்குச் செல்கிறது, ஆனால் அந்நிலையின் உண்மையை நம்ப வைக்கும் அளவிற்கு அங்கு நம்மை தங்கவிடாது.

சத்தியஜீவியத்தால் அவனுடைய பிரச்சினைகள் தீருவதைப் பார்க்கும் ஒரு மனிதனுக்கு உண்மை அவன் இருக்கும் மனத்தின் நிலை ஆகும், மேலிருந்து இறங்கும் சக்தி அல்ல.

நம்முடைய உணர்வின் மனத்தால் நேரடியாகப் புரிந்துகொள்ள, பகவானின் எழத்துக்கள் நமக்கு அச்சக்தியை அளிக்கிறது, ஆனால் நாம் விளக்கங்களையே புரிந்து கொள்கிறோம்.

அவருடைய எழுத்துக்களின் சூழலின் சக்தியோடு நாம் இணைவதில்லை, மாறாக வாக்கியங்களாக படிக்கின்றோம்.

ஆக்னஸ்தான் தனது தேவதை என டேவிட்டிற்குப் புரிந்தது, அவளுடைய காதலை பார்க்க முடியவில்லை.

அவனைத் தன்னுள் எவ்வாறு உணர்ந்தாளோ அதைவிட உண்மையாக இருந்தது அவளுடைய நடத்தைகள்.

அந்தஸ்தில் அவர்களுக்குள் இருந்த வித்தியாசத்தினால் அவன் புறக்கணித்தான்.

அது போன்ற ஒரு வித்தியாசத்தை அழிக்க அன்னை தனது முத்திரையைப் பதிக்கிறார். அதற்குப் பிறகும் நம்மால் அதைப் பார்க்க முடிவதில்லை.

பெருகும் பணத்தை மனிதன் பார்க்கிறான், வேகமாக வளரும் தனிமனிதனைப் பார்ப்பதில்லை.

மனிதனின் முகத்தில் கல்வி அறிவு தெரியும், ஆனால் எல்லோரும் அதைப் பார்ப்பதில்லை.

ஒரு மனிதனின் மனத்தின் திறமை அவனைச் சுற்றி உள்ளது ஆனால் யாரும் அதைப் பார்ப்பதில்லை.

பிரம்மத்தை மனிதனால் அறிந்துகொள்ள முடியும், அத்திறன் அவனிடம் இருக்க வேண்டும், அவனிடம் இருக்கிறது.

மனிதன், தான் பார்க்க விரும்புவதைப் பார்ப்பான்; சங்கரர் கண்டது மாயை.

மனிதன் சத்தியஜீவியத்திற்கு உயரலாம் ஆனால் திருவுருமாற்றத்திற்கு மேலிருந்து கீழிறங்க வேண்டும்.

பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து இறங்கிய சக்தி, டார்சியின் திருவுருமாற்றத்தை சாத்தியமாக்கியது.

எலிசபெத்தின் மாற்றத்தில் தன்னையே மிஞ்சும் குணத்தின் தன்மை இருந்தது, அதில் அவள் உணர்வின் மயக்கத்தலிருந்து மனத்தின் விவேகத்திற்கு உயர பெரும் முயற்சி எடுத்தாள்.

ஷார்லெட்டினால், தன்னுடைய பொய்யான நிலைமையை மனத்தளவில்கூட ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

வாழ்க்கையை அதன் போக்கிலேயே விட்டால் அது பல நூற்றாண்டுகளுக்கும், ஆயிரம் வருடங்களுக்கும் அப்படியே தான் இருக்கும்.

அந்தப் பரிணாமப்படி பார்த்தால், இது உண்மையிலேயே இறைவன் வரும் தருணமாகும்.

யார் ஒருவரை ஒரு க்ஷண நேரத்திற்கு பார்த்திருந்தாலும் அவருடைய பொறுப்பை தான் ஏற்கிறேன் என்ற அன்னையின் அருள் பொதிந்த கூற்றுக்கு மறு பக்கம் உண்டு.

பலசாலியாக இருந்தும், தயார் நிலையில் இல்லாதவர்கள் நசுக்கப்படுவார்கள் என பகவான் கூறுகிறார்.

சக்தியினால் நிதானமாகச் செயல்பட முடியாது, அது மின்னல் போல் செயல்படும்.

மேல் மனத்தைத் தாண்டி கீழே செல்வதற்கு வேறு மாற்று கிடையாது.

உள் மனத்தை தொடுவதோடு, அவர் அடி மனத்திற்குச் சென்று சைத்திய புருஷனையும் தொடுவார்.

சைத்திய புருஷனை சந்திக்க முடியாமல் போகலாம், ஆனால் சைத்திய புருஷனின் செயலை ஒரு முறைகூட தன்னால் சந்திக்க இயலாது என்று எந்த அன்பராலும் கூற முடியாது.

மக்கள் பலருக்கும் இது ஒரு பொருட்டே அல்ல.

7. "Very desirous of having them all to dine with her."
   Recovery from a fall has various expressions. And this is one where the higher loss is compensated by a lower means.
   In Charlotte's goodwill, we see another version of this phenomenon and witness how it worked with her and why Elizabeth cannot avail of it.
   We may call it mercenary goodwill, as to accept her goodwill Jane and Elizabeth have to become mercenary.
   Another principle must be honoured here. A higher goal cannot be reached by a lower method.
   Both of them would have lost Bingley and Darcy had they resorted to fix him or honour Darcy's right to offend.
   One other principle is at work here; and it relates to the positive atmosphere.
   Her methods are low; but her intentions are good. There are two results.
   Charlotte's attitude that made her remain unmarried till 27, married Collins now.
   Both of them reached their goals through their own methods.
   One cannot be advised by another.
   One's own swabhava, the character, asserts.
   Intention is honoured by life in spite of these, according to the atmosphere.
   In a negative atmosphere, had they listened to Charlotte, she would have grievously wronged them.
   Various atmospheres determine various phenomena variously.
   Advantages become obstacles in changed planes or Times.
   Good intention of low consciousness gives low results, hurt or even ruin.
   Mrs. Bennet's wish that Lydia should enjoy totally ruined her.
   Great present loss due to treachery shields the object from greater treachery in future.
   It certainly protects him from those who now betrayed.
   Should the Man consciously allow himself to be betrayed, he will, in future, be protected from all treachery by anyone; it even can transform treachery into service.
   Still the atmosphere can generate ill will that cannot hurt because of his goodwill to those who betray.
   We see all this in Lydia's marriage with Wickham.
   The atmosphere is the ultimate determinant.
   Intention becomes motive at the level of being.
   There is becoming preceding it and succeeding it. It is being of the becoming that succeeds it.
   A work is done by energy or capacity or values or intention.
   Wrong intention appears to punish. It is the working of the energy of intention.
   Energy needs a long time, intention needs the least.
   There is no waste in Nature. Every drop of energy produces its own result.
   To read in Nature's work social goals is to write one language according to the grammar of another language.
   Idioms are the embellished excellences in any language because the idiom is the sensitive grammar of linguistic beauty.
   In periods of transition tyranny changes position while tyranny remains.
   The changing time changes the recipient; it has no power to change tyranny.
   Qualities can be transformed, not changed.
   Transformation is done by the atmosphere in general and by the attitude in particular.
   As we know the Inconscient is the Superconscient in darkness, the idiot is the genius in ignorance.
   At any given moment everyone is a genius, everything is a Marvel for a vision of the evolving soul.
   This vision must be able to see in the first scene of this story, the final outcome in live potential.
   A princess interviewed by a prince across a curtain saw his toe under the curtain.
   She drew his picture by seeing the toe.
   Indian Freedom was won by Sri Aurobindo through non-violence.
   World War was won by Him to secure the Freedom of India through the archenemy of India.
   A womanizing husband makes the wife a paragon of virtue in a positive cultural atmosphere.
   Good cannot lose its goodness without its own consent.
   "எல்லோருடனும் விருந்துண்ண அவள் ஆவலாக இருக்கிறாள்."
   வீழ்ச்சியிலிருந்து மீளும்பொழுது பலவிதமான மன வெளிப்பாடுகள் இருக்கும். தாழ்ந்த வழியில் உயர்ந்த நஷ்டத்தை சரிகட்ட முயலும் வழிகளில் இது ஒன்றாகும்.
   ஷார்லெட்டின் நல்லெண்ணத்தில் இந்த நிகழ்ச்சியின் மற்றொரு வடிவத்தை நாம் பார்க்கிறோம், அது எவ்வாறு அவளுக்கு வேலை செய்தது, ஏன் எலிசபெத்தால் இதனை உபயோகப்படுத்திக்கொள்ள முடியவில்லை என்பதையும் நாம் பார்க்கிறோம்.

ஆதாய மனப்பான்மை கொண்ட நல்லெண்ணம் என நாம் இதை அழைக்கலாம், அவளுடைய நல்லெண்ணத்தைப் பெற வேண்டுமெனில் ஜேனும் எலிசபெத்தும் ஆதாய மனப்பான்மை கொண்டவர்களாக மாற வேண்டும்.

வேறு ஒரு விதியும் இங்கு மதிக்கப்பட வேண்டும். தாழ்ந்த முறையால் உயர்ந்த இலக்கை அடைய முடியாது.

பிங்கிலியை நாடி அவள் சென்றிருந்தாலோ, டார்சியின் அவமதிக்கும் உரிமையை மதித்திருந்தாலோ, அவர்கள் இருவரும் பிங்கிலியையும் டார்சியையும் இழந்திருப்பார்கள்.

மற்றொரு கோட்பாடும் இங்கு வேலை செய்கிறது; அது நேர்மறையான சூழலுடன் தொடர்புகொள்கிறது. அவளுடைய வழிமுறைகள் தாழ்ந்ததாக இருக்கின்றன; ஆனால் அவளுடைய நோக்கங்கள் நல்லதாக உள்ளன. இரண்டு பலன்கள் கிடைக்கின்றன.

ஷார்லெட், தன்னுடைய மனப்பான்மையால் இருபத்தி ஏழு வயதுவரை திருமணம் ஆகாமல் இருந்தவள், இப்பொழுது காலின்ஸை திருமணம் செய்து கொண்டாள்.

இருவருமே தத்தம் வழிகளில் இலக்கினை அடைந்தனர்.

ஒருவர் மற்றவரால் அறிவுறுத்தப்பட முடியாது.

ஒருவருடைய சொந்த சுபாவம் வலியுறுத்தும்.

இவை எல்லாம் இருந்தும் சூழலுக்கு ஏற்றார் போல், நோக்கத்திற்கு வாழ்வு மரியாதை அளிக்கும்.

எதிர்மறையான சூழலில், அவர்கள் ஷார்லெட் சொற்பேச்சு கேட்டிருந்தால் அவர்களுக்கு அவள் மோசமாக தவறிழைத்திருப்பாள்.

பலவிதமான சூழல்கள் பலவிதமான நிகழ்வுகளை பலவிதமாகத் தீர்மானிக்கும்.

மாறிய நிலைகளிலும் அல்லது காலங்களிலும் அனுகூலங்கள் தடையாக மாறிவிடுகின்றன.

தாழ்ந்த ஜீவியத்தின் நல்ல நோக்கம் தாழ்ந்த பலன்களைத் தரும், புண்படுத்தும் அல்லது அழிவையும் ஏற்படுத்தும்.

லிடியா சந்தோஷமாக இருக்க வேண்டும் என்கிற திருமதி பென்னட்டின் ஆசை முழுமையாக அவளை நாசப்படுத்தியது.

நம்பிக்கைத் துரோகத்தினால் ஏற்பட்ட தற்பொழுதைய பெரிய நஷ்டம், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மேலும் பெரிய நம்பிக்கைத் துரோகத்திலிருந்து ஒருவரைப் பாதுகாக்கிறது.

இப்பொழுது துரோகம் செய்தவர்களிடமிருந்து அது அவனை கண்டிப்பாக காப்பாற்றுகிறது.

தனக்கு துரோகம் செய்வதற்கு ஒருவன் தெரிந்தே அனுமதித்தால், எதிர்காலத்தில் யாரும் அவனுக்கு நம்பிக்கை துரோகம் செய்ய முடியாதபடி அவன் காப்பாற்றப்படுவான், அது நம்பிக்கை துரோகத்தை சேவையாக மாற்றவும் வல்லது.

துரோகம் செய்தவர்களிடம் அவனுக்கு நல்லெண்ணம் இருப்பதால், இன்னமும் சூழல் ஏற்படுத்தும் கெட்ட எண்ணம் அவனை பாதிக்காது.

விக்காமுடன் நடந்த லிடியாவின் திருமணத்தில் நாம் இவற்றை பார்க்கலாம்.

முடிவாகத் தீர்மானிப்பது சூழலே.

ஜீவனின் நிலையில் உள் எண்ணம் நோக்கமாக மாறுகிறது.

அதற்கு முன்னும் பின்னும் உள்ளது ஜீவாத்மா. சைத்திய புருஷன் அதை பின் தொடர்கிறது.

சக்தி அல்லது திறமை அல்லது பண்புகள் அல்லது நோக்கத்தால் ஒரு வேலை செய்யப்படுகிறது.

தவறான நோக்கம் தண்டனை அளிப்பதுபோல் தோன்றும். நோக்கத்தின் சக்தி செய்யும் வேலை அது.

சக்திக்கு நீண்ட நேரம் வேண்டும், நோக்கத்திற்கு மிகக் குறைந்த நேரமே போதுமானது.

இயற்கையில் விரயம் கிடையாது. ஒவ்வொரு துளி சக்தியும் அதற்கேற்றார் போல் பலனைத் தரும்.

இயற்கையில் சமூக இலக்குகளைக் காண முயல்வது, ஒரு மொழியை மற்றொரு மொழியின் இலக்கணத்தில் எழுதுவது போன்றது.

நடைமுறையில் வழங்கும் சொற்றொடர்கள் ஒரு மொழியின் அழகான சிறப்பம்சமாகும், ஏனெனில் சொற்றொடர்களே ஒரு மொழியின் அழகின் உணர்வுபூர்வமான இலக்கணம் ஆகும்.

மாறும் காலங்களில் கொடுமை இடம் மாறுகிறதே தவிர நீடிக்கத்தான் செய்கிறது.

மாறும் காலங்களில் பெறுபவர் மாறுகிறாரே தவிர, கொடுமையை மாற்ற அதற்கு அதிகாரம் இல்லை.

தரத்தை திருவுருமாற்றலாம், மாற்ற முடியாது.

திருவுருமாற்றம் பொதுவாக சூழல் மூலமும் குறிப்பாக மனப்பான்மை மூலமும் நடைபெறுகிறது.

இருளில் பரமாத்மாவே பாதாளமாக இருப்பது நமக்குத் தெரியும், முட்டாள் அறியாமையில் இருக்கும் மேதாவி ஆவான்.

வளரும் ஆன்மாவின் பார்வையில் எந்த ஒரு தருணத்திலும் எல்லோரும் மேதைதான், எல்லாமும் அற்புதம்தான்.

இப்பார்வைக்கு, இறுதியாக நடக்கப் போவதை இக்கதையின் முதல் காட்சியிலேயே உயிரோட்டத்துடன் பார்க்க முடிய வேண்டும்.

திரைக்குப் பின் நின்று கொண்டு இளவரசியை பேட்டி கண்ட இளவரசனின் கால் பெரு விரலை அவள் கண்டாள்.

கால் பெரு விரலைப் பார்த்து அவனுடைய உருவத்தை வரைந்தாள்.

அஹிம்சையின் மூலம் இந்தியச் சுதந்திரத்தை ஸ்ரீ அரவிந்தர் பெற்றார்.

இந்தியாவின் தலையாய எதிரி மூலம் இந்தியாவின் சுதந்திரத்திற்காக பகவான் உலகப் போரை ஜெயித்தார்.
பெண் பித்தனாக இருக்கும் கணவன், நேர்மறையான கலாச்சாரச் சூழலில், மனைவியை உயர்பண்பில் சிறந்தவளாக மாற்றுகிறார்.
நல்லவை தனது அனுமதியின்றி நல்லதை இழக்காது.

Elizabeth could not see Lady Catherine without recollecting that, had she chosen it, she might by this time have been presented to her as her future niece; nor could she think, without a smile, of what her ladyship's indignation would have been. "What would she have said? How would she have behaved?" Were questions with which she amused herself.

தான் விரும்பியிருந்தால், இந்நேரம் தன்னை லேடி காதரினுடைய வருங்கால மருமகளாக அறிவித்திருக்க முடியும் என்ற எண்ணம் தோன்றாமல் அவளை எலிசபெத்தால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. மேலும் அவளுடைய கோபம் என்னவாக இருந்திருக்கும் என்பதையும் நினைத்துப் பார்க்கும்பொழுது அவளால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. “அவள் என்ன சொல்லியிருப்பாள்? எப்படி நடந்து கொண்டிருந்திருப்பாள்?” என்ற கேள்விகளால் எலிசபெத் சந்தோஷமடைந்தாள்.

8. At Longbourn, Elizabeth heard Lady Catherine’s answers to her questions.
எலிசபெத் தன்னுடைய கேள்விகளுக்கு லேடி காதரினுடைய பதிலை லாங்பர்னில் பெற்றாள்.
9. “Elizabeth could have been her future niece.”

Survival being so demanding, opportunities missed make no impression.
Most, almost all, may not remember a capital opportunity they missed.
It is true men are ambitious.
It is equally true that the instinct of survival overcomes the urge to be ambitious.
Emotions like ambition, jealousy, imitation, competition are keenly sharp among people of the same social status.
These emotions begin to be thinner as the social distance increases.
Such a distance between Darcy and Elizabeth is exceedingly great.
No wonder she never seriously considered the fact that he proposed to her.
The above self-commentary is feeble in strength, is almost a whisper in the dream.
To be jealous is to be socially alive, though negatively.
That which gives energy to emotions is the context.
We see it as social context, but it is really an emotional context.
USA became fabulously wealthy by 1850. Till 1950 Europe was not aware of the American existence, much less the American prosperity.
All the conditions of living whether affluence or squalid misery become simple non-existing social facts that provoke no thought or even recognition.
Non-attainability of a rich condition results in a response of insensibility.
To Kitty and Lydia, Bingley and Darcy were immaterial.
Kitty did not remember Darcy’s name on his visit to Longbourn.
We hear of no comment on Bingley from the entire village that suggests a competitive sense.
Darcy was in nobody’s thoughts.
Even in Jane’s ‘impossible’ on hearing of Elizabeth’s engagement, we can hear distant echoes of this attitude.
Mr. Bennet’s objection to his daughter about marrying Darcy was genuine no doubt.
When we consider the total absence of surprise on such a fact from him, we begin to think he never could consider it as a possibility.
We are told of no response to this engagement from Mary or Kitty or even Lydia.
No one including Caroline, with the sole exception of shrewd Charlotte, even suspected his interest in Elizabeth.
Caroline knew of it out of his mouth.
Man in love would rather not speak of his love to anyone.
The opposite of his considering every issue from her point of view is total.
The presence of these two opposite motives both powerful is seen in one exception which here is his telling Caroline.
That it caught Charlotte’s attention shows how saturated is her observation of Men’s interest in women because of her neglected condition.
She has no mental occupation like Mary to engage her energies.
Maybe she considered every bachelor as an eligible candidate for her.
Jane Austen suggests that such a possibility entered her consideration as soon as he was rejected by Elizabeth.
Her father’s earning a knighthood from his position in trade suggests the strong streak of ambition that lurked in him in spite of his empty head.
Society’s ignoring someone becoming utter neglect keenly awakes all the inner silent faculties.

Life gave her a rich buffoon. She arrived at an intelligent working compromise by encouraging him in his own ways in the garden.

Had she permitted him to get on her nerves and endeavoured to make a psychological growth, she would have earned him a bishopric.

“எலிசபெத் அவளுடைய எதிர்கால மருமாளாக இருந்திருப்பாள்.”

உயிர்வாழ்வது அவ்வளவு கடினமாக இருப்பதால், வாய்ப்புகளை நழுவ விடுவது எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.

பலரும், ஏன் எல்லோருமே, ஒரு முக்கியமான வாய்ப்பை தவற விட்டதை மறந்து விடுவர்.

மனிதர்கள் பேராசை உள்ளவர்கள் என்பது உண்மை.

உயிர்வாழ வேண்டும் என்கிற உள்ளுணர்வு பேராசையை வெற்றி கொண்டு விடும் என்பதும் உண்மைதான்.

பேராசை, பொறாமை, மற்றவரைப்போல் செயல்படுவது, போட்டி போன்ற உணர்ச்சிகள் ஒரே சமூக அந்தஸ்தில் இருப்பவர்களிடையே மிகவும் பலமாக இருக்கும்.

சமூக இடைவெளி அதிகரிக்கும்பொழுது இந்த உணர்ச்சிகள் வலுவிழந்து போகின்றன.

டார்சி எலிசபெத்திடையே இருக்கும் இது போன்ற இடைவெளி மிகவும் அதிகமானது.

அவன் தன்னிடம் திருமண வேண்டுகோள் விடுத்ததை, அவள் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

மேலே கூறப்பட்டுள்ள சுய விமரிசனம் மிகவும் பலவீனமானது, கனவில் சப்தமில்லாது பேசுவது போன்றது.

எதிர்மறையாக இருந்தாலும், சமூகத்தில் சுறுசுறுப்பாக இருப்பதற்கு அடையாளம் பொறாமைப்படுவது.

ஒரு விஷயமே உணர்ச்சிகளுக்கு சக்தியை அளிக்கிறது.

நாம் அதனை சமூகத்தில் பார்க்கிறோம், ஆனால் அது உண்மையிலேயே உணர்ச்சிகளுக்குரியது.

1850ல் அமெரிக்கா நம்பமுடியாத அளவிற்கு பணக்கார நாடாக விளங்கியது. 1950வரை அமெரிக்கா என்ற ஒரு நாடு இருப்பதையே ஐரோப்பியர்கள் உணரவில்லை, அமெரிக்காவின் செல்வ வளத்தைப் பற்றியும் தெரிந்திருக்கவில்லை.

வசதியாகவோ அல்லது மிகவும் வறுமையாகவோ இருக்கும் எல்லா வாழ்க்கை நிலைகளும், எந்த வித எண்ணங்களையும் தூண்டாமல், ஏன் அங்கீகாரமும் கிடைக்காமல் இருக்கும் எளிய சமூக விவரங்களாக மாறிவிடும்.

செல்வச் செழிப்பை அடைய முடியாதபொழுது அங்கு மடமை எழுகிறது.

கிட்டிக்கும் லிடியாவிற்கும், பிங்கிலியும் டார்சியும் முக்கியம் அல்ல.

லாங்பர்னுக்கு டார்சி வரும்பொழுது அவன் பெயர்கூட கிட்டிக்கு ஞாபகம் இல்லை.

கிராமம் முழுவதிலும் பிங்கிலியைப் பற்றி ஒரு விமரிசனம்கூட நாம் கேட்பதில்லை, இது ஒரு போட்டி உணர்வைக் காண்பிக்கிறது.

டார்சி யார் மனதிலும் இல்லை.

எலிசபெத்துடன் திருமணம் உறுதியான பிறகும் ஜேன், ‘நடக்கவே முடியாதது’ என்று கூறுவது, இந்த மனோபாவத்தை காட்டுகிறது.

தன் மகள், டார்சியை திருமணம் செய்து கொள்வதில் திரு பென்னட் தெரிவித்த ஆட்சேபணை உண்மையானது.

இது போன்ற ஒரு செய்தி அவனிடமிருந்து கிடைத்தவுடன் அவரிடம் எந்த வித ஆச்சரியமும் எழாதது, இது சாத்தியமாகும் என அவர் ஒரு பொழுதும் கருதவே இல்லை என நம்மை நினைக்க வைக்கிறது.

இந்த திருமண உறுதிக்கு மேரியிடமிருந்தோ, கிட்டியிடமிருந்தோ அல்லது லிடியாவிடமிருந்துகூட எந்த வித பதிலும் வரவில்லை என்று நமக்குத் தெரிகிறது.

கூர்மையான புத்தியுடைய ஷார்லெட்டைத் தவிர காரலின் உள்பட எவருக்கும் அவனுக்கு, எலிசபெத்திடம் நாட்டம் இருக்கக்கூடும் என்று சந்தேகம் எழவில்லை.

அவனிடமிருந்தே, காரலினுக்குத் தெரிய வந்தது.

காதலிக்கும் மனிதன், தன் காதலை பற்றி யாரிடமும் பேச விரும்பமாட்டான்.

மாறாக, அவளுடைய கண்ணோட்டத்தில் அவன் எல்லாவற்றையும் கருதுவது முழுமையாக இருந்தது.

மிகவும் வலிமையாக இருக்கும் இவ்விரண்டு நேர்மாறான நோக்கங்களை அவன் காரலினிடம் கூறுவதை ஒரு விதிவிலக்காகப் பார்க்கிறோம்.

ஷார்லெட்டின் கவனத்தை மட்டும் ஈர்த்த இச்சம்பவம், அவளுடைய புறக்கணிக்கப்பட்ட நிலையின் காரணமாக ஆண்களுக்கு பெண்களிடம் நாட்டம் இருப்பதை கூர்ந்து கவனிக்கும் திறன் அவளிடம் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதைக் காண்பிக்கின்றது.

அவளுடைய சக்தியை செலவழிக்க அவள் மேரியைப் போல் மனத்தால் ஆக்கிரமிக்கப்படவில்லை.

திருமணம் ஆகாத ஒவ்வொரு ஆணும் அவளுக்கு உகந்த நபராக இருப்பான் என அவள் நினைத்திருக்கலாம்.

எலிசபெத் காலின்ஸை நிராகரித்தவுடன் தனக்கு அந்த வாய்ப்பு கிடைக்கும் என அவள் எதிர்பார்த்திருக்கலாம் என ஜேன் ஆஸ்டின் கூறுகிறாள்.

வியாபாரத்தின் மூலம் ‘ஸர்’ என்ற பட்டத்தை வாங்கியிருந்த அவளது தகப்பனாரின் நிலை, அவர் முட்டாளாக இருந்தும், அவரிடம் ஒரு பெரிய ஆசையைத் தூண்டியது.

சமூகத்தால் ஒருவர் அலட்சியப்படுத்தப்பட்டு முழுவதுமாகப் புறக்கணிக்கப்பட்டால், அது அவருள் அமைதியாக இருக்கும் எல்லாத் திறமைகளையும் தட்டி எழுப்பும்.
வாழ்க்கை அவளுக்கு பணக்கார கோமாளியைக் கொடுத்தது. அவள் அதனை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொண்டு அவனை, அவனுக்கு விருப்பமான தோட்ட வேலையில் ஈடுபட உற்சாகப்படுத்தினாள்.
தன்னுடைய உணர்ச்சிகளில் அவனை ஏற்றுக் கொண்டு, அவனை மனரீதியாக உயர்த்த முயற்சி செய்திருந்தால், அவனுக்கு பாதிரியார் வேலையை வாங்கிக் கொடுத்திருப்பாள்.

10. "Nor could she think without a smile of what her Ladyship's indignation would have been."
Her thoughts of such nature energized her Ladyship to call at Longbourn.
No thought is without a sequence. No event is unindicated earlier.
Ordinarily after such a proposal, even if it is rejected, the lady's imagination would be on fire and thoughts would run in all directions in utter chaos.
It did not happen to her.
Such a turmoil of the Mind cancels any lingering possibility or at least brings in similar turmoil in the way of its consummation.
Her Mind not running like that, proved to be a pleasant preservative of its possibility.
Till Pemberley came into her view the proposal never recurred in her Mind.
One slight exception was her mentioning it mildly to Jane who dismissed it.
An event often lends itself to be explained in opposite ways.
The merit of the explanation lies in the confirmation of the coming events.
The idea of Darcy marrying Anne is unreal, a wishful thinking, an illusion.
Had it been a reality, Darcy's proposal, silently would have raised an intense irrational anger in the Lady against Elizabeth.
That it took so long for the Lady to flare-up shows there was no reality in the wish and by the efflux of time it lost any virility it had.
The rumour came to her through Collins, a rejected suitor of Elizabeth.
There really was no rumour. It was an unreal rumour fancied at the Lodge.
Because it came through Collins, it was bound to fail with Elizabeth as he had done with her.
Already the fear of Charlotte, having encouraged Elizabeth, that she might marry Darcy acted in sending the rumour to the Lady.
Such an initiative will have its opposite effect.
Initiatives are taken when the energy for accomplishment is less.
Originally, it was the goodwill of an old maid.
People who have consistently failed have in their subconscious wisdom the social experience that a good act may do them good.
Now that Charlotte was married that incentive had no life.
What was originally a goodwill now turned into fear of jealousy.
If that is true, in this conversion to negativity the energy considerably increases.
Negativity changes the direction of the result.
Increased energy quickens the result overcoming opposition.
We must note that the Lady expected Darcy to be disgusted with Elizabeth.
Elizabeth found it real in her senses that Darcy, when appealed to that aspect, would fall a victim. It carried in the subtle plane that much of reality.
The original goodwill that received a reward still had life through a negative initiative **to energise a receding possibility**.
Collins has a personality that completes.
His energy, being great, ends in completion. What is completed matters little.
He told Elizabeth that she might not receive another proposal.
Now, he sends her another proposal.
Analyzed from energy, intention, related characters, **the working of the laws of life**, the integral totality of the situation, each accomplishment will fully explain itself.
Behind Collins's proposal was the greatest energy possible as Mrs. Bennet combined hers with his.
That great energy helps explain the great result of Pemberley.
Collins never came in touch with Wickham.
Such a meeting or effective transaction would have energized Wickham.

Elizabeth's two encounters with Darcy and his aunt are the struggle of the new against the old.
Collins marrying Charlotte is a significant miniature of Darcy's marrying Elizabeth.
"லேடி காதரினுடைய கோபம் என்னவாக இருந்திருக்கும் என்று நினைத்துப் பார்க்கும்பொழுது அவளால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை."
அவளுடைய இந்த எண்ணங்கள்தான் லாங்பர்னுக்கு அழைப்பதற்குரிய சக்தியை லேடி காதரினுக்கு அளித்தது.
எண்ணங்கள் பின்னால் செயல்கள் தொடரும். எல்லா நிகழ்ச்சிகளுக்கும் முன் அறிவிப்பு இருக்கும்.
சாதாரணமாக இது போன்ற ஒரு திருமண வேண்டுகோளிற்குப் பிறகு அது நிராகரிக்கப்பட்டிருந்தாலும், ஒரு பெண்ணின் கற்பனைகள் கொழுந்து விட்டு எரியும், மேலும் எண்ணங்கள் எல்லா திசையிலும் முற்றிலும் குழப்பமாக சுற்றும்.
இவள் இவ்வாறு நடந்து கொள்ளவில்லை.
இது போன்ற மனக் கொந்தளிப்பு மீதமிருக்கும் எல்லா சாத்தியக்கூறுகளை ரத்து செய்து விடும் அல்லது அவ்விஷயம் பூர்த்தியாகும்பொழுது இது போன்ற ஒரு கொந்தளிப்பை கொண்டு வரும்.
அவளுடைய மனம் நிதானமாக இருப்பதால், அதனுடைய சாத்தியக் கூற்றினை இன்பமாகப் பாதுகாத்து வைக்கிறது.
பெம்பர்லியைப் பார்ப்பதற்கு முன் அவளுக்கு திருமண வேண்டுகோள் ஞாபகத்திற்கே வரவில்லை.
ஜேனிடம் லேசாக இதைப் பற்றி பேசியதுதான், ஒரு விதி விலக்காகும். ஆனால் ஜேன் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.
ஒரு நிகழ்ச்சியை நாம் நேர்மாறாகவும் விளக்கவேண்டி வருகிறது.
வரப் போகும் நிகழ்ச்சிகளின் உறுதிப்பாட்டில் விளக்கத்தின் பெருமை இருக்கிறது.
டார்சி, ஆன்-ஐ திருமணம் செய்து கொள்வான் என்கிற எண்ணம் உண்மை கிடையாது. ஆசைப்படுவது நடக்காதா என்கிற எண்ணம் ஒரு கற்பனை.
அது உண்மையாக இருப்பின் டார்சியின் திருமண வேண்டுகோள், எலிசபெத்திற்கு எதிராக லேடி காதரினுக்கு தீவிரமான விவேகமற்ற கோபத்தைக் கிளப்பியிருக்கும்.
லேடி காதரின் கொதித்து எழுவதற்கு நீண்ட நாட்கள் எடுத்துக் கொண்டது, அந்த விருப்பத்தில் உண்மை இல்லை என்பதைக் காண்பிக்கிறது. மேலும் காலம் செல்லச் செல்ல அவ்விருப்பத்தின் வீரியமும் குறைந்து விடுகிறது.
எலிசபெத்தால் நிராகரிக்கப்பட்ட காலின்ஸ் மூலம் அவளுக்கு செய்தி வந்தது.
உண்மையில் அங்கு வதந்தியே எழவில்லை. அது, லாட்ஜில் கற்பனையாக எழும்பிய உண்மையில்லாத வதந்தி ஆகும்.
எலிசெபெத்திடம் காலின்ஸ் தோற்றது போல, அவன் மூலமாக வந்த வதந்தியும் தோற்றுவிடும்.
எலிசபெத் டார்சியை திருமணம் செய்து கொண்டு விடுவாளோ என்ற ஷார்லெட்டின் பயமே லேடி காதரினுக்கு வதந்தியை அனுப்பியது. அவளே முன்னம் எலிசபெத்தை உற்சாகப்படுத்தி இருக்கிறாள்.
இது போன்ற தன்முனைப்பு நேர்மாறான பலனைத் தரும்.
சாதனை புரிவதற்கு சக்தி குறைவாக இருக்கும்பொழுது தன்முனைப்புகள் எடுக்கப்படுகின்றன.
முதலில் அது வயதான பெண்மணியின் நல்லெண்ணமாக இருந்தது.
தொடர்ந்து தோல்வியை சந்திக்கும் மனிதர்களின் ஆழ்மன அறிவில், நல்ல செயல் நல்லதையே செய்யும் என்ற சமூக அனுபவம் பதிந்திருக்கிறது.
இப்பொழுது ஷார்லெட்டிற்கு திருமணம் ஆகி விட்டபடியால் அந்த சலுகைக்கு உயிர் இல்லை.
முதலில் நல்லெண்ணமாக இருந்தது பின்னர் பொறாமையினால் பயமாக மாறிவிட்டது.
அது உண்மையெனில், கெட்ட எண்ணத்திற்கு மாறியது சக்தியை கணிசமாக அதிகரிக்கும்.
எதிர்மறையாகச் செயல்படும்பொழுது பலனின் திசை மாறுகிறது.
அதிகரிக்கும் சக்தி எதிர்ப்பையும் மீறி பலனை விரைவுபடுத்தும்.
எலிசபெத்தைக் கண்டால் டார்சிக்குப் பிடிக்காமல் போய்விடும் என லேடி காதரின் எதிர்பார்த்தாள் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.
அந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால், டார்சி அதற்கு பலியாவான் என்கிற உண்மை எலிசபெத்தின் புலன்களுக்குப் புரிந்தது. அந்த அளவு உண்மையாக அது சூட்சும நிலையில் நிலவியது.
எதிர்மறையான தன்முனைப்பு மூலம், **மறையும் சாத்தியக் கூறுகளுக்கு தெம்பு அளிக்க**, பலனைப் பெற்ற ஆரம்ப நல்லெண்ணத்திற்கு இன்னமும் உயிர் உள்ளது.
காலின்ஸிடம் இருக்கும் ஆளுமை பூர்த்தி செய்யவல்லது.
அவனுடைய சக்தி உயர்ந்ததாக இருப்பதால், பூரணம் பெறுகிறது. முடிவடைந்த விஷயம் ஒரு பொருட்டே அல்ல.
வேறொரு திருமண வேண்டுகோள் அவளுக்கு வராமல் போகலாம் என அவன் எலிசபெத்திடம் கூறினான்.
இப்பொழுது அவன் அவளுக்கு வேறொரு வேண்டுகோளை அனுப்புகிறான்.
சக்தி, எண்ணம், தொடர்புள்ள கதாபாத்திரங்கள், **வாழ்க்கையின் சட்டங்கள் செயல்படுவது**, நிலைமையின் முழுமையான ஒருமைப்பாடு ஆகியவற்றின் மூலம் ஆராய்ந்தால் ஒவ்வொரு சாதனையும் தன்னையே முழுமையாக விளக்கும்.

காலின்ஸின் திருமண வேண்டுகோளில் அதிகப்படியான சக்தி இருந்தது, ஏனெனில் திருமதி பென்னட் தன்னுடைய சக்தியை அவனுடைய சக்தியில் இணைத்திருந்தாள்.
அந்த உயர்ந்த சக்தி பெம்பர்லியின் உயர்ந்த பலனை விளக்குகிறது.
விக்காமை காலின்ஸ் தொடர்புகொள்ளவே இல்லை.
விக்காம் அவனை சந்தித்திருந்தால் அல்லது தொடர்பு கொண்டிருந்தால், அவனுக்கு உற்சாகம் கிடைத்திருக்கும்.
டார்சியையும் லேடி காதரினையும் எலிசபெத் எதிர்கொள்ள நேரிட்டது புதியது பழைமைக்கு எதிராக போராடும் போராட்டமாகும்.
காலின்ஸ் ஷார்லெட்டை திருமணம் செய்து கொண்டது, டார்சி எலிசபெத்தை திருமணம் செய்து கொண்டதின் சிறிய வடிவமாகும்.

11. "What would she have said, how would she have behaved were questions with which she amused herself."
It is a natural curiosity for anyone, highly intriguing and interesting.
It is this; I said earlier, that invites her visit and energies.
Elizabeth raises herself to the Lady's status by this amusement.
All events in the material plane are first prepared in the subtle plane.
This is one fragment of such a phenomenon.
Her being out of spirits is one result of this amusement as in that imagination she feels the reality of the real social distance.
It is Elizabeth who persuaded Darcy to reconcile with his aunt as she understands the real help the aunt gave to her wedding.
Gratitude is a rare emotion.
The deity of gratitude is the latest born, says Mother.
It is more easily born towards Darcy and his aunt than towards people below.
Remittances to Lydia periodically are the legacy of such an emotion towards her as Lydia was behind the other two weddings.
Lydia seeks help from both and gets it.
Service, as other things, is in grades.
Elizabeth's service to Jane is one of positive goodwill.
Lydia's service to both the sisters is through a possible ruining of the family.
Lydia offered to find husbands for all. She did so for two sisters.
Elizabeth triumphed over Caroline, but her triumph over Lady Catherine is more interesting to her.
Hence her invitation to Pemberley.
In today's atmosphere, Mother has said, great results for small acts as well as in the opposite direction will issue.
For Elizabeth such an atmosphere was created by the proposal.
She, for amusement, thought of Lady Catherine's reaction to her 'news' and that later brought the downpour of abusive talk.
Her mother's similar expectation for Jane in Netherfield cancelled it.
Her own thoughts were similar about Jane.
Her mother was incorrigible.
Nothing could be done in that quarter.
But Elizabeth was of a different category.
It was impossible for her not to think like her mother about Jane.
But, in life, it is certainly possible as we have seen after the proposal.
Suppose she had not also thrown her lot – her lot of expectation – her mother by herself would have been helpless.
The rightness of a description is valid when confirmed by further events.
The very fact that Bingley and Darcy came there to which they did not belong showed the presence of the atmosphere.
On the first day the whole assembly saw Bingley's interest in Jane.
Darcy was not noticed at all.
He was not consciously noticed by her for whom he came there.
The lack of recognition, the neglect, his being ignored sent him into a chrysalis of psychological incubation where he prepared himself for her.
When Sri Aurobindo came to Pondicherry and She came looking for him, He was not noticed by India, by Tamilnadu where He was.
Even the very town of Pondicherry was not interested in Him.
The sadhaks who came seeking Him never took to his yoga.
But **He won the wars, won Indian and Asian Freedom silently.**

Neglect in the physical plane made Him effective in the subtle plane.
The total neglect of Darcy was necessary for her to win him silently.
She wanted to hide the elopement from Darcy.
It was a natural thought to anyone in her position.
But it is ingratitude in the subtle plane.
She felt gratitude in the conscious Mind for him for loving her and she endeavoured to partially compensate it.
“அவள் என்ன சொல்லியிருப்பாள், அவள் எப்படி நடந்து கொண்டிருப்பாள் என்ற கேள்விகள் அவளை சந்தோஷப்படுத்தின.”
எவருக்குமே தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற ஆவல் இயற்கையானது, மிகவும் இரகசியமானது, சுவாரசியமானது.
நான் முன்னமே கூறியிருப்பதைப் போல், அது அவளுடைய வருகையையும் சக்தியையும் வரவழைக்கிறது.
இந்தச் சந்தோஷத்தின் மூலம் எலிசபெத் உயர்குடிப் பெண்மணியின் நிலையை அடைகிறாள்.
ஜடநிலையில் நடக்கும் நிகழ்ச்சிகள் யாவும் முதலில் சூட்சும உலகில் தயாராகின்றன.
இது அது போன்ற ஒரு நிகழ்வின் ஒரு பகுதி ஆகும்.
இந்தச் சந்தோஷத்தின் ஒரு பலன் அவள் சோர்வடைந்ததுதான், ஏனெனில் அக்கற்பனையில் உண்மையான சமூக அந்தஸ்தின் உண்மை நிலையை அவள் உணருகிறாள்.
டார்சியை அவனுடைய சித்தியுடன் சமரசம் செய்துகொள்ளச் சொல்வது எலிசபெத்தான், ஏனெனில் அவளது திருமணத்திற்கு சித்தி செய்த உண்மையான உதவியை அவள் புரிந்துகொள்கிறாள்.
நன்றி உணர்ச்சி அரிதானது.
நன்றி தேவதைதான் கடைசியாகப் பிறந்தவர் என அன்னை கூறியுள்ளார்.
டார்சியிடமும் அவனுடைய சித்தியிடமும் சுலபமாக நன்றியைக் காண்பிக்க முடிந்தது, ஆனால் தனக்குக் கீழ் நிலையில் இருக்கும் மனிதர்களிடம் முடியவில்லை.
லிடியாதான் மற்ற இரண்டு திருமணங்களுக்கு காரணமாக இருந்ததால், நன்றி உணர்வினால் அவளுக்கு தொடர்ந்து பணம் அனுப்பிக் கொண்டிருந்தாள்.
லிடியா இருவரிடமிருந்தும் உதவியை நாடுகிறாள், பெற்றுக்கொள்கிறாள்.
சேவை, மற்றவைகளைப் போல் பல நிலைகளில் இருக்கிறது.
நேர்மறையான நல்லெண்ணத்தின் மூலம் எலிசபெத் ஜேனுக்கு சேவை செய்கிறாள்.
இரண்டு சகோதரிகளுக்கும் லிடியா செய்த சேவை குடும்பத்தை அழிக்கும் அளவிற்கு வந்தது.
எல்லா சகோதரிகளுக்கும் கணவன்மார்களைத் தேடித் தருவதாக லிடியா கூறினாள். இரண்டு சகோதரிகளுக்கு அதை நிறைவேற்றினாள்.
எலிசபெத் காரலினிடம் வெற்றி அடைகிறாள், ஆனால் லேடி காதரினிடம் அடைந்த வெற்றி அவளுக்கு மேலும் சுவாரசியமாக இருக்கிறது.
அதனால் அவளை பெம்பர்லிக்கு அழைக்கிறாள்.
இன்றைய சூழலில், சிறிய செயல்களுக்கு பெரிய பலன்கள் கிடைக்கும், நேர்மாறான திசையிலும் கிடைக்கும் என்று அன்னை கூறியிருக்கிறார்.
திருமண வேண்டுகோள் மூலம் எலிசபெத்திற்கு அது போன்ற சூழல் உருவாக்கப்பட்டது.
அந்த ‘செய்தி’யைக் கேட்டு லேடி காதரின் அடையப் போகும் உணர்ச்சிகளை, தன்னுடைய சந்தோஷத்திற்காக நினைத்துப் பார்க்கிறாள். அது பின்னர் அவள் மீது வசைமாரி பொழிந்தது.
ஜேனுக்காக, நெதர்பீல்டில் அவளது தாயாரின் இது போன்ற ஒரு எதிர்பார்ப்பு அதனை ரத்து செய்தது.
ஜேனைப் பற்றிய அவளது எண்ணங்களும் அது போன்றுதான் இருந்தன.
அவளது தாயார் திருத்த முடியாதவளாக இருந்தாள்.
அந்த இடத்தில் ஒன்றும் செய்ய முடியவில்லை.
ஆனால் எலிசபெத் வித்தியாசமானவளாக இருந்தாள்.
அவளுடைய தாயார் ஜேனைப் பற்றி நினைத்ததுபோல் அவளாலும் நினைக்காமல் இருக்க முடியவில்லை.
ஆனால் வாழ்க்கையில், இது நிச்சயம் முடியும் என்பதை திருமண வேண்டுகோளுக்குப் பிறகு பார்த்தோம்.
அவளும் தன்னை அதில் ஈடுபடுத்திக் கொண்டிருக்காவிட்டால், அவளுடைய அதிகமான எதிர்பார்ப்புகள் காரணமாக, அவளது தாயார் தானாகவே எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்திருப்பாள்.
விவரங்களின் உண்மையை பின்னால் நடக்கும் நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்தும்.
டார்சியும், பிங்கிலியும் அவர்கள் சார்ந்திராத அவ்விடத்திற்கு வந்தது, சூழல் இருப்பதைக் காண்பிக்கிறது.
முதல் நாளன்று அங்கு கூடியிருந்த அனைவருக்கும் பிங்கிலிக்கு ஜேன் மேலிருந்த ஆர்வம் தெரிந்தது.
டார்சியை யாரும் கவனிக்கவில்லை.
யாருக்காக அவன் அங்கு வந்தானோ அவள், அவனை கவனிக்கவில்லை.
அங்கீகாரம் இல்லாதது, அசட்டை செய்வது, புறக்கணிப்பு இவற்றால் அவன் மனரீதியாக தன்னை கூட்டினுள் அடைத்துகொண்டு, அவளுக்காகத் தன்னைத் தயார் செய்து கொண்டான்.
பகவான் புதுச்சேரிக்கு வந்த பொழுது அன்னையும் அவரைத் தேடி இங்கு வந்தார். இந்தியாவில், தமிழ் நாட்டில் பகவானை யாரும் கவனிக்கவில்லை.

புதுச்சேரி மக்களே பகவானிடம் எந்த ஈடுபாட்டையும் காண்பிக்கவில்லை.
பகவானிடம் வந்த சாதகர்களும் அவருடைய யோகத்தை மேற்கொள்ளவில்லை.
ஆனால் பகவான் போர்களை வென்றார், இந்தியாவிற்கும், ஆசியாவிற்கும் மௌனமாக சுதந்திரம் வாங்கித் தந்தார்.
ஜட உலகில் பகவானைப் புறக்கணித்தது சூட்சும உலகில் அவரை திறம்பட செயலாற்ற வைத்தது.
டார்சியை முற்றிலுமாகப் புறக்கணித்தது, அவள் அமைதியாக அவனை அடைய அவசியமாக இருந்தது.
ஓடிப்போனதை டார்சியிடமிருந்து மறைக்க நினைத்தாள்.
அவளுடைய நிலையில் எவருக்கும் அந்த எண்ணம் இயற்கையானதுதான்.
ஆனால் அது சூட்சும உலகில் நன்றி இல்லாததாகும்.
அவளைக் காதலிப்பதற்காக அவனிடம் அவளுக்கு நன்றி உணர்ச்சி இருந்தது, அதனை அவள் பகுதியாகவாவது சரி செய்ய முயற்சி செய்தாள்.

Their first subject was the diminution of the Rosings party. "I assure you, I feel it exceedingly," said Lady Catherine; "I believe nobody feels the loss of friends so much as I do. But I am particularly attached to these young men, and know them to be so much attached to me! They were excessively sorry to go! But so they always are. The dear colonel rallied his spirits tolerably till just at last; but Darcy seemed to feel it most acutely; more, I think, than last year. His attachment to Rosings, certainly increases."
ரோஸிங்ஸில் உள்ள நபர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்பதுதான் அவர்கள் பேசிய முதல் விஷயமாக இருந்தது. "எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது என்பது மிகவும் உண்மை. என் நண்பர்களின் இழப்பை எண்ணி நான் வருத்தப்படுவது போல் வேறு யாரும் வருத்தப்படமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் நான் இவ்விரு இளைஞர்களிடம் அதிக பற்றுதல் கொண்டிருந்தேன்; அவர்களும் அதே அளவு பற்றுதல் என்மேல் கொண்டிருந்தார்கள் என்று எனக்குத் தெரியும்! அவர்களுக்குப் போவதற்கே விருப்பம் இல்லை. அவர்கள் எப்பொழுதுமே அப்படித்தான். கர்னல் தன்னுடைய உற்சாகத்தை இழக்காமல் இருந்தான். இறுதியில்தான் அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் டார்சியால்தான் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை, போன வருடத்தைவிட இந்த வருடம் அவன் அதிக வருத்தம் அடைந்தான். ரோஸிங்ஸில் இவன் வைத்திருக்கும் பற்றுதல், நிச்சயம் அதிகரிக்கின்றது" என்று லேடி காதரின் கூறுகிறாள்.

12. Lady Catherine provides the example of one who sees her own emotions in others.
தன்னுடைய உணர்ச்சிகளையே மற்றவர்களிடம் பார்க்கும் தன்மைக்கு லேடி காதரின் ஒரு உதாரணமாக விளங்குகிறாள்.
13. Lady Catherine's observations are a good example of how one can live in one's own world oblivious of what the other person thinks.
மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையே அறியாமல் எவ்வாறு ஒருவர் தன் உலகத்திலேயே இருக்க முடியும் என்பதற்கு லேடி காதரினுடைய கணிப்புகள் ஒரு சிறந்த உதாரணம்.
14. 'Darcy seemed to feel it most acutely.' – Yes, about what?
டார்சியால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.—எதற்காக?
15. "Nobody feels the loss of friends as I do."
For each person he is the entire world for himself.
It is a subjective view.
For most the subjective includes the objective.
Expectation needs instantaneous fulfillment.
Darcy's presence was a reinforcement of that expectation.
Lady Catherine was least aware why Darcy prolonged his visit there and what he was occupied with.
His physical going away is a blow to her expectation.
Mother says the physical does not wait to act when the knowledge is there.
She is physical and would have acted readily, at once.
Society or social context did not endorse her impatience.
Life acts there to compel the physical to move to the vital through external circumstances.
Compelling outer circumstances show unwillingness for inner self-discipline.
It is true she was lonely and company was welcome.
Her loneliness was a circumstance of her status.
The insularity demanded by status that has no context, made her lonely.
She wanted Darcy to marry Anne.
A realistic aunt would not have that expectation.
Refined culture of sensitive emotions would be shy of such an ambition.
She relied on her vast property.

Property is physical.
Marriage is vital.
To expect a vital goal through a physical qualification is invalid.
A reasonable cultured aunt could deny herself the expectation of marriage from Darcy.
In that case, there would be a rare possibility of Darcy volunteering to marry Anne because she was sickly.
In that case, he would not be going in for marriage, but would be honouring the friendship in the relationship.
It is sympathy, not love.
Love can overcome any defect, even serious sickness.
True love can even cure the sickness.
Darcy's love cured Elizabeth of falsehood in infatuation.
A rich seat of culture will not have occurrences of serious sickness.
Culture itself has the power to prevent illness.
Culture is the health of emotions.
It is superior to physical health.
Healthy criminals, unhealthy saints are unknown.
Darcy's love along with Pemberley was enough to cure infatuation.
Certainly it is insufficient to make vulgar energy into cultured sensitivity.
The truth of Bingley's love could overturn a ruse.
It was not enough for Jane to pardon Darcy of a ruse.
The affection of the elder Darcy was a direct means for the false exterior of Wickham to have designs on Georgiana.
Lady Catherine in that social context needed a violent disappointment.
In such a context spiritual grace could offer to Anne an affectionate cousin who could marry her for true family affection.
Normally in such a situation people act like Wickham – to organize dissipation.
An opportunity in Being is availed of in the Non-Being.
Charlotte is such an instance where the fall out of grace acted.
"நண்பர்களை இழக்கும் வருத்தம், என்னைப் போல் யாருக்கும் இருப்பதில்லை."
ஒருவனுக்கு அவனே உலகம்.
இது அகத்தின் நிலை.
பலருக்கும் புறமும் அகத்தில் இருக்கும்.
எதிர்பார்ப்பு உடனடி நிறைவை எதிர்பார்க்கிறது.
டார்சி இருப்பது அந்த எதிர்பார்ப்புக்கு பலமூட்டுவதாக இருந்தது.
டார்சி ஏன் அங்கு தொடர்ந்து தங்குகிறான், எது அவனை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது என்று லேடி காதரினுக்கு எதுவும் தெரியாது.
அவன் அங்கிருந்து அகன்றது அவளுடைய எதிர்பார்ப்புக்கு ஒரு அடி ஆகும்.
ஞானம் இருக்கும் பொழுது ஜடம் செயல்பட காத்திருப்பதில்லை என்று அன்னை கூறுகிறார்.
அவள் உடல்ரீதியானவள், உடனடியாக உடனே செயல்பட்டிருப்பாள்.
சமூகமோ, சமூக அமைப்போ அவளுடைய பொறுமையின்மையை ஆதரிக்கவில்லை.
வாழ்க்கையின் புற சந்தர்ப்பங்கள் ஜடத்திலிருந்து உணர்வுக்குச் செல்ல நிர்பந்தப்படுத்துகிறது.
அக சுய ஒழுக்கத்தின் விருப்பமின்மையை நிர்பந்திக்கும் புற சந்தர்ப்பங்கள் காட்டுகின்றன.
அவள் தனித்து இருந்தாள், துணை வரவேற்கப்பட்டது என்பது உண்மை.
அவளுடைய அந்தஸ்தின் சந்தர்ப்பம்தான் அவளுடைய தனிமை.
எந்த காரணமும் இல்லாது அவளுடைய அந்தஸ்து எதிர்பார்க்கும் தனிமை, அவளை தனிமைப்படுத்துகிறது.
டார்சி, ஆன்-ஐ திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அவள் விரும்புகிறாள்.
எதார்த்தமாக இருக்கும் ஒரு சித்திக்கு அந்த எதிர்பார்ப்பு இருக்காது.
நுட்பமான உணர்ச்சிகள் பண்பட்டிருந்தால் இது போன்ற ஆசைக்கு வெட்கப்படும்.
அவளுடைய பெரிய சொத்தை நம்பி அவள் இருந்தாள்.
சொத்து ஜடமானது.
திருமணம் உணர்வாலானது.
ஜடத்தின் மூலம் உணர்வின் இலக்கினை எதிர்பார்ப்பது செல்லுபடியாகாது.
நியாயமாக பண்பட்ட ஒரு சித்தி டார்சியிடமிருந்து திருமணத்தை எதிர்பார்க்க மாட்டாள்.
இந்நிலையில், ஆன் நோயுற்றவளாக இருப்பதால், டார்சி தானே முன் வந்து அவளை திருமணம் செய்து கொள்ளும் அரிதான சாத்தியக்கூறு இருந்திருக்கும்.
இவ்வாறு நடந்தால் அவன் திருமண பந்தத்திற்குள் சென்றிருக்க மாட்டான், ஆனால் அந்த உறவில் நட்பிற்கு மரியாதை கொடுத்திருப்பான்.
அது பரிதாபத்தினால் எழுகிறது, காதலினால் அல்ல.

எந்த குறையையும், ஏன் கடுமையான நோயையும் காதல் வெற்றிகொள்ளும்.
உண்மையான காதல் நோயையும் குணப்படுத்தும்.
டார்சியின் காதல், மயக்கத்தினால் ஏற்பட்ட பொய்மையிலிருந்து எலிசபெத்தை குணப்படுத்தியது.
பண்பில் சிறந்து இருக்கும் ஒரு இடத்தில் கடுமையான நோய் எதுவும் ஏற்படாது.
நோயை தடுக்கும் சக்தி பண்பாட்டிற்கு உண்டு.
ஆரோக்கியமான உணர்ச்சிகள் பண்பாடு ஆகும்.
உடல் ஆரோக்கியத்தைவிட இது சிறந்தது.
ஆரோக்கியமான குற்றவாளிகள், ஆரோக்கியமற்ற ஞானிகள் நாம் கேள்விப்படாதது.
டார்சியின் காதலும், பெம்பர்லியும் சேர்ந்து அவளுடைய மோகத்தை சரி செய்ய போதுமானதாக இருந்தது.
மோசமான சக்தியை பண்பட்ட உணர்வாக மாற்ற நிச்சயமாக அது போதாது.
பிங்கிலியின் காதலில் உள்ள உண்மை சூழ்ச்சியை மாற்றவல்லது.
அது டார்சியின் சூழ்ச்சியை ஜேனால் மன்னிக்க போதுமானதாக இல்லை.
டார்சியின் தகப்பனார் காட்டிய அன்பே விக்காமின் பொய்யான புறத்தோற்றத்திற்கு நேரடியானக் காரணமாக அமைந்தது, ஜார்ஜியானாவை வைத்து திட்டம் தீட்ட வழி வகுத்தது.
சமூக கண்ணோட்டத்தில் லேடி காதரினுக்கு கடுமையான ஏமாற்றம் அவசியமாக இருந்தது.
அது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் ஆன்-ற்கு, உண்மையான குடும்ப பாசத்தினால் அவளை திருமணம் செய்து கொள்ள தகுந்த நபரை அருள் அவளுக்கு அளிக்கலாம்.
இது போன்ற ஒரு நிலைமையில் பொதுவாக மனிதர்கள் விக்காமைப் போல் செயல்படுவார்கள், அழிச்சாட்டியம் செய்வார்கள்.
சத்-ல் இருக்கும் வாய்ப்பு, அசத்-ல் பெற்றுக்கொள்ளப்படுகிறது.
அருள் தன்னால் செயல்பட்டது ஷார்லெட்டிடம்தான்.

16. "I am particularly attached to these young men and knew them to be attached to me."
Youth is not attached to age.
People's attachment arises out of likeness in temperament.
Between age and youth none exists.
Inner sweetness has no bar of age.
Darcy brought the colonel for company, as he could not stand her.
The colonel said his aunt never stopped talking.
Talking in old age is involuntary.
Old age goes with anecdotage.
Talking is 'enjoyable' when interest is held.
Talking is 'tolerable' when there is no repetition.
If there is repetition it must bring in one more fresh shade of interest.
Lady Catherine could be tolerated by snobs like Collins to whom dining with her was a privilege.
Like the lover's ever growing enchantment, it is not a privilege that knows any diminution.
Instead of condescending superiority, had she been capable of attentive kindness to her neighbours like Charlotte, Anne's health would have improved.
Such kindness would generate genuine admiration for Anne.
Genuine admiration has the ability to lessen ill health.
Life does offer anyone all the positive circumstances needed for growth.
We see it so with Wickham.
In Mrs. Bennet, the opportunity was abundant.
In an intense period, it is life that brings wealthy young men to a not a wealthy village.
At no time, life has refused such opportunities.
America that received help from France refused to help the French Revolution when the opportunity came.
USA received help from monarchy, refused to help liberty.
Disease is an intense form of physical selfishness.
Self-giving can cure diseases, if not fully, at least partially.
Health is purity in the physical.
Affection is purity in the vital.
Taking another man's point of view is Mind's move towards purity.
Spirit is always pure.
By relating to spirit any part of the being can increase its purity.
Social aloofness is a mental disease.
A mental disease becoming an ideal spreads down to the body.
People try to perpetuate an occasional advantage.

The whole of human endeavour is to take the course of life along the path of ego.
Ego’s positive periods are over.
Now ego is a bar.
To achieve in life that has changed through values of erstwhile life when it was inappropriate even in those good old days, **is the one known human attitude.**
Lady Catherine belongs to a distant past.
Elizabeth belongs to the present.
Darcy belongs to the future.
To work out the equations there is an interesting exercise.
“எனக்கு குறிப்பாக இந்த இளைஞர்களிடம் பற்று உள்ளது, அவர்களுக்கும் என் மேல் பற்றுள்ளது எனத் தெரியும்.”
இளைஞர்களுக்கு வயதானவர்கள் மீது பற்று இருக்காது.
மக்களின் பற்று, மனோபாவத்தின் ஒற்றுமையால் எழுகிறது.
வயதானவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இடையே எதுவும் இருப்பதில்லை.
உள்ளே இருக்கும் இனிமைக்கு வயது தடை அல்ல.
அவளை எதிர்கொள்ள முடியாத காரணத்தால் டார்சி கர்னலை துணைக்கு அழைத்து வந்தான்.
தன்னுடைய சித்தி பேசுவதை நிறுத்தவே மாட்டாள் என கர்னல் கூறுகிறான்.
வயதான காலத்தில் பேசுவது என்பது தன்னிச்சையின்றி நடப்பது.
வயது, பழைய கதைகள், நிகழ்ச்சிகளைப் பேசும்.
சுவாரசியமாக இருந்தால் பேசுவதை அனுபவிக்க முடியும்.
பேசியவற்றையே மீண்டும் மீண்டும் பேசாதிருந்தால் சகித்துக் கொள்ளலாம்.
கூறியதையே கூறினால் அது மேலும் சுவாரஸ்யமான விஷயமாக இருக்க வேண்டும்.
லேடி காதரினுடன் விருந்துண்பதை கௌரவமாக நினைக்கும் காலின்ஸ் போல் குழைபவனால்தான் அவளை சகித்துக்கொள்ள முடியும்.
காதலர்களின் தொடர்ந்து வளரும் வசீகரம் போல், அந்த கௌரவம் குறையும் என்பதே கிடையாது.
உயர்வு மனப்பான்மையின்றி அவள், ஷார்லெட்டைப் போல் அருகாமையில் இருப்பவர்களிடம் அன்பாகப் பழகியிருந்தால், ஆன்-உடைய ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும்.
இது போன்று அன்பு செலுத்தியிருந்தால் ஆன்-ஐ எல்லோரும் உண்மையிலேயே பாராட்டியிருப்பர்.
உண்மையான பாராட்டு உடல் நோயைக் கட்டுப்படுத்தும்.
ஒருவர் வளருவதற்கு, எல்லா நேர்மறையான சந்தர்ப்பங்களையும் வாழ்வு அளிக்கத்தான் செய்கிறது.
இதனை விக்காமிடத்து பார்க்கிறோம்.
திருமதி பென்னட்டிற்கு ஏராளமான வாய்ப்புகள் கிடைத்தன.
தீவிரமான ஒரு கட்டத்தில் வாழ்க்கை பணக்கார இளைஞர்களை அதிக செல்வவளம் இல்லாத கிராமத்திற்கு கொண்டு வருகிறது.
இது போன்ற வாய்ப்புகளை வாழ்க்கை ஒரு போதும் மறுத்ததில்லை.
பிரான்ஸ் நாட்டிலிருந்து உதவியைப் பெற்றுக் கொண்ட அமெரிக்கா வாய்ப்பு கிடைத்த பொழுது, பிரெஞ்சுப் புரட்சிக்கு உதவ மறுத்து விட்டது.
முடியாட்சியிடம் உதவி பெற்ற அமெரிக்கா, சுதந்திரத்திற்கு உதவ மறுத்து விட்டது.
உடலின் சுயநலம் தீவிரமாக இருப்பதே நோயாகும்.
சுய அர்ப்பணம் நோயை, முழுவதுமாக இல்லாவிடினும் பகுதியாகவாவது குணப்படுத்தும்.
உடலின் தூய்மை ஆரோக்கியம்.
உணர்வின் தூய்மை அன்பு.
அடுத்தவர் கண்ணோட்டத்தை எடுத்துக்கொள்வது, மனம் தூய்மையை நோக்கி நகர்வது.
ஆன்மா எப்பொழுதுமே தூய்மையானது.
ஆன்மாவுடன் தொடர்பு கொண்டால் ஜீவனின் எந்த பகுதியும் அதனுடைய தூய்மையை அதிகரிக்கச் செய்யலாம்.
சமூகத்துடன் உறவாடாமல் இருப்பது மனநலக் குறைவு ஆகும்.
மனநலக் குறைவு ஒரு இலட்சியமாக மாறினால், உடல் முழுவதும் பரவுகிறது.
ஏதோ ஒரு சமயம் கிடைக்கும் அனுகூலத்தை மனிதர்கள் நிரந்தரமாக்க முயல்வார்கள்.
அகந்தையின் பாதையில் வாழ்க்கையை நடத்துவதே மொத்த மனித குலத்தின் முயற்சியாகும்.
அகந்தையின் பிரகாசமான காலங்கள் முடிந்து விட்டன.
இப்பொழுது அகந்தை ஒரு தடையாகும்.
அன்றைய காலத்திலேயே பொருத்தமற்றதாக விளங்கிய அந்நாட்களின் வாழ்க்கை பண்புகளால், இன்றைய மாறியிருக்கும் வாழ்க்கையில் சாதிப்பதே **தெரிந்த ஒரு மனித மனோபாவமாகும்.**
கடந்தகாலத்திற்கு உரியவள் லேடி காதரின்.
எலிசபெத் நிகழ்காலத்திற்குரியவள்.

எதிர்காலத்திற்குரியவன் டார்சி.
சமன்பாடுகளை கண்டு பிடிப்பதற்கு ஒரு சுவாரசியமான பயிற்சி உள்ளது.

17. "His attachment to Rosings certainly increases."
She is one to whom objectivity means subjectivity.
Intensity generated by the Lady for Darcy works, but works in another direction.
Her intensity increased Darcy's towards Elizabeth.
What she calls attachment to Rosings is really attachment to Longbourn.
She had seen the intensity, but mistook the object for which it was created.
It is a quixotic phenomenon in life, but very real.
People call it a mystery.
To know where energy emanates from and where it goes is a rare power in life.
That requires total knowledge.
He who can consecrate can have the benefit of the result without the knowledge.
Once the result is seen, which is knowledge in the physical plane, observation will give the full right knowledge.
We know Caroline's intense interest drove Darcy equally intensely towards Elizabeth.
Elizabeth attracted Collins because she generated inordinate intensity for Wickham.
That intensity made Wickham go to Miss King, ultimately worked for Lydia.
Whoever creates intensity for another, the result will go to him to whom it is due.
This is so because the community is a totality.
Sowerby, George, and Frank were after Miss Dunstable who collected all their energies and directed them towards Dr. Thorne.
The persecution of Mary by Lady Arabella released the power of Money from Roger and placed it at the feet of Mary.
These laws work by 1) the deserts in life, 2) available social structures, 3) attitudes of the individuals, 4) atmosphere.
Mrs. Bennet's interest in Jane got Lydia married because in her own conscious Mind and in subconscious urge there was the last child, Lydia. What the atmosphere sanctioned Elizabeth was completed by Caroline's intensity.
Darcy saw that his intensity for Elizabeth brought her Collins.
Later he learned that she moved towards Wickham.
He withdrew his intensity consciously, but it was alive in his subconscious to bring her close to the colonel.
Energy given to work may be drawn off by an individual for his personal benefit.
That happens when the individual is more organized than the field for work.
The final refusal of the Brahmin which enabled him to fully dominate the Indian field, is because the Brahmin was more organized to receive the social benefits than the country was for the spiritual benefit.
Monarchy and aristocracy have the same history.
Absence of social structure in favour of a class along with the absence of the class system allowed the whole nation of America to be receptive, to benefits.
The distant shadows of the emerging Individual, however feeble he is, have stirred India to the point of the world expecting her to perform.
The false charge trumped up against Crawley in Anthony Trollope's 'The Last Chronicle of Barset' released the entire energy of the whole Christian community that fully sympathized with him, resulting in his daughter marrying Major Grantly.
His family's poverty was so great as to require the vast support of the population.
His dogmatic pride organized as contempt for others and shame for his family was that powerful.
Edmond's ardour for Mercedes yielded benefit to Fernand as the country was organized at the level of treachery and deceit.
Mercedes herself deserved Fernand's falsehood, not Edmond's honesty.
"ரோசிங்ஸுடன் அவனுக்கு இருக்கும் பற்று நிச்சயமாக அதிகரிக்கிறது."
அவளுக்கு பாரபட்சமற்றத் தன்மை என்பது மனதில் தானாகவே எழும் உணர்வாகும்.
லேடி காதரின் உற்பத்தி செய்த தீவிரம், டார்சியிடம் வேறொரு திசையில் வேலை செய்கிறது.
அவளுடைய தீவிரம் டார்சியை, எலிசபெத்திடம் மேலும் நெருங்க வைத்தது.
ரோசிங்ஸிடம் பற்று என அவள் கூறுவது, உண்மையில் லாங்பர்ன் மேல் உள்ள பற்று ஆகும்.
தீவிரத்தை அவளால் பார்க்க முடிந்தது, ஆனால் எதன் பொருட்டு அது உற்பத்தி ஆனது என்பதில் தவறு செய்து விட்டாள்.
வாழ்க்கையில் அது ஒரு விசித்தரமான நிகழ்வு, ஆனால் மிகவும் உண்மை.
அதனை மர்மம் என்பர்.
எங்கிருந்து சக்தி வெளிப்படுகிறது, எங்கு சென்று அடைகிறது என்பதை தெரிந்துகொள்வது வாழ்க்கையில் ஓர் அரிய சக்தியாகும்.

அதற்கு முழு ஞானம் வேண்டும்.
யார் ஒருவர் சமர்ப்பணம் செய்கிறாரோ அவரால் பலனின் அனுகூலங்களை ஞானம் இல்லாமலும் பெற முடியும்.
ஜட நிலையில் ஞானமாக இருக்கும் பலனைப் பார்த்த பிறகு, கணிப்பு முழுமையாக சரியான ஞானத்தை அளிக்கும்.
டார்சியிடம் காரலினுக்கு இருந்த தீவிரம், அவனை எலிசபெத்தை நோக்கித் தீவிரமாக செல்ல வைத்தது.
விக்காம்மேல் எலிசபெத்திற்கு இருந்த அளவுக்கு மீறிய தீவிரம், காலின்ஸை வரவழைத்தது.
அந்த தீவிரம் விக்காமை மிஸ் கிங்கிடம் போக வைத்தது. இறுதியில் லிடியாவுக்குச் சாதகமாக முடிந்தது.
மற்றவருக்காக ஒருவர் தீவிரத்தை ஏற்படுத்திக் கொண்டால் யாருக்கு அது உரித்தானதோ அவருக்கு அப் பலன் போய் சேரும்.
சமுதாயம் முழுமையானது என்பதால் இவ்வாறு நடக்கும்.
சோவர்பி, ஜார்ஜ், பிராங்க் இவர்கள் மூவரும் மிஸ் டன்ஸ்டபிள் பின்னால் சென்றனர், அவர்களுடைய எல்லா சக்திகளையும் அவள் திரட்டி டாக்டர் தார்ன்-ஐ நோக்கி செலுத்தினாள்.
மேரி-ஐ, லேடி அரபெல்லா துன்புறுத்தியது, ரோஜெரிடமிருந்து பணத்தின் சக்தியை விடுவித்து மேரியின் காலடியில் கொண்டு சேர்த்தது.
இந்தச் சட்டங்கள் 1)வாழ்க்கையில் கை விடுதல்,2)இருக்கும் சமூக அமைப்புகள்,3)தனிப்பட்டவரின் மனோபாவங்கள்,4)சூழல், இவைகளின் மூலம் செயல்படும்.
திருமதி பென்னட்டின் மேல் மனத்திலும், ஆழ்மன உந்துதலிலும், கடைசி குழந்தையான லிடியா இருந்ததினால், ஜேன் மீது அவள் கொண்டிருந்த அக்கறை லிடியாவின் திருமணத்தை நடத்தி வைத்தது.
எலிசபெத்திற்கு சூழல் அனுமதித்ததை காரலினது தீவிரம் பூர்த்தி செய்து வைத்தது.
எலிசபெத் மீதிருந்த தன்னுடைய தீவிரம், காலின்ஸை அவளிடம் வரவழைத்ததை டார்சி கண்டான்.
அவள் விக்காமிடம் நாட்டம் கொண்டதை பின்னால் அவன் அறிந்தான்.
தன்னினைவோடு அவன் தன் தீவிரத்தை அகற்றிக் கொண்டான், ஆனால் அது அவனது ஆழ்மனதில் உயிருடன் இருந்ததால் அவளை கர்னலிடம் நெருங்க வைத்தது.
ஒரு வேலைக்காக சக்தியை அளிக்கும்பொழுது, அது ஒரு தனி நபரால் அவருடைய சொந்த நலனுக்காக உபயோகப்படுத்தப்படலாம்.
வேலையின் அரங்கத்தைவிட, தனிப்பட்ட நபர் மேலும் முறைப்படுத்தப்பட்டவராக இருக்கும்பொழுது அது நடக்கிறது.
இந்திய அரங்கத்தை முழுவதுமாக ஆதிக்கம் செய்த பிராமணனுடைய இறுதி மறுப்பு, ஆன்மீகப் பலன்களைப் பெறுவதற்கு நாடு தயாராக இருந்ததைவிட, பிராமணன் சமூக அனுகூலங்களைப் பெறுவதற்கு மேலும் சிறப்பாக முறைப்படுத்தப்பட்டு இருந்ததினால்தான்.
முடியாட்சியும், பிரபுத்துவமும் ஒரே சரித்திரத்தைக் கொண்டவை.
ஜாதியின் அடிப்படையில் அமைந்த சமூக அமைப்போ, ஜாதி அமைப்போ எதுவும் இல்லாதது, அமெரிக்கா முழுவதையும் பலன்களைப் பெறுவதற்கு ஏற்புத்தன்மை உடையதாக மாற்றியது.
மெதுவாக உருவாகி வரும் தனித்துவமுள்ள ஒருவன், எவ்வளவுதான் பலவீனமாக இருந்தாலும், ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தி உலகத்தின் பார்வையில் இந்தியா செயல்பட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பை உருவாக்கி இருக்கிறான்.
அந்தோனி த்ராலப்பின் 'The Last Chronical of Barset'ல் கிராலி-க்கு எதிராக சுமத்தப்பட்ட பொய்யான குற்றச்சாட்டு, அவனுக்கு முழுமையாக ஆதரவளித்த அனைத்து கிறிஸ்துவ சமுதாயத்தின் மொத்த சக்தியையும் விடுவிக்கச் செய்து, அவனுடைய மகளுக்கும் மேஜர் கிரான்ட்லிக்கும் இடையே திருமணத்தை நடத்தி வைத்தது.
மக்களின் பெரிய ஆதரவு தேவைப்படும் அளவிற்கு அவனுடைய குடும்பம் வறுமையில் இருந்தது.
மற்றவர்களிடம் வெறுப்பாகவும், அவனது குடும்பத்தில் அவமானமாகவும் அமைய காரணமாக இருக்கும் அவனுடைய பிடிவாதமான கர்வம் அவ்வளவு வலிமை உடையதாக இருந்தது.
நம்பிக்கை துரோகம், ஏமாற்று என்ற அளவில் நாடு முறைப்படுத்தப்பட்டிருந்ததால் மெர்சிடஸ் மேலிருந்த எட்மண்டின் மனவெழுச்சி பெர்னான்டிற்குப் பலன்களைப் பெற்றுத் தந்தது.
பெர்னான்டின் பொய்மையை பெறுவதற்குத் தகுதி உடையவளாக மெர்சிடஸ் இருந்தாள், எட்மண்டின் நேர்மையை அல்ல.

Mr. Collins had a compliment, and an allusion to throw in here, which were kindly smiled on by the mother and daughter.
இந்த இடத்தில் காலின்ஸ் ஒரு பாராட்டையும், ஜாடையாக ஏதோ ஒன்றை சொன்னதையும், தாயும் மகளும் புன்முறுவலுடன் ஏற்றுக் கொண்டனர்.

18. Mr. Collins serves as a snob, cad, henchman.
காலின்ஸ் குழைபவனாகவும், உயரிய நடத்தை அற்றவனாகவும், கையாள் போலவும் இருக்கிறான்.

19. "Collins had a compliment. Mother and daughter smiled."
A right compliment elevates the giver and the receiver.
A difficult task for Man is to concede a capacity to a colleague.
A more difficult task is to acknowledge the goodness of another.
All wills are ill wills – Mother.
Goodwill is rare.
Goodwill to one who is close is rarer still.
Man does not have any known capacity to have goodwill to another who is close.
There is a palpable fear that some goodwill may escape him involuntarily.
Goodwill of Elizabeth for Jane is difficult to conceive. It is rare.
Non-existing, unreal compliments prevent real achievement.
To receive a compliment from a Man like Collins will disqualify one for a long time to receive a true compliment.
To compliment another is more difficult than giving material gifts of value.
One can like another, but to know the value of another is more difficult as Mind does not ordinarily understand the mental capacity of another.
At best one values appearances, e.g. fluent speech is mistaken for intelligence.
Granting that capacity to evaluate another, it requires a different capacity to put it into words.
When both are there, they fully absorb all mental energies.
There is no energy left for the formation of the will that is needed to express it.
One who passes all these hurdles, and speaks out intelligently and generously a well deserved compliment, will be in great danger if it is by any error given to a person who does not deserve it by his temperament.
One may or may not know the laws, but experience teaches unfailingly and in the first bad experience Man withdraws into his cocoon.
To pleasantly receive a compliment is more difficult than to generously offer it.
Even Jane failed to give the generous compliment Elizabeth deserved by Darcy's proposal.
There is incapacity and unwillingness.
One who offers a genuine compliment inwardly expands while delivering it.
One who receives it with an open soul will find his own soul peeping out at that moment.
Great Romance is True spiritual experience.
Spiritual goodness as well as generosity is its base.
A disgusting relationship will readily shed its disgusting element when one of them attempts this approach.
It is elevating, expansive and ennobling.
Even at a primary level the experiment is rewarding.
"காலின்ஸிற்கு பாராட்டு கிடைத்தது. தாயும், மகளும் புன்னகை புரிந்தனர்."
உண்மையான பாராட்டு அளிப்பவரையும் பெறுபவரையும் உயர்த்தும்.
தன்னுடன் வேலை செய்பவரது திறமையை ஒத்துக்கொள்வது ஒரு மனிதனுக்கு கடினமான செயலாகும்.
மற்றவரிடம் உள்ள நல்லதை அங்கீகரிப்பது மேலும் கடினமான செயல்.
எல்லா எண்ணங்களும் கெட்ட எண்ணங்களே என்று அன்னை கூறுகிறார்.
நல்லெண்ணம் அரிதானது.
நெருக்கமாக இருப்பவரிடம் நல்லெண்ணம் இருப்பது இன்னமும் அரிதானது.
நெருக்கமாக இருப்பவரிடம் நல்லெண்ணம் கொள்வதற்கு மனிதனிடத்து எந்த ஒரு தெரிந்த திறமையும் இல்லை.
அவனை அறியாமலேயே ஏதாவது நல்லெண்ணம் அவனிடமிருந்து வெளிப்பட்டு விடுமோ என்கிற தெளிவான பயம் இருக்கிறது.
எலிசபெத்திற்கு ஜேனிடம் இருக்கும் நல்லெண்ணத்தை புரிந்துகொள்வது கடினம். அது அரிதானது.
இல்லாத, உண்மையல்லாத பாராட்டுகள் உண்மையான சாதனையை தடுக்கும்.
காலின்ஸ் போன்ற ஒரு நபரிடமிருந்து கிடைக்கும் பாராட்டு, நீண்ட நாட்களுக்கு உண்மையான பாராட்டை கிடைக்காமல் செய்து விடும்.
விலை உயர்ந்த பரிசுப் பொருட்கள் கொடுப்பது சுலபம், பாராட்டுவது மிகக் கடினம்.
ஒருவருக்கு அடுத்தவரைப் பிடிக்கலாம் ஆனால் அவருடைய மதிப்பை தெரிந்துகொள்வது மிகவும் கடினம். ஏனெனில் மனத்தால் அடுத்தவரின் மனத்திறமையை சாதாரணமாகப் புரிந்துகொள்ள முடியாது.
அதிகபட்சமாக தோற்றத்திற்கே ஒருவர் மதிப்பு கொடுப்பார், உதாரணமாக சரளமான பேச்சை புத்திசாலித்தனம் என்று தவறாக எடுத்துக் கொள்வர்.
மற்றவரை கணிக்க திறமை இருந்தாலும், அதை சொல்வதற்கு வேறொரு திறன் தேவைப்படுகிறது.
இரண்டும் இருந்தால், அவை மனத்தின் சக்தி முழுவதையும் எடுத்துக் கொண்டு விடும்.
அதனை வெளிப்படுத்தத் தேவையாக இருக்கும் விருப்புறுதி உருவாக சக்தி எதுவும் மீதமிருக்காது.

இவை எல்லாத் தடைகளையும் தாண்டி, ஒருவர் புத்திசாலித்தனமாகவும், தாராள மனப்பான்மையுடன், தகுதிவாய்ந்த பாராட்டை, மனவுணர்வுகளால் அருகதையில்லாத ஒருவருக்குத் தவறாக அளித்து விட்டால், அவர் பெரிய ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும்.
ஒருவருக்கு இச்சட்டங்கள் தெரிந்தும் இருக்கலாம், தெரியாமலும் இருக்கலாம், ஆனால் அனுபவம் தவறாது பாடம் கற்பித்துவிடும், முதல் மோசமான அனுபவத்தில் மனிதன் தன் கூட்டுக்குள் அடைபட்டு விடுவான்.
தாராள மனப்பான்மையுடன் பாராட்டுவதைவிட அதனை இன்பமாகப் பெற்றுக்கொள்வது மேலும் கடினம்.
டார்சியின் திருமண வேண்டுகோளைப் பெற்றதற்காக, எலிசபெத்திற்கு தர வேண்டிய தாராளமான பாராட்டைத் தருவதற்கு ஜேன் கூட தவறி விடுகிறாள்.
அங்கு இயலாமையும் விருப்பமின்மையும் உள்ளது.
உண்மையான பாராட்டை யார் ஒருவர் அளிக்கிறாரோ, அவர் அதனை வெளியிடும்பொழுது உள்ளே விரிவடைகிறார்.
திறந்த உள்ளத்துடன் ஒருவர் அதனை பெற்றுக்கொள்ளும்பொழுது, அத்தருணத்தில் அவருடைய ஆன்மா வெளிவருவதைப் பார்ப்பார்.
சிறந்த காதல் உண்மையான ஆன்மீக அனுபவம்.
அதனுடைய ஆதாரம் ஆன்மீக நற்குணமும், தாராள மனப்பான்மையும்.
வெறுப்பூட்டும் உறவில், அவர்களில் ஒருவர் இந்த அணுகுமுறையை கையாளும் பொழுது, அதிலுள்ள வேண்டாத அம்சங்களை அவ்வுறவு உடனடியாக கைவிட்டு விடும்.
அது உயர்வடையச் செய்யும், விரிவுபடுத்தும், மேன்மைப்படுத்தும்.
ஆரம்ப நிலையிலும் இவ்வனுபவம் பயனுள்ளதாக இருக்கும்.

Lady Catherine observed, after dinner, that Miss Bennet seemed out of spirits, and immediately accounting for it herself, by supposing that she did not like to go home again so soon, she added –
மிஸ். பென்னட் உற்சாகமிழந்து இருந்ததை விருந்து முடிந்த பிறகு கவனித்த லேடி காதரின் அவளுக்கு இவ்வளவு சீக்கிரமாக வீட்டிற்குத் திரும்புவதில் விருப்பம் இல்லை போலிருக்கிறது என்று உடனேயே தானே ஒரு காரணம் கற்பித்துக் கொண்டு, பேசலானாள்.

20. Lady Catherine’s interpretation of Elizabeth being out of spirits truly reflects her own character, not the situation.
எலிசபெத் உற்சாகமில்லாமல் இருப்பதாக லேடி காதரின் கருதுவது, அவளுடைய சுய சுபாவத்தை வெளிப்படுத்துகிறதே தவிர நிலைமையை அல்ல.
21. Lady Catherine sees in the dispirited Elizabeth sadness about leaving Rosings .
ரோசிங்ஸை விட்டுக் கிளம்புவதால் எழும் வருத்தத்தை உற்சாகமில்லாமல் இருக்கும் எலிசபெத்திடம் லேடி காதரின் பார்க்கிறாள்.
22. “She did not like to go home so soon.”
One type of ignorance is to assume something.
Taking one’s assumption as understanding is subjective.
Objectivity corrects the errors of subjectivity.
The objective can err when the senses are relied on.
Ego guiding the subjective assumption is to make the error grand.
Man exists by self-confidence whether the confidence is right or not.
Subjective self-confidence making for psychological survival is a widely known prevalent phenomenon.
With those species that have lost the environmental endorsement it is common.
Aristocracy belonged to that category in the 18th century.
Disappearing establishments defend themselves by such subjectivity.
Any phenomenon can become either the truth or an illusion.
Whether they are truths or not they have a temporal as well as spatial version.
Their last expression is a personal rendering of a general truth.
Logic came into existence to correct the excess in this regard.
Logic is the right relations between things.
Reason was added to make logic real.
Reason demands a real basis for facts.
Reason co-ordinates intelligent facts to arrive at unity.
Reason can know the truth by knowing the content.
The truth that the Lady wants to arrive at is her own greatness.
Society and social change offer the possibility of exploring the current truth that aristocracy is a vanishing species.
This is a play of forces.
Human choice is a determinant here.
The physical property and wealth offer sustenance to preserve property.

Vital alertness can help one survive social authority.
One of the things that need to be perceived is the vital reality of change.
Even for those who are blind the new generation announces that change.
The sickness of Anne gains that social significance for the mother.
This being the context, the rest can be best appreciated.
The self-flattery in the above comment is because of condescension.
An act of condescension in the absence of such difference leads to a flat fall.
The truth is the new emerging generation is placed high.
Any attempt at condescension in this context enables the new to shatter the old.
That happens when the Lady visits Longbourn.
The motive force of the story is such a destruction.
What is lost in France is the aristocratic head; in England it is the psychological head of that status.
The fineness of her eyes expresses that light.
Darcy is the moth who was anxious to burn all his wings and himself in that light.
The situation is a tragi-comedy expressed by the vigour of the Lady.
The significance of the personality of Collins, its pomposity are thus delineated.
"இவ்வளவு விரைவாக வீட்டிற்குத் திரும்புவது அவளுக்குப் பிடிக்கவில்லை."
எதையாவது யூகிப்பது, அறியாமையின் ஒரு விதமாகும்.
ஒருவருடைய யூகத்தை புரிதல் என எடுத்துக்கொள்வது மனம் நினைப்பது.
மனத்தின் தவறுகளை பாரபட்சமின்மை திருத்துகிறது.
புலன்களை நம்பி இருக்கும்பொழுது பாரபட்சமின்மையும் தவறு செய்யும்.
மனத்தின் யூகங்களுக்கு அகந்தை வழிகாட்டும்பொழுது தவறுகள் பெரிதாகின்றன.
மனிதன் தன்னம்பிக்கையினால் உயிர் வாழ்கிறான், நம்பிக்கை தவறோ அல்லது சரியோ.
நம்முடைய தன்னம்பிக்கையினால் நாம் மனோரீதியாக உயிர்வாழ முடிகிறது.
சுற்றுப்புறத்தின் ஆதரவை இழந்த இனங்களிடையே இது மிகவும் சாதாரணமானது.
பதினெட்டாம் நூற்றாண்டில் பிரபுத்துவம் இந்த பிரிவை சேர்ந்ததாக இருந்தது.
மறைந்து கொண்டிருக்கும் நிறுவனங்கள் தங்களை காப்பாற்றிக்கொள்ள இது போன்ற சமாதானங்களை கூறும்.
எந்த ஒரு பெரிய நிகழ்வும் உண்மையாகவோ அல்லது கற்பனையாகவோ மாறலாம்.
அவை உண்மைகளோ இல்லையோ, இடத்திற்கு ஏற்ற, காலத்திற்கு ஏற்ற பதிப்பு அவைகளுக்கு உண்டு.
அவைகளின் இறுதி வெளிப்பாடு, பொதுவான உண்மையினை தனிப்பட்ட முறையில் சொல்வதாக இருக்கும்.
இந்த விஷயத்தில் அதிகப்படியாக இருப்பதை திருத்த வந்ததே தர்க்கம்.
இரண்டு விஷயங்களுக்கிடையே சரியான தொடர்பு வைத்திருப்பது தர்க்கம்தான்.
தர்க்கத்தை உண்மையாக்க விவேகம் சேர்க்கப்பட்டது.
விஷயங்களின் உண்மையான அடிப்படையை விவேகம் எதிர்பார்க்கும்.
விவேகம், புத்திசாலித்தனமான விஷயங்களை ஒன்று சேர்த்து ஒருமைப்பாட்டிற்கு வழி வகுக்கும்.
விஷயத்தை அறிந்தால், விவேகம் உண்மையை தெரிந்து கொள்ளும்.
உண்மையைக் கண்டு பிடிக்க நினைப்பது அவளுடைய பெருந்தன்மை.
பிரபுத்துவம் மறைந்து கொண்டிருக்கிறது என்ற உண்மையை கண்டுபிடிக்க சமூகமும், சமுதாய மாறுதல்களும் உதவி புரிகின்றன.
சக்திகளின் விளையாட்டு இது.
இங்கு தீர்மானிப்பது மனித விருப்பமேயாகும்.
ஜட சொத்துகளும் செல்வமும் சொத்தை பாதுகாக்க ஆதரவு அளிக்கின்றன.
சமூக அதிகாரத்தை சமாளிக்க உணர்வில் விழிப்புத் தன்மை உதவும்.
மாற்றத்தின் உணர்வுபூர்வமான உண்மையைப் புரிந்து கொள்வது அவசியமானது.
கண்மூடியாக இருப்பவர்களுக்கும் புதிய தலைமுறை அந்த மாற்றத்தை அறிவிக்கிறது.
ஆன்-உடைய உடல் நலக் குறைவு, தாயாருக்கு சமூகத்தில் முக்கியத்துவத்தை அளிக்கிறது.
இந்தக் கண்ணோட்டத்தில் மற்றவற்றை நன்கு புரிந்து கொள்ளலாம்.
மேலே கூறிய கருத்தில் சுய புகழ்ச்சி பரிவினால் ஏற்பட்டதாகும்.
இது போன்ற வித்தியாசம் இல்லாத நிலையில் பரிவு வீழ்ச்சியை ஏற்படுத்தும்.
புதிய தலைமுறை உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.
இந்த இடத்தில் பரிவு காட்ட முயற்சி செய்தால், புதியது பழையதை அழித்து விடுகிறது.
லேடி காதரின் லாங்பர்னுக்கு விஜயம் செய்தபொழுது இது நடக்கிறது.
கதையின் ஊக்க சக்தி இது போன்ற அழிவாகும்.
பிரான்ஸ் இழந்தது பிரபுத்துவத்தின் தலைமையை. இங்கிலாந்து இழந்தது அந்த அந்தஸ்திலுள்ள மனோரீதியான தலைமையை.

அவளுடைய கண்களின் அழகு அந்த ஒளியை வெளிப்படுத்துகிறது.
அந்த ஒளியில், டார்சி தன்னை எரித்துக் கொள்ளத் தயாராக இருந்தான்.
லேடி காதரினுடைய தீவிரத்தின் மூலம் நிலைமையின் துன்பமும் இன்பமும் வெளிப்பட்டன.
காலின்ஸுடைய குணாதிசயத்தின் முக்கியத்துவமும் அதனுடைய பகட்டும் இவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளன.

"*But if that is the case, you must write to your mother to beg that you may stay a little longer. Mrs. Collins will be very glad of your company, I am sure."*
"அப்படியெனில் மேலும் சில நாட்கள் இங்கு தங்குவதற்கு சம்மதம் கேட்டு உன்னுடைய தாயாருக்கு நீ கடிதம் எழுத வேண்டும். திருமதி. காலின்ஸும் உன்னுடன் சேர்ந்து இருப்பதை மிகவும் விரும்புவாள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை" என்றாள்.

23. "You must write to your mother to beg to stay longer."
Imaginative will extends itself endlessly.
Always it ends in the social pinnacle of marrying the princess.
All ambitions are social; all end in being the King.
Mental ideals have not acquired any reality in social existence.
Even spiritual ideals strive for social power, making society ultimate.
Society is not only a great reality; but it is the only reality.
Idealism is known to the world as an idea, not as a reality.
The economic crisis of 1929 that persists till now is the symbol of Money becoming the only social reality forgetting the Man.
Money is a symbol, is a process, a cause, a secondary cause.
Money is the foundation for supramental realization because today Man is under the tutelage of Money.
Even after his emancipation from Money, he needs it as the foundation, as it is the strongest of foundations, being a symbol.
Often we find miserly people generous in matters of Money.
Social upward mobility takes the form of generosity in Money as he who aspires to rise in society sees Money as the symbol of higher status.
True generosity is of the soul. It expresses in all possible fashions.
Such a generosity goes with indifference to Money.
Generosity is the result of infinity expressing through will.
That makes the Man a Kshatriya.
Money is one form of will.
Infinity expressing through the will that is Money is Vysya.
Infinity through Truth as well as knowledge makes one a Brahmin.
One loses caste when the characteristic trait of the caste is lost.
Courage makes a Man or marks out a Man as Kshatriya.
Courage expressing infinity is the generosity of the soldier.
Unity, Truth, Goodness, knowledge, power, Beauty, Love, Joy are the aspects of Sachchidananda.
Silence, Peace, Eternity and Infinity are the attributes of the Spirit.
Each of these expressing through another enriches the Play.
He who sees the Play sees the part.
He who sees the Play as the Player sees more than the part.
Seeing the Play as the Player and the Playground one sees the whole.
The combination of two aspects results in sweetness, Goodness, generosity.
Equality is the consciousness of infinity.
Divine Equality is the consciousness of the Absolute – Maya.
The final expression of Divine Equality is Ishwara's Shakti.
Moving from consciousness to Superconscience that is the door to the Absolute is the Supreme discovery.
Peace matures into bliss.
Infinity and eternity mature by combining into Spirit.
Supramental Shakti's aspects are described by Him as Supramental Silence, Supramental Love, Supramental Reason, Supramental Knowledge, Supramental Sense and Supramental Time-vision, திரிகால திருஷ்டி, trikaladrshti.
When grace acts on us answering our prayer it is possible for us to observe these aspects.
After reading the letter Elizabeth felt gratitude, revealing a touch of this.
He felt a gratitude for her abuse, a stronger touch of these aspects.
"மேலும் சில நாட்கள் இங்கு தங்குவதற்கு சம்மதம் கேட்டு நீ உன் தாயாருக்கு கடிதம் எழுத வேண்டும்."

கற்பனைக்கு அளவே கிடையாது.
ராஜகுமாரியை திருமணம் செய்துகொள்ளும் சமூக சிகரத்தை அது எப்பொழுதும் எட்டும்.
எல்லா ஆசைகளும் சமூகரீதியானவை, எல்லோருக்கும் அரசனாக ஆசை.
சமுதாயத்தில் மனத்தின் இலட்சியங்கள் எந்த உண்மை நிலையையும் பெறவில்லை.
ஆன்மீக இலட்சியங்களும் சமூக அதிகாரத்திற்கே பாடுபடுகின்றன, சமூகம்தான் இறுதியானது என ஆக்கப்படுகிறது.
சமூகம் ஒரு பெரிய உண்மை மட்டும் அல்ல, அது ஒன்று மட்டுமே உண்மை.
இலட்சியம் ஒரு கருத்து போல்தான் உலகுக்குத் தெரிகிறது, உண்மையைப்போல் அல்ல.
இன்னமும் தொடரும் 1929ல் ஆரம்பித்த பொருளாதார நெருக்கடி, மனிதனை மறந்துவிட்டு பணம் ஒன்று மட்டுமே சமூக உண்மை என்று இருக்கிறது.
ஒரு அடையாளம், ஒரு செய்முறை, ஒரு காரணம், இரண்டாம் பட்ச காரணம் என்பது போல் பணம் விளங்குகிறது.
மனிதன் இன்று பணத்தின் ஆதரவில் இருப்பதால், பணம்தான் சத்தியஜீவிய சித்திக்கு ஆதாரமாக இருக்கிறது. பணத்திலிருந்து விடுதலை பெற்ற பின்பும், அவனுக்கு அது ஆதாரமாகத் தேவைப்படுகிறது, ஏனெனில் அது அடையாளமாக விளங்கும் பலம் வாய்ந்த ஆதாரமாகும்.
மனத்தளவில் கஞ்சத்தனமான மனிதர்கள் பல சமயம் பண விஷயத்தில் தாராளமாக இருப்பதைப் பார்க்கிறோம்.
சமூகத்தில் உயர்வது, பண விஷயத்தில் தாராள மனப்பான்மையாக மாறுகிறது. ஏனெனில் சமூகத்தில் உயர வேண்டும் என்று ஆர்வம் உடையவர்கள் பணத்தை உயர்ந்த அந்தஸ்தின் சின்னமாகக் கருதுகின்றனர்.
ஆன்மாவுக்கே தாராள மனப்பான்மை உண்டு. எல்லா விதங்களிலும் அது வெளிப்படுத்தும்.
பணத்தைப் பற்றி கவலைப்படாமல் இருப்பவரே தாராள மனப்பான்மை உடையவராக இருப்பார்.
அளவற்றது, விருப்புறுதி மூலம் வெளிப்படுவதே தாராள மனப்பான்மை ஆகும்.
அது மனிதனை ஒரு க்ஷத்ரியனாக்கும்.
பணம் விருப்புறுதியின் ஒரு வடிவம்.
அளவற்றது பணமாக உள்ள விருப்புறுதி மூலம் வெளிப்படுவது, வைஸ்யன்.
உண்மை மற்றும் அறிவு மூலம் எல்லையில்லாததை வெளிப்படுத்துவது ஒருவரைப் பிராமணன் ஆக்கும்.
ஒரு ஜாதியின் குணாதிசயம் அழியும்பொழுது ஒருவர் தன் ஜாதியையும் இழக்கிறார்.
தைரியம் ஒருவனை க்ஷத்திரியன் ஆக்கும் அல்லது அவனை க்ஷத்திரியன் என அடையாளம் காணும்.
எல்லையில்லா தைரியம் போர் வீரனின் குணமாகும்.
ஒருமைப்பாடு, உண்மை, நற்குணம், ஞானம், சக்தி, அழகு, அன்பு, சந்தோஷம் இவை சச்சிதானந்தத்தின் அம்சங்கள் ஆகும்.
மௌனம், அமைதி, காலத்தைக் கடந்த நிலை, எல்லையில்லாதது ஆகியவை ஆன்மாவின் பண்புகள்.
ஒன்று மற்றொன்றின் மூலம் வெளிப்படுவது ஆட்டத்தைச் சிறப்பிக்கிறது.
ஆட்டத்தைக் காண்பவன் பகுதியைப் பார்க்கிறான்.
ஆடுபவனாக ஆட்டத்தைப் பார்ப்பவன், பகுதியையும் தாண்டி பார்ப்பான்.
ஆட்டத்தை ஆடுபவனாகவும், ஆடும் அரங்கமாகவும் பார்த்தால் ஒருவரால் முழுமையைப் பார்க்க முடியும்.
இரண்டு அம்சங்களும் சேரும்பொழுது இனிமை, நற்குணம், தாராள குணம் இவை எழுகின்றன.
சமத்துவம் எல்லையற்றதின் ஜீவியமாகும்.
தெய்வீகச் சமத்துவம் பிரம்மத்தின் ஜீவியம், மாயை.
தெய்வீகச் சமத்துவத்தின் இறுதியான வெளிப்பாடு ஈஸ்வர சக்தியாகும்.
ஜீவியத்திலிருந்து பரமாத்மாவுக்குச் செல்வது, பிரம்மத்தின் நுழைவு வாயிலாகும். இது ஈஸ்வரனை கண்டுபிடிப்பது.
சாந்தி ஆனந்தமாக முதிர்ச்சி பெறுகிறது.
ஆன்மாவில் எல்லையில்லாததும், காலத்தைக் கடந்த நிலையும் சேரும்பொழுது அவை முதிர்ச்சி அடைகின்றன.
சத்திய ஜீவிய சக்தியின் அம்சங்களை சத்திய ஜீவிய மௌனம், சத்திய ஜீவிய அன்பு, சத்திய ஜீவிய விவேகம், சத்திய ஜீவிய ஞானம், சத்திய ஜீவிய உணர்வு, சத்திய ஜீவிய காலத்தின் பார்வை, திரிகால திருஷ்டி என்று பகவான் விவரித்துள்ளார்.
நம்முடைய பிரார்த்தனைகளுக்குப் பதிலளித்து அருள் செயல்படும்பொழுது, இந்த அம்சங்களை நம்மால் பார்க்க இயலும்.
கடிதத்தைப் படித்து முடித்த பிறகு எலிசபெத்திற்கு நன்றி உணர்வு எழுந்தது, இதனுடைய ஒரு ஸ்பரிசம்.
அவளுடைய நிந்தனைகளுக்கு அவனுக்கு நன்றி உணர்வு எழுந்தது, இந்த அம்சங்களின் பலமான ஸ்பரிசம்.

"*I am much obliged to your ladyship for your kind invitation," replied Elizabeth, "but it is not in my power to accept it. I must be in town next Saturday."*

"உங்களுடைய அன்பான அழைப்புக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். ஆனால் அதை ஏற்றுக்கொள்வது என் கையில் இல்லை. நான் அடுத்த சனிக்கிழமை லண்டனில் இருக்க வேண்டும்" என்று எலிசபெத் பதிலளித்தாள்.

24. "It is not in my power to accept it."
What is invaluable in one's view is no view from another or even an obstacle.
As it is a time of changing social values, material values become its opposite.
The purpose of her visit is over; therefore there is no sanction for further stay.
One cannot accept an invitation while being 'out of spirits'.
Had she accepted it, the abuse of the Lady would quickly precipitate.
We see in Elizabeth the joy of refusal, however ill-concealed it is.
It is significant that Anne never spoke at all; she was a sickly relic.
Light hurts her, reflecting her true inner condition.
She is unable to eat well; the only thing available in plenty – food.
She is not able to accept her invitation; at Longbourn she is not able to give her the promise the Lady asked for.
No one will ask for the promise the Lady asked Elizabeth of a social equal.
Social superiority gives the authority for the Lady the freedom to ask for it.
The several visits Elizabeth made and the several dinners she ate there made her personally vulnerable.
The above refusal to accept her invitation enabled her to refuse her later.
Relationship is among equals.
Dining and interdining creates an atmosphere of power of exchange.
In sensitive relationships no such courtesy is extended or accepted without complete consideration.
Edmond would not eat at Fernand's house, nor would he eat the single fruit Mercedes offered him during the walk. It was noted by her and her son.
Mrs. Bennet planned in her mind that Jane's stay at Netherfield would facilitate her wedding.
In this case the determinant was not her plan, but the atmosphere.
The atmosphere was not in Jane's favour.
Therefore her stay there could hurt her marriage.
Elizabeth too stayed there out of necessity.
It fully earned her Darcy up to the point of alarming him.
Her four days stay at Netherfield and the dinners at Rosings enabled her to abuse him.
That which acted against Jane, acted in Elizabeth's favour. Jane was weak, Elizabeth was strong.
A strong person receiving courtesies strengthens his hand.
A weak person becomes weaker by the same treatment.
The rule acts according to strength, not determined by plan or initiative or intention.
Lady Catherine refused to take refreshments at Longbourn.
On the first visit Mr. and Mrs. Gardiner refused refreshments at Pemberley.
On the second visit they accepted the courtesy but were provoked by Caroline before dinner.
Had Lady Catherine eaten at Longbourn certainly either her abuse would have been strengthened or weakened. The balance that we saw would certainly have been disturbed. Which way is not known.
Had the party accepted the refreshments at Pemberley at the first visit when Caroline was not there, maybe Caroline could not have provoked her during the second visit.
Every Act influences the totality of the events.
Not only acts, even sights or thoughts.
Society jealously preserves the relationships between equals and that touches people of positive good will. Every correspondence matters.
"ஏற்றுக்கொள்வதற்குரிய அதிகாரம் என் கையில் இல்லை."
ஒருவருடைய கண்ணோட்டத்தில் விலைமதிப்பற்றதாக விளங்குவது மற்றொருவருக்கு ஒன்றுமில்லாதது போல் தோன்றும் அல்லது தடையாகவும் தோன்றும்.
சமூக மதிப்புகள் மாறும் காலமாக இது இருப்பதால், லௌகீக மதிப்புகள் அதற்கு நேர்மாறானதாக மாறுகிறது.
அவள் வந்த வேலை முடிந்து விட்டது; அதனால் தொடர்ந்து தங்குவதற்கு அனுமதி இல்லை.
உற்சாகமின்றி இருக்கும்பொழுது ஒருவரால் அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியாது.
அவள் அதனை ஏற்றுக்கொண்டிருந்தால், லேடி காதரினுடைய நிந்தனை விரைவில் பூர்த்தியாகி இருக்கும்.
அதை எவ்வளவுதான் மோசமாக மறைத்து வைத்திருந்தாலும், மறுப்பதில் உள்ள சந்தோஷத்தை எலிசபெத்திடம் பார்க்கிறோம்.
ஆன் பேசவேயில்லை என்பது குறிப்பிடத்தக்கது; அவள் மிகவும் நலிந்து இருந்தாள்
ஒளி அவளை துன்புறுத்துகிறது, அவளுடைய உண்மையான அக நிலையை இது பிரதிபலிக்கிறது.

அவளால் நன்றாக உணவுண்ண முடியவில்லை; நிறைந்திருக்கும் ஒரே பொருள் அங்கு உணவு.
எலிசபெத்தால் அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியவில்லை; லாங்பர்னில் லேடி காதரின் கேட்டதற்கு வாக்குறுதி கொடுக்க முடியவில்லை.
லேடி காதரின், எலிசபெத்தை கேட்ட சமூக சம நிலைக்கான வாக்குறுதியைப் போல் வேறு யாரும் கேட்க மாட்டர்.
சமூகத்தில் உள்ள உயர்ந்த நிலை லேடி காதரினுக்கு, சுதந்திரமாக அதனை கேட்கும் அதிகாரத்தை அளிக்கிறது.
எலிசபெத்தின் பல விஜயங்களும், அங்கு பல தடவை விருந்துண்டதும் அவளை பலவீனமான நிலைக்குத் தள்ளியது.
லேடி காதரினுடைய மேற்கண்ட அழைப்புக்கு மறுப்பு தெரிவித்ததால், அவளால் பின்னால் மறுக்க முடிந்தது.
சமமாக இருப்பவர்களிடமே உறவு இருக்கும்.
விருந்துண்பதும், பதில் விருந்துண்பதும் சக்தி பரிமாற்றலின் சூழலை உருவாக்குகிறது.
முழு எதிர்பார்ப்பு இல்லாமல் உணர்வு மிக்க உறவுகளில், அது போன்ற உபசரிப்புகள் அளிக்கப்படுவதும் இல்லை, ஏற்றுக்கொள்ளப்படுவதும் இல்லை.
எட்மண்ட், பெர்னாண்ட் வீட்டில் உணவு உண்பதில்லை, நடந்து போகையில் மெர்சிடிஸ் அளிக்கும் ஒரு பழத்தைக்கூட புசிப்பதில்லை. அது அவளாலும், அவளது மகனாலும் கவனிக்கப்பட்டது.
நெதர்பீல்டில் ஜேன் தங்குவது, அவளுடைய திருமணத்திற்கு வழி வகுக்கும் என்று திருமதி பென்னட் திட்டம் தீட்டினாள்.
இந்த விஷயத்தில் முடிவு செய்தது சூழலே தவிர அவளது திட்டம் அல்ல.
சூழல் ஜேனுக்கு சாதகமாக இல்லை.
அதனால், அவள் அங்கு தங்குவது அவளது திருமணத்தை பாதிக்கலாம்.
எலிசபெத்தும் நிர்பந்தத்தினால் அங்கு தங்கினாள்.
அவளால் ஈர்க்கப்படுகிறோமோ என்று டார்சியை பயமுறுத்தும் அளவுக்கு அது விளைவை ஏற்படுத்தியது.
நெதர்பீல்டில் நான்கு நாட்கள் தங்கியதும், ரோசிங்ஸில் நடந்த விருந்துகளும், அவனை அவளால் நிந்திக்க வைத்தது.
ஜேனுக்கு எதிராக செயல்பட்ட விஷயம், எலிசபெத்துக்கு ஆதரவாக செயல்பட்டது. ஜேன் பலவீனமானவளாக இருந்தாள், எலிசபெத் வலிமையுடன் இருந்தாள்.
உபசரிப்பை ஏற்றுக்கொள்ளும் ஒரு வலிமையான மனிதன், மேலும் வலுவடைகிறான்.
அதே முறையால், பலவீனமானவன், மேலும் பலவீனம் அடைவான்.
சட்டம் வலிமைக்குத் தகுந்தாற்போல் செயல்படுகிறது. திட்டம் இடுவதாலோ, தன் முனைப்பாலோ, நோக்கத்தாலோ செயல்படுவதில்லை.
லேடி காதரின் லாங்பர்னில் சிற்றுண்டி உண்ண மறுத்து விட்டாள்.
கார்டினர் தம்பதிகள், தங்களுடைய முதல் விஜயத்தின்போது பெம்பர்லியில் சிற்றுண்டி உண்ண மறுத்து விட்டனர்.
இரண்டாவது விஜயத்தில், உபசரிப்பை ஏற்றுக்கொண்டனர், ஆனால் விருந்துக்கு முன்பு காரலினால் எரிச்சலூட்டப்பட்டனர்.
லாங்பர்னில் லேடி காதரின் விருந்துண்டிருந்தால் அவளுடைய நிந்தனை, ஒன்று பலப்பட்டிருக்கும் அல்லது பலவீனமடைந்திருக்கும். நாம் பார்த்த சமநிலை நிச்சயமாக பாதிக்கப்பட்டிருக்கும். எவ்வாறு என்பது தெரியவில்லை.
முதல் விஜயத்தின்பொழுது அவர்கள் பெம்பர்லியில், காரலின் இல்லாத அச்சமயத்தில், சிற்றுண்டி உண்ண சம்மதித்திருந்தால், இரண்டாவது விஜயத்தின்பொழுது காரலின் ஒரு வேளை அவளை எரிச்சலூட்டியிருக்க முடியாது.
நிகழ்வுகளின் முழுமையில் ஒவ்வொரு செயலின் தாக்கமும் இருக்கும்.
செயல்கள் மட்டுமல்ல, பார்வையும் எண்ணங்களும் கூட.
இணையானவர்களிடம் உள்ள உறவை சமூகம் பொறாமையுடன் பாதுகாக்கிறது, அது நேர்மறையான நல்லெண்ணம் உள்ளவர்களைத் தொடுகிறது. ஒவ்வொரு தொடர்பும் முக்கியமாகும்.

"*Why, at that rate, you will have been here only six weeks. I expected you to stay two months. I told Mrs. Collins so before you came. There can be no occasion for your going so soon. Mrs. Bennet could certainly spare you for another fortnight.*"
“அப்படியெனில், நீ இங்கு தங்குவது ஆறு வாரங்களுக்கு மட்டுமேதான் இருக்கும். நீ இங்கு இரண்டு மாதங்கள் தங்குவாய் என நான் எதிர்பார்த்தேன். நீ வருவதற்கு முன் திருமதி. காலின்ஸிடமும் இதைத்தான் சொன்னேன். இவ்வளவு சீக்கிரம் நீ போக வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. இன்னும் இரண்டு வாரங்களுக்கு நிச்சயம் திருமதி. பென்னட் உனக்கு அனுமதியளிப்பாள்.”

25. She expects Elizabeth and her family to obey her.
எலிசபெத்தும் அவளது குடும்பத்தினரும் அவளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவள் எதிர்பார்க்கிறாள்

"*But my father cannot. He wrote last week to hurry my return.*"
“ஆனால் என் தகப்பனாரால் நான் இல்லாமல் இருக்க முடியாது. அவர் சென்ற வாரம், என்னை விரைவில் திரும்பும்படி கடிதம் எழுதியிருந்தார்.”

26. Lady Catherine cannot know how much Mr. Bennet misses Elizabeth.
திரு பென்னட் எந்த அளவிற்கு எலிசபெத்தின் பிரிவை தாங்கிக் கொள்கிறார் என்று லேடி காதரினுக்கு தெரிய வாய்ப்பில்லை.
27. Lady Catherine is unable to comprehend Mr. Bennet’s need for his daughter.
திரு பென்னட்டுக்கு எந்த அளவு அவரது மகள் தேவைப்படுகிறாள் என்று லேடி காதரினால் புரிந்துகொள்ள முடிவதில்லை.
28. “My father wrote to me to hurry my return.”
Her father, as an exception, is much attached to her.
She owes her Mind to her father.
It is not Mind, but the heart that is developed among women.
Elizabeth is an exception.
How that exception arose is of great interest.
To him Jane was a disappointment.
His great expectation and aspiration succeeded in Elizabeth.
Not only that, in her he exhausted his energies as well as hopes.
His apparent irresponsibility was **a great silent responsibility**.
It finally came true in Darcy covering all three weddings.
His objections to Darcy were real and that is because, I said, of social distances. Darcy had overshot his expectations.
His own experience of not being able to respect his partner was repeating in her in the other direction which is a life necessity.
His expectations were fulfilled overmuch but according to the rules of life.
As Mrs. Bennet inappropriately ruled Longbourn, Elizabeth would rule Pemberley rightfully which was seen in Caroline’s submission already.
In a small but essential way Pemberley was a place where Wickham had spent all his youth.
In marrying Pemberley she was marrying Wickham vicariously.
Wickham’s ambitions to live and rule Pemberley were fulfilled through her.
Darcy could banish Wickham physically but not psychologically.
The end of the story is a triumph of magnificent Freedom in Silence over the vulgar insistent dynamism of his wife.
He had to sacrifice normal domestic felicity of wedded bliss.
She had to sacrifice the direct reward of life to her initiatives.
Darcy paid in cash for her direct insolence and insult as it was due to Lydia and Wickham.
The low demands, demands vulgarly by insulting, mostly as a reward for treachery.
The excuse was his own attraction for her pretty face.
Jinnah did so and demanded Pakistan as a reward for his betrayal of the national cause and continued to ask for Kashmir as an excess.
France was rewarded with a seat in the Security Council for her surrender to Hitler.
The Brahmins who had betrayed the Spiritual cause of India ruled her for the first 30 years before finally quitting the national scene.
Even when values are betrayed, capacities are rewarded.
In all marriages this is an unfailing experience during the periods when marriage was binding.
Values seek organization for social survival.
In Christianity it survived for 1500 years though the betrayal of Christian love was total in the beginning.
United Nations which came to unite the world, at its founding blatantly betrayed democracy and the betrayal still survives.
As socialism succeeded all over the world clandestinely though capitalism, democracy is being served by dictatorship in the United Nations Organizations.
“என்னை விரைவாகத் திரும்பி வருமாறு என் தந்தை எழுதியுள்ளார்.”
ஒரு விதி விலக்காக, அவள் தந்தை அவள் மேல் அதிக பற்று கொண்டிருந்தார்.
அவளுடைய மனம் அவள் தந்தைக்குரியது.
மனம் அல்ல, இதயம்தான் பெண்களிடம் வளர்ந்துள்ளது.
எலிசபெத் ஒரு விதி விலக்கு.

அந்த விதி விலக்கு எப்படி ஏற்பட்டது என்பது வியப்புக்குரியது.
அவருக்கு ஜேன் ஒரு ஏமாற்றம்.
அவருடைய பெரிய எதிர்பார்ப்பும் ஆர்வமும் எலிசபெத்திடம் வெற்றி அடைந்தது.
அது மட்டுமல்ல, அவருடைய சக்தியையும் எதிர்பார்ப்பையும் அவளிடம் முழுவதும் செலவழித்து விட்டார்.
அவரிடம் காணும் பொறுப்பின்மை **ஒரு பெரிய மௌனமான பொறுப்பு.**
மூன்று திருமணங்களின் மூலம் அது டார்சி விஷயத்தில் உண்மை ஆனது.
அவருக்கு டார்சியின் மீதிருந்த எதிர்ப்பு உண்மையானது. அது ஏனெனில் சமூக நிலையிலிருந்த இடைவெளியினால் என்று நான் கூறுகிறேன். டார்சி அவரது எதிர்பார்ப்பை மீறிவிட்டான்.
தன்னுடைய மனைவியை மதிக்க முடியாமல் போகும் அவருடைய சொந்த அனுபவம் அவளிடம் வேறொரு திசையில் தொடருகிறது, இது வாழ்க்கைக்கு அவசியம்.
அவருடைய எதிர்பார்ப்புகள் வாழ்க்கை விதிகளுக்கு உட்பட்டு அதிகப்படியாகவே பூர்த்தி செய்யப்பட்டன.
திருமதி பென்னட் லாங்பர்னை தகுதியற்று ஆட்சி செய்தது போல், எலிசபெத் பெம்பர்லியை உரிமையுடன் ஆட்சி செய்வாள், இது காரலின் பணிந்து போவதிலேயே தெரிந்து விடுகிறது.
சிறிய அளவில் இருந்தாலும் முக்கியமான வகையில் விக்காம் தனது இளமைக் காலம் முழுவதும் பெம்பர்லியிலேயே வாழ்ந்திருக்கிறான்.
பெம்பர்லியை திருமணம் செய்துகொள்வது விக்காமை திருமணம் செய்து கொள்வதற்கு ஈடாகும்.
பெம்பர்லியில் வாழ வேண்டும், அதை ஆதிக்கம் செய்யவேண்டும் என்கிற விக்காமின் ஆசை அவள் மூலம் பூர்த்தியானது.
விக்காமை அங்கு வர விடாமல் டார்சியால் தடுக்க முடியும், ஆனால் அவனது மன உணர்வுகளை தடுக்க முடியாது.
மனைவியின் மோசமான வற்புறுத்தும் தீவிரத்திற்கு மௌனமாக அளித்த பேரளவு சுதந்திரத்தின் வெற்றியே இக்கதையின் முடிவாகும்.
அதற்கு அவர் தியாகம் செய்தது திருமண வாழ்க்கையின் இன்பம்.
தன்னுடைய தன்முனைப்புகளுக்கு வாழ்வின் நேரடிப் பலன்களையே அவள் தியாகம் செய்தாள்.
அவள் நேரடியாக எரிச்சலூட்டியதற்கும் அவமானப்படுத்தியதற்கும் அவன் பணம் கொடுக்க வேண்டியதாயிற்று, ஏனெனில் அது லிடியாவிற்கும் விக்காமிற்கும் உரித்தானதாக இருந்தது.
பெரும்பாலும் நம்பிக்கைத் துரோகத்திற்கு பரிசாக தாழ்ந்தது எதிர்பார்க்கும், அவமானப்படுத்துவது மூலம் மோசமாக எதிர்பார்க்கும்.
அவளுடைய அழகான முகத்தை கண்டு அவன் விரும்பியதே ஒரு காரணமாகும்.
ஜின்னாவும் இதே போல் நாட்டின் நம்பிக்கைத் துரோகத்திற்கு பரிசாக பாகிஸ்தானைக் கேட்டார், அதற்கும் மேலாக காஷ்மீரையும் கேட்டுக் கொண்டிருந்தார்.
ஹிட்லரிடம் சரண் அடைந்ததால் பிரான்ஸிற்கு பாதுகாப்பு சபையில் ஒரு இடம் பரிசாக அளிக்கப்பட்டது.
ஆன்மீக விஷயத்தில் நம்பிக்கைத் துரோகம் செய்த பிராமணர்கள் இந்தியாவை முதல் முப்பது வருடங்கள் ஆண்டனர், இறுதியாக நாட்டின் முக்கிய பதவிகளிலிருந்து விலகினர்.
பண்புகளுக்குத் துரோகம் இழைக்கப்பட்டாலும், திறமைகளுக்குப் பரிசு கிடைக்கிறது.
திருமணம் என்பது நிர்பந்தமாக இருந்த காலங்களில், எல்லாத் திருமணங்களிலும் இந்த அனுபவம் தவறாது இருந்தது.
சமூகத்தில் நிலைத்து நிற்க பண்புகள் அமைப்பை நாடுகின்றன.
கிறிஸ்துவ அன்பிற்கு முழுமையாக துரோகம் இழைத்த பின்பும் கிறிஸ்துவம் 1500ஆண்டுகளுக்கு தழைத்தது.
உலகத்தை இணைக்க ஏற்பட்ட ஐக்கிய நாட்டுச் சபை, ஆரம்பத்தில் ஜனநாயகத்துக்கு துரோகம் இழைத்தது, அது இன்னமும் தொடர்கிறது.
பொதுவுடமை மறைமுகமாக முதலாளித்துவம் மூலம் உலகம் முழுதும் வெற்றி அடைந்தபோது, ஐக்கிய நாட்டுச் சபையில் சர்வாதிகாரம் ஜனநாயகத்துக்கு தொண்டு செய்கிறது.

"*Oh! Your father of course may spare you, if your mother can. Daughters are never of so much consequence to a father. And if you will stay another month complete, it will be in my power to take one of you as far as London, for I am going there early in June for a week; and as Dawson does not object to the barouche-box, there will be very good room for one of you -- and indeed, if the weather should happen to be cool, I should not object to taking you both, as you are neither of you large."*
"ஓ! நீ இன்றி உன் தாயாரால் இருக்க முடியும் என்றால், உன் தந்தையாலும் நிச்சயம் முடியும். பெண்கள் தகப்பனார்களுக்கு எப்பொழுதும் ஒரு விஷயமே இல்லை. மேலும் நீ இங்கு ஒரு மாதம் முழுவதுமாக தங்கினால், நான் உங்களில் ஒருவரை லண்டனிற்கு அழைத்துச் செல்ல முடியும். ஏனெனில் ஜுன் மாத தொடக்கத்தில் ஒரு வாரத்திற்கு அங்கு செல்லப் போகிறேன், டாஸன் பெரிய குதிரை வண்டிக்கு ஆட்சேபம் தெரிவிக்க மாட்டார் என்பதால் உங்களில் ஒருத்திக்கு அதில் தாராளமாக இடம் இருக்கும். கால நிலையும் இனிமையாக சில்லென்று இருந்தால் உங்கள் இருவரையுமே அழைத்துச் செல்வதற்கு நான் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்க மாட்டேன், ஏனெனில் நீங்கள் இருவருமே பருமன் அல்ல".

29. Lady Catherine's desire to extend Elizabeth's stay there indicates that Elizabeth is to enter that family soon.
அங்கு எலிசபெத் தங்குவதை லேடி காதரின் தொடர விரும்பியது, எலிசபெத் அந்த குடும்பத்தினுள் நுழையப் போகிறாள் என்பதை தெரிவிக்கிறது.
30. Left alone Elizabeth's dwelling on the letter would have crushed her. She is taken to Rosings as a diversion.
தனித்து விடப்பட்டிருந்தால், கடிதத்தை படித்தது, எலிசபெத்தை மிகவும் வருத்தி இருக்கும். ஒரு மாறுதலுக்காக, அவள் ரோசிங்ஸிற்கு அழைத்து செல்லப்படுகிறாள்.
31. Lady Catherine offers to take Elizabeth to London – Earlier sign of Elizabeth's marriage.
லேடி காதரின் எலிசபெத்தை லண்டனுக்கு அழைத்துச் செல்வதாக கூறுகிறாள். அது எலிசபெத்தின் திருமணத்தைப் பற்றிய ஆரம்ப அறிகுறியாகும்.
32. "Daughters are never of so much consequence to a father."
Lady Catherine reflects from the point of view of her time.
One can conform to his own society mentally, or try to be ahead of it.
Mr. Bennet's interest in Elizabeth is the interest of Mind in life.
It is a climate that gives birth to scientific thinking.
It is a progressive view that seeks change.
Lady Catherine's view is one of preservation, known as conservatism.
Elizabeth is aware of her father's interest and eagerly responds to it.
Father may be interested; the daughter may not be aware of it or respond to it.
Elizabeth eagerly refuses the Lady's idea and expresses an urge to respond to her father.
Human choice is based on physical need, vital interest, mental curiosity or spiritual possibility.
She responds from mental curiosity.
Just that day she had effectively moved to a mental view from vital absorption.
In her reply we see that nascent energy.
Human choice is exercised by 1) where he is, 2) what is possible for him,
3) the ideal of his time, and 4) the extent of his willingness to exert.
For her temperament, it is surprising how readily the Lady yielded to Elizabeth.
The power of her eagerness overcomes the Lady's habit of irrational insistence.
This is another indication of 1) Elizabeth's performance in Longbourn with Lady Catherine, 2) The final outcome of Darcy's proposal based on her decision that morning.
Between the conscious effort of Man and the subconscious insistence of the woman, the woman always prevails.
Darcy wants her consciously, she wants him subconsciously.
Its fulfillment takes the course of her own personality rather than his.
Mother says the woman achieves more than the Man.
Man offers the energy.
The woman offers the direction.
Man loves to fulfill his aspiration into the mould of her temperament.
Its outcome is determined by the laws of life.
Laws of life do not come into operation as long as Man effectively expresses his choice.
There are concentric circles of operation.
The outer circle's law does not intrude into that of the inner circle while the operation is confined to its limits.
A fuller appreciation of this process is seen in 1) Caroline's initiative to stop Jane's future, 2) The direct results of Mrs. Bennet's activities, 3) Bingley's response to the ruse, 4) The workings of Lydia's Mind, 5) How Wickham spreads himself, 6) Darcy's response to life shaking him, 7) Collins's execution of his plan of marriage, 8) Charlotte's alertness in an otherwise innocuous atmosphere.
The operation of each circle is wide or narrow not according to its construction but according to one's readiness to act.
There is no fixed Law. The law is made from moment to moment.
It is the unknowable formulating to human consciousness and disappearing.
It is the universe creating itself every moment.
Man meets it by the end of his interest and attitude.
His ideal fixes the interest and attitude.
It is a moment when involution changes into evolution.
Behind it lies the REASON for creation.
The range is between Human Choice and the response of the Unknowable.
The arrival of the Hour of God between them is of great interest to us as we are presently in it.
"பெண்கள், தந்தைக்கு எப்பொழுதும் அவ்வளவாக ஒரு பொருட்டு கிடையாது."
லேடி காதரின் அவள் காலத்தில் இருந்த நிலையை பிரதிபலிக்கிறாள்.

ஒருவர் மனதளவில் அவருடைய சமூகத்தோடு ஒத்துப் போகலாம், அல்லது அதற்கு முன்னோக்கியும் போக முயற்சிக்கலாம்.
திரு பென்னட்டிற்கு எலிசபெத் மேல் இருந்த அக்கறை, மனம் வாழ்வின் மேல் கொண்ட அக்கறை.
சூழ்நிலை விஞ்ஞானபூர்வமான எண்ணங்களுக்கு வழி வகுக்கிறது.
முன்னேற்றமான கண்ணோட்டம் மாறுதலுக்கு விழைகிறது.
லேடி காதரினுடைய கண்ணோட்டம், பாதுகாப்பது, பழைமையானது
எலிசபெத்திற்கு அவளுடைய தந்தையின் விருப்பம் தெரியும். அதற்கு ஆவலுடன் பதில் அளிக்கிறாள்.
தந்தைக்கு அக்கறை இருக்கலாம், மகளுக்கு அது தெரியாமலும் இருக்கலாம் அல்லது அதற்கு பதில் அளிக்காமலும் இருக்கலாம்.
லேடி காதரினுடைய எண்ணத்தை எலிசபெத் உடனடியாக மறுக்கிறாள், தன்னுடைய தந்தைக்கு பதிலளிக்க ஆவலுடன் இருக்கிறாள்.
ஜடத்தின் தேவைகள், உணர்வின் விருப்பம், மனத்தின் ஆவல் அல்லது ஆன்மீகச் சாத்தியங்கள், இவைகளின் அடிப்படையில் மனித விருப்பம் செயல்படும்.
மனத்தின் ஆவலில் அவள் செயல்படுகிறாள்.
உணர்ச்சிகளில் ஆழ்ந்திருந்த அவள் அன்றுதான் மனத்தின் கண்ணோட்டத்திற்கு திறம்பட மாறியிருந்தாள்.
அவளுடைய பதிலில் நாம் அந்த புதிய சக்தியைப் பார்க்கிறோம்.
மனித விருப்பம் செயல்படுவது 1)அவன் இருக்கும் இடம், 2)அவனால் இயன்றது, 3)அவன் காலத்திலிருந்த இலட்சியம், 4)செயற்படுத்தும் ஆர்வத்தின் அளவு இவைகளினால்.
லேடி காதரின், அவளுடைய அது போன்ற மனோபாவத்துடன், எலிசபெத்திற்கு எவ்வாறு உடனடியாக இணங்கினாள் என்று ஆச்சரியமாக இருக்கிறது.
அவளுடைய ஆர்வத்தின் வலிமை, லேடி காதரினுடைய விவேகமற்ற வலியுறுத்தலை வெற்றி கொள்கிறது.
இது 1) லேடி காதரினிடம் எலிசபெத் லாங்பர்னில் நடந்து கொண்டது 2) அன்று காலை அவள் செய்த தீர்மானத்தின் அடிப்படையில் டார்சியின் வேண்டுகோளின் இறுதிப் பலன்; இவைகளின் வேறொரு அறிகுறியாகும்.
ஆண் தன்னினைவோடு எடுக்கும் முயற்சி, ஆழ்மனதில் உள்ள பெண்ணின் வலியுறுத்தல், இவை இரண்டிற்கும் நடுவே ஜெயிப்பது எப்பொழுதும் பெண்தான்.
டார்சி அவளை தன்னினைவோடு விரும்புகிறான், அவளுக்கு ஆழ்மனதில் அவன் வேண்டும்.
அவளுடைய குணாதிசயத்தினால் அது பூர்த்தியாகிறதே தவிர அவனுடையது மூலம் அல்ல.
ஆணைவிட பெண்ணே அதிகம் சாதிப்பாள் என அன்னை கூறியுள்ளார்.
ஆண் சக்தி அளிக்கிறான்.
பெண் பாதையை வழி வகுப்பாள்.
பெண்ணின் மனோபாவத்திற்கேற்ப ஆண் தன்னுடைய ஆர்வத்தைப் பூர்த்தி செய்துகொள்ள விருப்பப்படுவான்.
அதனுடைய முடிவு வாழ்வின் விதிகளால் தீர்மானிக்கப்படுகிறது.
மனிதன் தன்னுடைய விருப்பத்தை திறம்பட வெளியிட்டு கொண்டிருக்கும்வரை, வாழ்வின் சட்டங்கள் செயல்படுவதில்லை.
ஒரு மையத்தை சுற்றி நிகழ்ச்சிகள் நடந்த வண்ணம் இருக்கின்றன.
ஒரு செயல் அதனுடைய எல்லைக்குட்பட்டு இயங்கும் பொழுது, வெளி வட்டத்தின் சட்டம் உள் வட்டத்தின் செயற்பாடுகளில் குறுக்கிடாது.
இந்த செயற்பாட்டின் முழுமையான புரிதலை இவைகளில் காண்கிறோம் 1) ஜேனுடைய எதிர்காலத்தைத் தடுக்க எடுக்கும் காரலினுடைய தன்முனைப்பு, 2) திருமதி பென்னட்டின் செயல்களின் நேரடியானப் பலன்கள், 3) சூழ்ச்சிக்கு பிங்கிலியின் மறுமொழி, 4) லிடியாவின் மனம் செயல்படும் வகை, 5) விக்காம் எவ்வாறு தன்னையே வெளிப்படுத்திக் கொள்கிறான், 6) வாழ்வின் அதிர்ச்சிகளுக்கு டார்சியின் மறுமொழி,7) காலின்ஸ் தன்னுடைய திருமண திட்டத்தை செயற்படுத்தும் விதம், 8) தீங்கற்ற சூழலில் ஷார்லெட்டின் விழிப்புணர்வு.
ஒவ்வொரு வட்டத்தின் செயற்பாடும் அதன் அமைப்புக்கு ஏற்றவாறு இருக்காது, ஆனால் ஒருவர் செயல்படும் ஆர்வத்தை பொறுத்து இருக்கும்.
நிரந்தரச் சட்டம் கிடையாது. சமயத்திற்கு ஏற்றவாறு சட்டம் அமைக்கப்படும்.
அறியமுடியாதது மனித ஜீவியமாக உருவாகி மறைகிறது.
பிரபஞ்சம் ஒவ்வொரு தருணமும் தன்னைத்தானே உருவாக்கிக் கொள்கிறது.
மனிதன் தன்னுடைய விருப்பம் மற்றும் மனப்பான்மையின் முடிவில் அதனை சந்திக்கிறான்.
அவனுடைய இலட்சியம் விருப்பத்தையும் மனோபாவத்தையும் தீர்மானிக்கிறது.
சிருஷ்டி பரிணாமமாகும் தருணம் அது.
இதற்குப் பின்னால் சிருஷ்டி ஏற்பட காரணம் உள்ளது.
மனித விருப்பம், அறிய முடியாததின் மறுமொழி, இவற்றின் நடுவே பல நிலைகள் உள்ளன.
அவற்றின் இடையே இறைவன் வரும் தருணம் நமக்கு முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது, ஏனெனில் நாம் தற்பொழுது இந்நிலையில் இருக்கிறோம்.

33. "If you stay another month complete."
The Lady repeated her demand after Elizabeth refused.
It means the demand in her was irresistible.
She was shameless in that measure.
When a demand is refused it turns into a request.
The transition is made through a bait.
An irresistible demand at such times is inevitably destroyed.
The offer was qualified as it is for one.
Quickly she modified it to two.
She was dismayed that she is not sufficiently attractive.
Despair or dismay if pursued will become stronger, as any other vibration.
Aristocracy sees itself as miniature Royalty.
All eyes are on royalty all the time.
The weak aristocrat wants to arrange all eyes turned to them.
We see here the vacillations of aristocracy as well as the determination of the emerging new class.
At Netherfield, during Jane's stay, the same context was presented.
There the context was physical illness of a lady receiving attention from her lover.
The subplot becomes the main plot by the arrival of Elizabeth.
Darcy, having pronounced 'tolerable', now changed his attitude.
He, by his conscious choice, spoke of his interest in Elizabeth to Caroline.
Caroline's evaluation of Elizabeth was poor in terms of beauty, wealth, fashion and status, making her rivalry weak.
Darcy's attention to Elizabeth alarmed Caroline who wished her removal quickened.
There it is all youth, love, energy, excitement around a patient.
Here it is between rank of age and fiery youth's disregard of status.
To this context was added the presence of Darcy and the colonel.
Lady Catherine rules the roost. No one contradicts her.
Elizabeth's reluctance to answer her question about her age is the first sign of challenge to authority.
Finding Elizabeth expressing her opinion about girls' being out, the Lady was startled.
Now her suggestion was opposed.
Next her blandishment fell flat.
These scenes bring to us the context of social transition.
What the Lady openly demands is slipping behind her effectively by his proposal.
It is one expression of Life which simultaneously moves on opposite directions.
Each is in one part of the movement.
We have the advantage of seeing both.
The reader by his preference sees only one side.
Or he sees the story not the movement of life.
Apparently it is Elizabeth visiting Collins and being invited to Rosings.
Behind it is her subconscious readiness to accept Darcy when he moves and Darcy's conscious move positively.
They are at loggerheads.
The play of relative status maintains the background.
It is up to us to see the reversal of courses here.
Should we choose, even the reversal of consciousness can be seen here.
From the story at the low end, the transformation at the higher end one is to choose.
"நீ இன்னொரு மாதம் தங்கினால்."
எலிசபெத் மறுத்த பின்பும் லேடி காதரின் தன்னுடைய வேண்டுகோளைத் தொடருகிறாள்.
அவளுக்குள் இருக்கும் எதிர்பார்ப்பு தடுக்க முடியாததாக இருக்கிறது என்றாகிறது.
அந்த அளவில் அவளுக்கு வெட்கமில்லை.
அதிகாரம் மறுக்கப்பட்டவுடன் அது வேண்டுகோளாகிறது.
மாறுதலுக்கு தூண்டில் போடப்பட்டது.
அது போன்ற சமயங்களில் அடக்க முடியாத அதிகாரம் கண்டிப்பாக அழிந்து விடுகிறது.
அழைப்பு, ஒருவருக்காக இருந்ததால் தகுதி உடையதாக இருந்தது.
விரைவாக அவள் அதனை இருவருக்காக மாற்றினாள்.
போதுமான அளவிற்கு அவர்களை கவரவில்லை என்று அவளுக்கு கலக்கமாக இருந்தது.
அவநம்பிக்கை அல்லது கலக்கம், இவற்றைத் தொடர்ந்தால், எந்த ஒரு அதிர்வையும் போல் அது வலுவடைந்து விடும்.

பிரபுத்துவம் தன்னை அரசு அதிகாரத்தின் சிறிய வடிவமாகப் பார்க்கிறது.
எல்லோருடைய கண்களும் எப்பொழுதும் அரசதிகாரத்தின் மேலேயே இருக்கும்.
பலவீனமான பிரபுக்கள், எல்லோருடைய பார்வையையும் தங்கள் பக்கம் திருப்ப ஆசைப்படுவர்.
பிரபுத்துவத்தின் தயக்கத்தையும், உருவாகும் புதிய வர்க்கத்தின் தீர்மானத்தையும் இங்கு பார்க்கிறோம்.
நெதர்பீல்டில் ஜேன் தங்கி இருந்தபோது இதே நிலைமைதான் இருந்தது.
உடல் நலம் குறைவாக இருந்த பெண், காதலனிடம் இருந்து கவனத்தை பெறுவதுதான் அங்கு இருந்த நிலை.
எலிசபெத்தின் வருகையால் உப கதை பிரதான கதையாக மாறி விட்டது.
'பரவாயில்லை' என்று கூறிய டார்சி தன் மனோபாவத்தை மாற்றிக் கொள்கிறான்.
அவன், தனக்கு எலிசபெத் மேல் நாட்டமிருப்பதை காரலினிடம் விரும்பியே கூறுகிறான்.
அழகு, சொத்து, நாகரிகம், அந்தஸ்து என்ற விஷயங்களில், எலிசபெத்தைப் பற்றிய காரலினது கணிப்புகள் சரியாக இல்லை.
எலிசபெத் மீது டார்சிக்கு இருந்த கவனம் காரலினை பயப்பட வைத்தது, அவளை விரைவாக அங்கிருந்து அகற்ற விரும்பினாள்.
அங்கு ஒரு நோயாளியை சுற்றி இளமை, அன்பு, சக்தி மற்றும் உத்வேகம் மட்டுமே இருந்தன.
இங்கு இது வயதின் நிலைக்கும், அந்தஸ்தை உதாசீனப்படுத்தும் இளமைக்கும் நடுவே நடக்கும் போராட்டம்.
இந்த நிலைமையில் டார்சியும் கர்னலும் அங்கு இருந்ததும் சேர்ந்து கொண்டது.
லேடி காதரின் தீர்மானங்கள் எடுப்பவளாக இருக்கிறாள். யாரும் அவளை மறுத்துக் கூறுவதில்லை.
வயதைப் பற்றிய அவளுடைய கேள்விக்கு எலிசபெத் பதில் கூற தயங்குவது, அதிகாரத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதன் முதல் அடையாளம் ஆகும்.
பெண்கள் வெளியே செல்வதைப் பற்றி எலிசபெத்தின் கருத்தைக் கேட்ட லேடி காதரின் அதிர்ச்சிக்குள்ளானாள்.
இப்பொழுது அவளுடைய பரிந்துரைக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது.
அடுத்து அவளுடைய கெஞ்சல் தோற்றது.
இந்த காட்சிகள் நமக்கு சமூக மாற்றத்தை விளக்குகின்றன.
லேடி காதரின் வெளிப்படையாகக் கேட்பது, அவனுடைய திருமண வேண்டுகோள் மூலம் கை நழுவிச் செல்கிறது.
ஒரே நேரத்தில் எதிரெதிர் திசைகளில் செல்லும் வாழ்க்கையின் ஒரு வெளிப்பாடு இது.
ஒவ்வொன்றும் இயக்கத்தின் ஒரு பகுதி ஆகும்.
நம்மால் இரண்டையும் பார்க்க முடிகிறது.
படிப்பவர், அவருடைய விருப்பத்தின் அடிப்படையில் ஒரு பக்கத்தை மட்டும் பார்க்கிறார்.
அல்லது அவர் கதையை மட்டும் பார்க்கிறார், வாழ்க்கையின் இயக்கத்தை அல்ல.
உண்மையில் எலிசபெத்தான் காலின்ஸை சந்திக்கச் செல்கிறாள், ரோசிங்ஸிற்கு அழைக்கப்படுகிறாள்.
இதன் பின்னணியில் இருப்பது டார்சியின் விருப்பத்திற்கு அவளுடைய ஆழ்மன சம்மதமே, டார்சியும் நேர்மறையாகப் பதிலளிக்கிறான்.
அவர்கள் எதிரெதிராக இருந்தனர்.
அந்தஸ்தில் உள்ள வித்தியாசம் பின்னணியில் உள்ளது.
பாதை மாறுவதைக் காண்பது நம் கையில் இருக்கிறது.
நமக்கு விருப்பம் இருந்தால், ஜீவியம் மாறுவதையும் நாம் இங்கே காணலாம்.
கதையில் இருக்கும் கீழ் நிலையில் இருந்து மேல் நிலைக்கு திருவுருமாறுவது நம் தேர்ந்தெடுப்பில் உள்ளது.

34. "as neither of you are large."

Ideas of old arise out of us with force.
Such expressions become eloquent.
Eloquence is the tone of inner conviction spread over all the being for long.
Lady Catherine's voice was strong and insistent, neither eloquent nor magnificent.
Man is soaked with family traditions.
Its values in him are not mere ideas.
They are emotionally enriched with the certitude of the heart.
In a right occasion, such ideas find expression as a reflection of the situation.
Its unfolding is majestic, needing no conviction.
The course of hearing is conviction.
Its massive cultural weight permeating the wideness of personality delivers itself with an irresistible force that is enjoyable.
True love of a mature being often reaches its pinnacle at this intensity.
Spiritually it does receive its complement positively as well as negatively.
Positively the complement proves to be a field where the unfolding personality can cosily rest and grow in comfort.
Negatively, it is depraved meanness expressing itself as petulant perversity.

One in life reacts or revolts.
One seeking transformation sees in its touch all the points of imperfection in him.
The voice of authority is powerful.
Sweetness of personality formulating as authority is an enveloping beneficence.
Darcy has the potential to shape himself like this.
But neither knowledge or aptitude is there for the required effort.
Mrs. Gardiner is of this type but is of shallow social propriety.
Elizabeth has reached a mental capacity though for a while clouded with infatuation.
The gratitude she felt to Darcy for loving her has all the personality potential to release energy and formulate itself into massive magnificence.
For that she must love Darcy which is not there.
Love for Darcy for a heart that already felt the gratitude has the aptitude to drive towards such a goal.
Transformation of her mother's energy of falsehood into a capacity for truth in love requires in her an intensity of enveloping goodwill that equals her goodwill to Jane.
In that case the material weight of Pemberley would have exhibited the ever increasing growth into cultural maturity that could form the basic foundation for the aim described above.
However that is, the acme of character then will become the first qualification fulfilling it in love and gratitude.
The very physical being is then filled with these ideas giving it a rare health in tenderness.
Should it go with spiritual purity, the persons become a standing wonder.
A society that can be described as cultural democracy will have the best part of the population or at least its cream of this description.
Kingdom of heaven on earth, பூலோக சொர்க்கம், earthly paradise, etc. are envisioned in this light.
The Love felt by Dante for Beatrice impelled him to write Divine Comedy.
The whole energy needed for that epic will be fully absorbed and assimilated in a few years of life that is love.
Love that lasts grows on the foundation of physical purity.
"ஏனெனில் நீங்கள் இருவருமே பருமன் அல்ல."
பழைமையான எண்ணங்கள் நம்முள்ளிருந்து வேகத்துடன் வெளி வரும்.
அது போன்ற வெளிப்பாடுகள் திறமையான பேச்சாக மாறும்.
வெகு நாட்களுக்கு நம் ஜீவனில் தங்கிவிடும் நமது உள்ளத்து உறுதியின் நாதம்தான் திறமையான பேச்சு.
லேடி காதரினுடைய குரல் வலிமையாகவும், வலியுறுத்துவதாகவும் இருக்கிறது, ஆனால் திறமையான பேச்சாகவோ, இனிமையாகவோ இல்லை.
மனிதன் குடும்ப சம்பிரதாயத்தில் மூழ்கி இருக்கிறான்.
அதன் மதிப்புகள் அவனுக்கு வெறும் கருத்துகள் அல்ல.
அவை இதயத்தின் உறுதியோடு உணர்வுபூர்வமாக வளமாக்கப்படுகிறது.
சரியான நேரங்களில் அது போன்ற எண்ணங்கள், சூழ்நிலையின் பிரதிபலிப்பாக வெளிப்படுகின்றன.
அதன் வெளிப்பாடு கம்பீரமாக இருக்கும், திடநம்பிக்கை தேவைப்படாது.
கேட்டுக்கொள்வது திடநம்பிக்கை.
அதனுடைய உயர்ந்த பண்பாடு அகன்ற ஆளுமையை ஊடுருவிச் சென்று தடுக்க முடியாத சக்தியுடன் மகிழ்விக்கும் வகையில் வெளிப்படும்.
இந்தத் தீவிரத்தில், முதிர்ச்சி அடைந்த ஒருவரின் உண்மையான காதல் பல சமயங்களில் அதன் உயர்வை அடையும்.
ஆன்மீகத்தில், அதற்கு நல்லதாகவோ, கெட்டதாகவோ பாராட்டு கிடைக்கும்.
நல்லதாக கிடைக்கும் பாராட்டு ஒருவரை மகிழ்ச்சியாக வைத்திருக்கும்.
எதிர்மறையாக, இழிந்த சின்னத்தனம் துடுக்கான குதர்க்கமாக வெளிப்படுகிறது.
வாழ்வில் ஒன்று எதிர்வினை ஆற்றும் அல்லது எதிர்ப்பு தெரிவிக்கும்.
திருவுருமாற வேண்டும் என்று விரும்புபவர், தன்னுள் இருக்கும் எல்லா குறைபாடுகளையும் காண்பர்.
அதிகாரத்தின் குரல் வலிமையானது.
இனிமையான குணமுள்ள ஒருவர் அதிகாரம் செய்யும்பொழுது அது நன்மை பயக்கும்.
டார்சிக்கு இது போல் மாறும் திறமை இருக்கிறது.
ஆனால் அந்த முயற்சிக்கு தேவையான ஞானமும் இல்லை, ஆர்வமும் இல்லை.
திருமதி கார்டினர் இந்த வகையைச் சேர்ந்தவள், ஆனால் சமூகத்தில் வலுவில்லாதவள்.
சிறிது காலத்திற்கு மோகத்தில் இருந்தாலும் எலிசபெத் மனத்திறனை அடைந்தாள்.
டார்சி தன்னைக் காதலிப்பதற்கு அவள் காட்டிய நன்றி உணர்வுக்கு, சக்தியை விடுவித்து பெரிய அற்புதத்தை உருவாக்க எல்லா ஆளுமையும் வித்தாக உள்ளன.
அதற்காக இல்லாத காதலை அவள் டார்சியிடம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.
ஏற்கனவே நன்றி உணர்வு கொண்ட அவளுடைய மனதால் டார்சியை காதலிக்க முடியும்.

தன்னுடைய தாயாரின் பொய்மையின் சக்தியை காதலின் உண்மைக்குத் தேவைப்படும் திறனாக திருவுருமாற்ற, அவள் ஜேனிடம் காண்பிக்கும் நல்லெண்ணத்திற்கு நிகரான நல்லெண்ணத்தை தீவிரமாகக் கொண்டு வர வேண்டும்.
செல்வச் சிறப்பை பெற்ற பெம்பர்லி, கலாச்சார முதிர்ச்சியில் தொடர்ந்த வளர்ச்சியைக் காண்பித்து, மேலே குறிப்பிட்ட குறிக்கோளுக்கு அடிப்படை ஆதாரமாக அமையலாம்.
குணத்தின் உயர்ந்த நிலை, காதலிலும் நன்றி உணர்ச்சியிலும் முதல் தகுதியாகிறது.
இந்த எண்ணங்கள் உடலில் நிரம்பி, மென்மையான அரிதான உடல் நலத்தை அளிக்கிறது.
இது ஆன்மீகத் தூய்மையுடன் சேர்ந்தால், அந்த நபர் அற்புத மனிதராவார்.
கலாச்சார வளர்ச்சி இருக்கும் ஒரு சமுதாயத்தில், மக்கட்தொகையில் பெரும் பகுதியினர் இவர்கள் போல் இருப்பார்கள், அல்லது மேல்மட்ட மக்கள் இவ்வாறு இருப்பர்.
இந்தக் கண்ணோட்டத்தில் பூலோக சொர்க்கத்தை கற்பனை செய்து பார்க்கலாம்.
டான்டேக்கு Beatriceடம் எழுந்த காதல் அவரை டிவைன் காமெடி எழுத வைத்தது.
அந்த காவியம் எழுதத் தேவையாக இருந்த சக்தி, சில வருட காதல் வாழ்க்கையில் முழுவதுமாக கிரகித்துக் கொள்ளப்பட்டு அதனுடன் ஒன்றிவிடும்.
இறுதி வரை நீடிக்கும் காதல் உடல் தூய்மையில் வளர்கிறது.

"*You are all kindness, madam; but I believe we must abide by our original plan."*
"நீங்கள் மிகவும் அன்பு வடிவமாக இருக்கிறீர்கள்; ஆனால் நாங்கள் ஏற்கனவே போட்ட திட்டப்படி கிளம்ப வேண்டும் என்று நினைக்கிறேன்."

35. "You are all kindness, Madam, but I believe we must abide by our original plan."
English is known for its balancing phrases.
Its understatements are often deceptive.
There is a genius in expressing the negative idea in positive words.
Please do not persist in your foolish insistence is put in terms of original plan.
Should a Man enter into the spirit of transformation, this is the first step when it is emotionally truly felt.
This exercise will gain one entry into the citadel of Romance Eternal.
For one to imbibe the spirit of Romance Eternal, the spirit behind this exercise should be fully absorbed as one does the core idea of a chapter in The Life Divine when he wants to translate or render it into his own words.
The core of that Idea in Him is a spiritual experience.
In formulating itself into an idea, it takes possession of the entire Mind, especially its substance which is in relation to the bodily substance.
It goes beyond to become a spark in His being.
We read the coherent argument that reaches our thinking Mind, the intellect.
Its essence transcends the thinking and pervades the Mind.
We see the gradation of arguments, the pervasive Idea behind, the Real-Idea of which this is a mental representation and finally the essential mental experience which dissolves and becomes one with the Being.
Taking the arguments, removing their links, we see the Idea growing on us.
An expansive Mind allows the Idea to mature into Real-Idea.
A grateful recognition permits the identification to grow further.
At this stage the Idea, in the subtle vision, turns into His figure.
At this stage one can shift the influence into the sources of his mother tongue.
What emanates will be a fresh style in that language.
Should it be rendered into one's own English, a real elegant simplicity will express the complex thoughts.
Of course when The Life Divine brings this atmosphere, this will bring the author's atmosphere, whatever it is.
It is possible to traverse these emotional stages in the relationship in Romance.
Very soon one can come to the end of his patience.
Patience, I repeat, is the human version of equality.
Equality is the consciousness of Infinity.
When acting in Faith, Faith in the Divine Shakti, in the consciousness of equality, Mind rises to Supermind.
Acting in Faith in the partner's goodness which is in abundance, a field of Patience will raise marriage into Romance.
Darcy did it.
At first he was rewarded with gratitude when he silently received the abuse.
After reading the letter it wrought in her a change from the vital to the mental.
At Pemberley his manners became soft, shedding the stiffness of bitter spirit, and it evoked a wonder in her.
What he did for Lydia made her feel wretched for her subtle ingratitude.

His excellent good feelings to her abusive pertness put her to shame, utter shame for all that she was and her family was.
To him it was innocence.
He was genuine.
It was a boon to him to emerge out of the cocoon of selfish meanness.
She could not see his joy that suffused his countenance.
It was not because of her but in spite of her.
Darcy did in transforming his emotions what an understatement does for social politeness.
“மேடம், நீங்கள் மிகவும் அன்பு காண்பிக்கிறீர்கள் ஆனால் நாங்கள் ஏற்கனவே போட்ட திட்டப்படி கிளம்ப வேண்டும் என்று நினைக்கிறேன்.”
ஆங்கிலம், விவரிக்கும் திறனுக்குப் பெயர் போனது.
அதன் குறைத்துக் கூறுவது என்பது, பல சமயங்களில் போலியாகத் தோன்றும்.
எதிர்மறையான கருத்தை நேர்மறையான சொற்கள் மூலம் வெளிப்படுத்துவது ஒரு புத்திசாலித்தனம்.
முட்டாள்தனமான வலியுறுத்தலை தயவு செய்து தொடர வேண்டாம் என்பது ஏற்கனவே போட்ட திட்டம் என்று கூறப்பட்டு நாகரிகமாக மறுக்கப்படுகிறது.
திருவுருமாற வேண்டும் என்று மனிதன் ஆர்வப்பட்டால், அதை உணர்வுபூர்வமாக உண்மையாக உணருவதே இந்த முதல் நிலையில்தான்.
இந்த பயிற்சி மூலம் ஒருவர் அமர காதலின் கோட்டைக்குள் நுழையலாம்.
தி லைப் டிவைன் நூலை மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும் என்றோ அல்லது தன்னுடைய சொந்த வார்த்தைகளில் எழுத வேண்டும் என்றோ ஒருவர் நினைத்தால் எவ்வாறு அவர் அதனுடைய ஒரு அத்தியாயத்தின் மையக் கருத்தை முழுவதுமாக உள்வாங்கிக் கொள்வாரோ அதே போல் அமரகாதலின் உற்சாகத்தை ஒருவர் கிரகித்துக் கொள்ள வேண்டும் எனில் இந்த பயிற்சியின் பின்னால் உள்ள உற்சாகத்தை முழுவதுமாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.
பகவானுடைய அந்த எண்ணத்தின் மையம் ஒரு ஆன்மீக அனுபவமாகும்.
தன்னை எண்ணமாக உருவாக்கிக்கொள்ளும் பொழுது அது மனம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொள்கிறது.
முக்கியமாக உடலின் பொருளோடு தொடர்பு கொண்டிருக்கும் அதன் பொருளை ஆக்கிரமித்துக்கொள்ளும்.
இதற்கும் பின்னால் சென்று அவருடைய ஜீவனில் அது ஒரு பொறியாக மாறுகிறது.
நம்முடைய சிந்திக்கும் மனத்தை(அறிவு) தொடும் தெளிவான வாதங்களை நாம் படிக்கிறோம்.
அதனுடைய சாரம் சிந்திப்பதையும் தாண்டிச் சென்று மனதுள் ஊடுருவுகிறது.
வாதங்களின் பல நிலைகள், அதன் பின்னால் இருக்கும் ஊடுருவும் கருத்துகள், மனத்தின் பிரதிநிதியாக இருக்கும் சத்தியக் கருத்து, இறுதியாக சத்துடன் கரைந்து ஒன்றாகிவிடும் மனத்தின் முக்கியமான அனுபவம், இவைகளை நாம் பார்க்கிறோம்.
வாதங்களை எடுத்துக் கொண்டு, அதனுடைய தொடர்புகளை அகற்றினால், கருத்து நம்முள் வளர்வதை நாம் பார்க்கிறோம்.
பரந்த மனம் கருத்துருவை சத்தியக் கருத்துருவாக முதிர்ச்சி அடைய அனுமதிக்கிறது.
உயர்ந்த அங்கீகாரம், இந்த வளர்ச்சியை மேலும் வளர அனுமதிக்கிறது.
இந்த நிலையில் கருத்து, சூட்சுமப் பார்வையில் பகவானுடைய உருவமாக மாறுகிறது.
இந்நிலையில் ஒருவர் தன் ஆற்றலை அவருடைய தாய் மொழியின் ஊற்றுக்களுக்கு மாற்றிக் கொள்ளலாம்.
வெளிவருவது அந்த மொழியின் புதிய நடை.
ஒருவர் தன்னுடைய ஆங்கிலத்திலேயே சொல்ல வேண்டும் என்றால், நேர்த்தியான எளிய நடையில் சிக்கலான எண்ணங்களை வெளிப்படுத்தி விடலாம்.
'தி லைப் டிவைன்' இந்த சூழலை கொண்டு வருவது போல், இது ஆசிரியரின் சூழலைக் கொண்டு வரும், அது எதுவாக வேண்டுமென்றாலும் இருக்கலாம்.
காதலில் உள்ள உறவில் இந்த உணர்வுபூர்வமான நிலைகளைக் கடக்க இயலும்.
வெகு சீக்கிரத்திலேயே ஒருவர் தன் பொறுமையின் எல்லைக்கு வந்து விடலாம்.
சமத்துவத்தின் மனித பதிப்புதான் பொறுமை என்று நான் மறுபடி கூறுகிறேன்.
எல்லையில்லாததின் ஜீவியம்தான் சமத்துவம்.
நம்பிக்கை, தெய்வ சக்தியில் நம்பிக்கை, சமத்துவத்தின் ஜீவியம், இவற்றில் செயல்படும் பொழுது மனம் சத்திய ஜீவியமாகிறது.
வாழ்க்கைத் துணையிடம் இருக்கும் அபரிமிதமான நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைத்து செயல்படும் பொழுது, பொறுமை திருமணத்தை காதலாக மாற்றும்.
டார்சி இதை செய்தான்.
நிந்தனையை அவன் மௌனமாக ஏற்றுக்கொண்ட போது, முதலில் அவனுக்குப் பரிசாக கிடைத்தது நன்றி உணர்வு.
கடிதத்தைப் படித்த பின் அவளுக்கு உணர்விலிருந்து மனதிற்குச் செல்லும் மாற்றம் உருவானது.

பெம்பர்லியில் அவன் மிகவும் மென்மையாக விளங்கினான், கசப்பான நிலையில் இருந்த கடுமையை கைவிட்டான், இவை அவளிடம் ஒரு ஆச்சரியத்தை உண்டாக்கியது.
அவன் லிடியாவிற்கு செய்த உதவியைப் பார்த்து தனது சூட்சும நன்றி கெட்டத்தனத்திற்கு அவள் மிகவும் வருந்தினாள்.
அவனுடைய சிறப்பான நல்லெண்ணங்களைப் பார்த்த பின் தன்னையும், தன்னுடைய துடுக்கான நிந்தனைகளையும், தன்னுடைய குடும்பத்தையும் நினைத்து அவள் மிகவும் வெட்கப்பட்டாள்.
அவனுக்கு அது வெகுளித்தனமாக இருந்தது.
அவன் உண்மையாக இருந்தான்.
சுயநலமான சின்னத்தனம் எனும் கூட்டிலிருந்து வெளிவர அவனுக்கு அது வரப்பிரசாதமாக அமைந்தது.
அவனது முகத்தை நிரப்பிய அவனது சந்தோஷத்தை அவளால் பார்க்க முடியவில்லை.
அவனுடைய சந்தோஷம் அவளால் அல்ல, அவளையும் மீறி எழுந்தது.
உணர்ச்சிகளை திருவுருமாற்றுவதில் டார்சி செய்தது, நாகரிகத்தைக் குறைத்து கூறுவதற்கு சமம்.

Lady Catherine seemed resigned. "Mrs. Collins, you must send a servant with them. You know I always speak my mind, and I cannot bear the idea of two young women travelling post by themselves. It is highly improper. You must contrive to send somebody. I have the greatest dislike in the world to that sort of thing. Young women should always be properly guarded and attended, according to their situation in life. When my niece Georgiana went to Ramsgate last summer, I made a point of her having two men-servants go with her. Miss Darcy, the daughter of Mr. Darcy, of Pemberley, and Lady Anne, could not have appeared with propriety in a different manner. I am excessively attentive to all those things. You must send John with the young ladies, Mrs. Collins. I am glad it occurred to me to mention it; for it would really be discreditable to you to let them go alone."
லேடி காதரின் அதை ஏற்றுக் கொண்டதாகத் தெரிந்தது."காலின்ஸ், நீ அவர்களுடன் ஒரு பணியாளை அனுப்ப வேண்டும். நான் எப்பொழுதுமே என் மனதில் இருப்பதைத்தான் பேசுவேன் என்று உனக்குத் தெரியும். இரண்டு பெண்கள் தனியாகப் பிரயாணம் செய்வது என்பதை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாது. அது முற்றிலும் சரி கிடையாது. யாரையாவது கூட அனுப்புவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அம்மாதிரி விஷயத்தை நான் மிகவும் வெறுக்கிறேன். இளம் பெண்கள் வாழ்க்கையில் அவர்கள் இருக்கும் நிலைக்கு ஏற்றவாறு எப்பொழுதும் ஒழுங்காக பாதுகாக்கப்பட வேண்டும், கவனிக்கப்பட வேண்டும். என்னுடைய மருமகள் ஜார்ஜியானா போன கோடைக்காலம் ராம்ஸ்கேட்டிற்குச் சென்ற பொழுது, இரண்டு பணியாளர்கள் அவளுடன் போக வேண்டும் என்பதை நான் வலியுறுத்தினேன். பெம்பர்லியைச் சேர்ந்த திரு டார்சியின் மகளான, மிஸ். டார்சியும், லேடி ஆன்-உம் வேறு எந்தவிதமாக பிரயாணம் செய்திருந்தாலும் அது ஒழுங்காக காட்சியளித்திருக்க முடியாது. இவை எல்லாவற்றிலும் நான் மிகவும் கவனம் செலுத்துவேன். திருமதி. காலின்ஸ், இவர்களுடன் நீ ஜானை அனுப்ப வேண்டும். நல்லவேளை இதை எனக்குச் சொல்ல வேண்டும் என்று தோன்றியது; ஏனெனில் அவர்களைத் தனியாக அனுப்பினால் அது உனக்கு மரியாதையாக இருக்காது."

36. It is certainly a wonder that the Lady resigned without being angry.
கோபப்படாமல் லேடி காதரின் விலகிக் கொண்டது உண்மையிலேயே ஆச்சரியத்திற்குரியது.
37. "Lady Catherine seemed resigned."
Resignation is given to mildness of temper, cultural quickness, understanding sympathy.
Lady Catherine possessed none of these things, resigned or seemed resigned.
Her resignation resurfaces as manservant. It is irrepressible.
Strong tempers and strong wills are never suppressed except by authority.
The authority of self-discipline is culture, of which we see none here.
We see in Mrs. Bennet a strong temper that cannot be suppressed.
It took a month for her to speak to Elizabeth when she crossed her mother.
Emotions not able to express in words, if negative, emerge as cough.
Disagreement a husband is unable to voice turns into sarcasm.
Genuine fact incapable of being spoken takes the form of a letter.
An event that defies one's understanding issues as a surprise.
Frustration makes one cross and changes into initiatives that spoil.
News received physically moves the body to another and delivers itself.
Ruse employed with a submissive friend comes to him as violent abuse from a strong character's dislike.
Disturbed equilibrium drives one to a serious decision that restores it.
Subtle sarcasm missed at the host's table comes back as a letter of triumph over a tragedy.
Adoration of a scoundrel turns itself into the removal of a good Man – Bingley.
Sarcastic abuse is changed by the atmosphere into a circumstance that compels a polite letter out of impolite emotions

– Caroline.
Refusal to sympathise with the victim of an attempted elopement changes itself into a real elopement.
The body, better still the being is a field of equilibrium of energies.
Energies are converted into acts or temperaments by the inner structure of attitudes, motives, and opinions.
Inspiration energises existing motives.
Atmosphere can change the character of opinions into their opposites.
Resignation is the frustration of culture.
There is no giving without taking.
What enters the human system emerges out transformed by the inner structure.
Mind organizes.
Emotion energises.
Thought directs the energies.
Thinking stays their speed and organizes them according to its pattern.
Cheerfulness has a natural tendency to multiply itself.
Cheerfulness as a character is a converter of the bad into good ones.
Pride offends others, invites prejudice.
Prejudice provokes comments that unearth family skeletons.
Goodwill in an average person seeks the balance of ill will.
Empty-headedness finds its goodwill doing harm to others and good to oneself.
Energies released at one point accomplish at another point.
Good issues evil.
Evil issues good.
A provocative thought precipitates itself as a reality - Caroline.
Unexpressed cultured curiosity crystallizes itself as the content of that thought.
Simple courtesy extended – fishing – brings a reward of resplendent marriage.
“லேடி காதரின் அதை ஏற்றுக்கொண்டதாகத் தெரிந்தது.”
மனவுணர்வுகளின் மென்மை, கலாச்சார விரைவு, இரக்கத்தின் புரிவு இவை உள்ளவர்களுக்கு, இது போல் ஏற்றுக்கொள்ள முடியும்.
இவை எதுவும் லேடி காதரினிடம் இல்லை, ஏற்றுக்கொண்டாள் அல்லது ஏற்றுக்கொண்டது போல் தோன்றுகிறாள்.
ஏற்றுக்கொண்டது அவளிடம் ஆண் பணியாள்போல் வெளிப்படுகிறது. அது அடக்க முடியாததாக உள்ளது.
வலிமையான மனவுணர்வுகளையும், வலிமையான விருப்புறுதிகளையும், அதிகாரத்தை தவிர வேறு எது மூலமாகவும் அடக்க முடியாது.
சுய ஒழுக்கத்தைக் கட்டுப்படுத்துவது நாகரிகம், ஆனால் எதையும் நாம் இங்கு பார்ப்பதில்லை.
அடக்க முடியாத வலிமையான மன நிலையை திருமதி பென்னட்டிடம் பார்க்கிறோம்.
எலிசபெத் தாயாரின் சொல்லை மீறியதால் தாயாருக்கு அவளுடன் மீண்டும் பேச ஒரு மாதமாயிற்று.
உணர்ச்சிகளை பேச்சால் வெளிப்படுத்த முடியாமற் போனால், அது எதிர்மறையாக இருப்பின், இருமலாக வெளி வரும்.
ஒரு கணவனால் கருத்து மாறுபாட்டை வெளிப்படுத்த முடியாமற் போனால் அது கேலியாக மாறுகிறது.
உண்மையான விஷயங்களைப் பேச இயலாது போனால் அது கடிதமாக மாறும்.
ஒரு நிகழ்ச்சி ஒருவருக்குப் புரியாவிட்டால் அது ஆச்சரியமாக மாறுகிறது.
ஏமாற்றம் ஒருவரைத் தன்முனைப்பு எடுக்கத் தூண்டும், அது கெடுதலில் முடியும்.
ஒருவருக்கு ஒரு செய்தி வந்தால், அதை உடனே மற்றவரிடம் தெரிவிப்பார்.
பணிந்து போகும் நண்பனுக்கு சூழ்ச்சி செய்தால், அவனை பிடிக்காத ஒரு வலிமை வாய்ந்த நபரிடமிருந்து மோசமான நிந்தனையாக அது திரும்ப வரும்.
சமநிலை பாதிக்கப்படும் பொழுது, ஒருவர் தீவிரமான முடிவு எடுத்து நிலைமையை சரி செய்வார்.
விருந்து கொடுப்பவர் செய்யும் சூட்சுமமான கேலியை விருந்து உண்பவர் புரிந்துகொள்ளத் தவறிவிட்டால், அது ஒரு கஷ்டத்தின் பொழுது வெற்றி கொண்டாடும் வகையில் ஒரு கடிதமாகத் திரும்பி வருகிறது.
அயோக்கியனை பாராட்டுவது நல்ல மனிதனை(பிங்கிலி) விலக்குகிறது.
கேலியான நிந்தனை சூழலால் மாற்றப்பட்டு, நாகரிகமற்ற உணர்ச்சியிடமிருந்து ஒரு நாகரிகமான கடிதத்தை நிர்பந்தமாக வரவழைக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்குகிறது--காரலின்.
ஓடிப்போகும் முயற்சியில் பாதிக்கப்பட்ட நபருக்கு பரிவுகாட்ட மறுத்தது, உண்மையிலேயே ஓடிப்போவதில் முடிகிறது.
உடல், இதைவிட ஜீவன், சக்தியின் சமநிலைக்கு சரியான தளமாகும்.
அகத்துள் இருக்கும் அமைப்புகளான மனோபாவம், நோக்கங்கள், அபிப்பிராயங்கள் இவை, சக்தியை செயலாகவும் மனவுணர்வுகளாகவும் மாற்றுகிறது.

இருக்கும் நோக்கங்களுக்கு சக்தி அளிப்பது ஊக்கம்.
அபிப்பிராயங்களின் குணத்தை நேரெதிராக மாற்றவல்லது சூழல்.
நாகரிகத்தின் ஏமாற்றமே, விலகிப்போவது.
எடுத்துக்கொள்ளாமல் அளிக்க முடியாது.
மனிதனுள் நுழைவது உள்ளிருக்கும் அமைப்பால் திருவுருமாறி வெளிவரும்.
மனம் முறைப்படுத்தும்.
உணர்ச்சிகள் சக்தி அளிக்கும்.
எண்ணங்கள் சக்திகளை வழி நடத்தும்.
சிந்திப்பது அவற்றினுடைய வேகத்தை தடுத்து நிறுத்தி அதனுடைய வகைக்கேற்ப அவைகளை முறைப்படுத்தும்.
உற்சாகம், இயற்கையாகவே பெருகும் தன்மை உடையது.
உற்சாகம் கெட்டதை நல்லதாக மாற்றவல்லது.
கர்வம் மற்றவரை புண்படுத்தும், தப்பபிப்பிராயம் ஏற்படத் தூண்டும்.
தப்பபிப்பிராயம் குடும்ப அவதூறுகளை கிளப்பக்கூடிய விமரிசனங்களைத் தூண்டுகிறது.
சாதாரண மனிதனிடம் நல்லெண்ணங்களும் கெட்ட எண்ணங்களும் சமமாக இருக்கும்.
முட்டாளாக இருப்பவனது நல்லெண்ணம் மற்றவருக்கு கெடுதல் செய்கிறது, தனக்கு நல்லது செய்து கொள்கிறது.
ஒரு இடத்தில் விடுவிக்கப்படும் சக்தி வேறொரு இடத்தில் சாதிக்கும்.
நல்லது கெடுதலை விளைவிக்கும்.
கெட்டது நல்லதை விளைவிக்கும்.
கோபத்தைத் தூண்டும் எண்ணம் உண்மை நிலையாகப் படிந்து விடுகிறது –காரலின்.
வெளிப்படாத நாகரிக ஆர்வங்கள் அந்த எண்ணத்தின் பொருளாக வடிவம் பெறுகின்றன.
மீன் பிடிக்க விடும் அழைப்பைப்போல், எளிமையான மரியாதை அளிப்பது, பிரகாசமான திருமணத்தை பரிசாக அளிக்கிறது.

38. "I cannot bear the idea of two young women traveling post."
Men who are not generous offer help that is already there.
Selfish mean alertness defends itself before help may be asked.
They indelicately point out that the other man must take care of himself.
Sure, his alertness successfully defends himself.
Life responds, responds with a vengeance.
It brings him to a situation hundreds of times where he is out of the pale of human assistance.
When some generous soul still offers help, he realizes that his own situation will not allow himself to avail of it.
This can be seen as life's punishment to a mean attitude.
Without deriving such a satisfaction, one can see deeper forces at work.
Poverty offers particular attitudes in life.
Life offers antidotes to poverty without fail, offering the Man a choice.
A poor father comes along with a not so poor mother of culture.
The son is always to choose between the attitudes of the parents.
His choice is the human choice.
What makes him make that choice?
From the father he gets a mean attitude, from the mother not so mean an attitude.
His own education enlightens him.
Now he can make a positive or negative choice.
Making a positive choice he makes a progress in consciousness unaccompanied by a similar progress in his substance.
In life, it is for him to cling to the higher opportunity and fill up the substance.
It is an onerous endeavour such as keeping pace with a friend in college, remaining outside it. But it is possible.
In Mother, if he sticks to Mother, She does it on your behalf easily.
To stick to Mother one need not desert Truth.
In Wickham we see life has gone out of the way to offer him kindness, support, solicitude, inheritance, high profession, etc. all for a life time.
He made a choice of progress in Non-Being!
Even after several acts of betrayal, life, through Darcy, for the sake of Elizabeth who was infatuated with him saved him fully.
It is ultimately a move of Mr. Bennet identifying with his wife.
In Wickham the ultimate result is he is to LIVE with Lydia for life.
With all his faults Wickham is cheerful, apparently expansive.

Lydia too is cheerful in her own way, expansive in her own fashion.
As Darcy was given an ever present alertness about Georgiana, now Wickham is to focus all his concentration on Lydia to fully engage her exuberance lest she might choose to activate herself again as before.
She is not merely cheerful but dynamic and wants constant psychological attention.
Wickham rising to that occasion will not have energy to indulge in any other dissipation.
His aspiration in Non-Being will now be fully active engaging Lydia's ever expanding feminine propensities.
Otherwise he would lose her.
She cannot be quiet for a moment in any reasonable way.
He must discover reasonableness in her own deviations.
"இரண்டு பெண்கள் தனியாகப் பிரயாணம் செய்வதை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாது."
தாராள குணம் இல்லாத ஆண்கள், ஏற்கனவே அங்கு இருப்பதை கொடுத்து உதவி செய்வார்கள்.
சுயநலமான மனிதன், தன்னை மற்றவர் உதவி கேட்கும் முன் தன்னை பாதுகாத்துக் கொள்வான்.
அவன் மற்றவர்களை, தாங்களே தங்களை கவனித்துக் கொள்ள வேண்டும் என்று நாசூக்கின்றி கூறுவான்.
அவனுடைய விழிப்புணர்ச்சி நிச்சயமாக அவனைக் காப்பாற்றுகிறது.
வாழ்வு மறுமொழி அளிக்கும், வன்மத்துடன் பதிலளிக்கும்.
மனித உதவி கிடைக்காத பல சந்தர்ப்பங்கள் அவனுக்கு எழும்.
நற்குணம் படைத்த சிலர் உதவி அளிக்க முன்வந்தால், அதனை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருப்பதை அவனே உணருவான்.
குறுகிய மனப்பான்மைக்கு வாழ்வு அளிக்கும் தண்டனையாக இதைப் பார்க்கலாம்.
அது போல் திருப்தி அடையாமல், ஆழமான சக்திகள் வேலை செய்வதை ஒருவர் பார்க்கலாம்.
வறுமை, சில குறிப்பிட்ட மனோபாவங்களை வாழ்க்கையில் அளிக்கும்.
வறுமைக்கு மாற்றை வாழ்க்கை தவறாது அளித்து மனிதனுக்கு ஒரு வாய்ப்பினை அளிக்கிறது.
ஏழை தகப்பனார், நாகரிகத்தில் அவ்வளவு ஏழையாக இல்லாத தாயாருடன் இணைகிறார்.
மகன்தான் எப்பொழுதும் பெற்றோர்களின் மனோபாவங்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.
அவனுடைய விருப்பம் மனித விருப்பமாகும்.
எது அவனை தேர்ந்தெடுக்க வைக்கிறது?
அவனுக்கு, தகப்பனாரிடமிருந்து குறுகிய மனப்பான்மை கிடைக்கிறது, தாயாரிடமிருந்து அந்த அளவிற்கு அல்ல.
அவனுடைய கல்வி அவனுக்கு அறிவைத் தருகிறது.
இப்பொழுது அவன் நல்லதையும் தேர்ந்தெடுக்கலாம், கெட்டதையும் தேர்ந்தெடுக்கலாம்.
நல்லதை தேர்ந்தெடுத்து அவன் ஜீவியத்தில் முன்னேற்றம் அடைகிறான், ஆனால் குணத்தில் இதைப் போன்ற முன்னேற்றம் கிடைப்பதில்லை.
வாழ்க்கையில் உயர்ந்த வாய்ப்புகளை அவன் பிடித்துக் கொண்டு, குணத்தை சரி செய்து கொள்ள வேண்டும்.
கல்லூரியில் படிக்கும் ஒரு நண்பனுடன், கல்லூரிக்கு வெளியிலிருந்து கொண்டு அவனுக்குச் சமமாக நடந்து கொள்வது, மிகப் பெரிய முயற்சியாகும். ஆனால் அது முடியும்.
அன்னையிடம், நாம் அன்னையுடன் இருந்தால், நமக்காக அன்னை செய்வார்.
அன்னையுடன் இருக்க, ஒருவர் உண்மையை கைவிட வேண்டிய அவசியமில்லை.
விக்காமிற்கு வாழ்க்கை எல்லாவற்றையும் மீறி அன்பு, ஆதரவு, பரிவு, சொத்து, உயர்ந்த வேலை, என்றிவற்றை வாழ்நாள் முழுவதற்கும் அளித்தது.
அவன் அசத்தில் முன்னேற விரும்பினான்!
பல தடவை நம்பிக்கைத் துரோகத்திற்குப் பின்பும் வாழ்க்கை, டார்சி மூலம் அவனால் வசீகரிக்கப்பட்ட எலிசபெத்திற்காக அவனை முழுவதுமாக காப்பாற்றியது.
இது திரு பென்னட் தன் மனைவியுடன் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் செயலாகும்.
லிடியாவுடன் வாழ்நாள் முழுவதும் வாழவேண்டும் என்பதே விக்காமிற்கு கிடைத்த இறுதிப் பலன்.
எல்லாக் குறைகள் இருந்தும் விக்காம் உற்சாகமாக இருக்கிறான், வெளிப்படையாக பெருந்தன்மையாகவும் இருக்கிறான்.
லிடியாவும் அவளுடைய வழியில் உற்சாகமாக இருக்கிறாள், அவளுடைய பாணியில் பெருந்தன்மையாக இருக்கிறாள்.
ஜார்ஜியானாவைப் பொறுத்தவரை டார்சி எப்பொழுதும் விழிப்பாக இருக்கிறான், லிடியா மீண்டும் பழையபடியே நடந்து கொள்ளக்கூடாது என்பதற்காக விக்காம் இப்பொழுது தன்னுடைய முழு கவனத்தையும் கட்டுக்கடங்காத அவளது உணர்ச்சிகள் மீது முழுவதுமாக திருப்ப வேண்டும்.
அவள் உற்சாகமாக இருப்பதோடு சுறுசுறுப்பாகவும் இருக்கிறாள், மனரீதியான தொடர்ந்த கவனத்தை விரும்புகிறாள்.
அந்தச் சந்தர்ப்பத்திற்குத் தகுதியாகும் விக்காமிற்கு மற்ற அழிச்சாட்டியங்களில் ஈடுபடுவதற்கு தேவையான தெம்பு இருக்காது.

லிடியாவின் தொடர்ந்து வளரும் பெண்மையின் மனப்பாங்கினை பூர்த்தி செய்வதற்கே அசத்தில் இருக்கும் அவனது ஆர்வம் முழுமையாக சுறுசுறுப்பாக ஈடுபடும்.
இல்லாவிடில் அவன் அவளை இழக்க நேரிடும்.
எந்த நியாயமான விதத்திலும் அவளால் ஒரு நொடிகூட அமைதியாக இருக்க முடியாது.
அவள் வழிமாறி நடந்தால், அதில் அவன் நியாயத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

39. "It is highly improper."
A Man evaluates himself from the level at which he can lay down the law.
He does not see how relevant he is, but the pronouncement is self-satisfying.
She has been laying down the law by which the weather is ruled.
Maybe, the Lady discovered herself to be the Absolute.
Sri Aurobindo had no one to whom He could pray, because He Himself was the Lord.
In recruitments, Man choosing a wife, in such decisive moments knowledge of human nature from this point of view helps eliminate potential danger.
Churchill's aunt congratulating him on his entering the Cabinet advised him to run only his department, not the entire Cabinet.
In 1937 popular Ministries were installed in all Indian provinces. In Madras and Punjab it was the Chief Minister who took all the decisions.
We see the opposite also of people appealing to erstwhile powers for relief or sanction.
Mr. Bennet would have escaped a life long tutelage to his wife had he this perception while courting.
Infatuation drowns this perception when it is there feebly.
This sensitivity sees the whole in the part, an infinitesimal part.
Great works of fiction carry this knowledge on every page.
Bernard Shaw speaks of 'a page of Shakespeare'.
This knowledge found as power raises one to world leadership at the age of 20, as it did Alexander and Caesar. Akbar too joined them as early.
It is the stamp of Individuality.
The Psychic emerging raises a Man like this.
Mother saw that in Nehru in 1930 and predicted his leadership.
Lydia's "Maybe Bingley will choose me" had this ring.
Again she says "I am the youngest but the tallest".
Capacity to boorishly interfere in a proceeding is the indirect expression of this attitude.
Indifference to essentials is the inversion of it.
Wickham in his first interview with Elizabeth discloses that he has this knowledge that he may be observed from this point of view.
A poem of Sri Ramalinga Swami was read out to Mother. At the first line, She said he was in touch with Supermind.
She said that by perceiving his consciousness.
Sensation in us is consciousness.
People with no mental development can be great actors or literary critics, as they directly perceive the character.
A Man becomes really great in those fields if he overcomes his mental development and regains this faculty of sense Mind.
A.C. Bradley wrote like this.
Exercise of authority extends to all levels.
One's personality is decided by the level at which it ceases.
Petty people carry it down to the lowest possible levels.
Beyond that there are those who when they physically touch an object feel it is theirs.
They are physical.
No such person can be vested with any authority of any description.
To be pushy is to be different from being physically possessive.
In the measure an organization allows its employees to be free in this regard, it becomes a great organization.
The Hindu religion has extended the Freedom of the Absolute to the last member to choose as he likes.
Hence the tolerance.
The greater the tolerance, the greater its power of survival.
Royal families who are capable of this freedom to its last member last longer.
The formation of an Individual – its level – is decided by this.
"அது முற்றிலும் தவறு."
அதிகாரத்தைச் செலுத்தும் நிலையிலிருந்து ஒருவர் தன்னை மதிப்பிட்டுக் கொள்கிறார்.

அவர் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறார் என்பதைப் பார்ப்பதில்லை, ஆனால் அதை அறிவிப்பதே அவருக்குத் திருப்தியாக இருக்கிறது.
அவள் அதிகாரத்தைச் செலுத்திய வண்ணம் இருக்கிறாள், பருவ நிலையையும் நிர்ணயம் செய்கிறாள்.
லேடி காதரின் தன்னையே பிரம்மமாக அறிந்தாள் போலும்.
பிரார்த்தனை செய்வதற்கு ஸ்ரீ அரவிந்தருக்கு யாரும் இல்லை, ஏனெனில் அவரே இறைவன் ஆவார்.
வேலைக்கு ஆள் எடுப்பது, திருமணத்திற்காக ஆண் மனைவியைத் தேர்ந்தெடுப்பது போன்ற தீர்மானம் எடுக்கும் தருணங்களில், இந்த கண்ணோட்டத்தில் மனித சுபாவத்தைப் பற்றிய அறிவு, வித்தாக இருக்கும் ஆபத்தை நீக்க உதவும்.
மந்திரி சபையில் சேர்ந்த சர்ச்சிலை, அவரது உறவினள் பாராட்டிவிட்டு, மந்திரி சபை முழுவதையும் ஏற்று நடத்தாது அவரது துறையை மட்டும் ஏற்று நடத்துமாறு அறிவுரை கூறினார்.
1937ல் மந்திரி சபைகள் எல்லா இந்திய மாகாணங்களில் நிறுவப்பட்டன. மதராசிலும், பஞ்சாபிலும் முதல் மந்திரிகளே எல்லா முடிவுகளையும் எடுத்தனர்.
நேர்மாறாக, மனிதர்கள் முன்னாள் அதிகாரிகளிடம் உதவி கேட்பதையும் நாம் பார்க்கிறோம்
திரு பென்னட்டிற்கு தன் திருமணத்திற்கு முன்பே இந்த புலனறிவு இருந்திருந்தால் வாழ்நாள் முழுவதும் தன் மனைவிக்கு அடைக்கலம் கொடுப்பதிலிருந்து தப்பித்துக் கொண்டிருந்திருப்பார்.
புரிந்துகொள்ளும் அறிவு பலவீனமாக இருந்தால், மோகம் அதனை மூழ்கடித்து விடும்.
இந்த புலனறிவு முழுமையைப் பகுதியாகப் பார்க்கிறது, மிகச் சிறிய பகுதியாக.
உயர்ந்த கதை படைப்புகளில் ஒவ்வொரு பக்கத்திலும் இந்த ஞானம் இருக்கும்.
“ஷேக்ஸ்பியரின் ஒரு பக்கம்” என்று பெர்னார்ட்ஷா பேசுகிறார்.
சக்தியாக விளங்கும் இந்த ஞானம், அலெக்ஸாண்டரையும் சீசரையும் போல, ஒருவரை அவரது இருபதாவது வயதிலேயே உலகத் தலைமைக்கு உயர்த்தும், அக்பரும் இளம் வயதில் இந்தப் பட்டியலில் சேர்ந்து கொண்டார்.
தனித்துவத்தின் முத்திரை இது.
வெளிவரும் சைத்திய புருஷன் ஒரு மனிதனை இவ்வாறு உயர்த்தும்.
1930-ல் இதனை நேருவிடம் அன்னை பார்த்தார், அவருடைய தலைமையை முன்கூட்டியே தெரிவித்தார்.
“பிங்கிலி என்னை தேர்ந்தெடுக்கலாம்” என்று லிடியா கூறியது இதைப் போன்றது.
“நான்தான் எல்லோரையும்விட சிறியவள் ஆனால் உயரமானவள்” என்று மீண்டும் கூறுகிறாள்.
நடப்பவைகளில் அநாகரிகமாகக் குறுக்கிடும் திறமை இந்த மனோபாவத்தின் மறைமுகமான வெளிப்பாடு ஆகும்.
முக்கியமானவைகளுக்கு பாராமுகமாக இருப்பது இதற்கு நேர்மாறானது.
விக்காம், எலிசபெத்தை முதலில் சந்தித்த பொழுது, தான் இந்த கோணத்திலிருந்து பார்க்கப்படலாம் என்று அவன் அறிவதாக கூறுகிறான்.
இராமலிங்க சுவாமிகளின் பாடல் அன்னைக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டது. முதல் வரியிலேயே அன்னை அவருக்கு சத்திய ஜீவியத்துடன் தொடர்பு இருப்பதாக கூறினார்.
அவருடைய ஜீவியத்தை அறிந்து கொண்டு அன்னை அவ்வாறு கூறினார்.
ஜீவியம் நம்முள் இருக்கும் புலனுணர்வாகும்.
பெரிய அறிவாளிகளாக இல்லாவிடினும், பெரிய நடிகர்களாக இருக்கலாம் அல்லது இலக்கிய விமரிசகர்களாக விளங்கலாம். ஏனெனில் அவர்கள் கதாபாத்திரத்தை நேரடியாகப் புரிந்து கொள்கின்றனர்.
தன்னுடைய அறிவாற்றலைத் தாண்டி, உணர்வு மனத்தின் திறனை ஒருவன் திரும்பப் பெற்றுக்கொண்டால், அவன் உண்மையிலேயே அந்த துறைகளில் சிறந்து விளங்குவான்.
இவ்வாறுதான் A.C. Bradley எழுதினார்.
அதிகாரப் பிரயோகம் எல்லா நிலைகளிலும் உள்ளது.
ஒருவருடைய ஆளுமை அது முடிவுறும் நிலையால் தீர்மானிக்கப்படுகிறது.
சில்லறை மனிதர்கள், மிகவும் கீழ் நிலைவரை அதனை எடுத்துச் செல்வர்.
இதனையும் தாண்டி சிலர் ஒரு பொருளை கையால் தொட்டவுடன் அது தனது என நினைக்க ஆரம்பிப்பர்.
அவர்கள் ஜட நிலைக்கு உரியவர்கள்.
இது போன்ற நபர்களுக்கு எந்த விதமான அதிகாரத்தையும் கொடுக்க முடியாது.
சொந்தம் கொண்டாடுவது, விஷயத்தை சாதித்துக் கொள்வதிலிருந்து மாறுபட்டது.
ஒரு நிறுவனம் அதனுடைய பணியாளர்களுக்கு இந்த சுதந்திரத்தை அளிக்கும்போது அது பெரிய நிறுவனமாகிறது.
கடைசி மனிதன்வரை அவன் விருப்பப்படி தேர்ந்தெடுக்கும் பிரம்மத்தின் சுதந்திரத்தை ஹிந்து மதம் அளிக்கிறது.
அதனால்தான் அதற்குச் சகிப்புத்தன்மை உள்ளது.
எவ்வளவு உயர்ந்ததாக சகிப்புத்தன்மை உள்ளதோ அவ்வளவு உயர்ந்ததாக அதற்கு நிலைத்து நிற்கும் சக்தி இருக்கும்.

அரச குடும்பத்தில் கடைசி அங்கத்தினர்வரை இந்த சுதந்திரம் இருந்தால், அக்குடும்பம் நீண்ட காலத்திற்கு நீடித்து நிற்கும்.
தனி மனிதன் உருவாவதையும் அதன் நிலையையும் இது தீர்மானிக்கிறது.

40. "When Georgiana went to Ramsgate."
It would have never struck Edmond that he was sent to jail by Mercedes.
Any Indian will have that as the first thought.
Lady Catherine speaks of the interest she took in Georgiana, and we know what happened there.
Surely that result issued out of this interest of hers.
Her design on Darcy is an ill will – to marry Anne.
Out of the interest of the lady of such will, nothing good can come.
We now see how it was overcome in time.
Anne's marriage was in her Mind; there was no endorsement of it in Darcy's Mind.
Marrying Anne was evil to Darcy which she wished to foist on him.
Darcy was able to save the sister because his aunt's evil had no sanction in his Mind.
The betrayal of Mrs. Young was possible as there was 'ill-will' inside the house.
Wickham was able to contemplate it because 1) £ 1000 in the will 2) £ 3000 in lieu of the living 3) Clearing of his debts in Lambton, 4) His miniature in Pemberley, 5) Presence of treacherous Mrs. Young, 6) Lady Catherine's desire for his marriage, 7) Darcy's temperament was in alliance with Lady Catherine's temperament.
Every act of everyone, even thought, will have an effect on work. No exceptions can ever be made.
To locate the partial influence of anyone on any act positive or negative is always easily possible, after the event.
To know how that act balances with the other acts is impossible to know even after the act.
To know it before to fully protect oneself is possible only for senses, if one has it. Mind cannot as readily know it before the act.
To know all the acts, their relations to our action before a work to create an opportunity out of it, is to know it integrally.
One can, of course, create that opportunity by consecration, not so easily explain it theoretically.
Result is physical, explanation is mental.
We see such opportunities.
Opportunities are created by the attitudes of people.
They are created by external circumstances.
At Pemberley when Darcy met Elizabeth, such an opportunity was created.
It was created by the combination of all their attitudes.
Darcy and Bingley coming to Netherfield was an opportunity created by circumstances.
A single person creating such an opportunity consciously is not in the story, if we do not include Darcy's finding Lydia in that list.
It was done as a good act.
He was not sure what outcome would be there.
He did not even want to benefit by such a result.
The question of conscious knowledge of such an opportunity is out of the question.
Mother created such a one by sending that being to Hitler.
It was an opportunity to destroy himself.
Today there is such an occasion to form a World government.
Conscious initiative in that direction will create that opportunity.
In fact, it is a non-initiative as it is not human initiative.
Establishment of a world government can thus be achieved as the political atmosphere is waiting for such a human initiative.
Human initiative taken on inner promptings is not initiative.
It is an obedience of the higher inner command.
The nearest example in the story is Darcy's finding Lydia.
Anyone who imbibes this knowledge fully can wait on the inner command for any work, no matter how small it is.
The rule is the same for the world government or for buying a book.
"ராம்ஸ்கேட்டிற்கு ஜார்ஜியானா சென்றபொழுது."
மெர்சிடஸ்தான் தன்னை சிறைக்கு அனுப்பினாள் என்று எட்மண்ட் நினைத்தே பார்த்திருக்கமாட்டான்.
எந்த இந்தியனுக்கும் முதலில் இந்த எண்ணம்தான் எழும்.
ஜார்ஜியானாவின் மேல் தான் கொண்ட அக்கறையைப் பற்றி லேடி காதரின் பேசுகிறாள், பிறகு அங்கு என்ன நடந்தது என்று நமக்குத் தெரியும்.

அவளுடைய இந்த கவனத்தினால்தான் நிச்சயமாக அது நடந்தது.
டார்சியிடத்து அவள் தீட்டிய திட்டம் கெட்ட எண்ணத்தினால், ஆன்-ஐ திருமணம் செய்து கொள்வதற்காக.
இது போன்ற எண்ணமுடைய ஒரு பெண்மணியினால் எந்த வித நல்லதும் நிகழாது.
எவ்வாறு அதை சமயத்தில் கடக்க முடிந்தது என்பதை நாம் இப்பொழுது பார்க்கிறோம்.
ஆன்-உடைய திருமணம் அவள் மனதில் இருந்தது, அதனுடைய சம்மதம் டார்சி மனதில் இல்லை.
ஆன்-ஐ திருமணம் செய்து கொள்வது டார்சிக்குத் தவறாகப்படுகிறது, அதை அவள் அவன் மீது திணிக்கப் பார்க்கிறாள்.
டார்சிக்கு, ஆன்-ஐ காப்பாற்ற முடிந்தது, ஏனெனில் சித்தியின் தீங்கிற்கு அவன் மனதில் அனுமதி இல்லை.
திருமதி யங்-ன் நம்பிக்கை துரோகம், வீட்டினுள் கெட்ட எண்ணம் இருந்ததால் சாத்தியமாயிற்று.
1) உயிலில் இருந்த £ 1000, 2) பாதிரியார் வேலைக்காக £ 3000, 3) லாம்ப்டனில் இருந்த அவனது கடனை அடைத்தது, 4) பெம்பர்லியில் இருந்த அவனது சிறிய உருவப்படம், 5) ஏமாற்றுகிற திருமதி யங் இருப்பது, 6) அவனது திருமணத்தில் லேடி காதரினுக்கு இருந்த ஆசை, 7) டார்சியின் மனவுணர்வுகள் லேடி காதரின் மனவுணர்வுகளோடு சம்பந்தப்பட்டிருந்தது, இவற்றின் உதவியால் விக்காமால் அதை யோசிக்க முடிந்தது.
எல்லோருடைய எல்லா செயலும், எண்ணம் உள்பட, வேலையில் தாக்கத்தை ஏற்படுத்தும். விதி விலக்கு என்பதே கிடையாது.
எந்த செயலிலும் நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ, ஒருவரது பகுதியான தாக்கத்தை நிகழ்ச்சி முடிந்த பிறகு, சுலபமாகக் கண்டு பிடிக்க முடியும்.
ஒரு செயல் நடந்து முடிந்த பிறகும்கூட எவ்வாறு அந்த செயல் மற்ற செயலுடன் தன்னை சமநிலைப்படுத்திக் கொண்டது என்பதைத் தெரிந்து கொள்வது முடியாத காரியம்.
தன்னை முழுமையாகக் காப்பாற்றிக்கொள்வதைப் பற்றி முதலிலேயே தெரிந்துகொள்வதற்கு உணர்வுகளால்தான் முடியும், இத்திறன் ஒருவருக்கு இருக்கும் பட்சத்தில். செயலுக்கு முன்னால் மனதால் உடனடியாக அதை தெரிந்துகொள்ள முடியாது.
எல்லா செயல்கள், அதற்கு நம்முடன் இருக்கும் தொடர்பு, நம் வேலையுடன் இருக்கும் தொடர்பு, அது உருவாக்கப் போகும் வாய்ப்புகள், இவை எல்லாவற்றையும் பற்றி அறிவதே பூரண ஞானமாகும்.
ஒருவர் அந்த வாய்ப்பினை சமர்ப்பணம் மூலம் உருவாக்க முடியும், விளக்குவது அவ்வளவு சுலபமல்ல.
பலன் ஜடமானது, விளக்கம் மனதைச் சார்ந்தது.
நாம் அது போன்ற வாய்ப்புகளைப் பார்க்கிறோம்.
மனிதர்களின் மனோபாவங்களால் வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன.
புற சந்தர்ப்பங்களால் அவை உருவாக்கப்படுகின்றன.
பெம்பர்லியில் டார்சி எலிசபெத்தை சந்தித்தபொழுது அது போன்ற ஒரு வாய்ப்பு உருவானது.
அவர்களுடைய எல்லா மனோபாவங்களும் ஒன்று சேர்ந்து அதை உருவாக்கியது.
டார்சியும், பிங்கிலியும் நெதர்பீல்டுக்கு வந்தது, சந்தர்ப்ப சூழ்நிலை ஏற்படுத்திய வாய்ப்பு.
டார்சி லிடியாவைக் கண்டு பிடிப்பதை இதில் சேர்க்காவிட்டால்.
தனிப்பட்ட நபர் ஒருவர் நனவுபூர்வமாக அது போன்றதொரு வாய்ப்பை உருவாக்குவது இக்கதையில் இல்லை.
அது ஒரு நல்ல செயல் போல் செய்யப்பட்டது.
அதனுடைய பலன் என்னவாக இருக்கும் என்று அவனுக்குத் தீர்மானமாகத் தெரியவில்லை.
அது போன்ற ஒரு முடிவால் பலன் அடையக்கூட அவன் விரும்பவில்லை.
அது போன்ற ஒரு வாய்ப்பின் நனவுபூர்வமான ஞானம் என்ற கேள்விக்கே இடமில்லை.
அந்த ஜீவனை ஹிட்லருக்கு அனுப்பி அன்னை அது போன்ற ஒரு வாய்ப்பை உருவாக்கினார்.
அது அவனையே அழித்துக்கொள்ள ஒரு வாய்ப்பாகும்.
இன்று, உலகளாவிய அரசாங்கம் அமைக்க அது போன்றதொரு சந்தர்ப்பம் இருக்கிறது.
நனவுபூர்வமாக அத்திசையில் எடுக்கப்படும் தன்முனைப்பு அந்த வாய்ப்பினை உருவாக்கும்.
அது மனித தன்முனைப்பு அல்ல என்பதால், உண்மையில் அது தன்முனைப்பு அல்ல.
அது போன்ற மனித தன்முனைப்புக்காக, அரசியல் சூழல் காத்திருப்பதால், உலகளாவிய அரசாங்கம் நிறுவுவது நிறைவேற்றப்படலாம்.
உள் மனம் சொல்வதை வைத்து எடுக்கப்படும் மனித தன்முனைப்புகள், தன்முனைப்புகளல்ல.
அது மேலிருந்து வரும் அகத்தின் ஆணைக்கு கீழ்ப்படிதலாகும்.
கதையில் இதற்கு நெருங்கிய உதாரணம், டார்சி லிடியாவைக் கண்டு பிடிப்பது.
யார் ஒருவர் இந்த ஞானத்தை முழுமையாகத் தெரிந்து கொள்கிறாரோ, அவர் எந்த ஒரு செயலுக்கும், அது எவ்வளவு சிறிய செயலாக இருந்தாலும் உள்ளிருந்து எழும் ஆணைக்குக் காத்திருக்கலாம்.
உலக அரசாங்கத்திற்கோ அல்லது ஒரு புத்தகம் வாங்க வேண்டுமென்றாலோ, சட்டம் ஒன்றுதான்.

"*My uncle is to send a servant for us.*"
"என்னுடைய மாமா, எங்களுக்காக ஒரு பணியாளரை அனுப்ப இருக்கிறார்."

41. Again the Lady's offer to send a servant was refused. The Lady is anxious to establish her superiority.

ஒரு பணியாளை லேடி காதரின் உடன் அனுப்புவதாகக் கூறியது மறுக்கப்பட்டது. தன்னுடைய அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ள லேடி காதரின் ஆவலாக உள்ளாள்.

42. "My uncle is to send a servant."

Lady Catherine's solicitude again became superfluous.

In the context of Elizabeth, Lady Catherine has no role to play. Here she is a superfluous personality.

Her manners are the authority of superfluity.

Man and woman are indispensable to each other, not marriage.

It was a period where marriage carried the entire authority of the society.

The goal of human romance will remain till Man continues to be human. Already the institution of marriage has given way.

Marriage had authority when society is the ultimate conception.

Romance will have that status when the authority vests with psychology.

Psychological authority having Romance as a goal is the climate in which the Individual will be born.

The Individuality we see in Europe is of the Mind.

Here the principle of Individuality – mental individuality – is conceded and even established, but its social psychological benefit is only to the aristocracy.

As it was confined to one class and no principle can come of age if it is not extended to the entire society, mental individuality remained an attractive goal in Europe and failed to produce in any measure.

There is no original thinker in Europe whose vision is comprehensive.

In human evolution it is a far distant goal that precedes the Spiritual Individual.

America produced that Individuality in production. Hence her prosperity.

Her prosperity rules the world today.

Economic prosperity is no goal of humanity; maybe economic self-sufficiency as self-sufficiency in food production.

Again no original scientist or original contribution to scientific thought, such as Darwin, has been produced by America.

That remains a prerogative of Europe.

America claims every first in Technology.

Practical organization is their forte.

Before the Mental Individual is born the vital Individual has to appear.

European Science was born in the Reformation and the Renaissance.

The Vital Individual is one who will create the world government.

The American Individual has offered all the worship production needs and deserves.

The next logical step is global trade but the kernel of vitality does not lie in trade or its consequent wealth. **It is there in the government.**

The Mental Individual will offer the world Ideas that are evolutionary.

Revolutionary ideas are within national boundaries.

It is an evolution of Man to the next species.

The Vital Individual will offer the world Ideas for World government, which is a social goal.

He will be able to solve all the political, military, economic problems that are besetting the world now.

His knowledge can be theoretical but it must be practicable.

Whether he will be an Individual in the beginning or an organization is to be seen.

Maybe it is an **Organisation** of like-minded global organizations.

"என்னுடைய மாமா ஒரு வேலைக்காரனை அனுப்ப இருக்கிறார்."

லேடி காதரினுடைய பரிவு மீண்டும் மிகையாக இருந்தது.

எலிசபெத் விஷயத்தில் லேடி காதரினுக்கு எந்த பங்கும் கிடையாது. இங்கு அவள் ஒரு தேவையற்ற பாத்திரமாக இருக்கிறாள்.

மிகையான அதிகாரமே அவளது பழக்கங்களாக இருக்கின்றன.

ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் மிகவும் அத்தியாவசியம், திருமணம் அல்ல.

சமூகத்தின் முழு அதிகாரத்தையும் திருமணம் எடுத்துக்கொண்ட காலம் அது.

மனிதன் மனிதனாக இருக்கும்வரை மனிதக் காதல் எனும் இலக்கு நீடிக்கும். ஏற்கனவே திருமணம் என்கிற அமைப்பு மறைய ஆரம்பித்து விட்டது.

சமூகம் இறுதியான கருத்தாக இருந்தவரை திருமணத்திற்கு அதிகாரம் இருந்தது.

அதிகாரமும் மனமும் ஒன்று சேரும் பொழுது காதலுக்கு அந்த அந்தஸ்து கிடைக்கும்.

காதலை இலக்காக வைத்திருக்கும் மனவலிமை தனி மனிதன் உருவாகும் சூழல்.

ஐரோப்பாவில் நாம் பார்க்கும் தனித்தன்மை மனத்திற்குரியது.

இங்கு தனித்தன்மையின் கோட்பாடுகள், மனத்தின் தனித்தன்மை ஒப்புக் கொள்ளப்பட்டது, நிலைநாட்டவும் பட்டது, ஆனால் அதனுடைய சமூக மனரீதியான பலன்கள் எல்லாம் பிரபுக்களுக்கே உரியதாக ஆனது.
அது ஒரு வர்க்கத்திற்கே உரியதாக இருந்ததால், சமூகம் முழுவதற்கும் நீடிக்கப்படாத எந்த கோட்பாடும் முழுமையான வளர்ச்சி அடையாது. மனத்தின் தனித்தன்மை ஐரோப்பாவில் கவர்ச்சிகரமான இலக்காக இருந்தது, ஆனால் எதையும் சாதிக்கவில்லை.
முழுமையான பார்வை கொண்ட சுயமாக சிந்திப்பவர்கள் ஐரோப்பாவில் இல்லை.
மனிதப் பரிணாமத்தில் அது ஆன்மீக மனிதனுக்கு முன்னால் இருக்கும் தொலைதூர இலக்காகும்.
உற்பத்தியில் அமெரிக்கா அந்த தனித்தன்மையை உருவாக்கியது. அதனால்தான் அது வளமாக இருக்கிறது.
அமெரிக்காவின் செல்வ வளம் இன்று உலகத்தையே ஆள்கிறது.
பொருளாதார செழுமை மனித குலத்தின் இலக்கு அல்ல; உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஏற்பட்டது போல் பொருளாதார தன்னிறைவே இலக்காக இருக்கலாம்.
டார்வினைப்போல் சுயமாக சிந்தித்த விஞ்ஞானியோ, அப்படிப்பட்ட விஞ்ஞான எண்ணங்களின் பங்களிப்போ அமெரிக்காவில் உருவானதில்லை.
அது ஐரோப்பாவின் தனிப்பட்ட உரிமையாக விளங்குகிறது.
தொழிற்நுட்பத்தில் எல்லா முதல் கண்டு பிடிப்பும் அமெரிக்காவில்தான்.
நடைமுறை அமைப்பு அவர்களது பலம்.
மனத்தாலான மனிதன் உருவாகுவதற்கு முன் உணர்வாலான மனிதன் தோன்ற வேண்டும்.
ஐரோப்பாவின் விஞ்ஞானம், சீர்திருத்த இயக்கத்தின் போதும், மறுமலர்ச்சியின் போதும் பிறந்தது.
உணர்வுபூர்வமான மனிதன் உலக அரசாங்கத்தை உருவாக்க முடியும்.
உற்பத்திக்கு தேவையான தகுதியான அனைத்தையும் அமெரிக்க மனிதன் அளித்திருக்கிறான்.
தர்க்கரீதியாக, அடுத்த நிலை உலகளாவிய வியாபாரம். ஆனால் உணர்ச்சியின் உட்கரு வியாபாரத்திலோ அல்லது அதனால் வரும் செல்வத்திலோ அல்ல, **அது அரசாங்கத்தில் உள்ளது.**
பரிணாம வளர்ச்சியுடைய உலக எண்ணங்களை மனத்தாலான மனிதன் வழங்குவான்.
புரட்சிகரமான எண்ணங்கள் நாட்டின் எல்லைக்குள் இருக்கும்.
இது மனிதன் அடுத்த கட்டப் பரிணாமத்திற்கு செல்வதாகும்.
உணர்வுபூர்வமான மனிதன் உலகுக்கு, உலக அரசாங்கத்திற்கான யோசனைகளை அளிப்பான், உலக அரசாங்கமே சமூக இலக்காகும்.
உலகத்தை சூழந்து கொண்டிருக்கும் அரசியல், இராணுவ, பொருளாதார, பிரச்சினைகளை அவனால் தீர்க்க முடியும்.
அவனுடைய அறிவு நடைமுறைக்கு ஒவ்வாததாக இருக்கலாம். ஆனால் நடைமுறை சாத்தியமாக இருக்க வேண்டும்.
ஆரம்பத்தில் அவன் தனி மனிதனாக இருக்கிறானா அல்லது ஒரு அமைப்பாக விளங்கப் போகிறானா என்பதைப் பார்க்க வேண்டும்.
ஒரே மாதிரி எண்ணம் கொண்ட உலகளாவிய **அமைப்புகள்** சேர்ந்த **அமைப்பாக** அது இருக்கலாம்.

"Oh! -- Your uncle! -- He keeps a man-servant, does he? I am very glad you have somebody who thinks of those things. Where shall you change horses? -- Oh! Bromley of course. If you mention my name at the Bell, you will be attended to."
"ஓ! உன்னுடைய மாமாவா! அவர் ஒரு ஆண் பணியாளரை வைத்திருக்கிறாரா? இதை எல்லாம் கவனித்துக் கொள்ள உனக்கு ஒருவர் இருக்கிறார் என்பது மிகவும் சந்தோஷம். குதிரைகளை எங்கே மாற்றுவாய்? ஓ! புரோம்லியில்தான் மாற்றுவாய். பெல்லில் என்னுடைய பெயரைச் சொன்னால் உங்களுக்கு அங்கு உதவி கிடைக்கும்."

43. "If you mention my name at Bell, you will be attended to."
The Lady persists. Now from the servant, she has come to her name.
Man has before him the virginally creative moment He speaks of.
We see between the Lady and our heroine the persisting virgin Moment.
The Lady chooses one course; **the other course pursues Elizabeth**.
I wonder whether there was any time when God denied that opportunity to Man.
Man has always been in the Presence of God.
God awaits in divine Patience for Man to choose Him.
In 2009 it must be much more so.
God brings Man to his place on the excuse of one or many errands.
Man may visit Him or His place physically, still God waits.
Man relies on his course, on his own resources.
He drinks, as the horse led to water, when he lets God overtake him.
It is the Moment which changes from my will to Thy will.

The great moment of evolution is that Moment when God who has forgotten wakes up from his forgetting.
It is the awakening, the hour before Gods awake.
Mother has invited people to become the Divine, not merely worship the divine.
Sri Aurobindo indicates those moments by capitalisation in his writing.
Man is the determinant.
Man is to determine himself as god.
His god evolves into God.
In the first chapter, He speaks of the ever-present human aspiration.
At every chapter, He refers to it as the possibility of Divine Life.
He speaks of it as the final refusal of the Brahmin.
It resurfaced as non-violence of Gandhiji.
FDR who entered the path retraced it.
The enormous unplanned production of USA crashed on a market that was unable to expand.
When FDR shrank back, the economic forces transformed themselves as military energies to absorb the production.
After the war, **it continued as development.**
Britain loved her Royalty, missed the World government.
The crash again came with characteristic significance in housing.
The door to the creation of the World government is the solution of the financial crisis.
Man has to choose Thy will.
In the last chapter, He humorously touches upon the taste of ignorance.
There He speaks of the inevitability of transformation.
Knowing oneself as Supermind, universal, integral, complete, whole is possible only through surrender.
He, who has surrendered His exalted status to become the universe, can regain it only through surrender.
The Gita, which pronounced surrender took the path of moksha.
It was a surrender of Jivatma to Paramatma, not His surrender to His process.
He worked for it for aeons and **in response came the Hour of God**.
He came to us to announce its arrival.
She came to realize it.
The universal Mother in 1946 came to consummate Mother's work.
The virgin Moment is always there before us.
My will becoming Thy will avails of the Hour of God.
"பெல்-ல் என் பெயரை கூறினால் உன்னை கவனித்துக் கொள்வார்கள்."
லேடி காதரின் விடாப்பிடியாக இருக்கிறாள். இப்பொழுது அவள் பணியாளரிடமிருந்து மாறி தன் பெயரை உபயோகப்படுத்திக்கொள்ளச் சொல்கிறாள்.
பகவான் கூறும் தூய்மையான தருணம் மனிதன் முன் உள்ளது.
லேடி காதரின், எலிசபெத் இருவரிடையே தொடர்ந்து இருந்து வரும் தூய்மையான தருணத்தை நாம் பார்க்கிறோம்.
லேடி காதரின் ஒரு பாதையை தேர்ந்தெடுக்கிறாள், **மற்றொரு பாதை எலிசபெத்தை பின் தொடருகிறது**.
மனிதனுக்கு, தெய்வம் அந்த வாய்ப்பினை எப்பொழுதாவது மறுத்து இருக்கிறதா என்பது எனக்குப் புரியவில்லை.
தெய்வத்தோடுதான் மனிதன் எப்பொழுதும் இருந்திருக்கிறான்.
தெய்வம் தனக்குரிய பொறுமையோடு மனிதன் பகவானை தேர்ந்தெடுப்பான் எனக் காத்திருக்கிறது.
2009ல் **அது மேலும் அதிகமாக இருக்க வேண்டும்**.
ஒன்று அல்லது பல வேலைகளை சாக்காக வைத்துக்கொண்டு தெய்வம் மனிதனை தன்னுடைய இடத்திற்கு வரவழைக்கிறது.
பகவானிடமோ அல்லது பகவான் இருக்கும் இடத்திற்கோ மனிதன் வருவான் என்று தெய்வம் இன்னமும் காத்துக்கொண்டிருக்கிறது.
மனிதன் அவனையும், அவனிடத்து இருப்பவற்றையும் நம்பிக் கொண்டிருக்கிறான்.
தெய்வம் அருள் புரியும் பொழுதுகூட, அதை அவன் ஏற்றுக்கொள்வதில்லை.
என்னுடைய விருப்பம் என்பது உன்னுடைய திருவுள்ளம் என்று மாறும் தருணம் இது.
மறந்ததை மீண்டும் ஞாபகப்படுத்திக் கொண்டு தெய்வம் வரும், அத்தருணமே பரிணாமத்தின் உயர்ந்த தருணமாகும்.
அது தெய்வங்கள் விழித்துக்கொள்ளும் நேரத்திற்கு முன் எழும் விழிப்பாகும்.
இறைவனை வணங்குவதோடு நிற்காமல், நாமே இறைவனாகலாம் என்று அன்னை கூறியுள்ளார்.
அத்தருணங்களை ஸ்ரீ அரவிந்தர் தன்னுடைய எழுத்துக்களில் பெரிய எழுத்தில் எழுதுவார்.
தீர்மானிப்பவன் மனிதன்.

தான் தெய்வம் என்று மனிதன்தான் தீர்மானிக்க வேண்டும்.
அவனுள் இருக்கும் தெய்வம், இறைவனாக வளருகிறது.
முதல் அத்தியாயத்தில் பகவான் என்றும் இருக்கும் மனித ஆர்வத்தைப் பற்றிப் பேசுகிறார்.
தெய்வீக வாழ்வு சாத்தியம் என்று ஒவ்வொரு அத்தியாயத்திலும் அதை பகவான் குறிப்பிடுகிறார்.
பிராமணனுடைய இறுதி மறுப்பு என அதைப் பற்றிப் பேசுகிறார்.
அது காந்திஜியின் அஹிம்சை மூலமாக வெளிவந்தது.
அதில் இறங்கிய ரூஸ்வெல்ட் அந்த பாதையில் தொடரவில்லை.
திட்டமிடாமல் செய்யப்பட்ட அமெரிக்காவின் அபரிமிதமான உற்பத்தி, சந்தை விரிவடைய முடியாமல் போனதால் நொறுங்கிப் போனது.
ரூஸ்வெல்ட் பின்வாங்கிய போது, உற்பத்தியை உள்வாங்கிக் கொள்வதற்காக பொருளாதார சக்திகள் இராணுவ சக்திகளாக உருமாறின.
போருக்குப் பின் **அது முன்னேற்றமாக தொடர்ந்தது.**
அரசுரிமையை பிரிட்டன் விரும்பியது, உலக அரசாங்கத்தை இழந்தது.
வீடு கட்டும் திட்டங்களில் குறிப்பிடத்தக்க வகையில் மீண்டும் வீழ்ச்சி ஏற்பட்டது.
பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு உலக அரசாங்கம் உருவாவதே.
உங்கள் திருவுள்ளம், மனிதன் தேர்ந்தெடுக்க வேண்டியது.
கடைசி அத்தியாயத்தில் அறியாமையின் ருசியைப் பற்றி ஹாஸ்யமாக பகவான் குறிப்பிடுகிறார்.
திருவுருமாற்றத்தின் அத்தியாவசியத்தைப் பற்றி பகவான் அங்கு பேசுகிறார்.
ஒருவர் தன்னை சத்திய ஜீவியம், பிரபஞ்சம், பூரணம், முழுமை, பூர்த்தி என சரணாகதியால் மட்டுமே தெரிந்துகொள்ள முடியும்.
பிரபஞ்சமாக மாறுவதற்கு தன்னுடைய உயர்ந்த நிலையை சமர்ப்பணம் செய்த பகவான், மீண்டும் அதனை சமர்ப்பணம் மூலம்தான் பெற்றுக்கொள்ள முடியும்.
சரணாகதியை போதித்த கீதை மோக்ஷத்தின் பாதையை தேர்ந்தெடுத்தது.
அது ஜீவாத்மா, பரமாத்மாவிற்கு செய்த சரணாகதி, பகவானுடைய முறைக்கு பகவான் செய்த சரணாகதி அல்ல.
பகவான் யுகாந்திர காலமாக இதற்காக **உழைத்ததன் பலனாக இறைவன் வரும் தருணம் கிடைத்தது.**
அதனுடைய வருகையை அறிவிக்கவே பகவான் வந்தார்.
அதனை உண்மையாக்க வந்தவர் அன்னை.
அன்னையின் பணியை நிறைவேற்ற 1946-ல் அன்னை பராசக்தியே உலகுக்கு வந்தார்.
தூய்மையான தருணம் நம் முன் எப்பொழுதும் உள்ளது.
என்னுடைய விருப்பம் உங்களது திருவுள்ளமாக மாறினால், இறைவன் வரும் தருணத்தால் பலன் பெறலாம்.

Lady Catherine had many other questions to ask respecting their journey, and as she did not answer them all herself, attention was necessary, which Elizabeth believed to be lucky for her; or, with a mind so occupied, she might have forgotten where she was. Reflection must be reserved for solitary hours; whenever she was alone, she gave way to it as the greatest relief; and not a day went by without a solitary walk, in which she might indulge in all the delight of unpleasant recollections.
அவர்களுடைய பிரயாணத்தைப் பற்றி லேடி காதரினுக்கு கேட்பதற்கு மேலும் பல கேள்விகள் இருந்தன. எல்லா கேள்விகளையும் கேட்டு அதில் பல கேள்விகளுக்கு தானே பதிலையும் அளித்தாள். ஒரு சில கேள்விகளுக்கு எலிசபெத் பதில் கூறும்படி இருந்ததினால் அவள் விழிப்புடன் இருக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு சற்று கவனமாக இருக்க வேண்டி வந்ததை தன்னுடைய அதிர்ஷ்டம் என்று எண்ணினாள். இல்லையெனில் அவள் மனதில் உள்ள சிந்தனை ஓட்டம் காரணமாக அவள் எங்கிருக்கிறாள் என்பதையே மறந்திருப்பாள். சிந்தனைகள் தனிமையான நேரங்களுக்காகவே ஒதுக்கப்பட வேண்டும், எப்பொழுதெல்லாம் தனிமையில் இருந்தாளோ, அப்பொழுதெல்லாம் அச்சிந்தனைகளுக்கு இணங்குவது பெரிய ஆறுதலாக இருந்தது. ஒரு நாள்கூட தனியாக நடந்து போகாமல் இருக்கவில்லை, அவ்வாறு நடக்கும்பொழுது வருத்தம் அளித்த நினைவுகளில் ஆழ்ந்து போனாள்.

44. Small minds take great interest in every detail. Great minds do not ever neglect it.
ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் சிறிய மனம் படைத்தவர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொள்வர், பெரிய மனம் படைத்தவர்கள் ஒரு பொழுதும் அதைப் புறக்கணிக்க மாட்டார்கள்.
45. Unpleasant recollections are the result of imperfect understanding.
இனிமையற்ற விஷயங்களை மீண்டும் சிந்தித்துப் பார்ப்பது சரியாக புரிந்துகொள்ளாத காரணத்தினால்தான்.
46. "She might have forgotten where she was. Recollection must be reserved for solitary hours".
Elizabeth is brave, self-aware, more collected than any one could be in her situation.
That she might have forgotten where she was, **is clearly a symptom of subconscious ecstasy.**
She felt gratitude after the proposal, a sensation of the psychic.
She moved to the Mind after reading the letter; so what she felt was gratitude of the mental psychic.

The emotions were not unmixed.
It went with 'out of spirits' and an amusement at Lady Catherine's possible response.
This amusement would have created at least in her subconscious a terror.
Recollection is generally possible only when it is pleasurable.
At such a psychological stage, she is able to refuse the Lady's invitation to London and her own situation finds the other offers of the Lady's help superfluous.
The substance readily reveals the natural strength. Elizabeth finds herself strong enough.
That strength mainly comes from the freedom in which she has grown.
The comfort and social respect in which she grew up adds to her inner strength.
The inner strength is indicative of many things of which the security arising out of future hope is one.
The proposal, refused downright, is alive deep down and she has hopes of fulfillment.
Lady Arabella on hearing Mary's inheritance fainted and woke up with 'dear Mary' on her lips.
All self-consciousness about being a De Coursey Lady deserted her at that moment.
It was a real sense in her nerves giving social strength.
Mercedes, had she deserved Edmond's love, would have fainted on hearing his voice.
It was she who sent him to jail. It was clearly a subconscious betrayal.
He loved an undeserving girl whose rasi was a direct negation of his.
Even at that stage, she was a complement to him, as we find his own love for her enabled him to successfully revenge on his enemies.
Love in Edmond was 'transformed' into hatred of revenge.
It was progress in the reverse.
Maybe her own ambition was more for status than for love.
She was an orphan. Naturally she would have craved for security.
What begins as need for security matures as satisfaction in status and wealth.
His was fiery love, of the purest kind.
His father was alive, not the mother.
A son's affection is not so much consummated by the father's love as the mother's.
Abuse by girls is liked by Men because it indicates a relationship.
It is not in spite of the abuse but because of the abuse that Man loves the woman.
Abuse is a strong psychological affinity, stronger than can be given by affection.
Mean characters love those who ill-treat them and vulgarly abuse.
Their insensitivity recognizes the stronger touch, in spite of its negativity, but remains unreached by good sensible behaviour.
A false, slippery, deceitful character is at once sensed.
There is the realization that to win such a character one needs great skill.
The generation of greater skill in oneself by a false character is attractive.
Culture is repelled by deceit.
Lack of culture is attracted by deceit.
A pretty face is not the determinant in love affairs.
An attractive handsome face is almost a superstition in love affairs.
A handsome face does attract. Fortune is more attractive, but falsehood is far more attractive.
The determinant in attraction is the capacity to play the complement.
Power is a greater determinant than knowledge.
Evolutionary need is the ultimate determinant. As soon as it is fulfilled, which is often very quick, the attraction ceases.
"அவள் எங்கிருக்கிறாள் என்பதை அவள் மறந்திருக்கக்கூடும். சிந்திப்பது தனிமையான நேரங்களுக்காகவே ஒதுக்கப்பட வேண்டும்".
எலிசபெத் தைரியமானவள், சுய விழிப்புணர்ச்சி உடையவள், அவளுடைய நிலைமையில் இருக்கக்கூடிய எவரையும்விட உறுதியானவளாக இருந்தாள்.
அவள் எங்கிருக்கிறாள் என்பதை மறந்திருந்தால், அது அவளுடைய **ஆழமான பூரிப்பின் அடையாளமாகும்.**
திருமண வேண்டுகோளிற்குப் பிறகு அவளுக்கு நன்றி உணர்வு எழுந்தது, அது சைத்திய புருஷனின் உணர்வு.
கடிதத்தைப் படித்த பின் அவள் மனத்தை அடைந்தாள்; அதனால் அவளுக்கு எழுந்த நன்றி உணர்வு மனத்தின் சைத்திய புருஷனால்.
அவளது உணர்ச்சிகள் கலப்பில்லாமல் இல்லை.
உற்சாகமின்றியும் இருந்தாள், லேடி காதரினுடைய பதிலை கற்பனை செய்து சந்தோஷமும் அடைந்தாள்.
இந்தச் சந்தோஷம் அவளுடைய ஆழ்மனதில் ஒரு பயத்தையாவது ஏற்படுத்தியிருக்கும்.
இன்பமாக இருந்தால்தான் பொதுவாக நினைவுபடுத்திப் பார்க்க முடியும்.

இது போன்ற ஒரு மனரீதியான நிலையில், லேடி காதரின் லண்டனுக்கு அழைத்ததை அவளால் மறுக்க முடிந்தது, மேலும் அவளுடைய நிலைமையில் லேடி காதரின் செய்வதாகச் சொன்ன மற்ற உதவிகள் மிகையாகத் தெரிந்தன.

இயற்கையாக இருக்கும் வலிமையை அவள் உடனே வெளிப்படுத்துகிறாள். தனக்குப் போதுமான வலிமை இருப்பதை எலிசபெத் உணருகிறாள்.

சுதந்திரத்தில் கிடைத்த வலிமை அது.

அவளுக்குக் கிடைத்த வசதிகளும், சமூக மரியாதையும் உள்ளத்து வலிமையை மேலும் பலப்படுத்தியது.

எதிர்காலத்தில் உள்ள நம்பிக்கையில் எழும் பாதுகாப்பு உள்ளத்து வலிமை உணர்த்தும் பல விஷயங்களில் ஒன்றாகும்.

உடனடியாக மறுக்கப்பட்ட திருமண வேண்டுகோள் உள்ளே உயிருடன் இருப்பதால், அது பூர்த்தி அடையும் என நம்பிக்கை அவளுக்கு இருக்கிறது.

மேரிக்குக் கிடைத்த சொத்தைப் பற்றி கேள்விப்பட்டவுடன் லேடி அரபெல்லா மயங்கி விழுந்தாள், பிறகு 'எனதருமை மேரி' என்றவாறு மயக்கம் தெளிந்து எழுந்தாள்.

தான் ஒரு De Coursey Ladyஆக இருக்கும் அவளுடைய தன்னுணர்வு, அவளை விட்டு அந்த தருணத்தில் விலகியது.

அவளுக்குள் இருக்கும் உண்மையான விவேகம் சமூகப் பலத்தை அளிக்கிறது.

எட்மண்டின் காதலுக்கு மெர்சிடஸ் அருகதை உள்ளவளாக இருந்திருந்தால் அவனுடைய குரலைக் கேட்டவுடன் மயங்கி விழுந்திருப்பாள்.

அவனை சிறைக்கு அனுப்பியதே அவள்தான். அது ஒரு ஆழ்மனத்தின் துரோகம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

அவனுடைய ராசிக்கு நேரடி மாறுபட்ட ராசியாக உள்ள ஒரு அருகதையற்ற பெண்ணை அவன் காதலித்தான்.

அந்த நிலையிலும்கூட அவள் அவனுக்கு உடன்பாடானவளாக இருக்கிறாள், அவளிடம் உள்ள தனது காதலால் தன்னுடைய பகைவர்களை அவனால் வெற்றிகரமாகப் பழி தீர்த்துக்கொள்ள முடிந்தது.

எட்மண்டின் காதல் பழிதீர்த்துக் கொள்ளும் வெறுப்பாக 'திருவுருமாறியது'.

இது தலைகீழான முன்னேற்றம்.

காதலைவிட அந்தஸ்துக்குத்தான் அவள் ஆசைப்பட்டாள் போலும்.

அவள் ஒரு அனாதை. அதனால் இயற்கையாகவே அவள் பாதுகாப்பிற்காக ஏங்கியிருந்திருப்பாள்.

பாதுகாப்பு என்று ஆரம்பிப்பது, பிறகு அந்தஸ்து, ஆஸ்தி என்று மாறிவிடுகிறது.

தீவிரமான அவனது காதல் மிகவும் தூய்மையானதாக இருந்தது.

அவனுடைய தந்தை உயிருடன் இருந்தார், தாயார் இல்லை.

தந்தையுடைய அன்பைவிட தாயாரின் அன்பில்தான் ஒரு மகனின் பாசம் பூரணம் பெறும்.

பெண்களின் திட்டை ஆண்கள் ரசிப்பர், ஏனெனில் அது ஒரு உறவை தெரிவிக்கின்றது.

திட்டையும் மீறி அல்ல, திட்டுவதினாலேயே ஆண் பெண்ணை காதலிக்கிறான்.

மனரீதியான நெருக்கத்தை பாசம் அளிப்பதைவிட திட்டே அதிகமாக அளிக்கும்.

மோசமாக திட்டுபவர்களையும், மோசமாக நடத்துபவர்களையும் அற்பமானவர்களே காதலிப்பர்.

எதிர்மறையாக இருந்தாலும் திட்டுபவர்களின் வலிமையை இவர்களது உணர்ச்சியின்மை புரிந்துகொள்கிறது, ஆனாலும் நல்ல விவேகமான நடத்தையை புரிந்துகொள்வதில்லை.

பொய்யான, நழுவக் கூடிய, ஏமாற்றும் குணமுடையவரை உடனே புரிந்துகொள்ளலாம்.

இது போன்ற குணமுடையவரை ஜெயிக்க பெரிய திறன் வேண்டும் என்று தெரிகிறது.

பொய்யான ஒருவர் தன்னிடம் மேலும் பெரிய திறன்களை உற்பத்தி செய்வது கவர்ச்சியூட்டுவதாக இருக்கிறது.

கலாச்சாரத்தை எதிர்ப்பது ஏமாற்று.

கலாச்சாரம் இல்லையெனில் அங்கு ஏமாற்றுவது சுலபம்.

அழகான முகம் காதலை தீர்மானிக்காது.

காதல் விஷயங்களில் அழகான முகம் என்பது ஒரு மூட நம்பிக்கை.

அழகான முகம் ஈர்க்கும். சொத்து மேலும் கவர்ச்சியானது, ஆனால் பொய்மை அதனினும் மிக கவர்ச்சியானது.

ஒருவருக்கு உடன்பாடாக விளங்கும் திறனே, கவருவதை நிர்ணயிக்கும்.

அறிவைவிட வலிமையே நிர்ணயிக்கும் பெரிய சக்தி.

இறுதியாக நிர்ணயம் செய்வது பரிணாமத்தின் தேவைகள். அது எப்பொழுதும் வெகு விரைவில் பூர்த்தியாகி விடும், அது பூர்த்தியானவுடன் கவர்ச்சியும் மறைந்து விடும்.

47. "Not a day passed without her indulging in all the delight of unpleasant recollection".

She who is unable to share her thoughts with anyone else is a fit material to become an Individual.

Delight is what is offered to her, unpleasantness is of the receptacle.

The delight of it is compelling as well as intense.

She took some days to allow it to settle down safely.

Her indulging in her delight of unpleasant recollections is how one enjoys his experience.

It is true Man enjoys all his experience thus.
He willingly goes back to pleasant delight.
The overall experience for her is delight – a sacred fact of human life.
Man delights in what he wants whether it is good or bad.
That is the basis of evil turning into Good.
Man wanting something dissolves it in his consciousness.
Man seeing evil not as evil but as God's good and wanting it for that reason, evil turns into good.
This is a process by which the divine nature becomes possible for human nature.
The soul of Nature emerges when Man wants from Nature its soul.
Man is God who is his own determinant.
His realizing that is his awakening.
Elizabeth received unpalatable skeletons from the letter, bitter pills but her view -- a mental view -- is able to delight in it.
Mind has that capacity to delight in what is despicable to the vital.
The spirit sees the vital, mental truth as purity itself.
This is so because the spirit identifies with what is presented while the Mind understands.
The vital reacts from its own position and that is its only possible response.
The Supermind sees the complement the evil is and happily embraces it making the evil good.
The solitary walks are her tapas.
She seeks the recollections that are unpleasant for their inherent delight.
Only a genius in the writer can see the delight of unpleasantness.
It is the deepest truth of life.
Retiring into his library he only in his depths dwells on the touch of sweetness of his wife's personality on his.
There is communion at that level.
The great events in a short period of some months can only be achieved by something good, sweet and endurable.
In him it is seen when the results come.
In his wife the results turn into speechlessness in the beginning.
Perhaps the sweetness of vulgarity loses its speech.
The relief in him at Bingley's proposal is true and vast.
Even with that great satisfaction he waited for Bingley to go to congratulate Jane.
It is patience of aristocratic culture, not easily acquired.
That patience gave way when his pet retired into Pemberley where he arrived at all unexpected moments.
His relationship with this child is not social to honour social courtesies.
Elizabeth's response to Wickham was one of excited tension.
Her response to Darcy's letter was near self-forgetfulness.
When people meet in love they are overcome by sleep, says Mother.
Sleep in love is meditation in Spirit.
"இனிமையற்ற நினைவுகளை சந்தோஷமாக நினைத்துப் பார்க்காமல் அவள் ஒரு நாள்கூட இருக்கவில்லை."
யாருடனும் தன் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள முடியாத அவள், தனித்தன்மை வாய்ந்தவளாக மாற தகுந்த பாத்திரமாவாள்.
அவளுக்கு அளிக்கப்பட்டது ஆனந்தம், அவள் பெற்றது இனிமையின்மை.
அந்த சந்தோஷம் ஆர்வத்தை எழுப்பியது, தீவிரமாகவும் இருந்தது.
அது மெதுவாக அடங்குவதற்கு அவளுக்குப் பல நாட்களாயிற்று.
இனிமையற்ற நினைவுகளை அவள் சந்தோஷமாக நினைத்துப் பார்ப்பது, எவ்வாறு ஒருவர் அவருடைய அனுபவத்தை இரசிக்கிறார் என்பதாகும்.
மனிதன், அவனுடைய எல்லா அனுபவங்களையும் அவ்வாறுதான் இரசிக்கிறான் என்பது உண்மை.
அவன் விருப்பத்துடன் இனிமையான சந்தோஷத்தை அனுபவிக்கிறான்.
அவளது முழுமையான அனுபவம் பேரானந்தம் ஆகும், மனித வாழ்வின் புனிதமான உண்மை.
நல்லதோ, கெட்டதோ, ஆண் அவனுக்கு விருப்பமானதில் ஆனந்தம் அடைகிறான்.
தீமை நல்லதாக மாறுவதற்கு அது அடிப்படை.
ஆண் அவன் விரும்புவதை ஜீவியத்தில் கரைத்து விடுகிறான்.
ஆண் தீயதை தீயதாகப் பார்க்காமல் இறைவனின் நல்லதாகப் பார்த்து அதற்காக அதை விரும்பினால், தீமை நல்லதாக மாறும்.
இந்த முறையில், மனித இயற்கைக்கு தெய்வீக இயற்கை சாத்தியம் ஆகிறது.
மனிதனுக்கு, இயற்கையின் ஆன்மா வேண்டும் எனும்பொழுது, இயற்கையின் ஆன்மா வெளிப்படுகிறது.
மனிதன் தெய்வம், அவனே அவனை நிர்ணயம் செய்து கொள்வான்.

அதை அவன் உணருவதே, அவனுடைய விழிப்பாகும்.
ஜீரணிக்க முடியாத அவதூறுகளையும், கசப்பான உண்மைகளையும் கடிதம் மூலம் எலிசபெத் பெற்றாள், ஆனால் அவளுடைய மனத்தின் கண்ணோட்டத்தின் மூலம், அதில் சந்தோஷத்தைப் பெற முடிந்தது.
உணர்வுக்கு வெறுக்கதக்கதாக இருப்பது, மனதிற்கு சந்தோஷமாக இருக்கும்.
உணர்வின் உண்மை, மனத்தின் உண்மை, இவைகளை ஆன்மா தூய்மை என்றே பார்க்கும்.
மனம் புரிந்துகொள்ளும்பொழுது, தன் முன் இருப்பதுடன் ஆன்மா தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதால் இது சாத்தியமாகிறது.
தன்னுடைய நிலையிலிருந்தே உணர்வு பதிலளிக்கும், அதுவே அதனுடைய ஒரே மறுமொழியாகும்.
தீமை உடன்பாடாக வருவதை சத்திய ஜீவியம் பார்க்கிறது, சந்தோஷமாக அதை ஏற்றுக் கொள்கிறது, கெட்டதை நல்லதாக்குகிறது.
தனியாக நடப்பதே அவள் செய்யும் தவம்.
அதனுள் இருக்கும் சந்தோஷத்திற்காக இனிமையற்ற நினைவுகளை அவள் நாடுகிறாள்.
இனிமையற்றதன் சந்தோஷத்தை கதாசிரியரின் மேதாவித்தனமே பார்க்கும்.
வாழ்வின் ஆழமான உண்மை இது.
நூலகத்தில் இருக்கும்பொழுது அவர் தன்னுடைய ஆழத்தில், தன்னுடைய மனைவியின் ஆளுமையின் இனிமையான ஸ்பரிசத்தில் ஆழ்ந்திருப்பார்.
அந்த நிலையில் ஐக்கியம் உள்ளது.
பெரிய நிகழ்வுகள் குறுகிய காலத்தில், சில மாதங்களில் நடக்க வேண்டுமெனில் அது நல்லது, இனிமை, நிலைத்து நிற்பது ஆகியவற்றால் மட்டுமே முடியும்.
பலன் வந்தபொழுது அவனிடத்து இவற்றைப் பார்க்க முடிந்தது.
அவருடைய மனைவி ஆரம்பத்தில் பேச்சற்று போனாள்.
அசிங்கத்தின் இனிமை ஒரு வேளை பேச்சிழக்க வைக்கும் போலும்.
பிங்கிலி திருமண வேண்டுகோள் விடுத்த பின் அவருக்கு பெரிய நிம்மதி கிடைத்தது உண்மை.
பெரிய திருப்தி கிடைத்த பின்பும்கூட, பிங்கிலி சென்ற பின், ஜேனைப் பாராட்ட அவர் காத்திருந்தார்.
உயர் குடியினருக்கே அம்மாதிரி ஒரு பொறுமை இருக்கும், சுலபத்தில் பெற முடியாத பண்பு இது.
அவருடைய செல்ல மகள் பெம்பர்லிக்குச் சென்றவுடன் இந்த பொறுமையை இழந்து, தோன்றும் போதெல்லாம் அங்கு செல்ல ஆரம்பித்தார்.
சமூக மரியாதைகளைப் பாராட்டும் வகையில், இந்த மகளுடன் அவருக்கு இருந்த உறவு சமூகரீதியானதாக இல்லை.
விக்காமிடத்து, எலிசபெத்திற்கு எழுச்சியுடன் கூடிய இறுக்கம் இருந்தது.
டார்சியின் கடிதத்திற்கு, அவளுக்குத் தன்னையே மறக்கும் நிலை ஏற்பட்டது.
காதலிப்பவர்கள் உறக்கத்தில் ஆழ்ந்து விடுவார்கள் என்று அன்னை கூறியுள்ளார்.
காதலில் தூக்கம் என்பது ஆன்மாவில் தியானம் போலாகும்.

Mr. Darcy's letter she was in a fair way of soon knowing by heart. She studied every sentence; and her feelings towards its writer were at times widely different. When she remembered the style of his address, she was still full of indignation; but when she considered how unjustly she had condemned and upbraided him, her anger was turned against herself; and his disappointed feelings became the object of compassion. His attachment excited gratitude, his general character respect; but she could not approve him; nor could she for a moment repent her refusal, or feel the slightest inclination ever to see him again. In her own past behaviour there was a constant source of vexation and regret; and in the unhappy defects of her family, a subject of yet heavier chagrin. They were hopeless of remedy. Her father, contented with laughing at them, would never exert himself to restrain the wild giddiness of his youngest daughters; and her mother, with manners so far from right herself, was entirely insensible of the evil. Elizabeth had frequently united with Jane in an endeavour to check the imprudence of Catherine and Lydia; but while they were supported by their mother's indulgence, what chance could there be of improvement? Catherine, weak-spirited, irritable, and completely under Lydia's guidance, had been always affronted by their advice; and Lydia, self-willed and careless, would scarcely give them a hearing. They were ignorant, idle, and vain. While there was an officer in Meryton, they would flirt with him; and while Meryton was within a walk of Longbourn, they would be going there for ever.
டார்சியின் கடிதம் இப்பொழுது அவளுக்கு மனப்பாடமாகிவிட்டது. ஒவ்வொரு வரியையும் ஆராய்ந்தாள். அதை எழுதியவனைப் பற்றி அவளது உணர்ச்சிகள், சில சமயங்களில் மிகவும் வித்தியாசப்பட்டது. அவன் பேசிய விதம் ஞாபகத்திற்கு வந்தபொழுது, இப்பொழுதும் அவளுக்குக் கோபம் வந்தது. ஆனால் அவள் எந்த அளவிற்கு அநியாயமாக அவனைக் கண்டித்தாளோ, கடிந்து கொண்டாளோ, அதை நினைக்கும்பொழுது அந்த கோபம் அவள் மேலேயே திரும்பியது. அவனுடைய ஏமாற்றம், இப்பொழுது அவளது அனுதாபத்தைப் பெற்றது. அவனுடைய அன்பு நன்றியுணர்ச்சியை தூண்டியது, அவனுடைய நடத்தை மரியாதையை

அளித்தது, இருப்பினும் அவளால் அவனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை, அவனை நிராகரித்ததற்கு ஒரு வினாடி கூட அவளால் வருத்தப்பட முடியவில்லை, அவனை மறுபடியும் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஒரு சிறிதும் எழவில்லை. அவள் முன்பு நடந்துகொண்ட விதம் அவளுக்கு தொடர்ந்து வெறுப்பையும் வருத்தத்தையும் அளித்தது. அவள் குடும்பத்தினருடைய சந்தோஷப்பட முடியாத குறைகள் அவளுக்கு மேலும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தன. அதற்குத் தீர்வு உண்டு என்ற நம்பிக்கையே இல்லை. அவளுடைய தந்தை அவர்களைப் பார்த்து சிரிப்பதில் திருப்தியடைந்தவராக, தன்னுடைய இளைய மகள்களின் பெரும் அற்பத்தனமான செயல்களைக் கண்டிக்க ஒருவித முயற்சியும் என்றும் எடுக்காதவராக இருந்தார். நல்ல பண்புகள் இல்லாத அவள் தாயாரோ, அதனால் ஏற்படும் தீங்கை முற்றிலும் உணரவில்லை. எலிசபெத் பல சமயம் ஜேனுடன் இணைந்து காதரின் மற்றும் லிடியாவின் விவேகமற்ற செயல்களை தடுக்க முற்பட்டாள்; ஆனால் அவர்களுடைய தாயும் அவர்களுக்கு இடம் கொடுத்து ஆதரவு அளிக்கும் பொழுது முன்னேற்றத்திற்கு என்ன வாய்ப்பு இருக்க முடியும்? லிடியாவின் வழிகாட்டுதலில் முழுவதுமாக இருந்த பலவீன குணமுள்ள எப்பொழுதும் எரிந்துவிழும் சுபாவமுள்ள காதரின், அவர்களுடைய அறிவுரையை எப்பொழுதும் எதிர்த்தாள்; ஆனால் தன் இஷ்டம்போல் அசட்டையாக நடந்துகொள்ளும் லிடியா அதை காதில்கூட வாங்கிக் கொள்ளவில்லை. அவர்கள் அறியாமை, சோம்பல் மற்றும் வீண்பெருமை உடையவர்களாகவும், பிரயோஜனமற்றவர்களாகவும் இருந்தனர். மெரிடனில் இராணுவ அதிகாரி இருந்தால் அவனுடன் ஊர் சுற்றுவர்; மெரிடன் லாங்பர்னிலிருந்து நடக்கும் தூரத்தில் இருந்ததால் எந்நேரமும் அங்கு சென்ற வண்ணம் இருந்தனர்.

48. It is his letter that first forged a relationship with her.
அவனுடைய கடிதமே முதலில் அவளுடன் ஒரு உறவை ஏற்படுத்தியது.
49. It requires such a powerful abuse to open her mind to social realities. Had she tried to marry an army officer, so that he would remain in her own sphere, no opening would be necessary.
சமூகத்தின் உண்மை நிலைகளைப் பற்றி தெரிந்துகொள்ள அவளுக்கு அது போன்ற கடுமையான நிந்தனை அவசியமாக இருந்தது. அவளுடைய வட்டத்திற்குள்ளேயே தொடர்ந்து இருக்கக் கூடிய ஒரு இராணுவ அதிகாரியை அவள் திருமணம் செய்து கொண்டிருந்தால், எந்த விழிப்பிற்கும் அவசியமில்லை.
50. For her to rise to Pemberley, a hard opening is necessary.
பெம்பர்லி அளவுக்கு உயர அவளுக்கு கடினமான விழிப்பு தேவைப்படுகிறது.
51. She has come to cherish an abusive string of arbitrary words.
தன்னிச்சையான நிந்தனை பேச்சுக்களை அவள் மனதில் வைத்துப் போற்றினாள்.
52. Elizabeth studied the emotions inversely expressed by crude facts.
கடுமையான உண்மைகளால் நேர்மாறாக வெளிப்பட்ட உணர்வுகளை எலிசபெத் ஆராய்ந்தாள்.
53. She studied the letter now to see how well Darcy loved her, wherefrom the love originated, what in her evoked the love.
டார்சி தன்னை எவ்வளவு தூரம் காதலிக்கிறான், எங்கிருந்து காதல் ஆரம்பித்தது, அவளிடம் உள்ள எது அவனை தூண்டியது எனப் பார்ப்பதற்கு இப்பொழுது அவள் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தாள்.
54. Indignation is the heat required to open the closed seals of blindness.
கண்மூடித்தனத்தை திறக்க வெறுப்புடன் கூடிய கோபம் தேவைப்படுகிறது.
55. Surely it is welcome, but if her anger had disappeared, in its place there was a chance of love being born.
நிச்சயமாக அது வரவேற்கத்தக்கது, ஆனால் அவளது கோபம் மறைந்திருந்தால், அதனுடைய இடத்தில் காதல் எழுவதற்குரிய வாய்ப்பிருந்திருக்கும்.
56. She felt sorry for his disappointment.
அவன் அடைந்த ஏமாற்றத்திற்காக அவள் வருந்தினாள்.
57. This is a distant, faint, inner readiness to accept him, not love.
அவனை ஏற்றுக்கொள்ள அவள் தன்னுள்ளே லேசாக தயாராக இருக்கிறாள், ஆனால் அவனுடைய காதலை அல்ல.
58. His attachment excited gratitude.
அவனுடைய அன்பு நன்றி உணர்வை எழுப்பியது.
59. Gratitude is an expansive inner emotion of joy.
சந்தோஷத்தின் விரிவான அக உணர்ச்சிகளே நன்றி உணர்வாகும்.
60. His general character evoked respect.
அவனுடைய பொதுவான குணம் அவன் மீது மரியாதையை வெளிப்படுத்தியது.
61. She has a respect for him knowing his respect for her.
அவனுக்கு தன் மேலிருக்கும் மரியாதையை அவள் புரிந்துகொண்டதால் அவன் மீது அவளுக்கு மரியாதை எழுகிறது.
62. It is mutual.
இது பரஸ்பரம்.
63. Respect has its glory when it is all from one side.

ஒரு பக்கத்திலிருந்தே மரியாதை எழுந்தால், அது பெருமையுடன் விளங்கும்.

64. She could not approve of him.
அவளுக்கு அவனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.
65. We approve of manners, which he is devoid of.
நாம் நடத்தையை ஏற்றுக்கொள்கிறோம், அவனிடம் அது இல்லை.
66. She did not repent her refusal.
தான் மறுத்ததற்காக அவள் வருந்தவில்லை.
67. There was absolutely no ground or scope for her to reach him.
அவள் அவனை நோக்கிச் செல்வதற்கு எந்த வித காரணமோ, வாய்ப்போ இல்லை.
68. She had no slight inclination to see him.
அவளுக்கு அவனைப் பார்க்கவேண்டும் என்கிற எண்ணம் துளிகூட இல்லை
69. That sentiment already made her miss him.
அந்த மிகை உணர்வு அவளுக்கு ஏற்கனவே பிரிவுணர்ச்சியைத் தந்திருந்தது.
70. His memory reminds her of her inferior status.
அவனுடைய ஞாபகங்கள் அவளுக்கு அவளுடைய கீழான நிலையை ஞாபகப்படுத்துகிறது.
71. Till that moment, there was no basis in her past behaviour of her seeking him.
அந்தத் தருணம்வரை, அவனை நாடியதற்குரிய எந்த அடிப்படையும் அவளுடைய கடந்தகால நடத்தையில் இல்லை.
72. It was all from his side. He wanted to dance, he took initiative to meet her more than once.
அனைத்தும் அவன் பக்கத்திலிருந்தே எழுந்தன. அவன் நடனமாட விரும்பினான், அவளை சந்திக்க ஒரு முறைக்கு மேல் தன்முனைப்பு எடுத்தான்.
73. None of them contain any positive energy to overcome the negative contacts.
எதிர்மறையான தொடர்பை வெற்றிகொள்ள, எதனிடமும் எந்த நேர்மறையான சக்தியுமில்லை.
74. 'Vexation, regret, chagrin' cannot seek his company.
"வெறுப்பு, வருத்தம், பெரும் ஏமாற்றம்" இவற்றால் அவனுடன் சேர முடியாது.
75. 'Hopeless of remedy' – She has no end from which a beginning can be made.
"தீர்வே இல்லை"—ஆரம்பிப்பதற்கு அவளிடம் இடம் என்று ஒன்று இல்லை.
76. 'Wild giddiness of sisters' – Shame arising as sensation organises as the emotion of shyness.
"சகோதரிகளின் அற்பத்தனமான செயல்கள்'—அவமானம், வெட்கமாக மாறுகிறது.
77. Mrs. Bennet is that evil. How can she be self-conscious?
தீங்கிழைப்பதே திருமதி பென்னட்தான். எவ்வாறு அவளால் சுய உணர்வுடன் இருக்க முடியும்?
78. Elizabeth could not see it till she read the letter.
கடிதத்தைப் படித்த பின்புதான் எலிசபெத்திற்கு புரிகிறது.
79. Elizabeth cannot restrain Lydia as long as she has the same vibration deep down.
எலிசபெத்திடமும் அதே அதிர்வுகள் ஆழத்தில் இருக்கும்வரை, அவளால் லிடியாவைக் கட்டுப்படுத்த முடியாது.
80. Her mother's indulgence of Lydia is seen in her adoration of Wickham. To expect a girl or boy of 20 to resist that charm is meaningless.
லிடியாவிற்கு அவளது தாயார் இடம் கொடுப்பது, அவள் விக்காமை போற்றுவதிலிருந்து தெரிகிறது. இருபது வயதுள்ள ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ அந்த கவர்ச்சியை தடுத்தாட்கொள்வது என்பது அர்த்தமற்றது.
81. Grace came as Darcy, ripped open her mind, let luck into it. Any other girl would either readily shift to Darcy or would be pining for Wickham.
அருள் டார்சி ரூபத்தில் வந்து அவளுடைய மனத்தை திறந்து, அதிர்ஷ்டத்தை உள்ளே நுழைக்கிறது. எந்த பெண்ணாக இருந்தாலும் உடனடியாக, ஒன்று டார்சிக்கு மாறுவாள் அல்லது விக்காமிற்காக ஏங்குவாள்.
82. No wonder Jane Austen did not marry.
ஜேன் ஆஸ்டின் திருமணம் செய்து கொள்ளாததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.
83. Had Lydia not been out, she would have been less intolerable.
லிடியா வெளியில் கிளம்பாமல் இருந்திருந்தால், அவளை ஓரளவிற்கு சகித்துக்கொள்ள முடிந்திருக்கும்.
84. Mrs. Bennet does not miss a single social opportunity to enjoy, even if she has to oppose it.
திருமதி பென்னட், ஒரு சமூக வாய்ப்பினைக்கூட அதை எதிர்க்க வேண்டி வரும் பொழுதும், அனுபவிக்க தவறியதே கிடையாது.
85. As she is enjoying life as it presents to her, the question of hearing does not arise. Hearing means the first step to thinking.
வாழ்க்கையை அப்படியே ஏற்றுக் கொண்டு அவள் அதை அனுபவிக்கிறாள், கேட்டுக் கொள்வது என்ற பேச்சுக்கே இடம் இல்லை. கேட்டுக் கொள்வது என்பது சிந்திப்பதின் முதற் படியாகும்.

86. Most of the population then was so. They submit to the society and grow into social culture. Mrs. Bennet does not submit to anything. In her life she met with an extraordinary success. Her alternatives were to raise her to that level of culture or enjoy that potential at her own level.
பலரும் அன்று அவ்வாறுதான் இருந்தனர். சமூகத்திற்குப் பணிந்து சமூக கலாச்சாரத்தை ஏற்றுக் கொண்டனர். திருமதி பென்னட் எதற்கும் பணிவதில்லை. அவளுக்கு வாழ்க்கையில் அசாதாரண வெற்றி கிடைத்தது. அவள் செய்திருக்கக் கூடியது ஒன்று, கலாச்சாரத்தின் அந்த நிலைக்கு அவள் தன்னை உயர்த்திக் கொண்டிருந்திருக்கலாம், அல்லது தன் நிலையிலேயே அதனை அனுபவித்திருக்கலாம்.
87. Mr. Bennet with his education and wealth was totally blind to her stupidity. It was impossible for him not to know of her folly. She was married for her beauty. What works is her energy. Not that she could not be controlled. Of course, she could not be improved. He never tried to control her. All her unseemly assertions were needed for him to understand his decision on his marriage. It came to him in the elopement.
திரு பென்னட் அவருக்கிருந்த படிப்புக்கும் பணத்திற்கும் அவளுடைய மடமையைப் பார்க்காமல் கண்மூடியாக இருந்தார். அவளுடைய மடமை அவருக்குத் தெரியாமல் இருந்திருக்க முடியாது. அவளுடைய அழகுக்காக அவளை மணந்தார். அவளுடைய சக்தியே வேலை செய்கிறது. அவளை அடக்க முடியாது என்பதல்ல, ஆனால் அவளை சரிசெய்ய முடியாது. அவளை அடக்க அவர் முயற்சி செய்யவே இல்லை. தன்னுடைய திருமணத்தில் தான் எடுத்த முடிவை புரிந்துகொள்வதற்காக அவளுடைய மோசமான வலியுறுத்தல்கள் அவருக்குத் தேவையாக இருந்தன. லிடியா ஓடிப்போவதில்தான் அவருக்குப் புரிந்தது.
88. Any foolish girl like Lydia, left to herself, will act only like her.
லிடியா போன்ற அறிவற்ற ஒரு பெண்ணை, அவள் இஷ்டப்படி விட்டுவிட்டால், இவ்வாறு தான் நடந்து கொள்வாள்
89. By memorising Darcy's letter Elizabeth let Darcy into her in the form of words, crude words he alone would write. Now it is not the crudeness that lingers in her, but the Man who wrote the words.
டார்சியின் கடிதத்தை மனப்பாடம் செய்த எலிசபெத், அவனால் மட்டுமே எழுத இயலும் கடுமையான வார்த்தைகளின் வடிவத்தில் டார்சியை தன்னுள்ளே அனுமதித்தாள். இப்பொழுது அவளுடைய மனதில் இருப்பவை கடுமை அல்ல, அதை எழுதியவன்தான்.
90. His feelings became the object of compassion as it was roused without her own participation, rather by her rejection.
அவனுடைய உணர்ச்சிகளைக் கண்டு பரிதாபப்பட்டாள், ஏனெனில் அவற்றில் அவளது பங்கு எதுவும் இல்லை, அவளது மறுப்பால் எழுந்தவை அவை.
91. His attachment excited gratitude. Gratitude is in response to grace which acts on its own. As he acted on his own, gratitude rises in her.
அவனுடைய அன்பு நன்றி உணர்வை ஏற்படுத்தியது. தானே செயல்படும் அருளால் நன்றி உணர்வு எழுகிறது. அவன் தானே செயல்பட்டதால் அவளுக்கு நன்றி எழுகிறது.
92. His character evoked respect. His willingness to reply her, write at length, are aspects of high character. He was free to spurn her.
அவனுடைய குணம் அவளிடம் மரியாதையை வெளிக்கொண்டு வருகிறது. மனமுவந்து அவளுக்கு பதில் எழுதியது, விவரமாக எழுதுவது, இவையெல்லாம் உயர்ந்த குணத்தின் அம்சங்கள். அவன் அவளை வெறுத்து ஒதுக்கியிருக்க முடியும்.
93. She was not regretting her refusal, as she was not mercenary.
அவள் ஆதாயமனப்பான்மை கொண்டவளாக இல்லாததால், தன்னுடைய மறுப்புக்கு அவள் வருந்தவில்லை.
94. She had no inclination to see him again. The bitterness of the confrontation did not seek a revival. Meeting him would remind her of the lowness of her family. Her mother was insensible of the evil. Elizabeth is insensible of her being the daughter of a wild boar.
அவனை மீண்டும் சந்திக்க அவளுக்கு விருப்பம் இல்லை. இருவரிடையே இருந்த எதிர்ப்பின் மனக்கசப்பு அதனை புதுப்பிக்க விரும்பவில்லை. அவனை சந்தித்தால் தன்னுடைய குடும்பத்தின் கீழ் நிலை அவளுக்கு ஞாபகத்திற்கு வரும். தீமை தாயாருக்குப் புலப்படவில்லை, காட்டு விலங்குபோல் இருப்பவளது மகள் தான் என்று எலிசபெத்திற்கும் புலப்படவில்லை.
95. Mr. Darcy's letter, she was in a fair way of knowing by heart".
All knowledge is knowledge of identity.
Knowledge comes by interest.
Interest identifies.
Greater the interest, the greater the identity.
Mind's identity is to know the letter by heart.
When a woman sees the fine make up of another woman, she knows all the details in a trice, as her interest there is fullest.
Elizabeth's interest in Darcy is so complete that she knew it by heart.
In spite of this fact, she sets no store by his proposal.

Man is not able to know of the presence of a thing in spite of its value for him unless when it is presented to him in his own terms of cultural sensitivity.
Mind is not only divisive, but selective.
England could forget Shakespeare for two centuries having produced him.
Having said 'All is Brahman' the rishis shunned life, seeking moksha.
India is being bestirred by the emerging Individuality but is not aware of it.
The achievements of the Individuality are mistaken as ones of selfishness.
The achievements of Grace are taken as the achievements of ego.
The body of vast student population learns in spite of the stifling educational system.
We understand that the system teaches well.
The country develops in spite of corruption.
The politician understands corruption develops the society.
It is a prime fact of human nature that she who knew the letter so well truly expected nothing out of his proposal.
When something needs freedom from our mental interference, Man is capable of forgetting it fully under some excuse, even if it is so important to Elizabeth as Darcy's proposal.
She never expected this proposal to be renewed after Hunsford.
Even after Lambton she did so.
Even after Bingley's proposal she did so.
It is god's way of preserving a possibility from Man's expectation.
Society can do it, life does it, even one's ignorance does it.
To achieve by expectation is a phenomenon of the physical plane.
To achieve by non-expectation belongs to all the planes.
Even achievement by expectation belongs to all the planes.
Whether expectation achieves or destroys depends upon Man's relationship to the project.
When the project is bigger than he is, expectation helps.
It is also true that what can be accomplished by forgetting can also be accomplished by expectation.
Life follows these rules with any Man according to his level of consciousness.
One whose consciousness is developed can accomplish things far below his level either by expectation or by forgetting.
Society is psychologically mature when what can be accomplished by forgetting can be accomplished by expectation.
Man is the determinant.
He can raise his present consciousness to any level he chooses.
Integral yoga dispenses with asana, japa, pranayama thus.
Integral yoga accomplishes more by resorting to surrender.
The higher includes the lower.
What Chandrasekar and Morarji accomplished by life long aspiration and expectation, Rajiv achieved by rejecting.
"டார்சியின் கடிதம் அவளுக்கு ஒரு விதமாக மனப்பாடமாகி விட்டது."
அடையாளம் காணும் அறிவே அனைத்து அறிவாகும்.
ஆர்வத்தினால் அறிவு வரும்.
ஆர்வம் அடையாளம் காணும்.
ஆர்வம் அதிகமாக இருந்தால், மேலும் சிறப்பாக அடையாளம் காணலாம்.
கடிதத்துடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வது அதனை மனப்பாடமாக அறிவதாகும்.
ஒரு பெண்மணிக்கு மற்றொரு பெண்மணியின் ஒப்பனையை பார்க்கும்பொழுது அதைப் பற்றிய எல்லா விவரங்களும் க்ஷண நேரத்தில் தெரிந்து விடும், ஏனெனில் அதில் அவளுடைய ஆர்வம் முழுமையானது.
எலிசபெத்திற்கு டார்சியின் மேல் இருந்த விருப்பம் முழுமையானது என்பது கடிதம் மனப்பாடமானதிலிருந்து தெரிகிறது.
இந்த உண்மையையும் மீறி, அவனது வேண்டுகோள் அவள் மனதில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.
ஒருவனுடைய கலாச்சார உணர்வுகளுக்கு ஏற்றார்போல் ஒன்று கிடைக்கும் பொழுது, மனிதனுக்கு அது மதிப்புள்ளதாக இருந்தும்கூட, அதையும் மீறி அது இருப்பதையே அவனால் அறிந்துகொள்ள முடிவதில்லை.
மனம் பிரிக்க மட்டும் செய்யாது, தேர்ந்தெடுக்கவும் செய்யும்.
இங்கிலாந்தில் பிறந்த ஷேக்ஸ்பியரை இரண்டு நூற்றாண்டு காலமாக அங்கிருந்த மக்களால் மறக்க முடிந்தது.
"எல்லாம் பிரம்ம மயம்" என்று கூறி ரிஷிகள் வாழ்க்கையை விலக்கினர், மோக்ஷத்தை நாடினர்.
வெளிப்படும் தனித்தன்மையினால் இந்தியா சுறுசுறுப்பாகி வருகிறது, ஆனால் அது உணரப்படவில்லை.
தனித்தன்மையின் சாதனைகள் சுயநலம் என்று தவறாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன.
அருளின் சாதனைகள் அகந்தையின் சாதனை என்று எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

திணறடிக்கும் கல்விமுறை இருந்தும்கூட மாணவர் சமுதாயம் அதிக அளவில் பயில்கின்றது.
கல்விமுறை நன்றாகக் கற்பிக்கின்றது என நாம் புரிந்துகொள்கிறோம்.
ஊழல் இருந்தும் நாடு முன்னேறுகிறது.
ஊழலே சமூகத்தை வளர்க்கிறது என அரசியல்வாதிகள் புரிந்துகொள்கின்றனர்.
கடிதத்தை மிக நன்றாகத் தெரிந்து வைத்திருக்கும் அவள், அவனது திருமண வேண்டுகோளினால் உண்மையாகவே எதையும் எதிர்பார்க்காதது, மனித சுபாவத்தின் பிரதான உண்மை.
மனத்தின் குறுக்கீடுகளிலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என்று எதற்காவது தேவைப்பட்டால், எலிசபெத்திற்கு டார்சியின் திருமண வேண்டுகோள்போல, அது எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும் கூட, ஏதாவது காரணம் கூறி மனிதன் அதனை முழுவதுமாக மறந்து விடுவான்.
ஹன்ஸ்போர்ட் விஜயத்திற்குப் பிறகு திருமண வேண்டுகோள் புதுப்பிக்கப்படும் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.
லாம்ப்டனிற்குப் பிறகும் அவள் எதிர்பார்க்கவில்லை.
பிங்கிலியின் திருமண வேண்டுகோளிற்குப் பிறகும் அவள் எதிர்பார்க்கவில்லை.
இது மனிதனுடைய எதிர்பார்ப்பிலிருந்து ஒரு நிகழ்வை பாதுகாக்கும் கடவுளின் வழி.
சமூகம் அதைச் செய்யலாம், வாழ்வு அதைச் செய்கிறது, ஒருவருடைய அறியாமையும் அதைச் செய்கிறது.
எதிர்பார்ப்பின் மூலம் சாதிப்பது ஜடநிலையில் நடைபெறும் ஒரு பெரிய நிகழ்வு.
எதிர்பார்ப்பின்றி சாதிப்பது அனைத்து நிலைகளுக்கும் உரியது.
எதிர்பார்ப்பின் மூலம் சாதிப்பதும் அனைத்து நிலைகளுக்கும் உரியது.
எதிர்பார்ப்பு சாதிக்கிறதா அல்லது அழிக்கிறதா என்பது மனிதனுக்கு அந்த விஷயத்தில் உள்ள உறவைப் பொறுத்தது.
விஷயம் அவனைவிட பெரியதாக இருக்கும்போது எதிர்பார்ப்பு உதவுகிறது.
ஒரு விஷயத்தை மறக்கும்போது அது நிறைவேறுவதுபோல், எதிர்பார்ப்பினாலும் அது நிறைவேறும் என்பதும் உண்மை.
மனிதனின் ஜீவிய நிலையைப் பொறுத்து, இந்தச் சட்டங்களை வாழ்வு அனுசரிக்கிறது.
ஜீவியத்தில் வளர்ந்துள்ள மனிதன், எதிர்பார்ப்பு மற்றும் மறப்பதன் மூலம் அவனுடைய நிலைக்கு மிகவும் குறைந்த நிலையிலேயே சாதிக்கிறான்.
மறப்பதன் மூலம் சாதிப்பதை, எதிர்பார்ப்பின் மூலம் சாதிக்கும்போது, சமூகம் மனத்தளவில் முதிர்ச்சி அடைந்துள்ளது என்றாகிறது.
மனிதன் தீர்மானிக்கிறான்.
தற்பொழுது இருக்கும் ஜீவிய நிலையிலிருந்து அவன் விரும்பும் எந்த நிலைக்கும் அவன் உயரலாம்.
ஆசனம், ஜபம், பிராணாயாமம் பூரண யோகத்திற்கு தேவை இல்லை.
சரணாகதி மூலம் பூரணயோகம் அதிகம் சாதிக்கும்.
உயர்ந்ததில் தாழ்ந்தது அடங்கியுள்ளது.
சந்திரசேகரும், மொரார்ஜியும் வாழ்நாள் ஆர்வம் மற்றும் எதிர்பார்ப்பு மூலம் சாதித்ததை, ராஜீவ் மறுப்பதன் மூலம் சாதித்தார்.

96. "She studied every sentence. Her feelings towards the writer were widely different".
Studying is to read so as to fully absorb the idea.
Facts are directly easily received.
Thoughts require patient reception.
Facts, devoid of sense impressions,combine to create thoughts.
They combine at random producing the inspiration of the idiot.
It is ego that intelligently coordinates them to produce an egoistically valid thought as the sun goes round the earth.
Shorn of the intrusion of ego, it becomes a thought of pure reason.
Complying with the requirements of logic and reason, it yields a pure thought.
Elizabeth, in two hours, produced such a finding.
Any religious leader, politician, social scientist or physical scientist or a thinker who is capable of this today can congratulate himself.
It is a useful research to study the important books of a year or ten years to select some that qualify according to this criterion.
If one does not meet with any, there is no surprise.
Reason gives us a clear well defined thought.
Still, it will be found incapable of handling emotions.
Elizabeth's excellent reason left her with a residue of infatuation.
Habit lies deeper still.
Mind has thought and will.
Will is the mental force which can act without reference to its own thought.

The will can enlighten itself with the knowledge of the thought.
In that measure it can handle emotions successfully.
Fully integrated it becomes the Real-Idea capable of handling the habit.
Thought or will becoming Real-Idea is transformation.
Darcy achieved it with respect to Elizabeth.
On receiving the letter, she wanted to put it away.
After the first prejudiced perusal, she did put it away, saying it was all false.
He who studies every sentence will initially respond, if he does so from his emotions, to declare he will not touch it.
Total, prejudiced refusal is total endearing appreciation.
As the thought yields, emotions change.
Her experience and Jane's are entirely at variance.
Jane entered into a period of disappointment and then was restored.
Jane and Bingley are not the best of human material.
Elizabeth was never aware of Darcy's love except 'tolerable'.
It entered into a violent upheaval, subsided into sympathetic appreciation, rose to a violent earthquake, disappeared from the field and came back to life as a wonder.
In all this period she had no expectation.
Absence of expectation achieves.
Absence of expectation is made possible by life among the social realities for a far higher purpose.
Partly, but essentially the infatuation for the rogue made this absence possible.
Life achieves its aims through human temperament.
"ஒவ்வொரு வாக்கியத்தையும் அவள் ஆராய்ந்தாள். எழுதியவர் மேலிருந்த அவளது உணர்ச்சிகள் மிகவும் வித்தியாசமாக இருந்தன."
கருத்துகளை முழுவதுமாக உள்வாங்கிக் கொள்வதற்காக படிப்பதே ஆராய்ச்சியாகும்.
உண்மைகள் நேரடியாகவும் சுலபமாகவும் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.
பொறுமையாகப் பெற்றுக்கொள்வது எண்ணங்களுக்கு அவசியம்.
புலனுணர்வின் தாக்கம் இல்லாத உண்மைகள் இணைந்து எண்ணங்களை உருவாக்குகின்றன.
அவை எவ்வாறு வேண்டுமென்றாலும் இணைந்து, முட்டாளுக்குரிய ஆர்வத்தை ஏற்படுத்துகின்றன.
சூரியன் பூமியைச் சுற்றுகிறது என்று கூறியதைப் போல், அகந்தை அவற்றை புத்திசாலித்தனமாக இணைத்து அகந்தையான எண்ணத்தை உற்பத்தி செய்கிறது.
அகந்தையின் குறுக்கீட்டை நீக்கி விட்டால், அது பகுத்தறிவின் எண்ணமாக மாறிவிடும்.
நியாயத்திற்கும், பகுத்தறிவுக்கும், தேவையானதுடன் இணங்கினால் தூய்மையான எண்ணம் கிடைக்கும்.
இரண்டு மணி நேரத்தில் எலிசபெத் இது போன்ற உண்மையைக் கண்டு பிடித்தாள்.
இதனை ஒரு ஆன்மீகத் தலைவரோ, அரசியல்வாதியோ, சமூக விஞ்ஞானியோ, அல்லது ஜட உலகின் விஞ்ஞானியோ அல்லது சிந்தனையாளரோ செய்யமுடியும் என்றால் அவர்கள் தங்களைப் பாராட்டிக் கொள்ளலாம்.
இந்தப் பிரமாணத்திற்கு ஏற்றவாறு இருக்கும் ஒரு வருடம் அல்லது பத்து வருட முக்கியமான புத்தகங்களைப் படிப்பது உபயோகமான ஆராய்ச்சியாகும்.
எதுவும் கிடைக்காவிட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.
தெளிவான தீர்க்கமான எண்ணங்களை பகுத்தறிவு கொடுக்கும்.
இருந்தும், அதனால் உணர்ச்சிகளை கையாள முடியாது.
எலிசபெத்தின் அபாரமான பகுத்தறிவு மோகத்தையே அளித்தது.
பழக்கங்கள் ஆழமானவை.
எண்ணமும், உறுதியும் மனத்தில் உள்ளன.
தன்னுடைய எண்ணத்துடன் கலந்துகொள்ளாமல் செயல்படுவது மனத்தின் சக்தியான, விருப்புறுதியாகும்.
எண்ணங்களின் அறிவோடு, விருப்புறுதி தனக்கே தெளிவை ஏற்படுத்திக் கொள்ளும்.
அந்த அளவில், அதனால் உணர்ச்சிகளை வெற்றிகரமாகக் கையாள முடியும்.
முழுமையாக ஒருங்கிணைந்தால் பழக்கங்களை சமாளிக்க இயலும் சத்தியக் கருத்தாக மாறும்.
எண்ணங்கள் அல்லது விருப்புறுதி சத்தியக் கருத்தாக மாறுவது, திருவுருமாற்றமாகும்.
எலிசபெத் விஷயத்தில் டார்சி இதனை சாதித்தான்.
கடிதம் கிடைத்தவுடன் அதை அப்புறப்படுத்த நினைத்தாள்.
தப்பபிப்பிராயத்துடன் முதலில் படித்தவுடன், அது பொய் என்று கூறி அதை அவள் அப்புறப்படுத்தவே செய்தாள்.
உணர்ச்சிகளிலிருந்து ஒருவர் ஒவ்வொரு வாக்கியத்தையும் படித்தால் அதைத் தொடமாட்டேன் என்று முதலில் பதிலளிப்பார்.

முழுமையான, முன்முடிவுடன் கூடிய மறுப்பு, முழுமையான பிரியத்துடன் கூடிய பாராட்டாகும்.
எண்ணங்கள் இணங்கும்பொழுது உணர்ச்சிகள் மாறுகின்றன.
அவளுடைய அனுபவமும் ஜேனுடைய அனுபவமும் முற்றிலும் மாறுபட்டவை.
ஜேன் ஏமாற்றத்திற்கு உள்ளானாள், பிறகு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பினாள்.
ஜேனும், பிங்கிலியும் சிறந்த மனித குணம் படைத்தவர்கள் அல்ல.
'பரவாயில்லை' என்று டார்சி கூறியதைத் தவிர அவனது காதலை எலிசபெத் அறிந்துகொள்ளவே இல்லை.
அது வன்மையாக எழும்பி, அனுதாபத்தில் இறங்கி பூகம்பமாக வெடித்து, களத்திலிருந்து மறைந்து, வாழ்க்கையில் அற்புதமாக வெளி வந்தது.
இந்த எல்லா நேரங்களிலும் அவளுக்கு எந்த எதிர்பார்ப்பும் இருக்கவில்லை.
எதிர்பார்ப்பு இல்லாவிட்டால் சாதிக்கலாம்.
உயர்ந்த நோக்கத்திற்காக, சமூகத்தின் உண்மை நிலைகளுக்கிடையே எதிர்பார்ப்பின்றி இருப்பதை வாழ்வு சாத்தியமாக்கி உள்ளது.
ஓரளவிற்கு, ஆனால் முக்கியமாக அயோக்கியனிடம் கொண்ட மோகம், எதிர்பார்ப்பின்றி இருப்பதை சாத்தியமாக்கியது.
மனித மன உணர்வுகளுக்கேற்ப வாழ்வு தன் குறிக்கோளை அடையும்.

97. "When she remembered the style of address, she was full of indignation".
High accomplishment can go with higher defects.
A perfect idealist in one exalted area of his career is capable of a perfect irregularity in another ordinary aspect of his life.
One who has originally organized the economic aspects of life, had a very clumsy household.
Presiding deities of superpowers exhibit petty meanness to their predecessors.
The preeminent exponent of logic and reason does irrational things in his life.
One can reach moksha without shedding ego.
Without overcoming anger, one becomes a Brahmarishi.
Brahmic consciousness is reached without shedding several human foibles.
One who can send a young disciple to defeat and physically bring a king to his feet has no capacity to earn milk for his child.
Mr. Bennet can send a daughter to Pemberley but not have domestic peace.
Elizabeth moves to Mind from an infatuated vital, but anger is irresistible to her.
Progress within a plane does not insist on shedding the defects of the plane.
Crossing the plane imperatively requires perfection in the existing plane.
Danglers, Fernand, Mercedes made maximum possible progress based on capacities, not values.
Dr. Thorne and Mary rose to the highest planes of society based on pure values.
After she analysed the letter so fully, it is possible for her not to have any anger against Darcy.
His outrage is recent and it is right her vehemence survives.
From the beginning he came to a frame of Mind that can admit no anger against her.
Love made him so.
She is rational towards him. Rationality has no such capacity.
His style of address can provoke anyone.
He did not ask for a reply nor expect one.
Her forgetting his proposal and his not expecting the answer go with each other.
One helps the other be possible.
Both help the consummation of the work.
Hers is forgetfulness. His is non-expectation.
Her expecting no consequent development to his proposal enables him to have non-expectation of an answer.
These are negative complements that help a positive work.
Collins' incessant talk and Charlotte's non-interrupting listening helped consummate their marriage.
Mrs. Bennet's provocative teasing of Lady Lucas and her non-reacting acquiescence made Charlotte's wedding possible.
There are several ways life accomplishes utilizing the existing powers.
As ego is the coordinating intelligence to become reason life coordinates forces complementarily to complete a work.
Creation of structures in the parts of human beings employs several strategies – complements, coordination, division, aggregation, involution, evolution, harmony, reconciliation, holding back all but one, conception, limitation, absorption.
"பேசிய விதம் அவளுக்கு ஞாபகத்திற்கு வந்தபொழுது, அவளுக்கு கடும் கோபம் எழுந்தது."
பெரிய குறைகளுடன் உயர்ந்த சாதனைகளும் இருக்கும்.

தன்னுடைய தொழிலில் பெரிய விஷயத்தில் சிறந்த இலட்சியவாதியாக இருப்பவர் ஒருவர் வாழ்க்கையில் மற்றொரு சாதாரண விஷயத்தில் ஒழுங்கற்றவராக இருப்பார்.
வாழ்க்கையின் பொருளாதார விஷயங்களை ஆரம்பத்தில் முறைப்படுத்திய ஒருவரது வீடு, மிக மோசமாக இருந்தது.
மிகப் பெரிய சக்திகளை உடைய தற்போதைய தெய்வங்கள், தனக்கு முன் இருந்தவர்களிடம் சில்லறைத்தனமான சிறிய புத்தியைக் காண்பிக்கின்றன.
தர்க்கத்திலும், பகுத்தறிவிலும் தலை சிறந்து விளங்குபவர், தன்னுடைய வாழ்க்கையில் விவேகமற்ற செயலைச் செய்வார்.
அகந்தையை கைவிடாமல் மோக்ஷத்தை ஒருவர் அடையலாம்.
கோபத்தை வெற்றி கொள்ளாமல் ஒருவர் பிரம்மரிஷி ஆகலாம்.
பல மனித குறைபாடுகளை துறக்காமல் பிரம்ம ஜீவியத்தை அடையலாம்.
அரசனை வென்று அவனைத் தன் காலடிக்கு கொண்டு வருமாறு ஒரு இளம் சிஷ்யனை அனுப்பக்கூடியவருக்கு, தன் குழந்தைக்கு பால் வாங்கிக் கொடுக்க கூடிய திறமை இல்லை.
திரு பென்னட் ஒரு மகளை பெம்பர்லிக்கு அனுப்ப முடியும், ஆனால் அவருக்கு குடும்பத்தில் நிம்மதி கிடைக்காது.
உணர்வை ஆட்கொண்டிருந்த மோகத்திலிருந்து எலிசபெத் மனதிற்கு மாறுகிறாள், ஆனால் அவளால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.
ஒரு நிலைக்குள் நடக்கும் முன்னேற்றம் அந்நிலையின் குறைகளை களைய வற்புறுத்துவதில்லை.
அடுத்த நிலைக்கு நிச்சயமாக போக வேண்டுமென்றால் இருக்கும் நிலையில் பூரணத்துவத்தை எய்த வேண்டும்.
Danglers,Fernand,Mercedes மூவரும் அவர்களால் இயன்ற அளவுக்கு திறமையினால் முன்னேறினர், பண்புகளால் அல்ல.
தூய்மையான பண்புகளினால் Dr,Thorne-ம், Mary-ம் சமூகத்தின் உச்ச நிலையை அடைந்தனர்.
அக்கடிதத்தை முழுவதுமாக ஆராய்ந்த பிறகு, அவளுக்கு டார்சியின் மீது எந்த வித கோபமும் எழாமல் இருப்பது சாத்தியமாகலாம்.
அவனது கோபம் சமீபத்தில் ஏற்பட்டது, அவளுடைய வன்மம் நீடிப்பது உண்மைதான்.
அவளுக்கு எதிராக எந்த கோபமும் எழக் கூடாது என்ற மனநிலையில்தான் அவன் ஆரம்பத்திலிருந்தே இருந்தான்.
காதல் அவனை அவ்வாறு மாற்றியது.
அவள் அவனிடம் பகுத்தறிவுடன் நடந்துகொள்கிறாள். பகுத்தறிவுக்கு அத்திறமை கிடையாது.
அவன் பேசும் விதம் எவருக்கும் எரிச்சலுண்டாக்கும்.
அவன் பதில் கேட்கவில்லை, எதிர்பார்க்கவும் இல்லை.
அவள் திருமண வேண்டுகோளை மறப்பதும், அவன் பதில் எதிர்பார்க்காமல் இருப்பதும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டவை.
ஒன்று மற்றதை சாத்தியமாக்குகிறது.
வேலை பூர்த்தியாக இரண்டுமே உதவுகின்றன.
மறப்பது அவளுடையது. அவனுடையது எதிர்பார்க்காமல் இருப்பது.
அவனுடைய வேண்டுகோளுக்குப் பிறகு அது தொடர்பான எந்த முன்னேற்றத்தையும் அவள் எதிர்பார்க்காததால், அவனாலும் பதிலை எதிர்பார்க்காமல் இருக்க முடிந்தது.
நேரான வேலையை முடிக்க இவை எதிர்மறையான உடன்பாடுகள்.
காலின்ஸின் இடைவிடாத பேச்சும், குறுக்கிடாத வண்ணம் ஷார்லெட் கேட்டுக் கொள்வதும், அவர்களது திருமணத்தைப் பூர்த்தி செய்தது.
லேடி லூகாசை, திருமதி பென்னட் எரிச்சலூட்டும்படி கேலி செய்வதும், அதை அவள் எதிர்வினை ஆற்றாமல் ஏற்றுக்கொண்டதும், ஷார்லெட்டின் திருமணத்தை சாத்தியமாக்கியது.
இருக்கும் ஆற்றலை வைத்துக் கொண்டு பல வழிகளில் வாழ்க்கை சாதிக்கிறது.
அகந்தை பகுத்தறிவாக மாற அறிவை ஒருங்கிணைப்பதுபோல், ஒரு வேலையைப் பூர்த்தி செய்வதற்காக, வாழ்வு சக்திகளை உடன்பாட்டுடன் இணைக்கிறது.
மனிதர்களின் பகுதிகளில் உள்ள அமைப்பை உருவாக்க பல உத்திகள் கையாளப்படுகின்றன, அவை — உடன்பாடுகள், ஒருங்கிணைப்பு, பிரிவினை, திரட்டுதல், சிருஷ்டி, பரிணாமம், சுமுகம், சமாதானம், ஒன்றை மட்டும் விட்டுவிட்டு மற்ற எல்லாவற்றையும் பிடித்துக் கொள்வது, கருத்தாக்கம், வரையறுத்தல், மறைதல் ஆகியவைகளாகும்.

98. “When she considered how unjustly she had condemned and upbraided him, her anger turned against herself.”
Anger, like all other human deficiencies, can never be justified.
Anger justifies itself if directed against the rightful object.
Directing anger against the rightful object is moving from the vital to the mental.
Anger moving from one to another can be shifting the prejudice.

Anger is ability to achieve.
She became anger when she first read the letter.
One becomes anger when the mental element totally disappears.
Mind comes into play not because it is there, but because we choose to exercise it.
There is soul in everyone but we usually exercise the vital or the mental and ignore the soul.
Facts make her rational.
Shame is a sensation that is born with the birth of a higher faculty.
Progress or social upward movement is to develop shame for what one is.
In that sense self-respect is an attitude of progress.
It is the greatest of resourcefulness of Man when he who is devoid of any potential for self-respect creates a movement successfully for self-respect.
This is an endowment of ego to thwart any change by itself offering to achieve it.
Mr. Bennet’s family is a conflict between shameless energy and cultured freedom.
Shameless energy organized around self is dynamic selfishness.
Dynamic selfishness can only destroy and never achieve a little bit in the context of culture or freedom.
What Elizabeth passed through is self-realisation through self-awareness.
At any moment Man can realize his Self.
His Self is the transcendent Self which becomes soul in the cosmos.
Sri Aurobindo’s description of the Self is it is without the sinews of energy, flaws of duality and scars of division.
Self is the Brahman in the universe.
The Absolute takes appropriate forms in the universe and all the planes below.
The Absolute becomes the central being, Manomaya Purusha, Pranamaya Purusha, Annamaya Purusha in Man and his Mind, life and body.
Elizabeth practices self-affirmation of the rational intellect over vital emotion.
Sri Aurobindo speaks of reversal at every stage of evolution and involution.
Here is one.
Normal human response to kindness or kind goodness is refusal, often refusal through anger.
To fully justify Man the goodness rarely comes without a touch of ego.
It is impossible for ego to let any characteristic act without itself claiming all the psychological result.
But Man acts through the spirit of contradiction negativism, ingratitude.
Sri Aurobindo speaks of the bottomless ingratitude of earth.
He asked from the highest the greatest boon of Supermind’s descent, not for the world, but for humanity.
Humanity may cover only the consciousness excluding its substance which is earth.
Earth is the Inconscient.
The Inconscient is the Superconscient in the reverse.
The Inconscient evolving becomes the subconscient.
The mud evolving becomes the human body.
Man alone can unite the subconscient with the Superconscient.
The animal is satisfied with a modicum.
The gods are lost in their splendour.
The Psychic is in Man only. It is the evolving soul. Without it, even the gods cannot participate in the evolution.
The gods must take birth as human beings if they want to reach the Absolute or evolve.
Tradition calls it a misfortune, karma, while it is evolutionary progress.
“எந்த அளவிற்கு அவள், அவனை அநியாயமாகக் கண்டித்தாளோ, கடிந்து கொண்டாளோ, அதை நினைக்கும் பொழுது அவளுடைய கோபம் அவள் மேலேயே திரும்பியது.”
எல்லா மனித குறைபாடுகளைப்போல், கோபத்தையும் நியாயப்படுத்தவே முடியாது.
சரியான விஷயத்திற்கு கோபம் வந்தால் அது தன்னையே நியாயப்படுத்திக் கொள்ளும்.
சரியான விஷயத்திற்கு கோபப்படுவது, உணர்விலிருந்து மனதிற்கு செல்வதாகும்.
ஒருவரிடமிருந்து கோபம் மற்றவரிடம் செல்வது, முன்முடிவையும் அதே போல் மாற்றுவதாக இருக்கலாம்.
கோபம் சாதிக்கும்.
கடிதத்தை முதலில் படிக்கும் பொழுது அவளே கோபமாக மாறினாள்.
மனம் முழுமையாக மறையும் பொழுது ஒருவர் கோபமாக மாறுவர்.
மனம் அங்கு இருப்பதாலேயே செயல்படுவதில்லை, ஆனால் நாம்தான் அதை செயல்பட வைக்கிறோம்.
எல்லோரிடமும் ஆன்மா இருக்கிறது, ஆனால் நாம் பொதுவாக உணர்வையோ அல்லது மனதையோ உபயோகப்படுத்திக் கொள்கிறோமே தவிர ஆன்மாவை புறக்கணித்து விடுகிறோம்.
உண்மைகள் அவளுக்கு பகுத்தறிவை தருகிறது.

உயர்ந்த திறன் உண்டாகும்பொழுது அவமானம் எனும் உணர்வு எழுகிறது.
தன்னை நினைத்து அவமானம் எழுவது சமூகம் மேல் நோக்கிப் போகும் இயக்கத்தினாலும் அல்லது முன்னேற்றத்தினாலும்தான்.
இக்கோணத்தில் சுய மரியாதை முன்னேற்றத்திற்குரிய மனப்பான்மையாகும்.
சுய மரியாதைக்கு எந்த வித சாத்தியமும் இல்லாதவன், வெற்றிகரமாக ஒரு இயக்கத்தை உற்பத்தி செய்து சுய மரியாதைக்கு வழி வகுப்பது, மனிதனின் மிகப் பெரிய சமயோசித வழியாகும்.
அகந்தை, எந்த மாறுதலையும் தடை செய்வதற்காக பொய்யான தோற்றத்தை உருவாக்கி, அங்கு தொடர்கிறது.
வெட்கங்கெட்ட சக்திக்கும் பண்பான சுதந்திரத்திற்கும் நடுவே இருக்கும் முரண்பாடே திரு பென்னட் குடும்பம் ஆகும்.
தன்னைச் சுற்றி முறைப்படுத்தப்படும் வெட்கங்கெட்ட சக்தி, ஆற்றல் வாய்ந்த சுயநலமாகும்.
நாகரிகம் அல்லது சுதந்திரம் போன்ற விஷயங்களில் ஆற்றல் வாய்ந்த சுயநலம் அழிக்க மட்டுமே செய்யும், ஒரு போதும் சிறிதளவு கூட சாதிக்காது.
சுய விழிப்புணர்ச்சியின் மூலம் சுய தெளிவை எலிசபெத் பெற்றாள்.
எந்தத் தருணத்திலும் மனிதன் தன்னுடைய சுயத்தை தெரிந்துகொள்ளலாம்.
அவனுடைய சுயம், பிரம்மத்தின் சுயம் ஆகும், இது பிரபஞ்சத்தின் ஆன்மாவாகிறது.
சக்தியின் பலம், இரட்டைகளின் குறைபாடு, பிரிவினையின் வடுக்கள் இவை எதுவும் இல்லாதது என்று ஸ்ரீ அரவிந்தர் ஆன்மாவை வர்ணிக்கிறார்
ஆன்மா பிரபஞ்சத்தில் இருக்கும் பிரம்மன்.
பிரபஞ்சத்திலும் அதன் கீழே இருக்கும் எல்லா நிலைகளிலும் பிரம்மம் பொருத்தமான தோற்றங்களை எடுக்கும்.
பிரம்மம் மையஜீவனாகவும், மனிதனிலும் அவனுடைய மனம், உயிர், மற்றும் உடலிலும், மனோமய புருஷன், பிராணமய புருஷன், அன்னமய புருஷனாக மாறுகிறது.
உணர்வின் உணர்ச்சிகளிலிருந்து விவேகமான அறிவுக்கு போவதற்குரிய சுய உறுதிப்பாட்டை எலிசபெத் பயில ஆரம்பித்தாள்.
சிருஷ்டி, பரிணாமம் இவற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் ஸ்ரீ அரவிந்தர் தலைகீழ் மாற்றத்தைப் பற்றி பேசுகிறார்.
இங்கு ஒன்றுள்ளது.
கருணைக்கும் அன்பான நல்ல தன்மைக்கும் மனிதனின் பொதுவான மறுமொழி மறுப்பாகும், பல சமயம் கோபத்துடன் கூடிய மறுப்பு.
மனிதனை முழுவதுமாக நியாயப்படுத்த நற்குணம் அகந்தையின் ஸ்பரிசம் இல்லாமல் வருவதில்லை.
எல்லா மனரீதியான பலனையும் அகந்தை மற்ற எந்த ஒரு குறிப்பான செயலுக்கும் அனுமதி அளிக்காது, தனக்கே உரிமை கொண்டாடும்.
முரண்பாடு, எதிர்மறை, நன்றியின்மை இவைகளின் ஆன்மா மூலம் மனிதன் செயல்படுகிறான்.
அறவே நன்றி இல்லாத பூமியைப் பற்றி ஸ்ரீ அரவிந்தர் பேசுகிறார்.
சத்திய ஜீவியம் கீழே இறங்கவேண்டும் என்கிற மிகப் பெரிய வரத்தை பகவான் உயர்ந்ததிடம் கேட்டார், உலகத்திற்காக அல்ல, மனித குலத்திற்காக.
மனித குலம் ஜீவியத்தை மட்டுமே உள் அடக்கலாம், அதனுடைய பொருளான பூமியை அல்ல.
பூமி பாதாளமாகும்.
பரமாத்மாவிற்கு எதிரானது பாதாளம்.
பாதாளம் பரிணாமத்தில் ஆழ்மனமாகிறது.
களிமண் மனித உடலாக உருவாகிறது.
ஆழ்மனத்தையும் பரமாத்மாவையும் மனிதனால் ஒன்று சேர்க்க முடியும்.
சிறிய அளவிலேயே விலங்குகள் திருப்தி அடைந்து விடும்.
தெய்வங்கள் அவர்களது சிறப்பில் ஆழ்ந்து விட்டனர்.
மனிதனில் மட்டும்தான் சைத்திய புருஷன் இருக்கிறான். அது வளரும் ஆன்மா. அது இல்லாமல் தெய்வங்களால் கூட பரிணாமத்தில் பங்கேற்க முடியாது.
பரிணாமத்தில் வெளி வர வேண்டுமென்றாலும், பிரம்மத்தை அடைய வேண்டுமென்றாலும் தெய்வங்களும் மனிதர்களாக பிறக்க வேண்டும்.
மரபு அதை துரதிர்ஷ்டம், கர்மா என்று கூறுகிறது, ஆனால் அது பரிணாம முன்னேற்றமாகும்.

99. "His disappointed feelings become an object of compassion".
Man values those who value him.
Attention is the most powerful principle in management.
Attention matures into affection, the most powerful principle in psychology.
Particularly in education, attention and affection acquire a high role.
Pay attention to the child, his education will have the best results.

Any subject to which he can cultivate affection will make him original.
All this belongs to the lower hemisphere as they are all based on selfish gain.
The higher method is based on selflessness or self-giving.
The lower method is by ascent, the higher method is by descent.
Darcy's love for her created gratitude in her.
His disappointment generated compassion in her.
This is the world in which everything is there. It is infinite.
All that Man has to do is to ask.
Presently what he gets is what he is asking for – Taste of ignorance.
The human choice is for ignorance.
Mother offers a human choice to become God.
We see Elizabeth vacillating.
Darcy never vacillates, after the initial 'tolerable'.
Vacillation is the process Mind chooses for growth.
There is vacillation as Mind has to decide on its various choices.
Intuition takes one look, takes one step and makes a permanent progress.
Understanding has before it innumerable alternatives.
Intuition is of the whole.
Understanding is of the part, the tiniest part.
Real-Idea is the whole.
Idea is a part.
Thought is a part of the idea.
Information goes to create a thought.
Information is data organized for use at some level.
The age of information validation by statistics begins from here.
Darcy started negatively, changed to positive appreciation, never changed after that.
He had the advantage of having no other distraction.
She was powerfully distracted by Wickham.
It is this distraction that helped her not develop expectation after his proposal.
Mr. Bennet after the wedding took refuge in the library and never once hoped to exercise himself beneficially in favour of the family.
His turning away from the family helped life achieve for him vastly.
Surely life gave him more than what he could have done for his family.
This is a 'method' of unconscious compulsion.
How can Mr. Bennet consciously give his family this benefit.
It is by uninterested detachment.
Detachment achieves more than attachment.
His detachment that is forced is the complement of her vehement attachment.
How can Mrs.Bennet offer conscious positive cooperation?
It is by complete detachment from society which she values most.
The complete detachment of the father and the mother is to practice doing the duty without any attachment to the fruits thereof, nishkamyakarma.
Dr. Thorne practised it and the results came to Mary and later to him also.
"ஏமாற்றமடைந்த அவனுடைய உணர்ச்சிகள் அனுதாபத்திற்கு உரியதாக மாறுகிறது."
தன்னை மதிப்பவர்களை மனிதன் மதிப்பான்.
கவனம் நிர்வாகத்தில் மிக சக்திவாய்ந்த கருத்தாகும்.
கவனம் அன்பாக முதிர்ச்சி அடைவது உளவியலில் மிகவும் சக்தி வாய்ந்த கருத்தாகும்.
குறிப்பாகக் கல்வியில் கவனம் மற்றும் அன்புக்கு உயர்ந்த பங்குண்டு.
குழந்தையிடம் கவனம் செலுத்தினால், அவனது கல்வி சிறப்பான பலனைத் தரும்.
எந்தப் பாடத்தில் அவன் ஈடுபாடு கொள்கிறானோ, அதில் அவன் முதலானவனாக விளங்குவான்.
இவை அனைத்தும் கீழ் நிலையைச் சேர்ந்தவை, ஏனெனில் இவை எல்லாம் சுயநல ஆதாயத்தின் அடிப்படையில் இருக்கின்றன.
சுயநலமற்று இருப்பதும் அல்லது சுய அர்ப்பணமும் உயர்ந்த முறையாகும்.
கீழிருந்து மேலே செல்வது தாழ்ந்த முறை, மேலிருந்து கீழே வருவது உயர்ந்த முறை.
டார்சியின் காதல் அவளிடம் நன்றி உணர்வை ஏற்படுத்தியது.
அவனுடைய ஏமாற்றம் அவளிடம் அனுதாபத்தை உண்டாக்கியது.

இந்த உலகத்தில் அனைத்தும் உள்ளன. அது எல்லையற்றது.
மனிதன் கேட்டால் மட்டும் போதும்.
தற்பொழுது அவன் கேட்பதே அவனுக்கு கிடைக்கிறது, இது அறியாமையின் ருசி.
மனித விருப்பம் அறியாமைக்குரியது.
தெய்வமாவதற்கு அன்னை மனிதனுக்கு வாய்ப்பை அளிக்கிறார்.
எலிசபெத் அலைபாய்வதை நாம் பார்க்கிறோம்.
ஆரம்பத்தில் 'பரவாயில்லை' என்ற பிறகு டார்சி ஒரு பொழுதும் சஞ்சலப்படுவதில்லை.
வளர்ச்சிக்கு, மனம் தேர்ந்தெடுக்கும் வழி சஞ்சலப்படுவது.
பல முடிவுகளை மனம் எடுக்கவேண்டி இருப்பதால் சஞ்சலம் எழுகிறது.
உள்ளுணர்வு ஒரே பார்வையில், ஒரே அடியில், நிரந்தர முன்னேற்றம் அடைகிறது.
பல்வேறு மாறுபட்டவைகளை புரிந்துகொள்ள வேண்டும்.
உள்ளுணர்வு முழுமைக்குரியது.
புரிதல் மிகச் சிறிய பகுதிக்குரியது.
சத்திய கருத்து முழுமையானது.
கருத்து பகுதியானது.
கருத்தின் ஒரு பகுதி எண்ணம் ஆகும்.
தகவல் எண்ணத்தை உற்பத்தி செய்கிறது.
ஏதாவது ஒரு நிலையில் உபயோகப்படுத்திக்கொள்ள முறைப்படுத்தப்பட்டிருக்கும் விவரங்களே தகவல்களாகும்.
புள்ளி விவரத்தால் தகவலை உறுதிப்படுத்தும் காலம் இங்கு ஆரம்பிக்கிறது.
எதிர்மறையாக ஆரம்பித்த டார்சி, நேர்மறையான பாராட்டை அளிக்கிறான், அதற்குப் பிறகு மாறவேயில்லை.
வேறு எந்த கவனச் சிதறலும் இல்லாதது அவனுக்குச் சாதகமாக இருந்தது.
விக்காமால் அவளுடைய கவனம் தீவிரமாக சிதறியது.
இந்த கவனச் சிதறல்தான் அவளுக்கு, அவனுடைய திருமண வேண்டுகோளிற்குப் பின் எந்த வித எதிர்பார்ப்பும் உருவாகாமல் இருக்க உதவியது.
திருமணத்திற்குப் பின் திரு பென்னட் நூலகத்தில் தஞ்சம் புகுந்தார், தன் குடும்பத்திற்கு பயனுள்ளவராக இருக்க முயற்சி எடுக்கும் எண்ணமே இல்லாதவராக இருந்தார்.
வாழ்க்கை பெரும் அளவில் அவருக்காகச் சாதிக்க, அவர் குடும்பத்தை கவனிக்காதது உதவி செய்தது.
அவரால் குடும்பத்திற்கு என்ன செய்திருக்க முடிந்திருக்குமோ, அதைவிட அதிகமாக வாழ்க்கை நிச்சயமாக அவருக்கு அளித்தது.
இது தன்னையறியாது நிர்பந்தப்படுத்தும் 'முறையாகும்'.
திரு பென்னட் எவ்வாறு தன்னினைவோடு இந்தப் பலனை தன் குடும்பத்திற்கு அளித்திருக்க முடியும்.
ஆர்வமற்ற பற்றற்ற நிலையால் முடிந்திருக்கும்.
பற்றுதலைவிட பற்றற்று இருப்பதே அதிகம் சாதிக்கும்.
அவளது தீவிர பற்றுதல், அவர் மீது திணிக்கப்பட்டுள்ள பற்றற்ற குணத்தை பூர்த்தி செய்கிறது.
திருமதி பென்னட் எவ்வாறு சுய உணர்வுடன் நேர்மறையான ஒத்துழைப்பை கொடுக்க முடியும்?
அவள் மிகவும் மதிக்கும் சமூகத்திலிருந்து முழுமையாக விலகியிருப்பதன் மூலம் அவளால் அளிக்க முடியும்.
முழுமையாகப் பற்றற்று இருப்பதற்கு, பலனை நினைக்காமல் கடமையைச் செய்வதையே தந்தையும் தாயாரும் பயில வேண்டும். இதற்குப் பெயர் நிஷ்காம்ய கர்மா எனப்படும்.
டாக்டர் தார்ன் இதை கடைப்பிடித்தார். பலன் மேரிக்கு கிடைத்தது, பிறகு அவருக்கும் கிடைத்தது.

100. "His attachment excited gratitude, his general character respect, but she could not approve of him, nor could she for a moment regret her refusal, or feel the slightest inclination ever to see him again".
In spite of gratitude and respect, she could not approve of him.
What makes one approve of another, a woman or man?
As character is behind Manners, there is the Man behind his character.
When two people meet, manners, words, matters, atmosphere do matter.
Beyond all this, one's inner being or personality readily reaches the other eliciting approval or the opposite.
That is the determinant which is justified variously.
She had not thus approved of him, but had gratitude and respect.
There was no basic compatibility between the two; she therefore disapproved.
For the same reason he approved of her in spite of the other aspects.
It is a point at which human choice is to be exercised by both.
He consciously exercised his choice in her favour.
She subconsciously exercised her choice in his favour.
In the rest of the story what is worked out is the difference between his consciousness and her subconscious.
We study it in the details of the story.

A course of choices and arguments are right if confirmed by the final outcome.
Authors are in dismay or in despair when the outcome is in stark opposition to a certain description. Then they say it is the irony of life or fate.
To see the logic of life to which there is no irony is our endeavour.
We find it a pity that after independence the Sikhs should ask to leave India.
It was quelled. Now in response to an event in another country there is a conflict in Punjab. It baffles the historian.
Apart from territorial integrity the major question India faced in 1947 was not the Hindu-Muslim difference. Behind that was the caste issue.
The ten year reservation in the constitution that still survives dealt with the issue of Harijans.
The issue of caste in general remains alive and today's Indian politics are based on it.
The civil war in USA was fought to free the slaves is true, but the deeper issue was the union.
Issues taken piecemeal like the Depression will resurface unless and until the root cause is tackled.
That Elizabeth was there at Hunsford when Darcy came and again at Pemberley she was there, are indicators of life we cannot afford to miss.
Unable to contain the embarrassment at finding her on his premises he took leave of her in a few minutes only to meet her again at a turning.
Those are facts that are a pointer in this direction.
To be able to explain events from subtlety, subconscious, subliminal, inner mind, causal plane, seven ignorances, complements, etc. in such a fashion that the outcome will be justified is our endeavour.
She feels gratitude, respect, but does not approve of him.
How is this explained in the light of their later marriage?
How can such an explanation be justified in terms of events, characters, social obligations, courtesies, temperament?
Logic of life that is consistently right through all the events of the story is what we are trying to arrive at.
Our own willingness to transform ourselves in the light of the events and character will enable us to do so.
"அவனுடைய அன்பு நன்றி உணர்ச்சியைத் தூண்டியது, அவனுடைய பொதுவான குணம் மரியாதையை அளித்தது, இருப்பினும் அவளால் அவனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை, அவனை நிராகரித்ததற்கு அவளால் ஒரு வினாடி கூட வருத்தப்பட முடியவில்லை அல்லது அவனை மறுபடியும் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் துளிகூட எழவில்லை."
அவன் மீது நன்றி இருந்தும், மரியாதை இருந்தும் அவளால் அவனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.
ஒரு பெண்ணோ அல்லது ஆணோ, எது ஒருவருக்கொருவரை ஏற்றுக்கொள்ள வைக்கிறது.
பழக்கத்தின் பின்னால் குணம் இருப்பதுபோல், அவனுடைய குணாதிசயத்தின் பின்னால் மனிதன் இருக்கிறான்.
இரண்டு நபர்கள் சந்தித்துக்கொள்ளும் பொழுது பழக்கங்கள், வார்த்தைகள், விஷயங்கள் மற்றும் சூழல் முக்கியம்.
இதற்கெல்லாம் அப்பாற்பட்டு ஒருவருடைய உள்ளலிருக்கும் ஜீவனோ அல்லது ஆளுமையோ, உடனடியாக மற்றவரை அடைந்து சம்மதத்தையோ அல்லது அதற்கு நேரெதிரானதையோ வரவழைக்கும்.
அது தான் நிர்ணயிக்கும், அது பலவிதமாக நியாயப்படுத்தப்படும்.
அவள் அவ்வாறு அவனை ஏற்றுக்கொள்ளவில்லை, ஆனால் நன்றி உணர்வும், மரியாதையும் இருந்தன.
அடிப்படையில் ஒத்துப் போக இருவரிடையே ஒன்றும் இல்லை, அதனால் அவள் ஏற்றுக்கொள்ளவில்லை.
இதே காரணத்திற்காகத்தான் மற்ற விஷயங்கள் இருந்தும், அவன் அவளை ஏற்றுக் கொண்டான்.
இந்த இடத்தில்தான் இருவரும் தங்களது முடிவை எடுக்க வேண்டும்.
அவன் நனவுபூர்வமாக அவனுடைய முடிவை அவளுக்குச் சாதகமாக எடுத்தான்.
அவள் ஆழ்மனதில் அவனுக்குச் சாதகமாக முடிவெடுத்தாள்.
மீதிக் கதையில், அவனுடைய ஜீவியத்திற்கும் அவளுடைய ஆழ் மனதிற்கும் இருந்த வித்தியாசமே கையாளப்படுகிறது.
கதையின் விவரங்களில் இதனை நாம் படிக்கிறோம்.
தேர்ந்தெடுப்பும், விவாதங்களும் சரியா என்பதை அதனுடைய முடிவு தெரிவித்து விடும்.
முடிவு, குறிப்பிட்ட விளக்கத்திற்கு முழுவதும் நேரெதிராக இருந்தால், கதாசிரியர்கள் மனக் குழப்பத்திலும் நம்பிக்கை குன்றியும் இருப்பர்.
இதுதான் வாழ்க்கையின் நியதி என்றும் விதி என்றும் கூறுவர்.
முரண்பாடு இல்லாத வாழ்வின் அறிவுபூர்வமான நிலையைப் பார்ப்பதே நமது முயற்சி.
சுதந்திரத்திற்குப் பின் சீக்கியர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது பரிதாபத்திற்குரியது என நாம் பார்க்கிறோம்.
அது அடக்கப்பட்டது. இப்பொழுது வேறொரு நாட்டில் நடக்கும் ஒரு நிகழ்ச்சிக்கு பஞ்சாபில் முரண்பாடு எழுகிறது. சரித்திர ஆசிரியர்களை இது குழப்பமடையச் செய்கிறது.

எல்லை ஒருமைப்பாட்டிற்கும் மேலாக 1947ல் இந்தியா எதிர்கொண்ட பெரிய கேள்வி ஹிந்து- முஸ்லிம் வேறுபாடு அல்ல. இதற்குப் பின்னால் இருந்தது ஜாதிப் பிரச்சினை .
சட்ட அமைப்பில் ஏற்படுத்திய ஹரிஜனர்களுடைய விஷயத்தை கையாளும் பத்து வருட இட ஒதுக்கீடு, இன்னமும் உள்ளது.
பொதுவாக ஜாதிப் பிரச்சினை இன்னமும் உயிருடன் உள்ளது, இன்றைய இந்திய அரசியல் அதன் அடிப்படையில்தான் அமைந்துள்ளது.
அடிமைத்தனத்தை ஒழிக்கவே அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நிகழ்ந்தது என்பது உண்மை, ஆனால் இணைதலே முக்கிய விஷயமாக இருந்தது.
பொருளாதார மந்தநிலை போன்ற பிரச்சினைகளை சிறிது சிறிதாகத் தீர்க்காமல், அதனுடைய காரணத்தை வேரிலேயே களைந்தாலன்றி, அவை மீண்டும் வெளி வரும்.
டார்சி வந்த பொழுது எலிசபெத் ஹன்ஸ்போர்டில் இருந்தாள் மீண்டும் பெம்பர்லியிலும் இருந்தாள், இவையெல்லாம் வாழ்வின் அறிகுறிகள், நாம் இதனை பார்க்காமல் இருக்க முடியாது.
அவளை தன்னுடைய இடத்தில் பார்த்த சங்கடத்தை எதிர்கொள்ள முடியாமல் சில நிமிடங்களில் அவளிடமிருந்து விடை பெற்ற அவன், மீண்டும் ஒரு வளைவில் அவளை சந்தித்தான்.
அவை எல்லாமே அறிகுறிகள்தாம்.
நிகழ்ச்சிகளை சூட்சுமம், ஆழ்மனம், அடிமனம், உள் மனம், காரண உலகம், ஏழு அறியாமைகள், உடன்பாடுகள் என்ற கோணங்களில் பலன்களை நியாயப்படுத்தும் வகையில் விவரிப்பது நமது முயற்சியாகும்
நன்றி உணர்வும் மரியாதையும் இருந்தது, ஆனாலும் அவனை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.
பின்னால் திருமணம் நடப்பதை வைத்துப் பார்க்கும் பொழுது, எவ்வாறு இதை விளக்க முடியும்?
நிகழ்ச்சிகள், கதாபாத்திரங்கள், சமூகக் கடமைகள், நற்பண்புகள், மனவுணர்வுகள், இவற்றின் அடிப்படையில் எவ்வாறு அது போன்ற விளக்கத்தை நியாயப்படுத்த முடியும்.
கதையின் எல்லா நிகழ்ச்சிகளிலும் தொடர்ந்து சரியாக இருக்கும் வாழ்வின் தர்க்கத்தை நாம் விளக்க முயல்கிறோம்.
நிகழ்ச்சிகளையும், கதாபாத்திரங்களையும் முன் வைத்து நம்மை திருவுருமாற்றிக்கொள்ள முன் வந்தால், நம்மால் அதை செய்ய முடியும்.

101. "They were hopeless of remedy".

They do defy any remedy, but unconsciously Elizabeth stumbled on the remedy – to correct herself inwardly.
Elizabeth is unaware of the inner outer correspondence.
But she had the sincerity to recognize the truth of his criticism which he unsparingly expressed.
Her sincerity helped her to correct herself and the situation was largely remedied after worsening.
Any deep-seated malady when disturbed tends to grow even if it is going to be wiped out.
Absence of knowledge is no bar to solve the problem if the right method is there.
Whenever sadhaks raised an important question, Sri Aurobindo used to say he must read The Life Divine.
In the Synthesis He gives the strategies to do yoga.
He does not dwell on the philosophic knowledge there as He does in The Life Divine.
He who wants to do yoga can do so by reading Synthesis.
The philosophy is most fully described in The Life Divine.
Shed ego; find the soul of Nature, human soul is upgraded into divine soul is the summary statement of yoga.
Like the Vakil's clerk or the nurse, it is enough to know what to do.
A lawyer or doctor who knows the root causes, the various expressions of the disease or case can take and handle them.
The knowledge given in the Synthesis is not incomplete.
It is a knowledge given from the point of view of the process.
Philosophically explained process is comprehensive and powerful.
To have the right clue in full from the strategies one must have a subtle grasp of physical realities.
No Election Commissioner can turn into a successful politician just because he knows every nook and corner of election rules.
Lydia and Kitty do not admit of any remedy from any sense.
But any problem however irremediable from the world's point of view is remediable from the inner point of view.
Mr. Bennet's family, Elizabeth's inner change, the change in the family fortunes is a clear illustration of inner outer correspondence.
She not only sees the problem, but sees how it is energized.
What can a sister do against the encouragement of a mother.
Kitty cried that she was not invited to Brighton.
Surely she was lucky to escape elopement.
Her absence of dynamism saved her.

Elopement is for those who are adventurous in the last degree.
Our approach explains the elopement.
It must also be able to explain how Kitty escaped it.
Mrs. Bennet's energy is behind Lydia and wants her to enjoy.
It is not so with Kitty. She has no sympathy with Kitty.
Kitty is not the last child!
"அவர்களுக்குத் தீர்வே இல்லை."
எந்தத் தீர்வுக்கும் அவர்கள் பணிவதில்லை, ஆனால் எலிசபெத் அகத்தில் தன்னை சரி செய்து கொள்வதன் மூலம் தன்னை அறியாமலேயே தீர்வை அடைகிறாள்.
அகம், புறம் தொடர்பு எலிசபெத் அறியாதது.
கடுமையாக வெளிப்படுத்திய அவனது விமரிசனத்தில் இருந்த உண்மையைப் புரிந்துகொள்ளும் அளவிற்கு அவளிடம் நேர்மை இருந்தது.
அவளுடைய நேர்மை அவளை திருத்திக்கொள்ள உதவி புரிந்தது, நிலைமை மிகவும் மோசமாக மாறிய பின்பும் அது பெரும் அளவில் சரி செய்யப்பட்டது.
ஆழமான எந்த பிரச்சினையும் பின்னால் அது முழுவதுமாக தீர்க்கப்பட இருக்கும்பொழுது தொந்தரவு செய்யப்பட்டால் வளரும்.
ஒரு பிரச்சினையைத் தீர்க்க அதைப் பற்றிய ஞானம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, சரியான முறை இருந்தால் போதும்.
சாதகர்கள் ஒரு முக்கியமான கேள்வியை எழுப்பும்போதெல்லாம் அவர்களை, தி லைப் டிவைன் நூலை கண்டிப்பாக படிக்குமாறு ஸ்ரீஅரவிந்தர் கூறுவார்.
யோகம் செய்யக்கூடிய உத்திகளை சின்தசிஸ்-ல் பகவான் விளக்கியுள்ளார்.
தி லைப் டிவைன்-ல் தத்துவ ஞானத்தைப் பற்றி பகவான் விளக்குவதுபோல் அதில் இல்லை.
யோகம் செய்ய விரும்புவர்கள் சின்தசிஸ்-ஐ படிக்கலாம்.
தி லைப் டிவைன்-ல் தத்துவம் முழுமையாக விளக்கப்பட்டுள்ளது.
அகந்தையை கை விட வேண்டும், இயற்கையின் ஆன்மாவைக் கண்டு பிடிக்க வேண்டும், மனித ஆன்மா தெய்வீக ஆன்மாவாக உயர்த்தப்பட்டுள்ளது, இவையே யோகத்தின் சுருக்கம் ஆகும்.
வக்கீல் குமாஸ்தா அல்லது செவிலியருக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரிவது போல் தெரிந்திருந்தால் போதும்.
ஒரு வக்கீலுக்கோ அல்லது மருத்துவருக்கோ, வழக்கைப் பற்றியும் அல்லது நோயைப் பற்றியும் அதனுடைய மூல காரணம், பல வெளிப்பாடுகள் இவைகளைப் பற்றி தெரிந்திருப்பதால், அவர்களால் அதனை கையாள முடியும்.
சின்தசிஸ்-ல் கொடுக்கப்பட்டிருக்கும் ஞானம் முழுமையானது.
முறையின் கண்ணோட்டத்தில் இந்த ஞானம் அளிக்கப்பட்டுள்ளது.
தத்துவரீதியாக விளக்கப்பட்டிருக்கும் முறை முழுமையானது, வலிமையானது.
உத்திகளிடமிருந்து சரியான குறிப்பு முழுவதுமாகக் கிடைக்க, ஜட உண்மைகளை சூட்சுமமாகப் புரிந்து கொள்ளும் திறன் வேண்டும்.
தேர்தல் விதிகளைப் பற்றி எல்லா விஷயங்களும் பூரணமாகத் தெரியும் என்பதால், எந்த தேர்தல் ஆணையரும் வெற்றிகரமான அரசியல்வாதியாக வர முடியாது.
எந்த விதமான எந்த தீர்வுக்கும் லிடியாவும் கிட்டியும் இணங்குவதில்லை.
உலகத்தின் கண்ணோட்டத்தில் தீர்க்க முடியாது என்கிற எந்த பிரச்சினையையும் அகத்தின் கண்ணோட்டத்தால் தீர்க்க முடியும்.
திரு பென்னட் குடும்பம், எலிசபெத்தின் அக மாற்றம், குடும்ப அதிர்ஷ்டத்தில் மாற்றம், இவை அகம்-புறம் தொடர்பினை தெளிவாக விளக்குகின்றன.
அவள் பிரச்சினையைப் பார்ப்பதோடு மட்டுமல்லாமல், அது எவ்வாறு வலுவடைகிறது என்பதையும் பார்க்கிறாள்.
தாயாருடைய ஊக்கத்திற்கு எதிராக ஒரு சகோதரியால் என்ன செய்ய முடியும்?
பிரைட்டனுக்குத் தன்னை அழைக்கவில்லை என்று கிட்டி அழுதாள்.
அவள் ஓடிப் போவதிலிருந்து தப்பித்துக் கொண்டது நிச்சயமாக அதிர்ஷ்டம்தான்.
அவளிடம் தீவிரம் இல்லாதது அவளைக் காப்பாற்றியது.
ஓடிப்போவது என்பது துணிவான செயலை உச்ச கட்டத்தில் செய்ய விரும்புவருக்கு உரியதாகும்.
ஓடிப்போவதை நமது அணுகுமுறை விளக்குகிறது.
இதிலிருந்து கிட்டி எவ்வாறு தப்பித்துக் கொண்டாள் என்பதையும் இதனால் விளக்க முடியும்.
லிடியாவிடம் வேலை செய்வது திருமதி பென்னட்டின் சக்தி, அவள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றும் ஆசைப்படுகிறாள்.
கிட்டியிடம் அவளுக்கு எந்த இரக்கமும் இல்லை.
கிட்டி கடைசி குழந்தை அல்ல!

102. "Her father would never exert himself to control the wild giddiness of her youngest sisters".

Retarded children are beyond any social remedy.

Kitty and Lydia were incapable of mental development, even in the opposite direction of retardation.

As they are physically formed they are considered eligible social members.

Retardation is a kind of mental malformation.

These girls were wild and giddy.

It is a vital malformation unnoticed by the medical talent.

Intelligence and wilful ignorance in combination are capable of producing many types, of which one is wild giddy heads.

It admits of no remedy -- medical, cultural, domestic, or educational.

These girls were impervious to cultural, educational influences.

Most probably they would drop out of school in a year or two.

They can be severely punished and disciplined which might produce a controlled specimen marketable in the marriage market, a female version of Mr. Hurst.

They would not submit to a governess in the presence of an indulging mother.

Whether any improvement could have been effected is doubtful.

Hard cruel discipline will tame their wildness.

I do not know whether there were such schools for girls.

Boys were disciplined and tamed and they submitted.

The two elder sisters were a boon.

Their kindness was ineffective. Neither of them could be brutal.

She who needed the discipline was the mother, a wild animal herself.

That two daughters escaped the baneful influences of the mother is a wonder.

Fathers in similar situations walking out of the house one day, is not unheard of.

Men who create impossible situations disappear from the family, though it is rare.

Mr. Bennet disappeared into the library.

They are brainless girls, but such brains were made dynamic.

Running away from the family might be normal impulses to such girls.

It is true Mr. Bennet did not try at all to remedy the bad situation even once. It got worse.

Mrs. Bennet saw nothing wrong with her situation.

A temperament like hers would not stop if the external conditions did not stop her.

Even after a breakdown she was not stopped.

Maybe she would have submitted to cruel physical punishment.

She was too many for Mr. Bennet.

Throughout the story she was left untouched by outer events.

Her problem was not discipline; she was shameless.

No conceivable method can be devised to create a sense of shame in her.

Taking all situations into account, Lydia's running away cleared the atmosphere after a fashion.

There was no further scope for repetition, now that Kitty had the opportunity of better society.

Truly it was a situation of human helplessness, one of despair.

Mother can save a devotee from such a tragedy.

Here life plays that role of beneficent cruelty.

"அவளுடைய இளைய சகோதரிகளின் பெரும் அற்பத்தனமான செயல்களை கண்டிக்க அவளுடைய தந்தை எந்த வித முயற்சியும் எடுப்பதில்லை."

வளர்ச்சி குன்றிய குழந்தைகள் எந்த சமூக உதவிக்கும் அப்பாற்பட்டவர்கள்.

கிட்டிக்கும் லிடியாவுக்கும் மன வளர்ச்சியை முன்னேற்றும் திறனும் இல்லை, அல்லது மனம் குன்றிய நிலைக்கு நேரெதிர் திசையில் வளர்ச்சியை கொண்டு வரும் திறனும் இல்லை.

அவர்கள் மனிதர்களாக இருப்பதால், சமூக அங்கத்தினராக இருப்பதற்கு தகுதி வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

வளர்ச்சி இன்றி இருப்பது மனத்தின் குறைபாடு ஆகும்.

இந்த பெண்கள் துஷ்டத்தனமாகவும் அற்பத்தனமாகவும் இருந்தனர்.

மருத்துவம் அறியாத உணர்வின் குறைபாடு இது.

புத்திசாலித்தனமும், விரும்பி ஏற்றுக்கொண்டிருக்கும் அறியாமையும் சேர்ந்து கொண்டால், பல விதமான குணங்களை அது உற்பத்தி செய்யும், அதில் ஒன்று பெரும் அற்பத்தனம்.

மருத்துவம், பண்பாடு, குடும்பம் அல்லது கல்வி—இதில் எந்த தீர்வினையும் அது ஏற்றுக்கொள்ளாது.

இந்த பெண்களை பண்பாடும் கல்வியும் எந்த விதத்திலும் பாதிக்காது.

இவர்கள் பெரும்பாலும் பள்ளியிலிருந்து ஓரிரு வருடங்களில் வெளியேறி விடுவார்கள்.
அவர்களுக்கு கடுமையாக தண்டனை அளிக்கலாம், கட்டுப்பாட்டை கொண்டு வரலாம், இதன் மூலம் அவர்கள் திரு ஹர்ஸ்ட்டின் பெண்ணுருவம் போல், திருமணத்திற்கு தகுதி உடையவர்களாக மாறலாம்.
சலுகை அளிக்கும் தாயார் இருக்கும் பொழுது ஒரு ஆசிரியைக்கு அவர்கள் பணிய மாட்டார்கள்.
ஏதாவது முன்னேற்றம் கிடைத்திருக்குமா என்பது சந்தேகம்தான்.
கடுமையான கட்டுப்பாடு அவர்களுடைய துஷ்டத்தனத்தை அடக்கும்.
பெண்களுக்கு இது போன்ற பள்ளிகள் இருந்தனவா என்று எனக்குத் தெரியவில்லை.
ஆண்கள் கட்டுப்படுத்தப்பட்டனர், அடக்கப்பட்டனர், அவர்கள் பணிந்தனர்.
முதல் இரண்டு சகோதரிகளும் ஒரு வரப்பிரசாதம்.
அவர்களுடைய அன்பு பயனற்று இருந்தது. இருவராலும் கடுமையாக இருக்க முடியாது.
காட்டு விலங்கு போலிருந்த தாயாருக்குத்தான் கட்டுப்பாடு தேவையாக இருந்தது.
அழிவைத் தரத்தக்க தாயாரின் தாக்கத்திலிருந்து அந்த இரண்டு பெண்கள் தப்பித்துக் கொண்டது ஆச்சரியம்தான்.
இது போன்ற நிலைமைகளில், ஒரு நாள் தகப்பனார் வீட்டை விட்டு வெளியேறுவது என்பது கேள்விப்படாதது இல்லை.
சாத்தியமற்ற சந்தர்ப்பத்தை உருவாக்கும் ஆண் குடும்பத்தை விட்டு மறைந்து போய்விடுகிறான், இது அரிதாக நடைபெறும்.
திரு பென்னட் நூலகத்தில் தஞ்சம் புகுந்தார்.
அவர்கள் அறிவற்ற பெண்கள், ஆனால் அது போன்றவர்கள் சுறுசுறுப்பானவர்களாக மாற்றப்பட்டனர்.
அது போன்ற பெண்களுக்கு வீட்டை விட்டு ஓடிப்போவது சாதாரணமான விஷயமாக இருக்கலாம்.
மோசமான நிலைமையை சரி செய்ய திரு பென்னட் ஒரு முறைகூட முயலவில்லை என்பது உண்மை.
நிலைமை இன்னும் மோசமாக மாறியது.
திருமதி பென்னெட், தான் இருந்த நிலையில் எந்த தவறையும் காணவில்லை.
வெளிசூழல் அவளை தடுக்காவிட்டால் அவளுக்கு இருக்கும் மனோபாவம் மாறாது.
நிலைகுலைவு ஏற்பட்ட பின்பும் அவளை தடுக்க முடியவில்லை.
மோசமான உடல்ரீதியான தண்டனைக்கு அவள் உட்பட்டிருப்பாள்.
திரு பென்னெட்டிற்கு, அவள் மிகையாக இருந்தாள்.
கதை முழுவதிலும் அவள் வெளி நிகழ்வுகளால் பாதிக்கப்படாமல் இருக்கிறாள்.
அவளுடைய பிரச்சினை ஒழுக்கம் அல்ல; அவள் வெட்கமற்றவள்.
நினைத்துப் பார்க்கக்கூடிய எந்த ஒரு முறையாலும் அவளிடம் வெட்க உணர்ச்சியை ஏற்படுத்த முடியாது.
எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு பார்த்தால், லிடியாவின் ஓடிப்போவது சூழலை ஒரு விதமாக சரி செய்தது.
கிட்டிக்கு மேலும் நல்ல சமூகத்தில் இருக்கக்கூடிய வாய்ப்பு தற்பொழுது உள்ளதால், அது போன்ற சம்பவம் மீண்டும் நடைபெறுவதற்கான சந்தர்ப்பம் இல்லை.
நிச்சயமாக, அது ஒரு மனிதனின் உதவியற்ற நிலை, நம்பிக்கையற்ற நிலை.
இது போன்ற ஒரு துன்பத்திலிருந்து அன்னையால் ஒரு அன்பரை காப்பாற்ற முடியும்.
இங்கு வாழ்க்கை நன்மை செய்கிறது, ஆனால் அது கொடுமையாகப்படுகிறது.

103. "Her mother was entirely insensible of the evil".
What is evil to her is not evil to her mother.
Her mother is beneath evil.
She was a mass of flesh well formed without a Mind.
God is in love with Man; Man is in love with himself.
Selfishness is infinite.
God awaits Man to exhaust his selfishness and turn out of selflessness.
Infinity of selfishness refuses to exhaust itself.
At any moment it can awake into self-giving.
It is spiritual awakening.
Spirit coming into its own defies its laws.
By defying its own laws the finite becomes the infinite.
Man becoming God by his choice is the human choice.
Mrs. Bennet can become god not a woman.
She is a woman of laces and parties.
She is not the woman, the mother.
She could be a wife within the marriage.
In no other sense could she qualify as a mother or wife or even woman.
In her own daughters she loves not womanliness.

She loves the animal in the Man and the Woman.
She is vulgar, but not malicious or venomous.
She is a vulgar clod in its brute insensitivity.
She has a sense of wonder at anything society admires.
She knows not what to admire till others pronounce on it.
Not only is Lydia the last child, but she is more like her in her animality.
She is one who feels the privilege of being a bundle of flesh.
She is a well fed animal, in robust good health.
To be entirely insensitive is a great endowment.
One in Samadhi is physically insensitive.
Mrs. Bennet is in the Samadhi of animal fullness.
She brought herself to declare that she would not mind his death if it was not for the entail.
He was aghast at seeing the evolutionary reality of the bottomless ingratitude of the earth.
In India where the domination of the male is total, in spite of her total dependence on the Man, the phenomenon of extraordinary release of excessive energy at the death of the Man is known to be universal.
Man is superfluous to woman biologically. She lives for her children.
The widow pension releases the woman even from that thralldom.
A bloom visits her on his death.
As these are social, economic, psychological realities, there is also the evolutionary reality of Man's need to protect her children growing up.
The grown up children that earn simultaneously releases her from the economic and evolutionary realities and brings the reality of psychological freedom to the fore.
She does not have the cultural restraint not to speak it out to him.
The enormous efforts before the marriage for trapping the Man are so bitter that there is a vengeance in speaking it out to his hearing and understanding.
Her mother was a great specimen who was a vital physical organism whose social sensibilities were so perfected that they were all to her.
Her resentment at Elizabeth not being an animal, being cultured was seen at her joy at the thought of marrying Collins, a male animal.
"அவளுடைய தாயாருக்கு, தீமையைப் பற்றி முற்றிலுமாகத் தெரியவில்லை."
அவளுக்குத் தீமையாகப்பட்டது தாயாருக்குத் தீமையாகப்படவில்லை.
அவளது தாயார் தீமைக்கும் கீழே இருக்கிறாள்.
அவள் மனம் வளர்ந்திராத வெறும் உடலாலானவள்.
தெய்வம் மனிதனை விரும்புகிறது; மனிதன் தன்னையே விரும்புகிறான்.
சுயநலம் அளவற்றது.
மனிதன் தன் சுயநலத்தை முழுவதுமாகத் தீர்த்துவிட்ட பிறகு, சுயநலமற்றவனாக மாற தெய்வம் காத்துக் கொண்டிருக்கிறது.
சுயநலத்தின் அளவற்ற தன்மை தன்னைத் தீர்த்துக்கொள்ள மறுக்கிறது.
எந்தத் தருணத்திலும் அது சுய அர்ப்பணமாக விழித்துக் கொள்ளலாம்.
அது ஆன்மீக விழிப்பாகும்.
ஆன்மா சுயமாக வரும்பொழுது அதனுடைய சட்டங்களை தானே மீறுகிறது.
அதனுடைய சட்டங்களையே மீறி கண்டத்தை அகண்டமாக்குகிறது.
மனிதன் தன்னுடைய தேர்ந்தெடுத்தல் மூலம் தெய்வமாவது, மனித விருப்பமாகும்.
திருமதி பென்னட் தெய்வமாகலாம், பெண்மணியாக மாற முடியாது.
அலங்காரத்திற்கும் விருந்துகளுக்கும் உரிய பெண்மணி அவள்.
அவள் பெண் அல்ல, தாயார்.
திருமண அமைப்புக்குள் அவள் மனைவியாக இருக்கலாம்.
வேறு எந்த விதத்திலும் அவள் தாயாராகவோ, மனைவியாகவோ அல்லது பெண்மணியாகவோகூட இருக்க முடியாது.
தன்னுடைய சொந்த குழந்தைகளின் பெண்மையை அவள் இரசிப்பதில்லை.
ஆண், பெண், இவர்களுக்குள் இருக்கும் விலங்கை அவள் விரும்புகிறாள்.
அவள் அநாகரிகமானவளாக இருக்கிறாள் ஆனால் தீயவளோ அல்லது கடுமையானவளோ அல்ல.
அவள் கீழான குணமுடையவள், அறிவற்றவள், நாகரிகமற்றவள், சொரணையற்றவள்.
சமூகம் போற்றும் எல்லாவற்றையும் அவள் ஆச்சரியத்துடன் பார்ப்பாள்.
மற்றவர்கள் கூறினால்தான் அவளுக்கு எதைப் பாராட்ட வேண்டும் என்று தெரியும்.
லிடியா கடைசி குழந்தை மட்டுமல்ல, அவளைப் போல் விலங்குணர்வும் உடையவளாக இருக்கிறாள்.

வெறும் உடலாலானவளாக இருப்பதற்கு பெருமைப்படுகிறாள்.
நன்கு ஆகாரம் அளிக்கப்பட்ட ஆரோக்கியமுள்ள விலங்கு போன்றவள் அவள்.
முழுவதுமாக சொரணையற்று இருப்பது பெரிய திறன் ஆகும்.
சமாதியில் இருப்பவர் உடலால் உணர்ச்சியற்று இருப்பார்.
முழு விலங்குத் தன்மையுடன் இருக்கும் சமாதி நிலையில் திருமதி பென்னட் இருக்கிறாள்.
அவர் பெயரில் சொத்து இல்லாமல் இருந்திருந்தால் அவருடைய மரணத்தையும் பொருட்படுத்தாமல் இருக்க முடியும் என்று கூறுகிறாள்.
பரிணாமத்தின் உண்மையான, இப்பூமியில் இருக்கும் அளவில்லாத நன்றிக்கெட்டத்தனத்தை பார்த்து, அவர் அதிர்ச்சி அடைகிறார்.
ஆணின் ஆதிக்கம் முழுமையாக இருக்கும் இந்தியாவில், ஆணை முழுமையாக சார்ந்து பெண் இருந்தாலும், ஆண் இறக்கும்பொழுது அதிகப்படியான சக்தி அளவுகடந்து விடுவிக்கப்படும் நிகழ்வு உலகளாவியது.
உடல்ரீதியாக ஆண் பெண்ணிற்குத் தேவையற்றவன். அவள் குழந்தைகளுக்காக வாழ்கிறாள்.
அந்த அடிமைத்தனத்திலிருந்து விதவைகள் ஓய்வூதியம் பெண்களை விடுவிக்கிறது.
அவனுடைய இறப்புக்குப் பின் அவளுக்கு மலர்ச்சி வருகிறது.
இவையெல்லாம் சமூக, பொருளாதார, மனரீதியான உண்மைகளாக இருப்பதால், அவளுடைய குழந்தைகளை காப்பாற்றும் பொறுப்பு பரிணாம உண்மையாக ஆணுக்கு இருக்கிறது.
குழந்தைகள் வளர்ந்து சம்பாதிக்கும்போது பொருளாதார, பரிணாம உண்மைகளிலிருந்து அவளை விடுவித்து, மனரீதியான சுதந்திரத்தை முன்னணிக்கு கொண்டு வருவார்கள்.
அவரிடம் இதைப்பற்றி வெளிப்படையாகப் பேசக்கூடாது என்கிற நாகரிகம் அவளுக்கு இல்லை.
திருமணத்திற்கு ஆணை தேர்ந்தெடுப்பதில் இருக்கும் பெரிய முயற்சியில் ஏற்படும் கசப்பு, ஆணுக்கு கேட்க வேண்டும் என்றும், புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்கும் இவ்வாறு வன்மத்துடன் பேச வைக்கிறது.
உணர்வின் உடலாலான ஜீவனின் சிறந்த உதாரணம் அவளுடைய தாயார், அவளுடைய சமூக அறிவு பூரணமாக இருந்தது, அதுவே அவளுக்கு எல்லாமுமாக இருந்தது.
விலங்குணர்வு இல்லாமல் நாகரிகம் மிகுந்தவளாக எலிசபெத் இருப்பதால் தாயாரின் கோபம், ஆண் விலங்கான காலின்ஸை அவள் திருமணம் செய்து கொள்வாள் என்ற கற்பனையிலேயே சந்தோஷமடைந்ததைப் பார்க்கலாம்.

104.“Lydia self-willed and careless was ignorant, idle, vain”.
She has set at naught the social etiquette of an unmarried daughter not being out.
The rule with Mrs. Bennet was to do whatever she could.
She defied the society whose approval she sought in long sleeves.
At the age of fifteen a girl is of age.
Around thirteen a girl’s body matures into that of a woman.
Elizabeth called it the trying age.
The physical will at this point becomes the psychological self-will.
Ignorance strengthens that will.
Idleness energises it.
Vanity gives it a flair.
Mr. Bennet’s social freedom out of incapacity brought the girls into their own.
She had nothing to care for, under the dictum of her mother girls of young age enjoy.
I wonder what is the source of that wisdom, if it is not her own physical urges.
That part of life is the non-social biological existence which Jane Austen knew well, making her a genius.
He was indolent.
Working on land, Man grows dull.
Farming is only for a part of the year, for the rest he has to sit at home where inaction is cultivated into laziness tending towards a cultural relish of it in indolence.
That is in a nation of work-ethic.
In India where the Sannyasi who sits unmoving for long was the ideal, one prides on being lazy, as it is the social version of spiritual Samadhi.
Europeans are proud of being busy.
For the American a dynamic life is the ideal.
The Indian loves not to move.
Man or woman is a complex mixture of several urges and motives essentially differing and at times in conflict.
Shakespeare rose to greatness as he captured these realities in poetry.
He knew love is at first sight.
He called frailty woman.
The infinity in woman culturing itself into change, he said, knows no diminution with age.

To see the age defying infinity when it seeks to formulate itself into charm is, of course, genius.
His genius is uniformly at a high level and never flags.
Jane Austen wrote humdrum novels after Pride and Prejudice where she exhausted her genius.
Her genius came of age at the moment of biological maturity.
No wonder she could not marry.
All her energies were focused in her Mind, a plane unrelated to marriage.
She knew of the charm of falsehood.
She valued herself and knew the cherished security in aristocratic eminence.
Elizabeth was herself distantly reflected.
Her family living on £ 600 knew no poverty.
Perhaps she grew in utter freedom.
"தன் இஷ்டம் போல் அசட்டையாக இருந்த லிடியா அறியாமை, சோம்பல், தற்பெருமை உடையவளாக இருந்தாள்."
திருமணமாகாத பெண்கள் வெளியே கிளம்பக்கூடாது எனும் சமூகப் பண்பாட்டை அவள் கடைப்பிடிக்கவில்லை.
முடிவதை எல்லாம் செய்வதே திருமதி பென்னட்டின் சட்டம்.
நவநாகரிகத்தில் மட்டும் சமூகத்தை ஏற்றுக்கொண்ட அவள், மற்ற விஷயங்களில் சமூகத்தை எதிர்த்து நின்றாள்.
பதினைந்து வயதில் பெண் முதிர்ச்சி அடைந்து விடுகிறாள்.
பதிமூன்று வயதில் பெண்ணின் உடல் பெண்மணியின் முதிர்ச்சியைப் பெறுகிறது.
எலிசபெத் அதை சோதனைக்குரிய காலம் என்றாள்.
இந்த இடத்தில் ஜடஉறுதி மனத்தின் சுயஉறுதியாக மாறுகிறது.
அந்த உறுதியை அறியாமை பலப்படுத்துகிறது.
சோம்பேறித்தனம் அதற்குச் சக்தி அளிக்கிறது.
தற்பெருமை அதற்கு இயல்பான திறனை அளிக்கிறது.
இயலாமையினால் திரு பென்னட் கொடுத்த சமூக சுதந்திரம் பெண்களை சுயமாக இருக்கும்படி வளர்த்தது.
அவளுக்குக் கவலைப்பட ஒன்றுமில்லை, அவளுடைய தாயாரின் ஆணைக்கு கீழ் இளம் பெண்கள் சந்தோஷமாக இருப்பார்கள்.
அந்த விவேகத்தின் மூலகாரணம் அவளுடைய உடலின் உந்துதலாக இல்லாத பட்சத்தில், என்னவாக இருக்கும் என்று ஆச்சரியமாக இருக்கிறது.
வாழ்வின் அந்தப் பகுதி சமூகத்தை சாராமல், உடல்ரீதியாக வாழ்வது என்று ஜேன் ஆஸ்டினுக்கு நன்கு தெரிந்திருந்ததால், அது அவளை ஒரு மேதை ஆக்கியது.
அவர் சோம்பேறியாக இருந்தார்.
நிலத்தில் வேலை செய்வது மனிதனை மந்தமாக்கும்.
வருடத்தின் ஒரு பகுதியில்தான் விவசாயம் நடைபெறும், மீதி நாட்களில் வேலை எதுவுமின்றி வீட்டில் இருப்பது சோம்பேறித்தனத்தை வளர்த்து ஒருவனை சோம்பலில் சுகம் காண வைக்கும்.
சிறப்பாக வேலை செய்யும் நாட்டில் இது போல் உள்ளது.
இந்தியாவில் ஒரு சந்நியாசி வேலை எதுவுமின்றி அசையாது நீண்ட நேரத்திற்கு உட்கார்ந்திருப்பது இலட்சியமாகக் கருதப்பட்டது. ஆன்மீகச் சமாதியின் சமூகப் பதிப்பாக சோம்பேறித்தனம் உள்ளதால், அது ஒருவரைப் பெருமைப்பட வைக்கிறது.
சுறுசுறுப்பாக இருப்பது ஐரோப்பியர்களுக்கு பெருமையாக உள்ளது.
அமெரிக்கர்களுக்கு ஆற்றல் வாய்ந்த வாழ்க்கைதான் இலட்சியம்.
நகரவே பிரியப்படாதவர்கள் இந்தியர்கள்.
முக்கியமாக மாறுபட்டும், சில சமயங்களில் முரண்பாடாக இருக்கும் பல உந்துதல்களும், நோக்கங்களும் சேர்ந்த சிக்கலான கலவைதான் ஆணும் பெண்ணும்.
இந்த உண்மைகளை ஷேக்ஸ்பியர் கவிதையில் கொண்டு வந்ததால், அவர் உயர்ந்த இடத்தை அடைந்தார்.
முதல் பார்வையிலேயே காதல் எழும் என்பதை அவர் அறிந்திருந்தார்.
பலவீனத்தை பெண்கள் என்றழைத்தார்.
மாறுதலுக்கு தன்னை உட்படுத்திக்கொள்ளும் பெண்ணிடம் இருக்கும் எல்லையற்ற தன்மை, வயது ஏறும்பொழுது குறைவதில்லை என்று அவர் கூறுகிறார்.
வயது, தன்னை அழகாக மாற்றிக்கொள்ள விழையும் போது, அளவற்ற தன்மையை மீறுவதை கண்டு கொள்வது நிச்சயமாக மேதாவித்தனம்.
அவருடைய மேதாவித்தனம் ஒரே சீராக உயந்த நிலையிலேயே இருக்கிறது, தளர்ச்சி அடைவதே இல்லை.
Pride and Prejudice-க்குப் பின், ஜேன் ஆஸ்டின் சுவையற்ற நாவல்களை எழுதியதால் அவளுடைய மேதாவித்தனம் அவற்றில் தீர்ந்தது.
உடல்ரீதியாக முதிர்ச்சி அடைந்த தருணத்தில், அவளுடைய மேதாவித்தனமும் முதிர்ச்சி பெற்றது.

அவளுக்குத் திருமணம் செய்து கொள்ள முடியாததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.
அவளுடைய சக்தி முழுவதும், திருமணத்திற்கு சம்பந்தம் இல்லாத நிலையாக மனத்தில் குவிந்திருந்தன.
பொய்மையின் கவர்ச்சியைப் பற்றி அவள் அறிந்திருந்தாள்.
அவளுக்குத் தன்னுடைய மதிப்பு தெரிந்திருந்தது, உயர்குடிச் சிறப்பிலுள்ள போற்றத்தக்க பாதுகாப்பைப் பற்றியும் தெரிந்திருந்தது.
எலிசபெத் ஜேன் ஆஸ்டினுடைய பிரதிபலிப்பு ஆவாள்.
£600 பவுனில் வாழ்ந்த அவளது குடும்பத்திற்கு வறுமை தெரியாது.
ஒரு வேளை அவள் முழு சுதந்திரத்தில் வளர்ந்திருக்கலாம்.

105.“While there is an officer in Meryton, they will flirt with him”.
Man the animal does what he can, if he wants.
Man the human does what is the best he can.
There are two ends of will in action.
The primitive Man and the civilized Man occupy these two ends.
Human accomplishment is guided by human action whose determinant is the human choice.
The choice of the Absolute is creation.
Man can choose as the Absolute chooses.
It will be the creation of the Absolute at his level.
That, of course, is the Marvel.
It is a Marvel which can make Mrs. Bennet into a cultured sophisticated chaste wife.
Pride and Prejudice is a novel in which the transformation possible after the advent of Sri Aurobindo was forecast in action by Darcy, a little by Elizabeth.
Our analysis and approach must be able to place each event on a path which will end in the Marvel.
The distance may be great.
But the positioning must be right assuming the right direction.
That requires a complete knowledge of The Life Divine and an equally complete knowledge of our own life.
Should we succeed, The Life Divine will be fully clear – all its 1452 ideas.
In the Chapter on The Methods of Vedantic Knowledge He speaks of pure reason devoid of sense impression.
Shedding the sense impression, He says Reason can become intuition.
Intuition by self-awareness can know we are the Purusha.
The Purusha He speaks of is the Manomaya Purusha, the witness Purusha.
It can be seen by the Mind.
Beyond is the Supramental Purusha.
It can be seen only by the Supermind.
On receiving the letter, she was anxious to read.
She was infatuated, prejudiced, i.e., all sense impressions.
The first reading raised her anger.
She had a Mind, a discriminating Mind.
It was her pride.
To apply that Mind or not was her choice, what I call the human choice.
She applied her Mind and read for a second time.
She took efforts to remove her infatuation, the false information.
Very slowly the truth revealed itself.
It was a slow process, an unwilling process too.
But surely Reason emerged, saw the truth.
She found herself vain and despicable.
Respect arose for him.
This is a half way process of what is given in the chapter.
Every one of these 1452 ideas can be explained as this.
The full process is the intuition in the subconscious joining the intuition in the superconscious.
Elizabeth stopped as soon as Mind is reached.
Darcy went down started with the lower intuition and joined it with the higher intuition and saw the Marvel for him.
What Darcy did is partial, but no one has attempted it to this extent.
Vedanta and Sri Aurobindo differ here.
It is not so much a difference as Vedanta is a partial mental effort of Sri Aravindam.
Man is the conscient.
The Superconscient is there above in the Overmind, Supermind and above that.

Man's Mind is darkened by the senses.
Tapas extinguish the senses and the Mind can directly see or hear.
That Mind free from senses is capable of intuition.
Through that intuition Man reaches the intuition of the superconscient in the overmind.
Such a realization gives moksha.
But it cannot conquer evil as it avoids evil which is in the inconscient.
The evolved inconscient is the subconscient of which body is made.
Sri Aravindam releases the intuition in the subconscient.
Subconscient is life.
Life is action.
Intuition is involved in action.
Right action releases the intuition in the subconscient.
Man, the conscient, joins the lower intuition with the higher intuition in the supermind thereby making a whole that is integral.
Evil is overcome as the intuition in it is released.
Sri Aravindam thus overcomes the evil.
What Darcy did is not that.
His evil of pride was not buried in the subconscient – the body – where it would be habit.
His evil was in the vital.
In Lady Catherine the evil of pride is buried in the body.
The evil in the world is buried in the inconscient.
Darcy recognized his evil and released the intuition in his evil which came out as good behaviour of a gentleman at Pemberley.
He did not reach the Superconscient in the higher regions.
He reached the intuition of the superconscient in his Mind.
By uniting these two intuitions, he overcame the evil in his pride.
The spiritual power for his mental superconscient comes from the French Revolution.
It was Sri Aurobindo's Force that acted in the French Revolution through Napoleon.
Darcy's conquest is for him and through him for the aristocracy.
It is not for all mankind or for earth.
That power lies above in the supermind.
It releases the light from the evil from the inconscient.
That light joining the light of the Supermind conquers evil in the world.
Reconciliation of dualities universalizes Man, overcoming ego.
Beyond ego's darkness lies the darkness of Nature where evil lurks.
That evil can be conquered only by the soul in Nature, the psychic, emerging.
Its completion is reached when the individual rises to transcendence.
For that Nature has to be conquered.
Nature that acts through the three gunas – rajas, tamas, saathvic- must be transformed into divine nature.
Darcy's is the first step but a complete act.
It benefited Elizabeth and her family.
All the three marriages were possible because Darcy transformed himself.
He fulfilled the essential condition for transformation, by refusing to recognize evils as evil, but saw it as good.
"மெரிடனில் ஒரு இராணுவ அதிகாரி இருக்கும் சமயத்தில் அவருடன் அவர்கள் ஊர் சுற்றுவர்."
விலங்காக இருக்கும் மனிதன், அவன் விரும்பினால், அவனால் முடிந்ததை செய்வான்.
மனிதனாக இருப்பவன் தன்னால் இயன்ற சிறந்ததையே செய்வான்.
ஒரு செயலில் விருப்புறுதியின் இரு முனைகள் இருக்கின்றன.
ஆதிகால மனிதனும், நாகரிக மனிதனும் இவ்விரு முனைகள் ஆவர்.
மனித சாதனையை மனித செயல் வழி நடத்துகிறது, இதை தீர்மானிப்பது மனித விருப்பம்.
பிரம்மத்தின் விருப்பம் சிருஷ்டி.
பிரம்மம் தேர்ந்தெடுத்தது போல் மனிதனும் தேர்ந்தெடுக்கலாம்.
அது அவனது நிலையில் பிரம்மத்தின் சிருஷ்டி போலிருக்கும்.
அதுவே அற்புதமாகும்.
அந்த அற்புதம் திருமதி பென்னட்டை நாகரிகமுள்ள, மதிநுட்பமான, நல்ல குணமுடைய மனைவியாக மாற்றும்.

ஸ்ரீ அரவிந்தர் தோன்றியபின் சாத்தியமான திருவுருமாற்றம், டார்சியின் செயலாலும், சிறிதளவு எலிசபெத்தாலும் *Pride and Prejudice* எனும் நாவலில் முன் கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது.
நமது ஆராய்ச்சியும், அணுகுமுறையும், ஒவ்வொரு நிகழ்ச்சியையும், அது அற்புதமாக முடியும் வண்ணம் ஒரு பாதையில் பொருத்தப்பட வேண்டும்.
தூரம் பெரிதாக இருக்கலாம்.
ஆனால் சரியான திசையை யூகித்து சரியான இடத்தில் பொருத்த வேண்டும்.
இதற்கு 'தி லைப் டிவைன்'-ன் முழுமையான ஞானம் வேண்டும், நமது வாழ்க்கையின் முழு அறிவும் சமமாக வேண்டும்.
இதில் நாம் ஜெயித்தால் 'தி லைப் டிவைன்', அதன் 1452 கருத்துகளும் தெள்ளத் தெளிவாகப் புரியும்.
வேதாந்த ஞானத்தின் முறைகள் எனும் அத்தியாயத்தில், விவேகம் சிறிதும் இல்லாத பகுத்தறிவைப் பற்றி பகவான் பேசுகிறார்.
விவேகத்தை விட்டு விட்டால், பகுத்தறிவு உள்ளுணர்வாக மாறும் என்கிறார் பகவான்.
சுய விழிப்புணர்ச்சியினால் ஏற்பட்ட உள்ளுணர்வுக்கு, நாம்தான் புருஷா என்று அறிந்துகொள்ள முடியும்.
பகவான் கூறும் புருஷன், சாட்சி புருஷனான மனோமய புருஷனாகும்.
இதை மனத்தால் பார்க்கலாம்.
இதற்குப் பின்னால் இருப்பது சத்திய ஜீவிய புருஷன்.
இதனை சத்திய ஜீவியத்தால் மட்டுமே பார்க்க முடியும்.
கடிதம் கிடைத்தவுடன், அதனை படிக்க அவள் ஆவலாக இருந்தாள்.
அவளுக்கு இருந்தது மோகம், தப்பபிப்பிராயம், அனைத்தும் உணர்வின் அபிப்பிராயங்களாகும்.
முதல் முறை படித்தவுடன் கோபம் எழுந்தது.
அவளிடம் இருக்கும் மனத்திற்கு பாகுபாடு தெரியும்.
அவளுக்கு அதில் பெருமிதமும் உண்டு.
அதை உபயோகப்படுத்தலாமா, வேண்டாமா என்பது அவளது விருப்பம், இதைத்தான் நான் மனித விருப்பம் என்கிறேன்.
மனத்தை உபயோகப்படுத்தி இரண்டாவது முறையாகப் படிக்கிறாள்.
தன்னுடைய மோகத்தை நீக்கவும், தவறான தகவலை அகற்றவும் அவள் முயற்சியை மேற்கொண்டாள், மெதுவாக உண்மை தன்னால் வெளிப்பட்டது.
அது மெதுவாக நடக்கிறது, விருப்பமில்லாமல் நடக்கிறது.
பகுத்தறிவு உண்மையைப் பார்க்கிறது.
தான் பயனற்றவளாகவும், தாழ்ந்தவளாகவும் இருப்பதைப் பார்க்கிறாள்.
அவனிடம் மரியாதை எழுகிறது.
அத்தியாயத்தில் கூறப்பட்டவற்றை ஏதோ ஓரளவில் ஏற்கலாம்.
1452 கருத்துகளில் ஒவ்வொன்றையும் இதே போல் விளக்கலாம்.
உயர் ஜீவியத்தின் உள்ளுணர்வுடன் ஆழ் மனத்தின் உள்ளுணர்வு இணைந்து கொள்வதே முழு முறையாகும்.
மனத்தை தொட்டவுடன் எலிசபெத் நிறுத்தி விடுகிறாள்.
டார்சி கீழே சென்று, தாழ்ந்த உள்ளுணர்விலிருந்து ஆரம்பித்து அதனை உயர்ந்த உள்ளுணர்வுடன் சேர்த்து, தனக்கு வேண்டிய அற்புதத்தைப் பார்த்தான்.
டார்சி செய்தது பகுதியானது, ஆனால் யாரும் அதை இந்த அளவிற்குக் கூட முயலவில்லை.
வேதாந்தமும், ஸ்ரீ அரவிந்தமும் இங்கு வித்தியாசப்படுகிறது.
வேதாந்தம், ஸ்ரீ அரவிந்தத்தின் ஒரு பகுதியான மனத்தின் முயற்சியாக உள்ளதால், இரண்டிற்கும் அத்தனை வித்தியாசம் இல்லை.
மனிதன் ஜீவியமாவான்.
பரமாத்மா, தெய்வலோகத்திலும் சத்திய ஜீவியத்திலும் உள்ளது, அதற்கு மேலேயும் உள்ளது.
உணர்வு மனத்தை மூடிவிடுகிறது.
தவம் உணர்வை நீக்கி விடுகிறது, மனத்தால் நேரடியாகப் பார்க்க முடியும் அல்லது கேட்க முடியும்.
உணர்விலிருந்து விடுபட்ட மனத்திற்கு உள்ளுணர்வு உண்டு.
அந்த உள்ளுணர்வின் மூலம் மனிதன் பரமாத்மாவின் உள்ளுணர்வை தெய்வலோகத்தில் அடைகிறான்.
இது போன்ற விழிப்பு மோட்சத்தை அளிக்கும்.
ஆனால் அதனால் தீமையை வெல்ல முடியாது, ஏனெனில் இருளான தீமையை அது தவிர்த்து விடுகிறது.
இருள் வெளிவரும்பொழுது ஆழ்மனமாகிறது, உடல் உண்டாகிறது
ஸ்ரீ அரவிந்தம் உள்ளுணர்வை ஆழ்மனதில் விடுவிக்கிறது.
ஆழ்மனமே வாழ்வாகும்.
வாழ்வு செயலாகும்.
செயற்பாடுகளில் உள்ளுணர்வு பங்கேற்கிறது.
சரியான செயல் உள்ளுணர்வை ஆழ்மனதுள் விடுவிக்கிறது.
மனிதன் தாழ்ந்ததையும் உயர்ந்ததையும் சத்திய ஜீவியத்தில் சேர்த்து முழுமை அடைகிறான்.

தீமையிலுள்ள உள்ளுணர்வு விடுவிக்கப்பட்டதால், அது வெற்றி கொள்ளப்படுகிறது.
ஸ்ரீ அரவிந்தம் இவ்வாறு தீமையை வெற்றி கொள்கிறது.
டார்சி செய்தது அது அல்ல.
அவனுடைய ஆழ்மனதில் கர்வத்தின் தீமை இல்லை, உடலில் அங்கு அது பழக்கமாகி விடும்.
அவனுடைய தீமை உணர்வில் இருந்தது.
லேடி காதரினிடம் பெருமிதத்தின் தீமை உடலில் ஆழ்ந்திருந்தது.
உலகத்தின் தீமை பாதாளத்தில் உள்ளது.
டார்சி தன்னுடைய தீமையை உணர்ந்து, அதனை உணர்விலிருந்து விடுவித்து, பெம்பர்லியின் நன்னடத்தை கொண்ட குணவானாக மாறினான்.
அவன் உயர்ந்த நிலைகளில் உயர்ந்த ஜீவியத்தை அடையவில்லை.
அவன் மனதில் உயர்ந்த ஜீவியத்தின் உணர்வை அடைந்தான்.
இவ்விரண்டு உணர்வுகளையும் இணைத்து, அவன் அவனுடைய கர்வத்தில் இருந்த தீமையை விலக்கினான்.
மனத்தினுடைய உயர்ந்த ஜீவியத்தின் ஆன்மீகச் சக்தி அவனுக்குப் பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து கிடைக்கிறது.
பிரெஞ்சுப் புரட்சிக்கு நெப்போலியன் மூலமாக சக்தி அளித்தது ஸ்ரீஅரவிந்தர்.
டார்சிக்கு கிடைத்த வெற்றி அவனுக்கும், அவன் மூலமாக பிரபுத்துவத்திற்கும்.
அது எல்லா மனித சமுதாயத்திற்கும் அல்லது பூமிக்கும் கிடைக்கவில்லை.
அந்த சக்தி இருப்பது சத்திய ஜீவியத்தில்.
அது பாதாளத்திலுள்ள தீமையிலிருந்து ஒளியை விடுவிக்கிறது.
அந்த ஒளி சத்திய ஜீவியத்தின் ஒளியுடன் சேர்ந்து உலகத்தின் தீமையை வெற்றி கொள்கிறது.
இரட்டைகளின் சமாதானம் அகந்தையை அழித்து மனிதனை பிரபஞ்சமாக்குகிறது,
அகந்தையின் இருளுக்கு அப்பால் இயற்கையின் இருள் உள்ளது, அங்கு தீமை பதுங்கி உள்ளது.
இயற்கையில் உள்ள ஆன்மாவால் மட்டும்தான் அந்த தீமையை வெற்றி கொள்ள முடியும், அது சைத்திய புருஷன் வெளி வருவது.
ஒருவர் பிரம்ம நிலைக்கு உயரும்பொழுது அது பூர்த்தி ஆகிறது.
அதற்கு இயற்கையை வெல்ல வேண்டும்.
ரஜஸ், தமஸ், சத்வ என்று மூன்று குணங்களால் செயல்படும் இயற்கை, தெய்வீகச் சுபாவமாக திருவுருமாற வேண்டும்.
டார்சியினுடையது முதல் படியாக இருந்தது. ஆனால் முழுமையான செயலாகும்.
எலிசபெத்தும் அவளது குடும்பமும் இதனால் பலன் பெற்றனர்.
டார்சி திருவுருமாறியதால் மூன்று திருமணங்களும் சாத்தியமாயின.
தீமையை தீமையாகப் பார்க்காமல் நல்லதாகப் பார்த்து, திருவுருமாற்றத்திற்குரிய முக்கியமான நிபந்தனைகளை அவன் பூர்த்தி செய்தான்.

Anxiety on Jane's behalf was another prevailing concern; and Mr. Darcy's explanation, by restoring Bingley to all her former good opinion, heightened the sense of what Jane had lost. His affection was proved to have been sincere, and his conduct cleared of all blame, unless any could attach to the implicitness of his confidence in his friend. How grievous then was the thought that, of a situation so desirable in every respect, so replete with advantage, so promising for happiness, Jane had been deprived, by the folly and indecorum of her own family!

ஜேனைப் பற்றிய கவலை மற்றொரு பிரச்சினையாக இருந்தது. டார்சியினுடைய விளக்கங்கள், பிங்கிலிமேல் அவள் முதலில் கொண்டிருந்த நல்ல அபிப்பிராயங்களை மீண்டும் புதுப்பித்ததால் ஜேன் இழந்தது எவ்வளவு அதிகம் என்பதை உணர்த்தியது. அவனுடைய அன்பு உண்மையானது என்பது ஊர்ஜிதமானது, அவனது நடத்தை குற்றமற்றது என நிரூபிக்கப்பட்டது, அவனுடைய நண்பன்மேல் முழு நம்பிக்கை வைத்திருந்தான் என்பதை மட்டுமே வேண்டுமென்றால் குறையாகச் சொல்லலாம். எல்லா விதத்திலும் விரும்பக்கூடிய ஒரு சூழ்நிலையை, நிறைவான நன்மைகள் பயக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை, மகிழ்ச்சியூட்டக்கூடிய ஒரு சூழ்நிலையை, தன்னுடைய சொந்த குடும்பத்தினரின் முட்டாள்தனத்தாலும், நடத்தை முறையினாலும் ஜேன் இழந்து விட்டாள் என்ற எண்ணம் அதிக துயரத்தைத் தந்தது.

106. The only gain for Elizabeth out of Darcy's proposal is Jane's prospects improved.
டார்சியின் திருமணப் பேச்சால் எலிசபெத் அடைந்த ஒரே இலாபம், ஜேனுடைய வாய்ப்பு முன்னேற்றமடைந்ததுதான்.
107. That Elizabeth has not thought of Jane's loss in terms of her family's indecorous behaviour reveals her blindness.
ஜேனுக்கு ஏற்பட்ட நிலைமை அவளுடைய குடும்பத்தின் கண்ணியமில்லாத நடத்தையினால்தான் என்று எலிசபெத் நினைத்துப் பார்க்காதது அவளுடைய கண்மூடித்தனத்தைக் காண்பிக்கின்றது.
108. Elizabeth realises the truth of Darcy's accusations about her family. She also realises her folly with regard to Wickham. It is this realisation that contributed to the final resolution of the elopement and the marriages .

அவளுடைய குடும்பத்தைப் பற்றி டார்சியின் குற்றச்சாட்டுகளில் இருந்த உண்மையை எலிசபெத் புரிந்து கொள்கிறாள், விக்காம் விஷயத்தில் அவளுடைய மடமையையும் தெரிந்துகொள்கிறாள், இந்த தெளிவே ஓடிப்போவதை சரிசெய்து, திருமணங்களை நடத்தி வைத்தது.

109. "His affection was proved to be sincere".

In matters of love one must be able to know the sincerity of affection directly by sensing

Jane would not speak of it.

Elizabeth had to know it by inference from secondary sources.

Darcy's relenting on Jane helped her move away from the vital.

Infatuation with Wickham was total, but it was only secondary to Jane.

The possibility of Jane's marriage was not very powerful or inevitable.

There was a good possibility because of Bingley's marked interest.

But he was not his master psychologically.

Legally he was on his own.

From her own side the mother and daughters were no real encouragement.

If anything, it was a positive discouragement.

More than what they were which is a disincentive, the constant, insistent initiatives Mrs. Bennet took powerfully disturbed the possibility.

Elizabeth was only aware of the consequences not so much the causes.

It is not as if Bingley was enamoured of Mr. Bennet for that to prove as an incentive.

Jane herself would not help Elizabeth's endeavours as she would not acknowledge her regard for him.

As it is, the only positive force in support of Jane's marriage was Elizabeth's unstinted good will.

Her goodwill for Jane created in Darcy goodwill for her.

Energies do not always produce effects intended.

Energies are partial.

The context is total.

So energy moving in one direction releases energy in another direction.

It is interesting to see the equilibrium of forces.

Darcy's positive interest in Elizabeth had its compensation in the direction of Bingley, removing him from there.

Her own hand was weak as she was turned to Wickham.

Looking at the alignment of forces we see little scope for Jane.

Her goodwill for Jane was complete.

Was it possible for her single goodwill to overcome the combined forces against her?

The end shows it.

For her it was goodwill for Jane; for him it was love for Elizabeth.

It will be of interest to see how the forces combined at each point to keep the work moving.

The desire to harm a Man when it is possible is irresistible.

Darcy, in his superior position, took that step with Bingley.

As his love for Elizabeth had an earlier history of 'tolerable', the energy released in that pronouncement must find employment.

It took the direction of harming Bingley.

It had an indirect harm to Jane, the sister of one whom Darcy loves.

He was unable to deliver his love unmixed till he was fully aware how deeply he loved her.

"அவனுடைய அன்பு உண்மையாக இருந்தது என்பது நிரூபணமாயிற்று."

காதலில், அன்பின் உண்மையை நேரடியாக உணர்ந்து தெரிந்துகொள்ள வேண்டும்.

ஜேன் அதைப் பற்றி பேசமாட்டாள்.

இரண்டாம் மனிதர்கள் மூலமாக எலிசபெத் தெரிந்துகொள்ளும்படி ஆனது.

ஜேன் மீது டார்சி காட்டிய அனுதாபம், எலிசபெத்தை உணர்விலிருந்து விலக உதவி புரிந்தது.

விக்காம்மேல் கொண்டிருந்த மோகம் முழுமையாக இருந்தது, ஆனால் அது ஜேனுக்கு அடுத்தபடியாகத்தான் இருந்தது.

ஜேனுடைய திருமணத்தின் சாத்தியக்கூறுகள் வலுவாகவுமில்லை, நிச்சயமாக நடக்கக் கூடியதாகவும் இல்லை.

பிங்கிலிக்கு குறிப்பிடத்தக்க விருப்பம் இருந்ததால் திருமணம் நடக்கும் வாய்ப்பு சிறப்பாக இருந்தது.

ஆனால் அவன் அவனுக்கு மனரீதியான எஜமானனாக இல்லை.

சட்டப்படி அவன் அவனாக இருந்தான்.

ஜேனுடைய தரப்பிலிருந்து தாயாரும், பெண்களும், அவளுக்கு உண்மையான தைரியம் அளிக்கவில்லை.

அவ்வாறே இருந்திருந்தாலும், அது நேர்மறையான அதைரியம் அளிப்பதாக இருந்தது.

அவர்கள் ஊக்கம் கொடுப்பதற்கு தடையாக இருந்ததோடல்லாமல், திருமதி பென்னட்டின் தொடர்ந்த வலிமையான வலியுறுத்தும் தன்முனைப்பு, நடக்கக்கூடிய சாத்தியங்களையும் கெடுப்பதாக இருந்தது.
விளைவுகளைப் பற்றி மட்டுமே எலிசபெத்திற்கு தெரிந்திருந்தது, காரணம் தெரிந்திருக்கவில்லை.
திரு பென்னட்டை கண்டு பிங்கிலி சந்தோஷமடைந்தான் என்று கூற முடியாது,
ஆகவே, அவனுக்கு அது ஒரு தூண்டுதலாக இருந்திருக்காது.
ஜேனும், எலிசபெத்தின் முயற்சிகளுக்கு உதவி புரியவில்லை, ஏனெனில் பிங்கிலியின் மீது அவள் கொண்டிருந்த மரியாதையை அவளே ஒப்புக் கொள்ளவில்லை.
ஜேனுடைய திருமணத்திற்கு ஒரே நேர்மறையான சக்தி எலிசபெத்தின் நல்லெண்ணம்தான்.
ஜேனிடம் அவள் கொண்டிருந்த நல்லெண்ணம் டார்சிக்கு அவள்மேல் நல்லெண்ணத்தை ஏற்படுத்தியது.
எதிர்பார்க்கும் விளைவுகளை சக்திகள் எப்பொழுதும் உருவாக்குவதில்லை.
சக்திகள் பகுதியானவை.
விஷயம் முழுமையானது.
அதனால் ஒரு திசையை நோக்கிச் செல்லும் சக்தி வேறொரு திசையில் சக்தியை விடுவிக்கும்.
சக்திகளின் சமநிலை ஆர்வத்திற்குரியது.
எலிசபெத் மீதிருந்த டார்சியின் நேர்மறையான விருப்பம், பிங்கிலியை அங்கிருந்து அகற்றுவதன் மூலம் ஈடு செய்து கொண்டது.
அவள் விக்காம் பக்கம் இருந்ததால் அவளுடைய நிலையே பலவீனமாக இருந்தது.
சக்திகளின் நிலையைப் பார்த்தால் ஜேனுக்கு வாய்ப்பு இல்லை என்பது தெரிகிறது.
அவளுக்கு ஜேனிடம் இருந்த நல்லெண்ணம் முழுமையானது.
அவள் ஒருவளுடைய நல்லெண்ணம் மட்டும், அவளுக்கு எதிராக இணைந்திருந்த எல்லா சக்திகளையும் எதிர்கொள்ள முடியுமா?
முடிவு காண்பிக்கின்றது.
அவளுக்கு, ஜேனிடம் உள்ள நல்லெண்ணம் முடிவை தெரிவிக்கின்றது; அவனுக்கு, எலிசபெத் மேலுள்ள காதல் முடிவை தெரிவிக்கின்றது.
ஒவ்வொரு இடத்திலும் எவ்வாறு சக்திகள் இணைந்து காரியத்தை நடத்திச் செல்கின்றது என்பதைப் பார்க்க ஆர்வமாக இருக்கும்.
சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம், ஒரு மனிதனுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டும் என்கிற ஆசை அடக்க முடியாததாக இருக்கும்.
உயர்ந்த நிலையில் இருக்கும் டார்சி பிங்கிலியிடம் இவ்வாறு நடந்துகொள்கிறான்.
எலிசபெத்தை காதலிக்கும் அவன், ஆரம்பத்தில் 'பரவாயில்லை' என்று கூறியதில் விடுவித்த சக்தி, எவ்வாறாவது செலவழிக்கப்பட வேண்டும்.
அது பிங்கிலிக்குக் கெடுதல் செய்வதில் முடிந்தது.
டார்சி விரும்பும் ஒருத்தியுடைய சகோதரியான ஜேனை அது மறைமுகமாக பாதித்தது.
அவளை எவ்வளவு தூரம் காதலிக்கிறோம் என்று முழுமையாக அவன் உணரும்வரை, காதலை கலப்படமில்லாமல் அவனுக்கு வெளிப்படுத்தத் தெரியவில்லை.

110. "By the folly and indecorum of her own family".
The understatement admitted by the language is of no avail in life.
Life requires the harshest reality described in its cruel nakedness if it has to act.
Life acts, does not describe.
For her to act on herself effectively, she must describe it not as folly and indecorum but as the treachery of the uncivilized primitive.
It is a great thing for her to be self-aware to this extent.
It is this realization that brought her the results.
Had she felt the primitivity and cruelty of the situation, love for Darcy would have been generated in her.
He thanked her for her abuse.
She never did so.
As one grows up, he comes to silently approve of the context.
Those who do so never outgrow the context.
Those who resent the situation revolt against it and emancipate themselves out of it.
A young boy so cruelly treated ran away, made great Money, came back to the uncle who had ill treated him and took them under his affectionate protection, only to lose his wealth.
The desire to win the appreciation of those who destroyed one is so common an emotion.
Life gave him the freedom while he sought back the cruelty of old days.
It was not possible for Elizabeth to condemn her family sufficiently as she was that family.
Self-awareness is the passport to emancipation.
Family is a structure created by the society.

It has a personality.
Children cannot resent the family they grew up in especially when it was one of comfort and respect.
Those who outgrow the structure of family are those who are ruined by it.
Only they will revolt, not from inside.
The Royal families of Europe have not witnessed any inner revolt though it is outmoded and otiose.
The reverence to the royal houses may extend a little outside.
This is the true nature of Man.
The revolt coming from inside was seen in Gorbachev.
It was a rare historical event.
As the shortcomings are not seen inside, even the strengths are not fully understood.
The descent of Supermind was missed by all who worked for it.
Organisation is a strong preservative.
It is blind to strengths or weaknesses.
It survives on securities and comforts.
Organisation is the best instrument for consciousness to progress.
Organisation is the greatest drag on the ideal.
What we call physical, vital, mental are organized structures at that level.
Their organization released from their clogging severities will prove to be a great instrument of evolution.
Old organizations preserved by the new leadership, as the Government of India, degenerates into corrupt decay.
Organization is neutral.
The human management of it is conservative.
The essence must be conserved, not the outer dead shell.
“அவளுடைய குடும்பத்தாரின் முட்டாள்தனத்தாலும், ஒழுங்கின்மையினாலும்.”
குறைத்துக் கூறுவது வாழ்க்கையில் பயனற்றதாக இருக்கும்.
கடுமையான உண்மைகள் கொடுமையான முறையில் விவரிக்கப்பட்டால்தான் வாழ்க்கை செயல்பட முடியும்.
வாழ்வு செயல்படும், விவரிக்காது.
தனக்கே திறம்பட செயல்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால், அவள் அதனை முட்டாள்தனம் என்றோ, ஒழுங்கின்மை என்றோ விவரிக்காமல், நாகரிகமற்ற ஆதிகால மனிதனின் துரோகம் என்று கூற வேண்டும்.
இந்த அளவிற்கு அவளுக்கு விழிப்புணர்ச்சி இருப்பது பெரிய விஷயம்தான்.
இந்த விழிப்புணர்ச்சியே அவளுக்குப் பலனை அளித்தது.
சந்தர்ப்பத்தின் பழைமையையும், கொடுமையையும் அவள் உணர்ந்திருந்தால், டார்சி மீது அவளுக்கு காதல் ஏற்பட்டிருக்கும்.
அவளுடைய நிந்தனைக்கு அவன் நன்றி கூறினான்.
அவள் ஒரு பொழுதும் அதைச் செய்யவில்லை.
ஒருவர் வளரும்பொழுது, அவர் அமைதியாக விஷயத்தை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்து விடுகிறார்.
அவ்வாறு செய்பவர் விஷயத்தைத் தாண்டி வருவதே இல்லை.
அந்த நிலையைக் கண்டு கோபம் கொள்பவர், அதனை எதிர்த்து தன்னை அதிலிருந்து விடுவித்துக்கொண்டு விடுவர்.
மிகவும் கடுமையாக நடத்தப்பட்ட ஒரு இளம் சிறுவன், வீட்டை விட்டு ஓடிப் போய், பெரும் செல்வம் சம்பாதித்த பின் வீட்டிற்குத் திரும்பி வந்து, தன்னை கொடுமைப்படுத்திய மாமாவை அன்புடன் ஆதரித்து, தனது சொத்து முழுவதையும் இழந்தான்.
தன்னை அழித்தவரிடமிருந்து பாராட்டு பெறும் ஆசை பொதுவாகக் காணப்படும் ஒரு உணர்ச்சியாகும்.
வாழ்க்கை அவனுக்கு சுதந்திரத்தை அளித்தது, ஆனால் அவன் கொடுமையான பழைய நாட்களை மீண்டும் நாடுகிறான்.
அவளும் அந்த குடும்பமாகவே இருந்ததால், எலிசபெத்தால் தன்னுடைய குடும்பத்தை போதுமான அளவிற்கு கண்டிக்க முடியவில்லை.
சுய விழிப்புணர்ச்சி விடுதலைக்கு அனுமதிச் சீட்டாகும்.
சமூகம் ஏற்படுத்திய அமைப்பே குடும்பம்.
அதற்கு ஒரு ஆளுமை உண்டு.
வசதி மற்றும் மரியாதை நிறைந்த குடும்பத்தில் வாழ்ந்த குழந்தைகள் குடும்பத்தின்மேல் கோபம் கொள்ள மாட்டார்கள்.
குடும்ப அமைப்பைத் தாண்டி வளருபவர்கள் அதனால் அழிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.
அவர்கள் மட்டுமே எதிர்ப்பார்கள், அகத்திலிருந்து அல்ல.
ஐரோப்பாவின் அரச குடும்பங்களில் அவை பழைமையாகவும், சோம்பல் மிகுந்ததாகவும் இருந்த போதும் உட்கலகங்கள் எதுவும் எழுந்ததில்லை.
அரச குடும்பத்திற்கு அளிக்கப்படும் மரியாதை வெளியிலும் சற்று அளிக்கப்படலாம்.

இதுதான் மனிதனின் உண்மையான சுபாவம்.
உள்ளிருந்தே எதிர்ப்பு வருவது கோர்பசேவ் விஷயத்தில் காணப்பட்டது.
அது அரிதான ஒரு சரித்திர நிகழ்ச்சியாகும்.
உள்ளே உள்ள குறைபாடுகள் எதுவும் தெரியாததால், பலமும் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படவில்லை.
சத்திய ஜீவியம் கீழிறங்கியதை அதற்காக பாடுபட்ட அனைவரும் கவனிக்கத் தவறி விட்டனர்.
அமைப்பு என்பது வலிமையான பாதுகாப்பாகும்.
வலிமையையோ பலவீனத்தையோ அது பார்ப்பதில்லை.
பாதுகாப்பிலும் வசதிகளிலும் அது உயிர் வாழ்கிறது.
ஜீவியம் முன்னேறுவதற்கு அமைப்பு என்பது மிகச் சிறந்த கருவியாகும்.
இலட்சியத்திற்குத் தடையாக இருப்பது அமைப்புதான்.
உடல், உயிர், மனம் என்று நாம் அழைப்பது, அந்தந்த நிலைகளின் முறைப்படுத்தப்பட்ட அமைப்பாகும்.
கடுமையான அடைப்புகளை அமைப்புகளிலிருந்து நீக்கி விட்டால், அந்த அமைப்புகள் பரிணாமத்தின் பெரிய கருவியாக விளங்கும்.
இந்திய அரசாங்கம் போல், புதிய தலைமையால் பழைய அமைப்புகள் பாதுகாக்கப்பட்டால், அவை ஊழல் மலிந்து சிதைந்து போகிறது.
அமைப்பு சமநிலையானது .
அதனுடைய மனித மேலாண்மை பழைமையானது.
சாரம் பாதுக்காக்கப்பட வேண்டும், பயனற்ற வெளித் தோற்றமல்ல.

When to these recollections was added the developement of Wickham's character, it may be easily believed that the happy spirits which had seldom been depressed before, were now so much affected as to make it almost impossible for her to appear tolerably cheerful.

இதனுடன் சேர்ந்து விக்காமினுடைய நடத்தையைப் பற்றியும் தெரிந்து கொண்டது, இதுவரை எதனாலும் தளர்ச்சியடையாத அவளது கலகலப்பான உற்சாகம் இப்பொழுது பெரும் அளவில் பாதிக்கப்பட்டு, சந்தோஷமாகக் காட்சி அளிக்க முடியாதபடி மாறியிருந்தது.

111. "Family and Wickham robbed her irresistible cheerfulness".
Elizabeth was always cheerful, a better foundation of yoga.
She was able to move to the Mind because of this ever-present cheerfulness.
She changed her attitude towards Darcy from hatred to appreciation.
Continuity of thought is expressed by the continuity of arguments.
Continuity of subconscious thought or subtle thought is expressed by the continuity of attitude.
'Pure Existent' continues Sat Purusha of the previous chapter; apparently the thought is continued.
Practically Mind is followed by Supermind.
Immutable Brahman is followed by the Integral Brahman.
The student in the academic setup tries to excel what is taught.
The Spiritual sishya submits totally whoever the guru is so that the exhausted finite will open to the inexhaustible infinite.
The most glorious moment in the life of the Guru is when the sishya excels him and he liberates the disciple.
Shankaracharya gladly sent Paul Brunton to Ramana Maharishi.
Genuine gurus happily sent the sishya to the appropriate guru when he had no further use for the present guru.
In the awakened Mind, overpowering vital gladly offers the release.
Spirit awakens thus when the Mind liberates.
Om is the sound that ends in Silence.
It is the liberating knowledge.
An organization where a plane is outgrown helping the outgrowing instrument to move above will be a live organization that does not stifle.
Happiness comes from success. It is of the lower vital.
Cheerfulness is of the Psychic.
The soul expressing itself in Mind or life is the Psychic.
The soul's expression is not a labour, it is a flowering.
The emerging Psychic expresses the joy of creation.
The joy of creation is the evolution of the Spirit.
There is no room for evil if the Spirit evolves in joy.
The evolution of Spirit in Mind is the infinite emerging in the finite.
In the spiritual evolution there is no scope for suffering, pain, evil, death.
Spiritual involution does not create any of them.

It is ego and Nature that create them.
Hence yoga is summarized as shedding the ego and discovering the soul of Nature.
Wickham can be readily overcome by Mind.
To overcome Wickham's overpowering vital charm is not given to Man.
The family cannot be as easily understood by the Mind, as it is in the very body.
Self-consciousness is not the forte of Man.
Man survives by unself-consciousness.
Ego is the experience of self-consciousness in ignorance.
It is self-experience.
What Elizabeth did was consecration to the Mind.
What Darcy did was surrender to the soul in the Mind.
Yoga is consecration to the Self, the transcendent universal Self in us.
"அவளுடைய கலகலப்பான சுபாவத்தை, குடும்பத்தினரும், விக்காமும் அழித்தனர்."
எலிசபெத் எப்பொழுதும் உற்சாகமாக இருந்தாள். உற்சாகம் யோகத்திற்கு நல்ல அடித்தளமாகும்.
எப்பொழுதும் குடிகொண்டிருக்கும் உற்சாகத்தின் மூலம் அவளால் மனதிற்கு மாற முடிந்தது. அவள் டார்சிமேல் கொண்டிருந்த மனோபாவத்தை வெறுப்பிலிருந்து பாராட்டாக மாற்றிக் கொண்டாள்.
தொடர்ச்சியான எண்ணங்கள் தொடர்ச்சியான விவாதங்கள் மூலம் வெளிப்படும்.
தொடர்ச்சியான ஆழ்மன எண்ணங்களும் அல்லது சூட்சும எண்ணங்களும், தொடர்ச்சியான மனோபாவத்தின் மூலம் வெளிப்படும்.
முந்தைய அத்தியாயத்தில் இருக்கும் சத் புருஷன், '*Pure Existent*' எனும் அத்தியாயத்திலும் தொடர்கிறது, அதன் கருத்தும் தொடர்கிறது.
நடைமுறையில் மனத்தை தொடர்வது சத்திய ஜீவியம்.
மாறுபாடற்ற பிரம்மத்தை தொடர்வது பூரண பிரம்மம்.
கல்வி முறைக்கு உட்பட்ட ஒரு மாணாக்கன், கற்பிக்கப்பட்டதில் மேம்பட்டு விளங்க முயற்சி செய்கிறான்.
ஆன்மீக சிஷ்யன் தன்னுடைய குரு யாராக இருந்தாலும் அவரிடம் முழுமையாக சரண் அடைவதால், கண்டமாக இருக்கும் அவன் அகண்டத்திற்கு தன்னை உட்படுத்திக்கொள்கிறான்.
தன்னுடைய சிஷ்யன் தன்னை மிஞ்சும் நேரம்தான், குருவிற்கு அவருடைய வாழ்க்கையில் கிடைக்கும் மிகவும் பொன்னான தருணமாகும், அவர் சிஷ்யனை தளைகளிலிருந்து விடுவிக்கிறார்.
சங்கராச்சாரியார் சந்தோஷமாக பால் ப்ரன்டனை ரமண மகரிஷியிடம் அனுப்பினார்.
தற்போது இருக்கும் குருவிடம் வேலை முடிந்துவிட்டால், உண்மையான குருவாக இருப்பவர், தனது சிஷ்யனை தகுந்த குருவிடம் அனுப்புவார்.
விழிப்புள்ள மனத்தில் வெற்றிகொள்ளும் உணர்வு, சந்தோஷமாக விடுதலையை அளிக்கும்.
மனம் விடுதலை பெறும்பொழுது ஆன்மா இவ்வாறு விழித்துக் கொள்ளும்.
ஓம் எனும் ஒலி மௌனத்தில் முடிகிறது.
அது விடுதலை அளிக்கும் ஞானம்.
ஒரு நிலையில் உயரும்போது அவ்வாறு உயரும் கருவியை மேலும் உயர்த்தும் அமைப்பு, ஒரு ஜீவனுள்ள அமைப்பாக இருக்கும், அடக்கி ஆளும் அமைப்பாக இருக்காது.
வெற்றியில் சந்தோஷம் எழும். அது தாழ்ந்த உணர்வுக்குரியது.
உற்சாகம் சைத்திய புருஷனுக்குரியது.
ஆன்மா தன்னை மனதில் அல்லது வாழ்வில் வெளிப்படுத்துவது சைத்திய புருஷனாகும்.
ஆன்மாவின் வெளிப்பாடு கடினமாக இருக்காது, அது மலர்வது போலிருக்கும்.
வெளிவரும் சைத்திய புருஷன் சிருஷ்டியின் சந்தோஷத்தை வெளிப்படுத்தும்.
சிருஷ்டியின் சந்தோஷம் ஆன்மாவின் பரிணாமமாகும்.
ஆன்மா சந்தோஷத்தில் வெளிவரும்பொழுது தீமைக்கு இடம் இல்லை.
மனத்தில் ஆன்மாவின் பரிணாமம், கண்டத்தில் அகண்டம் வெளிவருவதாகும்.
ஆன்மாவின் பரிணாமத்தில் துன்பம், வலி, தீமை, மரணம் இவைகளுக்கு இடம் கிடையாது.
ஆன்மீக சிருஷ்டி, அவை எதையும் உற்பத்தி செய்வதில்லை.
அகந்தையும், இயற்கையும் அவைகளை உற்பத்தி செய்கிறது.
அகந்தையை கைவிடுதல், இயற்கையின் ஆன்மாவைக் கண்டுபிடித்தல், இவற்றை யோகத்தின் சுருக்கம் எனலாம்.
மனத்தால் விக்காமை உடனடியாக எதிர்கொள்ள முடியும்.
விக்காமுடைய வெற்றிகொள்ளும் உணர்வின் கவர்ச்சியை மனிதனால் எதிர்கொள்ள முடியாது.
மனத்தால் குடும்பத்தை சுலபமாக புரிந்துகொள்ள முடியாது, ஏனெனில் அது உடலிலேயே ஊறி உள்ளது.
தன்னினைவு மனிதனின் பலமல்ல.
மனிதன் தன்னினைவில்லாமல் வாழ்கிறான்.
அறியாமையில் இருக்கும் தன்னினைவின் அனுபவமே அகந்தையாகும்.

அது சுய அனுபவம்.
எலிசபெத் மனத்திற்கு சமர்ப்பணம் செய்தாள்.
டார்சி, மனத்திலிருக்கும் ஆன்மாவிற்கு சரணடைந்தான்.
நம்முள் இருக்கும் புருஷோத்தமனுக்கு செய்யும் சமர்ப்பணமே யோகமாகும்.

Their engagements at Rosings were as frequent during the last week of her stay as they had been at first. The very last evening was spent there; and her ladyship again inquired minutely into the particulars of their journey, gave them directions as to the best method of packing, and was so urgent on the necessity of placing gowns in the only right way, that Maria thought herself obliged, on her return, to undo all the work of the morning, and pack her trunk afresh.
ரோஸிங்ஸில் எப்பொழுதும் எந்த அளவு நிகழ்ச்சிகள் இருந்தனவோ, அதே அளவில் அவள் அங்கிருந்த கடைசி வாரமும் இருந்தன. கடைசி மாலைவேளையும் அங்குதான் செலவழிக்கப்பட்டது, லேடி காதரின் மறுபடியும் அவர்களுடைய பயணத்தைப் பற்றிய மிகச் சிறிய விவரங்களையும் கேட்டறிந்து சிறந்த முறையில் எவ்வாறு எல்லாவற்றையும் வைத்துக் கொள்வது என்பது பற்றி அவர்களுக்கு ஆலோசனை வழங்கியதைக் கேட்டு உடுப்புகளை சரியாக அடுக்குவது அவசியம் என நினைத்த மரியா, வீடு திரும்பியதும் காலையில் அடுக்கி வைத்ததை எல்லாம் மாற்றி தன்னுடைய பெட்டியை புதியதாக அடுக்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

112. It is significant she too was not to leave when Darcy left. She is given a week there to restore her emotional equilibrium.
டார்சி கிளம்பியபோது அவள் அங்கிருந்து கிளம்பப் போவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவளுடைய உணர்ச்சிகளை சமநிலைக்கு கொண்டு வர அவளுக்கு அங்கு ஒரு வார காலம் அளிக்கப்பட்டது.
113. Attention to details in old age especially in others' affairs, is a legacy of their own early life lapses.
வயதான காலத்தில், ஒவ்வொரு சிறிய விஷயத்திற்கும் முக்கியமாக மற்றவர் விஷயத்தில் கவனம் செலுத்துவது, அவர்கள் தங்களது ஆரம்ப வாழ்க்கையில் தவறவிட்டவைகளின் விளைவாக இருக்கும்.
114. "Maria thought herself obliged to undo all the work of the morning and pack her trunk afresh".
The snob cherishes his relationship with the high.
Paltry information from the exalted gains in significance because of the source.
In reverse, the most important idea taken, cherished and meticulously followed will not be remembered from whom it came, if it is not a VIP.
Again we see the live presence of the upward social movement.
Can we see Mother's presence and action of Grace at every turn?
Not the result, but the Presence is the rule for the devotee.
In the story each approaches each event in that spirit.
Spirit and Matter are reconciled at the level of cosmic consciousness as well as transcendental consciousness.
For Man the work and the society are reconciled first at the level of his own material benefit and later at the level of his upward movement.
The snob is a devotee of Rank.
By repacking her trunk as Lady Catherine has instructed, Maria feels identified with the consciousness of the Lady.
Long sleeves give an old woman complete identification with the London fashion of youth and wealth.
Marriage, apart from being an economic necessity, gives Man as well as woman a total sense of identification with the security of the society.
It does not matter to Lady Lucas that Mrs. Bennet teases her meanly, but it matters to her that she is in identification with the principal family there.
For Jane there are two levels of reconciliation as there is for matter.
First she must get married. It is a reconciliation with the society.
More important than that is she should not appear to be chasing men.
That is the higher reconciliation for her with her value.
The higher includes the lower.
She subordinates the lower aim to the higher.
Both are achieved.
For Mr. Bennet too there are two levels of reconciliation.
One is domestic peace which claims precedence over domestic bliss.
At the expense of one, he seeks the other.
Had he been lucky to seek domestic bliss, that aim would not have clashed with the higher reconciliation.
It was not given to him.
The best in the circumstances was accepted at the cost of bliss.
When both clashed, he chose the higher and insisted on it.

As the higher includes the lower both were served.
For Bingley too there were two aims.
For him the lower aim was marriage.
The higher aim was Darcy's approval.
These two can be seen in the light of two reconciliations.
Man may not know his motives.
His motives are expressions of the cosmic consciousness expressing through his character.
The cosmic consciousness can give you what Mind's knowledge cannot give.
People ask for God to be shown.
There are various ways in which Mind can answer it.
But in the cosmic consciousness God is felt.
God is felt as energy while you feel matter too is energy.
"காலையில் தான் செய்த வேலைகளையெல்லாம் மாற்றி தன்னுடைய பெட்டியை புதிதாக அடுக்க வேண்டியது அவசியம் என்று மேரி நினைத்தாள்."
குழைந்து பேசுபவன் உயர்ந்தவர்களுடன் தனக்கிருக்கும் உறவினை நினைத்து சந்தோஷப்படுவான்.
உயர்ந்தவர்களிடமிருந்து கிடைக்கும் அற்பமான விஷயமும், அது வரும் இடத்தின் நிலையால், முக்கியம் வாய்ந்தவையாக மாறுகிறது.
இதற்கு மாறாக, போற்றப்பட்டு நுணுக்கமாகப் பின்பற்றப்பட்டு வரும் மிக முக்கியமான ஒரு கருத்து யாரிடமிருந்து வந்தது என்பதை, அவர் ஒரு முக்கிய புள்ளியாக இல்லாத பட்சத்தில், யாவரும் மறந்து விடுவர்.
சமூகத்தின் மேல்நோக்கிய முன்னேற்றம் ஜீவனுடன் இருப்பதை நாம் மீண்டும் பார்க்கிறோம்.
ஒவ்வொரு விஷயத்திலும், அன்னை இருப்பதையும் அருளின் செயற்பாட்டையும் நம்மால் பார்க்க முடியுமா?
அன்பர்கள் அன்னை இருப்பதை பார்க்க வேண்டுமே தவிர பலனை அல்ல.
இக்கதையில், ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும், அந்த உற்சாகத்தோடு அணுகுகிறார்கள்.
பிரபஞ்ச ஜீவியத்திலும், பிரம்ம ஜீவியத்திலும் ஆன்மாவும், ஜடமும் ஒன்றுபடுகின்றன.
ஒரு மனிதனுக்கு வேலையும், சமூகமும் முதலில் அவனுடைய பொருள்ரீதியான பலன்களின் நிலையில் ஒன்றுபடும், பிறகு அவனுடைய முன்னேற்றத்தின் நிலையில் ஒன்றுபடும்.
குழைபவன், பதவிக்கு அன்பன்.
லேடி காதரின் கூறியபடி மீண்டும் பெட்டியை அடுக்க ஆரம்பித்த மேரி, லேடி காதரினுடைய ஜீவியத்துடன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டதாக உணருகிறாள்.
நீண்ட கையுள்ள உடை, ஒரு வயதான பெண்மணியை, இளமையும் பணமும் படைத்த லண்டன் நாகரிகத்துடன் முழுமையாக அடையாளப்படுத்திக்கொள்ள வைக்கிறது.
திருமணம் ஒரு பொருளாதார ரீதியில் அத்தியாவசியமாக இருப்பதோடு, ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும், சமூகத்தின் பாதுகாப்போடு அடையாளப்படுத்திக்கொள்ளும் உணர்வைத் தருகிறது.
திருமதி பென்னட் தன்னை கேலி செய்கிறாள் என்பது லேடி லூகாசிற்கு ஒரு பொருட்டாகவே இல்லை, ஆனால் அங்குள்ள பிரதான குடும்பத்துடன் தனக்குள்ள தொடர்பே அவளுக்கு முக்கியமாக இருக்கிறது.
ஜேன் இரண்டு விஷயங்களுக்காக தன்னை சமாதானப்படுத்திக்கொள்ள வேண்டும்.
முதலில் அவளுக்குத் திருமணம் நடக்க வேண்டும். அது சமூகத்துடன் ஒத்துப் போவதாகும்.
இதையும் விட முக்கியமானது, அவள் ஆண்கள் பின்னால் போவது போல் தோன்றக்கூடாது.
அவள் மதிக்கும் விஷயங்களுக்கு அது மிக உயர்ந்த சமாதானம் ஆகும்.
உயர்ந்ததில் தாழ்ந்ததும் உள்ளது.
தாழ்ந்த இலட்சியத்தை உயர்ந்ததிற்கு உட்படுத்துகிறாள்.
இரண்டிலும் வெற்றி கிடைத்தது.
திரு பென்னட்டுக்கும் இரண்டு நிலைகளில் ஒத்துப் போக வேண்டியுள்ளது.
ஒன்று, குடும்ப சந்தோஷத்தைவிட முக்கியமாக குடும்ப நிம்மதி.
ஒன்றை இழந்து மற்றொன்றை அவர் நாடுகிறார்.
குடும்ப சந்தோஷத்தை அவர் நாடியிருந்தால், அந்த இலட்சியம் உயர்ந்த சமாதானத்தை எதிர்க்க வேண்டியிருந்திருக்காது.
அது அவருக்கு அளிக்கப்படவில்லை.
சந்தோஷத்திற்கு விலை கொடுத்து, அந்த சந்தர்ப்பத்தில் கிடைத்த சிறந்தது ஏற்றுக்கொள்ளப்பட்டது.
இரண்டும் எதிர்த்துக்கொண்ட போது அவர் உயர்ந்ததை தேர்ந்தெடுத்து அதை வலியுறுத்தினார்.
உயர்ந்ததில் தாழ்ந்ததும் அடங்கியிருப்பதால் இரண்டும் நிறைவேறியது.
பிங்கிலிக்கும் இரண்டு இலட்சியங்கள் இருந்தன.
கீழேயிருக்கும் இலட்சியம் திருமணம்.
உயர்ந்த இலட்சியம் டார்சியின் அனுமதி.
இந்த இரண்டையுமே அதனதனுடைய கோணத்தில் பார்க்க வேண்டும்.
மனிதனுக்கு தன்னுடைய நோக்கங்கள் தெரியாமல் இருக்கலாம்.

பிரபஞ்ச ஜீவியம் அவனுடைய சுபாவத்தின் மூலம் வெளிப்படுவதே அவனுடைய நோக்கங்களாகும்.
மனத்தின் ஞானம் அளிக்க முடியாததை பிரபஞ்ச ஜீவியம் அளிக்கும்.
கடவுளை அவனுக்கு காட்ட வேண்டும் என்று மனிதன் கேட்பான்.
மனம் பல வழிகளில் அதற்கு பதிலளிக்கும்.
ஆனால் பிரபஞ்ச ஜீவியத்தில் கடவுளை உணரலாம்.
கடவுளை சக்தியாகப் பார்க்கலாம், ஜடமும் சக்திதான்.

When they parted, Lady Catherine, with great condescension, wished them a good journey, and invited them to come to Hunsford again next year; and Miss De Bourgh exerted herself so far as to curtsey and hold out her hand to both.
அவர்கள் பிரியும்பொழுது, லேடி காதரின் தன் நிலைக்கு கீழ் இறங்கி வந்து அவர்களது பிரயாணத்திற்கு வாழ்த்து தெரிவித்து, அடுத்த வருடம் மீண்டும் ஹன்ஸ்போர்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்தாள்.
மிஸ். டீ பர்க், அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து, கை கொடுக்கும் அளவிற்கு ஒரு பெரு முயற்சி எடுத்தாள்.

115. Aristocrats are fully conscious of the value of their attention to others.
மற்றவர்களுக்கு கவனம் கொடுப்பதில் உள்ள மதிப்பு உயர்குடியினருக்கு முழுமையாகத் தெரியும்.

116. “Lady Catherine and Lady Anne condescended to take leave of them both”.
Condescension is the descent of social power of status to those below.
When there is real power and one comes down to give it to those below it is the noblest of acts, on a parallel to the descent of spiritual power.
Those who condescend without real power forget that because of ascent they have this power now.
Power is power of production.
It lies in the hands of those who work.
One can produce working in the fields and factories because work is organized above.
The power of organization is the greater of the two.
The greater power is not a superior power because both are indispensable.
The indispensable smaller one, examined in the subtle plane, will hold as much power as the greater one.
In the integral consciousness there is nothing superior.
No individual is superior.
No organization is inferior or superior.
There is no more important or less important nation.
All are equal in every sense of the word.
Apparently the infinite is great, the finite is small.
In reality it is not so, both are equal.
The finite is only the frontal appearance of the infinite.
To a consecrated view, the relative significances will reveal.
It is the attitude of condescension and the full enjoyment of it will be in place with Collins or Sir Lucas.
Condescension is empty.
With empty-headed people its power can be felt and enjoyed.
Elizabeth has a Mind which Lady Catherine has not.
Here condescension is not in place.
It can produce results in the reverse.
Lady Catherine was forced to go to Longbourn and be abused by Elizabeth.
It is significant that the Lady went to the place of Elizabeth.
At Longbourn Elizabeth will be stronger.
The Lady’s abuse completed Elizabeth’s purpose.
That is the significance of place.
Elizabeth was not able to know the value of Darcy at Rosings.
At Pemberley it was impossible for her not to know of Darcy’s value.
The place has a personality. Where people meet is important.
Darcy’s attitude to Elizabeth is true condescension.
He has a value to offer.
He can offer that value only when he is not conscious of it.
He is able to give his value to her because he is not aware of his own value and is aware of her value.
There is no taking without giving.
There is no giving without taking.
The rule for giving is not to value what you give.

The rule of taking is you must deserve it and not ask for it.
To be conscious of giving will end up with the knowledge that there is nothing to give.
Darcy and Elizabeth are not aware of their own values and are aware of the value of the other.
Neither asks from the other.
The rules work flawlessly.
Both are abundantly enriched.
“அவர்களிடமிருந்து லேடி காதரினும், லேடி ஆன்-ம், பரிவுடன் விடை பெற்றுக் கொண்டனர்”.
சமூகத்தில் அதிகார நிலையில் உள்ளவர்கள் கீழ் நிலையில் இருப்பவர்களுக்கு காண்பிப்பது, பரிவு.
உண்மையிலேயே அதிகாரம் இருந்து அவர்கள் கீழே இருப்பவர்களுக்கு அதனை அளிக்கத் தயாராக இருந்தால், அது மிகவும் மேலான செயலாகும், அது ஆன்மீகச் சக்தி இறங்கி வருவதற்கு ஒப்பாகும்.
உண்மையான அதிகாரம் இல்லாது பரிவு காண்பிப்பவர்கள், பரிணாமம் தங்களுக்கு அளிக்கும் அதிகாரம் இது என்பதை மறந்து விடுகின்றனர்.
சக்தி, உற்பத்தியின் சக்தியாகும்.
வேலை செய்பவர்களுக்கே உரியது அது.
வேலை, மேலே முறைப்படுத்தப்பட்டுள்ளதால், நிலத்திலும், தொழிற்சாலையிலும் ஒருவர் உற்பத்தியை கொண்டு வரலாம்.
இரண்டில், அமைப்பின் சக்தியே பெரியது.
பெரிய சக்தி உயர்ந்த சக்தியாகாது, ஏனெனில் இரண்டுமே இன்றியமையாதவை.
சூட்சும நிலையில் ஆராய்ந்தால் இன்றியமையாத சிறியதற்கும், உயர்ந்ததைப் போலவே சக்தி உள்ளது.
பூரண ஜீவியத்தில் பெரியது என்று ஒன்றுமில்லை.
எந்த ஒரு தனி நபரும் உயர்ந்தவர் இல்லை.
எந்த அமைப்பும் உயர்ந்ததோ தாழ்ந்ததோ இல்லை.
முக்கியமான நாடு, முக்கியமில்லாத நாடு என்று எதுவும் கிடையாது.
எல்லா விதத்திலும் எல்லாமும் சமம்தான்.
அகண்டம் பெரியது போலவும் கண்டம் சிறியது போலவும் தோன்றுகிறது.
உண்மையில் இரண்டுமே சமமானதுதான்.
அகண்டத்தின் முன் தோற்றம்தான் கண்டம்.
சமர்ப்பணத்தில் இரண்டிற்கும் உள்ள முக்கியத்துவம் வெளிப்படும்.
காலின்ஸிற்கும், சர் லூகாசிற்கும் பரிவு காண்பித்து அதில் சந்தோஷம் அடையும் மனோபாவம் உள்ளது.
பரிவு வெறுமையானது.
முட்டாள்களிடம் அதனுடைய சக்தியைப் பார்க்கலாம், அனுபவிக்கலாம்.
எலிசபெத்திடம் மனம் உள்ளது, லேடி காதரினிடம் இல்லை.
இங்கு பரிவு இல்லை.
அது மாறானப் பலன்களைக் கொடுக்கலாம்.
லேடி காதரின் லாங்பர்னுக்குச் செல்ல நிர்பந்திக்கப்பட்டாள், எலிசபெத்தால் நிந்திக்கப்பட்டாள்.
லேடி காதரின் எலிசபெத்தின் இடத்திற்கு சென்றாள் என்பது குறிப்பிடத்தக்கது.
லாங்பர்னில் எலிசபெத்தின் பலம் அதிகமாக இருக்கும்.
லேடி காதரினுடைய நிந்தனைகள் எலிசபெத்தின் விஷயத்தைப் பூர்த்தி செய்தது.
அது இடத்தின் விசேஷம்.
ரோசிங்ஸில் டார்சிக்கு இருக்கும் மதிப்பை எலிசபெத்தால் தெரிந்துகொள்ள முடியவில்லை.
பெம்பர்லியில் டார்சிக்கு இருக்கும் மதிப்பைப் பற்றி அவளால் தெரிந்துகொள்ளாமல் இருக்க முடியவில்லை.
இடத்திற்கு ஒரு சுபாவம் உண்டு. மனிதர்கள் எங்கு சந்தித்துக்கொள்கிறார்கள் என்பது முக்கியம்.
டார்சி எலிசபெத்திடம் காட்டிய பரிவு உண்மையானது.
கொடுப்பதற்கு அவனிடம் பண்பு இருக்கிறது.
அவன் அப்பண்பினை தன்னை அறியாமல்தான் கொடுக்க முடியும்.
அவளுக்கு அவன் தன் பண்பினை கொடுக்க முடிகிறது, ஏனெனில் அவனுக்கு தன் மதிப்பு தெரியவில்லை, அவளுடைய மதிப்பு தெரிந்திருந்தது.
கொடுக்காமல் பெற முடியாது.
பெற்றுக்கொள்ளாமல் கொடுக்க முடியாது.
கொடுப்பதை மதிப்பிடாமல் இருப்பதுதான் கொடுப்பதின் சட்டம்.
வாங்கிக்கொள்வதற்கு, நாம் அதற்கு தகுதி உடையவராக இருக்க வேண்டும், கேட்டு பெற்றுக்கொள்ளக் கூடாது.
நனவுபூர்வமாக கொடுக்கும்பொழுது, அங்கு கொடுப்பதற்கு எதுவுமில்லை என்ற ஞானத்தில் முடியும்.
டார்சிக்கும், எலிசபெத்திற்கும், அவரவர்களுடைய மதிப்பு தெரியவில்லை, மற்றவரின் மதிப்பு தெரிந்திருந்தது.
இருவருமே மற்றவரிடமிருந்து எதுவும் கேட்பதில்லை.
சட்டங்கள் தவறின்றி செயல்படுகின்றன.

இருவருமே அபரிமிதமாக சிறந்து விளங்கினர்.

Chapter 15: Elizabeth leaves Hunsford
ஹன்ஸ்போர்டிலிருந்து எலிசபெத் கிளம்புதல்

Summary: (May 1812) Just before Elizabeth leaves, Collins takes the opportunity to show off his prospects, and remind her of what she has missed by refusing to marry him. Maria and Elizabeth leave and are soon at Mr. Gardiner's home in London. Elizabeth is excited to see Jane and cannot wait to tell her about Darcy and his proposal.
எலிசபெத் கிளம்புவதற்கு முன் காலின்ஸ் தன்னுடைய வளமான வாய்ப்புகளை அவளுக்கு காண்பித்து, தன்னை நிராகரித்ததன் மூலம் அவள் எவற்றை எல்லாம் இழக்கிறாள் என்பதை உணர்த்துகிறான். மரியாவும், எலிசபெத்தும் அங்கிருந்து திரு. கார்டினர் இல்லத்திற்கு கிளம்புகின்றனர். அங்கு சில நாட்கள் தங்க முடிவு செய்து, பிறகு ஜேனுடன் ஊர் திரும்புவதாகத் தீர்மானிக்கின்றனர். ஜேனைப் பார்த்து மிக்க மிகழ்ச்சியடைந்த எலிசபெத், டார்சியை சந்தித்ததைப் பற்றியும், அவன் விடுத்த வேண்டுகோளைப்பற்றியும் கூற பொறுமையின்றி காத்திருக்கிறாள்.

On Saturday morning Elizabeth and Mr. Collins met for breakfast a few minutes before the others appeared; and he took the opportunity of paying the parting civilities which he deemed indispensably necessary.
சனிக்கிழமை காலை, எலிசபெத்தும், காலின்ஸும், மற்றவர்கள் வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு சிற்றுண்டியில் சந்தித்துக் கொண்டனர். அவர்கள் கிளம்புவதற்கு முன், செலுத்த வேண்டிய மரியாதைகள் எல்லாம் மிகவும் அவசியம் என்று காலின்ஸ் நினைத்ததினால், அச்சந்தர்ப்பத்தை அதற்கு பயன்படுத்திக் கொண்டான்.

1. "Collins took the opportunity at the breakfast table".
One who avails of all the opportunity will not cease to progress.
One meets with an opportunity.
At another time an opportunity compels us to avail of it.
One takes an opportunity to avail of it.
By opportunity we generally mean social opportunities.
A psychological opportunity is far greater than the social opportunity.
A spiritual opportunity is unseen.
The Supramental opportunity compels, but Man is too resourceful in evading it.
Man seeking God is usual.
In the descent of Supermind, it is God who seeks the Man.
When Man refuses to respond to the Godhead that awaits, He changes the external situations so that Man will either be trapped or excluded.
A society that uses all its social opportunities will socially evolve.
Marriage is a social opportunity.
Marriage that came to Jane is a psychological opportunity.
She could not fully respond to it.
It is Elizabeth who responded psychologically on behalf of Jane.
Marriage was a social opportunity to Charlotte.
For her it was a windfall.
For Charlotte an opportunity came, it was given by the circumstances, and Elizabeth spearheaded it.
Lydia created an opportunity and availed of it as her mother.
For Darcy marriage was an opportunity for spiritual transformation.
He sought it, persisted in it, and courted the opportunity.
Mr. Bennet too had an opportunity for psychological progress in marriage.
He did not seek it.
What he sought as marriage was a trap for spiritual progress.
He was compelled into it.
Darcy consciously sought it, found it abhorrent, persisted in it, rose to the occasion and finally was rewarded.
Collins took the opportunity of breakfast to speak to Lizzy.
He feels it is his duty to do several things.
All his work centres around the Lady.
Any work or duty real or imagined to the Lady is what takes priority in his Mind.
Such men make all the progress their situation permits.
His getting the living itself was because of this attitude.
An attitude of exhausting one's best energies in accomplishing what one considers himself to be paramount is the

attitude of maximum progress.
Such Men are awake to all existing opportunities.
He does not spare any social opportunity.
He does not see the psychological opportunity in marrying Charlotte nor does Charlotte.
“காலைச் சிற்றுண்டி நேரத்தில் கிடைத்த வாய்ப்பினை, காலின்ஸ் பயன்படுத்திக் கொண்டான்.”
எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்பவர் முன்னேறிய வண்ணம் இருப்பர்.
வாய்ப்பினை சந்திக்கிறோம்.
வேறொரு சமயத்தில் வாய்ப்பு அதனை பயன்படுத்திக் கொள்ள நம்மை வலியுறுத்துகிறது.
வாய்ப்பினை ஒருவர் ஏற்றுக் கொள்கிறார்.
வாய்ப்பு என நாம் பொதுவாக குறிப்பிடுவது சமூக வாய்ப்புகளை.
மனரீதியான வாய்ப்பு சமூக வாய்ப்பைவிட மேலானது.
ஆன்மீக வாய்ப்பு புலப்படுவதில்லை.
சத்திய ஜீவிய வாய்ப்பு வற்புறுத்துகிறது, ஆனால் அதனை தவிர்க்க மனிதனுக்கு சமயோசித புத்தி இருக்கிறது.
மனிதன் இறைவனை நாடுவது சாதாரணமான செயல்.
சத்திய ஜீவியம் இறங்கியதில், இறைவன்தான் மனிதனை நாடுகிறான்.
காத்திருக்கும் உள்ளொளிக்கு பதிலளிக்க மனிதன் மறுக்கிறான், மனிதன் அகப்பட்டு கொள்வது போலவோ அல்லது அவனை விலக்கி விடுவது போலவோ புற சந்தர்ப்பங்களை இறைவன் மாற்றுகிறான்.
சமூக வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளும் சமூகம், சமூகரீதியாக பரிணமிக்கும்.
திருமணம் ஒரு சமூக வாய்ப்பாகும்.
ஜேனுக்கு கிடைத்த திருமண வாய்ப்பு மனோரீதியான வாய்ப்பாகும்.
அவளால் முழுமையாக அதற்கு பதிலளிக்க முடியவில்லை.
ஜேனுடைய சார்பாக எலிசபெத் மனதால் பதிலளிக்கிறாள்.
திருமணம் ஷார்லெட்டுக்கு சமூக வாய்ப்பாக இருக்கிறது.
அவளுக்கு அது எதிர்பாராது கிடைத்த அதிர்ஷ்டம்.
ஷார்லெட்டுக்கு வாய்ப்பு வந்தது, அது சந்தர்ப்பம் கொடுத்த வாய்ப்பு, அதை எலிசபெத் வழி நடத்தினாள்.
லிடியா வாய்ப்பினை உற்பத்தி செய்து, அவளுடைய தாயாரைப் போல் அதனை பயன்படுத்திக் கொண்டாள்.
டார்சிக்கு, திருமணம் ஆன்மீகத் திருவுருமாற்றத்திற்கு வாய்ப்பாக அமைந்தது.
அவன் அதை நாடினான், அதில் உறுதியாக இருந்தான், வாய்ப்பினை பின் தொடர்ந்து சென்றான்.
திரு பென்னட்டிற்கு திருமணத்தில் மனோரீதியான முன்னேற்றத்திற்கான வாய்ப்பு இருந்தது.
அவர் அதை நாடவில்லை.
அவர் திருமணத்தை நாடியது, ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஒரு பொறி போல் ஆயிற்று.
அவர் அதனை கட்டாயமாக ஏற்றுக்கொள்ளும்படி ஆயிற்று.
டார்சி அதை விரும்பி நாடினான், அதன் மேல் வெறுப்பும் எழுந்தது, அதில் உறுதியாக இருந்தான், சந்தர்ப்பத்திற்கு தன்னை உயர்த்திக் கொண்டான், இறுதியாக வெற்றியும் அடைந்தான்.
காலைச் சிற்றுண்டி நேரத்தை, எலிசபெத்திடம் பேசுவதற்கு ஒரு வாய்ப்பாக காலின்ஸ் பயன்படுத்திக் கொண்டான்.
பல விஷயங்களை செய்வதை தன் கடமை என அவன் கருதினான்.
லேடி காதரினைச் சுற்றியே அவனது எல்லா வேலைகளும் இருக்கின்றன.
எந்த ஒரு வேலையாகவோ அல்லது கடமையாகவோ இருந்தாலும் சரி, நிஜமோ அல்லது கற்பனையோ, அது லேடி காதரினுக்காக இருப்பின், அதுதான் அவன் மனதில் பிரதானமாக இருக்கிறது.
இது போன்ற மனிதர்கள் சந்தர்ப்பம் அனுமதிக்கும் எல்லா முன்னேற்றங்களையும் அடைவார்கள்.
இந்த மனோபாவத்தினால்தான் அவனுக்கு வேலையும் கிடைக்கிறது.
ஒருவர் தான் எதில் முதன்மையாக இருக்கிறோம் என்று நினைக்கிறாரோ, அதனை அடைய தன்னுடைய அனைத்து சக்திகளையும் செலவழித்து விட வேண்டும் என்கிற மனப்பான்மை, அதிகபட்ச முன்னேற்றத்திற்கான மனப்பான்மை ஆகும்.
இருக்கும் எல்லா வாய்ப்புகளுக்கும், இது போன்ற மனிதர்கள் விழிப்பாக இருப்பார்கள்.
எந்த சமூக வாய்ப்பையும் அவன் விட்டு வைப்பதில்லை.
ஷார்லெட்டை திருமணம் செய்து கொள்வதிலுள்ள மனோரீதியான வாய்ப்பை அவன் பார்ப்பதில்லை, ஷார்லெட்டும் அதைப் பார்ப்பதில்லை.

2. “Parting civilities deemed indispensably necessary”.
Parting civilities make one human.
The animals have no parting civilities.
A little before parting they silently decide to part and that is the parting.
Nor do they offer a welcome as human beings.
They speak to each other after some considerable time when the occasion presents.
The animal parting or reception is in sensation, men have civilities.

We know of empty ceremonies.
It is true that a small Mind feels invested with power by the ceremony.
A policeman without uniform carries no power, maybe feels no great power.
Animals have no language.
After human language was developed, every activity must be rendered into words.
It took a long time to develop parting words.
And more time for these words to become civil words.
To men like Collins, they are of great significance.
Birthdays are of great importance, especially for the devotees.
On the birthday the soul is born at a higher level in the Man.
It occurs on the completion of a year.
When aspiration is strong and constant, the soul that takes twelve months to complete its growth does so in eleven months or a few days earlier than the birthday.
Life is extended to sadhaks by this shorter period in which the year is completed.
The devotee completes a year when the soul completes its year's growth in whatever time.
When the 'birthday' comes several days earlier, life celebrates it without those ceremonies.
To less developed souls the ceremonies of a birthday offer the inspiration which the flowering soul should bring in.
India Independence Day was spontaneously celebrated all over.
In Madras, in 1947,all the people were on the road, all traffic was suspended.
One who wanted to visit Sri Aurobindo's Darsan on that day could not get transport to the station. He visited His Room in 1989.
One could not have the Darsan without the sanction. Even to visit His Room one had to wait 39 years.
In 1962 on August 15th, HE came and sat over the Ashram during the period of meditation.
Usually HE stayed there till twelve midnight. Next morning HE will not be there.
Reading The Life Divine brings His atmosphere. Should it mature HE comes. We can see Him on the pages of the Book.
Courtesy is a human convention, not known to animals.
Among Men, there are those who when they see visitors coming take initiative to go away, so that they may not receive the visitor on entering.
These continue the animal habits of pugnacity.
Pugnacious animals growing into mild human beings behave in this fashion to avoid confrontation.
Collins follows all these civilities with a vengeance.
A scale of transition from animal to human courtesies will help evaluate the true worth of ethnic groups.
Hospitality will come on the top of the list.
"விடைபெறும் மரியாதை மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது."
விடைபெறும் மரியாதை ஒருவரை மனிதாபிமானம் உடையவராக்கும்.
விடைபெறுதல் விலங்குகளுக்கு இல்லை.
கிளம்புவதற்குச் சற்று முன் அவை மௌனமாக விலக தீர்மானம் செய்கின்றன, அதுதான் விடைபெறுதல்.
மனிதர்கள் போல் அவை அழைப்பு கொடுப்பதும் கிடையாது.
நீண்ட நேரம் கழித்து சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது அவை ஒன்றுடன் ஒன்று பேசிக் கொண்டிருக்கும்.
விலங்கின் விடைபெறுதலும், அழைப்பும் உணர்வில் இருக்கின்றன, மனிதனுக்கு மரியாதைகளில் இருக்கிறது.
நமக்கு அர்த்தமற்ற சடங்குகளைப் பற்றி தெரியும்.
சடங்குகள் அதிகாரத்தை அளிக்கிறது என சிறிய மனம் கருதுவது உண்மைதான்.
சீருடை இல்லாமல் காவல்துறை அதிகாரிக்கு எந்த அதிகாரமும் இருக்காது, பெரிய அதிகாரம் இருக்கும் உணர்வு ஒரு வேளை இல்லாமல் இருக்கும்.
விலங்குகளுக்கு மொழி கிடையாது.
மனித மொழி ஏற்பட்ட பிறகு, ஒவ்வொரு செயலையும் மொழியால் விளக்க வேண்டும்.
விடைபெறும் வார்த்தைகள் ஏற்பட வெகு காலமாயிற்று.
அவை மரியாதைக்குரிய வார்த்தைகளாக மாற மேலும் சில காலமாயிற்று.
காலின்ஸ் போல மனிதர்களுக்கு அவை மிகவும் முக்கியம் வாய்ந்தவை.
பிறந்த நாட்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை, முக்கியமாக அன்பர்களுக்கு.
பிறந்த நாளில் மனிதனது ஆன்மா உயர்ந்த நிலையில் மீண்டும் பிறக்கும்.
ஒரு வருடகால இறுதியில் இது நடைபெறும்.
ஆர்வம் முழுமையாகவும் நிலையாகவும் இருந்தால், முழு வளர்ச்சி அடைய பன்னிரண்டு மாதங்கள் எடுக்கும். ஆன்மா, பதினொன்று மாதங்களிலோ அல்லது பிறந்த நாளிற்கு சில நாட்களுக்கு முன்போ வளர்ச்சி அடைந்து விடும்.

வருடம் பூர்த்தியாகும் இக்குறைந்த காலத்தினால், சாதகர்களுக்கு வாழ்நாள் நீடிக்கிறது.
ஆன்மாவின் ஒரு வருட வளர்ச்சி எப்பொழுது பூர்த்தி அடையுமோ, அந்த காலமே அன்பர்களுக்கு ஒரு வருடமாகும்.
பிறந்த நாள் பல நாட்களுக்கு முன்பே வரும் பொழுது, வாழ்க்கை அதை எந்த வித சடங்குகளும் இன்றி கொண்டாடும்.
அவ்வளவாக முன்னேற்றமடையாத ஆன்மாக்களுக்கு பிறந்த நாள் கொண்டாட்டங்கள், மலரும் ஆன்மா அளிக்கக் கூடிய ஆர்வத்தை அளிக்கும்.
இந்தியாவின் சுதந்திர தினம் எல்லா இடங்களிலும் இயல்பாகக் கொண்டாடப்பட்டது.
மதராஸில் 1947ல் எல்லா மக்களும் தெருவில் இருந்தனர், எல்லா போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது.
அன்று ஸ்ரீ அரவிந்தரை தரிசனம் செய்ய நினைத்தவருக்கு வண்டி கிடைக்கவில்லை, அவர் பகவானுடைய அறையை 1989ல் தரிசனம் செய்தார்.
அனுமதி இருந்தால் மட்டுமே தரிசனம் கிடைக்கும். பகவானுடைய அறைக்கு செல்வதற்கே ஒருவர் 39 வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.
1962 ஆம் வருடம் ஆகஸ்ட்15ஆம் தேதி பகவான் ஆஸ்ரமத்தில் தியானத்தின் போது வந்து அமர்ந்திருந்தார்.
பொதுவாக பகவான் இரவு பன்னிரண்டு மணிவரை அமர்ந்திருப்பார், மறு நாள் காலை அங்கிருக்க மாட்டார்.
'தி லைப் டிவைன்' நூலைப் படித்தால் பகவானுடைய சூழலை அது கொண்டு வரும். அது முதிரும் பொழுது பகவானே வருவார். புத்தகத்தின் பக்கங்களில் பகவானை நாம் பார்க்கலாம்.
மரியாதை மனித சம்பிரதாயமாகும், விலங்குகள் அறியாதது.
விருந்தினர் வரும் பொழுது அவர்களைப் பார்த்தவுடன், தாங்கள் அவர்களை வரவேற்க வேண்டிய அவசியமில்லை என நினைத்து எழுந்து போகும் ஆண்கள் உண்டு.
சண்டை இடும் விலங்கின் உணர்வை இவர்கள் தொடருகின்றனர்.
சண்டை இடும் விலங்குகள் மிதமான மனிதர்களாக வளரும் பொழுது எதிர்ப்பை சமாளிக்க இதுபோல் நடந்து கொள்கின்றனர்.
இந்த எல்லா மரியாதைகளையும் காலின்ஸ் தீவிரத்துடன் பின்பற்றுகிறான்.
விலங்கிலிருந்து மனித மரியாதைகளுக்கு மாறுவதன் அளவுகோல், இனக் குழுமத்தின் உண்மையான மதிப்பினை மதிப்பிட உதவும்.
இந்த வரிசையில் விருந்தோம்பல் முதலாவதாக இருக்கும்.

"*I know not, Miss Elizabeth," said he, "whether Mrs. Collins has yet expressed her sense of your kindness in coming to us; but I am very certain you will not leave the house without receiving her thanks for it. The favour of your company has been much felt, I assure you. We know how little there is to tempt any one to our humble abode. Our plain manner of living, our small rooms and few domestics, and the little we see of the world, must make Hunsford extremely dull to a young lady like yourself; but I hope you will believe us grateful for the condescension, and that we have done everything in our power to prevent your spending your time unpleasantly.*"
“மிஸ். எலிசபெத், நீ எங்கள் இல்லத்திற்கு அன்புடன் வந்ததற்கு திருமதி காலின்ஸ் நன்றி தெரிவித்தாளா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவளிடமிருந்து நன்றி பெறாமல் நீ இந்த வீட்டைவிட்டு கிளம்ப மாட்டாய் என்பது நிச்சயம். உன்னுடன் சேர்ந்து இருந்தது எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. எங்களுடைய எளிய இல்லத்திற்கு வரத் தூண்டும்படி எங்களிடம் எதுவும் இல்லை என எங்களுக்குத் தெரியும். எங்களுடைய எளிமையான வாழ்க்கை முறை, சிறிய அறைகள், குறைந்த வேலையாட்கள், வெளி வாழ்க்கையை நாங்கள் அதிகம் பார்க்காதது, இவையெல்லாம் உன்னைப் போன்ற இளம் பெண்ணிற்கு ஹன்ஸ்போர்ட் ஒரு சுவாரசியமற்ற இடமாகத் தோன்றும். உன்னுடைய பரிவுக்கு நாங்கள் நன்றிக் கடன்பட்டிருக்கிறோம் என்பதை நீ நம்புவாய் என நினைக்கிறேன், மேலும் உன்னுடைய நேரத்தை நீ மகிழ்ச்சியாக கழிக்க எங்களால் முடிந்த அளவிற்கு எல்லாம் செய்தோம்,” என்றான்.

3. In trying to tell Elizabeth how much he enjoyed her company, Collins ends up saying how much Elizabeth benefitted by the visit.
அவளுடன் இருந்தது எவ்வளவு சந்தோஷமாக இருந்தது என்று எலிசபெத்திடம் கூற முயலும் காலின்ஸ், எலிசபெத் தன்னுடைய வருகையால் எவ்வளவு பயனடைந்தாள் என முடிக்கிறான்.
4. Mr. Collins’ education has no content. The phrases he has learnt remain in his memory. His dynamic energy charges those words and it results in an elevation of sound in his mind.
திரு காலின்ஸின் படிப்பில் பொருள் எதுவும் இல்லை. அவன் படித்த சொற்றொடர்கள் அவனுக்கு ஞாபகம் இருக்கிறது. அவனுடைய ஆற்றல்வாய்ந்த சக்தி அதனை அவன் மனதில் ஒலி வடிவமாக உயர்த்துகிறது.
5. “The favour of your company was much felt”.
These words are formal. How often those formal words carry more than formal significance.
He might not have missed the significance of that company when she married Darcy.
It is this visit of Elizabeth that made him a relative to Lady Catherine!

Casual formal words become true if there is a rich subtle atmosphere.
Perhaps he was subtly aware of Darcy's proposal.
A yogi in Trichy foretold Sri Aurobindo's arrival in Tamilnadu.
Sri Ramalinga Swami forecast that Vadalur would become like Cuddalore.
Sri Aurobindo saw the formation of the World government.
Robert Clive who founded the British Empire in India committed suicide foretelling that British would withdraw themselves.
Collins may not know the twin shock his wife had suffered from him and from the Lady.
Elizabeth's presence helped her to ease the tension of the transition.
He may be gloating over the favour he conferred on Elizabeth all the time.
Edmond received great knowledge, greater wealth and the greatest possible experience from Faria. Could he regret the jail life? Had he known all that beforehand he would have preferred to marry Mercedes.
In every act, there is a great significance. Only that we do not see it.
It is well known Bingley came to Meryton and conferred a blessing to Jane.
Looked at from another view, it was a visit that conferred a great blessing on Darcy.
Company is that which is enjoyable and therefore sought after.
Man who takes to consecration seeks the constant company of the Divine.
What the Rishi attains in Samadhi of a long period ONE single consecration gives him.
Samadhi and consecration are like the typewriter and computer.
These are states of consciousness that can reject death, sorrow and pain.
Man has that faculty in him. When rightly exercised and the values rendered sensationally these things are possible for him.
Presently he is like the original arboreal Ape unaware of his potentialities.
Elizabeth had in her faculties which when rightly exercised would emancipate her from infatuation and catapult her to Pemberley.
She neither knew of the faculty nor the opportunities.
If all the formal words of Collins are taken after, she became Mrs. Darcy, and read in the light of the new context it will be revealing.
Coming events cast their shadows is our experience.
This conceals a profound truth scarcely known to us.
Later he discovered that Elizabeth left no message of thanks to Rosings.
The one who should express or feel gratitude to her visit is not herself and therefore it was forgotten. In some plane it has its justification.
He noted Charlotte had not yet thanked her for her stay.
Charlotte was a girl confined to Meryton all her life. For her to uproot herself from there and plant herself in another social climate where there was no kindred soul for life was no mean effort. Almost she was like the American settler. Her own nerves will crave for solace, sympathy and comfort. Elizabeth was unwilling at first, then reluctantly agreed. Later the sordid conditions at home reconciled her to her trip. Collins has no way of knowing her Mind. He knew only himself. **His speech was formal. Through the formal words Life speaks out describing the past and forecasting the future.** Sir Lucas stayed there for a week. Maria was with her the whole time sharing the condescension and affability of the Lady.
Their significances are equally great though they are not in our minds.
"உன்னுடன் சேர்ந்து இருந்தது சந்தோஷமாக இருந்தது."
இந்த வார்த்தைகள் வெறும் சம்பிரதாயமானவை. இது போன்ற சம்பிரதாயமான வார்த்தைகள் பெரும்பாலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதில்லை.
அவள் டார்சியை திருமணம் செய்துகொண்ட போது, அவன் அவளுடைய அருகாமையின் முக்கியத்துவத்தை உணராமல் இருந்திருக்க மாட்டான்.
எலிசபெத்தின் இந்த வருகைதான், அவனை லேடி காதரினுக்கு உறவினராக மாற்றியது.
பொதுவான சம்பிரதாயப் பேச்சு செழிப்பான சூட்சுமமான சூழலில் உண்மையாக மாறும்.
டார்சியின் திருமணப் பேச்சைப் பற்றி ஒருவேளை அவனுக்கு சூட்சுமமாக தெரிந்திருக்கலாம்.
திருச்சியில் இருந்த ஒரு யோகி ஸ்ரீ அரவிந்தர் தமிழ் நாட்டிற்கு வரப் போவதை முன்கூட்டியே அறிவித்தார்.
வடலூர், கடலூராகும் என ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிகள் அறிவித்தார்.
உலக அரசாங்கம் நிறுவப்படப் போவதை ஸ்ரீ அரவிந்தர் கண்டார்.
இந்தியாவில் ஆங்கிலேய அரசாங்கத்தை நிறுவிய ராபர்ட் கிளைவ், தான் தற்கொலை செய்து கொள்வதற்கு முன், 'ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டு கிளம்பி விடுவார்கள்' எனக் கூறினார்.

தன்னிடமிருந்தும், லேடி காதரினிடமிருந்தும், தன்னுடைய மனைவிக்கு இரட்டை அதிர்ச்சி கிடைத்தது பற்றி காலின்ஸிற்குத் தெரியாமல் இருக்கலாம்.
மாற்றம் நிகழும் காலத்தில் ஏற்படும் இறுக்கம் தளருவதற்கு எலிசபெத் அங்கு இருந்தது அவளுக்கு உதவியாக இருந்தது.
எலிசபெத்திற்கு வழங்கிய ஆதரவைப் பற்றிக் கூறி அவன் எந்நேரமும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கலாம்.
பாரியாவிடமிருந்து, எட்மண்ட் உயர்ந்த அறிவினையும், அதிக சொத்தையும், மேலும் அதிகமான அனுபவத்தையும் பெற்றுக் கொண்டான்.
சிறை வாழ்க்கைக்காக அவன் வருந்துவானா? இதைப்பற்றி எல்லாம் முன்னமே தெரிந்திருந்தால் அவன் மெர்சிடஸ்ஸை திருமணம் செய்து கொள்ள விரும்பியிருப்பான்.
ஒவ்வொரு செயலிலும் பெரிய முக்கியத்துவம் உள்ளது. நாம் அதை பார்ப்பதுதான் இல்லை.
பிங்கிலி மெரிடனுக்கு வந்து ஜேனுக்கு அருள் புரிந்தது நன்றாகத் தெரிந்ததுதான்.
வேறொரு கோணத்தில் பார்த்தால், டார்சிக்குத்தான் அது பெரிய அருளாக அமைந்தது.
ஒரு துணை என்பது சந்தோஷப்படுத்தும், அதனால் அது நாடப்படுகிறது.
சமர்ப்பணத்தை மேற்கொள்ளும் மனிதன் தெய்வத்தின் துணையை எப்பொழுதும் நாடுவான்.
நீண்ட காலமாக சமாதியில் இருந்த ரிஷிக்கு கிடைப்பது, ஒரே சமர்ப்பணத்தில் ஒருவருக்கு கிடைத்து விடும்.
சமாதியும் சமர்ப்பணமும், தட்டச்சுப் பொறியும் கணிப்பொறியும் போலாகும்.
இவை மரணம், வருத்தம், வலி இவைகளை நிராகரிக்கும் ஜீவியத்தின் நிலைகளாகும்.
மனிதனுக்கு அத்திறமை உண்டு. முறையாகப் பயன்படுத்தி, உணர்வுபூர்வமாக பண்புகளை அளித்தால் இவை எல்லாம் அவனுக்கு சாத்தியமாகும்.
தன்னுடைய ஆற்றல்களைப் பற்றி அறியாது தற்பொழுது அவன் காட்டில் வாழும் குரங்கு போலிருக்கிறான்.
எலிசபெத்திடம் இருக்கும் திறன்களை அவள் சரியாக உபயோகப்படுத்தினால், அது மோகத்திலிருந்து அவளை விடுவித்து பெம்பர்லியை நோக்கி அவளை நகர்த்தும்.
அவளுக்கு திறன்களைப் பற்றியும் தெரியவில்லை, வாய்ப்புகளைப் பற்றியும் தெரியவில்லை.
அவள் திருமதி டார்சி ஆன பிறகு காலின்ஸ் பேசிய சம்பிரதாயமான வார்த்தைகளை எடுத்து புதிய பார்வையில் படித்துப் பார்த்தால், புதிய பரிமாணம் வெளிப்படும்.
வரும் நிகழ்ச்சிகள் நிழலாகப் படிந்து விடுவதே நமது அனுபவமாகும்.
நமக்குத் தெரியாத ஆழ்ந்த இரகசியத்தை இது மறைத்து வைத்திருக்கும்.
ரோசிங்ஸில் நன்றிக் குறிப்பு எதுவும் அவள் விட்டுச் செல்லவில்லை என அவன் பின்னால் கண்டு பிடித்தான்.
அவளுடைய வருகைக்கு நன்றியைத் தெரிவிப்பதோ அல்லது நன்றி உணர்ச்சியைக் காண்பிப்பதோ அவள் இல்லை என்பதால் அது மறக்கப்பட்டுவிட்டது.
சில நிலைகளில் அதற்கு அதனுடைய நியாயம் உண்டு.
ஷார்லெட்டும், அவள் அங்கு தங்கியதற்கு இதுவரை அவளுக்கு நன்றியைத் தெரிவிக்கவில்லை என அவன் கவனித்தான்.
ஷார்லெட் தன் வாழ்நாள் முழுவதும் மெரிடனிலேயே இருந்துவிட்டாள். அங்கிருந்து வேருடன் தன்னை பெயர்த்து எடுத்து அன்பான மனிதர்கள் யாரும் இல்லாத வேறு ஒரு சமூக நிலை உள்ள இடத்திற்கு குடி பெயருவது என்பது சாதாரண முயற்சி அல்ல. ஏறக்குறைய அவள், அமெரிக்காவில் குடியேறியவர்களைப் போல் இருந்தாள். ஆறுதல், பச்சாதாபம், பரிவு இவற்றிற்காக அவள் ஏங்கினாள். எலிசபெத்திற்கு முதலில் விருப்பமில்லை, பிறகு விருப்பமில்லாமல் சம்மதித்தாள். பிறகு, மோசமாக இருந்த வீட்டின் நிலைமை அவளை அந்த பிரயாணத்திற்கு ஒத்துக்கொள்ள வைத்தது. காலின்ஸிற்கு அவளுடைய மனத்தை தெரிந்துகொள்ளும் வாய்ப்பே இல்லை. தன்னை மட்டும்தான் அவனுக்குத் தெரியும். **அவனுடைய பேச்சு சம்பிரதாயமானதாக இருந்தது. பொதுவான பேச்சால், வாழ்க்கை கடந்த காலத்தைப் பற்றி விவரித்தும், எதிர்காலத்தைப் பற்றி முன்கூட்டியே அறிவித்தும் பேசுகிறது.** சர் லூகாஸ் அங்கு ஒரு வார காலத்திற்கு தங்கி இருந்தார். லேடி காதரினுடைய பிரியத்தையும், இனிமையையும் அனுபவித்துக் கொண்டு மரியா அவள் கூடவே முழு நேரமும் இருந்தாள்.
அவை நம் மனதில் இல்லாவிடினும் அவைகளுடைய முக்கியத்துவம் சமமாக சிறப்பானவை.

6. "Must make Hunsford extremely dull to a young lady like yourself".
All men are very willing to say the very best when they want to please another.
The primitive Man had our intelligence.
The Supermind is capable of instantaneous miraculousness.
30,000 years can be abridged in 30 years.
One can become what he aspires for.
Surrender unto Me, I shall deliver you.
The solution for any problem lies within it.
If there is a knowledge in the universe, Man will have the faculty to know it.
No evil was ever created.
The Absolute is the relative.

All is Brahman.
All these statements go to show the infinite capacity of Man.
He uses such capacities now to accomplish his aims.
Whatever he wishes to achieve, he has two attitudes.
One is faith in Karma.
When he gives it up, he sees grace acting.
Even then he wants to achieve anything by his own capacities.
When he withdraws himself from the faith in his capacities, grace becomes supergrace.
Supergrace acts at once.
Instead of trying to achieve his own goals, can he try to achieve the divine aim?
If he agrees will his resourcefulness be exercised for that?
In that case, he will witness the infinite emerging from the finite.
Instead of relying on his own capacities will he rely on the Divine capacity?
It will reveal to him the instantaneous miraculousness.
Will he be the horse that drinks, for him to be led to water.
One who is not sleeping cannot be awakened, is the proverb.
Granting that he is willing to drink, any other issue, argument, obstacle can be met with, answered, overcome.
The above statement where he says 'a lady like yourself' is the ultimate flattery.
'Like yourself' means you are the standard for the world.
She said that to Wickham.
Whatever the situation, Man is capable of coming out with his very best, if he chooses.
It matters little that obstacles are there.
Any obstacle, it is said, has its solution inside it.
In that case it is within the human reach.
As long as he can become what he aspires for, he can become that.
If he fails to understand, there is philosophy to explain.
If he knows not the method, the method is available.
Man is employing already those methods in several places.
If he does not know, it can be told.
If he does not want, there is no argument.
If he chooses to act, the shortest route can be shown.
He himself chooses such short routes in his life.
Not only the Hour has come, the Force has descended fifty years ago.
One may not aspire to become the Supramental Being.
One may not aspire to be the world leader.
One may not aspire to be the CEO of his company.
One may not aspire for a promotion due in twenty years.
One does aspire for the next possible promotion due in three years.
He can have no objection to get it now.
If he agrees, let him find the above talent in himself and exercise it. He will get it.
Every next promotion can thus come to him instantly.
He will find himself the CEO of an international company.
If he does not stop there, he can become a Supramental being.
"உன்னைப் போல ஒரு இளம் பெண்மணிக்கு ஹன்ஸ்போர்ட் மிகவும் சுவாரசியமற்றதாக இருக்கும்."
மற்றவரை சந்தோஷப்படுத்த வேண்டும் எனும்பொழுது எல்லா ஆண்களும் மிகச் சிறந்தவற்றையே பேச விரும்புகின்றனர்.
ஆதி கால மனிதனுக்கு நமது அறிவு இருந்தது.
சத்திய ஜீவியத்திற்கு கணப் பொழுதில் அற்புதங்களை நடத்த இயலும்.
30,000 வருடங்களை 30 வருடங்களாக சுருக்கலாம்.
ஒருவர், ஆர்வப்படுவதை அடையலாம்.
இறைவனுக்கு சரணடைந்தால், வேண்டுவது கிடைக்கும்.
எந்த பிரச்சினையின் தீர்வும் அதனுள்ளேயே இருக்கிறது.
பிரபஞ்சத்தில் ஞானம் இருந்தால், அதனை தெரிந்துகொள்ளும் திறன் மனிதனுக்கு உண்டு.
தீமை என்பது உற்பத்தி ஆனதே கிடையாது.
பிரம்மம் இணையானது
எல்லாம் பிரம்ம மயம்.

இந்த எல்லா கூற்றுகளும் மனிதனின் அளவற்ற திறமைகளைக் காண்பிக்கின்றது.
அவனுடைய குறிக்கோளை அடைய அவன் இது போன்ற திறமைகளை உபயோகப்படுத்திக்கொள்கிறான்.
எதை அடைய விரும்பினாலும், அவனுக்கு இரண்டு மனோபாவங்கள் உள்ளன.
ஒன்று கர்மத்தில் நம்பிக்கை.
அதை கைவிடும்பொழுது, அருள் செயல்படுவதை அவன் பார்க்கிறான்.
அப்படியும், அவன் எல்லாவற்றையும் தன்னுடைய சொந்தத் திறமையால் சாதிக்க வேண்டும் என்று விரும்புகிறான்.
தன்னுடைய திறமைகளில் இருக்கும் நம்பிக்கையிலிருந்து வெளி வந்தால், அருள் பேரருளாகும்.
பேரருள் உடனே செயல்படும்.
அவனுடைய சொந்த இலக்கை அடைய முயற்சி செய்யாமல், இறைவனின் குறிக்கோளை அடைய அவன் முயற்சி செய்வானா?
இதற்கு அவன் சம்மதித்தால் அவனுடைய சமயோசிதம் அதற்கு உபயோகப்படுத்தப்படுமா?
அப்படிச் செய்தால், கண்டத்திலிருந்து அகண்டம் எழுவதை அவன் பார்ப்பான்.
அவனுடைய சொந்தத் திறமைகளை நம்பாமல், இறைவனின் திறமைகளை நம்புவானா?
அது அவனுக்கு கணப்பொழுதில் அற்புதத்தைக் காண்பிக்கும்.
குதிரைக்கு தண்ணீர் காட்டுவதுபோல் அவனுக்கும் காண்பிக்க வேண்டுமா.
தூங்குவது போல் நடிப்பவனை எழுப்ப முடியாது என்பது ஒரு பழமொழியாகும்.
அவன் அவ்வாறு நடந்துகொள்வான் எனில் மற்ற எந்த விஷயத்தையும், விவாதத்தையும், தடைகளையும் சந்திக்கலாம், பதிலளிக்கலாம், வெற்றி கொள்ளலாம்.
‘உன்னைப் போல ஒரு பெண்மணி’ என்று அவன் மேலே கூறிய வார்த்தைகள் புகழாரத்தின் உச்சம் ஆகும்.
‘உன்னைப் போல்’ என்பது நீ தான் உலகத்தின் அளவுகோல் என்றாகிறது.
அவள் விக்காமிடம் இதையே கூறினாள்.
நிலைமை எப்படிப்பட்டதாக இருந்தாலும் அவன் தேர்ந்தெடுக்கும்பட்சத்தில். மனிதன் சிறப்பாகவே வெளிப்படுவான்,
தடைகள் இருப்பது ஒரு விஷயமே அல்ல.
எந்தத் தடையாக இருந்தாலும், தீர்வு அதனுள்ளேயே இருக்கும் என்று கூறப்படுகிறது.
அவ்வாறாயின் அது மனிதனுக்கு எட்டும் தூரத்தில்தான் இருக்கிறது.
அவன் ஆர்வப்படுவதை அவன் அடைய முடியும்வரை, அவன் அதுவாக ஆகலாம்.
அவனுக்குப் புரியவில்லை என்றால் விளக்க தத்துவம் இருக்கிறது.
அவனுக்கு முறை தெரியாவிட்டால் முறை இருக்கிறது.
அந்த முறைகளை மனிதன் ஏற்கனவே பல இடங்களில் உபயோகப்படுத்துகிறான்.
அவனுக்குத் தெரியாவிட்டால் அதனை எடுத்துச் சொல்லலாம்.
அவனுக்கு வேண்டாம் என்றால் விவாதம் தேவையில்லை.
செயல்பட விரும்பினால் சுருக்கமான வழியைக் காண்பிக்கலாம்.
அவனே வாழ்க்கையில் அது போன்ற சுருக்கமான வழிகளை தேர்ந்தெடுக்கிறான்.
அத்தருணம் வந்ததோடு மட்டுமல்லாமல், சக்தியும் ஐம்பது வருடங்களுக்கு முன்பே கீழிறங்கி விட்டது.
ஒருவர் சத்திய ஜீவனாக மாற ஆர்வம் கொள்ளாமல் இருக்கலாம்.
ஒருவர் உலகத் தலைவராக மாற ஆர்வம் கொள்ளாமல் இருக்கலாம்.
ஒருவர் அவருடைய நிறுவனத்தின் தலைவராக மாற ஆர்வம் கொள்ளாமல் இருக்கலாம்.
ஒருவர் இருபது வருடங்களுக்குப் பிறகு வர வேண்டிய பதவி உயர்வுக்கு ஆர்வம் காண்பிக்காமல் இருக்கலாம்.
ஒருவர் மூன்று வருடங்களில் வரக்கூடிய பதவி உயர்வுக்கு ஆர்வத்தோடு இருப்பார்
இப்பொழுதே அது கிடைத்தாலும் அவருக்கு எந்த ஆட்சேபணையும் இருக்காது.
அவர் ஒத்துக் கொண்டால், தன்னிடம் உள்ள மேற்கூறிய திறமையைக் கண்டு பிடித்து செயல்படுத்த வேண்டும். அவர் அதைப் பெறுவார்.
ஒவ்வொரு அடுத்த பதவி உயர்வும் இது போல் உடனே கிடைக்கும்.
சர்வதேச நிறுவனத்தின் தலைமைப் பதவியை அவர் அடைவார்.
அவர் அத்துடன் நிறுத்திக்கொள்ளாமல் இருந்தால், சத்திய ஜீவனாக ஆகலாம்.

7. “We have done everything in our power to prevent your time being spent unpleasantly”.
Man’s capacity to speak appropriately is great.
His capacity to speak well unrelated to the fact is greater.
The unknowable formulates itself to the human consciousness and withdraws.
Man formulates himself to his choice and then stops.
Man, in this respect, becomes Brahman.
Of the three powers of Brahman, He says the third is self-absorption.
By self-absorption consciousness becomes Superconscient.
Also on the other side it becomes the Inconscient.

By taking one further step and admitting of partial self-absorption we get a Collins, a perfection in the imperfect condition.
Man is in life representing the subconscious and acts with intuition involved in it.
The involved intuition in the action must be released and raised to the intuition in the superconscient through the conscient.
Releasing the intuition involved in the act is to use this great capacity to rise to the superconscient.
Collins is self-absorbed, he does not see beyond Rosings.
Instead of expanding all the energy in flattering Lady Catherine, he can see why Charlotte married him.
It is possible for him to see her various cultural acquirements.
Should he raise himself to the level of her expectation, all his energies will be spent to make him cultured.
She has all the common sense and cultural sensitivities to transform him thus.
That would raise her from the present mercenary attitude.
The prospect of Longbourn has all the imaginative potential to accomplish the work.
He was educated at Oxford.
The potentials are there.
The scope is there.
The choice is the key.
The willingness to exert in that direction with the resourcefulness exhibited in the above statement is powerful.
He was not unaware of his opportunities.
He spoke them to Elizabeth.
His present purpose was different. The purpose I speak of is different.
There is no joy in being an eternal snob.
If he chose to use all his potentials and endeavour, the result would be great.
Darcy had an aim.
He took the effort.
The transformation in him was magnificent.
Collins could have earned a bishopric on his own merits.
He would have been knighted.
His energy was considerable.
His present dynamism to achieve what he aimed at was considerable.
He had everything but like the original Ape had no idea of his future life.
He left no stone unturned in his chosen field.
His abject submission to Lady Catherine was similar to spiritual surrender.
His was a spiritual profession carrying spiritual power.
Once he set his heart on any work, there was no stopping in the middle.
He was not one who frittered his energy in competition or jealousy.
He did not retaliate unless prodded.
Energy, dynamism, potentials, partner, scope for him were complete.
A case like this is a good example for spiritual transformation.
He had Darcy before him as an adorable example.
"நீ சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் எங்களால் இயன்ற எல்லாமும் செய்திருக்கிறோம்."
பொருத்தமாக பேசும் மனிதனின் திறமை சிறப்பானது.
விஷயத்திற்குப் பொருத்தமில்லாத அவனது பேச்சு அதை விட சிறப்பானது.
அறியமுடியாதது மனித ஜீவியமாக உருவாகி, பின் வாங்கி விடுகிறது.
மனிதன் தன் விருப்பப்படி தன்னையே உருவகப்படுத்திக்கொண்டு பிறகு நின்று விடுகிறான்.
இந்த விஷயத்தில் மனிதன் பிரம்மமாகிறான்.
பிரம்மத்தின் மூன்று சக்திகளில் மூன்றாவது, சுய கிரகிப்பு என்று பகவான் கூறுகிறார்.
சுய கிரகிப்பு மூலம் ஜீவியம் உயர் ஜீவியமாகிறது.
வேறொரு பக்கத்தில் அது ஜட இருளாகிறது.
ஓரடி முன் சென்று சுயகிரகிப்பின் ஒரு பகுதியை அனுமதித்தால் நமக்கு காலின்ஸ் கிடைப்பான், குறையான நிலையில் ஒரு நிறைவு.
வாழ்க்கையில் உள்ள மனிதன் ஆழ்மனத்தின் பிரநிதியாக இருக்கிறான், அதிலுள்ள உள்ளுணர்வுடன் செயல்படுகிறான்.
செயலில் உள்ள உள்ளுணர்வை விடுவித்து, ஜீவனின் மூலம் உயர் ஜீவியத்தில் இருக்கும் உள்ளுணர்வுக்கு அதனை உயர்த்த வேண்டும்.

செயலில் உள்ள உள்ளுணர்வை விடுவித்து, உயர் ஜீவியத்திற்கு உயர இந்த திறமையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
காலின்ஸ் தனக்குள்ளேயே ஆழ்ந்து இருப்பதால் ரோசிங்ஸைத் தாண்டி அவனால் பார்க்க முடிவதில்லை.
லேடி காதரினை புகழ்வதிலேயே தன்னுடைய எல்லா சக்திகளையும் செலவழிப்பதை விட்டு விட்டு, ஷார்லெட் எதற்காக தன்னை திருமணம் செய்து கொண்டாள் என்பதை அவன் பார்க்க வேண்டும்.
அவளுடைய பல்வேறு கலாச்சார திறமைகளை அவனால் பார்க்க இயலும்.
அவள் எதிர்பார்க்கும் நிலைக்கு அவன் உயர்ந்தால், அவனுடைய எல்லா சக்திகளும் அவனை நாகரிகமானவனாக மாற்ற உதவும். அவனை அவ்வாறு திருவுருமாற்ற அவளுக்கு போதிய அறிவும், கலாச்சார உணர்வுகளும் இருக்கின்றன.
தற்பொழுதைய ஆதாய மனப்பான்மையிலிருந்து அது அவளை உயர்த்தும்.
எதிர்கால லாங்பர்னுக்கு, வேலையை சாதிக்கத் தேவையான எல்லா கற்பனையான சாத்தியக்கூறும் இருக்கிறது.
அவன் படித்தது ஆக்ஸ்போர்ட்-ல்.
திறமைகள் இருக்கின்றன.
வாய்ப்பு இருக்கிறது.
தேர்ந்தெடுத்தலே திறவு கோலாகும்.
மேற்கூறப்பட்ட வார்த்தைகளில் வெளிப்படும் திறமைகளுடன், அந்த திசையில் முயற்சி எடுக்கும் விருப்பம், சக்தி வாய்ந்தது.
அவனுடைய வாய்ப்புகளைப் பற்றி அவனுக்குத் தெரியாமலில்லை.
அவைகளைப் பற்றி அவன் எலிசபெத்திடம் பேசினான்.
அவனுடைய தற்பொழுதைய நோக்கம் வேறாக இருந்தது. நான் கூறும் நோக்கம் வேறு.
எப்பொழுதும் குழைபவனாக இருப்பதில் சந்தோஷம் இருக்காது.
அவனது திறமைகளையும் முயற்சியையும் பயன்படுத்த முனைந்தால், பலன் மிகப் பெரியதாக இருக்கும்.
டார்சிக்கு இலட்சியம் இருந்தது.
அவன் முயற்சி எடுத்தான்.
அவனது திருவுருமாற்றம் பிரம்மாண்டமானது.
காலின்ஸ் அவனது சொந்த திறமைகளாலேயே, பாதிரியார் பதவியைப் பெற்றிருக்க முடியும்.
அவனுக்கு சர் பட்டம் கிடைத்திருக்கும்.
அவனுடைய சக்தி அளவற்றதாக இருந்தது.
அவனுடைய இலட்சியத்தை அடைய அவனுக்கு இருந்த தற்பொழுதைய சக்தி அளவற்றதாக இருந்தது.
அவனுக்கு எல்லாமும் இருந்தன, ஆனால் ஆதிகால மனிதக் குரங்கு போல் எதிர்காலத்தைப் பற்றி எந்த சிந்தனையும் இருக்கவில்லை.
அவன் தேர்ந்தெடுத்திருந்த களத்தில் எந்த ஒரு முயற்சியையும் அவன் விட்டு வைக்கவில்லை.
லேடி காதரினுக்கு அவன் முழுமையாகச் சரணடைந்தது ஆன்மீகச் சரணாகதி போலாகும்.
அவனுடையது, ஆன்மீகச் சக்தியைத் தாங்கி வரும் ஆன்மீகப் பணி.
ஒரு வேலையில் அவன் மனது வைத்து விட்டால், நடுவில் நிறுத்துவது என்பதே கிடையாது.
போட்டி, பொறாமையில் தனது சக்தியை விரயம் செய்யும் நபர் அவனல்ல.
கிளப்பினால்தான் எதிர்ப்பான்.
சக்தி, தீவிரம், திறமைகள், துணை, வாய்ப்பு இவை யாவும் அவனிடத்து முழுமையாக இருந்தன.
ஆன்மீகத் திருவுருமாற்றத்திற்கு அவன் ஒரு சிறந்த உதாரணமாக விளங்குவான்.
போற்றத்தக்க உதாரணமாக அவன் முன்னால் டார்சி இருக்கிறான்.

Elizabeth was eager with her thanks and assurances of happiness. She had spent six weeks with great enjoyment; and the pleasure of being with Charlotte, and the kind attentions she had received, must make her feel the obliged. Mr. Collins was gratified, and with a more smiling solemnity replied –
எலிசபெத் தனது நன்றியைத் தெரிவிக்க ஆவலாக இருந்தாள், மகிழ்ச்சியாக இருந்ததாக உறுதியளித்தாள். ஆறு வாரங்கள், அவள் ஷார்லெட்டுடன் சேர்ந்து இருந்த சந்தோஷத்திற்கும், அன்பான கவனிப்பு அவளுக்கு கிடைத்ததற்கும் அவள்தான் நன்றிக் கடன்பட்டிருக்க வேண்டும். திரு. காலின்ஸிற்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது, மேலும் அதிக புன்னகையுடன் சிரத்தையுடன் பதிலளித்தான்.

8. "Elizabeth was eager with thanks and assurances of happiness".
Reality often answers formality.
Each sticks to his own swabhava.
Man moving away from his swabhava takes great effort to do so.
Ego has fully usurped human activities.
Existence is equally pervasive in life.
The moment Man quits ego he is in the Presence of existence.

It is true of social life also.
Man going out of his house till he returns home acts from ego, understands from his own point of view. He is turned inward.
Should he look at events outside, no event is egoistic.
Every event takes place from the social point of view.
Man never sees it except he finds himself inhibited each time he tries to act.
Man has a centre of functioning.
It is his ego.
He is oblivious of it.
Looking at the Sun, he sees an object; it never strikes him he is looking at it egoistically.
Great souls are great souls because they do not always see from the ego.
To view non-egoistically, one must be aware he is an ego.
Presently only the poet and yogi have that view.
Sri Aurobindo in 'Pure Existent' asks us to take a non-egoistic view.
It means Man can do so, because he is not all ego.
When you see your child playing you see him as your child. It does not mean you cannot see him as a human being outside of being your child.
We rarely do so, but we are certainly capable of it.
It is the first step in yoga.
He who withdraws from his ego sees the ocean of energy as a **first thought. It is an egoistic thought.**
Even when you have withdrawn from the ego to the point of seeing the ocean of energy, the ONLY view he can take in thought is egoistic.
First he withdraws from the ego-sense.
He goes into ego-thought.
Further he must withdraw from ego-thought into non-ego existence.
Ego is so pervasive that at every step it pursues us.
Till he feels he is infinite the finite ego pursues him.
Ego pursues him till he reaches moksha, even into moksha.
Ego is a creation of Mind.
Mind can destructure his ego which is Nirvana.
It is such a powerful experience that Buddha felt that the Self too could be got rid of thus.
Self is not the creation of Mind for Mind to detach itself.
As ego pursues after the ocean of energy reveals, so Mind pursues after ego is dissolved.
"எலிசபெத் தனது நன்றியைத் தெரிவிக்க ஆவலாக இருந்தாள், சந்தோஷமாக இருந்ததாக உறுதி அளித்தாள்."
சம்பிரதாயத்திற்கு உண்மை பல சமயங்களில் பதிலளிக்கும்.
ஒவ்வொருவரும் அவரவருடைய சுபாவத்தின்படி நடந்து கொள்கின்றனர்.
சுபாவத்தை மீறுவதற்கு மனிதன் பெரு முயற்சி எடுக்கிறான்.
மனித நடவடிக்கைகளை அகந்தை முற்றிலும் கைப்பற்றி உள்ளது.
வாழ்க்கையில் பெருவாழ்வு சமமாகப் பரவி உள்ளது.
அகந்தை அழியும் தருணத்தில் மனிதன் சத்-ல் இருப்பான்.
இது சமூக வாழ்க்கைக்கும் உண்மை.
மனிதன் வீட்டிலிருந்து வெளியே சென்று திரும்பி வரும்வரை அகந்தையிலிருந்து செயல்படுகிறான், தன்னுடைய கண்ணோட்டத்திலேயே புரிந்து கொள்கிறான். அவன் உள்நோக்கியே இருக்கிறான்.
புற நிகழ்ச்சிகளைப் பார்த்தால் எதுவும் அகந்தை கிடையாது.
ஒவ்வொரு நிகழ்ச்சியும் சமூக கண்ணோட்டத்தில் நிகழ்கிறது.
முயற்சி எடுக்கும் ஒவ்வொரு சமயத்திலும் தனக்கு தடை ஏற்படுவதை பார்க்கும் பொழுதுதான் மனிதன் இதனை கவனிக்கிறான்.
செயல்படுவதற்கு மனிதனுக்கு ஒரு மையம் உள்ளது.
அது அவனுடைய அகந்தை.
அது அவனுக்குத் தெரியவில்லை.
சூரியனைப் பார்க்கும் பொழுது அவன் ஒரு பொருளைப் பார்க்கிறான், அதை அகந்தையுடன் பார்க்கிறோம் என்று அவனுக்குத் தோன்றுவதே இல்லை.
உயர்ந்த ஆன்மாக்கள் அகந்தையின் பார்வையோடு எப்பொழுதும் பார்ப்பதில்லை என்பதால், உயர்ந்த ஆன்மாக்களாக இருக்கின்றன.
அகந்தையின்றி பார்க்க வேண்டுமெனில், தான் அகந்தை என்று ஒருவருக்குத் தெரிய வேண்டும்.
தற்பொழுது கவிஞனுக்கும் யோகிக்கும் தான் அந்த பார்வை உண்டு.

சத் புருஷனில் ஸ்ரீ அரவிந்தர், நம்மை அகந்தையற்ற பார்வையை கையாளச் சொல்கிறார்.
மனிதன் முற்றிலும் அகந்தையாக இல்லாததால், அவனால் அது முடியும் என்றாகிறது.
நமது குழந்தை விளையாடும் பொழுது, அது நம் குழந்தையாக நம் கண்ணுக்குத் தெரியும். நமது குழந்தை என்பதையும் தாண்டி அதை ஒரு மனித ஜீவன் என்று பார்க்க முடியாது என்பதாகாது.
இவ்வாறு நாம் பார்ப்பது அரிது என்றாலும் நம்மால் நிச்சயமாக அது முடியும்.
இதுதான் யோகத்தில் முதல் படி.
தன்னுடைய அகந்தையிலிருந்து விடுபடும் ஒருவன், எழுந்தவுடன் **முதல் எண்ணமாக** கடல் போன்ற சக்தியைப் பார்க்கிறான். **இது அகந்தையுடன் கூடிய எண்ணமாகும்.**
சக்திப் பிரவாகத்தைப் பார்க்கும் அளவிற்கு அகந்தையிலிருந்து விடுபட்டாலும், எண்ணத்தில் எழும் ஒரே பார்வை அகந்தையுடன் கூடியதுதான்.
முதலில் அவன் அகந்தை உணர்விலிருந்து விடுபடுகிறான்.
அகந்தை எண்ணத்திற்குச் செல்கிறான்.
மேலும், அவன் அகந்தை எண்ணத்திலிருந்து விடுபட்டு அகந்தையற்ற சத்-க்குப் போக வேண்டும்.
அகந்தை அவ்வளவு பரவியுள்ளது, ஒவ்வொரு அடியிலும் அது நம்மை பின் தொடருகிறது.
அவன் அகண்டம் என உணரும்வரை கண்டமான அகந்தை அவனை பின் தொடரும்.
மோக்ஷம்வரை அகந்தை அவனை பின் தொடரும், மோக்ஷத்திற்குச் சென்ற பின்பும் தொடரும்.
அகந்தை மனத்தின் படைப்பு.
அவனது அகந்தையை மனத்தால் அழித்து விட முடியும், அதுதான் நிர்வாண நிலை.
இது ஒரு சக்தி வாய்ந்த அனுபவம் என்பதால் சுயத்தையும் இதுபோல் அழித்து விடலாம் என புத்தர் உணர்ந்தார்.
மனம் பிரம்மத்தைக் கரைக்க, மனத்தின் படைப்பு அல்ல சுயம்.
சக்திக்கடல் வெளிப்பட்ட பின்பும் அகந்தை தொடருவதால், அகந்தை அழிந்த பின்பும் மனம் தொடருகிறது.

9. "She had spent six weeks with great enjoyment".
The subconscious fact is more real, overridingly real over the surface fact.
She never wanted to visit him, she reluctantly agreed when Charlotte insisted.
Later the unhelpful atmosphere at home made her anxiously look for the visit.
It is true Charlotte offered kind attentions.
She dined at Rosings and went there for tea.
What made her greatly enjoy was the coming proposal and the proposal she wholeheartedly rejected.
Subconsciously she came to Hunsford to meet Darcy.
In the same sense, she knew his proposal was not the end in itself.
She knew the extent of Darcy's commitment.
She also knew the final outcome.
It is this subconscious knowledge that gave her great enjoyment.
A devotee successfully launched on a project which at its beginning expanded over a hundred times.
In spite of apparent serious obstacles, everything went more than well.
The planned investment came down 60%.
In 1½ years an unforeseen luck that could increase the income ten times presented itself.
It was a time and a type of project which could not receive outside help.
The law of the land changed, making outside help possible.
Twice the help asked for was offered.
The project opened a dimension of public service meeting the cherished ideals of the founder and it was more than fulfilled.
By a mysterious invisible change total failure was presented.
As the devotee had fully adhered to Mother, he did not regret even a single development. He did not know why.
Another project just twice in size and a hundred times more profitable was offered to him unsolicited, opening up endless expansion.
Elizabeth abused, Darcy's letter was bitter, but she had "great enjoyment".
This is the truth of the subconscious fact.
"ஆறு வாரங்கள் அவள் மிகவும் சந்தோஷமாக காலத்தை கழித்தாள்."
ஆழ்மன உண்மை மேலும் உண்மையானது, மேற்பரப்பு விஷயத்தைவிட உண்மையானது.
அவளுக்கு அவனை பார்க்க வருவதில் இஷ்டமே இல்லை, ஷார்லெட் வற்புறுத்தியபோது இஷ்டமில்லாமல் அவள் சம்மதித்தாள்.
அதற்குப் பிறகு வீட்டிலிருந்த மோசமான சூழல் அந்த பிரயாணத்தை அவள் ஆவலுடன் எதிர்பார்க்கும்படி மாற்றியது.
ஷார்லெட் அன்புடன் கவனித்துக் கொண்டாள் என்பது உண்மை.

ரோசிங்ஸில் விருந்துண்ண சென்றாள், தேனீர் அருந்தவும் சென்றாள்.
வரப் போகும் திருமண பேச்சும், மனப்பூர்வமாக மறுத்த மணப் பேச்சும் அவளை மிகவும் சந்தோஷத்திற்குள்ளாக்கியது.
ஆழ்மனதில், டார்சியை சந்திப்பதற்காக அவள் ஹன்ஸ்போர்டிற்கு வந்தாள்.
இதே நோக்கில் அவனுடைய திருமண பேச்சும், அதுவே ஒரு முடிவு அல்ல என்பதும் அவள் அறிவாள்.
டார்சியின் ஈடுபாட்டின் அளவு அவளுக்குத் தெரிந்திருந்தது.
அதனுடைய முடிவு பற்றியும் அவளுக்குத் தெரியும்.
இந்த ஆழ்மன அறிவுதான், அவளுக்கு பெரிய சந்தோஷத்தை அளித்தது.
ஒரு திட்டத்தை ஓர் அன்பர் வெற்றிகரமாக தொடங்கினார், அது ஆரம்பத்திலேயே நூறு மடங்கு விரிவடைந்தது.
வெளிப்படையாக இருந்த மோசமான தடைகளை மீறி எல்லாம் சிறப்பாகவே செயல்பட்டுக் கொண்டிருந்தது.
தீர்மானித்திருந்த முதலீடு, 60%ஆக குறைந்தது.
1½ வருடங்களில், வருமானத்தை பத்து மடங்கு உயர்த்தும் அளவிற்கு எதிர்பார்க்காத அதிர்ஷ்டம் வந்தது.
வெளியிலிருந்து உதவி பெற்றுக்கொள்ள முடியாத விதத்தில் நேரமும் திட்டத்தின் வகையும் இருந்தன.
நாட்டின் சட்டம் மாறியது, வெளி உதவி சாத்தியமாயிற்று.
இரண்டு முறை கேட்ட உதவி கிடைத்தது.
அத்திட்டம், பொது ஜன சேவைக்கான புதிய பரிமாணத்திற்கு வழிவகுத்து ஸ்தாபகரின் போற்றப்பட்ட இலட்சியங்களை சிறப்பாக பூர்த்தி செய்தது.
மர்மமான, கண்ணுக்குத் தெரியாத மாற்றம் ஏற்பட்டு முழு தோல்வி அடைந்தது.
அந்த அன்பர், அன்னையிடம் பூரணமாக இருந்ததால், நடந்தவை எதற்கும் வருந்தவில்லை. ஏன் என்று அவருக்கே தெரியவில்லை.
இரண்டு மடங்கு பெரியதாகவும், நூறு மடங்கு இலாபகரமாகவும் உள்ள வேறு ஒரு திட்டம், அவர் கேட்காமலேயே அவருக்கு அளிக்கப்பட்டது, முடிவற்ற விஸ்தரிப்புக்கு வழிகோலிற்று.
எலிசபெத் நிந்தனை செய்தாள், டார்சியின் கடிதம் கசப்பாக இருந்தது, ஆனால் அவளுக்கோ பெரிய மகிழ்ச்சி கிடைத்தது.
இதுதான் ஆழ்மன விஷயத்தின் உண்மை.

10. “The pleasure of being with Charlotte and the kind attentions she received”.
Charlotte had always been her good friend of intimacy.
Now that Elizabeth had come and Charlotte knew she needed a compensation to her husband’s energetic outpourings, she made it up by kind attention.
They are certainly highly enjoyable in the context of invitations from Rosings.
Recently the continued visits from the gentlemen, however embarrassing from Darcy’s side, made life pleasurable.
The Colonel’s frequent visits, particular attention to Elizabeth that gave rise to matrimonial speculations **were enjoyable in the expectation.**
Beyond this lies the subconscious knowledge spoken of earlier.
She heard from Charlotte that Darcy was worth ten times Wickham.
Charlotte means to Elizabeth goodwill as well as one who thinks of her marrying Darcy.
Even in the subconscious it is no mean pleasure.
In their conversations, Pemberley and Georgiana might have been heard directly or otherwise.
That she was going to settle down at Pemberley was a future fact. As the sun rising at 6.00 a.m. reveals as light an hour before, all facts that will come in future arrive on our personality in the subtle plane, if not in detail, at least in essence.
To her the future marriage of Jane was as important as her marriage.
The process had already started in Darcy’s letter.
It is true the tragedy of elopement too was in store.
In actual psychological fact, Lydia’s marriage was no ordinary relief to her; one more thing she may not have noted even after the event was completed. Wickham was prevented from idleness by his marriage.
She was outraged by Darcy’s charge of profligacy and extravagance of Wickham, more than what Georgiana had consented to.
She never wanted her erstwhile love to be ruined.
Now at Hunsford, her visit to Pemberley was made possible by her change of attitude.
Lydia’s adventure, its outcome of her marriage and Jane’s marriage were subconsciously LIVE in her making her exult.
“ஷார்லெட்டுடன் சேர்ந்து இருந்த சந்தோஷமும், அவளுக்கு கிடைத்த அன்பான கவனிப்பும்.”
ஷார்லெட் எப்பொழுதுமே அவளுடைய நெருக்கமான தோழியாக இருந்திருக்கிறாள்.

எலிசபெத் தற்பொழுது அங்கு வந்திருப்பதால், தன்னுடைய கணவரின் அளவுக்கு அதிகமான பேச்சை ஈடுகட்ட வேண்டியது அவசியம் என்று ஷார்லெட்டுக்கு தெரியும் என்பதால், அன்பான கவனிப்பால் அதை ஈடுசெய்தாள்.

ரோசிங்ஸிலிருந்து அழைப்பு வந்தது அவர்களுக்கு நிச்சயமாக சந்தோஷமான விஷயமாக இருந்தது.

சமீப காலமாக ஆண்கள் இருவரும் தொடர்ந்து வருகை புரிந்தது, டார்சியின் பக்கத்திலிருந்து சங்கடமான விஷயமாக இருந்த போதும், வாழ்க்கையை சந்தோஷமாக ஆக்கியது.

கர்னல் அடிக்கடி வந்தது, எலிசபெத்திற்கு தனிப்பட்ட கவனம் கொடுத்தது, அதனால் திருமணத்திற்கான **யூகங்களுக்கு இடம் கொடுத்தது, எல்லாமே அனுபவிக்கும்படியாக இருந்தன.**

முன்னம் பேசப்பட்ட ஆழ்மன ஞானம் இதற்குப் பின்னால் உள்ளது.

விக்காமைவிட டார்சி பத்து மடங்கு தகுதியானவன் என்று ஷார்லெட் மூலம் அவள் கேள்விப்படுகிறாள்.

எலிசபெத்திடம் ஷார்லெட்டுக்கு நல்லெண்ணமும் உண்டு, டார்சியை அவள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும் நினைக்கிறாள்.

ஆழ்மனதில்கூட அது சந்தோஷமாக இல்லை.

அவர்களுடைய பேச்சில் பெம்பர்லியும், ஜார்ஜியானாவும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எழுந்திருக்கலாம்.

பெம்பர்லியில் அவள் நிரந்தரமாகத் தங்கப்போவது எதிர்கால உண்மை. சூரியன் காலை ஆறு மணிக்கு உதயமாகும் முன் வெளிச்சமாகத் தெரிவதுபோல், எதிர்காலத்தில் நடக்கக் கூடிய விஷயங்கள் எல்லாம் சூட்சும நிலையில் விவரமாக இல்லாவிட்டாலும் அதனுடைய சாரம், நமது ஆளுமையில் வந்து விடும்.

ஜேனுக்கு எதிர்காலத்தில் நடக்கப் போகும் திருமணம், அவளுடைய திருமணம்போல் அவளுக்கு அவ்வளவு முக்கியம் வாய்ந்ததாக இருந்தது.

டார்சியின் கடிதத்தின் மூலம் அதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டன.

ஓடிப்போகும் ஆபத்தும் காத்துக் கொண்டிருந்தது உண்மைதான்.

மனரீதியாக, லிடியாவின் திருமணம், நிஜத்தில் அவளுக்கு பெரிய நிம்மதியை தந்ததை, அந்நிகழ்ச்சி முடிந்த பிறகும் அவள் கவனிக்காமல் இருந்தது மற்றொரு விஷயம். விக்காம் சோம்பேறியாக இருக்க முடியாமல் அவனுடைய திருமணம் அவனைத் தடுத்து நிறுத்தியது.

ஜார்ஜியானா இசைவு தந்த விஷயத்தைக் காட்டிலும், விக்காமுடைய தீய ஒழுக்கத்தைப் பற்றியும், அவனுடைய ஊதாரித்தனத்தைப் பற்றியும் டார்சி பேசியது அவளை மிகவும் கோபத்திற்குள்ளாக்கியது.

அவளுடைய முந்தைய காதலுக்கு கெடுதல் வருவதை அவள் விரும்பவே இல்லை.

தற்பொழுது ஹன்ஸ்போர்டில் உள்ள அவளுக்கு, பெம்பர்லிக்குப் போவது, அவளுடைய மாறிய மனப்பான்மையால் சாத்தியமாயிற்று.

லிடியாவின் சாகசம், அதனுடைய பலனாக அவளுடைய திருமணம், ஜேனுடைய திருமணம் இவை யாவும் அவளுடைய ஆழ்மனதில் உயிருடன் இருந்ததால், அவள் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தாள்.

11. "With a more smiling solemnity replied".

Man looks to occasions to please himself.

Serious dynamic Men constantly look for intense pleasure.

Collins was a fully organized character dynamically constituted with a will to achieve fully and at once.

These are all great characteristics.

A great talent in a low context or another context makes one clownish or beside the point.

He tried his best to be solemn.

Solemnity in a clown makes him ridiculous or at least a dumb doll.

He smiled as he was pleased by her reply.

His greatest satisfaction would have been to hear out of her mouth directly or indirectly that she had missed a golden opportunity.

His thought had power and became true later, not as he expected but as life would sanction when she went to Pemberley.

It was not she who missed an opportunity.

Life tells him that it was he who missed the opportunity that awaited him.

This is presentiment in the reverse.

If a story is examined in this light, the later events forecast in one fashion or another can be seen fully.

One who knows how to see the future in the present or the past in the future will be able to find every event so hinted.

When Mrs. Gardiner spoke of not excluding her from Pemberley, she anticipated Mrs. Bennet thus excluded.

His 'tolerable' ends up her describing in her own emotions his changed behaviour at Pemberley 'tolerable'.

Caroline said it was kindly meant when she warned Elizabeth about Wickham.

Elizabeth's behaviour, not acting as a jealous rival, accepting Caroline's olive branch was an act kindly meant.

"மேலும் அதிக புன்னகையுடன் மனமார்ந்து பதிலளித்தான்."

மனிதன் தன்னையே திருப்திப்படுத்திக்கொள்ளும் தருணங்களை எதிர்நோக்கிய வண்ணம் இருக்கிறான். தீவிரமான ஆற்றல் வாய்ந்த ஆண்கள் எப்பொழுதும் உடனடி சந்தோஷத்தை எதிர் நோக்கிய வண்ணம் இருப்பார்கள்.
காலின்ஸ் முழுமையாக முறைப்படுத்தப்பட்டுள்ள சுறுசுறுப்பான குணத்தைக் கொண்டவனாக இருக்கிறான். உடனடியாக முழுமையாக சாதிப்பதற்கு உறுதி கொண்டவனாகவும் இருக்கிறான்.
இவை எல்லாம் பெரிய குணாதிசயங்கள் ஆகும்.
சிறிய விஷயத்திலோ அல்லது வேறு ஒரு விஷயத்திலோ உள்ள பெரிய திறன், ஒருவனை கோமாளியாக்கும், அதற்கு மேலும் அவனை மாற்றும்.
அவன் அமைதியாக இருப்பதற்கு பெரும் முயற்சி மேற்கொண்டான்.
ஒரு கோமாளியின் அமைதி அவனை கேலிப்பொருளாக ஆக்குகிறது, ஒரு ஊமை பொம்மை போலாவது ஆக்கும்.
அவளுடைய பதிலால் திருப்தி அடைந்த அவன் புன்னகைத்தான்.
ஒரு பொன்னான வாய்ப்பை தவற விட்டு விட்டோம் என்று நேராகவோ, மறைமுகமாகவோ, அவளிடமிருந்து கேட்பது அவனுக்கு மிகப் பெரிய திருப்தியாக இருந்திருக்கும்.
அவனது எண்ணங்களுக்கு சக்தி இருந்தது. அவள் பெம்பர்லிக்கு சென்றபோது அவன் எதிர்பார்த்த அளவுக்கு இல்லாவிட்டாலும், வாழ்வு அனுமதிக்கும் அளவிற்கு அவை உண்மை ஆயின.
வாய்ப்பைத் தவற விட்டது அவள் அல்ல.
காத்திருந்த வாய்ப்பைத் தவற விட்டது அவன்தான் என்று வாழ்வு அவனிடம் கூறுகிறது.
இது உள்ளுணர்வால் முன்னமே அறிவதன் எதிரிடை.
இந்தக் கண்ணோட்டத்தில் கதையை ஆராய்ந்தால் பின்னால் நடக்கப் போகும் நிகழ்ச்சிகள், ஏதாவது ஒரு விதத்தில் முன்கூட்டியே தெரிகிறது என்பதை முழுவதுமாகப் பார்க்கலாம்.
நிகழ்காலத்தில் எதிர்காலத்தையும் அல்லது கடந்தகாலத்தை எதிர்காலத்திலும் ஒருவருக்கு பார்க்க முடிந்தால், அவருக்கு குறிப்பை உணர்த்தும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கண்டுபிடிக்க முடியும்.
திருமதி கார்டினர், தான் பெம்பர்லியிலிருந்து ஒதுக்கப்படும் வாய்ப்பில்லை என்று பேசிய பொழுது, திருமதி பென்னட் ஒதுக்கப்பட்டு விடுவாள் என்பதை முன்கூட்டியே உணர்கிறாள்.
அவன் அவளை ‘பரவாயில்லை’ என்று முன்பு கூறியது, அவனது மாறிய நடத்தையால் அவள் உணர்வுபூர்வமாக, அவனைப்பற்றி ‘பரவாயில்லை’ என்று கூறுவதில் முடிந்தது.
எலிசபெத்திடம் விக்காமைப் பற்றி காரலின் எச்சரிக்கும்போது, அது அன்பினால் கூறப்பட்டது என்றாள்.
காரலினுடைய சமாதானத்தை ஏற்றுக்கொண்ட எலிசபெத், பொறாமை பிடித்த எதிரியாக நடந்து கொள்ளாமல் இருந்தது ஒரு அன்பான செயலாகும்.

"*It gives me the greatest pleasure to hear that you have passed your time not disagreeably. We have certainly done our best; and most fortunately having it in our power to introduce you to very superior society, and, from our connexions with Rosings, the frequent means of varying the humble home-scene, I think we may flatter ourselves that your Hunsford visit cannot have been entirely irksome. Our situation with regard to Lady Catherine's family is indeed the sort of extraordinary advantage and blessing which few can boast. You see on what a footing we are. You see how continually we are engaged there. In truth, I must acknowledge that, with all the disadvantages of this humble parsonage, I should not think any one abiding in it an object of compassion, while they are sharers of our intimacy at Rosings."*
“உனக்குப் பிடித்தமான முறையில் நீ இங்கு நேரத்தை செலவழித்தாய் என்று கேட்க மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. எங்களால் முடிந்த அளவிற்கு நாங்கள் எல்லாம் சிறப்பாகவே செய்தோம். மிகப் பெரிய இடத்தை எங்களால் உனக்கு அறிமுகம் செய்து வைக்க முடிந்தது மிகப் பெரிய அதிர்ஷ்டம்தான். மேலும் ரோஸிங்ஸுடன் எங்களுக்கு இருக்கும் தொடர்பினால் இந்த எளிய இல்லத்திலேயே இருக்காமல் மாறுதலாக வேறு இடத்திற்கும் சென்றது, உனக்கு ஹன்ஸ்போர்ட் வருகை முற்றிலும் சோர்வாக இருந்திருக்காது என்று சொன்னால் மிகையாகாது. லேடி காதரின் குடும்பத்துடன் எங்களுக்கு இருக்கும் சம்பந்தம் மிகப் பெரிய அனுகூலமான விஷயம், கடவுளின் கருணை என்றும் சொல்லலாம், மிகச் சிலருக்கே இந்தப் பெருமை கிடைக்கும். எங்களுடைய ஸ்தானம் எப்படிப்பட்டது என்பதைப் பார். தொடர்ந்து எங்களுக்கு அங்கு அழைப்பு இருந்ததை நீ பார்த்தாய். உண்மையை சொல்ல வேண்டும் என்றால், இந்த எளிய இல்லத்தில் எவ்வளவுதான் குறை இருந்தாலும், இங்கு நிரந்தரமாக வசிப்பவர் யாவரும் ரோஸிங்ஸுடன் இருக்கும் எங்களுடைய நெருக்கமான நட்பில் பங்கு போட்டுக் கொள்வதால், இரக்கத்திற்குரியவர்களே அல்ல.”

12. “to introduce you to very superior society”.
More than enjoying the very superior society, Man loves to introduce all his friends to that society.
Corruption in Money, nepotism in influence are two known vices.
Every society uses only a fraction of its power for its development.
Around a centre of power, as in a reservoir or a river there is a vast source of ground water all around. There is an unlimited inexhaustible power untapped because people do not know how to draw upon it rightly.

Corruption and nepotism are social recognitions of such power drawn wrongly.
The Man who has no values is corrupt.
If he has values he will develop such skills, as when McKinsey explained how $ 48 billions and $ 340 billions could be raised by India and China.
Values are the knowledge that converts into capacities unknown to society.
Values to me are spiritual skills.
Today society everywhere is booming, buoyant, surging with dynamic energy.
There is a corresponding endless reservoir of unused social energy.
Values at the Individual level can make a person 10,000 times more prosperous by excessively honourable methods.
Collective spiritual values can now found a world government, render the entire society spiritually awake and bring now a few thousand years from now.
It is not enough one has the knowledge.
He must be able to protect himself from the occult worlds of circumconscient and the intraconscient.
He must have the patience HE speaks of in "The Four Aids".
One who has been working at his very best can attempt it successfully if he takes to consecration at the subconscious level.
We see in Collins and Wickham personalities who can excel Darcy if their potentials are harnessed by the highest values.
"உயர்ந்த சமூகத்திற்கு உன்னை அறிமுகப்படுத்த வேண்டி."
உயர்ந்த சமூகத்தை அனுபவிப்பதுடன், அந்த சமூகத்தை தன்னுடைய எல்லா நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்த மனிதன் விரும்புவான்.
பண விவகாரத்தில் ஊழல், செல்வாக்கில் உறவினர்களுக்கு காட்டும் தனிச் சலுகை, இவை தெரிந்த இரண்டு தீய பழக்கங்களாகும்.
எல்லா சமுதாயமும் அதனுடைய சக்தியில் ஒரு பகுதியைத்தான் அதனுடைய வளர்ச்சிக்காக பயன்படுத்துகின்றன.
ஒரு நீர்த்தேக்கம் அல்லது நதியைச் சுற்றி நிலத்தடி நீர் இருப்பது போல், அதிகாரத்தின் மைய இடத்தைச் சுற்றி உள்ள அளவற்ற தீர்க்கமுடியாத சக்தி உபயோகப்படுத்தப்படாமல் இருக்கிறது, ஏனெனில் அதனை எவ்வாறு சரியாக பயன்படுத்துவது என்று மக்களுக்குத் தெரியவில்லை.
ஊழலும், உறவினர்களுக்கு சலுகையும், தவறாகப் பயன்படுத்தப்படும் அதிகாரத்தின் சமூக அங்கீகாரங்களாகும்.
பண்பற்ற மனிதன் ஊழல் மலிந்தவனாக இருக்கிறான்.
எவ்வாறு இந்தியாவும், சீனாவும் 4800கோடி டாலரும், 34000கோடி டாலரும் சம்பாதிக்கலாம் என்று மெக்கன்சி விவரித்தது போல், பண்புகள் இருந்தால் திறமைகள் எழும்.
அறிவாக விளங்கும் பண்புகளே சமூகம் அறியாத திறமைகளாக மாறுகிறது.
ஆன்மீகத் திறமைகளே நமக்கு பண்புகளாகும்.
இன்று சமூகம் எங்கும் விரைவாக வளர்கிறது, மகிழ்ச்சியாக இருக்கிறது, ஆற்றல் வாய்ந்த சக்தியுடன் வெளிப்படுகிறது.
உபயோகப்படுத்தப்படாத சமூக சக்தி அளவில்லாமல் தேங்கி உள்ளது.
தனிப்பட்ட அளவில் ஒருவருக்கு இருக்கும் பண்புகள் அவரைப் பத்தாயிரம் மடங்கு மிகவும் கௌரவமான முறையில் வளமாக்கும்.
ஆன்மீகப் பண்புகள் மொத்தமாக சேர்ந்து இப்பொழுது உலக அரசாங்கத்தை ஸ்தாபிக்கலாம், சமூகம் மொத்தத்திற்கும் ஆன்மீக எழுச்சியைக் கொண்டு வரலாம், பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின் நடக்கவிருப்பதை இப்பொழுதே கொண்டு வரலாம்.
ஒருவருக்கு ஞானம் மட்டும் இருந்தால் போதாது.
சூழல், சூட்சும உலகம் இவற்றின் சூட்சுமத்திலிருந்து தன்னை காப்பாற்றிக்கொள்ள அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.
'The Four Aids' ல் பகவான் பேசும் பொறுமை ஒருவருக்கு வேண்டும்.
மிகச் சிறப்பாக வேலை செய்யும் ஒருவர் ஆழ்மன அளவில் சமர்ப்பணத்தை மேற்கொண்டால், இதனை வெற்றிகரமாக முயற்சி செய்து பார்க்கலாம்.
காலின்ஸும், விக்காமும் அவர்களுடைய திறமைகளை மிக உயர்ந்த பண்புகளால் முறைப்படுத்திக் கொண்டால், டார்சியை மிஞ்சும் அளவிற்கு அவர்களுடைய ஆளுமை இருப்பதை நாம் பார்க்கலாம்.

13. "The frequent means of varying the humble home scene".
Man has always been most resourceful.
His physical knowledge prevents him from seeing mentally or vitally.
Physical knowledge is focused and therefore blind.
Suppose one takes one idea of Sri Aurobindo and brings his utmost resourcefulness to bear on it without permitting

any type of blindness, he will have released the infinite spiritual power in his life.
The above words explain how actively the Mind of Collins was working.
His Mind was active to show Elizabeth his value in his relationship with Rosings.
The Mind of all dynamic Men works like that.
The resulting power is fixed by the context -- social context.
His values decide whether he is a leader or a criminal.
Very rarely we find a leader who has no criminal in him.
Education today is best devised as one that can draw upon this social power positively.
There are those who have consistently refused the opportunities.
Others have without fail converted each opportunity into a failure or tragedy.
Their souls are as great as Wickham aspiring for the Non-Being.
Occasionally one stops and realizes his folly.
Before him is an effort at the dimension of the opportunity and the intensity of Darcy's transformation.
No one is exempt from the upward journey.
No one needs the long period.
What each Man needs is the intensity each moment deserves.
It is only instantaneous to all who honour the rules.
The intensity that matches the effort is called by Mother as sincerity.
It is this sincerity that weans one from karma and his capacity.
Sincerity is truthfulness.
Egolessness, truthfulness are spiritual awakening.
"எளிய இல்லத்திலிருந்து மாறுதலாக வேறு இடத்திற்கு செல்ல வாய்ப்பு."
மனிதனுக்கு எப்பொழுதுமே அதிக வளங்கள் உள்ளன.
அவனது அறிவு, மனதாலும் அல்லது உணர்வாலும் அவற்றை பார்ப்பதை அவனைத் தடுக்கிறது.
ஜட அறிவு குவிந்த நிலையில் இருப்பதால் கண்மூடியாக இருக்கிறது.
ஸ்ரீ அரவிந்தரது ஒரு கருத்தை ஒருவர் எடுத்துக்கொண்டு கண்மூடியாக இல்லாமல் தனது திறமைகளை அதில் செலுத்தினால், அளவற்ற ஆன்மீகச் சக்திகளை அவரது வாழ்க்கையில் அவர் வெளிப்படுத்துவார்.
காலின்ஸின் மனம் எவ்வளவு சுறுசுறுப்பாகச் செயல்படுகிறது என்பதை மேற்கூறிய வார்த்தைகள் விளக்குகின்றன.
ரோசிங்ஸுடன் தனக்கிருக்கும் உறவின் மதிப்பைப் பற்றி எலிசபெத்திடம் காண்பித்துக்கொள்ள அவனது மனம் சுறுசுறுப்பாக இருந்தது.
ஆற்றல்வாய்ந்த மனிதர்களது மனம் அவ்வாறுதான் செயல்படும்.
இறுதியாக கிடைக்கும் சக்தி சமூக விஷயத்தைப் பொறுத்து தீர்மானம் செய்யப்படுகிறது.
ஒருவனுடைய பண்பு அவனைத் தலைவனா அல்லது குற்றவாளியா என்று தீர்மானிக்கும்.
குற்றம் புரியாத தலைவனை நாம் பார்ப்பது அரிது.
இந்தச் சமூக சக்தியை நல்லவிதமாக அடைய கல்வி இன்று சிறந்த சாதனமாக விளங்குகிறது.
வாய்ப்புகளை தொடர்ந்து மறுத்தவர்கள் உண்டு.
மற்றவர்கள் வாய்ப்பினை, தவறாது தோல்வியாகவோ அல்லது துன்பமாகவோ மாற்றியுள்ளனர்.
அசத்-ஆக மாற விக்காம் ஆர்வம் கொள்வதுபோல் அவர்களது ஆன்மா உயர்ந்தது.
எப்பொழுதாவது ஒருவர் நின்று நிதானித்து தனது மடமையை உணருவார்.
வாய்ப்பின் அளவிற்குத் தகுந்தாற்போலவும், டார்சியின் திருவுருமாற்றத்தின் தீவிரம் போலவும் ஓர் முயற்சி அவன் முன் இருக்கிறது.
உயரே செல்வதற்கு எல்லோருக்கும் அனுமதி உண்டு.
நீண்ட காலம் யாருக்கும் தேவையில்லை.
ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையானது, ஒவ்வொரு தருணத்திற்குத் தேவையான தீவிரம்தான்.
விதிகளை மதிப்பவனுக்கு அது கணப் பொழுதில் நிகழும்.
முயற்சிக்கு ஏற்ற தீவிரம் இருப்பதை அன்னை உண்மை என்கிறார்.
இந்த உண்மைதான் ஒருவனை அவனது கர்மத்திலிருந்தும் திறமைகளிலிருந்தும் விடுவிக்கும்.
உண்மையே சத்தியமாகும்.
அகந்தையற்று இருப்பது, சத்தியம், இரண்டும் ஆன்மீக விழிப்பாகும்.

14. "They are sharers of the intimacy of Rosings".
The 10,000 titled families of England are families who once served royalty or royalty conferred its patronage to them.
A centre of power has all the powers of the nation.
It includes the military, administrative, financial, social, educational powers of the entire nation.
Here is a nation of human population of bottomless ingratitude with infinite receptivity.

Royalty cannot by its very great efforts exhaust a small portion of these powers.
As the knowledge, capacity, technology, and wealth of the nation rise, this power too multiplies without end.
The sannyasi who declared the king was a piece of dust before him, when he refused this power, refused it consciously.
Now Sri Aurobindo asks the sannyasi to accept life, asks him not to enjoy this power, but to make this power available to society at large to reinforce it.
At a stage of integration as power is generated, it will be utilized to build the society further at higher and more organized levels.
There is no waste in nature.
Even now there is no waste in Nature.
The vast reservoirs of power I talk of are the fringe benefits the society can get from social evolution. It is no drain on the social evolution, as the seeds of a tree now that do not become the tree.
Rosings does not lose essentially by its courtesies or the livings it sets up.
Such an excess of power in Internet is a million-fold greater, as millions of users can simultaneously draw upon it.
Presently Man knows and loves to steal that abundant power which can be rightfully drawn by the entire population of the earth.
"ரோசிங்ஸுடன் இருக்கும் நெருக்கமான நட்பில் பங்கு போட்டுக் கொள்பவர்கள்."
இங்கிலாந்தில் பட்டம் பெற்ற பத்தாயிரம் குடும்பங்கள் அரச குடும்பத்திற்கு சேவை செய்தனர் அல்லது அரச குடும்பத்தின் ஆதரவு கிடைக்கப் பெற்றவர்களாக இருந்தனர்.
அதிகாரம் இருக்கும் ஒரு மையத்திற்கு நாட்டின் எல்லா அதிகாரங்களுமுண்டு.
நாடு முழுவதின் இராணுவம், நிர்வாகம், நிதித்துறை, சமூகம், கல்வி இவற்றின் எல்லா அதிகாரங்களும் இதில் அடங்கியுள்ளன.
அடிப்படை நன்றி உணர்வுகூட இல்லாத, அளவற்ற ஏற்புத்தன்மையுடைய மக்களை கொண்ட நாடு இது.
இந்த அதிகாரங்களின் சிறிய பகுதியைக்கூட மிகப் பெரிய முயற்சி எடுத்தாலும், அரசுரிமையால் செலவழித்து விட முடியாது.
நாட்டின் அறிவு, திறமை, தொழில் நுட்பம், செல்வவளம், இவை உயரும் பொழுது இந்த அதிகாரமும் முடிவில்லாது பெருகிக் கொண்டே இருக்கும்.
அரசர், தன் முன் தூசி என்று அறிவித்த சந்நியாசி, இந்த அதிகாரத்தை மறுத்த பொழுது சுய நினைவுடன்தான் மறுத்தார்.
இப்பொழுது ஸ்ரீ அரவிந்தர், சந்நியாசியை வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறார், இந்த அதிகாரத்தை அனுபவிக்க வேண்டாம் என்று கூறும் அவர் பெருமளவில் இந்த அதிகாரத்தை சமூகத்திற்கு அளித்து அதனை பலப்படுத்தச் சொல்கிறார்.
ஒருமைப்பாட்டில் சக்தி உற்பத்தி ஆகும்பொழுது சமூகத்தை உயர்ந்த நிலையிலும், மேலும் முறைப்படுத்திய நிலையிலும் உருவாக்க, அது உபயோகப்படுத்தப்படும்.
இயற்கையில் விரயம் என்பதே கிடையாது.
இப்பொழுதும் இயற்கையில் விரயம் கிடையாது.
பெருமளவில் தேங்கியிருக்கும் நாம் குறிப்பிடும் சக்திகள், சமூகப் பரிணாமத்தின் மூலம் சமூகத்திற்கு கிடைக்கும் மிகச் சிறிய நன்மைகளாகும்.
மரத்தின் விதைகள், உடனேயே மரங்கள் ஆகிவிடாது என்பது போல் சமூகப் பரிணாமத்தை இது வற்ற வைத்து விடாது.
ரோசிங்ஸ், அதனுடைய உபசாரங்கள் அல்லது அது ஏற்படுத்தும் வாழ்க்கைத் தேவைகளின் மூலம் முக்கியமாக எதையும் இழப்பதில்லை.
இது போன்ற அதிக சக்தி இணையதளத்தில் கோடிக்கணக்கான மடங்கு அதிகமாக உள்ளது, கோடிக்கணக்கான மக்கள் ஒரே சமயத்தில் அதனை பயன்படுத்திக் கொள்ளலாம்
அந்த அபரிமிதமான சக்தியை, பூமியில் இருக்கும் மொத்த ஜனத்தொகையும் உரிமையுடன் எடுத்துக் கொள்ளலாம் எனும்பொழுது தற்பொழுது மனிதன் அதை திருட்டுத்தனமாக எடுத்துக்கொள்ள தெரிந்து வைத்திருக்கிறான், விரும்புகிறான்.

Words were insufficient for the elevation of his feelings; and he was obliged to walk about the room, while Elizabeth tried to unite civility and truth in a few short sentences.
உச்சத்தில் இருந்த அவனுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்த அவனிடம் வார்த்தைகளே போதுமானதாக இல்லை. அதனால் அவன் அறையில் நடக்க வேண்டியதாயிற்று. அப்பொழுது உபசாரமாகவும், உண்மையையும் இணைத்து எலிசபெத் ஒரு சில வாக்கியங்களை கூற முயற்சி செய்தாள்.

15. "Words are insufficient for the elevation of his feelings".
Elevation of one's feelings attracts a man to a spiritual centre.
Spiritual elevation does not accompany material joy.

The vast concourse of people who love to visit a rich Man, love this elevation of feeling while they are with him and they talk about him.
Any VIP coming to stay in a place, before he takes initiative to introduce himself, finds all the local population at his door.
Mr. Bingley experienced it.
What gives that elevation in people is the hope that the intimacy with his superior will also elevate him to some extent.
There are people who have no individuality, personality or self-respect.
The truth is the VIP will allow the entire place to serve him and will not offer any service in return except allowing them to visit him.
The entire population that experiences this elevation will never find themselves elevated.
He who is on his own when he rises will find a part of this population gravitating towards him.
That has happened to the USA since 1950.
After 1950 Europe received their money, but refused to respect them.
Again Europe imitates USA even in cultural ways of living but there is no real respect accorded to them.
They go to USA for studies, they imitate their management ways, of course their hair style and dress are emulated, **but they keep their respect of culture to themselves.**
It is true culture, knowledge, and values alone can win real respect.
Today the American is a divine being all over the world.
He can enter any country without visa.
What is respected in America is their wealth, their capacities and their material accomplishments.
They have not produced original scientific thinkers.
The question of a saint born in America is not in the distant future.
“அவனது உணர்வுகளின் உயர்வை விவரிக்க வார்த்தைகள் இல்லை.”
ஒருவனது உணர்வுகளின் உயர்வு, அவனை ஆன்மீக மையத்துக்கு எடுத்துச் செல்லும்.
ஆன்மீக எழுச்சி பொருள்ரீதியான மகிழ்ச்சியை அளிப்பதில்லை.
பணக்காரனை சந்திக்க விரும்பிச் செல்லும் பெருங் கூட்டம் அவனுடன் இருக்கும் பொழுதும், அவனைப் பற்றி பேசும் பொழுதும் எழும் உணர்வுகளின் உயர்வை விரும்பும்,
முக்கிய நபர் ஒருவர் ஒரு இடத்திற்கு தங்க வரும்பொழுது, அவராகவே தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் முன்பே, அங்குள்ள மக்கள் யாவரும் அவருடைய வீட்டின் வாசல் முன் இருப்பதைக் காண்பார்.
திரு பிங்கிலிக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது.
அவர்களுக்கு மேலே இருப்பவர்களுடன் இருக்கும் நெருக்கம் அவர்களையும் ஓரளவிற்கு உயர்த்தும் என்கிற நம்பிக்கைதான், அவர்களுக்கு அந்த உயர்வான உணர்வை அளிக்கிறது.
தனித்தன்மை, ஆளுமை அல்லது சுயமரியாதை இல்லாத மனிதர்கள் இருக்கிறார்கள்.
முக்கியஸ்தர்கள் அங்கு இருக்கும் எல்லோரும் தனக்கு சேவை செய்ய அனுமதிப்பார், தன்னை எல்லோரும் வந்து பார்க்கவேண்டும் என்று நினைப்பாரே தவிர, தான் பதிலுக்கு எந்த சேவையும் செய்யமாட்டார் என்பதுதான் உண்மை.
இந்த உயர்வினை அனுபவிக்கும் மக்கள் நிஜத்தில் உயர்வை அடைய மாட்டார்கள்.
சுய முயற்சியால் உயர்வினை அடையும் ஒருவரை நோக்கி சமூகத்திலுள்ள ஒரு பகுதியினர் ஈர்க்கப்படுவதை அவர் பார்ப்பார்.
1950 தொடங்கி அமெரிக்காவிற்கு நடந்தது இதுதான்.
1950க்குப் பிறகு ஐரோப்பா அவர்களது பணத்தைப் பெற்றது, ஆனால் அவர்களை மதிக்க மறுத்தது.
நாகரிக வாழ்க்கையிலும் அமெரிக்காவைப் பின்பற்றும் ஐரோப்பா, உண்மையான மரியாதையை அளிப்பதில்லை.
படிப்பதற்கு அமெரிக்கா செல்கின்றனர், அவர்களுடைய மேலாண்மை முறைகளை பின்பற்றுகின்றனர், தலை அலங்காரம், உடை அலங்காரத்தை ஆர்வத்துடன் பின்பற்றுகின்றனர் **ஆனால் தங்களுடைய நாகரிகத்தின் மரியாதையை தங்களுக்குள்ளேயே வைத்துக் கொள்கின்றனர்.**
உண்மையான நாகரிகமும், அறிவும், பண்புகளுமே உண்மையான மரியாதை பெறும்.
இன்று அமெரிக்கர்கள் உலகம் முழுவதிலும் தெய்வீகப் பிறவிகளாக விளங்குகின்றனர்.
அனுமதி பத்திரமின்றி அவர்கள் எந்த நாட்டுக்கும் செல்லலாம்.
அமெரிக்கர்களின் செல்வம், திறமைகள், பொருள்ரீதியான சாதனைகள் ஆகியவைகளே போற்றப்படுகின்றன.
சுயமான விஞ்ஞான அறிவாளிகளை அவர்கள் உருவாக்கவில்லை.
அமெரிக்காவில் எதிர்காலத்தில் ஞானி பிறப்பார் என்ற கேள்விக்கே இடமில்லை.

16. “He was obliged to walk about the room”.
The elevation descended into the body as uncontainable energy.
Animated discussions find members walking across the room.
To sit quiet and discuss ideas is not given to dynamic people as they receive the dynamism of the ideas in their bodily

dynamism.
Mature deliberations are quiet, spoken in a low voice.
Excitement is not a pleasant word for cultured life.
The body of a wise Man can remain quiet through discussions of animosity.
The structure of ideas of wisdom absorbs most of the energies released and none is left to stir the body.
In raw material any idea releases the energy and it directly reaches the body exciting it enormously.
Mind does absorb infinite energies by its ideas that expand infinitely.
The capacity of the vital of similar constitution to absorb energies is greater still.
The body is the pedestal of the being.
Its capacity to absorb energies is greater than the Mind and vital.
Ideas of the infinite, forces of the infinite so affect the Mind and vital.
What so affects the body are acts of infinite value, value to all.
They are ideas of Being, Existence not thoughts of Truth.
In each plane – Mind, vital, physical – the energies are received by the temperament and expressed as it is, i.e. coarsely.
The temperament cultures the energies into sensitivities.
Sensitivities are the tether ends of the organized temperament in each plane.
One who is in yoga must begin with his various sensitivities.
For yoga, all sensitivities are to be dissolved.
Before dissolution, they must be positive, good, express values.
A family or nation will be evaluated by her sensitivities.
"அவன் அந்த அறைக்குள்ளேயே நடக்க வேண்டியதாயிற்று."
உயர்வு, உடலில். அடக்க முடியாத சக்தியாக இறங்கியது.
சுறுசுறுப்பான விவாதங்கள் அங்கத்தினர்களை அறைக்குள் நடக்க வைக்கும்.
ஆற்றல்வாய்ந்த மனிதர்கள் கருத்துகளை அமைதியாக அமர்ந்து விவாதிக்க முடியாது, ஏனெனில் அக்கருத்தின் தீவிரத்தை அவர்களது உடல் சுறுசுறுப்பில் அவர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.
முதிர்ச்சியான ஆலோசனைகள் அமைதியாக தாழ்ந்த குரலில் பேசப்படுகின்றன.
நாகரிக வாழ்வில் பரபரப்பு என்பது இனிமையான விஷயமல்ல.
கடுமையான விவாதங்களிலும் அறிவாளியான மனிதனது உடல் அமைதியாக இருக்கும்.
அறிவுபூர்வமான கருத்துகளின் அமைப்பு வெளியிடும் எல்லா சக்திகளையும் கிரகித்துக் கொள்வதால், உடல் அசைவிற்கு எந்த சக்தியும் மீதமிருப்பதில்லை.
பதப்படாத பொருளில் எந்த ஒரு கருத்தும் சக்தியை விடுவிக்கும், அது உடலை நேரடியாகச் சென்றடையும், உடலில் பெரும் அளவில் பரபரப்பை ஏற்படுத்தும்.
அளவற்று விரிவடையும் கருத்து வெளியிடும் அளவற்ற சக்திகளை மனம் கிரகித்துக் கொள்ளும்.
இதே போன்ற அமைப்பைக் கொண்ட உணர்வின் திறன் கிரகித்துக்கொள்ளும் சக்திகள் மேலும் உயர்ந்தவை.
உடல் ஜீவனின் பீடமாகும்.
மனம் மற்றும் உணர்வைக் காட்டிலும், சக்திகளை கிரகித்துக்கொள்ளும் திறன் உடலுக்கு அதிகம்.
அளவற்றதன் கருத்துகளும் அளவற்றதன் சக்திகளும் அவ்வாறு மனதையும் உணர்வையும் பாதிக்கின்றன.
எல்லோருக்கும் மதிப்புவாய்ந்த, அளவற்ற மதிப்பை உடைய செயல்களே உடலை பாதிக்கிறது.
அவை ஜீவன், சத்-ன் கருத்துகளாகும், உண்மையின் எண்ணங்களல்ல.
மனம், உணர்வு, உடல் என்று ஒவ்வொரு நிலையிலும் மனவுணர்வுகளால் சக்திகள் பெற்றுக்கொள்ளப்பட்டு, அதே போல் பக்குவமற்று வெளிப்படுத்தப்படுகின்றன.
மனவுணர்வுகள், சக்திகளை நுண்ணுணர்வுகளாகப் பதப்படுத்துகின்றன.
நுண்ணுணர்வுகள், ஒவ்வொரு நிலையிலும் முறைப்படுத்தப்பட்டுள்ள மனவுணர்வுகளின் எல்லைகளாகும்.
யோகம் செய்யும் ஒருவர் அவருடைய பல்வேறு நுண்ணுணர்வுகளிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.
யோகத்தில் நுண்ணுணர்வுகள் யாவும் கரைந்துவிட வேண்டும்.
கரைவதற்கு முன், அவை நேர்மறையாகவும், நல்லதாகவும், பண்புகளை வெளிப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
ஒரு குடும்பமோ அல்லது ஒரு நாடோ அதனுடைய நுண்ணுணர்வுகளால் மதிப்பிடப்படுகிறது.

17. "Tried to unite civility with truth".
Truth can be coarse or rough but combined with civilities it has to be soft and cultured.
Civilities can be empty or the opposite.
Truth and civility become true vital sensitivity.
A nation is most valued for its hospitality, its hospitality to unknown people.
People who cannot live with their parents or children start showering their affection on their pets.
Being animals, human emotion received by animals can be more intense as it is a lower denomination of sensitivity.

The love of the pet which receives the affections meant for humans is like emotional intoxication, an artificial intensity in the direction of degeneration.
The Mind-centred life removes the vital relationship with humans.
It is being replaced by relationship with animals. It is becoming a fashion.
This is another dimension of Non-Being.
Elizabeth is a mental character, but she is true.
Wickham is a No.4. He has the extraordinary intelligence of the vital.
He is false.
Darcy is mental, true, but carries false vital values in his Mind.
Collins is one to whom civilities are of prime importance.
It is an empty shell.
His energies are of the vital.
His education energized his vital organization.
Jane Austen says he merely kept the terms.
It means he did not try to benefit mentally from the course.
The entire benefit was vitally received.
“உண்மையுடன் மரியாதையை சேர்த்துக்கொள்ள முயற்சி செய்யப்பட்டது.”
உண்மை கரடுமுரடாக இருக்கும், ஆனால் மரியாதையுடன் சேர்ந்தால் அது மென்மையாகவும், பண்புள்ளதாகவும் மாறிவிடும்.
மரியாதைகள் வெறுமையாகவும் இருக்கும், அதற்கு மாறாகவும் இருக்கும்.
உண்மையும், மரியாதையும் உண்மையான உணர்வின் நுண்ணுணர்வுகளாக மாறும்.
ஒரு நாட்டின் பெரும் மதிப்பு தெரியாத மனிதர்களுக்குக் காண்பிக்கும் விருந்தோம்பலில் உள்ளது.
தங்களுடைய பெற்றோர்களுடனோ அல்லது குழந்தைகளிடமோ சேர்ந்து வாழ முடியாதவர்கள் செல்லப் பிராணிகளிடம் தங்களது பாசத்தைக் காண்பிப்பார்கள்.
சொரணையில் கீழ் நிலையில் இருக்கும் விலங்குகள், மனித உணர்வுகளை மேலும் தீவிரத்துடன் பெற்றுக் கொள்ளும்.
மனிதர்களுக்கு அளிக்க வேண்டிய பாசத்தை விலங்குகளின் மேல் காண்பிப்பது, போதை போல் மாறி, அழிவினை நோக்கி ஒரு செயற்கையான தீவிரத்தை அளிக்கிறது.
மனத்தாலான வாழ்க்கை, மனிதர்களுடன் இருக்கும் உணர்வு பூர்வமான உறவினை விலக்குகிறது.
இந்த இடத்தை விலங்குகளிடம் உள்ள உறவு எடுத்துக் கொண்டுள்ளது. இது ஒரு நாகரிகமாக மாறி வருகிறது.
இது அசத்தின் மற்றொரு பரிமாணம் ஆகும்.
எலிசபெத் மனத்தாலானவள், ஆனால் உண்மையானவள்.
உணர்வின் அபரிமிதமான அறிவினைக் கொண்டவன் விக்காம்.
அவன் பொய்யானவன்.
டார்சி மனத்தாலானவன், உண்மையானவன், ஆனால் பொய்யான உணர்வின் பண்புகளை மனதில் கொண்டவன்.
மரியாதைகளே காலின்ஸிற்கு முக்கியமானவை.
அது ஒரு வெற்றுக் கூடாகும்.
அவனுடைய சக்திகள் உணர்வுரீதியானவை.
அவனுடைய படிப்பு அவனை உணர்வுரீதியாக முறைப்படுத்தியது.
அவன் வெறுமே நிபந்தனைகளை பின்பற்றினான் என்று ஜேன் ஆஸ்டின் கூறுகிறாள்.
படிப்பினால் அவன் மனரீதியாக எந்த பலனையும் பெறவில்லை என்றாகிறது.
எல்லாப் பலன்களும் உணர்வினால் பெற்றுக் கொள்ளப்பட்டன.

"*You may, in fact, carry a very favourable report of us into Hertfordshire, my dear cousin. I flatter myself at least that you will be able to do so. Lady Catherine's great attentions to Mrs. Collins you have been a daily witness of; and altogether I trust it does not appear that your friend has drawn an unfortunate -- but on this point it will be as well to be silent. Only let me assure you, my dear Miss Elizabeth, that I can from my heart most cordially wish you equal felicity in marriage. My dear Charlotte and I have but one mind and one way of thinking. There is in everything a most remarkable resemblance of character and ideas between us. We seem to have been designed for each other.*"
“எங்களைப் பற்றி நல்லவிதமான செய்தியை நீ ஹர்ட்போர்ட்ஷயருக்கு எடுத்துப் போவாய் எனதருமை சகோதரியே. உன்னால் அப்படிப்பட்ட செய்தியை தர முடிவதற்கு நான் பெருமைப்பட்டுக் கொள்கிறேன். திருமதி. காலின்ஸிற்கு லேடி காதரின் எப்படிப்பட்ட கவனம் கொடுத்தாள் என்பதை நீயே தினமும் பார்த்தாய். உன்னுடைய தோழி ஒரு துரதிர்ஷ்டமான நிலையில் இல்லை, ...வேண்டாம், இந்த விஷயத்தில் பேசாமல் இருப்பதே நல்லது. உன்னிடம் இதை மட்டும் நிச்சயமாக சொல்ல விரும்புகிறேன், இதேபோன்ற மகிழ்ச்சி

உனக்கும் உன் திருமணத்தில் கிடைக்க வேண்டும் என்று மனமுவந்து வாழ்த்துகிறேன். எனதருமை ஷார்லெட்டிற்கும் எனக்கும் இருப்பது ஒரே மாதிரியான மனமும், எண்ணங்களும். எங்கள் இருவரிடத்திலும் ஆச்சரியப்படும்வகையில் ஒரே மாதிரியான குணமும், கருத்துகளும் இருக்கின்றன. நாங்கள் இருவரும் ஒருவருக்காகவே ஒருவர் எனப் பிறந்துள்ளோம்."

18. He finds it difficult to suppress the greatness of his position.
அவன் தன்னுடைய நிலையின் உயர்வை அடக்கிக்கொள்ள கஷ்டப்படுகிறான்.
19. He must have strong goodwill to bring by that wish, Darcy to her.
டார்சியை அவளிடம் அழைத்துவர அவனுக்கு வலிமையான நல்லெண்ணம் இருக்க வேண்டும்.
20. He accepts his wife's manners for her character.
தன்னுடைய மனைவியின் பழக்க வழக்கங்களை அவளுடைய நற்குணமாக அவன் ஏற்றுக்கொள்கிறான்.
21. "You may carry a very favourable report of us into Hertfordshire."
Man wants a favourable report of himself to the world.
Only Collins will ask for it.
Man cannot be caught doing anything non-egoistic.
The difference between different people is in the degree of egoism.
Ego-memory, ego-sense, ego-idea are the earlier stages to the pure ego which is immense.
Pride is the conscious ego based on one's capacity.
Whether it is knowledge, wealth or capacity, pride can form.
The consciousness of pride well formulated is the pride of possession.
Arrogance is the power of ego unformulated or unorganized.
Arrogance is vital.
Pride is Mental.
Pride is the arrogance Mind justifies as well as values.
Pride can invert itself as humility in which case it will enjoy neither power of humility nor that of pride.
Pride inverted loses its power but not its form.
The form is always recognized by another as an unbecoming behaviour.
Here is a Man asking Elizabeth to recognize his humble pride and carry a report of it into Hertfordshire.
The concealed humility peeps out through this request.
People can suffer pride, but not humble pride.
There are rare characters who can successfully hide the pride.
Such a Man converts the pride into venom like Wickham.
The greater the effort to suppress it, the greater is the venom it creates.
Characteristics are best as they are, even if it is undesirable.
They can be sublimated or transformed but not suppressed without psychological detriment.
Irresistible resentment when suppressed becomes caustic sarcasm.
The greatest opportunity cannot come through low consciousness unless it carries a tragedy.
"எங்களைப் பற்றி நல்லவிதமான செய்திகளையே நீ ஹெர்ட்போர்ட்ஷயருக்கு எடுத்துச் செல்வாய்."
தன்னைப் பற்றி உலகுக்கு நல்ல விதமான செய்தியாகவே போய்ச் சேர வேண்டும் என மனிதன் விரும்புவான்.
காலின்ஸ் போன்ற மனிதன்தான் இதுபோல் வேண்டுவான்.
மனிதன் அகந்தையில்லாமல் எந்த செயலை செய்வதையும் நாம் பார்க்க முடியாது.
வெவ்வேறு மனிதர்கள் அகந்தையின் அளவில்தான் வித்தியாசப்படுவர்.
தூய்மையான அகந்தைக்கு முன் அபரிமிதமாக இருப்பது அகந்தையான ஞாபகங்கள், அகந்தையான உணர்வு, அகந்தையான கருத்துகள்.
ஒருவருடைய திறமையின் அடிப்படையில் இருக்கும் நனவுபூர்வமான அகந்தையே பெருமிதமாகும்.
அறிவோ, செல்வமோ அல்லது திறமையோ, இவைகளில் பெருமிதம் உருவாகலாம்.
நன்றாக உருவாக்கப்பட்ட பெருமிதத்தின் ஜீவியமே உடைமையின் பெருமிதம்.
சரியாக உருவாகாத முறைப்படுத்தப்படாத அகந்தையின் சக்தியே அகம்பாவமாகும்.
அகம்பாவம் உணர்வுக்குரியது.
பெருமிதம் மனத்திற்குரியது.
மனம் அகம்பாவத்தை நியாயப்படுத்தும், மதிக்கும், இதுவே பெருமிதமாகும்.
பெருமிதம் தன்னை அடக்கமாக மாற்றிக் கொள்ளலாம், அப்பொழுது அது அடக்கத்தின் அதிகாரத்தையும் அனுபவிக்காது, பெருமிதத்தின் அதிகாரத்தையும் அனுபவிக்காது.
மாறிய பெருமிதம் அதிகாரத்தை இழக்கும், ஆனால் தோற்றத்தை இழக்காது.
தோற்றம் எப்பொழுதும் ஆரோக்கியமற்ற நடத்தையாக வேறொருவரால் அடையாளம் காணப்படும்.
இங்கு ஒரு மனிதன், தன்னுடைய அடக்கமான பெருமையை எலிசபெத் அடையாளம் கண்டு, அதனை ஹெர்ட்போர்ட்ஷயரில் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிறான்.

இந்த வேண்டுகோளில் மறைத்து வைத்திருக்கும் அடக்கம் வெளிப்படுகிறது.
மனிதன் பெருமிதத்தை தாங்கிக்கொள்வான், ஆனால் அடக்கமான பெருமிதத்தை தாங்கிக்கொள்ள முடியாது.
பெருமிதத்தை வெற்றிகரமாக மறைக்க மிகச் சிலருக்கே முடியும்.
அது போன்ற மனிதன், விக்காமைப் போல் பெருமையை விஷமாக மாற்றுவான்.
அடக்குவதற்கு எடுக்கும் முயற்சி மேலும் அதிக அளவில் அதனை விஷமாக்கும்.
விரும்பத்தகாததாக இருந்தாலும் தனிப்பட்ட குணங்கள் இருக்கும் விதத்தில் இருப்பதே சிறந்தது.
அதனை கரைக்கலாம் அல்லது திருவுருமாற்றலாம், ஆனால் மனத்தால் நஷ்டப்படாமல் அடக்க முடியாது.
தடுக்க முடியாத வெறுப்புடன் கூடிய கோபத்தை அடக்க முயன்றால் அது காயப்படுத்தும் கேலிப் பேச்சாக மாறும்.
தாழ்ந்த ஜீவியத்தின் மூலம் மிகப் பெரிய வாய்ப்பு பேராபத்தின்றி வராது.

22. “You were a witness to Lady Catherine’s attentions to Charlotte”.
Man combines two opposite attitudes, sometimes in the extreme.
Extending freedom authoritatively, kindness through cruelty, serious adherence of empty rituals, etc. is a known trait.
Collins indulges in crude self-importance in a language of understatement.
As one vibration leaves the society and another enters, this is one possible mixture.
Man’s folly is great in trying to achieve one thing by doing the opposite.
Man is not at fault as he can exhibit only the faculties he has.
His new ideals may require new faculties.
Till he acquires them, he will be using the old faculties.
We see Darcy giving Bingley freedom through an attitude of domination.
In advising Elizabeth and flattering Elizabeth, Caroline’s purpose is to adore status.
The centre of Collins’s life is Lady Catherine.
He wants his whole world to witness his greatness there.
That purpose he well serves by all that he knows.
He expects Elizabeth to speak out in Hertfordshire all that she has seen.
That is what he is doing to himself.
On the first day at Longbourn at the dinner table he did this copiously.
Energy that enters one becomes several things acquiring values at each level.
In Collins, he preserved his pre-Oxford personality, received the energy of education, added to it the energy of expectation after Bennet, energized it by the living at Hunsford and arranged its display. As it was approved of by the Lady, it received its final sanction.
He has no values to guide, no restraint to discipline him.
He is conscious, loves to be conscious, that he is on display.
He believes that his audience is entertained.
Behind all these the lurking violence is apparent as it peeps out.
We saw his irresistibility and his rationale for it when Elizabeth tried to advise him.
What is great in him we do not know, but he is great in some sense.
“லேடி காதரின் ஷார்லெட்டுக்கு அளித்த கவனிப்பை நீ பார்த்திருப்பாய்.”
இரண்டு நேர்மாறான மனோபாவங்களை மனிதன் இணைப்பான், சில சமயங்களில் அவை உச்சகட்டத்தில் இருக்கும்.
அதிகாரத்துடன் சுதந்திரம் அளிப்பது, கொடுமையின் மூலம் அன்பு செலுத்துவது, வெறுமையான சடங்குகளை தீவிரமாக அனுசரிப்பது போன்றவை தெரிந்த குணங்கள்.
சுய முக்கியத்துவத்திற்கு காலின்ஸ் மிகவும் இடம் கொடுக்கிறான் என்று சொல்வது குறைத்துக் கூறுவதாகும்.
சமூகத்தை விட்டு ஒரு அதிர்வு வெளியே செல்லும் பொழுது வேறொன்று உள்ளே நுழைவது ஒரு சாத்தியமான கலவை.
ஒன்றை சாதிக்க முயற்சி செய்யும்பொழுது அதற்கு நேர்மாறானதை செய்யும் மனிதனின் மடமை பெரியது.
மனிதனிடம் தவறு இல்லை, ஏனெனில் தன்னிடம் இருக்கும் திறமைகளைத்தான் அவனால் வெளிப்படுத்த முடியும்.
அவனுடைய புதிய இலட்சியங்களுக்கு புதிய திறன்கள் தேவைப்படுகின்றன.
அவற்றை கற்றுக்கொள்ளும்வரை பழைய திறன்களையே அவன் பயன்படுத்துவான்.
அடக்கியாளும் மனோபாவத்தின் மூலம் டார்சி, பிங்கிலிக்கு சுதந்திரம் கொடுக்கிறான்.
எலிசபெத்திற்கு அறிவுரை கூறுவதிலும் அவளை புகழ்வதிலும் காரலின் அந்தஸ்துக்கு மரியாதை அளிக்கிறாள்.
லேடி காதரின்தான் காலின்ஸ் வாழ்க்கையின் மையமாக விளங்குகிறாள்.
அங்கு அவனுக்கு இருக்கும் உயர்வை அவனுடைய உலகம் முழுவதும் காண வேண்டும் என அவன் விரும்புகிறான்.

அவனுக்குத் தெரிந்த அனைத்தின் மூலமும் அதை அவன் நிறைவேற்றிக்கொள்கிறான்.
எலிசபெத், அவள் கண்ட அனைத்தையும் ஹெர்ட்போர்ட்ஷயரில் தெரிவிக்க வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கிறான்.
அவனும் அதே போல் நடந்துகொள்கிறான்.
லாங்பர்னில் முதல் நாள் உணவருந்தும் மேஜையில் அவன் இவ்வாறு பெரும் அளவில் நடந்துகொண்டான்.
ஒருவருள் நுழையும் சக்தி பலவாறாக மாறி, ஒவ்வொரு நிலையிலும் பண்புகளைப் பெறுகிறது.
ஆக்ஸ்போர்ட் செல்வதற்கு முன் இருந்த குணத்தை காலின்ஸ் பாதுகாத்து வைத்துக்கொள்கிறான், கல்வியின் பலத்தைப் பெற்றுக்கொள்கிறான். பென்னட்டை எதிர்பார்க்கும் சக்தியும் சேர்ந்து கொள்கிறது, ஹன்ஸ்போர்டின் வாழ்க்கை மேலும் அதற்கான தெம்பை அளிக்கிறது, அதனை உலகுக்குக் காண்பிக்க ஏற்பாடு செய்கிறான். லேடி காதரினுடைய ஒப்புதல் அதற்கு இருந்ததால், அது இறுதியான அனுமதியைப் பெற்றது.
வழி நடத்த அவனுக்குப் பண்புகள் எதுவும் இல்லை, அவனை ஒழுங்குப்படுத்த கட்டுப்பாடு எதுவும் இல்லை.
அவன் தன்னை வெளியே காண்பித்துக் கொள்வதை அறிந்தே செய்கிறான், விரும்பியே செய்கிறான்.
அவனது பார்வையாளர்கள் ரசிக்கிறார்கள் என நம்புகிறான்.
இவை எல்லாவற்றிற்கும் பின்னே, மறைந்திருக்கும் வன்முறை வெளிப்படையாகத் தெரிகிறது.
எலிசபெத் அவனுக்கு அறிவுரை வழங்க முயன்றபொழுது அவனது எதிர்க்க முடியாத தன்மையைப் பார்த்தோம், அதற்கான அவனது அடிப்படைக் காரணத்தையும் பார்த்தோம்.
அவனிடம் என்ன சிறப்பாக இருக்கிறது என்று நமக்குத் தெரியவில்லை, ஆனால் ஏதோ ஒரு விதத்தில் அவன் சிறப்பாக இருக்கிறான்.

23. "We seem to be designed for each other."
Any superstition that the society accepts finds utterance through every mouth.
Each Man exhibits his uniqueness in expressing his general belief.
Two spiritual ideas, contrary to each other, must be reconciled with each other.
One is no man is without a soul. The other is the best part of humanity is otiose.
They reconcile at the conception of the Inconscient evolving into the subconscient.
The greatest endowment of Man survives his lowest fall.
According to our approach, this speaks of Man's greatness or lowness.
The idea of evolution reconciles both views.
The idea of Collins's situation being one that everyone has to pass through is a consolation.
The truth about the spouses is they are complements to one another.
It can be opposites or similarities or non-conflicting difference or one of violent conflict or any one of the intermediate levels.
How such a truth came to be modified into a gullible superstition as the one above is beyond present human conception.
What is interesting is the fervour with which it is spoken out.
Those who speak it believe it and are energized by the belief.
It is a cosy organism of superstition that lasts long.
Superstition too serves the social well being in its own way.
The Gita advises us not to undo superstition.
Sherlock Holmes held the attention of the world for several decades without knowing the earth moves around the sun.
He lived into the 20th century.
The knowledge of the solar system is useful but not essential to life.
Mr. Collins is a dynamic self-existing organism who makes growth possible at a great speed as he is constituted.
To know his constitution is to know the secret of human nature.
It is true they are made for each other because which other woman could have her mental peace in that domestic setup!
It is said with greater truth that Collins and Lady Catherine are made for each other.
"நாங்கள் ஒருவருக்காகவே ஒருவர் என பிறந்துள்ளோம்."
சமூகம் ஏற்றுக்கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளை எல்லோரும் பேசுவர்.
ஒவ்வொரு மனிதனும், அவனுடைய பொதுவான நம்பிக்கையை தனித்தன்மையுடன் வெளிப்படுத்துவான்.
இரண்டு மாறுபட்ட ஆன்மீகக் கருத்துகள் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போக வேண்டும்.
ஒன்று, ஆன்மா இல்லாத மனிதனில்லை. மற்றொன்று, மனித குலத்தின் சிறப்பான பகுதி சோம்பலாக உள்ளது.
ஜடம் ஆழ்மனமாக பரிணமிக்கும் கருத்தில் அவை ஒத்துப்போகின்றன.
மனிதனின் மிகப் பெரிய குணம் அவனது மோசமான வீழ்ச்சியையும் மீறி நிலைத்து இருக்கும்.
நமது அணுகுமுறைப்படி, மனிதனின் உயர்வைப் பற்றியோ தாழ்ந்ததைப் பற்றியோ இது பேசுகிறது.
பரிணாமத்தின் இந்த கருத்து இரண்டு பார்வையையும் சமரசப்படுத்துகிறது.

காலின்ஸிற்கு, அவனுடைய நிலைமை போன்றதொன்றை யாவரும் தாண்டித்தான் வர வேண்டும் என்பது ஒரு சமாதானமாக இருந்தது.
தம்பதிகள் இருவரும் ஒருவரை ஒருவர் நிறைவு செய்துகொள்வர் என்பது உண்மை.
அவை எதிர்மாறாகவோ அல்லது ஒரே விதமாகவோ அல்லது முரணற்ற வித்தியாசங்களாகவோ அல்லது கடுமையான முரண்பாடுகளாகவோ அல்லது இடைநிலையில் இருக்கும் எந்த ஒரு விஷயமாகவும் இருக்கலாம்.
மேலே கூறப்பட்டுள்ளதைப்போல், எவ்வாறு இது போன்ற உண்மை எளிதில் ஏமாற்றக் கூடிய மூடநம்பிக்கையாக மாற்றப்பட்டது என்பது தற்போதைய மனித எண்ணத்திற்கு அப்பாற்பட்டது.
அது எவ்வளவு ஆர்வத்துடன் பேசப்பட்டது என்பதுதான் ஆச்சரியத்திற்குரியது.
அதை பேசுபவர் அதை நம்புகிறார், அந்த நம்பிக்கை அவருக்கு தெம்பையும் அளிக்கிறது.
மூட நம்பிக்கையின் ஜீவன் நிலைத்து நிற்கிறது.
சமூக நன்மைக்கு மூடநம்பிக்கையும் அதனுடைய வழியில் சேவை செய்கிறது.
மூடநம்பிக்கையை நீக்க வேண்டாம் என்று கீதையும் கூறுகிறது.
இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த போதும், பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்ற விஷயத்தை அறியாமல் இருந்த ஷெர்லாக் ஹோம்ஸ், பல ஆண்டுகளாக உலகத்தின் கவனத்தை ஈர்த்தார்.
சூரியமண்டலத்தைப் பற்றி தெரிந்துகொள்வது பயனுள்ளதுதான் என்றாலும், வாழ்க்கைக்கு அது அத்தியாவசியமில்லை.
காலின்ஸ் சுறுசுறுப்பான சுயமாக இருக்கும் மனிதன், அவன் கட்டமைக்கப்பட்ட விதத்தினால் அவன் வேகமாக வளர்ச்சி அடைகிறான்.
அவன் கட்டமைக்கப்பட்ட விதத்தை தெரிந்துகொள்வது, மனித சுபாவத்தின் இரகசியத்தை தெரிந்துகொள்வது போலாகும்.
அவர்கள் இருவரும் ஒருவருக்காகவே ஒருவர் என பிறந்துள்ளனர் என்பது உண்மை, ஏனெனில் வேறு எந்த பெண்மணியால் அம்மாதிரியான ஒரு இல்லத்தில் மன நிம்மதியுடன் இருக்க முடியும்!
காலின்ஸும், லேடி காதரினும் ஒருவருக்காகவே ஒருவர் என பிறந்துள்ளனர் என்பது மேலும் உண்மையாகக் கூறப்படுகிறது.

Elizabeth could safely say that it was a great happiness where that was the case, and with equal sincerity could add, that she firmly believed and rejoiced in his domestic comforts. She was not sorry, however, to have the recital of them interrupted by the entrance of the lady from whom they sprung. Poor Charlotte! It was melancholy to leave her to such society! But she had chosen it with her eyes open; and though evidently regretting that her visitors were to go, she did not seem to ask for compassion. Her home and her housekeeping, her parish and her poultry, and all their dependent concerns, had not yet lost their charms.
"அப்படி இருக்கும் என்றால் அது மிகவும் மகிழ்ச்சிக்குரியது" என எலிசபெத்தால் சௌகரியமாக சொல்ல முடிந்தது. அவனுடைய இல்லற வாழ்க்கை சுகமாக இருப்பதிலுள்ள தன்னுடைய நம்பிக்கையையும், சந்தோஷத்தையும் மனப்பூர்வமாக அவளால் கூற முடிந்தது. யாரைப்பற்றி பேசிக் கொண்டிருந்தனரோ அந்தப் பெண்மணி உள்ளே வந்ததால் அப்பேச்சு தடைபட்டது, ஆனால் இதனால் எலிசபெத் வருத்தப்படவில்லை. பாவம் ஷார்லெட்! இப்படிப்பட்ட ஒரு இடத்தில் அவளை விட்டுச் செல்வது கஷ்டமாக இருந்தது. ஆனால் இது அவளாகவேதான் தேர்ந்தெடுத்து இருக்கிறாள். விருந்தினர்கள் கிளம்புவது அவளுக்கு வருத்தத்தை அளித்தது என்பது வெளிப்படையாகவே தெரிந்தது என்றாலும் அவள் எந்த அனுதாபத்தையும் எதிர்பார்க்கவில்லை. அந்த வீடு, வீட்டின் வேலைகள், சர்ச் பணிகள், அவளுடைய கோழிப்பண்ணை, அது சம்பந்தப்பட்ட பல வேலைகளும் இன்னும் அவளுடைய சுவாரசியத்தை தக்க வைத்துக் கொண்டிருந்தன.

24. Charlotte's subconscious substance enjoys the material security of being his wife. Elizabeth's pity for her friend is superfluous.
அவனுடைய மனைவியாக இருப்பதால் கிடைக்கும் பொருள்ரீதியான பாதுகாப்பை ஷார்லெட் ஆழ்மனதில் அனுபவிக்கிறாள். எலிசபெத், அவளுடைய தோழிக்கு காண்பிக்கும் அனுதாபம் மிகையாக இருக்கிறது.
25. Now that Charlotte has exhibited her contentment to Elizabeth, she feels not only a triumph, but feels justified in marrying him.
இப்பொழுது ஷார்லெட் தனது மனநிறைவை எலிசபெத்திடம் வெளியிட்டதால் வெற்றிப் பெருமிதம் மட்டுமல்லாமல், அவனை திருமணம் செய்துகொண்டது நியாயம் எனவும் உணர்கிறாள்.
26. There is no question of their losing their charms. They are her source of physical material security which marriage is.
அவைகள் தங்களுடைய கவர்ச்சியை இழப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. அவை உடல் மற்றும் பொருள்-ரீதியான பாதுகாப்பிற்கான காரணம் ஆகும். அதுவே திருமணமுமாகும்.
27. "Elizabeth could safely say that it was a great happiness where that was the case and with equal sincerity could add that she firmly believed in his comforts".
Adherence to utter truth is always possible for one wedded to truth.
To do so in an unreal context though possible is a strain.
How life interferes in relieving such a strain is one lesson in Life Response.

She forces herself to speak more than she wants because Collins expects her to speak out the thoughts she does not have, but he expects.
It is artificial convention maintained without life.
Charlotte is anxious not to expose Collins too much to Elizabeth.
She interrupts.
It is a life response governed by energies.
The whole of life can be covered under the heading Life Response.
A lady who married in another caste was asked about her marriage. She had willingly done it with enough cooperation but she was aware of the disapproval of Tamilnadu. That night current failed all over Tamilnadu for one day.
In 1915 Gandhiji announced non-violence. In 1919 he began its practice. **Jallianwallahbagh announced to him the need for violence.**
An employer who removed from service his best employee to serve his petty purposes was the founder and builder of that institution. At the end of a year he was unceremoniously removed from his child of an institution. The only difference is his employee came back, but he never staged a comeback.
He who wants to offend without cause is called on by life to reward him whom he offended. Ignorance cannot offend knowledge without its being compelled to acknowledge the reality behind appearances.
Non-existing organizational power desiring to order real social power finds itself mortally hurt without the victim retaliating.
When you understand life, life faithfully serves you.
Failing to understand life, she compels you to understand her.
Defying life, she destroys you or allows you to perish.
Life is a real force in Nature.
Soul in life emerging changes Nature into divine nature.
“அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அது மிகவும் சந்தோஷத்திற்குரியது என்று எலிசபெத்தால் நிச்சயமாகக் கூற முடிந்தது, அவனுடைய வசதிகளில் தனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது என்றும் அவளால் உண்மையாகக் கூற முடிந்தது.”
உண்மையை கடைப்பிடிப்பவருக்கு, உண்மை பேசுவது எப்பொழுதும் சாத்தியமாகும்.
உண்மையல்லாத விஷயத்தில் உண்மை பேசுவது சாத்தியம் என்றாலும் கடினமானது.
இந்த கஷ்டத்தை வாழ்க்கை எவ்வாறு விடுவிக்கிறது என்பது வாழ்வின் மறுமொழியில் ஒரு பாடமாகும்.
அவளிடம் இல்லாத எண்ணங்களை அவள் பேச வேண்டுமென்று காலின்ஸ் எதிர்பார்ப்பதால் அவள், தான் விரும்புவதைக் காட்டிலும் அதிகமாக பேச தன்னை வற்புறுத்திக் கொள்கிறாள்.
இது ஜீவனற்ற செயற்கையான மரபு.
காலின்ஸைப் பற்றி அதிகம் எலிசபெத்திற்கு வெளிப்படுத்த வேண்டாம் என்பதில் அவள் கவனமாக இருக்கிறாள்.
அவள் குறுக்கிடுகிறாள்.
அது சக்தியால் ஆளப்படும் வாழ்வின் மறுமொழியாகும்.
வாழ்வு முழுவதையும் வாழ்வின் மறுமொழியின் கீழ் கொண்டு வந்து விடலாம்.
வேறு ஜாதியில் திருமணம் செய்து கொண்ட ஒரு பெண்மணியிடம் அவளது திருமணத்தைப் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அவள் போதுமான ஒத்துழைப்புடன், விருப்பத்துடன் திருமணம் செய்து கொண்டுள்ளாள். ஆனால் தமிழ்நாட்டின் சம்மதம் கிடைக்காதது அவளுக்குத் தெரிந்திருந்தது. அன்று ஒரு நாள் இரவு தமிழ்நாடு முழுவதும் மின்சாரம் இல்லை.
1915ல் காந்திஜி அஹிம்சையை அறிவித்தார். 1919ல் அதனை கடைப்பிடிக்க ஆரம்பித்தார். **வன்முறையின் அவசியத்தை ஜாலியன்வாலாபாக் அவருக்கு உணர்த்தியது.**
சிறந்த ஊழியரை தன்னுடைய சிறிய நோக்கத்திற்காக வேலையிலிருந்து நீக்கம் செய்த முதலாளி, அந்த நிறுவனத்தை ஸ்தாபித்து வளர்த்தவராவார். அந்த வருட முடிவில் அவர் குழந்தையைப் போல் காத்த அந்நிறுவனத்திலிருந்து நீக்கப்பட்டார். ஒரே வித்தியாசம் அந்த ஊழியர் மீண்டும் அங்கு வேலையில் சேர்ந்தார், ஆனால் முதலாளியால் திரும்பி வரவே முடியவில்லை.
எந்த வித காரணமுமின்றி தீங்கு செய்பவரை வாழ்க்கை அழைத்து, தீங்கு செய்தவருக்கு வெகுமதி அளிக்க வைக்கும்.
தோற்றத்தின் பின்னாலுள்ள உண்மையைத் தெரிந்துகொள்ளாமல், அறியாமையால் அறிவிற்கு தீங்கிழைக்க முடியாது.
இல்லாத அமைப்பின் சக்தி உண்மையான சமூக சக்தியை அதிகாரம் செய்ய விரும்பினால் எதிராளி எதிர்க்காமலேயே, அதற்கு கடுமையான காயம் ஏற்படுவதைப் பார்க்கும்.
வாழ்க்கையைப் புரிந்துகொண்டால், வாழ்க்கை நமக்கு உண்மையுடன் சேவை செய்யும்.
வாழ்க்கையைப் புரிந்துகொள்ளத் தவறி விட்டால், அது நம்மை புரிந்துகொள்ள வற்புறுத்தும்.
வாழ்க்கையை மீறும் பொழுது, அது நம்மை அழிக்கும், அல்லது நாம் அழிந்து போக அனுமதி அளிக்கும்.

இயற்கையில் வாழ்க்கை உண்மையான சக்தியாகும்.
வாழ்க்கையில் வெளி வரும் ஆன்மா இயற்கையை தெய்வீகச் சுபாவமாக்கும்.

28. "She was not sorry for her recital to be interrupted by the arrival of Charlotte".
Events respond to our thoughts.
Elizabeth would like to stop, life stopped her.
When does it happen like this, how is it different from the response delayed?
What is the rule for delay?
Elizabeth's wish to break is strong. Her strength exceeding the strength of the atmosphere, the interruption arises. Darcy met her at Pemberley. She was by then ready, but not he, because he was not sure of the lady's response. Before that response could arise came Caroline's provocation. After it was overcome by Lydia's marriage, there was the obstacle created by the ruse. When it was cleared, Lady Catherine exerted herself. It was cleared by a reverse reaction. **The initial response was for the consenting thought. The final response waits for all the obstacles to be cleared.**
Elizabeth accepted Pemberley and Pemberley accepted her. She had not accepted Darcy as she had accepted Pemberley. Caroline's expectation was in the atmosphere. She exhausted it by provoking Elizabeth and Darcy. Wickham was in her Mind. When he went to Newcastle it was removed.
Without her conscious mental occupation there was Anne and her mother in the way. Final response awaited the clearance of all this. After Lydia's elopement, Elizabeth finally gave up any hope or hope of expectation from Darcy. Her desire to have hidden the event from him, created another barrier between them. Essentially she shut him out by that thought. The receipt of her aunt's letter changed her Mind and created expectation during his two visits with Bingley. **Now the expectation created barriers.** She finally gave up. Lady Catherine removed any semblance of it. Still, it was she who was to open the topic in a wretched state of Mind. Her thanks ensured him of the absence of all possible resistances. He had to propose. It was not in her hands. To evoke it silently, she was not qualified by the rules of Silent Will. The impossibility of her marrying him because of the social distance which was seen in the responses of Jane and Mr. Bennet were added barriers for her to overcome. **Her thanking him on their behalf removed that barrier sufficiently for him to speak.**
'ஷார்லெட் வந்ததினால் அவளுடைய பேச்சு தடைப்பட்டதைப் பற்றி அவள் வருத்தப்படவில்லை."
நமது எண்ணங்களுக்கு நிகழ்ச்சிகள் மறுமொழி கொடுக்கும்.
நிறுத்த வேண்டும் என எலிசபெத் நினைத்தாள், வாழ்க்கை அவளுக்கு உதவியது.
எப்பொழுது இது போல் நடைபெறுகிறது, தாமதித்து வரும் மறுமொழியைவிட இது எவ்வாறு மாறுபட்டது?
தாமதத்திற்கான சட்டம் என்ன?
விலகுவதற்கு எலிசபெத்தின் விருப்பம் வலிமையாக இருக்கிறது. சூழலின் வலிமையைவிட அவளுடைய வலிமை அதிகமாக இருப்பதால் குறுக்கீடு வருகிறது.
டார்சி அவளை பெம்பர்லியில் சந்திக்கிறான். அவள் தயாராக இருந்தாள், அவளுடைய எண்ணம் தெரியாததால் அவன் தயாராக இல்லை. அதற்கு பதில் கிடைப்பதற்கு முன், காரலின் கோபத்தைக் கிளப்புகிறாள். லிடியாவின் திருமணத்தின் மூலம் அதிலிருந்து மீண்டபோது, சூழ்ச்சி ஒரு தடையை எழுப்புகிறது. அதனை முடித்த பின் லேடி காதரின் வருகிறாள். அதுவும் தலைகீழாக எதிர்வினையால் சரி செய்யப்பட்டது. **முதல் மறுமொழி, ஒப்புதலளிக்கும் எண்ணத்திற்கு இருந்தது. இறுதி மறுமொழி, எல்லாத் தடைகளையும் சரி செய்வதற்கு காத்துக் கொண்டிருந்தது.**
எலிசபெத் பெம்பர்லியை ஏற்றுக்கொண்டாள், பெம்பர்லியும் அவளை ஏற்றுக்கொண்டது. பெம்பர்லியை ஏற்றுக்கொண்டது போல் டார்சியை அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. காரலினுடைய எதிர்பார்ப்பு சூழலில் இருந்தது. எலிசபெத் மற்றும் டார்சியின் கோபத்தை கிளப்புவதன் மூலம் அவள் அதனை தீர்த்துக்கொண்டாள். அவளுடைய மனதில் விக்காம் இருந்தான். அவன் நியூகாஸிலுக்கு சென்ற போது அது நீங்கியது.
நனவுபூர்வமாக அவள் மனத்தை எதுவும் ஆக்கிரமித்துக் கொள்ளாத வகையில், ஆன்-ம், அவளது தாயாரும் குறுக்கே இருந்தனர். இவை எல்லாம் தீருவதற்கு இறுதியான மறுமொழி காத்துக்கொண்டிருந்தது. லிடியா ஓடிப்போன பிறகு, எலிசபெத் நம்பிகையை இழந்தாள், டார்சியின் எதிர்பார்ப்பையும் இழந்தாள்.
நடந்த நிகழ்ச்சியை அவனிடமிருந்து மறைக்க வேண்டும் என அவள் விரும்புவது, மேலும் ஒரு தடையை அவர்களிடையே ஏற்படுத்தியது. முக்கியமாக அவள் அந்த எண்ணத்திலிருந்து அவனை நீக்கினாள். அவளுடைய அத்தையின் கடிதம் அவளுடைய மனத்தை மாற்றியது, டார்சியும், பிங்கிலியும் இரு முறை வந்தது ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. **இப்பொழுது இந்த எதிர்பார்ப்பு தடைகளை ஏற்படுத்தியது.** இறுதியில் அவள் நம்பிக்கை இழந்தாள். லேடி காதரின், மீதியுள்ள நம்பிக்கையையும் நீக்கினாள். ஆனாலும் அவள்தான், மோசமான மன நிலையில் மீண்டும் அந்த விஷயத்தை ஆரம்பித்து வைத்தாள். அவளுடைய நன்றி, வரக்கூடிய எல்லா தடைகளையும் நீக்கியது. அவன் திருமண பேச்சை எடுக்க வேண்டியதாயிற்று. அது அவளுடைய கைகளில் இருக்கவில்லை. மௌனமாக அதனை வெளிக் கொண்டுவர, அவளிடம் மௌன உறுதியும் இருக்கவில்லை. சமூக அந்தஸ்து திருமணத்திற்கு ஒரு தடையாக இருந்தது, இதற்கும் மேலாக ஜேன், திரு பென்னட் இருவருடைய தடைகளும் இருந்தன. **அவர்கள் சார்பில் அவள் நன்றி கூறியது தடைகளை போதிய அளவு நீக்கி அவனை பேச வைத்தது.**

29. "She has chosen it with eyes open".
When there is an advantage coming with a disadvantage Man chooses it in the hope it will not hurt.
Language calls it pious wish.
Psychology knows it as subconscious choice.
The subconscious compels the conscious to choose against its wishes.
She was born of an empty-headed Man and was brought up in social culture.
Empty-headedness does not hurt her essentially, but she is aware of the social deficiency.
By compensating that deficiency socially she will raise herself mentally high.
It is for that progress she chose him as a husband.
Charlotte does not have the mental faculty Elizabeth has.
She has a vital penetration based on mercenary values.
Elizabeth had a vital fall, but in two hours, she was able to get out of it because of her Mind.
Without that mental faculty Charlotte has to do it over a lifetime.
The mental learns by ideas, facts, and information.
The vital needs an experience in place of each one of them.
The Mind can perceive, the vital can only sense.
Charlotte thinks of further elevation to Collins in the church through Darcy without realising that it is her part to secure him any rise by inner psychological growth. Collins will destroy any promotion in life without further inner growth.
Whether they want to make that growth or not, is left to them.
People are not aware of psychological opportunity. They are too keenly aware of social opportunities.
One does not overtake the other too much without causing a tragedy at that level.
Life giving such opportunity positively or negatively is luck.
Collins has one in the living and in the wife.
Whether they live a family life or aspire for growth is up to them.
"அவள் தானாகவேதான் இதனை தேர்ந்தெடுத்திருக்கிறாள்."
அசௌகரியத்துடன் சேர்ந்து சௌகரியம் வரும்பொழுது, அதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்ற நம்பிக்கையில் மனிதன் இதனை தேர்ந்தெடுக்கிறான்.
அதனை பக்திபூர்வமான ஆசை என்பர்.
மனம் அதனை ஆழ்மன விருப்பம் என்று அறியும்.
ஆழ்மனம் மனத்தை அதனுடைய விருப்பத்திற்கு எதிராக தேர்ந்தெடுக்குமாறு வலியுறுத்துகிறது.
மூளை இல்லாத மனிதனுக்கு பிறந்த அவள், சமூக நாகரிகத்தில் வளர்க்கப்பட்டாள்.
மூளை இல்லாதது அவளை முக்கியமாக துன்புறுத்துவதில்லை, ஆனால் அவளுக்கு சமூக குறைபாடுகள் தெரிந்திருந்தது.
சமூக குறைபாடுகளை ஈடுகட்ட அவள் தன்னை மனத்தால் உயர்த்திக் கொள்வாள்.
இந்த முன்னேற்றத்திற்காகத்தான் அவள் அவனை கணவனாகத் தேர்ந்தெடுத்தாள்.
எலிசபெத்திடம் இருக்கும் மனத்திறன் ஷார்லெட்டுக்கு இல்லை.
ஆதாய மனப்பான்மையின் அடிப்படையில் அவளது உணர்வின் ஆழம் உள்ளது.
எலிசபெத்திற்கு உணர்வில் வீழ்ச்சி ஏற்பட்டது, அவளுடைய மனத்தின் திறனால் அவளால் அதிலிருந்து இரண்டு மணி நேரத்தில் மீண்டு வரமுடிந்தது.
அந்த மனத் திறன் இல்லாத ஷார்லெட்டுக்கு அதை செய்ய வாழ்நாள் முழுவதும் தேவைப்பட்டது.
கருத்துகள், உண்மைகள், தகவல்கள் மூலம் மனம் கற்றுக்கொள்ளும்.
ஒவ்வொன்றிலும் உணர்வுக்கு ஒரு அனுபவம் தேவைப்படுகிறது.
மனம் அறிந்துணர முடியும், உணர்வுக்கு உணர மட்டும் முடியும்.
டார்சி மூலம் காலின்ஸிற்கு சர்ச்சில் மேலும் பதவி உயர்வு கிடைக்க வேண்டும் என ஷார்லெட் நினைக்கிறாள், மனரீதியாக அகத்தில் வளர்ச்சி அடைவதன் மூலம் அவனுக்கு உயர்வை வாங்கித் தர வேண்டியது தனது பங்கு என அவளுக்குப் புரியவில்லை. அகத்தில் முன்னேற்றமடையாமல், வாழ்க்கையில் எந்த உயர்வையும் காலின்ஸ் கெடுத்து விடுவான். அந்த வளர்ச்சியை அடைய வேண்டுமா, வேண்டாமா என்பது அவர்களது விருப்பம்.
மனரீதியான வாய்ப்புகளை மனிதர்கள் அறிவதில்லை. சமூக வாய்ப்புகளை ஆர்வத்துடன் அறிந்துள்ளனர்.
ஒருவர் அந்த நிலையில் ஆபத்தை ஏற்படுத்தாமல், மற்றவரைத் தாண்டிச் செல்வதில்லை.
நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ வாழ்க்கை அது போன்ற வாய்ப்புகளை தருவது அதிர்ஷ்டமாகும்.
வேலையிலும், மனைவி அமைவதிலும் காலின்ஸிற்கு அதிர்ஷ்டம் உள்ளது.
இல்லற வாழ்க்கை வாழ வேண்டுமா அல்லது வளர்ச்சிக்கு ஆர்வம் கொள்வதா என்பது அவர்களது விருப்பம்.

30. "Her home and her housekeeping, her parish and her poultry, and all her dependent concerns had not lost their charms yet".

The substance is more real than the consciousness.
Home is the consciousness, the house is the substance.
The ideal is the consciousness, the organization is the substance.
So, also romance and marriage; affection and property.
Here it is the Parish and Parsonage.
What is conceived of in the high must be realized in the low.
Both are in tune with each other.
There is a natural balance slowly building up.
Ego is free to interfere and choose a new balance, which it always does with a vengeance.
The mental energies are absorbed by the ideal.
The physical energies need a proper occupation.
Organising the kitchen, feeding the chicken, digging the garden exhaust the physical energies.
In the absence of enough idealism, one becomes cynical.
In the absence of enough physical absorption, the idealism becomes physical, coarse, organizing decay.
Couples who have enough energy and less culture keep up the balance by quarrelling, complaining, doubting, etc.
Such couples spending time to organize the house into a home at a higher level of orderliness and cleanliness will find their quarrels disappear.
Energy to listen to the long-winded speeches of Collins requires as much energy as to keep the house in perfect order.
The infinity can be discovered in the writing of the sermon or cultivating the grass in the close.
Attitude matters, not the hours spent in work.
It will never strike a Man that the person with him is a great psychological opportunity.
“அவளுடைய வீடு, வீட்டின் வேலைகள், சர்ச் பணிகள், அவளுடைய கோழிப்பண்ணை, அது சம்பந்தப்பட்ட பல வேலைகளில் இன்னமும் அவளுக்கு சுவாரசியம் இருக்கிறது”.
ஜீவியத்தைவிட பொருள் அதிகம் உண்மையாக இருக்கும்.
இல்லம் ஜீவியம் என்றால், வீடு பொருளாகும்.
இலட்சியம் ஜீவியம் என்றால், அமைப்பு பொருளாகும்.
காதலும் திருமணமும்; பாசமும் சொத்தும் இதே போல்தான்.
இங்கு இது சர்ச்சும், பாதிரியின் விடுதியுமாகும்.
உயர்ந்ததில் திட்டமிடப்பட்டது, தாழ்ந்ததில் நிறைவேற்றப்பட வேண்டும்.
இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணக்கமாக உள்ளன.
இயற்கையான சமநிலை மெதுவாக உருவாகி வருகிறது.
அகந்தை சுதந்திரமாக குறுக்கிட்டு, புதிய சமநிலையை தேர்ந்தெடுக்கலாம், அதை எப்பொழுதும் அது வன்மத்துடன் செய்கிறது.
மனத்தின் சக்திகளை இலட்சியங்கள் கிரகித்துக்கொள்கின்றன.
உடல் சக்திகளுக்கு சரியான வேலை அளிக்கப்பட வேண்டும்.
சமையலறையை முறைப்படுத்துவது, கோழிக் குஞ்சுகளுக்கு தீனி கொடுப்பது, தோட்ட வேலை செய்வது, இவை எல்லா சக்திகளையும் உறிஞ்சி விடும்.
போதுமான இலட்சியங்கள் இல்லாமல் இருந்தால், ஒருவர் எதிலும் நம்பிக்கை அற்றவராக மாறி விடுவர்.
போதுமான அளவு உடலால் சக்திகளை செலவழிக்காவிட்டால் இலட்சியங்கள் ஜடமாகவும், பக்குவமற்றும், மாறிவிடுகிறது. அழிவுக்கும் வழி கோலுகிறது.
போதுமான தெம்பும் குறைவான நாகரிகமும் இருக்கும் தம்பதியினர், சண்டை போடுவது, குறை கூறுவது, சந்தேகப்படுவது இவைகளின் மூலம் சமநிலையில் தங்களை வைத்துக் கொள்கின்றனர்.
இப்படிப்பட்ட தம்பதியினர் வீட்டை இல்லமாக்கி, உயர்ந்த நிலையில் ஒழுங்கையும் சுத்தத்தையும் கொண்டு வர முயற்சி செய்தால் அவர்களுடைய சண்டைகள் யாவும் விலகுவதைக் காண்பர்.
காலின்ஸின் சுற்றி வளைத்து பேசும் நீண்ட பேச்சை கேட்க எவ்வளவு தெம்பு வேண்டுமோ, அதே அளவு தெம்பு வீட்டை சிறப்பாக வைத்துக்கொள்ளவும் தேவைப்படும்.
நீதி போதனையை எழுதுவதில் அகண்டத்தை கண்டு பிடிக்கலாம் அல்லது தோட்டத்தை பராமரிப்பதிலும் அகண்டத்தை கண்டு பிடிக்கலாம்.
மனோபாவம்தான் முக்கியமே தவிர வேலையில் செலவழிக்கும் நேரம் அல்ல.
தன் கூடவே இருக்கும் நபர், ஒரு பெரிய மனோரீதியான வாய்ப்பினை அளிப்பவர் என மனிதனுக்கு புரியவே புரியாது.

At length the chaise arrived, the trunks were fastened on, the parcels placed within, and it was pronounced to be ready. After an affectionate parting between the friends, Elizabeth was attended to the carriage by Mr. Collins, and as they walked down the garden, he was commissioning her with his best respects to all her family, not forgetting his thanks for the kindness he had received at Longbourn in the winter, and his

compliments to Mr. and Mrs. Gardiner, though unknown. He then handed her in, Maria followed, and the door was on the point of being closed, when he suddenly reminded them, with some consternation, that they had hitherto forgotten to leave any message for the ladies at Rosings.
பெட்டிகளை உள்ளே வைத்தபின், கிளம்புவதற்குத் தயார் என்று அறிவிக்கப்பட்டது. நண்பர்களின் பிரியாவிடைக்குப் பிறகு காலின்ஸ் வண்டிவரை எலிசபெத்துடன் சென்றான். தோட்டத்தில் நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது, அவளுடைய குடும்பத்தினர் அனைவருக்கும் தன் மரியாதையை தெரிவிக்குமாறு கூறினான், குளிர்காலத்தில் லாங்பர்னில் தனக்கு கிடைத்த அன்புக்கு நன்றி சொல்ல மறக்கவில்லை, திரு. கார்டினர் தம்பதிகளுக்கு, அவர்களை பரிச்சயம் இல்லாவிடினும் தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்குமாறு கூறினான். பிறகு அவளை வண்டியுனுள் ஏற்றினான். மரியாவும் பின் தொடர்ந்தாள். கதவு மூடப் போகும் சமயத்தில், தன்னை ஒருமுனைப்படுத்திக் கொண்டு, அவர்கள் ரோஸிங்ஸில் உள்ள பெண்மணிகளுக்கு ஏதாவது ஒரு செய்தியை சொல்ல மறந்து விட்டார்களா என திடீரென்று அவர்களுக்கு ஞாபகப்படுத்தினான்.

32. Mr. Collins' formality now extends to the Gardiners though unknown to him.
தெரியாதவர்களாக இருப்பினும் காலின்ஸ், தன்னுடைய மரியாதையை இப்பொழுது கார்டினர் தம்பதியினரிடமும் காண்பிக்கிறான்.

"But," he added, "you will of course wish to have your humble respects delivered to them, with your grateful thanks for their kindness to you while you have been here."
"ஆனால் நீங்கள் அங்கிருந்த பொழுது உங்களுக்கு காட்டப்பட்ட அன்புக்கு மிக்க நன்றி கூறி உங்களுடைய பணிவு கலந்த மரியாதையை அவர்களுக்கு கண்டிப்பாகத் தெரிவிக்க விரும்புவீர்கள்," என்று கூறினான்.

33. His existence is with respect to his beliefs.
அவன் நம்புவதை அவன் செய்வான்.
34. He suddenly developed the consternation of no message to Rosings and as readily made amends for it.
திடீரென்று அவன் ரோசிங்ஸிற்கு எந்த செய்தியும் அனுப்பாமல் மனக் குழப்பத்தில் இருந்தான், அதனை உடனே சரி செய்தான்.

Elizabeth made no objection; the door was then allowed to be shut, and the carriage drove off.
எலிசபெத் இதற்கு ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை;- பிறகு கதவு மூடப்பட்டு வண்டி கிளம்பிச் சென்றது.

"Good gracious!" Cried Maria, after a few minutes silence, "it seems but a day or two since we first came! -- and yet how many things have happened!"
"அட கடவுளே" என்று கூறிய மரியா சிறிது வினாடி மௌனத்திற்குப் பிறகு, "நாம் வந்து ஓரிரு நாட்கள்தான் ஆகியிருப்பது போலிருக்கிறது!, ஆனாலும் எவ்வளவு விஷயங்கள் நடந்துள்ளன," என்கிறாள்.

35. The difference of experience in Maria and Elizabeth could have been in one person himself.
எலிசபெத்திற்கும், மரியாவுக்கும் ஒரு நபரைப் பொறுத்த அளவில் வெவ்வேறு அனுபவங்கள் கிடைத்திருக்கலாம்.
36. The theory of Shankara's Maya gets one more illustration.
சங்கரரின் மாயை சித்தாந்தத்திற்கு மற்றும் ஒரு உதாரணம் கிடைக்கிறது.
37. Maria would have made a good wife to Collins.
காலின்ஸிற்கு மரியா சிறந்த மனைவியாக இருந்திருப்பாள்.
38. Being her sister, we know Charlotte feels at some level like Maria.
அவளுடைய சகோதரியாக இருப்பதால், ஷார்லெட் ஏதாவது ஒரு நிலையில் மரியாவைப் போல் நினைக்கிறாள் என நமக்குத் தெரியும்.
39. Elizabeth sees Charlotte's manners, misses what she really is inside.
ஷார்லெட்டின் நடத்தையை எலிசபெத் கவனிக்கிறாள், ஆனால் உண்மையில் அவள் தன்னுள்ளே எவ்வாறு இருக்கிறாள் என்பதை கவனிக்கத் தவறி விடுகிறாள்.
40. **"It seems but a day or two since we arrived".**
Time is subjective in experience.
Time is the subjective state of the Spirit.
The spirit seeing its own movements is Time.
Maria observing her own movements is her Time.
While in the presence of greatness, she is still inside.
Her Time flies.
It may be subjective to one, but is it not objective?
Has Time no objective status?

It is a relative conception with respect to Spirit or Being.
A long duration of Time can become a trice in Simultaneous Time.
Our perception of Time varies from the plane we are perceiving.
At the physical plane Time is slowest.
At the Spiritual plane Time moves quickly.
A disappointed lover finds Time hanging on him heavily.
In company with his love, Time flies.
Both are in the vital plane.
It is the attitude to Time that differs.
So, it is obvious Time is subjective.
By changing our attitude within the same plane, Time can fly.
Hence cheerfulness is a better foundation of yoga.
Taking interest in the work we are doing, instead of wanting to do the work we are interested in, we change the basic foundation of life. Time that hangs on us flies.
Attitude to Time in 'The Four Aids' accomplishes the work at once.
The essence of this attitude is life is self-centred.
Mr. Bennet took this attitude in his decision and the atmosphere changed and accomplished itself.
Mrs. Bennet confined to her room was in physical Time.
Lydia during the elopement was in 'positive' vital Time as she had no outside reference to the existence of a society.
"நாம் வந்து ஓரிரு நாட்கள்தான் ஆனது போலுள்ளது."
நேரம் என்பது அனுபவத்தில் மனத்தைப் பொறுத்தது.
ஆன்மாவின் அக நிலை, நேரம்.
ஆன்மா தன் அசைவுகளைப் பார்ப்பதே அதற்குரிய நேரம்.
மரியா தன்னுடைய அசைவுகளைப் பார்ப்பதே அவளுக்குரிய நேரம்.
உயர்ந்ததற்கு அருகில் இருக்கும்பொழுது, அவள் அகத்தில் வாழ்கிறாள்.
அவளுக்கு நேரம் போதவில்லை.
ஒருவருக்கு அது மனத்தைப் பொருத்ததாக இருக்கலாம், ஆனால் அது மனம் சம்பந்தப்படாதது அல்லவா? நேரத்திற்கு புற நிலை கிடையாதா?
அது ஆன்மாவுடனும் ஜீவனுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் கருத்தாகும்.
மூன்றாம் நிலை காலத்தில் நேரம் கணப்பொழுதாக மாறி விடும்.
நேரத்தின் நமது அறிவு, நாம் எந்த நிலையிலிருந்து உணருகிறோமோ அந்த நிலைக்கு ஏற்றவாறு மாறும்.
ஜட நிலையில் நேரம் மிகவும் மெதுவாக நகரும்.
ஆன்மீக நிலையில் நேரம் வேகமாக நகரும்.
ஏமாற்றமடைந்த காதலனுக்கு நேரம் நகருவதே இல்லை என்று தோன்றும்.
அவன் காதலியுடன் இருக்கும் பொழுது நேரம் போவதே தெரிவதில்லை.
இரண்டுமே உணர்வின் நிலையில் உள்ளன.
நேரத்தின் மீதுள்ள நமது மனோபாவம்தான் மாறுகிறது.
அதனால் நேரம் என்பது அகத்தின் நிலையாகும்.
ஒரே நிலைக்குள் நமது மனோபாவத்தை மாற்றிக் கொண்டால் நேரம் போவதே தெரியாமல் இருக்கலாம்.
எனவே கலகலப்பாக இருப்பது யோகத்திற்கு சிறந்தது.
நாம் விரும்பும் வேலையை செய்வதைவிட, நாம் செய்யும் வேலையில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டால், வாழ்க்கையின் அடிப்படை ஆதாரத்தை மாற்றுகிறோம் என்றாகிறது. நேரம் போவதே தெரியாது.
'The Four Aids'ல் கூறப்பட்டிருக்கும் நேரத்திற்குரிய மனப்பான்மையை எடுத்துக் கொண்டால், வேலை உடனடியாக நிறைவேறும்.
இந்த மனோபாவத்தின் கருத்து, வாழ்க்கை சுயநலமாக இருக்கிறது என்பதுதான்.
திரு பென்னட் தன்னுடைய தீர்மானத்தில் இந்த மனப்பான்மையை எடுத்துக் கொண்டார், சூழல் மாறி வேலை தன்னால் நிறைவேறியது.
தன்னுடைய அறைக்குள்ளேயே முடங்கி இருந்த திருமதி பென்னட், ஜடநிலைக்குரிய நேரத்தில் இருந்தாள்.
ஓடிப்போகும் சமயத்தில் லிடியா நேர்மறையான உணர்வின் நேரத்தில் இருந்தாள், சமூகத்தைப் பற்றிய எந்த ஒரு கருத்தும் அவளுக்கு இல்லை.

41. "How many things happened".
One interesting event spoken all day long appears to be too many things.
The first invitation to Rosings found the Parsonage after discussing it all day.
Matters of interest continue to recur in the Mind renewing the interest.
What then is interest?

Attitude that releases greater energy than the work requires is interest.
Where does that excess energy come from?
It comes from the understanding of the Mind that places the evaluation of the work higher than his own worth – an ideal.
Moving towards an ideal releases greater interest in the vital.
In the physical it generates greater efficiency.
Greater knowledge about the ideal arises in the Mind.
The Absolute becoming the ideal, all the knowledge in the world comes.
Mind realising the Absolute generates all the power of that knowledge.
That power expresses as organized thoughts.
The Absolute cannot be captured by anything that is organized.
So it must be an organization that is not organized.
Consciousness grows by organization.
By what does the organization grow?
Self-awareness is capable of Self-organisation. Consciousness that is Self-aware is Being.
Does the Being grow? If so, how.
By losing its form into formless existence, it grows.
Existence is a force.
The growth of force is into its original status of the Absolute.
Creation is creation of self-perceived truth into force and form.
Such a self-perception is a power of the Absolute.
In sleep Man rises to Sachchidananda to replenish his energies.
It is conscious sleep.
Unconscious sleep takes one to Inconscient.
“எவ்வளவு விஷயங்கள் நடந்திருக்கின்றன?”
ஒரே சுவாரசியமான விஷயத்தை நாள் முழுவதும் பேசினால், பல விஷயங்கள் நடந்திருப்பதுபோல் ஒரு தோற்றம் உண்டாகிறது.
ரோசிங்ஸிலிருந்து கிடைத்த முதல் அழைப்பைப் பற்றி நாள் முழுவதும் அவர்களது இல்லத்தில் பேசப்பட்டது.
சுவாரசியமான விஷயம் மீண்டும் மீண்டும் மனதில் எழுந்து அதிலுள்ள சுவாரசியத்தைப் புதுப்பிக்கிறது.
பிறகு சுவாரசியம் என்பதுதான் என்ன?
வேலைக்குத் தேவைப்படும் சக்தியைவிட அதிகமான சக்தியை அளிக்கும் மனோபாவமே, சுவாரசியம் ஆகும்.
அந்த அதிகப்படியான சக்தி எங்கிருந்து வருகிறது?
அவனுடைய தகுதிக்கும் மீறிய இடத்தை, அவனது வேலைக்கு கொடுப்பது மனத்தின் புரிதலால் ஏற்படுகிறது.
இதனை இலட்சியம் என்கிறோம்.
இலட்சியத்தை நோக்கி நகர்ந்தால், உணர்வில் அதிக ஆர்வம் எழுகிறது.
ஜடத்தில் அது மேலும் அதிக திறனை உண்டாக்குகிறது.
இலட்சியத்தைப் பற்றிய உயர்ந்த ஞானம் மனதில் எழுகிறது.
பிரம்மம் இலட்சியமானால், உலகத்தின் அனைத்து ஞானமும் கிடைக்கும்
பிரம்மத்தை மனம் அறிந்துகொண்டால், அந்த ஞானத்தின் எல்லா சக்திகளும் உற்பத்தியாகும்.
அந்த சக்தி, முறைப்படுத்தப்பட்ட எண்ணங்களாக வெளிப்படும்.
முறைப்படுத்தப்பட்ட எதனாலும் பிரம்மத்தை கைப்பற்றிவிட முடியாது.
அதனால் அது ஒரு முறைப்படுத்தப்படாத அமைப்பாக இருக்க வேண்டும்.
அமைப்பினால் ஜீவியம் வளரும்.
எதனால் அமைப்பு வளர்கிறது?
சுய விழிப்புணர்ச்சியால் சுய அமைப்பு சாத்தியம். சுய விழிப்பாக உள்ள ஜீவியம் சத் ஆகும்.
சத் வளருமா? வளரும் என்றால், எப்படி வளரும்?
உருவம் அழிந்து உருவமில்லாததாக மாறினால், அது வளரும்.
வாழ்வு ஒரு சக்தியாகும்.
சக்தி வளரும் பொழுது ஆரம்ப நிலையான பிரம்மத்தை அடைகிறது.
சுயமாக அறிந்துணரும் உண்மை சக்தியாகவும், தோற்றமாகவும் உருவாவதே சிருஷ்டியாகும்.
இது போன்ற சுய புலனறிவே பிரம்மத்தின் சக்தியாகும்.
தூக்கத்தில் மனிதன் தன்னுடைய சக்தியை மீண்டும் புதுப்பித்துக்கொள்ள சச்சிதானந்தத்தை எட்டுகிறான்.
அது நனவோடு தூங்கும் தூக்கம் ஆகும்.
நினைவில்லாமல் தூங்குவது ஒருவரை ஜட இருளுக்கு அழைத்துச் செல்லும்.

"A great many indeed," said her companion with a sigh.

"ஆமாம், எவ்வளவோ விஷயங்கள் நடந்துள்ளன" என்று எலிசபெத் ஒரு பெருமூச்சுடன் கூறினாள்.

"*We have dined nine times at Rosings, besides drinking tea there twice! How much I shall have to tell!"*
"ரோஸிங்ஸில் நாம் ஒன்பது முறை விருந்துண்டிருக்கிறோம், இரண்டு முறை தேநீர் விருந்துக்குச் சென்றோம், எனக்கு எல்லோரிடமும் கூற எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன."

42. "How much I shall have to tell".
Man of this consciousness speaks of past events of twenty years as if they took place today.
It is because it is ever-living in his Mind.
Sir Lucas speaks of his experience in St. James like that.
It is interesting to him, but tiring to the listener.
There are others who can make it interesting to the listener too.
It is done by his identifying with the other.
Such an identification can be direct or through the subject.
Cosmic life is identification of the One with the Many and Many with the One and Many with the Many.
Sir Lucas is partly fulfilling his cosmic destiny at his level.
When they say there is no past or future but everything is in the present, it means by shedding accretions of the tradition the Present can grow into the ever-Present.
A small human vessel is overcome by small events apparently great.
A vessel becomes great when it can overflow or overcome any event apparent or real, small or great.
It is a vessel aware of its infinity.
Infinity is there in every plane.
Vast wealth is material infinity.
Great power is vital infinity.
Great ideas are infinity of the Mind.
Any act opens into the infinity when the ingoing selfishness becomes selfless.
Energy of the body, interest of the vital, ideas of the Mind are live aspects of these planes.
All planes are infinite, alive. Man is the determinant.
Man in Nature, ego ridden cannot be alive or infinite.
Overcoming ego, overcoming Nature, yoga is completed.
Human choice then is divine intention.
"எனக்கு சொல்வதற்கு எவ்வளவு இருக்கின்றன."
இந்த ஜீவியத்தை உடைய ஒரு மனிதன், இருபது வருடங்களுக்கு முன் நடந்ததை இன்றுதான் நடந்தது போல் பேசுவான்.
ஏனென்றால் அது அவன் மனதில் எப்பொழுதும் உயிருடன் இருக்கிறது.
சர் லூகாஸ் சென்ட் ஜேம்ஸில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றி இவ்வாறு பேசுகிறார்.
அது அவருக்குச் சுவையாக இருக்கிறது, கேட்பவர்களுக்கு சோர்வை ஏற்படுத்துகிறது.
கேட்பவர்களுக்கும் சுவைபட இருக்குமாறு பேசுபவர்களும் இருக்கிறார்கள்.
அது தம்மை மற்றவர்களுடன் பொருத்திப் பார்ப்பதன் மூலம் சாத்தியமாகிறது.
அது போன்ற ஐக்கியம், நேரடியாகவும் இருக்கலாம் அல்லது பேசப்படும் பொருள் மூலமாகவும் இருக்கலாம்.
ஒன்று பலவற்றுடனும், பல ஒன்றுடனும், பல பலவற்றுடனும் ஐக்கியமாவதே பிரபஞ்ச வாழ்வாகும்.
சர் லூகாஸ் தன்னுடைய பிரபஞ்ச வாழ்வை, தன் நிலையில் ஓரளவிற்குப் பூர்த்தி செய்கிறார்.
கடந்தகாலமும் கிடையாது, எதிர்காலமும் கிடையாது. ஆனால் எல்லாம் நிகழ்காலத்திலேயே உள்ளது என்று அவர்கள் கூறும்பொழுது, மரபின் சுமைகளை உதிர்ப்பதன் மூலம் நிகழ்காலம், எப்பொழுதும் நிலைத்து நிற்கும் காலம் போலாகும் என்று அர்த்தமாகிறது.
பெரிதாகத் தோன்றும் சிறிய விஷயங்கள், ஒரு சிறிய மனிதனை வியப்பில் ஆழ்த்துகிறது.
வெறும் தோற்றமோ அல்லது உண்மையோ, சிறியதோ அல்லது பெரியதோ, அப்படிப்பட்ட நிகழ்வை வெற்றி கொள்ளும்பொழுது ஒருவன் பெரியவன் ஆகிறான்.
ஒருவனுக்கு அவனது அளவற்ற தன்மையைப் பற்றி தெரியும்.
ஒவ்வொரு நிலையிலும் அளவற்ற தன்மை உள்ளது.
அதிகமான சொத்து பொருள்ரீதியான அளவற்ற தன்மை.
உயர்ந்த அதிகாரம் உணர்வின் அளவற்ற தன்மை.
பெரிய எண்ணங்கள் மனத்தின் அளவற்ற தன்மை.
சுயநலம் பரநலம் ஆகும்போது, ஒரு செயல் அளவற்ற தன்மையை அடைகிறது.
உடலின் சக்தி, உணர்வின் ஆர்வம், மனத்தின் எண்ணங்கள், இவை இந்த நிலைகளின் ஜீவனுள்ள அம்சங்கள்.
எல்லா நிலைகளும் அளவற்ற தன்மை உடையவை, ஜீவனுள்ளவை, மனிதன்தான் தீர்மானிப்பவன்.

இயற்கையில் மனிதன் அகந்தையுடன் இருப்பதால் ஜீவனுள்ளவனாகவோ அல்லது அளவற்ற தன்மையுடனோ இருக்க முடியாது.
அகந்தையையும் இயற்கையையும் தாண்டி வரும்போது, யோகம் முடிவு பெறுகிறது.
அப்பொழுது மனித விருப்பம், இறைவனின் நோக்கம் ஆகிறது.

Elizabeth privately added, "And how much I shall have to conceal."
“எனக்கு மறைக்க வேண்டிய விஷயங்கள் எவ்வளவு இருக்கின்றன” என்று எலிசபெத் மனதிற்குள் நினைத்துக் கொள்கிறாள்.

43. Everyone has a private life.
ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட வாழ்க்கை இருக்கிறது.
44. Elizabeth does have a life of her own which, of course, can never be seen by Maria, as she fails to see Charlotte’s private satisfaction.
ஷார்லெட்டின் தனிப்பட்ட திருப்தியைப் பார்க்கத் தவறிய எலிசபெத்தைப்போல் மரியாவால், எலிசபெத்தின் தனிப்பட்ட வாழ்க்கையை பார்க்கவே முடியாது.
45. “How much I shall have to conceal”.
The poet said language is given to Man to conceal his thoughts.
To conceal is civilization.
Collins cannot conceal.
What everyone wants to conceal he wants to display.
Inner life collects by such processes of concealing.
It is best felt when one is in love.
Whether before marriage or after marrying, it is difficult to bring oneself to mention his love – even to his love.
That which fills the heart to bursting and craves for expression refuses to be touched by mentioning.
Darcy said ‘one who felt less could speak’.
When a Man loves and marries her only to find out it was a marriage without love it offends him to speak to her of his love.
If it is the turn of the woman to be so disappointed, she will be mortally offended as she has to carry the dead weight of her body on a dead soul.
The tragedy of successful love that ends in marriage is living death.
One cannot stand being fooled by oneself.
Incidentally, it is a confirmation that only the Divine deserves love.
He who is born great, says Savitri, must learn to live alone.
Love that is given to God inside will not be disappointed when it goes out to a human end.
Human love contains so much of selfishness, says Mother.
Elizabeth does not belong to Meryton.
Had Mr. Bennet married a sensible woman, sensible children would have been born.
Lydia on one side makes Elizabeth on the other side.
Only Mrs. Bennet could bear Elizabeth to Mr. Bennet.
“நான் எத்தனை விஷயங்களை மறைக்க வேண்டும்”.
எண்ணங்களை மறைப்பதற்காகத்தான் மனிதனுக்கு மொழி அளிக்கப்பட்டுள்ளது என்று கவிஞன் கூறியுள்ளான்.
மறைப்பது நாகரிகம்.
காலின்ஸால் மறைத்து வைக்க முடியாது.
மற்றவர்கள் மறைக்க விரும்புவதை அவன் வெளிப்படுத்த விரும்புகிறான்.
அது போல் மறைக்கப்படுவதால் அக வாழ்க்கை திரட்டப்படுகிறது.
ஒருவர் காதலிக்கும்பொழுது இது அதிகமாக உணரப்படுகிறது.
திருமணத்திற்கு முன்போ அல்லது பின்போ ஒருவருக்கு தன் காதலரிடம்கூட காதலைப் பற்றி பேசுவது கடினம்.
மனத்தை சிதறும் அளவுக்கு நிரம்பி வழியும் விஷயங்களும் வெளிப்படுவதற்காக ஏங்கும் விஷயங்களும் வெளிப்பட விரும்புவதில்லை.
‘சிறிதளவே உணர்ந்தவர்களால்தான் பேசமுடியும்’ என்று டார்சி கூறுகிறான்.
ஒருவன் காதலித்து ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட பின், தன்னுடைய திருமணத்தில் காதலே இல்லை என்று அறிந்துகொள்ளும் பொழுது, அவளிடம் தனக்கிருந்த காதலைப் பற்றி பேச அவன் மனம் புண்படுகிறது.
இதே போல் ஒரு ஏமாற்றம் பெண்ணுக்கு ஏற்பட்டால், ஜீவனில்லாத வாழ்க்கைக்காக அவள் மிகவும் அதிகமாக வருத்தப்படுவாள்.

வெற்றிகரமான காதல், திருமணத்தில் முடியும்பொழுது எழும் ஆபத்தினால் வாழ்க்கை ஜீவனில்லாது இருக்கும்.
தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ள எவரும் விரும்ப மாட்டார்.
இறைவனிடம் மட்டுமே அன்பு செலுத்த வேண்டும் என்பது ஊர்ஜிதமாகிறது.
உயர்வாகப் பிறந்திருப்பவர் தனியாக வாழ கற்றுக்கொள்ள வேண்டும் என்று சாவித்ரி கூறுகிறது.
உள்ளே இருக்கும் இறைவனிடம் செலுத்தும் அன்பு, மனித முனைக்கு செல்லும் பொழுது ஏமாற்றம் அடைவதில்லை.
மனித அன்பில் சுயநலம் அதிகமாக இருப்பதாக அன்னை கூறுகிறார்.
மெரிடனை சேர்ந்தவளல்ல எலிசபெத்.
திரு பென்னட் அறிவுள்ள ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டிருந்தால், அறிவாளியாக குழந்தைகள் பிறந்திருக்கும்.
ஒரு பக்கத்தில் லிடியாவும், மறு பக்கத்தில் எலிசபெத்தும் இருக்கின்றனர்.
திருமதி பென்னட்டால் மட்டுமே எலிசபெத் போன்ற ஒரு பெண்ணை திரு பென்னட்டிற்கு அளிக்க முடியும்.

Their journey was performed without much conversation, or any alarm; and within four hours of their leaving Hunsford they reached Mr. Gardiner's house, where they were to remain a few days.
அவர்களுடைய பயணம் அதிக உரையாடலின்றி, பயமின்றி இருந்தது. ஹன்ஸ்போர்டை விட்டு கிளம்பிய நான்கு மணி நேரத்திற்குள்ளேயே திரு. கார்டினர் வீட்டிற்கு வந்தடைந்தனர், அங்கு அவர்கள் சில நாட்கள் தங்குவதாக இருந்தனர்.

46. During the journey, Elizabeth withdrew into herself while Maria disappeared into her daze.
பிரயாணத்தின்போது எலிசபெத் தன் நினைவுகளில் ஆழ்ந்து போனாள், மரியா உறங்க ஆரம்பித்தாள்.
47. Why does Jane Austen mention 'without any alarm'.
'எந்த வித பயமுமின்றி' என்று ஜேன் ஆஸ்டின் எதற்காக கூறுகிறாள்.
48. Elizabeth's understanding is an eternal alarm to Maria which Georgiana later found out.
எலிசபெத்திற்குப் புரிந்தது, மரியாவிற்கு தொடர்ந்த அச்சம் தருவதாக இருந்தது. இதனை ஜார்ஜியானா பின்னால் கண்டு பிடித்தாள்.
49. "Their journey was performed without conversation or any alarm".
Intense experience in contemplation creates silence.
This is outer silence while the inner activity goes on.
Even in the inner the silence can pervade not because it is real spiritual silence but too great an occupation to permit even silent thought.
Jane Austen says there is no alarm as it is so powerful an experience that can issue an alarm especially to Maria.
The absence of alarm subsides as speechless silence.
Man accused of a great crime falsely loses his speech as his being is non-plurred, shocked into inability to act.
Man in Love having received the spoken or silent consent of his lady finds his inner being having no further desire to act or to move at all.
One is planning to speak and the other is trying to conceal.
One normally acts out of the structure of inner capacities.
Such an experience slows the structure and renders it motionless.
The yogi learns to destructure the inner constructions so that he may enter into spiritual Silence.
Silence of thinking, silence of memory, silence of the censor, silence emotions, silence of sensations, silence of action that is the absence of initiative, silence that exceeds consciousness, that exceeds existence are the grades that lead to the superconscient silence that is at the acme of the Absolute.
Devotees who delight in the thought of Mother slip into Silence and then into cheerfulness.
All these levels are touched by the devotees. Only that they do not know.
The miracles She performs are of the Supermind. She consciously provides scope for Man to understand the process of the result as Sherlock Holmes explains. It is for the devotee to explain it away or still see the Miracle. Such seeing creates faith. All the Miracle Mother performs, performs in silence.
Supramental silence is that which issues Supramental love.
"அவர்களுடைய பிரயாணம் எந்தவித உரையாடலுமின்றி, எந்தவித ஆபத்துமின்றி நடைபெற்றது."
ஆழ்ந்த யோசனையில் பெறும் செறிவான அனுபவம் மௌனத்தை உருவாக்கும்.
இது புறத்தில் ஏற்படும் மௌனம், அகம் செயல்பட்டுக் கொண்டிருக்கும்.
அகத்திலும் மௌனம் பரவலாம், உண்மையான ஆன்மீக மௌனம் என்பதால் அல்ல ஆனால் மனம் பெரிதாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால், அமைதியான எண்ணம் கூட உள்ளே நுழைய முடிவதில்லை.
எச்சரிக்கும் அளவிற்கு, குறிப்பாக மரியாவை எச்சரிக்கும் அளவிற்கு அந்த அனுபவம் சக்தி வாய்ந்ததாக இருப்பதால், பயப்பட வேண்டிய அவசியம் எதுவுமில்லை என்று ஜேன் ஆஸ்டின் கூறுகிறாள்.

எச்சரிக்கப்படாமல் இருப்பது மௌனமான அமைதியாக மாறுகிறது.
பெரிய குற்றம் செய்ததாக பொய்யாக குற்றம்சாட்டப்பட்ட ஒருவர் தனது பேச்சை இழப்பார். ஏனெனில் அவரது ஜீவன் அமைதியை இழக்கும், செயல்பட முடியாமல் அதிர்ச்சி அடையும்.
தான் காதலிக்கும் பெண்ணிடமிருந்து சம்மதம் பெறும் ஒருவன் தனது ஜீவன் செயலிழப்பதையும், அசைய முடியாத அளவுக்கு தான் மாறுவதையும் காண்பான்.
ஒருவர் பேசுவதற்குத் திட்டமிடுகிறார், மற்றவர் மறைப்பதற்கு முயலுகிறார்.
ஒருவருக்குள் இருக்கும் திறனின் கட்டமைப்புக்கு ஏற்ப ஒருவர் பொதுவாக செயல்படுவார்.
இது போன்ற அனுபவம் அந்த கட்டமைப்பை செயலிழக்கச் செய்து விடுகிறது.
ஆன்மீக மௌனத்தில் நுழைவதற்கு ஏதுவாக யோகி இந்த உள்கட்டமைப்பை கலைக்கக் கற்றுக் கொள்கிறார்.
சிந்தனை, ஞாபகம், எச்சரிக்கை, உணர்ச்சிகள், உணர்வுகள், ஆகியவற்றின் மௌனத்தையும், தன்முனைப்பு இல்லாமல் இருப்பதாகக் கருதப்படும் செயலின் மௌனமும், ஜீவியத்தையும் வாழ்வையும் மிஞ்சும் மௌனமும், பிரம்மத்தின் மௌனத்திற்கு அழைத்துச் செல்லும் பல படிகளாகும்.
அன்னையின் நினைவில் ஆனந்தம் அடையும் அன்பர்கள், மௌனத்தில் ஆழ்ந்து, பிறகு சந்தோஷம் பெறுவர்.
இந்த எல்லா நிலைகளையும் அன்பர்கள் அடைவர், ஆனால் அவர்களுக்கு அது தெரிவது இல்லை.
அன்னையின் அற்புதங்கள் நடப்பது சத்திய ஜீவிய நிலையில். ஷெர்லாக் ஹோம்ஸ் விவரிப்பதுபோல் பலனின் முறையை புரிந்துகொள்ள அன்னை அறிந்தே வாய்ப்பினை அளிக்கிறார். இதை விடுவதும் அல்லது அற்புதங்களை பார்க்க விழைவதும் அன்பரின் விருப்பமாகும். இவ்வாறு பார்ப்பது நம்பிக்கையை ஏற்படுத்தும். அன்னை நடத்தும் அற்புதங்கள் யாவும் மௌனத்தில் நடைபெறுகின்றன.
சத்திய ஜீவிய மௌனம் சத்திய ஜீவிய அன்பை அளிக்கிறது.

50. "Within four hours of leaving Hunsford they reached Mrs. Gardiner's place.
For the two girls the four hours passed quickly.
It is a transfer from clumsy lack of culture to a refined home.
Maria is an empty headed girl who expanded herself to the occasion of Collins's imagination and was lost in the best sense of the word.
She was lost in bliss not only by her visits to Rosings, but the subtle atmosphere of power created at the Parsonage by Darcy's proposal.
That is the subtle link for the rumour to emanate from the Lodge later.
Elizabeth could not open any topic as long as she was in London.
The subjects he had to share with Jane are weighty and needs the psychological comfort of her own home.
Marriage for a girl is her entire life.
She has news about Jane's marriage and her own, neither of which she is willing to share fully. Still Mrs. Gardiner's place would not permit her to start the topic.
Confidences shared are concentrated moments of life.
Such concentrations collect in hours of psychological solitude.
Solitude may offer concentration for work; psychological solitude offers courage for the heart to open.
Maria is unaffected by civilized life in society.
Elizabeth is handling so much of power inside which makes her behave like Maria at this point.
The spirit of contradiction, Thank you, I am sorry, it does not matter, it is a point of view, I am not in a hurry, I can come last, etc. are phrases of civilized life emerging in the mouth of the population undigested, out of the necessity of being in the fashion.
In mature gatherings these phrases do not appear as such phrases but express felt emotions. Even then its reality is seen in the absence of these phrases. They are not empty. Elizabeth and Maria slid into conditions of Mind where such phrases even as empty ones cannot emanate. Each is there for a different or opposite reason.
"ஹன்ஸ்போர்டை விட்டுக் கிளம்பிய நான்கு மணி நேரத்தில் திருமதி கார்டினர் இருக்கும் இடத்தை அவர்கள் அடைந்தனர்."
இரண்டு பெண்களுக்கும் அந்த நான்கு மணி நேரம் விரைவாகக் கழிந்தது.
நேர்த்தியில்லாத பண்பற்ற இடத்திலிருந்து, நேர்த்தியான குடும்பத்திற்கு வந்தனர்.
அறிவற்ற பெண்ணான மரியா, காலின்ஸின் கற்பனைக்கு ஏற்றவாறு விரிவடைந்தாள், தன்னையே இழந்தாள்.
ரோசிங்ஸிற்கு சென்றதனால் மட்டும் அவள் ஆனந்தம் அடையவில்லை, டார்சியின் திருமணப் பேச்சால் பாதிரி விடுதியில் எழுந்த வலிமையான சூழலும் அதற்குக் காரணமாகும்.
பின்னர் அந்த இடத்திலிருந்து எழப்போகும் வதந்திக்கு, சூட்சுமமான தொடர்பு இது.
லண்டனில் இருந்தவரை எலிசபெத்தால் எந்த விஷயத்தைப் பற்றியும் பேச முடியவில்லை.
ஜேனுடன் அவள் பேசப் போகும் விஷயங்கள் அனைத்தும் முக்கியமானவை, அவளது இல்லத்தின் மனரீதியான அரவணைப்பு அவசியமாக இருந்தது.
திருமணம் ஒரு பெண்ணிற்கு அவளுடைய முழு வாழ்க்கையாகும்.

ஜேனுடைய திருமணத்தைப் பற்றியும், தன்னுடைய திருமணத்தைப் பற்றியும் அவளிடம் செய்தி இருந்தது, ஆனால் இரண்டைப் பற்றியும் அவள் முழுமையாகப் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. திருமதி கார்டினரின் இல்லம் இதைப் பற்றி பேச அனுமதிக்காது.

இரகசியங்களைப் பகிர்ந்துகொள்வது வாழ்வின் செறிவான தருணங்களாகும்.

மனத்தளவில் தனிமையாக இருக்கும்பொழுது இது போன்ற செறிவுகளை ஒருவர் பெறுகிறார்.

வேலையில் கவனம் செலுத்த தனிமை உபயோகமாக இருக்கலாம், மனரீதியான தனிமை வெளிப்படையாகப் பேசும் தைரியத்தை அளிக்கும்.

சமூகத்தின் நாகரிக வாழ்வினால் மரியா பாதிப்படையவில்லை.

எலிசபெத் தன்னுள் அதிக அளவில் சக்தியை கையாள்வதால் இந்த இடத்தில் அவள் மரியாவைப் போல் நடந்து கொள்கிறாள்.

முரண்பாட்டின் உற்சாகம், நன்றி, மன்னியுங்கள், பரவாயில்லை, இது ஒரு கண்ணோட்டம், எனக்கு அவசரமில்லை, கடைசியாக என்னால் வரமுடியும் போன்ற சொற்றொடர்கள் நாகரிக வாழ்விலிருக்கும் மக்களால் நாகரிகத்தின் கட்டாயத்தினால் ஜீரணித்துக்கொள்ளாமல் பேசப்படுகின்றன.

முதிர்ச்சி பெற்றவர்கள் கூடும்போது, வார்த்தைகளுக்குப் பதில் இவை உணர்ச்சிகளாக வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த வார்த்தைகள் பேசப்படாத போதும், இதன் உண்மை நிலை வெளிப்படுகிறது. இவை வெறும் வார்த்தைகள் அல்ல. இது போன்ற அர்த்தமில்லாத வார்த்தைகளும் எழ முடியாத அளவிற்கு எலிசபெத் மற்றும் மரியாவின் மனநிலை இருந்தது. இருவரும் வெவ்வேறு அல்லது நேர் எதிரான காரணங்களுக்காக அங்கு இருந்தனர்.

Jane looked well, and Elizabeth had little opportunity of studying her spirits amidst the various engagements which the kindness of her aunt had reserved for them. But Jane was to go home with her, and at Longbourn there would be leisure enough for observation.

ஜேன் சிறப்பாகக் காட்சி அளித்தாள், அவர்களுடைய அத்தை அன்புடன் அவர்களுக்காக ஏற்பாடு செய்திருந்த பல்வேறு நிகழ்ச்சிகளிடையே, எலிசபெத்திற்கு அவளுடைய மனத்தை ஆராய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் ஜேன், அவளுடன் வீடு திரும்புவதாக இருந்ததால், லாங்பர்னில் நிதானமாக ஆராய்வதற்கு அதிக நேரம் கிடைக்கலாம்.

51. Health can be readily seen, the spirits one has to patiently study.
    உடல் நலத்தை கண்கூடாகப் பார்க்கலாம், உணர்சிகளைப் பற்றி ஒருவர் பொறுமையாக ஆராய வேண்டும்.
52. The urge to speak to Jane about Darcy’s proposal was real but mixed.
    டார்சியின் திருமணப் பேச்சினை ஜேனுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்கிற உந்துதல் உண்மையாக இருந்தது, கூடவே தயக்கமும் இருந்தது.
53. “Jane looked well, Elizabeth had little opportunity to study her spirits”.
    She who looks well, is, certainly not love born.
    Elizabeth had no opportunity to study her spirits means Jane’s spirits were not essentially affected.
    The credit is to the cheerful atmosphere of the family and to some extent to the mild goodness of the village Meryton.
    Jane at the age of 23 was not depressed or frustrated for remaining unmarried.
    It is a frightening condition of a portionless girl.
    The optimism of youth outlasts realities of life.
    Such optimism is usually rewarded as in Jane’s case.
    In other cases on the border years it suddenly dawns of the girl that that hope was lost for ever.
    That ages for quickly.
    Optimism belongs to youth and the abundant opportunities around.
    No one dances with Mary but she is not disheartened.
    One day her patience will be rewarded or life will teach her a cruel lesson.
    Not only girls. There are many boys girls do not want to marry.
    The marriage market is a sensitive place where the social temperature can be exactly measured.
    The great compromises boys or girls make as years advance is the essence of socially mature wisdom.
    The moment a girl is married she totally forgets the great struggle she passed through for years.
    With reference to others, she does not even remember her old situation.
    It becomes a brazen attitude in some.
    Opportunities are there not for Men to study, but to avail of them.
    Once availed of or missed, it becomes a buried chapter.
    Spiritual opening is on par with a great marriage opportunity.
    Neither Men who rose to the occasion, nor those who missed it are aware of that phenomenon.
    “ஜேன் பார்க்க நன்றாக இருந்தாள், அவளுடைய உணர்ச்சிகளை ஆராய எலிசபெத்திற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை”.

பார்க்க நன்றாக இருப்பவள், நிச்சயமாக காதல் வயத்தில் இருக்கமாட்டாள்.
ஜேனுடைய உணர்ச்சிகளை ஆராய எலிசபெத்திற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்பது ஜேனுடைய உற்சாகம் பாதிப்படையவில்லை என்பதை உணர்த்துகிறது.
குடும்பத்தின் கலகலப்பான சூழலும், மெரிடன் கிராமத்தின் நல்ல தன்மையும்தான் இதற்குக் காரணம் .
இருபத்தி மூன்று வயதில் திருமணம் ஆகாமல் இருக்கிறோம் என்பதற்காக ஜேன் வருத்தப்படவில்லை, எரிச்சலடையவில்லை.
இது பொருள்ரீதியாக வருமானம் இல்லாத பெண்ணின் அச்சுறுத்தும் நிலையாகும்.
இளவயதினரின் நம்பிக்கை வாழ்வின் உண்மை நிலைகளை மிஞ்சிவிடுகிறது.
ஜேனுடைய விஷயத்தில் பலன் அளித்ததுபோல் இது போன்ற நம்பிக்கை பொதுவாக பரிசளிக்கும்.
வயதின் விளிம்பில் இருக்கும் வேறொரு பெண்ணிற்கு, எல்லா நம்பிக்கையும் நிரந்தரமாக இழந்துவிட்டோம் என திடீரென தோன்ற ஆரம்பிக்கும்.
விரைவில் வயதாகிவிட்டதுபோல் தோன்றும்.
நம்பிக்கையும் சுற்றி தெரியும் அளவற்ற வாய்ப்புகளும் இளைஞருக்குரியது.
மேரியுடன் எவரும் நடனமாடாத பொழுதும் அவள் மனம் தளரவில்லை.
என்றாவது ஒரு நாள் அவளுடைய பொறுமைக்குப் பலன் கிடைக்கும் அல்லது வாழ்க்கை அவளுக்கு கடுமையான பாடம் போதிக்கும்.
பெண்கள் மட்டும் அவ்வாறு இல்லை. பெண்கள் திருமணம் செய்துகொள்ள விரும்பாத பல ஆண்களும் உள்ளனர்.
திருமணம் ஒரு உணர்வுபூர்வமான இடம். அங்கு சமூகத்தின் நிலையை மிகச் சரியாக அளவிடலாம்.
வருடங்கள் செல்லும் பொழுது ஆண்களும் பெண்களும் செய்துகொள்ளும் மிகப் பெரிய சமரசங்கள் சமூக-ரீதியான முதிர்ச்சியின் சாரமாகும்.
ஒரு பெண்ணிற்குத் திருமணம் நடந்து முடியும் தருணத்தில், பல காலமாக தான் பட்ட கஷ்டங்களை அவள் முழுமையாக மறந்துவிடுகிறாள்.
மற்றவர்களை நினைத்துப் பார்க்கும்பொழுது, அவளுடைய பழைய நிலைமை அவளுக்கு ஞாபகமும் இருப்பதில்லை.
சிலரிடம் இது ஆணவமான மனப்பான்மையாக மாறுகிறது.
வாய்ப்புகள் ஆண்கள் ஆராய்வதற்காக இல்லை, அவற்றை பயன்படுத்திக் கொள்வதற்காக உள்ளன.
அதனை ஒரு முறை பெற்றுக்கொண்டாலோ அல்லது இழந்துவிட்டாலோ அத்துடன் அது முடிவு பெற்றுவிடும்.
உயர்ந்த திருமண வாய்ப்பிற்குச் சமமானது ஆன்மீக விழிப்பு.
இச்சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உயர்ந்த ஆண்களும் சரி, வாய்ப்பினை இழந்தவரும் சரி, இருவருக்கும் அந்த நிகழ்வினைப் பற்றி தெரியாது.

It was not without an effort, meanwhile, that she could wait even for Longbourn, before she told her sister of Mr. Darcy's proposals. To know that she had the power of revealing what would so exceedingly astonish Jane, and must, at the same time, so highly gratify whatever of her own vanity she had not yet been able to reason away, was such a temptation to openness as nothing could have conquered but the state of indecision in which she remained as to the extent of what she should communicate; and her fear, if she once entered on the subject, of being hurried into repeating something of Bingley which might only grieve her sister farther.
லாங்பர்ன் போய் சேர்ந்த பிறகு சொல்லலாம் என்று தீர்மானித்து, அதற்கான பெரு முயற்சி எடுத்து, டார்சி தன்னை திருமணம் செய்துகொள்ள மன்றாடியதைப் பற்றி ஜேனிடம், லாங்பர்னில் கூறினாள். ஜேனை ஆச்சரியப்படுத்தும் வகையில் விஷயத்தை அவளால் கூற முடியும் என்பது தெரிந்தாலும், அதே சமயத்தில் அவளுடைய வீண்பெருமையினால், நடந்த விஷயத்தின் காரணத்தை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ள முடியாததால், எல்லாவற்றையும் வெளிப்படையாக சொல்லிவிட வேண்டும் என்கிற அடக்க முடியாத ஆசை இருந்த போதிலும், எந்த அளவிற்குக் கூற வேண்டும் என்ற முடிவு செய்ய முடியாத நிலையில் இருந்தாள். ஏனென்றால் அதைப்பற்றி அதிகம் பேச முற்பட்டு, அதனால் பிங்கிலியைப் பற்றிய பேச்சு ஏதேனும் எழுந்தால், ஜேனுடைய துயரம் மேலும் அதிகரிக்கும் என பயந்தாள்.

54. It was not as if she could not report about the proposal, reserving the part about Bingley. Once she opened the topic, she would not be under her control.
பிங்கிலியைப் பற்றி எதுவும் கூறாமல் டார்சியின் திருமணப் பேச்சை அவளால் கூற முடியாது என்பதில்லை. அந்த விஷயத்தைப் பற்றி பேச ஆரம்பித்தால் அவள் தன் வசத்தில் இருக்க மாட்டாள்.
55. The state of indecision Elizabeth was in was great.
தீர்மானம் செய்ய முடியாத எலிசபெத்தின் நிலை பெரிதாக இருந்தது.
56. To let Jane know that Bingley was safe for her is as much an urge in her as mentioning the proposal of Darcy. She was not equal to that in London. Maybe she would be at Longbourn. Even at Longbourn, she kept the news of Bingley back. Had she disclosed it to Jane, Bingley's smooth return would have been interfered with.

பிங்கிலி அவளுக்காக காத்துக் கொண்டிருக்கிறான் என்று ஜேனிடம் கூறுவதற்கு இருந்த உந்துதல் போலவே டார்சியின் திருமணப் பேச்சைப் பற்றி கூறுவதற்கும் எலிசபெத்திற்கு உந்துதல் இருந்தது. லண்டனில் இருந்த பொழுது இதைக் கூறும் தைரியம் அவளுக்கு இல்லை. லாங்பர்னில் ஒரு வேளை கூற முடியலாம். லாங்பர்னில் கூட அவள் பிங்கிலியின் விஷயத்தை வெளியிடவில்லை. அவள் ஜேனிடம் தெரியப்படுத்தியிருந்தால், பிங்கிலி எந்த விதப் பிரச்சினையும் இன்றி திரும்பி வந்திருக்க முடிந்திருக்காது.

57. One withholds such information out of selfishness, indiscretion, inability, indecision or discretion. In her case, it was an undefined uncertainty.
சுயநலம், முன்யோசனையின்மை, இயலாமை, முன்ஜாக்கிரதை இவைகளினால் ஒருவர் இது போன்ற விஷயத்தைக் கூறாமல் இருப்பார். இவளுடைய விஷயத்தில், அது விவரிக்கப்படாத நிச்சயமின்மை ஆகும்.
58. Elizabeth, in such matters, is a cautious character.
இது போன்ற விஷயங்களில் எலிசபெத் எச்சரிக்கையானவள்.
59. Jane hears of Bingley's visit to Lambton from her aunt, but has not referred to her till after the proposal.
லாம்ப்டனுக்கு பிங்கிலி வந்திருப்பதை ஜேன் அவளுடைய அத்தையின் மூலம் அறிந்து கொள்கிறாள், ஆனால் திருமணப் பேச்சு முடியும்வரை அதைப் பற்றி அவளிடம் பேசுவதில்லை.
60. The delicate discretion Elizabeth exercises well here is an aspect in every act that is accomplished. One can go through the whole story on each such aspect.
எலிசபெத் சரியாக கையாளும் மென்மையான முன்ஜாக்கிரதைதான் சாதித்த ஒவ்வொரு செயலிலும் உள்ள ஒரு கூறாகும். இது போன்ற ஒவ்வொரு கூற்றின் மூலம் முழுக் கதையையும் படிக்கலாம்.
61. Now Elizabeth has important news not all of which can be given to Jane. She has to wait to reach home even to communicate partially. This pressure on her nerves is essential for her to assimilate the encounter with Darcy and the revelations of his letter. What appear to be unfavourable circumstances is really time needed for Elizabeth to restore the equilibrium of her nerves.
இப்பொழுது எலிசபெத்திடம் முக்கியமான செய்திகள் பல இருக்கின்றன, ஆனால் அவை எல்லாவற்றையும் அவளால் ஜேனிடம் கூற முடியாது. ஓரளவு கூறுவதற்கும், வீடு போய் சேருவதற்கு அவள் காத்திருக்க வேண்டும். டார்சியுடன் ஏற்பட்ட சந்திப்பு மற்றும் அவனுடைய கடிதம் வெளிப்படுத்திய விஷயங்களை ஜீரணிக்க அவளுக்கு ஏற்பட்ட அழுத்தம் அவசியமானதுதான். சாதகமில்லாத சந்தர்ப்பம் என்று தோன்றுவது, உண்மையில் அவளை சமநிலைக்கு மீண்டும் கொண்டு வர தேவைப்படும் காலமாகும்.
62. "It was not without effort meanwhile that she could wait even for Longbourn, before she told her sister of Mr. Darcy's proposals".
Life is one of constant inner effort; it makes for real growth.
The child grows as if by miracle.
The body grows by the universal energy with the excuse of food.
The child does not think; and therefore thought is still no inhibition.
Thought starts as observation.
Observation matures into factual thinking without involving emotions.
Emotions internalize the thought.
Emotional thought creates inner awareness.
Thus begins the inner growth.
What commences with emotions, ripen by inner awakening.
Inner life is the real life, however much Man live outside.
Elizabeth is now big with news.
She is only 21, but has with her a very big task.
She could not give Jane all that she knew.
Nor can she keep back the entire event.
It is no mean struggle. Now she is to postpone it by a few days what cannot thus be postponed by a few hours.
Apart from the struggle, the discrimination needed to sift it into two parts, requires all the energy and great patience.
We see none of these in Mrs. Bennet.
She acts before thinking.
She has no reference point that restrains.
Elizabeth has too many like Jane.
Language develops by concealing the thoughts.
Inner being grows by controlling the actions that issue from thoughts.
Life experience is not in the living; it lies in the inner living.
One's physical age is reckoned on the calendar, mental age by education, psychological age by the inner thinking and the inner self-restraint.

"லாங்பர்ன் சென்றடைவதற்கு முன், டார்சியின் திருமண வேண்டுகோளைப் பற்றி அவளுடைய சகோதரியிடம் கூறாமல் இருப்பதற்கு பெரும் முயற்சி எடுத்தாள்.

இடைவிடாத அக முயற்சியே வாழ்வாகும், இது உண்மையான வளர்ச்சியை அளிக்கும்.

ஒரு குழந்தை வளருவது அற்புதம் நடப்பதுபோல் இருக்கிறது.

உணவுடன் சேர்ந்து பிரபஞ்ச சக்தி உடலை வளர்க்கிறது.

குழந்தை சிந்தனை செய்வதில்லை; அதனால் எண்ணம் தடையாக இருப்பதில்லை.

எண்ணம் கவனிப்பாக ஆரம்பிக்கிறது.

கவனிப்பு, உணர்ச்சிகளை சம்பந்தப்படுத்தாமல் உண்மையில் சிந்தனையாக முதிர்ச்சி அடைகிறது.

உணர்ச்சிகள் எண்ணத்தை உட்புறப்படுத்துகிறது.

உணர்வுபூர்வமான எண்ணம் அக விழிப்புணர்வை உருவாக்குகிறது.

இவ்வாறு அக வளர்ச்சி ஆரம்பமாகிறது.

உணர்ச்சிகளுடன் ஆரம்பிப்பது, அக விழிப்பினால் முதிர்வடைகிறது.

எவ்வளவுதான் மனிதன் வெளியே வாழ்ந்தாலும், அக வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கையாகும்.

எலிசபெத்திடம் இப்பொழுது பெரிய செய்திகள் உள்ளன.

அவளுக்கு வயது இருபத்தி ஒன்றுதான், ஆனால் பெரிய வேலை ஒன்று அவளுக்கு இருக்கிறது.

அவளுக்கு தெரிந்த எல்லாவற்றையும் அவளால் ஜேனிடம் கூற முடியவில்லை.

முழு நிகழ்வையும் அவளால் கூறாமலும் இருக்க முடியவில்லை.

இது சாதாரணமான வேலை அல்ல. சில மணி நேரங்களுக்குக்கூட தாமதப்படுத்த முடியாத ஒன்றை சில நாட்களுக்கு இப்பொழுது தாமதப்படுத்த வேண்டும்.

போராட்டத்துடன் சேர்ந்து, அதனை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கத் தேவையாக இருக்கும் பாகுபாடு, அனைத்து சக்தி மற்றும் அதிக அளவு பொறுமையையும் வேண்டுகிறது.

திருமதி பென்னட்டிடம் இவை எதையும் நாம் பார்ப்பதில்லை.

யோசிப்பதற்கு முன் அவள் செயல்படுகிறாள்.

அவளை கட்டுப்படுத்தும் குறிப்பான இடம் எதுவும் இல்லை.

ஜேனைப் போல் பலவற்றில் எலிசபெத் இருக்கிறாள்.

எண்ணங்களை மறைப்பதன் மூலம் மொழி வளருகிறது.

எண்ணங்களிலிருந்து எழும் செயல்களை கட்டுப்படுத்துவதன் மூலம் அகஜீவன் வளருகிறது.

வாழ்வதில் வாழ்க்கை அனுபவம் கிடைப்பதில்லை; அக வாழ்க்கையில்தான் அது உள்ளது.

நாளேட்டின் மூலம் ஒருவரது உடல்ரீதியான வயதும், கல்வியின் மூலம் ஒருவருடைய மனத்தின் வயதும், அக சிந்தனை, அகக்கட்டுப்பாடு மூலம் மனோரீதியான வயதும் கணக்கிடப்படுகிறது.

63. "the power of revealing what would so exceedingly astonish Jane".

Surprise is the emotional knowledge of increasing energy.

Pleasant surprises are the best rewards given to others.

Knowledge is welcome as it expands Mind.

The expanding Mind is interesting as expansion is intense living.

Emotions are the seat of energy.

Pleasant emotions expand one's emotional energy.

Surprise is caused by news that is unexpected. If pleasant, it allows the energies of emotions to expand. It is delightful.

Greater energy can be released by the mental knowledge.

Life meets Man at every turn with an opening to expand into it if he is cheerful, positive, self-giving, and expansive.

The American settler was thus physically met by life at every turn with a piece of physical good luck to be won by hard work.

It was the characteristic of physical freedom rewarding souls in adventure.

Life has always been like that to those who seek adventure.

It is very much so through internet.

Internet creates infinitely new ways of functioning internationally.

It brings people from all over the world to meet on their ideas.

What was done in years is now done in a day or an hour.

The field of web is a field of surprises — electronic surprises.

Mathematics is the Queen of sciences because it abridges knowledge and relationships of knowledge to symbols.

Symbols are the field of imagination.

The realities of imaginations are truer than the realities of life.

Imagination surprises oneself by his own capacity to imagine.

Internet creates material surprises.

Its imaginative surprises are richer.

Imagination is creative and can create a new world.
It is a world of eternal surprises.
"ஜேனை ஆச்சரியப்படுத்தும் வகையில் விஷயத்தை வெளிப்படுத்த முடியும்."
அதிகரிக்கும் சக்தி உணர்வுபூர்வமாக மாறும்பொழுது ஆச்சரியம் ஏற்படுகிறது.
இனிமையான ஆச்சரியங்களே மற்றவருக்கு அளிக்கப்படும் சிறப்பான வெகுமதியாகும்.
அறிவு மனத்தை விசாலமாக்குவதால், அது வரவேற்கத்தக்கது.
விரிவடைவது ஆழ்ந்த வாழ்க்கை என்பதால் விரிவடையும் மனம் சுவாரசியமானது.
உணர்ச்சிகள் சக்தியின் இருப்பிடமாகும்.
இனிமையான உணர்ச்சிகள் ஒருவரது உணர்வுபூர்வமான சக்தியை விசாலமாக்கும்.
எதிர்பாராத செய்தி ஆச்சரியத்தை அளிக்கும். அது இனிமையான செய்தியாக இருந்தால், அது உணர்ச்சிகளின் சக்திகளை விரிவடையச் செய்யும். இது மகிழ்ச்சிகரமானது.
மனதின் அறிவால் மேலும் உயர்ந்த சக்தியை விடுவிக்கலாம்.
கலகலப்பாகவும், நேர்மறையாகவும், சுய அர்ப்பணம் செய்பவனாகவும், விசாலமான மனத்துடனும் ஒருவன் இருந்தால், வாழ்க்கை அவனை ஒவ்வொரு திருப்பத்திலும் சந்தித்து விரிவடையும் வாய்ப்பினை அளிக்கிறது.
கடினமான உழைப்பின் மூலம் அதிர்ஷ்டத்தை பெற அமெரிக்காவில் குடியேறியவர்கள், வாழ்க்கையின் ஒவ்வொரு திருப்பத்திலும் அவ்வாறுதான் வாய்ப்பினை சந்தித்தனர்.
துணிகரமான செயல்களில் மக்களுக்கு பலனளிப்பது, ஜடநிலை சுதந்திரத்தின் குணமாகும்.
சாகசத்தை விரும்புபவர்களுக்கு வாழ்க்கை எப்பொழுதும் இவ்வாறுதான் செயல்படும்.
இணையதளத்தினால் இது மேலும் உண்மையாகிறது.
சர்வதேச அளவில் செயல்பட அளவற்ற புது வழிகளை இணையதளம் உருவாக்குகிறது.
தங்களது கருத்துகளை பகிர்ந்துகொள்ள உலக மக்கள் அனைவரையும் இது ஒன்று சேர்க்கிறது.
வருடக்கணக்கில் செய்யப்பட்ட விஷயங்கள் இப்பொழுது ஒரு நாளிலோ அல்லது ஒரு மணி நேரத்திலோ நடந்து முடிந்துவிடுகிறது.
இணையதளம் மின்னணுரீதியான ஆச்சரியங்களை அளிக்கிறது.
அறிவையும், அறிவின் தொடர்புகளையும் குறியீடுகளாக சுருக்கும் கணிதவியல் விஞ்ஞானத்தின் அரசியாகக் கருதப்படுகிறது.
குறியீடுகள் கற்பனையின் களமாகும்.
கற்பனையின் உண்மைகள் வாழ்வின் உண்மைகளை விட உண்மையானவை.
கற்பனை செய்யும் ஒருவரது திறன் அவரையே ஆச்சரியப்படுத்தும்.
பொருள்ரீதியான ஆச்சரியங்களை இணையதளம் உருவாக்குகிறது.
அதன் கற்பனை திறனின் ஆச்சரியங்கள் வளம் வாய்ந்தவை.
படைக்கும் திறனுடைய கற்பனையால் புதிய உலகத்தை உருவாக்க முடியும்.
இது முடிவில்லா ஆச்சரியங்களை அளிக்கவல்லது.

64. "Must highly gratify her vanity".
A proposal is a land mark in a girl's life.
Many receive only one proposal, some does not receive any.
To her it is the second proposal.
It is the proudest proposal she could ever receive.
Accepted or rejected, in her own estimation, it raises her sky high.
She can hardly wait to tell Jane of this proposal.
Life has not given any cooperation.
All Bennet children are selfish, if not meanly selfish.
Elizabeth is selflessly outgoing to Jane.
We do not see Jane going out to her or even think of her marriage.
When at last the news was given to her Jane after the initial spurt of astonishment made it natural in view of Elizabeth's perfection.
The truth is Jane is not vastly surprised and overwhelmed by the news.
Life has given no ready opening in London for Elizabeth to speak readily because Jane is not unselfishly expansive.
The communication can greatly gratify anyone's vanity.
Such a proposal can make a humble person vain.
Jane's behaviour has not built up any vanity in Elizabeth!
To take delight in another's triumph, greatness is not seen usually.
Elizabeth sore about Collins, Wickham, forgot all at the smiling Jane full of happiness.
Jane on her part quietly receive any praise, does not offer any to others as lavishly.
Herself guarded poises make her selfish and she is blind to others.
Wanting to make Elizabeth well deserving a proposal from Darcy is a valid great excuse, **but it smacks of selfish**

insensitivity.

If anything, her later communication is little more than formal.

Whatever it is there is nothing there to gratify Elizabeth's vanity.

"அவளது தற்பெருமையை மிகவும் திருப்திப்படுத்த வேண்டும்."

ஒரு பெண்ணின் வாழ்வில் திருமண வேண்டுகோள் ஒரு மைல் கல்லாகும்.

பலருக்கு ஒரு முறைதான் திருமண வேண்டுகோள் வரும். சிலருக்கு எதுவும் கிடைப்பதில்லை.

அவளுக்கு இது இரண்டாவது திருமண வேண்டுகோள்.

இது அவள் பெறக்கூடிய மிகச் சிறந்த திருமண வேண்டுகோளாகும்.

அவளுடைய கணிப்பில் அவன் ஏற்றுக்கொண்டாலும் அல்லது நிராகரித்தாலும், இது அவளை வானுயரத்திற்கு உயர்த்தும்.

திருமண வேண்டுகோளைப் பற்றி ஜேனிடம் கூறுவதற்கு அவள் பொறுமையின்றி இருந்தாள்.

வாழ்க்கை எந்த வித ஒத்துழைப்பையும் அளிக்கவில்லை.

அத்தனை சுயநலமாக இல்லாவிடினும், பென்னட்டின் குழந்தைகள் யாவரும் சுயநலவாதிகளாக உள்ளனர்.

எலிசபெத் தன்னலமற்று ஜேனிடம் எந்த வித தடையுமின்றி நடந்துகொள்கிறாள்.

ஜேன் இவ்வாறு எலிசபெத்திடம் நடந்துகொள்வதில்லை, அவளுடைய திருமணத்தைப் பற்றி நினைப்பதுகூட இல்லை.

இறுதியில் ஜேனிடம் செய்தி தெரிவிக்கப்பட்ட பொழுது ஆரம்பத் திகைப்பிற்குப் பிறகு, எலிசபெத் அதை சிறப்பாக கையாண்ட விதத்தினால், ஜேன் அதனை வெகு இயல்பாக எடுத்துக் கொண்டாள்.

செய்தியைக் கேட்டு ஜேன் பெரிதாக ஆச்சரியமோ, மகிழ்ச்சியோ அடையவில்லை என்பதுதான் உண்மை.

ஜேன், விசாலமாக இருப்பினும் சுயநலத்துடன் இருப்பதால், லண்டனில் எலிசபெத் உடனடியாகப் பேசுவதற்கு வாழ்க்கை வாய்ப்பினை அளிக்கவில்லை.

செய்தி ஒருவரது தற்பெருமையை பெரிய அளவில் திருப்திப்படுத்தவல்லது.

பணிவானவரிடம் விடுக்கும் இது போன்ற ஒரு திருமண வேண்டுகோள் பயனற்றதாக இருக்கும்.

ஜேனுடைய நடத்தை எலிசபெத்திடம் எந்தவித தற்பெருமையையும் ஏற்படுத்தவில்லை.

மற்றவரது வெற்றியில் சந்தோஷப்படுவதில், பொதுவாக எந்த உயர்வும் காணப்படாது.

மகிழ்ச்சி நிறைந்த ஜேனின் புன்னகையை கண்டவுடன், காலின்ஸ் மற்றும் விக்காம் மீதிருந்த கோபம் அனைத்தையும் எலிசபெத் மறந்தாள்.

எந்த ஒரு புகழ்ச்சியையும் ஜேன் அமைதியாகப் பெற்றுக்கொள்கிறாள், மற்றவர்களை தாராளமாக புகழ்வதில்லை.

ஜாக்கிரதையான அவளது நடத்தை அவளை சுயநலவாதியாக்குகிறது, மற்றவர்கள் விஷயத்தில் அவள் கண்மூடியாக இருக்கிறாள்.

எலிசபெத் தகுதியானவள்தான் என்று காண்பிப்பதற்கு டார்சியிடமிருந்து வரும் திருமண வேண்டுகோள் நியாயமான காரணம்தான், ஆனால் அது சுயநலமான உணர்வற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது.

பின்னர் அவள் நடந்துகொண்டது, சம்பிரதாயமாக இருந்தது.

அது எதுவாக இருந்தாலும், எலிசபெத்தின் தற்பெருமையை திருப்திப்படுத்தவதாக அது அமையவில்லை.

65. "Temptation to openness".

The energy of the news sitting inside urges for expression.

News is not knowledge to be received and kept.

News is to be given out to others.

Hence its natural inbuilt urge.

Her wish to surprise Jane has a power to come out.

Her own vanity is equally valid.

This a context in which every component can issue temptation.

Temptation is the unhealthy urge to do something inhibited.

Hers is no unhealthy urge, rather a good positive natural urge.

To be open can never be a temptation. It is an urge for truth.

It would have been right if Jane has felt in the subtle plane the truth of Darcy's proposal, and had the generosity to offer her the right opportunity.

Generosity is the result of power expressing through infinity.

Any two aspects of Sachchidananda can combine to produce a cosmic faculty.

Infinity when it works through any aspect will expand it.

Jane has goodwill for herself.

She does not want to think ill of others, a sort of negative good will.

She is not live, expansive, and creative.

She has no energy for good will.

It must be a severe disappointment to Elizabeth that she could not disclose her news to Jane in London.

To be open without temptation is steady greatness.
Maria's presence is an inhibition but this is not a news whose energy can be contained even by Maria.
It is true the presence of an opposite vibration can more than fully neutralize any energy.
Sir Lucas bringing Elizabeth to Hunsford, because of his good will, made Darcy's proposal possible.
Maria's presence acts in the opposite direction.
"வெளிப்படையாக இருப்பதற்கான ஆசை."
உள்ளிருக்கும் செய்தியின் சக்தி வெளிப்படுவதற்கு தூண்டுகிறது.
பெறப்பட்டு நம்முள்ளேயே வைத்துக்கொள்வதற்கு செய்தி அறிவல்ல.
செய்தி மற்றவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.
அதனால் இயற்கையாக உள்ள அதன் சுபாவம் வெளிப்படத் தூண்டுகிறது.
ஜேனை ஆச்சரியப்படவைக்க அவள் விரும்புவது வெளிவரும் சக்தியை தாங்கி உள்ளது.
அவளது வீண் பெருமையும் அதற்குச் சமமானது.
ஒவ்வொரு பகுதியும் சலனத்தை எழுப்பும் இடம் இது.
தயக்கமில்லாமல் ஒன்றினை செய்வதற்குரிய ஆசை, ஆரோக்கியமற்ற உந்துதலாகும்.
அவளுடையது ஆரோக்கியமற்ற உந்துதல் அல்ல, நேர்மறையான இயல்பான நல்ல உந்துதலேயாகும்.
வெளிப்படையாக இருப்பது ஒரு போதும் ஆசை அல்ல. உண்மையை வெளிப்படுத்த விரும்பும் உந்துதலாகும்.
டார்சியின் திருமண வேண்டுகோளின் உண்மையை ஜேன் சூட்சும நிலையில் உணர்ந்திருந்தால், மேலும் எலிசபெத்திற்கு சரியான வாய்ப்பளிக்கும் பெருந்தன்மை இருந்திருந்தால் அது சரியானதாக இருந்திருக்கும்.
அனந்தத்தின் மூலம் வெளிப்படும் சக்தியின் பலனே பெருந்தன்மையாகும்.
சச்சிதானந்தத்தின் ஏதேனும் இரண்டு அம்சங்கள் இணைந்து பிரபஞ்ச திறனை உருவாக்கும்.
ஏதேனும் ஒரு அம்சத்தின் மூலம் அனந்தம் செயல்படும்பொழுது இதை விரிவடையச் செய்யும்.
ஜேனுடைய நல்லெண்ணம் அவளுடைய நலனுக்காக மட்டுமே உள்ளது.
மற்றவர்களைப் பற்றி கெடுதலாக நினைக்க அவள் விரும்புவதில்லை, இது எதிர்மறையான நல்லெண்ணம் போலாகும்.
அவள் ஜீவனுடனும், விசாலமாகவும், படைக்கும் திறனுடையவளாகவும் இல்லை.
நல்லெண்ணத்திற்கு அவளிடம் தெம்பில்லை.
லண்டனிலேயே ஜேனிடம் செய்தியை கூறமுடியாமல் போனதற்கு எலிசபெத்திற்கு மிகுந்த ஏமாற்றமாக இருந்திருக்க வேண்டும்.
ஆசை இல்லாமல் வெளிப்படையாக இருப்பது உறுதியான உயர்வாகும்.
மரியா அங்கிருப்பதும் ஒரு தடை ஆகும். ஆனால் மரியாவால்கூட கட்டுப்படுத்தமுடியாத சக்தியை உடைய செய்தி இது.
எதிரிடையான அதிர்வு இருப்பது எந்த சக்தியையும் நன்கு சமநிலைப்படுத்தும்.
நல்லெண்ணத்தினால் சர் லூகாஸ், எலிசபெத்தை ஹன்ஸ்போர்டிற்கு அழைத்து வருவது டார்சியின் திருமண வேண்டுகோளை சாத்தியமாக்கியது.
மரியா அங்கிருப்பது நேரெதிர் திசையில் செயல்படவைக்கிறது.

66. "the state of indecision in which she remained as to the extent to which it can be communicated".
Indecision is the confusion of will.
Our daily work is attended by clear decision, though not of great decisions.
A circumstance arises that demands greater decisiveness than usual.
Man is Mind; Mind is Will; no will of that level is available for one to act.
He does not act and waits till greater will presents itself.
To a good many no decisiveness arrives and there he levels off.
Men who marry stronger woman meet this situation on the first day and remain there forever.
A leader is thus born if he collects several people who are desirous of obeying him.
This is a great moment for Elizabeth.
The decision not to speak of Darcy's ruse which he took, she found out later that it was a very wise one of reticence.
She arrived at this decision by a sensitivity.
She believed if it must be spoken, it must be spoken by Bingley when he marries her Bingley never gave that information to Jane.
It was a wise decision that preserved the happiness of Jane's marriage as well as Darcy's intimate confidence in her.
There are moments people act instinctively which means the instinctive knowledge of a Man determines the quality of a Man's life and its quantitative reach.
A Man may know such moments in his life.
One who has erred at those moments and became a small Man of low means and low happiness can now rectify his misfortune if he can call Mother into those moments. **A Wickham or Bingley can thus become Darcy; a local leader**

a national leader; an excellent manager of a big company, its CEO.
Such a step can cure India of her partition, the world its financial crisis.
In 1940 France chose one path and England the opposite path.
Europe of Individuality of thought and America of Individuality of action have the same difference.
The first day after wedding presents the couple such a moment which decide who will rule the other for the rest of their lives.
"எந்த அளவிற்கு செய்தியை தெரிவிக்கலாம் என்பதை தீர்மானம் செய்ய முடியாத நிலையில் அவள் இருந்தாள்."
மன உறுதியின் குழப்பம் தீர்மானமின்மை ஆகும்.
நமது அன்றாட வேலைகளை நாம் பெரிய தீர்மானங்கள் எதுவும் இல்லாவிடினும், தெளிவான தீர்மானத்தோடு செய்கிறோம்.
சாதாரணமாக ஒரு தீர்மானம் எடுப்பதைவிட பெரிய தீர்மானம் எடுக்க வேண்டிய சந்தர்ப்பம் ஒன்று எழுகிறது.
மனிதன் மனத்தாலானவன்; மனம் என்பது உறுதி; அந்த நிலையின் எந்த மன உறுதியும் மனிதன் செயல்படுவதற்கு கிடைப்பதில்லை.
அவன் செயல்படுவதில்லை, மேலும் பெரிய மன உறுதிக்காக காத்திருக்கிறான்.
பலர் தீர்மானம் எடுக்கும் திறன் பெறுவதில்லை. அங்கு அவர்கள் தேங்கி விடுகிறார்கள்.
தன்னைவிட வலிமை வாய்ந்த ஒரு பெண்ணை திருமணம் செய்துகொள்ளும் ஆண்கள், முதல் நாளிலேயே இந்த நிலைமையை சந்திப்பர், அந்நிலையிலேயே நிரந்தரமாக நின்று விடுவர்.
தனக்கு அடிபணிய ஆர்வமாக இருக்கும் பலரை ஒன்று சேர்க்கும் ஒருவர் தலைவராகிறார்.
எலிசபெத்திற்கு இது மிக உயர்ந்த தருணமாகும்.
டார்சி செய்த சூழ்ச்சியைப் பற்றி பேசக் கூடாது என்று அவள் எடுத்த தீர்மானம், அறிவுடன் எடுத்த தீர்மானமாக இருந்ததை அவள் பின்னர் உணர்ந்தாள்.
இந்த தீர்மானத்தை அவள் தனது உணரும் திறனால் எடுத்தாள்.
இதைப்பற்றி பேச வேண்டுமென்றால் அதை பிங்கிலி, ஜேனை திருமணம் செய்துகொள்ளும் பொழுது அவன்தான் பேச வேண்டும் என அவள் நம்பினாள், ஆனால் பிங்கிலி ஜேனுக்கு அத்தகவலை அளிக்கவேயில்லை.
இந்த விவேகமான தீர்மானத்தால் ஜேனுடைய சந்தோஷமும் நீடித்தது, டார்சியின் மேல் அவளுக்கிருந்த நம்பிக்கையும் காப்பாற்றப்பட்டது.
மனிதர்கள் உள்ளுணர்வினால் செயல்படும் தருணங்கள் உள்ளன. ஒரு மனிதனின் உள்ளுணர்வின் அறிவு மனிதனின் வாழ்க்கைத் தரத்தையும், அதன் அளவையும் தீர்மானிக்கிறது.
ஒரு மனிதன் அவனுடைய வாழ்க்கையில் இது போன்ற தருணங்களை அறியக்கூடும்.
அது போன்ற தருணங்களில் தவறு செய்து, பொருளாதார நிலையிலும் சந்தோஷத்திலும் தாழ்ந்த நிலையை அடைந்த ஒருவன், இப்பொழுது அத்தருணங்களை நினைத்து அன்னையை அழைப்பதன் மூலம் தன்னுடைய துரதிர்ஷ்டத்தை சரி செய்து கொள்ளலாம். **ஒரு விக்காமோ அல்லது பிங்கிலியோ டார்சியாக மாறலாம், உள்ளூர் தலைவன் நாட்டின் தலைவராகலாம், பெரிய நிறுவனத்தின் சிறப்பான மேலாளர் அந்நிறுவனத்தின் தலைவராகலாம்.**
இது போன்ற ஒரு முயற்சி இந்தியாவை பிரிவினையிலிருந்தும், உலகத்தை பொருளாதார நெருக்கடியிலிருந்தும் காப்பாற்றும்.
1940-ல், பிரான்ஸ் ஒரு பாதையையும், இங்கிலாந்து அதற்கு எதிரான பாதையையும் தேர்ந்தெடுத்தது.
எண்ணத்தில் தனித்துவம் படைத்த ஐரோப்பாவும், செயலில் தனித்துவம் பெற்ற அமெரிக்காவும் இதே போன்ற வித்தியாசம் கொண்டவையாகும்.
வாழ்நாள் முழுவதும் யார் யாரை ஆளப்போகிறார் என்பதை தீர்மானிக்கும் இது போன்ற ஒரு தருணம், திருமணத்திற்கு அடுத்த நாள் கணவன் மனைவியிடையே எழும்.

67. "her fear, if she once entered on the subject, of being hurried into repeating something of Bingley".
Love of God is the beginning of knowing was given to the world as fear of God.
It is ruling the world for several thousand years.
The secret of abolishing karma and hell, we can say lies in the moment.
In one's own life one very much knows that moment.
He can now go there and replace fear by love, his life enters integral yoga.
Respect for God becomes fear of God. It will be difficult for most to imagine that respect should mature into love.
To the Indian wife of the last century and the British wife of the previous century love of the husband was wholesome fear. It can degenerate into domination not love. **Husbands who fully dominate their wives cannot successfully attempt that change.** A mother does it often. She knows the difference between fear, respect and love. The transition is not within one's power unless Love is at their disposal.
When Love is there still the transition is not at one's disposal.
The fear Elizabeth felt was a wholesome fear, it is a fear of God's knowledge.

Fear becoming the vehicle of knowledge is a happy chance.
Man cannot decide that change; he has no power to choose it.
It is a power of the infinity in things. Fear can become the channel not only to knowledge, but anything, as the essence of everything is Brahman.
Discrimination here uses fear as a vehicle.
It shows in the reconciliation of Bennet's Freedom of intelligence and the insistence of Mrs. Bennet's ignorance, this sensitivity is one meeting point that has been created.
Confirming ourselves to facts of the story we see what was the result of Elizabeth's anxious hurt prejudice meeting the false pleasant malicious deceit of Wickham. It created the temporary misconception of Darcy and permanent adoration of Wickham in her subconscious. Even there, there remains two possibilities of its confining to Being and straying into Non-Being.
There they enter into the realm of possibilities. **For one who has the knowledge, actualities and probabilities are the same.**
"அந்த விஷயத்தைப் பற்றி பேச ஆரம்பித்தால் பிங்கிலியைப் பற்றி ஏதேனும் கூற நேர்ந்திடும் என்கிற பயம் எலிசபெத்திற்கு இருந்தது."
இறைவன் மீதான அன்பு அறிந்து கொள்வதன் ஆரம்பம் என்பது, இறைவன் மீதான அச்சமாக உலகிற்கு அளிக்கப்பட்டுள்ளது.
இது பல ஆயிரமாண்டுகளாக உலகத்தை ஆண்டு வருகிறது.
கர்மத்தையும், நரகத்தையும் ஒழிப்பதன் இரகசியம் அத்தருணத்தில் உள்ளது.
ஒருவரது வாழ்க்கையில் அவருக்கு அத்தருணம் மிக நன்றாகத் தெரியும்.
இப்பொழுது அவர் அங்கு சென்று, பயத்தை அன்பாக மாற்றினால் அவரது வாழ்க்கை பூரணயோகத்தில் நுழையும்.
இறைவன் மீதுள்ள மரியாதை, இறைவன் மீதுள்ள அச்சமாக மாறுகிறது. மரியாதை அன்பாக முதிர்ச்சி அடையவேண்டும் என்று கற்பனை செய்துகொள்வது பலருக்கும் மிகவும் கடினமான விஷயம்.
கடந்த நூற்றாண்டின் இந்திய மனைவிக்கும், அதற்கு முந்தைய நூற்றாண்டின் ஆங்கிலேய மனைவிக்கும் கணவன் மீதுள்ள அன்பு அச்சமாக மட்டுமே இருந்தது. இது ஆதிக்கமாக சிதையுமே தவிர அன்பாக மாறாது.
மனைவியை முழுவதுமாக ஆதிக்கம் செலுத்தும் கணவன் இந்த மாற்றத்திற்கு வெற்றிகரமாக முயற்சி எடுக்க முடியாது. ஒரு தாய் பல சமயங்களில் இதை செய்கிறாள். அவளுக்கு அச்சம், மரியாதை, அன்பு இவற்றிற்கிடையே உள்ள வித்தியாசம் தெரியும். அன்பை கொடுக்க முடிபவர்களால்தான் இந்த மாற்றத்தை கொண்டுவர முடியும்.
அன்பு இருந்தாலும் மாற்றம் என்பது ஒருவரது கைகளில் இல்லை.
எலிசபெத்தின் பயம் முழுமையாக இருந்தது, இது இறைவனைப் பற்றிய அறிவின் பயம்.
பயம் அறிவின் கருவியாக மாறுவது சந்தோஷமான வாய்ப்பாகும்.
அந்த வாய்ப்பினை மனிதனால் தீர்மானிக்க முடியாது; அவனுக்கு அதைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் இல்லை.
இது விஷயங்களில் இருக்கும் அனந்தத்தின் சக்தியாகும். எல்லாவற்றின் சாரமும் பிரம்மம் என்பதால், அறிவுக்கு மட்டும் பயம் பாதையாக மாறாது, எதற்கு வேண்டுமென்றாலும் பாதையாக மாறும்.
பாகுபாடு இங்கு பயத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொள்கிறது.
திரு பென்னட்டின் அறிவின் சுதந்திரமும், திருமதி பென்னட்டின் அறியாமையின் வற்புறுத்தலும் சமரசம் செய்துகொள்வதில் இது தெரிகிறது, இந்த உணர்வுத் திறன்தான் உருவாக்கப்பட்ட ஒரு சந்திப்புப் புள்ளியாகும்.
எலிசபெத்தின் காயப்பட்ட தற்பெருமை, விக்காமின் பொய்மையும் இனிமையும் நிரம்பிய தீங்கிழைக்கும் ஏமாற்றும் குணத்தை சந்திப்பத்தின் மூலம் ஏற்படும் பலன்களை இக்கதையில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களை வைத்து நம்மால் பார்க்க முடிகிறது. இது அவளது ஆழ்மனத்தில் டார்சியின் மீது தற்காலிகமான தவறான கருத்தையும், விக்காம் மீது நிரந்தர ஆராதனையையும் ஏற்படுத்தியது. அங்கும்கூட சத்திலேயே நிலைத்துவிடும் சாத்தியமும், அசத்தில் நுழையும் சாத்தியமும் உள்ளன.
சாத்தியங்களின் எல்லையில் அவை நுழைகின்றன. **விவேகமுள்ளவருக்கு உண்மைகளும், சாத்தியக்கூறுகளும் ஒன்றுதான்.**

Chapter 16: Jane and Elizabeth Return Home

ஜேனும், எலிசபெத்தும் வீடு திரும்புதல்

Summary: Elizabeth and Jane return home and are met by Lydia and Kitty on the way. They inform them that the officers in Meryton are leaving soon. Lydia hopes to convince their father to take them to Brighton where they are set to be stationed during the summer.

எலிசபெத்தும், ஜேனும் வீடு திரும்புகையில் வழியில் லிடியாவையும், கிட்டியையும் சந்திக்கின்றனர். மெரிடனை விட்டு இராணுவ அதிகாரிகள் விரைவில் கிளம்பப் போவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். தனது தகப்பனாரை தங்களை பிரைட்டனுக்கு அழைத்துப் போக சம்மதிக்க வைக்கும் நம்பிக்கையில் லிடியா இருக்கிறாள்.

It was the second week in May, in which the three young ladies set out together from Gracechurch Street for the town of -- -- , in Hertfordshire; and, as they drew near the appointed inn where Mr. Bennet's carriage was to meet them, they quickly perceived, in token of the coachman's punctuality, both Kitty and Lydia looking out of a dining-room upstairs. These two girls had been above an hour in the place, happily employed in visiting an opposite milliner, watching the sentinel on guard, and dressing a salad and cucumber.

மே மாதம் இரண்டாம் வாரத்தில் அம்மூன்று இளம்பெண்களும் கிரேஸ் சர்ச் தெருவிலிருந்து ஹர்ட்போர்ட்ஷயரிலுள்ள ஒரு ஊருக்குப் புறப்பட்டனர். அவர்கள் தாங்கள் ஏற்பாடு செய்திருந்த விடுதியை நெருங்கியவுடன், திரு. பென்னட்டுடைய குதிரை வண்டியைப் பார்த்து, ஓட்டுனரின் நேரம் தவறாமையைக் கண்டனர். கிட்டியும், லிடியாவும் மாடியில் உள்ள ஓர் உணவு அறையிலிருந்து வெளியே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டனர். அவ்விரு பெண்களும் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக அவ்விடத்தின் எதிரில் இருக்கும் பெண்கள் தலையில் அணியும் அலங்காரப் பொருட்கள் செய்பவரை சந்திப்பதிலும், காவல் புரியும் அதிகாரியை கவனிப்பதிலும், உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதிலும் நேரத்தை செலவழித்துக் கொண்டிருந்தனர்.

1. In England of those days, even the coachmen were punctual.
   இங்கிலாந்தில் அந்த நாட்களில் வண்டி ஓட்டுபவர்கள் கூட நேரந்தவறாமையைக் கடைப்பிடித்தனர்.
2. Punctuality is a social discipline. The mind of the society should have accepted that value.
   நேரந்தவறாமை சமூக ஒழுக்கமாகும். சமூகம் அதனை ஒரு பண்பாக ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்.
3. Punctuality can do to an unorganized nation as much as excellent food can do to a starving man.
   பசியால் வாடும் மனிதனுக்கு நல்ல உணவு எவ்வளவு வரவேற்கத்தக்கதாக இருக்குமோ, அதே போல் நேரம் தவறாமை முறைப்படுத்தப்படாத நாட்டிற்கு பயனுள்ளதாக இருக்கும்.
4. English life has become mental by becoming time conscious.
   நேரந்தவறாமையை மனமுவந்து கடைப்பிடிப்பதன் மூலம் ஆங்கிலேய வாழ்வு மனதால் வாழும் வாழ்க்கையாக மாறியுள்ளது.
5. The story starts here dwelling on Lydia’s wildness more pronouncedly.
   லிடியாவின் துஷ்டத்தனத்தை பிரதானமாக வைத்து இக்கதை இங்கு ஆரம்பிக்கிறது.
6. “In token of the coachman’s punctuality”.
   Punctuality became a value in Europe even three or four centuries ago.
   Punctuality is a value of work.
   Germany runs her trains on time throughout the year.
   It speaks of an organization of work that maintains punctuality as a value without the nation espousing that value, the work organization cannot do so.
   A strong reason suggested by the history of Europe is the birth of Mind in the 16^{th} century all over Europe and its predecessor thousand years earlier in Greece.
   Punctuality is a value of the organization of Mind.
   For over a century Europe espoused the idea that physical cleanliness through bath will shorten life, in spite of the public baths of Rome.
   One possible relation to the values of honour, punctuality with uncleanliness of the body that is to be dressed in spotless clothes is the available energy.
   It is not a compelling argument, but suggests a possibility.
   The invention of chronometer can be made to believe as the origin of punctual which carries the strongest possibility, but chronometer itself seems to be the result of a culture of punctuality.
   Coachman carrying a watch may or may not be a possibility.
   On the roads available then, coachmen, to keep any semblance of punctuality should have a rhythm of movement ingrained in them.

If this is true, people of the level of coachmen have developed towards work a sense as the cook develops to taste. **It is, if it ever existed, a great work organization.**
The famed Indian muslin shows the great skill which is a direct result of the vital in tune with the work.
Historians speak of the genius of Indian generals while organization in the army is non existence. The soldiers are loyal to the Indian general, says the historian while the English soldier fights to maintain the law of their organization.
"வண்டி ஓட்டுபவரின் நேரந்தவறாமை."
மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே நேரந்தவறாமை ஐரோப்பாவில் ஒரு பண்பாக இருந்தது.
நேரந்தவறாமை வேலையின் பண்பாகும்.
வருடம் முழுவதும் ஜெர்மனியில் புகைவண்டிகள் சரியான நேரத்தில் இயக்கப்படுகின்றன.
நேரந்தவறாமையை ஒரு பண்பாகக் கடைப்பிடிப்பது முறைப்படுத்தப்பட்ட வேலையை வெளிப்படுத்துகிறது.
நாட்டினால் நேரந்தவறாமை பேணப்படாமல், முறைப்படுத்தப்பட்ட வேலையில் அது வெளிப்படாது.
பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதும், அதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்க நாட்டிலும் ஏற்பட்ட மனத்தின் தோற்றம், ஐரோப்பாவின் நேரந்தவறாமைக்குக் காரணம் என்று ஐரோப்பாவின் சரித்திரம் கூறுகிறது.
முறைப்படுத்தப்பட்டுள்ள மனத்தின் ஒரு பண்பே நேரந்தவறாமையாகும்.
ரோம் நகரில் பொது குளிக்கும் இடங்கள் பல இருந்தும், ஒரு நூற்றாண்டுக்கும்மேல், குளிப்பதன் மூலம் சுத்தம் செய்துகொள்வது ஆயுளை குறைக்கும் எனும் கருத்தை ஐரோப்பியர்கள் ஆதரித்து வந்தனர்.
மரியாதையின் பண்புகளுக்கும், அசுத்தமான உடலில் சுத்தமான ஆடைகள் அணிந்து நேரந்தவறாமையைக் கடைப்பிடிப்பதற்கும் உள்ள சாத்தியமான தொடர்பு, அவர்களிடம் இருக்கும் சக்தியாகும்.
இதை தீர்மானமாகக் கூற முடியாவிட்டாலும், இது சாத்தியமாக இருக்கலாம்.
நேரந்தவறாமையின் மூலகாரணமே அதைக் கணக்கிடுவதற்கான கருவியின் கண்டுபிடிப்பாக இருக்கலாம்.
ஆனால் நேரந்தவறாமையின் பண்பின் பலனே அக்கருவி எனத் தோன்றுகிறது.
வண்டி ஓட்டுபவர் கைக்கடிகாரம் வைத்திருக்கலாம், அல்லது இல்லாமலும் இருக்கலாம்.
அன்றைய நாட்களிலிருந்த பாதைகளில் அவர்கள் சரியான நேரத்தை கடைப்பிடித்ததன் காரணம் அவர்களுக்குள் ஊறியுள்ள அசைவின் லயத்தினால் இருந்திருக்கலாம்.
இது உண்மை எனில், சமைப்பவர் உணவின் ருசியுடன் கொண்டுள்ள உணர்வுபோல, வண்டி ஓட்டுபவர்களும் அவர்களுடைய வேலையில் ஒன்றியிருப்பர். **அவ்வாறு இருந்தால், அது ஒரு திறமையான செயல்முறையாக இருக்கும்.**
உணர்வு வேலையுடன் இணைந்து இருப்பது, பிரபலமாக விளங்கும் இந்திய மஸ்லின் துணியின் நேர்த்தியில் தெரிகிறது.
இராணுவத்தில் சிறப்பான அமைப்பு இல்லாதபோதும் இந்திய இராணுவ அதிகாரியின் மேதமையைப் பற்றி சரித்திர வல்லுனர்கள் பேசுகின்றனர். இந்தியாவில் இராணுவ வீரர்கள் தங்களது மேலதிகாரிக்கு_விசுவாசமாக இருப்பதாகவும், ஆங்கிலேய வீரர்கள் அவர்களுடைய அமைப்பின் சட்டத்தை நிலை நாட்டுவதற்காக போரிடுவதாகவும் சரித்திர வல்லுனர்கள் கூறுகின்றனர்.

After welcoming their sisters, they triumphantly displayed a table set out with such cold meat as an inn larder usually affords, exclaiming, "Is not this nice? Is not this an agreeable surprise?"
அவர்களுடைய சகோதரிகளை வரவேற்றபின், விடுதியில் கிடைக்கக் கூடிய உணவுப் பண்டங்கள் அலங்கரிக்கப்பட்டு வைத்திருக்கும் மேஜையை பெருமிதத்துடன் காண்பித்து விட்டு "இது நன்றாக இருக்கிறதா? இது ஓர் இனிய ஆச்சரியமாக இருக்கிறது இல்லையா?" எனக் கேட்டனர்.

7. Mr. Bennet's family is always happy and cheerful.
   திரு பென்னட்டின் குடும்பம் எப்பொழுதும் சந்தோஷமாகவும், கலகலப்பாகவும் இருக்கிறது.
8. The happiness is the result of the combination of the father's freedom and the mother's energy.
   தகப்பனாரின் சுதந்திரமும், தாயாரின் தெம்பும் சேர்ந்து சந்தோஷத்தை ஏற்படுத்தியுள்ளது.
9. Meryton, though not an ideally good people, does not seem to be vicious or malicious. There is no streak of venomousness.
   மெரிடனில் இருப்பவர்கள் மிகவும் நல்லவர்கள் என்று இல்லாவிட்டாலும், கெடுதலோ அல்லது தீங்கு செய்பவர்களாகவோ இல்லை. அவர்களிடம் விஷமத்தனத்தின் சாயல் இல்லை.
10. "Is this not an agreeable surprise".
    To create an agreeable surprise is the great accomplish they seek after.
    The tone of Mr. Bennet family is to be creating agreeable surprise.
    For those to whom survival, growth, development is no desirable goal evolution is the social opportunity.
    Evolution is a process of creating higher newer forms of social existence without discarding what is exceeded.
    It needs evolutionary knowledge and a power to convert that knowledge into an organized way of functional existence.
    If that is the acme of evolution there are several steps below of which the lowest is the capacity to create agreeable

surprise.
Freedom expresses the highest possibility of evolution.
It requires the greatest energy in unlimited measures.
Such freedom is available from Mr. Bennet out of his British male culture and its total helplessness within wedlock.
The required energy in vulgar form is available from Mrs. Bennet.
Life is the field that lets this reconciliation he worked out, out of the courses of currents of energy, with the temperaments of the daughters as end instruments.
To take this view, lay out the field, invite the characters, let them interact and create circumstances, attitudes, events results, and causes is the story.
To study each event of the story in this light so that ALL our principles emerge is to see the Marvel.
With each furthering of the effort, it will be obvious greater secrets emerge.
Their forms will create a new perception.
The precision these forms attempt to acquire will reveal the evolutionary thrust.
How earlier events lend themselves to construct the future results will show the field is created, constructed, to allow the creation of perfect forms.
I see all these ingredients positively changed into the dinner invitation Jane received at Netherfield, though I am unable to explain it in full.
It was so ephemeral that before the dinner is over the evolutionary potential is exhausted and as the rule requires reversed into a breakdown of fever.
“இந்த ஆச்சரியம் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான்.”
ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆச்சரியத்தை உருவாக்குவது அவர்கள் நாடும் பெரிய சாதனை ஆகும்.
ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆச்சரியங்களை அளிப்பது பென்னட் குடும்பத்தின் வழக்கமாகும்.
உயிர்வாழ்வது, வளர்ச்சி, முன்னேற்றம், இவை விரும்பதத்தக்க இலக்காக இல்லாதவர்களுக்கு, பரிணாமமே சமூக வாய்ப்பாகும்.
அதிகப்படியானவற்றை விலக்காமல், சமூக வாழ்வின் மேலும் உயர்ந்த புதிய தோற்றங்களை உருவாக்கும் செய்முறையே பரிணாமம் ஆகும்.
அந்த அறிவை முறையாக செயல்படும் வாழ்வாக மாற்ற பரிணாமத்தின் அறிவும், ஒரு சக்தியும் தேவை.
பரிணாமத்தின் உச்சம் அதுவென்றால், அதற்குக் கீழ் பல படிகள் உள்ளன. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆச்சரியங்களை உருவாக்கும் திறன் அவற்றில் இறுதியான படியாகும்.
பரிணாமத்தின் உயர்ந்த சாத்தியத்தை சுதந்திரம் வெளிப்படுத்துகிறது.
அளவற்ற உயர்ந்த சக்தி இதற்குத் தேவைப்படுகிறது.
ஆங்கிலேயே ஆண்களின் கலாச்சாரம் மற்றும் திருமண பந்தத்தில் முழுமையான நிராதரவு, இவற்றின் மூலம் திரு. பென்னட்டிடமிருந்து இது போன்ற சுதந்திரம் கிடைக்கிறது.
திருமதி பென்னட்டிடமிருந்து விரும்பத்தகாத வடிவத்தில் தேவைப்படும் சக்தி கிடைக்கிறது.
சக்திகளின் ஓட்டத்தின் போக்கிற்கு ஏற்ப இந்தச் சமரசத்தை வாழ்க்கை அனுமதிக்கிறது, இதன் இறுதிப் பலனாக பெண்களின் மனப்போக்கு உள்ளது.
இந்தக் கண்ணோட்டத்தை மேற்கொண்டு, களத்தை அமைத்து, கதாபாத்திரங்களை வரவேற்று, அவர்களை ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளவைத்து, சந்தர்ப்பங்கள், மனோபாவங்கள், நிகழ்வுகள், பலன்கள், காரணங்கள் இவற்றை உருவாக்க வைப்பதே கதையாகும்.
நம்முடைய எல்லாக் கருத்துகளும் வெளிப்படும் வண்ணம் கதையின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் இந்தக் கண்ணோட்டத்தில் ஆராய்வது, அற்புதத்தைப் பார்ப்பதாகும்.
இதனை மேலும் தொடர்ந்து முயன்றால், மேலும் உயர்ந்த இரகசியங்கள் வெளிப்படும்.
இவற்றின் தோற்றங்கள் புதிய புரிதலை உருவாக்கும்.
இந்தத் தோற்றங்கள் எடுக்க முயலும் துல்லியம், பரிணாம உந்துதலை வெளிப்படுத்தும்.
எவ்வாறு ஆரம்ப நிகழ்ச்சிகள் எதிர்கால பலனை அமைக்க உதவுகிறது என்பது, துல்லியமான தோற்றங்களை அமைக்க எவ்வாறு களம் உருவாக்கப்படுகிறது, அமைக்கப்படுகிறது என்பதைக் காண்பிக்கிறது.
முழுமையாக விவரிக்க முடியாதபடி இருப்பினும், இந்த எல்லா விஷயங்களும் நெதர்பீல்டிற்கு விருந்துண்ண வரும்படி ஜேனுக்குக் கிடைத்த அழைப்பாக நேர்மறையாக மாறியதைப் பார்க்கலாம்.
விருந்து முடியும் முன்பே வெகு விரைவில் பரிணாமத்திற்குரிய திறன் தீர்க்கப்பட்டு, விதிகளின் தேவைக்கேற்ப அது காய்ச்சலாக உருமாறுகிறது.

"And we mean to treat you all," added Lydia; "but you must lend us the money, for we have just spent ours at the shop out there." Then, shewing her purchases -- "Look here, I have bought this bonnet. I do not think it is very pretty; but I thought I might as well buy it as not. I shall pull it to pieces as soon as I get home, and see if I can make it up any better."

“உங்கள் எல்லோருக்கும் விருந்து கொடுக்கப் போகிறோம்” என்ற லிடியா, “ஆனால் நீங்கள் எங்களுக்குப் பணம் கொடுத்து உதவி செய்ய வேண்டும். ஏனெனில் எங்களிடம் இருந்ததை, அதோ எதிரேயுள்ள கடையில் செலவழித்து விட்டோம்,” என்று கூறி தாங்கள் வாங்கிய பொருட்களைக் காண்பித்தனர். “இங்கே பாருங்கள், நான் இந்த தொப்பி வாங்கியிருக்கிறேன். இது மிகவும் அழகாக இருக்கிறது என்று நான் நினைக்கவில்லை, ஆனாலும் இதை வாங்கி விடலாம் என்று நினைத்தேன். வீட்டிற்குப் போனபின் இதை தனித்தனியாகப் பிரித்து விட்டு, இன்னும் அழகாக செய்ய முடியுமா என்று பார்க்கப் போகிறேன்,” என்றாள்.

11. Mr. Bennet is the product of freedom given by property.
சொத்து அளித்த சுதந்திரத்தைக் கொண்டவர் திரு பென்னட்.
12. He is the expression of well fed energy untamed by any information that is socially useful.
அவர் சமூகத்திற்கு பயன்படும் தகவல்களினால் பண்படுத்தப்படாத சக்தி உடையவர்.
13. The fact that a venomous person like Wickham could not do lasting damage to the inmates there confirms this view.
அங்கிருக்கும் மக்களுக்கு, விக்காம்போல விஷத்தன்மை உடைய ஒரு நபரால் எந்த வித நிரந்தர பாதிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை என்பது இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது.
14. Wickham’s evil doings are motivated more by his personal gain which is pardonable than by an evil desire to hurt the other.
மற்றவர்களைத் துன்புறுத்த வேண்டும் என்கிற கெட்ட எண்ணம் இல்லாமல் விக்காமிற்கு, அவனுடைய சொந்த இலாபத்திற்காகவே அவனது தவறான நடவடிக்கைகள் இருப்பதால், அவை மன்னிக்கக் கூடியவைதான்.
15. “As we mean to treat us all, you must lend us the Money”.
Right attitude with insufficient reserves is the beginning of the end.
Creative right attitudes create the required resources by its exertion.
For twenty five years Mr. Bennet family has been functioning as a social light house to guide the ships of social opportunities.
Mr. Bennet’s family is one of secondary spots created by the outbursts of French Revolution.
Every Man who marries outside his class or caste has this experience or its reverse.
Marriages are made in heaven to find the exact psychological complement to every Man or woman.
Marriage is tapas in Non-Being.
Hope of ecstatic domestic bliss before marriage indicates the strength of human aspiration for god in life.
One who is divorced more than once acting again as before shows the creative resources in life, creative of eternal hope.
Hope is the flame of spiritual awakening.
Hope has the characteristic of reviving more strongly each time it is frustrated or killed.
The physical body refuses to die, revives itself innumerable times.
Each new body carries fully ALL the essence of all previous bodies.
Only the form is new.
Even that form has several striking resemblances with the previous bodies.
Observe a foolish diehard vanquished in a oral contest.
With what greater vigour he repeats his vanquished arguments.
Meet him on his death bed, you will hear all those arguments alive, embellished, enriched, with newer vigour, and newer form.
Examine the thoughts you are passionately attached. If you are a writer and has your earlier writings now available, you will be surprised by the similarities and exactness.
Neither thoughts, feelings, acts, or forms die.
“நம் அனைவருக்கும் நாங்கள் விருந்து கொடுக்கப்போவதால், நீ எங்களுக்கு பணம் கடனாக அளிக்க வேண்டும்.”
போதுமான அளவிற்கு சரியான மனோபாவம் இல்லாவிடின், அது முடிவின் ஆரம்பமாகும்.
படைப்பாற்றலுடைய சரியான மனோபாவம் தேவைப்படும் வளங்களை முயன்று உருவாக்கும்.
இருபத்தி ஐந்து வருடங்களாக திரு பென்னட் குடும்பம் சமூக வாய்ப்புகளுக்கு வழிகாட்டியாக, சமூக கலங்கரை விளக்கமாக செயல்பட்டு வருகிறது.
பிரெஞ்சுப் புரட்சியால் இரண்டாவது நிலை இடங்கள் உருவானதில், திரு பென்னட் குடும்பமும் ஒன்று.
தன்னுடைய பிரிவு அல்லது ஜாதியைத் தாண்டி வெளியே திருமணம் செய்துகொள்ளும் ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த அனுபவமோ அல்லது இதற்கு நேர்மாறான அனுபவமோ இருக்கும்.
ஒவ்வோரு ஆண் அல்லது பெண்ணிற்கும் மிகச் சரியான மனோரீதியான உடன்பாடாக விளங்கும் துணையை கண்டுபிடிக்க, திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன.
திருமணம் அசத்தில் தவமாகும்.

பூரிப்பு நிறைந்த குடும்ப சந்தோஷத்தின் நம்பிக்கை, திருமணத்திற்கு முன் எழுவது, வாழ்வில் இறைவனை நாடும் மனித ஆர்வத்தின் வலிமையைக் காண்பிக்கின்றது.
ஒரு முறைக்கு மேல் விவாகரத்து கிடைக்கப் பெற்றவர் மீண்டும் முன்போல் செயல்படுவது, வாழ்வில் நிரந்தர நம்பிக்கையை உருவாக்கும் படைக்கும் திறன்களை காண்பிக்கின்றது.
ஆன்மீக விழிப்பின் சுடரே நம்பிக்கையாகும்.
ஏமாற்றம் எழும்பொழுதும் அல்லது நசுக்கப்படும்பொழுதும், நம்பிக்கை மீண்டும் வலிமையாக உருப்பெறும் தன்மையுடையது.
உடல் மரணமடைய மறுக்கிறது, தன்னையே பலமுறை புதுப்பித்துக் கொள்கிறது.
ஒவ்வொரு புதிய உடலும் அனைத்து முந்தைய உடல்களின் எல்லா சாரத்தையும் தாங்கி வருகிறது.
தோற்றம் மட்டுமே புதியது.
அந்தத் தோற்றத்திலும் முந்தைய உடல்களின் பல சாயல்கள் அதிசயத்தக்க வகையில் இருப்பதைப் பார்க்கலாம்.
பேச்சுப் போட்டியில் மிகவும் முட்டாளாக இருக்கும் ஒருவன், தோற்கடிக்கப்படுவதை கவனிக்கலாம்.
தோற்றுப்போன விவாதங்களை, அதிக தீவிரத்துடன் அவன் மீண்டும் ஆரம்பிப்பான்.
அவனுடைய மரணப்படுக்கையிலும் அவனுடைய அந்த விவாதங்கள் மேலும் புதிய தீவிரத்துடனும், புதிய தோற்றத்துடனும், ஜீவனுடனும், அழகாகவும், வளம் வாய்ந்ததாகவும் இருப்பதைப் பார்க்கலாம்.
நாம் உணர்வுபூர்வமாகப் பற்றிக் கொண்டிருக்கும் எண்ணங்களை ஆராய வேண்டும். ஒரு எழுத்தாளர் தான் முன்பு எழுதியவற்றிற்கும், தற்போதைய படைப்புகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமையையும், அவை ஒன்றுக்கொன்று இணையாக இருப்பதையும் பார்க்கலாம்.
எண்ணங்களோ, உணர்வுகளோ, செயல்களோ அல்லது தோற்றங்களோ எதுவுமே அழிவதில்லை.

16. "I shall pull it to pieces as soon as I get home".
Buying is a passing fancy that reverses as soon as you go home.
A whole economy rests on this fancy.
As soon as a Man thinks a thought he contradicts his thought.
On the first day of marriage a good many people wish it to end.
The present laws in America institutionalize it.
Man living with a Woman unmarried, contradicts that possibility.
There is no structure to destroy.
The area of destruction shifts from the codified rule to non-codified practice.
The struggle is shifted from outer to inner.
In a marriage that is to be preserved Man struggled inside to obey the social convention.
When society is in transition he breaks the sanctity of marriage.
While living together the struggle goes in compelled by inner needs.
While obeying the social convention Man can choose to obey the inner needs, thus making all the progress.
She leaves the unmarried boy and goes to another boy only to find the same temperamental defects in him.
Wanting not to give him up she shifts the struggle inside.
He or she could have shifted the conflict inside without the outer social compulsion or the inner compulsion.
The struggle is inside; the progress is from the outer to the inner.
The struggle is endless.
It is a struggle to acquire higher values.
Acquiring civilized behaviour, cultural values is yoga in life.
For anyone the opportunity exists outside as well as inside.
Each according to the level of his development gets it outside or inside.
Lydia offers to pull the hat to pieces.
Men pull their wives or children to pieces.
Pulling people to pieces can be exchanged with putting people together.
"வீட்டிற்குச் சென்றவுடன் இதை நான் தனித்தனியாகப் பிரித்து விடுவேன்."
பொருள்களை வாங்குவது ஒரு தற்காலிக பொழுதுபோக்காகும். வீட்டிற்குச் சென்றவுடன் அது மாறிவிடும்.
ஒரு நாட்டின் பொருளாதாரமே இந்த விருப்பத்தைச் சார்ந்து உள்ளது.
மனிதனுக்கு ஒரு எண்ணம் எழுந்தவுடன், அந்த எண்ணத்தை அவன் மறுப்பான்.
திருமணம் நடைபெற்ற நாளன்றே, பலர் இது முடிவடைந்து விடவேண்டும் என விரும்புவர்.
அமெரிக்காவின் தற்பொழுதைய சட்டங்கள் இதனை முறைப்படுத்தின.
ஒரு ஆண் ஒரு பெண்ணுடன் திருமணம் செய்துகொள்ளாமலே சேர்ந்து வாழ்வது இந்த சாத்தியக்கூற்றிற்கு எதிரானது.
அழிப்பதற்கு எந்த ஒரு கட்டமைப்பும் அங்கு இல்லை.
அழிவின் இடம் முறைப்படுத்தப்பட்ட சட்டத்திலிருந்து, முறைப்படுத்தப்படாத நடைமுறைக்கு மாறுகிறது.

போராட்டம் புறத்திலிருந்து அகத்திற்கு மாறுகிறது.
பாதுகாக்கப்பட வேண்டிய திருமணத்தில், சமூக மரபிற்கு அடிபணிய மனிதன் அகத்தில் போராடினான்.
சமூகம் மாறும்பொழுது, திருமணத்தின் புனிதத்தை அவன் தகர்க்கிறான்.
சேர்ந்து வாழும்பொழுது உள் தேவைகளின் கட்டாயத்தினால் போராட்டம் எழுகிறது.
மரபிற்கு மனிதன் அடிபணியும்பொழுது அவன் அகத் தேவைகளுக்கு கீழ்ப்படிய தீர்மானித்து எல்லா முன்னேற்றங்களையும் அடையலாம்.
திருமணம் ஆகாத ஒரு ஆணை விட்டு விலகி வேறொரு ஆணிடம் செல்லும் பெண், அதே போன்ற மனவுணர்வுகளின் குறைபாடுகளை அவனிடமும் காண்பாள்.
அவனைக் கைவிட விரும்பாததால், அகப் போராட்டம் அவளுள் எழுகிறது.
வெளியில் இருக்கும் சமூக கட்டாயமோ அல்லது உள்ளிருக்கும் வற்புறுத்தலோ எதுவுமின்றி அவனோ அல்லது அவளோ அகப் போராட்டத்தை மாற்றியிருக்கலாம்.
போராட்டம் அகத்தில் ஏற்படுகிறது; முன்னேற்றம் புறத்திலிருந்து அகத்திற்கு நிகழ்கிறது.
போராட்டம் முடிவில்லாதது.
இது உயர்ந்த பண்புகளைப் பெறுவதற்கான போராட்டமாகும்.
நாகரிகமான நடத்தையையும், கலாச்சாரப் பண்புகளையும் பெறுவது வாழ்வில் யோகமாகும்.
யாவருக்கும் அகம், புறம் இரண்டிலும் வாய்ப்புகள் உள்ளன.
ஒருவரது வளர்ச்சியின் நிலைக்கேற்ப, ஒவ்வொருவரும் வாய்ப்பினை அகத்திலோ அல்லது புறத்திலோ பெற்றுக்கொள்கின்றனர்.
தொப்பியை சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்க லிடியா விரும்புகிறாள்.
ஆண்கள் அவர்களது மனைவிமார்களையோ அல்லது குழந்தைகளையோ பாடுபடுத்துவர்.
மக்களை சிதறடிக்காமல் மக்களை ஒன்று சேர்க்க முயல வேண்டும்.

And when her sisters abused it as ugly, she added, with perfect unconcern, "Oh! But there were two or three much uglier in the shop; and when I have bought some prettier-coloured satin to trim it with fresh, I think it will be very tolerable. Besides, it will not much signify what one wears this summer, after the -- -- shire have left Meryton, and they are going in a fortnight."
அது பார்ப்பதற்கு மிகவும் மோசமாக இருக்கிறது என சகோதரிகள் திட்டிய பொழுது அதை சிறிதும் லட்சியம் செய்யாமல் “ஓ! இதைவிட மோசமாக இரண்டு, மூன்று தொப்பிகள் அந்தக் கடையில் இருந்தன. அழகான நிறம் கொண்ட பட்டுத் துணி வாங்கி, ஓரங்களில் வைத்து தைத்து புதிதாக்கிவிட்டால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். மேலும், இன்னும் பதினைந்து நாட்களில் படைப்பிரிவு மெரிடனைவிட்டுச் சென்ற பிறகு இந்த கோடையில் யார் என்ன போட்டு கொள்கிறார்கள் என்பது ஒரு முக்கியமே அல்ல,” என்றாள்.

17. The moment Elizabeth’s mind is disillusioned about Wickham, the whole regiment is leaving Meryton. It did not happen already before she returned in which case it would mean she became bitter about Wickham, but it permits her to meet him and take leave of him. In that measure, her solicitude is there.
விக்காம் மீதிருந்த மோகத்திலிருந்து எலிசபெத் வெளியே வந்தவுடன், படைப்பிரிவினர் மெரிடனை விட்டு கிளம்புகின்றனர். அவள் வருவதற்கு முன்பே இது நிகழ்ந்திருந்தால் அவளுக்கு விக்காம் மீது கசப்பு எழுந்து விட்டது என்றாகும். ஆனால் அவனை சந்தித்து, அவனிடமிருந்து விடை பெறும் சந்தர்ப்பம் அவளுக்கு கிடைக்கிறது. இந்த அளவில் அவளுக்கு அக்கறை இருக்கிறது.
18. “When her sisters abused her, she replied with perfect unconcern”.
A person capable of perfect unconcern in any affair, can be so in any other affair.
Whether the unconcern is an attitude to the hat or her own matters.
Unconcern is an attitude.
It cannot arise towards an object without its being in Nature.
One can develop any attitude towards an object, even the opposite attitudes, concern and unconcern.
In that case it must be a wide creative attitude.
An attitude that is creative of other attitudes is motive.
As an attitude is seated in the vital, the motive is in the being this possible.
Thought is an instrument of Mind. Opinion is thought endorsed by Mind.
So liking and attitude are of the vital.
The initiative and motive belong to the Being similarly.
The body cannot wait to act when it understands, says the Mother.
A thought can be in the Mind, lie dormant waiting to be commissioned.
An opinion is the faculty of the Mind urges for expression. If no one is willing to listen the Man speaks to himself and creates thoughts that can wait for orders.
It is thought at a higher level.

Society that develops language is alive to their difference and creates words to specifically express each shade of thought.

A classical language tends to create new words in its own vocabulary while a less organized language readily accepts words from any language.

Yes and No are separate words for opposite conceptions. This is original creation of the language.

Concern and unconcern are opposite created based on the original word.

Here the original words permit an opposite concept.

Indian Rishis speak of Sat and Asat be because they could not go beyond both to discover something common to both of them.

Language often indicates developments in other dimensions.

Sri Aurobindo wondered whether philology will ever become a science.

“லிடியாவை அவளுடைய சகோதரிகள் நிந்தித்தபொழுது, அவள் சிறிதும் கவலைப்படாமல் பதிலளித்தாள்.”

ஏதாவது ஒரு விஷயத்தில் சிறிதும் கவலைப்படாமல் இருக்கும் ஒருவர், மற்ற எந்த விஷயத்திற்கும் கவலைப்படமாட்டர்.

அக்கறையின்மை, தொப்பியின் மீதான அவளது மனோபாவமா அல்லது அவளுடைய சொந்த விஷயத்திலா.

அக்கறையின்மை ஒரு மனோபாவமாகும்.

சுபாவத்தில் இல்லாமல், ஒரு பொருளின் மீது இந்த மனோபாவம் எழாது.

ஒரு பொருளின் மேல் ஒருவர் எந்தவித மனோபாவத்தையும் மேற்கொள்ளலாம். அது அக்கறை, அக்கறையின்மை போன்ற ஒன்றுக்கொன்று நேர்மாறான மனோபாவமாகவும் இருக்கலாம்.

அவ்வாறு இருந்தால், அது பரந்த படைப்பாற்றல் மிகுந்த மனோபாவமாக இருக்க வேண்டும்.

மற்ற மனோபாவங்களை உருவாக்கும் ஆற்றலுடைய மனோபாவம், நோக்கமாகும்.

மனோபாவம் உணர்விலும் நோக்கம் ஜீவனிலும் இருப்பதால், இது சாத்தியம்.

எண்ணம் மனத்தின் ஒரு கருவியாகும். மனம் ஒப்புதலளிக்கும் எண்ணமே அபிப்ராயம் ஆகும்.

ஆகவே விருப்பமும், மனோபாவமும் உணர்வுக்குரியது.

இதே போல் தன்முனைப்பும், நோக்கமும் ஜீவனுக்குரியது.

புரிந்துவிட்டால், உடலால் செயல்பட காத்திருக்க முடியாது என்று அன்னை கூறுகிறார்.

எண்ணம் மனத்தில் இருக்கும், உத்தரவுக்காக அமைதியாக காத்துக் கொண்டிருக்கும்.

மனத்தின் திறனான அபிப்பிராயம் வெளிப்பட உந்தும். கேட்டுக்கொள்ள எவரும் முன்வராத பொழுது மனிதன் தன்னிடமே பேசிக் கொள்வான், உத்தரவுக்காக காத்திருக்கக் கூடிய எண்ணங்களை உருவாக்குவான்.

இது உயர்ந்த நிலையின் எண்ணமாகும்.

சமூகம் மொழியை வளப்படுத்தும் இந்த வித்தியாசங்களுக்கு விழிப்புடன் உள்ளது. ஒவ்வொரு எண்ணத்தின் சாயலையும் விளக்கவல்ல வார்த்தைகளை உருவாக்குகிறது.

இலக்கிய நயம் வாய்ந்த மொழி, புது வார்த்தைகளை அதனுடைய அகராதியில் உருவாக்கும். மற்ற மொழிகள், வேறு எந்த மொழியிலிருந்தும் வார்த்தைகளை உடனடியாக ஏற்றுக் கொள்ளும்.

ஆம், இல்லை என்பது நேர்மாறான கருத்துகளுக்குரிய தனித்தனி வார்த்தைகளாகும். இது மொழியின் சுயமான படைப்பாகும்.

சுயமான வார்த்தைகளை வைத்து உருவாக்கப்பட்டதே எதிரெதிரான வார்த்தைகளான அக்கறை, அக்கறையின்மை.

இங்கு முதலில் இருந்த வார்த்தைகள், நேர்மாறான கருத்தை அனுமதிக்கின்றன.

இந்திய ரிஷிகள் சத் மற்றும் அசத்தைப் பற்றி பேசுகின்றனர், ஏனென்றால் இரண்டிற்கும் பொதுவானவற்றைக் கண்டுபிடிக்க அவர்களால் இவற்றைத் தாண்டிச் செல்ல முடியவில்லை.

மற்ற பரிமாணங்களில் உள்ள வளர்ச்சியை மொழி பெரும்பாலும் குறிக்கிறது.

மொழி சாஸ்திரம் என்றாவது விஞ்ஞானமாகுமா என்று ஸ்ரீ அரவிந்தர் வியந்திருக்கிறார்.

19. “It will not much signify after the militia leaves this summer”.

Dress is to attract, not to hide one’s shame or protect from the weather.

Survival is paramount.

After survival, appearance is of equal importance.

For the woman to be decorative is their birth right.

It is so because she lies in wait for the Man to come to her.

She is so constituted biologically.

Mother says woman can take to yoga if she gives up the love for the child and love for domination.

To Man the first qualification is self-giving, overcoming ego.

Man seeks a woman not as a wife, not for child birth but to feel the psychological fulfillment.

It was two sides, the lower and higher.

One is to be loved, the other is to love.

Love expands not only the heart, but the very being.

Love of a woman for a Man completes itself in his substance as never before.
Next only to love of God, love of a wife ennobles one's soul.
A woman can psychologically fulfil a Man better than his God.
God gives spiritual fulfillment, not psychological fulfillment.
The woman who is psychologically fulfilling open the door to God's love.
As Man can find the feminine principle in him that completes his evolving being through a woman, the woman is his god.
The woman can consciously fulfill him and find fulfillment in herself by responding to a Man or seeking it in Man.
No one can dominate him as she does. To overcome her desire to be dominated, she resorts to domination of Man.
Man's fulfillment in Spirit lies in his courting the woman for the purposes of her dominating him.
As Man craves for domination he also yearns for submission.
For that there is no better instrument than a woman.
"இராணுவத்தினர் வருகின்ற கோடைகாலத்தில் கிளம்பிச் சென்ற பிறகு எதுவும் முக்கியம் கிடையாது."
ஆடை கவருவதற்காக அணியப்படுகிறது, ஒருவரது மானத்தை காப்பாற்றவோ அல்லது பருவநிலையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவோ அல்ல.
உயிர் வாழ்வது எல்லாவற்றிற்கும்மேல் மிகவும் முக்கியம்.
இதற்குப் பிறகு தோற்றமும் சமமாக முக்கியமானது.
ஒரு பெண் அலங்காரமாக விளங்குவது அவளது பிறப்புரிமை.
ஏனெனில் அவளை நோக்கி ஆண் வருவதற்காக அவள் காத்திருக்கிறாள்.
உடல்ரீதியாக அவள் இவ்வாறு கட்டமைக்கப்பட்டிருக்கிறாள்.
குழந்தைக்கான ஆசையையும், அதிகாரம் செலுத்துவதற்கான ஆசையையும் ஒரு பெண் கைவிட்டால், அவளால் யோகத்தை மேற்கொள்ள முடியும் என்று அன்னை கூறுகிறார்.
ஒரு ஆணுக்கு முதல் தகுதி சுய அர்ப்பணமும், அகந்தையை வெல்வதுமேயாகும்.
ஒரு ஆண் ஒரு பெண்ணை மனைவியாக நாடுவதில்லை, குழந்தையைப் பெற்றெடுப்பதற்காக நாடுவதில்லை, ஆனால் மனநிறைவுக்காக நாடுகிறான்.
இதற்கு இரண்டு பக்கங்கள் உள்ளன, தாழ்ந்தது - உயர்ந்தது.
ஒன்று விரும்பப்படவேண்டும் என்பதற்காக, மற்றொன்று விரும்புவதற்காக.
அன்பு உள்ளத்தை மட்டும் விரிவுபடுத்துவதில்லை, ஜீவனையே விரிவடையச் செய்கிறது.
ஆணுக்கு பெண்ணிடம் ஏற்படும் காதல் முன்பு எப்பொழுதும் இல்லாதது போல் அவனுள் முழுமை அடைகிறது.
இறைவனிடம் உள்ள அன்பிற்கு அடுத்தபடியாக மனைவியிடம் உள்ள அன்பு ஒருவரது ஆன்மாவை உயர்த்தும்.
ஒரு பெண், ஒரு ஆணை அவனுடைய இறைவனைவிட மேலும் சிறப்பாக மனத்தளவில் பூர்த்தி செய்வாள்.
இறைவன் அளிப்பது ஆன்மீகரீதியான நிறைவு, மனோரீதியான நிறைவல்ல.
மனநிறைவைத் தரும் பெண், இறைவனின் அன்பிற்கான வாயிலைத் திறக்கிறாள்.
ஒரு பெண்ணின் மூலம் தன்னுடைய வெளிவரும் ஜீவனை பூர்த்தி செய்யும் பெண்மையின் கருத்தை தன்னுள் மனிதன் கண்டுபிடிப்பதால், பெண்ணே அவனுடைய இறைவனாவாள்.
ஒரு பெண் தன்னினைவோடு ஒருவனை நிறைவடையச் செய்யமுடியும், ஒரு ஆணிற்கு மறுமொழி அளிப்பதன் மூலமாகவோ அல்லது ஆணிடம் நிறைவை நாடுவதன் மூலமாகவோ, தன்னிடத்திலும் நிறைவை அடைய முடியும்.
அவனை அவள் அதிகாரம் செய்வதுபோல் யாராலும் செய்ய முடியாது. தன்மீது எவரேனும் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்கிற ஆசையை வெற்றிகொள்ள, அவள் ஆணை ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்கிறாள்.
ஒரு ஆணின் ஆன்மாவில் ஏற்படும் நிறைவு, தன் மீது அதிகாரம் செலுத்த விரும்பும் ஒரு பெண்ணை நாடுவதில் உள்ளது.
அதிகாரம் செலுத்துவதை விரும்புவது போல் ஆண், அடிபணிவதற்கும் ஏங்குவான்.
அதற்கு ஒரு பெண்ணே சிறப்பான கருவியாக விளங்குவாள்.

"Are they indeed!" Cried Elizabeth, with the greatest satisfaction.
"அப்படியா?" பெரும் திருப்தியுடன் எலிசபெத் கேட்டாள்.

20. "Are they indeed" cried Elizabeth with great satisfaction.
Nascent energy of a new conviction is strongly expressive.
This is a genuine expression.
Also the eagerness with which it is spoken is the inverse expression of her lingering vital attachment to Wickham.
The finest expression of this phenomenon is seen in the affectionate solicitude of the English for their Royalty after beheading Charles I.

Love – hate relationship is often witnessed.

Edmond's love for Mercedes is unidimensional unmixed with its opposite.

To fulfil a wider rule, he was denied her, and the opposite had to come into play.

Human love fulfils itself by hatred.

So, they alternate. What begins as one ends as another.

Yoga demands one to be whole i.e. find his love to be fully expressive of its other side.

Man selfishly loves or loves for his selfish gratification.

Loving a woman for her selfish aims to be fulfilled is to convert 'hatred' into love or absorb hate into love, a kind of integration of hate with love.

When one does it thoroughly with others – Men or women – the ends comes when his own sensitivities are disturbed.

He can overcome them, though extremely difficult.

Next comes the sensitivity of life which initially harms him and in the end hurts the other.

The first can be protected by self denial; the second cannot be prevented without acquiring universal compassion.

Love's reconciliation with hatred is a half way house.

It needs to be taken to the transcendent.

The Transcendent transmutes, transfigures, and does not merely change.

It is not enough one reaches one's subconscious and reverses.

He has to reach his own inconscience where by self-absorption he as a spiritual Individual carries the inconscient energy.

Conversion of this inconscient energy into superconscient energy through uniting them in him the conscient being, it becomes True Divine Love.

It is a point where the Force of being and Force of consciousness is one.

This has the power to change the other.

Darcy's accepting Elizabeth's petulant speech as the inner voice of his God is the true attitude of a devotee - sadhak; **it is the only attitude true love can take.**

She was ashamed of her own speech or any reference to it.

She was ashamed of it.

Recollect, if possible, any situation or a near version of it in our own life and see whether we can think like Darcy.

The mental sensitivities will revolt and forget it.

Examine whether in any one aspect of life we have overcome it mentally.

The vital sensitivities, the physical sensitivities are to be overcome.

Darcy did so with his vital abhorrence.

There he saw his purpose was served.

That helped Elizabeth overcome her own reservations.

The story ends there with two reservations 1) Elizabeth's lingering charm for Wickham 2) Darcy's unwillingness to see Wickham.

Sri Aurobindo says He sees no dirt in a child wallowing in dirt.

It is a mild version of the depth of cruelty and filth in humanity.

The horrors of war, those of the refugee camp are not things one can allow to pass through even as memory for a second.

Man has to see the Marvel in them.

It is a supramental vision.

An overmental version of it is given to us a Savitri where He says He endeavoured to raise each line to the overmental level so that one must be able to read Savitri with full comprehension.

"உண்மையாகவா" என்று எலிசபெத் மிகுந்த திருப்தியுடன் கேட்டாள்."

புதிய திடநம்பிக்கையின் புதிய சக்தி வலுவாக வெளிப்படும்.

இது உண்மையான வெளிப்பாடாகும்.

விக்காமிடம் இன்னமும் அவளுக்கு இருக்கும் ஈடுபாட்டின் நேர் எதிரான வெளிப்பாடுதான் அவள் அவ்வாறு ஆவலாகக் கேட்டது.

முதலாம் சார்லஸ்-ன் தலை சீவப்பட்டவுடன், அரசகுடும்பத்தினரிடம் ஆங்கிலேயர்களுக்கு இருந்த பாசமிகுந்த ஆர்வம், இந்நிகழ்வின் மிகச் சிறந்த வெளிப்பாட்டில் தெரிந்தது.

அன்பு, வெறுப்பு இரண்டும் கலந்த உறவினை பெரும்பாலும் பார்க்கிறோம்.

Mercedes-ன் மீது *Edmond*-ற்கு இருந்த காதல், அதனுடைய மாறானதுடன் கலப்படமின்றி, ஒரே பரிணாமம் உடையதாக இருந்தது.

மேலும் அகண்ட விதியை பூர்த்தி செய்ய அவள் அவனுக்கு மறுக்கப்பட்டாள், நேர்மாறானது செயல்பட்டது.

மனித அன்பு வெறுப்பின் மூலம் தன்னை பூர்த்தி செய்துகொள்கிறது.

அதனால் அவை மாறிமாறி வருகின்றன. ஒன்றினைப் போல் ஆரம்பிப்பது வேறொன்றாக முடிகிறது.
யோகம், ஒருவரை முழுமையாக இருக்க எதிர்பார்க்கும். அதாவது அவருடைய காதல், அதன் மறுபக்கத்தையும் முழுமையாக வெளிப்படுத்துவதை எதிர்பார்க்கும்.
ஆண் சுயநலமாகக் காதலிக்கிறான் அல்லது சுயநலமான திருப்திக்காக காதலிக்கிறான்.
ஒரு பெண்ணின் சுயநலமான நோக்கங்கள் பூர்த்தியாவதற்காக அவளைக் காதலிப்பது வெறுப்பை அன்பாக மாற்றுவதாகும் அல்லது வெறுப்பை அன்பில் கிரகித்துக்கொள்வதாகும். இது வெறுப்பு மற்றும் அன்பின் ஒரு விதமான ஒருங்கிணைப்பு.
ஆண்களோ அல்லது பெண்களோ, ஒருவர் மற்றவருடன் இவ்வாறு நடந்துகொள்ளும்பொழுது, ஒருவரது உணர்வுகள் பாதிப்படையும் நேரத்தில் முடிவு ஏற்பட்டு விடுகிறது.
மிகவும் கடினமாக இருந்தாலும் அவனால் அவற்றைத் தாண்டி வரமுடியும்.
அடுத்து வருவது வாழ்வின் நுண்ணுணர்வுகள், இது ஒருவனை ஆரம்பத்தில் காயப்படுத்தும், முடிவில் அடுத்தவரை துன்புறுத்தும்.
சுயமறுப்பின் மூலம் முதலாவதைப் பாதுகாக்கலாம்; உலகளாவிய கருணையைப் பெறாமல் இரண்டாவதைத் தவிர்க்க முடியாது.
அன்பு வெறுப்புடன் சமரசப்படுத்திக்கொள்வது இடைப்பட்ட நிலையாகும்.
இதை, பிரம்மத்திடம் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.
பிரம்மம் பண்புகளை மாற்றுகிறது, தோற்றத்தை மாற்றுகிறது, காரணம் ஏதுவுமின்றி மாறுவதில்லை.
ஒருவன் அவனது ஆழ்மனத்தை அடைந்து மாறுவது மட்டும் போதாது.
அவன் தனது அடிமனத்தை அடைய வேண்டும், ஆன்மீகத் தனிமனிதனான அவன், அங்கு சுயகிரகிப்பின் மூலம் இருளான சக்தியைத் தாங்கி வருகிறான்.
அடிமனமாகிய மனிதன் தன்னுள் இரண்டினையும் இணைப்பதன் மூலம் ஜட இருளின் சக்தியை பிரம்மத்தின் சக்தியாக மாற்றும்பொழுது அது உண்மையான தெய்வீக அன்பாக மாறுகிறது.
ஜீவனின் சக்தியும், ஜீவியத்தின் சக்தியும் ஒன்றாக இருக்கும் இடம் இது.
மற்றதை மாற்றும் சக்தி இதற்கு இருக்கிறது.
எலிசபெத்தின் எரிச்சலான பேச்சை தன்னுடைய இறைவனின் உட்குரலாக டார்சி எடுத்துக் கொள்வது, ஒரு அன்பனுக்கும், சாதகனுக்கும் இருக்க வேண்டிய சரியான மனோபாவமாகும்; **இதுதான் உண்மையான காதல் மேற்கொள்ளும் ஒரே மனப்பான்மையுமாகும்.**
தன்னுடைய பேச்சையும் அது சம்பந்தப்பட்ட யாவற்றையும் நினைத்து அவள் வெட்கப்பட்டாள்.
அதை நினைத்து அவள் அவமானம் அடைந்தாள்.
நம்முடைய வாழ்வின் எந்த ஒரு நிலைமையையோ அல்லது இதையொத்த ஒரு நிலைமையையோ நாம் ஞாபகப்படுத்திப் பார்த்து, நம்மால் டார்சியைப் போல் நினைக்க முடியுமா என எண்ணிப் பார்க்கலாம்.
மனத்தின் உணர்வுகள் எதிர்க்கும், இதை மறந்துவிடும்.
வாழ்க்கையின் ஏதாவது ஒரு விஷயத்தில் நாம் மனதளவில் இதை வெற்றி கொண்டுள்ளோமா என்பதை ஆராயவேண்டும்.
உணர்வின் நுண்ணுணர்வுகளும், உடலின் நுண்ணுணர்வுகளும் வெற்றி கொள்ளப்படவேண்டும்.
டார்சி தன்னுடைய உணர்வின் வெறுப்பினால் இதைச் செய்தான்.
அங்கு தன்னுடைய நோக்கம் நிறைவேறியதை அவன் பார்த்தான்.
எலிசபெத், அவளுடைய முன்விருப்பங்களைத் தாண்டிச் செல்ல அது உதவியது.
கதை இரண்டு முன்விருப்பங்களுடன் முடிவடைகிறது. 1) விக்காம் மீது எலிசபெத்திற்கு நீடிக்கும் கவர்ச்சி, 2) விக்காமை சந்திக்க டார்சி விரும்பாதது.
புழுதியில் விளையாடும் குழந்தையிடம் எந்த வித அழுக்கையும் பார்க்கவில்லை என்று பகவான் கூறுகிறார்.
இது மனிதகுலத்தின் கொடுமையின் ஆழத்தையும், அழுக்கையும் மிதமான அளவில் காண்பிக்கிறது.
போரின் கொடுமைகள், அகதிகள் முகாமின் கொடுமைகள் இவற்றை ஒரு க்ஷணம் நினைத்துக்கூட பார்க்க முடியாது.
அவற்றில் மனிதன் அற்புதத்தைப் பார்க்க வேண்டும்.
இது ஒரு சத்திய ஜீவியக் காட்சியாகும்.
இதன் தெய்வலோகப் பதிப்பு நமக்கு சாவித்திரி-யாக அளிக்கப்பட்டுள்ளது. சாவித்ரியை முழுமையாகப் புரிந்து கொள்வதற்காக பகவான் சாவித்ரியில் உள்ள ஒவ்வொரு வரியையும் தெய்வலோக நிலைக்கு உயர்த்த முயன்றுள்ளார்.

"*They are going to be encamped near Brighton; and I do so want papa to take us all there for the summer! It would be such a delicious scheme, and I dare say would hardly cost anything at all. Mamma would like to go too of all things! Only think what a miserable summer else we shall have!"*
"பிரைட்டனுக்கு அருகில் அவர்கள் முகாமிட போகிறார்கள். அப்பா, நம் எல்லோரையும் கோடையில் அங்கு அழைத்துச் செல்ல வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன்! இது ஒரு சந்தோஷமான ஏற்பாடாக இருக்கும்,

அதற்கு அதிக செலவும் ஆகாது. அம்மாவிற்கும் எல்லாவற்றையும்விட அங்கு போவதற்குப் பிடிக்கும்! இல்லையெனில் இந்த கோடைகாலம் எவ்வளவு மோசமாக இருக்கும் என்று நினைத்துப் பார்."

21. Evil forces, hostile forces coming through falsehood will not part without hurting. It is called the parting shot. Solicitude for any reason will make the damage lasting into a tragedy.
    பொய்மையின் மூலம் வரும் கெட்ட சக்திகளும், தீய சக்திகளும், காயப்படுத்தாமல் விலகாது. இதனை விடைபெறும்பொழுது கொடுக்கும் அடி என்பார்கள். எக்காரணத்திற்காகவும் அக்கறை காண்பித்தால், அது பெரும் ஆபத்தில் கொண்டு விடும்.
22. "It would be such a delicious scheme" – going to Brighton.
    Deliciousness is the divine end of enjoyment.
    Everyone seeks delicious sweetness in every thing.
    The Divine insists it in all and gets it.
    Others seek it but do not always get it.
    Many start the experience deliciously and end in the opposite of it.
    In a tragedy the experience deliciously began as in Romeo and Juliet ends tragically. It appears to end there.
    In a comedy it begins well, meets with a fall, revive its success.
    It is so because the comedy is on the surface of life, tragedy meets life more deeply.
    In the divine cycle everything ends in a Marvel.
    As in our surface life comedy is shallow while tragedy covers more of life.
    What tragedy covers itself is the depth of consciousness and not the depth of life.
    Mahabharata ended wiping off evil, not transforming evil.
    Savitri transformed yama into a being of Light.
    Darcy's representative transformation has kept the British society alive for two hundred years.
    Moksha, destruction of evil in Mahabharatha, our very bodies, earth itself belong to the surface Mind.
    How are we to conceive of the subliminal Mind, Psychic Life, Supramental transformation?
    It is true they are all outside human conception and imagination.
    It is equally true our knowing Mother, can offer us one single unequivocal glimpse of that Life above the golden lid.
    She has been giving us the results as benefits without our seeking it or knowing it.
    One single consecration that meets all its definitions will give us that lightning flash when we are really out of the egoistic view He speaks of in the 'Pure Existent'.
    "பிரைட்டனுக்குச் செல்வது ஒரு சுவாரசியமான திட்டமாக இருக்கும்."
    சுவாரசியம் சந்தோஷத்தின் தெய்வீக முனையாகும்.
    எல்லாவற்றிலும் எல்லோரும் நாடுவது சுவாரசியமான இனிமையை.
    எல்லாவற்றிலும் இதனை இறைவன் வலியுறுத்துகிறான், பெற்றுக் கொள்கிறான்.
    மற்றவர்கள் இதை நாடுகின்றனர், ஆனால் எல்லா சமயத்திலும் இதைப் பெறுவதில்லை.
    பலரும் அனுபவத்தை சுவாரசியமாக ஆரம்பித்து அதற்கு நேர்மாறாக முடிப்பர்.
    சோகக்கதையான Romeo and Juliet சுவாரசியமாக ஆரம்பித்து சோகமாக முடிகிறது. அத்துடன் அது முடிகிறது.
    ஹாஸ்யத்தில், சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டு வீழ்ச்சியை சந்தித்து மீண்டும் வெற்றியை புதுப்பிக்கிறது.
    ஹாஸ்யம் வாழ்வின் மேற்பரப்பிலும், சோகம் வாழ்வின் ஆழத்திலும் இருப்பதால் இவ்வாறு நேருகிறது.
    தெய்வீகச் சுழற்சியில் அனைத்தும் அற்புதத்தில் முடிகின்றன.
    நமது மேல்மன வாழ்க்கையில் ஹாஸ்யம் ஆழமற்றதாக உள்ளது, பெரும் பகுதிகள் சோகமாகவே உள்ளன.
    ஜீவியத்தின் ஆழத்தைத்தான் சோகம் சூழ்ந்துள்ளதே தவிர வாழ்வின் ஆழத்தை அல்ல.
    தீமையை மகாபாரதம் அழித்ததே தவிர திருவுருமாற்றவில்லை.
    யமனை சாவித்ரி ஒளியாக மாற்றினாள்.
    பிரதிநிதியாக விளங்கிய டார்சியின் திருவுருமாற்றம் ஆங்கிலேயரின் சமுதாயத்தை இருநூறு வருடங்களுக்கு ஜீவனுடன் வைத்திருந்தது.
    மோக்ஷம் மகாபாரதத்தில் தீமையை அழித்தது. நமது உடல், உலகம் இவை யாவும் மேல்மனத்திற்குரியவை.
    அடிமனம், சைத்திய வாழ்வு, சத்தியஜீவிய திருவுருமாற்றம், இவற்றை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது?
    இவை அனைத்தும் மனித கற்பனைக்கும், புரிதலுக்கும் அப்பாற்பட்டவை என்பது உண்மை.
    அன்னையை நாம் அறிந்திருப்பதால் பொன்மூடிக்கும் மேலுள்ள வாழ்வின் ஒரே ஒரு தெளிவான காட்சியை நாம் பெற முடியும் என்பதும் இதற்குச் சமமான உண்மை.
    நாம் நாடாமலேயே, நமக்குத் தெரியாமலேயே, அன்னை நமக்குப் பலன்களை நன்மைகளாக வழங்கி வருகிறார்.
    அதன் எல்லா விளக்கங்களையும் உள்ளடக்கும் ஒரேயொரு சமர்ப்பணம், சத்புருஷனில் பகவான் கூறும் அகந்தை நிரம்பிய பார்வையை விட்டு நாம் வெளியே வரும்பொழுது, அந்த க்ஷண நேரக் காட்சியை நமக்கு அளிக்கிறது.

23. "That would hardly cost anything at all".
The invaluable, the priceless is not to be paid for.
As we do not pay for air, universal energy, sunlight, water that are greater essentials than food, dress, house, paper, pen, etc. the greatest future discoveries that are going to confer on us inconceivable benefits would come to us free.
Incidentally it ministers to the miserliness of Man.
Miserliness is thus divine.
It contradicts the fact that Man will not value a thing unless he pays for it.
Resolves that contradiction by offering great things free, in return of what he has not so far given to anyone for any price.
Presently accumulation of wealth is just accumulating bodily weight.
Wealth enjoys great status to us, presiding over a structure of superstition as its genius.
Miserliness is the saturation of ego so that at that point Man can emerge out of it.
A miser who can CONCEIVE of infinite generosity will have the Darsan of the Divine.
Conception maturing into PERCEPTION will saturate him with ecstasy.
SENSATION of infinite generosity will turn him into a being of gratitude.
He will be lifted out of the physical world of Westerners_into the world of subtle realities.
Generosity for the sake of generosity is human version that is opposite to miserliness.
Giving up miserliness in the emotions of imagination really makes a good essential beginning.
Lydia wants a delicious scheme for little cost.
"நமக்கு இதற்கு எந்த விதச் செலவும் இல்லை."
மதிப்பில்லாதது, விலை மதிக்க முடியாதவைகளுக்குப் பணம் செலவழிக்க வேண்டிய அவசியமில்லை.
உணவு, உடை, வீடு, காகிதம், எழுதுகோல் போன்றவைகளைவிட மேலும் முக்கியமானவையாக இருக்கும் காற்று, பிரபஞ்ச சக்தி, சூரிய ஒளி, தண்ணீர் போன்றவற்றிக்கு நாம் பணம் செலவழிப்பதில்லை.
எதிர்காலத்தில் நாம் நினைத்தும் பார்க்க முடியாத பயன்களை அளிக்கக் கூடிய இதைவிட மேலும் உயர்ந்த கண்டுபிடிப்புகள் நமக்கு இலவசமாகவே கிடைக்கும்.
மனிதனின் கஞ்சத்தனத்திற்கு இது உதவுகிறது.
ஆகவே கஞ்சத்தனம் தெய்வீகமானது.
பணம் செலவழிக்காமல் ஒரு பொருளை வாங்கினால் மனிதன் அதை மதிக்கமாட்டான் என்பதிலிருந்து இது முரண்படுகிறது.
எந்தப் பொருளையும் இதுவரை எவருக்கும் எந்த விலைக்கும் கொடுக்காத அவன், இதற்குப் பதிலாக உயர்ந்த பொருட்களை இலவசமாகக் கொடுப்பதன் மூலம் இந்த முரண்பாட்டைத் தீர்க்கிறான்.
தற்பொழுது சொத்து சேர்ப்பது என்பது உடல் எடையை கூட்டுவதாக உள்ளது.
சொத்து பெரிய அந்தஸ்தை நமக்களிக்கிறது, இதுதான் மேதாவித்தனம் எனும் மூடநம்பிக்கை கொள்கிறது.
அகந்தை செறிவடையும் பொழுது கஞ்சத்தனம் உருவாகிறது. இந்த இடத்தில் மனிதனால் அதிலிருந்து வெளிவர முடியும்.
அளவற்ற பெருந்தன்மையை ஒரு கஞ்சன் கருத்தில் எடுத்துக் கொண்டால், இறைவனின் தரிசனம் அவனுக்குக் கிடைக்கும்.
கருத்துருவாக்கம் **புரிந்துகொள்ளும்** முதிர்ச்சி பெற்றால், அது அவனை பூரிப்பினால் செறிவடையச் செய்யும்.
அளவற்ற பெருந்தன்மை அவனை நன்றிவுணர்வுமிக்க ஜீவனாக்கும்.
மேற்கத்தியர்களின் ஜட உலகிலிருந்து அவன் வெளிவந்து சூட்சும உண்மைகளின் உலகை அடைவான்.
பெருந்தன்மைக்காக பெருந்தன்மை என்பது கஞ்சத்தனத்தின் நேர் எதிரான மனிதப் பதிப்பாகும்.
கற்பனை உணர்ச்சிகளில் கஞ்சத்தனத்தை கைவிடுவது, உண்மையில் முக்கியமான நல்ல ஆரம்பமாக இருக்கும்.
மிகக் குறைந்த செலவில் சுவாரசியமான திட்டத்தை லிடியா விரும்புகிறாள்.

"Yes," thought Elizabeth, "that would be a delightful scheme indeed, and completely do for us at once. Good Heaven! Brighton, and a whole campful of soldiers, to us, who have been overset already by one poor regiment of militia, and the monthly balls of Meryton."
"ஆமாம், அது உண்மையிலேயே ஒரு இனிய ஏற்பாடாகத்தான் இருக்கும், நமக்கு சந்தோஷமான விஷயம்தான். ஏற்கனவே ஒரு சாதாரண படைப்பிரிவும், மாதாமாதம் மெரிடனில் நடந்த நடனங்களும் நமக்கு அளவுக்கு மிஞ்சி இருந்தன, இப்பொழுது கடவுளே! பிரைட்டனில் ஒரு முகாம் முழுவதும் படை வீரர்களா" என்று எலிசபெத் நினைத்தாள்.

24. "a Campful of Soldiers".
Human nature changes so quickly that what was delightful a moment ago becomes disgusting now.
Human nature is of the eternal ever changing present.
Men change from likes to dislikes.

Nature is capable of moving from delight to great delight.
While in ignorance it can alternate, in knowledge it can change only in knowledge or delight.
Presently the world is in abundant prosperity, poised to move from great prosperity to greater prosperity.
By a willful choice of ignorance that delights in its inherent enjoyments, it faces the worst ever financial crisis.
Sri Aurobindo does not seem to have exerted Himself to stem the crisis in 1929-32.
Of course His concern was War which broke His leg.
Presently the crisis has precedence over any other issue apparently.
It is true one Man's perfection can save the World.
It is also true that such a Man must have the necessary foundation to act and the necessary protection.
It can safely be tackled from any other psychological side, such as vital sensitivities relating to the crisis.
At that level a psychological constant has the needed power.
Elizabeth, who enjoyed the company of all the officers all these months, has now to conceive of the place a campful of soldiers.
To her disenchantment came through Wickham.
To Lydia it is a delicious scheme to take all the family to Brighton.
Not to see any difference between Lydia and Elizabeth is to have the divine Sight.
Actually Lydia takes exception to this expression.
We see here the seed of elopement as Elizabeth says Wickham was frequently on Lydia's tongue.
"இராணுவ வீரர்கள் நிறைந்த ஒரு முகாம்."
சில நொடிகளுக்கு முன்பு மகிழ்ச்சியாக இருந்தது, தற்பொழுது மிக விரைவாக வெறுக்கத்தக்கதாக மாறுவது மனித சுபாவத்தில் இருக்கிறது.
தொடர்ந்து மாறிவரும் நிகழ்காலத்திற்கு சாஸ்வதமாக விளங்குவது, மனித சுபாவம் ஆகும்.
விருப்பிலிருந்து வெறுப்புக்கு மனிதர்கள் மாறுகின்றனர்.
மகிழ்ச்சியிலிருந்து உயர்ந்த மகிழ்ச்சிக்கு மாற இயற்கையால் முடியும்.
அறியாமையில் இது மாறிமாறி இருக்கும், அறிவில் இது அறிவாகவோ அல்லது சந்தோஷமாகவோ மட்டும் மாறும்.
தற்பொழுது உலகில் அபரிமிதமான செல்வவளம் உள்ளது, உயர்ந்த செல்வவளத்திலிருந்து மேலும் உயர்ந்த வளத்திற்கு உயர்வதற்கு காத்துள்ளது.
அதனுள் பொதிந்துள்ள சந்தோஷத்தில் திளைக்கும் அறியாமையை வேண்டுமென்றே தேர்ந்தெடுப்பதால், உலகம் மிக மோசமான நிதி நெருக்கடியை எதிர்கொள்கிறது.
1929-32-ல் ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்க்க ஸ்ரீ அரவிந்தர் முயலவில்லை.
போர்தான் அவரது கவனத்தில் இருந்தது. அது அவரது காலில் எலும்பு முறிவை ஏற்படுத்தியது.
வேறு எந்த விஷயத்தையும் விட இந்த நெருக்கடிக்குத்தான் தற்பொழுது முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
ஒரு மனிதனின் பூரணத்துவம் உலகையே காப்பாற்றும் என்பது உண்மை.
இது போன்ற ஒரு மனிதன் செயல்பட, அவனுக்குத் தேவையான அடித்தளமும், பாதுகாப்பும் வேண்டும் என்பதும் உண்மை.
நெருக்கடிக்கு தொடர்புள்ள முக்கியமான உணர்வுகள் போன்ற வேறு எந்த மனோரீதியான வழியிலும் இதை பாதுகாப்பாக தீர்த்து வைக்கலாம்.
அந்நிலையில் மனத்தின் மாறாத் தன்மைக்கு தேவையான சக்தி இருக்கிறது.
இவ்வளவு நாட்களும் அனைத்து இராணுவ அதிகாரிகளுடன் மகிழ்ச்சியாக நேரத்தைச் செலவழித்த எலிசபெத், இப்பொழுது அந்த இடத்தை இராணுவ அதிகாரிகள் நிறைந்த முகாமாகக் கருத வேண்டி வருகிறது.
அவளுக்கு ஏமாற்றம் விக்காம் மூலம் எழுந்தது.
லிடியாவிற்கு, குடும்பம் முழுவதையும் பிரைட்டனுக்கு அழைத்துச் செல்வது ஒரு இனிமையான திட்டமாக இருந்தது.
லிடியாவிற்கும் எலிசபெத்திற்கும் இடையே எந்த வித வித்தியாசமும் பார்க்காமல் இருப்பது தெய்வீகப் பார்வையாகும்.
இந்த வெளிப்பாட்டிற்கு லிடியா விதி விலக்காக இருக்கிறாள்.
விக்காமின் பெயரை லிடியா அடிக்கடி உச்சரிப்பதாக எலிசபெத் கூறுவதில் ஓடிப்போவதற்குரிய வித்தினை நாம் பார்க்கிறோம்.

"Now I have got some news for you," said Lydia, as they sat down at table. "What do you think? It is excellent news -- capital news -- and about a certain person that we all like."
"இப்பொழுது உனக்குச் சொல்ல என்னிடம் ஒரு செய்தி இருக்கிறது," என்று மேஜையில் அமரும்பொழுது கூறிய லிடியா, "நீ என்ன நினைக்கிறாய்?இது ஒரு பிரமாதமான செய்தி, முக்கியமான செய்தி, நம் எல்லோருக்கும் பிடித்த ஒரு நபரை பற்றியது" என்றாள்.

25. "I have some news for you" – Lydia.
News has an inbuilt urge to travel.
The urge is always some relish to the speaker, not the receiver.
In this case the news is loaded with an inner motive that is urge.
The sentiment she expressed for Wickham reveals her plot.
Love, even illicit love, prides in speaking of it in confidence.
The pride and conscience are never in conflict.
All those who accomplish know the value of secrecy for accomplishment.
The fact that Miss King escaped the tragedy of a marriage with Wickham spoken out by Lydia indicates she will also escape the tragic social consequences.
Elizabeth's pleading with her father failed, because she was one who gave Wickham up unwillingly.
Had she given him up fully, she would have saved Lydia.
Finally she was able to save her because she underwent further changes of heart.
To a matter-of-fact society, what one feels or does not feel matters little. Its forms count, only the maintenance of those forms counts.
Those who felt deeply in a cause and later were compelled by society to act otherwise pay greater attention to those forms than others.
A wife goes out with another Man for five months and comes back to her husband's warm welcome. Her son is proud of that marriage lasting till his father's end at 90 years. Long live social forms!
Lydia is acceptable to the society as she was then married.
People who cherish rumour, especially those that spread it count little to the society, to their family and even to themselves.
Those who spread rumours do not spread good news.
Nothing in them expands in doing so.
Wickham never cared for any girl there. His interest was in the harm he could do Darcy.
As girls easily fall a prey to him, he was never attracted to them as others. His is the use value.
"உனக்குத் தெரிவிக்க என்னிடம் ஒரு செய்தி இருக்கிறது", என்று லிடியா கூறுகிறாள்.
செய்தி பரவுவதற்கு உள்ளூறை உந்துதல் இருக்கும்.
உந்துதல் எப்பொழுதும் செய்தியை கூறுபவருக்கு ருசியை அளிக்கிறதே தவிர கேட்டுக் கொள்பவருக்கல்ல.
இந்த விஷயத்தில் செய்தியின் உள்நோக்கம் உந்துதலாக இருக்கிறது.
விக்காமிற்காக அவள் வெளிப்படுத்திய நுண்ணுணர்வு அவளுடைய திட்டத்தை வெளிப்படுத்துகிறது.
கள்ளத்தனமான காதலும் இரகசியமாகப் பேசுவதில் பெருமை கொள்கிறது.
தற்பெருமையும் மனசாட்சியும் ஒரு பொழுதும் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதில்லை.
சாதிப்பவர்கள் எல்லோருக்கும் சாதிப்பதற்கு உதவும் இரகசியத்தின் மதிப்பு தெரிந்திருக்கும்.
விக்காமுடன் திருமணம் நடப்பதிலிருந்து தப்பித்துக் கொண்ட மிஸ் மேரி கிங்-ஐ பற்றி லிடியா பேசுவது, அவளும் ஆபத்தான சமூக விளைவுகளிலிருந்து தப்பித்துக்கொள்வாள் என்பதனை குறிக்கிறது.
தந்தையிடம் எலிசபெத் கெஞ்சுவது தோற்றது, ஏனெனில் அவள்தான் விக்காமை விருப்பமில்லாமல் கை விடுகிறாள்.
அவள் முழுமையாக விலகியிருந்தால் லிடியாவைக் காப்பாற்றி இருப்பாள்.
மனதால் மேலும் அவளுக்கு மாற்றங்கள் ஏற்பட்டதால் அவளால் இறுதியில் லிடியாவைக் காப்பாற்ற முடிந்தது.
உண்மையான சமூகத்திற்கு, ஒருவர் நினைப்பதும் நினைக்காததும் ஒரு விஷயமே அல்ல. அவைகளின் தோற்றங்கள் முக்கியம், தோற்றத்தை பாதுகாப்பதும் முக்கியமாகக் கருதப்படுகிறது.
ஒரு விஷயத்தில் ஆழமாக ஈடுபாடு கொண்டவர்கள், சமூகத்தால் வேறு விதமாகச் செயல்பட வற்புறுத்தப்பட்டால், அந்த விஷயங்களில் மற்றவர்களைவிட அதிக கவனம் செலுத்துவர்.
ஒருவரது மனைவி வேறொரு ஆணுடன் ஐந்து மாதங்கள் இருந்து விட்டுத் திரும்பும் பொழுது, கணவன் அன்பாக வரவேற்கிறான். தகப்பனாரின் தொண்ணூறாவது வயதுவரை நிலைத்த அத்திருமணத்தைப் பற்றி அவளுடைய மகனுக்குப் பெருமையாக இருக்கிறது. சமூகத் தோற்றங்கள் வாழ்க!
லிடியாவிற்குத் திருமணம் நடந்து விட்டபடியால் சமூகம் அவளை ஏற்றுக் கொண்டது.
வதந்தியை விரும்புபவர், முக்கியமாக அதைப் பரப்புபவர், சமூகத்திற்கோ தங்களது குடும்பத்திற்கோ, ஏன் தங்களுக்கோ ஒரு பொருட்டே அல்ல.
வதந்தியை பரப்புபவர்கள், நல்ல செய்தியை பரப்புவதில்லை.
அப்படி செய்யும்போது அவர்களிடம் எதுவும் விசாலம் அடைவதில்லை.
அங்கு எந்தப் பெண்ணையும் விக்காம் பொருட்படுத்தவில்லை. டார்சிக்கு கெடுதல் செய்வதில்தான் அவனுக்கு ஆர்வம் இருந்தது.

பெண்கள் சுலபமாக அவனது வலையில் விழுந்து விடுவதால் மற்றவர்களைப்போல், அவன் அவர்களால் கவரப்படுவதில்லை. அவன் மற்றவர்களுக்கு பயன்படுபவனாக இருக்கிறான்.

26. “It is excellent news, capital news, about a certain person we all like”.
The intention of the later initiative slips out here.
There is no slip; they are the subconscious infection.
A slip is an overpowering impulse that indicates the real intention.
A slip of life is fatal to the individual or grace.
Mary Thorne’s fortune comes to her by such a slip.
Since 1956, Grace and Supergrace compel Life to slip in favour of Men; Men announce their stout refusal by silent ignorance or loyalty to conventions.
While the Chinese obeyed Mother in the subtle plane, the Indians refused even in the subtle plane.
The alertness of refusal is carried into the subtle plane.
A person’s rasi never fails to reveal in the lives of people who interest them. Clever Men pray to Mother not to reveal it.
Mother answers their prayers, the rasi rises in double measure later.
If instead of praying they try to save their skins, had they prayed to save their victims from their rasi, they would be saved.
If good people take interest in people of wrong rasi for whatever reasons, what they will lose is the higher benefits – Super grace will be reduced to Grace.
One who wants to know his rasi can think of everyone interested in him, more so everyone in whom he is interested. Their life events will nakedly reveal their rasi. We can find in the people of wrong rasi all those they hate will be showered with Grace.
Lydia’s calling him a certain person is an indication of her intention.
News is the vocal excrescence of the instability of the shallow self inside.
People with subtle sense of smell can smell the character of the incoming news.
After Crawly was fully crushed and he resigned, his cause looked up outside without his knowledge. **He sensed it as a slight uplift from depression.**
“இது மிகச் சிறந்த செய்தி, தலைப்புச் செய்தி, நாம் அனைவரும் விரும்பும் ஒருவரைப் பற்றிய செய்தி.”
பின்னால் எடுக்கப்படப் போகும் தன்முனைப்பு இப்பொழுது வெளிப்படுகிறது.
அவை தவறுதலாக வெளிப்படுவதில்லை, அவை ஆழ் மனத்தின் தொற்றுதல்.
உண்மையான நோக்கத்தை சுட்டிக்காட்டும் வெற்றி கொள்ளும் உத்வேகம்தான் அவ்வாறு வெளிப்படுவது.
வாழ்வில் அது போன்ற வெளிப்பாடு ஒருவருக்கு ஆபத்தாகவும் இருக்கலாம், அருளாகவும் இருக்கலாம்.
அது போன்ற வெளிப்பாடு மேரி தார்னுக்கு பேரதிர்ஷ்டமாக வந்தது.
1956-**முதல் அருளும், பேரருளும் மனிதர்களுக்கு ஆதரவாக வெளிப்பட வாழ்க்கையை வற்புறுத்துகின்றன. மௌனமான அறியாமையின் மூலமோ, மரபின் மேலுள்ள பற்றுதலாலோ மனிதர்கள் உறுதியாக அதனை மறுக்கின்றனர்.**
சீனர்கள் சூட்சும நிலையில் அன்னைக்கு கீழ்ப்படிந்தனர், இந்தியர்கள் சூட்சும நிலையில்கூட கீழ்ப்படிய மறுத்தனர்.
மறுப்பின் விழிப்புணர்ச்சி சூட்சும நிலைவரை சென்றது.
ஒரு நபரின் இராசி, அவர் விரும்பும் ஒருவரது வாழ்க்கையில் தவறாது வெளிப்படும். புத்திசாலியான மனிதர்கள் தங்களது இராசி வெளிப்படக் கூடாது என அன்னையிடம் வேண்டுவர்.
அவர்களுடைய பிரார்த்தனைக்கு அன்னை பதிலளிப்பார், பின்னர் இராசி இரு மடங்காக வெளிவரும்.
பிரார்த்தனை செய்வதை விட்டு விட்டு மக்கள் தங்களை காப்பாற்றிக்கொள்ள முயல்கின்றனர், தங்களுடைய இராசியிலிருந்து பாதிக்கப்பட்டவரை காப்பாற்றும்படி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தால், அவர்கள் காப்பாற்றப்பட்டிருப்பர்.
எந்த காரணத்திற்காகவும் நல்ல மனிதர்கள் தவறான இராசி உடையவர்களிடம் அக்கறை கொண்டால், அவர்கள் உயர்ந்த பலன்களை இழப்பர், பேரருள், அருளாக குறைந்து விடும்.
ஒருவருக்கு தன்னுடைய இராசி தெரிய வேண்டுமெனில், அவர் தன்னை விரும்பும் அனைவரையும் நினைத்துப் பார்க்க வேண்டும், அதற்கும் மேலாக தான் விரும்பும் அனைவரையும் நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கை அவர்களுடைய இராசியை அப்பட்டமாக வெளிப்படுத்தும். கெட்ட இராசி உடையவர் வெறுக்கும் அனைவருக்கும் அருள் மழை பொழிவதைப் பார்க்கலாம்.
அவனை குறிப்பிட்ட நபர் என்று லிடியா அழைப்பது அவளுடைய நோக்கத்தை குறிக்கிறது.
பயனற்று வலிமையற்று இருக்கும் நபர் அளவிற்கதிகமாகப் பேசுவதே செய்தியாகும்.
சூட்சுமமாக வாசத்தை உணர்பவர்கள் வரும் செய்தியின் குணத்தை யூகிப்பார்கள்.
கிராலி முழுமையாக நசுக்கப்பட்டு அவர் இராஜினாமா செய்த பிறகு, அவர் அறியாமலேயே அவரது கொள்கை வெளிவந்தது. **மன அழுத்தத்திலிருந்து அது ஒரு சிறிய ஏற்றம் என அவர் உணர்ந்தார்.**

Jane and Elizabeth looked at each other, and the waiter was told that he need not stay. Lydia laughed, and said -- "Ay, that is just like your formality and discretion. You thought the waiter must not hear, as if he cared! I dare say he often hears worse things said than I am going to say. But he is an ugly fellow! I am glad he is gone. I never saw such a long chin in my life. Well, but now for my news; it is about dear Wickham; too good for the waiter, is not it? There is no danger of Wickham's marrying Mary King. There's for you! She is gone down to her uncle at Liverpool: gone to stay. Wickham is safe."

ஜேனும், எலிசபெத்தும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர், விடுதி பணியாளரை அங்கிருந்து விலகக் கூறினர். லிடியா சிரித்துக் கொண்டே "ஏய், நீங்கள் முன்ஜாக்கிரதையாகவும் முறைப்படியும் நடந்து கொள்கிறீர்கள். அந்தப் பணியாளர் நாம் பேசுவதைக் கேட்கக் கூடாது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அவனுக்கு இதில் என்ன அக்கறை இருக்கப் போகிறது! இப்பொழுது நான் சொல்லப் போவதை விட மிக மோசமான செய்திகளை அவன் கேட்டிருப்பான். பார்ப்பதற்கே மிகவும் அசிங்கமாக இருக்கிறான்! அவன் போனது எனக்கு சந்தோஷம்தான். இவ்வளவு நீண்ட தாடையை நான் எனது வாழ்க்கையில் பார்த்ததேயில்லை. சரி, இப்பொழுது செய்திக்கு வருவோம். இது அருமை விக்காமைப் பற்றியது. அந்தப் பணியாளருக்கு இது ஒரு தேவையில்லாத செய்தி, இல்லையா? மேரி கிங்-ஐ விக்காம் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை. இதுதான் விஷயம்! லிவர்பூலில் இருக்கும் தனது மாமாவின் வீட்டிற்குச் சென்றிருக்கிறாள். விக்காம் தப்பித்தான்".

27. It is significant that Lydia takes up Wickham after Elizabeth dropped him.
    எலிசபெத் விக்காமை விட்டு விலகியவுடன் லிடியா அவனை ஏற்றுக்கொள்வது குறிப்பிடத்தக்கது.
28. At the first meeting it was Lydia and Elizabeth who met him.
    முதல் சந்திப்பில் அவனை சந்தித்தது லிடியாவும் எலிசபெத்தும்தான்.
29. Charlotte was the one missing when all the four men met the ladies on the road. She was the first to be married.
    நான்கு ஆண்களும் பெண்மணிகளை தெருவில் சந்தித்த போது ஷார்லெட் மட்டும்தான் அங்கிருக்கவில்லை. அவளுக்குத்தான் முதலில் திருமணம் நடந்தது.
30. Elizabeth took silent initiative to make Wickham talk.
    விக்காமை பேச வைக்க எலிசபெத் மௌனமாக தன்முனைப்பு எடுத்தாள்.
31. The only one who had the energy for initiative other than Lizzy was Lydia. So she eloped with him.
    எலிசபெத்தைத் தவிர தன்முனைப்பு எடுக்க லிடியாவுக்கு மட்டும்தான் தெம்பு இருந்தது. அதனால் அவள் அவனுடன் ஓடிப்போனாள்
32. Wickham silently developed a sense of revenge the moment he was exposed by Darcy.
    டார்சி மூலம் விக்காம் வெளிப்பட்டவுடன் அவன் மௌனமாக பழி வாங்கும் உணர்வை வளர்த்துக் கொண்டான்.
33. Note the name Wickham is too much on her tongue.
    விக்காமின் பெயர் எப்பொழுதும் அவள் மனதில் இருந்தது.
34. It is best we see all the characters, all the events as ONE single movement of varying intensities even opposing forces, but the whole is an indivisible ONE.
    எல்லாக் கதாபாத்திரங்களையும், எல்லா நிகழ்ச்சிகளையும் பலதரப்பட்ட தீவிரம் கொண்ட ஒரு தனி இயக்கமாகவும், ஒன்றை ஒன்று எதிர்க்கும் சக்திகளாகவும் பார்ப்பது மிகவும் சிறந்தது. ஆனால் அவை முழுவதும் பிரிக்க முடியாத ஒன்றே ஆகும்.
35. Elizabeth dropped Wickham from her thoughts, his opportunity of Miss King is lost.
    எலிசபெத் தன் எண்ணங்களில் இருந்து விக்காமை நீக்கினாள். மிஸ் கிங் மேல் அவனுக்கு இருந்த வாய்ப்பு பறிபோனது
36. Mother says our interest in others, even in our enemies, expands their lives and opportunities in it.
    மற்றவர்கள் மேல் நமக்கு உள்ள ஆர்வம் அவர்கள் நம் விரோதிகளாக இருந்தாலும்கூட, அவர்களது வாழ்க்கையையும் அதில் உள்ள வாய்ப்புகளையும் அது விரிவுபடுத்தும்.
37. Lydia laughs at the formality of the elder sisters in asking the waiter to go, a subtle hint of life of what Lydia was going to do with the news she has brought.
    மூத்த சகோதரிகள் வேலையாளை போகச் சொன்ன சம்பிரதாயமான செயலைக் கண்டு லிடியா சிரித்தாள். அது அவள் கொண்டு வந்த செய்தியைப் பற்றி அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதற்கான வாழ்க்கையின் சூட்சுமமான குறிப்பாகும்.
38. Lydia calls him 'dear Wickham', the first such mention of his name in the story. Is this the only time dear is used in mentioned his name?
    லிடியா 'அன்புக்குரிய விக்காம்' என்று கூப்பிடுவது, முதல் முறையாக இவ்வாறு அவன் பெயர் கதையில் வருகிறது. அவன் பெயருடன் 'அன்புக்குரிய' என்று குறிப்பிடுவது இந்த ஒரு முறை மட்டும்தானா?
39. "My news is about dear Wickham".
    No one else had ever used dear in reference to Wickham.

It is a clear message, no mere slip.
An act that precipitates now starts showing earlier.
Its subtle symptoms reveal.
The subconscious peeps out in the subtle.
The domain of the physical is severely limited, that of the vital goes beyond.
The Mind can project itself far into the future or past.
The spirit is all pervasive.
The subtle suffuses the gross material physical.
The causal is all pervasive.
The reach of the subconscious is endless below consciousness.
That of the subliminal is universal.
That Lydia has ideas of marrying Wickham is seen in her 'dear Wickham'.
Lydia's insistence that she should marry first has with the backing of her mother's overpowering capacity to put off Jane's proposal.
Charlotte's goodwill helps the marriages of Jane and Elizabeth.
Therefore she was first married.
Mrs. Bennet's force on behalf of Lydia was greater.
Lydia's interference of the reading was a rude refusal of Collins who readily landed on Charlotte.
Lydia was anxious to secure Collins or Wickham at Philips'.
She gave up Collins in the reading, Wickham at Philips'.
As soon as Bingley took to Jane, Lydia forgot him.
Darcy was the one she never considered as a husband.
Lydia was insistent, her mother backed her fully.
Charlotte had the strength of good will.
Jane responded to Bingley and relied on his liking.
Darcy was vacillating between attraction and repulsion.
Arrival of Collins made Darcy urgent.
Arrival of Wickham made it more powerful.
"என்னுடைய செய்தி அன்புக்குரிய விக்காமைப் பற்றியது."
விக்காமை இதுவரை வேறு எவரும் அன்புக்குரிய என்று குறிப்பிட்டதில்லை.
அது ஒரு தெளிவான செய்தி, தவறாகக் குறிப்பிடப்படவில்லை.
இப்பொழுது முடிவுக்கு வரும் செயல் முன்னமே வெளிப்பட ஆரம்பித்துவிடுகிறது.
அதனுடைய சூட்சுமமான அறிகுறிகள் வெளிப்படுகின்றன.
ஆழ்மனம் சூட்சுமத்தில் வெளிவருகிறது.
ஜடத்தின் அதிகாரம் மிகவும் அளவிற்குட்பட்டதாக உள்ளது, உணர்வின் அதிகாரம் மேலும் பரந்து விரிகிறது.
எதிர்காலம் அல்லது கடந்த காலத்தைப் பார்க்கும் திறனுடையது மனம்.
ஆன்மா எங்கும் பரவும் தன்மையுடையது.
சூட்சுமம் ஸ்தூலமான பொருளை ஜடத்தில் பரப்புகிறது.
காரண உலகம் எங்கும் பரவும் தன்மையுடையது.
ஜீவியத்தின் கீழே ஆழ்மனம் செல்லும் தூரம் முடிவற்றது.
அடிமனம் உலகளாவியது.
விக்காமை திருமணம் செய்துகொள்ளும் எண்ணம் லிடியாவிற்கு இருப்பது அவள் 'அன்புக்குரிய விக்காம்' என்று கூறுவதில் தெரிகிறது.
ஜேனுடைய திருமணப் பேச்சைத் தள்ளிப் போடும் அளவிற்கு, அளவுக்கதிகமான சக்தியுடைய அவளுடைய தாயாரின் ஆதரவு இருப்பதால், தனக்கு முதலில் திருமணம் நடக்க வேண்டும் என்ற லிடியாவின் வற்புறுத்தல் இருக்கிறது.
ஷார்லெட்டின் நல்லெண்ணம், ஜேன், எலிசபெத் திருமணம் நடக்க உதவுகிறது.
அதனால் அவளுக்கு முதலில் திருமணம் நடக்கிறது.
லிடியாவின் சார்பில் இருக்கும் திருமதி பென்னட்டின் சக்தி அதிகமாக இருக்கிறது.
காலின்ஸ் படிக்கும் பொழுது லிடியா குறுக்கிட்டது அவனை கடுமையாக மறுப்பது போலாகிறது, அவன் உடனடியாக ஷார்லெட்டை அடைகிறான்.
பிலிப்ஸின் இல்லத்தில் காலின்ஸையோ, விக்காமையோ அடைவதற்கு லிடியா ஆர்வமாக இருந்தாள்.
காலின்ஸ் படிக்கும்பொழுது அவனை விலக்கினாள், பிலிப்ஸின் இல்லத்தில் விக்காமை விலக்கினாள்.
பிங்கிலி ஜேனிடம் அக்கறை காண்பிக்க ஆரம்பித்த உடனேயே, லிடியா அவனை மறந்து விட்டாள்.
டார்சியை மட்டும்தான் அவள் தன் கணவனாக பாவிக்கவில்லை.
லிடியா வற்புறுத்திய வண்ணம் இருந்தாள், அவளுடைய தாயார் அவளுக்கு உறுதுணையாக இருந்தாள்.

நல்லெண்ணத்தின் வலிமை ஷார்லெட்டிடம் இருந்தது.
ஜேன் பிங்கிலியின் கவனத்திற்கு மறுமொழி அளித்தாள், அவனது விருப்பத்தில் நம்பிக்கை கொண்டாள்.
விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையே டார்சி ஊசலாடிக் கொண்டிருந்தான்.
காலின்ஸின் வருகை டார்சியை துரிதப்படுத்தியது.
விக்காமின் வருகை அதை மேலும் பலப்படுத்தியது.

40. "There is no danger in Miss King marrying Wickham".
A danger, if not dissolved, shifts its venue.
The danger to Miss King shifted to Mrs. Bennet's family.
It was originally a danger to Elizabeth.
More fundamentally, it was the danger to Darcy from Wickham, from falsehood to Truth.
When Darcy recognized its significance to him and rose to the occasion and paid for it, absorbing Lydia and Wickham into his extended family, the danger was fully resolved. Had he not transformed himself psychologically, but only went through the outer motions, it would have resurfaced.
To Lydia the danger was to Wickham.
To Elizabeth the danger was to Miss King.
Really the danger was from falsehood to Truth.
Danger is the adventure in smaller circumstances.
Expand the existing atmosphere to enjoy danger and danger will pass away.
Today in the changed social atmosphere her elopement would be a routine work.
Our environment can expand so elastically that the present pollution will not be pollution but a flowering of Nature.
Copernicus was jailed for his discovery. Today he will be celebrated.
The present economic crisis will be seen as a boom if the management of Money is differently organized with Man as the centre.
Had the Roman Empire raised public finance, it would have lasted forever.
When the sensitivities are refined as well as expanded, today's cruelties become no cruelties or even enjoyable events.
For the crisis to go, the economic view has to change.
For pollution to disappear, the view of matter has to change.
Man ceasing to be selfish, most of the present problems will vanish.
If Nature can respond positively to every touch, there will be no pollution.
Man not seeking upward movement will wipe out many difficulties.
"மிஸ் கிங் விக்காமை திருமணம் செய்துகொள்வதில் எந்த ஆபத்தும் இல்லை."
ஆபத்து, கரைக்கப்படாவிட்டால் இடத்தை மாற்றும்.
மிஸ் கிங்கிற்கு வர வேண்டிய ஆபத்து திருமதி பென்னட்டின் குடும்பத்திற்கு மாறியது.
ஆரம்பத்தில் அது எலிசபெத்திற்கு வர வேண்டிய ஆபத்தாகும்.
அடிப்படையில் அது விக்காமிடமிருந்து டார்சிக்கு வர வேண்டிய ஆபத்து, பொய்மையிடமிருந்து சத்தியத்திற்கு.
டார்சி, அவனுக்கான அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் செயல்பட்டு, அதன் பலனை அனுபவித்தான். லிடியாவையும், விக்காமையும் தன்னுடைய கூட்டுக் குடும்பத்தில் சேர்த்துக் கொண்டு ஆபத்தை முழுவதுமாக தீர்த்து வைத்தான். மனரீதியாக திருவுருமாறாமல், புற உணர்ச்சிகளால் அதனை எதிர்கொண்டிருந்தால், அது மீண்டும் வெளி வந்திருக்கும்.
லிடியாவைப் பொறுத்தவரையில் ஆபத்து விக்காமிற்கு.
எலிசபெத்தைப் பொறுத்தவரையில் ஆபத்து மிஸ் கிங்கிற்கு.
உண்மையில் ஆபத்து, பொய்மையிடமிருந்து, சத்தியத்திற்கு.
சிறிய சந்தர்ப்பங்களில் துணிச்சலாக செயல்படுவதே ஆபத்தாகும்.
ஆபத்தை அனுபவிப்பதற்கு ஏற்றபடி இருக்கும் சூழலை விரிவுபடுத்தினால் ஆபத்து விலகி விடும்.
மாறிய இன்றைய சூழலில் அவள் ஓடிப்போனது வழக்கமாக நடக்கக்கூடிய சாதாரண விஷயம்தான்.
நமது சுற்றுப்புறச் சூழல் விரிவடையும் தன்மையுடையது, தற்பொழுது இருக்கும் மாசு, மாசற்றதாக மாறும், மலரும் இயற்கையாக மாறும்.
கோபர்னிகஸ் அவருடைய கண்டுபிடிப்புக்காக சிறையிலடைக்கப்பட்டார். இன்று அவரை கொண்டாடுகிறோம்.
மனிதனை மையமாக வைத்து பணத்தின் மேலாண்மையை மாற்றி அமைத்தால், தற்பொழுது இருக்கும் பொருளாதார நெருக்கடி பெரும் தொழில் மலர்ச்சியாக மாறும்.
ரோமானிய பேரரசு பொது நிதி திரட்டியிருந்தால், அது என்றென்றும் நின்று நிலைத்திருக்கும்.
உணர்வுகளைப் பண்படுத்தி, விரிவுபடுத்தியிருந்தால், இன்றைய கொடுமைகள் கொடுமைகளாக இருக்காது, சந்தோஷமாக அனுபவிக்கப்படும் நிகழ்ச்சிகளாக மாறும்.
நெருக்கடி தீர வேண்டும் என்றால், பொருளாதார கண்ணோட்டம் மாற வேண்டும்.

மாசு நீங்க வேண்டுமென்றால் ஜடத்தின் பார்வை மாற வேண்டும்.
மனிதன் சுயநலத்தை கை விட்டால் தற்பொழுது இருக்கும் பல பிரச்சினைகள் மறைந்து விடும்.
ஒவ்வொரு தீண்டலுக்கும் இயற்கை நேர்மறையாக மறுமொழி கொடுக்குமானால் மாசு என்பதே இருக்காது.
மேல் நோக்கிப் போகும் இயக்கத்தை மனிதன் நாடாவிட்டால் பல கஷ்டங்களை நீக்கி விடுவான்.

41. "Wickham is safe" – Lydia.
Safety is the next goal to survival.
Physical safety is primary.
Social safety is next.
Psychological safety comes next.
Spiritual safety is the last.
In the name of spiritual safety, religions wage war endangering physical safety.
Wickham's safety is in Lydia's Mind.
Is Wickham safe with Lydia?
With whom can Wickham be safe?
What is safety for Man which will ensure all the conceivable forms of it?
One rule generally valid is the higher one, when it does not consciously exclude the lower, includes all the lower safeties.
Integral yoga says not to exclude what is exceeded.
The Sannyasi shuns life; the yogi makes life his yoga.
Lydia cannot offer any safety to Wickham.
Wickham will lose Lydia if he is not maintaining his charm by his own attentions as well as raising the quality of his charm.
Life is not sustained by charm, it is sustained by duties.
Duties becoming a charm to Man makes life yoga.
One can make life charming to him by a higher attitude to it.
Can one retain his charm for another like Lydia for long, forever?
That effort may make integral yoga easy.
To continuously captivate degenerating energy in the net of charm he must be constantly rising in his own scale of charm.
A mother or anyone who raises a child rising to the child's expectation will gain the knowledge of a lifetime in one year.
A growing child's expectations of engagement, entertainment, education quickly reaches the end of the world, exhausts one's resources in a few hours.
Yoga is to grow like a growing child.
"விக்காமிற்கு ஆபத்தில்லை".—லிடியா
உயிர்வாழ பாதுகாப்பே அடுத்த குறிக்கோள் ஆகும்.
அடிப்படையானது உடலின் பாதுகாப்பு.
சமூக பாதுகாப்பு அடுத்தது.
மன பாதுகாப்பு அடுத்து வருகிறது.
ஆன்மீகப் பாதுகாப்பு இறுதியானது.
ஆன்மீகப் பாதுகாப்பு என்ற பெயரில் மதங்கள் மக்களின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் போரிடுகின்றன.
விக்காமுடைய பாதுகாப்பு லிடியாவின் மனதில் உள்ளது.
விக்காம் லிடியாவுடன் பாதுகாப்பாக இருப்பானா?
யாருடன் விக்காம் பாதுகாப்பாக இருக்க முடியும்?
எண்ணிப் பார்க்கக்கூடிய விஷயங்கள் எல்லாவற்றுக்கும் உத்திரவாதம் அளிக்கும் எது மனிதனுக்கு பாதுகாப்பு?
தாழ்ந்ததை தன்னை அறிந்து விலக்காமல் தாழ்ந்த பாதுகாப்புகள் அனைத்தையும் உள்ளடக்கிய உயர்ந்த ஒன்று, பொதுவாக செல்லுபடியாகும் ஒரு சட்டமாகும்.
எது தாண்டிச் சென்று விட்டதோ அதனை விலக்க வேண்டாம் என்கிறது பூரண யோகம்.
சந்நியாசி வாழ்க்கையை விலக்குகிறான், யோகி தன்னுடைய வாழ்க்கையை யோகமாக்குகிறான்.
விக்காமிற்கு லிடியா எந்த பாதுகாப்பையும் தர முடியாது.
விக்காம் அவனுடைய கவனத்தால் அவனுடைய கவர்ச்சியை தக்கவைத்துக் கொண்டு, அதனுடைய தரத்தையும் உயர்த்தினால் மட்டுமே லிடியாவை இழக்காமல் இருப்பான்.
வசீகரத்தால் வாழ்க்கை நீடித்து நிற்காது, கடமைகளால் நீடித்து நிற்கும்.
கடமைகள் மனிதனுக்கு வசீகரமாக மாறுகிறது, வாழ்க்கையை யோகமாக மாற்றுகிறது.

உயர்ந்த மனப்பான்மை மூலம் ஒருவர் வாழ்க்கையை தனக்குச் சுவையாக மாற்றிக் கொள்ளலாம்.
ஒருவரால் லிடியாவைப் போலுள்ள மற்றவருக்காக நீண்ட நாட்களுக்காகவோ, நிரந்தரமாகவோ தனது கவர்ச்சியை தக்க வைத்துக்கொள்ள முடியுமா?
அந்த முயற்சி பூரண யோகத்தை சுலபமாக்கும்.
வசீகரத்தின் சக்தி சிதைந்து போகாமல் இருக்க தொடர்ந்து அவன் தனது கவர்ச்சியின் அளவை அதிகரித்துக் கொண்டிருக்க வேண்டும்.
ஒரு தாயாரோ அல்லது வேறு எவரோ ஒரு குழந்தையை அதனுடைய எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறு வளர்த்தால், வாழ்நாள் அனுபவத்தை ஒரே வருடத்தில் கிடைக்கப் பெறுவர்.
வளரும் குழந்தையின் ஈடுபாடுகள், கேளிக்கைகள், கல்வி இவைகளின் எதிர்பார்ப்புகள் விரைவில் பூர்த்தி அடைந்து விடுவதால், ஒருவரது வளங்களை சில மணி நேரங்களில் தீர்த்து விடும்.
வளரும் குழந்தையைப் போல் வளர்வது யோகம்.

"*And Mary King is safe!" Added Elizabeth; "safe from a connexion imprudent as to fortune."*
“சொத்துக்காக அலைந்த ஒரு விவேகமற்ற தொடர்பிலிருந்து மேரி கிங் தப்பித்தாள்” என்று எலிசபெத் கூறுகிறாள்.

42. ‘Wickham is safe”, ‘Miss King is safe’ show the change of Elizabeth’s attitude.
‘விக்காமிற்கு ஆபத்தில்லை’ ‘மிஸ் கிங்கிற்கும் ஆபத்தில்லை’, இவை எலிசபெத்தின் மாறிய கண்ணோட்டத்தைக் காட்டுகிறது.
43. “Mary King is safe from a connection imprudent as to fortune”.
Elizabeth’s condemnation of Wickham is mild.
One who marries Wickham will readily lose her fortune.
He is not sure to remain with her.
Beyond the safety of fortune and the loyalty, Elizabeth does have the knowledge that to live with Wickham is a psychological suffocation.
She felt that violently when Charlotte accepted Collins.
The suffering with Collins is more social and less psychological.
The suffocation to be a wife of Wickham is more spiritual and more psychological than social.
Once exposed, to live with Wickham is a criminal shame, not a social shame.
She knows Wickham if anyone knows.
It is a wonder she brings herself to condemn him with financial imprudence.
It is an unpardonable criminal understatement.
The lingering charm she feels for Wickham overlooks, ignores his ruinous propensities.
Suppose she is an independent girl enjoying social impunity, she would seriously consider marrying him. Should she refuse, it may be for his lack of fortune, not for his malice or scandalous falsehood.
In later life should he again be trapped in a great scandal, **her first impulse would be to do everything in her power to save him.**
Lady Laura felt towards Phineas Finn like that.
In a woman, her sense of loyalty serves her selfish falsehood in this fashion.
Man or woman, what emerges like this is character, not even selfishness.
Character is more deeply ingrained as fixed propensities than selfishness which is an attitude that can with determination be changed or mitigated.
Man acting like this loses any self-respect he has.
“சொத்துக்காக அலைந்த ஒரு விவேகமற்ற தொடர்பிலிருந்து மிஸ் கிங் தப்பித்தாள்.”
விக்காமை எலிசபெத் லேசாக கண்டனம் செய்தாள்.
விக்காமை திருமணம் செய்துகொள்பவள் உடனடியாக அவளுடைய செல்வத்தை இழப்பாள்.
அவன் அவளுடன் சேர்ந்து இருப்பான் என்பது நிச்சயம் கிடையாது.
சொத்து மற்றும் விசுவாசத்தின் பாதுகாப்புக்கு மேலாக, எலிசபெத்திற்கு வாழ்வதற்குத் தேவையான அறிவு இருக்கிறது.
விக்காம் ஒரு மனரீதியான அவஸ்தை.
ஷார்லெட் காலின்ஸை ஏற்றுக்கொண்ட போது, அவள் அதனை தீவிரமாக உணர்ந்தாள்.
காலின்ஸுடன் இருக்கும் கஷ்டம் மனரீதியானதை விட, சமூகரீதியானது.
விக்காமுக்கு மனைவியாக இருக்கும் அவஸ்தை சமூகரீதியாக இருப்பதைவிட, ஆன்மீகம் மற்றும் மனரீதியானது.
ஒரு முறை வெளிப்படுத்தப்பட்டால் விக்காமுடன் வாழ்வது சமூக அவமானம் அல்ல, குற்றம் புரிந்தது போன்ற அவமானம்.
யாருக்காவது விக்காமை புரிந்தால், அவளுக்கும் அவனைப் புரியும்.

பொருளாதார விஷயத்தில் அவனுடைய அறிவில்லாத்தனத்தை அவள் கண்டிப்பது ஆச்சரியத்திற்குரியது.
இவ்வாறு குறைத்துக் கூறுவது மன்னிக்கமுடியாதது, குற்றமுமாகும்.
அவளுக்கு இன்னமும் விக்காம் மேல் இருக்கும் கவர்ச்சி, தீங்கிழைக்கும் அவனுடைய மனப்பாங்கினை பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை, அதனைப் புறக்கணிக்கிறது.
சமூகப் பயம் எதுவுமின்றி அவள் ஒருவேளை சுதந்திரமான பெண்ணாக இருந்திருந்தால், அவனைத் திருமணம் செய்துகொள்வதைப் பற்றி தீவிரமாக யோசித்திருப்பாள். அவள் நிராகரிக்க வேண்டும் எனில் அது அவனிடம் சொத்து இல்லை என்பதற்காகத்தான் இருந்திருக்குமே தவிர, அவனுடைய கெட்ட எண்ணத்திற்காகவோ அல்லது மோசமான பொய்மைக்காகவோ இருந்திருக்காது.
பின்னால் வாழ்க்கையில் அவன் பெரிய அவதூறில் மாட்டிக் கொண்டால், அவனை எப்படியாவது காப்பாற்ற தன்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்கிற உந்துதல்தான் முதலில் அவளுக்கு எழும்.
லேடி லாரா, Phineas Finn டம் இவ்வாறுதான் உணர்ந்தாள்.
ஒரு பெண்மணியின் விசுவாசம் அவளுடைய சுயநலமான பொய்மைக்கு இவ்வாறு சேவை செய்கிறது.
ஆணோ, பெண்ணோ, இவ்வாறு வெளிப்படுவது குணாதிசயமே தவிர, சுயநலம் கூட அல்ல.
சுயநலத்தைவிட குணாதிசயம் நிலையான மனோபாவமாக ஆழமாக பதிந்துள்ளது. திடமான நோக்கம் இருந்தால் அந்த மனோபாவத்தை மாற்றி விடலாம், குறைத்தும் விடலாம்.
மனிதன் இவ்வாறு செயல்படும்போது, அவனிடம் உள்ள சுய மரியாதையை இழக்கிறான்.

"*She is a great fool for going away, if she liked him.*"
“அவள் அவனை விரும்பினாள் என்றால், அவனை விட்டு சென்றது பெரிய முட்டாள்தனம்.”

44. “She is a great fool for going away, if she liked him”.
One views another from her point of view.
Lydia thinks she can desist from going to Gretna Green if she chooses.
Lydia thinks she can do anything she wants.
She is brought up with that idea of freedom.
Freedom lies in the feeling of it rather than its availability.
A lady behaves likes a lady when she is treated by all as a lady.
How a child grows up depends on the way she is treated by others.
A student develops his character or individuality by the way the school treats him, not by the way he feels.
The outside society determines largely, not entirely.
Indian children are told what to do.
American children are to decide themselves what to think, what to do.
One creates obedience, the other independence.
Independence is the foundation for Individuality, not individuality itself.
Society that compels obedience in the beginning later encourages Man to represent it.
At the further stage which is the final stage, society expects Man, the Individual, to lead the society.
At this stage human society becomes universal life.
The unknowable that descended into the universe and Man fulfils itself when Man, the Individual, rises to universality and further rises to transcendentality, **having his centre all over existence.**
Life then becomes a centreless circumference, rather a circle, all centres having the same circumference.
It is akin to a democracy where every Individual is as valuable as the head of the nation. It is a body of all heads.
Integration is not only a concept where each is related to every other but each is as important as the whole and each is a whole in every sense of the word defying our sense of dimensions.
It is a Being choosing its own evolution for its own delight.
“அவள் அவனை விரும்பியிருந்தால், அவனை விட்டுச் சென்றது பெரிய முட்டாள்தனம்”.
ஒருவர் மற்றவரை தன்னுடைய கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர்.
தான் விரும்பினால் கிரேட்னா கிரீன் செல்வதை தவிர்த்து விடலாம் என்று லிடியா நினைக்கிறாள்.
தான் நினைப்பதையெல்லாம் செய்ய முடியும் என்று லிடியா நினைக்கிறாள்.
அந்த சுதந்திரமான எண்ணத்தோடு அவள் வளர்க்கப்பட்டாள்.
சுதந்திரம் இருப்பதைவிட, சுதந்திர உணர்வில்தான் சுதந்திரம் கிடைக்கும்.
ஒரு பெண்மணியை, பெண்மணியாக அனைவரும் நடத்தினால் அவள் பெண்மணியாக நடந்து கொள்வாள்.
ஒரு குழந்தை வளர்வது, அக்குழந்தையை எல்லோரும் எவ்வாறு நடத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து இருக்கிறது.
ஒரு மாணவனை பள்ளிக்கூடம் நடத்துவதைப் பொறுத்து அவனுடைய குணமோ அல்லது தனித்தன்மையோ உருவாகும், அவன் எவ்வாறு நினைக்கிறான் என்பதைப் பொறுத்ததல்ல.
முழுவதுமாக இல்லாவிட்டாலும் வெளியிலுள்ள சமூகம்தான் பெரும்பாலும் நிர்ணயிக்கிறது.
என்ன செய்ய வேண்டும் என்று இந்தியக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

அமெரிக்க குழந்தைகள் என்ன நினைக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும், என்பதை தாங்களாகவே தீர்மானிக்க வேண்டும்.
ஒன்று அடிபணிதலை உருவாக்குகிறது, மற்றொன்று சுதந்திரம் அளிக்கிறது.
சுதந்திரம்தான் தனித்தன்மைக்கு அடித்தளமாக இருக்கிறதே தவிர, தனித்தன்மை அல்ல.
ஆரம்பத்தில் பணிதலை வற்புறுத்தும் சமூகம், பின்னால் மனிதனை அதற்கு பிரதிநிதியாக இருக்க உற்சாகமளிக்கிறது.
இறுதி நிலையான, அடுத்தகட்ட நிலையில், தனி மனிதன் சமூகத்தை வழி நடத்திச் செல்ல வேண்டும் என சமூகம் எதிர்பார்க்கிறது.
இந்த நிலையில், மனித சமுதாயம் பிரபஞ்ச வாழ்வாக மாறுகிறது.
பூமியில் எல்லா இடங்களிலும் தன்னுடைய மையத்தை அமைத்துக் கொண்டு **மனிதன் பிரபஞ்சமாகி பிரம்மமாகும் போது,** பிரபஞ்சத்திலும், மனிதனிலும் இறங்கிய பிரம்மம் தன்னை பூர்த்தி செய்துகொள்கிறது.
பிறகு வாழ்க்கையில் எல்லாமும், எல்லோருமே முக்கியம்தான். ஒரு மையத்தை சார்ந்து எல்லாமும் இருப்பதில்லை.
மக்களாட்சியில் ஒவ்வொரு தனி மனிதனும் நாட்டின் தலைவரைப்போல் முக்கியமாக இருப்பது போன்றது இது. எல்லா தலைவர்களும் சேர்ந்த ஒரு அமைப்பு அது.
ஒவ்வொன்றும் மற்ற ஒவ்வொன்றுடன் சம்பந்தப்பட்டது என்பது மட்டும் ஒருமைப்பாடு கிடையாது, பரிமாணங்களின் நம்முடைய அறிவையும் மீறி முழுமை எவ்வளவு முக்கியமோ அதே அளவு ஒவ்வொரு பகுதியும் முக்கியமானது. ஒவ்வொன்றும் முழுமைதான்.
சத் தன்னுடைய சுய சந்தோஷத்திற்காக, சுய பரிணாமத்தை தேர்ந்தெடுக்கிறது.

"*But I hope there is no strong attachment on either side,*" *said Jane.*
“இருவருக்குமே பெரிய ஈடுபாடு இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன்,” என்றாள் ஜேன்.

45. “There is no strong attachment on either side”.
Strong attachment from either side is not a necessary element for marriage.
Attachment leads to marriage is a partial truth.
There can be marriage without attachment from one side.
Elizabeth was not attached to Darcy at all, leave alone strong attachment.
Many things lead to marriage of which attachment is one.
Attachment is one possible component of a process that can lead to marriage.
Once the marriage is over the plane of existence changes to society.
Till then it is in the realm of probabilities.
The several components are need, energy, attitude, motive, context, strength, character, manners, behaviour, chance and every possible social endowment.
A marriage takes place if the traits coming together gather enough momentum for marriage.
Of these many strands, attachment from either side is the attitude based on either emotions or need.
This is not only true of marriage, but true of any final decision regarding a lasting work to be done.
Such a decision is a landmark and watershed between a long preparation and a lasting long work.
Both are of vastly differing character often having no resemblance.
An exact analogy will be the college degree leading to an employment.
It is true one leads to the other without having any apparent relationship.
One certainly cannot be evaluated in terms of the other.
It is much more so in politics, the preparation and performance.
Accomplishment is apparently an amorphous whole bearing no resemblance to its components.
It is like a chemical reaction in which the final precipitate is vastly different from the initial inputs.
It is so because the preparation and the outcome both belong to a wider whole process that includes both. Hence the perplexity.
Comprehensive Theory catches the part as well as the whole along with the process.
“இரண்டு பக்கங்களிலிருந்தும் பலமான அன்பு எதுவுமில்லை”.
இரண்டு பக்கங்களிலிருந்தும் பலமான அன்பு திருமணத்திற்கு அவசியம் இல்லை.
அன்பு திருமணத்தில் முடியும் என்பது பகுதியான உண்மை.
ஒரு பக்கத்திலிருந்து அன்பு இல்லாவிட்டாலும் திருமணம் நடக்கலாம்.
எலிசபெத்திற்கு டார்சியிடம் அன்பு என்பதே இல்லை, வலிமையான அன்பு என்பதைப் பற்றி பேச்சே இல்லை.
திருமணம் நடப்பதற்கு பல காரணங்கள் உள்ளன, அதில் ஒன்றுதான் அன்பு.
திருமணம் நடக்க ஒரு சாத்தியமான அம்சம்தான் அன்பு.
திருமணம் நடந்து முடிந்த பிறகு, இருக்கும் இடத்தின் நிலை சமூகத்திற்கு மாறிவிடுகிறது.
அதுவரை அது நடைபெறக்கூடியதாகவே உள்ளது.

தேவை சக்தி, மனோபாவம், நோக்கம், விஷயம், பலம், குணம், பழக்க வழக்கங்கள், நடத்தை, சந்தர்ப்பம், மற்றும் அனைத்து சமூக பெருமைகளும் பல அங்கங்களாகும்.
பல தன்மைகள் ஒன்று சேர்ந்து திருமணத்திற்கு வேண்டிய வேகத்தை அளிக்கும்பொழுது திருமணம் நடக்கிறது.
இவற்றில் உணர்ச்சிகள் அல்லது தேவையின் அடிப்படையில் ஏற்படும் மனோபாவமே, இரண்டு பக்கங்களிலிருந்து எழும் அன்பாகும்.
இது திருமணத்திற்கு மட்டும் உண்மையல்ல, நீண்ட நாள் நிலைத்து நிற்கப்போகும் வேலைக்கான இறுதி முடிவுக்கும் இது உண்மை.
நீண்ட முன்னேற்பாட்டிற்கும் நீடித்து நிற்கும் பெரிய வேலைக்கும் இடையே, இது போன்ற தீர்மானம் ஒரு அடையாளமாகவும் திருப்பு முனையாகவும் இருக்கும்.
இரண்டுமே மிகவும் வித்தியாசமான குணங்கள் உடையவை, பெரும்பாலும் ஒன்று போல் ஒன்றிருக்காது.
சரியான உதாரணம், கல்லூரி பட்டம் வேலை வாங்கித் தருவது போலாகும்.
வெளிப்படையான தொடர்பு ஏதுமின்றி ஒன்று மற்றொன்றுக்கு அழைத்துச் செல்லும் என்பது உண்மை.
ஒன்றை மற்றொன்றை வைத்து கணிக்க முடியாது.
அரசியலில் ஏற்பாடுகளிலும், செயலாக்கத்திலும் இது அதிகமாக இருக்கும்.
சாதனை வெளிப்படையாக ஒரு உருவமற்ற முழுமையாகும், அதனுடைய அம்சங்களின் சாயலே அதில் இருக்காது.
இரசாயன மாற்றங்களில், இறுதியாக வெளிவருவது ஆரம்ப நிலைக்கு முற்றிலும் மாறுபட்டு இருப்பதுபோல்.
முன்னேற்பாடு, விளைவு இவை இரண்டும் அகண்ட முழுமையான முறையைச் சேர்ந்ததால் இது இவ்வாறு இருக்கிறது. எனவேதான் இந்த குழப்பம்.
விரிவான தத்துவம் செய்முறையுடன் பகுதி முழுமை இரண்டையும் விளக்குகிறது.

"*I am sure there is not on his. I will answer for it, he never cared three straws about her -- who could about such a nasty little freckled thing?"*
"அவன் பக்கத்திலிருந்து ஈடுபாடு இல்லை என்று எனக்கு நன்கு தெரியும். நான் சொல்கிறேன், அவன் அவளை துரும்புபோல் கூட மதிக்கவில்லை. யார்தான் பார்ப்பதற்கு இவ்வளவு மோசமாக இருக்கும் ஒரு பெண்ணை விரும்புவர்?"

46. "He never cared three straws about her".
Wishing one well does not imply wishing ill of another.
Lack of regard for Miss King is not regard for Lydia which she implies.
Lydia seeks him who had already deserted Elizabeth and Miss King.
Man trusting the one who has betrayed him constantly is a wonder.
The vital that relies on another is incapable of seeing the betrayal.
It is one thing that Man sees and feels helpless otherwise.
The truth is he does not see at all that he is betrayed.
It is a state of consciousness where one sees what he wants to see.
A great wonder is if one starts studying these states of consciousness and does it successfully, it is still possible that he may be the victim of this state. **This is the self-awareness of vital consciousness.**
One can do this in the name of philosophy, rationality, even science.
What we call Self-awareness is for those whose Self is awake.
In the name of the freedom of Brahman, the caste system was created.
Christian love has resulted in organized church injunctions.
The freedom of the individual to find his own God ended the population identifying with 150 denominations of Church.
The god he discovered is his denomination.
Based on the theory of state withering away USSR created the police state.
Extraordinary intellectual freedom in France robbed them of their capacity to defend their political self-respect.
It is one thing that aspiration for freedom simultaneously creates bastions of slavery and fast adherents to fundamentalism.
It is quite another thing that in the name of a principle, the opposite is organized.
The first is the phenomenon of dualities.
The next is Man's resourcefulness in self-deception.
It is true self-deception is a way of life till the Self awakes.
It is universally present.
Lydia hopes he would care for her!
"அவன் அவளை துரும்புபோல்கூட மதிக்கவில்லை".

ஒருவருக்கு நல்லதை நினைக்கும்பொழுது, இன்னொருவருக்கு கெடுதல் எண்ணுகிறோம் என்பதில்லை.
மிஸ் கிங்கிற்கு மரியாதை தராததால், லிடியா நினைப்பதைப்போல் அவளுக்கு மரியாதை தருவதாக அர்த்தம் அல்ல.
எலிசபெத்தையும் மிஸ் கிங்கையும் ஏற்கெனவே புறக்கணித்த அவனை லிடியா நாடுகிறாள்.
தொடர்ந்து துரோகம் செய்தவரை மனிதன் நம்புவது ஒரு அதிசயம்.
மற்றவரைச் சார்ந்திருக்கும் உணர்வால் துரோகத்தைக் காண முடியாது.
இதைக் கண்டும் மனிதனால் ஒன்றும் செய்ய முடியாத விஷயம் இது.
உண்மை என்னவென்றால், அவனுக்குத் துரோகம் செய்யப்படுகிறது என்பதை அவன் பார்ப்பதே இல்லை.
காண விரும்பும் விஷயத்தை மட்டும் காணும் ஒரு நிலை இது.
இது போன்ற ஜீவியத்தை ஒருவர் வெற்றிகரமாக ஆராய்ச்சி செய்யத் தொடங்கினால், அவரே இந்த நிலைக்கு பலி ஆகலாம். **இது உணர்வு ஜீவியத்தின் சுய விழிப்புணர்வாகும்.**
தத்துவம், பகுத்தறிவு, ஏன் விஞ்ஞானத்தின் பெயரால்கூட ஒருவர் இதைச் செய்யலாம்.
சுய அறிவு என்று நாம் அழைப்பது சுயம் விழிப்பாக இருப்பவர்களுக்கு.
பிரம்மத்திலிருந்து விடுதலை என்ற பெயரில், ஜாதி முறை உண்டாக்கப்பட்டது.
மாதா கோவில்களின் முறைப்படுத்தப்பட்ட கட்டளைகளால் கிறிஸ்தவ அன்பு ஏற்பட்டது.
அவரவர்கள் தங்களுடைய கடவுள்களை கண்டு கொள்வதற்கான சுதந்திரம், கிறிஸ்துவர்களில் 150 பிரிவுகளை ஏற்படுத்தியது.
அவரவர் கண்டுபிடித்த கடவுள் அவரவர் பிரிவைச் சேர்ந்தவர்.
மாநிலம் பிரிந்து போகும் சாத்தியத்தால், ரஷ்யா அடக்குமுறை ஆட்சியை ஏற்படுத்தியது.
பிரான்ஸில் நிலவிய அதிகப்படியான அறிவுரீதியான சுதந்திரம், அங்குள்ள மக்களின் அரசியல் சுய மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளும் திறனை பறித்தது.
சுதந்திரத்தின் மேலுள்ள ஆர்வம், ஒரே சமயத்தில் அடிமைத்தனத்தையும், மத தீவிரவாதத்தையும் உற்பத்தி செய்தது.
கொள்கை என்கிற பெயரில் எதிர்மாறானது, முறைப்படுத்தப்படுவது வேறொரு விஷயமாகும்.
முதலாவது இரட்டைகளின் நிகழ்ச்சியாகும்.
அடுத்தது தன்னையே ஏமாற்றிக்கொள்ளும் மனிதனின் திறமை.
சுயம் விழித்துக்கொள்ளும்வரை தன்னையே ஏமாற்றிக்கொள்வது வாழ்க்கை முறையாக உள்ளது என்பது உண்மை.
இது உலகளாவியது.
அவன் தன்மேல் அக்கறை கொள்வான் என லிடியா எதிர்பார்க்கிறாள்!

Elizabeth was shocked to think that, however incapable of such coarseness of expression herself, the coarseness of the sentiment was little other than her own breast had formerly harboured and fancied liberal!
இதுபோல் பண்பற்று பேச தன்னால் முடியாது என்றாலும், தானும் இதையேதான் முன்பு நினைத்திருந்தோம், தான் நினைத்தது சரி என்றும் நம்பியிருந்தோம், அதே பண்பற்ற உணர்வுகள்தான் இது என்பதை புரிந்து கொண்ட எலிசபெத் அதிர்ச்சியடைந்தாள்.

47. It is an act of sincerity in Elizabeth to acknowledge to herself the coarseness of her own sentiment.
அவளுடைய நாசூக்கற்ற நுண்ணுணர்வினை அவளே ஒத்துக்கொள்வது அவளுடைய நேர்மையைக் காட்டுகிறது.
48. The difference between Lydia and Elizabeth is only in manners.
நடத்தையில்தான் லிடியாவிற்கும் எலிசபெத்திற்கும் வித்தியாசம் உள்ளது.
49. Elizabeth, who sees the coarseness of Lydia's expressions, finds the same in her feelings. That is her contribution to the family breakdown.
லிடியாவின் நாசூக்கில்லாத வெளிப்பாடுகளைப் பார்க்கும் எலிசபெத், தன்னுடைய உணர்வுகளும் அதே போல் இருப்பதை கவனிக்கிறாள். குடும்பம் நிலைகுலைந்து போனதற்கு அவளுடைய பங்கு அது.
50. "Elizabeth was shocked to think that".
When our thoughts are spoken by others, those who do not know that phenomenon -- someone talking another's thought – are surprised.
It was Elizabeth's thoughts that Lydia spoke out.
Elizabeth was sincere enough to acknowledge she could have the same thought.
Wickham went away from Elizabeth to that thing. She could pardon him, not her.
A wronged wife is hurt by the other woman, not her husband.
It is so because he loves his wife, faithful or not!
It means he loves himself and is not capable of finding fault with himself.
There is as much truth in betrayal as in friendship as both are the same.
In accepting a deserted friend, one can feel noble in forgiving!

Love grows in intensity by separation, quarrel or even betrayal.
When they reunite the friendship is more intimate and sweeter than before.
Couples who remarry after some years of divorce gain much experience in human nature which enables them to appreciate the partner better than before.
Such an appreciation deeper than before can come in for positive or negative reasons.
Positively it comes out of the maturity of years.
Negatively they come to value what was lost; also they become more acutely aware of their own deficiencies.
Either way it is a progress.
To know the partner's weakness and not to speak of it is a maturity on which one can rightly congratulate himself or herself.
Instead, this transition can be discovered in knowing the partner better in her better parts which is really civilizing 'influence'.
A civilizing influence may keep the unwanted memory.
An influence that is cultural forgets what is to be forgotten.
Culture is the residue of desirable Memory.
Sincerity can never fail. It can never hurt. Sincerity need have no reservations. It is superior to culture.
"அதை நினைக்கும்பொழுதே எலிசபெத்திற்கு அதிர்ச்சியாக இருந்தது".
நம் எண்ணங்களை மற்றவர்கள் பேசும்போது, ஒருவர் எண்ணங்களை மற்றவர் பேசுவர் என்ற விஷயத்தை அறியாதவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.
எலிசபெத்தின் எண்ணங்களை லிடியா பேசுகிறாள்.
அதே எண்ணங்கள் தன்னிடம் இருக்கலாம் என்பதை ஒத்துக்கொள்ளும் விஷயத்தில் எலிசபெத் உண்மையாக இருக்கிறாள்.
விக்காம் எலிசபெத்திடமிருந்து அகன்று வேறொரு பெண்ணிடம் சென்றான், அவள் அவனை மன்னிக்கலாம், தன்னை மன்னித்துக்கொள்ள முடியாது.
தவறிழைக்கப்பட்ட மனைவி மற்ற பெண்ணால் காயப்படுகிறாள், அவளது கணவனால் அல்ல.
ஏனென்றால் மனைவி விசுவாசமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவன் மனைவியை விரும்புகிறான்.
இதற்கு அவன் அவனையே விரும்புகிறான், அவனால் தன் மேலேயே குறை காண முடியாது என்று பொருள்.
நம்பிக்கைத் துரோகத்தில் எவ்வளவு உண்மை இருக்கிறதோ அதே அளவு உண்மை நட்பிலும் இருக்கிறது, ஏனெனில் இரண்டும் ஒன்றுதான்.
யாவரும் கைவிட்ட ஒரு நண்பனை ஏற்றுக்கொள்வதை ஒருவர் உன்னத குணமாக கருதுவர்.
பிரிதலிலும், சண்டையிட்டுக் கொள்வதிலும் ஏன் நம்பிக்கைத் துரோகத்தில்கூட அன்பு தீவிரமாக வளரும்.
அவர்கள் மீண்டும் சேரும்பொழுது நட்பு மேலும் நெருக்கமாகும், முன்பு இருந்ததை விட இனிமையாகவும் மாறும்.
விவாகரத்து பெற்ற தம்பதிகள் மீண்டும் திருமணம் செய்துகொள்ளும் பொழுது மனித சுபாவத்தில் அவர்களுக்கு கிடைக்கும் அனுபவத்தின் மூலம், அவர்கள் முன்பு இருந்ததைவிட ஒருவரை ஒருவர் மேலும் நன்றாகப் புரிந்து கொள்கின்றனர்.
முன்பு இருந்ததைக் காட்டிலும் அது போன்ற புரிதல், நல்ல விஷயத்திற்காகவோ அல்லது எதிர்மறையான விஷயத்திற்காகவோ எழும்.
வயதின் அனுபவத்தில் நல்ல விதமாக அது எழும்.
எதிர்மறையாக, தாங்கள் இழந்தவற்றின் மதிப்பை உணர்வர். மேலும் தங்களுடைய குறைகளைப் பற்றி மேலும் நன்றாக உணர ஆரம்பித்திருப்பர்.
எப்படியிருந்தாலும் அது முன்னேற்றமே.
தன்னுடைய துணையின் பலவீனம் அறிந்திருந்தும் அதைப் பற்றி பேசாமல் இருப்பது முதிர்ச்சியின் அடையாளம், அதற்காக ஒருவனோ, அல்லது ஒருத்தியோ தங்களையே பாராட்டிக் கொள்ளலாம்.
இதற்குப் பதிலாக இந்த இடைப்பட்ட காலம் துணையின் நல்ல அம்சங்களை நன்கு தெரிந்து கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டால் அது நாகரிகமாகும்.
நாகரிகமான செல்வாக்கு வேண்டாதவற்றை நினைவில் வைத்துக் கொள்ளும்.
நற்பண்போடு கூடிய செல்வாக்கு மறக்க வேண்டியதை மறந்து விடும்.
சமூகத்தில் தங்கியுள்ள விரும்பத்தகுந்த ஞாபகங்கள்தான் கலாச்சாரமாக கருதப்படுகின்றன.
உண்மை தவறுவதே இல்லை. அதனால் துன்புறுத்தவே முடியாது. உண்மைக்கு முன்விருப்பம் எதுவும் கிடையாது. கலாச்சாரத்தைவிட அது உயர்ந்தது.

51. "The coarseness was little other her own breast had formerly harboured"
Mother says many would murder if only they had the courage.
The distance between the thought and the act is a distance in civilization.
Mental sensitivity is that the Mind cannot stand a certain thought.
Language is a great medium which has precisely captured in words each shade of sentiment.

Prose develops as life develops.
Poetry develops as society matures in static greatness.
All great poetic phrases become household words in a few centuries.
Centuries of existence creating history, centuries of history resulting in civilization and further centuries of civilization are required to distil a little culture is a pregnant saying.
Elizabeth and Lydia are the children of the same mother.
They are one, but different; one in essence, different in expression.
Elizabeth thinks what Lydia speaks out.
Cultural sensibilities start with shame and end in hospitality.
Sarcasm is the petulant perversity of the inhibited freedom by vulgarity.
Sarcasm in any fashion refuses culture in any shade.
Insensibility is an earlier stage than sarcasm.
Sarcasm murders goodness of any description.
Sarcasm is the result of darkness expressing through intelligence.
In a truly essential sense, all the powers of Spirit and Matter find a complex expression of a mixture in any small trait e.g. impatience or gentleness.
As philology studies the roots of words from several other languages, a study of this description can be a rich addition to the body of knowledge.
Thought originates in the body and reaches the Mind through emotions.
Thoughts are in the atmosphere and enter into us from outside.
Thoughts are mentalised formations of emotional experience.
Emotions are energy forms of acts of the body.
Acts are the energies organized by human movements.
Acts in the Being are formulation of light and seen in the vision.
Acts in light carry less of karma than acts in darkness.
"அவள் முன்பு நினைத்திருந்த அதே நாசூக்கற்ற உணர்வுகள்தான்."
தைரியம் இருந்தால் பலர் கொலை செய்வார்கள் என்று அன்னை கூறுகிறார்.
எண்ணத்திற்கும் செயலுக்கும் உள்ள தூரம், நாகரிகத்தில் உள்ள தூரம்.
மனதால் சில எண்ணங்களைத் தாங்கிக்கொள்ள முடியாது என்பதுதான் மனத்தின் நுண்ணுணர்வு.
நுண்ணுணர்வின் ஒவ்வொரு நுட்பமான வித்தியாசத்தையும், வார்த்தைகளில் சரியாக வடிவமைத்த ஊடகம்தான் மொழி.
வாழ்வு முன்னேற்றம் அடையும்பொழுது உரைநடை முன்னேற்றம் அடைகிறது.
சமூகம் நிலையான சிறப்பில் முதிர்ச்சி அடையும் பொழுது, காவியம் முன்னேற்றம் அடைகிறது.
சில நூற்றாண்டுகளில் காவியச் சொற்றொடர்கள் அன்றாட வாழ்வில் புழங்கும் சொற்களாகின்றன.
நூற்றாண்டுகளாக வாழ்ந்த வாழ்க்கை சரித்திரத்தை உண்டாக்குகிறது, நூற்றாண்டுகளாக இருக்கும் சரித்திரம் நாகரிகத்தை உருவாக்குகிறது.
பல நூற்றாண்டுகளின் நாகரிகம் ஒரு துளிக் கலாச்சாரத்தை வடிவமைக்கத் தேவைப்படுகிறது என்பது ஒரு பொருள் நிரம்பிய பழமொழி ஆகும்.
எலிசபெத்தும் லிடியாவும் ஒரு தாயின் குழந்தைகள்.
அவர்கள் ஒரே மாதிரியானவர்கள், ஆனால் வித்தியாசமானவர்கள். சாராம்சத்தில் ஒரே மாதிரியானவர்கள், வெளிப்படுத்துவதில் வித்தியாசமானவர்கள்.
லிடியா பேசுவதையே எலிசபெத் நினைக்கிறாள்.
கலாச்சார நுண்ணறிவு அவமானத்தில் ஆரம்பித்து விருந்தோம்பலில் முடிகிறது.
குத்தல் பேச்சுக்கள், தாழ்ந்தது அளிக்கும் தடையில்லா சுதந்திரத்தின் வெடுக்கென்ற வக்கிரப் பேச்சாகும்.
நாகரிகத்தின் எந்த சாயலையும் எந்த விதமான குத்தல் பேச்சும் அனுமதிக்காது.
குத்தல் பேச்சின் முந்தைய நிலை அறிவின்மை ஆகும்.
குத்தல் பேச்சு எல்லா விதமான நல்ல குணங்களையும் அழித்து விடும்.
அறிவின் மூலம் இருள் வெளிப்படுதலே குத்தல் பேச்சாகும்.
ஆன்மா மற்றும் ஜடத்தின் எல்லா சக்திகளும் உண்மையில் சிக்கலான வெளிப்பாடுகளையே வெளிப்படுத்துகின்றன. அது எந்த சிறிய குணமாக இருந்தாலும் சரி, உதாரணம்-பொறுமையின்மை அல்லது மென்மை.
பல்வேறு மொழிகளிலிருந்து ஒரு வார்த்தையின் வேரை கண்டுபிடிக்கும் மொழி ஆராய்ச்சியை மேற்கொண்டால், நமது அறிவு மேலும் சிறக்கும்.
உடலில் உற்பத்தியாகும் எண்ணம் உணர்ச்சிகள் மூலம் மனத்தை அடையும்.
எண்ணங்கள் சூழலில் இருக்கின்றன, வெளியிலிருந்து நமக்குள் நுழைகின்றன.
உணர்வு பூர்வமான அனுபவம் மனதால் உருவம் பெறுவதே எண்ணங்களாகும்.

உடற் செயல்களின் சக்தி உருவமே உணர்ச்சிகளாகும்.
மனித இயக்கங்களால் முறைப்படுத்தப்படும் சக்திகளே செயல்களாகும்.
செயல்கள் சத்-ல், ஒளியின் உருவகமாக இருக்கும், திருஷ்டியில் காணப்படும்.
இருளிலுள்ள செயல்களில் இருக்கும் கர்மத்தை விட ஒளியிலுள்ள செயல்களில், கர்மம் குறைவாகவே இருக்கும்.

As soon as all had ate, and the elder ones paid, the carriage was ordered; and after some contrivance, the whole party, with all their boxes, workbags, and parcels, and the unwelcome addition of Kitty's and Lydia's purchases, were seated in it.
எல்லோரும் உணவு அருந்தியபின் மூத்த சகோதரிகள் அதற்குரிய பணத்தைக் கொடுத்த பிறகு வண்டி வரவழைக்கப்பட்டு சிறிது நேர திட்டத்திற்குப் பிறகு எல்லோரும் அவர்களது பெட்டிகள், கைப்பைகள், கட்டப்பட்ட சாமான்கள், கிட்டியும் லிடியாவும் வாங்கிய தேவையற்ற பொருள்கள் உட்பட எல்லாவற்றுடனும் வண்டியினுள் ஏறி அமர்ந்தனர்.

52. “As soon as all ate and the elder ones paid”.
The hierarchy of age is maintained in cultures that try to disregard it.
Even the Supermind has gradations. Hierarchy pervades all existence.
Monotonous sameness, non-existent Nihil do not exist in creation or in the Absolute.
Hierarchy makes for variety, variety richness.
From potential to the actual there arise grades.
Involution and evolution need the grades and justify them.
The range is from the infinitesimal to infinity.
The unknowable becoming knowable implies grades.
Unity and Multiplicity are parts of a greater original whole of Infinity even as preparation and performance are parts of a whole of existence.
To be constantly moving up is delight or bliss evolving into delight.
That is how the Divine enjoys, says the Mother.
Man enjoys greatly moving down the level of grades.
It is the aspiration of Non-Being, greater than that of the Being.
The aspiration of the Non-Being, and how the Divine enjoys are complementary processes.
Delight is the cause, Delight is the process, Delight is the goal.
Delight is the experience of Being in its own consciousness.
Spirit becoming Matter and Matter becoming Spirit are involution and evolution.
It is the process of objectifying, the secret of creation.
Mind cannot see the objectifying while Supermind can.
Supermind is the instrument of perception the moment the Absolute decided to objectify.
Mind is the field between Spirit and Matter.
Supermind is the field between the Absolute and the cosmos.
Creation ends, He says, with the creation of Mind.
It is by the cosmic action of Mind, Life and Matter are created.
Hence the significance of Ignorance.
Ignorance is a higher knowledge, higher in the sense of capable of creating higher delight.
“எல்லோரும் உணவருந்திய பின், மூத்தவர்கள் அதற்குப் பணம் கொடுத்தனர்”.
வயதின் படிநிலையைக் கருதாத நாகரிகங்களிலும், அம்மரபு கடைப்பிடிக்கப்படுகிறது.
சத்திய ஜீவியத்திலும் பல கிரமங்கள் உள்ளன. மரபு சமூகத்தில் பரவி உள்ளது.
மாறுதலில்லாத ஒற்றுமை, இல்லாத சூன்யம், சிருஷ்டியிலோ அல்லது பிரம்மத்திலோ இல்லை.
பலதரப்பட்ட அதிகாரிகள் உள்ள ஸ்தாபனம் பலவகையான விஷயங்களைத் தருகிறது, பலவகைகளில் செழிப்பாக உள்ளது.
சாத்தியம் என்பதிலிருந்து உண்மையாகச் செய்யக் கூடியது என்ற வகையில் பல கிரமங்கள் உள்ளன.
சிருஷ்டிக்கும், பரிணாமத்திற்கும் கிரமங்கள் அவசியப்படுகின்றன. அதை நியாயப்படுத்தவும் செய்கின்றன.
மிகச் சிறியதிலிருந்து அளவற்றது வரை அதனுடைய பரப்பு உள்ளது.
அறியமுடியாதது அறியக்கூடியதாக மாறுவது கிரமங்களை குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறது.
ஒற்றுமையும் பலவகைப்பாடும் ஆரம்ப உயர்ந்த அகண்டத்தின் முழுமையின் பகுதிகளாகும். முன் ஏற்பாடும் செயலாக்கமும் முழு வாழ்க்கையின் பகுதிகளாகும்.
ஆனந்தம் பேரானந்தமாக உருவாவது தொடர்ந்து மேலே செல்வது.
இவ்வாறுதான் இறைவன் அனுபவிக்கிறான் என்று அன்னை கூறுகிறார்.
தரத்தில் கீழே இறங்குவதில், மனிதனுக்கு பெரிதும் சந்தோஷம் கிடைக்கிறது.

சத்தின் ஆர்வத்தைவிட பெரிதான இது அசத்தின் ஆர்வமாகும்.
அசத்தின் ஆர்வமும் எவ்வாறு இறைவன் அனுபவிக்கிறான் என்பதும் ஒன்றை ஒன்று பூர்த்தி செய்வதாகும்.
ஆனந்தம்தான் காரணம், ஆனந்தம்தான் செயல்முறை, ஆனந்தம்தான் இலட்சியம்.
சத்திற்கு அதனுடைய ஜீவியத்தில் கிடைக்கும் அனுபவமே ஆனந்தம் ஆகும்.
ஆன்மா ஜடமாவதும் ஜடம் ஆன்மாவாக மாறுவதும், சிருஷ்டியும் பரிணாமமுமாகும்
இது பொறிகளுக்குப் புலப்படும் உருவமாகக் காட்டும் செயல்முறை, சிருஷ்டியின் இரகசியம் இது.
மனதால் புறப் பொருளாக்குவதைப் பார்க்க முடியாது, சத்திய ஜீவியத்தால் முடியும்.
பிரம்மம் புறத்தில் வெளிப்படத் தீர்மானித்த தருணத்தில், சத்திய ஜீவியம் அறிவுணர்வின் கருவியாகிறது.
ஆன்மாவுக்கும் ஜடத்துக்கும் இடையே இருக்கும் களம் மனமாகும்.
பிரம்மத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் இடையே இருக்கும் களம் சத்திய ஜீவியமாகும்.
மனம் உற்பத்தியானவுடன் சிருஷ்டி முடிந்து விடுகிறது என்று பகவான் கூறுகிறார்.
பிரபஞ்சத்தின் செயலால் மனம், வாழ்வு, ஜடம் உற்பத்தியாயின.
எனவேதான் அறியாமை முக்கியமாக இருக்கிறது.
அறியாமை உயர்ந்த அறிவாகும், பெரிய ஆனந்தத்தை உற்பத்தி செய்யும் விதத்தில் இது உயர்ந்தது.

"How nicely we are crammed in!" cried Lydia. "I am glad I bought my bonnet, if it is only for the fun of having another bandbox! Well, now let us be quite comfortable and snug, and talk and laugh all the way home. And in the first place, let us hear what has happened to you all, since you went away. Have you seen any pleasant men? Have you had any flirting? I was in great hopes that one of you would have got a husband before you came back. Jane will be quite an old maid soon, I declare. She is almost three-and-twenty! Lord, how ashamed I should be of not being married before three-and-twenty! My aunt Philips wants you so to get husbands, you can't think. She says Lizzy had better have taken Mr. Collins; but I do not think there would have been any fun in it. Lord! How I should like to be married before any of you! And then I would chaperon you about to all the balls. Dear me! We had such a good piece of fun the other day at Colonel Forster's. Kitty and me were to spend the day there, and Mrs. Forster promised to have a little dance in the evening (by the bye, Mrs. Forster and me are such friends!); and so she asked the two Harringtons to come, but Harriet was ill, and so Pen was forced to come by herself; and then, what do you think we did? We dressed up Chamberlayne in woman's clothes on purpose to pass for a lady -- only think what fun! Not a soul knew of it, but Colonel and Mrs. Forster, and Kitty and me, except my aunt, for we were forced to borrow one of her gowns; and you cannot imagine how well he looked! When Denny, and Wickham, and Pratt, and two or three more of the men came in, they did not know him in the least. Lord! How I laughed! And so did Mrs. Forster. I thought I should have died. And that made the men suspect something, and then they soon found out what was the matter."

"நாம் எல்லோரும் எவ்வளவு அழகாக அடைபட்டு உட்கார்ந்திருக்கிறோம். தொப்பி வாங்கியதற்கு நான் சந்தோஷப்படுகிறேன், தொப்பி வைத்திருக்கும் பெட்டி கிடைத்தது என்பதற்காக இருந்தாலும் சரி! சரி நாம் இப்பொழுது சௌகரியமாக குளிருக்கு அடக்கமாக உட்கார்ந்து பேசிக் கொண்டே வீட்டிற்குப் போகலாம். முதலில், நீங்கள் சென்ற பிறகு என்னவெல்லாம் நடந்தது என்று சொல்லுங்கள் பார்க்கலாம். இனிய நபர் எவரையேனும் சந்தித்தீர்களா? அவர்களுடன் சந்தோஷமாக இருக்க முடிந்ததா? நீங்கள் திரும்பி வருவதற்கு முன் உங்களில் ஒருவருக்கு ஒரு கணவன் கிடைத்திருப்பான் என்ற நம்பிக்கையில் நான் இருந்தேன். விரைவில் ஜேன் கல்யாணமாகாத கன்னி ஆகிவிடுவாள் என்று நான் சொல்கிறேன். அவளுக்கு வயது ஏறத்தாழ இருபத்தி மூன்று ஆகிறது. இருபத்தி மூன்று வயதிற்குள் எனக்கு திருமணம் ஆகியிருக்காவிட்டால் கடவுளே, எனக்கு அவமானமாக இருக்கும்! நீங்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவிற்கு உங்களுக்கு கணவன்மார்கள் கிடைக்க வேண்டும் என்று நமது சித்தி பிலிப்ஸ் விருப்பப்படுகிறார். காலின்ஸையே ஏற்றுக் கொண்டிருக்கலாம் என்று சித்தி சொல்கிறார். ஆனால் அதில் எந்த சந்தோஷமும் இருந்திருக்காது என்று நான் நினைக்கிறேன். கடவுளே! உங்களுக்கு முன்னால் எனக்கு திருமணம் நடந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்; பிறகு நடக்கும் நடனங்களுக்கெல்லாம் நான் உங்களுக்குத் துணையாக வருவேன். அன்றொரு நாள் கர்னல் பாஸ்டர் இல்லத்தில் எங்களுக்கு பெருத்த மகிழ்ச்சி கிடைத்தது. நானும், கிட்டியும் அங்கு ஒரு நாள் தங்குவதாக இருந்தோம். திருமதி. பாஸ்டர் மாலையில் ஒரு நடனம் ஏற்பாடு செய்வதாக வாக்களித்திருந்தார். (நானும், திருமதி. பாஸ்டரும் நெருங்கிய நண்பர்கள்) அதனால் அவள் ஹாரிங்டன் குடும்பத்திலிருந்து இருவரையும் அழைத்திருந்தாள். ஆனால் ஹாரியட்டிற்கு உடம்பு சரியில்லாமல் இருந்ததினால் பென் மட்டும் தனியாக வரும்படியாயிற்று. பிறகு நாங்கள் என்ன செய்தோம் என்று நினைக்கிறீர்கள்? எல்லோரும் பெண் என்று எண்ணட்டும் என்றெண்ணி, நாங்கள் சேம்பர்லீனிற்கு பெண் வேடமிட்டோம், எவ்வளவு வேடிக்கையாக இருந்திருக்கும் என்று நினைத்துப்பார்! கர்னல், திருமதி. பாஸ்டர், கிட்டி மற்றும் என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. சித்தியிடம் ஒரு உடையை கடன் வாங்கியதால் அவருக்கு மட்டும் தெரியும். அவன் பார்ப்பதற்கு எவ்வளவு நன்றாக இருந்தான் என்று உன்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது! டென்னி, விக்காம், ப்ராட் மேலும் இரண்டு மூன்று ஆண்கள் உள்ளே நுழைந்த பொழுது அவர்களால்

சிறிதளவும் கண்டுபிடிக்க முடியவில்லை. கடவுளே! நான் எப்படி சிரித்தேன்! திருமதி பாஸ்டருக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. நான் இறந்தே போய்விடுவேன் என்று நினைத்தேன். இதனால் ஆண்களுக்கு விஷயம் ஏதோ இருக்கிறது என்று சந்தேகம் வந்து விரைவில் என்ன விஷயம் என்று கண்டுபிடித்து விட்டனர்."

53. Lydia is physical.
லிடியா ஜடநிலைக்கு உரியவள்.

54. 'Dear Wickham', "She is a fool to go away if she liked him", "Have you met men?", "Jane will soon be an old maid", all put together shows in which direction her mind is moving, perhaps without her knowing it.
'அன்புக்குரிய விக்காம்', 'அவனைக் கண்டால் பிடித்திருக்கிறது என்றால் அவனை விட்டுச் சென்றது அவளுடைய முட்டாள்தனம்','நீ ஆண்களை சந்தித்தது உண்டா?', 'ஜேன் விரைவில் திருமணம் ஆகாத முதிர்கன்னியாக விளங்குவாள்', இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், எந்த திசையை நோக்கி அவளது மனம் வேலை செய்கிறது என்று புரியும், ஒரு வேளை அவளுக்கே அது தெரியாமல் இருக்கலாம்.

55. "How nicely we are crammed in".
Babies need physically be on the mother.
To be crammed in is enjoyable for physical consciousness.
Work is of interest to physical consciousness because the body is in action.
The highest desirable action is the non-action of the body or vital or Mind.
A higher action is that which is moved by that Silence.
The Divine enjoys that action in which Silence is Silent and active.
Creation in Mind is creation of opposites.
To harmoniously combine them in action is Supramental existence.
Body creates by action.
Mind creates by thought.
Supermind creates in harmony.
The Absolute does not create.
It releases what is already in existence in Infinity.
Infinity is infinite existence that allows infinite non-existence.
Darcy's reception of her abuse is non-existence in social life.
The non-existence of ego is the silent existence of the Soul.
The Soul being Purusha does not act, it only witnesses.
The Soul being the Psychic evolves.
Darcy socially evolved to a higher psychological status.
Mr. Bennet, having been presented with such an opportunity in Darcy's engagement accepted the delightfully beneficial result after the initial part ignorant comment.
Elizabeth used such an opportunity to deserve Pemberley moving to the Mind.
Jane reacted as her father.
Bingley was a silent suffering helpless witness of a wider process of which he was a cog in the wheel.
Collins was aware of the atmosphere by his perfect action.
Mary's education had no chink in her armour to let the Force in.
To a silent observer of good will, a byproduct is Longbourn —Charlotte.
"நாம் எவ்வளவு அழகாக திணிக்கப்பட்டிருக்கிறோம்."
குழந்தைகளுக்குத் தாயாரது அருகாமை வேண்டும்.
ஜட நிலையில் இருப்பவருக்கு நெரிசலாக அமர்ந்திருப்பது சந்தோஷமாக இருக்கும்.
ஜட நிலையில், வேலை செய்வது பிடிக்கும், ஏனெனில் உடல் எப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டிருக்கும்.
உடல் அல்லது உணர்வு அல்லது மனம் செயலற்று இருப்பதே பெரிதும் விரும்பப்படும் செயலாகும்.
மௌனத்தால் செயல்படுவது இதை விட உயர்ந்த செயல் ஆகும்.
மௌனம், மௌனமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும், அந்த செயலை இறைவன் ரசிக்கிறான்.
மனத்தில் சிருஷ்டி நேர்மாறானவைகளின் சிருஷ்டியாகும்.
அவைகளை சுமுகமாக செயலில் இணைப்பது சத்திய ஜீவிய வாழ்வாகும்.
செயலின் மூலம் உடல் உற்பத்தியாகிறது.
எண்ணங்களின் மூலம் மனம் உற்பத்தியாகிறது.
சுமுகத்தால் சத்திய ஜீவியம் உருவாகும்.
பிரம்மம் சிருஷ்டிப்பதில்லை.
அது அகண்டத்தில் ஏற்கனவே இருப்பதை வெளிப்படுத்துகிறது.
அளவற்ற அசத்தை அனுமதிக்கும் அளவற்ற சத் அகண்டமாகும்.
அவளுடைய நிந்தனைக்கு டார்சியின் வரவேற்பு சமூக வாழ்க்கையில் இல்லாதது.
அகந்தையற்று இருப்பது ஆன்மாவின் மௌனமான இருத்தல் ஆகும்.

ஆன்மா, புருஷா என்பதால் செயல்படுவதில்லை, சாட்சி புருஷனாக மட்டும் இருக்கும்.
ஆன்மா, சைத்திய புருஷன் என்பதால் பரிணமிக்கும்.
உயர்ந்த மன நிலைக்கு டார்சி சமூகரீதியாக வெளிப்பட்டான்.
முதலில் அறியாமையில் கருத்து தெரிவித்த திரு பென்னட், டார்சியின் திருமண உறுதியின் மூலம், அது போன்ற ஒரு வாய்ப்பு கிடைக்கப் பெற்று சந்தோஷமான பயனுள்ள பலன்களை ஏற்றுக் கொண்டார்.
மனத்திற்கு மாறிய எலிசபெத் அது போன்ற ஒரு வாய்ப்பினை, பெம்பர்லியை அடைவதற்கு பயன்படுத்திக் கொண்டாள்.
ஜேனும் அவளுடைய தகப்பனாரைப் போல் எதிர்வினை ஆற்றினாள்.
ஒரு அகண்ட இயக்கத்தில் எதுவும் செய்ய முடியாத மௌனமான பார்வையாளனாக, சக்கரத்தில் பற்கள் இருப்பது போல் பிங்கிலி விளங்கினான்.
காலின்ஸிற்கு தன்னுடைய செம்மையான செயலின் மூலம் சூழலைப் பற்றி தெரிந்திருந்தது.
மேரியின் கல்வியினால், சக்தியை உள்ளே அனுமதிக்க, அவளுக்கு பலவீனம் எதுவும் இருக்கவில்லை.
நல்லெண்ணத்தைப் பற்றி அமைதியாக ஆராய்பவருக்கு லாங்பர்னும் ஷார்லெட்டும் உதாரணங்கள்.

56. "Jane will be quite an old maid soon".
There is a preoccupation for each. It differs according to the age.
Preoccupation is life.
For the animal food and shelter are the preoccupation.
Vital social life is the preoccupation of men and women.
In old age one is preoccupied by physical degeneration and mental decomposition.
For about two centuries shopping has become the preoccupation of all populations.
Sri Aurobindo speaks of Man's preoccupation seeking God.
Ideal men are preoccupied all their lives with their ideals.
Ideals preoccupy men when they are striven for, achieved or their failure to achieve.
Romance plays that role in everyone's life before marriage.
After marriage, thinking Men spend their time applying their experience to their lives, evolving working formulas for the world.
Preoccupation when it recedes becomes a settled occupation of the being.
We see in Lydia how girls are so occupied with marriage.
The women do not have the other distractions Men have.
Men have an opportunity to pursue girls of their choice.
A woman has to lie in wait.
Hence the occupation becomes the preoccupation of the very being.
Occupation is of the Mind.
Preoccupation is of the subconscious.
Survival is the steady occupation of the bodily substance.
Popularity is such a one for Men in public life.
Power is the essential substance of the glamour of popularity.
Public life is for the one who is outgoing.
Faculties like public speaking create the craving for popularity.
One cannot create a footing in public life unless some foundation is there as wealth or power. Otherwise the foundation is the expanding personality.
"ஜேன் விரைவில் திருமணமாகாத முதிர்கன்னி ஆகிவிடுவாள்".
ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒன்று மனத்தை ஆட்கொண்டிருக்கும். வயதிற்கேற்ப அது வித்தியாசப்படும்.
ஆட்கொள்ளப்படுவதே வாழ்க்கையாகும்.
விலங்குகளுக்கு, உணவும், இருக்க இடமும் மனத்தை ஆட்கொண்டிருக்கும்.
ஆண்களுக்கும், பெண்களுக்கும், உணர்வுபூர்வமான சமூக வாழ்க்கையே மனத்தை ஆட்கொண்டிருக்கும்.
உடலும், மனதும் நலிந்து போவதே வயதானவர்களை ஆட்கொள்ளும்.
இரு நூற்றாண்டு காலமாக கடைகளுக்குச் செல்வதே மக்களுக்குப் பிரதானமாக இருக்கிறது.
மனிதனை ஆட்கொண்டிருக்கும் இறைவனின் தேடலைப் பற்றி பகவான் பேசுகிறார்.
இலட்சிய மனிதர்களுக்கு தங்களுடைய இலட்சியங்களே அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் மனதில் இருக்கும்.
இலட்சியங்களை அடைய முயற்சி செய்யும்போது அதில் வெற்றி பெற்றாலும், தோல்வி அடைந்தாலும், அது மனிதர்களை ஆட்கொண்டிருக்கும்.
திருமணத்திற்கு முன் காதல், ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் அந்தப் பங்கினை வகிக்கிறது.
திருமணத்திற்குப் பின் சிந்திக்கும் மனிதர்கள் தங்களது அனுபவத்தை வாழ்க்கையில் செலுத்துவதில் நேரத்தை செலவழித்து, உலகத்திற்கு தேவையான விதிமுறைகளை வகுப்பர்.

மனத்தை ஆட்கொண்டிருப்பது பின்வாங்கும் பொழுது ஜீவனில் நிலைகொண்டு விடுகிறது.
பெண்கள் எவ்வாறு திருமணத்தால் ஆட்கொள்ளப்படுகின்றனர் என்று லிடியாவில் நாம் பார்க்கிறோம்.
ஆண்களுக்கு இருப்பது போல், பெண்களுக்கு கவனம் சிதறுவதற்கு மற்ற விஷயங்கள் எதுவும் இல்லை.
தங்கள் விருப்பத்திற்கேற்ப பெண்களைத் தொடர்ந்து செல்லும் வாய்ப்பு ஆண்களுக்கு இருக்கிறது.
பெண் காத்திருக்க வேண்டும்.
இதனால் இது ஜீவனை ஆட்கொள்ளும்படி ஆக்குகிறது .
ஆட்கொள்வது என்பது மனத்திற்குரியது.
ஆழ்ந்த யோசனை என்பது ஆழ்மனத்திற்குரியது
உயிர்வாழ்தலே உடலின் பொருளுக்கு சீரான வேலையாக இருக்கிறது.
பொது வாழ்க்கையிலுள்ள ஆண்களுக்கு, பிரபலம் என்பது இது போன்றது.
பிரபலத்தின் கவர்ச்சிக்கு அதிகாரம் அத்தியாவசியமான பொருளாகும்.
கலகலப்பான சுபாவமுள்ளவர் பொது வாழ்க்கைக்கு உரியவராவர்.
பொதுக் கூட்டத்தில் பேசும் திறன், பிரபலத்திற்கான ஆசையை உருவாக்குகிறது.
பணம் அல்லது பதவி என்கிற அடித்தளம் இல்லாமல் பொது வாழ்க்கையில் ஒருவரால் ஈடுபட முடியாது.
அல்லது அதற்கான அடித்தளம், விரியும் ஆளுமையாக இருக்கும்.

57. "How ashamed I should be of not being married before three and twenty".
That Lydia can speak of shame in some context is a credit to her.
Absence of intense physical enjoyment ever-present is shame to her.
After her wedding she was proud to be overflowing and not ashamed.
The family of Mr. Bennet comprises of a range from the lowest human specimen to the beginning of aristocracy.
That such a family should have elevated two of the children above their level is not the usual result of upward social movement.
The two ends of that movement would be confined to the two ends to which the parents belong.
To cross those bounds excessively is not usual.
We saw Pemberley balanced by a poor army officer far lower than the attorney whose daughter Mrs. Bennet was.
That which stirred on the surface of the family was Jane's life.
Lydia slipped down to raise Elizabeth.
So much for the energy.
The power of sustaining organization must be there to uphold another equilibrium.
Lydia's move essentially destroyed every possibility.
To reconstruct the dissolved organization an established organization must decide to destroy itself partly but consciously.
The long time taken for Jane to come into her own is thus seen.
Wickham lost his job, was not willing to marry, had debts in more than one place to pay. Lydia blissfully dissolved the social fabric of Longbourn. Surely Money was needed plentifully, but Money alone could not repair the damage. The lost family was to be restored by the willingness to lose the prestige of Pemberley with an invisible extension to aristocracy and the personal responsibility Darcy had to be staked, counteracting the irresponsibility of Wickham and Bennet. **The total loss of prestige is to be restored and more than compensated for by the prestige of aristocracy as located in Pemberley.**
"இருபத்தி மூன்று வயதில் திருமணம் நடக்காமல் இருப்பது எவ்வளவு அவமானமாக எனக்கிருக்கும்".
எதாவது ஒரு விஷயத்திற்கு அவமானம் என்று லிடியா பேசுவதற்கே அவளைப் பாராட்ட வேண்டும்.
ஜடநிலையில், தீவிரமாக சந்தோஷத்தை இடையறாது அனுபவிக்காமல் இருப்பது அவளுக்கு ஒரு அவமானம்.
திருமணத்திற்குப் பின் ஆர்ப்பாட்டமாக இருப்பது அவளுக்குப் பெருமையாக இருக்கிறது, அவமானமாக இல்லை.
தாழ்ந்த மனித நிலையிலிருந்து, உயர்குடி ஆரம்பமாகும் நிலைவரை உள்ளவர்களை உள்ளடக்கிய குடும்பம் திரு.பென்னட்டுடையது.
அப்படிப்பட்ட குடும்பம் இரு குழந்தைகளை அதனுடைய நிலைக்கு மேல் உயர்த்தி உள்ளது என்றால், அது சாதாரணமாக சமூகம் மேல்நோக்கி உயருவதால் நடந்தது அல்ல.
அந்த இயக்கத்தின் இரு முனைகள், இரு முனையைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு உட்பட்டதாகும்.
அந்த எல்லையை அளவுக்கு மீறி தாண்டுவது சாதாரணமாக நடக்கக் கூடியது அல்ல.
வக்கீல் நிலைக்குக் கீழ் நிலையில் இருக்கும் சாதாரண இராணுவ அதிகாரியாக இருந்த திருமதி பென்னட்டின் தகப்பனாரால் பெம்பர்லி சமநிலைபடுத்தப்பட்டது என்பதை நாம் பார்க்கிறோம்.
ஜேனுடைய வாழ்க்கைதான், குடும்பத்தின் மேற்பரப்பில் பரபரப்பை ஏற்படுத்தியது.
எலிசபெத்தை உயர்த்துவதற்காக லிடியா தாழ்ந்து போனாள்.
இதுதான் சக்தியின் செயல்பாடு.
வேறொரு சமநிலையை நிலைநிறுத்த நீடித்த அமைப்பின் சக்தி இருக்க வேண்டும்.

லிடியாவின் செயல் முக்கியமாக எல்லா சாத்தியக் கூறுகளையும் அழித்தது.
கரைந்து போன ஒரு அமைப்பை மீண்டும் உருவாக்க நிலைநாட்டப்பட்ட அமைப்பு பகுதியாக, ஆனால் அறிந்தே தன்னையே அழித்துக்கொள்ள வேண்டும்.
சுயமாக மாறுவதற்கு ஜேன் நீண்ட காலம் எடுத்துக் கொண்டதை இவ்வாறு பார்க்கலாம்.
விக்காம் வேலையை இழந்தான், திருமணம் செய்து கொள்ள விருப்பமில்லை, பல இடங்களில் கடன் இருந்தது. லிடியா லாங்பர்னுடைய சமூக அமைப்பை சந்தோஷமாக கரைத்தாள். நிச்சயமாக அதிக பணம் தேவைப்பட்டது ஆனால் பணம் மட்டுமே நஷ்டத்தை சரி செய்ய முடியாது. விக்காம் மற்றும் பென்னட்டின் பொறுப்பின்மையை ஈடுகட்டும் வகையில், டார்சி தன் சொந்த பொறுப்பை பணயம் வைத்து பெம்பர்லியின் கௌரவத்தை விரும்பியே இழந்து, இழப்பு ஏற்பட்ட குடும்பத்தை மீட்க வேண்டியதாயிற்று. **முழுவதுமாக இழந்த கௌரவத்தை பெம்பர்லியின் உயர்குடி கௌரவத்தால் ஈடு செய்ய வேண்டும்.**

58. "Mrs. Forster and me are friends".
The entertainments always explain the culture of the place.
At a Colonel's house, in those days when Men with no stockings were called half-naked, the quality of entertainment was coarse.
Mr. Bennet found the colonel sensible.
There are symbols of each culture seen in certain indices.
The worst acts in the best occasions, the best acts in the worst occasions, the best acts in the best avenues, the worst index in a worst place all speak for themselves.
The President of a country steals while he was a royal guest at the palace is revealing.
An unemployed Man after receiving the dole, having demanded work in vain, swept the streets in lieu of it.
The Mohul at Delhi long after the kingdom was liquidated was held by the British as the real power that was ruling.
Alexander agreed to treat Purushothaman as a vanquished emperor.
Akbar who could not overcome the seige for years resorted to bribery successfully.
A father kills his son on hearing the horoscope saying he would be jailed by that son.
The Japanese in a sinking ship patiently waited for a blind Man to leave.
Cricket audience lustily cheering the brilliant performance of the outside team against the home team.
Men rising in honour of a woman entering the room.
Soldiers from the British and German camps celebrating Christmas jointly.
During bomb threats, men were in a queue to buy food for their pets.
The Italians, the Spanish, the French writing English more fluently than the native writer.
Churchill and De Gaulle both knowing both languages employed interpreters to insist on their petulant prestige.
"திருமதி பாஸ்டரும் நானும் தோழிகள்".
ஓரிடத்தில் நடக்கும் கேளிக்கைகள் அந்த இடத்தின் கலாச்சாரத்தை விளக்கும்.
அந்த நாட்களில் ஒரு கர்னலின் இல்லத்தில் ஆண்கள் காலுறை அணியாமல் இருந்தால் ஒழுங்காக உடை அணியவில்லை என்பர், கேளிக்கைகளின் தரமும் நாசூக்கின்றி இருந்தது.
திரு பென்னட் கர்னல் விவேகமானவர் என்பதைக் கண்டார்.
சில குறியீடுகளில் ஒவ்வொரு நாகரிகத்திற்கும் அடையாளங்கள் உள்ளன.
சிறப்பான சந்தர்ப்பங்களில் மோசமான செயல்கள், மோசமான சந்தர்ப்பங்களில் சிறப்பான செயல்கள், சிறப்பான வழிகளில் சிறப்பான செயல்கள், மோசமான இடத்தில் மோசமான அறிகுறி, இவை அனைத்தும் தாங்களே தங்களை விளக்கிக் கொள்ளும்.
அரண்மனையில் அரசு விருந்தாளியாக வந்த ஒரு நாட்டின் ஜனாதிபதி திருடுவது வியப்பாக இருக்கிறது.
வேலையில்லாமலிருந்த ஒரு மனிதன் சிறிய உதவியினைப் பெற்ற பிறகு, வேலை கேட்டு பலன் இல்லாமல் அதற்கு பதில் தெருவை கூட்டும் வேலையைச் செய்தான்.
டெல்லியில் முகலாய பேரரசு அழிந்து வெகு நாட்களான பின்பும் அவர்கள்தான் உண்மையாக அதிகாரத்தில் இருப்பதாக நினைத்து ஆங்கிலேயர்கள் அவர்களைச் சிறைப்பிடித்தனர்.
தோல்வியுற்ற பேரரசராக புருஷோத்தமனை நடத்த அலெக்சாண்டர் ஒத்துக் கொண்டார்.
அக்பர், தான் வருடக் கணக்காக முற்றுகையிடப்பட்டதை எதிர்கொள்ள முடியாததால், வெற்றிகரமாக லஞ்சம் கொடுப்பதில் ஈடுபட்டார்.
தன்னுடைய மகனால்தான் சிறையில் அடைக்கப்படுவோம் என்று ஜாதகத்தின் மூலம் அறிந்த ஒரு தந்தை, மகனைக் கொன்று விடுகிறார்.
மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு கப்பலில் இருந்து, கண் தெரியாத ஒருவர் வெளியேறுவதற்கு ஜப்பானியர் காத்துக் கொண்டிருந்தனர்.
சொந்த நாட்டின் அணியை எதிர்த்து வெளி நாட்டு அணியின் அருமையான விளையாட்டினை கிரிக்கெட் ரசிகர்கள் ஆர்வத்துடன் உற்சாகப்படுத்துகின்றனர்.
ஒரு பெண்மணி அறைக்குள் நுழையும்பொழுது ஆண்கள் மரியாதை காண்பிக்கும் விதத்தில் எழுந்து கொள்கின்றனர்.

பிரிட்டிஷ், ஜெர்மனி முகாமில் உள்ள போர் வீரர்கள் ஒன்று கூடி கிறிஸ்துமஸ் கொண்டாடுகின்றனர்.
வெடிகுண்டு அச்சுறுத்தல் இருக்கும்பொழுது, ஆண்கள் தங்களுடைய செல்லப் பிராணிகளுக்கு, வரிசையில் நின்று உணவு வாங்கிச் செல்கின்றனர்.
இத்தாலியர்கள், ஸ்பெயின் நாட்டு மக்கள், பிரெஞ்சு மக்கள், ஆங்கிலத்தை அந்த நாட்டு மக்களைவிட சரளமாக எழுதுகின்றனர்.
Churchill-ம், De Gaulle-ம் இருவருக்கும் இருவரது மொழிகளும் தெரிந்திருந்தும் கௌரவத்தை நிலை நாட்ட மொழிபெயர்ப்பாளரை அமர்த்திக் கொண்டனர்.

59. "Harriet was ill".

This illness is an omen of the ill-luck to come.
No single event fails to announce itself before hand.
Not only before, but even after the event is over, there will be symptoms.
Life never strikes without a warning.
No house that is going to crash fails to drop one stone as a symptom.
No Man's life is without opportunities small or big.
Man refusing the opportunities is more common than life refusing the opportunities.
Men have positive negative rasis.
For life there is nothing negative; it is all opportunities.
A long unfulfilled ambition is more than fulfilled – a cement house instead of a brick house – for one on the verge of dissolution. The devotee has accepted it as a gift. One can pronounce a few hundred statements if he knew all the circumstances. Let me give a few.

- Life reverses its rule by seeking him when it was his turn to go seeking.
- The accomplishment rises vastly in quality.
- Help sought as borrowing came as income.
  In addition borrowing too came.
- The lender offered to reduce the interest and lengthen the period of return.
- **All came unsought, from sources non-existent.**

The crux does not lie in the material opportunity.
Nor does it lie in the psychological opening.
More than the spiritual fulfillment, it is a rare privilege to dissolve oneself in surrender – surrender to Her.
Gita's surrender offers moksha.
Here surrender turns one into Mother.
This is a new spiritual possibility on the horizon.
"ஹாரியட்டிற்கு உடல் நலம் சரியில்லை".
இந்த உடல் நலமின்மை வரப்போகும் துரதிர்ஷ்டத்தின் அறிகுறி.
எந்த ஒரு நிகழ்ச்சியும் முன்னாலேயே தெரியப்படுத்துவதற்கு தவறுவதே இல்லை.
முன்னால் மட்டும் அல்லாது நிகழ்ச்சி நடந்து முடிந்த பின்பும் அறிகுறிகள் காணப்படும்.
எச்சரிக்கை விடாமல் வாழ்க்கை ஒருவரைத் தாக்காது.
வீடு இடிந்து விழப் போகிறது என்றால் அதற்கு அறிகுறியாக ஒரு கல்லாவது கீழே விழும்.
சிறியதோ அல்லது பெரியதோ, வாய்ப்புகள் கிடைக்காத மனித வாழ்க்கையே கிடையாது.
வாழ்க்கை வாய்ப்புகளை மறுப்பதைவிட, மனிதன் வாய்ப்புகளை மறுப்பதுதான் அதிகம்.
நல்ல ராசி, கெட்ட ராசி இரண்டும் கலந்தவன் மனிதன்.
வாழ்க்கையில் கெட்டது என்பதே கிடையாது, எல்லாமே வாய்ப்புகள்தான்.
நிறைவேறாத நீண்ட பேராவல் நினைத்ததைக் காட்டிலும் அதிகமாக நிறைவேறியது. ஒருவர் எல்லாம் இழக்கும் நிலையில் இருக்கும் பொழுது, செங்கல் வீட்டிற்குப் பதில் சிமென்ட் வீடு கிடைத்தது. அன்பர் அதனை பரிசாகப் பெற்றுக் கொண்டார். எல்லா சந்தர்ப்பங்களையும் பற்றி ஒருவருக்கு தெரிந்திருந்தால் அவர் இது போன்ற நூறு விஷயங்களைக் கூறலாம். நான் சிலவற்றை கூறுகிறேன்.
•நாடிப் போவது அவனுடைய முறையாக இருப்பினும், வாழ்க்கை அவனை நாடி தன்னுடைய சட்டத்தை தலைகீழாக மாற்றுகிறது.
•தரத்தில் சாதனைகள் மிகவும் உயருகிறது.
•கடனாக நாடிய உதவி, வருமானமாக வந்தது. கூடவே கடன் தொகையும் கிடைத்தது.
•பணம் கொடுத்தவர் வட்டியை குறைத்தார், திருப்பிக் கொடுக்க வேண்டிய காலத்தையும் கூட்டினார்.
•நாடாமலேயே எல்லாம் கிடைத்தன, இல்லாத இடங்களிலிருந்து எல்லாம் கிடைத்தன.
உண்மையான விஷயம், பொருள்ரீதியான வாய்ப்பில் இல்லை.
மனரீதியான விழிப்புணர்ச்சியிலும் இல்லை.
ஆன்மீக நிறைவைக் காட்டிலும், அன்னையிடம் சரணடைவது போன்ற சரணாகதியில் ஒருவர் தன்னை கரைத்துக்கொள்வது அரிதான பேறாகும்.

கீதையின் சரணாகதி மோட்சத்தை அளிக்கிறது.
இங்கு சரணாகதி ஒருவரை அன்னையிடம் அழைத்துச் செல்கிறது.
இது அடிவானத்தில் தெரியும் புதிய ஆன்மீகச் சாத்தியம் ஆகும்.

60. "Cannot imagine how well he looked".
Entertainment is experience in education.
To imitate, one needs the skill of Nature.
Charlie Chaplin came fourth in a contest of his likeness.
Literature excels life.
Imitation excels real life.
To be what you are requires a subconscious capacity.
To be what someone is requires a conscious skill to equal the reality.
By implication it has to be better. If a fallen man endeavours to equal his peers, he will excel them.
Lydia's skills are minimal, her energy is endless.
Her mother calls this unbridled energy good humour.
To a mother a child is flawless, the last child very much so.
Lydia perhaps rehearsed how to hide the identity.
She enjoys hiding a Man, cramming in the coach, laughing and shouting all of which means raw energy expressed unprocessed.
Except that Wickham was among the audience, there was no indication of her design on him.
If that is true, she acted on the spur of the moment.
It contradicts the secret Kitty cherished.
Whether it is a secret of imagination or a fact is not known.
Criminals hiding in their known resorts are vulnerable.
It reveals no shrewdness on the part of Wickham.
Perhaps he was unmindful of being found out.
She was unaware of the consequences.
Perhaps Wickham felt immune to punishment.
It goes with his insensitivity.
To think Lydia balances Elizabeth, Wickham, Darcy shows the range of social life.
In that case, the range of life must be immense.
For yoga the two ends are Life and Spirit.
"அவன் எவ்வளவு சிறப்பாக தோற்றமளித்தான் என்று கற்பனையே செய்ய முடியாது."
கல்வியில் சந்தோஷம் என்பது ஒரு அனுபவமாகும்.
மற்றவரைப் போல் நடந்துகொள்வதற்கு ஒருவருக்கு இயற்கையாக திறமை வேண்டும்.
சார்லி சாப்ளினைப் போல் நடிக்கும் போட்டியில் அவரே நான்காவதாக வந்தார்.
இலக்கியம் வாழ்வை மிஞ்சுகிறது.
பிறரைப் போல் நடிப்பது உண்மையான வாழ்க்கையை மிஞ்சுகிறது.
நாம் எவ்வாறு இருக்கிறோமோ அதே போல் இருப்பதற்கு ஆழ் மனத்தின் திறமை அவசியம்.
பிறரைப்போல் இருப்பதற்கு, நனவுபூர்வமான திறமை வேண்டும்.
அதாவது உண்மையைவிட நடிப்பு மேம்பட்டதாக இருக்க வேண்டும்.
கீழே விழுந்த மனிதன் தனக்கு சமமானவருடன் ஒத்த நிலைக்கு வருவதற்கு எடுக்கும் முயற்சியில் அவர்களையும் மிஞ்சிவிடுவான்.
லிடியாவின் திறமைகள் மிகவும் குறைவு, அவளுடைய சக்தியோ முடிவில்லாதது.
கட்டுப்பாடற்ற அவளுடைய சக்தியை அவளுடைய தாயார் சிறந்த சந்தோஷம் எனக் கருதுகிறாள்.
ஒரு தாயாருக்கு அவளுடைய குழந்தை அப்பழுக்கற்றவள், அதிலும் கடைசி குழந்தை மேலும் சிறப்பானவள்.
தன்னுடைய அடையாளத்தை எவ்வாறு மறைப்பது என்று லிடியா ஒருவேளை ஒத்திகை பார்த்திருப்பாள் போலும்.
ஒரு மனிதனை மறைப்பது, வண்டியில் நெருக்கமாக உட்காருவது, சிரித்து உரக்க பேசுவது இவற்றில் அவள் சந்தோஷப்படுகிறாள். இவையெல்லாம் பதப்படாத அவளுடைய சக்தி முறைப்படுத்தப்படாது வெளிப்படுவதைக் காண்பிக்கின்றன.
விக்காம் பார்வையாளர்கள் மத்தியில் இருந்ததைத் தவிர, அவன் மீது அவளுக்கு எந்த எண்ணமும் இருப்பதற்குரிய அறிகுறி எதுவும் இல்லை.
அது உண்மையெனில் அவள் அந்த தருணத்தின் உந்துதலில் செயல்பட்டாள்.
கிட்டி போற்றிப் பாதுகாத்துக் கொண்டிருந்த இரகசியத்திற்கு இது முரணாக இருக்கிறது.
இது கற்பனையில் உதித்த இரகசியமா அல்லது உண்மையா என்பது தெரியவில்லை.
குற்றவாளிகள் தங்களுடைய வழக்கமான இடங்களில் ஒளிந்துகொண்டிருப்பது ஆபத்தானது.

அது விக்காமின் சாதுரியம் எதையும் வெளிப்படுத்துவதில்லை.
தான் கண்டுபிடிக்கப்படுவதை அவன் ஒருவேளை லட்சியம் செய்யவில்லை போலும்.
விளைவுகளைப் பற்றி அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.
தண்டனைக்கு விக்காம் ஒருவேளை பழக்கப்பட்டு விட்டான் போலும்.
அது அவனது சொரணையற்ற தன்மைக்கு பொருத்தமாக இருக்கிறது.
எலிசபெத், விக்காம், டார்சி இவர்களை லிடியா சரிகட்டுவது, சமூக வாழ்க்கையின் விஸ்தீரணத்தைக் காண்பிக்கிறது.
அந்த விஷயத்தில், வாழ்க்கையின் விஸ்தீரணம் மிகப் பெரிதாக இருக்க வேண்டும்.
யோகத்தில் வாழ்வும் ஆன்மாவும் இரு முனைகள்.

With such kind of histories of their parties and good jokes, did Lydia, assisted by Kitty's hints and additions, endeavour to amuse her companions all the way to Longbourn. Elizabeth listened as little as she could, but there was no escaping the frequent mention of Wickham's name.
விருந்துகளில் நடந்த இதுபோன்ற கதைகளினாலும், ஹாஸ்யமான நிகழ்ச்சிகளினாலும், அவ்வப்போது கிட்டி தரும் குறிப்புகளும், கூடுதல் தகவல்களின் உதவியால் லிடியா லாங்பர்ன் போகும்வரை எல்லோரையும் சந்தோஷப்படுத்த முற்பட்டாள். எலிசபெத் அதிகம் கேட்டுக்கொள்ள முன்வரவில்லை. ஆனால் விக்காமின் பெயரைச் சொல்லும் பொழுதெல்லாம் அவள் காதில் அது விழத் தவறவே இல்லை.

61. Frequent mentioning of Wickham's name – the first sure sign of future elopement.
விக்காமின் பெயரை அடிக்கடி கூறுவது, எதிர்காலத்தில் ஓடிப்போகப் போவதை காண்பிக்கும் நிச்சயமான அறிகுறியாகும்.

62. "Elizabeth listened as little as she could. There was no escaping the name Wickham".
By not listening we can move away from the problem, not solve it.
The frequent naming of Wickham is the right indication.
The best one can do in a circumstance of potentially unhelpful situation is to wean himself away. This is to be neutral.
Lydia saw a potential advantage when Miss King went away and began to work on it.
Can we think of a parallel in Elizabeth in the opposite direction?
A problem does not lend itself to be addressed unless it acquires a certain proportion.
Those who will help largely when one falls ill will not offer a small help earlier when it could be prevented.
Elizabeth can have no idea of working on herself now in such a fashion as to prevent the elopement.
The world does not have that knowledge.
It is a subtle knowledge of life.
Assuming that she had that knowledge, what was in her power.
She must have withdrawn her mental adoration of Wickham.
What Elizabeth does in her Mind, Lydia does in life.
Elizabeth has that power in her own Mind to prevent the tragedy.
Suppose she had done so in her mind, she would have found that at a certain point when she was trying not to adore Wickham, her Mind, in spite of her, would noisily adore him.
That little noise in her Mind not under her control, is the subtle equivalent to physically running away.
Devotees have the power of consecrating that vibration to prevent a later event.
One who does so will discover the power of Mind; here it is in prevention but I am talking about creating opportunities.
More than creating opportunities thus, to surrender any thought brings in Mother's opportunities.
"எலிசபெத் தன்னால் இயன்றவரை மிகக் குறைவாகவே செவிமடுத்தாள், விக்காமின் பெயரை காதில் வாங்கிக் கொள்ளத் தவறவே இல்லை."
கேட்டுக் கொள்ளாமல் இருப்பின் அப்பிரச்சினையிலிருந்து விலகலாம், ஆனால் அதனை தீர்க்க முடியாது.
விக்காமின் பெயரை அடிக்கடி குறிப்பிடுவது, சரியான அறிகுறியாகும்.
எதுவும் செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் அதை விட்டு விலகுவதே ஒருவர் செய்யக் கூடிய நல்லதாக இருக்கும். இது நடுநிலையாக இருக்க வேண்டும்.
மிஸ் கிங் விலகிச் சென்றவுடன், சாதகமான அச்சந்தர்ப்பத்தினை புரிந்துகொண்ட லிடியா அதற்கான வேலையை ஆரம்பித்தாள்.
எலிசபெத்திடம் இதற்கு இணையாக வேறு ஏதேனும் நம்மால் எதிர்திசையில் சிந்திக்க முடியுமா?
ஒரு பிரச்சினை குறிப்பிட்ட நிலையை அடையும்வரை அதை சரிசெய்ய அனுமதிக்காது.
உடல் நலம் குன்றிய ஒருவருக்கு மிகப் பெரிய உதவி செய்பவர், இதனை தவிர்த்திருக்கக் கூடிய சிறிய உதவியையும் ஆரம்பத்தில் செய்திருக்க மாட்டார்.
தான் இப்பொழுது என்ன செய்தால் ஓடிப்போவதைத் தவிர்த்திருக்கலாம் என்று எலிசபெத்திற்கு தெரிந்திருக்க முடியாது.

உலகத்திற்கு அந்த அறிவு இல்லை.
வாழ்க்கையின் சூட்சும அறிவு அது.
அவளுக்கு அந்த அறிவு இருக்கிறது என்று வைத்துக்கொண்டால், அவளுடைய சக்திக்குட்பட்டது எது.
விக்காமை மனத்தால் போற்றியதை, அவள் விலக்கியிருப்பாள்.
எலிசபெத் மனதில் செய்வதை, லிடியா வாழ்க்கையில் செய்கிறாள்.
ஆபத்தை தடுக்கும் சக்தி எலிசபெத்தின் மனதிற்கு உண்டு.
அவள் அவ்வாறு மனதில் செய்திருந்தால் விக்காமை மனதால் அன்புடன் நினைக்கக் கூடாது என்று முயற்சி எடுக்கும்பொழுது, ஏதாவது ஒரு இடத்தில் அவளையும் மீறி அவளுடைய மனம் மேலும் தீவிரமாக அவனை அன்புடன் நினைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்திருப்பாள்.
அவளுடைய வசத்தில் இல்லாத அவளுடைய மனதில் இருக்கும் அச்சிறிய ஓசை, உண்மையாகவே ஓடிப்போவதற்கு சூட்சுமமாக இணையானது.
பின்னால் வரப் போகும் நிகழ்வின் அதிர்வினை சமர்ப்பணம் செய்வதன் மூலம் அதனை தடுக்கும் சக்தி அன்பர்களுக்கு உண்டு.
இதை செய்பவர்களுக்கு மனத்தின் சக்தி புரியும்; இங்கு தடுப்பதைப் பற்றி கூறப்பட்டுள்ளது, ஆனால் நான் வாய்ப்புகளை உற்பத்தி செய்வதைப் பற்றி பேசுகிறேன்.
வாய்ப்புகளை இவ்வாறு உற்பத்தி செய்வதைவிட, எல்லா எண்ணங்களையும் சமர்ப்பணம் செய்தால் அன்னை தரும் வாய்ப்புகள் கிடைக்கும்.

Their reception at home was most kind. Mrs. Bennet rejoiced to see Jane in undiminished beauty; and more than once during dinner did Mr. Bennet say voluntarily to Elizabeth –
வீட்டில் அவர்களை எல்லோரும் அன்புடன் வரவேற்றனர். ஜேனுடைய அழகு குறையாமல் இருந்ததைப் பார்த்து திருமதி. பென்னட் மிகவும் சந்தோஷமடைந்தாள்; இரவு உணவு உண்ணும்பொழுது எலிசபெத்திடம் திரு. பென்னட் ஒரு முறைக்கு மேலேயே....

63. Jane's heart is not really touched.
ஜேனுடைய மனத்தில் உண்மையில் எந்த பாதிப்பும் இல்லை.
64. Mr. Bennet has his mind on Lizzy.
திரு பென்னட்டின் மனம் லிசியின் மேல் இருந்தது.

"*Jane in undiminished beauty*". *Jane's heart is untouched and that is why her beauty is undiminished.*
"ஜேன் அழகு குறையாமல் இருந்தாள்," ஜேனுடைய இதயம் யாராலும் தொடப்படாமல் இருந்ததால் அவளுடைய அழகும் குறையாமல் இருந்தது.

"*I am glad you are come back, Lizzy."*
"லிசி, நீ திரும்பி வந்ததில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி," என்றார்.

65. "More than once Mr. Bennet expressed his joy at her return".
Elizabeth was no mere pet to her father. **He consciously developed certain attitudes in her Mind**.
They are faculties of her Mind.
Children do as parents do, not as they are told because the communication is subliminal. It develops by being together, by one taking to another, **by a positive psychological disposition**.
Gandhiji so developed the second level leadership of the Congress.
Nehru was the only parent who consciously did it to his child.
James Mill did it to his son Stuart Mill with respect to education.
Faculties can be developed with difficulty, not values.
Values too can be developed in willing instruments.
What is not possible is those who do not want to learn.
In doing so, he created a better tool.
To develop thinking there must be freedom to think and encouragement.
To develop imagination there must be inspiration.
To develop discrimination, there must be situations to exercise oneself.
To develop patience there must be inner strength imparted.
To develop equality of non-reaction he must be infected by a vibration of non-reaction.
Insistence on non-reaction will create reaction.
Capacity for non-reaction is infectious.
Emulation of values, imitation of habits.
The differentials in energy, the right attitude of reception, the power of the context, the non-insistence on teaching are positive aspects.

Anything can be taught in the right conditions.
Lack of receptivity is the greatest bar to learning.
If there is anything worse, it is the anxiety to teach.
Anxiety to teach is egoistic.
Ego will be stiffly resisted.
“அவள் திரும்பி வந்தவுடன், திரு பென்னட் ஒரு முறைக்கு மேல் தன்னுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்தினார்”.
எலிசபெத் அவளுடைய தந்தைக்கு செல்லப் பெண் மாத்திரம் அல்ல. **அவளுடைய மனதில் அவர் அறிந்தே சில மனோபாவங்களை வளர்த்திருந்தார்.**
அவை அவளுடைய மனத்தின் திறன்களாகும்.
பெற்றோர்கள் செய்வதையே குழந்தைகளும் செய்வார்கள், பெற்றோர்கள் கூறுவதை செய்யமாட்டார்கள், ஏனெனில் தொடர்பு அடிமனதில் உள்ளது. அது ஒன்றாக இருப்பதன் மூலம் வளரும், ஒருவர் மற்றொருவரை பின்பற்றுவதன் மூலமும் **நேர்மறையான மனநிலைப்பாடு மூலமும் வளரும்.**
இவ்வாறு காந்திஜி இரண்டாவது நிலை தலைமையை காங்கிரஸில் உருவாக்கினார்.
நேரு மட்டுமே தன் மகளிடம் மனமறிந்து இவ்வுணர்வினை வளர்த்தார்.
கல்வி சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஜேம்ஸ் மில் தன்னுடைய மகன் ஸ்டுவர்ட் மில்லிடம் இது போன்று செயல்பட்டார்.
கஷ்டப்பட்டு திறமைகளை உருவாக்கலாம் பண்புகளை உருவாக்க முடியாது.
விருப்பம் உடையவர்களிடம் பண்புகளையும் உருவாக்கலாம்.
கற்றுக் கொள்ள விருப்பமில்லாதவரிடம் எதுவும் செய்ய முடியாது.
அவ்வாறு செய்யும்பொழுது அவன் மேலும் சிறந்த கருவியை உருவாக்கினான்.
சிந்திக்கும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றால் சிந்திப்பதற்கு சுதந்திரம் வேண்டும், அதற்கு ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும்.
கற்பனைத் திறனை வளர்த்துக்கொள்ள ஊக்கம் இருக்க வேண்டும்.
பாகுபாடு உணர்வினை வளர்த்துக்கொள்ள, தன்னையே கையாண்டுக் கொள்ள சந்தப்பம் இருக்க வேண்டும்.
பொறுமையை வளர்த்துக்கொள்ள, உள்ளே வலிமை இருக்க வேண்டும்.
எதிர்வினை ஆற்றாமலிருக்க, அதனுடைய அதிர்வு ஒருவரை முழுமையாக ஆட்கொண்டிருக்க வேண்டும்.
எதிர்வினை ஆற்றாமலிருக்க வற்புறுத்தப்பட்டால், எதிர்வினை உருவாகிவிடும்.
எதிர்வினை ஆற்றாமலிருக்கும் திறன் தொற்றிக்கொள்ளும் தன்மையுடையது.
பண்புகளை பின்பற்ற நினைப்பதும், பழக்க வழக்கங்களை சாயல் கொள்வதும்.
சக்தியில் வேறுபாடுகள், பெற்றுக் கொள்வதில் சரியான மனோபாவம், விஷயத்தின் சக்தி, கற்றுக்கொடுப்பதில் வலியுறுத்தாமை, இவை நேர்மறையான விஷயங்கள்.
சரியான நிலைமைகளில் எதை வேண்டுமென்றாலும் கற்றுக் கொடுக்கலாம்.
கற்றுக் கொள்வதற்கு பெரிய தடை, ஏற்புத்திறன் இல்லாமல் இருப்பது.
இதைவிட மோசமானது ஒன்று இருந்தால், அது கற்றுக் கொடுப்பதற்கான தவிப்பு.
கற்றுக் கொடுப்பதற்கு இருக்கும் தவிப்பு அகந்தைக்குரியது.
அகந்தை பிடிவாதமாக தடுக்கப்பட்டு விடும்.

Their party in the dining-room was large, for almost all the Lucases came to meet Maria and hear the news: and various were the subjects which occupied them: Lady Lucas was enquiring of Maria, across the table, after the welfare and poultry of her eldest daughter; Mrs. Bennet was doubly engaged, on one hand collecting an account of the present fashions from Jane, who sat some way below her, and, on the other, retailing them all to the younger Miss Lucases; and Lydia, in a voice rather louder than any other person's, was enumerating the various pleasures of the morning to anybody who would hear her.
லூகாஸ் குடும்பத்தினர் அனைவரும் மரியாவைச் சந்தித்து விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்காக வந்ததினால் உணவு உண்ணும் அறையில் கூட்டம் அதிகமாக இருந்தது. அவர்களுக்குப் பேச பல்வேறு விஷயங்கள் இருந்தன; தன்னுடைய மூத்த மகளின் நலனைப்பற்றியும், அவளுடைய கோழிப்பண்ணையைப் பற்றியும் மேஜையின் எதிர்ப்புறம் அமர்ந்திருந்த மரியாவிடம் லேடி லூகாஸ் விசாரித்துக் கொண்டிருந்தாள். திருமதி. பென்னட் இரண்டு வித வேலைகளில் ஈடுபட்டு கொண்டிருந்தாள். மேஜையின் கடைசியில் அமர்ந்திருந்த ஜேனிடமிருந்து தற்பொழுதுள்ள நாகரிகத்தைப்பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டு, அதனை லூகாஸ் குடும்பத்தின் இளைய மகள்களுக்கு தெரிவித்துக் கொண்டிருந்தாள். லிடியா மற்றவர்களைக் காட்டிலும் உரத்த குரலில், தன்னுடைய பேச்சைக் கேட்க விரும்புபவருக்கு, காலையில் நடந்த மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தாள்.

66. The Lucas family is proud of Mr. Collins.
    காலின்ஸை நினைத்தால் லூகாஸ் குடும்பத்திற்கு பெருமையாக உள்ளது.
67. Charlotte’s mother enquires about the poultry!

கோழிப் பண்ணையைப் பற்றி ஷார்லெட்டின் தாயார் விசாரிக்கிறாள்.

68. Her mind, like that of Mrs. Bennet, was on it.
திருமதி பென்னட்டைப் போல் அவளுடைய மனமும் அதில்தான் இருக்கிறது.
69. Lydia's voice was louder.
லிடியாவின் குரல் உயர்ந்து இருந்தது.
70. Something in her was ready for action.
அவளுள் ஏதோ ஒன்று செயல்படத் தயாராக இருந்தது.
71. Charlotte's mother asks after the poultry of her eldest daughter, thus revealing the level of mind she possesses.
ஷார்லெட்டின் தாயார் தன்னுடைய மூத்த மகளின் கோழிப் பண்ணையை பற்றி விசாரிக்கிறாள், அவளது மனத்தின் நிலையை அது வெளிப்படுத்துகிறது.
72. "All the Lucases came to meet Maria".
Travel is a novelty to the nerves adores by Mind.
A daughter well settled is a wonder of rapture.
The Lucases feel equal to Longbourn and more.
To be basking in the Sun of Rosings is better than the property of Longbourn.
Rosings is patronage to Lodge; Pemberley is property to Longbourn.
Pride in the shadow is the forerunner of the reality of property to another.
Mrs. Bennet's teasing brought marriage and Longbourn to Lucas.
The silent pride in Rosings is secure relationship with Darcy.
Darcy's transformation saved Longbourn for Pemberley.
The Lucas family meets Maria half way.
Mrs. Bennet is generous in her invitation to the Lucases in spite of depressing domestic circumstances.
Be cheerful, life will be cheerful.
Human punishment is divine reward.
Divine life converts intensity of cruelty to raptures of delight.
From senses to Mind, from Mind to Soul and thence to the Psychic.
The Rishi bypasses the limiting senses.
The yogi purifies the senses to extend the soul-scope.
Concentration that matures into consecration shifts from the surface to the subliminal.
The universe reconciles, transcendence transmutes.
Widening the view, the ego is weakened to dissolve.
Conflicts in universal impersonality become complementary harmony.
In Transcendence Multiplicity discovers the intensity of unity in the Individual.
The ignorant ego in time is the universal Purusha in the Timeless universal.
The Individual grows by universalisation, matures by transcendence remaining in Time converting it into Simultaneous integrality.
Ego-Purusha-Psychic is the progress.
Individual-universal-Transcendence are the rising planes.
Mind—Overmind—Supermind are the fields of action for evolution.
Finite—infinitesimal—Infinity.
"லூகாஸ் குடும்பத்தினர் அனைவரும் மரியாவை சந்திக்க வந்தனர்."
உணர்வுகளுக்கு பிரயாணம் புதுமை, அது மனத்தால் போற்றப்படுகிறது.
மகள் வாழ்க்கையில் திருமணமாகி நன்றாக இருப்பது பரவசத்திற்குரியது.
லாங்பர்னுக்கு சமமாகவும் அதற்கும் மேலாக இருப்பது போன்ற உணர்வினை லூகாஸ் குடும்பத்தினர் பெறுகின்றனர்.
ரோசிங்ஸின் வெய்யிலில் குளிர் காய்வது, லாங்பர்னில் சொத்து இருப்பதைவிட மேலானது.
பாதிரி விடுதிக்கு ஆதரவு ரோசிங்ஸ்; லாங்பர்னுக்கு பெம்பர்லி சொத்து.
ரோசிங்ஸின் நிழலில் இருக்கும் லூகாஸ் குடும்பத்தினர் அடையும் பெருமிதம், பின்னால் பென்னட் குடும்பத்திற்கு பெம்பர்லி கிடைக்கப் போவதன் அறிகுறியாகும்.
திருமதி பென்னட்டின் கேலிப்பேச்சு திருமணம் மற்றும் லாங்பர்னை, லூகாஸ் குடும்பத்திற்கு கொண்டு சேர்த்தது.
ரோசிங்ஸின் உறவில் ஏற்படும் மௌனமான பெருமை, டார்சியுடன் இருக்கும் பாதுகாப்பான உறவை உறுதிப்படுத்துகிறது.
டார்சியின் திருவுருமாற்றம், லாங்பர்னை பெம்பர்லிக்கு பாதுகாத்து கொடுத்தது.
லூகாஸ் குடும்பம் மரியாவை பாதி வழியில் சந்தித்தனர்.

வீட்டின் நிலைமை மோசமாக இருந்தபோதிலும், திருமதி பென்னட் பெருந்தன்மையாக லூகாஸ் குடும்பத்தினருக்கு அழைப்பு விடுத்தாள்.

நாம் சந்தோஷமாக இருந்தால் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும்.

மனிதன் அளிக்கும் தண்டனை, இறைவனின் பரிசாகும்.

கொடுமையின் தீவிரத்தை, பெருமகிழ்ச்சியாக மாற்றுவது தெய்வீக வாழ்வு.

புலன்களிலிருந்து மனத்திற்கு, மனத்திலிருந்து ஆன்மாவிற்கு, பிறகு சைத்திய புருஷனுக்கு மாற வேண்டும்.

வரையறுக்கும் புலன்களை ரிஷிகள் தவிர்த்து விடுகின்றனர்.

ஆன்மாவின் செயற்பரப்பினை விரிவுபடுத்த உணர்வுகளை யோகிகள் தூய்மைப்படுத்துகின்றனர்.

மனத்தை ஒரு நிலைப்படுத்துவது சமர்ப்பணமாக முதிர்ச்சி அடையும் பொழுது, மேல் பரப்பிலிருந்து அடிமனதிற்குச் செல்கிறது.

பிரபஞ்சம் சமரசப்படுத்துகிறது, பிரம்மம் உருமாற்றுகிறது.

பார்வையினை விரிவுபடுத்தினால், அகந்தை பலவீனமடைந்து கரைகிறது.

பிரபஞ்ச தனித்துவமற்றதில் உள்ள முரண்பாடுகள், சுமுகமாக பூர்த்தி செய்யப்படுகின்றன.

பிரம்மத்தில் பலவகைத் தன்மை, தனி மனிதனிலுள்ள ஒருமைப்பாட்டின் தீவிரத்தை கண்டுபிடிக்கிறது.

காலத்தில் இருக்கும் அறியாமையான அகந்தை, காலத்தைக் கடந்த பிரபஞ்சத்தில் உள்ள பிரபஞ்ச புருஷனாகும்.

தனி மனிதன் பிரபஞ்சமாவதன் மூலம் வளருகிறான், காலத்தை கடந்து சென்று இதனை மூன்றாம்நிலை காலமாக மாற்றி, முதிர்ச்சி அடைகிறான்.

அகந்தை, புருஷா, சைத்திய புருஷன் இவை முன்னேறும் நிலைகள்.

தனி மனிதன், பிரபஞ்சம், பிரம்மம் இவை உயரும் நிலைகள்.

மனம், தெய்வீக மனம், சத்திய ஜீவியம், இவை பரிணாமத்தின் செயலுக்குரிய களங்களாகும்.

கண்டம், மிகச் சிறியது, அகண்டம்.

73. "Lady Lucas inquiring across the table about poultry".

Interest of Men and women varies vastly.

Of all the aspects of the Parsonage, Lady Lucas could think of the poultry first.

In the most important international summits, often the determinant is the quality of wine and dishes.

Stalin and Churchill liked each other because both were good eaters.

Louis XIV loved those guests who ate well.

It is true great things and small items go together, even one determines the other.

It symbolizes the finite that is the infinite.

The words of the saint, 'unless food is brought to me to where I am with yearning devotion, let me not eat'.

One's spiritual realization can fix such a detail forever all throughout one's life is the truth contained in this statement.

Commonly the quality of food and the quality of service thus created determine the quality of his spiritual realization. This is also the Truth.

It shows the saints had the knowledge of integral existence in creation.

Painting one's picture from his toe speaks of the same phenomenon.

Krishna's thirteen years in thirteen days speaks of it.

In the Internet we see that conquering the smallest flaw when it is the last signifies a breakthrough.

A cyclone that forms in the sea has a point of significance. Its changing determines its formation.

One who prays to dissolve the cyclone sees such a point in his vision and when his light touches that point the cyclone dissolves.

Alexander Dumas speaks of the charm of a clip.

We know the power of a single consecrated letter to Cadburys.

Rich, mature, spiritual culture in a family produces children that are flawless products of perfection.

At least one Cabinet Minister lost forever the esteem of Nehru wrongly or awkwardly pronouncing a French word in a class in jail.

"லேடி லூகாஸ் கோழிப் பண்ணையைப் பற்றி மேஜையின் எதிர்புறத்திலிருந்து விசாரிக்கிறாள்."

ஆண்களின் விருப்பங்களும், பெண்களின் விருப்பங்களும் வெகுவாக வித்தியாசப்படுகின்றன.

பாதிரி விடுதியில் உள்ள எல்லா விஷயங்களையும் தாண்டி, லேடி லூகாசிற்கு கோழிப் பண்ணைதான் முதலில் ஞாபகத்திற்கு வருகிறது.

வெகு முக்கியமான சர்வதேச மாநாடுகளில், மது மற்றும் உணவின் தரம்தான் முடிவுகளை நிர்ணயம் செய்கின்றன.

ஸ்டாலினும் சர்ச்சிலும் ஒருவரை ஒருவர் விரும்பினர், ஏனெனில் இருவருமே நன்றாக சாப்பிடக் கூடியவர்கள்.

நன்றாக சாப்பிடக் கூடிய விருந்தாளிகளை பதினான்காம் லூயிக்கு மிகவும் பிடிக்கும்.

பெரிய விஷயங்களும், சிறிய வகைகளும் இணைந்து இருக்கும் என்பது உண்மை, ஒன்று மற்றொன்றை நிர்ணயிக்கவும் செய்யும்.

அகண்டமான கண்டத்தை அது அடையாளப்படுத்தும்.
பட்டினத்தார், 'இருக்குமிடம் தேடி என் பசிக்கு அன்னம் கொண்டு வந்தால் உண்பேன்' என்றார்.
ஒருவரது ஆன்மீகச் சித்தியால், அவரது வாழ்க்கை முழுவதிலுமுள்ள இவ்வாறு நுணுக்கமான விஷயங்களைத் தீர்மானிக்க முடியும் என்பது மேலே கூறிய வார்த்தைகளில் உள்ள உண்மை.
பொதுவாக இவ்வாறு உருவாக்கப்படும் உணவின் தரமும், சேவையின் தரமும், அவரது ஆன்மீக சித்தியின் நிலையை நிர்ணயிக்கும். இதுவும் உண்மை.
சிருஷ்டியில் உள்ள பூரணமான வாழ்வின் ஞானம் மகான்களுக்கு இருந்தது என்பதை இது காண்பிக்கின்றது.
கால் கட்டை விரலைப் பார்த்து ஒருவரது உருவப் படத்தை வரைவது இதே நிகழ்வினை விளக்குகிறது.
கிருஷ்ணருடைய பதிமூன்று வருடங்கள் பதிமூன்று நாட்களானது இதே போல்தான்.
கடைசியாக இருக்கும் மிகச் சிறிய குறையை சரி செய்தவுடன், பெரிய கண்டுபிடிப்பு ஏற்படுவதை இணையதளத்தில் நாம் பார்க்கிறோம்.
கடலில் உற்பத்தியாகும் புயலுக்கு ஒரு முக்கியமான மையம் இருக்கும். அதன் மாற்றம் அது உருவாவதைத் தீர்மானிக்கும்.
புயலை கரைக்க வேண்டும் என்று ஒருவர் பிரார்த்தனை செய்யும்பொழுது அவர் அம்மையத்தை தனது திருஷ்டியில் பார்த்து தனது ஒளியால் அம்மையத்தை தொடும்பொழுது புயல் கரைகிறது.
அலங்கார ஊசியின் கவர்ச்சியைப் பற்றி அலெக்சாண்டர் டுமாஸ் பேசுகிறார்.
சமர்ப்பணம் செய்து Cadburysக்கு எழுதப்பட்ட ஒரே ஒரு கடிதத்தின் சக்தியைப் பற்றி நமக்குத் தெரியும்.
செழிப்பான முதிர்ச்சி பெற்ற ஆன்மீக நாகரிகம் படைத்த ஒரு குடும்பம் அப்பழுக்கற்ற சிறந்த குழந்தைகளை உருவாக்கும்.
சிறையில் நடந்த வகுப்பில் ஒரு பிரெஞ்சு வார்த்தையை தவறாகவோ அல்லது சங்கடமாகவோ உச்சரித்ததற்கு, ஒரு மத்திய அமைச்சர் நேருவின் மதிப்பை நிரந்தரமாக இழந்தார்.

74. "Lydia in a voice louder than any other person".

Determination to have a work done generates a loud voice.
Spiritual opening at the depth robs the voice forever.
Every act, decision, emotion inside has its own way of expressing outside.
The articulated voice of a prophet or a pioneer who will be followed by all the world is heard by the world as a slogan such as "Proletariat of the world, unite" or Non-violence or Reject the Brahmin.
A rishi's tapas of a life time is realized in a short mantra.
National culture comes to be observed by foreigners in a trait such as perfection, honour, unreliability.
Indian spirituality thus presides over her soil as spiritual peace.
Alighting from the plane in America, one sees her Freedom in the atmosphere.
Families coming from outside for a bride, if they see the mother of the girl at a water course, they can know all about the bride.
Bingley, in his elation of dancing with Jane, called Darcy stupid and made him speak 'tolerable' making those two words decide the course of the story.
We see the significance of an ICS officer founding the Indian National Congress.
In the rich harvest unusual there in Ramapuram in 1969 we see her present prosperity.
Loud voice is expressive of deep determination of the physical.
Non-speaking is expressive of silent accomplishment.
A determined walker is an efficient executor.
An organizer silently broods or thinks.
One who understands people becomes popular.
Forced smile- பச்சை சிரிப்பு- indicates treacherous behaviour.
One who speaks ignoring all those around is one who will assert his opinion.
An agile body shows capacity for endless work.
Asking help from sources not related indicates gross ingratitude later.
One who espouses greater idealism than is really possible is one who will give way at the first appearance of temptation.
A rich house as Rosings is a fit place for others to have their work completed.
"மற்ற யாவரையும் விட லிடியாவின் குரல் ஓங்கி இருந்தது."
ஒரு வேலையை செய்து முடிக்க வேண்டும் என்ற உறுதி இருக்கும்பொழுது குரல் ஓங்கி எழும்.
ஆழத்தில் ஏற்படும் ஆன்மீக விழிப்பு குரலை நிரந்தரமாக இழக்கச் செய்யும்.
உள்ளே எழும் ஒவ்வொரு செயலும், முடிவும், உணர்வும், வெளிப்பட அவற்றிற்கான தனி வழிகள் உள்ளன.
உலகத்தினர் அனைவராலும் பின்பற்றப்படும் ஒரு தீர்க்கதரிசியோ அல்லது ஒரு முன்னோடியோ தெளிவான குரலில் பேசும் பேச்சு ஒரு கோஷம் போல் உலகத்தினரால் கேட்கப்படும், 'உலகத்தின் பாட்டாளி மக்களே, இணையுங்கள்', அல்லது 'அஹிம்சை' அல்லது 'பிராமண நிராகரிப்பு' போன்றவை.

ஒரு ரிஷி வாழ்நாள் முழுதும் தவம் செய்து அடையும் பலனை, ஒரு சிறிய மந்திரத்தின் மூலம் அடையலாம்.
பூரணத்துவம், மரியாதை, நம்பிக்கையின்மை இது போன்ற குணங்களில் ஒரு நாட்டின் கலாச்சாரம் வெளிநாட்டினரால் பார்க்கப்படுகிறது.
இந்திய ஆன்மீகம், தாய் மண்ணில் ஆன்மீக அமைதியாக தலைமை தாங்குகிறது.
அமெரிக்காவில் விமானத்திலிருந்து இறங்கும்போது, அங்குள்ள சுதந்திரத்தை அங்குள்ள சூழலில் பார்க்கலாம்.
வெளியிலிருந்து குடும்பங்கள் திருமணத்திற்கு பெண் பார்க்க வரும்பொழுது, நீர்நிலையில் தாயாரை பார்க்க நேரிடும்பொழுது, அவர்களால் பெண்ணைப் பற்றி அனைத்தையும் அறிந்துகொள்ள முடிகிறது.
பிங்கிலி, ஜேனுடன் நடனமாடும் சந்தோஷத்தில் டார்சியை முட்டாள் என்று குறிப்பிட்டு, அவனை 'பரவாயில்லை' என்று கூற வைத்து, அந்த இரு வார்த்தைகளால் கதையின் போக்கு நிர்ணயம் செய்யப்பட்டது.
ஒரு ICS அதிகாரி, இந்திய தேசிய காங்கிரஸ்-ஐ நிர்மாணித்ததன் முக்கியத்துவத்தை நாம் பார்க்கிறோம்.
1969ல், ராமாபுரத்தில் சாதாரணமாகப் பார்க்க முடியாத செழிப்பான அறுவடையில், இன்றைய வளத்தைப் பார்க்கிறோம்.
உடலளவில் ஆழ்ந்த உறுதியின் வெளிப்பாடே உரத்த குரல்.
மௌனமாக சாதிப்பதன் வெளிப்பாடு பேசாமல் இருப்பது.
உறுதியோடு நடப்பவர் திறமையாக நிறைவேற்றுவார்.
ஒரு அமைப்பாளர் மௌனமாக ஆழ்ந்து யோசிப்பார் அல்லது சிந்திப்பார்.
மக்களை புரிந்து கொள்பவர் பிரபலமாவார்.
கபடமாக சிரிப்பவர், கொடுமையான நடத்தை உடையவர் என்பதைக் குறிக்கிறது.
சுற்றி இருக்கும் அனைவரையும் புறக்கணித்து ஒருவர் பேசினால், அவர் தன்னுடைய கருத்தை நிலை நாட்டுபவராக இருப்பார்.
சுறுசுறுப்பான உடல் முடிவில்லாது வேலை செய்யும் திறனுடையது.
சம்பந்தமில்லாத இடத்திலிருந்து உதவி கேட்பது, பின்னால் ஏற்படப் போகும் மிகப் பெரிய நன்றி கெட்டத்தனத்தைக் குறிக்கிறது.
உண்மையில் நடக்க முடியாத இலட்சியங்களை ஆதரிக்கும் ஒருவர், எழும் முதல் சபலத்தில் அதனை கைவிட்டு விடுவர்.
மற்றவர்களுக்கு விஷயம் பூர்த்தியாவதற்கு, ரோசிங்ஸ் போன்ற பணக்கார வீடு ஒரு பொருத்தமான இடம்.

"Oh! Mary," said she, "I wish you had gone with us, for we had such fun! As we went along, Kitty and me drew up all the blinds, and pretended there was nobody in the coach; and I should have gone so all the way, if Kitty had not been sick; and when we got to the George, I do think we behaved very handsomely, for we treated the other three with the nicest cold luncheon in the world, and if you would have gone we would have treated you too. And then, when we came away, it was such fun! I thought we never should have got into the coach. I was ready to die of laughter. And then we were so merry all the way home! We talked and laughed so loud, that anybody might have heard us ten miles off!"
"ஓ! மேரி, நீயும் எங்களுடன் வந்திருக்கலாம், ஏனெனில் நாங்கள் அவ்வளவு குதூகலமாக இருந்தோம். நாங்கள் வண்டியில் போகும்பொழுது உள்ளே யாரும் இல்லை என்று மற்றவர்கள் நினைத்துக்கொள்வது போல் எல்லா திரைச் சீலைகளையும் இழுத்துவிட்டு விட்டோம், கிட்டி மாத்திரம் உடல் நலமில்லாமல் இருக்கவில்லை என்றால் பிரயாணம் முழுவதும் அப்படியே சென்றிருப்போம். நாங்கள் ஜார்ஜ் போய் சேர்ந்தவுடன் மிகவும் சிறப்பாக நடந்து கொண்டோம் என்று நினைக்கிறேன் ஏனெனில் நாங்கள் மற்ற மூவருக்கும் உலகத்திலேயே சிறந்த உணவு வழங்கினோம், நீயும் வந்திருந்தால் உனக்கும் அளித்திருப்போம். நாங்கள் திரும்பி வந்த பொழுது அவ்வளவு வேடிக்கையாக இருந்தது! நாங்கள் வண்டிக்குள் ஏறியே இருந்திருக்கக் கூடாது என்று நினைத்தோம். நான் சிரித்து சிரித்தே இறந்திருப்பேன். வீடு திரும்பும்வரை அவ்வளவு சந்தோஷமாக இருந்தோம்! நாங்கள் அவ்வளவு உரக்கப் பேசினோம், சிரித்தோம், பத்து மைல்களுக்கு அப்பால் உள்ள எவருக்கும் கேட்டிருக்கக் கூடும்!"

75. Lydia asks Mary to appreciate her dynamism.
தன்னுடைய சுறுசுறுப்பை பாராட்டும்படி லிடியா மேரியைக் கேட்கிறாள்
76. This is the subtle anticipation of her elopement.
இது, அவள் ஓடிப்போகப் போவதை சூட்சுமமாக எதிர்நோக்குவது போலாகிறது.
77. The description of Lydia of how they travelled is clearly her celebrating her 'future adventure' so that people at ten miles off will applaud.
அவர்கள் எவ்வாறு பிரயாணம் செய்தனர் என லிடியா விவரிப்பது, பத்து மைல் தள்ளி இருப்பவர்களும் மெச்சுவார்கள் என்று கூறுவது, அவளுடைய 'எதிர்கால தீரச் செயலை' அவள் கொண்டாடுவதை தெளிவாகக் காண்பிக்கின்றது.
78. "If Kitty had not been sick".
When the Mind indulges in what the vital is cultural enough to overcome, the stomach feels sick.
In periods of transition upwards this conflict arises.

For one whose sensitivity has overcome meat, if he eats it out of habit, during the period of digestion, the inner being revolts.
For those who accept an ideal for society's sake, activities that go against that ideal pleases them.
A Man received an affluent guest on his wife's death and he could not deny a broad smile all through the visit.
Kitty implicitly is led by Lydia, but is sick at her boisterous ways.
The head of a Mutt sued in the court that the poems of Ramalinga Swamigal were atheistic and must be prevented from publication. In the court when the Swami entered, the entire waiting audience stood up. The Mutt head too stood up. To a question of the white judge on why he stood up, he answered as others stood up he too did so. The case was dismissed.
Shankara opposing the Buddha became half a Buddist.
You endorse what you oppose.
Psychic is pure, though what accompanies it is not pure.
Psychic, whatever the involvement, never gets affected by impurity.
Shankara who preached inaction all over India was actually executing the greatest possible action.
Devotees imperfectly following 'All life is yoga' end up in finding or making
'All yoga is life'.
Such a hesitation is not seen in Wickham, Mrs. Bennet and Lydia.
To the end they were steady in their inspirations.
Napoleon was thus affected by Royalty.
What Kitty felt was at a primary level.
At the deepest level you become the thing that you oppose.
It happens by conversion or subconscious contagion.
"கிட்டியின் உடல் நலம் குன்றாமல் இருந்திருந்தால்."
உணர்வு எதிர்கொள்ளும் அளவுக்கு பண்பட்டிருக்கும் விஷயத்தில் மனம் ஈடுபட்டால், வயிறு சரியில்லாமல் போகும்.
மேல்நோக்கிப் போகும் மாற்றத்தின் போது இந்தப் போராட்டம் எழும்.
ஒருவருடைய உணர்வு மாமிசத்தை வென்று விட்ட பிறகு பழக்கத்தினால் அதனை உண்ணும்பொழுது, உள்ளிருக்கும் ஜீவன் அதனை எதிர்க்கும்.
சமூகத்திற்காக ஒரு இலட்சியத்தை ஏற்றுக்கொள்பவர்கள் அந்த இலட்சியத்திற்கு எதிராக செயற்பாடுகள் நடக்கும்பொழுது சந்தோஷம் அடைவார்கள்.
தன்னுடைய மனைவி இறந்தபொழுது வந்திருந்த ஒரு முக்கியமான விருந்தாளியை, அவர் அங்கு வந்த பொழுது அவரை மலர்ந்த சிரிப்புடன் வரவேற்காமல் இருக்க முடியவில்லை.
கிட்டி, லிடியாவை முழுமனதோடு பின்பற்றுகிறாள், ஆனால் அவளுடைய ஆர்ப்பாட்டமான முறைகள் அவளுக்குப் பிடிக்கவில்லை.
ராமலிங்க சுவாமிகளின் பாடல்கள் நாத்திகவாதத்தின் அடிப்படையில் இருப்பதால் அதனை வெளியிடக் கூடாது என்று ஒரு மடத்தின் தலைவர் நீதி மன்றத்தில் வழக்குப் போட்டார். நீதிமன்றத்தில் ஸ்வாமிகள் நுழைந்தபொழுது அங்கிருந்த அனைவரும் எழுந்து நின்றனர், மடத்தின் தலைவரும் எழுந்து நின்றார். வெள்ளைக்கார நீதிபதி அவர் எழுந்து கொண்டதன் காரணத்தைக் கேட்டபொழுது, யாவரும் எழுந்து கொண்டதால் தானும் அவ்வாறு செய்ததாக மடத்தின் தலைவர் கூறினார், வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.
புத்தரை எதிர்த்த சங்கரர், பாதி பௌத்தமதத்தை பின்பற்றுபவராக ஆனார்.
எதிர்ப்பதை ஏற்கவும் செய்கிறோம்.
சைத்திய புருஷன் தூய்மையானவன், ஆனால் அதனுடன் சேர்ந்து வருவது தூய்மையற்றதாக இருக்கும்.
எதில் ஆழ்ந்து போனாலும் சைத்திய புருஷன் அசுத்தத்தினால் பாதிப்படைவதில்லை.
இந்தியா முழுவதிலும் செயலின்மையை சங்கரர் போதித்தாலும், உண்மையில் அவர் சாத்தியமான உயர்ந்த செயற்பாடுகளையே செயற்படுத்திக் கொண்டிருந்தார்.
'வாழ்வனைத்தும் யோகம்' என்பதை அன்பர்கள் குறைபாடுடன் பின்பற்றி வரும்பொழுது, 'யோகம் அனைத்தும் வாழ்வே' என்று மாறி இருப்பதையோ அல்லது மாறி வருவதையோ கவனிப்பர்.
இது போன்ற ஒரு தயக்கம் விக்காம், திருமதி பென்னட் மற்றும் லிடியாவிடம் இல்லை.
ஊக்கத்தில் அவர்கள் இறுதிவரை உறுதியாக இருந்தனர்.
இவ்வாறு நெப்போலியன் அரச பதவியால் பாதிக்கப்பட்டான்.
கிட்டி உணர்ந்தது ஆரம்ப நிலையில் உள்ளதாகும்.
ஆழ்ந்த நிலையில் நாம் எதை எதிர்க்கிறோமோ அதுவாகவே மாறுகிறோம்.
மாற்றுவதாலோ அல்லது ஆழ்மன தொற்றுதலாலோ இது நடக்கிறது.

79. "I do think we behaved handsomely"-Lydia.
Kitty too has a compunction without having a conscience.
At the most primary stage one who errs is unaware of it.

As a next step, as in Kitty, there is a feeble awareness.
When one is aware of the error and cannot but do it, he moves to the next step.
Next he desists but something in him regrets.
When a Man vows not to do so, we know he has moved one more step.
He does the right thing, refuses to err, but he goes into a sad depression.
Doing a right thing, avoiding the error, is lifeless for him.
Selfish men compelling themselves to give a formal present feel so.
Next the formality becomes of social importance – Form is important.
When he fails to do so, his sensitivity is hurt, his things go astray.
He brings himself not to err in his emotions.
He is enthusiastic to act rightly.
Acquires a sensitivity to do the right thing.
Unable to pardon those who err here.
The reaction shows an immature conviction.
He does his part, unmindful of what others do.
It becomes a bounden duty.
It becomes a pleasant duty.
An occasion to do the right thing is found to be a privilege.
Would be interested in doing so unperceived.
Praise for such an act is embarrassing.
One develops a sentiment to make this attitude a value.
It grows horizontally and vertically.
People around him automatically act like him.
His value, at this stage, can be institutionalized.
One can do so trumpeting his ideal.
One can also do so silently.
It, at last, becomes an unconscious cultural virtue.
“நாங்கள் நன்றாக நடந்து கொண்டோம் என்று நினைக்கிறேன்,” என்று லிடியா கூறுகிறாள்.
மனசாட்சி இல்லாமலேயே கிட்டிக்கும் உள்ளுறுத்தல் இருக்கிறது.
ஆரம்ப கட்டத்தில் தவறு செய்பவருக்கு தான் தவறு செய்கிறோம் என்பதே தெரியாது.
கிட்டியைப்போல் சிறிதளவில் உணரப்படும் மனசாட்சி அடுத்த கட்டம்.
தவறு என்று தெரிந்தும் அதை செய்யாமல் இருக்க முடியாதவர், அடுத்த கட்ட நிலைக்குச் செல்கிறார்.
அடுத்து அவன் பின்வாங்குவான், ஆனால் அவனில் ஏதோ ஒன்று வருத்தப்படும்.
அவ்வாறு செய்யக் கூடாது என்று மனிதன் சபதம் எடுத்தால், அவன் மேலும் ஒரு படி முன்னே சென்றிருக்கிறான் என்று நமக்குத் தெரியும்.
அவன் சரியானதைச் செய்கிறான், தவறு செய்ய மறுக்கிறான், ஆனால் வருத்தமான மன நிலைக்குத் தள்ளப்படுகிறான்.
சரியானதைச் செய்வதும் தவற்றைத் தவிர்ப்பதும் அவனுக்கு ஜீவனற்று இருக்கிறது.
ஒரு பரிசு கொடுக்க தங்களையே வற்புறுத்திக்கொள்ளும் சுயநலவாதிகள் இவ்வாறு உணர்வார்கள்.
அடுத்தது சம்பிரதாயம் சமூக முக்கியத்துவமாக மாறிவிடுகிறது—தோற்றம் முக்கியமாக இருக்கிறது
அவன் அவ்வாறு செய்யத் தவறினால், அவனுடைய உணர்வுகள் காயப்படுகின்றன. அவனுடைய விஷயங்களில் தடுமாற்றம் ஏற்படுகிறது.
உணர்ச்சிகளில் தவறு ஏற்படக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறான்.
சரியாக செயல்பட அவன் ஆர்வமாக இருக்கிறான்.
சரியான விஷயத்தை செய்வதற்குரிய உணர்வைப் பெற்றுக்கொள்கிறான்.
இங்கு தவறு செய்பவர்களை மன்னிக்க முடியாமல் போகிறது.
எதிர்வினை ஆற்றுவது, முதிர்ச்சி பெறாத நம்பிக்கையைக் காண்பிக்கின்றது.
அவன் தன்னுடைய பங்கை செய்கிறான், மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை.
எப்பாடுபட்டேனும் ஆற்ற வேண்டிய கடமையாகிறது அது.
இனிமையான கடமையாகவும் மாறுகிறது.
சரியான விஷயங்களை செய்யக்கூடிய சந்தர்ப்பம், பெரிய பேறாகக் கருதப்படுகிறது.
அறிந்துகொள்ளாமலேயே அவ்வாறு செய்வதற்கு ஆர்வம் இருக்கலாம்.
அது போன்ற செயலுக்கு கிடைக்கும் பாராட்டு சங்கடத்தைத் தரும்.
இந்த மனோபாவத்தை ஒரு பண்பாக மாற்றுவதற்கு ஒருவர் மிகை உணர்வை வளர்த்துக் கொள்வார்.
அது மேல் நோக்கியும் பக்கவாட்டிலுமாக வளர்கிறது.

அவனைச் சுற்றி உள்ளவர்கள் அவனைப் போலவே நடந்துகொள்ள ஆரம்பித்து விடுகின்றனர்.
அவனுடைய பண்பு, இந்த கட்டத்தில், அமைப்பு முறை ஆக்கப்படலாம்.
தன்னுடைய லட்சியத்தின் புகழினைப் பாடி ஒருவர் அவ்வாறு செய்யலாம்.
இதனையே ஒருவர் அமைதியாகவும் செய்யலாம்.
அது இறுதியில் அறியாமலேயே கலாச்சாரப் பண்பாக மாறுகிறது

To this Mary very gravely replied, "Far be it from me, my dear sister, to depreciate such pleasures. They would doubtless be congenial with the generality of female minds. But I confess they would have no charms for me -- I should infinitely prefer a book."
இதற்கு மேரி சுவாரசியமில்லாமல் ஒரு பதிலளித்தாள், "இதுபோன்ற சந்தோஷங்களுக்கு நான் மதிப்புக் கொடுத்ததில்லை, இதற்கும் எனக்கும் வெகுதூரம். பெண்களுக்கு பொதுவாக இவை உகந்ததாக இருக்கும் என்பதில் சந்தேமில்லை. ஆனால் இதில் எனக்கு எந்தவித ஈடுபாடும் கிடையாது என்பதை ஒத்துக் கொள்கிறேன். இதைவிட கண்டிப்பாக புத்தகம் படிப்பதையே விரும்புவேன்."

80. It is not entirely out of preference to read. She is noticed by no one. So, she had found an occupation.
படிக்க வேண்டும் என்கிற விருப்பத்தின் பேரில் நடப்பதல்ல அது. அவளை யாரும் கவனிப்பதில்லை. அதனால் அவள் தனக்கென்று ஒரு வேலையை ஏற்படுத்திக் கொள்கிறாள்.
81. Between the physically developed energies of the younger girls and the mentally developed character of the elder one is Mary, who exhibits the physical application to a mental occupation without being able to digest it.
உடலால் தெம்பு உடையவர்களாக உள்ள இளைய பெண்களுக்கும், மனதால் வளர்ச்சி அடைந்த குணாதிசயம் உடைய மூத்தவளுக்கும் இடையே இருக்கும் மேரி, மனதால் செய்யும் வேலைக்கு உடல் உழைப்பை கொடுத்து, அதனை ஜீரணிக்க முடியாதவளாக இருக்கிறாள்.
82. "Far be it from me to depreciate such pleasures".
Making a virtue of necessity is the lot of many.
Them, we call hypocrites, apart from the pity we have.
There are those who do not know whether they are here or there.
Their population is considerable. This is a phenomenon in all walks of life.
In the formation of society, Men fall into various layers, maybe over a hundred layers or grades, the high achievers, idealists, realists, practical men, those who attempt all, those who trail behind, etc.
Each of these grades splits further into several distinct groups.
These groups are formed on the basis of function, talent, attitude, space, Time, etc.
Everywhere there are well-knit distinct groups and others who hover around in various fashions.
Jane, Elizabeth, Mary, Kitty, Lydia thus each belong to one distinct group.
Mary is cruelly neglected. Family ignores her, she joins them at all points.
There seems to be no sympathy felt or expressed on anyone's part.
It is pathetic but brave of her to carve out a niche for herself.
The ostensible reason is she is plain.
A more important reason is she has no energy.
She is too proud to ask the elders or youngsters to let her in.
In practice she joins them on her own.
She does not want to be left out.
No invitation comes to her as to Jane or Lizzy or Lydia.
Though there is no vindictiveness on the part of the mother, she never thinks of Mary.
Mr. Bennet once recognized her existence and asked for excerpts.
It was no question she could answer or anyone could answer.
At no ball any young man came forward to dance with her or at least talk to her.
She has fallen literally between the two stools of Mr. and Mrs. Bennet.
So, she began to pronounce ideas that are anathema to all.
"இது போன்ற சந்தோஷங்களுக்கு நான் மதிப்பு கொடுத்ததில்லை".
அவசியத்தினால் ஒன்றினை நல்ல குணம் என்று வைத்துக் கொள்வது பலருக்கு விதியாக இருக்கிறது.
நமக்கு அவர்களிடம் அனுதாபம் இருந்தாலும், அவர்களை வேஷதாரி என்கிறோம்.
சிலருக்கு தான் எங்கு இருக்கிறோம் என்றே தெரியாது.
இவர்களுடைய தொகைதான் அதிகமாக இருக்கிறது. வாழ்க்கையில் எல்லா இடங்களிலும் இது போன்ற நிகழ்வு உள்ளது.
உயர்ந்த சாதனையாளர், இலட்சியவாதி, சாத்தியமானவற்றை உணர்ந்தவர்கள், நடைமுறைக்கேற்ற மனிதர்கள், எல்லாவற்றையும் முயற்சி செய்பவர்கள், பின் தங்கியிருப்பவர்கள் மற்றும் பலர் என்று சமூகத்தின் அமைப்பில், மனிதர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நிலைகள் அல்லது பல தரப்பட்ட அடுக்குகளில் இருக்கலாம்.

இந்த ஒவ்வொரு நிலையும் மேலும் பல தெளிவான பிரிவுகளாகப் பிரிகிறது.
செயற்பாடு, திறமை, மனோபாவம், இடம், காலம் இவைகளின் அடிப்படையில் இந்த பிரிவுகள் உருவாகி உள்ளன.
சிறப்பாக அமைந்த தனிப்பட்ட பிரிவுகள் எல்லா இடங்களிலும் உள்ளன, மற்றவர்கள் பலவிதமான பாணியில் வட்டமிட்டுக் கொண்டிருப்பர்.
ஜேன், எலிசபெத், மேரி, கிட்டி, லிடியா, இவர்கள் இவ்வாறு வெவ்வேறு தனிப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள்.
மேரி கடுமையாகப் புறக்கணிக்கப்படுகிறாள், குடும்பம் அவளை பொருட்படுத்துவதில்லை, அவள் அவர்களுடன் எல்லா இடங்களிலும் சேர்ந்து கொள்கிறாள்.
யாரும் எந்த விதமான அனுதாபத்தை உணரவோ அல்லது வெளிப்படுத்துவதோ இல்லை.
தனக்கென்று ஒரு இடத்தை அவள் ஏற்படுத்திக் கொண்டிருப்பது பரிதாபமாக இருப்பினும் தைரியமானது.
அவள் எளிமையானவள் என்பது வெளியில் தெரியும் காரணம்.
அவளிடம் தெம்பு இல்லை என்பது முக்கியமான காரணம்.
அவளையும் சேர்த்துக்கொள்ளும்படி பெரியவர்களையோ அல்லது சிறியவர்களையோ கேட்க அவளது மனம் இடம் கொடுப்பதில்லை.
நடைமுறையில் அவளே அவர்களுடன் சேர்ந்துகொள்கிறாள்.
விடுபட அவள் விரும்புவதில்லை.
ஜேன், எலிசபெத், மற்றும் லிடியாவுக்கு வருவதுபோல் அவளுக்கு அழைப்பு வருவதில்லை.
தாயாருக்கு பழி வாங்கும் எண்ணம் இல்லாத போதும், அவள் மேரியைப் பற்றி நினைப்பதே இல்லை.
திரு பென்னட் ஒருமுறை அவள் இருப்பதை அங்கீகரித்து, புத்தகத்திலுள்ள விஷயங்களைப் பற்றிக் கேட்கிறார்.
அவளோ அல்லது வேறு எவரோ அதற்கு பதில் கூறவே முடியாத கேள்வியாகும் அது.
எந்த நடனத்திலும், எந்த ஒரு இளைஞனும், அவளோடு நடனமாடவோ, குறைந்தபட்சம் பேசவோகூட முன்வருவதில்லை.
திரு பென்னட்டுக்கும் திருமதி பென்னட்டுக்கும் இடையே அவள் மாட்டிக்கொண்டிருக்கிறாள்.
ஆகவே அவள் அனைவருக்கும் பிடிக்காத விஷயங்களைப் பற்றி பேச ஆரம்பிக்கிறாள்.

83. "I should infinitely prefer a book".
In any political party that comes to power, there is an unwritten law that the portfolios of power go to one well defined type of cadres.
Next to them are the office bearers in the party.
Below them are the working cadres, who work all life without tasting even the offices in the party.
It happens for real as well as artificial reasons.
The real reason is people without talent or fact cannot be entrusted with power.
The artificial reason is there is a fixed law of evasion which evades a certain set of people.
Those who are neglected are aggrieved.
They learn to behave as if they are not neglected.
It is a pretty situation which defines itself with self-satisfaction as well as self-justification thus mustering enough psychological confidence to survive.
When such an establishment is once formed a Ramanujam receives by an act of great condescension a B.A., or even an M.A.
It is so in the academic community.
It is much more severe in caste and class rigidities.
Slowly it enters all types of organizations at all levels.
Within the family we see its cruelest exhibition.
Russell said that to win appreciation from colleagues is impossible.
The formation of ego, the generation of goodwill are important in this context.
Man who would part with material benefits will grudge good will.
This is the raison d'être for sycophants who flatter a leader who cannot easily order it.
There are Men who grow worldly wise to supply those services to themselves by themselves.
Formation of self-deception, falsehood, rich superstition are thus made possible.
One who is strongly adhering to truth is no wonder ostracized.
"நான் புத்தகம் படிப்பதையே அளவற்று விரும்புவேன்."
பதவிக்கு வரும் எந்த அரசியல் கட்சியிலும், அதிகாரமுள்ள இலாக்காக்கள் ஒரு குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த தொண்டர்களுக்குத்தான் போய் சேர வேண்டும் என்று எழுதப்படாத சட்டம் உள்ளது.
அவர்களுக்கு அடுத்தது, கட்சியின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள்.
இவர்களுக்குக் கீழே கட்சியின் பதவியை அனுபவித்திராத, வாழ்நாள் முழுவதும் உழைக்கும் கட்சித் தொண்டர்கள்.

உண்மையான காரணத்திற்காகவும், போலியான காரணத்திற்காகவும் இவ்வாறு ஏற்படுகிறது.
திறமை அல்லது விஷயம் இல்லாதவர்களிடம் அதிகாரத்தை கொடுக்க முடியாது என்பதுதான் உண்மையான காரணம்.
தட்டிக் கழிப்பதற்கு சில நிரந்தரச் சட்டங்கள் உண்டு, அவை குறிப்பிட்ட வகையினரை தட்டிக் கழித்து விடும். இதுவே போலியான காரணம்.
புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு மனக்குறை ஏற்படுகிறது.
அவர்கள் புறக்கணிக்கப்படாதவர்கள் போல் நடந்துகொள்ள கற்றுக் கொள்கிறார்கள்.
தங்களுடைய நிலையில் திருப்தி அடைகின்றனர், நியாயப்படுத்திக் கொள்கின்றனர், உயிர்வாழ்வதற்கு மனரீதியான நம்பிக்கையை திரட்டிக்கொள்ளும் அழகான நிலைமை இது.
ஒரு முறை இது போன்ற ஸ்தாபனம் அமைக்கப்பட்டுவிட்டால், ராமானுஜம் போல ஒருவர், இரக்கத்தின் பேரில், B.A.பட்டமோ அல்லது M.A. பட்டம்கூட பெற்றுக் கொள்ளலாம்.
கல்வியாளர்களின் மத்தியில் இவ்வாறு நடைபெறும்.
ஜாதி மற்றும் பிரிவுகளின் இறுக்கங்களில் இது மேலும் தீவிரமாகக் காணப்படும்.
மெதுவாக இது எல்லா வித அமைப்புகளிலும் எல்லா நிலைகளிலும் நுழைகிறது.
குடும்பத்தில் இதன் கொடுமையான வெளிப்பாட்டைக் காண்கிறோம்.
நம்முடன் வேலை செய்பவர்களிடமிருந்து பாராட்டு பெறுவது சாத்தியமே இல்லை என்று ரஸ்ஸல் கூறியுள்ளார்.
இந்த இடத்தில், அகந்தை உருவாவது, நல்லெண்ணத்தை உற்பத்தி செய்வது ஆகியவை மிகவும் முக்கியம்.
பொருள்ரீதியான இலாபத்தை மற்றவர்களுக்கு கொடுப்பவனுக்கு, நல்லெண்ணத்தை காண்பிக்க மனம் வராது.
தலைவர்களால் தங்களைப் புகழச் சொல்லி கேட்க முடியாதபோது, அவரை போலியாக முகஸ்துதி செய்வதற்கென்றே சிலர் இருப்பர்.
தாங்களே தங்களுக்கு அந்த சேவைகளை அளித்துக்கொள்ளும் உலக நடப்பை அறிந்து கொண்டிருக்கும் மனிதர்கள் உள்ளனர்.
தன்னையே ஏமாற்றிக்கொள்வது, பொய்மை, சிறப்பான மூடநம்பிக்கை, இவை எல்லாம் இவ்வாறு சாத்தியமாகின்றன.
யார் ஒருவர் உண்மையைக் கடைப்பிடிக்கிறாரோ, அவர் விலக்கப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

But of this answer Lydia heard not a word. She seldom listened to anybody for more than half a minute, and never attended to Mary at all.
ஆனால் இந்த பதிலில் ஒரு வார்த்தைகூட லிடியாவின் காதில் விழவில்லை. யார் பேசினாலும் அவள் அரை நிமிடத்திற்குமேல் காது கொடுத்துக் கேட்க மாட்டாள், மேரி சொல்வதைக் கேட்டுக் கொள்ளவே மாட்டாள்.

In the afternoon Lydia was urgent with the rest of the girls to walk to Meryton, and see how everybody went on; but Elizabeth steadily opposed the scheme. It should not be said that the Miss Bennets could not be at home half a day before they were in pursuit of the officers. There was another reason, too, for her opposition. She dreaded seeing Wickham again, and was resolved to avoid it as long as possible. The comfort to her, of the regiment's approaching removal was indeed beyond expression. In a fortnight they were to go -- and once gone, she hoped there could be nothing more to plague her on his account.
பிற்பகலில் மற்ற பெண்களுடன் மெரிடன்வரை சென்று அங்கு எல்லோரும் எப்படியிருக்கின்றனர் என்று பார்த்து வர லிடியா அவசரப்பட்டாள், ஆனால் இந்த ஏற்பாட்டை எலிசபெத் எதிர்த்த வண்ணம் இருந்தாள். இராணுவ அதிகாரிகளின் பின்னால் போகாமல் ஒரு அரை நாள்கூட பென்னட் குடும்பத்து பெண்களால் இருக்க முடியாது என்று எவரும் பேசக் கூடாது என்பதினால் எலிசபெத்திற்கு அங்கு செல்வது பிடிக்கவில்லை. எதிர்ப்பதற்கு மற்றொரு காரணமும் அவளுக்கு இருந்தது. மறுபடியும் விக்காமை அங்கு பார்க்க வேண்டி வருமோ என்ற பயம் இருந்தது. எவ்வளவு தூரம் தவிர்க்க முடியுமோ அவ்வளவு தூரம் தவிர்க்க வேண்டும் என தீர்மானித்தாள். படைப்பிரிவு அங்கிருந்து கிளம்பிச் செல்வது அவளுக்கு சொல்லொண்ணா ஆறுதலை அளித்தது. இரண்டு வாரங்களில் அவர்கள் அங்கிருந்து கிளம்ப இருந்தனர், கிளம்பிச் சென்றவுடன், அவன் விஷயமாக அவளைத் துன்புறுத்துவதற்கு வேறு எதுவும் இருக்காது என்ற நம்பிக்கையில் இருந்தாள்.

84. As long as her mind is on Wickham, the forces maintained an equilibrium there. The moment she withdraws the mind, the equilibrium is sought at the physical level – she elopes.
அவளுடைய மனம் விக்காம் மீது இருந்தவரை சக்தியின் நிலை சமமாக இருந்தது. அவள் மனதிலிருந்து அவனை விலக்கிய அத்தருணத்தில் சமநிலை ஜடநிலையில் நாடப்பட்டு ஓடிப்போவதில் முடிகிறது.
85. Withdrawing the interest outwardly does not put an end to the movement.
புறத்தில் விருப்பத்தை விலக்குவது அந்த விஷயத்திற்கு முற்றுப் புள்ளி வைக்காது.
86. Elizabeth has definitely changed her mind towards Wickham and that directly leads to the militia moving from there to Brighton.

விக்காமைப் பொறுத்தவரை எலிசபெத் நிச்சயமாக அவளுடைய மனத்தை மாற்றிக் கொண்டாள். இது நேரடியாகப் போர் வீரர்களை அங்கிருந்து பிரைட்டனுக்கு கிளப்புகிறது.

87. Elizabeth has changed her mind, but not lost her charm for Wickham. She would like to take leave of him. That is why the militia waits for her to come.
எலிசபெத் தன்னுடைய மனத்தை மாற்றிக்கொண்டாளே தவிர, விக்காம் மீதிருந்த கவர்ச்சியை இழக்கவில்லை. அவனிடம் விடை பெற்றுக்கொள்ள விரும்பினாள். அதனால்தான் போர் வீரர்கள் அவள் வரும்வரை காத்துக் கொண்டிருக்கின்றனர்.

88. "Elizabeth steadily opposed the scheme of walking to Meryton".
To stem the tide of Lydia's flow is like trying to stop a river without a barrage.
Every family and every organization has its own manifold break waters.
Mrs. Bennet consciously removed them and was accelerating the speed of the current.
Her family resembles France in 1789.
There was no formal government till Napoleon assumed power in years later.
Orphans drift into the street and create the population known as street children.
Men when asked to preside over families destroy the families and destroy themselves and disappear into oblivion.
Mrs. Bennet acted like that and was oblivious of her course.
She came into prosperity and freedom and did her best which is the worst.
The only thing that can be said in her favour is her monumental ignorance devoid of venom or malice.
She is like the monkey that pulled the wedge.
Elizabeth was a non-entity in her scheme of things.
In the open looting of the treasury by the corrupt politicians in India, we find the society advancing. The politician **claims credit!**
In any thriving organization there are dynamic pests.
Sometimes they preside over it.
Elizabeth who now opposes the schemes forgets she was one of them earlier.
There are Mrs. Bennets everywhere, only that they do not get the freedom she does.
In revolutionary situations as in 1789, 1917, 1857 everyone is on his own.
In 1857 it took three years for it to settle down completely.
Whatever one is fighting for, the existing life is destroyed if it is not quickly brought under control.
Mother's statement of great reward or great punishment for a small move seems to be true for Mrs. Bennet's family.
Actually the family was face to face with disintegration and then revived by one Man's effort.
No one who steps out of the safe structure is ever safe.
"மெரிடனுக்கு நடந்து போகும் திட்டத்தை எலிசபெத் உறுதியாக எதிர்த்தாள்."
லிடியாவைக் கட்டுப்படுத்துவது, ஒரு நதியினை அணை இல்லாமல் கட்டுப்படுத்துவது போலாகும்.
ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அதனுடைய சொந்தமான பலதரப்பட்ட தடுப்புச்சுவர்கள் இருக்கின்றன.
திருமதி பென்னட், நனவோடு அவற்றை அகற்றி, நீரோட்டத்தின் வேகத்தையும் அதிகரித்துக் கொண்டிருந்தாள்.
1789ல் பிரான்ஸ் இருந்தது போலிருந்தது அவளது குடும்பம்.
சில வருடங்களுக்குப் பிறகு நெப்போலியன் அதிகாரத்திற்கு வரும்வரை முறையான அரசாங்கம் அங்கு இருக்கவில்லை.
அநாதை குழந்தைகள் தெருவிற்கு வந்து விடுகின்றனர், தெருக் குழந்தைகள் எனும் ஒரு மக்கட்தொகையை உருவாக்குகின்றனர்.
குடும்பத்தை ஏற்று நடத்துமாறு ஆண்கள் கேட்டுக்கொள்ளப்படும்பொழுது, அவர்கள் குடும்பத்தை அழித்து தங்களையும் அழித்துக்கொண்டு மறக்கப்பட்ட நிலையில் காணாமல் போய்விடுகின்றனர்.
திருமதி பென்னட் அவ்வாறு நடந்துகொள்கிறாள், அவளுடைய போக்கினைப் பற்றி அவளுக்கே தெரியவில்லை.
அவளுக்கு ஐஸ்வர்யமும் சுதந்திரமும் கிடைத்தன, அவளுக்கு முடிந்ததை அவள் செய்தாள், அதுவே மிகவும் மோசமானதாக இருந்தது.
அவளைப் பற்றி ஏதாவது நல்லது கூற வேண்டுமென்றால், கொடுமையோ வன்மமோ இல்லாத அவளுடைய சிறப்பு மிக்க அறியாமையைத்தான் குறிப்பிட வேண்டும்.
ஆப்பையை இழுத்த குரங்கு போல் அவளிருக்கிறாள்.
அவளுடைய திட்டங்களில் எலிசபெத் ஒரு விஷயமே அல்ல.
கஜானாவை வெளிப்படையாகவே கொள்ளையடிக்கும் ஊழல் மலிந்த அரசியல்வாதிகளின் மத்தியில், நாம் சமூகம் முன்னேறுவதைப் பார்க்கிறோம். இதற்கு அரசியல்வாதிகள் பெருமை கோருகிறார்கள்!

செழிப்பாக வளர்ந்து வரும் எந்த ஒரு அமைப்பிலும் இது போன்ற தீவிரமாக தொந்தரவு கொடுக்கும் கரையான்கள் இருக்கும்.
சில சமயங்களில் அவர்களே அதனை தலைமையும் தாங்குவார்கள்.
இப்பொழுது அத்திட்டங்களை எதிர்க்கும் எலிசபெத், முன்னம் தான் அதில் ஒருத்தியாக இருந்ததை மறந்து விடுகிறாள்.
திருமதி பென்னட் போல் பலர் எங்கும் உள்ளனர், ஆனால் அவர்களுக்கு அவளைப் போல் சுதந்திரம் கிடைப்பதில்லை.
1789, 1917, 1857-ல் நிலவிய புரட்சிகரமான நிலைமைகளில் எல்லோரும் அவரவர்கள் இஷ்டப்படி இருந்தனர்.
1857ல், அது முழுமையாக அடங்க மூன்று வருடங்கள் எடுத்தன.
எதற்காக ஒருவர் சண்டை போட்டாலும், விரைவில் அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராவிட்டால் தற்பொழுது இருக்கும் வாழ்வு அழிந்து விடும்.
சிறிய செயலுக்கு பெரிய பரிசோ அல்லது பெரிய தண்டனையோ கிடைக்கும் என்கிற அன்னையின் கூற்று திருமதி பென்னட் குடும்பத்தைப் பொறுத்தவரை உண்மையாகப்படுகிறது.
உண்மையில் அக்குடும்பம் முற்றிலுமாக அழிந்து போகும் நிலையில் இருந்தது, ஒரு மனிதனின் முயற்சி அக்குடும்பத்தைக் காப்பாற்றியது.
பாதுகாப்பான அமைப்பிலிருந்து வெளியே வரும் எவரும், ஒரு பொழுதும் பாதுகாப்பாக இருப்பதில்லை.

89. "She has dreaded to see Wickham".
Even after his desertion he was warm to her and she reciprocated ignoring his desertion.
Now she has partially deserted him.
A meeting with Wickham can no longer be real or even formal.
She is powerfully reminded that she was utterly fooled by a story.
She has no heart to offend him by exposing him.
Whatever she did personally with him she could not publicly expose him.
Even if that were possible she could not bring herself to be unkind to him personally.
Her inability to speak out the truth in any fashion, his own imposing self-righteous impudence of which he is supplied with in abundance, put her in an untenable situation.
She could not even share it with anyone.
Even in her thoughts she could not contemplate it.
So, life opened the floodgates of scandal of which she was the prime victim.
The Germans, the Japanese fought to the last Man as if it was for a noble cause.
Man who fights, fights for any cause, not necessarily a good cause.
That is the rationale of fundamentalism.
The physical does not learn, does not adjust, does not change or relent.
It has to be destroyed by the external forces.
So the two World Wars were fought.
The economic incentive has the power to divert these physical energies.
Hence the Revolution of Rising Expectations.
Man will desert heaven for hell if oil is struck there.
Darcy chose to do it from inside voluntarily.
Only the awakened Spirit is capable of it.
Her exposing Wickham was to her self-destruction.
At the bottom of her own emotions she was identified with him.
Such identifications last forever.
"விக்காமைப் பார்ப்பதற்கே அவள் பயந்தாள்".
கைவிட்ட பிறகும்கூட அவன் அவளிடம் அன்பாக இருந்தான். அவன் கை விட்டதை புறக்கணித்து அவளும் அவனிடம் அன்பாக இருந்தாள்.
இப்பொழுது அவள் அவனை ஓரளவு கைவிட்டு விட்டாள்.
விக்காமுடன் ஏற்படும் சந்திப்பு இனி அவளுக்கு நிஜமாகவோ சம்பிரதாயமாகவோகூட இருக்காது.
ஒரு கதையின் மூலம் அவள் முழுவதுமாக ஏமாற்றப்பட்டாள் என்பது அவளுக்கு நன்றாக நினைவுக்கு வந்தது.
அவனை வெளிப்படுத்தி அதன் மூலம் அவனை அவமதிக்க அவளுக்கு மனம் இல்லை.
தனிப்பட்ட முறையில் அவனுடன் எப்படி நடந்துகொண்டிருந்தாலும், பகிரங்கமாக அவளால் அவனை வெளிப்படுத்த முடியவில்லை.
அவ்வாறு செய்ய முடிந்தால்கூட தனிப்பட்ட முறையில் அவனிடம் கடுமையாக அவளால் நடந்து கொள்ள முடியாது.
எந்த விதத்திலும் அவளால் உண்மையைப் பேச முடியாததும், அவனே ஏற்படுத்திக்கொண்ட அவனுடைய அபரிமிதமாக வெட்கமற்ற தன்மையும், அவளை இக்கட்டான நிலையில் வைத்தன.

அவளால் அதை எவரிடமும் பகிர்ந்து கொள்ளக்கூட முடியவில்லை.
எண்ணத்தில்கூட அவளால் அதை நினைத்துப் பார்க்க முடியவில்லை.
வாழ்க்கை அவதூறை அபரிமிதமாக வழங்கியது. அதில் அவள்தான் பிரதானமாக பலியானாள்.
ஏதோ ஒரு உயர்ந்த காரணத்துக்காக செய்வதுபோல் ஜெர்மானியர்களும் ஜப்பானியர்களும், கடைசி சிப்பாய் வரை போரிட்டனர்.
போரிடும் மனிதன் எந்த காரணத்திற்காகவும் போரிடுவான், நல்ல காரணமாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை.
இதுதான் மத வெறிக்கான அடிப்படைக் காரணம்.
ஜடநிலை தெரிந்துகொள்வதில்லை, அனுசரித்துப் போவதில்லை, மாறுவதில்லை, விட்டுக் கொடுப்பதில்லை. வெளி சக்திகளால் அது அழிக்கப்பட வேண்டும்.
இதனால்தான் இரண்டு உலகப் போர்கள் நிகழ்ந்தன.
பொருளாதாரச் சலுகைகள் இந்த ஜட சக்திகளை வேறு வழியில் திசை திருப்பி விடுகின்றன.
எனவேதான் உயரும் எதிர்பார்ப்புகளின் புரட்சி எழுகிறது.
நரகத்தில் பெட்ரோல் கண்டுபிடிக்கப்பட்டால், மனிதன் சொர்க்கத்தை விட்டு நரகத்தை நாடுவான்.
டார்சி தானாகவே இதை உள்ளிருந்து செய்தான்.
எழுச்சி அடைந்த ஆன்மாவால்தான் இது சாத்தியம் ஆகும்.
அவள் விக்காமை வெளிப்படுத்தியது, அவளே அவளை அழித்துக்கொள்வது போலாகிறது.
அவளுடைய உணர்வின் அடித்தளத்தில் அவள் அவனுடன் ஒன்றுபட்டிருந்தாள்.
இது போன்ற ஒன்றுபடுதல் என்றும் நிலைத்திருக்கும்.

90. "The comfort to her of the regiments' removal was beyond expression".
She prefers the malady to be removed from her.
It is one that, unless destroyed, will continue to harm her family.
It was so because she is the saving grace of the family and the venom has infected her.
There are only two ways, neither would spare him.
She must destroy her softness inside for him by exposing him to the family or he must be publicly exposed.
What happened now is he was resilient by his impudence to revive his appearance after his image was fully destroyed.
That she would not willingly harm him was the real problem.
Life demands that it cannot be escaped.
The violence of 1947 in India was because of a similar reason.
Freedom cannot escape armed conflict even if the ruler announces the intention to withdraw.
For over 200 years he has enjoyed vast material benefits in an unmitigated fashion. It is property, Matter.
Matter does not give up its possessiveness on its own.
Before 1938 Sri Aurobindo who tried to avoid the war saw the black forces entrenched. He saw they had to be destroyed.
The war broke out, was fought, and won, at the cost of his thighbone.
Violence is needed at least as a token.
Indian Freedom could have been won by Spirituality if the Freedom Movement, its leaders, its members were all devoted to truth.
The country was divided based on the basic falsehood of caste.
That falsehood is violence to Truth.
Elizabeth's SOFT CORNER is the falsehood that could not be brushed aside, compromised. **It can only be destroyed. Darcy faced his own vital falsehood four square and destroyed it thanking her for her abuse. She had not gone to that length of cleansing her inner being.**
"போர் படையினர் அங்கிருந்து சென்றதனால் ஏற்பட்ட ஆறுதல், விவரிக்க முடியாததாக இருந்தது."
பிரச்சினை அவளிடமிருந்து விலக வேண்டும் என்று அவள் விரும்பினாள்.
அது அழிக்கப்படாவிட்டால் அவளது குடும்பத்தை அது தொடர்ந்து துன்புறுத்தும்.
ஏனென்றால் அவள்தான் குடும்பத்திற்கு அருளாக விளங்குகிறாள், ஆனால் அவள் விஷத்தால் பீடிக்கப்படிருக்கிறாள்.
இரண்டு வழிகள்தான் உள்ளன, இரண்டும் அவனை விட்டு வைக்காது.
முதலாவதாக, அவள் அவன் மேலிருக்கும் மென்மையான உள் உணர்வுகளை அழித்து, தன் குடும்பத்தினரிடம் அவனை வெளிப்படுத்த வேண்டும் அல்லது அவனை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும்.
கெட்ட பெயரிலிருந்து மீண்டு வருவதற்கு அவனுடைய வெட்கங்கெட்ட தன்மை இப்பொழுது கை கொடுக்கிறது.
அவள் விரும்பி அவனுக்கு கெடுதல் செய்ய மாட்டாள் என்பதுதான் உண்மையான பிரச்சினை .
ஆனால் வாழ்க்கை அதிலிருந்து தப்பித்துக்கொள்ள அனுமதிப்பதில்லை.
இதே போன்ற காரணத்தினால்தான் 1947ல் இந்தியாவில் வன்முறை கிளம்பியது.

ஆள்பவர் விலகிக் கொள்வதற்கு விருப்பத்தைத் தெரிவித்தாலும் ஆயுதம் இன்றி சுதந்திரம் கிடைக்காது, **அளவற்ற ஐஸ்வர்யத்தை ஆங்கிலேயர்கள் இருநூறு வருடங்களுக்கும் மேலாக மட்டற்ற முறையில் அனுபவித்து வந்தனர்.** அது ஜட சொத்தாகும்.

ஜடம் தன்னுடைய உரிமையை தானாகவே விட்டுக் கொடுக்காது.

1938 க்கு முன் போரை தவிர்க்க முயற்சி செய்த ஸ்ரீ அரவிந்தர், இருண்ட சக்திகள் ஸ்தாபித்துள்ளதைப் பார்த்தார். அவை அழிக்கப்பட வேண்டும் என்பதையும் பார்த்தார்.

போர் எழுந்தது, போரிட்டு வெற்றியும் கிடைத்தது, பகவானின் தொடை எலும்பு முறிந்ததை அதற்கு விலையாகக் கொடுக்க வேண்டியதாயிற்று.

அடையாளத்திற்காகவாவது வன்முறை அவசியமாகிறது.

சுதந்திர இயக்கம் அதனுடைய தலைவர்கள், அதனுடைய அங்கத்தினர்கள் அனைவரும் உண்மையை கடைப்பிடித்திருந்தால், இந்திய சுதந்திரத்தை ஆன்மீக வழியில் அடைந்திருக்கலாம்.

ஜாதி என்கிற அடிப்படை பொய்யை ஆதாரமாக வைத்துக் கொண்டு நாடு பிரிக்கப்பட்டது.

அந்த பொய்மை, உண்மைக்கு வன்முறை செய்யும்.

எலிசபெத்தின் மென்மையான உணர்வினை புறக்கணிக்க முடியாது, சமரசப்படுத்தவும் முடியாது. அது அழிக்கப்பட வேண்டும்.

டார்சி தன்னுடைய உணர்விலுள்ள பொய்மையை தனக்குள்ளேயே வைத்து அனுபவித்துக் கொண்டிருந்ததை அழித்தான், **அதற்காக அவளுடைய நிந்தனைக்கு அவளுக்கு நன்றி கூறினான். அவள் தன்னுடைய உள் ஜீவனை தூய்மைப்படுத்த அந்த அளவிற்கு அதிக முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை.**

91. "Once gone there could be nothing more to plague her on that account".

What ails is inside, not outside.

Buddha's greatness was he could dissolve the ego.

He could do so as he was a mighty soul.

The last tenth man is not in the counting. It is in himself.

The sun going round the earth, the broken pencil, the last tenth Man are great landmarks in the progress of knowledge. They are negative.

The organization in lever, the organization in language, the organization in Money, the same organization in cyber space are striking positive landmarks of human progress. One more new faculty is needed as that which discovers the tenth Man, the missing perception.

Who can speak of sensation to the physical Man, objectivity to the superstitious, infinity to the Mind that mistakes it for the boundless finite.

Science is the knowledge of the soul, not that of intellectuality.

Knowledge is of the Psychic, not of the witness Purusha.

Ignorance was created in the world for the joy of overcoming it like the obstacle in the obstacle race, the hidden answer in the riddle.

Democracy abolishes the superiority of classes, castes, families, birth.

Rationality abolishes the superiority of seniority.

Seniority belongs to Time in Nature; equality belongs to the soul in the Being.

Observed results admit of inequality.

Beyond the process that brings about the result is the essence of Spirit, Brahman.

The essence of the ant hill and the solar system is the same.

Superiority is the science of superstition.

Appearances are constructions; the Absolute is not constructed.

Nature admits of the flow and ebb in darkness.

The Soul has no darkness, no flow.

The evolving soul admits of the ebb and flow, creates it in light that is delight.

Evil is the one occasion that admits of the greatest effort to overcome the separativeness in Nature.

Evil is the Marvel of the ever-present Eternity.

"படைப் பிரிவினர் அங்கிருந்து கிளம்பிச் சென்றவுடன், அவன் விஷயமாக அவளை துன்புறுத்துவதற்கு வேறு எதுவும் இருக்காது".

வருத்தம் அகத்திற்கு, புறத்திற்கு அல்ல.

புத்தரின் சிறப்பு அவர் அகந்தையைக் கரைக்க முடிந்ததினால் எழுந்தது.

அவர் பலம் பொருந்திய ஆன்மாவாக இருந்ததால் அவரால் அதை செய்ய முடிந்தது.

கடைசியாக இருந்த பத்தாவது மனிதன் எண்ணிக்கையில் வர மாட்டான், ஏனெனில் அவன்தான் பத்தாவது ஆள்.

பூமியைச் சுற்றி சூரியன் வருவது, உடைந்த தோற்றமுடைய எழுதுகோல், கடைசியாக இருக்கும் பத்தாவது ஆள், இவை அறிவின் மைல் கற்களாகும். அவை எதிர்மறையானவை.

நெம்பு கோலின் அமைப்பு, மொழியின் அமைப்பு, பணத்தின் அமைப்பு, இணைய உலகத்தின் அமைப்பு, இவை மனித குல முன்னேற்றத்தின் முக்கியமான நேர்மறையான மைல் கற்களாகும். பத்தாவது மனிதனை கண்டுபிடிக்க புதிய திறன் தேவைப்படுகிறது, காணாமல் போன புலனறிவு.
ஜட மனிதனிடம் உணர்வினைப் பற்றியும் மூடநம்பிக்கை உள்ளவர்களிடம் பகுத்தறிவைப் பற்றியும் அகண்டத்தை, அளவில்லாத கண்டமாக தவறாகப் புரிந்து கொண்டிருக்கும் மனத்திடமும் யார் பேசுவது.
விஞ்ஞானம் ஆன்மாவின் ஞானம் ஆகும், அறிவாற்றலுடையது அல்ல.
ஞானம் சைத்திய புருஷனுக்குரியது, சாட்சி புருஷனுடையது அல்ல.
தடைகளைத் தாண்டும் போட்டியிலுள்ள தடைகளைப்போல் விடுகதையில் மறைந்திருக்கும் பதிலைப்போல் இந்த உலகத்தில் அறியாமை அதனையே தாண்டி வரும் சந்தோஷத்திற்காக உருவானது.
வகுப்புகள், ஜாதிகள், குடும்பங்கள், பிறப்பு இவைகளின் உயர்வை மக்களாட்சி ஒழிக்கிறது.
அனுபவத்தினால் ஏற்படும் முதன்மையின் உயர்வை பகுத்தறிவு அழிக்கிறது.
அனுபவத்தின் முதன்மை நிலை இயற்கையில் உள்ள காலத்திற்குரியது; சமத்துவம் ஜீவனின் ஆன்மாவுக்குரியது.
கண்டறிந்த முடிவுகள் சமனற்ற நிலையை ஒத்துக் கொள்கின்றன.
பலனைக் கொண்டு வரும் முறைக்குப் பின்னால் ஆன்மாவின் சாரமான பிரம்மம் உள்ளது.
சிறியது பெரியது என்று எதுவும் கிடையாது, எறும்புப் புற்றும் சூரியமண்டலமும் ஒன்றே.
உயர்வு என்பது மூடநம்பிக்கையின் விஞ்ஞானம் ஆகும்.
தோற்றங்கள் கட்டமைக்கப்பட்டவைகள்; பிரம்மம் கட்டமைக்கப்படவில்லை.
இருட்டில் இயற்கை, ஓட்டத்தையும் பின் வாங்குவதையும் அனுமதிக்கிறது.
ஆன்மாவுக்கு இருட்டும் கிடையாது, ஓட்டமும் கிடையாது.
வளரும் ஆன்மா பின்வாங்குவதையும் ஓட்டத்தையும் அனுமதிக்கிறது, அதை ஒளியில் செய்வதால் சந்தோஷம் கிடைக்கிறது.
இயற்கையின் பிரிவினையை வெற்றி கொள்வதற்கு எடுக்கும் பெரிய முயற்சியை அனுமதிக்கும் ஒரு சந்தர்ப்பம் தீமை ஆகும்.
என்றும் நிலைத்திருக்கும் சாஸ்வதத்தின் அற்புதமே தீமை ஆகும்.

She had not been many hours at home before she found that the Brighton scheme, of which Lydia had given them a hint at the inn, was under frequent discussion between her parents. Elizabeth saw directly that her father had not the smallest intention of yielding; but his answers were at the same time so vague and equivocal, that her mother, though often disheartened, had never yet despaired of succeeding at last.
பிரைட்டனுக்குப் போக வேண்டும் என்கிற திட்டத்தைப்பற்றி லிடியா விடுதியில் கூறியிருந்ததை அவர்களது பெற்றோர்கள் அடிக்கடி விவாதித்துக் கொண்டிருந்தனர் என்று வீட்டிற்கு வந்த சில மணி நேரங்களிலேயே தெரிந்து கொண்டாள். அவளுடைய தந்தைக்கு அதற்கு இணங்க சிறிதளவும் எண்ணம் இல்லை என்பதை எலிசபெத் நேரடியாகப் பார்த்தாள். ஆனால் அவருடைய பதில்களோ, தெளிவற்றதாகவும் இருபொருள் அளிப்பது போலவும் இருந்தன. தாயார் அடிக்கடி மனச்சோர்வு அடைந்தாலும், இறுதியாக வெற்றியடைவோம் என்ற நம்பிக்கையை இழக்கவேயில்லை.

92. Within hours of the decision NOT to do anything with Wickham anymore, news of the Brighton scheme came.
விக்காமுடன் இனி எதுவும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று தீர்மானம் செய்த சில மணி நேரங்களிலேயே பிரைட்டன் திட்டம் வெளி வருகிறது.
93. The link is there; she has snapped on the surface, the rest has to be gone through.
தொடர்பு இருக்கிறது; அவள் மேற்பரப்பில் விலக்கி விட்டாள், மீதியை எதிர்கொள்ளத்தான் வேண்டும்.
94. Her father is as equivocal as she is unwilling to expose Wickham.
விக்காமை வெளிப்படுத்த அவளுக்கு விருப்பமில்லாததுபோல் அவளுடைய தகப்பனாரும் தெளிவில்லாமல் இருக்கிறார்.
95. "She had not been home for many hours, before she found out the Brighton scheme".
Energy movement creates events.
As soon as Lydia left, permitting no break in the movement, came Bingley.
That was created by the completion of Lydia's wedding.
This was created by the proposal.
Its origin is the earlier proposal of Collins.
The four Men meeting on the road was the earlier event of importance.
Elizabeth would be able to control Lydia if she went back to the proposal and handled the original source of energy – her partiality to Wickham.
Go back to the original inspiration – Bingley's coming there.
Trace its origins beyond the shores.
Look at the first initiative of asking Mr. Bennet to go to Bingley.

Examine the first development, Bingley's liking Jane, Darcy's 'tolerable'.
See his 'tolerable' as the response of Darcy to the assertion of Bingley.
See his ruse as a vengeance to Bingley's 'stupid'.
Caroline's cooperation to the ruse in the light of her fine eyes explains itself.
Darcy's urge to celebrate his love by speaking it to the rival is an initiative.
It is more than true a work should not be seen or known by one who is inimical to it.
Caroline's knowledge of Darcy's love precipitated as elopement which humbled Darcy.
The two truths about intense love are.

- A lover cannot bring himself to speak of his love.
- The urge to speak of it is as great as his love.

One great event branched off as several courses of life.
Each such stream of energy attracted appropriate other streams of energy.
There are innumerable minor eddies.
They clash, work together, release momentum, carry events and personalities along, reveal truths, reiterate values of life, endorse every piece of human wisdom enshrined in proverbs, serve as a miniature of great movements they represent, act as mirrors of life
"பிரைட்டன் விஷயத்தைப் பற்றி அவளுக்குத் தெரிவதற்கு முன், அவள் பல மணி நேரங்களாக வீட்டில் இல்லை".
சக்தியின் இயக்கம் நிகழ்ச்சிகளை உருவாக்குகிறது.
லிடியா சென்றவுடன் இயக்கத்திற்கு இடைவெளி அனுமதிக்காத வகையில் பிங்கிலி வந்தான்.
லிடியாவின் திருமணம் முடிந்ததன் மூலம் அது உருவானது.
இது திருமண வேண்டுகோள் மூலம் உருவானது.
இதனுடைய மூலம், முன்னம் காலின்ஸ் விடுத்த திருமண வேண்டுகோள் ஆகும்.
நான்கு ஆண்களும் தெருவில் சந்தித்துக் கொண்டது ஆரம்பத்தில் நடந்த முக்கியமான நிகழ்ச்சியாகும்.
எலிசபெத் திருமண பேச்சிற்குத் திரும்பிச் சென்று சக்தியின் முதல் பிறப்பிடத்தை சமாளித்தால் அவளால் ஒரு வேளை லிடியாவைக் கட்டுப்படுத்த முடியலாம்— விக்காமிடம் அவள் காண்பிக்கும் பாரபட்சம்.
ஆரம்பத்தில் இருந்த ஆர்வத்தை சென்றடைவது----பிங்கிலி அங்கு வருவது.
அதனுடைய மூலத்தை, அதனுடைய எல்லையைத் தாண்டி கண்டு பிடிக்க வேண்டும்.
திரு பென்னட்டை, பிங்கிலியை சந்திக்கச் செல்லும்படி கூறும் முதல் தன்முனைப்பை பார்க்க வேண்டும்.
முதல் முன்னேற்றத்தை ஆராய வேண்டும், பிங்கிலி ஜேனை விரும்புவது, டார்சியின் 'பரவாயில்லை'.
பிங்கிலியின் வற்புறுத்தலுக்கு டார்சியின் 'பரவாயில்லை' என்பது பதிலாக இருப்பதை பார்க்க வேண்டும்.
பிங்கிலி, 'முட்டாள்' என்று கூறியதற்கு பழி வாங்குவது போலிருந்த டார்சியின் சூழ்ச்சியை கவனிக்க வேண்டும்.
அவளுடைய ஆத்ம நயனங்களின் காரணமாக சூழ்ச்சியில் காரலினுடைய ஒத்துழைப்பு, அதனையே விளக்குகிறது.
எதிரியிடம் தன் காதலைப் பற்றிப் பேசுவதன் மூலம் அதைக் கொண்டாடுவதற்கான டார்சியின் உந்துதல் ஒரு தன்முனைப்பாகும்.
ஒரு வேலைக்கு எதிரியாக இருப்பவருக்கு அந்த வேலை அவர் கண்ணிலும் படக் கூடாது, அதைப் பற்றி அவருக்கு தெரியவும் கூடாது என்பது பெரிய உண்மை.
டார்சியின் காதலைப் பற்றி காரலினுக்குத் தெரியவந்தது ஓடிப் போவதில் முடிந்தது, டார்சிக்கு மேலும் தாழ்வை அளித்தது.
தீவிரமான காதலின் இரண்டு உண்மைகள்,
• தன் காதலைப் பற்றி ஒரு காதலனுக்கு பேச முடியாது.
• அதைப் பற்றி பேச வேண்டும் என்கிற உந்துதல் அவனுடைய காதலைப்போல் பெரியது.
ஒரு பெரிய நிகழ்ச்சி வாழ்வில் செயல்படும் பல்வேறு பாதைகளாகப் பிரிந்தன.
அது போன்ற ஒவ்வொரு சக்தியின் போக்கும், அதற்குகந்த மற்ற சக்தியின் போக்குகளை ஈர்க்கிறது.
எண்ணற்ற சிறிய நீர்ச்சுழிகள் உள்ளன.
அவை மோதுகின்றன, இணைந்து செயல் படுகின்றன, வேகத்தை விடுவிக்கின்றன, நிகழ்ச்சிகளையும் பிரபலங்களையும் கூட அழைத்துச் செல்கின்றன, உண்மைகளை வெளிப்படுத்துகின்றன, வாழ்க்கையின் பண்புகளை வலியுறுத்துகின்றன, பழமொழிகளில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு துளி மனித மதி நுட்பத்தையும் ஆதரிக்கின்றன, பெரிய இயக்கங்களின் பிரதிநிதியாக விளங்கும் அவை, அதனுடைய சிறிய வடிவமாக விளங்குகின்றன, வாழ்க்கையின் கண்ணாடி போலவும் விளங்குகின்றன.

96. "Elizabeth saw her father had not the smallest intention of yielding".
A story has innumerable human choices.
To study how each of these choices came into existence is to understand the story in terms of The Life Divine or The Theory of Development.

Essentially the Theory is the process of the subconscious becoming conscious.
Human choices are subconscious as well as conscious.
One major decision of the collective goes among the individuals as millions of decisions.
In the individual decision there is the determinism of the collective.
Within its scope, the individual does choose.
What chooses is the WILL of the individual.
It is guided by the individual consciousness.
The will acts through an accomplished ability of it which is a talent that is a skill expressing all his capacity so far accumulated.
That skill is his energy originally organized into a skill by his experience.
Wherever it is well formed, it is irresistible.
Its hesitation to act is its incompleteness.
A skill is complete when it reaches the physical where it acts at once.
The energy that goes into action has three expressions – Mental, etc.
Mental energy creates thought.
Vital energy creates attitude.
Physical energy fashions acts.
A thought at the physical level of the Mind endlessly repeats in speaking.
An attitude is an ever-living interest that looks at any situation in its light.
An act expresses the moment the obstacles are cleared.
If possible he clears the obstacle.
His clearing the obstacles depends upon the strength of his will.
This is how a nascent will acts.
Dormant wills are routine habits that were once fashioned like this.
Inspiration gets its energy from the activated vital.
Mental inspiration generates inspired Thought.
Soul's inspiration creates a poet or a saint.

"இணங்குவற்கு அவளுடைய தந்தைக்கு சிறிதளவும் எண்ணம் இல்லை என்பதை எலிசபெத் பார்த்தாள்."
ஒரு கதையில் எண்ணற்ற மனித விருப்பங்கள் உள்ளன.
இந்த ஒவ்வொரு மனித விருப்பமும் எவ்வாறு எழுந்தது என்று ஆராய்ச்சி செய்வது, இக்கதையை 'தி லைப் டிவைன்' அல்லது *The Theory of Development* மூலம் புரிந்துகொள்வது போலாகும்.
முக்கியமாக ஆழ்மனம் மேல்மனமாகும் முறையை இத்தத்துவம் விளக்குகிறது.
மனித விருப்பங்கள் ஆழ்மனத்திலிருந்தும் எடுக்கப்படும், மேல்மனத்திலிருந்தும் எடுக்கப்படும்.
சமூகத்தின் ஒரு பெரிய முடிவு, தனி மனிதர்களிடம் கோடிக்கணக்கான தீர்மானங்களாக மாறுகிறது.
தனி மனிதனின் தீர்மானத்தில் சமூகத்தின் நிர்ணயம் இருக்கிறது.
அதனுடைய எல்லைக்குள்ளிலிருந்து மனிதன் தேர்ந்தெடுக்கிறான்.
மனிதனின் மனவுறுதியே தேர்ந்தெடுக்கிறது.
அதனை தனி மனிதனின் ஜீவியம் வழி நடத்துகிறது.
அவனது சாதித்துள்ள திறமையின் மூலம் உறுதி செயல்படுகிறது. திறன் எனப்படும் இது, இதுநாள்வரை சேர்த்து வைத்திருக்கும் ஆற்றல்களையும் வெளிப்படுத்துகிறது.
அவனுடைய அனுபவத்தின் மூலம் ஆரம்பத்தில் முறைப்படுத்தப்படும் அவனது சக்தியே அவனுடைய திறமை ஆகும்.
எங்கெல்லாம் அது சிறப்பாக உருவாகியுள்ளதோ, அங்கு அதனை தடுக்க முடியாது.
முழுமை பெறாதபொழுது அது செயல்படத் தயங்குகிறது.
ஜடத்தை அடையும்பொழுது ஒரு திறன் முழுமை பெறுகிறது, அங்கு உடனடியாக செயல்படுகிறது.
செயலில் செயல்படும் சக்திக்கு மூன்று வெளிப்பாடுகள் உள்ளன—மனம், உணர்வு, உடல்.
மனத்தின் சக்தி எண்ணத்தை உருவாக்குகிறது.
உணர்வின் சக்தி மனோபாவத்தை உருவாக்குகிறது.
ஜட சக்தியில் புதிய பாணிகள் செயல்படுகின்றன.
மனதில் ஜட நிலையில் உள்ள எண்ணம், முடிவில்லாமல் மீண்டும் மீண்டும் பேச்சில் வெளிப்படும்.
எந்த ஒரு நிலைமையையும் அதனுடைய கோணத்தில் பார்க்கும் பசுமையாக இருக்கும் ஆர்வமே மனோபாவம் ஆகும்.
தடைகள் நீங்கிய அத்தருணத்திலேயே ஒரு செயல் தன்னை வெளிப்படுத்தும்.
முடிந்தால் அவன் தடைகளை நீக்குவான்.
தடைகளை நீக்குவது அவனுடைய உறுதியின் வலிமையைப் பொறுத்தது.
இவ்வாறுதான் புதியது செயல்படுகிறது.

இவ்வாறு இருந்தவையே செயலற்ற உறுதியாக மாறி வழக்கமான பழக்கங்களாக மாறுகின்றன.
சுறுசுறுப்பாக இருக்கும் உணர்விலிருந்து ஊக்கத்திற்கு சக்தி கிடைக்கிறது.
மனத்தின் ஊக்கங்கள் ஊக்கமான எண்ணங்களை உற்பத்தி செய்கின்றன.
ஆன்மாவின் ஆர்வம் ஒரு கவிஞனையோ அல்லது ஒரு மகானையோ உருவாக்குகிறது.

97. "His answers were vague and equivocal".

The initial vagueness indicates the final indecision.
Elizabeth wants to rectify an error without her doing her part, being the source.
The father hopes against hope without exerting his will.
A determined brute will make all the headway amidst undecided authorities.
In an organization into which decay has set it, determined go-getters can get anything accomplished for themselves.
There are human agencies that will sell rare manuscripts as waste paper.
Jealousy understands the outstanding success of the brilliant by assuming the very opposite of the facts.
Jealousy is the dawn that opens those parts that are idle to evolution.
As long as there is a theoretical possibility for such a malicious assumption, jealousy will not vanish.
The immobile spirit to which material sustenance came as an offering of privilege degenerated into a lazy Man asking others to feed him. The consequent starving for thousands of years has not cured him. Now he has to do the work no one will touch and deny himself the only expansive moment of a resourceful lie.
The externals act when the inner is obstinate and stubborn.
Obstinacy is the strength of falsehood in darkness.
You can split atoms; can we dismember an opinion.
A thought destructured, taken into its parts releases as much energy as the atom split.
Buddha conquered the world dissolving the very faculty of thought.
A thought fully consecrated is as powerful.
To consecrate the faculty of thinking is to exceed Nirvana.
One cannot consecrate a thought by another thought.
A spark of the awakening soul can do it at the moment of awakening.
Swabhava is difficult to handle as it is the original force that exceeds form.
To expect another's swabhava to change, one must change in himself at the origin of swabhava – Absolute.
"அவரது பதில்கள் தெளிவில்லாமலும், இரு பொருள் படவும் இருந்தன."
ஆரம்பத் தெளிவின்மை இறுதியில் வரப்போகும் தீர்மானமின்மையைக் காட்டுகிறது.
எலிசபெத் தன்னுடைய பங்கினைச் செய்யாமல் தன்னால் ஏற்பட்ட தவறை சரி செய்ய விரும்பினாள்.
தகப்பனார் அவருடைய விருப்புறுதியை செலுத்தாமல், மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார்.
முடிவெடுக்க முடியாதவர்களிடம் உறுதியாக உள்ள கயவன் எல்லா முயற்சியையும் செய்வான்.
நலிவு ஏற்பட்டுள்ள ஒரு நிறுவனத்தில் இது போன்ற உறுதி படைத்தவர்கள் எதையும் சாதித்துக் கொள்வார்கள்.
அரிதான நூல்களை உபயோகமற்ற காகிதமாக விற்கும் மனிதர்கள் உள்ளார்கள்.
புத்திசாலியின் பெரிய வெற்றியை பொறாமை, உண்மைக்கு நேர் மாறானதை கற்பனை செய்து கொண்டு புரிந்துகொள்ளும்.
பரிணாமத்தில் சோம்பேறியாக இருக்கும் பகுதிகளை திறப்பதே விடியலான பொறாமைதான்.
அது போன்ற விஷமமான யூகங்கள் தத்துவரீதியாக சாத்தியமாகும்வரை பொறாமை மறையாது.
காணிக்கை எனும் பேறாகக் கிடைக்கப் பெற்ற பொருள் உதவி அசைவற்ற ஆன்மாவை, மற்றவர்கள் தனக்கு உணவு கொடுக்க வேண்டும் என்று கேட்கும் அளவிற்கு சோம்பேறி மனிதனாக்கியது. ஆயிரம் ஆண்டுகளாகப் பட்டினியாக இருந்தும் அவன் மாறவில்லை. இப்பொழுது அவன் யாரும் தொடாத வேலையை செய்தாக வேண்டும், பொய் கூறுவதிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும்.
அகம் பிடிவாதமாகவும் அடமாகவும் இருக்கும்பொழுது புறம் செயல்பட ஆரம்பிக்கிறது.
இருளில் பொய்மையின் பலமே பிடிவாதம்.
அணுவைப் பிரிக்கலாம், ஒரு கருத்தை தனித்தனியாக பிரிக்க முடியுமா?
அணுவை பிரிக்கும்பொழுது எழும் அதே சக்தி, ஒரு எண்ணத்தின் கட்டமைப்பை பிரிக்கும்பொழுது எழும் பகுதிகளிலிருந்தும் வெளிவரும்.
எண்ணத்தை அழித்து புத்தர் உலகத்தை வென்றார்.
முழுவதுமாக சமர்ப்பணம் செயப்பட்ட எண்ணம் மிகவும் வலிமையானது.
சிந்தனையை சமர்ப்பணம் செய்வது, நிர்வாணத்திற்கும் மேலானது.
ஒருவர் ஒரு எண்ணத்தால் மற்றொரு எண்ணத்தை சமர்ப்பணம் செய்ய முடியாது.
விழிப்படையும் ஆன்மாவில் உள்ள ஒரு பொறி, விழிப்படையும் அத்தருணத்தில் இதனைச் செய்ய முடியும்.
தோற்றத்தை மிஞ்சும் ஆரம்ப சக்தியான சுபாவத்தை கையாள்வது கடினம்.

மற்றவரது சுபாவம் மாற வேண்டும் என எதிர்பார்த்தால், ஒருவர் தனது சுபாவத்தின் மூலத்திற்குச் சென்று மாற வேண்டும்---பிரம்மம்.

98. "Her mother, often disheartened, was never despaired of succeeding at last".
The determination of the physical is unwavering.
Nothing can be achieved without such a determination.
At the spiritual level such determination matures into giving it up in surrender.
At the physical level, such a determination leads to self-destruction.
Mind decides to surrender to the spirit. It is its own decision.
How can the physical determination rise to vital decision?
The determination to hold on must be replaced by a determination to rise to the vital.
Such a determination converts its strength into vital energy for action.
The moment Bennet decided not to indulge the wife anymore but to exert his right, an enormous amount of energy was released in the atmosphere and set the whole chaos right.
A similar thing occurs in the Mind of Elizabeth.
The enormous clouds of infatuation stopped the moment facts were presented and they melted virtually into thin air.
All those great emotional energies turned into an understanding of shame.
She moved to the Mind that saw clearly her despicable situation.
No more she wanted to see him who would remind her of her shame.
What happened to Darcy was rising from the Mind.
Mrs. Bennet had a long experience of several denials leading to compliance at the end.
Her disobedience was confined to violently differing from him.
What he finally refused, she quietly accepted as she accepted the refusal to move to Brighton as a family.
When opposites work together, each move of one is diametrically opposite to the other.
It is not as if both are moving towards the same goal disagreeing on the process. Each wants to cancel the other fully.
Either it breaks or rises to a higher level where they resolve into a higher outcome in the next plane.
"அவளுடைய தாயார் அடிக்கடி மனச்சோர்வு அடைந்தாலும், இறுதியாக வெற்றி அடைவோம் என்ற நம்பிக்கையை இழக்கவே இல்லை."
ஜடத்தின் தீர்மானம் தடுமாறுவதில்லை.
அது போன்ற தீர்மானம் இல்லாமல் எதையும் சாதிக்க முடியாது.
ஆன்மீக நிலையில் அது போன்ற தீர்மானம் முதிர்ச்சி அடைந்து சரணடைகிறது.
ஜட நிலையில், அது போன்ற தீர்மானம் தன்னையே அழித்துக்கொள்ளும்.
மனம் ஆன்மாவிடம் சரண் அடைய முடிவு செய்கிறது. அது அதனுடைய சொந்த முடிவு.
ஜட உறுதி உணர்வின் தீர்மானமாக எவ்வாறு உயர முடியும்?
தொடர்ந்து பற்றிக்கொள்ளும் உறுதி உணர்வுக்கு உயர வேண்டும் என்ற உறுதியாக மாற வேண்டும்.
இது போன்ற உறுதி அதனுடைய பலத்தை செயலுக்குரிய உணர்வின் சக்தியாக மாற்றுகிறது.
திரு பென்னட் இனி தன்னுடைய மனைவிக்கு அதிக இடம் கொடுக்கக் கூடாது, தன்னுடைய உரிமையை செலுத்த வேண்டும் என்று தீர்மானித்த அத்தருணத்தில், அபரிமிதமான சக்தி சூழலில் வெளிப்பட்டு எல்லா குழப்பங்களையும் தீர்த்து வைத்தது.
இது போன்ற விஷயம் எலிசபெத் மனதிலும் நிகழ்ந்தது.
உண்மைகள் கூறப்பட்ட அத்தருணத்தில், பெரிய அளவில் இருந்த கவர்ச்சி நின்று விட்டது. அது அனேகமாக மறைந்தே போனது.
அந்த உயர்ந்த உணர்வின் சக்திகள் அவமானத்தை புரிந்துகொள்ள ஆரம்பித்தன.
அவள் மனதிற்கு மாறினாள், அங்கிருந்து அவளுடைய மோசமான நிலையைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது.
அவளுடைய அவமானத்தை நினைவுபடுத்தக் கூடிய அவனை அவள் பார்க்க விரும்பவில்லை.
டார்சிக்கு என்ன ஆயிற்று என்று அவள் மனதிலிருந்து எழுந்து கொண்டிருந்தது.
இறுதியில் உடன்பாடாக மாறிய பல மறுப்புக்களை திருமதி பென்னட் தன் நீண்ட அனுபவத்தில் கண்டிருக்கிறாள்.
அவளது கீழ்ப்படியாத குணம், அவரிடமிருந்து தீவிரமாக வித்தியாசப்படுவதில் மட்டும் இருந்தது.
குடும்பமாக பிரைட்டனுக்கு குடிபெயர மறுத்ததை அவள் ஏற்றுக்கொண்டதைப் போல், அவர் இறுதியாக மறுத்ததை அவள் மௌனமாக ஏற்றுக்கொண்டாள்.
நேர் எதிரானவர்கள் ஒன்றாக வேலை செய்யும்பொழுது, ஒருவர் செய்யும் ஒவ்வொரு விஷயமும் மற்றவருக்கு நேர் எதிராக இருக்கும்.
செயல் முறையை ஒத்துக் கொள்ளாமல் இருவரும் ஒரே லட்சியத்தை நோக்கிப் போய் கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தமில்லை. ஒருவர் மற்றவரை முழுவதுமாக இரத்து செய்ய விரும்புகின்றனர். ஒன்று, அது முறிந்து போகிறது அல்லது அடுத்த உயர்ந்த நிலைக்கு உயருகிறது, அங்கு அவர்கள் அடுத்த நிலையில் உயர்ந்த பலனைப் பெறத் தீர்மானிக்கின்றனர்.

Chapter 17: Elizabeth Confides in Jane
ஜேனிடம் எலிசபெத் வெளிப்படையாகப் பேசுதல்

Summary: Elizabeth finally tells Jane what happened with Darcy, deciding to leave out any part of the story that might upset Jane. Jane is appropriately shocked, and feels bad for Darcy. Elizabeth relates the story of Wickham and Jane is once again shocked. They decide however that they will not expose Wickham.
டார்சியுடன் தனக்கு ஏற்பட்ட சந்திப்பை ஜேனிடம் விவரிக்கும் எலிசபெத், அவள் மனத்தை வேதனைப்படுத்தும் விஷயங்களைக் கூறாமல் விட்டு விடுகிறாள். ஜேனிற்கு அதிர்ச்சி உண்டாகிறது. எலிசபெத் நிராகரித்ததற்காக வருத்தமும் அடைகிறாள். விக்காமைப் பற்றிய உண்மைகளையும், அவன் கூறிய பொய்களையும் எலிசபெத் கூறக் கேட்டு, ஜேன் மேலும் அதிர்ச்சியடைகிறாள். அவனைப் பற்றிய விஷயங்களை யாரிடமும் சொல்ல வேண்டாம் எனத் தீர்மானிக்கின்றனர்.

Elizabeth's impatience to acquaint Jane with what had happened could no longer be overcome; and at length, resolving to suppress every particular in which her sister was concerned, and preparing her to be surprised, she related to her the next morning the chief of the scene between Mr. Darcy and herself.
என்ன நடந்தது என்பதை இனியும் ஜேனிடம் சொல்லாமல் இருக்க எலிசபெத் பொறுமையிழந்தவளாக, தன்னுடைய சகோதரி சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் சொல்ல வேண்டாம் எனத் தீர்மானித்து, அவளை ஆச்சரியப்படுத்தும் வகையில், மறுநாள் காலை தனக்கும் டார்சிக்கும் இடையே நடந்த முக்கியமானவற்றை மட்டும் கூறினாள்.

1. Darcy’s proposal to her, apart from being news, in this context has a personality of its own and will press for expression.
   டார்சியின் திருமணப் பேச்சு செய்தியாக இருப்பதோடல்லாமல் அதற்கென்று ஒரு குணாதிசயம் உள்ளது, அது வெளிப்பட வற்புறுத்தும்.
2. “Elizabeth’s impatience to acquaint Jane could no longer be postponed.”
   Impatience itself can tune itself to the impossible circumstances.
   Faculties can be long dormant, can suddenly surface to perform.
   A cow swims; a long unused mother tongue absolutely emerges into use.
   The will of the body inhibits or allows it to function.
   The measure of patience or impatience depends upon the Will that acts – mental or vital or physical will.
   People capable of deep, total, pure, complete Romance can find their hearts functioning irrespective of age or any other thing.
   For us to withdraw from the social personality is the great capacity for culture whose perfection is seen in its emergence as a social personality for the sake of the society.
   The Divine now acts through our nature and ego.
   The Divine having become emancipated from ego and Nature emerging through our parts of the being and the modes of the Self is the Marvel.
   The Divine thus realizes Itself.
   It respects the constitution of our Nature and temperament.
   It emerges not conditioned by its instruments but expresses to transform the instruments.
   In that condition, by choice, the Divine can act as the Divine Itself.
   An ideal Man acting through an unideal organization does so.
   Mother acted through the Ashram like that.
   She acted on Her own in 1956 to receive the descending Supermind.
   In her Darshans She related to the Infinite on our behalf.
   She says She collects all our aspirations and offers them to the Divine.
   She has seen such an aspiration in a passing ass.
   She heard that from the coconut husk, the carpet.
   Her aspiration brought Sri Aurobindo to Her in the subtle plane in 1959.
   Her very cells aspired.
   She was obeyed by the being going to Hitler and the Chinese.
   “ஜேனிடம் என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க, எலிசபெத்திற்கு இனியும் தாமதிக்க முடியவில்லை.”
   சாத்தியமில்லாத சூழ்நிலைக்கு, பொறுமையின்மை தன்னைத்தானே இணங்க வைத்துக்கொள்ளும்.
   திறமைகள் வெகு நாட்களுக்கு செயலற்று இருக்கும், திடீரென்று மேலே எழுந்து செயல்பட ஆரம்பிக்கும்.
   ஒரு பசு நீச்சலடிக்கும்; வெகு நாட்களுக்கு உபயோகப்படுத்தப்படாத தாய் மொழி, முற்றிலுமாக உபயோகத்துக்கு வரும்.
   உடலின் உறுதி, அது செயல்படத் தடுக்கும் அல்லது அனுமதிக்கும்.

பொறுமை அல்லது பொறுமையின்மையின் அளவு, மனம் அல்லது உணர்வு அல்லது ஜடத்தின் விருப்புறுதி செயல்படுவதைப் பொறுத்து இருக்கிறது.

ஆழமான, தூய்மையான, முழுமையான காதல் செய்யக் கூடியவர்கள், தங்களது வயது அல்லது மற்ற எதையும் பொருட்படுத்தாது மனம் செயல்படுவதைக் காண்பர்.

நாம் சமூகத்தின் ஆளுமையிலிருந்து விலகுவது, ஒரு பெரிய திறனாகும். அந்தக் கலாச்சாரத்தின் மேன்மை சமூகத்திற்காக, சமூகத்தின் ஆளுமையாக எழுவதில் காண்கிறோம்.

நமது சுபாவம் மற்றும் அகந்தை மூலம் இப்பொழுது இறைவன் செயல்படுகிறான்.

அகந்தை மற்றும் இயற்கையிலிருந்து விடுதலை பெற்ற இறைவன், ஜீவனின் பகுதிகளிலிருந்தும் சுயத்தின் வகைகளிலிருந்தும் வெளிவருவது அற்புதமாகும்.

இவ்வாறு இறைவன் தன்னை உணர்ந்து கொள்கிறான்.

நமது இயற்கை மற்றும் மனவுணர்வுகளின் அமைப்பை அது மதிக்கிறது.

அதனுடைய கருவிகளினால் பதப்படுத்தப்பட்டு அது வெளிவருவதில்லை, ஆனால் கருவிகளை திருவுருமாற்ற வெளிப்படுத்துகிறது.

அந்த நிலைமையில் விருப்பத்திற்கேற்ப இறைவன் இறைவனாகவே நடந்து கொள்ளலாம்.

ஒரு இலட்சியவாதி, இலட்சியமில்லாத அமைப்பின் மூலம் செயல்படும்பொழுது அவ்வாறு நடந்து கொள்கிறான்.

ஆசிரமத்தின் மூலம் அன்னை அவ்வாறு செயல்பட்டார்.

1956-**ல் கீழிறங்கிய சத்திய ஜீவியத்தை வரவேற்க அன்னை சுயமாகச் செயல்பட்டார்.**

அன்னை அளித்த தரிசனங்களில், அன்னை நமக்காக அகண்டத்துடன் தொடர்பு கொண்டார்.

நம்முடைய எல்லா ஆர்வங்களையும் ஒன்று திரட்டி, அன்னை அவற்றை இறைவனுக்கு அர்ப்பணிப்பதாக கூறுகிறார்.

கடந்து சென்ற ஒரு கழுதையிடம் அது போன்ற ஆர்வத்தை அன்னை பார்த்திருக்கிறார்.

தேங்காய் மட்டையிலும், கம்பளத்திலும் அந்த ஆர்வக் குரலை அன்னை கேட்டார்.

1959**ல் அன்னையின் ஆர்வம் ஸ்ரீ அரவிந்தரை சூட்சும நிலையில் அன்னையிடம் வரவழைத்தது.**

அன்னையின் ஒவ்வொரு அணுவிலும் ஆர்வம் இருந்தது.

அன்னையின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அந்த ஜீவன் ஹிட்லரிடமும், சீனர்களிடமும் சென்றது.

3. "Resolved to suppress every particular regarding Bingley".

Human choice is based on this sifting of details.

Such a sifting goes on in us all the time with respect to time, space, events, people, memory, attitude, motive and everything on earth.

It is a process of creating the infinitesimal out of the Infinite.

One aspect is held out, holding back all the other.

In the Supermind there is no clash between two finites.

In our life there is an eternal clash.

The clash follows the rules of Life, society, Ego, and Nature.

One who knows these rules can see life as it shapes itself.

With subtle vision he can predict, see the past.

Such subtle vision goes before one's birth.

The same vision rising to the causal plane not only can know but determine.

It is creative, but submits itself to the laws of cosmos.

One who knows those rules, one who can determine the course of events choosing to conform to the pattern of prevalent existence is the integral yogi.

He said She has the power to supramentalise earth in one day.

Still, it is not for the devotee to aspire for that power.

One is free to see that Power in action in any field.

He is not free to use it or even seek it.

The power is the power of knowledge and the value lies in not seeking it.

To seek is to be human.

Not to seek is better, but not being capable of seeking is the best.

It is Silent Will at its best.

It is not forgetting that is neutral.

It is positive capacity of not seeking anything for its own sake.

It cannot look down upon those who seek.

It is an attitude that comes when superiority loses its sense.

Superiority is inverted inferiority.

"பிங்கிலி சம்பந்தப்பட்ட எந்த ஒரு விஷயத்தையும் கூறுவதில்லை என முடிவு செய்யப்பட்டது".

இவ்வாறு விவரங்களை சலித்துக் கொடுப்பதன் அடிப்படையில் மனித விருப்பம் உள்ளது.
காலம், இடம், நிகழ்ச்சிகள், மனிதர்கள், ஞாபகம், மனப்பான்மை, நோக்கம் மற்றும் உலகத்திலுள்ள அனைத்து விஷயங்களிலும், இம்மாதிரியாக பிரிப்பது நம்முள் எல்லா நேரங்களிலும் நடந்து கொண்டிருக்கிறது.
இது அகண்டத்திலிருந்து மிகச் சிறியதை உருவாக்கும் முறையாகும்.
மற்ற எல்லாவற்றையும் பிடித்து வைத்துக் கொண்டு, ஒரு கோணம் மட்டும் வெளியே காண்பிக்கப்படுகிறது.
சத்திய ஜீவியத்தில் இரண்டு கண்டத்துக்கும் இடையே மோதல் இருப்பதில்லை.
நமது வாழ்க்கையில் எப்பொழுதுமே மோதல்தான்.
வாழ்வு, சமூகம், அகந்தை, இயற்கை இவற்றின் சட்டங்களை மோதல் பின்பற்றும்.
இந்தச் சட்டங்கள் தெரிந்தவர், வாழ்வு தன்னையே உருவாக்கிக் கொள்வதைப் பார்க்கலாம்.
சூட்சுமப் பார்வையால் ஒருவர் பின்னால் நடக்கப் போவதை முன்கூட்டிச் சொல்லலாம், கடந்த காலத்தைப் பார்க்கலாம்.
ஒருவரது பிறப்புக்கு முன்பிலிருந்தே இது போன்ற சூட்சுமப் பார்வை இருக்கும்.
காரண உலகத்தை எட்டும் இதே பார்வை முன்கூட்டியே தெரிந்து கொள்வதோடல்லாமல், நிர்ணயிக்கவும் செய்யும்.
அது படைக்கும் திறனுடையது, ஆனால் பிரபஞ்சத்தின் விதிமுறைகளுக்குத் தன்னையே கட்டுப்படுத்திக் கொள்ளும்.
அந்த விதிமுறைகளை அறிந்தவர், நிகழ்ச்சிகளின் போக்கை நிர்ணயம் செய்பவர் நிலவுகின்ற வாழ்க்கை அமைப்புடன் ஒத்துப்போவதை தேர்ந்தெடுத்தால் அவரே பூரணயோகி ஆவார்.
ஒரே நாளில் இவ்வுலகத்தை சத்தியஜீவிய சக்தியாக மாற்றும் சக்தி அன்னைக்கு உண்டு என்று பகவான் கூறினார்.
இன்னமும் அந்த சக்திக்கு அன்பர்கள் ஆர்வம் காண்பிப்பதில்லை.
எல்லாத் துறையிலும் அந்த சக்தி செயல்படுவதைப் பார்ப்பதற்கு ஒருவரால் முடியும்.
அதை உபயோகப்படுத்தவோ அல்லது நாடவோ கூட அவனுக்கு உரிமை கிடையாது.
சக்தி என்பது அறிவின் சக்தியாகும், அதனை நாடாமலிருப்பதில்தான் அதன் மதிப்பு உள்ளது.
நாடுவது மனித குணம்.
நாடாமலிருப்பது நல்லது, நாடுவதற்கே இயலாமல் இருப்பது அதைவிடச் சிறந்தது.
மௌன விருப்புறுதி எல்லாவற்றையும்விடச் சிறந்தது.
நடுநிலையாக இருக்கும், மறப்பது என்பதல்ல அது.
தனக்கென்று எதையும் நாடாமலிருக்கும் நேர்மறையான திறன் அது.
நாடுபவர்களை தாழ்வாகவும் அதனால் பார்க்க முடியாது.
உயர்ந்தது அதனுடைய உணர்வை இழக்கும்பொழுது எழும் மனப்பான்மை அது.
உயர்வு தலைகீழான தாழ்வாகும்.

4. "Preparing Jane to be surprised".
Surprise is surprising.
The least Elizabeth could aspire for is to spring a surprise on Jane.
The idea of marrying never once entered her Mind.
I have adduced two reasons for it: 1) the lingering charm for Wickham, and 2) the mechanism of life that wants to accomplish her marriage.
Out of that monumental event in her life, the least she could expect is the surprise of Jane.
Misfortunes sympathized come to stay thus energized.
After a tragic event in a Man's life, if life around is maliciously blind, the tragedy passes, reversing itself and opens the opposite of luck in his life.
Social courtesy of sympathetic enquiry will have undesirable effects.
Apart from all this, Jane is NOT good to Elizabeth as she is to Jane.
It should have struck her as a thunder of lucky surprise.
She gives a flat negative response, unpardonable in her.
Her own happy sisterly surprise would have stood in the way of Elizabeth succeeding in getting Jane married.
It is clear she is unable to be happy in Elizabeth's good luck as Elizabeth is to her.
Her inability to be surprised reminds us of the inability of Elizabeth to be shocked by Wickham's design on Georgiana.
Bennet's response, Jane's reluctance to be happy show that Darcy was not in their social horizon.
That distance **made the marriage possible preventing any possible expectation in Elizabeth.**
Mrs. Gardiner was genuinely expansive on seeing Darcy in love with Elizabeth.
The distance between such interest and wedding being so impossibly great Mrs. Gardiner would not disturb the atmosphere by the most distant hint.
It is a culture of good will.
"ஜேனுக்கு ஆச்சரியம் அளிக்கத் தயாரானாள்".

ஆச்சரியம், ஆச்சரியமாக உள்ளது.
ஜேனிடமிருந்து ஆச்சரியம் எழுவதையே, எலிசபெத்தால் குறைந்தபட்சமாக விரும்ப முடியும்.
திருமணம் செய்துகொள்ளும் எண்ணம் அவள் மனதில் ஒரு முறைகூட எழுந்ததில்லை.
அதற்கு இரண்டு காரணங்களை நான் உதாரணம் காட்டியுள்ளேன்:
1) விக்காம் மீது தொடரும் கவர்ச்சி 2) அவளுடைய திருமணத்தைப் பூர்த்தி செய்ய விரும்பி வாழ்க்கை எடுக்கும் வழிமுறை.
அவளுடைய வாழ்க்கையின் அந்த மிகப் பெரிய நிகழ்ச்சிக்கு, அவள் குறைந்தபட்சமாக எதிர்பார்க்கக் கூடியது ஜேனுடைய ஆச்சரியம்தான்.
துரதிர்ஷ்டத்திற்கு அனுதாபம் காண்பித்தால், அதற்குச் சக்தி கிடைத்து அது அங்கு தங்கி விடும்.
ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஒரு துயர் சம்பவத்திற்குப் பிறகு சுற்றியுள்ள வாழ்க்கை மிகவும் கண்மூடியாக இருந்தால், துயரம் அகன்று நேர்எதிராக மாறி அதிர்ஷ்டத்தை கொண்டு சேர்க்கும்.
சமூக மரியாதைக்காக செய்யப்படும் அனுதாபத்துடன் கூடிய விசாரிப்பு, வேண்டாத விஷயங்களுக்கு வழி வகுக்கும்.
இவை எல்லாவற்றிற்கும் மேல் எலிசபெத் ஜேனிடம் நல்லவளாக இருப்பது போல் ஜேன் அவளிடம் இல்லை.
அவளுக்கு அது இடி விழுந்ததுபோல் ஆச்சரியமாக இருந்திருக்கும்.
அவள் ஜீவனற்ற எதிர்மறையான பதிலை அளிக்கிறாள். அவளை மன்னிக்கவே முடியாது.
ஜேனுக்குத் திருமணம் நடத்தி வைப்பதில் எலிசபெத் வெற்றி அடைவதற்கு, சகோதரி என்ற முறையில் எழும் அவளுடைய சந்தோஷம் கலந்த ஆச்சரியம் தடையாக இருந்திருக்கும்.
எலிசபெத் அவளுடைய அதிர்ஷ்டத்தில் சந்தோஷப்படுவதுபோல் எலிசபெத்தின் அதிர்ஷ்டத்தில் அவளால் சந்தோஷப்பட முடியவில்லை என்பது தெளிவாக இருக்கிறது.
அவளால் ஆச்சரியப்பட முடியாமல் போவது, ஜார்ஜியானாவை வைத்து விக்காம் தீட்டிய திட்டத்தை கேட்டு எலிசபெத் அதிர்ச்சி அடையாததை நமக்கு நினைவுபடுத்துகிறது.
பென்னட்டின் மறுமொழி, சந்தோஷப்படுவதற்கு ஜேன் காண்பிக்கும் தயக்கம், இவை அவர்களுடைய சமூக விளிம்பிற்குள் டார்சி இல்லை என்பதைக் காண்பிக்கின்றது
இந்த இடைவெளி எலிசபெத்திடம் எந்த வித சாத்தியமான எதிர்பார்ப்பையும் தவிர்க்க வைத்து, திருமணத்தை சாத்தியமாக்கியது.
எலிசபெத்திடம் டார்சி கொண்ட காதலைப் பார்த்து திருமதி கார்டினர் உண்மையிலேயே அதிக சந்தோஷமடைந்தாள்.
இது போன்ற விருப்பத்திற்கும் திருமணத்திற்கும் இடையே இருக்கும் இடைவெளி மிகவும் அதிகமாக இருப்பதால், திருமதி கார்டினர் தனக்கு கிடைக்கும் லேசான குறிப்பை வைத்து சூழலை கெடுக்க நினைக்க மாட்டாள்.
இது நல்லெண்ணத்தின் நாகரிகமாகும்.

Miss Bennet's astonishment was soon lessened by the strong sisterly partiality which made any admiration of Elizabeth appear perfectly natural; and all surprise was shortly lost in other feelings. She was sorry that Mr. Darcy should have delivered his sentiments in a manner so little suited to recommend them; but still more was she grieved for the unhappiness which her sister's refusal must have given him.
இதனைக் கேட்டு மிஸ். பென்னட்டிற்கு முதலில் ஆச்சரியமாக இருந்தது. ஆனால் சகோதரியின் மேல் இருக்கும் ஒருதலைப்பட்சமான அன்பு அவளது ஆச்சரியத்தைக் குறைத்தது. மீதியிருந்த ஆச்சரியமும் வேறுவித உணர்ச்சிகளால் மறைந்தே போனது. எலிசபெத் ஏற்றுக்கொள்ளும் வகையில் டார்சி தன்னுடைய உணர்ச்சிகளை வெளிக்காட்டாதது அவளுக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது; இதற்கும் மேலாக தனது சகோதரியின் நிராகரிப்பால் அவனுடைய வருத்தத்தை நினைத்து வேதனையுற்றாள்.

5. Jane's response is characteristic of her.
   ஜேனுடைய மறுமொழி அவளுக்கே உரித்தானதாக இருந்தது.
6. There was no great surprise for Jane, as Elizabeth was holding back Jane's part. So, the energy of surprise is not there.
   ஜேனுக்கு பெரிய ஆச்சரியம் ஒன்றுமில்லை ஏனெனில் எலிசபெத் ஜேனுடைய விஷயத்தை பிடித்து வைத்திருக்கிறாள். அதனால் ஆச்சரியத்திற்குரிய சக்தி அங்கு இல்லை.
7. Jane does not for a moment regret Elizabeth lost a great chance. Neither money, nor marriage is so valuable to her as Elizabeth's happiness.
   ஒரு பெரிய வாய்ப்பினை எலிசபெத் இழந்து விட்டாள் என்று ஒரு நொடிகூட ஜேன் வருத்தப்படவில்லை. எலிசபெத்தின் சந்தோஷத்தைவிட அவளுக்குப் பணமோ திருமணமோ முக்கியமாகப்படவில்லை.
8. The mother is obsessed by their marriages.
   அவர்களுடைய திருமணங்கள் தாயாரின் மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.
9. No girl is equally worried, though they all want it.
   பெண்களுக்குத் திருமணம் வேண்டியிருந்த போதும் அவர்கள் ஒருவரும் அதற்கு கவலைப்படவில்லை.
10. Lydia said Bingley would choose her.

பிங்கிலி தன்னை தேர்ந்தெடுப்பான் என லிடியா கூறினாள்.

11. As they were not obsessed about marrying like the mother, three weddings take place all at once.
தாயாரைப் போல் அவர்கள் திருமணத்தால் ஆட்கொள்ளப்படாததால் மூன்று திருமணங்களும் ஒன்றாக நடந்தன.
12. Jane was not astonished by Darcy's proposal. She lost the surprise in other feelings one of which is the exposure of Wickham. It is due to two reasons: 1) Jane is incapable of a receptivity to Darcy's wealth into her family and 2) The exposure of Wickham has pained the feminine heart to wonder enough at the proposal.
டார்சியின் திருமணப் பேச்சால் ஜேன் அதிசயப்படவில்லை. மற்ற உணர்வுகளில் அவள் தன்னுடைய ஆச்சரியத்தை தொலைத்திருந்தாள், அதில் ஒன்று விக்காம் வெளிப்பட்டது. இதற்கு இரு காரணங்கள் உள்ளன:
1) டார்சியின் செல்வம் அவளுடைய குடும்பத்திற்கு வருவதை ஏற்கும் திறன் அவளிடம் இல்லை 2)விக்காம் வெளிப்பட்டது அவளுடைய மென்மையான மனத்தை துன்புறுத்தியதால் அவளால் மேற்கொண்டு திருமண வேண்டுகோளிற்கு ஆச்சரியப்பட முடியவில்லை.
13. "Strong sisterly partiality that made the proposal perfectly natural in view of her perfections…".
Only once Jane, after her engagement, wished Elizabeth another Bingley.
She never said that Elizabeth deserved a better groom.
Her concession, apparent or real, came true as it was not much dwelt upon.
Jane Austen does not tell us whether Elizabeth surprised Jane enough as she expected.
It is more than clear that Jane, whether she has goodwill or not for her sister, is fully wrapped up in her own sacred self.
Goodwill formulates itself out of excess energy that is outgoing.
Jane is not endowed with any such energy of that description.
Sure, she is stupid enough not to be sufficiently surprised.
She, Elizabeth said, loved many stupid Men.
To be stupid is different from loving a stupid person.
It means she does not see that stupidity.
Stupidity that does not see another's stupidity is really stupid.
Her mother's stupidity is given a dynamism by her energy.
In Jane, her mother's stupidity has stuck as a passive endowment.
She is slow to respond out of this trait.
Stupidity is not active enough to have ill-will.
Nor does it permit goodwill that needs activity of thought.
She is somewhat dull.
Dullness is incapacity for action; stupidity is inability to think.
Dullness of substance makes stupidity of consciousness.
Elizabeth spares no occasion to complement Jane.
Jane does not offer her opinion of anyone for us to know.
Jane is a passive complement to Elizabeth.
Nor is Jane hurt by the exuberance of Kitty or Lydia.
Darcy noted it.
Bennet mentions it.
"சகோதரியின் மேலிருந்த பாரபட்சம், திருமணப் பேச்சை அவளுடைய குற்றமற்ற பார்வையில் மிகவும் இயற்கையாக மாற்றியது".
ஒரே ஒரு முறை ஜேன் அவளுடைய திருமண உறுதிக்குப் பின் பிங்கிலியைப் போல் ஒருவன் கிடைக்க வேண்டும் என எலிசபெத்தை வாழ்த்தினாள்.
எலிசபெத்துக்கு மேலும் சிறப்பான கணவன் கிடைக்க வேண்டும் என்று அவள் ஒரு போதும் கூறவில்லை.
அவள் அளித்த சலுகை, வெறும் தோற்றமோ அல்லது உண்மையோ, அதில் அதிகம் மனம் செலுத்தாத காரணத்தினால் உண்மையானது.
எலிசபெத் எதிர்பார்த்த அளவிற்கு ஜேன் ஆச்சரியப்பட்டாளா என்பதை ஜேன் ஆஸ்டின் நமக்குக் கூறுவதில்லை.
ஜேனுக்கு அவளுடைய சகோதரியிடம் நல்லெண்ணம் இருக்கிறதா இல்லையா என்பதைவிட, அவள் தன்னுள்ளேயே முழுவதுமாக ஆழ்ந்து இருக்கிறாள் என்பது மிகவும் தெளிவாக உள்ளது.
வெளிப்படும் அதிகப்படியான சக்தியின் மூலம் நல்லெண்ணம் தன்னையே உருவாக்கிக்கொள்ளும்.
இது போன்ற சக்தி ஜேனுக்கு கிடையாது.
போதுமான அளவிற்கு ஆச்சரியப்படாமல் இருக்கும் அவள் நிச்சயமாக அறிவற்றவளாக இருக்கிறாள்.
முட்டாளாக இருக்கும் நிறைய ஆண்களை அவள் விரும்பியிருக்கிறாள் என்று எலிசபெத் கூறினாள்.

முட்டாளாக இருப்பது முட்டாள்களை விரும்புவதிலிருந்து வேறுபட்டது.
அது அவள் முட்டாள்தனத்தைப் பார்ப்பதில்லை என்றாகிறது.
முட்டாள்தனம் மற்றவரது முட்டாள்தனத்தைப் பார்ப்பதில்லை என்பது உண்மையில் முட்டாள்தனமானது.
அவளுடைய தாயாரின் முட்டாள்தனத்தை சுறுசுறுப்பாக மாற்றுவது அவளுடைய சக்தியே.
ஜேன், அவளுடைய தாயாரின் முட்டாள்தனத்தை அமைதியான குணமாக பெற்றிருக்கிறாள்.
இந்தக் குணத்தினால் அவள் மெதுவாக செயல்படுகிறாள்.
முட்டாள்தனம் கெட்ட எண்ணம்கொள்ளும் அளவிற்கு சுறுசுறுப்பாக செயல்படாது.
நல்லெண்ணத்தையும் அது அனுமதிக்காது, ஏனெனில் அதற்கு எண்ணங்கள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.
அவள் சற்று மந்தமாக இருக்கிறாள்.
மந்த நிலையில் செயல்பட முடியாது; முட்டாள்தனத்திற்கு சிந்திக்கும் திறன் இல்லை.
அகத்தின் மந்த நிலை ஜீவியத்தில் முட்டாள்தனத்தை உண்டாக்குகிறது.
ஜேனைப் பாராட்ட எலிசபெத் எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் விடுவதில்லை.
நாம் தெரிந்துகொள்வதற்கு ஜேன் யாரைப் பற்றியும் அவளுடைய அபிப்பிராயத்தை கூறுவதில்லை.
எலிசபெத்தை ஜேன் தன்னுடைய அமைதியான சுபாவத்தால் பூர்த்தி செய்கிறாள்.
கிட்டி, லிடியா இருவரின் பொங்கி வரும் உணர்ச்சிகளால் ஜேன் பாதிப்படைவதில்லை.
டார்சி இதனை கவனித்தான்.
பென்னட் இதனை குறிப்பிடுகிறார்.

14. "All surprise was shortly lost in other feelings".
The Prime Minister visited a farmer in his house wanting to eat what he had prepared for his own dinner. **It is not a surprise that is to be lost.**
It is equally true of human nature great good things do not make lasting impressions on many. The various reasons are,
1) Inability to sense the greatness of the event.
2) Inability to retain that sensation for long.
3) Too selfish to appreciate good things to others.
4) General lack of energy for surprise.
5) In a psychological condition that prevents jealousy, one will not have the sensitivity to praise another.
6) Deep seated ill will of jealousy successfully suppressed.
Man is vociferous in appreciating the achievements of unknown persons as there is no visible rivalry.
In closed communities that are negative we see no one is able to appreciate another.
Great good fortune received from another to such people raises the first disagreeable thought that the good that comes, comes through such a person to whom he cannot even feel grateful.
Such feelings grow so strong that they cancel the incoming good fortune.
Even when devotees pray to Mother, they wish to receive the result more for their desert than from Grace.
Sri Aurobindo said Man is selfish and mean.
It is mildly put.
Man, after all, permits in his Mind other population only to the extent they are necessary for his survival.
It is said by many that one woman's hatred of another woman is instinctive. It is equally true for every living human being about another. Only that it does not all the time surface as it occurs in women. It is this human nature our yoga has set out to transform into divine nature.
"மற்ற உணர்வுகளில் எல்லா ஆச்சரியங்களையும் அவள் விரைவில் இழந்தாள்."
ஒரு விவசாயியின் வீட்டிற்கு விஜயம் செய்த பிரதம மந்திரி, அவன் தனக்கென்று வைத்திருந்த உணவை உண்ணுவதற்கு விருப்பப்பட்டார். இதைக் கேட்டு ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.
உயர்ந்த நல்ல விஷயங்கள் பலருக்கு நிலையாக நினைவில் இருப்பதில்லை என்பதும் மனித சுபாவத்தின் உண்மை. இதற்கான காரணங்கள் பின்வருமாறு,
1) நிகழ்ச்சியின் உயர்வை உணர முடியாதது.
2) அந்த உணர்வை நீண்ட காலத்திற்கு தக்க வைத்துக்கொள்ள முடியாதது.
3) நல்லவற்றைப் பற்றி மற்றவரிடம் பாராட்டு தெரிவிக்க முடியாத அளவிற்கு சுயநலமாக இருப்பது.
4) ஆச்சரியம் எழுவதற்கு பொதுவாக சக்தி இல்லாமல் இருப்பது.
5) பொறாமை உள்ள மன நிலையில் மற்றவரைப் பாராட்ட வேண்டும் என்ற உணர்வு ஒருவருக்கு இருக்காது.
6) வெற்றிகரமாக அடக்கி வைக்கப்பட்ட ஆழமான பொறாமையின் கெட்ட எண்ணம்.
அறிமுகமில்லாத நபர்களின் சாதனைகளை மனிதன் வெளிப்படையாகப் பாராட்டுவான், ஏனெனில் அங்கு கண்ணுக்குத் தெரியக்கூடிய பகைமை எதுவும் இல்லை.
எதிர்மறையாக இருக்கும் குறுகிய சமுதாயத்தில் ஒருவருக்கும் மற்றவரைப் பாராட்ட முடிவதில்லை என்பதை நாம் பார்க்கிறோம்.

இது போன்ற மனிதர்களுக்கு பெரிய நல்ல அதிர்ஷ்டம் மற்றவரிடமிருந்து வரும்பொழுது, எவரிடம் நன்றி உணர்வுகூட எழாதோ, அந்நபரிடமிருந்துதான் அது வருகிறது என்பதைக்கூட ஒப்புக்கொள்ளமுடியாத எண்ணம்தான் முதலில் எழுகிறது.
இது போன்ற உணர்வுகள் அவ்வளவு வலிமையாக இருப்பதால், வரும் நல்ல அதிர்ஷ்டத்தை அவை தடுத்து விடுகின்றன.
அன்பர்கள் அன்னைக்குப் பிரார்த்தனை செய்யும்பொழுதும், அருளினால் கிடைக்கும் பலனைவிட தங்களது தகுதிக்கு கிடைக்கும் பலனையே அதிகம் பெற்றுக்கொள்ள விரும்புகின்றனர்.
மனிதன் சுயநலமாகவும், சிறுமையாகவும் இருக்கிறான் என பகவான் கூறியுள்ளார்.
அது மிதமாக கூறப்பட்டுள்ளது.
மனிதன், தான் உயிர் வாழ்வதற்கு எவ்வளவு தூரம் அவசியமாக மனிதர்கள் இருக்கிறார்களோ, அவர்களை மட்டும்தான் தன் மனதில் அனுமதிப்பான்.
ஒரு பெண் மற்றொரு பெண்ணை வெறுப்பது இயற்கையான உணர்வு என்று பலரால் சொல்லப்பட்டுள்ளது.
இது உலகில் வாழும் ஒவ்வொரு மனிதரைப் பொறுத்தவரையும் உண்மைதான். பெண்களிடம் எந்நேரமும் மேல் எழுவது போல் இது மற்றவர்களிடம் எழுவதில்லை. இந்த மனித சுபாவத்தைதான் நமது யோகம் தெய்வீகச் சுபாவமாக திருவுருமாற்ற கிளம்பியுள்ளது.

15. "She was sorry that Mr. Darcy should have delivered his sentiments in a manner so little suited to recommend them".
Jane is a shell of formality.
She could not see the Himalayan event before her.
She quickly moves to the form ill suited and later to the sorrow of his disappointment.
No content worth its name was formed in her – a content of human value.
At best she was a negative product of freedom and energy.
Her mother's sacred preserve of beauty is inherited by her.
The inheritance of outer form has taken all the energy leaving behind a negative accomplishment.
As against the virulent insistence of her mother, Silent will is almost a negative accomplishment in her.
If Mind is there, its will is there in silence.
No strong silly urge has entered her.
In the second child the deepening aspiration of the father brought forth Mind.
Elizabeth completes in herself what Jane failed to bring forth.
Elizabeth's inordinate attachment to Jane is because she is her sister's outgrowth.
In the children the silent battle of the parents' will is seen.
Longbourn represents Meryton; it is right he marries one from the village as he loves the country.
One end of the community lifts the other end, striking a balance.
Jane, forgetting Darcy proposed to her sister, talks of his disappointment and the unsuitable form of his sentiments.
Birth of Mind is a great event.
Preceding it form, though half empty, is in order.
Her beauty is the physical form.
Her occupation is vital forms.
There is a strong process her Mind is undergoing as to the form and its rightness.
The birth of form in her gave birth to the content in Elizabeth.
We now see the attachment between Jane and Lizzy is primarily mental.
"ஏற்றுக்கொள்ளும் விதத்தில் டார்சி அவனுடைய உணர்வுகளை வெளிக்காட்டாதது, அவளுக்கு வருத்தத்தை அளித்தது".
ஜேன் சம்பிரதாயமான கூட்டில் இருப்பவள்.
மலையளவு ஒரு நிகழ்வு தன் முன் இருப்பதை அவளால் பார்க்க முடியவில்லை.
பொருந்தாத ஒரு நிலைக்கு அவள் விரைவாகச் சென்று, பிறகு அவனுடைய ஏமாற்றத்திற்கு வருந்துகிறாள்.
சொல்லிக்கொள்ளும் அளவிற்கு அவளிடம் எந்த விஷயமும் உருவாகவில்லை—மனிதப் பண்பின் உட்பொருள்.
அதிகபட்சமாகக் கூறினால் அவள் சுதந்திரத்தாலும் சக்தியாலும் எதிர்மறையாக உருவானவள்.
அவளுடைய தாயார் பேணிப் பாதுகாத்த அழகை அவள் பெற்றிருக்கிறாள்.
அவள் தாயாரிடமிருந்து பெற்றுக் கொண்ட வெளித் தோற்றம் எல்லா சக்திகளையும் எடுத்துக் கொண்டு விட்டதால், அவளால் எதையும் சாதிக்க முடியவில்லை.
அவளுடைய தாயாரின் கடுமையான வற்புறுத்தலுக்கு எதிராக, மௌன விருப்புறுதி அவளிடம் எதிர்மறையான சாதனையாகவே இருக்கிறது.
மனம் செயல்படும் பொழுது, அதன் விருப்புறுதி மௌனமாக இருக்கும்.
எந்த ஒரு வலிமையான அற்பமான உந்துதலும் அவளிடம் எழவில்லை.
இரண்டாவது குழந்தையிடம் தகப்பனாரின் ஆழ்ந்த ஆர்வம் மனமாக எழுந்தது.

ஜேன் கொண்டு வரத் தவறியதை எலிசபெத் தன்னில் பூர்த்தி செய்து கொள்கிறாள்.
ஜேனிடம் எலிசபெத்திற்கு இருக்கும் அதீத பாசம் அவள் ஜேனுடைய கிளையாக இருப்பதால்.
பெற்றோர்களின் விருப்புறுதியின் மௌனமான யுத்தம் குழந்தைகளிடம் காணப்படும்.
லாங்பர்ன், மெரிடனின் பிரதிநிதியாக விளங்குகிறது; அவனுக்கு அந்த இடம் பிடிக்கும் என்பதால் அந்த கிராமத்திலிருந்து ஒரு பெண்ணை அவன் மணந்துகொள்வது சரியானதுதான்.
சமுதாயத்தின் ஒரு முனை சமநிலைப்படுத்த அடுத்த முனையை உயர்த்தும்.
டார்சி தனது சகோதரியிடம் திருமண வேண்டுகோள் விடுத்ததை மறந்து, ஜேன் அவனுடைய ஏமாற்றத்தைப் பற்றியும் அவனுடைய உணர்வுகளை ஏற்றுக்கொள்ளும் வகையில் வெளிப்படுத்தாததைப்பற்றியும் பேசுகிறாள்.
மனம் பிறப்பது பெரிய நிகழ்ச்சியாகும்.
இதற்கு முன்னால் தோற்றம் உள்ளது, பாதி காலியாக இருந்தாலும் சரியாகவே உள்ளது.
அவளுடைய அழகு ஜடத் தோற்றம் ஆகும்.
அவள் செயல்படுவது உணர்வுரீதியாக இருக்கிறது.
தோற்றத்தையும் அதன் நியாயத்தைப் பற்றியும் வலிமையான எண்ணங்கள் அவள் மனதில் ஓடிக்கொண்டிருக்கின்றன.
அவளிடம் தோற்றமாகத் தோன்றியது எலிசபெத்திடம் பொருளாக தோற்றுவித்தது.
ஜேனுக்கும் எலிசபெத்திற்கும் இடையே இருக்கும் பாசம் முக்கியமாக மனரீதியானது என்பதை நாம் இப்பொழுது பார்க்கிறோம்.

"*His being so sure of succeeding was wrong," said she, "and certainly ought not to have appeared; but consider how much it must increase his disappointment."*
"உன்னை திருமணம் செய்து கொள்ள வேண்டி கேட்டதில் அவனுக்கு வெற்றி கிடைக்கும் என அவன் தீர்மானமாக நம்பியது சரியில்லை. அவ்வாறு தோற்றமளித்ததும் தவறு. இதனால் அவனுடைய ஏமாற்றம் மேலும் எவ்வளவு அதிகரித்திருக்கும் என்று நினைத்துப் பார்" என்றாள் ஜேன்.

16. Jane disapproves of Darcy's assurance of Elizabeth accepting him. She herself readily accepted Bingley as Charlotte did. No girl will put up her feminine tricks to Darcy's wealth. They are too sensible to play hide and seek with them. Elizabeth acted so the second time. Jane's web of appearance is so foolishly real that she finds fault with Darcy.
எலிசபெத் தன்னை ஏற்றுக்கொண்டு விட்டதைப் பற்றி டார்சி உறுதியாகக் கூறுவதை ஜேன் நிராகரிக்கிறாள். ஷார்லெட்டைப் போல் அவளும் பிங்கிலியை உடனடியாக ஏற்றுக்கொண்டாள். டார்சியின் செல்வத்தை வைத்து எந்த பெண்ணும் எந்த யுக்தியையும் கையாள மாட்டாள். அதனுடன் ஒளிந்து மறைந்து விளையாடும் அளவிற்கு அவர்கள் அறிவு இல்லாதவர்கள் அல்ல. எலிசபெத் இரண்டாவது முறை இவ்வாறு நடந்து கொள்கிறாள். நுணுக்கமாக பின்னப்பட்டுள்ள தோற்றம், டார்சியிடம் குறை கண்டு பிடிக்கும் அளவிற்கு ஜேனுக்கு முட்டாள்தனமாக உண்மையாகப் படுகிறது.

17. "His being so sure of succeeding is wrong".
Faith in an idea lasts as long as it yields results in one's experience.
Hopeless women quickly abandon the theory of waiting and start setting traps for men.
Jane believes in woman waiting for men, in Man courting unwilling women.
Her own beauty makes it possible.
Mrs. Bennet's irrepressible urges have matured into their opposite in Jane.
Whatever she does, her own stamp of stupidity is always there.
To be able to utter this idea she must be certainly stupid in the extreme.
Stupid Jane, Bingley the boneless wonder is life's match – perfect in itself.
Every Man spots a strong point in himself where he excels others.
His difference from others is taken to be his superiority.
He compares with himself with anyone from his chosen vantage point.
That gives him a distinction in his own estimation.
His subconscious awareness that he is a soul, makes him do so.
Sri Aurobindo explains the current belief in Omnipotence, Omnipresence, Omniscience is due to the subconscious awareness of the Supermind.
Injustice is God's justice.
God's purity of justice expressing through the vitiating atmosphere of ignorance becomes human injustice.
A villager who having come to town heard the word company a few hundred times. He tried to pronounce it. In his mouth it became kadal.
The Mind rightly heard, the lips because of lack of experience, are unable to pronounce it rightly initially.
Successful Indian organizations in institutionalizing the Englishman's punctuality create an atmosphere of hardness and a mechanical feeling.

The two incidents in the whole story that bring out the high principle working in a low atmosphere are 1) Elizabeth's callous ignoring of Wickham's heinous attempt with Georgiana, and 2) Jane's incapacity to be generously surprised at the most pleasant event in Elizabeth's life. **Generosity is a rare virtue.**
One's soul value is seen in his sensitivity to another's woes.
"தான் ஜெயித்து விடுவோம் என்கிற அவனுடைய உறுதி, தவறானது."
ஒருவருடைய அனுபவத்தில், பலனை கொடுக்கும்வரை ஒரு கருத்தில் உள்ள நம்பிக்கை நிலைத்திருக்கும்.
நம்பிக்கையற்ற பெண்மணிகள், காத்திருப்பதை விரைவில் விட்டு விட்டு, ஆண்களுக்கு வலை விரிக்க ஆரம்பிக்கின்றனர்.
ஆண்களுக்காக பெண்கள் காத்திருக்க வேண்டும் என்பதில் ஜேனுக்கு நம்பிக்கை இருக்கிறது, விருப்பமில்லாத பெண்களை ஆண்கள் காதலிப்பதையும் நம்புகிறாள்.
அவளுடைய அழகு அதனை சாத்தியமாக்குகிறது.
திருமதி பென்னட்டின் கட்டுப்படுத்த முடியாத உந்துதல்கள், ஜேனிடம் நேரெதிரான விஷயங்களாக முதிர்ச்சி பெற்றிருக்கின்றன.
அவள் என்ன செய்தாலும், அதில் அவளுடைய முட்டாள்தனத்தின் முத்திரை எப்பொழுதும் பதிந்திருக்கும்.
இந்தக் கருத்தை அவள் சொல்வதற்கு அவள் மிகவும் அறிவற்றவளாக இருக்க வேண்டும்.
அறிவற்றவளான ஜேன், முதுகெலும்பில்லாத பிங்கிலி இருவரும் வாழ்க்கையில் சிறப்பாக பொருந்துவார்கள்.
ஒவ்வொரு மனிதனும் தன்னிடத்தில் ஒரு முக்கியமான இடத்தை கண்டு பிடிப்பான், அங்கு அவன் எல்லோரையும் மிஞ்சுவான்.
மற்றவர்களிடமிருந்து அவன் வித்தியாசப்படுவதை அவனுடைய உயர்வாகக் கருதுவான்.
தான் தேர்ந்தெடுத்திருக்கும் முக்கியமான இடத்திலிருந்து அவன் தன்னை எல்லோருடனும் ஒப்பிட்டுப் பார்ப்பான்.
அவனுடைய சுய கணிப்பில் அது அவனுக்கு முக்கியத்துவத்தை அளிக்கிறது.
அவன் ஒரு ஆன்மா என்கிற அவனுடைய ஆழ்மன விழிப்புணர்ச்சி, அவனை அவ்வாறு நடந்து கொள்ள வைக்கிறது.
எல்லாம் வல்லவன், எல்லாம் அறிந்தவன், எங்கும் நிறைந்தவனாக இருக்கும் இறைவனிடம் இருக்கும் தற்பொழுதைய நம்பிக்கைகள், சத்திய ஜீவியத்தின் ஆழ்மன விழிப்புணர்ச்சியால்தான் என்று ஸ்ரீ அரவிந்தர் விளக்குகிறார்.
அநியாயம் இறைவனுக்கு நியாயம்.
இறைவனின் நியாயத்தின் தூய்மை அறியாமையின் மாசுபட்ட சூழலின் மூலம் வெளிப்படும்பொழுது, அது மனித அநியாயமாக மாறுகிறது.
நகரத்திற்கு வந்திருந்த ஒரு கிராமத்தான் கம்பனி என்கிற வார்த்தையை சில நூறுமுறைகள் கேட்டான். அவன் அதை உச்சரிக்க முயற்சி செய்த போது அவனுடைய வாயிலிருந்து அது கடல் என எழுந்தது.
மனத்திற்கு சரியாக கேட்டது, அனுபவமின்மை காரணமாக அவனால் அதனை ஆரம்பத்தில் சரியாக உச்சரிக்க முடியவில்லை.
ஆங்கிலேயனின் நேரம் தவறாமையை வெற்றிகரமான ஒரு இந்திய நிறுவனம் ஸ்தாபிக்கும்பொழுது, சூழலில் ஒரு முரட்டுத் தன்மையும் இயந்திர கதியும் உருவாகிறது.
உயர்ந்த தத்துவம் தாழ்ந்த சூழலில் செயற்படும் இரண்டு நிகழ்ச்சிகள் இந்த முழுக்கதையில் பின்வருமாறு, 1) ஜார்ஜியானாவுடன் விக்காம் ஓடிப் போகத் துணிந்த கொடுமையை எலிசபெத் இரக்கமில்லாமல் புறக்கணிப்பது, 2) எலிசபெத்தின் வாழ்க்கையில் நடக்கும் இனிமையான நிகழ்வினைக் கண்டு ஜேன் பெரும் அளவில் ஆச்சரியப்பட முடியாதது. **பெருந்தன்மை ஒரு அரிய குணமாகும்.**
மற்றவரது துன்பங்களில் ஒருவரது உணர்வு இருப்பதைப் பொறுத்து அவரது ஆன்மாவின் மதிப்பு தெரியும்.

"*Indeed,*" *replied Elizabeth,* "*I am heartily sorry for him; but he has other feelings, which will probably soon drive away his regard for me. You do not blame me, however, for refusing him?*"
"ஆம், உண்மையிலேயே, நான் அவனுக்காக மிகவும் வருந்துகிறேன். ஆனால் அவனுள் இருக்கும் வேறு சில உணர்வுகள், என் மேல் அவனுக்கு இருக்கும் மரியாதையை விரைவில் நீக்கிவிடலாம். நான் அவனை மறுத்ததற்காக நீ என்னைக் குற்றம் சாட்டுகிறாயா?"

18. Jane's response to Elizabeth's refusal of Darcy is artificial if not unnatural. Her whole personality has this comic or ironic modesty of superstitious conviction of intelligence.
எலிசபெத் டார்சியை மறுத்ததைக் கேட்ட ஜேனின் மறுமொழி இயற்கைக்கு புறம்பாக இல்லாவிடினும் செயற்கையாக இருந்தது. அவளுடைய முழு குணாதிசயமே கேலிக்குரியதாகவும், எதிரிடையாக அர்த்தம் கொடுக்கக் கூடியதாகவும் இருந்த அவளது அறிவின் மூடநம்பிக்கைகளாக இருந்த தீர்மானங்கள்தான்.
19. Jane is an artificial personality of a mental attitude of naive goodness.
கபடமற்ற நல்ல மனோபாவம் கொண்ட ஜேன் செயற்கைத் தன்மை உடையவளாக இருந்தாள்.
20. It is a certain blindness. When perfect, even that has the strength of accomplishment.
இது ஒரு விதமான கண்மூடித்தனம். பூரணமாகும்பொழுது இதற்கும் சாதிப்பதற்குரிய வலிமை இருக்கும்.

21. "You do not blame me for refusing him".
As she is unable to tell her the rest, her argument remains incomplete.
There are always two sides to an issue which prevents a Man from deciding.
These two sides are known to him, within his knowledge.
There is another unknown side with the other Man or hidden in the future.
Knowledge of life can anticipate all the hidden sides.
Knowledge of spirit includes knowledge of life.
Consecration silently – perhaps ignorantly – includes all the other sides with respect to results.
Consecration maturing into surrender makes Man the determinant.
What Elizabeth did, moving from the vital to the mental, is a step prior to all this.
She acted from sincerity.
Sincerity is the light of the Spirit.
So, it can cover all these steps in essence.
His sincerity is total, in that it includes her.
She did it for herself, to shed falsehood, vanity, false accusation.
She, in doing so, never had Darcy at all in her Mind.
If anything was in her Mind, it was Jane's wedding.
She did not know how her realization could make Jane marry.
But that was the right thing to do.
Doing it is a reward in itself.
It is a right method that includes the rewards in it.
She is to blame for hiding the news about Jane.
She is to blame for refusing him in such a fashion that would never permit him to return.
The thought of his return, its wish or possibility was not in her Mind.
That helped him return.
Those who study the ways of grace will find this – her not remembering his proposal – as a rare way of its stamp.
Elizabeth is one who pursues her goal for its own sake without any reference to anyone else.
"அவனை நிராகரித்ததற்கு என்னை நீ குற்றம் சாட்ட வேண்டாம்".
அவளால் மீதியை சொல்ல முடியாத காரணத்தினால், அவளுடைய விவாதம் முடிவடையாமல் இருக்கிறது.
ஒரு விஷயத்திற்கு எப்பொழுதும் இரண்டு பக்கங்கள் இருப்பதால், மனிதன் முடிவெடுப்பதை அவை தடுக்கும்.
இந்த இரண்டு பக்கங்களும் அவனுடைய அறிவுக்கு உட்பட்ட அளவில் அவனுக்குத் தெரியும்.
தெரியாத மற்றொரு பக்கம் வேறொரு மனிதனிடம் இருக்கிறது அல்லது எதிர்காலத்தில் மறைந்திருக்கிறது.
வாழ்வின் ஞானத்தால் எல்லா மறைந்திருக்கும் பக்கங்களையும் எதிர்நோக்க முடியும்.
ஆன்மாவின் ஞானம், வாழ்வின் ஞானத்தை உள்ளடக்கியது.
மௌனமாக சமர்ப்பணம் செய்வதும், அறியாமையில் செய்வதும், பலன்களைப் பொறுத்து மற்ற எல்லா பக்கங்களையும் உள்ளடக்கும்.
சமர்ப்பணம் சரணாகதியாக முதிர்ச்சி அடையும்பொழுது, மனிதனை நிர்ணயம் செய்பவனாக மாற்றுகிறது.
எலிசபெத் உணர்விலிருந்து மனதிற்குச் சென்றது இவை எல்லாவற்றிற்கும் முந்தைய படியாகும்.
அவள் உண்மையிலிருந்து செயல்பட்டாள்.
உண்மை ஆன்மாவின் ஒளியாகும்.
அதனால் இது எல்லா படிகளின் சாராம்சத்தையும் உட்கொள்ளும்.
அவளை உள்ளடக்கிய அவனுடைய உண்மை முழுமையானது.
பொய்மை, பெருமை, பொய்யாக குற்றம் சாட்டுவது இவைகளை விடுவதற்காக தன் பொருட்டே அவள் மாறுகிறாள்.
அவள் அவ்வாறு செய்யும்பொழுது டார்சி அவள் மனதில் இல்லவே இல்லை.
அவள் மனதில் ஜேனுடைய திருமணம் மட்டுமே இருந்தது.
அவளுக்குக் கிடைத்த தெளிவு எப்படி ஜேனுடைய திருமணத்தை நடத்தும் என்று அவளுக்குத் தெரியவில்லை.
ஆனால் அவள் செய்தது சரி.
அதைச் செய்வதே ஒரு பெரிய பரிசாகும்.
பரிசுகளை உள்ளடக்கிய சரியான முறை அது.
ஜேனைப் பற்றிய விஷயத்தை மறைத்ததற்கு அவளைத்தான் குறை கூற வேண்டும்.
அவன் திரும்பி வர முடியாத அளவிற்கு அவனை நிராகரித்ததற்கு அவளைத்தான் குறை கூற வேண்டும்.
அவன் திரும்பி வருவான் என்கிற எண்ணமோ, விருப்பமோ, நடக்கக் கூடும் என்கிற எண்ணமோ அவள் மனதில் இல்லை.
அது அவன் திரும்பி வருவதற்கு உதவியது.

அருள் வரும் வழிகளை ஆராய்ச்சி செய்பவர் இதனைப் பார்க்கலாம். அவனுடைய திருமண வேண்டுகோளை அவள் நினைவில் வைத்துக் கொள்ளாதது, அரிதான வழியில் அதனுடைய முத்திரையாகும்.
மற்ற எவருடனும் எந்த வித தொடர்பும் இல்லாமல், தன்னுடைய இலட்சியத்தை அதற்காகவே பின் தொடரும் ஒருத்தி எலிசபெத் ஆவாள்.

"*Blame you! Oh, no.*"
“உன்னை குறை சொல்லப் போகிறேனா! ஒ, இல்லை.”

22. It is not in Jane to blame anyone for anything.
யாரையும் எதற்காகவும் குறை கூறுவது என்பது ஜேனிடம் கிடையாது.
23. Jane knows no wrong in Elizabeth.
ஜேன், எலிசபெத்திடம் எந்த தவறும் காண்பதில்லை.

"*But you blame me for having spoken so warmly of Wickham.*"
“ஆனால் விக்காமிற்கு ஆதரவாகப் பேசியதற்கு நீ என்னை குற்றம் சாட்டுகிறாயே.”

"*No -- I do not know that you were wrong in saying what you did.*"
“இல்லை, நீ கூறியதில் தவறொன்றும் இல்லை.”

24. Till the age of 23 no stark evil was presented to Jane.
இருபத்தி மூன்று வயதுவரை ஜேனுக்கு எந்த விதமான தீங்கும் எழுந்ததில்லை.
25. Meryton was a place of normal living.
சாதாரண வாழ்க்கைக்கு உரியது மெரிடன்.

"*But you will know it, when I have told you what happened the very next day.*"
“மறுநாள் என்ன நடந்தது என்று நான் சொல்லிய பிறகு உனக்கு உண்மை தெரியும்.”

She then spoke of the letter, repeating the whole of its contents as far as they concerned George Wickham. What a stroke was this for poor Jane! Who would willingly have gone through the world without believing that so much wickedness existed in the whole race of mankind as was here collected in one individual. Nor was Darcy's vindication, though grateful to her feelings, capable of consoling her for such discovery. Most earnestly did she labour to prove the probability of error, and seek to clear one, without involving the other.
பிறகு அவள் அக்கடிதத்தைப் பற்றி பேச ஆரம்பித்தாள். ஜார்ஜ் விக்காம் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் அவள் கூற ஆரம்பித்தாள். இது ஜேனுக்கு விழுந்த பலமான அடி. மனித குலத்தில் இருக்கும் இவ்வளவு தீய குணங்கள் ஒரே நபரிடம் இருப்பதை உணராமல் ஜேன் நிம்மதியாக வாழ்ந்து விட்டு போயிருப்பாள். டார்சி நியாயத்தை நிரூபணம் செய்தது, அவளுடைய உணர்வுகளுக்குப் பெருத்த நிம்மதியை அளித்தாலும், இந்த உண்மையைக் கண்டுபிடித்தது அவளுக்கு ஆறுதலை அளிக்கவில்லை. ஏதாவது தவறு நேர்ந்திருக்கலாம் என்று நிரூபிப்பதற்கே அவள் ஆவலுடன் முயற்சி எடுக்கிறாள். மேலும் ஒருவரைப் பாதிக்காமல் மற்றொருவரை குற்றமற்றவர் என்று நிரூபிக்க முற்பட்டாள்.

26. “What a stroke was this for poor Jane”.
Jane consciously created a world of illusions and lived in it.
At every step, life showed her the lie of her beliefs.
For 23 years she managed to be inside her cocoon.
It gave her a sort of protection, though it was precarious all the time.
Now she had a situation where both could not be right.
She tried her honest best to tell herself that there should be some unknown factor to justify the accused.
Of course, there is such a view in the supramental plane.
The creation of such a character who refuses to believe any evil of anyone **spiritually endorses the atmosphere of the story.**
That attitude of Jane, and the shameless impudence of Wickham and Lydia agree on the appearance of it.
Jane cannot think ill of her Mother.
Not being capable of thinking ill of her mother, she would be able to think ill of few people.
Her goodness comes from her wanting to be good to her mother.
Her mother can think ill of anyone if she chooses.
Her Mind is partially developed. She does not want to go beyond.
She is unable to continue her mental development beyond this stage – where everyone is right.
Elizabeth is the power centre of the family.
She shares what little she does only with Jane.

Her mother is the organizer of destruction, wantonly if not consciously.
Any neutralization to Mrs. Bennet should come in practice from these two sisters.
Jane is silent.
Elizabeth is most active inside only.
Her accomplishments for the family are commendable with so little outer expression.
"ஜேனுக்கு விழுந்த பலமான அடி இது."
ஜேன் கற்பனையான ஒரு உலகத்தை சுய நினைவோடு உருவாக்கி அதில் வாழ்ந்து வந்தாள்.
ஒவ்வொரு படியிலும், வாழ்க்கை அவளுடைய நம்பிக்கைகளிலுள்ள பொய்யை அவளுக்கு காண்பித்தது.
இருபத்தி மூன்று வயதுவரை அவள் தன்னுடைய கூட்டுக்குள்ளேயே இருக்க பழகிக் கொண்டு விட்டாள்.
அது எல்லா சமயங்களிலும் நிலையற்று இருந்தாலும், அவளுக்கு ஒரு விதமான பாதுகாப்பை கொடுத்தது.
இரண்டுமே சரியாக இருக்க முடியாது என்ற நிலைமை இப்பொழுது அவளுக்கு இருந்தது.
குற்றம் சாட்டப்பட்டவரை நியாயப்படுத்தும் வகையில் ஏதோ ஒரு தெரியாத விஷயம் இருக்க வேண்டும் என்று அவள் தன்னால் இயன்றவரை தனக்கே சொல்லிக் கொண்டாள்.
சத்திய ஜீவிய நிலையில் இது போன்ற ஒரு பார்வை இருப்பது உண்மைதான்.
யாரேனும் ஒருவரிடத்தில் ஏதேனும் ஒரு தீமை இருப்பதை நம்புவதற்கு மறுக்கும் இது போன்ற கதாபாத்திரம் படைக்கப்பட்டது, இக்கதைக்கு ஆன்மீகச் சூழலை கொண்டு வருகிறது.
ஜேனுடைய அந்த மனோபாவம், விக்காம் மற்றும் லிடியாவின் வெட்கங்கெட்டத்தனம், இவை அது இருப்பதை ஒத்துக் கொள்கின்றன.
ஜேனால் அவளுடைய தாயாரைப் பற்றி தவறாக நினைக்க முடியாது.
தன்னுடைய தாயாரைப் பற்றி தவறாக நினைக்க முடியாத அவளால் சிலரைப் பற்றி தவறாக நினைக்க முடியும்.
அவள் நல்லவளாக இருப்பது அவளுடைய தாயாருக்கு நல்லவளாக இருக்க விரும்புவதால் வந்ததாகும்.
அவளுடைய தாயார் விரும்பினால், எவரைப் பற்றியும் தவறாக நினைக்க முடியும்.
அவள் மனம் முழுவதுமாக முன்னேற்றம் அடையவில்லை, அதற்கு மேல் வளர அவளுக்கு விருப்பம் இல்லை.
எல்லோரும் நல்லவரே என்பதற்குமேல் அவளால் மன வளர்ச்சியைத் தமுடியவில்லை.
எலிசபெத்தான் அந்த குடும்பத்தின் மையம்.
எவ்வளவு குறைவாகப் பகிர்ந்துகொள்ள முடியுமோ அதை ஜேனிடம் மட்டும் பகிர்ந்துகொள்கிறாள்.
சுயநினைவுடன் செயல்படாவிட்டாலும் அவளது தாயார் வேண்டுமென்றே அழிவை ஏற்படுத்துபவளாக இருக்கிறாள்.
திருமதி பென்னட்டை சமநிலைப்படுத்துவது இந்த இரண்டு சகோதரிகளின் மூலம் நடைமுறைக்கு வரவேண்டும்.
ஜேன் மௌனமாக இருக்கிறாள்.
எலிசபெத் அகத்தில் மட்டும் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறாள்.
மிகவும் குறைவாக வெளிப்படுத்துபவளாக இருந்தும், குடும்பத்துக்கான அவளது சாதனைகள் போற்றத்தக்கவை.

27. "Sought to clear the one, without involving the other".
Taking the other man's point of view is found to be an effective step to overcome Mind.
Jane's attitude was partially one such.
It is a great truth of life that Man is in love with his enemy.
If he does not feel so, the next generations come together in love.
Today's enemies are tomorrow's friends.
In life this truth is well brought out in the succeeding generations.
Life belongs to the surface Mind, not even the inner Mind.
Existence crosses inner Mind, goes to the subliminal, comes to spiritual life in the Psychic.
To be aware of the Psychic on the surface is integral yoga.
Some of the milestones, obstacles, doors, and truths are seen in epics.
Krishna's ruses, elders fighting for evil, Brindavan are pointers to the wider future world.
Even in the subtle plane the Indians refused to listen to Mother to save the Indian border while the Chinese went back listening to Her.
The future unity of Mankind is seen here in a subtle eminence **.**
Gorbachev's unilateral action to destroy that side of the power bloc opened the world arena to World Unity.
Napoleon was defeated but equality was accepted by the world, serfdom was abolished all over Europe, Code Napoleon was accepted and lives till now.
The world that destroys the idealists still accepts their ideals.
Marx was denounced vehemently, but Marxism came to stay through the fabric of Capitalism.
The chinks of life do show the future light after a fashion.

Jane's attitude shows the essential value of Wickham in the scheme of things.
Elizabeth joins her by her inability to condemn the falsehood of Wickham by retaining a soft corner for him.
The most abominable Man is still needed for completion.
"மற்றவரை பாதிக்காமல் ஒருவரைக் குற்றமற்றவர் என நிரூபிக்க முற்பட்டாள்".
மனத்தை வெற்றி கொள்வதற்கு அடுத்தவரின் கண்ணோட்டம் பேருதவியாக இருக்கும்.
இது போன்ற மனோபாவம் ஜேனுக்குப் பகுதியாக இருந்தது.
மனிதன் பகைவனிடம் அன்பு கொள்கிறான் என்பது வாழ்வின் பெரிய உண்மை.
அவன் அவ்வாறு உணராவிட்டால் அடுத்த தலைமுறையினர் காதல் மூலம் ஒன்று சேருவர்.
இன்றைய பகைவர்கள் நாளைய நண்பர்கள்.
அடுத்தடுத்த தலைமுறைகளில் இந்த உண்மை அழகாக வெளிக்கொண்டு வரப்படுகிறது.
வாழ்வு மேல் மனத்திற்குரியது, உள் மனத்திற்குக்கூட அல்ல.
வாழ்வு உள்மனத்தை கடந்து அடிமனதிற்குச் சென்று சைத்திய புருஷனில் ஆன்மீக வாழ்வாக மலருகிறது.
மேல் மனதில் சைத்திய புருஷனை உணருவதே பூரண யோகமாகும்.
காவியங்களில் சில மைல் கற்கள், தடைகள், வாயில்கள், உண்மைகள் இவைகளைப் பார்க்கலாம்.
கிருஷ்ணரது சூழ்ச்சிகள், பெரியவர்கள் தீமைக்காக சண்டையிடுவது, பிருந்தாவனம் இவை பரந்த எதிர்கால உலகத்தை குறிப்பவைகளாகும்.
சூட்சும நிலையிலும் இந்தியர்கள் இந்திய எல்லையைப் பாதுகாக்க அன்னை விடுத்த ஆணைக்கு கட்டுப்பட மறுத்தனர், ஆனால் சீனர்கள் அன்னைக்கு கட்டுப்பட்டுத் திரும்பிச் சென்றனர்.
எதிர்கால மனித குல ஒற்றுமை, இங்கு சூட்சுமமான காட்சியாகத் தெரிகிறது.
அந்தப் பகுதியின் அதிகார மையத்தை அழிக்க கோர்பசேவ் எடுத்த தன்னிச்சையான முடிவு உலக ஒற்றுமைக்கு அடிகோலிற்று.
நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டாலும், உலகத்தாரால் ஒருமைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஐரோப்பா முழுவதிலும் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது, நெப்போலியனுடைய விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன, இன்றும் உள்ளன.
இலட்சியவாதிகளை அழிக்கும் உலகம், அவர்களுடைய இலட்சியங்களை மட்டும் ஏற்றுக்கொள்ளும்.
மார்க்ஸ் கடுமையாக கண்டனம் செய்யப்பட்டார், ஆனால் அவருடைய மார்க்ஸிய தத்துவம் முதலாளித்துவம் என்ற அமைப்பால் நிலைத்து நின்றது.
வாழ்க்கையின் விரிசல்கள் பின்னால் வரப் போகும் வெளிச்சத்தை அதனுடைய பாணியில் காண்பிக்கின்றது.
ஜேனுடைய மனோபாவம் விஷயங்களின் ஏற்பாட்டில் விக்காமுடைய முக்கியமான மதிப்பினை காண்பிக்கின்றது.
விக்காமிடம் எலிசபெத்திற்கு இன்னமும் மென்மையான உணர்வுகள் இருப்பதால், ஜேனுடன் சேர்ந்து அவளாலும் அவனுடைய பொய்மையை கண்டனம் செய்ய இயலாமல் போகிறது.
மிகவும் வெறுக்கத்தக்கவனாக இருக்கும் மனிதன் பூர்த்தி அடைவதற்கு இன்னமும் தேவைப்படுகிறான்.

"This will not do," said Elizabeth; "you never will be able to make both of them good for anything. Take your choice, but you must be satisfied with only one. There is but such a quantity of merit between them; just enough to make one good sort of man; and of late it has been shifting about pretty much. For my part, I am inclined to believe it all Mr. Darcy's; but you shall do as you chuse."
"இது முடியாத காரியம். இருவரையுமே நல்லவர் என்று சொல்ல உன்னால் முடியாது. உன் விருப்பப்படி தேர்ந்தெடுக்கலாம், ஆனால் ஒருவரை மட்டுமே தேர்ந்தெடுத்து நீ திருப்தியடைய வேண்டும். இருவரையும் சேர்த்து வைத்துப் பார்க்கும்பொழுது தோன்றும் நல்ல குணத்தில் ஒருவன் மட்டுமே தேறுவான். ஆனால் இப்பொழுது அந்த அபிப்பிராயமோ ஒருவனிடமிருந்து மற்றொருவனுக்கு மாறிக் கொண்டே வருகிறது. நான் இப்பொழுது டார்சி நல்லவன் என்று நம்புகிறேன். ஆனால் நீ உன் விருப்பப்படி செய்யலாம்" என்று எலிசபெத் கூறுகிறாள்.

28. Elizabeth is always definitive.
எலிசபெத் எப்பொழுதுமே தெளிவானவள்.
29. Darcy was wrong when she listened to Wickham.
விக்காம் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தபொழுது, டார்சி தவறாகத் தோன்றினான்.
30. Wickham was wrong when she read Darcy's letter.
டார்சியின் கடிதத்தைப் படிக்கும்பொழுது விக்காம் தவறாகத் தோன்றினான்.
31. She sways to one side readily.
அவள் சுலபமாக ஒரு பக்கம் சாய்ந்து விடுகிறாள்.
32. Elizabeth has decidedly chosen to label Darcy good but would not condemn Wickham by her words.
டார்சியை நல்லவன் என்று கூற எலிசபெத் தீர்மானித்து விட்டாள், ஆனால் விக்காமை தன்னுடைய வார்த்தைகளால் கண்டனம் செய்ய மாட்டாள்.

33. "Of late it has been shifting pretty much".
Man presents his view without explaining how he arrived there.
It is the vital in the Mind.
Mind explains and argues.
The vital takes one decision or another, is unable to know how it arrived at a conclusion.
Elizabeth passed through an elaborate process of analysis in the Mind. She wanted Jane to accept her findings.
The vital is autocratic.
It is autocratic out of inability.
It can choose to be autocratic for the joy of being so.
Elizabeth does so by her swabhava.
It is shifting for us, not for all or for Jane.
She is unable to see from Jane's point of view, though no one can see from Jane's view.
Man resorts to prayer when all other avenues are over.
When a possible solution is known to the world, Man, out of his own ignorance of such a solution resorts to prayer.
Refusal to avail of a facility in the society out of ignorance or other reasons and resorting to prayer have two explanations.
1)It is a yogic process meant for yogic discipline.
2)It is to do a simple thing cumbersomely – a foolish method.
Jane's approach is unique and goes beyond foolishness.
Viewing from her own policy, it is commendable.
It is a view that will ultimately help one to cross Mind.
Jane is unaware of any such lofty motives.
She does it out of her nature.
The final outcome of Wickham marrying Lydia may partially justify Jane.
The story reveals the importance of Wickham for Darcy, not to Longbourn family.
"இப்பொழுதெல்லாம் அந்த அபிப்பிராயம் அதிகம் மாறிக் கொண்டே இருக்கிறது."
மனிதன் தான் எவ்வாறு அந்த கருத்துக்கு வந்தோம் என்று விவரிக்காமல் அதனை வழங்குவான்.
மனத்தில் இருக்கும் உணர்வு அது.
மனம் விவரிக்கும், விவாதம் செய்யும்.
உணர்வு எதாவது ஒரு முடிவை எடுக்கும், எவ்வாறு அந்த தீர்மானத்திற்கு வந்தது என்று அதற்குத் தெரியாது.
எலிசபெத் தன்னுடைய மனதில் மிகப் பெரிய ஆராய்ச்சியை மேற்கொண்டிருந்தாள். தன்னுடைய கண்டுபிடிப்புகளை ஜேன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என விரும்பினாள்.
உணர்வு தன்னிச்சையானது.
இயலாமையினால் அது எதேச்சதிகாரமாக உள்ளது.
அவ்வாறு இருக்கும் சந்தோஷத்திற்காகக்கூட எதேச்சதிகாரத்தை அது தேர்ந்தெடுக்கலாம்.
எலிசபெத் தன் சுபாவத்தினால் அவ்வாறு செய்கிறாள்.
அவள் மாற்றிக் கொள்கிறாள் என்று நாம் நினைக்கிறோம், எல்லோருக்கும் அவ்வாறு தோன்றுவதில்லை, ஜேனுக்கும் அவ்வாறு தோன்றுவதில்லை.
ஜேனுடைய கோணத்தில் யாராலும் பார்க்க முடியாது என்றாலும் ஜேனுடைய கோணத்தில் எலிசபெத்தால் பார்க்க முடிவதில்லை.
மற்ற எல்லா வழிகளும் தீர்ந்த பின் மனிதன் பிரார்த்தனையை நாடுகிறான்.
உலகத்திற்கு அதனை தீர்க்கக் கூடிய வழி தெரிந்திருக்கும் போதும், அது போன்ற தீர்வு இருப்பதை அறியாத மனிதன் பிரார்த்தனையை நாடுகிறான்.
அறியாமையினாலோ அல்லது மற்ற காரணங்களுக்காகவோ சமூகத்தில் இருக்கும் வசதிகளை பயன்படுத்திக் கொள்ள மறுத்து, பிரார்த்தனையை மேற்கொள்வதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.
1) அது யோகக் கட்டுப்பாட்டிற்காக உள்ள யோக முறையாகும்.
2) எளிமையான விஷயத்தை சிக்கலாக செய்வது—முட்டாள்தனமான முறை.
ஜேனுடைய அணுகுமுறை அலாதியானது, முட்டாள்தனத்திற்கும் மேலானது.
அவளுடைய கொள்கைப்படி பார்த்தால் அது போற்றுதற்குரியது.
ஒருவர் மனதைத் தாண்டிச் செல்வதற்கு முடிவாக உதவி புரியம் கருத்து அது.
அது போன்ற உயர்ந்த நோக்கங்கள் ஜேன் அறியாதது.
அவளுடைய சுபாவத்தினால் அவள் அவ்வாறு செய்கிறாள்.
இறுதியாக விக்காம் லிடியாவைத் திருமணம் செய்து கொண்டது ஜேனை ஓரளவிற்கு நியாயப்படுத்துகிறது.
விக்காம், லாங்பர்ன் குடும்பத்திற்கு அல்லாமல் டார்சிக்கு எவ்வளவு முக்கியம் என்பதை இக்கதை வெளிப்படுத்துகிறது.

34. "I am inclined to believe it all Mr. Darcy's".

Man's mental understandings are often predetermined by vital preference.
Elizabeth trusted Wickham; now she trusts Darcy.
Each time she relied on the person, did not ask for proof.
Wickham she trusted adoringly; for Darcy her mistrust was prevented by a delicacy.
First it was false vital; now it was true vital.
Darcy's decision to change was not vital or mental but spiritual in the vital.
Pure Mental decision must have no vital impression at all.
Buddha and Shankara were thinkers of immense eminence; Shankara exceled Buddha in thinking, though Buddha is the greater soul.
Sri Aurobindo says the vital Mind seeks illusion, thinking Mind seeks the Absolute.
Elizabeth did move to Mind but it was preceded by a vital choice.
Jane was not at all influenced away from her point of view.
One becomes an integral yogi when the Psychic presses for its own preference in the Mind.
Mostly Man is moved to God at the deepest point by fear of loss.
Darcy and Elizabeth moved not out of fear but out of desire.
To be able to desire the Divine is spiritual awakening in this yoga.
To her infinite gratitude she felt gratitude for Darcy for loving her. Gratitude is Love born out of Sincerity. In terms of the aspects of Sachchidananda, Unity with Love is gratitude.
Her love of Wickham is vital charm which she enjoys fully.
Even after one makes sufficient progress in integral yoga, even one who enjoys rasa in food can feel his preference for coffee or tea. Vital charm is like the relish of the taste. Theoretically its perfection is attained when the rasa of the vital charm rises to the point where the vital charm is distasteful, as present physical intensities of joy are distasteful to the rasa behind it.

"டார்சியைப் பற்றி கூறிய அனைத்தையும் நான் நம்புகிறேன்."

மனிதன் மனத்தால் புரிந்துகொள்வது, பெரும்பாலும் உணர்வின் விருப்பங்களால் முன்பே தீர்மானிக்கப்படுகின்றன.
எலிசபெத் விக்காமை நம்பினாள், இப்பொழுது டார்சியை நம்புகிறாள்.
ஒருவரை நம்பும் ஒவ்வொரு சமயத்திலும் அவள் நிரூபணம் கேட்கவில்லை.
விக்காமை கண்மூடித்தனமாக நம்பினாள்; டார்சியிடம் அவளுடைய அவநம்பிக்கை நாசூக்காக தடுக்கப்பட்டது.
முதலில் அது பொய்மையான உணர்வாக இருந்தது; இப்பொழுது அது உண்மையான உணர்வாக இருக்கிறது.
மாற வேண்டும் என்று டார்சி எடுத்த முடிவு உணர்வாலோ அல்லது மனத்தாலோ எடுக்கப்படவில்லை, ஆனால் உணர்விலுள்ள ஆன்மா எடுத்த முடிவு.
தூய்மையான மனத்தின் முடிவுகளில் உணர்வின் பதிப்பு இருக்கவே கூடாது.
புத்தரும், சங்கரரும் மேன்மையான சிறந்த சிந்தனையாளர்கள்; புத்தர் பெரிய ஆன்மாவாக இருந்தாலும், சங்கரர் சிந்தனையில் புத்தரையும் மிஞ்சினார்.
உணர்வு மனம் மாயையை நாடுகிறது, சிந்திக்கும் மனம் பிரம்மத்தை நாடுகிறது என்று பகவான் கூறுகிறார்.
எலிசபெத் மனத்திற்கு மாறியது உண்மை, ஆனால் அதற்கு முன் உணர்வின் விருப்பம் இருந்தது.
ஜேனை அவளுடைய கண்ணோட்டத்திலிருந்து மாற்ற எதனாலும் முடியவில்லை.
சைத்திய புருஷன் தன் சொந்த விருப்பத்தை மனதில் வலியுறுத்தும்பொழுது, ஒருவர் பூரண யோகி ஆகிறார்.
இழப்பு ஏற்பட்டு விடுமோ என்கிற பயத்தில் பெரும்பாலும் மனிதன், ஆழமான இடத்தில் இறைவனிடம் சரணடைகிறான்.
டார்சியும், எலிசபெத்தும் பயத்தால் மாறுவதில்லை, ஆசையினால் மாறுகிறார்கள்.
தெய்வீகத்துக்கு ஆசைப்பட முடிவது இந்த யோகத்தில் ஆன்மீக விழிப்பாகும்.
அளவில்லாது நன்றி உணர்விருந்த அவளுக்கு, டார்சி தன்னை காதலிப்பதைக் கண்டு அவனிடம் நன்றி உணர்வு எழுந்தது.

உண்மையிலிருந்து எழும் அன்பு நன்றி உணர்வாகும். சச்சிதானந்தத்தின் கூறுகளின்படி அன்புடன் சேர்ந்த ஒருமைப்பாடு நன்றி உணர்வாகும்.

விக்காம் மேலிருந்த காதல் உணர்விலிருக்கும் வசீகரம் ஆகும், அவள் அதனை முழுமையாக அனுபவிக்கிறாள்.
பூரண யோகத்தில் ஒருவர் போதுமான முன்னேற்றம் அடைந்த பின்பும், உணவில் ரஸாவினை அனுபவிப்பவரும், காபி அல்லது தேநீரில் தனது முன்விருப்பத்தை உணருவர். உணர்வின் வசீகரம் ருசியை அனுபவிப்பது போலாகும். தற்பொழுது இருக்கும் ஜடத்திலுள்ள சந்தோஷத்தின் தீவிரம் அதற்குப் பின்னால் இருக்கும் ரஸாவிற்கு ருசிக்காததுபோல், உணர்வின் வசீகரம் பிடிக்காதுபோகும் அளவிற்கு உணர்வின் வசீகரத்திலுள்ள ரஸா உயரும்பொழுது தத்துவரீதியாக அது பூரணம் அடைகிறது.

It was some time, however, before a smile could be extorted from Jane.
ஜேனிடமிருந்து ஒரு புன்முறுவல் வருவதற்கு சிறிது நேரம் ஆயிற்று.

35. Even if she is personally not involved, Jane even in her mind, would not consider a wrong situation.
அவள் சம்பந்தப்படாவிட்டாலும் கூட, ஜேன் அவளுடைய மனதாலும் தவறான நிலைமையை கருத மாட்டாள்.
36. Whether the situation is right or not, Jane remains neutral.
நிலைமை தவறோ அல்லது சரியோ, ஜேன் நடுநிலைமையோடு இருக்கிறாள்.
37. "It was some time before a smile could be extracted from Jane".
Psychology has described smile as the lingering mating call of the animal.
Smile opens the human to the Divine.
Sri Aurobindo rarely smiled.
Mother's Smile is the smile of the Psychic Divine inviting Man's psychic to respond.
Smile, in human terms, is the highest approval of another person.
Smile denied to lips, spreads all over the face as brilliance and shines through the eyes.
Smile thus can convey an impression, an idea, and an inspiration.
Whatever is conveyed by a smile is difficult to resist.
A deeply spiritual Smile can compel the body to flower, even the matter all around to turn to the Divine.
One who can smell the smile is blessed.
For everything without exception all the five senses are available.
The fragrance of Jasmine is the purity of the Divine perfume.
The finest subtle smile one comes across reveals his own soul's complement in the human form.
Matter smiles by its invitation to possess it.
Meanness sets a trap as its smile.
Great material gifts are the smile of generosity.
The vital smiles at you accomplishing your work with a powerful envelope of popularity or fame.
Human deceit is so highly developed that such endowments can be stolen from its possessors by those around.
The acme of human swabhava of organized ego there not only steals one's spiritual endowment but wants the victim to celebrate his benefit.
It is often seen as social condescension.
Ego pervades, perfectly dominates, acts through the strong preference of dualities, elevates itself to the soul-status, and prevents Man from thinking outside its periphery.
"ஜேனிடமிருந்து புன்முறுவல் கிளம்ப சற்று நேரமாயிற்று."
விலங்குகள் கூடும்பொழுது எழும் அழைப்பின் ஞாபகமே சிரிப்பு என மனவியல் விவரிக்கிறது.
புன்முறுவல், மனிதனை இறைவனிடம் கொண்டு சேர்க்கிறது.
ஸ்ரீ அரவிந்தர் எப்பொழுதாவதுதான் புன்முறுவலிப்பார்.
அன்னையின் சிரிப்பு, மனிதனின் சைத்திய புருஷனை பதிலளிக்கும்படி அழைக்கும் சைத்திய தெய்வத்தின் சிரிப்பாகும்.
புன்முறுவல், மனிதன் மற்றொரு மனிதனுக்கு அளிக்கும் மிகவும் உயர்ந்த ஒப்புதல் ஆகும்.
உதட்டிற்கு புன்முறுவல் மறுக்கப்பட்டால் அது முகம் முழுவதும் பிரகாசமாகப் பரவி கண்களில் ஒளியாக மிளிரும்.
ஒரு அபிப்பிராயம், ஒரு கருத்து, ஒரு ஊக்கம், இவற்றை புன்முறுவல் தெரிவிக்கும்.
புன்னகையின் மூலமாகத் தெரிவிக்கப்பட்டதை எதிர்ப்பது மிகவும் கடினம்.
ஆழமான ஆன்மீகப் புன்னகை உடலை மலர வைக்கும், சுற்றியுள்ள ஜடத்தை இறைவனை நோக்கித் திருப்பும்.
புன்னகையை முகர்பவர் புண்ணியம் செய்தவர்கள்.
விதிவிலக்கில்லாமல் எல்லாவற்றிற்கும் எல்லா ஐந்து புலன்களும் உள்ளன.
தெய்வீகத்தின் தூய்மையை மல்லிகை மணம் குறிக்கிறது.
அழகான சூட்சுமப் புன்னகையை ஒருவர் எதிர்கொள்வது, மனித உருவத்தில் அவருடைய சொந்த ஆன்மாவைப் பூர்த்தி செய்வதை வெளிப்படுத்துகிறது.
ஜடம் அதனுடைய அழைப்பினால், அதை தன்னுடைய உடைமையாக்கிக்கொள்ள புன்னகை செய்கிறது.
சின்ன புத்தி வலையில் மாட்ட வைக்க சிரிப்பை உதிர்க்கும்.
உயர்ந்த பரிசுப் பொருட்கள் தாராள மனப்பான்மையின் புன்னகையாகும்.
பிரபலமும், புகழும் சேர்ந்து நமது வேலையை முடித்துக் கொடுக்கும்பொழுது உணர்வில் சிரிப்பு எழுகிறது.
நம்மைச் சுற்றி உள்ளவர்கள், அது போன்ற நமது பெருமைகளை திருடும் அளவிற்கு மனித குலத்தின் ஏமாற்றும் குணம் மிகவும் உயர்ந்து வளர்ந்துள்ளது. மனித சுபாவத்தின் முறைப்படுத்தப்பட்டுள்ள அகந்தை ஒருவரது ஆன்மீகப் பெருமைகளை திருடுவதோடல்லாமல், யாரிடமிருந்து திருடப்பட்டதோ அவர் அதனுடைய பலன்களை கண்டு கொண்டாட வேண்டும் என்றும் விரும்பும்.

சமூகத்தில் அது பெரும்பாலும் பரிவாகப் பார்க்கப்படுகிறது.
அகந்தை எங்கும் ஊடுருவும், சிறப்பாக அதிகாரம் செய்யும், இரட்டைகளின் வலிமையான விருப்பங்களின் மூலம் செயல்படும், ஆன்மாவின் நிலைக்கு தன்னை உயர்த்திக்கொள்ளும், தன்னுடைய வட்டத்தைத் தாண்டி சிந்திக்க மனிதனை தடுக்கும்.

"*I do not know when I have been more shocked," said she. "Wickham so very bad! It is almost past belief. And poor Mr. Darcy! Dear Lizzy, only consider what he must have suffered. Such a disappointment! And with the knowledge of your ill opinion too! And having to relate such a thing of his sister! It is really too distressing. I am sure you must feel it so."*
"இதைவிட மோசமாக எப்பொழுது நான் அதிர்ச்சி அடைந்திருப்பேன் என்று எனக்குத் தெரியவில்லை. விக்காம் இவ்வளவு மோசமானவனா! நம்பவே முடியவில்லையே. பாவம் திரு. டார்சி! எனதருமை லிசி, அவன் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பான் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எவ்வளவு ஏமாற்றம்! நீ அவனைப்பற்றி தவறாக நினைக்கிறாய் என்பது அவனுக்குத் தெரிய வந்ததும்! தன்னுடைய சகோதரியைப் பற்றி இப்படிப்பட்ட சம்பவத்தை உன்னிடம் கூறியதும்! இது உண்மையிலேயே மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. நீயும் இவ்வாறே நினைப்பாய் என்று நம்புகிறேன்" என்றாள் ஜேன்.

38. "I do not know when I have been shocked".
Darcy's proposal must have shocked her out of her wits forever.
It was not Wickham's falsehood that shocked her.
The 'truth' of Jane is her mother's falsehood.
After all, only what is there deeply can respond.
Darcy's magnanimous sincerity did not come to her even invisibly.
Wickham's exposure was outrageous to her.
Slavishness was so deeply ingrained in Indians that a cabinet minister in the early years commended the erstwhile rulers for self-abnegation.
Patriotism can take the guise of love of tyranny.
The Indian Presidency was enjoyed longest by an erstwhile toady.
Incidentally that is what sweet manners can achieve.
Also service to Spirituality, though questionable, can offer such material results.
A rule comes into existence if proved in one instance.
Its opposite expression only proves it negatively.
To trace a rule from its first incidence to its final expression through its opposites and exceptions is to study the laws of abstraction.
The Love of Jesus can thus be traced to his crucifixion.
Buddha's great intellect that dissolved the mighty construction of the ego by the Mind went on to say Self too can be so dissolved.
Spiritual knowledge thus reveals the Truth in the falsehood.
At a later stage falsehood is Truth, as Ignorance is knowledge.
The obstinacy of the physical is its insistence on its spirituality.
Supermind's knowledge of the whole thus establishes itself in Mind through division as ego, as separative knowledge.
Man's capacity to traverse the path in the reverse is infinite.
Only that the initial first step that is crucial is given to **human choice** where ego's pretence for the soul is the presiding knowledge.
"நான் அதிர்ச்சி அடைந்த சந்தர்ப்பம் எனக்கு எப்பொழுது கிடைத்திருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை".
டார்சியின் திருமண வேண்டுகோள் அவளை நிரந்தரமாக அதிர்ச்சி அடைய வைத்திருக்கலாம்.
விக்காமுடைய பொய்மை அவளை அதிர்ச்சியடைய வைக்கவில்லை.
அவளுடைய தாயாரின் பொய்மைதான் ஜேன் என்பது உண்மை.
ஆழத்துள் இருப்பதுதான் மறுமொழி கொடுக்கும்.
அவளுக்குத் தெரியாமல்கூட டார்சியின் பெருந்தன்மையான உண்மை அவளைத் தொடவில்லை, விக்காம் வெளிப்பட்டது அவளுக்குத் தகாததாக இருந்தது.
முன்னாளில் நம்மை ஆட்சி செய்தவர்கள் தானாகவே கிளம்பிச் சென்றதற்கு ஆரம்ப காலங்களில் அமைச்சரவையில் இருந்த ஒரு மந்திரி அவர்களைப் பாராட்டும் அளவிற்கு, இந்தியர்களிடம் அடிமைத்தனம் அவ்வளவு ஆழத்தில் ஊறியிருந்தது.
தேசபக்தி கொடுங்கோல் ஆட்சியை விரும்பும் தோற்றத்தைக் கொள்ளலாம்.
முன்னாளில் பிறரை நம்பி வாழ்ந்தவர் வெகுகாலம் இந்திய ஜனாதிபதியாக இருந்தார்.
இதுதான் நல்ல நடத்தை பெறக்கூடியது.

ஆன்மீகத்துக்கு ஆற்றும் தொண்டும் சந்தேகத்துக்கு இடம் அளித்தாலும், அது போன்ற பொருள்ரீதியான பலனைத் தரும்.
ஒரு விஷயத்தில் நிரூபணம் ஆனாலும், அந்த ஒரு சட்டம் அமுலுக்கு வருகிறது.
இதன் நேர் எதிரான வெளிப்பாடு இதனை எதிர்மறையாக நிரூபிக்கிறது.
ஒரு சட்டத்தை அதன் முதல் நிகழ்விலிருந்து இறுதி வெளிப்பாடுவரை, அதன் நேரெதிரானதன் மூலமாகவும், விதிவிலக்காக இருப்பதன் மூலமாகவும் ஆராய்வது, கற்பனைவாதத்தின் சட்டங்களைப் படிப்பதாகும்.
ஏசுநாதர் மேலுள்ள அன்பை அவர் சிலுவையில் அறையப்பட்டதில் இருந்து ஆராயலாம்.
மனத்தால் வலிமையாக உருவாக்கப்பட்ட அகந்தையை கரைத்த புத்தரின் சிறந்த அறிவு, சுயத்தையும் கரைக்கலாம் என்று கூறியது.
ஆன்மீக ஞானம், இதுபோல பொய்மையில் உள்ள உண்மையை வெளிப்படுத்துகிறது.
பிறகு ஒரு கட்டத்தில் பொய்மைதான் உண்மை, அறியாமைதான் ஞானம்.
ஆன்மீகத்தை வலியுறுத்துவதே ஜடத்தின் பிடிவாதமாக இருக்கிறது.
முழுமையின் சத்திய ஜீவிய அறிவு, பிரிவு மூலம் மனதில் அகந்தையாக அவ்வாறு நிலைநாட்டிக் கொள்கிறது.
எதிர்திசையிலிருந்து பாதையைக் கடக்கும் மனிதனின் திறமை அளவற்றது.
ஆரம்ப முதல் முக்கியமான படி மட்டும்தான் **மனித விருப்பத்துக்கு** அளிக்கப்பட்டுள்ளது, அங்கு ஆன்மாவாக நடிக்கும் அகந்தையே பிரதான அறிவாக இருக்கிறது.

39. "Wickham so bad. It is almost past belief".
Jane in her depths was surprised by the spiritual generosity of Darcy in proposing to Elizabeth.
She was so constituted to express it only in favour of charming falsehood.
Strong local candidates fighting nationally popular candidates spend all their campaign energy speaking against the rival which goes to his invisible support.
Opposition is subconscious support more powerful than the conscious support or opposition.
The power of surrender lies in forgetting the issue surrendered.
Our memory shows we keep it with ourselves.
Memory, Thinking, Expectation, Mind, Emotions, Acts, conscious as well as subconscious Giving up is the right indication of surrender.
Grace Crawley giving her promise to the Archdeacon did so in spirit.
Girls successfully waiting for Man successfully do so.
It is their belief that they love in response to Man's love and have lost all the capacity for initiative in that regard.
In spite of its social version serving Man's cause of domination, in Europe, it made Man kneel before her.
Psychologically she fully availed of its infinite power.
Today's woman in the West or East can regain her full power in its spiritual magnificence if she centres herself in her psychological personality.
Indian chastity is its social version of spiritual significance.
The woman in the West who acquires this knowledge will see monarchy giving way to Democracy in the realm of sex relationships.
In 1904 Sri Aurobindo saw the destiny of India lies in her complete Independence, not in petitioning for better government.
Today woman's assertion is such an act in the reverse, oblivious of the fact that it is petitioning for her chance of domination of Man.
"விக்காம் இவ்வளவு மோசமானவனா. இதை நம்பவே முடியவில்லை".
எலிசபெத்திற்கு திருமண வேண்டுகோள் விடுத்ததிலுள்ள டார்சியின் ஆன்மீகப் பெருந்தன்மையைப் பார்த்து ஜேன் அவளுடைய ஆழத்தில் ஆச்சரியம் அடைந்தாள்.
அவள் சுபாவத்தின் காரணமாக வசீகரமான பொய்மைக்கு ஆதரவாகத்தான் அவளால் ஆச்சரியத்தை வெளிப்படுத்த முடிந்தது.
பலம் பொருந்திய உள்ளூர் வேட்பாளர்கள் நாடளாவிய பிரபலமான வேட்பாளர்களுடன் மோதும்போது, அவர்களுடைய எல்லா பிரசாரங்களிலும் தங்களது சக்தியை எதிராளியைத் தாக்கி பேசுவதிலேயே செலவழித்து, மறைமுகமாக அவர்களுக்கு ஆதரவு அளிக்கிறார்கள்.
ஆழ்மன ஆதரவில் இருக்கும் எதிர்ப்பு, தன்னினைவோடு ஆதரவு அளிப்பதைவிட அல்லது எதிர்ப்பதைவிட அதிக சக்தி வாய்ந்தது.
சரணாகதியின் சக்தி, சரணடைந்த விஷயத்தை மறப்பதில் உள்ளது.
அது நம் நினைவில் இருந்தால், நாம் அதனை நம்முடன் வைத்திருக்கிறோம் என்றாகிறது.
ஞாபகம், சிந்தனை, எதிர்பார்ப்பு, மனம், உணர்ச்சிகள், செயல்கள், இவை மேல்மனத்தில் இருந்தாலும் சரி, ஆழ்மனதில் இருந்தாலும் சரி இவைகளை விட்டு விடுவதே சரணாகதியின் சரியான அறிகுறியாகும்.
Archdeaconற்கு, Grace Crawley கொடுத்த சத்தியம் அவளுடைய ஆன்மாவில் செய்தது.
ஆண்களுக்காக வெற்றியுடன் காத்திருக்கும் பெண்கள், வெற்றிகரமாக அவ்வாறு செய்கிறார்கள்.

ஆணுடைய காதலுக்கு மறுமொழி அளிப்பதுபோல் தாங்கள் காதலிப்பதாகவும் இந்த விஷயத்தில் தங்களுடைய தன்முனைப்புக்கான திறனை தாங்கள் இழந்து விட்டதாகவும் பெண்கள் நம்புகிறார்கள். ஆண்தான் அடக்கியாள்பவனாக இருக்கிறான் என்பது சமூகப் பதிப்பாக இருந்தாலும், ஐரோப்பாவில் ஆண்தான் அவள் முன்னால் மண்டியிடுகிறான். **அதனுடைய அளவிலா சக்தியை அவள் முழுமையாக மனோரீதியாக பயன்படுத்திக் கொள்கிறாள்.**

இன்று கீழை நாடுகளிலோ அல்லது மேற்கத்திய நாடுகளிலோ இருக்கும் ஒரு பெண்மணி தன்னுடைய மனத்தின் ஆளுமையில் நிலை நிறுத்திக் கொண்டால், அதனுடைய ஆன்மீக மேன்மையில் அவள் தன்னுடைய முழு சக்தியையும் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆன்மீக முக்கியத்துவத்தின் சமூகப் பதிப்பே இந்தியாவில் கற்பு ஆகும்

மேற்கத்திய நாடுகளில் இருக்கும் பெண்மணி இந்த அறிவினை பெற்றால், ஆண் பெண் உறவு எனும் வரம்பில், மன்னராட்சி மக்களாட்சிக்கு வழி விடுவதைப் பார்க்கலாம்.

1904ல் இந்தியாவின் எதிர்காலம் முழு சுதந்திரத்தில் உள்ளது, மேலும் சிறந்த அரசாங்கம் கேட்பதில் அல்ல என்பதை ஸ்ரீ அரவிந்தர் உணர்ந்தார்.

இன்று பெண்களின் வலியுறுத்தல் தலைகீழான செயலாக உள்ளது, ஆண்களை அதிகாரம் செய்வதற்கு உரிமை கேட்கும் செயலாக உள்ளது என்கிற உண்மை தெரியாத அளவிற்கு அவர்கள் கண்மூடியாக இருக்கிறார்கள்.

40. "Having to relate such a thing about his sister".

Human relationship of the best kind excludes 'relating' anything of this sort.

Human relationship is social relationship.

Psychological relationship is intimacy of several descriptions but 'such a thing' about his sister never forms part of the fast friendships.

In this case, Bingley is not admitted into that confidence.

Had Darcy married elsewhere, the first thing he would keep from her is the news of Georgiana.

The reader is startled to find it in his letter.

Darcy could have definitely given her to understand Wickham's character in this act, without disclosing the fact.

He explained the escapade in some detail.

Darcy, not being poetic or romantic, attempted romance crudely in relating this incident.

She was made to understand in her depths the extent of his commitment to her.

The rules of subconscious life tell us that she could not refuse to respond to it.

The letter was an occasion for him to relate to her sincerely and fully.

His sincerity would be incomplete had he withheld this news.

That she made light of this, explains there was NO love in her.

What she felt for Wickham was not love but deep infatuation.

Love has its origin in Ananda.

Ananda is the experience of Being and consciousness, both of which are made of truth.

Elizabeth, except in her mental endowment, is her mother.

Her mother has all the potentials for coarse pleasure.

Mrs. Bennet has nothing in her that can remotely relate to Love.

What she got from her father is freedom, capacity to think, both of which are faculties of Mind not that of heart.

Even Jane's response to 'such a thing about his sister' shows she is more truly touched by the narration than Elizabeth.

"தன்னுடைய சகோதரியைப் பற்றிய இப்படிப்பட்ட ஒரு சம்பவத்தைக் கூற வேண்டி இருந்தது."

சிறந்த மனித உறவுகளில் இது போன்றவை தவிர்க்கப்பட்டு விடும்.

மனித உறவு சமூக உறவாகும்.

மனரீதியான உறவினில் பலவிதமான அந்தரங்கமான விஷயங்கள் உண்டு என்றாலும், அவனுடைய சகோதரியின் இது போன்ற விஷயம் பலமான நட்புகளில் ஒரு அங்கமாக என்றும் ஆகமுடியாது.

இந்த விஷயத்தில், பிங்கிலி இந்த இரகசியத்தில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

டார்சி வேறு யாரையாவது திருமணம் செய்து கொண்டிருந்தால், ஜார்ஜியானாவைப் பற்றிய விஷயம் அவளுக்குத் தெரியக் கூடாது என்பதுதான் அவனுக்குப் பிரதானமாக இருக்கும்.

அவனுடைய கடிதத்தில் அதைப் படிப்பவருக்கு அதிர்ச்சி உண்டாகிறது.

உண்மையை வெளியிடாமல் விக்காமுடைய குணத்தை இந்த செயலில் டார்சி கண்டிப்பாக அவளுக்குப் புரிய வைத்திருக்க முடிந்திருக்கும்.

ஓடிப்போகும் விஷயத்தை சிறிது விவரமாக அவன் விளக்குகிறான்.

டார்சி கவிஞனோ அல்லது காதல் உணர்வு கொண்டவனோ இல்லாததால் இந்த நிகழ்வினை கூறி அவன் காதலை நாசூக்கின்றி வெளிப்படுத்த முயல்கிறான்.

அவளுடைய ஆழ்மனதில், அவன் அவளிடம் கொண்டிருந்த ஈடுபாட்டின் தீவிரத்தைப் புரிய வைத்தான்.

அதற்கு அவள் மறுமொழி தர மறுக்க முடியாது என்பதை வாழ்வின் ஆழ்மன சட்டங்கள் நமக்கு கூறுகின்றன.

உண்மையாகவும் முழுமையாகவும் அவளுடன் தன்னை தொடர்புபடுத்திக் கொள்ள கடிதம் ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.
இந்த செய்தியினை கூறாமல் விட்டிருந்தால் அவனுடைய உண்மை முழுமை அடைந்திருக்காது.
அவள் இதனை லேசாக எடுத்துக் கொண்டது அவளுக்கு அவன்மேல் காதல் இல்லை என்பதைக் காண்பிக்கின்றது.
விக்காமிடம் அவளுக்கு இருந்தது காதலல்ல, ஆழமான மோகம்.
ஆனந்தத்தில் அன்பு எழுகிறது.
ஜீவன், ஜீவியம் இவற்றின் அனுபவமே ஆனந்தம் ஆகும், இரண்டுமே உண்மையானது.
மனம் பெற்றிருக்கும் சிறப்பைத் தவிர, எலிசபெத் அவளது தாயாரைப் போலானவள்.
நாசூக்கில்லாமல் சந்தோஷம் அடைவதற்கு அவளது தாயாரிடம் எல்லாத் திறமைகளும் உள்ளன.
திருமதி பென்னட்டிற்கு காதல் என்பது வெகு தூரம்.
சுதந்திரமும் சிந்திக்கும் திறனும் அவளது தகப்பனாரிடமிருந்து பெற்றுக்கொண்டாள், இரண்டுமே மனத்தின் திறன்கள், இதயத்தின் திறன்கள் அல்ல.
எலிசபெத்தைவிட ஜேன் 'அவனுடைய சகோதரியைப் பற்றிய அப்படிப்பட்ட விஷயத்தை' கேட்டு மிகவும் வருந்தினாள்.

"*Oh! No, my regret and compassion are all done away by seeing you so full of both. I know you will do him such ample justice, that I am growing every moment more unconcerned and indifferent. Your profusion makes me saving; and if you lament over him much longer my heart will be as light as a feather.*"
"ஓ! இல்லை. நீ அவனைப்பற்றி வருத்தப்படுவதையும், பரிதாபப்படுவதையும் பார்க்க பார்க்க, என்னிடம் இருக்கும் அந்த உணர்வுகள் எல்லாம் என்னை விட்டு நீங்குகின்றன. எனக்குத் தெரியும் நீ அவனுக்காக பரிந்து பேசுவாய் என்று, அதனால் என்னுடைய அக்கறையின்மையும் அலட்சியமும் ஒவ்வொரு வினாடியும் அதிகரித்துக் கொண்டே போகிறது. உன்னுடைய பெருந்தன்மை எனக்கு அவன் மேலுள்ள பரிதாபத்தைக் குறைக்கிறது. இனி இன்னும் அதிக நேரம் புலம்பினாய் என்றால் என்னுடைய மனம் இறகுபோல் லேசாகிவிடும்".

41. Elizabeth does draw solid solace in Jane's company.
ஜேனுடைய அருகாமையில் எலிசபெத் மிகவும் ஆறுதல் அடைகிறாள்.
42. "Regret and compassion are all done away by seeing you so full of both".
Elizabeth had no regrets. She explains her exhilaration in abusing him.
The compassion she felt was thin and transitory.
Compassion is sympathy that can relieve another of misery.
Cheerfulness more than compassion is natural to her character.
Her psychological help to Charlotte was by her cheerfulness rather than compassion.
Compassion is an emotion stronger than sympathy but not yet spiritual as grace.
Elizabeth can relieve another of his misery more by her cheerfulness rather than by compassion.
To her Jane is a source of physical joy.
She is such a source to her father.
It is true she cannot go away from her father.
It is equally true she cannot send Jane away.
The grades of pity, sympathy, compassion, grace trace the development of emotions from nerves to the spirit through the heart and Mind.
Pity is of the nerves, which makes the other feel worse.
Sympathy is welcome, but cannot relieve the suffering.
It is of the heart's emotions.
Compassion that can relieve the sufferer is of the Mind.
Grace abolishes suffering; it is the action of Spirit, uncalled for.
Grace needs no cause to commission itself into action.
Laws, rules are for Nature and its force.
Grace is of the Spirit which is being.
It is a law unto itself.
It creates its own laws.
It is bound by no law.
It can work through a law and its opposite.
Law is an occasion and instrument for Spirit, not a necessity.
Grace has the capacity to become Supergrace.
"நீ வருத்தப்படுவதையும், பரிதாபப்படுவதையும் பார்த்து எனக்கு அந்த உணர்வுகள் எல்லாம் நீங்கி விட்டன".

எலிசபெத்திற்கு எந்த வித வருத்தமும் எழவில்லை. அவனை நிந்தனை செய்யும்பொழுது கிடைத்த சந்தோஷத்தைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தாள்.
அவளிடம் எழுந்த இரக்கம் லேசானது, மாறக்கூடியதாக இருந்தது.
மற்றவரது துயரத்தைப் போக்கும் இரக்கம் அனுதாபமாகும்.
இரக்கத்தைவிட கலகலப்பே அவளுடைய இயற்கையான சுபாவமாக இருந்தது.
இரக்கத்தைவிட அவளுடைய கலகலப்பான சுபாவத்தின் மூலமே ஷார்லெட்டுக்கு அவள் மனரீதியான உதவியைச் செய்தாள்.
அனுதாபத்தைவிட இரக்கம் வலிமையான உணர்வுதான், ஆனால் அருளைப் போல் ஆன்மீகமானதல்ல.
இரக்கம் காண்பிப்பதைவிட தனது உற்சாகத்தின் மூலம் எலிசபெத்தால் மற்றவரது துயரத்தை போக்க முடியும்.
அவளுக்கு ஜேன் ஜடநிலை சந்தோஷத்தை கொடுப்பவள் ஆவாள்.
அவள் அவளுடைய தந்தைக்கு அது போன்ற சந்தோஷத்தை கொடுப்பவள்.
அவளுடைய தந்தையிடமிருந்து அவளால் விலகிச் செல்ல முடியாது என்பது உண்மை.
ஜேனையும் அவளால் அனுப்ப முடியாது என்பதும் உண்மை.
உணர்வுகளிலிருந்து ஆன்மாவிற்கு செல்லும் உணர்ச்சிகளின் முன்னேற்றத்தை பரிதாபம், அனுதாபம், கருணை, அருள், இவற்றின் நிலைகள், இதயத்தின் மூலமும் மனத்தின் மூலமும் ஆராயும்.
பரிதாபம் உணர்வுக்குரியது, மற்றவர்களை மேலும் மோசமாக வருத்தப்பட வைக்கும்.
அனுதாபம் வரவேற்கப்படக்கூடியது, ஆனால் துன்பத்தைப் போக்காது.
அது இதயத்தின் உணர்ச்சிகள்.
துன்பப்படுபவருக்கு ஆறுதலளிக்கும் கருணை மனத்திற்குரியது.
அருள் துன்பத்தை அழித்து விடும்; அழைக்காமலேயே செயல்படும் ஆன்மாவின் செயல் இது.
செயல்படுவதற்கு அருளுக்கு காரணம் எதுவும் தேவையில்லை.
இயற்கைக்கும் அதனுடைய சக்திக்குமே சட்டங்களும் விதிகளும் உண்டு.
ஜீவனான ஆன்மாவுக்குரியது அருள்.
அதுவே அதற்கு ஒரு சட்டமாகும்.
அது அதனுடைய சொந்த சட்டங்களை உருவாக்கும்.
அது எந்த சட்டத்திற்கும் உட்பட்டதல்ல.
அது சட்டம் மூலமாகவும் செயல்படும், அதற்கு நேரெதிரானது மூலமாகவும் செயல்படும்.
ஆன்மாவுக்குச் சட்டம் ஒரு சந்தர்ப்பமும் கருவியும் மட்டுமே, அவசியமானது இல்லை.
அருள் பேரருளாகும் திறன் உடையது.

43. "I am growing every moment more unconcerned and indifferent".
It is a confirmation of the callous indifference to such a news.
Unconcern and indifference refer to the lost opportunity of the proposal.
Man may love a good opportunity, but never will miss an opportunity to snub another especially when it is done in return.
To do a right thing one has to persevere whereas a wrong thing is done by the first opportunity. It baffles us.
Our consciousness is organized and experienced to execute a negative work.
No such preparation or endowment is there in Man for the right work.
Unconcern is the opposite of concern and indifference, interest.
Many things happen around us.
We selectively observe, recognize a few as worth observing.
To take a lingering interest in it creates a concern for the issue.
Unconcern is not the opposite of being concerned.
It is an active non-interest in a thing where no concern is allowed to develop.
Concern is what we develop as it is of importance or of interest to us.
Interest can arise by what the object is that attracts us.
She was definitely interested in Darcy to know about him.
She was not concerned about his affairs.
This explains why the news of Georgiana left her flat.
Georgiana's great interest in her is explained by her lack of interest in her.
The two people in whom she naturally interests herself are Jane and her father.
Whatever happens to her, she rushes to speak of it to Jane.
With that eagerness she has a great amount of reservation in herself.
Her not taking Jane or her father into confidence about her relations with Darcy at Pemberley and Lambton which is out of her secretive nature, **made his coming to her really possible**.
"அக்கறையின்மையும் அலட்சியமும் ஒவ்வொரு வினாடியும் என்னுள்ளே அதிகரித்துக் கொண்டே போகிறது."
அது போன்ற ஒரு செய்திக்கு காண்பித்த இரக்கமற்ற அலட்சியத்தை அது உறுதிப்படுத்துகிறது.

வாய்ப்பாக வந்த திருமண வேண்டுகோளை இழந்ததை, அக்கறை இல்லாததும் அலட்சியமும் குறிப்பிடுகின்றன.

நல்ல வாய்ப்பினை மனிதன் விரும்பலாம் ஆனால் மற்றவரை மட்டம் தட்டிப் பேசும் வாய்ப்பினை, அதுவும் அது பதிலுக்கு செய்வதாக இருக்கும் சந்தர்ப்பத்தில், அதை இழக்கவே விரும்பமாட்டான்.

நல்ல செயல் செய்வதற்கு ஒருவருக்கு விடாமுயற்சி வேண்டும், ஆனால் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தவறான செயல் செய்யப்பட்டு விடுகிறது. இது நம்மை பிரமிக்கச் செய்கிறது.

ஒரு எதிர்மறையான செயலை செய்வதற்கு நமது ஜீவியம் முறைப்படுத்தப்பட்டும் அனுபவம் நிறைந்ததாகவும் உள்ளது.

சரியான வேலை செய்வதற்குரிய திறமைகளோ அல்லது ஏற்பாடுகளோ மனிதனிடம் இல்லை.

அக்கறை அக்கறையின்மைக்கு நேரெதிரானது, அலட்சியம் ஆர்வம் காண்பிப்பதற்கு நேரெதிரானது.

பல விஷயங்கள் நம்மைச் சுற்றி நடக்கின்றன.

நாம் சிலவற்றை மட்டும் கவனிக்கிறோம், சிலவற்றை கவனிப்பது உபயோகமானது என்று அறிந்து கொள்கிறோம்.

அதில் ஒரு நிரந்தர ஆர்வம் காண்பிப்பது அந்த விஷயத்திற்கு அக்கறையை உருவாக்கும்.

அக்கறை காண்பிக்காதது அக்கறையுடன் இருப்பதன் நேரெதிர் ஆகாது.

ஆர்வம் இல்லாத விஷயத்தில் அக்கறை எழுவதில்லை.

நமக்கு முக்கியமானதிலும் ஆர்வம் இருப்பதிலும் நமக்கு அக்கறை எழும்.

நம்மை கவரும் பொருளைப் பொறுத்து ஆர்வம் எழும்.

டார்சியிடம் அவளுக்கு கண்டிப்பாக விருப்பம் இருந்ததால் அவனைப் பற்றி தெரிந்துகொள்ள விருப்பப்பட்டாள்.

அவனுடைய விவகாரங்களைப் பற்றி அவளுக்குக் கவலை இல்லை.

ஜார்ஜியானாவைப் பற்றிய விஷயம் ஏன் அவளிடம் அவ்வளவு பாதிப்பு ஏற்படுத்தவில்லை என்பதை இது விளக்குகிறது.

அவளுக்கு ஜார்ஜியானாவிடம் ஆர்வம் இல்லாதது, ஜார்ஜியானாவுக்கு அவள் மேல் உள்ள பெரிய ஆர்வத்தை விளக்குகிறது.

அவளுக்கு இயற்கையாகவே ஆர்வம் இருக்கும் இரண்டு நபர்கள் ஜேனும் அவளது தகப்பனாரும்.

அவளுக்கு நடக்கும் விஷயங்களை ஜேனிடம் சொல்வதற்கு அவள் விரைகிறாள்.

அந்த ஆர்வத்தோடுகூட அவளுக்கு மிகுந்த தயக்கமும் இருந்தது.

இரகசியத்தைக் கடைப்பிடிக்கும் அவளுடைய சுபாவத்தினால் பெம்பர்லியிலும் லாம்ப்டனிலும் டார்சியுடன் ஏற்பட்ட உறவைப் பற்றி ஜேனிடமும் தகப்பனாரிடமும் எதுவும் கூறாமல் இருந்தது, **அவன் அவளிடம் வருவதை உண்மையில் சாத்தியமாக்கியது.**

"*Poor Wickham; there is such an expression of goodness in his countenance! Such an openness and gentleness in his manner!"*

“பாவம் விக்காம்! அவன் முகத்தைப் பார்த்தால் நல்லவன் போல் தோன்றுகிறது! வெளிப்படையாகவும் இருக்கிறான், நடத்தையில் நற்பண்புகள் உடையவன் போலவும் இருக்கிறான்.”

44. Wickham has such a good looking countenance.
    விக்காமுக்கு அழகான முகத்தோற்றம் இருந்தது.
45. After his elopement, he retained a calm countenance.
    அவன் ஓடிப்போனதற்குப் பிறகும் அவனுடைய முகத்தில் அமைதி நிலவியது.
46. Absence of conscience is an asset.
    மனசாட்சி இல்லாமல் இருப்பது ஒரு சொத்து.
47. In trying to appear a paragon of perfection to the elder Mr. Darcy, he has developed such a countenance helped by absence of scruples.
    டார்சியின் தகப்பனாரிடம் மிகவும் நல்லவனாகத் தோன்றுவதற்கு முயற்சி எடுக்கும்பொழுது அவன் இப்படிப்பட்ட முகத்தோற்றதை ஏற்படுத்திக்கொண்டான், மனசாட்சி இல்லாதது இதற்கு உதவியது.
48. “Poor Wickham, there is such an expression of goodness in his countenance”.
    It is true an excellent appearance of goodness and a bunch of venomous ideas can go together.
    Appearances are real. For most nothing more than appearance is necessary.
    Imperfect appearances give out their secrets.
    Perfection in appearance is possible.
    It cannot betray itself without an occasion for it.
    It is significant that no one passed adverse comments on Wickham’s desertion to Miss King, except Mrs. Gardiner.
    His manners, perfected at Pemberley, do not give out their true colours in Meryton.
    Except in times of transition society is a vast significant apparatus of constructed appearance.
    In any field like education, music, art, politics and religion, appearance is no small part. In some it is difficult to

discover the content at all.
Appearance perfected is achievement accomplished.
Jane cannot be as disillusioned as Elizabeth who went through an excruciating experience in the shape of a letter and proposal.
Excellent comforts in travel to deliver a message have the habit of becoming all important relegating the message.
Man has developed a perfect automatic system of senses for his survival.
He can never become a victim without turning a blind eye to the danger.
Social sensitivity of culture develops warning signals against deceitful manners.
Responding to one such signal, Darcy saved Georgiana.
Walking into one such trap willingly, a tragedy came to her.
Grace sometimes saves even willing victims.
There are victims devoted to tragedy whom grace does not save.
Without fail Mother saves them by Supergrace.
“பாவம் விக்காம், அவன் முகத்தைப் பார்த்தால் நல்லவன் போல் தோன்றுகிறது.”
நல்லவன்போல் அருமையான தோற்றமும், விஷமத்தனமான எண்ணங்களும் ஒரே இடத்தில் இருக்கும் என்பதும் உண்மை.
தோற்றங்கள் உண்மையானது. பலருக்கு தோற்றம் மட்டுமே போதும்.
குறையுள்ள தோற்றம் அவற்றின் இரகசியங்களை வெளியிட்டு விடும்.
குறையற்ற தோற்றம் சாத்தியமானது.
சந்தர்ப்பம் இல்லாமல் அது தன்னையே காட்டிக் கொடுக்காது.
திருமதி கார்டினரைத் தவிர வேறு எவரும் மிஸ் கிங்-ஐ விக்காம் கைவிட்டதைப் பற்றி எதிரான கருத்து தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
பெம்பர்லியில் நிறைவாக இருந்த அவனுடைய நடத்தை, மெரிடனில் அவனுடைய உண்மையான சுபாவத்தை வெளிப்படுத்தவில்லை.
மாறும் காலங்களைத் தவிர மற்ற நேரங்களில் சமூகம் உருவாக்கப்பட்ட தோற்றங்களைக் கொண்டது. கல்வி, இசை, கலை, அரசியல், மதம், போன்ற எந்தத் துறையிலும் தோற்றம் மிகவும் முக்கியம். சிலவற்றில் அதனுடைய உட்பொருளை கண்டுபிடிப்பதே மிகவும் கடினமாக இருக்கும்.
தோற்றம் நிறைவாக இருந்தால் சாதனைகள் சாதிக்கப்பட்டு விடும்.
கடிதத்தின் மூலமும் திருமண பேச்சின் மூலமும் வேதனையான அனுபவத்தைப் பெற்ற எலிசபெத்தைப்போல் ஜேனால் தெளிவு பெற முடியாது.
ஒரு செய்தியை சொல்வதற்காக மிக வசதியாக பிரயாணம் செய்யும்போது, பிரயாணம் முக்கியமாகி செய்தி பின்னுக்குத் தள்ளப்படுகிறது.
மனிதன் உயிர்வாழ்வதற்கு தானாகவே இயங்கும் உணர்வுபூர்வமான ஒரு சிறப்பான முறையை, அவன் ஏற்படுத்தி இருக்கிறான்.
ஆபத்திற்கு கண்மூடியாக இருந்தாலன்றி அவன் ஒரு பொழுதும் பாதிப்புக்கு உள்ளாக மாட்டான்.
ஏமாற்றும் முறைகளுக்கு எதிராக நாகரிகத்தின் சமூக உணர்வுகள் எச்சரிக்கை அளிக்கும்.
இது போன்ற ஒரு அறிகுறியை உணர்ந்ததினால் டார்சி ஜார்ஜியானாவைக் காப்பாற்றினான்.
விருப்பத்துடன் அது போன்ற ஒரு வலையில் சிக்கிய அவளுக்கு ஆபத்து வந்தது.
விரும்பி துன்பத்துக்கு ஆளாகுபவர்களைக்கூட அருள் சில சமயங்களில் காப்பாற்றும்.
ஆபத்தை விரும்புவர்களை அருள் காப்பாற்றாது.
ஆனால் அன்னை அவர்களையும் பேரருளால் காப்பாற்றத் தவறுவதே இல்லை.

"*There certainly was some great mismanagement in the education of those two young men. One has got all the goodness, and the other all the appearance of it.*"
“அந்த இரு இளம் நபர்களின் கல்வியின் நிர்வாகத்தில் ஏதோ பெரிய தவறு ஏற்பட்டிருக்கிறது. ஒருவருக்கு எல்லா நல்லதும் கிடைத்திருக்கிறது, மற்றொருவருக்கு அதனுடைய தோற்றம் மட்டுமே கிடைத்திருக்கிறது”.

49. “There certainly is some mismanagement in the education of these two young men”.
Results of a work do not always go as intended.
Wickham got the manners, Darcy got the character.
Results are received according to receptivity, not according to planning.
Intensity of love directed towards one, draws another to him.
Love is a total movement; ego’s direction is partial.
Darcy assured of status had no incentive to be receptive to the training of manners.
Wickham can easily learn manners, not character.
Wickham had a vested interest in an excellent exterior.
Darcy too had a vested interest of psychological satisfaction in looking down on others.

He had a complete justification in Wickham about hollow manners.
Elizabeth assumes that Pemberley was duty bound to train Wickham.
As people feel the objects they touch are their own, the vital and Mind when they relate by thought or feeling to something feel it is their own.
Once that thought takes hold of them, **the facility with which the owner is removed by their thoughts reveals the infinite resourcefulness of human nature.**
Anyone can readily usurp any position without compunction.
A daughter-in-law becomes a mother-in-law. In both the situations she wants to dominate.
Mrs. Bennet fully usurping the rights of the husband is blatant.
No encroachment is a good rule for domestic felicity.
Spiritual awakening has its versions at all levels.
Physical Mind seeing what it closes its eyes to.
Superstition looking outside of itself.
Mind seeing the other side.
Man taking the other Man's point of view.
Preventing the Mental play to shut out the fact that all are in us.
“இந்த இரண்டு வாலிபர்களின் கல்வியில் நிச்சயம் ஏதோ சில குறைகள் ஏற்பட்டிருக்கின்றன.”
எதிர்பார்த்தபடி பலன்கள் எப்பொழுதும் கிடைப்பதில்லை.
விக்காம் நல்ல நடத்தையைப் பெற்றுள்ளான், டார்சி சிறந்த குணத்தைப் பெற்றுள்ளான்.
ஏற்புத் திறனுக்கு ஏற்றார்போல் பலன்கள் கிடைக்கும், திட்டமிட்டபடி அல்ல.
ஒருவரிடம் செலுத்தும் தீவிரமான அன்பு மற்றவரை அவனிடம் அழைத்து வருகிறது.
அன்பு ஒரு முழுமையான இயக்கம்; அகந்தையின் போக்கு பகுதியானது.
டார்சிக்கு அந்தஸ்து உறுதி என்பதால் நல்ல நடத்தையைப் பெற வேண்டும் என்கிற அவசியம் அவனுக்கு இல்லை.
நடத்தையை விக்காம் சுலபமாக கற்றுக்கொள்ளலாம், குணத்தைப் பெறுவது கடினம்.
சிறப்பான வெளித் தோற்றத்தில் விக்காமிற்கு சொந்த ஆதாயம் இருந்தது.
மற்றவர்களை தாழ்வாகப் பார்ப்பதில் டார்சிக்கு கிடைத்த மனத்திருப்தி, அவனது சொந்த ஆதாயமாக இருந்தது.
வெறுமையான நடத்தை கொண்ட விக்காம் மீது அவனுடைய நியாயம் முழுமையாக இருந்தது.
விக்காமிற்கு பயிற்சி கொடுப்பது பெம்பர்லியின் கடமை என எலிசபெத் நினைக்கிறாள்.
ஒரு பொருளைத் தொட்டவுடன் அது நமக்கே சொந்தம் என்று நினைப்பதுபோல், மனமும் உணர்வும், எண்ணங்கள் மூலமாகவோ அல்லது உணர்வுகள் மூலமாகவோ ஒரு பொருளுடன் தொடர்புகொள்ளும் பொழுது அது தனக்கே சொந்தம் என நினைக்கும்.
அந்த எண்ணம் அவர்களை ஆட்கொண்டவுடன், **பொருளின் உரிமையாளரை எண்ணங்கள் மூலம் நீக்குவது மனித சுபாவத்தின் அளவற்ற திறமைகளை வெளிப்படுத்துகிறது.**
யார் வேண்டுமென்றாலும் எந்த ஒரு நிலையையும் மனவுறுத்தல் இன்றி கைப்பற்றலாம்.
மருமகள் மாமியாராக மாறுகிறாள். இரண்டு நிலையிலும் அவள் அதிகாரம் செய்ய விரும்புகிறாள்.
திருமதி பென்னட் தன்னுடைய கணவரின் எல்லா உரிமைகளையும் கைப்பற்றுவது வெளிப்படையாக உள்ளது .
குடும்ப சந்தோஷத்திற்காக ஒருவர் எல்லைக்குள் மற்றவர் நுழையாமல் இருப்பது நல்ல பழக்கமாகும்.
ஆன்மீக விழிப்புக்கு எல்லா நிலைகளிலும் பல பதிப்புகள் உள்ளன.
ஜட மனம் எதைப் பார்க்க மறுக்கிறதோ அதையே பார்க்கிறது.
மூட நம்பிக்கை, அதனையே விட்டுவிட்டு வெளியே பார்க்கிறது.
மனம் மற்ற பக்கத்தைப் பார்க்கிறது.
அடுத்தவரின் கண்ணோட்டத்தை மனிதன் எடுத்துக்கொள்வது.
எல்லோரும் நம்முள் இருக்கிறார்கள் எனும் உண்மை வெளி வராமல் இருப்பதற்காக மனத்தின் ஆட்டத்தைத் தடுப்பது.

"*I never thought Mr. Darcy so deficient in the appearance of it as you used to do.*"
“நீ நினைத்திருந்ததைப்போல், டார்சி தோற்றத்திலும் குறைபாடுள்ளவன் என்று நான் என்றுமே நினைத்ததில்லை”.

50. Jane, contrary to all of Meryton, never found fault with Darcy.
மெரிடனில் உள்ள மற்றவர்களைப் போலல்லாமல் ஜேன், டார்சியிடம் ஒரு பொழுதும் குற்றம் கண்டு பிடிக்கவில்லை.

"And yet I meant to be uncommonly clever in taking so decided a dislike to him, without any reason. It is such a spur to one's genius, such an opening for wit, to have a dislike of that kind. One may be continually abusive without saying anything just; but one cannot be always laughing at a man without now and then stumbling on something witty."

"காரணம் இல்லாமலேயே அவனை கட்டோடு வெறுத்ததற்கு நான் ஒரு அசாதாரண புத்திசாலி என்று நினைத்தேன். ஒருவருடைய புத்திசாலித்தனத்திற்கு அது ஒரு பெரிய தூண்டுதலாக இருக்கும். அதுபோன்ற ஒரு வெறுப்புக்கு நான் எவ்வளவு நகைச்சுவையாக பேச முடியும் என்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. நியாயமாக எதுவும் சொல்லாமல், ஒருவர் எப்பொழுதும் அவதூறாகப் பேசிக் கொண்டே இருக்கலாம், ஆனால் ஹாஸ்யமாக எதுவும் தட்டுப்படாமல் ஒருவர் ஒரு நபரை பார்த்து எப்பொழுதும் சிரித்துக் கொண்டே இருக்க முடியாது."

51. Attitude of cleverness parts with the reason.
புத்திசாலித்தனத்தின் மனப்பான்மை விவேகத்தோடு இருக்காது.
52. Cleverness likes dislike.
புத்திசாலித்தனம் வெறுப்பை விரும்பும்.
53. An extraordinary ability, even dislike, can rise to levels of genius when energy is supplied.
சக்தி கிடைத்தால் ஒரு மிகச் சிறந்த திறன், ஏன் வெறுப்பும் கூட பெரிய நிலைகளுக்கு உயரும்.
54. Rationality is balance, supplies no energy.
பகுத்தறிவு சமநிலைப்படுத்தும் சக்தி அளிப்பதில்லை.
55. Dislike, as liking, is a source of energy.
விருப்பத்தைப் போல வெறுப்பும் சக்தியின் பிறப்பிடம் ஆகும்.
56. A sudden supply of energy opens the wit.
திடீரென்று வரும் சக்தி அறிவுக்கு வழி கோலுகிறது.
57. Abuse is powerful, can supply its own energy.
திட்டுவது சக்தி வாய்ந்தது, அதனுடைய சக்தியையே வழங்கவல்லது.
58. Speed, energy, dynamism can reach their own high points.
வேகம், சக்தி, இயங்காற்றல் இவைகள் தத்தம் உயர் நிலைகளை அடைய முடியும்.
59. Wit makes the mind resourceful and resourcefulness supplies energy.
அறிவு மனத்தை வளமானதாக ஆக்குகிறது, வளமை சக்தியை வழங்குகிறது.
60. Hence the importance of the human choice.
ஆகவேதான் மனித விருப்பத்தின் முக்கியத்துவம்.
61. Choice takes sides.
விருப்பம் இரண்டில் ஒன்றை ஆதரிக்கும்.
62. Attitudes like dislike can rise in intensity.
வெறுப்பைப்போல் மனோபாவமும் தீவிரத்தில் உயரும்.
63. One performs and then rationalizes.
ஒருவர் செயலாற்றிய பிறகு நியாயப்படுத்துவார்.
64. It is the usual rationalization available.
இது சாதாரணமாக உள்ள நியாயப்படுத்துதல்.
65. Rationality, the choice to be rational, before the performance is not heard of.
பகுத்தறிவும், செயலாற்றுவதற்கு முன் பகுத்தறிவோடு செயல்பட விரும்புவதும் கேள்விப்படாத விஷயம்.
66. 'It is a spur to one's genius'. The genius in one can find expression by a deep liking of some one or a dislike.
'ஒருவருடைய புத்திசாலித்தனத்திற்கு அது பெரிய தூண்டுதலாக இருக்கும்'. ஒருவரிடம் உள்ள புத்திசாலித்தனம், யாரோ ஒருவரின் மீதுள்ள ஆழமான விருப்பின் மூலமோ அல்லது வெறுப்பின் மூலமோ வெளிப்படலாம்.
67. The wit in one finds a release when one laughs at another.
ஒருவர் மற்றோருவரைப் பார்த்து சிரிக்கும்பொழுது, அவரிடமுள்ள ஹாஸ்ய உணர்வு வெளிப்படுகிறது.
68. "I meant to be uncommonly clever in taking so decided a dislike to him without any reason".
The process of love as well as hate is exactly the same.
One who falls in love means to be uncommonly clever in taking a liking.
The force of love gives the extraordinary feeling.
The liking descends on him without any reason.
It is so decided a liking as if a decision were forced on him.
It does give him the illusion of uncommon cleverness.
Love is one expression of Ananda when the soul is touched by it.
The force of love is the force of the soul in action.
The uncommonly clever feeling is not an illusion; it is real as the soul is so.

The emotion soul feels is emphatic; hence the decided liking.
This is one of the two passages in the book that speak of a rare self-awareness.
The other is when she discovered herself despicable on reading his letter.
The above passage is not about love, but hatred.
It is remarkable that she is this aware of her own hatred.
The 'tolerable', his aloofness, meanness, pride, arrogance have created in her a forceful hatred which received further fortification by the fabrications of Wickham.
The process of the release of such hatred, her enjoyment of that release, the role of cleverness, the self-gratification in exercising a faculty all have assumed a proportion of reality when she sees it is without reason. Causelessness is the stamp of genius. She felt her own genius of abuse was released.
It was a proposal of love.
It was a tirade of hatred from her.
Her marrying him is the transformation of her hatred into gratitude.
Property excites security.
Sense of security and status give the emotion of gratitude.
"காரணம் இல்லாமலேயே அவனை கட்டோடு வெறுத்ததற்கு நான் ஒரு அசாதாரண புத்திசாலி என நினைத்திருந்தேன்."
விருப்புக்கும் வெறுப்புக்கும் முறை ஒன்றுதான்.
காதல் வயப்படுபவர் விருப்பம் கொள்வதால் அசாதாரண புத்திசாலி என்று கருதப்படுவர்.
காதலின் சக்தி சிறப்பான உணர்வைத் தருகிறது.
விருப்பம் அவனிடம் காரணமில்லாமலேயே எழுகிறது.
அவன் மேல் ஒரு தீர்மானம் திணிக்கப்பட்டதுபோல் அது தீர்மானிக்கப்பட்ட விருப்பமாக இருக்கிறது.
அசாதாரண புத்திசாலித்தனம்போல் ஒரு தோற்றத்தை அவனுக்கு அளிக்கிறது.
ஆன்மாவை ஸ்பரிசிக்கும் காதலின் வெளிப்பாடுதான் ஆனந்தம்.
காதலின் சக்தி செயல்படும் ஆன்மாவின் சக்தி ஆகும்.
அசாதாரணமான புத்திசாலித்தனமான உணர்வுகள் மாயத்தோற்றம் அல்ல. ஆன்மாவைப் போல் அதுவும் உண்மையானது.
ஆன்மாவின் உணர்ச்சி வலுவானது. ஆகவேதான் அந்த தீர்மானமான விருப்பம்.
அபூர்வமான சுய விழிப்புணர்வைப் பற்றி இந்த புத்தகத்தில் பேசப்பட்டுள்ள இரண்டு இடங்களில் இது ஒன்று.
கடிதத்தைப் படித்தபின் அவள் இருந்த மோசமான நிலையை அவள் கண்டது மற்றொரு இடம்.
மேலே கூறப்பட்டுள்ள பகுதி வெறுப்பைப் பற்றியது, காதலைப் பற்றியது அல்ல.
அவளுடைய வெறுப்பைப் பற்றி அவள் இவ்வளவு தூரம் அறிந்திருப்பது குறிப்பிடத்தக்கது.
அவன் 'பரவாயில்லை' என்று கூறியது, அவனுடைய தனிமை, சின்னத்தனம், தற்பெருமை, அகம்பாவம், அவளிடம் கடுமையான வெறுப்பைத் தோற்றுவித்துள்ளது. விக்காம் கூறிய பொய்களால் அது இன்னும் அதிகமானது.
அது போன்ற வெறுப்பை வெளியில் காண்பித்த முறை, அதில் அவளடைந்த சந்தோஷம், புத்திசாலித்தனத்தின் பங்கு, ஒரு திறமையை செயல்படுத்துவதில் கிடைக்கும் சுய திருப்தி, இவை எல்லாம் உண்மையின் ஒரு நிலையை அடைந்துள்ளதை அவள் பார்க்கும்பொழுது அது காரணமின்றி இருப்பதையும் பார்க்கிறாள்.
காரணமின்றி இருப்பது புத்திசாலித்தனத்தின் ஒரு அறிகுறி. நிந்தனையில் அவளுடைய புத்திசாலித்தனம் வெளிப்படுவதை அவள் உணர்ந்தாள்.
அது காதலுக்கான வேண்டுகோள்.
அது அவளிடமிருந்து வெடித்து எழுந்த வெறுப்பு.
அவள் அவனை திருமணம் செய்து கொண்டது, வெறுப்பு நன்றி உணர்வாக திருவுருமாறுவதாகும்.
சொத்து பாதுகாப்பு தருகிறது.
பாதுகாப்பு மற்றும் அந்தஸ்து தரும் உணர்வு, நன்றி உணர்ச்சியைத் தருகிறது.

69. "It is such a spur to one's genius, such an opening for wit to have dislike of that kind. One can be continually abusive without saying anything just, but one cannot be always laughing at a man without now and then stumbling on something witty".
Jane Austen is certainly a genius. Her genius was exhausted in one novel.
Genius of love, genius of hatred are the same or similar things in the opposite direction.
As her genius expresses in dislike, it quickly exhausts in one book.
It is a story that expresses the vibration of destroying aristocracy.
So, any genius cannot express in love. It is possible to come out in love-hate.
Witticism is her well-loved trait, so it emerges as wit.
Creativity in writing or speaking creates an abundant wealth of supply of ideas that increases as it spends itself. Only a little finds expression.

A creative writer has several facets of creativity.
The characters are resourcefully creative in expressing their temperament.
The events creatively expand letting the characters expand with them.
Relationship becomes creatively live, the characters speak for themselves with the author trailing behind.
Life Responses enrich creativity of everything.
The genius of the author takes every creative occasion to express itself.
The heights of the author's genius emerge better through routine simple acts enlivening them as never before.
The greatest expression of genius is in the routine events remaining routine but catching the creative imagination of the reader, making ordinary words immortal.
Immortality is great. It is the work of a genius.
Making the mortal immortal is great literature.
She does all this in her abuse!
He offers her good wishes for her health and happiness for that abuse.
There is no gainsaying the fact she enjoyed her wit mightily.
"ஒருவருடைய புத்திசாலித்தனத்திற்கு அது பெரிய தூண்டுதல். அது போன்ற ஒரு வெறுப்பு ஹாஸ்ய உணர்வுக்கு கிடைத்த ஒரு சந்தர்ப்பம். நியாயமேயில்லாமல் ஒருவர் அவதூறாகப் பேசிக் கொண்டே இருக்கலாம், ஆனால் அவ்வப்பொழுது ஹாஸ்யமாக எதுவும் நடைபெறாமல் ஒருவர் மற்றவரைப் பார்த்து சிரித்துக் கொண்டே இருக்க முடியாது."
ஜேன் ஆஸ்டின் ஒரு மேதை. ஒரு நாவலிலேயே அவளுடைய திறமை தீர்க்கப்பட்டு விட்டது.
காதலில் மேதையாக இருப்பதும் வெறுப்பதில் மேதையாக இருப்பதும் எதிரெதிர் திசையிலுள்ள ஒரே மாதிரியான விஷயங்கள்.
அவளுடைய மேதாவித்தனம் வெறுப்பதில் வெளிப்படுவதால், அது ஒரே புத்தகத்தில் தீர்க்கப்பட்டு விடுகிறது.
பிரபுத்துவம் அழிவதை வெளிப்படுத்தும் கதை இது.
ஆகவே, எந்த ஒரு மேதாவித்தனமும் காதலில் மட்டும் வெளிப்படாது, காதல்-வெறுப்பு கலந்ததில் வெளிப்படுவது சாத்தியம்.
நகைச்சுவை அவளுக்குப் பிடித்த உணர்வு. ஆகவே அது ஹாஸ்யமாக வெளி வருகிறது.
எழுதுவதிலும் பேசுவதிலும் உள்ள திறமை ஏராளமான கருத்துகளை உண்டாக்கும். அவை உபயோகப்படுத்தப்படும்போதே வளரும், அவற்றில் சில கருத்துகள் மட்டுமே வெளிவரும்.
திறமையுள்ள எழுத்தாளரிடம் திறமையின் பல பரிமாணங்கள் உள்ளன.
கதாபாத்திரங்கள் தங்களது மனவுணர்வுகளை வெளிப்படுத்துவதில் வளமான படைக்கும் திறன் உடையவர்களாக இருக்கிறார்கள்.
நிகழ்ச்சிகள் படைப்பில் விரிவடைந்து கதாபாத்திரங்களையும் சேர்த்து விரிவடையச் செய்கிறது.
உறவுகள் படைப்பில் ஜீவனுடன் உள்ளன, நூல் ஆசிரியர் பின்னுக்குத் தள்ளப்பட்டு கதாபாத்திரங்கள் தங்களுக்காகவே பேசுகின்றனர்.
எல்லாவற்றின் படைப்புத் திறனையும் வாழ்வின் மறுமொழி உன்னதமாக்குகிறது.
நூலாசிரியரின் மேதாவித்தனம், ஒவ்வொரு படைக்கும் சந்தர்ப்பத்திலும் அதனை வெளிப்படுத்த பயன்படுத்திக் கொள்கிறது.
எளிய நிகழ்ச்சிகள் மூலம் கதாசிரியரின் மேதாவித்தனத்தின் உயர்வு மேலும் சிறப்பாக வெளிவந்து, இது வரை இல்லாத அளவிற்கு அச்செயல்களை ஜீவனுள்ளதாக்குகிறது.
சாதாரணமான நிகழ்ச்சிகள் சாதாரணமாகவே இருந்து, ஆனால் படிப்பவரின் படைப்பாற்றல் உயர்ந்த கற்பனையைத் தூண்டி, சாதாரண வார்த்தைகளுக்கு அமரத்துவம் கொடுப்பதில், மேதாவித்தனத்தின் உயர்ந்த வெளிப்பாடு இருக்கிறது. அமரத்துவம் சிறப்பானது. அது ஒரு மேதாவியின் படைப்பு.
மறையக்கூடியதை அமரத்துவம் ஆக்குவது உயர்ந்த இலக்கியம் ஆகும்.
அவளுடைய நிந்தனையில் இவற்றை எல்லாம் செய்கிறாள்!
அந்த நிந்தனைக்கு, அவன் அவளுக்கு நல்ல ஆரோக்கியத்திற்கும் சந்தோஷத்திற்குமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறான்.
அவளுடைய அறிவை அவள் மிகவும் சிறப்பாக அனுபவித்தாள் என்பதை மறுக்கவே முடியாது.

"Lizzy, when you first read that letter, I am sure you could not treat the matter as you do now."
"லிசி, நீ முதலில் அந்த கடிதத்தைப் படித்தபொழுது, இப்பொழுது நினைப்பதுபோல் அப்பொழுது நினைத்திருக்க முடியாது என்பது நிச்சயம்."

70. The first reading made no sense either way.
முதல் முறை படிக்கும்பொழுது எவ்வித அர்த்தமும் புரியவில்லை.
71. Prejudice leads to bitterness is the central theme of the story.
தவறான அபிப்பிராயம் கசப்புணர்விற்கு வழி வகுக்குகிறது என்பது கதையின் மையக் கருத்து.

72. Jane sees life's warning of hasty ill will as it happened with Elizabeth with Darcy about Wickham. This is her central personality. She gets reinforcement for her attitude.
விக்காமைப்பற்றி டார்சியுடன் எலிசபெத்திற்கு ஏற்பட்டதுபோல் அவசரமாக எழும் கெட்ட எண்ணத்திற்கு, வாழ்க்கை தரும் எச்சரிக்கையை ஜேன் பார்க்கிறாள். இதுதான் அவளுடைய முக்கியமான சுபாவமாகும். அவளுடைய மனப்பான்மை பலப்படுகிறது.
73. "Lizzy, when you first read the letter you could not have treated it as you do now".
Her first reading made her uncomfortable, unable to see the words.
It was followed by introspection, self-illumination which is self-condemnation.
Now all those energies have spent themselves.
A certain freedom in the mind and an emotional freedom have set in.
Genius in its expression takes hold of the person, overcomes the personality and finds its own expression in its own character.
The receipt of the letter was full of curiosity, devoid of any particular expectation.
The proposal brought out the genius of abuse.
The letter brought out the genius of self-realisation.
Her inability to indulge in any expectation is because the negative energies exhausted themselves fully in the conversion to the other side.
Her own energies reached a neutral equilibrium, unable to move in any direction on their own.
The tension of her curiosity on receiving the letter was so great that she could not comprehend the words before her.
She rushed ahead to read further not knowing what she read.
The self-analysis absorbed all those energies leaving her out of spirits.
She anxiously sought pleasant relief in speaking to Jane.
She expected Jane to be surprised beyond measure.
Her disappointment in Jane taking it natural, she never expressed.
As Hamlet found the nascent Mind that was born in him unable to exercise the memory of his father's command, Elizabeth, being a new born Mind out of vital infatuation did not find her energies abundantly supporting her.
She was aware of her abusive genius, not when she did it or when she reviewed it but **when she was explaining it to Jane.**
The performance is natural and instinctive.
Comprehending the performance was a later development.
"லிசி, அக்கடிதத்தை நீ முதலில் படித்தபொழுது, இப்பொழுது நினைப்பதைப் போல் அப்பொழுது நீ நினைத்திருக்க முடியாது."
அவள் கடிதத்தை முதல் முறையாகப் படிக்கும்பொழுது அது அவளை அவஸ்தைக்குள்ளாக்கியது, எழுத்துக்களைப் பார்க்க முடியவில்லை.
அகச் சோதனை, சுய தெளிவு மூலம் அவள் தன்னைத்தானே கண்டித்துக் கொண்டாள்.
இப்பொழுது அந்த எல்லா சக்திகளும் செலவழிந்து விட்டன.
மனத்தில் ஒரு விதமான சுதந்திரமும் உணர்வுரீதியான சுதந்திரமும் ஏற்பட்டுள்ளன.
புத்திசாலித்தனம் அதனுடைய வெளிப்பாட்டில் ஒருவரை முழுவதுமாக ஆக்கிரமித்து அவரது சுபாவத்தையும் மீறி, அதனுடைய சுபாவத்திற்கேற்ப ஒரு வெளிப்பாட்டை கொண்டு வரும்.
குறிப்பிட்ட எந்த எதிர்பார்ப்புமின்றி கடிதம் கிடைத்தது மிகவும் ஆவலைத் தூண்டியது.
திருமண வேண்டுகோள் நிந்தனை செய்யும் அவளுடைய திறனை வெளிக் கொண்டு வந்தது.
சுய விழிப்பின் திறமையை கடிதம் வெளிக்கொண்டு வந்தது.
மறு பக்கத்திற்கு மாறியதில் அவளுடைய எல்லா எதிர்மறை சக்திகளும் செலவழிந்து விட்டதால், அவள் எதையும் எதிர்பார்க்கும் மன நிலையில் இல்லை.
தாமாகவே எந்த ஒரு பக்கத்திற்கும் நகர முடியாத வண்ணம் அவளுடைய சொந்த சக்திகள் சமநிலையை அடைந்து விட்டிருந்தன.
கடிதத்தைப் பெற்ற அவளுக்கு ஆவல் அவ்வளவு தீவிரமாக இருந்ததினால், அவளால் தன் கண்முன் இருக்கும் எழுத்துக்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை.
என்ன படித்தோம் என்பதை புரிந்துகொள்ளாமலேயே தொடர்ந்து மேலும் படிக்கலானாள்.
சுய ஆராய்ச்சியில் எல்லா சக்திகளும் செலவழிந்ததினால், அவள் தன்னுடைய உற்சாகத்தை இழந்தாள்.
ஜேனிடம் பேசுவதில் அவள் சுகமான நிம்மதியை ஆவலுடன் நாடினாள்.
ஜேனுக்கு அளவில்லா ஆச்சரியம் எழும் என்று அவள் எதிர்பார்த்தாள்.
ஜேன் அதை மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொண்டதில் அவள் அடைந்த ஏமாற்றத்தை அவள் வெளிப்படுத்தவே இல்லை.
தந்தையின் ஆணையை நினைவில்கொள்ள முடியாத மனத்தை ஹாம்லெட் கொண்டிருந்ததுபோல், தீவிர கவர்ச்சியால் உருவான புதிய தலைமுறையைச் சார்ந்த எலிசபெத்திற்கு, அவளது சக்திகள் ஆதரவு தரவில்லை.

தான் தூஷணையாகப் பேசுவதில் வல்லவள் என்று அவளுக்குத் தெரியும். அதை அவள் பேசும்போதோ, அதைப்பற்றி சிந்திக்கும்போதோ உணரவில்லை, ஜேனிடம் விளக்கும்போது உணர்ந்தாள்.
அந்த செயல் இயற்கையாகவும் உள்ளுணர்வோடும் இருக்கிறது.
அந்த செயலை பின்னரே புரிந்து கொண்டாள்.

"*Indeed, I could not. I was uncomfortable enough. I was very uncomfortable. I may say unhappy. And with no one to speak to of what I felt, no Jane to comfort me and say that I had not been so very weak and vain and nonsensical as I knew I had! Oh! How I wanted you!*"
"ஆம், நிச்சயமாக முடியவில்லை. எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது, வருத்தமாக இருந்தது என்றுகூட சொல்லலாம். நான் நினைத்ததைப் பகிர்ந்துகொள்ள அங்கு யாரும் இல்லை. நான் நினைத்திருந்ததைப்போல் நான் மிகவும் பலவீனமானவள் அல்ல, பயனற்றவளாக இல்லை, அர்த்தமற்றவளாக இல்லை என்று சொல்லி ஆறுதல் சொல்ல ஜேன் அங்கு இல்லை! ஓ, நீ அங்கு இல்லாதது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது."

74. Uncomfortable feeling can lead to unhappiness.
சங்கடமான எண்ணங்கள் வருத்தத்தைத் தரும்.
75. Stirring energies make one uncomfortable. Accepting that view settles into the emotion of unhappiness.
கிளறும் சக்திகள் ஒருவருக்கு சங்கடத்தை ஏற்படுத்தும். அந்தக் கண்ணோட்டத்தை ஏற்றுக்கொண்டால் வருத்தமான உணர்வுகள் ஏற்படும்.
76. Jane is an essential part of her emotional existence.
அவளுடைய உணர்வுபூர்வமான வாழ்வில் ஜேன் ஒரு முக்கியமான பகுதி.
77. "No Jane to comfort".
Sorrow is halved when shared.
She was, she said, nonsensical with no one to speak to.
She would not have spoken to anyone except Jane.
The world of anyone shrinks to a few, often to one person.
For an introvert the world is himself only.
Speaking to anyone, we elicit sympathy.
The intensity is halved when another listens to us.
For the majority, marriage serves this purpose when the spouse is the confidant.
Man wants good news to be known all over. It does not easily spread.
Man does not want bad news to be known outside. It spreads readily and fully.
One is aware of the society by knowing all about it.
Any will is ill will; knowing others means knowing bad news about others.
Any willing of bad news readily spreads.
Man wants to know all about VIPs.
Knowing about a VIP is to rise socially.
Man feels alive in knowing news, particularly when he speaks it out.
The conversation at Netherfield is typical of social liveliness.
The quality of life for Darcy and Bingley is revealed by the nature of that conversation.
Society exists as a collective entity as well as in individuals.
The interaction between these two becomes social life.
Jane and Elizabeth each live in their individual habits.
There is no communication between these two affectionate sisters.
Jane evokes a response silently from the society.
Elizabeth evokes her own response from the same society.
Both meet or clash or coordinate and then resolve.
We have seen the resolution in this story.
Social existence, individual existences, their interaction to produce higher social existence and higher individual existences is the theory of social evolution.
"ஆறுதல் கூற ஜேன் இல்லை."
துக்கம் பகிர்ந்து கொள்ளப்படும்போது பாதியாகக் குறைகிறது.
பேச ஒருவருமின்றி தான் ஒரு முட்டாளைப் போல் உணர்ந்ததாக அவள் கூறினாள்.
ஜேனைத் தவிர வேறு ஒருவரிடமும் அவள் பேசியிருக்க மாட்டாள்.
ஒருவரின் உலகம் சுருங்கி ஒரு சிலரே இருப்பது போலாகிறது, பெரும்பாலும் ஒருவரே இருப்பர்.
யாருடனும் பழகாதவர்களுக்கு அவர்களே உலகம்.
யாரிடம் பேசினாலும் நாம் அனுதாபத்தை வரவழைக்கிறோம்.

மற்றவர் கேட்டுக்கொள்ளும்பொழுது அதன் தீவிரம் பாதியாகி விடுகிறது.
கணவனிடமோ அல்லது மனைவியிடமோ இரகசியத்தைப் பகிர்ந்துகொள்ள முடியும் எனில், பெரும்பாலோருக்கும் இதை திருமணம் பூர்த்தி செய்கிறது.
நல்ல செய்திகள் எல்லோருக்கும் தெரியவர வேண்டும் என மனிதன் நினைப்பான். அது சுலபத்தில் பரவுவதில்லை.
கெட்ட செய்திகள் வெளியே தெரியக் கூடாது என மனிதன் விரும்புவான். அது விரைவாகவும், முழுமையாகவும் பரவும்.
சமூகத்தைப் பற்றி எல்லாம் தெரிந்துகொள்வதால், அதைப் பற்றிய விழிப்புணர்வு ஒருவருக்கு இருக்கிறது.
எந்த எண்ணமும் கெட்ட எண்ணமே; மற்றவரைப் பற்றி தெரிந்து கொண்டிருக்கிறோம் என்றால் அவர்களைப் பற்றிய மோசமான விஷயங்களை தெரிந்து கொண்டிருக்கிறோம் என்று அர்த்தமாகிறது.
மோசமான செய்தியை விரும்பினால் அது உடனடியாகப் பரவும்.
முக்கியஸ்தர்களைப் பற்றி மனிதன் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள விரும்புகிறான்.
முக்கியஸ்தர்களைப் பற்றி அறிந்துகொள்வது சமூகத்தில் உயருவதற்காக.
செய்திகளை அறிந்துகொள்ளும் பொழுது முக்கியமாக அதைப்பற்றி வெளியில் பேசும்பொழுது, மனிதன் சுறுசுறுப்பாக இருப்பதைப் போல் உணருகிறான்.
நெதர்பீல்டில் நடந்த உரையாடல் சமூக உற்சாகத்தின் அடையாளமாக இருந்தது.
அந்த உரையாடலின் தன்மை டார்சி மற்றும் பிங்கிலியின் வாழ்க்கைத் தரத்தை வெளிப்படுத்துகிறது.
சமூகம் கூட்டாக சேர்ந்த ஒரு அமைப்பாகவும் விளங்குகிறது, தனி நபரிலும் உள்ளது.
இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து செயல்படுவது சமூக வாழ்வாக மாறுகிறது.
ஜேனும் எலிசபெத்தும் அவரவர்களுடைய பழக்கப்படி வாழ்கிறார்கள்.
பாசமிக்க இந்த இரு சகோதரிகளிடம் எந்த வித கருத்துப் பரிமாற்றமும் இல்லை.
ஜேன் அமைதியாக சமூகம் அவளுக்கு பதிலளிக்கும்படி நடந்து கொள்கிறாள்.
அதே சமூகத்திலிருந்து எலிசபெத் தன்னுடைய பதிலை வரவழைக்கிறாள்.
இருவரும் சந்தித்தோ, மோதிக் கொண்டோ, அல்லது ஒருங்கிணைந்தோ பிறகு தீர்மானிக்கின்றனர்.
இக்கதையில் தீர்மானத்தை நாம் பார்க்கிறோம்.
சமூக வாழ்வு, தனி மனித வாழ்வு, உயர்ந்த சமூக வாழ்க்கை மற்றும் உயர்ந்த தனி மனித வாழ்க்கையை உருவாக்க அவை ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்படுவதே சமூகப் பரிணாமத்தின் தத்துவமாகும்.

"*How unfortunate that you should have used such very strong expressions in speaking of Wickham to Mr. Darcy, for now they do appear wholly undeserved.*"
"விக்காமைப்பற்றி மிகவும் உணர்ச்சிவசப்பட்டு அவனைப்பற்றி டார்சியிடம் பேசியது எவ்வளவு துரதிர்ஷ்டம், ஏனெனில் அவையாவும் இப்பொழுது முற்றிலும் அவசியமில்லை என்றாகிவிட்டது."

78. "How unfortunate you should use those strong expressions in favour of Wickham" – Jane.
Jane's entire response is from the point of view that they should not be considered wrong.
Elizabeth draws great support from meeting Jane after having lost her bearings.
The proposal was a great event of her life totally upsetting to her being.
Elizabeth had no one else to confide in.
Her disillusionment of Wickham had dismembered her totally.
All these are non-existent, non-issues to Jane. Public opinion matters to her.
Her mother totally disregards public opinion. She is a law unto herself.
Her father, for the sake of public opinion, retired into the library.
Jane has retired into her inner sanctum.
Jane does not see Elizabeth is like a rudderless boat.
Psychologically Man has developed microscopic vision.
Through the microscope you cannot see beyond the infinitesimal.
He has to move his eyes from that instrument and look at the wide world.
It never occurs to him.
Man, who has this knowledge, again looks at the world through the microscope.
Having learnt a great new lesson, he again repeats his old way.
It never occurs to him that knowing and doing are different.
The issue is to make the soul view a sensational knowledge.
The vast advantages of learning by original thinking outside the educational system never present themselves to a Ph.D. or his professor.
Universities can create degree holders, not geniuses.
The system organizes the knowledge and he sees the enormous storehouse of important knowledge.
It does not occur to him that knowledge lies in organizing the observation.

Human Mind, by direct observation, creates a deeper centre of vision around which the whole knowledge is originally organized by a person.
Such a Man is a website compared to the graduate who is a book.
Knowledge is only one part of the being. Even living is wider than knowledge.
His being is the being of the universe and the transcendent.
He limits it to a degree.
“விக்காமை ஆதரித்து நீ அவ்வளவு கடுமையாகப் பேசியது எவ்வளவு துரதிர்ஷ்டமானது” என்று ஜேன் கூறுகிறாள்.
அவை எதுவும் தவறாகக் கருதப்படக் கூடாது என்ற கோணத்திலேயே ஜேனுடைய முழு பதிலும் இருந்தது.
தான் இருக்கும் நிலையைப் பற்றி புரியாதிருந்த எலிசபெத், ஜேனுடைய சந்திப்பிலிருந்து பெரிய ஆதரவைப் பெற்றாள்.
திருமண வேண்டுகோள் அவளது வாழ்க்கையில், அவளுடைய ஜீவனை முழுமையாகப் பாதித்த ஒரு பெரிய நிகழ்வாகும்.
பகிர்ந்துகொள்ள எலிசபெத்திற்கு யாரும் இல்லை.
விக்காமைப் பற்றி அவளுக்குக் கிடைத்த தெளிவு அவளை முழுமையாகத் துண்டாக்கியது.
இவை எல்லாம் ஜேனுக்கு ஒரு விஷயமே அல்ல. மற்றவர்களின் அபிப்பிராயமே அவளுக்கு முக்கியம்.
மற்றவர்களின் அபிப்பிராயத்தை அவளது தாயார் மதிப்பதே கிடையாது. அவளுக்கு தான் வைத்ததுதான் சட்டம்.
அவளுடைய தந்தை மற்றவர்களின் அபிப்பிராயத்தின் பொருட்டு நூலகத்தில் தஞ்சம் புகல்கிறார்.
ஜேன் தனக்குள்ளேயே புதைந்து இருக்கிறாள்.
ஜேன் எலிசபெத்தை அறிந்து கொள்ளாதது, துடுப்பு இல்லாத படகு போல் காணப்படுகிறது.
மனத்தளவில் மனிதன் நுண்ணிய பார்வையை வளர்த்துக் கொண்டுள்ளான்.
மிகச் சிறியதையும் தாண்டி மைக்ராஸ்கோப் மூலம் நாம் எதையும் பார்க்க முடியாது.
அந்தக் கருவியிலிருந்து அவன் தன் பார்வையை அகற்றி, அகண்ட உலகத்தைப் பார்க்க வேண்டும்.
அந்த எண்ணமே அவனுக்கு எழுவதில்லை.
இந்த ஞானம் இருக்கும் மனிதனும், மீண்டும் மைக்ராஸ்கோப் மூலம்தான் உலகத்தைப் பார்க்கிறான்.
சிறந்த புதிய பாடத்தைக் கற்றுக் கொண்ட பிறகும், அவன் தன்னுடைய பழைய வழியையே தொடருகிறான்.
அறிந்துகொள்வதும், அதைச் செயற்படுத்துவதும் வெவ்வேறானவை என அவனுக்குப் புரிவதே இல்லை.
புலனறிவுப் பார்வை ஆன்மாவுக்கு வேண்டும் என்பதுதான் இங்குள்ள விஷயம்.
சுய சிந்தனையால் கல்வி முறைக்கு அப்பாற்பட்டு கற்பதன் பெரிய நன்மைகள், டாக்டர் பட்டம் வாங்கியவர்களுக்கோ அல்லது அவர்களுடைய பேராசிரியர்களுக்கோ தோன்றுவதே இல்லை.
பல்கலைக் கழகம் பட்டதாரிகளை உருவாக்கும், அறிவாளிகளை உருவாக்காது.
அமைப்பு அறிவை முறைப்படுத்துகிறது, பெரிய அறிவுக் களஞ்சியத்தையே அவன் பார்க்கிறான்.
நாம் கவனிப்பதை எல்லாம் சரியாக முறைப்படுத்திக் கொள்வதில்தான் அறிவு அடங்கியுள்ளது என அவனுக்குத் தோன்றுவதில்லை.
மனித மனம் நேரடியானக் கண்காணிப்பிலிருந்து பார்வையின் ஆழமான மையத்தை உருவாக்குகிறது, ஒரு நபரால் ஆரம்பத்திலேயே முறைப்படுத்தப்பட்டுள்ள முழுமையான ஞானம் இதைச் சுற்றி உள்ளது.
இது போன்ற ஒரு மனிதன் இணைய தளத்திற்கு சமமாவான், பட்டம் பெற்றவன் ஒரு புத்தகத்தைப் போல் விளங்குவான்.
ஜீவனின் ஒரு அங்கம்தான் அறிவு. வாழ்க்கை அறிவைவிட விசாலமானது.
அவனது ஜீவன் பிரபஞ்சம் மற்றும் பிரம்மத்தின் ஜீவனாகும்.
அவன் அதை ஒரு அளவுக்குள் வரையறைப்படுத்துகிறான்.

"*Certainly. But the misfortune of speaking with bitterness is a most natural consequence of the prejudices I had been encouraging. There is one point on which I want your advice. I want to be told whether I ought, or ought not, to make our acquaintance in general understand Wickham's character.*"
“நிச்சயமாக. ஆனால் கடுமையாகப் பேசுவது என்பது நான் வளர்த்துவிட்ட என்னுடைய தவறான அபிப்பிராயத்தின் பின்விளைவுதான். ஆனால் ஒரு விஷயத்தில் எனக்கு உன்னுடைய அறிவுரை தேவை. நமக்குத் தெரிந்தவர்களிடம் விக்காமின் நடத்தையைப்பற்றி சொல்ல வேண்டுமா, வேண்டாமா”.

79. Whether one should expose a bad character like Wickham is a broad question. Here we see the girls have refrained from exposing him out of feminine tenderness for falsehood. One gets the result for his attitude.
விக்காமைப் போன்ற மோசமானவனை ஒருவர் வெளிப்படுத்த வேண்டுமா என்பது ஒரு பெரிய கேள்வி. பொய்மையிடம் இருக்கும் பெண்மையின் மென்மையான உணர்வுகளால் பெண்கள் அவன் வெளிப்படுவதை தவிர்க்க விரும்புவதை நாம் இங்கு பார்க்கிறோம். ஒருவர் தன் மனோபாவத்திற்கான பலன்களைப் பெறுகிறார்.

80. "It is the most natural consequences of the prejudices I have been encouraging".
No greater self-awareness can be expected of anyone than this.
Her speaking to Jane gives her a great relief in her nerves.
Speaking out gives relief; to the hearer news.
Elizabeth has not spoken out several other pieces of information.
Spoken or not, news that intimately concerns them gets communicated.
Jane lost her natural enthusiasm because Darcy had spoiled her chances.
Darcy's role in marriage came to Elizabeth as Lydia's leaking in words.
Elizabeth's consent came to Darcy as a sensation felt in him.
Wickham's mercenary nature came to her as an oral advice.
Every piece of news travels; those who have the instruments pick it up.
Mother saw the Chinese in Calcutta.
Wife and fortune came to Dr. Thorne through Mary to whom he had brought life and fortune.
More than taking it as a moral reward, one can see it as a law in operation.
Charlotte's opening came to her directly from Elizabeth as personal persuasion.
Mr. Bennet's relief came to him through his daughter and her lover. At his end he received it through the Gardiners.
Darcy received Elizabeth's decision as a sensation as he worked on his own sensation.
As Elizabeth wanted to hide the news from Darcy, it came to her out of the mouth of Lydia as 'Darcy'.
Charlotte prevented Collins from disclosing the engagement, told her directly because Elizabeth 'offered' Collins directly to Charlotte.
Elizabeth owns to Jane they were prejudices and she was encouraging them.
It was the colonel who told her about Darcy's triumph with a friend as she was liked by him during his stay there and something wanted to serve her cause intensely.
When Darcy told the colonel about a friend's escape he could not have foreseen that the colonel would meet the one person to whom that news mattered and also tell her on the morning of his proposal. As people move, news travels, the study of which will of course be fascinating.
"இது, நான் வளர்த்து விட்ட தவறான அபிப்பிராயத்தின் மிகவும் இயற்கையான பின்விளைவுகள்தான்".
வேறு யாரிடமிருந்தும் இதைவிட உயர்ந்த சுய தெளிவினை எதிர்பார்க்க முடியாது.
ஜேனுடன் பேசியது அவளுக்கு பெரிய நிம்மதியை அவளுடைய உணர்வுகளில் அளித்தது.
கூறிவிடுவது நிம்மதியை அளிக்கிறது, கேட்பவருக்கு அது செய்தி.
மற்ற பல விஷயங்களைப் பற்றி எலிசபெத் எதுவும் பேசவில்லை.
கூறினாலும் கூறாவிட்டாலும் அவர்களைப் பற்றிய அந்தரங்கமான விஷயம் எவ்வாறாவது தெரிவிக்கப்பட்டு விடும்.
டார்சி அவளுடைய வாய்ப்புகளைக் கெடுத்து விட்டதால் ஜேன் தன்னுடைய இயற்கையான உற்சாகத்தை இழந்தாள்.
லிடியா தன்னை அறியாமல் விஷயத்தை வெளியிட்டு விடுவதால், திருமணத்தில் டார்சியின் பங்கை எலிசபெத் அறிந்து கொள்கிறாள்.
எலிசபெத்தின் சம்மதத்தை டார்சி உணர்வுபூர்வமாக உணர்ந்தான்.
விக்காமுடைய ஆதாய மனப்பான்மை அவளுக்கு அறிவுரை வழங்கும் ரூபத்தில் வந்தது.
எல்லா விதமான செய்தியும் பரவிக் கொண்டே இருக்கும். யாரிடம் அதை பெற்றுக்கொள்ளும் தன்மை உள்ளதோ அவர்கள் அதனைப் பெற்றுக்கொள்வார்கள்.
கல்கத்தாவில் அன்னை சீனர்களைப் பார்த்தார்.
வாழ்க்கையையும் அதிர்ஷ்டத்தையும் அளித்த டாக்டர் தார்னுக்கு, மேரி மனைவியையும் அதிர்ஷ்டத்தையும் அளித்தாள்.
தார்மீகப் பரிசாக அதைப் எடுத்துக்கொள்வதைக் காட்டிலும், அது ஒரு சட்டமாக செயல்படுவதை ஒருவர் பார்க்கலாம்.
சுய தூண்டுதல்போல் ஷார்லெட்டிற்கு ஏற்பட்ட விழிப்புணர்ச்சி எலிசபெத்திடமிருந்து நேரடியாக வந்தது.
திரு பென்னட்டுக்கு அவருடைய மகள் மூலமும் அவளுடைய காதலன் மூலமும் நிம்மதி கிடைத்தது. இறுதியில் கார்டினர் தம்பதிகள் மூலம் கிடைத்தது.
அவன் தனது உணர்வுகளை சீரமைத்துக் கொண்டிருந்த சமயத்தில் எலிசபெத்தின் முடிவை ஒரு உணர்வாகப் பெற்றுக்கொண்டான்.
டார்சியிடமிருந்து எலிசபெத் செய்தியினை மறைக்க நினைத்தாள், லிடியாவின் வாயிலிலிருந்து "டார்சி" எனும் சொல் அவளை வந்தடைந்தது.
ஷார்லெட் தங்களது திருமண உறுதியை வெளியிடுவதற்கு காலின்ஸை தடுத்தாள், எலிசபெத் நேரடியாக காலின்ஸை அவளுக்கு அளித்ததால் அவளே நேரடியாகத் தெரிவித்தாள்.

அவை தன்னுடைய தவறான அபிப்பிராயங்கள் என்றும் அவற்றை தானே வளர்த்துக் கொண்டதாகவும் எலிசபெத் ஜேனிடம் ஒத்துக் கொள்கிறாள்.
அவளை விரும்பிய கர்னல், ஒரு நண்பனிடம் டார்சிக்கு கிடைத்த வெற்றியைப் பற்றி அங்கு தங்கியிருந்த பொழுது கூறியது, அவளுக்கு ஆதரவாக ஏதோ ஒன்று தீவிரமாக உதவி செய்ய விரும்பியது தெரிகிறது.
டார்சி தன்னுடைய நண்பன் தப்பித்துக் கொண்டதைப் பற்றி கர்னலிடம் கூறும் பொழுது, பின்னர் ஒரு நாள் அதை சம்பந்தப்படவரிடமே அவன் தெரிவிப்பான், அதுவும் திருமண பேச்சை ஆரம்பிக்கும் அன்று காலை தெரிவிப்பான் என துளியும் எதிர்பார்த்திருக்க மாட்டான். மனிதர்கள் நகரும்பொழுது செய்தியும் பயணிக்கிறது. இதனுடைய ஆராய்ச்சி வியப்புக்குரியதாக இருக்கும்.

81. "whether I ought or ought not to make our general acquaintance understand the character of Wickham's character".
This is a mild reference to Wickham's 'character' that shows her feelings towards him.
Life acts from outside to compel the Man to restrain himself from inside.
He who acts rightly from inside will never be compelled from outside.
Man in his uncreative acts acts in line with society or life.
When he acts like that we say life is smooth as it is routine.
Can we see the right service that Mrs. Bennet, Wickham, and Lydia do?
One brings her husband out of his indolence.
The other helps Elizabeth overcome her vital attraction.
Lydia announces to the world that she could take care of herself as she pleases.
A prosperous nation provides for all the material comfort of her people.
An affectionate family takes care of all the good emotions of its members.
Psychological growth is sought after by a few individuals.
The Spiritual Quest is for the rare few.
These may be taken as grades of human growth.
The Bennet family, though prosperous, had no material foundation.
Whether affection is in abundance or not, all members were cheerful.
The two elders who sought psychological growth sought it in the society in the context of marriage.
Both had sufficient potential strength though covered with certain deficiencies.
Both insisted on their insufficiencies and life from outside compelled them.
Mr. Bennet did not seek any growth, but was isolated by the storm of energy that swept his household.
Mary seemed to be a passive observer trying to understand from her readings what was happening to her family in Meryton.
Sri Aurobindo said if a Force is sent to a Westerner he receives and acts using it while an Indian receives it as one in a coma who gets up, dances and goes back into the coma. Darcy acts as a Westerner.
Mrs. Bennet acts as an Indian while all the others are pleasant victims of the Force.
"நமக்குத் தெரிந்தவர்களிடம் விக்காமுடைய குணத்தைப் பற்றி நான் தெரியப்படுத்த வேண்டுமா அல்லது வேண்டாமா."
விக்காமின் குணாதிசயத்திற்கு இந்த ஒரு மிதமான குறிப்பு, அவன்பால் இருக்கும் அவளுடைய உணர்வுகளைக் காட்டுகிறது.
மனிதன் தனக்குள் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக வாழ்க்கை வெளியிலிருந்து செயல்படுகிறது.
உள்ளிருந்து சரியாக செயலாற்றுபவன், வெளியிலிருந்து கட்டாயப்படுத்தப்பட மாட்டான்.
மனிதன் தன்னுடைய படைப்பாற்றல் அற்ற, திறன் அற்ற செயல்களில், சமூகத்தையோ வாழ்வையோ ஒத்து செயல்படுவான்.
அதைப்போல் செயல்படும்போது, வாழ்வு வழக்கம்போல் இருப்பதால் சீராக இருப்பதாக நாம் கூறுகிறோம்.
திருமதி பென்னெட், விக்காம் மற்றும் லிடியா செய்யும் சரியான சேவையை நாம் காண முடியுமா?
ஒருவர் தன் கணவனை சோம்பேறித்தனத்திலிருந்து வெளியே கொண்டு வருகிறாள்.
இன்னொருவர், எலிசபெத்தை அவளுடைய உணர்வின் வசீகரத்திலிருந்து வெளி வருவதற்கு உதவி புரிகிறார்.
தான் விரும்பும்படி தன்னை கவனித்துக்கொள்ள முடியும் என்று லிடியா உலகுக்கு அறிவிக்கிறாள்.
ஒரு வளமான தேசம் தன் மக்களுக்கு பொருள்ரீதியான அனைத்து சௌகரியங்களையும் அளிக்கிறது.
ஒரு அன்பு நிறைந்த குடும்பம், அதனுடைய அங்கத்தினர்களின் நல்ல உணர்வுகளைப் போற்றிப் பாதுகாக்கும்.
மனரீதியான வளர்ச்சியை சிலர் நாடுகின்றனர்.
அபூர்வமான சிலரிடமே ஆன்மீகத் தேடல் உள்ளது.
இவற்றை மனித வளர்ச்சியின் நிலைகளாக எடுத்துக்கொள்ளலாம்.
பென்னட் குடும்பம் செல்வச் செழிப்போடு இருந்தாலும் அதனிடம் பொருள்ரீதியான அடிப்படை ஆதாரம் இல்லை.
அன்பு நிறைவாக இருந்ததோ இல்லையோ, குடும்பத்தில் அனைவரும் கலகலப்பாக இருந்தனர்.

மனோரீதியான வளர்ச்சியை நாடிய இரண்டு மூத்தவர்களும் திருமணத்தின் அடிப்படையில் அதை சமூகத்தில் நாடினார்கள்.
இருவரிடமும் குறிப்பிட்ட சில குறைகள் இருந்தாலும், போதுமான வலிமை வித்தாக இருந்தது.
அவர்களுடைய குறைகளை இருவருமே வலியுறுத்திக் கொண்டனர், வெளியிலிருந்து வாழ்க்கை அவர்களை வற்புறுத்தியது.
எந்த ஒரு வளர்ச்சியையும் திரு பென்னட் நாடவில்லை, தனது வீட்டில் வீசிய சக்தியின் சூறாவளியால் அவர் தனிமைப்படுத்தப்பட்டார்.
மேரி எல்லாவற்றையும் அமைதியாக கவனித்துக் கொண்டிருந்தாள், தன்னுடைய கவனத்தினால் மெரிடனில் தன் குடும்பத்தில் நடப்பனவற்றை புரிந்துகொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தாள்.
ஒரு மேற்கத்தியருக்கு சக்தியை அனுப்பினால் அவர் அதனைப் பெற்றுக் கொண்டு, அதனை பயன்படுத்திக் கொண்டு செயல்படுவார், இதுவே ஒரு இந்தியன், நினைவற்று படுத்திருப்பவர், எழுந்து நடனமாடி விட்டு மறுபடியும் நினைவில்லா நிலைக்கு செல்வதுபோல் பெற்றுக் கொள்வார் என ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.
டார்சி மேற்கத்திய மனிதன்போல் செயல்படுகிறான்.
திருமதி பென்னட் ஒரு இந்தியப் பெண்மணிபோல் செயல்படுகிறாள், மற்ற யாவரும் அந்த சக்திக்கு சந்தோஷமாக பலியாகின்றனர்.

Miss Bennet paused a little and then replied, "Surely there can be no occasion for exposing him so dreadfully. What is your own opinion?"
மிஸ். பென்னட் சிறிது நேர இடைவெளிக்கு பிறகு, “இவ்வளவு கடுமையாக அவனை காட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. உன்னுடைய சொந்த அபிப்பிராயம் என்ன?”என்று பதிலளிக்கிறாள்.

82. Jane as well as Elizabeth easily discover reasons not to expose Wickham.
விக்காமை வெளிப்படுத்தக் கூடாது என்பதற்கு ஜேனும், எலிசபெத்தும் மிகச் சுலபமாக காரணங்களைக் கண்டு பிடிக்கின்றனர்.
83. Under no circumstance will they expose him.
எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் அவனை வெளிப்படுத்த மாட்டார்கள்.
84. “There is no occasion for exposing dreadfully”.
An occasion is one when a Man takes an initiative to act.
Society in the name of duty offers Men various occasions.
Need is a physical occasion.
Interest provides an occasion for the vital to act.
Possibility of a new thought provides the Mind an occasion to think which is its action.
A provoking event is an occasion for the temperament to react.
A ripe national climate is the occasion for a leader to offer to lead others.
A business opportunity is an inviting occasion for an entrepreneur.
One who loves to challenge himself at higher and higher levels loves to act as a pioneer when society grows to create such an occasion.
Every known solution failing is the occasion for resourcefulness.
Planning a career is the occasion to exercise one’s forethought.
Disagreement is an occasion to fashion better ways of harmony.
Differences in marriage are an occasion to be led to romance.
Man meeting an event, an occasion is created.
Foreign invasion is an occasion to inspire patriotism.
Difficulties create out of routine life occasions to forge a more intimate relationship.
Every act is an occasion to generate a corresponding emotion.
Every emotion is an eminent occasion to think afresh.
Occasions are created inside and expressed outside.
One’s devotion becomes proper when every small occasion is made to take him closer to Mother.
In Nature occasions arise for movement.
In the Being occasions arise for Non-movement.
There is no occasion when one can fail to practise self-giving.
Time expressing in space is a human occasion.
Time maturing into simultaneous Time is a divine occasion.
He calls this occasion the Hour of God.
“கடுமையாகக் காட்டிக் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பம் என்று ஒன்றுமில்லை.”
மனிதன் செயல்படுவதற்கு எடுக்கும் தன்முனைப்பே ஒரு சந்தர்ப்பம் ஆகும்.
கடமை என்கிற பெயரில் சமூகம் பல சந்தர்ப்பங்களை மனிதனுக்கு அளிக்கிறது.

தேவை என்பது ஜட நிலையில் எழும் சந்தர்ப்பம்.
ஆர்வம், உணர்வு செயல்படுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது.
புதிய எண்ணம் எழுமேயானால், அது மனத்திற்கு சிந்திக்க ஒரு சந்தர்ப்பம் அளிக்கிறது. இதுதான் அதன் செயல்பாடு.
மன உணர்வுகள் எதிர்வினையாற்ற கோபத்தைக் கிளப்பும் ஒரு நிகழ்ச்சி, ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது.
நாட்டின் பக்குவப்பட்ட நிலைமை ஒரு தலைவருக்கு மற்றவர்களை தலைமை தாங்கி அழைத்துச் செல்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது.
சுய தொழில் செய்யும் ஆர்வம் உடையவருக்கு வியாபார வாய்ப்பு ஒரு சந்தர்ப்பமாக அமைகிறது.
மேலும் மேலும் உயர்ந்த நிலைகளில் சவாலை சந்திக்க விரும்பும் ஒருவர், சமூகம் அது போன்ற ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்க வளரும்பொழுது முன்னோடியாக இருக்க விரும்புவார்.
அறிந்த ஒவ்வொரு தீர்வும் தோற்பது, சமயோஜிதத்திற்கு ஒரு சந்தர்ப்பம்.
ஒருவரது முன்யோசனையை செயல்படுத்த எதிர்காலத்தை திட்டமிடுவது ஒரு சந்தர்ப்பமாக அமையும்.
சுமுகத்தை மேலும் சிறப்பான வழியில் வகைப்படுத்த உடன்பாடின்மையே ஒரு சந்தர்ப்பமாகும்.
திருமணத்தில் கருத்து வேறுபாடு காதலில் முடியும் சந்தர்ப்பமாக அமையும்.
ஒரு நிகழ்ச்சியை மனிதன் சந்திப்பது ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்குகிறது.
தேசபக்தியை தூண்ட அன்னியர் படையெடுப்பு சந்தர்ப்பமாக அமைகிறது.
சாதாரண வாழ்க்கையில் எழும் கஷ்டங்கள் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாகும்.
ஒவ்வொரு செயலும் அதற்கு ஈடான உணர்வை உற்பத்தி செய்யும் ஒரு சந்தர்ப்பமாகும்.
ஒவ்வொரு உணர்ச்சியும் புதிதாக சிந்திப்பதற்குரிய முக்கிய சந்தர்ப்பமாகும்.
சந்தர்ப்பங்கள் அகத்தில் உருவாகி புறத்தில் வெளிப்படுத்தப்படுகின்றன.
ஒவ்வொரு சிறிய சந்தர்ப்பமும் ஒருவரை அன்னையிடம் மேலும் அருகாமைக்கு அழைத்துச் செல்வதாக அமைக்கப்பட்டால், அவரது பக்தி சரியானதாக இருக்கும்.
இயற்கையில் இயக்கத்திற்காக சந்தர்ப்பங்கள் எழுகின்றன.
ஜீவனில் சந்தர்ப்பங்கள் இயங்காமைக்கு எழுகின்றன
எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒருவர் சுய அர்ப்பணத்தை பயிற்சி செய்யலாம்.
இடத்தில் காலம் வெளிப்படுவது மனித சந்தர்ப்பமாகும்.
நேரம் மூன்றாம் நிலை காலமாக முதிர்ச்சி அடைவது தெய்வீகச் சந்தர்ப்பமாகும்.
இந்தச் சந்தர்ப்பத்தை பகவான் இறைவன் வரும் தருணம் என்கிறார்.

"*That it ought not to be attempted. Mr. Darcy has not authorised me to make his communication public. On the contrary, every particular relative to his sister was meant to be kept as much as possible to myself; and if I endeavour to undeceive people as to the rest of his conduct, who will believe me? The general prejudice against Mr. Darcy is so violent, that it would be the death of half the good people in Meryton to attempt to place him in an amiable light. I am not equal to it. Wickham will soon be gone; and therefore it will not signify to anybody here what he really is. Some time hence it will be all found out, and then we may laugh at their stupidity in not knowing it before. At present I will say nothing about it.*"
"காட்டிக் கொடுக்க முயற்சி செய்ய வேண்டாம் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். டார்சி, தான் கூறியதை வெளியில் எல்லோருக்கும் சொல்வதற்கு என்னை நியமிக்கவில்லை, மாறாகத் தங்கையைப்பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும், எனக்குள்ளேயே வைத்திருக்கும்படி கேட்டுக் கொண்டான். அவனுடைய மற்ற நடத்தைகளைப் பற்றி எல்லோரிடமும் உண்மையை சொல்ல முயற்சி செய்தால் யார் என்னை நம்புவார்கள்? டார்சியைப்பற்றி எல்லோரும் அவ்வளவு மோசமாக நினைத்துக் கொண்டிருப்பதால் அவனை நல்லவனாக படம் பிடித்துக் காண்பிக்க முயன்றால், அது மெரிடனில் உள்ள நல்லவர்கள் பாதி பேருக்கு பலத்த அடியாக இருக்கும். நான் அதற்குத் தயாராக இல்லை. விக்காம் விரைவில் இங்கிருந்து சென்று விடுவான். அவன் யாராக இருந்தால் என்ன, இங்குள்ள ஒருவருக்கும் அது ஒரு விஷயமாகவே இருக்காது. என்றைக்கேனும் ஒருநாள் தெரிய வந்தால், இது முன்பே தெரியாமல் போனதற்கு நம்முடைய முட்டாள்தனத்தைக் கண்டு நாம் ஒரு வேளை எள்ளி நகையாடலாம். தற்பொழுது அதைப்பற்றி நான் எதுவும் கூறப் போவதில்லை."

85. Liking, whether of a man or woman, leader or boss or friend stands in the way of public exposure.
ஆணோ அல்லது பெண்ணோ, தலைவரோ அல்லது முதலாளியோ அல்லது நண்பனோ, இவர்களை வெளிப்படையாக வெளிப்படுத்துவதற்கு விருப்பம் தடையாக இருக்கும்.
86. Those who study human nature can examine one placed in such a position. On any showing, he will end up with the idea of not exposing.
மனித சுபாவத்தை ஆராய்ச்சி செய்பவர், அது போன்ற ஒரு நிலையில் இருக்கும் ஒருவரை ஆராயலாம். ஏதாவது வெளியே தெரியவந்தால், அதை வெளிப்படுத்த வேண்டாம் என்ற எண்ணத்திற்கு அவர் வருவார்.
87. Consider the context of self-exposure.
சுய வெளிப்பாட்டிற்குரிய விஷயத்தை கருத வேண்டும்.
88. No one will consider it.

எவரும் அதைக் கருத மாட்டார்.

89. If anyone does consider it, he will end up exposing another.
யாரேனும் ஒருவர் அதை கருத்தில் எடுத்துக் கொண்டால், அவர் இன்னொருவரை வெளிப்படுத்துவதில் முடிப்பார்.
90. Self-criticism, past consecration, reversal of oneself are not elements of human nature.
சுய விமரிசனம், கடந்தகால சமர்ப்பணம், ஒருவரது தலைகீழ் மாற்றம், இவை யாவும் மனித சுபாவத்தின் கூறுகள் அல்ல.
91. One like Wickham will not be exposed till the entire tide turns against him.
மொத்த அலையும் ஒருவனுக்கு எதிராக அடித்தால்தான் விக்காம் போல் ஒருவனை வெளிப்படுத்தமுடியும்.
92. Even in Meryton very few people would remember his past now that he was married.
தற்பொழுது அவனுக்குத் திருமணம் முடிந்து விட்டபடியால், அவனுடைய கடந்த காலத்தைப் பற்றி மிகச் சிலரே ஞாபகம் வைத்திருப்பர்.
93. Except those who were personally aggrieved, no one would speak out.
அவனால் இடர்பட்டவர்களைத் தவிர, வேறு எவரும் அவனைப் பற்றி பேச மாட்டார்கள்.
94. Between men and women, whether the scoundrel is a man or woman, even the violated woman will not make a grievance of it.
ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே, அயோக்கியன் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அவமானம் அடைந்த பெண்கூட எந்த வித வருத்தத்தையும் தெரிவிக்க மாட்டாள்.
95. 'Greek Tragedy' is a Holmes story.
'கிரேக்க பெருந்துயரம்' ஹோம்ஸ்-ன் ஒரு கதை ஆகும்.
96. A man murders a brother of his love.
தன்னுடைய காதலியின் சகோதரனை ஒருவன் கொலை செய்கிறான்.
97. After the murder, the woman says she would do anything for him.
கொலைக்குப் பிறகு அவனுக்காக எதையும் செய்வேன் என்று அவள் கூறுகிறாள்.
98. Liking does not hurt.
விருப்பம் துன்புறுத்துவதில்லை.
99. It is an occasion to serve one's own falsehood.
ஒருவர் தன்னுடைய பொய்மைக்கு துணை போக அது ஒரு சந்தர்ப்பம்.
100. "Mr. Darcy has not authorized me to make the information public".
The resourcefulness of Man in shifting his responsibility is great.
He is unrivalled in presenting his desire as a duty to family or the country.
To rope in another uncalled for to implement his aim Man is capable.
In the literature of the earlier centuries, politicians, thinkers, writers, clergymen, or Man in an untenable situation invoked God unceremoniously.
There is a psychological truth in it.
There is a well marked hypocrisy in it.
When Man exhausts his capacities, beyond that whatever exists is his God.
The hypocrisy is Man loves to replace God, if the circumstances permit.
This is how he positively and negatively expresses the idea that the unknowable formulates to human consciousness.
The instinctive action of Man is egoistic, selfish, subconscious.
His rational action is belief in the past experience – Karma.
He who acts outside the past experience still relies on all his capacities. He has nothing to rely on.
Weaning himself from the subconscious, past experience, accumulated capacities he moves to conscious action, grace and super grace.
Becoming conscious, one is alert, assures himself of all kinds of protection from this world, partly from the other worlds.
Not relying on past experience he is free from karma.
The Westerner's freedom from karma arises from this attitude.
The Indian not only lets the past experience rule him, he believes in it religiously as well as spiritually.
Giving up the past experience does not mean not relying on the past accumulated capacities.
To do that one must enter the virginally creative Moment.
The Will in the accumulated capacities possessed subconsciously must give way to the divine will.
It is shraddha, Faith, the fourth stage of dynamism that does it.
Then the Divine acts through him.
"தகவலை மற்றவர்களிடம் சொல்வதற்கு திரு டார்சி எனக்கு அனுமதி தரவில்லை."

பொறுப்பைத் தட்டிக் கழிப்பதில் மனிதன் கெட்டிக்காரன்.
அவனுடைய ஆசையை, குடும்பத்திற்கோ அல்லது நாட்டுக்கோ கடமைபோல் காட்டிக்கொள்வதில் அவன் நிகரற்றவன்.
மனிதன் தன்னுடைய இலட்சியத்தை அமுல்படுத்த இன்னொருவரை தேவை இல்லாமல் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும் திறமையுடையவன்.
முந்தைய நூற்றாண்டுகளின் இலக்கியத்தில், அரசியல்வாதிகள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், பாதிரிமார்கள் அல்லது இக்கட்டான சூழ்நிலைகளில் இருக்கும் மனிதன், ஆகியோர் சம்பிரதாயமற்ற முறையில் கடவுளை வணங்கி வந்தனர்.
இதில் மனரீதியான உண்மை உள்ளது.
அதில் போலித்தனம் மிகத் தெளிவாகத் தெரிகிறது.
மனிதனுடைய திறமைகள் தீர்ந்த பிறகு மீதமிருப்பது அவனது இறைவன் மட்டுமே.
சந்தர்ப்பங்கள் அனுமதித்தால், மனிதனுடைய போலித்தனத்தால் இறைவனுடைய இடத்தை அவன் பிடித்துக் கொண்டு விடுவான்.
பிரம்மம் மனித ஜீவியமாக உருவாவதற்கு ஏற்றார்போல், அவன் எண்ணங்களை நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் இவ்வாறுதான் வெளியிடுவான்.
மனிதனின் உள்ளுணர்வின் செயல்பாடு அகந்தையுள்ளதாகவும், சுயநலமாகவும், ஆழ்மனத்தை சார்ந்ததாகவும் இருக்கும்.
கடந்த கால அனுபவத்தில் அவனுக்கு இருக்கும் நம்பிக்கையே அவனது பகுத்தறிவான செயல்களாகும்---கர்மா.
கடந்த கால அனுபவத்திற்கு அப்பாற்பட்டு செயல்படுபவன், தன்னுடைய திறமைகளையே இன்னமும் நம்புகிறான். அவனுக்கு நம்புவதற்கு எதுவும் கிடையாது. ஆழ்மனம், கடந்த கால அனுபவம், சேர்த்து வைத்திருக்கும் திறமைகள் இவைகளிடமிருந்து விலகிச் சென்று, தன்னினைவோடு செயல்படுவது, அருள், பேரருள் என்ற நிலைகளுக்கு அவன் மாறுகிறான்.
நனவுபூர்வமாக இருப்பவன், முன் ஜாக்கிரதையோடு இருக்கிறான், இந்த உலகத்திலிருந்தும், ஓரளவிற்கு மற்ற உலகங்களிலிருந்தும் தனக்கு எல்லா வித பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்கிறான்.
கடந்த கால அனுபவத்தைச் சார்ந்து இல்லாதிருப்பவன் கர்மத்தின் பிடியிலிருந்து விடுதலை அடைகிறான்.
இந்த மனோபாவத்தின் மூலம்தான் மேற்கத்தியர்கள் கர்மத்தின் பிடியிலிருந்து விடுபடுகிறார்கள்.
இந்தியன் கடந்தகால அனுபவம் தன்னை ஆட்சி புரிய அனுமதிப்பதோடு மட்டுமல்லாமல், அதை மிகவும் சிரத்தையோடு நம்பவும் செய்வான், ஆன்மீகரீதியிலும் நம்பிக்கை கொண்டிருப்பான்.
கடந்த கால அனுபவத்தை நம்பாமலிருப்பது என்பது, சேமித்து வைத்திருக்கும் முந்தைய திறமைகளை சார்ந்து இல்லாமல் இருப்பது என்று அர்த்தமாகாது.
அதைச் செய்வதற்கு ஒருவர் புதிய படைப்பாக்கத் தருணத்தை அடைய வேண்டும்.
ஆழ்மனதில் சேர்ந்திருக்கும் திறமைகளின் விருப்புறுதி, தெய்வத்தின் உறுதிக்கு வழி விட வேண்டும்.
இது தீவிரத்தின் நான்காவது நிலையான நம்பிக்கை, சிரத்தையாகும்.
பிறகு அவன் மூலம் இறைவன் செயல்படுகிறான்.

101. "Every particular relating to his sister should be kept as much as possible to her".

Human nature in its best endeavours to be truthful, compromises the truth, even facts, as it will suit Man's personal convenience.
Elizabeth who withheld so much from Jane should have done so with Georgiana. In speaking it to Jane, she betrayed his trust in her.
He expected total secrecy not as far as possible.
Of course news of Georgiana was not necessary to Jane, except to satisfy her urge to speak out.
Jane had not spoken to Elizabeth the several pieces of news of Darcy that Lydia gave her.
Jane accused Elizabeth of not telling her anything that happened at Pemberley and at Lambton. She called Elizabeth sly on that score.
This context between them suggests Georgiana could have been out of the conversation.
Elizabeth was slightly pleasantly tickled by Wickham's attempt with Georgiana seeing the romantic aura of that adventure.
Her expansive joy arises from the fact that she had imagined herself in the place of Georgiana.
It was such an urge that made her speak it to Jane.
When an elopement spreads wildly, all men who condemn it, disapprove of it, approve of it identify themselves as the hero of the event.
Psychologically an elopement is an occasion for the romance of the entire society.
She never thought for a moment that she should deserve Darcy's confidence in this regard.
It was an unpardonable behaviour on her part.
He was more sincere to her than she was to him.

At this level people have no scruples. Elizabeth is one of them. Only those who exhibit unshakable values at this level qualify to be human.

"அவனுடைய சகோதரியைப் பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும் முடிந்தவரை அவளுக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும்."

மனிதன், தான் உண்மையாக இருக்க வேண்டும் என்று முயற்சி எடுக்கும்பொழுது, தன்னுடைய தேவைக்கேற்ப உண்மைகளை, செய்திகளைகூட சமரசப்படுத்திக் கொள்வான்.

பலவற்றை ஜேனிடமிருந்து மறைத்த எலிசபெத், ஜார்ஜியானாவைப் பற்றிய செய்தியையும் வெளியிடாமல் இருந்திருக்க வேண்டும். ஜேனிடம் அவள் வெளியிடுவதன் மூலம் அவள் மேல் வைத்திருக்கும் அவனது நம்பிக்கைக்கு துரோகம் இழைத்து விடுகிறாள்.

இரகசியத்தை முழுமையாகக் காப்பாற்ற வேண்டும் என்று அவன் எதிர்பார்த்தான், முடிந்தவரை மட்டும் காப்பாற்ற வேண்டும் என்றல்ல.

கூற வேண்டும் என்கிற அவளுடைய உந்துதலை திருப்திப்படுத்துவதற்காக மட்டுமேயன்றி, ஜார்ஜியானாவைப் பற்றிய செய்தி ஜேனுக்கு அவசியமே இல்லை.

டார்சியைப் பற்றி லிடியா தெரிவித்த பல விஷயங்களை ஜேன், எலிசபெத்திடம் கூறவேயில்லை.

பெம்பர்லியிலும், லாம்ப்டனிலும் நடந்த எதைப்பற்றியும் எலிசபெத் தன்னிடம் கூறவேயில்லை என்று ஜேன் குற்றம் சாட்டினாள். அந்த விஷயத்தில் எலிசபெத்தை இரகசியமானவள் என்று ஜேன் அழைக்கிறாள்.

இந்த இடத்தில் அவர்கள் இருவரும் ஜார்ஜியானா விஷயத்தை தொடாமல் இருந்திருக்கலாம்.

ஜார்ஜியானாவுடன் விக்காம் திட்டமிட்ட துணிச்சலான செயலில் இருந்த காதல் சூழலைப் பார்க்கும் எலிசபெத் லேசாக உணர்ச்சிவயப்படுகிறாள்.

ஜார்ஜியானா இடத்தில் தன்னை வைத்து கற்பனை செய்து பார்ப்பதினால் அவளுக்கு அதிக சந்தோஷம் கிடைக்கிறது.

உந்துதலின் தீவிரம் அவளை இதைப் பற்றி ஜேனிடம் பேச வைத்தது.

ஓடிப்போன விஷயம் வேகமாக பரவியபொழுது அதைக் கண்டனமும் ஆட்சேபமும் செய்த எல்லா ஆண்களும், தங்களை அந்நிகழ்ச்சியின் நாயகனாக அடையாளப்படுத்திக்கொள்ளும் பொழுது அதனை ஏற்றுக் கொள்கின்றனர்.

மொத்த சமுதாயத்தின் காதலை வெளிப்படுத்தும் மனோரீதியான ஒரு சந்தர்ப்பமே ஓடிப்போதல் ஆகும்.

இந்த விஷயத்தில் டார்சியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்க வேண்டும் என்று ஒரு வினாடிகூட அவள் நினைக்கவில்லை.

இது அவளுடைய மன்னிக்க முடியாத நடத்தையாகும்.

அவள் அவனிடம் இருந்ததைவிட, அவன் அவளிடம் அதிக உண்மையாக இருந்தான்.

இந்த நிலையில் மனிதர்களுக்கு மனசாட்சி இருப்பதில்லை. எலிசபெத் இவர்களில் ஒருத்தி ஆவாள். இந்த நிலையில் யார் அசைக்க முடியாத பண்புகளை வெளிப்படுத்துகிறார்களோ அவர்களே மனிதர்களாவார்கள்.

102. "It would be the death of half the good people in Meryton if Darcy is placed in a favourable light".

People get what they deserve.

Darcy, this statement declares, was far beyond their level of imagination.

Bingley was readily acceptable as he had no strength of character.

In a weak atmosphere the strength of things that can be mentioned have a limit.

Beyond that limit things will not be considered even in a conversation.

Beyond that limit people fly only in fanciful trips.

It is in terms of power, reward, gift, ambition, goal, etc.

Seventy years ago the grandson of a Municipal manager passed M.A., one of the three M.A.s in the district. The grandfather's ambition was he should become the head officer – Nazar – of the district court. It was a non-gazetted post. It was real to the grandfather as the boy's father was a road maistry on Rs. 12/- p.m. In life he became a college professor when he retired. Public Service, Mother's Darshan made him No. 2 to his Vice-Chancellor in his university.

For the devotees if he deserves anything by his equipment and it is real to his imagination, he will get it.

Of course, his faith can give him the highest position in his own profession which his imagination does not prevent.

Mother cannot give him anything less than world fame in his line, if he can put himself into Her hands.

Should he let Her work on him, it was not worldly rewards he can look for. She could fashion in him capacities instantaneously that She needs for Her work. The world may not know it.

Desert, faith, service, worker, instrument are all left behind when surrender is complete. As long as the sense of instrument is there, it is a bar. What Mother gives or can give cannot be evaluated in terms of worldly life.

Elizabeth is to Darcy such a gift.

"டார்சியை நல்லவனாக படம் பிடித்து காண்பிக்க முயன்றால், மெரிடனில் உள்ள நல்லவர்களில் பாதி பேருக்கு அது பலத்த அடியாக இருக்கும்."

மக்கள் அவர்களுக்குத் தகுதியானதையே பெறுவார்கள்.

டார்சி அவர்களுடைய கற்பனைக்கு மீறியவனாக இருந்தான் என்று இந்த வார்த்தைகள் தெரிவிக்கின்றன.

பிங்கிலியின் ஆளுமைக்கு பலம் இல்லாததால் அவன் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டான்.
பலவீனமான சூழலில், சொல்லக்கூடிய விஷயங்களின் வலிமைக்கு ஒரு வரையறை உள்ளது.
அந்த வரையறைக்கு மேல் அந்த விஷயங்கள் உரையாடலில்கூட இடம் பெறாது.
அந்த வரையறைக்கு மேல் மக்கள் கற்பனையான பயணங்களில் ஈடுபடுவர்.
இது அதிகாரம், சன்மானம், பரிசு, பேராசை, இலக்கு இவற்றைப் பொறுத்தது.
எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நகராட்சி ஊழியரின் பேரன் எம்.ஏ. பாஸ் செய்தான். அந்த ஜில்லாவில் இருந்த மூன்று எம்.ஏ. படித்தவர்களில் அவன் ஒருவனாவான். அவன் ஜில்லா நீதி மன்றத்தில் உயர் அதிகாரியாக வர வேண்டும் என்பது பாட்டனாரின் ஆசை. அது கெஜெட் பதிவு இல்லாத உத்தியோக நிலை. பையனுடைய தகப்பனார் மாதம் பன்னிரெண்டு ரூபாய் சம்பளத்தில் ரோடு மேஸ்திரியாக இருந்ததால், பாட்டனாரின் ஆர்வம் உண்மையாக இருந்தது. வாழ்வு இவரது பேரனை, பதவியிலிருந்து ஓய்வு பெறும்போது, கல்லூரிப் பேராசிரியராக ஆக்கியது. அன்னையின் தரிசனம் அவருக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அடுத்தபடியான நிலையை அளித்தது.
அன்னை அன்பருக்கு ஒரு விஷயத்தில் தகுதி இருந்தால், அது அவரது கற்பனைக்கு உட்பட்டிருந்தால், அது அவருக்குக் கிடைக்கும்.
அவருடைய நம்பிக்கை அவரது கற்பனைக்கு மீறிய அளவில் அவருடைய தொழிலில் மிக உயர்ந்த நிலையை அளிக்கும்.
அன்னையிடம் ஒருவர் தன்னை ஒப்படைத்தால், அவருடைய தொழிலில் அன்னை அவருக்கு உலகப் புகழை அளிப்பார்.
தன்னுள் அன்னையை செயல்பட அனுமதித்தால், உலகளாவிய பரிசுகளை மட்டும் அவர் எதிர்நோக்க வேண்டாம். அன்னையின் பணிகளுக்குத் தேவையான திறன்களை, உடனடியாக அன்னை அவருக்கு அளிப்பார். அது உலகுக்குத் தெரியாமல்கூட இருக்கலாம்.
சரணாகதி முழுமை அடையும்போது கைவிடுதல், நம்பிக்கை, சேவை, தொழிலாளி, உபகரணம் ஆகியவை பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. கருவி எனும் உணர்வு இருக்கும்வரை அது தடையாகிறது. அன்னை தருவதையும் அல்லது அன்னையால் தரக்கூடியதையும், லௌகீக அளவில் கணிக்க முடியாது.
டார்சிக்கு எலிசபெத் அது போன்ற வெகுமதிதான்.

103. "Wickham will soon be gone. Nothing will signify to anybody here".
The commonest symptom that brings the patient to the doctor is not disease, but pain.
Absence of pain for the patient is absence of disease.
This is the policy of an ostrich.
A leading economist talks of the remedies for the crisis as temporary. It does not address the basic cause, he says.
Man takes this attitude as his cure is in the plane of his problem.
Sri Aurobindo calls it secondary causes.
Giving property to children is such. Character deals with the primary roots.
Any solution she conceives does not think of the problem or address it.
How Wickham will be affected is the one angle from which she looks at it.
Moksha, the final release of the soul, into Brahman does not abolish the evil on earth, as it addresses the secondary causes.
Pain they say comes with pleasure. So we are asked to avoid pleasure.
It can give one moksha, not abolish evil.
The primary causes are ego and the inconscience in Nature.
Abolish the ego, seek the soul in Nature, evil will be abolished is the solution of integral yoga.
Containment of terrorists is no lasting solution.
Abolition of poverty is the ultimate solution.
What Elizabeth avoids in the vital plane comes to her in the physical plane. It is inescapable.
Non-violence unleashed violence.
Since 1929, addressing secondary causes has not helped the growing economy.
Domestic happiness cannot be addressed from economy, rights, temperament, etc. as they are all not the essential cause. It is the loyalty to the other and the desire NOT to dominate. At least excellent good manners can serve upto the penultimate point.
Ego is the cause, abolish it totally.
"விக்காம் விரைவில் சென்றுவிடுவான். இங்கு யாருக்கும் எந்த வித முக்கியத்துவமும் இருக்காது".
வியாதி ஒருவரை மருத்துவரிடம் அழைத்து வராது, வலியே அவரை அழைத்து வரும்.
வலி இல்லையெனில், நோய் இல்லை என நோயாளி கருதுவார்.
இது நெருப்புக் கோழியின் கொள்கை ஆகும்.

முன்னணியில் இருக்கும் பொருளாதார நிபுணர் நெருக்கடிக்கான தீர்வுகள் தற்காலிகமானது என்று பேசுகிறார். நெருக்கடிக்கான அடிப்படைக் காரணங்களின்மேல் அவை கவனம் செலுத்துவதில்லை என்கிறார். மனிதன் தனது தீர்வாக எடுத்துக்கொள்ளும் இந்த மனோபாவம், அவனுடைய பிரச்சினையின் நிலையில் இருக்கிறது.

இதை ஸ்ரீ அரவிந்தர் இரண்டாம்பட்ச காரணம் என்று கூறுகிறார்.

குழந்தைகளுக்கு சொத்து கொடுப்பதும் இதைப் போன்றதுதான். நம்முடைய அடிப்படை சுபாவத்தை வைத்துதான் நம்முடைய குணமும் செயல்படுகிறது.

அவள் கருதும் எந்த தீர்வும் பிரச்சினையைப் பற்றி நினைப்பதில்லை, அதில் கவனம் செலுத்துவதும் இல்லை. விக்காம் எவ்வாறு பாதிக்கப்படுவான் என்ற ஒரு கோணத்தில்தான் அவள் அதனைப் பார்க்கிறாள்.

இறுதியாக பிரம்மத்தை, மோக்ஷத்தை அடையும் ஆன்மா, இரண்டாம்பட்சமாக உள்ள காரணங்களை கருத்தில் எடுத்துக்கொள்வதால், அது, உலகத்தில் இருக்கும் தீமையை அழிப்பதில்லை.

இன்பத்துடன் சேர்ந்து துன்பமும் வருகிறது என்று சொல்கிறார்கள். அதனால் நாம் இன்பத்தை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறோம்.

அது ஒருவருக்கு மோக்ஷத்தை தர வல்லது, தீமையை அழிக்காது.

இதற்கு அடிப்படையான காரணங்கள் அகந்தையும், இயற்கையிலுள்ள ஜட இருளுமாகும்.

அகந்தையை அழித்து இயற்கையில் ஆன்மாவை நாடினால், தீமை அழிக்கப்பட்டு விடும் என்பது பூரண யோகத்தின் தீர்வு.

தீவிரவாதிகளை அடக்குவது ஒரு நிரந்தரத் தீர்வு ஆகாது.

வறுமையை ஒழிப்பதே இறுதியான தீர்வாகும்.

உணர்வு நிலையில் எலிசபெத் தவிர்ப்பது, ஜட நிலையில் அவளிடம் எழுகிறது. இது தவிர்க்க முடியாதது.

அஹிம்சை வன்முறையை கட்டவிழ்த்து விட்டது.

1929 முதல் இரண்டாவது பட்சமாக இருக்கும் காரணங்களில் கவனம் செலுத்துவது, வளரும் பொருளாதாரத்திற்கு உதவவில்லை.

அத்தியாவசிய காரணங்களாக இல்லாத பொருளாதாரம், உரிமைகள், மனவுணர்வுகள் இவற்றிலிருந்து குடும்ப சந்தோஷத்தை அணுக முடியாது. மற்றவர்களுக்கு நாம் காண்பிக்கும் விசுவாசமும், மற்றவர்களை ஆதிக்கம் செலுத்தாமல் இருக்கும் மனோபாவமும் சந்தோஷத்தை அளிக்கும். சிறப்பான நல்ல நடத்தை, கடைசி நிலைக்கு முந்தைய நிலைவரை உதவும்.

காரணமாக இருக்கும் அகந்தை முழுமையாக அழிக்கப்பட வேண்டும்.

"*You are quite right. To have his errors made public might ruin him for ever. He is now, perhaps, sorry for what he has done, and anxious to re-establish a character. We must not make him desperate.*"

"நீ சொல்வது சரி. அவனுடைய தவறுகளை வெளியில் சொல்வது அவனுக்கு நிரந்தரமாகக் கெடுதலை விளைவிக்கும். அவன் செய்த தவறுகளுக்கு ஒருவேளை அவன் வருத்தப்பட்டுக் கொண்டிருப்பான், மீண்டும் நல்லவனாக மாற முயற்சி எடுக்கலாம். நாம் அவனை கஷ்டப்படுத்தக் கூடாது".

104. "To have his errors publicly exposed will permanently ruin him".

The one real motive is the solicitude of the girls for Wickham.

Jane wants to spare him ruin. He brings it on the family.

She knew he attempted it on Darcy.

Sympathy for evil naturally strengthens the evil and his one target is one who sympathises as he is vulnerable by his sympathy.

It is not fairness or good behaviour in these girls. It is foolishness of feminine solicitude to masculine attraction.

It is a law that he whom you sympathise with, while he is evil, should ruin you.

Your sympathy relates you to him.

It is your weakness.

It is natural that evil not destroyed should try to act.

In the Guru-sishya relationship these laws are well worked out.

Leading disciples when they become gurus rarely mention the names of their gurus.

There is no human problem that cannot be understood if analysed from selfishness and meanness.

Why does Mary speak outrageous thoughts?

Being a neglected child, that behaviour easily catches the attention of all people.

What matters to her is attention of which she is starved.

It does not matter it is negative attention as long as it is attention.

Man seeks what he has lost in any fashion it is available.

What you refrain from doing due to misplaced or ill-placed sympathy, will be done to you copiously by the same source.

It is the law that the organizing energy organizes it fully.

Energy is a flow. It is not like a stone thrown.
The flow continues, builds itself, and shapes into force, acts as energy or force. Or it organizes itself into power.
Someone should be a victim to the power.
“அவனுடைய தவறுகளை பகிரங்கமாக வெளிப்படுத்துவது, அவனை நிரந்தரமாக அழித்து விடும்”.
விக்காமிற்கு பெண்கள் அளித்த ஆதரவுதான், ஒரு உண்மையான நோக்கமாகும்.
ஜேன், அவன் அழிவதைத் தடுக்க விரும்பினாள். அவன் குடும்பத்திற்கு அழிவை ஏற்படுத்தினான்.
டார்சியிடம் இதனை அவன் திட்டமிட்டான் என அவளுக்குத் தெரியும்.
தீமைக்கு அனுதாபம் காண்பிப்பது தீமையை வலுப்படுத்தும், அனுதாபம் காண்பித்தவர் தன்னுடைய அனுதாபத்தால் பலவீனமடைந்து விடுவதால், அவனுடைய குறி அவராகவே இருக்கும்.
இப்பெண்களின் நியாயமான நல்ல நடத்தை அல்ல இது. ஆண்களின் மீதுள்ள கவர்ச்சியால் எழும் முட்டாள்தனமான பெண்மையின் அனுதாபம் இது.
கெட்டவராக இருக்கும் ஒருவருக்கு நாம் அனுதாபம் காட்டினால், அவர் நமக்கு நிச்சயம் கெடுதல் விளைவிப்பார்.
நம்முடைய அனுதாபம் அவருடன் நமக்கு தொடர்பு ஏற்படுத்துகிறது.
அது நம்முடைய பலவீனம்.
தீமை அழிக்கப்படாவிட்டால், செயல்பட முயலும்.
குரு-சிஷ்ய உறவில் இந்தச் சட்டங்கள் நன்றாகத் திட்டமிடப்பட்டுள்ளன.
முன்னணியில் இருக்கும் சிஷ்யர்கள், குருவாக மாறும்போது தங்களுடைய குருவின் பெயரை குறிப்பிடவே மாட்டார்கள்.
எந்த மனிதப் பிரச்சினையையும், சுயநலம் மற்றும் சிறுமை என்கிற கண்ணோட்டத்தில் ஆராய்ந்தால், புரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது.
தகாத கருத்துகளை ஏன் மேரி பேசுகிறாள்?
உதாசீனப்படுத்தப்பட்ட குழந்தையாக இருப்பதால், அந்த நடத்தை சுலபமாக எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கிறது.
அவளுக்கு முக்கியமாகப்படுவது அவள் ஏங்கும் கவனமே.
கவனிக்கப்பட வேண்டும் என்பதுதான் அவளுக்கு முக்கியமே தவிர, அது எதிர்மறையான கவனமாக இருப்பது பற்றி அவளுக்கு கவலையில்லை.
மனிதன், தான் இழந்ததை எந்த விதமாக கிடைத்தாலும் சரி, நாடுவான்.
தகாத நபருக்கோ அல்லது காண்பிக்கக் கூடாதவருக்கோ நாம் அனுதாபம் காண்பிப்பதன் மூலம், அவர்களுக்கு கெடுதல் ஏற்படாமல் தவிர்ப்பது, அவர்களிடமிருந்தே அதிகமான கெடுதலை நமக்கு வரவழைக்கும்.
முறைப்படுத்தும் சக்தி அதனை முழுமையாக முறைப்படுத்தும் என்பதுதான் சட்டம்.
சக்திக்கு ஓட்டம் உண்டு. வீசி எறிந்த கல் போலிருக்காது.
ஓட்டம் தொடரும், தன்னையே வளர்த்துக் கொள்ளும், சக்தியாக உருவெடுக்கும், திறனாகவோ அல்லது சக்தியாகவோ செயல்படும். அல்லது தன்னையே வலிமை பொருந்தியதாக முறைப்படுத்திக்கொள்ளும், அந்த வலிமைக்கு யாரேனும் ஒருவர் பலியாக வேண்டும்.

The tumult of Elizabeth's mind was allayed by this conversation. She had got rid of two of the secrets which had weighed on her for a fortnight, and was certain of a willing listener in Jane, whenever she might wish to talk again on either. But there was still something lurking behind, of which prudence forbad the disclosure. She dared not relate the other half of Mr. Darcy's letter, nor explain to her sister how sincerely she had been valued by his friend. Here was knowledge in which no one could partake; and she was sensible that nothing less than a perfect understanding between the parties could justify her in throwing off this last incumbrance of mystery. "And then," said she, "if that very improbable event should ever take place, I shall merely be able to tell what Bingley may tell in a much more agreeable manner himself. The liberty of communication cannot be mine till it has lost all its value!"
எலிசபெத் மனதில் இருந்த குழப்பம் இந்த உரையாடல் மூலம் சற்றே தணிந்தது. இரண்டு வாரங்களாக அவள் மனதில் பாரமாக அழுத்திக் கொண்டிருந்த இரண்டு இரகசியங்களை தன் மனதிலிருந்து நீக்கி விட்டாள். எப்பொழுதெல்லாம் அவள் மீண்டும் இவ்விரண்டினைப்பற்றியும் பேச வேண்டும் என்று விரும்புகிறாளோ, அப்பொழுதெல்லாம் ஜேன் கேட்பதற்கு தயாராக இருப்பாள் என்று அவளுக்குத் தெரியும். வெளியில் சொல்ல முடியாத ஒன்று இன்னமும் பின்னால் நிழலாடிக் கொண்டிருந்தது. விவேகம் அதனை வெளியிட முடியாமல் தடுத்தது. டார்சியினுடைய கடிதத்தின் மறுபாதியை சொல்வதற்கு அவளுக்கு தைரியம் வரவில்லை, அவனுடைய நண்பனால் ஜேன் எந்த அளவிற்கு உண்மையாக மதிக்கப்பட்டாள் என்பதைப் பற்றியும் அவளிடம் கூற முடியவில்லை. இந்த விஷயத்தில் வேறு எவரும் பங்கு பெற முடியாது. சம்பந்தப்பட்ட நபர்கள் அதை சரியாகப் புரிந்துகொண்டால் மட்டுமே இப்புதிரின் கடைசிப் பகுதியை எலிசபெத் கூறுவது நியாயமாக இருக்கும். பிறகு இந்த நடக்க முடியாத விஷயம் ஒருவேளை நடந்தால், பிங்கிலியால் எவ்வாறு சிறப்பாகக் கூற

முடியுமோ அதே அளவிற்கு சிறந்த முறையில் என்னாலும் கூற முடியலாம். அதனுடைய மதிப்பு முழுவதும் இழக்கும்வரை எனக்கு அதைப்பற்றி சொல்லும் சுதந்திரம் இல்லை," என்கிறாள்.

105. The decision to protect falsehood comforts.
பொய்மையைக் காப்பாற்ற வேண்டும் என்று எடுக்கும் முடிவு ஆறுதலாக இருக்கும்.
106. Jane is not only a willing listener, but listens without serious contradiction.
ஜேன் விருப்பத்துடன் கேட்டுக்கொள்பவள் மட்டும் அல்ல, அதிக எதிர்ப்பு இன்றியும் கேட்டுக்கொள்பவள்.
107. She could not inform Jane about Bingley as it raises hopes without ensuring their fulfillment.
அவளுக்கு, பிங்கிலியைப் பற்றி ஜேனிடம் தெரிவிக்க முடியவில்லை, ஏனெனில் அது பூர்த்தியடையும் என்று உறுதியை அளிக்க முடியாத நிலையில், வெறும் எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறது.
108. Also, Darcy's ruse would have to be told. She cannot do it.
மேலும் டார்சியின் சூழ்ச்சியைப் பற்றியும் கூற வேண்டிவரும். அவளால் அதைச் செய்ய முடியாது.
109. Later, Bingley who admitted his ignorance of her stay in London omitted to mention Darcy's role.
அவள் லண்டனில் தங்கி இருந்தது தனக்குத் தெரியாது என்று பின்னர் ஒப்புக் கொண்ட பிங்கிலி, டார்சியின் பங்கைப் பற்றிக் கூறவில்லை.
110. The suppression of this ruse is necessary to preserve the regard of Jane for Darcy even though she might pardon him.
ஜேன், டார்சியை மன்னித்து விடலாம் என்றாலும்கூட, டார்சியிடம் ஜேன் வைத்திருக்கும் மரியாதையை காப்பாற்றுவதற்காக இந்த சூழ்ச்சியைப் பற்றி கூறாமல் இருப்பது அவசியம்தான்.
111. Revelation will remove the flavour of the regard.
வெளிப்படுத்துவது மரியாதையின் தன்மையை நீக்கிவிடும்.
112. At each level of accomplishment, there are minor or insignificant acts that accomplish or by omitting they accomplish.
சாதனை நிறைவேறும் ஒவ்வொரு நிலையிலும், சிறிய அல்லது முக்கியம் இல்லாத செயல்கள் சாதிக்கும், அல்லது தவிர்ப்பதன் மூலம் அவை சாதிக்கும்.
113. More than doing the right thing, NOT doing the wrong thing needs greater wisdom.
சரியானவற்றை செய்வதைவிட, தவறான செயலை செய்யாமல் இருப்பதற்கு உயர்ந்த அறிவு வேண்டும்.
114. Lifelong joy of a man, accomplishing a global project often depends on such a thing.
உலகளாவிய திட்டத்தை சாதிக்கும் மனிதனின் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் சந்தோஷம், பெரும்பாலும் இது போன்ற அறிவை நம்பி இருக்கும்.
115. Edwina thus accomplished Indian freedom.
இந்திய சுதந்திரத்தை எட்வினா இவ்வாறுதான் சாதித்தாள்.
116. Nehru thus created the loss of Kashmir.
இவ்வாறுதான் நேரு காஷ்மீரை இழந்தார்.
117. The development of Indian Freedom from 1910 to 1947 has such landmarks at every turning point.
1910 முதல் 1947 வரை, இந்திய சுதந்திரப் போராட்டத்தில், இது போன்ற மைல் கற்கள் ஒவ்வொரு திருப்பு முனையிலும் இருக்கின்றன.
118. He who sees such details in any problem will become the master at that level.
எந்த ஒரு பிரச்சினையிலும் இது போன்ற விவரங்களைப் பார்க்கும் ஒருவர், அந்த நிலையில் திறமைசாலியாக மாறுவார்.
119. Now that Elizabeth unburdened herself, the tumult of her mind was allayed. Had she decided to expose Wickham it would have been powerfully disturbed and the social cataclysm of elopement would not have been there.
எலிசபெத் தன்னுடைய பாரத்தை இறக்கி வைத்து விட்டதால் அவளுடைய மன உளைச்சல் தணிந்தது. அவள் விக்காமை வெளிப்படுத்தி இருந்தால், அது மிகவும் வலிமையாக அமைதியைக் குலைத்து, ஓடிப்போவதற்கு துணை புரிந்த சமூகத்தின் எழுச்சி இல்லாமல் செய்திருக்கும்.
120. "She got rid of two of her secrets that weighed on her for a fortnight".
Secrets weigh one down as they carry the weight of social knowledge.
Society learns about what a Man does and approves of it. That is the security he derives from the society.
The secrets we have carry the same weight as social opposition.
Conscience is the support of one's psychological security.
This is the subconscious security the society offers.
Mother says conscience is an adversary.
The subconscious social security is of falsehood.
It carries the power of destruction if the society disapproves of one.
Man who reaches his God is to overcome the falsehood of his own as well as the falsehood of the society.
Falsehood is the power of ego socially approved or organized.
Man has to overcome his ego as well as the social collective ego.
All secrets are not made of falsehood.
Delicacies, sensitivities, preferences, circumstances demand secrecy which is not necessarily made of falsehood.

Secrecy is an essential part of life as well as existence.
A seeker of God is not free to share all his knowledge with others.
They have a sacred personal character much of which will not go into words.
Those that can find expression are not to be expressed unless there is sanction.
Much news becomes secrets in view of others' sensitivity or stupidity.
The soul that carries the universal secret does not readily disclose it to the possessor.
Other great knowledge becomes secret in view of the lack of receptivity of those to whom it is intended.
The Absolute is such a secret.
The Marvel is a secret that excels the Absolute.
Poetry becomes the knowledge of such secrets in words.
As language conceals thoughts, poetry speaks out ideas that become secret thoughts.
Savitri remains recondite to his devotees.
He raised each line of Savitri to the level of Overmind.
Those who have the overmental receptivity can decipher it.
Poetry touches the hearts of the population as it carries the weightiest possible idea in the most intelligible vocabulary.
Bharathi spent ten years with Him.
All his poetic productions were written during that period.
Bharathi expressed all His ideas in his poetry.
They were ideas that go beyond the Vedas, the Upanishads, the Gita.
Nowhere the poet acknowledges the source of his inspiration.
Poetry belongs to a stagnant period of the society.
Society is fast expanding so that even reading poetry is not the fashion.
Maybe the prose of the world itself will become poetic prose to express His ideas in future.
It is conceivable that even conversation may become poetic.
His ideas can be more readily practised than explained in prose.
Once the ideas are lived, it can create its own prose later for their explanation.
Divine Life can well be poetic life.
Divinity is the poetry of life.
Knowledge that expresses beauty can be poetry at its height.
Knowledge that explains Truth is the philosophy of life.
The language of the philosophy of life is prose.
Human language is of the words that describe action, movement, relationship, ideas, and thoughts.
A language that can render Savitri into terms of life must be one of one's mother tongue.
It will be a prose that will poetically express the profound ideas of The Life Divine.
"இரண்டு வாரங்களாக பாரமாக அழுத்திக் கொண்டிருந்த இரகசியங்கள் இரண்டிலிருந்து அவள் விடுதலை பெற்றாள்."
சமூக அறிவை சுமந்து கொண்டிருப்பதால் இரகசியங்கள் ஒருவரை அழுத்தும்.
மனிதன் செய்வதை சமூகம் அறிந்து கொண்டு அதனை ஆமோதிக்கின்றது. சமூகத்திலிருந்து அவன் பெறும் பாதுகாப்பு அது.
நாம் சுமக்கும் இரகசியங்களுக்கு, சமூக எதிர்ப்பின் அதே அளவு பளு இருக்கிறது.
ஒருவரின் மனரீதியான பாதுகாப்பிற்கு மனசாட்சி உதவுகிறது.
சமூகம் அளிக்கும் ஆழ்மனத்தின் பாதுகாப்பு இது.
மனசாட்சி ஒரு எதிரி என்று அன்னை கூறுகிறார்.
பொய்மை ஆழ்மனத்தின் சமூக பாதுகாப்பு ஆகும்.
சமூகம் ஒருவரை ஆதரிக்காவிடின் இதற்கு அழிக்கும் சக்தி உண்டு.
தன்னுடைய பொய்மையையும், சமூகத்தின் பொய்மையையும் வெற்றிகொள்ள மனிதன் தன் கடவுளை அடைகிறான்.
சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது முறைப்படுத்தப்பட்ட அகந்தையின் சக்தியே பொய்மை ஆகும்.
மனிதன் தன்னுடைய அகந்தையையும், சமூகத்தின் ஒருமித்த அகந்தையையும் வெற்றிகொள்ள வேண்டும்.
எல்லா இரகசியங்களும் பொய்மையால் ஆனவை அல்ல.
நாசூக்கான விஷயங்கள், சொரணைகள், விருப்பங்கள், சந்தர்ப்பங்கள் இவை இரகசியத்தைக் கோரும், பொய்மையினால் உருவானவை என்பது அவசியமல்ல.
வாழ்வுக்கும், பெருவாழ்வுக்கும் இரகசியம் இன்றியமையாதது.
இறைவனை நாடுபவனுக்கு, தன்னுடைய எல்லா ஞானத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு அனுமதி கிடையாது.
அவர்களுக்கென்று புனிதமான குணம் உண்டு, அவற்றை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

வெளிப்படுத்தக் கூடிய விஷயங்களையும் அனுமதியின்றி வெளிப்படுத்த முடியாது.
மற்றவரது உணர்வினாலோ அல்லது முட்டாள்தனத்தினாலோ, பல விஷயங்கள் இரகசியமாகி விடுகின்றன.
பிரபஞ்ச இரகசியத்தை தாங்கிச் செல்லும் ஆன்மா, சுலபத்தில் தனது உடைமையாளரிடமே அதை வெளிப்படுத்தாது.
ஒருவருக்கென்று தீர்மானிக்கப்பட்டுள்ள வேறு ஒரு உயர்ந்த அறிவு, அவருக்கு ஏற்புத் திறன் இல்லாத காரணத்தால் இரகசியமாகி விடுகிறது.
பிரம்மம் இது போன்ற ஒரு இரகசியம்.
பிரம்மத்தையும் மிஞ்சும் அற்புதம் ஒரு இரகசியமாகும்.
அது போன்ற இரகசியங்களின் ஞானம் வார்த்தைகளால் கவிதையாகிறது.
எண்ணங்களை மறைத்து வைத்திருக்கும் மொழியைப் போல், இரகசிய எண்ணங்களாக மாறும் கருத்துகளை கவிதை வெளிப்படுத்துகிறது.
அன்பர்களுக்கு, சாவித்ரி புதிர் போல் விளங்குகிறது.
சாவித்ரியில் ஒவ்வொரு வரியையும் தெய்வலோக நிலைக்கு பகவான் உயர்த்தி உள்ளார்.
தெய்வலோக ஏற்புத் திறன் உடையவர்கள் அதைப் புரிந்து கொள்ளலாம்.
சிறந்த அறிவுபூர்வமான வார்த்தைகளால் வலிமையான கருத்துகளை தாங்கிச் செல்லும் கவிதை, எல்லோருடைய மனதையும் தொடுகிறது.
பகவானுடன் பாரதியார் பத்து வருட காலம் உடனிருந்தார்.
அந்த கால கட்டத்தில்தான் அவருடைய கவிதைப் படைப்புகள் எழுதப்பட்டன.
பகவானுடைய கருத்துகளை பாரதி தன்னுடைய கவிதைகளில் வெளிப்படுத்தினார்.
வேதம், உபநிஷதம், கீதை இவையெல்லாவற்றையும் தாண்டிய கருத்துகளை உடையவை அவை.
எந்த ஒரு இடத்திலும் கவி தன்னுடைய ஊக்கத்திற்கான பிறப்பிடத்தை கூறவில்லை.
சமூகத்தின் தேக்க நிலையை சார்ந்தது கவிதை.
சமூகம் மிக வேகமாக வளருவதால், கவிதைகளைப் படிப்பதுகூட வழக்கில் இல்லை.
ஒரு வேளை உலகின் உரைநடையே பகவானின் கருத்துகளை வெளிப்படுத்துவதற்காக, உரைநடைக் கவிதையாக எதிர்காலத்தில் மாறலாம்.
உரையாடல்கள்கூட கவிதையாக மாறுவதை கற்பனை செய்து பார்க்கலாம்.
பகவானுடைய எண்ணங்களை உரைநடையில் விளக்குவதைவிட, நடைமுறையில் உடனடியாக பின்பற்றலாம்.
அந்த கருத்துகளிலேயே வாழ்ந்துவிட்டால் அவற்றின் விளக்கங்களுக்காக பின்னர் அவை சுய உரைநடையை உருவாக்கலாம்.
தெய்வீக வாழ்வு கவிதை வாழ்வாக இருக்கலாம்.
தெய்வீகம் வாழ்வின் கவிதையாகும்.
அழகை வெளிப்படுத்தும் அறிவு கவிதையின் உச்சமாக இருக்கும்.
உண்மையை விளக்கும் அறிவு வாழ்வின் தத்துவமாகும்.
வாழ்வின் தத்துவத்தின் மொழி உரைநடையாகும்.
செயல்கள், இயக்கம், உறவுகள், கருத்துகள், எண்ணங்கள் இவைகளை விளக்கும் வார்த்தைகளே மனித மொழியாகும்.
வாழ்வின் மூலம் சாவித்ரியை கூறவல்ல ஒரு மொழி ஒருவரது தாய் மொழிதான்.
'தி லைப் டிவைன்'-ன் உயர்ந்த கருத்துகளை கவிதையைப் போல் வெளிப்படுத்தவல்லது உரைநடையே.

121. "Was certain of a willing listener in Jane".
Listening is mental self-giving.
Elizabeth expects a sympathetic listening from her sister.
Sympathetic listening is vital-mental self-giving.
The egoistic individual by such listening breaks out of the ego a little into universalizing.
Breaking out of ego by external pressure is evolution.
Doing so by self-choice is one's own yoga.
Egoistic consciousness goes to the origin of Mind.
Mind begins with cosmic consciousness.
The Origin of ignorance is the point where Mind forgets Supermind.
The sixth ignorance begins as soon as we forget the Absolute.
The Divine Soul that is in the Supermind is always present before the Absolute.
To know the relationship between Maya, Supermind, Divine Soul, ignorance is a great step in knowing The Life Divine.
We see Darcy's love of which no one knows, and Bingley's love which is known to all meet at the ruse.
The news or ruse reaching her made his proposal explosive.
It led to the ruse unwinding itself because of the elopement.

His magnanimity came to her through the girl who eloped.
We see the sequence externally, not the inner significance of events.
In every inner significance of an ordinary event is the secret of creation.
The Absolute retains its essentiality in every such event and allows itself to be realized making such realization manifestation.
In our own life such a significance will readily reveal.
They are the points where Man is turned to Mother.
Turning to Mother at that point on one's own is aspiration.
The inversion in the aspiration is his hour of God.
"ஜேன் கேட்டுக் கொள்வதற்கு தயாராக இருப்பாள் என்பது நிச்சயம்".
மனத்தின் அர்ப்பணம் பேசுவதைக் கேட்பது.
அவளது சகோதரி அனுதாபத்துடன் கேட்டுக்கொள்ள வேண்டும் என எலிசபெத் எதிர்பார்க்கிறாள்.
அனுதாபத்துடன் கேட்டுக்கொள்வது, உணர்வின் - மனத்தின் அர்ப்பணமாகும்.
இவ்வாறு கேட்டுக்கொள்வதினால் அகங்காரமான மனிதன் அகந்தையிலிருந்து சற்று வெளி வந்து, பிரபஞ்சமாகிறான்.
புற அழுத்தத்தினால் அகந்தையிலிருந்து வெளிவருவது பரிணாமமாகும்.
அவ்வாறு சுய விருப்பத்தினால் செய்வது ஒருவருடைய தனிப்பட்ட யோகமாகும்.
அகந்தையான ஜீவியம் மனத்தின் பிறப்பிடத்திற்குச் செல்கிறது.
பிரபஞ்ச ஜீவியத்துடன் மனம் ஆரம்பிக்கின்றது.
சத்திய ஜீவியத்தை மனம் மறக்கும் இடமே அறியாமையின் பிறப்பிடம்.
பிரம்மத்தை நாம் மறந்தவுடனேயே ஆறாவது அறியாமை ஆரம்பிக்கின்றது.
சத்திய ஜீவியத்தில் இருக்கும் தெய்வீக ஆன்மா, எப்பொழுதும் பிரம்மத்தின் முன் இருக்கிறது.
மாயை, சத்திய ஜீவியம், தெய்வீக ஆன்மா, அறியாமை இவற்றுக்கிடையே உள்ள தொடர்புகளைப் பற்றி தெரிந்துகொள்வது, தி லைப் டிவைன்-ஐ புரிந்துகொள்வதற்கு ஒரு பெரிய படியாகும்.
யாரும் அறியாத டார்சியின் காதலும், அனைவருக்கும் தெரிந்த பிங்கிலியின் காதலும் சூழ்ச்சியில் சந்தித்துக் கொள்கின்றன.
செய்தியோ அல்லது சூழ்ச்சியோ அவளை வந்தடைவது, அவனது திருமணப் பேச்சை வெடிக்கத்தக்கதாக மாற்றியது.
ஓடிப்போனதால் சூழ்ச்சி தன்னைத்தானே சரி செய்து கொண்டது.
ஓடிப்போன பெண்ணின் மூலம் அவனது பெருந்தன்மை அவளை வந்தடைந்தது.
நடப்பவற்றை நாம் வெளியிலிருந்து பார்க்கிறோம், நிகழ்ச்சிகளின் உள்ளே இருக்கும் முக்கியத்துவத்தைப் பார்ப்பதில்லை.
சாதாரண நிகழ்ச்சிகளின் உள்ளே இருக்கும் ஒவ்வொரு முக்கியத்துவமும் படைப்பின் இரகசியமாகும்.
இது போன்ற ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பிரம்மம் தன்னுடைய முக்கியத்துவத்தை இருத்திக்கொள்கிறது, தன்னைப் புரிந்துகொள்ள அனுமதித்து அந்த புரிதலை வெளிப்படுத்துகிறது.
நம்முடைய வாழ்க்கையிலும் இது போன்ற முக்கியத்துவம் உடனடியாக வெளிப்படும்.
மனிதன் அன்னையை நோக்கிச் செல்லும் இடங்கள் அவை.
அந்த இடத்தில் அன்னையை நோக்கி விருப்பதுடன் செல்வது ஆர்வமாகும்.
ஆர்வத்தில் ஏற்படும் தலைகீழ் மாற்றம்தான் அவனது இறைவன் வரும் தருணமாகும்.

122. "Something lurking behind which prudence forbade disclosure".
What we forget is the prudence of life that spares us the distress.
The less we have to forget thus, the more we progress.
Complete progress needs no memory as life then is subliminal.
Memory makes the surface permit the successive Time movement.
For Self-education at home no examination is necessary.
Memory is the examination for the surface life.
Human life is a psychological construction in a constructed society.
Prudence, mentioned above, is one of its necessities.
Prudence in animal life is to protect oneself and for survival.
In spiritual life prudence is essential not as Man needs, but to protect him from occult forces.
It is also necessary to open spiritual opportunities.
For the lack of organisational prudence in matters of Money that has started moving fast globally, a crisis has precipitated.
A similar prudence in a crisis free world will make prosperity global.
Organised food production, organisation in transport have made Man forget them taking them for granted.
Money can be given such an organisation.

The world that has made primary education compulsory will discover that Man on his own will make college education his minimum equipment, when such an organisation is introduced in education.
Higher organisation renders superfluous the function of lower organisation.
Growth of organisation helps the society to grow.
Further growth needs shedding of organisation.
Outer organisations become inner organisation of values.
Culture is the highest organisation so far evolved.
Culture sheds ceremonies to be replaced by cultural values.
Ceremonies become sensitivities
"ஏதோ ஒன்று பின்னால் நிழலாடிக் கொண்டிருப்பதை வெளியிடுவதற்கு விவேகம் தடுக்கிறது."
வாழ்வின் விவேகம் நம்மை கஷ்டத்திலிருந்து காப்பாற்றுகிறது என்பதை நாம் மறந்து விடுகிறோம்.
இவ்வாறு மறப்பது குறையுமேயானால் வாழ்க்கையில் நம் முன்னேற்றம் அதிகமாக இருக்கும்.
முழுமையான முன்னேற்றத்திற்கு ஞாபகம் தேவையில்லை, ஏனெனில் வாழ்வு அப்பொழுது அடிமனத்தில் இருக்கும்.
ஞாபகம் மேல் பரப்பை அடுத்தடுத்த நேரத்தின் இயக்கத்திற்கு அனுமதிக்கும்.
வீட்டிலேயே இருந்துகொண்டு சுயமாக படிப்பதற்கு பரிட்சை தேவை இல்லை.
மேலோட்டமான வாழ்க்கைக்கு ஞாபகம்தான் பரீட்சை.
உருவாக்கப்பட்ட சமூகத்தில் மனித வாழ்க்கை ஒரு மனரீதியான கட்டமைப்பு ஆகும்.
மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவேகம், அதற்கான அத்தியாவசியமானவற்றில் ஒன்றாகும்.
விலங்குகளின் வாழ்வில் விவேகம், சுய பாதுகாப்புக்கும் உயிர் வாழவும் தேவைப்படுகிறது.
ஆன்மீக வாழ்வில் மனிதனின் தேவைக்காக விவேகம் அவசியம் இல்லை, ஆனால் மறைந்திருக்கும் சக்திகளிடமிருந்து அவனைக் காப்பாற்றுவதற்காக அவசியமாகிறது.
ஆன்மீக வாய்ப்புகளை உருவாக்கவும் விவேகம் தேவைப்படுகிறது.
உலகளாவிய அளவில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம் விவேகமாக முறைப்படுத்தப்படாததால், ஒரு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.
நெருக்கடி அற்ற உலகில் அதைப் போன்ற விவேகம், உலகளாவிய அளவில் செல்வ வளத்தைக் கொண்டு வரும்.
உணவு உற்பத்தியும் போக்குவரத்தும் சிறப்பாக முறைப்படுத்தப்பட்டுள்ளதால் மனிதன் அவற்றை மறந்து, தனக்குரியது என்று நினைத்துக்கொள்கிறான்.
பணத்திற்கு அது போன்ற ஒரு அமைப்பை அளிக்கலாம்.
இது போன்ற ஒரு அமைப்பு கல்வியிலும் ஏற்படுத்தப்பட்டால், உலகத்தில் ஆரம்பக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளதைப் போல், கல்லூரிப் படிப்பையும் மனிதன் தானாகவே தன்னுடைய குறைந்தபட்ச தகுதியாக்கிக்கொள்வான் என்பதைப் பார்க்கலாம்.
உயர்ந்த அமைப்பு கீழ் நிலையில் இருக்கும் அமைப்பின் செயல்பாட்டினை தேவையற்றதாக்குகிறது.
அமைப்பு வளர்ந்தால், சமூகமும் வளரும்.
மேலும் வளர வேண்டும் எனில் அமைப்பு நீங்க வேண்டும்.
வெளியிலிருக்கும் அமைப்பு பண்புகளின் அகத்தின் அமைப்பாக மாறுகிறது.
கலாச்சாரமே இதுவரை உருவாகியிருக்கும் அமைப்புகளிலேயே மிகவும் உயர்ந்தது ஆகும்.
கலாச்சாரம் சடங்குகளை விட்டு விட்டு, கலாச்சாரத்தின் பண்புகளை ஏற்றுக்கொள்கிறது.
சடங்குகள் உணர்வுகளாக மாறுகின்றன.

123. "dared not explain how sincerely she was valued by his friend".
God does not hide himself at all from the eyes of Man.
God for Man, He said, is Light, Freedom, Immortality.
They are the God to Man's spiritual aspiration.
There is no Man who does not aspire for something. It is his God.
The descending Supermind could not reach us as Supermind.
It came to us as Power that prevented catastrophes in Korea, Cuba, China.
A devotee can recognize how Supermind has come to him in all the landmarks of its descent. They are marks in his life or spirit where It landed.
Mr. Bennet's decision to prevent the officers is a mental decision.
He had not used his mental will till then.
Compelled by the enormity of the catastrophe, he did so.
He was compelled by the catastrophe, and the catastrophe was created by the Force of the Revolution.
Mr. Bennet's decision, in this case, was impelled by the force of the Revolution. It was the supramental force in disguise.
That it was the supramental force was confirmed by the positive result.

The other two weddings made possible by Lydia's marriage were **the stamp of supergrace.**

The two characteristics of supergrace are 1) Bringing more than what is asked for, 2) The end result in the beginning.

Devotees have often seen such exhibitions in their own lives.

An unconscious devotee receiving results unconsciously is the rule.

It is possible to go to those moments and become conscious.

A feeling of gratitude brings that consciousness.

Gratitude thrills the body.

Consecration that brings the result is what we know.

Consecration that thrills makes us conscious.

It requires a concentration. It is the all-inclusive concentration giving us a wide massive opening.

To attempt it as often as possible is to have yogic consciousness.

"அவனுடைய நண்பனால் அவள் எவ்வளவு தூரம் உண்மையாக மதிக்கப்பட்டாள் என்பதைப் பற்றி கூற முடியவில்லை."

மனிதனின் பார்வையிலிருந்து இறைவன் தன்னை மறைத்துக் கொள்வதே இல்லை.

ஒளி, சுதந்திரம், அமரத்துவம் இவைகளே மனிதனுக்கு தெய்வம் என்று பகவான் கூறுகிறார்.

மனிதனின் ஆன்மீக ஆர்வத்திற்கு அவைகள்தாம் கடவுள்.

ஏதாவது ஒன்றுக்கு ஆர்வப்படாத மனிதனே கிடையாது. அதுதான் அவனுக்கு கடவுள்.

கீழிறங்கும் சத்திய ஜீவியம், சத்திய ஜீவியமாக நம்மை வந்தடையாது.

அது நம்மிடம் கொரியா, க்யுபா, சீனாவில் பெரும் ஆபத்துகளைத் தவிர்த்த சக்தியாக வந்தது.

சத்தியஜீவியம் கீழிறங்கியபோது, எவ்வாறு அது தன்னிடம் வந்தது என்பதன் எல்லா அடையாளங்களையும் ஒரு அன்பரால் அறிந்துகொள்ள முடியும். அவனுடைய வாழ்க்கையில் அல்லது ஆன்மாவில் அது இறங்கிய இடத்தின் அதன் அடையாளத்தைக் காணலாம்.

அதிகாரிகளை தவிர்ப்பதற்கு எடுக்கும் திரு பென்னட்டின் தீர்மானம் மனத்தின் தீர்மானமாகும்.

அதுவரை அவர் மனத்தின் உறுதியை பயன்படுத்தவில்லை.

ஆபத்தின் அளவு வற்புறுத்தியதால் அவர் அவ்வாறு செய்தார்.

பெரும் ஆபத்து அவரை வற்புறுத்தியது, புரட்சியின் வலிமை அந்த பெரும் ஆபத்தை உற்பத்தி செய்தது.

இந்த விஷயத்தில் திரு பென்னட்டின் தீர்மானம் புரட்சியின் சக்தியால் தூண்டப்பட்டது. அது மறைந்திருக்கும் சத்தியஜீவிய சக்தியாகும்.

நேர்மறையான பலன்கள், அது சத்திய ஜீவிய சக்திதான் என்பதை உறுதிப்படுத்தியது.

லிடியாவின் திருமணத்தால் சாத்தியமான மற்ற இரு திருமணங்கள் பேரருளின் முத்திரைகளாகும்.

பேரருளின் இரண்டு குணங்கள் 1)**கேட்டதைவிட அதிகம் கிடைப்பது** 2)**முடிவான பலனை முதலிலேயே அளிப்பது.**

அன்பர்கள் தங்களுடைய வாழ்க்கையில் பலமுறை இதனை கண்டிருப்பர்.

தன்னினைவு இல்லாமல் இருக்கும் அன்பர் தன்னை அறியாமலேயே பலன்களை பெற்றுக்கொள்வது, சட்டமாகும்.

அத்தருணங்களுக்குச் சென்று தன்னினைவு பெறுவது சாத்தியம்தான்.

நன்றி உணர்வு அந்த ஜீவியத்தைக் கொண்டு வரும்.

நன்றி உணர்வு உடலைப் புல்லரிக்க வைக்கும்.

நமக்குத் தெரிந்தது பலன்களைத் தரும் சமர்ப்பணம்.

புல்லரிக்க வைக்கும் சமர்ப்பணம் நம்மை நனவுபூர்வமாக்குகிறது.

அதற்குத் தேவை மனத்தை ஒருநிலைப்படுத்துவது. பூரணமான ஒருநிலைப்படுதல், பெரிய அகண்ட வாய்ப்பைத் தருகிறது.

எவ்வளவு முறை முடியுமோ அவ்வளவு முறை அதற்கு முயற்சி எடுப்பது, யோகத்தின் ஜீவியம் இருப்பது போலாகும்.

124. "That very improbable event should ever take place".

This decision is one that shows the genius of the author through Elizabeth.

To her the improbable event is Jane's wedding.

Actually the word improbable shows the deep precise sensitive awareness of Elizabeth to the secrets of human nature.

This restraint of hers has emanated from the Force in the atmosphere, though she had the potential.

The world functions from an inconscient energy.

The Supermind sits as an engine in the events and drives it.

There is no event in our life that is not so influenced.

We do not see the driving force often.

Even when a positive result does not issue the force acting is supramental.

The marriage of Lydia is the action of the Force; the elopement is by the Force.
It is possible to explain each act of life like that.
Any benefit is by sensing the Force, not by general understanding.
The poet sees the world we see.
What is matter of fact and dull to us is poetic to his vision.
The fact is great poets see all life as poetic beauty.
At certain times as in Bennet's decision and Elizabeth's reticence we sense the Force behind.
Even Darcy's magnanimity in wanting not to claim a reward for his goodness, even the reward of his love, is the act of a gentleman. The Force acts there, but we can only infer it, not sense it.
The Divine sight. The Divine hearing. The Divine sense is real.
A work of a genius lays them bare to our dull eyes.
The idea of writing these principles is to make it more evident to the reader.
After a deep meditation sometimes such a vision rises for a second.
These comments can give the mind the sense of seeing those aspects more often than usual.
"நடக்கவே முடியாத அந்த விஷயம், ஒரு வேளை நடந்தால்."
கதாசிரியரின் மேதாவித்தனம் எலிசபெத்தின் இந்த ஒரு முடிவின் மூலம் வெளிப்படுகிறது.
அவளுக்கு, நடக்கவே முடியாத நிகழ்ச்சி என்பது ஜேனுடைய திருமணம் ஆகும்.
நடக்கவே முடியாது என்கிற வார்த்தை, மனித சுபாவ இரகசியங்களில் எலிசபெத்தின் ஆழமான தெளிவான உணர்வுபூர்வமான விழிப்புணர்ச்சியைக் காண்பிக்கின்றது.
அவளால் முடியும் என்கிற போதும், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டது சூழலில் உள்ள சக்தியால் ஏற்படுகிறது.
ஜட இருளின் சக்தியால் உலகம் இயங்குகிறது.
சத்திய ஜீவியம் நிகழ்ச்சிகளை இயக்குகிறது.
நமது வாழ்க்கையில் அது போல வழி நடத்தப்படாத நிகழ்ச்சியே கிடையாது.
ஊக்க சக்தியை நாம் பல சமயங்களில் பார்ப்பதில்லை.
நேர்மறையான பலன் கிடைக்காவிட்டாலும், செயல்படும் சக்தி சத்தியஜீவிய சக்திதான்.
சக்தியின் செயல்பாடுதான் லிடியாவின் திருமணம்; ஓடிப்போவதும் சக்தியின் செயல்பாடுதான்.
அது போல் வாழ்வின் ஒவ்வொரு செயலையும் விளக்க முடியும்.
எந்தப் பலனும் சக்தியை உணர்வதால் கிடைக்கிறது, பொதுவாகப் புரிந்துகொள்வதால் அல்ல.
நாம் பார்க்கும் உலகத்தை கவிஞனும் பார்க்கிறான்.
நமக்கு சாதாரணமாகவும் மந்தமாகவும் தோன்றும் விஷயம், அவனுடைய பார்வையில் கவிதையாகத் தோன்றுகிறது.
பெரிய கவிஞர்கள் வாழ்க்கை முழுவதையும் கவிதையாகப் பார்க்கின்றனர் என்பது உண்மை.
திரு பென்னட்டின் முடிவு மற்றும் எலிசபெத்தின் மௌனம் போன்ற சில தருணங்களில், இந்தச் சக்தி பின்னணியில் இருப்பதை நாம் உணர்கிறோம்.
தான் செய்த நல்ல காரியத்திற்கும், தனது காதலுக்கும் உரிய பரிசினை எதிர்பார்க்காத டார்சியின் பெருந்தன்மை, உயர்குடி மனிதனின் செயலாகும். சக்தி அங்கு செயல்படுகிறது, ஆனால் நாம் அதை அனுமானிக்க முடியுமே தவிர உணர முடியாது.
தெய்வத்தின் பார்வை, தெய்வத்தின் கேளவ், தெய்வத்தின் உணர்வு உண்மையானது.
நம்முடைய மந்தமான கண்களுக்கு மேதாவியின் உழைப்பு அவைகளை வெட்ட வெளிச்சமாக்குகிறது.
இந்தக் கருத்துகளை எழுதுவதன் நோக்கமே, படிப்பவர் மேலும் தெளிவு பெற வேண்டும் என்பதற்காகத்தான்.
ஆழ்ந்த தியானத்திற்குப் பிறகு சில சமயங்களில், அது போன்ற காட்சி க்ஷண நேரத்திற்கு எழும்.
மனதிற்கு வழக்கத்தைவிட பல சமயங்களில் அந்த கூறுகளைப் பார்க்கும் உணர்வை இந்த குறிப்புகள் அளிக்கும்.

125. "Bingley may tell in a much more agreeable manner".
Life always exceeds rationality.
At best we can only be rational.
Still, while being rational, it is wise to concede that the results will always exceed rational planning or rational expectation.
Human sensitivity feels Bingley can speak better; life's rules require not to speak it at all.
When problems arise we often manage to solve them. As life has a better solution than Man, spirit has a still better solution than life.
Whether it is Man, life or Spirit that is solving the problem, an attitude or strategy is needed.
Our attitudes are based on our understanding.
Those based on sensitivities are better.
Elizabeth feeling sorry for not having hidden the elopement from Darcy based on an understanding after the event, is

seen as foolish.
Had she done so, the present results would not be possible.
Not to rely on understanding and to let the events take their course is consecration to life.
To call in Mother, discount understanding, brings Her understanding into action.
This is a foolish way or at least an unrefined way of invoking Her Force. Initially this is permissible.
This happens when the result is consecrated.
Consecrating our initiative, Her initiative comes into play.
Consecrating our understanding, Her understanding comes into play.
Consecration can go beyond understanding to the faculty of thinking, to its origin in the Mind, to the origin of Mind that is Supermind.
Darcy refused to react to her abuse. Also he decided to take her words as words of Wisdom. In doing so, he has accepted Elizabeth as his god.
“பிங்கிலி இன்னமுமே ஏற்றுக்கொள்ளும் விதத்தில் கூறக்கூடும்”.
வாழ்வு எப்பொழுதுமே பகுத்தறிவை மிஞ்சும்.
நாம் விவேகமாக இருப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது.
விவேகமாக இருக்கும்பொழுதும், பலன்கள் எப்பொழுதும் விவேகமாக திட்டமிட்டதையும் அல்லது விவேகமான எதிர்பார்ப்பையும் மிஞ்சி விடும் என்பதை நாம் ஏற்றுக்கொள்வது புத்திசாலித்தனமாகும்.
பிங்கிலியால் சற்று நன்றாகப் பேச முடியும் என மனித உணர்வுகள் நினைக்கின்றன; அதைப் பேசவே கூடாது என வாழ்வின் சட்டங்கள் எதிர்பார்க்கின்றன.
பிரச்சினைகள் எழும்பொழுது நாம் அதை பெரும்பாலும் தீர்த்து விடுகிறோம். மனிதனைவிட வாழ்விடம் சிறப்பான தீர்வு இருப்பதுபோல், ஆன்மாவிடம் வாழ்வைவிட மேலும் சிறந்த தீர்வு உள்ளது.
பிரச்சினையைத் தீர்ப்பது மனிதனோ, வாழ்வோ அல்லது ஆன்மாவோ, எதுவாக இருந்தாலும் அதற்கு ஒரு மனோபாவம் அல்லது யுக்தி தேவைப்படுகிறது.
நமது புரிதலின் அடிப்படையில் நமது மனோபாவம் உள்ளது.
உணர்வுகளின் அடிப்படையில் இருப்பது நல்லது.
நிகழ்ச்சி நடந்து முடிந்த பிறகு ஏற்படும் புரிதலின் அடிப்படையில், ஓடிப்போன நிகழ்ச்சியை டார்சியிடமிருந்து மறைக்காததற்கு வருத்தப்படும் எலிசபெத் அறிவற்றவளாகப் பார்க்கப்படுகிறாள்.
அவள் அவ்வாறு செய்திருந்தால், தற்பொழுது ஏற்பட்டிருக்கும் பலன்கள் சாத்தியமாகி இருந்திருக்காது.
புரிதலை நம்பாமல், நிகழ்ச்சிகளை அதன் போக்கிற்கே விட்டுவிடுவது வாழ்வின் சமர்ப்பணமாகும்.
அன்னையை அழைத்து, நம் புரிதலின் மீதுள்ள நம்பிக்கையை கைவிட்டால், அது அன்னையின் செயலாக மாறும்.
அன்னையின் சக்தியை வெளிக்கொண்டுவர செய்யப்படும் முட்டாள்தனமான அல்லது நாசூக்கில்லாத வழிமுறையாகும் இது. ஆரம்பத்தில் இதனை ஏற்றுக்கொள்ளலாம்.
பலனை சமர்ப்பணம் செய்யும்பொழுது இவ்வாறு நடைபெறும்.
நமது தன்முனைப்பை சமர்ப்பணம் செய்தால், அன்னையின் முனைப்பு செயல்படும்.
நமது புரிதலை சமர்ப்பணம் செய்தால், அன்னையின் புரிதல் செயல்பட ஆரம்பிக்கும்.
சமர்ப்பணம், புரிதலையும் தாண்டி சிந்திக்கும் திறனுக்கும் மனத்தில் அதன் பிறப்பிடமான சத்திய ஜீவியத்திற்கும் செல்லும்.
அவளுடைய நிந்தனைக்கு டார்சி எதிர்வினை ஆற்ற மறுத்தான். அவளுடைய வார்த்தைகளை அறிவு பூர்வமான வார்த்தைகளாக ஏற்றுக்கொள்ள முடிவு செய்தான். அவ்வாறு செய்யும்பொழுது அவன் எலிசபெத்தை தன்னுடைய தெய்வமாக ஏற்றுக்கொண்டான்.

126.“The liberty of communication cannot be mine till it has lost all its meaning”.
Man has no liberty of such communication.
Certainly he has no liberty of initiative.
Nor has he the liberty of thought or wish.
Man who knows he has no liberty of any kind moves towards his god.
Liberty for Man is liberty to ego.
It starts with the Mind, proceeds to the vital and the body where it is strongly entrenched.
The rule of the physical ego is symbolized by the war.
The hold of the vital ego has Money as the symbol.
The power is more powerful, Man has found out that power too is under Money.
The present crisis of Money shows the foundations of the vital ego are shaken.
Mental ego centres around Man’s own idea.
Man does not know that all ideas are from outside.
The Internet has systematically on a global scale started demolishing the supports to the mental ego.
Man cannot own property, power or even an idea.

Individuality is born when individual possessiveness is given up.
The Individuality of action produces an abundance for the society, by Man representing the strength of the collectivity.
Vital Individuality must organize collective power as if the whole society acts through one Individual.
The ideas spoken by the mental Individual are the evolving ideas of the society advocated by one with the entire force of the society.
Man loses his egoistic liberty to gain the freedom of universality.
The foundation for such great acts is the wealth earned out of the evolving true consciousness.
“அது அதனுடைய அர்த்தம் முழுவதையும் இழக்கும்வரை எனக்கு அதைப் பற்றிச் சொல்லும் சுதந்திரம் இல்லை”.
அது போன்றவற்றை பற்றிப் பேச மனிதனுக்கு எந்த வித சுதந்திரமும் கிடையாது.
தன்முனைப்பு எடுக்கும் சுதந்திரமும் கண்டிப்பாக அவனுக்குக் கிடையாது.
எண்ணம் அல்லது விருப்பம் இவற்றின் சுதந்திரமும் அவனுக்குக் கிடையாது.
எந்த விதமான சுதந்திரமும் இல்லை என்று புரிந்துகொள்ளும் மனிதன், தன்னுடைய இறைவனை நோக்கிச் செல்கிறான்.
மனிதனுக்கு சுதந்திரம் என்பது அகந்தையின் சுதந்திரம்.
மனதிலிருந்து ஆரம்பித்து உணர்வுக்கும் உடலுக்கும் செல்லும் அகந்தை, உடலில் பலமாக ஊறிவிடுகிறது.
உடலின் அகந்தையை அடையாளப்படுத்துவது போர் ஆகும்.
உணர்வின் அகந்தைக்கு பணம்தான் அடையாளம்.
அதிகாரம் சக்தி வாய்ந்தது, அதிகாரமும் பணத்தின் அடிமை என்று மனிதன் தெரிந்து கொண்டுள்ளான்.
தற்பொழுதைய பண நெருக்கடி, உணர்வின் அகந்தை ஆட்டம் கண்டுள்ளதைக் குறிக்கிறது.
மனிதனின் சுய கருத்துகளைச் சுற்றி மனத்தின் அகந்தை மையம் கொண்டுள்ளது.
கருத்துகள் யாவும் வெளியிலிருந்து வருகின்றன என மனிதனுக்குத் தெரியாது.
மனத்தின் அகந்தைக்கு இணையதளம், உலகளாவிய அளவில் முறையாக ஆதரவை அழித்து வருகிறது.
மனிதனுக்கு சொத்து, அதிகாரம் அல்லது ஒரு கருத்துகூட சொந்தமாக இருக்க முடியாது.
தனி மனித உரிமையை விட்டுவிடும் பொழுது தனித்துவம் பிறக்கிறது.
செயலில் தனித்துவம் இருப்பின், அது சமூக வலிமைக்கு பிரதிநிதியாக விளங்கும் மனிதன் மூலம் சமூகத்திற்கு அபரிமிதத்தை உற்பத்தி செய்கிறது.
மொத்த சமூகமும் ஒரு தனி மனிதன் மூலம் செயல்படுகிறது என்பது போல், உணர்வின் தனித்துவம் சமூகத்தின் சக்தியை முறைப்படுத்த வேண்டும்.
மனிதன் பேசும் கருத்துகள் சமூகத்தில் எழும் கருத்துகளாகும். சமூகத்தின் மொத்த சக்தியும் ஆதரிக்கும் ஒருவரால் பேசப்படும் கருத்துகளாகும்.
பிரபஞ்ச சுதந்திரத்தைப் பெறுவதற்காக மனிதன் அகந்தையின் சுதந்திரத்தை இழக்கிறான்.
அது போன்ற உயர்ந்த செயல்களின் அடிப்படை, பரிணாமத்தின் உண்மையான ஜீவியத்தின் மூலம் சம்பாதித்த செல்வம் ஆகும்.

She was now, on being settled at home, at leisure to observe the real state of her sister's spirits. Jane was not happy. She still cherished a very tender affection for Bingley. Having never even fancied herself in love before, her regard had all the warmth of first attachment, and, from her age and disposition, greater steadiness than first attachments often boast; and so fervently did she value his remembrance, and prefer him to every other man, that all her good sense, and all her attention to the feelings of her friends, were requisite to check the indulgence of those regrets which must have been injurious to her own health and their tranquillity.

இப்பொழுது அவளால், வீட்டில் சாவகாசமாக அமர்ந்து தன்னுடைய சகோதரியின் உண்மையான மனநிலையை ஆராய முடிந்தது. ஜேன் மகிழ்ச்சியுடன் காணப்படவில்லை. அவள் இப்பொழுதும் பிங்கிலி மீது ஒரு கனிவான பாசம் கொண்டிருந்தாள். இதற்கு முன்பு காதலைப்பற்றி அவள் நினைத்ததுகூட இல்லை, அவளுடைய முதல் காதலின் எல்லா உணர்வுகளும் அவளிடம் இருந்தன. சாதாரணமாக முதல் காதலில் இருக்கும் உறுதியைவிட, அவளுடைய வயது மற்றும் அவளுடைய சுபாவம் காரணமாக, அவளிடம் அது அதிகமாகவே இருந்தது. அவனுடைய ஞாபகங்களைப் போற்றி பாதுகாத்தாள். மற்ற ஆண்களைவிட அவனை அதிகம் விரும்பினாள், தன்னுடைய நண்பர்களின் மீது அதிக கவனம் செலுத்தி வந்த காரணத்தால் அவளுடைய வருத்தத்திற்கு இடம் கொடுப்பது குறைந்தது. இல்லையெனில் அவை அவளுடைய உடல் நலத்திற்கும், மன நிம்மதிக்கும் கேடு விளைவித்திருக்கும்.

127. Secret and Sensitivity: Elizabeth withholds the news that Bingley values Jane and only Darcy stopped the relations. In this is she insincere to Jane or is she sensitive to her? As everywhere, it depends on the attitude not the propriety.
இரகசியம் மற்றும் உணர்வு: பிங்கிலி ஜேனை முக்கியமாகக் கருதுகிறான், டார்சிதான் அந்த உறவினை தடுத்து நிறுத்தினான் என்கிற செய்தியை எலிசபெத் வெளியிடுவதில்லை. இதில் அவள் ஜேனுக்கு

உண்மையில்லாமல் இருக்கிறாளா அல்லது அவளது உணர்வினை மதிக்கிறாளா? எங்கும் இருப்பது போல் அது மனோபாவத்தைப் பொறுத்து இருக்கிறது, மரியாதையைப் பொறுத்து அல்ல.

128. One's sensibility must be honoured. Otherwise injury done once remains forever.
ஒருவருடைய உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். இல்லையெனில் ஒரு முறை பாதிப்பு ஏற்படுத்திவிட்டால் அது ஆறவே ஆறாது.

129. "Jane still nourished a tender affection for Bingley".
The woman waiting for Man is the feminine principle in life.
Silent Will achieves in the higher plane whereas spoken will achieves in our plane.
The feminine principle works everywhere.
It achieves more than the masculine principle.
The masculine principle offers the energy which is organised into results by the feminine principle.
Reading and digestion of what is read are such principles.
Man who earns in one generation mostly loses it in the next generation because what is generated is not assimilated in the next generation.
Should he create an organisation and allow his children to rise in it on their merits, such a fall can be averted.
The old Tamil Chettiar system of sending the children of rich people to start work from below in other establishments is a sound system that is known to have succeeded.
She cannot forget the Man she loved.
She cannot act overtly to consummate her love.
Bingley is so entirely submissive to Darcy that he fulfilled his unanticipated ideas by going to London one day earlier.
Her own tender affection, in its Silence, must reach the depth.
Elizabeth who assiduously works on the expressed and unexpressed emotions of Jane, does not know Darcy was working on a parallel to propose to her.
Working for another is work more fully for oneself.
It increases one's receptivity two or three times.
He who consciously works for another increases his subconscious receptivity.
Conscious goodwill is subconscious accomplishment.
Conscious Silent will is total accomplishment in the conscious and the subconscious.
"பிங்கிலியிடம் ஜேனுக்கு இன்னமும் மென்மையான பாசம் இருந்தது."
ஆணுக்காக பெண் காத்திருப்பது வாழ்க்கையில் பெண்மையின் கொள்கையாகும்.
உயர்ந்த நிலையில் மௌனத்தின் விருப்புறுதி செயல்படும், நமது நிலையில் பேசப்படும் விருப்பம்தான் செயல்படும்.
பெண்மையின் கொள்கைகள் எல்லா இடங்களிலும் செயல்படும்.
ஆண்களின் கொள்கைகளைவிட இது அதிகமாகச் சாதிக்கும்.
ஆணின் கொள்கைகள் சக்தியை அளிக்கும், பெண்ணின் கொள்கைகள் அதனை பலனாக முறைப்படுத்தும்.
படிப்பதும், படிப்பனவற்றை ஜீரணித்துக் கொள்வதும் அது போன்ற கொள்கைகளாகும்.
ஒரு தலைமுறையில் சம்பாதிக்கப்பட்டது அடுத்த தலைமுறையில் பெரும்பாலும் இழக்கப்படுகிறது, ஏனெனில் உற்பத்தி செய்யப்பட்டது அடுத்த தலைமுறையில் ஒன்றிப் போவதில்லை.
அவன் ஒரு அமைப்பை உருவாக்கி, அதில் தன்னுடைய குழந்தைகளை அவர்களுடைய திறமையின் மூலம் வளர அனுமதித்தால், இது போன்ற வீழ்ச்சியைத் தவிர்க்கலாம்.
தமிழ்நாட்டு பணக்கார செட்டியார்கள் தங்களுடைய குழந்தைகளை மற்ற நிறுவனத்தில் ஆரம்பத்திலிருந்து வேலையைக் கற்றுக்கொள்ள அனுப்புவது, வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும் சிறந்த முறையாகும்.
அவள் காதலித்தவனை அவளால் மறக்க முடியவில்லை.
அவளுடைய காதலை நிறைவேற்ற அவளால் வெளிப்படையாகச் செயல்பட முடியாது.
பிங்கிலி டார்சிக்கு முழுமையாக அடிபணிவதினால், ஒரு நாள் முன்னதாகவே லண்டனுக்குச் சென்று அவனுடைய எதிர்நோக்காத எண்ணங்களைப் பூர்த்தி செய்கிறான்.
அவளுடைய கனிவான அன்பு மௌனத்தில் ஆழத்தை அடைய வேண்டும்.
ஜேன் வெளிப்படுத்திய மற்றும் வெளிப்படுத்தாத உணர்வுகளில் ஊக்கத்துடன் செயல்படும் எலிசபெத், டார்சியும் இதே போல் அவளுக்கு திருமண வேண்டுகோள் விடுக்க தயாராகிக் கொண்டிருப்பதை அறியவில்லை.
மற்றவருக்காக வேலை செய்யும்பொழுது தனக்காகவே பூரணமாக வேலை செய்வது போலிருக்கும்.
அது ஒருவருடைய ஏற்புத் திறனை இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகரிக்கும்.
யார் ஒருவன் மற்றவருக்காக நனவுபூர்வமாக வேலை செய்கிறானோ, அவனது ஏற்புத்திறன் ஆழ்மனதளவில் அதிகரிக்கும்.
நனவுபூர்வமான நல்லெண்ணம், ஆழ்மன சாதனையாகும்.

நனவுபூர்வமான மௌன விருப்புறுதி மேல்மனத்திலும், ஆழ்மனத்திலும் ஏற்படும் முழுமையான சாதனையாகும்.

130.“Her regard had all the warmth of first attachment”.

The agitations of the heart, the excitement of expectation have various grades and qualities.
The warmth of first attachment gives Man ideas that are unreal.
For each Man it is a onetime experience.
And it is to be experienced, not explained.
One Man’s experience here is of no use to another Man.
His own experience is not of much use for himself a second time.
A fresh experience takes him afresh with almost the same vigour.
Life is to be lived according to material realities.
Mind generally does not guide here.
What guides here is the collective experience, drawn from the family.
Experiences benefit the future generations.
Marriage is a field where fine ideals and realities of life make a ready compromise, always on behalf of the latter.
Like the career, one can practice his ideas only one or a few times.
Knowledge and practice do not go together.
It is not impossible to arrive at a reasonable course.
Man who comes to marriage is unable to be reasonable.
Marriage itself is a field that decidedly prevents a reasonable behaviour.
To be reasonably successfull in impossible unreasonable conditions is possible.
One who takes the decision from behind these waves will succeed.
That can be reduced to an effective system based on his own inner realities.
All those who wish to honour their outer and inner realities can be fully guided to a total success.
What our reason misses, the reason of our senses cannot miss.
The system clearly leads anyone to that conclusion.
Even those presently unfit are shown by the system how to become fit.
“அவளுடைய மதிப்பில் முதல் காதலின் எல்லா உணர்வுகளும் இருந்தன.”
மனத்தின் நிம்மதியின்மைக்கும், எதிர்பார்ப்பின் பரபரப்புக்கும் பலவிதமான நிலைகளும் தரங்களும் உள்ளன.
முதல் காதலின் உணர்வுகள் மனிதனுக்கு உண்மையல்லாத கருத்துகளை தருகின்றன.
ஒவ்வொரு மனிதனுக்கும் அது ஒரே ஒரு முறை கிடைக்கும் அனுபவமாகும்.
அதை அனுபவிக்க வேண்டும், விளக்க முடியாது.
இங்கு ஒருவரது அனுபவம் மற்றவருக்குப் பயன்படாது.
அவனுடைய சொந்த அனுபவமே அவனுக்கு இரண்டாம் முறை பயன் தராது.
புதிய அனுபவம், அதே உற்சாகத்துடன் அவனை புதியதாக மாற்றும்.
லௌகீகமான உண்மைகளுடன் வாழ்க்கையை வாழ்ந்தாக வேண்டும்.
பொதுவாக மனம் இங்கு வழிகாட்டாது.
குடும்பத்திலிருந்து கிடைக்கும் கூட்டு அனுபவமே இங்கு வழி காட்டும்.
அனுபவம் எதிர்கால தலைமுறையினருக்கு பயன் தரும்.
நுண்ணிய இலட்சியங்களும், வாழ்க்கையின் யதார்த்தங்களும், பெரும்பாலும் வாழ்வின் யதார்த்தங்களுக்காக உடனடியாக சமரசப்படுத்திக்கொள்ளும் ஒரு இடம் திருமணமாகும்.
தொழிலைப் போல், ஒருவர் அவருடைய கருத்துகளை ஒன்று அல்லது சில தடவைகளுக்குப் பின்பற்றலாம்.
அறிவும் நடைமுறையும் சேர்ந்து இருப்பதில்லை.
நியாயமான போக்கை வந்தடைவது முடியாத காரியமல்ல.
திருமணத்தை அடையும் மனிதன் நியாயமாக இருக்க முடிவதில்லை.
திருமணமே, நியாயமாக நடந்துகொள்வதை தீர்மானமாக தடுக்கும் ஒரு களம் ஆகும்.
சாத்தியமில்லாத நியாயமற்ற நிலைகளில், வெற்றிகரமாக நியாயமாக நடந்துகொள்வது சாத்தியமாகும்.
இந்த அலைகளின் பின்னால் இருந்து தீர்மானம் எடுப்பவன் வெற்றி அடைவான்.
அவனது உள்ளிருக்கும் உண்மைகளின் அடிப்படையில் அதனை ஒரு சிறப்பான அமைப்பாக மாற்ற முடியும்.
அகம், புறம் இவற்றின் உண்மை நிலைகளுக்கு மதிப்பு கொடுக்க நினைக்கும் யாவருக்கும் முழு வெற்றி கிடைக்க, அவர்களை முழுமையாக வழி நடத்தலாம்.
நமது விவேகம் கவனிக்கத் தவறுவதை, நமது உணர்வுகளின் விவேகம் தவற விடாது.
அமைப்பு, எவர் ஒருவரையும் அந்த முடிவிற்குத் தெளிவாக அழைத்துச் செல்லும்.
தற்பொழுது தகுதியற்றவர்களாக இருப்பவர்களையும் தகுதி உடையவர்களாக மாற்றவல்லது அமைப்பாகும்.

"Well, Lizzy," said Mrs. Bennet one day, "what is your opinion now of this sad business of Jane's? For my part, I am determined never to speak of it again to anybody. I told my sister Philips so the other day. But I cannot find out that Jane saw anything of him in London. Well, he is a very undeserving young man -- and I do not suppose there is the least chance in the world of her ever getting him now. There is no talk of his coming to Netherfield again in the summer; and I have inquired of everybody, too, who is likely to know."

“என்ன லிசி, ஜேனுடைய இந்த துயரமான சம்பவத்தைப்பற்றி உன்னுடைய கருத்து என்ன? என்னுடைய பக்கத்திலிருந்து இனி இதைப்பற்றி நான் மீண்டும் யாரிடமும் பேச மாட்டேன் என முடிவெடுத்திருக்கிறேன். என்னுடைய சகோதரியான பிலிப்ஸிடமும் இதையேதான் கூறினேன். ஜேன், அவனை லண்டனில் பார்த்தாளா என்பதுபற்றி எனக்கு கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் ஒரு தகுதியில்லாத இளைஞன். இனி அவனை அவள் அடைய முடியும் என்பதற்கு வாய்ப்பே இல்லை என்று நினைக்கிறேன். கோடையில் அவன் மீண்டும் நெதர்பீல்டிற்கு வரும் பேச்சே இல்லை. இது பற்றி தெரிந்திருக்க வாய்ப்புள்ள அனைவரையும் விசாரித்து விட்டேன்,” என்று திருமதி.பென்னட் ஒரு நாள் பேசும்பொழுது கூறுகிறாள்.

131. Mrs. Bennet is one who opens up these wounds and destroys any remaining possibility.
திருமதி பென்னட் புண்பட்ட உணர்வுகளை மீண்டும் கிளப்பி, மீதமுள்ள சாத்தியத்தையும் அழிக்கிறாள்.
132. Once Mrs. Bennet enters the picture, accomplishment waits for her to exhaust all her resources.
திருமதி பென்னட் அரங்கத்தில் நுழைந்தவுடன் அவள் தன்னுடைய எல்லாத் திறமைகளையும் தீர்த்து விடுவதற்கு, சாதனைகள் அவளுக்காக காத்துக் கொண்டிருக்கின்றன.
133. The woman is at a disadvantage in a marriage alliance. She has to wait for the man to propose. The weak party in a negotiation is like a woman. Mrs. Bennet speaks of Jane dying of a broken heart. Jane does not think so. She holds on to her position and expects no one to help her. From her point of view she exhausts her energy positively through appropriate values. The energy acting through values becomes spiritual energies. Exhausting them positively accomplishes the work.
திருமண ஒப்பந்தத்தில் பெண் சாதகமான இடத்தில் இல்லை. ஆண் திருமணப் பேச்சை எடுக்க அவள் காத்திருக்க வேண்டும். பேரம் பேசும்பொழுது பலவீனமான இடத்தில் இருப்பவருக்கு, பெண்ணின் நிலைமைதான். ஜேன் மனம் உடைந்து இறந்து போவாள் என திருமதி பென்னட் பேசுகிறாள். ஆனால் ஜேன் அவ்வாறு நினைக்கவில்லை. அவள் தன்னுடைய நிலையில் உறுதியாக நிற்கிறாள், எவருடைய உதவியையும் எதிர்பார்ப்பதில்லை. அவளுடைய கோணத்தில், அவள் சரியான பண்புகள் மூலம் தன்னுடைய சக்தியை நேர்மறையாக செலவழிக்கிறாள். பண்புகள் மூலம் செயல்படும் சக்தி ஆன்மீகச் சக்திகளாக மாறுகின்றன. நல்ல விதமாக செலவழிக்கும் சக்திகள் காரியத்தை சாதிக்கின்றன.
134. The conversation on this page, as everywhere else, fully describes the level of Mrs. Bennet’s mind. This is her intellectual maximum.
எல்லா இடங்களிலும் இருப்பதைப்போல், புத்தகத்தின் இந்தப் பக்கத்தில் இருக்கும் உரையாடலும், திருமதி பென்னட்டின் மனத்தின் நிலையை முழுமையாக விவரிக்கிறது. இதுதான் அவளுடைய அறிவின் உச்சகட்டம்.
135. That she is ashamed of the entail is a complete lie. Her own marriage belies it.
சொத்துரிமையைக் கண்டு அவள் அவமானம் அடைவதாகச் சொல்வது முழுப்பொய். அவளுடைய திருமணமே இதைப் பொய்யாக்குகிறது.
136. “Lizzy, what is your opinion of this sad business of Jane’s?”

In England of that time, a girl is given full freedom in her relations with a Man till she is engaged.
The system worked independently of the parents.
Mrs. Bennet had taken upon herself to manage Jane’s affairs.
Life will respond to the mother’s will, not to Jane’s.
Now she speaks as if somehow it had become a sad business.
Buying is different from selling though they are of the same plane.
Buying houses differs from buying lands.
Alliances cannot be treated on a par with buying and selling.
Man has only one method which will be applied indiscriminately everywhere.
He who successfully buys may not successfully sell.
Whatever Jane’s capacities were, she was not left free to try her chances.
Those who have meddled with others, elicit other’s opinion when it fails, other’s appreciation when it succeeds.
Jane was powerfully disturbed by her mother’s lamentations.
Darcy who interfered with Bingley had the sense to rectify it.
Mrs. Bennet was unconscious in interfering, unconscious when faced with the result.
She did not have the faculty to evaluate her failures.
Man when he acts in disregard to the spirit, especially when it brings grace, is bewildered facing the result, as he has no way of knowing what is happening.
Nor was she in any position now to move on right lines.

Fifty years after the descent of the Supermind Mankind is like Mrs. Bennet When Mother averted a catastrophe in the subtle plane, the Indians refused to listen to her. She acted through the Chinese.
When things had gone astray, life acted through Darcy, not through Mr. Bennet or his wife.
The best method for Mother is to ask the mischief-maker set it right.
“லிசி, ஜேனுடைய இந்த துயரமான சம்பவத்தைப் பற்றி உன்னுடைய கருத்து என்ன?”
அந்தக் காலத்தில் இங்கிலாந்தில் ஒரு பெண்ணின் திருமணம் உறுதியாகும்வரை, அந்த ஆணுடன் அவள் கொண்டிருக்கும் உறவில் அவளுக்குப் பூரண சுதந்திரம் உண்டு.
பெற்றோர்களின் குறுக்கீடு இல்லாமல் சுதந்திரமாக அந்த முறை செயல்பட்டு வந்தது.
திருமதி பென்னட் ஜேனுடைய விஷயங்களை தன் பொறுப்பில் எடுத்துக்கொள்கிறாள்.
தாயாரின் உறுதிக்கு ஏற்ப வாழ்க்கை பதிலளிக்கும், ஜேனுடையதற்கு அல்ல.
எப்படியோ அது துயரமான சம்பவமாக மாறிவிட்டதாக இப்பொழுது அவள் பேசுகிறாள்.
ஒரே நிலைக்குரியதாக இருந்தாலும் வாங்குவதும் விற்பதும் வெவ்வேறானவை.
வீடு வாங்குவது, மனை வாங்குவதிலிருந்து வித்தியாசப்படும்.
திருமண ஒப்பந்தம், வாங்குவது விற்பதற்கு ஒப்பானது அல்ல.
பாகுபாடின்றி எல்லா இடங்களிலும் செயல்படுத்தகூடிய ஒரே ஒரு முறைதான் மனிதனுக்கு உள்ளது.
வெற்றிகரமாக வாங்குபவன், வெற்றிகரமாக விற்பான் என்று கூற முடியாது.
ஜேனுடைய திறமைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும், அவளுடைய விருப்பத்திற்கு அவளை சுதந்திரமாக இருக்க விடவில்லை.
மற்றவர்கள் விஷயத்தில் குறுக்கிடுபவர்கள், அது தோல்வி அடையும் பொழுது அவர்களது அபிப்பிராயத்தையும், அது வெற்றி அடையும் பொழுது அவர்களது பாராட்டையும் வரவழைப்பர்.
தாயாரின் புலம்பல்களினால் ஜேன் மிகவும் பாதிப்படைந்தாள்.
பிங்கிலி விஷயத்தில் குறுக்கிட்ட டார்சி, அதனை தானே சரி செய்ய வேண்டும் என்பதனை உணர்ந்தான்.
திருமதி பென்னட்டின் குறுக்கீடு அவள் அறியாமலேயே இருந்தது, பலன்களைப் பார்த்தும் அவள் உணரவில்லை.
தன்னுடைய தோல்விகளை கணிக்கும் திறன் அவளிடம் இல்லை.
ஆன்மாவை மதிக்காமல் செயல்படும் மனிதன், முக்கியமாக அது அருளை வழங்கும்பொழுது என்ன நடக்கிறது என்பதை தெரிந்துகொள்ள முடியாததால், அவனுக்குத் திகைப்பு ஏற்படுகிறது.
சரியான வழியில் போகக்கூடிய நிலையிலும் அவள் இப்பொழுது இல்லை.
சத்தியஜீவியம் புவியில் இறங்கி ஐம்பது வருடங்கள் ஆன பிறகும், மனித குலம் திருமதி பென்னட்டைப் போல்தான் இருக்கிறது. சூட்சும நிலையில் அன்னை, பெரிய ஆபத்தைத் தடுத்த பொழுது இந்தியர்கள் அன்னையின் பேச்சை கேட்க மறுத்தனர். சீனர்கள் மூலம் அன்னை செயல்பட்டார்.
விஷயங்கள் தடுமாறியபொழுது டார்சி மூலம் வாழ்வு செயல்பட்டது, திரு பென்னட் மூலமோ அல்லது அவருடைய மனைவியின் மூலமோ அல்ல.
தவறு செய்தவனையே விஷயத்தை சரி செய்யும்படி கேட்பது, அன்னையின் சிறப்பான முறையாகும்.

137. “I am determined to speak of it to no one” – Mrs. Bennet.
Such a declaration comes from one who will not stop talking.
Her incessant talk pains Jane.
He who cannot accomplish a thing satisfies himself by declaring to himself that he would do so.
It is a vicarious satisfaction.
It is significant that Mrs. Bennet never brought her husband in any of her plans for any of those girls.
She acts as if he were not there.
Man when he sees an opportunity acts more or less like Mrs. Bennet.
Rarely men meet with opportunities.
The opportunity may have several facts, but the urge acts at once.
A Man was persuaded to buy a property where an income of Rs. 35,000 was to be got by spending 65,000 rupees.
It is not one’s intelligence that decides in action.
In action what matters is the urge for initiative.
About three fourths of first experience is of this kind.
Men who have met with disastrous catastrophes will be found to have anxiously courted it.
It is often seen as the lure of Money.
The occasion to act is overpowering.
Bingley’s ‘stupid’, Darcy’s ‘tolerable’ are of this type.
Very rarely one exhibits equanimity in the first experience.
Marriage is not only a first experience but the only experience.
One may think of several experiences in view of the availability of divorce.
Seeking divorce, one goes down from the only experience to the inability to gain experience even in that one

experience.

Any organization where strange events take place will fit this description. Whoever initiates that action would have acted unconsciously.

“இதைப் பற்றி யாரிடமும் பேசமாட்டேன் என நான் தீர்மானமாக இருக்கிறேன்”-திருமதி பென்னட்.

வாய் ஓயாமல் பேசுபவரிடமிருந்து இது போன்ற ஒரு அறிவிப்பு வருகிறது.

அவளுடைய தொடர்ந்த பேச்சு ஜேனை துன்புறுத்துகிறது.

ஒரு விஷயத்தையும் சாதிக்க முடியாதவன், தான் அவ்வாறு செய்யப் போவதாக தனக்கே கூறிக் கொள்வதில் திருப்தி அடைவான்.

அது உண்மையான திருப்தி அல்ல.

எந்தப் பெண்களின் எந்த திட்டங்களிலும் திருமதி பென்னட் தன்னுடைய கணவனை ஈடுபடுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் அங்கு இல்லாதது போல் அவள் செயல்படுகிறாள்.

மனிதன் ஒரு வாய்ப்பை காணும் பொழுது, ஏறக்குறைய திருமதி பென்னட்டைப் போல்தான் நடந்துகொள்வான்.

மனிதன் அபூர்வமாக வாய்ப்புகளைச் சந்திக்கிறான்.

வாய்ப்பில் பல விஷயங்கள் இருக்கும், ஆனால் உந்துதல் உடனடியாக செயல்படும்.

Rs. 35,000 ரூபாய் வருமானம் அளிக்கப் போகும் சொத்தை வாங்குவதற்கு Rs.65,000 செலவாகும் என்று தெரிந்தும் அதனை வாங்குவதற்கு ஒரு மனிதன் வற்புறுத்தப்பட்டான்.

ஒருவரது புத்திசாலித்தனம் செயலில் தீர்மானம் எடுக்காது.

செயலில் தன்முனைப்பின் உந்துதலே முக்கியமானது.

முதல் அனுபவத்தின் முக்கால்வாசிப் பங்கு இதைப் போலத்தான் இருக்கும்.

அழிவைத் தரும் பெரிய ஆபத்துக்களை சந்தித்திருக்கும் மனிதன் அதனை விரும்பியே அடைந்திருப்பதைப் பார்க்கலாம்.

பணத்தின் மேலுள்ள ஆசையாகத்தான் அது பல சமயம் இருக்கும்.

செயல்படுவதற்குரிய சந்தர்ப்பம் மிகப் பெரியது.

‘முட்டாள்’ என்று பிங்கிலி கூறியதும், ‘பரவாயில்லை’ என்று டார்சி கூறியதும் இது போன்றவை.

முதல் அனுபவத்தில் அபூர்வமாக ஒருவர் ஒரே சீரான மன நிலையை வெளிப்படுத்துவார்.

திருமணம் என்பது முதல் அனுபவம் மட்டுமல்ல, ஒரே அனுபவமுமாகும்.

விவாகரத்து என்று ஒன்று இருப்பதால், பல அனுபவங்களைப் பற்றி ஒருவர் யோசிக்கலாம்.

விவாகரத்தை நாடுபவர், கிடைக்கும் ஒரே அனுபவத்திலிருந்து, எந்த வித அனுபவத்தையும் பெற முடியாத நிலையிலிருந்து கீழே இறங்குகிறார்.

வினோதமான நிகழ்ச்சிகள் நடைபெறும் எந்த ஒரு அமைப்பும், இந்த ஒரு வர்ணனைக்குள் பொருந்தும்.

அந்த செயலை யார் ஒருவர் முனைந்து ஆரம்பிக்கின்றாரோ, அவர் தன்னை அறியாமலேயே செயல்பட்டிருப்பார்.

"*I do not believe that he will ever live at Netherfield any more."*

“அவன் இனிமேலும் நெதர்பீல்டில் வசிப்பான் என்ற நம்பிக்கை எனக்கில்லை.”

"*Oh, well! It is just as he chooses. Nobody wants him to come. Though I shall always say that he used my daughter extremely ill; and if I was her, I would not have put up with it. Well, my comfort is, I am sure Jane will die of a broken heart; and then he will be sorry for what he has done."*

“ஓ! சரி. அவன் விரும்பியபடியே செய்யட்டும். அவன் இங்கு வர வேண்டும் என்று யாரும் விருப்பப்படவில்லை. அவன் என்னுடைய மகளை மிகவும் மோசமாக உபயோகப்படுத்தியிருக்கிறான் என்று நான் எப்பொழுதுமே கூறுவேன். நான் அவளாக இருந்திருந்தால் இதனை பொறுத்துக் கொண்டிருக்கவே மாட்டேன். எனக்கு என்ன ஒரு ஆறுதல் என்றால், ஜேன் மனமுடைந்து இறந்து போவாள், அப்பொழுது அவன் தான் செய்ததை நினைத்து வருந்துவான்.”

138. “He used my daughter very ill”.

No act can ever be one-sided.

If there is ill-usage it cannot be from one side.

This may not be socially sound, but according to the inner-outer correspondence this is fully true.

Taking her words at their face value, we see Mrs. Bennet pronouncing a sentence of punishment on herself.

It is a psychological truism that he who complains against various people, unconsciously gives out a list of his own temperament.

Elizabeth had to own to Darcy a variation of this principle about her reply to his proposal.

Mrs. Gardiner mentions another principle by which an accused goes and does exactly the thing he is accused of.

He who denies himself the expression of a trait for fear of public disapproval, finding it is known, feels free to express

it.
Education of psychological self knowledge can very well become part of the system.
Sri Aurobindo speaks of the value of biographies and history.
Their education is silent and abiding.
Students of English literature, it was seen, became good managers because literature takes one to the core of life.
Between history and literature, the latter is a more powerful portrayal of life as it springs from imagination while history is in the physical plane.
History records facts, takes care to omit opinions. In fiction the author explains to us the intentions of the characters we miss.
Mrs. Bennet does not know Bingley would not think of her till she forgets him which actually happened when Lydia ran away.
Jane's silent yearning will bring Bingley.
Mrs. Bennet's wailings will keep him away.
Thoughts behave at different levels differently.
"அவன் என்னுடைய மகளை மோசமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறான்".
எந்த செயலும் ஒரு தலைப்பட்சமாக எப்பொழுதும் இருக்க முடியாது.
மோசமாக உபயோகப்படுத்திக் கொண்டிருந்தால், அது ஒரு பக்கத்திலிருந்து எழுந்திருக்காது.
சமூகரீதியாக இது சரியாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் அகம், புறம் இவற்றின் தொடர்பில் இது முழு உண்மை.
அவளுடைய வார்த்தைகளை உண்மை என்று எடுத்துக்கொண்டால், திருமதி பென்னட் தனக்கே தண்டனை அளித்துக் கொள்வது போன்றதொரு வாக்கியத்தை கூறுவதை நாம் பார்க்கலாம்.
பலரையும் குறை கூறுபவர், தன்னை அறியாமலேயே தன்னுடைய மனவுணர்வுகளைப் பட்டியலிடுகிறார் என்பது மனரீதியான உண்மையாகும்.
அவனது திருமண வேண்டுகோளுக்கு அவள் அளித்த பதில், இந்தக் கருத்துக்கு மாறுபட்ட விதத்தில் இருந்தது என்பதை டார்சியிடம் எலிசபெத் ஒத்துக்கொள்ள வேண்டும்.
குற்றம் சாட்டப்பட்டவர் அதே குற்றத்தை செய்வதை, மற்றொரு கருத்தாக திருமதி கார்டினர் கூறுகிறாள்.
பொதுவாக எல்லோரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என எவன் ஒருவன் தன்னிடம் இருக்கும் குணத்தை வெளிப்படுத்த மறுக்கிறானோ, அது எல்லோருக்கும் தெரிந்து விட்டது என அறியும்பொழுது, எந்த வித தயக்கமும் இன்றி அதனை வெளிப்படுத்துகிறான்.
மனத்தின் சுய அறிவு கல்வி முறையில் ஒரு அங்கமாக மாறலாம்.
வாழ்க்கை வரலாறுகளைப் பற்றியும், சரித்திரத்தைப் பற்றியும் ஸ்ரீ அரவிந்தர் பேசுகிறார்.
அவற்றைக் கற்பது மௌனமாகவும், நிலைத்து நிற்பதாகவும் இருக்கும்.
ஆங்கில இலக்கிய மாணவர்கள் சிறந்த நிர்வாகிகளாக இருப்பதைப் பார்க்கிறோம், ஏனெனில் இலக்கியம் மனிதனை வாழ்வின் மையத்திற்கு அழைத்துச் செல்கிறது.
சரித்திரத்திற்கும் இலக்கியத்துக்கும் இடையே வாழ்க்கையை சிறப்பாக படம் பிடித்துக் காண்பிப்பது இலக்கியமே, ஏனெனில் அது கற்பனையில் உதிக்கிறது, ஆனால் சரித்திரமோ ஜட நிலையில் உள்ளது.
கருத்துகளைக் கூறாமல், உண்மைகளை மட்டும் சரித்திரம் பதிவு செய்கிறது. நாம் கவனிக்கத் தவறும் கதாபத்திரங்களின் நோக்கங்களை கதாசிரியர் நமக்கு தனது கதையில் விளக்குகிறார்.
அவள் பிங்கிலியை மறக்கும் வரையில், அவன் அவளை நினைக்கவே மாட்டான் என்பது திருமதி பென்னட்டிற்குத் தெரிவதில்லை, லிடியா ஓடிப்போன பிறகு அது உண்மையில் நடக்கிறது.
ஜேனுடைய மௌனமான ஏக்கம், பிங்கிலியை அழைத்து வரும்.
திருமதி பென்னட்டின் புலம்பல்கள் அவனை விலக்கி வைக்கும்.
வெவ்வேறு நிலையில் எண்ணங்கள் வெவ்வேறு விதமாக நடந்துகொள்ளும்.

139.“Jane will die of a broken heart and he will be sorry”.
In the scheme of things, justice assumes this shade too.
Social justice is based on socially honoured values.
Psychological justice is determined by conscience.
Life's justice, if it can be called so, is determined by what we are to life.
It is fixed by the laws of energy equilibrium.
A girl wronged by an undeserving lover has no rescue to secure justice.
It is not only true of disappointed love; wherever the distances between persons are great enough, the punishment falls on the weak.
Society comes to value justice initially sacrificing a great many victims as the artist discards many of his sketches before he arrives at the best.
Society comes to accept certain values and then the value system is breached by an aberration. Jane's case is one such.
Suppose the boy and the girl were of the same status, the conscience of the society would act subtly on the offender to

compel him to do justice.
A weak victim does not enjoy that silent patronage.
Society has a tyrannical pleasure in punishing the weak.
It is the sadism ingrained in the collective conscience.
Acts of terrorism that evoke great protests if keenly perceived will be seen as an underlying joy in the population.
In the pre-Independence days in India national leaders felt that one cause of delay for independence was the silent admiration of the Englishman by the Indians.
It was more palpably felt in the abolition of slavery.
Slave owners passionately believed in its material benefits.
Slaves themselves knew they would work only under slavery.
Royalty lives in England long after its political demise because emotionally the Royal House has not outlived its use.
Freedom allows freedom to be a slave which is its farthest extension making it true freedom.
Sri Aurobindo gives that right to the Freedom of the Absolute.
"மனம் உடைந்து ஜேன் இறந்து விடுவாள், அவன் பிறகு வருத்தப்படுவான்."
விஷயங்களில் நியாயம் இந்த சாயலிலும் செயல்படும்.
சமூகத்தால் மதிக்கப்பட்டுள்ள பண்புகளின் அடிப்படையில் சமூக நியாயம் அமைந்துள்ளது.
மனோரீதியான நியாயத்தை மனசாட்சி தீர்மானிக்கிறது.
இதை வாழ்வின் நியாயம் என்று அழைக்கக் கூடுமானால், நாம் வாழ்வில் எவ்வாறு இருக்கிறோமோ அவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது.
சக்தியின் சமநிலை சட்டங்களினால் அது நிலைப்படுத்தப்பட்டுள்ளது.
தகுதியற்ற காதலனால் தவறு இழைக்கப்பட்ட பெண்ணிற்கு நியாயம் பெற வழி இல்லை.
ஏமாற்றம் அடைந்த காதலில் மட்டும் இது உண்மையல்ல, இரண்டு நபர்களுக்கு இடையே இருக்கும் இடைவெளி அதிகமாக இருந்தால், தண்டனை பலவீனமானவருக்கே கிடைக்கும்.
ஒரு ஓவியன் தனது படைப்புகளில் மிகச் சிறந்ததைப் பெற, வரைந்த பலவற்றை நிராகரிப்பது போல், நியாயத்தின் மதிப்பினை சமூகம் உணர ஆரம்பத்தில் பலரை பலியாக்குகிறது.
குறிப்பிட்ட பண்புகளை முதலில் சமூகம் ஏற்கிறது, பிறகு அதிலிருந்து விலகிச் சென்று பண்பின் அமைப்பை மீறுகிறது. ஜேனுடைய விஷயமும் அப்படிப்பட்டதே.
ஆணும் பெண்ணும் சம அந்தஸ்து உடையவர்களாக இருப்பின், சமூகத்தின் மனசாட்சி சூட்சுமமாக குற்றவாளியின் மீது செயல்பட்டு, அவனை நியாயம் வழங்கத் தூண்டும்.
குற்றத்திற்கு ஆளானவர் பலவீனமானவராக இருந்தால், இந்த மௌனமான ஆதரிப்பை அனுபவிக்க முடியாது.
பலவீனமானவரைத் தண்டிப்பதில் சமூகத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி கிடைக்கிறது.
சமூகத்தின் மனசாட்சியில் புதைந்துள்ள வக்கிரம் இது.
பெரிய எதிர்ப்பைத் தூண்டும் தீவிரவாதச் செயல்களை உன்னிப்பாக கவனித்தால், சமூகத்தின் அடித்தளத்தில் இருக்கும் சந்தோஷத்தைப் பார்க்கலாம்.
இந்தியாவில் சுதந்திரத்திற்கு முன் இந்தியர்கள் ஆங்கிலேயர்களை மௌனமாக பாராட்டியதே, சுதந்திரம் கிடைக்க தாமதம் ஆனதற்கு ஒரு காரணம் என நாட்டின் தலைவர்கள் நினைத்தனர்.
அடிமைத்தனத்தை ஒழித்தபொழுது இது மிகவும் தெளிவாகவே தெரிந்தது.
பொருள்ரீதியான இலாபத்தை அடிமைகளின் சொந்தக்காரர்கள் மிகவும் நம்பிக் கொண்டிருந்தனர்.
அடிமைத்தனத்தின் கீழ்தான் தாங்கள் வேலை செய்ய முடியும் என்று அடிமைகளுக்கே தெரிந்திருந்தது.
அரசியலில் மன்னராட்சி மறைந்த பிறகும் அரசதிகாரம் இன்னமும் இங்கிலாந்தில் உள்ளது, ஏனெனில் உணர்வுபூர்வமாக அரச குடும்பத்தின் பலன்கள் இன்னமும் எஞ்சியுள்ளன.
சுதந்திரம், சுதந்திரமாக அடிமையாக இருக்க அனுமதிக்கிறது, அதனை அதிகபட்ச உண்மையான சுதந்திரமாக்குகிறது.
பிரம்மத்தின் சுதந்திரத்திற்கு பகவான் அந்த உரிமையை அளிக்கிறார்.

But as Elizabeth could not receive comfort from any such expectation, she made no answer.
இந்த மாதிரியான ஒரு எதிர்பார்ப்பினால், எலிசபெத்திற்கு எந்த விதத்திலும் ஆறுதல் கிடைக்காது என்பதால், அவள் பதிலேதும் அளிக்கவில்லை.

"Well, Lizzy," continued her mother, soon afterwards, "and so the Collinses live very comfortable, do they? Well, well, I only hope it will last. And what sort of table do they keep? Charlotte is an excellent manager, I dare say. If she is half as sharp as her mother, she is saving enough. There is nothing extravagant in their housekeeping, I dare say."

"சரி லிசி" என்று மீண்டும் விரைவில் தொடர்ந்த அவளது தாயார், "காலின்ஸ் குடும்பத்தினர் சௌகரியமாக இருக்கிறார்கள் இல்லையா? நன்று, நன்று, அது நீடிக்கும் என்று நம்புகிறேன். அவர்களுடைய விருந்தோம்பல் எவ்வாறு உள்ளது, ஷார்லெட் நிர்வாகம் செய்வதில் திறமைசாலி என என்னால் கூற முடியும். அவள் தாயுடைய புத்தி கூர்மையில் பாதியேனும் இருந்தால் அவள் வேண்டும் அளவு சேமிப்பாள். அவர்கள் ஊதாரித்தனமாக செலவழிக்க மாட்டார்கள் என எனக்குத் தெரியும்," என்றாள்.

140. "If she is half as sharp as her mother, she is saving enough".

Man has always valued generous spending whether he follows it or not.
There are several silent ideals the whole society takes to and values.
Presently ego is so discouraged. One prides in being non-egoistic, an inversion.
Man respects himself for his capacity to be angry.
Society may not always approve of it.
One knows incapacity to be angry is an essential weakness.
Bingley values his readiness to act, to quit Netherfield in five minutes.
Darcy values superiority of Mind even when it expresses as pride.
Mr. Bennet values not interfering with his wife.
His wife values generous spending which she fully indulged.
She discloses her value that young people should enjoy themselves.
Jane values waiting to be loved.
To be a practical person is a much spoken value.
To treat others equally is a value that has gained currency.
Loyalty has always been a value, but loyalty to whom changes.
Loyalty to the family is being replaced by the loyalty to independence.
These are values that are fairly spoken of.
There are unspoken values that are upheld by the social sensitivity.
To be well dressed is one such value which the hippies attacked.
When we collect all the values in a society that are spoken of, we know of the value of the society.
Collecting the unspoken values, we understand the society.
Valuing their values, that society will happily assimilate you among them.
After 800 years ethnic groups remain separate, are proud of their separate identity.
Caste has come to stay in India as class in Europe by such individualizing cultural identities.
"அவளுடைய தாயாரைப்போல் பாதி அளவேனும் புத்தி கூர்மையுடன் இருந்தால், அவள் வேண்டும் அளவிற்கு சேமிப்பாள்."
தாராளமாக செலவழிப்பதை நடைமுறையில் பின்பற்றுகிறானோ இல்லையோ, மனிதன் எப்பொழுதுமே அதை மதித்து வந்திருக்கிறான்.
பல மௌனமான இலட்சியங்களை முழு சமூகமும் ஏற்றுக்கொண்டு மதிக்கிறது.
தற்பொழுது அகந்தை ஊக்குவிக்கப்படவில்லை. அகந்தையற்று இருப்பதில் ஒருவன் பெருமை கொள்கிறான், இது தலை கீழ் மாற்றம்.
கோபப்படுவதில் மனிதன் பெருமைகொள்கிறான்.
சமூகம் எப்பொழுதும் இதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கக் கூடும்.
கோபப்பட முடியாமல் இருப்பது, முக்கியமான பலவீனம் என்று ஒருவருக்குத் தெரியும்.
விரைவாகச் செயல்படுவதை பிங்கிலி மதிப்பதால், ஐந்து நிமிடங்களில் நெதர்பீல்டை விட்டுக் கிளம்புகிறான்.
மனம் பெருமையாக வெளிப்படும்போதும், மனத்தின் உயர்வை டார்சி மதிக்கிறான்.
திரு பென்னட், தான் தன்னுடைய மனைவியை குறுக்கிடாமல் இருப்பதை மதிக்கிறார்.
தாராளமாக செலவழிப்பதை முழுமையாக அனுபவித்துக் கொண்டிருக்கும் அவருடைய மனைவி, அதனை பெரிதும் மதிக்கிறாள்.
இளம் வயதினர் சந்தோஷமாக அனுபவிக்க வேண்டும் என்று அவளது கருத்தை வெளியிடுகிறாள்.
காதலிக்கப்படுவதற்கு காத்திருப்பதை ஜேன் மதிக்கிறாள்.
நடைமுறை மனிதனாக இருப்பது பெரிதும் பேசப்படும் பண்பு.
மற்றவர்களை சமமாக பாவிக்கும் பண்பு பெருகி வருகிறது.
விசுவாசம் எப்பொழுதுமே ஒரு பண்பாக உள்ளது, ஆனால் யாரிடம் விசுவாசமாக இருக்க வேண்டும் என்பது மாறுகிறது.
குடும்பத்திற்கு விசுவாசமாக இருப்பது சுதந்திரத்திற்கு விசுவாசம் என்று மாறுகிறது.
நல்ல விதமாக பேசப்படும் பண்புகள் இவை.
சமூக உணர்வுகளால் நிலைநிறுத்தப்பட்ட பேசப்படாத பண்புகள் உள்ளன.
நேர்த்தியாக உடை அணிவது அது போன்ற ஒரு பண்பு, இதை ஹிப்பிகள் எதிர்த்தனர்.

பேசப்படும் எல்லா சமூகப் பண்புகளையும் சேர்த்துப் பார்க்கும்பொழுது, சமூகத்தின் மதிப்பு நமக்குத் தெரிய வருகிறது.
பேசப்படாத பண்புகளைப் பார்க்கும்பொழுது, சமூகத்தைப் பற்றி நாம் புரிந்துகொள்கிறோம்.
அவற்றின் மதிப்பினை மதித்தால், அந்த சமூகம் அதனுள் நம்மை சந்தோஷத்துடன் கிரகித்துக் கொள்ளும்.
800 வருடங்களுக்குப் பிறகும், இனக் குழுமங்கள் பிரிந்தே உள்ளன, தனிப்பட்ட அடையாளத்தில் பெருமையும் கொள்கின்றன.
கலாச்சார அடையாளங்களுக்கு தனித்தன்மை அளிக்கப்பட்டு ஐரோப்பாவில் வர்க்கப் பிரிவுகள் ஏற்பட்டது போல், இந்தியாவில் ஜாதிகள் நிலைத்து விட்டன.

"No, nothing at all."
"இல்லை! எந்த ஊதாரித்தனமும் இல்லை."

"A great deal of good management, depend upon it. Yes, yes. They will take care not to outrun their income. They will never be distressed for money. Well, much good may it do them! And so, I suppose, they often talk of having Longbourn when your father is dead. They look upon it quite as their own, I dare say, whenever that happens.
"திறமையாக நிர்வாகம் செய்வாள் என்று நான் உறுதியாக கூற முடியும். ஆம், அவர்கள் வரவுக்கு மீறி செலவு செய்யாமல் இருப்பதில் கவனமாக இருப்பார்கள். பணத்திற்காக என்றுமே கஷ்டப்படமாட்டார்கள். ஆதலால் அது அவர்களுக்கு நல்லது செய்யட்டும். உங்களது தந்தையின் மறைவுக்குப் பிறகு லாங்பர்ன் அவர்களுக்கு கிடைப்பது பற்றி அடிக்கடி பேசுவார்கள் என்று நினைக்கிறேன். எப்பொழுது அது நடக்கப் போகிறதோ தெரியவில்லை, அனால் தங்களுக்குத்தான் சொந்தம் என்றுணர ஆரம்பித்திருப்பர்."

141. Mrs. Bennet dwells on the entail like that.
சொத்துரிமையைப் பற்றி திருமதி பென்னட் எப்பொழுதும் நினைத்துக் கொண்டு இருக்கிறாள்.

142. "They will take care not to outrun their income". – Elizabeth about Charlotte.
Economic common sense ensures survival.
It controls the impulse to spend in terms of the income.
Mrs. Bennet never had it.
She never ran into debts, but failed to provide for the daughters.
Her extravagance was at the expense of her daughter's future welfare.
The impulse to spend is vital.
Daughters' future welfare is a thought.
Thought in the vital impulse is common sense.
Thought controlling the vital is a shrinking movement.
Vital impulse rising to thought is an expansive movement.
One is miserliness and the other is economy.
One is external control and the other is self-discipline.
Control can degenerate into cruelty or tyranny.
Self-discipline can mature into values and ripen into culture.
The value of cultures is distinguished by their collective sensitivity.
The basis of culture is plenty, education and experience.
Scarcity cannot issue impulse of generosity.
Without education a generous impulse will be a coarse or crude exhibition.
It is experience that organizes the occasion of plenty by the compulsion of understanding into a cultured behaviour.
The mental exercise of making the uncultured appreciate the beauties of cultural behaviour makes the personal experience into impersonal knowledge.
A system of education can be conceived on this basis.
It can be delivered by teachers anxious to acquire culture.
A sadhak through this route becomes a yogi.
His own personal ascent thus changes into universal descent.
Hence one Man's perfection can save the world.
We see then how darkness is no evil but a supreme opportunity to seek the greatest possible delight of Self-discovery.
"வருமானத்தை மீறிய செலவு ஏற்படக் கூடாது என்பதில் கவனமாக இருப்பார்கள்—ஷார்லெட்டைப் பற்றி எலிசபெத் கூறுவது."
பொருளாதார இயல்பறிவு, வாழ்க்கைக்கு உறுதி அளிக்கிறது.
இது வருமானத்திற்கு ஏற்ப செலவு செய்யத் தூண்டுகிறது.
திருமதி பென்னட்டிற்கு அது எப்பொழுதுமே இல்லை.

அவளுக்குக் கடன் ஏற்பட்டதே கிடையாது, ஆனால் பெண்களுக்கு எதையும் சேர்த்து வைக்கவில்லை.
அவளுடைய பெண்களின் எதிர்கால நன்மையை பணயம் வைத்து, அவளது ஊதாரித்தனம் இருந்தது.
செலவழிக்கும் உந்துதல் உணர்வுக்குரியது.
பெண்களின் எதிர்கால நன்மை என்பது ஒரு எண்ணமாக இருக்கிறது.
உணர்வின் உந்துதலில் உள்ள எண்ணம் இயல்பறிவாகும்.
உணர்வைக் கட்டுப்படுத்தும் எண்ணம் சுருங்கும் இயக்கமாகும்.
உணர்வின் உந்துதல் எண்ணமாக உயரும்பொழுது விரிவடையும் இயக்கமாகிறது.
ஒன்று கஞ்சத்தனமாகும், மற்றது சிக்கனம் ஆகும்.
ஒன்று புறத்திலிருந்து எழும் கட்டுப்பாடு, மற்றது சுய கட்டுப்பாடு.
கட்டுப்பாடு, கொடுமையாகவும் கொடூரமாகவும் நிலையில் இறங்கலாம்.
சுய கட்டுப்பாடு பண்புகளாக முதிர்ச்சி அடைந்து, கலாச்சாரமாக பக்குவம் அடையலாம்.
கலாச்சாரங்களின் மதிப்பு, அவைகளின் கூட்டு உணர்வுகளால் அடையாளம் காணப்படுகிறது.
அபரிமிதம், கல்வி, அனுபவம் இவைகளே கலாச்சாரத்தின் அடிப்படையாகும்.
பற்றாக்குறை தாராள குணத்தைத் தூண்டாது.
கல்வியில்லாமல் தாராள குணம் நாசூக்கின்றியும் அல்லது முரட்டுத்தனமாகவும் வெளிப்படும்.
புரிதலின் நிர்பந்தத்தால் அபரிமிதத்தை நாகரிகமான நடத்தையாக அனுபவம் முறைப்படுத்துகிறது.
நாகரிகமற்றவனுக்கு நாகரிக நடத்தையின் அழகினைப் பாராட்ட அளிக்கப்படும் மனப் பயிற்சி, சொந்த அனுபவத்தை பொதுவான அறிவாக மாற்றுகிறது.
இதன் அடிப்படையில் கல்விக்கு ஒரு அமைப்பை உருவாக்கலாம்.
நாகரிகத்தைப் பெற்றுக்கொள்ள ஆர்வமாக இருக்கும் ஆசிரியர்களால் இதனை அளிக்கலாம்.
இந்த வழியில் ஒரு சாதகன் யோகியாக மாறுவான்.
அவனது சொந்த பரிணாமம் பிரபஞ்சத்தில் சிருஷ்டியாக இவ்வாறு மாறுகிறது.
ஆகவே ஒரு மனிதனது பூரணத்துவம் உலகையே காப்பாற்றும்.
எவ்வாறு இருட்டு என்பது தீமை கிடையாது, ஆனால் சுய கண்டுபிடிப்பின் உயர்ந்த பேரானந்தத்தை நாடும் மிக உயர்ந்த வாய்ப்பு என்பதை நாம் பார்க்கிறோம்.

"*It was a subject which they could not mention before me."*
"அது என் முன்னால் பேசப்பட முடியாத விஷயம்."

143. Darcy's second proposal waits for Collins' letter on Darcy.
டார்சியைப் பற்றி காலின்ஸ் எழுதும் கடிதத்திற்காக அவனது இரண்டாவது திருமண பேச்சு காத்துக் கொண்டிருக்கிறது.

144. "It was a subject they could not mention before me" – Elizabeth on Longbourn.
Life is one of million expressions of culture.
All the time Man's intelligence is in action.
Observation, thinking, responding, deciding, feeling, choosing, knowing are the end expressions of existence.
The centre of all these functions is the ego.
To replace ego by the Divine is yoga.
After the ego is removed Nature, Swabhava, will remain there.
Swabhava is the force of form we have taken.
Swabhava is the force of the truth the Absolute has seen.
The force and the form are Brahman.
The force and the form are in the Brahman.
Brahman is in them.
The force is realized in the form.
The form by a rhythm and process realizes the truth in the force.
It is Mind that separates it from others by division.
Actually the separation is effected by the ego.
Having removed the ego separation is not there.
Discovering the soul of Nature makes the form perfect form.
Perfect form expresses itself in Simultaneous Time.
In human life all these can be traced.
Man in darkness, imperfection, low consciousness, suffering, pain, evil, death moves to light, perfection, high consciousness, pleasure, good, immortality.
This is done by moving from the body to the spirit via life and Mind.
It is equally a movement from Atman to Ishwara through Purusha.
It passes through conception, limitation, and absorption.

It takes him from the Individual to universal to the Transcendental.
It makes him pass through subjective, objective states.
It changes the hidden bliss in him into delight of the Psychic.
The key to these changes is the human choice.
“அவர்கள், என் முன் பேசக் கூடிய விஷயம் அல்ல அது- லாங்பர்னைப் பற்றி எலிசபெத்”.
நாகரிகத்தின் கோடிக்கணக்கான வெளிப்பாடுகளில் ஒன்றுதான் வாழ்க்கை.
எல்லா சமயங்களிலும் மனிதனின் புத்திசாலித்தனம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.
கவனிப்பது, சிந்தனை, மறுமொழி அளிப்பது, தீர்மானிப்பது, உணர்வு, தேர்ந்தெடுப்பது, தெரிந்துகொள்வது இவை யாவும் வாழ்க்கையின் இறுதி வெளிப்பாடுகள்.
இவை எல்லாவற்றின் செயல்பாட்டின் மையம் அகந்தையாகும்.
அகந்தைக்கு பதில் இறைவனை கொண்டு வருவது யோகமாகும்.
அகந்தை அழிந்த பின்பு மிஞ்சுவது இயற்கையும் சுபாவமும்.
நாம் எடுத்திருக்கும் வடிவத்தின் சக்திதான் சுபாவம்.
இறைவன் பார்த்திருக்கும் உண்மையின் சக்தியே சுபாவம் ஆகும்.
சக்தியும் வடிவமும் பிரம்மமே.
சக்தியும் வடிவமும் பிரம்மத்தில் உள்ளன.
பிரம்மம் அவைகளுக்குள் உள்ளது.
சக்தி வடிவத்தில் உணர்ந்துகொள்ளப்படுகிறது.
வடிவம் லயத்துடனும் வழி முறையுடனும் சக்தியில் உண்மையை உணருகிறது.
அதை மனம்தான் மற்றவைகளிடமிருந்து பகுப்பதன் மூலம் பிரிக்கிறது.
பிரிவினை அகந்தையால் ஏற்படுத்தப்படுகிறது.
அகந்தையை அகற்றினால் அங்கு பிரிவினை கிடையாது.
இயற்கையின் ஆன்மாவைக் கண்டு பிடிப்பது, வடிவத்தை செம்மையான வடிவமாக்கும்.
பூரணமான வடிவம், மூன்றாம் நிலை காலத்தில் தன்னை வெளிப்படுத்தும்.
மனித வாழ்க்கையில் இவை எல்லாவற்றையும் காணலாம்.
இருள், குறையுள்ள நிலை, தாழ்ந்த ஜீவியம், துன்பம், வலி, தீமை, மரணம் இவைகளிலிருந்து மனிதன் ஒளி, பூரணத்துவம், உயர் ஜீவியம், சந்தோஷம், நல்லவை, அமரத்துவம் என்ற நிலைகளுக்குச் செல்கிறான்.
வாழ்வு மனத்தின் வழியாக உடலிலிருந்து ஆன்மாவுக்கு செல்வதன் மூலம் இது நடக்கிறது.
இது, புருஷன் மூலம் ஆத்மாவிலிருந்து ஈஸ்வரனை அடையும் இயக்கமுமாகும்.
அது கருத்தாக்கம், வரையறுத்தல், மறைதல் இவைகளை கடந்து செல்கிறது.
தனித்துவத்திலிருந்து பிரபஞ்சத்திற்கும், பிரம்மத்திற்கும் அவனை அழைத்துச் செல்கிறது.
அகம், புறம் நிலைகளை அவனை கடக்க வைக்கிறது.
அவனுள்ளே மறைந்திருக்கும் ஆனந்தத்தை, சைத்திய புருஷனின் ஆனந்தமாக மாற்றுகிறது.
மனித விருப்பமே இந்த மாறுதல்களுக்கான திறவுகோலாகும்.

"*No; it would have been strange if they had: but I make no doubt they often talk of it between themselves. Well, if they can be easy with an estate that is not lawfully their own, so much the better. I should be ashamed of having one that was only entailed on me.*"
“ஆமாம், அப்படி பேசியிருந்தால் அது விநோதமாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் அடிக்கடி இதைப்பற்றி பேசுவார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. சட்டப்படி தங்களுக்குச் சொந்தமில்லாத எஸ்டேட்டை மிக சௌகரியமாகப் பெற்றுக் கொள்கிறார்கள், நல்லது, அப்படியே இருக்கட்டும். இம்மாதிரி ஒரு நிபந்தனையின் பேரில் வருகிற சொத்தை ஏற்றுக் கொள்வதற்கு நான் வெட்கப்படுவேன்.”

145. When Pemberley enters by one door the entail, Mrs. Bennet’s wailing on the entail, he who represents the entail, must leave through the other door.
ஒரு கதவு வழியாக பெம்பர்லி நுழையும்பொழுது, சொத்துரிமைக்காக புலம்பும் திருமதி பென்னட்டின் புலம்பலும், சொத்தின் பிரதிநிதியாக இருப்பவனும், வேறு கதவு வழியாக வெளியே போயாக வேண்டும்.
146. Events are so arranged that the one that enters demands another to enter with it and quit the place.
ஒன்று உள்ளே நுழையும்பொழுது மற்றொன்றும் அதன் கூடவே நுழைந்து, பிறகு அவ்விடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று எதிர்பார்ப்பது போல் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.
147. “I should be ashamed of having one that is entailed on me”.
Man loves to think well of himself.
More than that, he loves to think ill of others.
What he would most prefer is others should think well of himself.
Energy in him praises himself.
Lack of energy to praise himself or others thinks ill of others.
Expanding ego loves to expand in others.

Positive aspiration is aspiration for the being.
Negative aspiration is the aspiration for Non-Being.
Can we aspire positively for the Non-Being?
Ego or Nature in us can only aspire negatively.
Psychic can aspire positively for that which includes Being and Non-Being.
Elizabeth's appreciation of Wickham is aspiration for falsehood.
Elizabeth moving to Mind is to move from the negative aspiration to positive aspiration.
Darcy aspiring to be a gentleman in her eyes is the aspiration of the Psychic.
Aspiration for falsehood is aspiration for the Non-Being, a negative one.
Aspiration for truth is positive aspiration.
Aspiration for the truth in another's falsehood – her abuse – is psychic aspiration.
For a sadhak to assume no evil, the quest is for Truth everywhere even inside the falsehood.
Should he succeed there, he will appreciate the greater opportunity of falsehood than Truth.
Truth makes one move above.
Falsehood makes Man move above discovering a greater Truth.
The role of the surface Mind, ignorance, falsehood, its evolutionary use for Man can best be appreciated by the attitude Darcy took to Elizabeth.
He saw god in her.
The sadhak assumes God everywhere.
"எனக்காக அளிக்கப்பட்டிருக்கும் சொத்தை அடைவதற்கு நான் அவமானப்பட வேண்டும்".
மனிதன் தன்னைப் பற்றி நல்லதாகவே நினைத்துக்கொள்ள விரும்புவான்.
இதற்கும் மேல் மற்றவர்களைப் பற்றி கெட்டதாகவும் நினைக்க விரும்புவான்.
அவன் மிகவும் விரும்புவது, மற்றவர்கள் அவனைப் பற்றி நல்லதாக நினைக்க வேண்டும் என்பதுதான்.
அவனிடம் இருக்கும் சக்தி அவனையே புகழும்.
தன்னையோ அல்லது மற்றவர்களையோ புகழ சக்தி இல்லையெனில், மற்றவர்களைப் பற்றி கெடுதலாக நினைக்கத் தோன்றும்.
விரிவடையும் அகந்தை மற்றவர்களிடம் விரிவடைய ஆசைப்படும்.
நேர்மறையான ஆர்வம் ஜீவனின் ஆர்வமாகும்.
எதிர்மறையான ஆர்வம் அசத்தின் ஆர்வமாகும்.
நேர்மறையாக, அசத்திற்கு நாம் ஆர்வப்பட முடியுமா?
நம்முள் இருக்கும் அகந்தையினாலோ அல்லது நாம் இயற்கையாக இருப்பதினாலோ எதிர்மறையாகத்தான் ஆர்வப்பட முடியும்.
சத், அசத் இரண்டையும் உள்ளடக்கிய சைத்திய புருஷன், நேர்மறையாக ஆர்வப்பட முடியும்.
விக்காமை எலிசபெத் பாராட்டுவது பொய்மைக்கு ஆர்வப்படுவது.
மனதிற்கு எலிசபெத் நகருவது, எதிர்மறையான ஆர்வத்திலிருந்து நேர்மறையான ஆர்வத்திற்கு செல்வதாகும்.
எலிசபெத்தின் பார்வையில் டார்சி உயர்குடி மனிதனாக விளங்க ஆர்வப்படுவது, சைத்திய புருஷனின் ஆர்வமாகும்.
பொய்மைக்கு ஆர்வப்படுவது அசத்தின் ஆர்வமாகும், எதிர்மறையானது.
உண்மைக்கு ஆர்வப்படுவது நேர்மறையானது.
மற்றவரது பொய்மையிலுள்ள உண்மைக்கு ஆர்வப்படுவது - அவளுடைய நிந்தனை - சைத்தியத்தின் ஆர்வமாகும்.
தீமையே இல்லாமல் ஒரு சாதகன் இருக்க விரும்பினால், எல்லா இடங்களிலும் உள்ள உண்மையைத் தேட வேண்டும், பொய்மையிலுள்ள உண்மையைகூட தேட வேண்டும்.
அங்கு அவன் வெற்றிபெற்றால், உண்மையைவிட பொய்மையின் மூலம் கிடைக்கும் பெரிய வாய்ப்பினை போற்றுவான்.
உண்மை ஒருவரை உயர்த்தும்.
பொய்மை, மனிதனை மேலே உயர்த்தி, பெரிய உண்மையைக் கண்டு பிடிக்க வைக்கும்.
மேல் மனத்தின் பங்கு, அறியாமை, பொய்மை, பரிணாமத்தில் அது மனிதனுக்கு செய்யும் உதவி இவற்றை டார்சி, எலிசபெத்திடம் கொண்டிருந்த மனோபாவத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம்.
அவளிடம் அவன் இறைவனைக் கண்டான்.
சாதகன் எங்கும் கடவுளைக் காண்பான்.

Chapter 18: Lydia is Invited to Brighton

பிரைட்டனுக்கு வரும்படி லிடியாவிற்கு கிடைக்கும் அழைப்பு

Summary: Kitty and Lydia are upset that the officers are to leave Meryton. They pester Mr. Bennet to take them to Brighton. Mrs. Forster, the Colonel's wife invites Lydia with her at Brighton, so Lydia is allowed to go. Elizabeth attempts to persuade her her father to stop Lydia, but he doesn't listen. Elizabeth gives up. She meets Wickham before the regiment leaves, and hints that she knows more than he has revealed about his past. Lydia leaves with the officers and Mrs. Forster.

மெரிடனை விட்டு இராணுவ அதிகாரிகள் கிளம்புவதால் கிட்டியும் லிடியாவும் வருத்தம் அடைகின்றனர். தங்களை பிரைட்டனுக்கு அழைத்துச் செல்லுமாறு திரு பென்னட்டை வேண்டுகின்றனர். திருமதி பாஸ்டர் லிடியாவுக்கு அழைப்பு விடுக்கிறாள். அதனால் லிடியாவுக்கு அங்கு செல்ல அனுமதி கிடைக்கிறது. எலிசபெத், தந்தையிடம் அவளை அங்கு தனியாக அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக கொள்கிறாள், ஆனால் அவர் அதற்கு செவிமடுப்பதில்லை. எனவே எலிசபெத் அம்முயற்சியை கை விடுகிறாள்.படைப் பிரிவினர் கிளம்புவதற்கு முன் எலிசபெத் விக்காமை சந்திக்கிறாள். அவனுடைய கடந்த காலத்தைப் பற்றி அவன் கூறாத விஷயங்களும் தனக்குத் தெரியும் என்று உணர்த்துகிறாள். லிடியா அதிகாரிகளுடனும் திருமதி பாஸ்டருடனும் கிளம்புகிறாள்.

The first week of their return was soon gone. The second began. It was the last of the regiment's stay in Meryton, and all the young ladies in the neighbourhood were drooping apace. The dejection was almost universal. The elder Miss Bennets alone were still able to eat, drink, and sleep, and pursue the usual course of their employments. Very frequently were they reproached for this insensibility by Kitty and Lydia, whose own misery was extreme, and who could not comprehend such hard-heartedness in any of the family.

அவர்கள் திரும்பி வந்த முதல் வாரம் விரைவாகச் சென்றது. இரண்டாவது வாரம் தொடங்கியது. படைப்பிரிவு மெரிடனில் தங்கப் போகும் இறுதி வாரம் அது, சுற்றுவட்டாரத்தில் உள்ள இளம் பெண்கள் தலையைத் தொங்கப் போட்ட வண்ணம் இருந்தனர். அந்த மனச்சோர்வு ஏறத்தாழ எல்லா இடங்களிலும் இருந்தது. மூத்த இரு மிஸ்.பென்னட்களுக்கு மாத்திரம்தான் எப்பொழுதும்போல் சாப்பிடவும், குடிக்கவும், தூங்கவும், அவர்களுடைய அன்றாட வேலைகளையும் கவனிக்க முடிந்தது. எல்லையில்லாத் துயரம் அடைந்திருந்த கிட்டியும், லிடியாவும் அவர்களை, இவ்வாறு உணர்ச்சியில்லாமல் இருப்பதற்கு கண்டனம் செய்தனர். மேலும் இக்குடும்பத்தில் இவ்வாறு கல்நெஞ்சக்காரர்களாக இருப்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

1. Members of a community enjoying the benefits of the discipline of it long for the right to break the rules.
   சமுதாயத்தின் நெறிகளின் பலன்களை அனுபவிக்கும் அதன் அங்கத்தினர்கள், அந்த சட்டங்களை உடைத்து வெளி வருவதற்கு ஏங்குகின்றனர்.
2. Hard-heartedness of any family.
   எந்த ஒரு குடும்பத்தின் கல்நெஞ்சுத்தனம் இது.
3. Most of the inhabitants there are of lower middle class where girls are after grooms of £200 annual income. Obviously, the locality does not have enough such men. The officers are far better than a brewer or butcher husband.No wonder the young ladies are drooping.As Mr. Bennet does not take his girls to London their bridal openings are next to nil.
   அங்கு இருப்பவர்களில் பெரும்பாலானோர் மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்கள், வருடத்திற்கு இருநூறு பவுன் வருமானம் இருக்கும் மணமகனை நாடும் பெண்கள் உள்ள குடும்பங்கள் இருக்கும் இடம் அது. அங்கு அது போன்ற போதிய ஆண்கள் இல்லை. சாராயம் காய்ச்சுபவர் அல்லது இறைச்சி விற்பவர் கணவனாக வருவதை விட அதிகாரிகளே மேல். இதனால் பெண்கள் சோம்பிப் போய் உட்கார்ந்து இருந்தது ஆச்சரியமாக இல்லை. திரு பென்னட் தன்னுடைய பெண்களை லண்டனுக்கு அழைத்துச் செல்லாமல் இருப்பதால் அவர்களுக்கு திருமண வாய்ப்பே இல்லாத நிலை உருவாகிறது.
4. "The first week of their return was gone".
   One's capacity for steady organized behaviour is seen after a work is over.
   An army's inherent power is witnessed while it retreats defeated.
   Clarity in defeat is a measure of idealism.
   Available steadiness, values, ideals in adversity show the real inner Man.
   Love of the couples is seen in their middle or old age.
   Consecration that lingers when one is most tired is of the real consciousness.
   A devotee of Shiva prayed that his devotion must remain even if he went mad.
   He took a fruit that made him mad. He still remembered Shiva. He, in his madness, composed one hundred Sanskrit verses on Uma, Shiva's consort. As per instructions, his disciples observed his devotion in his insane period. He took an antidote to that poisonous fruit and regained sanity. To this day "Uma Sahasranama" is famous.
   The Bible says Judge another at his best.
   To judge oneself at his worst is realistic.

- He who consecrates an issue every time it presents to his memory will solve it.
- Consecrating an opportunity like that, it will yield fruits.
- **Solving all his problems only by consecration, vast wealth will move towards him.**

These are ways by which the many-sidedness of Man's personality is known.
Consecration only initiates one's energy into yoga.
Its scope extends horizontally to the ends of the universe, vertically to the Transcendent before yoga reaches its goal.
To find every aspect of yoga in one's own life is 'All life is Yoga.'
To find all of them in Pride and Prejudice is our endeavour.
The capacity of Lydia and Wickham to act as ever before after their wedding speaks as much of the Bennet family as Elizabeth in Pemberley.
To see one as the counterpart of the other, to praise neither nor blame either is wisdom.
It is one thing to realize that Lydia is as important to the story as Elizabeth.
It is another thing, a far more valuable response from Sri Aravindam, to know that Lydia is as wonderful as Elizabeth.
"அவர்கள் திரும்பி வந்து ஒரு வாரம் ஆகிவிட்டது".
ஒரு வேலை முடிந்த பிறகு, ஒருவரது நிதானமான முறையான நடத்தையின் திறமை காணப்படுகிறது.
தோற்றுப் போய் திரும்பி வரும்பொழுது இராணுவத்தின் உள்ளுறை சக்தியைப் பார்க்கலாம்.
இலட்சியத்தின் அளவு தோற்பதில் உள்ள தெளிவில் தெரியும்.
எதிரிடையான நிலைமைகளில் மனிதனிடம் இருக்கும் நிதானம், பண்புகள், இலட்சியங்கள் இவை உண்மையான மனிதனைக் காண்பிக்கும்.
நடு வயதிலோ அல்லது முதுமையிலோ தம்பதியினரின் அன்பு வெளிப்படும்.
ஒருவர் மிகவும் களைப்பாக இருக்கும்பொழுது நீடித்திருக்கும் சமர்ப்பணம் உண்மையான ஜீவியத்திற்குரியது.
தான் பைத்தியமானாலும், தன்னுடைய பக்தி குறையக் கூடாது என்று ஒரு சிவபக்தன் வேண்டினான்.
ஒரு பழம் உண்டதால் அவர் பைத்தியமானார். ஆனால் சிவனின் ஞாபகம் தொடர்ந்து இருந்தது. தனது அந்த நிலையிலும் அவர் வடமொழியில் நூறு செய்யுள்கள் சிவனது மனைவியாக விளங்கும் உமாவின் மேல் எழுதினார். அவர் கூறியபடி அந்த நிலைமையிலும் அவரது பக்தியை அவரது சிஷ்யர்கள் கண்டனர். மாற்று மருந்து உண்டு, அப்பழத்தின் விஷத்திலிருந்து வெளி வந்தார். இன்று வரை உமா சஹஸ்ரநாமம் புகழோடு விளங்குகிறது.
மற்றவரை அவரது சிறந்ததில் மதிப்பிட வேண்டும் என்கிறது பைபிள்.
ஒருவர் தன்னை தன்னுடைய மோசமானதில் மதிப்பிடுவது உண்மையாக இருக்கும்.

- ஒரு விஷயம் ஞாபகம் வரும் பொழுதெல்லாம் சமர்ப்பணம் செய்யும் ஒருவன் அதனை தீர்த்து வைப்பான்.
- அது போல் வாய்ப்பினை சமர்ப்பணம் செய்தால் அது பலனளிக்கும்.
- **அவனது எல்லாப் பிரச்சினைகளையும் சமர்ப்பணம் மூலம் தீர்த்தால் பெரிய செல்வம் அவனை நோக்கி வரும்.**

மனிதனுடைய ஆளுமையின் பல பக்கங்கள் இந்த வழிகள் மூலம் தெரிய வரும்.
ஒருவரது சக்தியை யோகத்திற்கு தூண்டுவது சமர்ப்பணமே.
யோகம் அதனுடைய இலட்சியத்தை அடைவதற்கு முன்னால் பிரபஞ்சத்தின் எல்லைகள் வரையிலும், பிரம்மத்தை எட்டும் அளவிற்கும் அதன் வாய்ப்பு இருக்கும்.
ஒருவருடைய வாழ்க்கையில் யோகத்தின் அனைத்து அம்சங்களையும் பார்ப்பது 'வாழ்வனைத்தும் யோகமாகும்'.
Pride and Prejudice-ல் அவை எல்லாவற்றையும் பார்ப்பது நமது முயற்சி ஆகும்.
திருமணத்திற்குப் பிறகு லிடியாவும் விக்காமும் முன்பு இருந்தது போலவே நடந்துகொள்வது, எலிசபெத் பெம்பர்லியில் இருப்பதற்கு சமமாக பென்னட் குடும்பத்தைப் பற்றி நமக்கு உணர்த்துகிறது.
ஒருவரை மற்றவர் ஈடு செய்பவர்போல் பார்த்தால், இருவரையும் பாராட்டுவதோ அல்லது குறைகூறுவதோ அறிவுடையதாகாது.
லிடியாவும் எலிசபெத்தைப்போல் கதைக்கு மிகவும் முக்கியம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.
லிடியா எலிசபெத்திற்கு சமமாக அற்புதமானவள் என்று தெரிந்து கொள்வது, ஸ்ரீ அரவிந்தத்திலிருந்து கிடைத்த மேலும் மதிப்புள்ள பதில் என்பது இன்னொரு விஷயம்.

5. "All the young ladies in the neighbourhood were drooping".
An opportunity is as much a danger.
Neither of them arrives singly.
Man accepts the right part of it; the wrong part imposes itself on him.
To accept the right part knowing only to it can he relate now and also knowing the other is not wrong but right in the long run, is the best way of accepting a mixed event.
All events are thus mixed.
Man accepts one, the other imposes on him which he knows as a problem.
Anything is an opportunity in its own time and in its own context.
Things are neither right nor wrong but either in their context or not.

An event is an event in Life.
It moves along the lines of life to ripen and mature to that of divine life.
Only our ego does not find its course acceptable.
One who knows the lines of divine life, accepting events of life as they are will find by his right human choice events move as they ought to move.
The ego asserts, deflects its course.
The strained course apparently obliging the ego insistently moves towards the divine goal.
Some realize the force of the course and keep quiet.
Others choose to change their courses to the right ones.
These are the ones who are frustrated and resent.
Still others, even after the results arrive, try to deflect it again.
In every one of them we can see the invariable progress made at every moment.
Man thinks, society thinks and acts, life thinks, acts and determines, Spirit witnesses quietly all through.
Man shifting to the Psychic releases the Supramental force which arrests all movements, turns them upwards, gives a miraculous result and withdraws.
It cannot, in our conditions, act for more than a minute.
"அருகாமையில் வசித்து வந்த எல்லா இளம் பெண்களும் சோர்வுற்று இருந்தனர்".
வாய்ப்பும் ஆபத்திற்குச் சமம்.
இரண்டுமே தனியாக வராது.
அதில் சரியான பகுதியை மனிதன் ஏற்றுக்கொள்கிறான், தவறான பகுதி தன்னையே அவன் மேல் திணித்துக் கொள்ளும்.
தற்பொழுது சரியான பகுதியோடு மட்டுமே தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்பதை அறிந்து, அதை மட்டும் ஏற்றுக்கொண்டு, மற்றது தவறு இல்லை ஆனால் இறுதியில் சரியானதாக இருக்கும் என்று தெரிந்து கொள்வது, நல்லதும் கெட்டதும் இணைந்த நிகழ்வுகளை ஏற்றுக்கொள்வதற்கு மிகச் சிறந்த வழி ஆகும்.
எல்லா நிகழ்வுகளும் இவ்வாறு கலந்ததுதான்.
மனிதன் ஒன்றை ஏற்றுக்கொள்கிறான், பிரச்சினை என்று நினைக்கும் மற்றது அவன் மீது திணித்துக் கொள்கிறது.
எதுவுமே அதனுடைய நேரத்திலும், அதனுடைய இடத்திலும் ஒரு வாய்ப்பே.
விஷயங்கள் தவறும் கிடையாது சரியும் கிடையாது, ஆனால் அவற்றின் நிலையில் சரியாகவும் இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம், அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம்.
ஒரு நிகழ்வு வாழ்க்கையில் ஏற்படும் ஒரு நிகழ்வு.
அது வாழ்க்கையோடு ஒட்டிச் சென்று பக்குவப்பட்டு முதிர்ச்சி அடைந்து, தெய்வீக வாழ்வாக மாறுகிறது.
நம்முடைய அகந்தைக்குத்தான் அதனுடைய போக்கு ஏற்றுக் கொள்ளும்படி இல்லை.
தெய்வீக வாழ்வின் வழிகளை அறிந்த ஒருவர் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளை அப்படியே ஏற்றுக் கொண்டால், தன்னுடைய சரியான மனித விருப்பத்தின் மூலம் நிகழ்ச்சிகள் எவ்வாறு நடக்க வேண்டுமோ அவ்வாறு நடப்பதைப் பார்ப்பார்.
அகந்தை வலியுறுத்தும், அதனுடைய போக்கை மாற்றும்.
அகந்தையை வெளிப்படையாகத் திருப்திப்படுத்த பிரயாசை எடுக்கும் போக்கு, தெய்வீக இலக்கை நோக்கி தீர்மானமாகச் செல்லும்.
போக்கின் சக்தியை புரிந்துகொள்ளும் சிலர், அமைதியாக இருப்பர்.
வேறு சிலர் அவற்றின் போக்கை மாற்றி, சரியான போக்குக்கு கொண்டு செல்வர்.
இவர்கள் எரிச்சலும் கோபமும் உள்ளவர்களாக இருந்தனர்.
இன்னமும் சிலர் பலன்கள் கிடைத்த பின்பும், அதன் போக்கை மீண்டும் மாற்ற முயலுவர்.
அவர்கள் ஒவ்வொருவரிலும், நிச்சயமான முன்னேற்றம் ஒவ்வொரு தருணத்திலும் ஏற்படுவதை நாம் பார்க்கலாம்.
மனிதன் சிந்திப்பான், சமூகம் சிந்தித்து செயல்படும், வாழ்க்கை சிந்தித்து செயல்பட்டு தீர்மானிக்கும். ஆன்மா அமைதியாக எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கும். மனிதன் சைத்திய புருஷனுக்கு மாறுவதால் வெளிப்படும் சத்தியஜீவிய சக்தி, எல்லா இயக்கங்களையும் தடுத்து நிறுத்தி மேல் நோக்கித் திருப்பி அற்புதமான பலன்களை அளித்து, பிறகு மறைந்து விடுகிறது.
நம்முடைய நிலையில், அது ஒரு நிமிடத்திற்கு மேல் செயல்பட முடியாது.

6. "They were abused for their insensitivity by Kitty and Lydia".
Social approval is psychological elation.
Society is there around at home.
Non-appreciation is a criticism.
Self-criticism is compunction.
Absence of compunction generates criticism from outside.

Psychological self-confidence ensures social success.
Spiritual self-awareness makes human life a trifle.
To appreciate Truth, Goodness, Beauty, and Love is a step towards Spiritual awareness.
To appreciate their opposite is spiritual progress.
We take Mother not only as infallible but one who expresses the deepest Marvel of creation in her actions and words.
To take our boss, elders, spouses, children, outsiders, rivals, enemies as we take Mother is a total fulfillment of Spirit in life.
Bennet gave his silent approval to his wife's actions.
Bingley gave active consent to the orders of Darcy.
Caroline could see no flaw in Darcy.
Elizabeth saw truth and goodness in the looks of Wickham.
Mrs. Gardiner saw a stateliness in Darcy's mouth.
To review the consequences of each of these views is a measure of understanding life.
Lydia was not abused by anyone at home after the elopement.
She really expected to be admired for her daring and left to herself would expand endlessly her fifteen day experiences, all the time expecting every listener to praise her sky high.
What is excitement to one is insensitivity to the other.
What is the process by which one becomes the other?
The fact is one is in the other; the excitement is there in the elder ones, the insensitivity in the younger ones.
To see the excitement as insensitivity is wisdom.
One who is insensitive to the low is excited about the high.
He who is not excited about the high will appreciate the excitement about the dissipation of the others as a valid sensation in them.
It is equality or at least patient understanding of wide life.
One's equality quells the excitement of the younger ones.
Mr. Bennet's non-interference is patience compelled by circumstances.
Caroline's congratulations to Elizabeth are mature appreciation of the social realities of life whose benefits she had been enjoying so far.
The only two options for her are to compromise or lose visits to Pemberley.
She is cultured enough to compel herself to compromise.
Lesser intelligences would quarrel and suffer social loss.
Her fawning on Darcy and compromise with Elizabeth are the same.
The patience of a husband of a fully liberated modern woman is more than human patience, almost spiritual equality.
He is a fit candidate to take up yoga on that one qualification when it is not an external appearance but a real inner poise.
More than women, children growing up and taking freedom into their own hands has made the parents realize the hardest blows of life that can fall on their emotional sensitivities.
The idea of a father that it is his child and he is responsible for the boy's welfare gets all the blows and pressure.
It is a measure to make the parent shed the blood ties, the hardest for Man.
As the society grants no superiority to birth, sense of superiority moves to capacity and values.
Values that concede superiority are no values.
Values are vehicles of equality.
To conceive that a child born and reared into survival has its own right to education and aims of life, will make any parent now in any culture mad. Society is moving towards that goal.
It is a collective yoga of a thin density.
"கிட்டியும், லிடியாவும், அவர்களுடைய உணர்வின்மைக்கு அவர்களைத் திட்டுகின்றனர்."
சமூகத்தின் ஒப்புதல் மனத்தின் எழுச்சியாகும்.
வீட்டில் சமூகம் உள்ளது.
பாராட்டாதது ஒரு விமரிசனம் ஆகும்.
சுய விமரிசனம் உள்ளுறுத்தல் ஆகும்.
உள்ளுறுத்தல் இல்லாதது வெளியிலிருந்து விமரிசனத்தை வரவழைக்கிறது.
மனத்தின் தன்னம்பிக்கை சமூகத்தில் வெற்றியை உறுதி செய்கிறது.
ஆன்மீகச் சுய விழிப்புணர்ச்சி மனித வாழ்க்கையை சுலபமாக்குகிறது.
உண்மை, நல்லகுணம், அழகு, அன்பு இவைகளை போற்றுவதே ஆன்மீகச் சுய விழிப்புணர்ச்சிக்கு ஒரு படியாக விளங்கும்.
அவற்றின் நேர்மாறானதை போற்றுவது, ஆன்மீக முன்னேற்றமாகும்.

அன்னை என்றும் தவறுவதில்லை என்று நாம் எடுத்துக் கொள்வதோடு, அவருடைய செயலிலும் சொற்களிலும் சிருஷ்டியின் ஆழமான அற்புதத்தை வெளிப்படுத்துவார் எனவும் நினைக்கிறோம்.
நம்முடைய முதலாளி, வயதில் பெரியவர்கள், வாழ்க்கைத் துணைவர்கள், குழந்தைகள், வெளிமனிதர்கள், எதிரிகள், போட்டியாளர்கள் அனைவரையும் அன்னையாக பாவிப்பது, வாழ்க்கையில் ஆன்மா முழுமையாகப் பூர்த்தி அடைவதாகும்.
திரு பென்னட் தன்னுடைய மனைவியின் செயல்களுக்கு மௌனமான ஆதரவை அளித்தார்.
டார்சியின் ஆணைகளுக்கு பிங்கிலி முழுமையான சம்மதத்தை அளித்தான்.
டார்சியிடம் ஒரு குறையும் இல்லை என்பதை காரலின் பார்த்தாள்
விக்காமின் தோற்றத்தில் உண்மையும் நல்ல குணமும் இருப்பதை எலிசபெத் பார்த்தாள்.
டார்சியின் பேச்சின் உயர்வினை திருமதி கார்டினர் கண்டாள்.
இந்த ஒவ்வொரு கருத்தின் பின்விளைவுகளைப் பரிசீலனை செய்வது, வாழ்க்கையை நாம் புரிந்து கொள்வதின் அளவுகோலாகும்.
லிடியா ஓடிப்போன பின்பு வீட்டில் யாரும் அவளைத் திட்டவில்லை.
அவளுடைய துணிச்சலான செயலை எல்லோரும் பாராட்ட வேண்டும் என்று உண்மையில் அவள் எதிர்பார்த்தாள். அவளுடைய இஷ்டப்படி விட்டிருந்தால், அவளது பதினைந்து நாட்கள் அனுபவத்தை அவள் முடிவில்லாமல் விரிவுபடுத்திக் கொண்டே இருந்திருப்பாள், கேட்பவர்கள் எல்லோரும் வானுயர அவளை பாராட்ட வேண்டும் என்று எல்லா நேரமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.
ஒருவருக்கு பரபரப்பான விஷயம், மற்றவருக்கு அர்த்தமில்லாமல் இருக்கும்.
ஒன்று மற்றொன்றாக மாறுவது எந்த வழி முறையினால்?
ஒன்று மற்றொன்றில் இருப்பதுதான் உண்மை, பெரியவர்களிடம் உற்சாகம் இருக்கிறது, சிறியவர்களிடம் உணர்ச்சியின்மை இருக்கிறது.
உற்சாகத்தை உணர்ச்சியின்மையாகப் பார்ப்பது அறிவுடைமை.
யார் ஒருவர் தாழ்ந்ததற்கு உணர்ச்சி இல்லாமல் இருக்கிறாரோ, அவர் உயர்ந்ததைக் கண்டு பரபரப்படைகிறார்.
உயர்ந்ததற்கு உற்சாகமடையாதவர்கள், மற்றவர்கள் தங்களை அழித்துக்கொள்வதைப் பார்த்து எழும் உற்சாகத்தை போற்றுவர், அதை தங்களது நியாயமான உணர்வாகக் கருதுவர்.
அது பரந்த வாழ்க்கையின் சமத்துவம் அல்லது பொறுமையான புரிதலாகும்.
ஒருவருடைய சமத்துவம் இளையவர்களின் உற்சாகத்தை அடக்குகிறது.
திரு பென்னட் குறுக்கிடாமல் இருப்பது சந்தர்ப்பங்களின் நிர்பந்தத்தால் எழுந்த பொறுமையினால்.
காரலின் எலிசபெத்தைப் பாராட்டுவது, தான் இதுவரை அனுபவித்து வரும் வாழ்க்கையின் சமூக யதார்த்தங்களுடைய பலன்களின் ஆழ்ந்த பாராட்டாகும்.
அவள் தேர்ந்தெடுக்க வேண்டியது, ஒன்று அவள் விட்டுக் கொடுக்க வேண்டும் அல்லது பெம்பர்லிக்கு போவதை இழக்க வேண்டும்.
விட்டுக் கொடுக்கும் அளவிற்கு அவளுக்கு நாகரிகம் தெரிந்திருக்கிறது.
அறிவில் சிறந்தவர்களாக இல்லாதவர்கள் சண்டையிட்டு சமூகத்தில் தோல்வியைச் சந்திப்பர்.
அவள் டார்சியிடம் பிரியமாக இருப்பதும், எலிசபெத்துடன் சமாதானம் ஆவதும் ஒன்றே.
முழுமையாக சுதந்திரம் பெற்ற நாகரிக மனைவிக்கு கணவனாக இருப்பவனது பொறுமை, மனித பொறுமைக்கும் மேலானது, ஆன்மீகச் சமத்துவம் எனலாம்.
அது அவனுடைய வெளித்தோற்றமாக இல்லாமல் உண்மையான அக நிலையாக இருந்தால், அவன் யோகம் செய்வதற்கு தகுதியானவன்.
பெண்மணிகளைவிட வளரும் குழந்தைகள் அவர்களுடைய கைகளில் சுதந்திரத்தை எடுத்துக் கொள்வது, வாழ்க்கையில் பெற்றோர்களை அவர்களுடைய உணர்ச்சிகளின் உணர்வுகளில் விழும் பலமான அடிகளை சந்திக்க வைக்கிறது.
இது தன்னுடைய குழந்தை, அவனுடைய நலனுக்கு தான்தான் பொறுப்பு என எடுத்துக்கொள்ளும் தந்தை சந்திப்பது அடிகளும், மன அழுத்தங்களும்தான்.
இது பெற்றோர்களை இரத்த சம்பந்தத்தை கை விடவைக்கிறது, மனிதனுக்கு மிகவும் கடினமானது.
பிறப்புக்கு எந்த உயர்வு நிலையையும் சமூகம் அளிக்காததால், உயர்வின் உணர்வு, திறமைகளுக்கும் பண்புகளுக்கும் மாறுகிறது.
உயர்வுக்கு இணங்கும் பண்புகள், பண்புகளே அல்ல.
பண்புகள், சமத்துவத்தைப் பரப்பும் சாதனங்கள் ஆகும்.
பிறக்கும் குழந்தைக்கு, அதனுடைய கல்வியையும், வாழ்க்கையின் இலட்சியங்களையும் தேர்ந்தெடுக்க உரிமை இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வது, எந்த பெற்றோரையும் எந்த கலாச்சாரத்திலும் பைத்தியமாக்கும்.
அந்த இலட்சியத்தை நோக்கித்தான் சமூகம் நகர்ந்து கொண்டிருக்கிறது.
லேசாக இருக்கும் அது சமூகத்தின் யோகமாகும்.

7. "Kitty and Lydia could not comprehend the hard-heartedness of any of the family".
The separation effected by the ego has reacted to details so that one does not know the other.

Our miseries are unseen and unfelt by others, and vice versa.
Now we are able to see the other bodies, not their feelings or thoughts.
In a non-ego status all bodies, all emotions, all thoughts are one.
Each will know others thoughts and feelings and feel identified with other bodies.
Hatha yoga purified the body as well as the subtle body beyond which no scientific possession of knowledge can go and discovered the Annamaya Purusha who led to the central being and moksha.
It is a science which has power to suspend the heart for days on end.
Scientific mastery cannot go beyond that stage.
It has a rare treasure of knowledge of health which no microscope can reveal.
The world does not have a greater treasure for sound health.
It is a system of perfected balance of physical energies.
A qualified doctor can appreciate that knowledge if he learns Hatha yoga.
In that case he may know both but not how to use the one for the other.
Specialization has gone so far that an ENT specialist is unable to appreciate how general health can be used to cure his patients.
Memory has all the information but has no knowledge.
Knowledge is in the coordinating intelligence.
The doctor who learns Hatha yoga, if endowed with coordinating intelligence, can devise yogic cures for all the diseases.
Memory is a part that stored observed information.
Ego, the coordinating intelligence, comes out with what to do, how to use one faculty to serve the other.
Pranayama can do the same thing with greater ease, but with less access to physical energies.
Pranayama has access to nervous energies, not physical energies.
One has to act on the body through the other.
“குடும்பத்தில் எவரும் கல்நெஞ்சுக்காரர்களாக இருப்பதை கிட்டி, லிடியாவால் நினைத்துப் பார்க்க முடிவதில்லை.”
அகந்தையால் ஏற்பட்ட பிரிவினை எல்லா இடங்களிலும் பரவிவிட்டதால், ஒன்று மற்றொன்றை அறிவதில்லை.
நம்முடைய கஷ்டங்கள் மற்றவர்களால் பார்க்கப்படுவதும் இல்லை, உணரப்படுவதும் இல்லை.
மற்றவர்களுடைய கஷ்டங்களை நாம் பார்ப்பதும் இல்லை, உணருவதும் இல்லை.
இப்பொழுது நாம் மற்றவர்களின் உடல்களைப் பார்க்கிறோம், அவர்களது உணர்ச்சிகளையோ அல்லது எண்ணங்களையோ அல்ல.
அகந்தையற்ற நிலையில் எல்லா உடல்களும், எல்லா உணர்ச்சிகளும், எல்லா எண்ணங்களும் ஒன்றே.
ஒவ்வொருவருக்கும் மற்றவரது எண்ணங்களும், உணர்வுகளும் புரியும், மற்ற உடல்களுடன் அடையாளப்படுத்திக்கொள்ள முடியும்.
உடலையும் சூட்சும உடலையும் ஹடயோகம் தூய்மைப்படுத்தியது. இதைத் தாண்டி எந்த விஞ்ஞான அறிவாலும், ஜீவாத்மாவுக்கும், மோட்சத்துக்கும் அழைத்துச் செல்லும் அன்னமய புருஷனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.
இது இதயத்தை முடிவில்லாமல் நாட்கணக்கில் நிறுத்தி வைக்கும் சக்தி படைத்த விஞ்ஞானமாகும்.
அந்தக் கட்டத்தைத் தாண்டி விஞ்ஞானத்தின் திறன் போக முடியாது.
மைக்ரோஸ்கோப்பால் கண்டு பிடிக்க முடியாத ஆரோக்கியத்தைப்பற்றிய அரிய அறிவுப் பொக்கிஷம் அதனிடம் உள்ளது.
நல்ல ஆரோக்கியத்துக்கான மேலும் உயர்ந்த பொக்கிஷம் உலகத்தில் இல்லை.
அது உடல் சக்திகளின் பூரணமான சமநிலையின் முறையாகும்.
ஹடயோகத்தை கற்கும் ஒரு மருத்துவரால் அந்த ஞானத்தைப் பாராட்ட முடியும்.
அவ்வாறு இருந்தால், அவருக்கு இரண்டும் தெரிந்திருக்கும், ஆனால் ஒன்றை எவ்வாறு மற்றதற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று தெரியாது.
சிறப்பு மருத்துவம் எவ்வளவு முன்னேறியிருக்கிறது என்றால் பொதுவான மருத்துவம் எப்படி தன்னுடைய நோயாளிகளை குணப்படுத்த முடியும் என்பதை ஒரு ENT மருத்துவரால் தெரிந்துகொள்ள முடிவதில்லை.
ஞாபகத்திற்கு எல்லா தகவல்களும் தெரியும், ஆனால் அதற்கு அறிவு கிடையாது.
புத்திசாலித்தனத்தை ஒருங்கிணைப்பது அறிவாகும்.
ஹடயோகம் கற்றுக்கொள்ளும் மருத்துவர், அறிவை ஒருங்கிணைக்கும் திறன் பெற்றிருந்தால், எல்லா வியாதிகளுக்கும் யோக முறையில் நோய் தீர்க்கும் வழிமுறையைக் கண்டுபிடிக்கலாம்.
கவனிக்கப்பட்ட தகவல்களை சேமித்து வைத்திருக்கும் இடம்தான் ஞாபகம்.
ஒருங்கிணைக்கும் அறிவான அகந்தை, என்ன செய்ய வேண்டும் எவ்வாறு ஒரு திறமையை மற்றொன்றுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று செயல்படும்.

பிராணாயாமம் இதனையே இன்னமும் சுலபமாகச் செய்யும். ஆனால் அதில் ஜடசக்திகளின் உபயோகம் குறைவாகவே இருக்கும்.
பிராணாயாமம் நரம்புகளின் சக்தியைச் சென்று அடையலாம், ஜட சக்திகளை அல்ல.
ஒன்று மற்றொன்றின் மூலம் உடலில் செயல்பட வேண்டும்.

"*Good Heaven! What is to become of us? What are we to do?" Would they often exclaim in the bitterness of woe. "How can you be smiling so, Lizzy?"*
"கடவுளே! நாங்கள் என்னாவது! நாங்கள் என்ன செய்வது!" என்று அவர்கள் துக்கத்தால் மனம் கசந்து அடிக்கடி கூவினர். "லிசி உன்னால் எவ்வாறு இப்படி சிரித்துக் கொண்டு இருக்க முடிகிறது?" என்றார்கள்.

8. "Good heavens, what is to become of us"
Society compels everyone to conform to itself.
Otherwise Man does not have any guidance.
Look at the departure of the militia from Kitty's point of view.
It is all her existence.
She forgets she could not be out, the militia is only a fortuitous occasion.
To consider an occasion which arose like that as one's right is our attitude.
Charlotte married like that.
To avail of an opportunity is one's birthright.
To Elizabeth the militia is disagreeable after Wickham was exposed, not before that.
One who lives by the society can avail of any opportunity within socially permissible limits.
Bingley is a rare opportunity within social limits.
Darcy is a non-social, rare, psychological opportunity to Elizabeth.
A higher opportunity for the family comes along with a lower opportunity.
It is inevitable as one balances the other.
A higher attitude can avail of a lower opportunity as a higher opportunity.
Dr. Thorne consistently takes the highest attitude at all times. It gives him the noblest response from life.
We know the service Wickham does. We must know him as a Marvel.
Darcy's attitude towards Elizabeth released the potential in her.
She had not done it herself. There was no such external help to Wickham.
The revolutionary force, in the story, has become the evolutionary fervour by one Man's effort towards one human target.
In the social transition of 1900 in USA, today in India we see many like Wickham turning over a new leaf.
An evolutionary consciousness enters the individuals of the population and acts from inside in the majority.
Literature depicts in all periods.
Mahabharatha fights evil, Hamlet lets Mind emerge.
"கடவுளே, நமக்கு என்ன ஆகப்போகிறது."
சமூகம் எல்லோரையும் அதற்கே கீழ்ப்படிய வற்புறுத்துகிறது.
இல்லாவிடில் மனிதனுக்கு வேறு எந்த வழிகாட்டலும் இல்லை.
இராணுவ வீரர்கள் கிளம்புவதை கிட்டியின் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்.
அதுதான் அவளுடைய வாழ்க்கையே.
வெளியே போகமுடியாது என்பதை அவள் மறந்து விடுகிறாள், வீரர்கள் ஒரு தற்செயலான சந்தர்ப்பம்தான்.
அதுபோல் எழும் சந்தர்ப்பத்தை ஒருவரது உரிமை எனக் கருதுவது நமது மனப்பான்மையாகும்.
ஷார்லெட் அவ்வாறுதான் திருமணம் செய்து கொண்டாள்.
வாய்ப்பை பயன்படுத்திக்கொள்வது ஒருவரது பிறப்புரிமை.
விக்காம் வெளிப்படுத்தப்பட்ட பிறகு வீரர்களை எலிசபெத்தால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை, அதற்கு முன்பு அல்ல.
சமூகம் ஒப்புக்கொள்ளும் அளவிற்கு எந்த வாய்ப்பினையும் சமூகத்தை ஒட்டி வாழ்பவரால் பயன்படுத்திக் கொள்ள முடியும்.
சமூக எல்லைக்குள் பிங்கிலி ஒரு அரிய வாய்ப்பு.
டார்சி, எலிசபெத்திற்கு சமூகத்தில் அல்லாத அரிய மனோரீதியான வாய்ப்பாக விளங்குகிறான்.
தாழ்ந்த வாய்ப்புடன் சேர்ந்து உயர்ந்த வாய்ப்பும் குடும்பத்திற்கு வருகிறது.
ஒன்று மற்றதை சமன் படுத்துவதால் இது தவிர்க்க முடியாதது.
உயர்ந்த மனோபாவம் தாழ்ந்த வாய்ப்பை உயர்ந்த வாய்ப்பாகப் பெற்றுக்கொள்ளும்.
டாக்டர் தார்ன், எல்லா சமயங்களிலும் உயர்ந்த மனோபாவத்தையே மேற்கொள்கிறார். வாழ்க்கை அவருக்கு மேன்மையான பதிலைத் தருகிறது.

விக்காம் செய்யும் சேவையைப் பற்றி நமக்குத் தெரியும். நாம் அவனை அற்புதம் எனப் புரிந்துகொள்ள வேண்டும்.
எலிசபெத்திடம் டார்சி கொண்டிருந்த மனோபாவம் அவளுடைய திறமைகளை வெளிப்படுத்தியது.
அவள் தானாகவே அதைச் செய்யவில்லை. விக்காமிற்கு அது போன்ற புற உதவி எதுவும் இல்லை.
புரட்சிகரமான சக்தி இக்கதையில் ஒரு மனித இலக்கை குறி வைத்து ஒரு மனிதன் எடுத்த முயற்சி,பரிணாம ஆர்வமாக மாறியதைக் குறிக்கிறது.
1900-ல் அமெரிக்காவில் நடந்த சமூக மாற்றத்திலும், தற்பொழுது இந்தியாவிலும் விக்காம் போல் இருப்பவர்கள் பலரும் புதிய வாழ்க்கையை வாழ ஆரம்பித்துள்ளனர்.
பரிணாமத்தில் ஜீவியம் சமூகத்திலுள்ள தனி நபர்களில் நுழைந்து, பெரும்பாலானோரிடம் உள்ளிருந்து செயல்படுகிறது.
எல்லா காலங்களிலும் இலக்கியம் இதனை படம் பிடித்துக் காண்பிக்கிறது.
மகாபாரதம் தீமையை எதிர்த்துப் போராடுகிறது, ஹாம்லெட் மனத்தை வெளிப்படுத்துகிறது.

9. "…exclaim in the bitterness of woe. How can you be smiling, Lizzy?" – Lydia.
What is bitterness to one is not a slight disturbance to another.
The intensity of woe depends upon the person.
The infinity is in the woe or bliss.
It is ego that converts the bliss into woe.
Bitterness and woe are ego's experience of darkness.
Darkness is light for another.
Several egos treat any experience variously.
The bitterness of ego is intense delight to the Divine in the involution.
The Divine as the human being becomes the ego to experience the woe.
The ego, by a human choice, can come out of the woe.
By a further choice the ego becoming the Psychic can change woe into delight.
The human choice is a choice of several successive moments.
The child that enters the educational system has the opportunity of becoming a world famous scholar.
It has a million choices along the way.
Its choices split into two. One is in the subject. There are thousands. The other is personal. Whether it learns from the teacher, the book or thinking or observation or silence there are thousands of choices. They are in succession.
Successions are in Time.
Human choice is exercised outside from among many options; from inside it is exercised in its methods and in choosing the plane. Such choices are in any given moment infinite.
They relate to ego, Time, Mind, finite, surface, depth, subliminal, etc.
Spiritual awakening decides one's choice.
To know the million surface options and not to respond to them in favour of the very best choice for him at that moment, is the human choice we consider.
Human choice decides human progress.
"துக்கத்தால் மனம் கசந்து கூக்குரலிடுகிறாள். லிசி, உன்னால் எவ்வாறு சிரித்துக் கொண்டிருக்க முடிகிறது?" என்று லிடியா கேட்கிறாள்.
ஒருவருக்கு கசப்பாக இருப்பது வேறு ஒருவருக்கு துளியும் தொந்தரவாக இல்லை.
துக்கத்தின் தீவிரம் அந்த நபரைப் பொறுத்து இருக்கும்.
துக்கம் அல்லது ஆனந்தம் எல்லையற்று இருக்கும்.
அகந்தைதான் ஆனந்தத்தை துக்கமாக மாற்றுகிறது.
கசப்புணர்வும், துக்கமும், இருளின் அகந்தையின் அனுபவமாகும்.
இருள் வேறொருவருக்கு ஒளியாக இருக்கும்.
எந்த ஒரு அனுபவத்தையும் பல அகந்தைகள் பலவிதமாகக் கருதுகின்றன.
சிருஷ்டியில் அகந்தையின் கசப்புணர்வு இறைவனுக்கு தீவிர சந்தோஷம் ஆகும்.
மனிதனைப் போல் தெய்வமும் துன்பத்தை அனுபவிக்க அகந்தையாக மாறுகிறது.
மனித விருப்பத்தின் மூலம் அகந்தையும் துன்பத்திலிருந்து வெளிவரலாம்.
மேலும் ஒரு விருப்பத்தின் மூலம், சைத்திய புருஷனாக மாறும் அகந்தை துக்கத்தை சந்தோஷமாக மாற்றவல்லது.
மனித விருப்பம் பல அடுத்தடுத்த தருணங்களின் விருப்பமாகும்.
கல்வி அமைப்பில் நுழையும் குழந்தைக்கு உலகப் புகழ் வாய்ந்த மேதையாக விளங்க வாய்ப்பு கிடைக்கிறது.
வழி முழுவதும் அதற்கு கோடிக்கணக்கான வாய்ப்புகள் உள்ளன.

அவற்றின் வாய்ப்புகள் இரண்டாகப் பிரிகின்றன. ஒன்று பொருளில் உள்ளது. அவைகள் ஆயிரம்.
மற்றொன்று தனிப்பட்டது. அது ஆசிரியர், புத்தகம், சிந்தனை, கவனிப்பு, மௌனம் இவைகள் ஏதாவது ஒன்றின் மூலம் கற்றுக்கொள்ளும்பொழுது அதற்கு ஆயிரக்கணக்கான வாய்ப்புகள் உள்ளன.
அவை அடுத்தடுத்து உள்ளன.
அடுத்தடுத்து நடப்பவை காலத்தில் உள்ளன.
மனித விருப்பம் பலவிருப்பங்களுக்கு இடையில் வெளியில் செயல்படுகிறது. அகத்தில் அதன் முறைகளையும், நிலைகளையும் அது தேர்ந்தெடுக்கிறது. அது போன்ற வாய்ப்புகள் எந்த ஒரு தருணத்திலும் அளவற்றதாக இருக்கும்.
அவை, அகந்தை, காலம், மனம், கண்டம், மேல்மனம், ஆழ்மனம், அடிமனம் இவற்றுடன் தொடர்புகொள்ளும்.
ஆன்மீக விழிப்புணர்ச்சி ஒருவரது விருப்பத்தை தீர்மானிக்கும்.
கோடிக்கணக்கான வாய்ப்புகள் மேற்பரப்பில் இருப்பது தெரிந்தாலும், அந்த தருணத்தில் ஒருவனுக்கு எது சிறந்ததோ அதற்கு மறுமொழி அளிக்காமல் இருப்பதுதான், நாம் கருதும் மனித விருப்பம்.
மனித விருப்பம் மனிதனின் முன்னேற்றத்தை முடிவு செய்கிறது.

Their affectionate mother shared all their grief; she remembered what she had herself endured on a similar occasion, five-and-twenty years ago.
அவர்களுடைய பாசமிகுந்த தாயும் அவர்களுடைய எல்லா துக்கங்களிலும் பங்கெடுத்துக் கொண்டாள். இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன்பு இதே போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் தான் அனுபவித்த வேதனையை நினைவு கூர்ந்தாள்.

10. Mrs. Bennet's sympathy with the refractory daughters, and her own youthful experience open a gate in the subtle plane for the elopement.
கீழ்ப்படியாத பெண்களுக்கு திருமதி பென்னட் காட்டும் அனுதாபமும், அவளுடைய இளமைக்கால அனுபவமும், ஓடிப்போவதற்குரிய வாயிலை சூட்சும நிலையில் திறக்கிறது.
11. Mrs. Bennet shamelessly speaks about her own experience with the officers. Obviously Mr. Bennet was a big fish when she caught him.
திருமதி பென்னட், இராணுவ அதிகாரிகளுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றி வெட்கமில்லாமல் பேசுகிறாள். உண்மையிலேயே திரு பென்னட் அவளுக்கு கிடைத்த மிகப் பெரிய பரிசு.
12. "Their affectionate mother shared all their grief".
Parents are biological primarily, secondarily social.
Society changes by the time the child grows up.
Parents, especially the mother, not only do not change, but become more conservative by the time the children grow up.
In times of transition the gap between the child and the parent is greater still.
The child himself does not catch up with the changing society.
Most children bring up the rear of the advancing society.
At the end that breaks out of the crust of society, that is at the farthest height of social change we find none, not even a few.
At that end there is the energy of turbulence impossible to admit any semblance of organization.
Without organization there is no foothold.
Society that changes, changes on all the hundred fronts.
The best of the new generation accept a few changes, usually one, while to be in the vanguard one cannot miss even on one front.
Social changes come into vogue, ironically, when they are absorbed and assimilated into the society.
By that time the freshness of the change is lost.
Man desires the benefits of change within the boundaries of the society.
The benefits lie outside its boundaries.
Small social changes do not make themselves felt always.
Only radical changes come to stay.
Old is gold is valid even today in many areas.
Sri Aurobindo offers us what will come after a thousand generations.
He gives us a method by which it can be accomplished.
He gives that method in every small detail.
It is a source of delight of the soul the world has not known.
Every devotee receives the material benefit at the lowest end.
Sadhaks are shown the highest end all the time.
It remains to us the hour before the Gods awake.

"அவர்களுடைய பாசமிக்க தாயார் அவர்களுடைய துக்கத்தைப் பகிர்ந்து கொண்டாள்."
பெற்றோர்கள் முதலில் இரத்த சம்பந்தப்பட்டவர்கள், அடுத்ததாக சமூகரீதியாக உறவு கொண்டிருப்பவர்கள்.
குழந்தைகள் வளரும்பொழுது சமூகமும் மாறுகிறது.
பெற்றோர்கள், அதிலும் முக்கியமாக தாயார் மாறாமல் இருப்பதோடு அல்லாமல் குழந்தைகள் வளர்ந்து வரும் பொழுது மிகவும் பழைமைவாதியாக மாறி விடுகின்றனர்.
மாற்றங்கள் ஏற்படும் காலங்களில் குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையே உள்ள இடைவெளி மேலும் அதிகரிக்கிறது.
மாறும் சமுதாயத்துடன் குழந்தைகளாலேயே ஈடு கொடுக்க முடிவதில்லை.
பெரும்பாலான குழந்தைகள் முன்னேறும் சமூகத்தின் இறுதிப் பகுதியிலேயே இருக்கிறார்கள்.
இறுதியில் அது சமூகத்தின் கூட்டை உடைத்து வெளியே வருகிறது, சமூக மாறுதலின் உச்சத்தில் யாரும் இருப்பதில்லை, ஒரு சிலர்கூட அங்கு காணப்படுவதில்லை.
இறுதியில், எந்த ஒழுங்கான அமைப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாத சக்திகளின் கொந்தளிப்பு எஞ்சியிருக்கிறது.
சரியான அமைப்பு இல்லாமல் எந்த பிடிப்பும் இல்லை.
மாறும் சமூகம் பல நூறு இடங்களிலும் மாறுகிறது.
புதிய தலைமுறையிலுள்ள சிறந்தவர்கள், சில மாற்றங்களை ஏற்றுக்கொள்கின்றனர், பெரும்பாலும் ஒன்றை மட்டும். முன்னணியில் இருக்க வேண்டும் என்றால் ஒருவர் ஒரு விஷயத்தைகூட தவற விட முடியாது.
சமூக மாற்றங்கள் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒன்றாகிப் போகும்பொழுது நடைமுறைகளாகின்றன.
அதற்குள் மாற்றத்தின் புதுமை இழக்கப்பட்டு விடுகிறது.
சமூகத்தின் எல்லைக்குள் மாற்றங்களின் பலன்கள் இருக்க வேண்டும் என்று மனிதன் ஆசைப்படுகிறான்.
பலன்கள் அதனுடைய எல்லைக்கு வெளியே இருக்கின்றன.
சிறிய சமூக மாற்றங்கள் எல்லா சமயங்களிலும் உணரப்படாது.
முழுமையான மாற்றங்களே நிலைத்து நிற்கும்.
பழையது விலைமதிப்பற்றது என்பது இப்பொழுதும் பல விஷயங்களில் உண்மையாக இருக்கிறது.
ஆயிரம் தலைமுறைகளுக்குப் பிறகு வரப்போவதை ஸ்ரீ அரவிந்தர் நமக்கு அளிக்கிறார்.
அதை சாதிக்கும் முறையையும் அவர் நமக்கு அளிக்கிறார்.
அந்த முறையை துல்லியமான விவரங்களோடு கூறுகிறார்.
இது ஆன்மாவின் ஆனந்தத்தின் பிறப்பிடமாகும், உலகம் அறியாதது.
ஒவ்வொரு அன்பரும் பொருள்ரீதியான பலனை மிகவும் குறைவான நிலையிலேயே பெற்றுக் கொள்கின்றனர்.
சாதகர்களுக்கு உயர்ந்த அளவே எப்பொழுதும் காண்பிக்கப்படுகிறது.
கடவுள்கள் விழித்துக்கொள்வதற்கு முன்பிலிருந்தே அது நம்மிடம் உள்ளது.

"I am sure," said she, "I cried for two days together when Colonel Millar's regiment went away. I thought I should have broke my heart."
"கர்னல் மில்லரின் படைப்பிரிவு கிளம்பியபொழுது நான் இரண்டு நாட்களாக தொடர்ந்து அழுதேன். என் நெஞ்சே வெடித்துவிடும் போலிருந்தது," என்றாள்.

13. "I cried for two days when Col. Miller's regiment went away".
Age outgrows the experiences of early years.
When it does not, old experiences organize themselves powerfully in acceptable ways today.
Such experiences emerging out of children are irresistible.
Growing society creates a recoil in equal measure.
This is natural to the society.
The principle of the lower willingly submitting to the higher neutralizes this natural possibility initiating transformation of the lower.
Mrs. Bennet, instead of outgrowing propensities of youth, wants to relive them with the privilege of age like the Amish community.
This too serves an evolutionary need.
Social organization avoids that which is unhelpful.
It learns to protect itself from what it avoids.
Sometimes circumstances bring some complementary aspects helpfully.
Occasionally society appreciates the indispensable use of what is avoided.
Never the role of Marvel reveals itself from the avoided part of society.
Computers were developed for military purposes originally.
English that was created as an instrument of domination by one such process has turned into an instrument of Freedom.
Man exists subconsciously, tries to grow consciously, but his existence is in the inconscient.
His conscious, subconscious urges create growth in his inconscience in the opposite direction in his children.

The evolution of being in one generation reflects in the evolution in Non-Being in another direction.
It comes in the next generation or a few generations after, but it does come.
Mrs. Bennet has no shame about her activities.
Her energy is great as shame itself is not born.
Shame consumes a great amount of energy.
She has no idea that shame is part of one's modesty.
“கர்னல் மில்லரின் படைப்பிரிவு கிளம்பிய பிறகு நான் இரண்டு நாட்கள் அழுது கொண்டிருந்தேன்”.
ஆரம்ப கால அனுபவங்களை வயது விஞ்சி விடும்.
அவ்வாறு நடக்காவிட்டால் பழைய அனுபவங்கள், ஏற்றுக்கொள்ளும் வகையில் அவற்றையே வலிமையாக இன்று முறைப்படுத்திக்கொள்ளும்.
குழந்தைகளிடம் அது போன்ற அனுபவங்கள் வெளிவருவதைத் தடுக்க முடியாது.
வளரும் சமூகம் அதே அளவில் பின்வாங்கும்.
சமூகத்திற்கு இது இயற்கை.
தாழ்ந்தது உயர்ந்ததற்கு விருப்பத்துடன் அடிபணிவது எனும் கருத்து, இந்த இயற்கையான சாத்தியத்தை பலனற்றதாக்கி விடும், தாழ்ந்ததை திருவுருமாறச் செய்யும்.
இளைஞர்களின் இயற்கையான குணத்தைத் தாண்டி வெளி வராமல், திருமதி பென்னட் வயது அளிக்கும் சலுகையால் மீண்டும் அதன் நினைவில் வாழ விரும்புவது, ஆமிஷ் சமுதாயத்தில் நடப்பது போலிருக்கிறது.
இதுவும் பரிணாமத் தேவைக்கு உதவி புரிகிறது.
உதவியற்றதை சமூக அமைப்பு தவிர்க்கிறது.
எதை சமூகம் தவிர்க்கிறதோ, அதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சமூகம் கற்றுக்கொள்கிறது.
சிலசமயம், சந்தர்ப்பங்கள் உடன்பாடாக இருக்கும் சில விஷயங்களை உதவியாக கொண்டு வரும்.
எது தவிர்க்கப்பட்டதோ அதனுடைய அத்தியாவசிய உபயோகத்தை சமூகம் எப்பொழுதாவது போற்றும்.
சமூகத்தில் தவிர்க்கப்பட்ட இடங்களிலிருந்து அற்புதத்தின் பங்கு எப்பொழுதும் வெளிப்படாது.
ஆரம்பத்தில் இராணுவ விஷயங்களுக்காகத்தான் கணினி உருவாக்கப்பட்டது.
அது போன்ற ஒரு முறையால் அதிகாரம் செய்ய உருவான ஆங்கில மொழி, சுதந்திரத்தின் கருவியாக மாறியுள்ளது.
மனிதன் ஆழ்மனதிலிருக்கிறான், நனவுபூர்வமாக வளர முயற்சிக்கிறான். ஆனால் அவன் இருப்பது ஜட இருளில்.
அவனுடைய நனவுபூர்வமான உந்துதல்களும், ஆழ்மன உந்துதல்களும், அவனுடைய ஜடத்தில் வளர்ச்சியை உருவாக்கும், அவனுடைய குழந்தைகளிடம் நேரெதிரானதை உருவாக்கும்.
ஒரு தலைமுறையில் இருக்கும் ஜீவனின் பரிணாமம், வேறொரு திசையில் அசத்தின் பரிணாமத்தில் பிரதிபலிக்கும்.
அது அடுத்த தலைமுறையிலோ அல்லது சில தலைமுறைகளுக்குப் பிறகோ எழும், ஆனால் அது கண்டிப்பாக எழும்.
திருமதி பென்னட் தன்னுடைய செயல்களுக்காக வெட்கப்படவில்லை.
அவமானம் இன்னும் ஏற்படாததால் அவளுடைய சக்தி அதிகமாக இருந்தது.
வெட்கப்படுவதற்கு அதிக அளவு சக்தி தேவைப்படும்.
ஒருவரது பணிவின் ஒரு பகுதிதான் வெட்கம் என்பது அவளுக்குத் தெரியவில்லை.

"*I am sure I shall break mine," said Lydia.*
“எனக்கு இப்பொழுது நெஞ்சு வெடித்து விடும் போலிருக்கிறது” என்று லிடியா கூறுகிறாள்.

"*If one could but go to Brighton!" Observed Mrs. Bennet.*
“பிரைட்டனுக்கு மட்டும் போக முடிந்தால்” என்கிறாள் திருமதி. பென்னட்.

14. Mrs. Bennet pleads for sea-bathing.
திருமதி பென்னட் கடலில் குளிப்பதற்கு மன்றாடுகிறாள்.
15. She does get it in the shape of the express message.
அது செய்தி ரூபத்தில் அவளுக்குக் கிடைக்கிறது.

"Oh, yes! -- if one could but go to Brighton! But papa is so disagreeable."
“ஓ, ஆமாம்!--இப்பொழுது பிரைட்டனுக்கு மட்டும் போக முடிந்தால், ஆனால் அப்பா சம்மதிக்க மாட்டேன் என்கிறாரே.”

"A little sea-bathing would set me up for ever."
“கடலில் சற்று குளித்தால் எனக்கு மிகவும் நன்றாக இருக்கும்.”

"And my aunt Philips is sure it would do me a great deal of good," added Kitty.
"எனது சித்தி பிலிப்ஸும் எனக்கு இது அதிக அளவில் நன்மை தரும் என்கிறார்," என்று கிட்டியும் கூறுகிறாள்.

16. Mrs. Bennet and Mrs. Philips are like Kitty and Lydia.
திருமதி பென்னட்டும், திருமதி பிலிப்ஸ்-ம் கிட்டி, லிடியாவைப் போலுள்ளனர்
17. There are adults who can only be disciplined by the society, not by their own restraint.
சில முதியவர்களை சமூகம் மட்டுமே கட்டுப்படுத்த முடியும், அவர்களுடைய சுய கட்டுப்பாட்டால் முடியாது.

Such were the kind of lamentations resounding perpetually through Longbourn House. Elizabeth tried to be diverted by them; but all sense of pleasure was lost in shame. She felt anew the justice of Mr. Darcy's objections; and never had she before been so much disposed to pardon his interference in the views of his friend.
இதுபோன்ற புலம்பல்கள் லாங்பர்ன் இல்லத்தில் எதிரொலித்துக் கொண்டே இருந்தன. எலிசபெத் இதை வேடிக்கையாக எடுத்துக்கொள்ள முயற்சி செய்தாள். ஆனால் எல்லா சந்தோஷமான உணர்ச்சிகளும், அவமானத்தால் தொலைந்து போயின. டார்சி கூறிய ஆட்சேபணைகள் எல்லாம் நியாயமானதே என்று மீண்டும் உணர்ந்தாள். அவனுடைய நண்பனின் கருத்துகளில் குறுக்கிட்டதற்கு மன்னிக்க வேண்டும் என்ற உணர்வு இந்த அளவுக்கு இதற்குமுன் ஏற்பட்டதில்லை.

18. Sense of pleasure was lost in the shame.
சந்தோஷத்தின் உணர்வு வெட்கத்தில் இழக்கப்பட்டது.
19. Culture makes shame pleasure by inner self-restraint.
அகத்தின் சுய கட்டுப்பாட்டால் நாகரிகம் வெட்கத்தை இன்பமாக்குகிறது.
20. Elizabeth had not noticed this behaviour till Darcy pointed it out.
டார்சி சுட்டிக் காட்டுவதற்கு முன் இந்த நடத்தையை எலிசபெத் கவனிக்கவில்லை.
21. Or, Lydia's FORCE takes wings with Wickham activating inside.
அல்லது, விக்காம் உள்ளே செயல்படுவதால் லிடியாவின் சக்தி செயல்பட ஆரம்பிக்கிறது.
22. Elizabeth now feels the justification of Darcy's accusations. Note she has not felt so earlier. She was in it, of it, a part of it so far.
டார்சியின் குற்றச்சாட்டுகளில் இருக்கும் நியாயத்தை எலிசபெத் இப்பொழுது உணர்கிறாள். ஆரம்பத்தில் அவள் இவ்வாறு உணரவில்லை என்பதை கவனிக்க வேண்டும். இது வரை அவள் அதற்குள், அதில் ஒரு பகுதியாகவே மாறியிருந்தாள்.
23. "Elizabeth tried to be diverted by them, but all the sense of pleasure was lost in the sense of shame."
To see crime as ignorance is ultimate wisdom.
To see disgusting behaviour as unbridled use of unlimited energy is to be indulgent to vulgarity.
To witness in her mother unpardonable behaviour in Lydia it is impossible not to be ashamed.
Society does not permit freedom to exhibit substandard behaviour.
One who is in debt, if not thrown out of society, loses the level of respectability he has been enjoying.
Life too is exacting in this regard.
The moment one's human choice is for a higher value, the members of the higher echelon at once greet him with appreciative smiles.
Existence is exactly like that.
One who writes a poem of higher devotion sees invisible life smiling on him uplifting his personal emotions.
He meets in his travel one who alone can fully reward his higher poetic emotions.
Society, life, existence all have invisible senses and act at once.
Subtle cultures have defined their languages' omens.
Omens are the most prominent events which all can recognize.
One in whose consciousness royal emotions are born invites a cobra to spread his hood over his sleeping head.
Shakespeare said the stars themselves recognize the passing away of great souls that ruled the world.
Someone in Trichy sees in the atmosphere that Sri Aurobindo was heading towards Tamilnadu months before he arrived.
Great souls await in the celestial worlds for suitable human wombs in which they could descend.
Krishna's birth smiled all over Brindavan for years.
Mother heard the voices that rose for help from all over the world.
"அவைகளால் எலிசபெத் தன்னுடைய கவனத்தை திசை திருப்ப முயற்சி செய்தாள். ஆனால் எல்லா சந்தோஷங்களும் அவமானத்தால் தொலைந்து போயின."
குற்றத்தை அறியாமையாகப் பார்ப்பது முடிவான அறிவாகும்.
அளவில்லா சக்தியை கட்டுப்படுத்தாமல் உபயோகிக்கும் ஒரு வெறுப்பான நடத்தை, நாகரிகமற்ற செயலில் ஈடுபடுவது போலாகும்.

தாயாரின் மன்னிக்க முடியாத நடத்தையை லிடியாவிடம் கண்டு வெட்கப்படாமல் இருக்க முடியவில்லை.
மோசமான நடத்தையை வெளிப்படுத்த சமூகம் அனுமதிப்பதில்லை.
கடனில் இருப்பவன் சமூகத்திலிருந்து தூக்கி எறியப்படாவிட்டால், அவன் அனுபவித்து வந்திருக்கும் மரியாதையை இழப்பான்.
இந்த விஷயத்தில் வாழ்க்கையும் வற்புறுத்தும்.
உயர்ந்த பண்புகளே ஒருவரது விருப்பமாக இருக்கும் தருணத்தில், உயர்ந்த அமைப்பில் இருப்பவர்கள் உடனடியாக பாராட்டும்வகையில் புன்சிரிப்புடன் அவனை வாழ்த்துவார்கள்.
வாழ்க்கை சரியாக அதைப் போலத்தான் இருக்கிறது.
உயர்ந்த பக்தியுடன் கவிதை எழுதும் ஒருவர், தனது உணர்ச்சிகளை உயர்த்தும் கண்ணுக்குத் தெரியாத வாழ்க்கை தன்னைப் பார்த்து புன்னகைப்பதைக் காண்பார்.
அவருடைய உயர்ந்த கவிதை போன்ற உணர்ச்சிகளுக்கு முழுமையாகப் பரிசளிக்கும் நபர் ஒருவரை மட்டுமே அவர் தன் பயணத்தில் சந்திப்பார். சமூகம், வாழ்க்கை, பெருவாழ்வு இவை எல்லாவற்றிற்கும் கண்ணுக்குப் புலப்படாத உணர்வுகள் உள்ளன, அவை உடனடியாகச் செயல்படும்.
சூட்சும நாகரிகங்கள் தங்களது மொழியில் சகுனங்களை விவரித்துள்ளன.
முக்கியமான நிகழ்வுகளான சகுனங்களை எல்லோருக்கும் அடையாளம் தெரியும்.
எவர் ஒருவர் ஜீவியத்தில் உயர்குடி உணர்ச்சிகள் உள்ளனவோ, அவர் உறங்கும்பொழுது தன் தலை மேல் பாம்பு படம் எடுப்பதைக் கண்பார்.
உலகத்தை ஆண்ட பெரிய ஆன்மாக்கள் உலகை விட்டுச் செல்வதை நட்சத்திரங்கள் அடையாளம் கண்டு கொள்கின்றன என்று ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார்.
ஸ்ரீ அரவிந்தர் தமிழ் நாட்டை நோக்கி வருவதாக அவர் வருவதற்கு சில மாதங்களுக்கு முன்பே திருச்சியில் இருக்கும் ஒருவர் சூழலில் காண்கிறார்.
உயர்ந்த ஆன்மாக்கள் சரியான இடத்தில் பிறப்பதற்காக மேலுலகத்தில் காத்துக் கொண்டிருக்கும்.
கிருஷ்ணரது ஜனனம் பிருந்தாவனத்தில் பல வருடங்களுக்கு சந்தோஷமாகத் தெரிந்தது.
உலகத்தின் எல்லா இடங்களிலிருந்தும் உதவி கேட்டு எழுப்பும் குரல்கள் அன்னைக்கு கேட்டது.

24. “Elizabeth felt anew the justice of Darcy’s objection.”
The Mind understands the accusation against it.
The vital is angry at an accusation and finds the accuser accused.
The physical understands only the touch.
What touches it is its own.
The spirit receives an accusation as a relationship to be absorbed.
Mind, vital, body act through opinion, attitude and motive.
One can form an opinion, but cannot become free of it.
An opinion dissolved releases enormous energy. It is of an open Mind.
Mind that constructs an opinion has the power to emerge out of it.
Mind cherishing what it constructs, loses its freedom to change or overcome the opinion.
True, Elizabeth has the native faculty of Mind alive to recognize the truth of Darcy’s accusation.
Her interest in Darcy enables her to see his justice.
Internet has put into the hand of humankind enormous power, though it has not yet scratched the total power.
Man can use this power only when he comes out of opinion.
The anonymity of the Internet renders seniority valueless.
To that extent ego is blighted.
The ego of the opinion contributed is there in a subtle form.
It is formidable.
Many things on the net are free, thus removing the ego of possession.
One who consciously sheds an opinion or dismantles it can feel the vast power in his Mind.
Opinion is the Mental unit for constitutional ignorance.
Jnana yoga taps only the energy of thought silenced to achieve moksha.
Opinion is one of the five Mental attributes to be shed.
Of them – opinion, idea, habit, construction, preference – preference has the vital strength, habit the strength of substance, idea the strength of formation from above.
“டார்சியின் ஆட்சேபணை நியாயமானதே என்பதை எலிசபெத் மீண்டும் உணர்ந்தாள்.”
மனதிற்கு எதிராக கூறப்படும் குற்றச்சாட்டுகளை மனம் புரிந்துகொள்கிறது.
குற்றச்சாட்டுகளைக் கண்டு உணர்வு கோபப்படுகிறது, குற்றம் சாட்டியவரையே குற்றம் சாட்டுகிறது.
ஜடத்திற்கு தொடுவுணர்வு மட்டும்தான் புரியும்.
அது எதைத் தொடுகிறதோ அதனை தனக்கு சொந்தம் என நினைத்துக்கொள்ளும்.
குற்றச்சாட்டுகளை ஆன்மா கிரகித்துக் கொள்ளப்படும் உறவாக பெற்றுக் கொள்ளும்.

மனம், உணர்வு, உடல் ஆகியவை அபிப்பிராயம், மனோபாவம், நோக்கம் மூலமாகச் செயல்படும்.
ஒருவர் அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்ளலாம், ஆனால் அதை விட்டு விலக முடியாது.
மறையும் அபிப்பிராயம் பெரிய அளவில் சக்தியை வெளியிடுகிறது. திறந்த மனத்திற்குரியது அது.
அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் மனத்தால் அதிலிருந்து வெளிவர முடியும்.
தான் அமைக்கும் அபிப்பிராயத்தை மனம் போற்றினால், அதனை மாற்றவோ அல்லது அதிலிருந்து வெளிவரும் சுதந்திரத்தையோ மனம் இழந்து விடுகிறது.
டார்சியின் குற்றச்சாட்டுகளில் உள்ள உண்மையை புரிந்துகொள்ளும் அளவிற்கு, எலிசபெத்திற்கு இயற்கையாகவே மனம் ஜீவனுடன் இருப்பது உண்மை.
டார்சியின்மேல் இருக்கும் விருப்பம், அவனது நியாயத்தை பார்க்க வைக்கிறது.
மனித குலத்திற்கு இணையதளம் ஏராளமான சக்தியை அளித்துள்ளது, முழு சக்தி இன்னமும் அளிக்கப்படவில்லை.
மனிதன் தன்னுடைய கருத்துகளிலிருந்து வெளி வந்தால்தான் இந்தச் சக்தியை உபயோகப்படுத்திக்கொள்ள முடியும்.
இணையதளத்தைப் பற்றி அறியாத வயதானவர்களுக்கு இணையதளம் பயனில்லாதது.
அந்த அளவிற்கு அகந்தை பலியாகிறது.
கருத்தின் அகந்தை அங்கு சூட்சுமமாக இருக்கிறது.
அதை வெல்ல முடியாது.
இணையதளத்தில் பல விஷயங்கள் இலவசமாக கிடைக்கின்றன, அவ்வாறு உரிமையின் அகந்தை களையப்படுகிறது.
யார் ஒருவர் தன்னினைவோடு தன் அபிப்பிராயத்தை விட்டு விடுகிறாரோ அல்லது அழித்து விடுகிறாரோ, அவர் தனது மனதில் ஏராளமான சக்தியை உணருவார்.
அபிப்பிராயம் என்பது கரணங்கள் பிரிந்து உள்ளதால் ஏற்படும் அறியாமையின் மனத்தின் பிரிவாகும்.
மோக்ஷத்தை அடைவதற்காக மௌனமாக்கப்படும் எண்ணங்களின் சக்தியை மட்டுமே ஞான யோகம் கண்டெடுக்கும்.
கைவிட வேண்டிய மனத்தின் ஐந்து பண்புகளில் ஒன்று அபிப்பிராயமாகும்.
அபிப்பிராயம், கருத்து, பழக்கம், கட்டமைப்பு, முன்விருப்பம் ஆகியவற்றில், முன்விருப்பத்திற்கு உணர்வின் சக்தி உள்ளது, பழக்கத்திற்கு பொருளின் வலிமை உள்ளது, மேலிருக்கும் அமைப்பின் பலம் கருத்துக்கு உள்ளது.

25. “Never before she had been so much disposed to pardon his interference in the view of his friend.”
Capacity to pardon one who has offended is evolutionary progress, a divine attitude.
The value of a thing is appreciated in its absence.
Darcy’s value is appreciated now as all hopes of his proposal are lost.
Her total giving up of Darcy made him come back.
Wisdom is to see the higher justice in injustice.
In this sense she appreciates Darcy’s injustice to Jane.
That which so appreciates is the Psychic.
Elizabeth had never felt ashamed of her mother and sisters as she felt now.
Her mother’s urges of which she was ashamed now offered her a great service.
Bingley’s submission that was despicable had this positive service to Elizabeth.
It might be of service. Still it did not picture Bingley in the best of lights.
Divine sight sees in every despicable act a service to the cause of the Divine.
Taking such service better than positive service brings in grades and thus misses total vision.
Grades belong to partial vision.
Total vision admits of equality, not grades.
In a machine all parts are of equal importance when the highest possible efficiency is aimed at.
One small part missing or defective can prevent that perfect efficiency.
That explains absence of waste in Nature.
In a great music performance we see every particle of sound is of the greatest significance.
In a great work of art not only every line and drop of paint assume significance but the frame and the wall on which it is hung.
Integration raises perfection to perfect perfection.
Creation has always been a perfect work of art.
It is our egoistic vision from the plane of Nature that sees evil or imperfection.
The practicing yogi faces the obstacles at a great many levels.
Mother said She was able to accept everyone except those who loved cruelty.
In trying to accept Mother, the tradition resists which can be overcome by idealism.

Idealism becomes real by a passionate devotion to it.
Idealism reverses the revolting sensitivities into adoring sensitivities.
It happened to Mahatma Gandhiji. He stayed with the Harijans.
Often, rather invariably, it arises out of a fad.
It has the capacity to disillusion itself at the end as it is of consciousness and not substance.
The maximum the world knows is the overmental transformation, not supramental transformation.
Mother gives the devotee one lightning flash of the supramental transformation where organized falsehood upholds Truth.
The worst that has happened on earth is Truth submitting itself to evil and delighting in it. The devotee can experience that evil denying itself and singing the praise of Truth.
Such an experience can restore to the vital Money power given full freedom to betray.
It makes the low sex indulgence abdicate in favour of spiritual Truth.
The first major obstacle is mental sensitivity.
SHE suppresses it, bypasses it, overpasses it or reveals fully.
Mother howled when Her physical sensitivities were cruelly exposed.
Vital sensitivities reveal in Money, power, sex.
Whatever one gives up, Mother protects the devotee from being hurt by discovering a law, offering an intervention.
It is here 'Let Thy Will be done, Not my will' arises in stark nakedness.
'Not my will' changes grace into Supergrace.
Thy Will acts when one moves from Shakti, Viryam, deiva Prakriti to Shraddha – Faith.
He who moves there creates equality in the consciousness.
Acting in Faith in the plane of equality transforms Mind into Supermind.
"அவனுடைய நண்பனின் கருத்துகளில் குறுக்கிட்டதற்கு மன்னிக்க வேண்டும் என்கிற உணர்வு அவளுக்கு இதற்கு முன் இந்த அளவிற்கு ஏற்படவில்லை."
அவமானப்படுத்தியவரை மன்னிக்கும் தெய்வீக மனோபாவமாக விளங்கும் திறன், பரிணாம முன்னேற்றமாகும்.
ஏதேனும் ஒன்று இல்லாத பொழுதுதான் அதன் அருமை தெரியும்.
திருமணப் பேச்சின் எல்லா நம்பிக்கைகளையும் இழந்து விட்டதால், டார்சியின் மதிப்பு இப்பொழுதுதான் தெரிகிறது.
அவள் முழுமையாக டார்சியிடமிருந்து விலகியதால் அவன் திரும்பி வருகிறான்.
அநியாயத்தில் உயர்ந்த நியாயத்தைப் பார்ப்பதே அறிவுடைமை.
இந்தக் கருத்தின்படி, டார்சி ஜேனுக்கு செய்த அநியாயத்தை அவள் சரியாகப் புரிந்துகொள்கிறாள்.
இவ்வாறு புரிந்து கொள்வது சைத்திய புருஷனே.
இப்பொழுது உணர்வதைப் போல் எலிசபெத் தன்னுடைய தாயாரையும் சகோதரிகளையும் நினைத்து எப்பொழுதுமே வெட்கப்பட்டதில்லை.
அவளுடைய தாயாரின் உந்துதல்களைக் கண்டு அவமானம் அடைந்த அவளுக்கு அவை இப்பொழுது பெரிய சேவையைச் செய்தன.
வெறுக்கத்தக்கதாக இருந்த பிங்கிலியின் அடிபணிதல், இந்த நல்ல சேவையை எலிசபெத்திற்கு அளித்தது.
அது சேவையாக இருக்கலாம். இருப்பினும் அது பிங்கிலிக்கு நல்ல பெயரை வாங்கித் தரவில்லை.
ஒவ்வொரு வெறுக்கத்தக்க செயலும், இறைவனுக்குச் செய்யும் சேவையாக தெய்வீகப் பார்வைக்குத் தெரியும்.
அது போன்ற சேவையை, நேர்மறையான சேவையை விட சற்று உயர்ந்தது என எடுத்துக் கொள்ளும் பொழுது அங்கு நிலைகள் தோன்றிவிடுகின்றன, இவ்வாறாக முழுமையான பார்வையை இழந்துவிடுகிறோம்.
நிலைகள் பகுதியான பார்வைக்குரியவை.
முழுமையான பார்வை சமத்துவத்திற்குரியது, நிலைகளுக்கு அல்ல.
ஒரு கருவி சிறப்பாக வேலை செய்ய வேண்டும் என்றால், அதன் எல்லா பாகங்களும் முக்கியம்.
ஒரு சிறிய பாகம் தொலைந்தாலோ அல்லது பழுதடைந்தாலோ, அது முழுமையாக இயங்காது.
இயற்கையில் விரயம் இல்லாமல் இருப்பதை அது விளக்குகிறது.
சிறந்த இசை நிகழ்ச்சியில் நாதத்தின் ஒவ்வொரு துளியும் மிகவும் முக்கியம் வாய்ந்தது என்பதை நாம் பார்க்கிறோம்.
ஒரு சிறப்பான ஓவியத்தில், ஒவ்வொரு கோடும், ஒவ்வொரு துளி வர்ணமும் முக்கியத்துவம் பெறுவதோடல்லாமல், அதில் இடப்பட்டுள்ள சட்டமும், தொங்கவிடப்பட்டிருக்கும் சுவரும்கூட முக்கியம் வாய்ந்தவை.
ஒருமைப்பாடு பூரணத்தை சிறப்பான பூரணமாக்கும்.
சிருஷ்டி எப்பொழுதுமே சிறப்பான கலைப் படைப்பாக இருந்திருக்கிறது.
இயற்கையின் நிலையிலிருந்து பார்க்கும் நமது அகந்தைக்கு, தீமை அல்லது குறை கண்ணுக்குத் தெரிகிறது.
யோகம் செய்பவர் பெரிய பல நிலைகளில் தடைகளை சந்திக்கிறார்.

கொடுமையை விரும்புபவர்களைத் தவிர, மற்றவர்களை தன்னால் ஏற்றுக்கொள்ள முடிந்தது என்று அன்னை கூறுகிறார்.
அன்னையை ஏற்றுக்கொள்ள முயல்வதை சம்பிரதாயம் தடுக்கிறது. இலட்சியத்தால் அதை வெற்றி கொள்ளலாம்.
இலட்சியவாதம், ஆர்வத்துடன் பின்பற்றும்பொழுது உண்மையாகிவிடுகிறது.
எதிர்க்கும் உணர்வுகளை போற்றும் உணர்வுகளாக இலட்சியவாதம் மாற்றி விடுகிறது.
மகாத்மா காந்தி இவ்வாறு நடந்து கொண்டார். ஹரிஜனங்களுடன் அவர் தங்கியிருந்தார்.
பல சமயங்களில், ஏன் எப்பொழுதுமே, அர்த்தமற்றதிலிருந்து அது எழுகிறது.
இறுதியில் தெளிவு பெறும் திறன் இதற்கு உள்ளது, ஏனெனில் அது ஜீவியத்திற்குரியது, பொருளுக்கு அல்ல.
அதிகபட்சமாக உலகம் அறிந்தது தெய்வலோக திருவுருமாற்றம், சத்திய ஜீவிய திருவுருமாற்றமல்ல.
எங்கு முறைப்படுத்தப்பட்டுள்ள பொய்மை உண்மையை ஆதரிக்கிறதோ, அங்கு க்ஷண நேர சத்தியஜீவிய திருவுருமாற்றத்தை அன்னை அன்பருக்கு அளிக்கிறார்.
உலகத்தில் இதுவரை மிக மோசமாக ஏற்பட்டது ஒன்று என்றால், அது உண்மை தீமைக்கு அடிபணிந்து அதற்காக சந்தோஷப்படுவதுதான். அந்தத் தீமை தன்னையே மறுத்து உண்மையின் புகழ் பாடுவதை அன்பர் பார்க்கலாம்.
அது போன்ற அனுபவம், முக்கியமாக பண பலத்துக்கு துரோகம் செய்வதற்கு முழு சுதந்திரம் அளிக்கிறது.
அது கீழான ஆண் பெண் உறவைத் துறந்து, ஆன்மீக உண்மையை ஏற்க வைக்கிறது.
மனத்தின் உணர்வுகளே முதல் பெரிய தடை.
அன்னை அதை அடக்குகிறார், தவிர்த்து விடுகிறார், தாண்டிச் செல்கிறார் அல்லது முழுவதுமாக வெளிப்படுத்துகிறார்.
அன்னையின் உடல் உணர்வுகள் கடுமையாக வெளிப்பட்டபொழுது அவர் அலறினார்.
உணர்வின் சொரணைகள் பணம், பதவி, ஆண்-பெண் உறவில் வெளிப்படும்.
எதை ஒருவர் கைவிட்டாலும், அன்னை குறுக்கிட்டு ஒரு சட்டத்தை உருவாக்கி அன்பரை பாதிப்பிலிருந்து காப்பாற்றுவார்.
இங்குதான், “உங்கள் திருவுள்ளப்படி நடக்கட்டும், எனது விருப்பமல்ல” என்பது நிதர்சனமாக எழுகிறது.
“எனது விருப்பமல்ல”, அருளை பேரருளாக்கும்.
சக்தி, வீரியம், தெய்வ பிரக்ருதியிலிருந்து, ஒருவர் சிரத்தைக்கு மாறும்பொழுது விருப்புறுதி செயல்படுகிறது.— நம்பிக்கை.
அந்த நிலைக்கு மாறுபவர் ஜீவியத்தில் சமத்துவத்தை உருவாக்குகிறார்.
சமத்துவ நிலையில் நம்பிக்கையுடன் செயல்படுவது மனத்தை சத்திய ஜீவிய மனமாக்கும்.

But the gloom of Lydia's prospect was shortly cleared away; for she received an invitation from Mrs. Forster, the wife of the Colonel of the regiment, to accompany her to Brighton. This invaluable friend was a very young woman, and very lately married. A resemblance in good humour and good spirits had recommended her and Lydia to each other, and out of their three months' acquaintance they had been intimate two.
லிடியாவின் வருத்தமான மனநிலை விரைவில் அகற்றப்பட்டது, ஏனெனில் படைப்பிரிவின் கர்னலாக இருந்தவரின் மனைவி திருமதி பாஸ்டரிடமிருந்து பிரைட்டனுக்கு செல்ல அவளுக்கு அழைப்பு கிடைத்தது. இந்த முக்கிய தோழி சமீபத்தில் திருமணமான ஒரு இளம் பெண்மணி ஆவாள். கலகலப்பிலும், உற்சாகத்திலும் இருவரும் ஒரே மாதிரியாக இருந்ததால், இருவரும் ஒன்றாகப் பழகினர். மூன்று மாத பழக்கத்தில் அவர்கள் இருவரும் நெருங்கிய தோழிகளாயினர்.

26. The lamentations are real, forceful enough to evoke Life Response.
புலம்பல்கள் நிஜம், வாழ்வின் மறுமொழியை தூண்டும் அளவிற்கு சக்தி உடையவை.
27. Invitation from Mrs. Foster arrives.
திருமதி பாஸ்டரிடமிருந்து அழைப்பு வருகிறது.
28. “Lydia received an invitation to Brighton”.
The gloom at home energises negatively by bringing this invitation.
Bingley arrives when Lydia goes away married.
The success of the gloom at home removed brings a higher atmosphere.
It is difficult for us to concede that our cheerfulness or gloom decides the outer event – Lydia’s elopement or Bingley’s arrival.
Trace the preceding events in succession – wedding, Darcy finding Lydia, Elizabeth’s disclosure to Darcy, Caroline’s provocation, Darcy’s civil reception, Elizabeth’s decision about Pemberley, Darcy’s letter, her abuse, Colonel’s news of Bingley, etc.
Review the whole story stationing yourself at each of these points, you will see more and more revealing.
Each review of events reveals one more shade of the process of transformation.
[Devotees taking up this exercise or at least raising questions that help complete the review will be of immense help.]

Not only this review, but each such decision – to be the mistress of Pemberley – splits into number of simpler parts, each, again, reveals a little more. It extends till the Marvel is seen as a glimpse. It goes up to full Marvel.
As one thus progresses in his greater appreciation of the story, the reader sees these visions or scenes as visions.
Writers who have this vision write stories that deeply touch the vital of the reader.
Sri Aurobindo speaks of 'that wonderful Mind' of Shakespeare.
The poet creates in his vision.
God creates in his spiritual vision.
Man thus visualizing his own past life has the knowledge of his past lives.
Here the distinction between the past and future shades off.
One can see his future or determine his future or even the future of the world.
Mother saw how the world will be a thousand years hence in Her meditation when Sri Aurobindo will have been fully accepted.
"பிரைட்டனுக்குப் போவதற்கு லிடியாவிற்கு அழைப்பு கிடைத்தது."
இந்த அழைப்பு வீட்டில் இருந்த வாட்டமான நிலைக்கு எதிர்மறையான சக்தியை அளிக்கிறது.
லிடியா திருமணமாகிச் சென்ற பின் பிங்கிலி வருகிறான்.
வீட்டில் இருந்த வாட்டத்தை வெற்றிகரமாக அகற்றியவுடன், அது உயர்ந்த சூழலை கொண்டு வருகிறது.
நமது உற்சாகம் அல்லது வாட்டம் லிடியா ஓடிப்போவது அல்லது பிங்கிலி திரும்பி வருவது போன்ற வெளிச் சூழலை தீர்மானிக்கும் என்பதை நாம் ஒப்புக்கொள்வது கஷ்டம்.
இதற்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகளை வரிசையாகப் பார்க்கலாம்--திருமணம், லிடியாவை டார்சி கண்டுபிடிப்பது, டார்சியிடம் எலிசபெத் விஷயத்தை கூறுவது, காரலினுடைய தூண்டுதல்கள், டார்சியின் மரியாதையான வரவேற்பு, பெம்பர்லியைப் பற்றி எலிசபெத்தின் தீர்மானம், டார்சியின் கடிதம், அவளுடைய நிந்தனை, பிங்கிலியைப் பற்றி காரலின் கூறும் செய்தி மற்றும் பல.
இந்த ஒவ்வொரு இடத்திலும் நம்மையே பொருத்திப் பார்த்தால் நமக்கு மேலும் மேலும் பல விஷயங்கள் புலப்படும்.
நிகழ்ச்சிகளின் ஒவ்வொரு பரிசீலனையும் திருவுருமாற்றத்தின் மற்றுமொரு சாயலை வெளிப்படுத்தும்.(இந்த பயிற்சியை அன்பர்கள் மேற்கொண்டாலோ அல்லது இந்த ஆராய்ச்சி முழுமையடைய குறைந்தபட்சம் கேள்விகளை எழுப்பினாலோ அது பேருதவியாக இருக்கும்.)
இந்த ஆராய்ச்சி மட்டுமல்ல, பெம்பர்லிக்கு எஜமானி ஆக வேண்டும் என்பது போன்ற ஒவ்வொரு தீர்மானமும் மேலும் சிறிய பாகங்களாகப் பிரிந்து மேலும் சிலவற்றை வெளிப்படுத்தும். அற்புதம் கண்ணுக்குச் சிறிது தென்படும்வரை அது தொடர்ந்து விரிவடையும். முழுமையாக அற்புதமாகும்வரை தொடரும்.
இவ்வாறு ஒருவர் இக்கதையை மேலும் சிறப்பாகப் புரிந்துகொண்டால் இந்த காட்சிகளும் பார்வைகளும் படிப்பவருக்குக் காட்சிகளாகவே தோன்றும்.
இந்த பார்வை உடைய எழுத்தாளர்கள், படிப்பவர்களுடைய உணர்வை ஆழமாகத் தொடக்கூடிய கதைகளை எழுதுவார்கள்.
ஷேக்ஸ்பியரின் 'அந்த அதிசயமான மனத்தைப்' பற்றி ஸ்ரீ அரவிந்தர் பேசுகிறார்.
கவிஞர் அவருடைய பார்வையில் உருவாக்குகிறார்.
இறைவன் தன்னுடைய ஆன்மீகப் பார்வையில் உருவாக்குகிறான்.
இதுபோல தன்னுடைய முந்தைய பிறவிகளை கற்பனை செய்து பார்க்கும் மனிதனுக்கு, முந்தைய பிறவிகளைப் பற்றிய அறிவு உள்ளது.
கடந்த காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் உள்ள வேறுபாடு இங்கு மறைகிறது.
ஒருவர் தனது எதிர்காலத்தைப் பார்க்கலாம், எதிர்காலத்தைத் தீர்மானிக்கலாம், உலகத்தின் எதிர்காலத்தைக்கூட காணலாம், தீர்மானிக்கலாம்.
ஸ்ரீ அரவிந்தர் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் உலகம் எவ்வாறு இருக்கும் என்பதை அன்னை தனது தியானத்தில் கண்டார்.

29. "This invaluable friend is a young woman lately married" – Mrs. Colonel Forster.
One who enters into security is no source of security to another.
One can trust another in a crime if he too has a part in it.
Crime is prevented by the danger of punishment.
Friendship in entertainment is lasting.
Joint enjoyment of any pleasure binds friends tightly together.
The more questionable the pleasure, the greater is the friendship.
People are not good or bad, they are so by circumstances.
Good humour for Mrs. Bennet is wild pleasure.
Life in the militia calls for discipline.
Discipline while on duty demands greater relaxation while off duty.
This invaluable friend is the lately married wife of Colonel Forster.

Her need to let off stream, being a colonel's wife, eminently suits Lydia.
The army barracks are organized places of relaxation that is dissipation.
Lydia in her company is vulnerable as she is married and thus safe.
A secure person is tempted to enjoy at the expense of an insecure person.
Mrs. Bennet can spread her silly wings only under the protection of her husband.
Wickham can borrow safely as Darcy will pay off his debts.
An apparent safety is often a real source of danger.
Human choice gains infinite significance as at every moment the choice can have infinitely variable results.
The infinitely variable oneness is the consciousness of the Absolute.
Lydia's one aim is not marriage, but a Man.
It opens up a non-social dimension of evolution outside the society.
Wickham's dissipation is an aspiration centred in himself outside the society.
To unite them to remain within society is the true reflection of the revolution across the channel.
The French Revolution destroyed the present society to create another society.
"இந்த மதிப்பு வாய்ந்த தோழி, சமீபத்தில் திருமணம் ஆன இளம் பெண் திருமதி கர்னல் பாஸ்டர் ஆவார்."
பாதுகாப்பிற்குள் உள்ள ஒருவர் மற்றவருக்கு பாதுகாப்பு தர முடியாது.
ஒரு குற்றத்தில் மற்றவருக்கும் பங்கு இருந்தால், ஒருவர் அவரை நம்பலாம்.
தண்டனை கிடைக்கும் என்ற பயத்தால் குற்றம் தவிர்க்கப்படுகிறது.
பொழுது போக்கில் நட்பு நிரந்தரமாக இருக்கும்.
இணைந்து எந்த இன்பத்தையும் அனுபவிப்பது நண்பர்களை நெருக்கமாக இணைக்கிறது.
எவ்வளவுக்கெவ்வளவு இன்பம் கேள்விக்குரியதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நட்பு அதிகமாக இருக்கும்.
சூழ்நிலையால் மனிதர்கள் நல்லவர்களாகவோ கெட்டவர்களாகவோ ஆகிறார்கள்.
சந்தோஷமாக இருப்பது திருமதி பென்னட்டிற்கு கட்டுக்கடங்காத இன்பமாக இருக்கிறது.
இராணுவ வாழ்க்கைக்கு ஒழுக்கம் தேவை.
வேலை நேரத்தில் ஒழுக்கமாக இருப்பதால், வேலை இல்லாத நேரத்தில் அதிக ஓய்வாக இருப்பது அவசியமாகிறது.
இந்த அதிமுக்கியமான தோழி, சமீபத்தில் திருமணம் ஆன கர்னல் பாஸ்டரின் மனைவி.
கர்னலின் மனைவியாக இருப்பதால், அவளது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது அவளுக்கு அவசியமாக இருப்பது, லிடியாவுக்குப் பொருத்தமாக இருக்கிறது.
சிப்பாய்கள் தங்கும் இடங்கள், வீணாக பொழுது போக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட இடங்களாகும்.
திருமதி பாஸ்டர் திருமணமாகி பாதுகாப்பாக இருக்கிறாள், அதே சூழலில் இருக்கும் லிடியா பலவீனமானவளாக இருக்கிறாள்.
பாதுகாப்பாக உள்ளவர் இன்பத்தை அனுபவிக்க, பாதுகாப்பற்றவர் விலை கொடுக்க வேண்டியுள்ளது.
திருமதி பென்னட் அவளுடைய கணவரின் பாதுகாப்பில்தான் அவளுடைய அற்பத்தனமான வேலைகளில் ஈடுபடுகிறாள்.
டார்சி தன் கடன்களை அடைத்து விடுவான் என்ற தைரியத்தில் விக்காம் கடன் வாங்கலாம்.
பாதுகாப்பாகத் தெரிவது பல சமயங்களில் நிஜமான ஆபத்துக்கான மூலகாரணமாக இருக்கும்.
ஒவ்வொரு தருணத்திலும் விருப்பம் அளவற்ற வெவ்வேறு பலன்களை அளிக்கலாம் என்பதால், மனித விருப்பம் அளவற்ற முக்கியத்துவத்தைப் பெறுகிறது.
அளவற்று மாறக்கூடிய ஒருமை பிரம்மத்தின் ஜீவியம் ஆகும்.
லிடியாவின் ஒரே நோக்கம் ஒரு ஆண்தானே தவிர திருமணம் அல்ல.
அது, சமூகத்திற்கு வெளியே பரிணாமத்தின் எவரும் செய்யாத பரிமாணத்தை திறக்கிறது.
விக்காமின் அழிச்சாட்டம், சமூகத்திற்கு வெளியே அவனுள்ளேயே மையம் கொண்டிருக்கும் ஆர்வமாகும்.
சமூகத்திற்குள்ளே தக்க வைப்பதற்காக அவைகளை இணைப்பது, அடுத்த நாட்டில் நடந்து கொண்டிருந்த புரட்சியின் உண்மையான பிரதிபலிப்பு ஆகும்.
பிரெஞ்சுப் புரட்சி நிலவுகின்ற சமூகத்தை அழித்து வேறொரு சமூகத்தை உருவாக்கியது.

30. "Out of the three months acquaintance, they had been intimate two".
Intimacy is more due to temperament than duration.
Common purpose springs intimacy.
The depths at which the personality is open ministers to intimacy.
Intimacy is out of the milk of human goodness.
Power of consciousness, Joy of Ananda unite to create intimacy.
Intimacy issues out of similarities or complementarity.
Good humour is similarity of temperament.
People's relationship is functional, not ideal or moral.

Three months is a long enough time for any intimacy to form.
Jane and Bingley took to each other in less than a month.
Darcy was wounded and smitten by Elizabeth without the service of any time.
Energy of youth, better still urges of youthful initiative forge intimacy readily.
Intimacy emerges in intense enjoyment.
Enjoyment here led to elopement. From Lydia's point of view the energy of enjoyment gave her Wickham.
Socially elopement is ruinous of the family of which Lydia is oblivious.
The excessive energy of enjoyment was available for Darcy to convert it into positive social results.
Darcy did so by the goodwill of wealth and status of one who is in love.
Man looks at any act from one focus.
An act explains itself from the individual's surface views, subconscious urges, family's social power, community's interest, aim of life, etc.
On the surface these may vary or conflict.
Below there is no variation where the surface serves the subconscious.
Elizabeth's desire to meet Jane and the subconscious response to Darcy converted a few hours visit into four days stay.
Charlotte's desire to relieve Elizabeth of Collins and her own basic need born out of the urge of an old maid happily meet and produce a lasting happy result.
"மூன்று மாத பரிச்சயத்தில் அவர்கள் இருவரும் வெகு நெருக்கமாக இருந்தனர்."
கால அவகாசத்தைவிட நெருக்கத்திற்கு மனவுணர்வுதான் காரணம்.
இருவருக்கும் இடையே இருக்கும் பொதுவான நோக்கம் நெருக்கத்தை ஏற்படுத்தும்.
எந்த ஆழத்தில் ஆளுமை விழிப்பாக இருக்கிறதோ, அது நெருக்கத்திற்கு தொண்டு செய்கிறது.
மனிதனின் நல்ல குணத்தில் நெருக்கம் எழுகிறது.
ஜீவியத்தின் சக்தியும், ஆனந்தத்தின் சந்தோஷமும் நெருக்கத்தை உண்டாக்க இணைகின்றன.
ஒரே மாதிரியாக இருப்பவை அல்லது உடன்பாடாக இருப்பவை நெருக்கத்தை ஏற்படுத்தும்.
ஒன்று போல் மனவுணர்வுடையவர்கள் சந்தோஷமாக இருப்பர்.
மனிதர்களின் உறவுகள் நடைமுறையைச் சார்ந்தவை, இலட்சியமாகவோ அல்லது தார்மீகமாகவோ இருக்காது.
நெருக்கம் வளர மூன்று மாத காலம் அதிகமானதுதான்
ஒரு மாதத்திற்குள்ளேயே ஜேனும் பிங்கிலியும் ஒருவரை ஒருவர் விரும்ப ஆரம்பித்தனர்.
எலிசபெத்தால் டார்சி காயப்படுத்தப்பட்டான், தாக்கப்பட்டான், காலத்தின் உதவியே அங்கு இல்லை.
இளமையின் சக்தியும் மேலும் சிறப்பாக இளமையின் தன்முனைப்பின் உந்துதல்களும், உடனடியாக நெருக்கத்தை ஏற்படுத்துகின்றன.
தீவிரமான சந்தோஷத்தில் நெருக்கம் வெளிவருகிறது.
இங்கு சந்தோஷத்தை அனுபவிப்பது ஓடிப்போவதற்கு வழி வகுத்தது.
லிடியாவின் கண்ணோட்டத்தில் சந்தோஷத்தின் சக்தி விக்காமை அளித்தது.
சமூகத்தில் ஓடிப்போவது குடும்பத்திற்கு அழிவை ஏற்படுத்துவதாக இருக்கும், லிடியாவுக்கு அது தெரியவில்லை.
நேர்மறையான சமூகப் பலன்களாக மாற்றக்கூடிய அளவிற்கு, டார்சியிடம் சந்தோஷத்தின் சக்தி அதிக அளவில் இருந்தது.
சொத்து மற்றும் சமூக அந்தஸ்தின் நல்லெண்ணத்தினால் காதல் வயத்தில் இருக்கும் டார்சி இவ்வாறு நடந்து கொண்டான்.
எந்தச் செயலையும் மனிதன் ஒரு கோணத்திலிருந்து பார்க்கிறான்.
ஒருவரின் மேற்பரப்பில் உள்ள எண்ணங்கள், ஆழ்மன உந்துதல்கள், குடும்பத்தின் சமூக அதிகாரங்கள், சமூகத்தின் ஆர்வங்கள், வாழ்வின் குறிக்கோள் போன்ற பல விஷயங்களிலிருந்து ஒரு செயல் அதனையே விளக்கிக் கொள்கிறது.
மேற்பரப்பில் அவை வித்தியாசப்படலாம் அல்லது முரண்படலாம்.
மேற்பரப்பு ஆழ்மனத்துக்கு சேவை செய்யும் இடத்தில் வேறுபாடுகள் இல்லை.
எலிசபெத், ஜேனை சந்திக்க விரும்பியதும் டார்சிக்கான அவளது ஆழ்மன மறுமொழியும் சில மணி நேர விஜயத்தை நான்கு நாட்களுக்கு தங்கும்படி செய்தது.
எலிசபெத்தை காலின்ஸிடமிருந்து விடுவிக்கும் ஷார்லெட்டின் ஆசையும், திருமணமாகாத வயதான பெண்ணுக்கே உரித்தான உந்துதல்களால் ஏற்பட்ட அடிப்படைத் தேவையும் இணைந்து, நீடித்த சந்தோஷமான முடிவை உண்டாக்கியது.

The rapture of Lydia on this occasion, her adoration of Mrs. Forster, the delight of Mrs. Bennet, and the mortification of Kitty, are scarcely to be described. Wholly inattentive to her sister's feelings, Lydia flew about the house in restless ecstacy, calling for every one's congratulations, and laughing and talking with

more violence than ever; whilst the luckless Kitty continued in the parlour repining at her fate in terms as unreasonable as her accent was peevish.

இந்தச் சந்தர்ப்பத்தில் லிடியா அடைந்த மகிழ்ச்சியையும், திருமதி. பாஸ்டரை அவள் கொண்டாடியதையும், திருமதி. பென்னட்டின் சந்தோஷத்தையும், கிட்டி அடைந்த துயரத்தையும் விவரிக்கவே முடியாது. தன்னுடைய சகோதரியின் உணர்ச்சிகளை முற்றிலும் கவனிக்காதவளாக நிலைகொள்ளாத சந்தோஷத்துடன் லிடியா வீட்டினுள் அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டிருந்தாள். எப்பொழுதும் இருப்பதைவிட ஆர்ப்பாட்டமாக சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் இருந்தாள். அதிர்ஷ்டமில்லாத கிட்டியோ வரவேற்பறையில் அமர்ந்து நியாயமில்லாத செயல் என்று எரிச்சலுடன் புலம்பிக் கொண்டிருந்தாள்.

31. Insensibility goes with callous selfishness.
    சொரணையற்று இருப்பதும் மோசமான சுயநலமும் இணைந்து காணப்படும்.
32. Lydia never feels sorry for Kitty.
    லிடியா, கிட்டிக்காக எப்பொழுதும் பரிதாபப்படுவதே இல்லை.
33. An act appears on the scene as energy earlier while still in the subtle plane.
    ஒரு செயல் சூட்சும நிலையில் இருக்கும்பொழுதே, சக்தியாக முன்னரே காட்சி அளிக்கும்.
34. Read the last para in the page with the elopement in mind.
    ஓடிப்போவதை மனத்தில் வைத்துக்கொண்டு, இந்த பக்கத்தின் கடைசிப் பத்தியை படிக்க வேண்டும்.
35. ‘Talking with violence’. Achievement or its anticipation does it.
    ‘வன்முறையுடன் பேசுவது’. வெற்றி பெறுவதோ அல்லது அதை முன்கூட்டியே எதிர்பார்ப்பதோ இவ்வாறு நடந்துகொள்ள வைக்கும்.
36. Lydia does not care for Kitty. She is obliviously selfish, but Kitty toes her line. Hence Kitty is more vulnerable than Lydia.
    லிடியா, கிட்டியை பொருட்படுத்துவதே இல்லை. அவள் தன்னை அறியாமலேயே சுயநலமாக இருக்கிறாள். ஆனால் கிட்டி அவள் சொல்வதைக் கேட்டு நடக்கிறாள். ஆகவே லிடியாவைவிட கிட்டி அதிக பலவீனமாக இருக்கிறாள்.
37. “The rapture of Lydia on this occasion, her adoration of Mrs. Forster, the delight of Mrs. Bennet and the mortification of Kitty are scarcely to be described”.

    Rapture, adoration, delight supplied the energy for the elopement.
    Mortification of Kitty gave the antisocial colouring.
    It ended in marriage as the positive aspect was in excess.
    Kitty being in the secret of Lydia is the link that made this conversion possible.
    Energy wise the elopement is eminently understandable.
    The vast illimitable energies released here by the mother, daughter, Mrs. Forster essentially made two other marriages possible.
    The fact that the last born successfully aspired for marriage explains the easy consummation of the other two weddings.
    Lydia’s elopement to be converted into wedding is a negative becoming positive, which occasions release of much energy.
    To make Wickham accept to marriage is equally energy consuming.
    Such energies came from Elizabeth moving to Mind, Darcy’s status, Darcy’s transformation.
    The fact Wickham came back to the army indicates that Mrs. Forster had no endorsement of Lydia’s plans.
    Colonel Forster’s search for Lydia, his visit to Longbourn are positive contributions that ended in finding her, marrying, and his joining the army.
    Lydia released the maximum energy as she was in rapture.
    Mrs. Bennet was asking for sea bathing. Its expectation is the physical pleasure. Her delight is the energy of that physical pleasure.
    Lydia was in gloom before the invitation arrived.
    Gloom converts into rapture thus increasing the supply of energy.
    Elizabeth was overwhelmed by what was happening around her and felt totally helpless indicating the flood that was released.
    Her pleading with the father was mental against the forces of the vital and physical.
    “இந்தச் சந்தர்ப்பத்தில் லிடியாவின் பரவசத்தையும், திருமதி பாஸ்டரை அவள் கொண்டாடியதும், திருமதி பென்னட்டின் சந்தோஷத்தையும், கிட்டி அடைந்த துயரத்தையும் விவரிக்கவே முடியாது.”
    பரவசம், போற்றுதல் மற்றும் மகிழ்ச்சி ஓடிப்போவதற்கான சக்தியை அளித்தன.
    கிட்டியை அவமானப்படுத்தியது சமூகத்திற்கு எதிரான உணர்வை அளித்தது.
    நேர்மறையான அம்சம் அதிகமாக இருந்ததால் அது திருமணத்தில் முடிந்தது.
    கிட்டி, லிடியா விஷயத்தில் இரகசியமாக இருந்தது, மாற்றத்தை சாத்தியமாக்கும் இணைப்பாக இருந்தது.

சக்தியை வைத்துப் பார்த்தால், ஓடிப்போவது நன்கு புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.
தாயார், மகள் மற்றும் திருமதி பாஸ்டர் விடுவித்த அளவற்ற சக்தி, முக்கியமாக மேலும் இரண்டு திருமணங்களை சாத்தியம் ஆக்கியது.
கடைசி மகள் திருமணத்துக்கு வெற்றிகரமாக ஆர்வப்பட்டது, மற்ற இரண்டு திருமணங்கள் சுலபமாக பூர்த்தி அடைந்ததை விளக்குகிறது.
லிடியா ஓடிப்போவது திருமணமாக மாறியது, எதிர்மறை நேர்மறை ஆவதாகும். இது போன்ற சமயங்களில் அதிக சக்தி வெளியிடப்படுகிறது.
விக்காமை திருமணத்திற்கு ஒத்துக்கொள்ளச் செய்வதும், அதே போன்ற சக்தி செலவழியும் விஷயமாகும்.
எலிசபெத் மனத்திற்கு மாறியது, டார்சியின் அந்தஸ்து மற்றும் டார்சியின் திருவுருமாற்றம், இவற்றிலிருந்து அந்த சக்தி வந்தது.
விக்காம் படைக்குத் திரும்பி வந்தது, லிடியாவின் திட்டத்தை திருமதி பாஸ்டர் ஆதரிக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.
கர்னல் பாஸ்டர் லிடியாவைத் தேடிப் போனதும், அவரது லாங்பர்ன் விஜயமும், அவளைக் கண்டு பிடித்ததும், திருமணம் மற்றும் அவன் படையில் சேர்ந்ததற்கான செயல்களுக்கு நேர்மறையான பங்குகள் ஆகும்.
லிடியா பரவசத்தில் இருந்ததால், அதிகமான சக்தியை விடுவித்தாள்.
திருமதி பென்னட் கடலில் குளிக்க வேண்டுமென்கிறாள். அதன் எதிர்பார்ப்பு உடலுக்கான சந்தோஷம். அந்த சந்தோஷத்தின் சக்திதான் அவளுடைய ஆனந்தம்.
அழைப்பு வருவதற்கு முன் லிடியா வருத்தத்தில் ஆழ்ந்திருந்தாள்.
வருத்தம் பரவசமாக மாறி சக்தியை அதிகரிக்கிறது.
அவளைச் சுற்றி நடந்தவைகளால் எலிசபெத் மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். வெளிப்பட்ட சக்தி வெள்ளத்தில் முழுவதுமாக செயலற்று நின்றாள்.
உணர்வு மற்றும் உடல்ரீதியான சக்திகளுக்கு எதிராக அவள் தகப்பனாரிடம் மன்றாடியது மனரீதியாக இருந்தது.

38. "Wholly inattentive to her sister's feeling, Lydia flew about the house".
Idealists never can take into account others' feelings.
Lydia, in pursuit of pure pleasure, uninhibited from any side, is an idealist.
Her own mother had all the makings of such an 'idealism'.
No one could have sparked off this great energy if Lydia had not done it.
An accomplishment has two sides, actually many sides.
Human initiative releases one side, making it lopsided.
Life is more comprehensive than society.
Society is not so severely unidimensional as the Individual.
Lydia released the energies of non-social dimensions.
Hence the immense quantity of it.
Had it been a marriage where Wickham proposed, so much of energies would not have been available.
The elopement is partially on her initiative.
He is blatantly false.
A false Man consenting to elopement is a simple negative act.
His consenting to marriage is a conversion to the positive social side.
Converting non-social forces into social energies, vast energies are available.
They are energies required for social evolution that avoids social revolution.
We can see this character in each small act directly connected with it.
The most important of which is Elizabeth's speaking to Darcy.
Her speaking is an exercise of human choice.
His coming at that moment is life's sanction.
His regret at the cancellation of her visit to Pemberley was an unseemly exhibition of coarse selfishness which was neutralized by his hunt, humiliation and payment.
Mrs. Gardiner's etiquette in regard to that brings her on a par with him, does not elevate him to her level, indicating her desire in that direction.
"சகோதரியின் உணர்வுகளை முற்றிலும் கவனிக்காமல் லிடியா வீட்டில் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தாள்."
இலட்சியவாதிகளால் ஒரு பொழுதும் மற்றவர்களுடைய உணர்வுகளைக் கருத முடியாது.
எந்த தயக்கமும் இல்லாமல் சந்தோஷத்தை மட்டும் நாடும் லிடியா ஒரு இலட்சியவாதி.
அவளது தாயாருக்கும் அது போன்ற இலட்சியங்களுக்கான அனைத்து அடையாளங்களும் இருந்தன.
லிடியா செய்திராவிட்டால் வேறு எவராலும் இந்த அளவு சக்தியை வெளிக்கொண்டு வந்திருக்க முடியாது.
ஒரு சாதனைக்கு இரண்டு பக்கங்கள் உண்டு, உண்மையில் பல பக்கங்கள் உண்டு.

மனித தன்முனைப்பு ஒரு பக்கத்தை வெளிப்படுத்துகிறது, அதை தலைகீழாக மாற்றுகிறது.
சமூகத்தைவிட வாழ்வு அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது.
தனி நபரைப்போல, சமூகம் அந்த அளவிற்கு ஒரே பரிமாணம் உடையதாக இல்லை.
லிடியா சமூகத்தில் இல்லாத பரிமாணத்தில் சக்தியை வெளிப்படுத்தினாள்.
அதனால்தான் அது அவ்வளவு அதிகமாக இருந்தது.
விக்காம் வேண்டுகோள் விடுத்த திருமணமாக இருந்திருந்தால், அந்த அளவு சக்தி அங்கு இருந்திருக்காது.
ஓடிப்போனது, ஓரளவிற்கு அவளுடைய தன்முனைப்பால் நிகழ்ந்தது.
அவன் வெளிப்படையாகவே பொய்யானவன்.
ஒரு பொய்மையான மனிதன் ஓடிப்போவதற்கு சம்மதிப்பது, ஒரு சாதாரண எதிர்மறையான செயல்.
அவன் திருமணத்திற்கு சம்மதிப்பது, நேர்மறையான சமூகத்தைச் சார்ந்த மாற்றம்.
சமூகத்தைச் சாராத சக்திகளை சமூக சக்திகளாக மாற்றும்பொழுது அதிகமான சக்தி கிடைக்கிறது.
அவை சமூக புரட்சிகளைத் தவிர்த்து, சமூக மாற்றங்களை ஏற்படுத்தத் தேவையான சக்தியாகும்.
ஒவ்வொரு சிறிய செயலிலும், நேராக அதில் சம்பந்தப்பட்ட இந்த குணாதிசயத்தை நாம் பார்க்கலாம்.
இதில் மிகவும் முக்கியமானது, எலிசபெத் டார்சியிடம் பேசுவது.
அவள் பேசுவது மனித விருப்பத்தைப் பயன்படுத்துவது.
அந்தத் தருணத்தில் அவன் வருவது வாழ்வின் அங்கீகாரம் ஆகும்.
அவளுடைய பெம்பர்லி விஜயம் ரத்து ஆனதற்கு அவன் அடைந்த வருத்தம், அவனுடைய சுயநலத்தைக் காட்டுவதாக இருக்கிறது. அவன் லிடியாவைக் கண்டு பிடிக்க எடுத்த முயற்சி, அடைந்த அவமானம் மற்றும் பணம் கொடுத்தன் மூலம் அது சரி செய்யப்பட்டது.
இந்த விஷயத்தில் திருமதி கார்டினரின் பண்பட்ட நடத்தை, அவளை அவனுக்கு இணையாக ஆக்குகிறது, அவனை அவளது நிலைக்கு உயர்த்தவில்லை. அவ்வாறு நடக்க வேண்டும் என்கிற அவளது ஆசையைக் காட்டுகிறது.

39. “Lydia was laughing with violence. Kitty was repining as her accent was peevish.”
Violent laughter is for the boisterous.
Her disregard for Kitty arises out of the intensity of her ambition.
The choice of friends appears as a freak.
Voice is vital. Affinity or attraction for the voice is the best qualification to be a friend.
There are subtle bodily movements no one notices, but everyone responds to.
There are perceptible bodily smells that exercise powerful influences.
Psychology being a deeper centre of being than voice, smell, movement, or psychological attitudes controls all this.
When these shifts in attitude are non-egoistic, they are invincible.
Laughter is the sound of energy one’s culture is unable to control.
A laughter under control is a vital power that controls others.
Laughter can be coarse, not violent.
Violence in laughter is the energy from the bodily centres.
Body is tickled into action by physical sensations.
The invitation never entered her as a thought.
It entered her as a vital sensation.
The physical being more receptive, the bodily centre was activated.
Hence she flew across the house.
The Physical does not see, it feels the touch.
Kitty not being in physical contact with her, ignores her.
The physical alone can demand congratulations.
She scarcely listens to anyone as the voice does not touch the body.
Kitty is described here as luckless.
Luck is to be in the same wavelength of Mrs. Forster and Wickham.
Kitty certainly is not of that wavelength, though she is led by Lydia.
Lydia is unmindful of her sisters as she is physical.
The physical knows what touches it.
“லிடியா ஆர்ப்பாட்டமாக சிரித்துக் கொண்டிருந்தாள். கிட்டி எரிச்சலுடன் புலம்பிக் கொண்டிருந்தாள்.”
ஆர்ப்பாட்டமான சிரிப்பு முரட்டுத்தனத்திற்குரியது.
கிட்டியை அவள் உதாசீனப்படுத்துவது அவளுடைய தீவிர ஆசையினால்.
நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது விநோதமாகப்படுகிறது.
குரல் உணர்வுக்குரியது. குரலின் ஈர்ப்போ அல்லது கவர்ச்சியோ நண்பர் ஆவதற்கு பெரிய தகுதியாகிறது.
யாரும் கவனிக்காத சில சூட்சும உடல் அசைவுகள் இருக்கும், ஆனால் எல்லோரும் அதற்கு பதிலளிப்பார்கள்.

வெளியே தெரியாத உடலின் வாசம் வலிமையாக வழி நடத்திச் செல்லும்.
குரல், மணம், அசைவு, அல்லது மனோரீதியான மனோபாவங்கள் இவைகளைவிட மனம் ஜீவனின் மையத்தில் இருப்பதால், இது எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.
இந்த மனோபாவத்தின் மாறுதல்கள் அகந்தையற்று இருக்கும்பொழுது அவை வெல்ல முடியாததாக இருக்கும் சக்தியின் ஒலியான சிரிப்பை, ஒருவருடைய நாகரிகத்தால் அடக்க முடியாது.
சிரிப்பை அடக்க முடிந்தால், உணர்வின் சக்தி மற்றவரை கட்டுப்படுத்தும் என்றாகிறது.
சிரிப்பு முரட்டுத்தனமாக இருக்கும், வன்மையாக இருக்காது.
உடலின் மையங்களிலிருந்து எழும் சக்தி, சிரிப்பில் வன்முறையாகும்.
உடல் உணர்வுகள் உடல் செயல்படத் தூண்டுகிறது.
எண்ணமாகக்கூட அழைப்பு அவளுள் எழவில்லை.
ஒரு உடல் உணர்வாக அது அவளுள் நுழைந்தது.
உடலின் ஏற்புத் திறன் அதிகமாக இருப்பதால் உடலின் மையம் தூண்டப்பட்டது.
அதனால் அவள் வீட்டுக்குள் அங்கும் இங்குமாக ஓடுகிறாள்.
ஜடத்திற்குப் பார்க்க முடியாது, தொடுவுணர்வு உண்டு.
கிட்டி ஜட நிலையில் அவளுடன் தொடர்பு கொள்ளாததால் அவளை புறக்கணிக்கிறாள்.
ஜடம் மட்டுமே பாராட்டை எதிர்பார்க்கும்.
குரல் ஜடத்தை தொடுவதில்லை அதனால் யார் சொல்வதையும் அவள் கேட்பதில்லை.
கிட்டி அதிர்ஷ்டமற்றவள் என்று இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.
திருமதி பாஸ்டர், விக்காம் இவர்களுடைய அலைவரிசையிலேயே அவளுடைய அதிர்ஷ்டமும் இருக்க வேண்டும்.
கிட்டி லிடியாவால் வழிநடத்தப்பட்டாலும், அந்த அலைவரிசையில் அவள் நிச்சயமாக இல்லை,
லிடியா ஜட நிலையில் இருப்பதால், சகோதரிகளைப் பற்றி அவள் கவலைப்படுவதில்லை.
தன்னை எது தொடுகிறது என்று ஜடத்துக்கு தெரியும்.

"*I cannot see why Mrs. Forster should not ask me as well as Lydia," said she, "though I am not her particular friend. I have just as much right to be asked as she has, and more too, for I am two years older."*
“ஏன் திருமதி. பாஸ்டர் என்னையும், லிடியாவுடன் சேர்த்து அழைக்கக் கூடாது என்று எனக்குப் புரியவில்லை. நான் அவளுடைய நெருங்கிய தோழி இல்லை என்றாலும், அவளை அழைப்பது போலவே என்னையும் அழைக்க எனக்கு எல்லாவித உரிமைகளும் இருக்கின்றன. மேலும் அவளைவிட நான் இரண்டு வயது மூத்தவளும் ஆவேன்,” என்கிறாள்.

40. Kitty’s disappointment then qualified herself to enter the superior society of Bingley and Darcy next year.
கிட்டியின் ஏமாற்றம் அவளை அடுத்த வருடம் பிங்கிலி, டார்சி இவர்களது உயர்ந்த சமூகத்திற்கு தகுதி உடையவளாக மாற்றியது.
41. She cries to be included, does not say “Why am I not invited instead of Lydia?” Inherently, her mind is more than fair. That is why she escaped the invitation.
தன்னையும் சேர்த்துக்கொள்ளச் சொல்லி அவள் கேட்கிறாள், ‘லிடியாவிற்கு பதில் என்னை ஏன் அழைக்கவில்லை’ என்று கேட்பதில்லை. அவளுடைய மனம் நியாயமாக உள்ளது. அதனால்தான் அவள் அழைப்பிலிருந்து தப்பித்துக் கொண்டாள்.
42. Kitty asks why she too was not invited. She does not say why she was not invited instead of Lydia. She is less selfish than Lydia .
ஏன் தன்னையும் அழைக்கவில்லை என்றுதான் கிட்டி கேட்கிறாள். லிடியாவிற்குப் பதில் தன்னை ஏன் அழைக்கவில்லை என்று கேட்பதில்லை. லிடியாவைப் போல் அவ்வளவு சுயநலமாக அவள் இல்லை.
43. Elizabeth is reasonable, Jane resigns herself to events.
எலிசபெத் நியாயமாக இருக்கிறாள், ஜேன் நிகழ்ச்சிகளை அப்படியே ஏற்றுக்கொள்கிறாள்.
44. Each advises Kitty from her own temperament.
கிட்டியை அவளது மனவுணர்வுகள் மூலமாகவே ஒவ்வொருவரும் அவளுக்கு அறிவுரை வழங்குகின்றனர்.
45. “I cannot see why Mrs. Forster does not ask me also”.
These words show absence of selfish jealousy in her.
Generally growing up in plentiful abundance prevents jealousy to form.
She does not ask why she was not asked instead of Lydia.
Absence of competition from Elizabeth with Jane is another such indication.
Mind does not so much compete as the vital.
The physical only wants to join.
Kitty even claims seniority by two years.
It was a period when any girl got married regardless of her elder’s position.
Still we see Kitty recognizing her seniority.

Collins too in his proposal honours seniority.
Seniority is biological.
Narasimha Rao who was not an M.P. was chosen leader because of his seniority.
Nehru became the Prime Minister disregarding several seniors.
Age giving way to merit is a measure of civilization.
It is true in matters of leadership age is overlooked in exceptional cases.
Still in all others seniority is honoured.
Merit, qualification, expertise, education, independence override age which is biological.
March of civilization is the individual coming into his own.
Still age rules as much as it can.
It is significant that all those who followed Gandhiji and Sri Aurobindo were younger to them.
Forms persist in spite of the outstanding value of the content.
Persistence of form is the insistence of the substance.
We see Latin terms predominant in the medical field as a clear superstition.
Doctors recommending a light meal prefer bread instead of idli, unable to wean themselves from the superstition of 150 years.
Mrs. Bennet speaks against new acquaintances.
"திருமதி பாஸ்டர் ஏன் என்னையும் அழைக்கவில்லை என்று புரியவில்லை."
அவளிடம் சுயநலமான பொறாமை இல்லை என்பதை இந்த வார்த்தைகள் காண்பிக்கின்றன.
அளவில்லாத அபரிமிதத்தில் வளருபவருக்கு பொறாமை உருவாகாது.
லிடியாவுக்குப் பதில் தன்னை ஏன் அழைக்கவில்லை என்று அவள் கேட்பதில்லை.
எலிசபெத்துக்கும், ஜேனுக்குமிடையே போட்டி இல்லாதது இது போன்ற மற்றுமொரு அறிகுறியாகும்.
உணர்வைப் போல் மனம் அவ்வளவாகப் போட்டியிடாது.
ஜடம் சேர்ந்து கொள்ளவே ஆசைப்படும்.
தான் வயதில் இரண்டு வருடம் மூத்தவள் என்றும் கிட்டி கூறுகிறாள்.
வயதில் மூத்தவர்களைப் பற்றி கவலைப்படாது எந்த ஒரு பெண்ணும் திருமணம் செய்து கொண்ட காலம் அது.
இருப்பினும் கிட்டி தான் வயதில் மூத்தவளாக இருப்பதைப் பற்றி பேசுவதைப் பார்க்கிறோம்.
காலின்ஸும் தன்னுடைய திருமணப் பேச்சில் வயதில் மூத்தவர்களுக்கு மரியாதை தருகிறான்.
வயதில் முதலாவது என்பது உடல்ரீதியானது.
பாராளுமன்ற அங்கத்தினராகக்கூட நரசிம்மராவ் இல்லாதபோது, அவருடைய அனுபவத்தின் முதன்மை காரணமாக அவரை தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.
வயதில் மூத்த பலரையும் மீறி நேரு பிரதம மந்திரியானார்.
தகுதிக்கு வயது இடம் அளிப்பது நாகரிகத்தின் அளவைக் குறிக்கிறது.
விதிவிலக்கான இடங்களில், தலைமைப் பதவிகளில் வயதை தாண்டியும் பார்க்க வேண்டி உள்ளது என்பது உண்மைதான்.
இருப்பினும் மற்ற எல்லாவற்றிலும் வயதிற்கு மரியாதை அளிக்கப்படுகிறது.
தகுதி, சிறப்பு, வல்லுநர் அறிவு, கல்வி, சுதந்திரம், இவை உடல்ரீதியான வயதை புறக்கணிக்கின்றன.
நாகரிகம் முன்னேறுவது, தனி நபர் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதாகும்.
இருப்பினும், வயது முடிந்த அளவு நிர்ணயம் செய்கிறது.
காந்திஜியையும், ஸ்ரீ அரவிந்தரையும் பின்பற்றியவர்கள் அனைவரும் அவர்களுக்கு இளையவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.
விஷயத்தின் மதிப்பு மேம்பட்டதாக இருந்தாலும் அதையும் தாண்டி இருப்பது தோற்றமே.
தோற்றத்தின் வலியுறுத்தல், பொருளின் வற்புறுத்தல் ஆகும்.
மருத்துவத்தில், லத்தீன் வார்த்தைகள் முக்கிய பங்கு வகிப்பது, தெளிவான மூடநம்பிக்கை என நாம் பார்க்கிறோம்.
இன்னமும் மருத்துவர்கள், நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன் இருந்த மூட நம்பிக்கையிலிருந்து மீள முடியாததினால், லேசான உணவு என்றால் இட்லிக்கு பதில் பிரட் உண்ணும்படி கூறுகிறார்கள்.
புதிய அறிமுகங்களுக்கு எதிராக திருமதி பென்னட் பேசுகிறாள்.

In vain did Elizabeth attempt to make her reasonable, and Jane to make her resigned. As for Elizabeth herself, this invitation was so far from exciting in her the same feelings as in her mother and Lydia, that she considered it as the death-warrant of all possibility of common sense for the latter; and detestable as such a step must make her, were it known, she could not help secretly advising her father not to let her go. She represented to him all the improprieties of Lydia's general behaviour, the little advantage she could derive from the friendship of such a woman as Mrs. Forster, and the probability of her being yet more imprudent

with such a companion at Brighton, where the temptations must be greater than at home. He heard her attentively, and then said –

நியாயமாக நடந்துகொள்ள எலிசபெத் எடுத்த முயற்சியும், அவள் அதனை ஏற்றுக்கொள்ள ஜேன் எடுத்த முயற்சியும் பலனளிக்கவில்லை. இந்த அழைப்பினை கேட்டு லிடியாவும், தாயாரும் அடைந்த மனவுணர்வுகள் எலிசபெத்திற்கு எழவில்லை, லிடியாவின் அறிவின் அழிவுக்கு உத்திரவாதம் என அவள் கருதினாள். தான் செய்யும் வேலை வெளியே தெரிய வந்தால் வெறுக்கத்தக்கதாக இருக்கும் என்று தெரிந்தாலும், தன்னுடைய தந்தையிடம் அவளை அனுப்ப வேண்டாம் என்று இரகசியமாக அறிவுரை தராமல் இருக்க முடியவில்லை. லிடியா பொதுவாக நடந்து கொள்வதில் உள்ள தவறான முறைகளையும், திருமதி. பாஸ்டர் போன்ற பெண்மணியின் நட்பினால் எந்த நன்மையும் பெறப் போவதில்லை என்றும், இதுபோன்ற ஒரு துணையுடன் பிரைட்டனில் அவள் மேலும் அஜாக்கிரதையாக நடந்து கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்றும், வீட்டைவிட அங்கு தவறு செய்வதற்கு தூண்டுதல் அதிகமாக இருக்கும் என்றும், தனது தகப்பனாரிடம் எடுத்துரைத்தாள். மிக உன்னிப்பாக அவள் பேசுவதைக் கேட்டு கொண்டு, பிறகு அவர்...

46. The feeling that the invitation is death warrant is not enough in her to speak a warning of Wickham.
அழைப்பு, மரண அழைப்பு என்று அவள் உணர்ந்தும், விக்காமைப் பற்றி எச்சரிக்க அவளுக்கு அது போதுமானதாக இல்லை.
47. Mr. Bennet does not want to cross his wife till the tragedy precipitates.
பேராபத்து நடக்கும்வரை திரு பென்னட் தன்னுடைய மனைவியை குறுக்கிட விரும்புவதில்லை.
48. He has allowed her to spend £2000 a year not only on the seven of them but even when they were alone. He would not allow her to borrow. That is the limit. He practiced self-restraint up to the point of his choice which brought two great marriages. Had he exercised his domestic authority, the girls would have married army officers. Non-interference with the wife demands greater restraint.
அவர்கள் எழுவராக இருந்தபோது மட்டுமன்றி, அவர்கள் மட்டும் தனியாக இருந்தபோதும், வருடத்திற்கு 2000 பவுன் செலவழிக்க அவர் அவளை அனுமதித்திருந்தார். கடன் வாங்க அவளுக்கு அனுமதி தரவில்லை. அதுதான் அவர் விதித்திருந்த கட்டுப்பாடு. தான் தேர்ந்தெடுத்திருந்த அளவுவரை அவர் சுய கட்டுப்பாட்டுடன் இருந்தார். அது சிறப்பாக இரு திருமணங்கள் நடக்க உதவியது. அவர் குடும்பத்தில் கட்டுப்பாட்டை கொண்டு வந்திருந்தால் பெண்கள் இராணுவ அதிகாரிகளை திருமணம் செய்து கொண்டிருப்பர். மனைவியை குறுக்கிடாமல் இருப்பதற்கு அதிக கட்டுப்பாடு தேவைப்படுகிறது.
49. Elizabeth tells him what he should speak to her.
லிடியாவிடம் என்ன பேசவேண்டும் என்று எலிசபெத் கூறுகிறாள்.
50. Mr. Bennet does not want to confront his wife and allows Lydia to go. In defence of it, he abuses the squeamish youth who frown on Lydia's behaviour. They are not squeamish youth. Any youth will disapprove of it. The truth is he is a weak husband before the dynamo of Mrs. Bennet. She obeys him always though she is insistent. He put her down after Lydia ran away. Clearly he took the line of least resistance and the whole family unpardonably paid for it.
திரு பென்னட் மனைவியை எதிர்கொள்ள விரும்பாததால் லிடியாவை அனுப்ப சம்மதிக்கிறார். அதை நியாயப்படுத்த லிடியாவின் நடத்தையைக் கண்டிக்கும் பணிவுள்ள இளைஞர்களைத் திட்டுகிறார். அவர்கள் பணிவு உள்ள இளைஞர்கள் அல்ல. எந்த ஒரு இளைஞனும் இதைக் ஒப்புக் கொள்ள மாட்டான். உண்மை என்னவென்றால், வலிமை மிக்க தனது மனைவியின் முன் அவர் பலவீனமானவராக இருக்கிறார். அவள் பிடிவாத குணமுள்ளவளாக இருந்தாலும் அவருக்கு எப்பொழுதும் கீழ்ப்படிகிறாள். லிடியா ஓடிப்போனவுடன் அவளை அவர் கண்டிக்கிறார். அவர் எதிர்ப்பு காண்பிக்காமல் இருந்ததற்கு குடும்பம் முழுதும் விலை கொடுக்க வேண்டி வந்தது.
51. At this point, 1) Elizabeth refuses to expose Wickham; 2) Mr. Bennet refuses to stop Lydia; 3) Mrs. Bennet fully instigates Lydia. Kitty breaks down which forewarns the tragedy. Every event positive as well as negative can be fully traced beforehand. Its footprints will be there invariably.
இந்த இடத்தில் 1) விக்காமை வெளிப்படுத்த எலிசபெத் மறுக்கிறாள்; 2) லிடியாவை திரு பென்னட் தடுப்பதில்லை; 3) திருமதி பென்னட் லிடியாவை முழுமையாகத் தூண்டிவிடுகிறாள், ஆபத்தை முன்கூட்டியே எச்சரிப்பது போல் கிட்டி அழுகிறாள். எல்லா நிகழ்ச்சிகளும் அது நல்லதோ, கெட்டதோ முன்கூட்டியே தெரிந்துவிடுவதைப் பார்க்கலாம். அதனுடைய அடையாளங்கள் நிச்சயமாக இருக்கும்.
52. "In vain Elizabeth tried to make her reasonable, Jane resigned".
Each tries according to her own character.
In offering to console another in distress, whether we succeed or not, we arrive at a relationship with him.
It is a measure of trying to outgrow one's ego.
A leader creates his pattern in his followers.
Or the followers try to fall into the pattern of the leader.
This will never work, as it is not the intention of Nature.
Each Man really grows according to his character.
But, it is a great truth a leader creates his pattern in hundreds of thousands.

The pattern is on the surface.
Each Man follows the leader's pattern according to his own character.
Outgrowing the leader's pattern is the real growth of the follower.
The growth of many for many years or decades lies within the pattern.
Forcing oneself into the pattern, the Man becomes dead, making his organization dead.
That is the history of religions.
Religions are dead organizations whose impulse of death is alive and active.
The dead covering is so great that it can deny the boon prayed for.
A devotee prayed to Parvathi asking for a boon of poetic genius.
The goddess came down as an old lady carrying the boon in her mouth, as betel.
The devotee was 'dead'; saw not the goddess, but the old lady.
He was revolted and refused the spittle with betel and nuts.
Next to him was an idiot, who offered to take it. He became the poet.
Consolation is asking another to follow the advisor.
It never works.
When it works, the results are interesting to follow.
Jane resigns herself to any outside situation.
It is difficult for others.
It is the only course she can think of.
So, she offers it.
"அவள் நியாயமாக நடந்துகொள்ள எலிசபெத் எடுத்த முயற்சி வீணாயிற்று, ஜேன் வேறு வழியின்றி அதை ஏற்றுக் கொண்டாள்."
ஒவ்வொருவரும் அவரவர்களுடைய சுபாவத்திற்கேற்ப முயற்சி செய்கின்றனர்.
கஷ்டத்தில் இருப்பவர்களை சமாதானம் செய்ய முயலும்பொழுது, நமக்கு வெற்றி கிடைக்கிறதோ இல்லையோ, அவர்களுடன் ஒரு உறவு ஏற்பட்டு விடுகிறது.
ஒருவருடைய அகந்தையை தாண்டி வருவதற்கு இது ஒரு வழியாகும்.
ஒரு தலைவர் தனது தன்மையை தனது தொண்டர்களிடம் உருவாக்குவார்.
அல்லது தொண்டர்கள் தலைவரின் தன்மையை பின்பற்றுவார்கள்.
இயற்கையின் நோக்கம் இது அல்லாததால், இது ஒரு பொழுதும் செயல்படாது.
ஒவ்வொரு மனிதனும் அவனது குணத்திற்கேற்ப உண்மையில் வளருவான்.
ஆனால், பல்லாயிரக்கணக்கான பேர்களிடம் தன்னுடைய தன்மைகளை ஒரு தலைவன் உருவாக்குவான் என்பது உண்மை.
இத்தன்மை மேற்பரப்பில் இருக்கும்.
ஒவ்வொரு மனிதனும், தலைவனது தன்மையை தன்னுடைய சுபாவத்திற்கேற்ப பின்பற்றுவான்.
தலைவனது பாணியை மிஞ்சுவதே ஒரு தொண்டனின் உண்மையான வளர்ச்சியாகும்.
பலரின் வளர்ச்சி, பல வருடங்களாக, அத்தன்மைக்குள்ளேயேதான் இருந்து வருகிறது.
ஒரு தன்மைக்குள் ஒருவன் தன்னை புகுத்திக் கொண்டால், அம்மனிதன் ஜீவனில்லாமல் போய் விடுவான், அவனுடைய நிறுவனமும் ஜீவனற்றுப் போய்விடும்.
அதுதான் மதங்களின் சரித்திரம்.
மதங்கள் ஜீவனற்ற அமைப்புகள் ஆகும், அங்கு ஜீவனை இழக்கும் உந்துதல் உயிருடனும், சுறுசுறுப்பாகவும் இருக்கிறது.
ஜீவனில்லாமல் இருப்பது அவ்வளவு வலிமையாக இருப்பதால், கேட்கப்படும் வரத்தை அது மறுத்து விடுகிறது.
ஒரு பக்தன் தனக்கு கவிதை திறன் வேண்டுமென்கிற வரத்தை பார்வதியிடம் கேட்டான்.
தெய்வம், வயதான பெண்மணியின் ரூபத்தில் கேட்ட வரத்தை வெற்றிலை பாக்கு எச்சிலாக கொண்டு வந்தது.
ஜீவனின்றி இருந்த பக்தன் வயதான பெண்மணியைப் பார்த்தானே தவிர தெய்வத்தை அல்ல.
அவன் வெற்றிலை பாக்கு எச்சிலை வாங்கிக் கொள்ள மறுத்தான்.
அருகில் இருந்த ஒரு முட்டாள் அதைப் பெற்றுக் கொண்டான். அவன் கவிஞனானான்.
புத்திமதி கூறுபவனை பின்பற்றும்படி மற்றொருவரை கேட்டுக்கொள்வது, ஆறுதலளிப்பது ஆகும்.
இது ஒரு பொழுதும் செயல்படாது.
அது வேலை செய்தால், பலன்கள் பார்ப்பதற்கு சுவாரசியமாக இருக்கும்.
எந்த வெளி சூழ்நிலையையும் ஜேன் இயல்பாக ஏற்றுக்கொள்கிறாள்.
இது மற்றவர்களுக்கு கஷ்டம்.
அவளுக்கு தெரிந்த ஒரே வழி அதுதான்.
அதனால் அவள் அதை பின்பற்றுகிறாள்.

53. “She considered it as a death warrant to all common sense pointed”.
Elizabeth gets this knowledge after Wickham was exposed.
Mrs. Bennet refused to see it even after Lydia ran away.
The two ends between which the movement takes place is one who gets the knowledge after experience and the other who cannot get it even after the event.
Elizabeth moved from the vital to the mental.
Mrs. Bennet remained in the vital itself.
Experience giving knowledge is progress.
Inability to get knowledge out of experience is habit reinforcing itself in the physical.
The physical organizes energy into skill which is physical skill.
Once the skill is formed, it can repeat endlessly which is Mrs. Bennet.
Skill repeats till it is saturated.
Once it is saturated it moves to form another skill.
Within one’s life the body is fixed, changes slowly by experience as its experience is among the old circumstances.
In the next generation the child is the product of two people.
The newborn child brings with it its experience in the previous birth.
There is a three fold change: 1) one’s own fresh experience, 2) Another parent’s contribution, 3) the child’s previous experience.
In the same birth, changes are little in the physical, more in the vital, most in the Mental.
Elizabeth is able to change by one experience as she is Mental.
Even after the tragedy Mrs. Bennet was unable to change as she was physical.
The physical too can change enough by education which she does not have.
Lydia was a worse extension of her temperament.
Not only Mrs. Bennet did not learn, she wanted to extend her present constitution in the child which was Lydia.
“லிடியாவின் எல்லா இயல்பறிவுக்கும் அது அழிவு காலம் என அவள் கருதினாள்”.
விக்காம் வெளிப்பட்டபின் எலிசபெத்திற்கு இந்த அறிவு கிடைக்கிறது.
லிடியா ஓடிப்போன பிறகும் கூட திருமதி பென்னட் அதைப் பார்க்க மறுக்கிறாள்.
இயக்கத்தின் இரு முனைகளுக்கு இடையே அனுபவத்திலிருந்து ஒருவருக்கு அறிவு கிடைக்கிறது, மற்றொருவருக்கு நிகழ்ச்சிக்குப் பிறகும் அறிவு கிடைப்பதில்லை.
எலிசபெத் உணர்விலிருந்து மனதிற்கு நகருகிறாள்.
திருமதி பென்னட் உணர்விலேயே இருக்கிறாள்.
அறிவை அளிக்கும் அனுபவம் முன்னேற்றமாகும்.
அனுபவத்திலிருந்து அறிவு பெறமுடியாமல் இருப்பது, பழக்கம் உடலில் வலுவடைவதினால்.
உடல் சக்தியை ஜடத் திறனாக முறைப்படுத்துகிறது.
திறன் ஒருமுறை உருவாகிவிட்டால் அது முடிவில்லாது மீண்டும் மீண்டும் எழும். இதுதான் திருமதி பென்னட்.
திறன் அதனுடைய முதிர்ச்சியை அடையும்வரை தொடரும்.
முதிர்ச்சி அடைந்தபின் அது வேறொரு திறனாக உருப்பெறும்.
ஒருவரது வாழ்வினுள் உடல் நிலைத்துள்ளது, அதனுடைய அனுபவம் பழைய சந்தர்ப்பங்களுக்கிடையே கிடைப்பதால், அது மெதுவாக மாறுகிறது,
அடுத்த தலைமுறையில் இருவர் சேர்ந்து உற்பத்தி செய்தது குழந்தையை.
பிறந்த குழந்தை முந்தைய பிறவியின் அனுபவத்தை தாங்கி வருகிறது.
மூன்று விதமான மாற்றங்கள் உள்ளன 1) ஒருவரது சொந்த புதிய அனுபவம் 2) மற்றொன்று பெற்றோர்கள் தருவது, 3) குழந்தையின் முந்தைய அனுபவம்.
ஜடத்தில் மாற்றங்கள் குறைவாகவும், உணர்வில் அதிகமாகவும், மனத்தில் மேலும் அதிகமாகவும் ஒரே பிறவியில் இருக்கும்.
எலிசபெத் மனத்தாலானவள் என்பதால் அவளால் ஒரு அனுபவத்திலேயே மாற முடிகிறது.
ஜடநிலையில் இருப்பதால் திருமதி பென்னட்டால் ஆபத்து எழுந்த பிறகும்கூட மாற முடியவில்லை.
கல்வி அறிவு இருந்தால் ஜடநிலையிலும் மாற முடியும், அது அவளிடம் இல்லை.
அவளுடைய மனவுணர்வுகளின் மோசமான விரிவாக்கம்தான் லிடியா.
திருமதி பென்னட் பாடம் கற்றுக்கொள்ளாததோடு, தன்னுடைய தற்பொழுதைய சுபாவம் குழந்தையிடம் விரிவடைய விரும்பினாள், அது லிடியாவாக அமைந்தது.

54. “Detestable as such a step must make her were it known, she could not help secretly advising her father”.
Lydia’s elopement is a more important event than anything else in the story.
This event needs a certain energy for that to take place and that energy should organize itself into power for the completion of this act.
Energy is preceded by an aspiration; it is followed by a direction that makes it into a force. It needs a structure that

organizes it into power. It is followed by the attitude and skills necessary before the result issues. Though the text cannot give all these details from all the characters, some can be gathered.

1) **Energy is positively -- positive to the elopement -- released by Lydia and her supporter Kitty.**
2) **It is augmented from the other sides from everyone by attitudes on either side.**
3) **Prior to the release of energy is the aspiration for it from so many people in so many ways.**
4) **Direction of energy into force is by the determination of the will behind.**
5) Organisation must be looked for in the characters and circumstances.
6) We have only Kitty's secret for attitude.
7) Skill comes from the previous plan of Wickham.

Bingley's submission to Darcy's ruse supports wrongdoing.

Caroline's triumph by an inverted mechanism strengthens Wickham's hand. Her triumph is over Elizabeth. When Elizabeth goes down, Wickham who planned for it, goes up.

Jane's disappointment strengthens Caroline, hence Wickham.

Bennet gloated over Jane's failure, a vicarious satisfaction over his wife. He could not act till an extreme was arrived at. That activated his wife, hence Lydia. Kitty supported by her secrecy. Her disappointment gave Lydia energy of triumph over Kitty. Letting the girls out before time generally boost the atmosphere. Now that Charlotte was married and triumphed she sought for more. Collecting all this and qualifying it, we will see the moment it was complete, she would have left the camp.

It is a difficult task but theoretically not impossible. Once it is done, the reverse movement starts, the mother's breakdown, her own actions reaching an absolute consummation, bringing an antisocial result. To her it gives a nervous breakdown during which she laments for not going to Brighton. That stands in the way of Lydia's discovery. Her loud lamentations to her brother bring the exhaustion of her energies to near completion. Mr. Bennet, an indolent gentleman spends all his possible effort in searching for Lydia.

Till then he is unqualified to take the right decision. **His decision reverses the course**. Kitty receives the force of his decision, takes it literally, breaks down. The decision is accepted by life. He criticizes his wife for the first time effectively after the elopement. That cancels his wife's role of encouragement to Lydia. Jane is disillusioned by Caroline which weakens the energies released by her. **Pemberley impresses Elizabeth. She chooses the property. Darcy comes in response, goes away in a few minutes,** comes back, expresses solicitude, walks back from the coach love-lorn. Georgiana invites Elizabeth. Caroline provokes Elizabeth. The provocation is the final straw for Lydia to run away. Though she had disappeared earlier, this is the point in subtle sequence we can get. Elizabeth breaks down, confides in Darcy. Jane too shares the danger. Every event can be weighed in terms of the aspects of the energy chain. Should such an equation be worked out, the moment she left the camp, the time Darcy found them, the hour when he agreed to marriage, the day when the debts were paid off, the hour the Money left Darcy, the hour it reached the creditor, every one of them will reveal their exact role in quantity and quality. This will, incidentally, explain the delay, the suddenness of the events. Many phrases in the book can give us some essential but isolated glimpse.

After a fashion a certain precision within that context can be achieved for each item on the chain. Occasionally we may stumble upon some time coincidences, space coincidences – a devotee's Vellore experience – will emerge strikingly.

"தான் எடுக்கும் முயற்சி வெளியே தெரியவந்தால் வெறுக்கத்தக்கதாக இருக்கும் என்று தெரிந்தாலும், இரகசியமாக அவளுடைய தந்தைக்கு அறிவுரை கூறாமல் அவளால் இருக்க முடியவில்லை."

லிடியா ஓடிப்போவதுதான் இக்கதையில் மற்ற எல்லாவற்றையும்விட ஒரு முக்கியமான நிகழ்ச்சி.

இந்நிகழ்ச்சி நடைபெற ஓரளவு சக்தி தேவைப்படுகிறது, இந்த செயல் முழுமை அடைவதற்கு அந்த சக்தி ஆற்றலாக தன்னையே முறைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

சக்திக்கு முன் ஆர்வம் எழுகிறது; அது ஒரு திசையில் ஆற்றலாக உருப்பெறுகிறது. ஆற்றலாக முறைப்படுத்த அதற்கு ஒரு அமைப்பு தேவைப்படுகிறது. பலன்கள் எழும் முன் அதற்குத் தேவையான மனோபாவமும் திறனும் இதைப் பின்தொடருகிறது. எல்லா கதாபாத்திரங்கள் வழியாக எல்லா விவரங்களையும் கதையில் தர முடியாவிட்டாலும் சிலவற்றைத் தெரிந்துகொள்ளலாம்.

1) **லிடியாவாலும், அவளுக்கு ஆதரவாக இருக்கும் கிட்டியாலும், சக்தி நேர்மறையாக வெளிப்படுகிறது. ஓடிப்போவதற்கு நேர்மறையாக.**
2) **எல்லோருடைய மனோபாவங்களினால் மற்ற பக்கங்களிலிருந்தும், இரு தரப்பிலிருந்தும் இது அதிகரிக்கப்படுகிறது.**
3) **பல விதமாக பல பேர்கள் எழுப்பும் அதற்கான ஆர்வம் சக்தியை விடுவிக்கின்றது.**
4) **விருப்புறுதியின் தீர்மானம் சக்தியை ஆற்றலாக திசை திருப்புகிறது.**
5) கதாபாத்திரங்களிலும், சந்தர்ப்பங்களிலும் அமைப்பை பார்க்க வேண்டும்.
6) மனோபாவத்திற்கு கிட்டியின் இரகசியம் ஒரு உதாரணம்.
7) விக்காமுடைய பழைய திட்டம் திறனை குறிக்கிறது.

டார்சியின் சூழ்ச்சிக்கு பிங்கிலி அடிபணிவது தவறான செயலை ஆதரிக்கிறது.

தலைகீழ் முறையால் காரலின் அடையும் வெற்றிப் பெருமிதம், விக்காமை பலப்படுத்துகிறது. அவளுடைய வெற்றிப் பெருமிதம் எலிசபெத் மீதானது. எலிசபெத்தின் நிலை கீழே சென்றபோது, அதற்கு திட்டமிட்ட விக்காமின் நிலை உயருகிறது.

ஜேனுடைய ஏமாற்றம் காரலினை பலப்படுத்துகிறது, அதனால் விக்காமுக்கும் பலம் கிடைக்கிறது. ஜேனுடைய தோல்வி, மனைவியின் தோல்வி என்று நினைத்து திருபென்னட் திருப்தி அடைகிறார். மிகப் பெரியதாக ஒன்று நடக்கும்வரை அவரால் செயல்பட முடியவில்லை. அது அவருடைய மனைவியை செயல்படத் தூண்டியது, இதன் மூலம் லிடியா செயல்படுகிறாள். இரகசியத்தை கப்பாற்றுவதன் மூலம் கிட்டி அவளுக்கு ஆதரவாக இருக்கிறாள். கிட்டியின் ஏமாற்றம் லிடியாவுக்கு ஒருவெற்றிப் பெருமிதத்தை அளிக்கிறது. நேரம் வருவதற்கு முன்பாகவே பெண்களை வெளியில் செல்ல அனுமதிப்பது சூழலை வலுப்படுத்துகிறது. ஷார்லெட்டுக்கு தற்பொழுது திருமணம் முடிந்து அவள் வெற்றிக் களிப்பில் இருப்பது மேலும் அவளை அதிகமாக நாட வைக்கிறது. இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்பொழுது, இவை யாவும் பூர்த்தி ஆகும் தருணத்தில் அவள் முகாமை விட்டு வெளியேறியிருப்பாள் என்பதை நாம் பார்க்கலாம். இது கடினமான செயலாக இருந்தாலும் நடக்கக் கூடியதுதான். இது முடிந்த பிறகு எதிர்மறையான நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. திருமதி பென்னட்டின் உடல் நிலை சீர்கேடு, லிடியாவின் செய்கையால் நிகழ்ந்த பெருத்த சமூக அவமானம், அவளை நிலைகுலைய வைத்தது. இந்நிலையிலும் திருமதி பென்னட் பிரைட்டனுக்குப் போகாததைப் பற்றி புலம்புகிறாள். லிடியாவைக் கண்டுபிடிப்பதை அது தடுக்கிறது. சகோதரனிடம் அவள் புலம்புவது முழு சக்தியையும் தீர்த்து விடுகிறது, சோம்பேறியாக இருக்கும் திரு பென்னட் லிடியாவைக் கண்டு பிடிக்க தன்னால் இயன்றவரை முயற்சி செய்கிறார்.

அதுவரை அவருக்கு சரியான முடிவெடுக்கும் தகுதி இருக்கவில்லை. அவருடைய முடிவு போக்கையே மாற்றுகிறது. கிட்டி முதலில் அதற்கு ஆளாகிறாள், அழ ஆரம்பிக்கிறாள். இந்த முடிவை வாழ்வும் ஏற்றுக் கொள்கிறது. லிடியா ஓடிப்போன பிறகு முதன் முறையாக வெற்றிகரமாக மனைவியை விமரிசிக்கிறார். அது அவருடைய மனைவியின் பங்கான லிடியாவை உற்சாகப்படுத்துவதை ரத்து செய்கிறது. காரலினைப் பற்றி ஜேனுக்கு கிடைத்த தெளிவு அவள் விடுவிக்கும் சக்தியை பலவீனப்படுத்துகிறது. **பெம்பர்லி எலிசபெத் மனதில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அவள் சொத்தை தேர்ந்தெடுக்கிறாள். மறுமொழி அளிப்பது போல் டார்சி வருகிறான், சில நிமிடங்கள் இருந்த பிறகு, சென்றுவிட்டு மீண்டும் வருகிறான்,** அக்கறையுடன் விசாரிக்கிறான், கோச் வண்டியிலிருந்து காதல் உணர்வுடன் நடந்து வருகிறான். ஜார்ஜியானா, எலிசபெத்தை அழைக்கிறாள். காரலின், எலிசபெத்தை எரிச்சலடையச் செய்கிறாள். காரலினுடைய செயல் லிடியாவை இறுதியாக ஓடிப்போவதற்குத் தூண்டி விடுகிறது. அவள் இதற்கு முன்பே காணாமல் போய்விட்டாலும், சூட்சுமமாக நமக்கு உணர்த்தும் இடம் இது. எலிசபெத் உடைந்து போகிறாள், டார்சியிடம் உண்மையை வெளிப்படுத்துகிறாள். ஜேனும் ஆபத்தை உணருகிறாள். சக்தியின் தொடர் சங்கிலியின் வழியாக எல்லா நிகழ்ச்சிகளையும் நாம் சீர் தூக்கிப் பார்க்கலாம்.

இது போன்ற சமன்பாட்டினை பெற வேண்டும் என்றால், முகாமை விட்டு அவள் வெளியேறிய தருணம், டார்சி அவர்களை கண்டுபிடித்த சமயம், அவன் திருமணத்திற்கு சம்மதித்த நேரம், கடன்களை அடைத்த அந்த நாள், டார்சியை விட்டு பணம் விலகிய நேரம், கடன் கொடுத்தவரை பணம் சென்று அடைந்த நேரம், இவை ஒவ்வொன்றும் அவற்றின் சரியான பங்கினை அளவிலும் தரத்திலும் வெளிப்படுத்தும். இது தாமதத்திற்கான காரணம், நிகழ்ச்சிகள் உடனடியாக நடந்ததற்குரிய காரணம், இவற்றையும் விளக்கும். புத்தகத்தில் உள்ள பல சொற்றொடர்கள் சில முக்கியமான, ஆனால் தனித்த கணநேரக் காட்சிகளை நமக்கு அளிக்கும்.

ஓரளவிற்கு, குறிப்பிட்ட துல்லியத்தை அந்த விஷயத்திற்குள், அந்த வரிசையில் ஒவ்வொரு பகுதியிலும் அடைய முடியும். சில சமயங்களில், நாம் சில இடம் மற்றும் காலத்தின் தற்செயலாக இணைந்து நடக்கும் நிகழ்ச்சிகளை ஆச்சரியப்படும் வகையில் பார்க்கலாம்.

55. "She represented to him all the improprieties of Lydia's behaviour".

A gross neglect occasions the obvious to be explained.
Representing injustice to a boss who enjoys it is a futile job.
In that case, directly or indirectly he will be the source of injustice.
Organisation perpetuates destructive forces of organisation.
A virtue turning into a vice is the ultimate secret of life.
Organisation is a neutral instrument.
Organisation in growth organises growth.
Organisation in decay organises decay.
Human choice is capable of converting one into another.
Organisation is neutral, choice originates power.
In a crisis as of today in finance, he who comprehends its course can place himself at the point where the forces ultimately organise themselves and **can exercise his choice converting the course of crisis into one of creative plenty**.
Such a thing can be done in life or in subtle life.
Prayer from such a junction makes miracles commonplace.

People who newly enter an old organisation can preside over it, if they can reach the subtle centre of the organisational existence.
Churchill and FDR did so in crises.
Romance Eternal can give this knowledge. He who reaches there singly will meet with great success.
The first step is non-reaction.
The final step is the sensational knowledge that the incoming disturbance is a vibration of joy.
Darcy unconsciously reached that place in the Bennet family and accomplished. We see all forces are under his control.
To trace everyone's contribution to Darcy's success is to know the story as Jane Austen conceived it in her genius.
The Psychic occupies that centre.
"லிடியா தவறான முறைகளில் நடந்துகொள்வதைப் பற்றி அவள் அவருக்கு எடுத்துரைத்தாள்."
மிகப் பெரிதாகப் புறக்கணிக்கப்பட்டது, வெளிப்படையாக உள்ளதையும் விளக்குவதற்கு காரணமாக இருக்கிறது.
அநியாயத்தை அனுபவிக்கும் முதலாளியிடம் அதைப் பற்றி எடுத்துக் கூறுவது பயனற்ற செயலாகும்.
அவ்வாறு செய்தால், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவனே அநியாயத்தை தோற்றுவிப்பவனாக இருப்பான்.
அமைப்பு, அமைப்பின் அழிவுக்குரிய சக்தியை நிலைத்திருக்கச் செய்யும்.
நல்லொழுக்கம் தீயொழுக்கமாக மாறுவது வாழ்வின் முடிவான இரகசியமாகும்.
அமைப்பு என்பது நடுநிலையான கருவியாகும்.
வளர்ச்சியின் அமைப்பு வளர்ச்சியை முறைப்படுத்தும்.
அழிவின் அமைப்பு அழிவை முறைப்படுத்தும்.
மனித விருப்பம் ஒன்றை மற்றதாக மாற்றவல்லது
அமைப்பு நடுநிலையானது, விருப்பத்திலிருந்து அதிகாரம் விளைகிறது.
பொருளாதாரத்தில் இன்று இருக்கும் நெருக்கடியின் போக்கை புரிந்துகொள்ளும் ஒருவர், அது முறைப்படுத்திக்கொள்ளும் இடத்தில் அவர் தன்னை இருத்திக் கொண்டு, **மேலும் தன்னுடைய விருப்பத்தை செலுத்துவதன் மூலம் நெருக்கடியை அபரிமிதமாகும்படி மாற்றவும் முடியும்.**
இதனை வாழ்க்கையிலும் செய்யலாம், சூட்சும வாழ்விலும் செய்யலாம்.
இது போன்ற ஒரு இடத்தில் பிரார்த்தனை அற்புதங்களை அன்றாட நிகழ்ச்சிகளாக்கும்.
வாழ்க்கையின் அமைப்பில் உள்ள சூட்சும மையத்தை மனிதர்கள் அடைந்தால், பழைய அமைப்புகளில் புதிதாக நுழையும் அவர்கள், அதற்குத் தலைமை தாங்கலாம்.
நெருக்கடி சமயத்தில் சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் அவ்வாறு செய்தனர்.
இந்த அறிவை, அமர காதலால் கொடுக்க முடியும். தனியாக ஒருவர் அந்த இடத்தை அடைந்தால் பெரிய வெற்றியை அவர் சந்திக்கலாம்.
எதிர்வினை ஆற்றாமலிருப்பது முதல் படியாகும்.
வரும் தொந்தரவு சந்தோஷத்தின் அதிர்வே எனும் உணர்வுபூர்வமான அறிவு கடைசிப் படியாகும்.
டார்சி தன்னை அறியாமல் பென்னட் குடும்பத்தில் அந்த இடத்தை அடைந்தான், சாதித்தான். அவனது கட்டுப்பாட்டின் கீழ் எல்லா சக்திகளும் இருப்பதை நாம் பார்க்கிறோம்.
ஒவ்வொருவரும் டார்சியின் வெற்றிக்கு அளித்த பங்கினை ஆராய்வது, ஜேன் ஆஸ்டின் இக்கதையை அவளுடைய மேதாவித்தனத்தால் எவ்வாறு உருப்பெறச் செய்தாள் என்பதை தெரிந்துகொள்வதாகும்.
சைத்திய புருஷன் இருப்பது அந்த மையத்தில்.

56. "He heard her attentively and then said" – Mr. Bennet heard Lizzy.
Mother says Man does not learn from another.
There is a rule to give suggestions, advice, hints, etc.
A Man readily receives ideas that will achieve his own goals quickly.
In case a danger is pointed, out Man pays heed to that suggestion.
In the absence of an issue of import, as Bingley and Darcy conversed at Netherfield, it is evident no one wanted to accept the least suggestion from anyone else.
In Wickham's first talk with Elizabeth, he told her what she readily wanted to believe and she was thankful to receive it from him.
Darcy could not accept one thing from Caroline's long description of Elizabeth at Pemberley.
No one ever talked to Lady Catherine. Anyone listened to her.
Collins was full of his opinions. He never noticed whether he was listened to.
Elizabeth would not take any advice from Charlotte.
Jane would not agree with anything such a loving sister spoke.
The rest was table talk, small talk.
All that Lizzy learnt from her father was silently received.

Ideas are accepted subliminally, subtly, never directly.
Direct communication raises the spirit of contradiction.
Ideas are well received by direct communication when they endorse the existing conviction, conscious or subconscious.
It is the greatest joke that great scholars have concluded Sri Aurobindo has relied on the Indian tradition.
His ideas are in direct opposition to the tradition.
The tradition never conceived of His great ideas.
Mr. Bennet's listening attentively was in deference to his affection, not for the purposes of accepting it.
It is a great thing that he later acknowledged the value of her words.
Apart from all the main issues, we see Mr. Bennet was anxious to refuse a suggestion from someone.
"திரு பென்னட் லிசி கூறியவற்றை கவனமாகக் கேட்டுக்கொண்டு பிறகு பேசலானார்."
மற்றவரிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்வதில்லை என்று அன்னை கூறுகிறார்.
ஆலோசனைகள், அறிவுரை, குறிப்புகள் கூறுவதற்கு சட்டம் உண்டு.
மனிதன் தன்னுடைய இலக்கை அடைவதற்கு பயன்படும் கருத்துகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வான்.
ஆபத்து என உணர்த்தப்பட்டால் மனிதன் அந்த ஆலோசனைக்கு செவி சாய்ப்பான்.
நெதர்பீல்டில் பிங்கிலியும் டார்சியும் முக்கியமில்லாத விஷயத்தை பேசிக்கொண்டிருந்தது, யாரும் யாரிடமிருந்தும் சிறிய ஆலோசனையைகூட ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் தெளிவாக்குகிறது.
விக்காம், எலிசபெத்துடன் முதன் முதலாகப் பேசிய பொழுது உடனடியாக நம்பவேண்டும் என்று அவள் விரும்பியதையே அவன் கூறினான், அதனை அவனிடமிருந்து கிடைக்கப் பெற்றதற்கு அவள் நன்றி பாராட்டினாள்.
பெம்பர்லியில், எலிசபெத்தைப் பற்றி காரலின் கூறிய நீண்ட விளக்கத்தில் ஒன்றைகூட டார்சியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.
லேடி காதரினிடம் யாரும் பேசியதில்லை. எல்லோரும் அவள் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.
காலின்ஸ் எப்பொழுதும் அவன் கருத்துகளிலேயே ஆழ்ந்திருந்தான். எவரேனும் தான் சொல்வதைக் கேட்கிறார்களா என்பதை அவன் கவனித்ததே இல்லை.
ஷார்லெட் கூறும் அறிவுரைகளை எலிசபெத் ஏற்றுக்கொண்டதே இல்லை.
அன்பான சகோதரி பேசும் எதையும் ஜேன் ஒத்துக்கொள்வதே இல்லை.
மற்ற எல்லாமும் பொழுதுபோக்குக்காக பேசும் சில்லறை விஷயங்கள்.
லிசி, தன்னுடைய தகப்பனாரிடமிருந்து கற்ற அனைத்தையும் மௌனமாக பெற்றுக்கொண்டாள்.
அடிமனத்திலும், சூட்சுமத்திலுமே கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, ஒருபொழுதும் நேரடியாக அல்ல.
நேரடியாகக் கூறுவது முரண்பாட்டைக் கிளப்பும்.
மேல்மனதிலோ அல்லது ஆழ்மனதிலோ, தற்பொழுதுள்ள திட நம்பிக்கையை வலியுறுத்தும் கருத்துகள், நேரடியாகக் கூறப்படும்பொழுது சிறப்பாக பெற்றுக்கொள்ளப்படுகின்றன.
ஸ்ரீ அரவிந்தர் இந்தியப் பாரம்பரியத்தை நம்பியிருந்தார் என பெரிய அறிவாளிகள் கூறுவது மிகப் பெரிய வேடிக்கை பேச்சாகும்.
பாரம்பரியத்திற்கு நேரடி மாறானது அவரது கருத்துகள்.
பகவானின் உயர்ந்த கருத்துகளை பாரம்பரியம் புரிந்துகொள்ளவே இல்லை.
பாசத்திற்கு மதிப்பு அளித்ததினால் திரு பென்னட் அவள் கூறுவதை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல.
பின்னால் அவள் கூறிய வார்த்தைகளின் மதிப்பை அவர் ஏற்றுக்கொண்டார் என்பது பெரிய விஷயமாகும்.
எல்லா முக்கியமான விஷயங்களைத் தவிர, திரு பென்னட் மற்றவரிடமிருந்து வரும் ஆலோசனையை மறுப்பதில் தீவிரமாக இருந்தார்.

"Lydia will never be easy till she has exposed herself in some public place or other, and we can never expect her to do it with so little expense or inconvenience to her family as under the present circumstances."
"லிடியா தன்னை ஏதாவது ஒரு பொது இடத்தில் வெளிக் காண்பித்துக்கொள்ளாவிட்டால் அமைதியாக இருக்க மாட்டாள். இப்பொழுது அவளுக்கு கிடைத்து இருக்கும் இச்சந்தர்ப்பம், இதைவிட மிகக் குறைந்த செலவிலோ அல்லது அவளது குடும்பத்தினருக்கு சௌகரியமான முறையிலோ அமையும் என நாம் எதிர்பார்க்க முடியாது."

57. "Lydia will never be easy till she exposes herself in some public place".
An empty head longs for shameless exhibition.
The woman loves to be on display.
Immature men love to display, not knowing it will hurt them.
The yearning for display overcomes the shame in display.
Of the much initial inexperience this is one.
Urge for growth in the physical is love of display in the vital.

A new thought fashioning in the Mind enjoys the nascent pleasure of it.
The violence of nascent energy is virulent.
Mrs. Bennet's entry into gentry gave birth to that nascent energy.
Man of rank marrying a commoner endows on her his rank.
A woman of rank is not permitted to do so.
Hence the vehemence of the woman in rising to status.
Mr. Bennet gave an attentive listening, gave the above as a considered opinion.
Any such event lends itself to be traced on either side several steps.
It is the inaction of a determined Man.
Going into action, his decision will be a determination.
He feels exactly like Elizabeth.
Speaking it out secretly to her father is her maximum.
Not acting is his maximum at that moment.
Older, mature religions do not go out and preach.
Immature, shallow religious take to preaching as a mission.
Communism was militant, democracy was not.
Aristocracy does not campaign for greater strength.
Civilised people do not go on conquering others.
To them conquest is their civilization spreading.
To a realized Guru, sishyas come seeking.
A realized Guru seeking a valuable sishya is a spiritual wonder.
Greatness, says He, must learn to live alone.
The above is the penultimate decision of his prior to the anticlimax.
"ஏதாவது ஒரு பொது இடத்தில் லிடியா ஆர்ப்பாட்டம் செய்யாவிட்டால், அமைதியாக இருக்க மாட்டாள்."
வெட்கமற்ற வெளிப்பாட்டிற்காக ஒரு முட்டாள் ஏங்குவான்.
பலரும் தன்னை பாராட்டுவதை ஒரு பெண் விரும்புகிறாள்.
முதிர்ச்சி அடையாத ஆண்கள் பாராட்டை விரும்புவர், அது அவர்களை பாதிக்கும் என்பதை அறிவதில்லை.
வெளிப்படுவதிலுள்ள ஏக்கம், வெளிப்படுவதிலுள்ள அவமானத்தை மிஞ்சி விடுகிறது.
ஆரம்பத்தில் ஏற்படும் அனுபவங்களில் இது ஒன்றாகும்.
ஜடத்தில் வளர்ச்சி அடைவதற்கு ஏற்படும் உந்துதல், பாராட்டைப் பெற உணர்வில் ஏற்படும் ஆசையாகும்.
மனத்தில் ஏற்படும் புதிய எண்ணம் அதன் புதுமையின் சந்தோஷத்தை அனுபவிக்கின்றது.
புதிய சக்தியின் வேகம் தீவிரமாக இருக்கிறது.
திருமதி பென்னட் நிலச்சுவான்தார்கள் வட்டத்தினுள் நுழைந்தது அந்த புதிய சக்திக்கு உயிர் அளித்தது.
பட்டம் உடைய மனிதன் சாதாரண குடும்பத்திலிருந்து ஒருத்தியை திருமணம் செய்து கொண்டால், அவனுடைய பட்டத்தை அவளுக்கு அளிப்பான்.
ஒரு பெண்ணால் ஆணுக்கு தன்னுடைய பட்டத்தை கொடுக்க முடியாது.
அதனால்தான் பெண்கள் அந்தஸ்தில் உயர வேண்டும் என்பதில் தீவிரமாக இருப்பர்.
திரு பென்னட் கவனமாகக் கேட்டுக் கொண்டார், மேற்கூறியதை அவருடைய ஆழ்ந்த கருத்தாக வெளியிட்டார்.
அது போன்ற எந்த ஒரு நிகழ்ச்சியையும் பலவித நிலைகளில் எந்த பக்கத்திலிருந்தும் அடையாளம் கண்டு கொள்ளலாம்.
தீர்மானமாக இருக்கும் மனிதன் செயல்படாமல் இருப்பது அது.
செயல்பட ஆரம்பித்தால், அவனது தீர்மானம் உறுதியாக இருக்கும்.
எலிசபெத்தைப் போலவே அவரும் நினைக்கிறார்.
அவளுடைய தந்தையிடம் இரகசியமாகப் பேசுவதே அவளுடைய ஆன்மீக அதிகபட்சம்.
அந்த தருணத்தில் செயல்படாமல் இருப்பதே அவரது அதிகபட்சம்
முதிர்ச்சி பெற்ற பழைமையான மதங்கள் வெளியே சென்று பிரச்சாரம் செய்யாது.
முதிர்ச்சி பெறாத ஆழமில்லாத மதங்களே பிரசாரத்தை பெரிய வேலையாக எடுத்துக் கொள்கின்றன.
பொதுவுடமைக் கொள்கை தீவிரத்துடன் இருந்தது. குடியரசு அவ்வாறு இருக்கவில்லை.
உயர்குடியினர் மேலும் வலிமைக்கு போராடுவதில்லை.
நாகரிகமுள்ள மனிதர்கள் மற்றவர்களை வென்றபடி இருக்க மாட்டார்கள்.
அவர்களது நாகரிகம் பரவுவதே அவர்களுக்கு வெற்றியாகும்.
சித்தி பெற்ற குருவைத் தேடி சிஷ்யர்கள் வருவார்கள்.
சித்தி பெற்ற குரு சிறந்த சிஷ்யனை நாடுவது ஆன்மீக அற்புதமாகும்.
தனிமையில் வாழ கற்றுக்கொள்வதே உயர்ந்தது என்று பகவான் கூறுகிறார்.
மேலே குறிப்பிட்ட அவருடைய கடைசிக்கு முந்தைய தீர்மானம், உச்சகட்டத்திற்கு முந்தையது.

58. "We can never expect her to do it with so little expense or inconvenience to the family".
Global or universal problem for the ego is understood from its point of view.
Human ego seeing the ocean of energy thinks how it can use it.
Ego takes an egoistic view.
To find infinity, it must take the view of the infinite or at least a universal view.
Evolution compels within the limits of evolution.
Elizabeth is not compelled to a greater transformation than moving to the Mind.
Darcy was not compelled to a wider transformation.
Bennet is not compelled to act in prevention.
The descent of 1956 compels now to act for others – give results free.
Outer compulsion is limited to the evolutionary atmosphere.
Inner compulsion can be endless limited only by aspiration.
His mentioning expense is an indication of his attitude to Money.
The inconvenience he mentions shows a life of discomfiture.
Lydia's going to Brighton is Elizabeth going to Pemberley.
Elizabeth opposed it.
Elizabeth was reluctant to visit Pemberley.
Each is in different directions.
In all directions Elizabeth was opposed as the invitation to Hunsford.
Is there a knowledge that can make Elizabeth see Brighton is Pemberley?
She sees her father should stop Lydia. Beyond she cannot see.
Can we know what Elizabeth should see and how?
She could see with mercenary eyes Charlotte's idea of marrying Darcy.
Can she see the same thing in a non-mercenary view?
She could have had she not turned it down out of prejudice.
"மிகக் குறைந்த செலவிலோ அல்லது குடும்பத்திற்கு சௌகரியமான முறையிலோ அவளால் இதைச் செய்ய முடியும் என நாம் எதிர்பார்க்கவே முடியாது."
உலகளாவிய அல்லது பிரபஞ்சத்தில் உள்ள அகந்தைக்குரிய பிரச்சினையை, அதனுடைய கண்ணோட்டத்திலேயே அது புரிந்துகொள்கிறது.
கடல் போன்ற சக்தியைப் பார்க்கும்பொழுது, அதை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மனித அகந்தை யோசிக்கிறது.
அகந்தை, அகந்தையான பார்வையை எடுத்துக்கொள்கிறது.
அகண்டத்தை கண்டுபிடிக்க வேண்டுமென்றால், அகண்டத்தின் பார்வையை அது எடுத்துக்கொள்ள வேண்டும், அல்லது பிரபஞ்சத்தின் பார்வையையாவது எடுத்துக்கொள்ள வேண்டும்.
பரிணாமத்தின் எல்லைகளுக்குள்ளேயே பரிணாமம் வற்புறுத்துகிறது.
மனத்தைத் தாண்டி மேலும் உயர்ந்த திருவுருமாற்றத்திற்கு எலிசபெத் தயாராக இல்லை.
மேலும் விரிந்த திருவுருமாற்றத்திற்கு டார்சி தயாராக இல்லை.
வராமல் தடுப்பதற்கு ஏற்ப செயல்பட பென்னட் தயாராக இல்லை.
1956-ல் கீழிறங்கிய சத்திய ஜீவியம் மற்றவர்களுக்காகச் செயல்பட இப்பொழுது வற்புறுத்துகிறது, பலன்களை எளிதாக அளிக்கிறது.
வெளி வற்புறுத்தல், பரிணாமச் சூழலுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
அக வற்புறுத்தல் அளவற்றதாக இருக்க முடியும், ஆர்வத்தால் மட்டுமே அதை கட்டுப்படுத்த முடியும்.
செலவைப் பற்றி அவர் குறிப்பிடுவது, பணத்தைப் பற்றிய அவருடைய மனப்பான்மையைக் குறிக்கிறது.
அவர் குறிப்பிடும் அசௌகரியம் சங்கடமான வாழ்வை புலப்படுத்துகிறது.
லிடியா பிரைட்டனுக்குப் போவது, பெம்பர்லிக்கு எலிசபெத் போவது போலாகிறது.
எலிசபெத் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தாள்.
பெம்பர்லிக்கு செல்வதில் எலிசபெத்திற்கு இஷ்டம் இல்லை.
இரண்டும் வெவ்வேறு திசையில் உள்ளன.
ஹன்ஸ்போர்ட் அழைப்பைப்போல் எல்லா விதத்திலும் எலிசபெத் எதிர்ப்பு தெரிவித்தாள்.
பிரைட்டன்தான் பெம்பர்லி என்கிற அறிவை எலிசபெத்திற்கு ஏதேனும் ஒன்று தர முடியுமா?
லிடியாவை அவளுடைய தந்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதைத் தாண்டி அவளால் எதையும் பார்க்க முடியவில்லை.
எலிசபெத் எதைப் பார்க்க வேண்டும், எப்படிப் பார்க்க வேண்டும் என்று நம்மால் அறிந்துகொள்ள முடியுமா?
டார்சியை அவள் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்கிற ஷார்லெட்டின் கருத்தை அவளால் ஆதாய கண்ணோட்டத்துடன்தான் பார்க்க முடிகிறது.
அதனையே ஆதாய கண்ணோட்டம் இல்லாமல் அவளால் பார்க்க முடியுமா?

தவறான அபிப்பிராயத்தினால் அவள் அதை மறுக்காமல் இருந்திருந்தால், அவளால் பார்க்க முடிந்திருக்கும்.

"If you were aware," said Elizabeth, "of the very great disadvantage to us all which must arise from the public notice of Lydia's unguarded and imprudent manner -- nay, which has already arisen from it, I am sure you would judge differently in the affair."

“லிடியா, அஜாக்கிரதையாகவும், விவேகமில்லாமலும் நடந்து கொள்வதால் உண்டாகும் அவப்பெயர், இல்லை, ஏற்கனவே உண்டான அவப்பெயரைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருந்தால், நீங்கள் இந்த விஷயத்தை வேறுவிதமாக கையாண்டிருப்பீர்கள்” என்று எலிசபெத் கூறுகிறாள்.

"*Already arisen?" Repeated Mr. Bennet. "What, has she frightened away some of your lovers? Poor little Lizzy! But do not be cast down. Such squeamish youths as cannot bear to be connected with a little absurdity are not worth a regret. Come, let me see the list of the pitiful fellows who have been kept aloof by Lydia's folly."*

“ஏற்கனவே அவப் பெயர் ஏற்பட்டு விட்டதா! என்ன, அவள் உன்னுடைய காதலர்கள் சிலரை பயமுறுத்தி அனுப்பிவிட்டாளா? பாவம் லிசி! இதனால் மனம் தளராதே. சிறு விஷயங்களுக்கெல்லாம் மனம் உடையும் இளைஞர்கள், ஒரு சிறிய தவற்றைக்கூட சகித்துக்கொள்ள முடியாதவர்கள், நாம் வருத்தப்படுவதற்கு தகுதியுடையவர்கள் அல்ல. லிடியாவின் முட்டாள்தனத்தால் ஒதுங்கி நிற்கும் பரிதாபத்திற்குரிய நபர்களின் பட்டியலை நான் பார்க்க வேண்டும்.”

59. “Has she frightened away some of your lovers?”
He did not feel the outrage Lydia was himself.
It is an unpardonable comment of his, almost in tune with his wife.
Other things apart, these few comments justifying Lydia’s behaviour are his sanction for the elopement.
Man gets used to bitter drinks and comes to love them. Mr. Bennet has got used to his wife’s style of functioning and is oblivious of Lydia’s defects.
Officers were acceptable to Elizabeth till then. They are an opportunity to Mrs. Bennet. Living in that atmosphere, how can Mr. Bennet resent Lydia’s behaviour?
We see the invitation to Brighton is related to the invitation to Pemberley.
Socially Lydia is an abomination.
In life she is powerful, positive or negative.
In existence Lydia is a positive force.
Darcy’s being in love with Elizabeth suddenly erupts in the proposal.
Lydia’s attraction suddenly bursts forth in the elopement.
Bingley’s arrival, Lydia’s elopement, Darcy’s proposal, Collins’s wedding are sudden occurrences.
They all signify the charged atmosphere in Meryton.
It is Wickham who brought in a highly charged negative rumour.
The placid atmosphere of the village could not uphold these high events.
Hence the positive and negative charges.
Mr. Bennet’s insensitivity to Lydia’s unguarded, imprudent behaviour incidentally reveals the cultural level of the place.
We never witness any resentment of Lydia’s behaviour.
Obviously Elizabeth belongs to the next generation to her parents.
True, it is Darcy who resents it, not even Bingley resents it.
Actually Bingley chose a bride from there.
Being a principal family in Meryton, the Bennets had a certain social impunity.
“உன்னுடைய காதலர்கள் எவரையேனும் அவள் பயமுறுத்தி அனுப்பி விட்டாளா?”
அவருக்கு கோபம் எழவில்லை, அவர்தான் லிடியாவாக இருந்தார்.
அது அவருடைய மன்னிக்க முடியாத விமரிசனம், அவருடைய மனைவியைப்போல் இருக்கிறார்.
மற்ற விஷயங்களுக்கு மேலாக லிடியாவின் நடத்தையை நியாயப்படுத்தும் வகையில் அவரது இந்த சில கருத்துகள், அவள் ஓடிப்போவதற்கு அவர் அனுமதி அளிப்பது போலாகிறது.
மனிதன் குடிக்கு அடிமையாகி அதனை விரும்ப ஆரம்பிக்கின்றான். திரு பென்னட் தன்னுடைய மனைவி செயல்படும் வகைகளுக்கு பழகி விடுகிறார், லிடியாவின் குறைகள் அவர் கண்ணுக்குத் தெரிவதில்லை.
அதுவரை எலிசபெத் அதிகாரிகளை ஏற்றுக்கொண்டிருந்தாள். திருமதி பென்னட்டிற்கு அவர்கள் ஒரு வாய்ப்பாக இருந்தனர். அந்த சூழலில் இருக்கும் திரு பென்னட்டிற்கு லிடியாவின் நடத்தையை எவ்வாறு கண்டிக்க முடியும்?
பிரைட்டனுக்கு விடுக்கும் அழைப்பிற்கும் பெம்பர்லிக்கு விடுக்கும் அழைப்பிற்கும் தொடர்பு உள்ளது என்பதை நாம் பார்க்கிறோம்.

சமூகத்தில் லிடியா ஒரு அவமானம்.
வாழ்க்கையில் நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ அவள் சக்தி வாய்ந்தவள்.
லிடியா 'வாழ்வு'க்குப் பொருத்தமானவள்.
எலிசபெத்தை டார்சி காதலிப்பது திருமண பேச்சில் திடீரென வெளிவருகிறது.
லிடியாவின் ஈர்ப்பு ஓடிப்போவதில் திடீரென வெளிப்படுகிறது.
பிங்கிலி வருவது, லிடியா ஓடிப்போவது, டார்சியின் திருமண வேண்டுகோள், காலின்ஸின் திருமணம் எல்லாமே திடீரென நிகழ்கின்றன.
மெரிடனில் சூழல் கனத்து இருப்பதை இவை எல்லாமே காண்பிக்கின்றன.
கனத்த எதிர்மறையான புரளியைக் கொண்டு வந்தது விக்காம்தான்.
கிராமத்தின் அமைதியான சூழலால் இந்த பெரிய நிகழ்ச்சிகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.
அதனால்தான் நல்லதும் கெட்டதுமான தாக்கங்கள் உள்ளன.
பாதுகாப்பும் விவேகமும் இல்லாத லிடியாவின் நடத்தையைப்பற்றி திரு பென்னட் உணர்வில்லாமல் இருப்பது அந்த இடத்தின் கலாச்சார நிலையை வெளிப்படுத்துகிறது.
லிடியாவின் நடத்தையைக் கண்டு கோபப்படுவதை நாம் பார்ப்பதே இல்லை.
எலிசபெத், அவளுடைய பெற்றோர்களின் அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவள் என்பது கண்கூடாகவே தெரிகிறது.
உண்மையில் டார்சிதான் கோபப்படுகிறான், பிங்கிலி கூட கோபப்படுவதில்லை.
பார்க்கப் போனால், பிங்கிலி அந்த இடத்திலிருந்தே மணமகளை தேர்ந்தெடுக்கிறான்.
மெரிடனின் முக்கிய குடும்பமான பென்னட் குடும்பத்தினருக்கு குறிப்பிட்ட சமூக சுதந்திரம் இருந்தது.

60. "Such squeamish youth as cannot be connected with a little absurdity".
Self-righteousness that blurs over an enormity never passes.
To justify a criminal blemish for self-defence never goes unpunished.
Nehru's high tone of self-righteousness was punished again and again by Suez, Hungary and China.
Mr. Bennet did not find Lydia's little absurdities 'intolerable'.
One can fly in the face of facts and pay for it.
To make a moral of one's absurd weakness, life punishes.
The strong presence in the subtle plane a stark reality makes Man speak tauntingly to another.
A caustic joke at another's expense is the subtle urge when the opposite fact awaits to be delivered.
The weak are impelled to challenge the strongest on the eve of results.
The occult service of the mean and perverse arises in this area.
A cultured sensitive Man cannot be an instrument of perfection to one who is on the verge of perfection.
Mean perverse depravity serving one with a vengeance shows he is on the borders of perfection.
The mean Man robs the other of honour, inflicts humiliation.
Honour is the soul of an honourable Man.
The mean Man pays with his job or life as they are his own equivalents to the other man's honour.
The ruse robbed Bingley of his girl.
Darcy was hotly abused by his girl in return of Pemberley.
Wickham scandalized Darcy in the village.
Wickham was stripped of the last vestige of shame there itself.
Lady Lufton found fault with Lucy for taking a fine stand.
She was compelled to solicit Lucy's good wishes going to her.
Lady Arabella fainted about Dear Mary.
One of the ways life is unsparing is this response.
"அறிவற்ற இளைஞர்கள், சிறிய குறைகளை கூட சகித்துக்கொள்ள முடியாதவர்கள்."
அறிவற்ற சிறுவர் குறை அபத்தமானது, அதை பொறுக்காத மனம் அர்த்தமற்றது.
மிகப் பெரிய குற்றத்தின் முன் மங்கிப் போகும் தான் சரி என்ற உணர்வு என்றும் ஜெயிக்காது.
சுய பாதுகாப்பிற்காக நியாயப்படுத்தப்படும் பெரிய குற்றம் தண்டனையிலிருந்து தப்பிக்கவே முடியாது.
நேரு, தான்தான் சரி என்று பறைசாற்றியது சூயஸ், ஹங்கேரி, சீனாவால் மீண்டும் மீண்டும் தண்டிக்கப்பட்டது.
லிடியாவின் சிறு அபத்தங்களை திரு பென்னட் 'சகிக்க முடியாதது' எனப் பார்க்கவில்லை.
உண்மைகளுக்கு எதிராகப் போனால் அதற்கு விலை கொடுக்க வேண்டி வரும்.
ஒருவரது அபத்தமான பலவீனத்தை நியாயப்படுத்தினால் வாழ்க்கை தண்டிக்கிறது.
சூட்சும நிலையில் வலிமையாக இருக்கும் அப்பட்டமான உண்மை நிலை மனிதனை மற்றவரிடம் கேலியாகப் பேச வைக்கிறது.
எதிரான உண்மைகள் வெளிப்படத் தயாராக காத்துக்கொண்டிருக்கும் பொழுது, அடுத்தவரை புண்படுத்துவது போல் பேசப்படும் ஹாஸ்யம் சூட்சும உந்துதலாகும்.

பலன்கள் கிடைப்பதற்கு முன்பே, பலவீனமானவர்கள் வலிமையானவர்களை சவாலுக்கு அழைக்கத் தூண்டப்படுவார்கள்.
சின்ன புத்தியும், வக்கிரமும் இந்த இடத்தில் இரகசியமாக தனது வேலையைக் காண்பிக்கும்.
பூரணத்துவத்தின் விளிம்பில் இருக்கும் மனிதனுக்கு நாகரிகமான உணர்வுமிக்க ஒரு மனிதன் பூரணத்தின் கருவியாக இருக்க முடியாது.
சின்னத்தனமான வக்கிரம் நிறைந்த ஒழுக்கக்கேடு ஒருவருக்கு வன்மத்துடன் உதவி புரிவது, அவர் பூரணத்தின் எல்லையில் இருக்கிறார் என்பதைக் காண்பிக்கிறது.
மற்றவனது மரியாதையை சின்ன புத்தி உள்ள மனிதன் கெடுத்து விடுகிறான், அவமானத்தைத் தேடித் தருகிறான்.
மரியாதையுள்ள மனிதனுக்கு மரியாதைதான் ஆன்மா.
மற்றவனது மரியாதைக்கு இணையாக உள்ள தனது வேலையையோ அல்லது வாழ்வையோ சின்னத்தனமான மனிதன் இழக்கிறான்.
சூழ்ச்சியினால் பிங்கிலி அவனது பெண்மணியை இழந்தான்.
பெம்பர்லியை கொடுத்ததற்குப் பதிலளிப்பது போல், டார்சி அவனுடைய பெண்மணியால் நிந்திக்கப்பட்டான்.
கிராமத்தில், டார்சியைப் பற்றி விக்காம் அவதூற்றினை கிளப்பினான்.
அதே இடத்தில், விக்காமின் வேஷம் கடைசி சுவடுவரை கலைக்கப்பட்டது.
லூசி, சிறப்பான முடிவு எடுத்ததற்கு லேடி லூப்டன் குற்றம் கண்டுபிடித்தாள்.
லூசியின் நல்லெண்ணம் அவளை வந்தடைய வேண்டும் என்று பிரார்த்திக்கும்படி, அவளுக்கு நிர்பந்தம் ஏற்பட்டது.
அன்பு மேரியை நினைத்து லேடி அரபெல்லா மயக்கமடைந்தாள்.
வாழ்வு கண்டிப்பாக இருப்பதன் ஒரு வழிதான், இந்த மறுமொழி.

61. “Let me see the list of pitiful fellows kept away by Lydia’s folly”.
Man is good at strengthening the hands of forces that destroy him.
This is not only his sanction but also his seal for the elopement.
Growth of spirit stopping at moksha, and confined to a caste, has initiated decay.
Its symbol is Kashmir.
It became the symbol of the Superpower contention.
The final refusal of Brahmin, fortified by the growth stopping is to be resolved by the leader of the world, the USA, destroying those who invaded the land of Spirit.
Capitalism whose death signals were rung in 1825 first shifted its arena to Money. Socialism operating through democracy can stave off the crisis.
It is a provisional solution to the malady, not a final resolution.
Mr. Bennet from a long habit of acquiescing with his wife, had started justifying her.
Man becomes an instrument for the cause he long opposes.
The principle of physical recoil explains it.
Elizabeth moved rightly, but partly.
Past perfection pays in the same plane, not in the next plane.
Increasing capacity yielding proportional results is in capacity, in the same plane. Results in the next plane, are results for value. Nothing short of perfection produces the results.
Mrs. Bennet works in the physical plane for results in the vital plane and is totally frustrated.
Mr. Bennet stays in the mental plane waiting for vital results. It comes after 25 years.
Wickham using falsehood gets the opposite results.
Elizabeth moving to the Mind from the vital gets all the results wanted.
Darcy’s transformation yields the expected results.
Jane’s silent will foolishly followed, gives results when folly is given up.
Charlotte at a crucial moment seeing the enormous energy at work could commission them for her use silently by a mercenary understanding, bringing about instantaneous miraculous results.
Meryton was in a great positive crisis.
Revolution is by other circumstances transformed into evolution.
Disintegration was converted into development at a grand scale.
The flood of forces seeks outlets.
Obstacles in the way will be destroyed.
Any aperture, regardless of social value or moral content, will be filled to overflowing.
Charlotte’s common sense is excessively precise and powerful.
In normal times her endowment has no value.
What is mercenary to us is luck in her view.

She rises in monetary value higher than Longbourn.
(Longbourn is £ 2000; she will have £ 1000 more than that).
The energy is of the nation, the benefit for Charlotte is personal. Hence its magnificence.
The result of a value is determined by its rightness, not character.
Life does not respect ethical, moral, social values.
Low values serve capacities in proportion.
Higher values refuse to serve capacities, look for values.
Mr. Bennet's unpardonable statement about Lydia's absurdities directly charged her absurdities and presented the results to him.
How life responds depends upon the person, the plane, the act, the motive, the context, making human choice infinitely valuable.
Human choice has infinite power.
Human choice is the infinitesimal from which infinity can be released if the human intends to become the Divine.
It is done in two stages 1) unegoistic 2) Psychic.
Thus human choice is spiritual awakening.
Human choice is capable of unraveling the Everlasting Day as Savitri did.
That is one Man's perfection.
"லிடியாவின் முட்டாள்தனத்தால் ஒதுங்கி நிற்கும் பரிதாபத்திற்குரிய நபர்களின் பட்டியலை நான் பார்க்க வேண்டும்."
தன்னை அழிக்கும் சக்திகளை பலப்படுத்துவதில் மனிதன் கெட்டிக்காரன்.
இது அவருடைய சம்மதம் மட்டும் இல்லை, ஓடிப்போவதற்கு அவர் அளித்த ஊர்ஜிதமுமாகும்.
மோக்ஷத்தோடு நின்றுவிடும் ஆன்மாவின் வளர்ச்சி ஒரு ஜாதிக்குள் அடங்கி அழிவை ஆரம்பித்து வைத்துள்ளது.
அதனுடைய அடையாளம்தான் காஷ்மீர்.
இது வல்லரசாக ஆவதற்கான அடையாளமாக மாறிவிட்டது.
வளர்ச்சி நின்றுவிட்டதன் மூலம் பலமடையும் பிராமணனுடைய இறுதி மறுப்பு, உலகத் தலைமையான அமெரிக்காவால் சரி செய்யப்பட வேண்டும். ஆன்மீக பூமியை தாக்கியவர்களை அழிப்பதன் மூலம் சரி செய்யலாம்.
1825-ல் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட முதலாளித்துவம் முதலில் பணத்தின்பால் மாறியது. ஜனநாயகத்தின் மூலம் செயல்படும் பொதுவுடமை இந்த நிலைமையை சரி செய்யும்.
பிரச்சினைக்கு இது தற்காலிகத் தீர்வுதான், இறுதி தீர்மானம் அல்ல.
திரு பென்னட் நீண்ட காலமாக தன்னுடைய மனைவியை பூரணமாக ஏற்றுக்கொள்ள பழகிவிட்டதால், அவளை நியாயப்படுத்தவும் ஆரம்பிக்கிறார்.
எதை மனிதன் நீண்ட காலமாக எதிர்த்து வருகிறானோ, அதற்கே அவன் கருவியாக மாறிவிடுகிறான்.
பின்னுக்குத் தள்ளும் பௌதிக தத்துவம் இந்தக் கருத்தை விளக்கும்.
எலிசபெத் சரியான முடிவெடுக்கிறாள், ஆனால் பகுதியாக மட்டுமே.
கடந்த கால சிறப்பு அதே நிலையில் பலனளிக்கும், அடுத்த நிலையில் அல்ல.
திறமை அதிகரிக்கும்போது அதே நிலையில் அதற்குத் தகுந்த பலன்களை அது அளிக்கிறது. அடுத்த நிலையில் கிடைக்கும் பலன்கள், பண்புகளுக்கான பலன்களாகும். முழுமையான பூரணத்துவமே பலன்களைத் தருகிறது.
உணர்வு நிலையின் பலன்களுக்காக ஜட நிலையில் செயல்படும் திருமதி பென்னட், முற்றிலும் ஏமாற்றம் அடைகிறாள்.
மனரீதியான நிலையில் இருக்கும் திரு பென்னட் உணர்வுக்குரிய பலன்களுக்காக காத்திருக்கிறார். இருபத்து ஐந்து வருடங்கள் கழித்து அவருக்கு பலன் கிடைக்கிறது.
பொய்மையை கையாளும் விக்காமிற்கு எதிரான பலன்கள் கிடைக்கின்றன.
உணர்விலிருந்து மனதிற்குச் செல்லும் எலிசபெத்திற்கு கேட்கும் பலன்கள் எல்லாம் கிடைக்கின்றன.
டார்சியின் திருவுருமாற்றம் எதிர்பார்த்த பலன்களை அளிக்கிறது.
ஜேன் மௌன விருப்புறுதியை முட்டாள்தனமாகப் பின்பற்றினாள், மடமையை விட்ட பிறகுதான் பலன்கள் கிடைக்கின்றன.
முக்கியமான தருணத்தில் அபரிமிதமான சக்தி செயற்படுவதைக் கண்ட ஷார்லெட் அதை அமைதியாக தன்னுடைய உபயோகத்திற்கு ஆதாய மனப்பான்மையுடன் பயன்படுத்திக் கொண்டு ஆச்சரியப்படும் வகையில் உடனடிப் பலன்களைப் பெற்றாள்.
நேர்மறையான நெருக்கடியில் மெரிடன் இருந்தது.
மற்ற சந்தர்ப்பங்கள் மூலம் புரட்சி பரிணாமமாக திருவுருமாறியது.
சிதறிப்போவது வளர்ச்சியாகப் பெரிய அளவில் மாற்றப்பட்டது.
சக்திகளின் வெள்ளம் வெளியே போவதற்குரிய வழிகளை நாடுகிறது.
வழியில் இருக்கும் தடைகள் அழிக்கப்பட்டு விடும்.

சமூகப் பண்பு, தார்மீக விஷயம் எதுவாக இருந்தாலும் அதையும் மீறி எந்த ஒரு துவாரமும் வழிந்தோடும்வரை நிரப்பப்படும்.

ஷார்லெட்டின் இயல்பறிவு துல்லியமாகவும் வலிமையுடையதாகவும் இருந்தது.

சாதாரண நேரங்களில் அவளுடைய திறமைக்கு மதிப்பே இல்லை.

நமக்கு ஆதாயமாகத் தோன்றுவது அவளுக்கு அதிர்ஷ்டமாகத் தெரிகிறது.

பொருள்ரீதியாக அவள் லாங்பர்னைவிட உயர்ந்து விடுகிறாள். (லாங்பர்னுக்கு சொத்து இரண்டாயிரம் பவுன்; அவளுக்கு அதைவிட கூடுதலாக ஆயிரம் பவுன் கிடைக்கிறது.)

சக்தி நாட்டினுடையது, ஷார்லெட்டுக்கு கிடைத்த பலன் அவளுக்குச் சொந்தமானது. அதனால்தான் அதனுடைய மேன்மை.

பண்பின் பலன் அது சரியானதா என்பதைப் பொறுத்து உள்ளதே தவிர, குணத்தைப் பொறுத்து அல்ல.

தர்மம், நியாயம், சமூகப் பண்புகளை வாழ்வு மதிப்பதில்லை.

தாழ்ந்த பண்புகளுக்கு ஏற்ற விகிதத்தில் திறன்கள் இருக்கும்.

உயர்ந்த பண்புகள் திறமைகளுக்கு உதவி புரிய மறுக்கின்றன, பண்புகளையே அவை எதிர்பார்க்கின்றன.

லிடியாவின் முட்டாள்தனத்தைப் பற்றி திரு பென்னட்டின் மன்னிக்க முடியாத வார்த்தைகள் அவளுடைய முட்டாள்தனத்திற்கு நேரடியாகச் சக்தி அளித்து பலன்களை அவருக்கு அளித்தது.

வாழ்வு எவ்வாறு மறுமொழி அளிக்கிறது என்பது நபர், நிலை, செயல், நோக்கம், விஷயம் இவைகளைப் பொறுத்து இருக்கிறது, மனித விருப்பத்தை மதிப்புமிக்கதாக மாற்றுகிறது.

மனித விருப்பத்திற்கு அளவற்ற சக்தி இருக்கிறது.

மனிதன் தெய்வமாக மாற விரும்பினால் மிகச் சிறிய அளவில் இருக்கும் மனித விருப்பம் அனந்தத்தை வெளிப்படுத்தும்.

1) அகந்தையற்ற முறையில் 2) சைத்திய புருஷன் மூலம் என இரண்டு படிகளில் இது நடத்தப்படுகிறது.

இவ்வாறாக மனித விருப்பம் ஆன்மீக விழிப்பாகும்.

சாவித்ரி செய்ததைப்போல் எப்பொழுதும் நீடித்திருக்கும் நாளை வெளிப்படுத்தும் திறன் உடையது மனித விருப்பம்.

அது ஒரு மனிதனின் பூரணத்துவம்.

"Indeed, you are mistaken. I have no such injuries to resent. It is not of peculiar, but of general evils, which I am now complaining. Our importance, our respectability in the world, must be affected by the wild volatility, the assurance and disdain of all restraint which mark Lydia's character. Excuse me -- for I must speak plainly. If you, my dear father, will not take the trouble of checking her exuberant spirits, and of teaching her that her present pursuits are not to be the business of her life, she will soon be beyond the reach of amendment. Her character will be fixed, and she will, at sixteen, be the most determined flirt that ever made herself and her family ridiculous; -- a flirt, too, in the worst and meanest degree of flirtation: without any attraction beyond youth and a tolerable person; and, from the ignorance and emptiness of her mind, wholly unable to ward off any portion of that universal contempt which her rage for admiration will excite. In this danger Kitty is also comprehended. She will follow wherever Lydia leads. Vain, ignorant, idle, and absolutely uncontrouled! Oh! My dear father, can you suppose it possible that they will not be censured and despised wherever they are known, and that their sisters will not be often involved in the disgrace?"

“நீங்கள் தவறாக நினைத்து விட்டீர்கள். நான் கோபப்படுவதற்கு ஒருவித பாதிப்பும் எனக்கு ஏற்படவில்லை. நான் இப்பொழுது குறை சொல்வது குறிப்பிடும்படியான கெடுதலைப் பற்றி அல்ல. ஆனால் பொதுவான தீமைகளைப் பற்றிதான். ஸ்திர புத்தியும், தன்னடக்கமும் இல்லாத லிடியாவின் குணத்தினால் நம்முடைய மதிப்பும், மரியாதையும் பாதிக்கப்படுகின்றன. நான் வெளிப்படையாகப் பேச வேண்டும், என்னை மன்னித்துவிடுங்கள் எனதருமை தந்தையே. நீங்கள் அவளுடைய அதீத உற்சாகத்தைத் தடுத்து நிறுத்தி, தற்சமயம் அவள் நாடிப் போவதெல்லாம் அவளுடைய வாழ்க்கை முறையாக ஆகக் கூடாது என சொல்லிக் கொடுக்காவிடின், அவளை திருத்தவே முடியாமல் போய்விடும். அவள் இப்படித்தான் என முத்திரை குத்தப்படுவாள். அவள் இந்த பதினாறு வயதில் பெரிய சபல புத்திக்காரியாக விளங்கி தன்னையும், தன்னுடைய குடும்பத்தையும் எல்லோரும் பார்த்து சிரிக்கும்படி ஆக்கிவிடுவாள். மிகவும் கீழ்த்தரமான காதல் வேட்கையில் ஈடுபடுகிறாள். இளமையும், அழகையும் தவிர வேறு எந்த கவர்ச்சியும் அவளிடம் இல்லை. எல்லோரும் தன்னைப் பார்த்து இரசிக்க வேண்டும் என்கிற அவளுடைய தீவிர ஆர்வம் எல்லோரும் அவளைப் பார்த்து இகழ்வதுபோல் ஆக்கிவிடும். அறியாமையினாலும், புத்தியில்லாததினாலும் மற்றவர்கள் இகழ்வதை அவளால் தடுத்து நிறுத்தவே முடியாது. இந்த ஆபத்தில் கிட்டியும் அகப்பட்டுக் கொள்வாள். லிடியாவை பின்பற்றிதான் அவளும் செல்வாள். அறியாமை, சோம்பேறித்தனம், சிறிதும் அடக்கமில்லாதவள், எதற்கும் பிரயோஜனமில்லாதவள்! ஓ! எனதருமை தந்தையே, எங்கெல்லாம் அவர்களைத் தெரிந்திருக்கிறதோ, அங்கெல்லாம் அவர்கள் கண்டனத்திற்கும், வெறுப்புக்கும் ஆளாவார்கள் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா, அவர்களுடைய சகோதரிகளுக்கும் இது ஒரு அவமானம் இல்லையா?”

62. Mr. Bennet feels Lydia's behaviour is not impermissible. He calls the growing youth squeamish. That is his mind. No wonder she ran away.
    லிடியாவின் நடத்தை அனுமதிக்க முடியாததல்ல என்று திரு பென்னட் நினைக்கிறார். வளர்ந்து வரும் இளைஞர்களை எளிதில் உணர்ச்சிவசப்படுபவர்கள் என்கிறார். அது அவருடைய மனம். அவள் ஓடிப்போனதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.
63. To him it is a little absurdity.
    அவரைப் பொறுத்தவரை அது ஒரு சிறிய முட்டாள்தனம்.
64. Wisdom lies not so much in the cure as in prevention.
    குணப்படுத்துவதை விட, வராமல் தடுப்பதில்தான் புத்திசாலித்தனம் இருக்கிறது.
65. Mr. Bennet raises the dangerous portion of the issue – scaring away men – still Elizabeth avoids the warning. The other side of scaring away men is luring away Wickham.
    விஷயத்தின் அபாயகரமான இடத்தை திரு பென்னட் கிளப்புகிறார், ஆண்களை பயமுறுத்தி துரத்துவது, இருப்பினும் எலிசபெத் அந்த எச்சரிக்கையைத் தவிர்க்கிறாள். ஆண்களை பயமுறுத்தி அனுப்புவதின் மறு பக்கம் விக்காமை ஆசைக்காட்டி அழைத்துச் செல்வதாகும்.
66. Her warning is blunt but in general.
    அவளுடைய எச்சரிக்கை வெளிப்படையாக இருந்தது, ஆனால் பொதுவாக இருந்தது.
67. She refused to say Wickham has a bad past.
    விக்காமிற்கு மோசமான கடந்த காலம் இருந்தது என்பதை அவள் கூற மறுக்கிறாள்.
68. As he refused to act, she refuses to expose Wickham.
    அவர் செயல்பட மறுத்தது போல், அவளும் விக்காமை வெளிப்படுத்த மறுக்கிறாள்.
69. "I have no injuries to resent" – Elizabeth.
    Elizabeth's retreat from her presentation shows the strength of Lydia's urge and the indolent strength of the father who had slid into isolation.
    Insularity gives indolence strength of inaction.
    Mr. Bennet who is outraged by his wife's behaviour could not let her down to another, even his pet daughter.
    In defending Lydia, certainly he does not endorse her outrages.
    He, out of long habit, in defending the status quo, unconsciously becomes warm in his support to Lydia.
    Opposition in politics often finds themselves serving the cause of their political opponents.
    Neither support nor opposition means totality in its stand.
    Their convictions ooze out to the opposite side considerably.
    Material poverty keeping company with cultural richness, cultural shallowness with material plenty is a known phenomenon.
    Each serving its apparent opposite is an invisible fact.
    It is better seen in the materialist and spiritualist denouncing each other.
    The idealism that actuates the materialist is purely spiritual.
    'The agnostic announces a higher religion.
    To safeguard its spirituality, one has to resort to ceremonies that acquire material significance.
    This is so one is the successor of the other.
    The first person Jane wants to tell her engagement to is her mother, who literally did her best to destroy it, though not intentionally.
    Good and Evil are not fully mutually destructive.
    Both affirm life each in their own way.
    Their relationship is not a well defined opposition.
    One penetrates the other at points of vulnerability.
    The mutual destruction is also mutual reinforcement.
    Only that we do not always see the real role played by people.
    "கோபப்படுவதற்கு நான் எந்த விதத்திலும் காயப்படவில்லை -எலிசபெத்.
    பேசுவதிலிருந்து எலிசபெத் பின் வாங்கியது, லிடியாவின் உந்துதலுடைய வலிமையையும் தனிமைக்குச் சென்று விட்ட தந்தையின் சோம்பேறித்தனத்தையும் காண்பிக்கின்றது.
    செயல்படாமலிருக்க, சோம்பேறித்தனம் என்கிற பலத்தை தனிமை அளிக்கிறது.
    தன்னுடைய மனைவியின் நடத்தையைக் கண்டு கோபப்படும் திருபென்னட் யாருக்காகவும் அவளை விட்டுக்கொடுக்க முடியவில்லை, தனது செல்லமான பெண்ணிடம்கூட.
    லிடியாவை நியாயப்படுத்தும்பொழுது, அவர் நிச்சயமாக அவளுடைய கோபத்தை ஆதரிப்பதில்லை.
    வெகு கால பழக்கத்தின் காரணமாக, அவர் உள்ளதை தற்காத்துக் கொள்வதற்காக லிடியாவை ஆதரிப்பதில் தன்னை அறியாமலேயே அனுசரணையாக மாறுகிறார்.

அரசியலில் எதிர்கட்சிகள் பல நேரங்களில் தங்களுடைய அரசியல் எதிரிகளின் நலனுக்காகவே செயல்படுகிறார்கள்.

ஆதரவோ அல்லது எதிர்ப்போ, எதுவும் முழுமையாக இருப்பதில்லை.

அவர்களுடைய திடநம்பிக்கை எதிர்திசையில் அளவுக்கு அதிகமாகப் பாயும்.

கலாச்சார செழுமையுடன் சேர்ந்து பொருளாதார வறுமை இருப்பதும், கலாச்சார வெறுமையுடன் செல்வச் செழிப்பு சேர்ந்து இருப்பதும் தெரிந்த ஒரு விஷயம்.

ஒவ்வொன்றும் அதனுடைய வெளிப்படையான நேரெதிரானதற்குச் சேவை செய்வது கண்ணுக்குப் புலப்படாத உண்மை.

ஆன்மீகவாதியும், லௌகீகவாதியும் ஒருவரை ஒருவர் எதிர்ப்பதில் இதனை நன்றாகப் பார்க்கலாம்.

லௌகீகமானவரை தூண்டும் இலட்சியவாதம் முழுமையாக ஆன்மீகமயமானது.

'நாத்திகன் உயர்ந்த மதத்தை அறிவிக்கிறான்'.

அதனுடைய ஆன்மீகத்தை பாதுகாக்க வேண்டுமென்றால், பொருள்ரீதியாக முக்கியத்துவம் பெறும் சடங்குகளை ஒருவர் பின்பற்ற வேண்டியதாகிறது.

ஒன்று மற்றதை பின் தொடர்கிறது.

வேண்டுமென்றே செய்யாவிட்டாலும் ஜேனுடைய திருமணத்தை தன்னால் இயன்றவரை கெடுத்த தாயாரிடம்தான் அவள் முதலில் தன்னுடைய திருமண உறுதியைப் பற்றி கூற விரும்புகிறாள்.

நல்லதும் கெட்டதும் இரண்டுமே முழுமையாக ஒன்றை ஒன்று அழிக்காது.

இரண்டுமே வாழ்க்கையை அதனதனுடைய வழியில் உறுதி செய்கிறது.

அவற்றின் உறவு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ள எதிர் எதிரானது இல்லை.

எங்கெல்லாம் பலவீனமாக உள்ளதோ அங்கெல்லாம் ஒன்று மற்றதற்குள்ளே நுழையும்.

ஒன்றை ஒன்று அழித்துக் கொள்வது, ஒன்றை ஒன்று பலப்படுத்துவதுமாகும்.

மனிதர்களின் உண்மையான பங்கை நாம் எப்பொழுதும் பார்ப்பதில்லை என்பதுதான் உண்மை.

70. "Our respectability in the world must be affected by her wild volubility"

Elizabeth's maturity had outgrown her father's.

Social growth that is evolution is furthered by each generation and is checkmated by leaving the authority in the hands of parents.

Bennet has the authority, Elizabeth has the knowledge.

Bennet who has the authority, parted with it in favour of his wife.

The net result is determined not by the respective decisions but the flow of events outgrowing the individual wisdom.

The balance of progress between two generations is decided by the outer pressure and the inner strength.

The inner truth finally translates into outer reality.

Elizabeth does not want any tragedy, nor her father.

The inner truth of her mother is not that she seeks any tragedy, but her pursuit of joy does not consider such a tragedy an obstacle. It rarely comes out in the story except as Austen's comment upon the public urge.

She was afraid their respectability might be affected but it rose sky high, first dipping low.

It is the work of the atmosphere.

The temperament of each character is fully recognized by society as well as life. There can be no flaw in it.

The population has this knowledge.

They cannot comprehend the nature or power of the atmosphere.

At such times the common comment is, "They are lucky".

Luck is used to replace our ignorance of the laws of life.

What happened in this story, every little development, can be explained according to the laws of life.

It is the contribution of Sri Aurobindo to the body of the world's knowledge.

That knowledge is power, a power that can change the world, dissolve Evil.

"அவளுக்குத் தன்னடக்கம் இல்லாத காரணத்தினால் இந்த உலகத்தில் நம்முடைய மதிப்பும் மரியாதையும் பாதிக்கப்படும்."

அவளுடைய தந்தையை விட எலிசபெத் முதிர்ச்சி பெற்றவளாக இருக்கிறாள்.

ஒவ்வொரு தலைமுறையினரும் பரிணாமமான சமூக வளர்ச்சியை முன்னேற்றிக் கொண்டு செல்கின்றனர், அதனை தடுத்து நிறுத்தும் அதிகாரத்தை பெற்றோர்களின் கைகளில் கொடுத்து விடுகின்றனர்.

பென்னட்டுக்கு அதிகாரம் உள்ளது, எலிசபெத்திற்கு அறிவு இருக்கிறது.

அதிகாரம் இருக்கும் பென்னட் தன்னுடைய மனைவிக்காக அதை விட்டுக் கொடுக்கிறார்.

அதனதனுடைய தீர்மானத்திற்கேற்ப இறுதியான பலன்கள் தீர்மானிக்கப்படுவதில்லை, தனிப்பட்டவரின் அறிவையும் தாண்டி நிகழ்ச்சிகளின் ஓட்டம் தீர்மானிக்கிறது.

இரண்டு தலைமுறைகளுக்கு இடையே உள்ள வளர்ச்சியின் சமநிலை, புற அழுத்தத்தாலும், அக வலிமையாலும் தீர்மானிக்கப்படுகிறது.

அகத்தின் உண்மை இறுதியாக வெளியில் உண்மை நிலையாக மாறுகிறது.

எலிசபெத்தும், அவளது தந்தையும் எந்த ஆபத்தையும் விரும்புவதில்லை.
அவளது தாயாரும் உண்மையில் எந்த ஆபத்தையும் நாடுவதில்லை, ஆனால் சந்தோஷத்தைத் தேடிச் செல்லும் பொழுது ஆபத்தை ஒரு தடையாக அவள் நினைப்பதில்லை. சமூகத்தின் உந்துதலைப்பற்றி ஆஸ்டினுடைய கருத்தாக மட்டுமே குறிப்பிடப்படுகிறதே தவிர, கதையில் இது வெளிப்படுவதில்லை.
தங்களுடைய மரியாதையை பாதிக்கும் என அவள் பயந்தாள், ஆனால் அது முதலில் கீழிறங்கி பிறகு வானளவு உயர்ந்தது.
இது சூழலின் செயலாகும்.
ஒவ்வொரு கதாபாத்திரத்தின் மனவுணர்வுகளை சமூகமும், வாழ்வும் முழுமையாக அங்கீகரித்துள்ளது. அதில் எந்த குறையும் இருக்காது.
மக்களுக்கு இந்த அறிவு உண்டு.
சூழலின் இயற்கை அல்லது சக்தியை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது.
அது போன்ற சமயங்களில் பொதுவான விமரிசனம், 'அவர்கள் அதிர்ஷ்டசாலிகள்' என்பதுதான்.
வாழ்வின் சட்டங்களைப் பற்றிய நமது அறியாமையால் அதனை அதிர்ஷ்டம் என்கிறோம்.
இக்கதையில் நடக்கும் ஒவ்வொரு சிறு முன்னேற்றத்தையும் வாழ்வின் சட்டங்கள் மூலம் விளக்க முடியும்.
இது உலக அறிவிற்கு ஸ்ரீ அரவிந்தர் அளித்தது.
அந்த அறிவு சக்தியாகும், உலகத்தை மாற்றும் சக்தி, தீமையை அழிக்கும் சக்தி.

71. Excuse me, I must speak plainly."
Explanation never conveys experience.
Man does not easily give up his own selfish advantages.
Selfishness is fortified by indolence, as any other low trait.
Just now he has to act against his wife on the advice of his daughter.
He does not want to stir himself to action. A daughter carries no weight.
Human choice becomes acute facing these alternatives.
The danger is real to Elizabeth who has information.
In the absence of that information the danger is not real to him.
A subtle sense can discern the danger she perceives.
He does not have that subtlety.
Examining from all sides, we can know why Elizabeth failed.
So far the loss Bennet faced was only money. Shame accrued to him, but no tragedy or danger came his way. His dullness was not to be shaken by words, but events could stir him to action. The one great force that could have made him act was the character of Wickham. **Her ardent desire not to harm Wickham's emotions prevented the release of his energy**. Her own work for Jane was a failure. In the scheme of things it was Wickham who was wielding the weight of Pemberley in his favour, not Darcy. From the vehemence of his refusal we see the spirit of contradiction took hold of him. He was not anxious to know her view, in spite of his attentive listening. He was arming himself to disoblige her. **Just now on her, the force of her own refusal of Darcy was there powerfully.**
Her exultation in having refused Darcy was live in her. It could only evoke a refusal from her father. Already she evoked a lack of sympathy from Jane about Darcy's proposal. Kitty's holding Lydia's secret weakened the cause of Elizabeth. Mr. Bennet did not sympathize with Jane in her disappointment and forecast one for Lizzy. He already prophesied Jane's death in pursuit of Bingley. He was temperamentally ill disposed to act positively.
"என்னை மன்னிக்கவும், நான் வெளிப்படையாகப் பேசவேண்டும்."
விளக்கம் ஒருபொழுதும் அனுபவத்தை தெரிவிக்காது.
மனிதன் தன்னுடைய சுயநலமான பலன்களை அவ்வளவு சுலபத்தில் விட்டுக் கொடுக்க மாட்டான்.
மற்ற எந்த கீழான குணங்களைப் போல் சுயநலம், சோம்பலினால் பலப்படுத்தப்படுகிறது
அவருடைய மகள் கூறிய அறிவுரைப்படி அவர் இப்பொழுது அவருடைய மனைவிக்கு எதிராக செயல்பட வேண்டும்.
செயல்பட அவர் தயாராக இல்லை. மகளுடைய பேச்சுக்கு வலுவில்லை.
ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நிலையில் மனித விருப்பம் தீவிரமாகி விடுகிறது.
தகவலை அறிந்திருக்கும் எலிசபெத்துக்கு ஆபத்து உண்மையாக இருக்கிறது.
அந்த தகவல் தெரியாததால் அவருக்கு ஆபத்து உண்மையாக இல்லை.
அவள் அறிந்துணர்ந்து கொண்டிருக்கும் ஆபத்தை சூட்சும உணர்வால் பகுத்தறிய முடியும்.
அவருக்கு அந்த சூட்சும உணர்வு இல்லை.
எல்லா பக்கங்களிலிருந்தும் ஆராய்ந்து பார்த்தால், ஏன் எலிசபெத் தோல்வியுற்றாள் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.
இதுவரை பென்னட்டுக்கு நஷ்டம் பணத்தில் மட்டும்தான் ஏற்பட்டிருந்தது. அவருக்கு அவமானம் வந்து சேருகிறது, ஆனால் துன்பமோ அல்லது ஆபத்தோ வரவில்லை. வார்த்தைகளால் அவருடைய சோம்பேறித்தனத்தை விலக்க முடியாது, ஆனால் நிகழ்ச்சிகள் அவரை செயல்பட வைக்கும். ஒரு பெரிய

சக்தியான விக்காமுடைய குணாதிசயமே அவரை செயல்பட வைத்திருக்கும். **விக்காமுடைய உணர்வுகளை காயப்படுத்தக் கூடாது என்கிற அவளுடைய தீவிர ஆசையே அவனது சக்தி விடுவிக்கப்படுவதை தடுத்தது.**
ஜேன் விஷயத்தில் அவள் எடுத்த முயற்சி தோல்வியுற்றது.
விஷயங்களின் அமைப்பில், விக்காம்தான் பெம்பர்லியின் பாரத்தை அவனுக்கு அனுகூலமாக திறம்பட கையாண்டு வந்தான், டார்சி அல்ல. அவர் வன்மையாக மறுத்ததிலிருந்து, முரண்பாட்டின் வேகம் அவரைப் பற்றிக்கொள்வதை நாம் பார்க்கிறோம். கவனமாகக் கேட்டுக் கொண்ட போதும் அவளுடைய கருத்தை அவர் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆர்வப்படவில்லை. அவளுக்கு இணங்காமல் இருப்பதற்கு தன்னை தயார் செய்து கொண்டிருந்தார். **அவள் தீவிரமாக டார்சியை நிராகரித்ததினால் இப்பொழுது அவளை அவளுடைய தகப்பனார் நிராகரிக்கிறார்.**
டார்சியை நிராகரித்த கொண்டாட்டம் அவளுள்ளே ஜீவனுடன் இருந்தது. அது அவளுடைய தந்தையிடமிருந்து நிராகரிப்பை மட்டுமே பெற்றுத் தரும். ஏற்கனவே டார்சியின் திருமணப் பேச்சைக் கேள்வியுற்ற ஜேனிடமிருந்து எந்த வித அனுதாபத்தையும் அவள் பெறவில்லை. லிடியாவைப் பற்றிய விஷயத்தை கிட்டி இரகசியமாக வைத்துக் கொண்டது எலிசபெத்தின் வேலையை பலவீனப்படுத்தியது. ஜேனுடைய ஏமாற்றத்திற்கு திரு பென்னட் அனுதாபம் காண்பிக்கவில்லை, லிசியின் ஏமாற்றத்தையும் முன்கூட்டியே யூகித்திருந்தார். பிங்கிலியை பின் தொடர்வதில் ஜேன் இறந்து விடுவாள் என அவர் ஏற்கனவே கூறிவிட்டார். நேர்மறையாக செயல்பட அவரது மனவுணர்வுகள் ஆரோக்கியமாக இல்லை.

72. "She will become the most determined flirt".
It is very true that by voicing a danger it comes true.
It is not absolutely inevitable.
A stronger atmosphere to the contrary can prevent it.
In this case Elizabeth's fears came true.
Mrs. Bennet saying Jane would die of a broken heart, never came true.
Her wish that Jane would be settled at Netherfield was first cancelled and later became true.
Darcy would be the last Man she would marry never came true.
In a war, millions of prophecies on either side arise. Only half of them can be true.
It is true wishes are powerful, can help the event precipitate.
There are counter ideas which carry their own power.
Acts are more powerful.
What happens at the end is the resultant of all these.
Each Man in his own affairs is a determinant, can be a determinant.
One's own affairs are largely under one's control.
In many such issues he knows he is the determinant.
(He can bring all his issues under such sole determinism).
In that context, what he speaks, or what he thinks matters most.
Once he gains such a vast control, one single doubt to the contrary for a second, totally shifts the balance, often very quickly.
One can study his own speech, thought, not only in his own affairs, but even in wider context.
Sri Aurobindo saw all His thoughts about the world came true sooner or later.
Speech has power. Its extent is determined by other things.
Acts too are representative and carry a greater power still.
A powerful thought expressed with determination in a charged atmosphere with malice proves its truth at the expense of the speaker.
Churchill spoke thus about India and had his career destroyed.
"அவள் கண்டிப்பாக சபல புத்தி உடையவளாக மாறி விடுவாள்".
ஆபத்தை எதிர்நோக்கினால் அது எழும் என்பதும் உண்மை.
அது முற்றிலுமாகத் தவிர்க்க முடியாததல்ல.
இதற்கு மாறான வலிமையான சூழல், இதை தவிர்க்க முடியும்.
இந்த விஷயத்தில் எலிசபெத் பயப்படுவது நடந்து விடுகிறது.
ஜேன் மனம் உடைந்து இறந்து விடுவாள் என்று திருமதி பென்னட் கூறியது நடப்பதில்லை.
நெதர்பீல்டில் ஜேன் நிரந்தரமாகக் குடிபுகுவாள் என அவள் விரும்பியது முதலில் நடக்கவில்லை, பிறகு உண்மையாயிற்று.
டார்சியை திருமணம் செய்து கொள்ளவே மாட்டேன் என அவள் கூறியது நடக்கவில்லை.
போரில், இரு பக்கங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான ஆரூடங்கள் எழும். அதில் பாதிதான் உண்மையாக இருக்கும்.
விருப்பங்களுக்கு சக்தி உண்டு என்பது உண்மை. நிகழ்ச்சி நடக்க அது உதவும்.
மாறான கருத்துகளும் உள்ளன, அவற்றுக்கும் சொந்தமான சக்தி உண்டு.

செயல்கள் மேலும் வலிமை வாய்ந்தவை.
இவை எல்லாவற்றின் பலன்கள்தாம் இறுதியில் நடப்பதாகும்.
ஒவ்வொரு மனிதனும் அவனுடைய விஷயங்களில் தீர்மானிப்பவனாக இருக்கிறான், தீர்மானிப்பவனாக இருக்கலாம்.
ஒருவரது விஷயங்கள் பெரும்பாலும் அவருடைய கட்டுப்பாட்டின் கீழ்தான் இருக்கும்.
அது போன்ற பல விஷயங்களில் அவன்தான் தீர்மானிப்பவன் என அவனுக்குத் தெரியும்.(அவனுடைய எல்லா விஷயங்களையும் அது போன்ற தனித்த ஒரு தீர்மானிக்கும் சக்தியின் கீழ் அவன் கொண்டு வரலாம்.)
அந்த விஷயத்தில் அவன் பேசுவது நினைப்பது எல்லாமே மிகவும் முக்கியம்.
அது போன்ற ஒரு பரந்த அதிகாரத்தை அவன் அடைந்து விட்ட பிறகு அதற்கு மாறான ஒரு சந்தேகம் ஒரு வினாடிக்கு எழுமேயானால், அது சமநிலையை முழுமையாக மாற்றி விடும், பலசமயங்களில் மிக விரைவாகவும் மாற்றி விடும்.
ஒருவர் தன்னுடைய பேச்சையோ அல்லது எண்ணத்தையோ தன்னுடைய விஷயங்களில் மட்டுமின்றி விரிந்த நோக்கிலும் ஆராயலாம்.
ஸ்ரீ அரவிந்தர், உலகத்தைப் பற்றிய தன்னுடைய எண்ணங்கள் விரைவாகவோ அல்லது பின்னரோ உண்மையாவதைப் பார்த்தார்.
பேச்சுக்கு சக்தி உண்டு. அதனுடைய அளவு மற்ற விஷயங்களால் நிர்ணயிக்கப்படுகிறது.
செயல்களும் பிரதிநிதியாக இருக்கின்றன, இருப்பினும் மேலும் அதிக சக்தியைத் தாங்கிச் செல்கின்றன.
கெட்ட எண்ணத்துடன் வலிமையான சூழலில் உறுதியுடன் வெளிப்படுத்தப்படும் வலிமையான கருத்து, அதன் உண்மையை நிரூபிக்கும், பேசியவருக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.
இந்தியாவைப் பற்றி சர்ச்சில் அவ்வாறு பேசினார், அவருடைய அரசியல் எதிர்காலம் அழிந்தது.

73. "And flirt too the worst and meanest degree of flirtation".
Love or hatred is eloquent, expressive, almost creating wonderful phrases.
Also love can use the power to minimize the venom of the beloved.
How accurately Elizabeth exposes Lydia cruelly in all nakedness.
She did not once speak such appropriate words about Wickham.
It was all understatement: elopement was the power of Wickham, hatefully mercenary was imprudence, scandalous falsehood was casual lapse.
The original fervour of her infatuation was never mitigated after his heinous treachery of a sacred household.
The heart never thinks, but feels, in exact emotions.
The heart never chooses the object of love, it chooses its own intensity.
But the heart has the power to be chosen by the most right heart.
It comes from purity.
Purity is entire dependence on the Divine.
Such a heart of purity **does not choose any object for its love.**
It waits for the purest of hearts to come to it.
Love is the soul's response to Ananda.
It can never be the love of a Glencora who cherishes a Burgo. She is a wife, not love.
Emily Wharton, Lily Dale had that attitude, and were qualified to love.
In their scheme of things or in their atmosphere, there was no Divine to raise them to the purest of purity.
One fell for a Lopez, the other betrayed herself into betrayal.
The atmosphere of their community did not assist their attaining perfection.
There is no question about Elizabeth Bennet rising to that level as she is the daughter of the Bennets.
A pure heart can create a page of fiction hitherto unknown.
Elizabeth has sprung from the soil which she describes about Lydia.
The goodness of a woman rises from self-denial.
Self-denial that is general, becoming particular towards a Man of Generosity of Goodness or some other great quality rises to heights of purity.
It is not said in vain that Man worships the ground on which She walks.
"அதுவும் மிகவும் கீழ்த்தரமான காதல் வேட்கைகளில் ஈடுபடுகிறாள்."
காதல் அல்லது வெறுப்பில் வார்த்தைகள், பேச்சுவன்மையுடன் உணர்வுபூர்வமாக சிறப்பான சொற்றொடர்களாக வெளிப்படும்.
காதலிப்பவரது கடுமையை குறைக்கும் திறன் காதலுக்கு உண்டு.
லிடியாவை எப்படி எலிசபெத் துல்லியமாக கடுமையாக வெளிப்படுத்துகிறாள்.
விக்காமைப் பற்றி ஒரு முறை கூட அப்படிப்பட்ட பொருத்தமான வார்த்தைகளை அவள் பேசவில்லை.
அவனைப் பற்றி எல்லாமே குறைத்தே கூறினாள்; ஓடிப்போவது- அவனது பலமாயிற்று, வெறுக்கத்தக்க ஆதாயம்- விவேகமாயிற்று, அவதூறான பொய்மை- தற்செயலான தவறாயிற்று.

ஆரம்பம் முதலே அவளுக்கிருந்த மயக்கத்தின் ஆர்வம், ஒரு அழகான குடும்பத்திற்கு அவன் இழைத்த கொடுமையான நம்பிக்கைத் துரோகத்திற்குப் பிறகும் குறையவில்லை.
உள்ளம் யோசிக்காது, ஆனால் உணர்ச்சிகளை சரியாக உணரும்.
காதலுக்குரிய பொருளை உள்ளம் எப்பொழுதும் தேர்ந்தெடுக்காது, அதனுடைய தீவிரத்தை அது தேர்ந்தெடுக்கும்.
ஆனால் உள்ளத்திற்கு, மிகச் சரியான உள்ளத்தால் தேர்ந்தெடுக்கப்படும் சக்தி உண்டு.
இது தூய்மையால் வருகிறது.
தூய்மை தெய்வத்தை முழுமையாக நம்பி இருக்கிறது.
இது போன்ற தூய்மையான உள்ளம் காதலுக்குரிய எந்த பொருளையும் தேர்ந்தெடுக்காது.
தூய்மையான உள்ளம் தேடி வரும்வரை காத்திருக்கும்.
ஆனந்தத்தின் ஆன்மீகப் பதில்தான் காதல்.
Burgoவை பேணிப் பாராட்டும் Glencoraவின் காதலைப் போல் இது இருக்கவே முடியாது. அவள் ஒரு மனைவி, காதலியல்ல.
Emily Wharton, Lily Dale இவர்களுக்கு அந்த மனப்பான்மை இருந்தது, காதலிக்கத் தகுதி உடையவர்களாக இருந்தனர்.
அவர்களுடைய திட்டங்களில் அல்லது அவர்களது சூழலில், அவர்களை மிகவும் தூய்மையான நிலைக்கு உயர்த்த தெய்வபலம் அங்கு இல்லை.
ஒருத்தி லோபெஸ்ஐ காதலிக்க ஆரம்பித்தாள், மற்றவள் துரோகத்தில் தனக்கே துரோகம் செய்து கொண்டாள்.
அவர்களது சமுதாயத்தில் இருந்த சூழல் அவர்கள் பூரணத்துவம் பெற உதவி புரியவில்லை.
எலிசபெத் பென்னட், பென்னட் தம்பதியினரின் மகளாக இருந்ததினால் அவளால் அந்த அளவிற்கு உயர முடிந்ததில் எந்த கேள்வியும் இல்லை.
ஒரு தூய்மையான உள்ளத்தால் இதுவரை எவரும் அறியாத ஒரு கதையை படைக்க முடியும்.
லிடியாவை விவரிக்கும் எலிசபெத்தும் அதே மண்ணில் பிறந்தவள்தான்.
சுய மறுப்பின் மூலம் ஒரு பெண்மணியின் நல்ல குணம் வெளிப்படுகிறது.
பொதுவானதாக உள்ள சுய மறுப்பு, பெருந்தன்மையான நற்குணமோ அல்லது வேறு ஒரு உயர்ந்த பண்போ உள்ள மனிதனை நோக்கி குறிப்பாக மாறும்போது, தூய்மையின் உச்சத்திற்கு உயருகிறது.
அது போன்ற பெண் நடக்கும் பூமியை மனிதன் தொழுகிறான் என்று சொன்னால் மிகையாகாது.

74. "Without attraction beyond youth and a tolerable person" – Elizabeth about Lydia.
Greed does not have any qualification.
Anything is a qualification for greed.
Man demands, takes for granted everything is due to him.
Left to himself he can take anything from anybody with a sense of right.
This is the attitude of the physical where the vital is born.
War is the national institution that symbolizes this attitude.
Only Lydia and her mother have this naked, blatant attitude.
Greed not only feels its right to exist, it celebrates its existence, demands a prize for its service! Nobel Prize goes to its theoretical formulation.
Evil too parades itself not only without shame, but with great pride.
It celebrates its power to destroy.
Perfect sincerity for a period will discover our inner status as well as outer functioning like this.
Darcy justifies the superiority of Mind and takes pride in it.
Mr. Bennet who extends great freedom when he acts in his own zone is autocratic.
Collins's humility is in display, not his actions.
Man's ego is presently subjected to the collective ego.
All leaders use the power of the collective ego personally.
Law blunts the edge of this performance.
He who does not parade himself, thinks he is egoless, not knowing what is denied expression on the outside organizes more strongly inside.
A moment of sincerity is a moment of spiritual birth.
Spirit can be realized as egoistic realization.
To cleave through the crust of ego is a great effort as Buddha did.
Shedding the ego, even the hardness of the body goes.
The greatest perfection of ego is unawareness of the world around.
Ego and selfishness mutually strengthen each other.
Asura is the personification of the ego magnified.
"இளமையும், அழகையும் தவிர அவளிடம் வேறெந்த கவர்ச்சியும் இல்லை-லிடியாவைப் பற்றி எலிசபெத்."

பேராசைக்கு எந்த தகுதியும் கிடையாது.
எதுவுமே பேராசைக்கு ஒரு தகுதிதான்.
மனிதன் அதிகாரமாகக் கேட்கிறான், எல்லாமே தனக்குரியது என்று எடுத்துக் கொள்கிறான்.
அவன் போக்குக்கு விட்டால், அவன் உரிமையுடன் எதை வேண்டுமென்றாலும் எவரிடமிருந்தும் எடுத்துக் கொள்வான்.
உணர்வின் பிறப்பிடமான ஜடத்தின் மனப்பான்மை இது.
இந்த மனப்பான்மையின் குறியீடாக விளங்கும் நாட்டின் அமைப்பு போர் ஆகும்.
இந்த அப்பட்டமான வெளிப்படையான மனப்பான்மை லிடியாவிற்கும் அவளுடைய தாயாருக்கும் மட்டுமே இருக்கிறது.
பேராசை உரிமையுடன் இருக்கும், தன் வாழ்வைக் கொண்டாடும், அதனுடைய சேவைக்காக பரிசையும் எதிர்பார்க்கும்! அதனுடைய தத்துவார்த்தமான வடிவமைப்புக்கு நோபல் பரிசு அளிக்கலாம்.
தீமை வெட்கமின்றி மட்டுமல்லாமல் மிகப் பெருமையுடன் உலாவி வரும்.
தன்னுடைய அழிக்கும் சக்தியை அது கொண்டாடிக் கொள்ளும்.
ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு நாம் பூரணமான உண்மையை கடைப்பிடித்தால், அது நமது அகநிலையை கண்டுபிடிப்பதோடு வெளியில் நடக்கும் இது போன்ற செயல்பாட்டையும் கண்டுபிடிக்கும்.
மனத்தின் உயர்வை டார்சி நியாயப்படுத்துகிறான், பெருமையும் கொள்கிறான்.
அவருடைய வட்டத்துக்குள் செயல்படும்பொழுது அதிக சுதந்திரம் அளிக்கும் திரு பென்னட், எதேச்சாதிகாரமானவர்.
காலின்ஸின் பணிவு வெளியில் தெரிகிறது, அவனுடைய செயல்கள் தெரிவதில்லை.
சமூகத்தின் அகந்தைக்கு உட்பட்டு மனிதனின் அகந்தை இப்பொழுது உள்ளது.
சமூகத்தின் அகந்தையின் சக்தியை எல்லா தலைவர்களும் தங்களுடைய சொந்த உபயோகத்திற்கு பயன் படுத்திக் கொள்கின்றனர்.
இந்த செயல்பாட்டின் முனையை சட்டம் மழுங்க அடித்து விடுகிறது.
தன்னை வெளியில் காண்பித்துக்கொள்ளாதவன் தனக்கு அகந்தை இல்லை என நினைத்துக் கொள்கிறான்.
வெளியில் கண்பிக்கப்படாதது, அகத்துள் வலிமையாக முறைப்படுத்திக்கொள்ளும் என்பதை அவன் அறிவதில்லை.
உண்மையின் தருணம் ஆன்மீக ஜனனத்தின் தருணமாகும்.
ஆன்மாவை அகந்தையின் 'சித்தி'யாகப் புரிந்துகொள்ளலாம்.
புத்தர் செய்ததைப்போல் அகந்தையை உடைப்பது மிகவும் கடினமான முயற்சியாகும்.
அகந்தையை விட்டு விட்டால் உடலும் லேசாகி விடும்.
அகந்தையின் உச்சகட்டம் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய விழிப்புணர்ச்சி இல்லாமல் இருப்பதாகும்.
அகந்தையும் சுயநலமும் ஒன்றை ஒன்று பலப்படுத்திக்கொள்ளும்.
அகந்தையின் பெரிதாகப்பட்ட உருவம்தான் அசுரன்.

75. "Unable to ward off any portion of the universal contempt which her rage for admiration will excite".
Idealists, utterly insensitive selfish people are as much centred in themselves as the yogi lost in samadhi for days on end.
Lydia's rage for admiration evokes universal contempt.
Bennet is not one to whom this must be explained. But, even after such explanation, he refused to act.
It shows his indolence and the extent to which he was steeped in it.
Again his desire not to cross his wife took such a contemptible form.
The text never indicates the universal contempt she speaks of which shows the preeminent position the family was in.
Physically the split atom revealed the infinite energy it holds.
Religious fanaticism saw a whole village of the other community killed.
This is the vital infinitesimal of fundamentalism.
Once the safety is there in some measure, the havoc that can be done by indulgence can be **infinite through an infinitesimal aperture.**
The financial crisis which still sees the society unshaken has resorted to havoc on an infinite scale.
The emergence of the Psychic, the Individual, the human choice, a touch of transformation, action in the Hour of God, awakening of the soul at the appropriate time, can now bring us out of this crisis, create infinite abundance.
In theory every moment is one such, but we cannot see it.
All great turning points have in one fashion or another revealed this phenomenon.
Man has the monumental ignorance capable of not seeing such an event.
1857 was one such moment. As India was essentially united in 1878, the Mutiny could have liberated the country.

In England 1688 was such an Hour. It rose to the occasion of history thus escaping Revolution in 1789.
Evolution spreads over the community the intensity of Revolution in a few years.
“எல்லோரும் தன்னைப் பார்த்து இரசிக்க வேண்டும் என்கிற அவளுடைய தீவிர ஆர்வம், எல்லோரும் அவளைப் பார்த்து இகழ்வதைப் போல் ஆக்கிவிடும்.”
நாட்கணக்காக சமாதியில் ஆழ்ந்து விடும் யோகியைப் போல இலட்சியவாதிகளும், முற்றிலும் பிறரைப்பற்றி கவலைப்படாத சுயநலமிகளும், தங்களுக்குள்ளேயே மையம் கொண்டிருப்பார்கள்.
தன்னை இரசிக்க வேண்டும் என்கிற லிடியாவின் ஆசை எல்லோருக்கும் வெறுப்பைத் தூண்டுகிறது.
பென்னட்டிற்கு இதனை விளக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர் இந்த விளக்கத்திற்குப் பிறகும் செயல்பட மறுக்கிறார்.
இது அவரது சோம்பேறித்தனத்தையும் அவர் எவ்வளவு தூரம் சோம்பேறித்தனத்தில் மூழ்கியுள்ளார் என்பதையும் காண்பிக்கின்றது.
தன்னுடைய மனைவியை மீறக் கூடாது என்கிற அவருடைய ஆசை இது போன்ற வெறுக்கத்தக்க வடிவத்தை எடுக்கிறது.
அவள் எல்லோரையும் இகழ்வதைப் பற்றி கதையில் எந்த ஒரு குறிப்பும் இல்லாதது இக்குடும்பம் மேம்பட்ட நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறது.
ஜட நிலையில் அணுவை துளைக்கும்பொழுது அதில் பொதிந்திருக்கும் அளவில்லாத சக்தி வெளிப்படுகிறது.
மதவெறி பிடித்தவர்கள், கிராமத்தில் வாழும் வேறு ஜாதியினர் அனைவரையும் கொலை செய்தனர்.
அடிப்படைவாதத்தின் அற்பமான உணர்வுதான் இது.
ஓரளவிற்கு பாதுகாப்பு இருக்கும்போது ஒரு விஷயத்தை அனுபவிப்பதால் ஏற்படும் நாசம், **அதற்கு மிகச் சிறிய இடம் கிடைத்தாலும் அதன் மூலம் அளவற்றதாக மாறலாம்.**
பொருளாதார நெருக்கடியால் இன்னமும் சமூகம் கவலைப்படாது இருப்பதினால், அது அளவற்ற பரிமாணத்தில் பேரழிவினை உண்டாக்குவதில் ஈடுபட்டுள்ளது.
சைத்திய புருஷன் வெளிவருவதும், தனி மனிதனும், மனித விருப்பமும், திருவுருமாற்றத்தின் ஒரு சாயலும், இறைவன் வரும் தருணத்தில் செயல்படுவதும், சரியான சமயத்தில் ஆன்மா விழித்துக்கொள்வதும், நம்மை இந்த நெருக்கடியிலிருந்து வெளியே கொண்டு வந்து அளவில்லாத அபரிமிதத்தை உருவாக்கும்.
ஒவ்வொரு தருணமும் அப்படிப்பட்டதே, ஆனால் நம்மால் அதைக் காண முடியாது.
எல்லா பெரிய திருப்பு முனைகளும் ஏதாவது ஒரு வகையில் இந்த நிகழ்வினை வெளிப்படுத்தியுள்ளன.
அது போன்ற ஒரு நிகழ்வினை காண முடியாதபடி மனிதனுக்கு மிகப்பெரிய அறியாமை இருக்கிறது.
1857அது போன்ற ஒரு தருணம். இந்தியா 1878ல் முக்கியமாக இணைந்து இருந்ததால், அக்கலகம் நாட்டை விடுவித்திருக்கலாம்.
இங்கிலாந்தில் 1688ஆம் வருடம் அது போன்ற ஒரு நேரமாக இருந்தது. சரித்திரத்தில் அது அந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உயர்ந்து, 1789ல் நடந்த புரட்சியிலிருந்து தப்பியது.
புரட்சியின் தீவிரத்தை பரிணாமம் சில வருடங்களில் சமுதாயத்தில் பரப்பி விடும்.

76. “She will follow wherever Lydia leads” – Elizabeth on Kitty.
The many sheep of the fold that followed the one that fell into the pit, jumped into the pit with eyes open.
Leadership is powerful; following too is as powerful.
Buddha conquered the whole of India and beyond.
Shankara conquered the whole of India.
In 150 years, half of Europe turned Protestant.
In 60 years the world is fully invaded by American culture.
The physical instinct of following is universal and strong.
The world is largely physical and the physical urge of conformity rules.
The two World Wars shattered the very bodies that imprisoned that instinct.
A unique vibration in Man to make him stand out is the physical basis of Individuality.
In language each word gains a special significance.
Sometimes one word acquires several different meanings.
Each is unique. They acquire a unique pronunciation too.
Uniqueness is the tether end of the physical formation of the finite serving as an evolutionary terminus or landmark.
The conception of Infinity of the Absolute Sri Aurobindo speaks of goes beyond the boundless finite. It is the first glimpse of Mind of its growing into Supermind.
It is a vibration capable of extending in all fashions and all directions.
He says It can be born in us, not in the Mind, but in the immutable Soul making it mutable.
It can be born in all parts of the being or all parts of the body.
It is the ever Present in Simultaneous Time.
It is in the plane of the supreme Ishwara where the Force of Consciousness and Force of Being are the same.
It is the poise where the Divine delights in Himself.

The physical universe we see is not the real universe to one who can see inside all the dimensions of all the universes in the cosmos.
The Mind divides it into the infinitesimal.
Nature coats it with ignorance and steeps it into it.
The ego separates it from others and gives a sensation it is really separate.
Objectivity gives it the sense of inert physicality in space.
Subjectivity gives it the sense of movement to it in Time.
Insight provides a thin escape out of it.
Intuition offers a greater escape into a world movement.
A Supreme Intuition penetrates the Movement to reach the Stability.
Further one can see that Stability expressing itself in Movement.
Again in that Movement there is the finite, the infinitesimal, uniqueness, etc.
Cosmic consciousness where everything is energy is knowledge.
Transcendent consciousness where no form or no content remains is an exalted state at the gates of the Absolute.
That Absolute carries its absoluteness even in the infinitesimal.
How can we see, feel, sense, perceive that absoluteness.
Darcy saw it through the abuse.
Can we see it through Wickham's falsehood and Lydia's running away?
We certainly do not see it.
He says this creed is given to humanity. Till that faith is born one has to accept this creed.
One who concentrates and directs the power of concentration towards consecration moves away from the surface to the subliminal via the inner Mind.
Consecration reveals the Absolute which concentration cannot.
Elizabeth's forceful representation did not move Bennet.
Had she not spoken to him and silently went inside through consecration, she would have touched an aspect of the Absolute which was the same in Mr. Bennet.
He would have acted.
It was actually done by the external forces moving precipitating the elopement.
"லிடியா எங்கெல்லாம் செல்கிறாளோ அங்கெல்லாம் கிட்டியும் அவளை பின்தொடருவாள் -கிட்டியைப் பற்றி எலிசபெத் கூறுவது".
ஆட்டு மந்தையில் ஒரு ஆடு பள்ளத்துள் விழுந்தால், பின்தொடரும் எல்லா ஆடுகளும் கண்ணைத் திறந்த வண்ணமே பள்ளத்தில் விழும்.
தலைமை தாங்குவது சக்தி வாய்ந்தது, பின்பற்றுவதும் சக்தி வாய்ந்தது.
இந்தியா முழுவதையும் அதைத் தாண்டியும் புத்தர் வென்றார்.
இந்தியா முழுவதையும் சங்கரர் வென்றார்.
நூற்றி ஐம்பது வருடங்களில் ஐரோப்பாவில் பாதி, கத்தோலிக்க சபையிலிருந்து பிரிந்து Protestant **எனும் அமைப்பை உருவாக்கியது.**
அறுபது வருடங்களில் உலகம் முழுவதும் அமெரிக்க நாகரிகம் பரவியுள்ளது.
பின்பற்றுவதின் ஜட உள்ளுணர்வு உலகளாவியது, வலிமையானது.
உலகம் பெரும்பாலும் ஜடநிலையில் இருக்கிறது, ஒத்துப்போகும் ஜடத்தின் உந்துதல் ஆளுகிறது.
அந்த உள்ளுணர்வை சிறைப்பிடித்த அந்த அமைப்புகளை இரண்டு உலகப் போர்கள் சிதறடித்தன.
மனிதனை சிறப்பாக நிலை நிறுத்தும் ஒரு தனிப்பட்ட அதிர்வு, தனித்துவத்தின் ஜடநிலை அடிப்படை ஆகும்.
மொழியில் ஒவ்வொரு வார்த்தைக்கும் சிறப்பான முக்கியத்துவம் உண்டு.
சில சமயங்களில் ஒரே வார்த்தைக்கு பல அர்த்தங்கள் இருக்கும்.
ஒவ்வொன்றும் அலாதியானது. அவைகளுக்கு அலாதியான உச்சரிப்பும் உண்டு.
பரிணாமத்தின் கடைசி இடமாகவோ அல்லது மைல்கல் போலவோ விளங்கும் ஜட உருவில் இருக்கும் அந்தத்தின் இறுதி முனைதான் தனித்தன்மை.
ஸ்ரீ அரவிந்தர் பேசும் பிரம்மத்தின் அனந்தத்தின் கருவுருவாக்கம் எல்லையற்ற அனந்தத்தையும் தாண்டிச் செல்கிறது.
அது மனம் சத்திய ஜீவனாக வளர்வதைக் காணும் மனத்தின் க்ஷணத்தோற்றம் ஆகும்.
எல்லா வகைகளிலும் எல்லா திசைகளிலும் விரிவடையும் அதிர்வுதான் அது.
அதனால் நம்முள் பிறக்க முடியும், மனத்தில் முடியாது, ஆனால் அழிக்க முடியாத ஆன்மாவினுள் பிறந்து அதனை அழியும் ஜீவனாக்கும் என்று பகவான் கூறுகிறார்.
அது ஜீவனின் எல்லா பாகங்களிலும் பிறக்கலாம், அல்லது உடலின் எல்லா பாகங்களிலும் பிறக்கலாம்.
மூன்றாம் நிலை காலத்துள் என்றும் இருப்பது அது.
ஜீவியத்தின் சக்தியும் ஜீவனின் சக்தியும் ஒன்றாக இருக்கும் உயர்ந்த ஈஸ்வரன் இருக்கும் நிலை அது.

அது இறைவன் தன்னையே அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு சமநிலை ஆகும்.
பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லா உலகங்களின் எல்லா பரிமாணங்களையும் பார்க்கும் ஒருவனுக்கு, நாம் பார்க்கும் ஜட உலகம் உண்மையான உலகம் அல்ல.
மிகச் சிறியதாக மனம் அதைப் பிரிக்கிறது.
இயற்கை இதற்கு அறியாமையின் போர்வையிட்டு அதனுள்ளே அதை மூழ்கடித்து விடுகிறது.
மற்றதிலிருந்து அகந்தை அதைப் பிரித்து, உண்மையிலேயே தனித்து இருக்கும் உணர்வை அதற்குத் தருகிறது.
மனதிற்கும் அதன் அபிப்பிராயங்களுக்கும் அப்பாற்பட்ட தன்மை அதற்கு அசைவற்ற ஜடத்தன்மையை வெளிப்பரப்பில் உணரச் செய்கிறது.
மனத்தினுள் ஏற்படும் அபிப்பிராயம் அதற்கு காலத்தில் அதனுடைய இயக்கத்தின் உணர்வினை அளிக்கிறது.
ஆழ்ந்த அறிவு அதிலிருந்து லேசாக தப்பித்துக்கொள்ள உதவுகிறது.
உலக இயக்கத்தினுள் மேலும் தப்பித்துக்கொள்ள உள்ளுணர்வு உதவுகிறது.
மிகச் சிறந்த உள்ளுணர்வு நிலைப்பாட்டிற்காக சலனத்துள் ஊடுருவிச் செல்கிறது.
அந்த நிலைப்பாடு அதனையே சலனத்தில் வெளிப்படுத்துவதை ஒருவர் பார்க்கலாம்.
மீண்டும் அச்சலனத்தில் அந்தம், அதனினும் சிறியது, தனித்துவம் அனைத்தும் உள்ளன.
அனைத்தும் சக்தியாக இருக்கும் பிரபஞ்ச ஜீவியம், அறிவாக விளங்குகிறது.
உருவமும், உட்பொருளும் இல்லாத பிரம்ம ஜீவியம், பரபிரம்மத்தின் வாயிலில் இருக்கும் ஒரு உயர்ந்த நிலையாகும்.
அந்தப் பரப்பிரம்மம் மிகச் சிறியதில்கூட அதனுடைய மூலத்தை தாங்கிச் செல்கிறது.
அந்த மூலத்தை நாம் எவ்வாறு பார்க்க, உணர, புரிந்துகொள்ள முடியும்.
நிந்தனையின் மூலம் டார்சி அதைப் பார்த்தான்.
விக்காமுடைய பொய்மையிலும், லிடியா ஓடிப்போவதிலும் நாம் அதைப் பார்க்க முடியுமா?
நாம் நிச்சயமாக அதை பார்ப்பதில்லை.
இந்தக் கோட்பாடு மனித குலத்திற்கு அளிக்கப்பட்டுள்ளதாக பகவான் கூறுகிறார், அந்த நம்பிக்கை எழும்வரை ஒருவர் இந்த கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
யார் ஒருவர் மனத்தை ஒருநிலைப்படுத்தி அந்த சக்தியை சமர்ப்பணத்தை நோக்கி செலுத்துகிறாரோ, அவர் மேல் மனத்திலிருந்து உள் மனம் வழியாக அடி மனத்திற்குச் செல்கிறார்.
ஒருமுகப்படுதல் வெளிப்படுத்த முடியாத பிரம்மத்தை சமர்ப்பணம் வெளிப்படுத்துகிறது.
எலிசபெத்தின் வலிமை மிக்க பேச்சு பென்னட்டை அசைக்கவில்லை.
அவள் பேசாதிருந்து சமர்ப்பணத்தின் மூலம் உள்ளே சென்றிருந்தால், திரு பென்னட்டின் உள்ளிருக்கும் அதே பிரம்மத்தின் ஒரு அம்சத்தைத் தொட்டிருப்பாள்.
அவர் செயல்பட்டிருப்பார்.
உண்மையில் புற சக்திகள் ஒன்று கூடி ஓடிப்போவதை செயல்பட வைத்தது.

77. "her sisters will be involved in the disgrace" – Elizabeth.
Lydia is a disgrace to herself.
She is ruining the family.
She will ruin her sisters.
This is obvious from Lydia's view, family and personal views.
He is immovable to all this. It must be obvious to him.
Trying to move one who is not moved by an obvious danger is obvious folly.
A position once taken is not easy to come out of.
The opinion will argue in favour of the status quo.
The preference will work against the change.
The physical consciousness will not give up easily what it possesses.
Change is ever present; resistance to change is equally powerful.
Age is in favour of inaction. She is a daughter trying to move a father.
Age is a reality in all societies, at all times; only its power varies.
Age has a prerogative.
In the measure that privilege proves to be power, **one fully exercises it.**
Age was once considered a synonym to wisdom.
It was a period when longer life meant greater wisdom.
It was a physical period where right was decided by might.
Life that stayed longer in the body grants a social power to the possessor of the body.
In an indolent Man, opinion that is a mental formation has the force of a physical mould and the power of an act.
To such a Man changing an opinion is as difficult it is for a mental Man to change a subconscious act – e.g. handwriting.
It was a time when such behaviours were considered aristocratic habits and adored.

Social sanction is power. Social veneration is universal power.
Elopement was necessary to move Bennet to action.
The outer necessity arose out of the inner immovable status.
Hers was an argument; his was a tamasic act.
“அவளுடைய சகோதரிகளுக்கும் இந்த அவமானத்தில் பங்கு பெற நேரிடும் என்று எலிசபெத் கூறுகிறாள்.”
லிடியா, அவளுக்கே ஒரு அவமானம்.
அவள் குடும்பத்தை அழிக்கிறாள்.
அவளுடைய சகோதரிகளையும் அவள் அழிப்பாள்.
லிடியாவின் கண்ணோட்டத்திலும், குடும்பம் மற்றும் தனிப்பட்ட கண்ணோட்டங்களிலும் இது வெளிப்படையாகவே தெரிகிறது.
இதற்கெல்லாம் அவர் அசையவில்லை. இது அவருக்கு வெளிப்படையாகவே தெரிந்திருக்கும்.
வெளிப்படையாகத் தெரியும் ஆபத்திலிருந்து நகராத ஒருவரை நகர்த்த முயற்சி செய்வது, தெளிவான மடமையாகும்.
ஒரு நிலையைப் பிடித்துக் கொண்டு விட்டால் அதிலிருந்து வெளி வருவது சுலபமல்ல.
தற்போதைய நிலைக்கு ஆதரவாகவே அபிப்பிராயம் விவாதம் செய்யும்.
மாற்றத்திற்கு எதிராக முன்விருப்பம் வேலை செய்யும்.
தனக்கு சொந்தமானதை ஜட நிலையிலுள்ள ஜீவியம் சுலபமாக கை விடாது.
மாற்றம் என்றும் மாறாதது, மாற்றத்திற்கான எதிர்ப்பு சமமான வலிமையுடையது.
செயல்படாமல் இருப்பதற்கு வயது ஆதரவளிக்கும். தந்தையை செயல்பட முயற்சி செய்யும் மகள் அவள்.
வயது எல்லா சமூகத்திலும், எல்லா நேரங்களிலும் நிதர்சனமானது. அதனுடைய சக்திதான் வித்தியாசப்படும்.
வயதிற்கு ஒரு உரிமை உண்டு.
தனிப்பட்ட சலுகை ஒருவருக்கு அதிகாரத்தை அளிப்பதால், **அவர் முழுமையாக அதனை செலுத்துகிறார்.**
அறிவு வயதுக்கு மறுபெயராக ஒரு சமயம் கருதப்பட்டது.
நீண்ட நாள் வாழ்வது அதிக அறிவு என்று கருதப்பட்ட காலம் அது.
சரி என்பதை பலசாலி தீர்மானித்த ஜடத்தின் காலம் அது.
வயதானவர்களுக்கு வாழ்வு ஒரு சமூக சக்தியை அளிக்கிறது.
சோம்பேறித்தனம் நிறைந்த ஒருவருடைய மனத்தின் உருவகமான கருத்துக்கு ஜடத்தின் சக்தியும், செயலின் சக்தியும் இருக்கும்.
மனத்தாலான மனிதனுக்கு ஒரு ஆழ்மனச் செயலை மாற்றுவது எவ்வளவு கஷ்டமோ, அதே போல, அதுபோன்ற ஒருவருக்கு அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வதும் கஷ்டம்.(உ- ம்) கையெழுத்து
இது போன்ற நடத்தைகள் உயர்குடி மக்களின் பழக்கம் என்று கருதப்பட்டு போற்றப்பட்டு வந்த காலம் அது.
சமூக ஒப்புதல் சக்தியாகும். சமூகம் போற்றுவது உலகளாவிய சக்தியாகும்.
பென்னட் செயல்பட லிடியா ஓடிப்போவது அவசியமாக இருந்தது.
அகம் அசையாமல் இருப்பதால் புறத் தேவை எழுந்தது.
அவளுடையது ஒரு விவாதம், அவருடையது தமஸ் நிறைந்த ஒரு செயல்.

Mr. Bennet saw that her whole heart was in the subject, and affectionately taking her hand, said in reply –
அவளுடைய முழு மனதும் இந்த விஷயத்தில்தான் இருக்கிறது என்பதைப் பார்த்த திரு. பென்னட், அவளுடைய கையை அன்புடன் பற்றிக்கொண்டு பதிலளித்தார்.

78. “Bennet saw her whole heart was in it. Affectionately taking her hand…”
Affection cannot effectively replace action.
Still, this affection was not lost.
Later, he recognized the value of her advice.
That formed the basis for reversing the elopement in the subtle plane.
Her words, taken in the context of elopement rang true, each of them.
She could do it only secretly, showing the lack of strength for her words.
Her problem was to save the victim without punishing the offender.
The Rishis shunned pleasure as it came along with pain.
This was so because pleasure and pain are dualities. The Rishi was in ego.
Coming out of ego, pleasure and pain give way to Joy.
Joy is the vital response to Ananda.
He who seeks Joy cannot have the bad effect of pain.
She wanted to protect Wickham from his real bad name and still save Lydia.
The lack of reality in her emotional convictions showed as her ineffectivity and her father’s inaction.
Later the results show how Wickham exposed himself nastily.
With her father, had she taken him into confidence about Wickham’s unreliability, the exposure would have been

limited.
A solution postponed multiplies in quantity as well as quality.
The story does not take us to see how the present evil has great good fortune inbuilt into it.
Mary Thorne, incarnate evil in the eyes of Lady Arabella, became 'Dear Mary' who gave her a faint.
In this story it is left to our imagination.
The theory is Wickham has inbuilt potential good of great value.
Darcy's ruse, a sting to Bingley, turned out to be a boon to Elizabeth, his future wife's sister.
Today's evil is tomorrow's Marvel to see which we have to pass through eight reversals.
"அவளுடைய உள்ளம் முழுவதும் அதில் இருந்ததை பென்னட் பார்த்தார். அன்புடன் அவளுடைய கையைப் பற்றிக் கொண்டார்."
அன்பு செயலை திறம்பட ஈடு செய்ய முடியாது.
இருப்பினும் இந்த அன்பு குறையவில்லை.
பின்னால் அவர் அவளுடைய அறிவுரையின் மதிப்பினை உணர்ந்தார்.
அது ஓடிப்போவதை மாற்றுவதற்கு அடித்தளமாக சூட்சும நிலையில் அமைந்தது.
ஓடிப்போகும் விஷயத்தை வைத்துப் பார்க்கும்பொழுது அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் உண்மையாக இருந்தது.
அவள் அதை இரகசியமாகவே செய்ய முடிந்தது, ஏனெனில் அவளுடைய வார்த்தைகளில் வலிமை இல்லை.
குற்றவாளியை தண்டிக்காமல், குற்றத்துக்கு ஆளாகுபவரை காப்பாற்ற வேண்டும் என்பதுதான் அவளுடைய பிரச்சினை.
இன்பத்துடன் துன்பமும் சேர்ந்து வந்ததால், ரிஷிகள் அதை தவிர்த்தனர்.
இன்பமும் துன்பமும் இரட்டைகள் என்பதால் இவ்வாறு இருந்தது. ரிஷி அகந்தையில் இருக்கிறார்.
அகந்தையிலிருந்து வெளி வந்தால், இன்பமும் துன்பமும் சந்தோஷத்திற்கு வழி வகுக்கும்.
ஆனந்தத்தின் உணர்வின் பதில்தான் சந்தோஷம்.
சந்தோஷத்தை நாடுபவருக்கு வலியின் மோசமான விளைவுகள் எழாது.
அவள் விக்காமை உண்மையான கெட்ட பெயரிலிருந்து பாதுகாக்க விரும்பினாள், லிடியாவையும் காப்பாற்ற விரும்பினாள்.
உணர்வுகளில் உள்ள திட நம்பிக்கைகளில் உண்மை இல்லாததால், அது அவளுடைய பயனற்ற முயற்சியாகவும், அவளுடைய தந்தையின் செயலற்ற தன்மையாகவும் வெளிப்பட்டது.
பின்னால் ஏற்பட்ட விளைவுகள், விக்காம் எவ்வாறு மோசமாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டான் என்பதைக் காண்பிக்கின்றது.
தந்தையிடம் விக்காம் நம்பத் தகுந்தவன் அல்ல என்பதை அவள் கூறியிருந்தால், அவன் வெளிப்படுவதை சற்று கட்டுப்படுத்தியிருக்கலாம்.
ஒரு தீர்வை தள்ளிப் போட்டால் அது பன்மடங்காக தரத்திலும் அளவிலும் பெருகும்.
தற்பொழுது தெரியும் தீங்கிற்குள் பெரிய நல்ல அதிர்ஷ்டம் எவ்வாறு அடங்கியுள்ளது என்பதை இக்கதை நமக்கு காண்பிப்பதில்லை.
லேடி அரபெல்லாவின் பார்வையில் அவளுக்கு மயக்கத்தை அளித்த தீமையின் உருவமாக காட்சி அளித்த மேரி தார்ன், 'அன்பு மேரி' ஆகிறாள்.
இக்கதையில் இது நமது கற்பனைக்கே விடப்பட்டுள்ளது.
உயர்ந்த பண்பின் நல்ல விஷயங்கள் விக்காமினுள் வித்தாக உள்ளது என்பதுதான் தத்துவம்.
பிங்கிலியை பாதித்த டார்சியின் சூழ்ச்சி, அவனுடைய வருங்கால மனைவியின் சகோதரியான எலிசபெத்திற்கு வரமாக அமைந்தது.
இன்றைய தீமை நாளைய அற்புதம் என்பதை நாம் பார்க்க வேண்டுமென்றால் எட்டு தலை கீழ் மாற்றங்களை நாம் கடந்தாக வேண்டும்.

"Do not make yourself uneasy, my love. Wherever you and Jane are known you must be respected and valued; and you will not appear to less advantage for having a couple of -- or I may say, three very silly sisters. We shall have no peace at Longbourn if Lydia does not go to Brighton. Let her go, then. Colonel Forster is a sensible man, and will keep her out of any real mischief; and she is luckily too poor to be an object of prey to anybody. At Brighton she will be of less importance even as a common flirt than she has been here. The officers will find women better worth their notice. Let us hope, therefore, that her being there may teach her her own insignificance. At any rate, she cannot grow many degrees worse, without authorizing us to lock her up for the rest of her life."
"உன்னை நீயே கஷ்டப்படுத்திக் கொள்ளாதே. எங்கெல்லாம் நீயும் ஜேனும் அறிமுகம் ஆகியிருக்கிறீர்களோ அங்கெல்லாம் நீங்கள் மதிக்கப்பட வேண்டும், மரியாதை அளிக்கப்பட வேண்டும்; இதுபோன்ற இரண்டு அல்லது மூன்று அர்த்தமில்லாத சகோதரிகள் இருப்பதினால், உங்களை யாரும் குறைவாக நினைக்க மாட்டார்கள். லிடியா, பிரைட்டனுக்குப் போகவில்லையெனில் நமக்கு லாங்பர்னில் நிம்மதியே இருக்காது.

அவள் போகட்டும். கர்னல் பாஸ்டர் ஒரு விவேகமான மனிதர், அவளை எந்த வம்பிலும் சிக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வார். அதிர்ஷ்டவசமாக அவள் மிக ஏழை என்பதால் யாரும் அவளை நாடமாட்டார்கள். இங்கு இருப்பதைவிட பிரைட்டனில் அவளுடைய காதல் கேளிக்கைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்காது. இராணுவ அதிகாரிகளுக்கு இவளைவிட நல்ல பெண்மணிகள் கிடைப்பார்கள். ஆகையால் அவள் அங்கு இருப்பது, அவளுக்கு தான் யார் என்பதை உணர்த்தும் என்று நம்புவோம். எப்படியிருந்தாலும், இதைவிட மோசமாக நடந்து கொண்டால் நாம் அவளை எஞ்சியுள்ள வாழ்நாள் முழுவதும் பூட்டிதான் வைக்க வேண்டும்."

79. Mr. Bennet takes the line of least resistance, he suffers.
    திரு பென்னட் சிறிதளவே எதிர்ப்பைத் தெரிவிக்கிறார், அதனால் அவர் கஷ்டப்படுகிறார்.
80. In that village, his not restraining the wife is to be ideal, grant her ideal freedom. In spite of suffering, his restraint later brought rewards.
    அந்த கிராமத்தில் அவர் மனைவியைக் கட்டுப்படுத்தாதது லட்சியமாகக் கருதப்பட்டது. அவளுக்கு முழு சுதந்திரம் அளித்தார். கஷ்டங்களை எதிர்கொண்டபோதும் அவருடைய கட்டுப்பாடு பின்னால் அவருக்கு வெகுமதிகளை அளித்தது.
81. The line between tragedy that ruins the entire family and domestic peace is so thin.
    குடும்பம் முழுவதையும் அழிக்கும் பேராபத்திற்கும், குடும்ப அமைதிக்கும் இடையே இருக்கும் கோடு மிகவும் மெல்லியதாக உள்ளது.
82. All the advice Mr. Bennet gave about Mr. Forster being a sensible man, etc. proved futile. Lydia disappeared. The family has come to a turning point. Luck in the shape of Bingley and Darcy is around the corner. It cannot come in without an inner effort at progress. So Lydia ran away.
    திரு பாஸ்டர் விவேகமானவர் என்று திரு பென்னட் கூறிய அறிவுரைகள் யாவும் பயனற்று போயின. லிடியா காணாமல் போய்விட்டாள். குடும்பம் ஒரு திருப்பு முனைக்கு வந்து விட்டது. டார்சி, பிங்கிலி ரூபத்தில் அதிர்ஷ்டம் காத்துக் கொண்டிருக்கிறது. முன்னேற்றத்திற்கு அக முயற்சியின்றி அந்த அதிர்ஷ்டம் உள்ளே நுழைய முடியாது. அதனால் லிடியா ஓடிப்போகிறாள்.
83. "Do not make yourself uneasy, my love".
    Human observation can be selective or even in the reverse.
    Writing on the wall does not always move Men to action.
    It is true Men in public life are keenly aware of even distant symptoms.
    Man does not see what is before his eyes; he sees what he chooses to see.
    Repeated past experiences do not have the least effect on some Men.
    Bennet refuses to be uneasy and asks his daughter not to be uneasy.
    He is myopic, indolent, negligent, refuses to see the facts.
    Let us look at his attitude as one reflecting her attitude till then.
    She was more than guilty in giving life to Wickham's scandal.
    As she was to Wickham, Bennet is to Lydia.
    As the elopement was going to be a source of luck, we can say Bennet does not prevent it now. For that we have no support within the text.
    It can only be an extension of our beliefs to the story.
    He took the least line of resistance.
    He fully paid for his guilty attitude.
    When the events reversed, he was to bear the least responsibility.
    Should the change not have come, it would have been a total ruin.
    The rules hold good even if the course reversed itself.
    He was completely oblivious of his misfortune and his luck.
    Even when it was explained to him, he never gave thought why Darcy should have done it.
    He took it for granted that it was done for the love of Lizzy.
    It never struck him the course of events could have been contrary.
    He never gave a thought to what had happened at home.
    He never stopped to think how it all came about.
    Had he exercised his Mind, he would not have arrived at the truth.
    Thought comes into play when acts move compellingly in the opposite direction.
    "எனதருமை லிசி, நீயே உன்னைக் கஷ்டப்படுத்திக் கொள்ளாதே."
    மனிதனுடைய கவனித்தல், தேர்ந்தெடுத்ததாகவும் இருக்கலாம் அல்லது மாறாகவும் இருக்கலாம்.
    நிதர்சனமான உண்மை எப்பொழுதும் மனிதனை செயல்பட வைக்காது.
    தொலைவில் இருக்கும் அறிகுறிகளைப் பற்றிகூட பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் நன்கு தெரிந்து வைத்திருப்பர் என்பது உண்மை.

தன் கண்முன் இருப்பதை மனிதன் பார்க்க மாட்டான்; தான் பார்க்க விரும்புவதையே பார்ப்பான்.
திரும்பத் திரும்ப கிடைக்கும் கடந்த கால அனுபவங்கள், சில மனிதர்களிடம் எந்த பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை.
அமைதியற்று இருப்பதற்கு மறுக்கும் பென்னட், தன்னுடைய மகளையும் அமைதியாக இருக்கச் சொல்கிறார்.
தொலை நோக்கின்மை, சோம்பல், புறக்கணிப்பு, இவைகளை கொண்டிருக்கும் அவர் உண்மைகளைப் பார்க்க மறுக்கிறார்.
அதுவரை, அவருடைய மனோபாவம் அவளுடைய மனோபாவத்தை பிரதிபலிப்பதாக நாம் பார்க்கலாம்.
விக்காமுடைய அவதூறுக்கு உயிர் அளித்தது அவள் செய்த மிகப் பெரிய குற்றம்.
அவள் விக்காமிடம் நடந்து கொண்டதுபோல் பென்னட் லிடியாவிடம் நடந்துகொள்கிறார்.
ஓடிப்போவது அதிர்ஷ்டத்தை கொண்டு வரப் போவதால், பென்னட் தற்பொழுது அதை தடுப்பதில்லை என நாம் கூறலாம். கதையில் அதை ஆதரிக்கும் வகையில் எந்த ஒரு குறிப்பும் இல்லை.
இது கதைக்கு நம்முடைய நம்பிக்கைகளின் தொடர்ச்சியாக மட்டும் இருக்கலாம்.
அவருடைய எதிர்ப்பு சிறிதளவே இருந்தது.
அவரது குற்ற உணர்ச்சிக்கு அவர் விலை கொடுக்க வேண்டி வந்தது.
நிகழ்ச்சிகள் தலைகீழாக மாறியபொழுது, அவருக்கு பொறுப்பும் மிகக் குறைவாகவே இருந்தது.
மாற்றம் வந்திருக்கவில்லை எனில் அது முழுமையான அழிவை ஏற்படுத்தியிருக்கும்.
போக்கு தலைகீழாக மாறியிருந்தாலும் சட்டம் செல்லுபடி ஆகியிருக்கும்.
அவருடைய துரதிர்ஷ்டம் மற்றும் அவருடைய அதிர்ஷ்டத்தைப் பற்றி அவருக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை.
அவருக்கு அதைப் பற்றி விளக்கிய பிறகும்கூட, டார்சி ஏன் அவ்வாறு செய்திருக்க வேண்டும் என்று அவர் யோசிக்கவே இல்லை.
லிசியின் மேலுள்ள காதலினால் அவன் அவ்வாறு செய்திருக்க வேண்டும் என்று அவராகவே வைத்துக் கொண்டார்.
நிகழ்ச்சிகளின் போக்கு மாறாகக்கூட இருந்திருக்கலாம் என அவருக்குத் தோன்றவே இல்லை.
வீட்டில் நடந்தவற்றைப் பற்றி அவர் யோசிக்கவே இல்லை.
எவ்வாறு இவை எல்லாம் எழுந்தன என்பதைப் பற்றி அவர் யோசிக்கவே இல்லை.
அவர் தனது மனத்தை உபயோகப்படுத்தியிருந்தால், அவருக்கு உண்மை புலப்பட்டிருக்காது.
செயல்கள் வலுக்கட்டாயமாக எதிர் திசையில் செல்லும் பொழுது, எண்ணங்கள் செயல்படத் தொடங்கும்.

84. "Wherever Jane and you are, you must be respected".
The good compensating for the presence of the bad is not a valid law.
The strength of character cannot directly or adequately compensate weak temperament.
There are situations where one rotten apple spoils the rest.
The good ones have no power to make the rotten ones good.
A loss can be offset by the gains in an overall scheme.
The good name of the family is a delicate structure and is susceptible easily.
Here is a family which has no positive central authority.
The authority is usurped by a negative dynamo.
As it is, if the family had no social ambitions and would be satisfied by the girls marrying at their levels, all girls may be easily married.
The mother has strong ambitions, the father legitimate aspirations.
The mother's expectations are based on beauty which is illusory in a marriage market.
The father puts his trust in merit which is more illusory than beauty.
Whatever it is, much united thought that should go into it and a greater direction into the channeling of energies if anything is to be achieved.
Now it is a wild goose chase.
The leadership has gone from Mrs. Bennet into the hands of Lydia.
This is the best strategy to wreck the family.
There is neither a centre nor is there direction.
What actually happens is a New Force enters the family in a wrong fashion.
A jewel melted remains gold to be made anew.
A family dismantled will be on the streets.
Lydia has done it with a glee. Mr. Bennet hopes against hope about the elder ones.
The wave from across the channel brought a new welding force, to heal the wound and raise two daughters sky high.
It is not luck but revolution transforming itself into evolution.
Indolence generates illusions; illusions pious wishes.

It is Elizabeth who wrecked the family. It is Darcy for her sake who reoriented the family. The great significance of Wickham is worth discovering.

“ஜேனும், நீயும் எங்கிருந்தாலும் மதிக்கப்பட வேண்டும்.”

கெட்டதற்கு நல்லது ஈடுசெய்வது செல்லுபடியாகாது.

பலவீனமான மனவுணர்வுகளை குணத்தின் வலிமை நேர்முகமாகவோ அல்லது போதுமான அளவோ ஈடு செய்ய முடியாது.

ஒரு அழுகிய பழம் மற்ற எல்லாவற்றையும் கெடுத்து விடும் என்பதற்குரிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

கெட்டுப் போனதை நல்லதாக மாற்ற நல்லதற்கு சக்தி இல்லை.

மொத்த விஷயத்தில் நஷ்டத்தை இலாபத்தால் சரி கட்ட முடியும்.

குடும்பத்தின் நல்ல பெயர் மென்மையான அமைப்பாகும், எளிதில் பாதிப்புக்கு உள்ளாகும்.

இங்குள்ள குடும்பத்தில் முக்கியமான நேர்மறையான அதிகாரத்தில் இருப்பவர் யாரும் இல்லை.

அதிகாரத்தை எதிர்மறையான சக்தி கைப்பற்றியிருக்கிறது.

குடும்பத்திற்கு சமூகப் பேராவல் எதுவும் இல்லாமல் இருந்து தங்களுடைய நிலையிலேயே பெண்கள் திருமணம் செய்துகொள்வதில் திருப்தி அடைபவர்களாக இருந்திருந்தால், எல்லா பெண்களுக்கும் சுலபமாக திருமணம் முடிந்திருக்கும்.

தாயாரின் பேராவல் வலிமையாக உள்ளது, தந்தைக்கு நியாயமான ஆர்வம் இருக்கிறது.

அழகின் அடிப்படையில்தான் தாயாரின் எதிர்பார்ப்பு இருக்கிறது, ஆனால் திருமணச் சந்தையில் அது வெறும் பொய்த் தோற்றமே.

தந்தையோ தகுதியை பெரிதும் நம்புகிறார், அழகை காட்டிலும் இது அதிக பொய்த் தோற்றம் உடையது.

ஏதாவது ஒன்றை சாதிக்க வேண்டும் என்றால் அனைவரின் ஒருமித்த எண்ணங்களையும் அதில் செலுத்த வேண்டும். சக்திகளை சரியாக வழி நடத்த வேண்டும்.

இப்பொழுது இது ஒரு வீணான முயற்சி.

தலைமைப் பதவி திருமதி பென்னட்டிலிருந்து லிடியாவின் கைகளுக்குச் சென்றுள்ளது.

குடும்பத்தை அழிக்க இதுதான் சரியான உத்தி.

திக்கு, திசை எதுவும் இல்லை.

தவறான முறையில் புதிய சக்தி உள்ளே நுழைவதுதான் இந்த குடும்பத்தில் நடக்கிறது.

புதிய நகை செய்வதற்காக உருக்கப்பட்ட நகை தங்கமாகவே இருக்கிறது.

குடும்பம் சிதறிப் போனால் தெருவுக்கு வந்து விடும்.

லிடியா அதை சந்தோஷமாகச் செய்தாள். திரு பென்னட் மூத்த பெண்களின் மேல் அதிக எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தார்.

நாட்டின் எதிர்பக்கத்திலிருந்து எழும்பிய அலை காயத்திற்கு மருந்தாக புதிய சக்தியை கொண்டு வந்து இரண்டு பெண்களையும் வானுயரத்திற்கு உயர்த்தியது.

அது அதிர்ஷ்டமல்ல, புரட்சி பரிணாமமாக திருவுருமாறுவது.

சோம்பல் பொய்த் தோற்றங்களை உண்டாக்கும்; பொய்த் தோற்றம் விருப்பங்களை பேணுகிறது.

எலிசபெத்தான் குடும்பத்தை சிதற அடிக்கிறாள். அவளுக்காக டார்சி குடும்பத்தை காப்பாற்றுகிறான்.

விக்காமின் முக்கியத்துவத்தை கண்டுபிடிப்பது உபயோகமானது.

85. “We will have no peace in Longbourn if Lydia does not go to Brighton”.

Peace for Mr. Bennet was to let the wife have her way.

Authority must be exercised by the appropriate person in the family.

Authority exercised by the wrong or inappropriate person in the family organizes tragedy and catastrophe.

Mr. Bennet was irresponsibly negligent.

In times of transition all those on the border or intermediate zones receive undeserving punishment or undue reward irrespective of their action.

The periods of communal carnage provided negative examples.

The period between 1850 and 1900 in America was a period when overflowing social energy spilled over into individual lives and conferred vast benefits.

Mr. Bennet’s family was poised for social annihilation by Lydia’s action.

Elizabeth’s evolved status, through Darcy, transformed tragedy into a transcending luck.

Mrs. Bennet rudely usurped the power of her husband for 25 years.

He was a helpless victim pathetically witnessing his position.

He called it peace in Longbourn which is the unmerited slavery of the proper authority, the husband.

Progress is power exercised properly.

Improper exercise of power is the opposite of progress.

Mrs. Bennet is totally unaware of the presence of her husband.

He is like an Indian wife, a tongue-tied creature.

To appropriate power and authority that is not theirs is the history of creating the class and caste systems.

For long they thrive on a social scale.
At the level of the family the system meets a crisis when responsibilities are to be fulfilled.
Mrs. Bennet is the tail of the family wagging the body.
It is unseemly, tragic, and unpardonable.
Mr. Bennet acts like a Muslim wife, helpless.
The lucky atmosphere saves him through his pet daughter.
"லிடியா பிரைட்டனுக்கு போகாவிட்டால் நாம் லாங்பர்னில் நிம்மதியாக இருக்க முடியாது."
தன்னுடைய மனைவியை அவளுடைய போக்குக்கே விட்டு வைப்பது, திரு பென்னட்டிற்கு நிம்மதியாக இருந்தது.
குடும்பத்தில் தகுந்த நபர் அதிகாரம் செலுத்த வேண்டும்.
பொருத்தமற்ற நபரோ அல்லது தவறான நபரோ அதிகாரம் செலுத்த ஆரம்பித்தால், துன்பமும் பேராபத்தும் தான் எழும்.
திரு பென்னட் பொறுப்பற்று இருந்தார், எல்லாவற்றையும் புறக்கணித்தார்.
மாற்றம் ஏற்படும் காலங்களில், எல்லையில் இருப்பவர்களும், நடுவில் இருப்பவர்களும், அவர்களுடைய செயல் எப்படிப்பட்டதாக இருந்தாலும், ஒன்று தகுதியில்லாத தண்டனையைப் பெறுவர் அல்லது தகுதிக்கும் மேலான பரிசினைப் பெறுவர்.
இனப் படுகொலைகள் நடந்த காலங்கள், எதிர்மறையான உதாரணங்களை அளித்தன.
1850 முதல் 1900 வரை அமெரிக்காவில் அபரிமிதமாக இருந்த சமூக சக்தி, தனிப்பட்டவரின் வாழ்க்கையை வளப்படுத்தி ஏராளமான பலன்களை அளித்தது.
லிடியாவின் செயலினால் திரு பென்னட் குடும்பம் சமூக அழிவுக்கு ஆயத்தமானது.
டார்சியின் மூலம் உயர்ந்த எலிசபெத்தின் அந்தஸ்து, ஆபத்தை அதிர்ஷ்டமாக மாற்றியது.
இருபத்தி ஐந்து வருடங்களாக திருமதி பென்னட் அவளுடைய கணவரின் அதிகாரத்தை கைப்பற்றியிருந்தாள்.
தன்னுடைய நிலைமையை வேறு வழியின்றி அவர் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.
அதிகாரமான கணவன் எனும் ஸ்தானத்தை அடிமையாக்கிவிட்டிருந்த அவர், அதனை லாங்பர்னில் அமைதி என்று அழைத்தார்.
அதிகாரத்தை முறையாக செலுத்துவதே முன்னேற்றம் ஆகும்.
முறையாக செலுத்தப்படாத அதிகாரம் முன்னேற்றத்திற்கு எதிரான பலனைத் தரும்.
திருமதி பென்னட் அவளுடைய கணவர் இருப்பதேயே உணர்வதில்லை.
அவர் இந்திய மனைவியைப் போல் வாயை மூடிக் கொண்டிருக்கிறார்.
தங்களுக்கு இல்லாத சக்தியையும் அதிகாரத்தையும் கையில் எடுத்துக் கொள்வது வர்க்கம் மற்றும் ஜாதி முறைகளை ஏற்படுத்தியது.
வெகு நாட்களுக்கு அவர்கள் சமூக அளவில் செழித்தோங்குகின்றனர்.
குடும்பம் எனும் நிலையில் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டிய சமயத்தில் அந்த அமைப்பு ஒரு நெருக்கடியை சந்திக்கிறது
குடும்பத்தின் வால் போலிருக்கும் திருமதி பென்னட் குடும்பத்தையே ஆட்டி வைக்கிறாள்.
அது அருவருப்பானது துன்பகரமானது, மன்னிக்க முடியாதது.
திரு பென்னட் முஸ்லிம் மனைவியைப் போல் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறார்.
அதிர்ஷ்டமான சூழல் அவருடைய செல்லப் பெண் மூலம் அவரைக் காப்பாற்றுகிறது.

86. "Colonel Forster is a sensible Man. He will keep her out of mischief".
This is not a world where sensible Men can keep ardent girls out of mischief.
Mischief is biological. Sensibility is of the Mind.
A sensible Man may not instigate a girl to mischief.
There is no provision in life to protect one from an inner urge by an outer mechanism.
He forgets he egged her on the wrong course.
Idlers dissipate and like Micawber wait for something to turn up.
The final stroke of spiritual wisdom lies in seeing Lydia as the bringer of luck.
It is Wickham who by his own strategy made Elizabeth know the value of Darcy.
Wickham gave her the knowledge, Lydia gave her the husband.
That was not the intention of either, but it was life's intention.
Not to resent Lydia-Wickham is an opening; appreciating them is receptivity.
Offering gratitude to what they have done avoiding their personality is to see the Marvel in their life.
Offering gratitude to them will release the infinity of tragedy.
To recognize evil serving the cause of Marvel and not giving any scope beyond that is the evolutionary strategy needed.
Caroline's letter to Elizabeth must be replied to its spirit only.
The asuras worked to find amrita, but giving them amrita will make them immortal.

Wickham and Lydia offer a service which can be accepted, not them.
We eat what the spoon carries, not the spoon.
The woman conceives to the Man, accepts the child, not the Man.
A tyrant or a betrayer leads us to Mother, we receive the knowledge, not the Man.
Discovering Mother in the evil instrument, the instrument is dissolved.
Attachment to the instrument is attachment to the Form, counterproductive.
We cannot be attached to our bodies or Minds and how to be attached to a human instrument.
"கர்னல் பாஸ்டர் விவேகமானவர். அவள் எந்த வம்பிலும் சிக்கிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்வார்."
விவேகமான மனிதர் ஆர்வமுள்ள ஒரு பெண்ணை எந்த வம்பிலும் மாட்டிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள முடியும் உலகம் அல்ல இது.
வம்பு உடல் ரீதியானது. விவேகம் மனத்திற்குரியது.
ஒரு பெண் விஷமம் செய்ய விவேகமான மனிதன் தூண்டமாட்டான்.
ஒருவரை அகத்தின் உந்துதலிலிருந்து காப்பாற்ற வாழ்க்கையில் எந்த புற முறையும் கிடையாது.
தவறான முறைக்கு அவர் அவளை ஊக்குவித்தார் என்பதை அவர் மறந்து விடுகிறார்.
சோம்பேறிகள் அழிச்சாட்டியம் செய்து விட்டு, Micawberபோல், ஏதாவது ஒன்று நடக்காதா என்று காத்துக் கொண்டிருப்பர்.
அதிர்ஷ்டத்தைக் கொண்டு வருபவள் லிடியா என்று பார்ப்பதுதான் ஆன்மீக அறிவில் இருக்கும் இறுதியான நிலை.
விக்காம் அவனுடைய சொந்த உத்திகளால் டார்சியின் மதிப்பை எலிசபெத்திற்கு புரிய வைத்தான்.
விக்காம் அவளுக்கு அறிவைத் தந்தான், லிடியா கணவனைத் தந்தாள்.
அது அவர்கள் இருவருடைய நோக்கமாக இல்லை, ஆனால் வாழ்க்கையின் நோக்கமாக இருந்தது.
லிடியா-விக்காமைக் கண்டு கோபப்படாமல் இருப்பது விழிப்பைத் தரும்; அவர்களைப் பாராட்டுவது ஏற்புடமை.
அவர்களுடைய குணாதிசயத்தைத் தவிர்த்து விட்டு அவர்கள் செய்ததற்கு நன்றி கூறுவது ஒருவரது வாழ்வில் அற்புதத்தைக் காண்பதாகும்.
அவர்களுக்கு நன்றி கூறுவது ஆபத்திற்கு பின்னால் உள்ள அனந்தத்தை விடுவிக்கும்.
அற்புதத்திற்குச் சேவை செய்யும் தீமையை அடையாளம் காணுவதும், அதைத் தாண்டி எந்த ஒரு வாய்ப்புக்கும் இடம் கொடுக்காததுமே தேவைப்படும் பரிணாம உத்தியாகும்.
காரலின் எலிசபெத்திற்கு எழுதிய கடிதத்தின் ஆர்வத்திற்குத்தான் பதிலளிக்க வேண்டும்.
அமிர்தத்திற்காக அசுரர்கள் பாடுபட்டனர் ஆனால் அவர்களுக்கு அமிர்தம் கொடுப்பது அவர்களுக்கு அமரத்துவம் அளிப்பதாகும்.
விக்காம்-லிடியா அளிக்கும் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம், அவர்களை ஏற்றுக்கொள்ள முடியாது.
தேக்கரண்டியால் எடுத்து உண்ணலாம், ஆனால் தேக்கரண்டியை உண்ண முடியாது.
பெண் ஆணின் மூலம் தாய்மை அடைகிறாள், குழந்தையை ஏற்றுக்கொள்கிறாள், ஆணை ஏற்றுக் கொள்வதில்லை.
கொடுமை செய்பவனோ அல்லது நம்பிக்கைத் துரோகம் செய்பவனோ நம்மை அன்னையிடம் அழைத்துச் செல்வர், நாம் ஞானத்தைப் பெற்றுக்கொள்கிறோம், மனிதனை அல்ல.
தீங்கான கருவியில் அன்னையைக் கண்டுபிடிப்பதன் மூலம் கருவி அழிக்கப்பட்டு விடுகிறது.
கருவியிடம் கொள்ளும் பற்று, தோற்றத்திடம் கொள்ளும் பற்றாகும். அது எதிரிடையாகச் செயலாற்றும்.
நம்மால் நம்முடைய உடல் அல்லது மனத்தினுடனேயே பற்று வைத்துக்கொள்ள முடியாது, எவ்வாறு மனிதக் கருவியிடம் பற்றுகொள்ள முடியும்.

87. "She is luckily too poor to be an object of prey to anybody".
What can be gained from an event is never seen fully.
Man has a greater love of destroying something for somebody than of gain.
It is easier to destroy than to construct.
One like Mr. Bennet may not easily see that source of pleasure. It is like transgression which is itself a temptation.
Instead of thinking what the other man will gain, thinking what we will lose, one more dimension will arise.
This sentence implies an impermissible pleasure in her if she became such a prey.
Mr. Bennet certainly became perverse having allowed his wife her way.
That perversity expresses mostly in his native sarcasm.
He is frustrated beyond measure.
Unexpressed frustration is the raw material for perversity of feeling and sarcasm of speech.
He makes a theory of girls being crossed in love when Jane was sore about Bingley.
A faculty seeking expression is insensitive to others.
A faculty is a formation of force.
Sarcastic speech is the unformed expression of a sarcastic faculty.

The compulsion of the instrument Mother speaks of regarding the atom bomb is the power of a faculty.
Sarcasm did become a formed faculty in him over the years, maybe it was built on his native trait.
His negative comment on Jane being crossed in love and a farfetched justification of it was, to say the least, unpardonable.
He extended it to a prophesy to Lizzy which came true.
He did not have the penetration into Wickham's character to advise Lizzy.
His incapacity to welcome the greatest good luck that came his way is partly due to this sarcastic temperament.
Darcy's engagement not giving scope for any sarcastic statement disappoints him and therefore he refuses consent.
"அதிர்ஷ்டவசமாக அவள் ஏழை என்பதால் யாரும் அவளை நாட மாட்டார்கள்."
ஒரு நிகழ்ச்சியின் மூலம் என்ன பயனடையலாம் என்பது முழுமையாகப் பார்க்கப்படுவதே இல்லை.
மனிதனுக்கு பிறருக்கு நஷ்டம் ஏற்படுத்துவதில்தான் ஆர்வமே தவிர இலாபமடைவதில் அல்ல.
ஆக்கத்தைவிட அழிப்பது சுலபமானது.
அது போன்றொரு சந்தோஷமான இடத்தை திரு பென்னட் சுலபமாகப் பார்ப்பதில்லை. அத்து மீறி நடப்பதாக இருக்கும் அதுவே ஒரு சபலமுமாகும்.
மற்றவன் என்ன இலாபமடைவான் என்று யோசிப்பதற்கு பதிலாக நாம் என்ன இழப்போம் என்று யோசித்தால் வேறொரு பரிமாணம் எழும்.
அவள் அது போல ஒரு சூழ்நிலைக்கு ஆளானால் அனுமதியில்லாத இன்பத்தை மேற்கூறிய வார்த்தைகள் அவளிடம் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறது.
திரு பென்னட் அவருடைய மனைவியை அவளுடைய வழியில் போக விடுவதன் மூலம் நிச்சயமாக வக்கிரமாக மாறினார்.
அவருடைய வக்கிரம் இயற்கையான குத்தல் பேச்சாக வெளிப்படுகிறது.
அவர் அளவுக்கு மீறி ஏமாற்றம் அடைந்திருந்தார்.
வெளிப்படுத்தாத ஏமாற்றம் உணர்வில் வக்கிரமாகவும் பேச்சில் குத்தலாகவும் வெளிப்படுகிறது.
ஜேன் பிங்கிலியினால் புண்பட்டிருக்கும்பொழுது காதலில் சிக்கிக்கொள்ளும் பெண்களைப் பற்றி அவர் தத்துவம் பேசுகிறார்.
வெளிப்பட விரும்பும் திறன் மற்றவர்கள் உணர்வை மதிப்பதில்லை.
சக்தியின் உருவகமே திறமை ஆகும்.
குத்தலாகப் பேசும் திறன் உருவம் பெறாமல் குத்தல் பேச்சாக வெளிப்படுகிறது.
அணுகுண்டு சம்பந்தமாக அன்னை பேசும் கருவியின் கட்டாயம் ஒரு திறனின் சக்தியாகும்.
பல காலமாக குத்தல் பேச்சு அவரிடம் உருவம் பெற்ற திறனாக மாறிவிட்டது ஒரு வேளை அது அவருடைய இயற்கையான குணத்தின் அடிப்படையில் உருவாகியிருக்கலாம்.
காதலில் சிக்கிக்கொண்ட ஜேனைப் பற்றி அவருடைய எதிர்மறையான கருத்தும் அதை அவர் சம்பந்தம் இல்லாமல் நியாயப்படுத்துவதும் மன்னிக்க முடியாதது.
அதையே அவர் லிசியின் விஷயத்தில் ஆரூடம் போல் கூறியது உண்மையாயிற்று.
விக்காமின் குணத்தை ஆழ்ந்து பார்க்கும் திறன் அவரிடம் இல்லாததால் லிசிக்கு அறிவுரை கூறமுடியவில்லை.
அவருக்கு வந்த பெரிய அதிர்ஷ்டத்தை அவர் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதற்கு ஒரு காரணம் குத்தலாகப் பேசும் அவருடைய சுபாவம்தான்.
டார்சியின் திருமண உறுதி எந்த குத்தல் பேச்சிற்கும் வாய்ப்பு அளிக்காததால் அது அவருக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது, அதனால் அவர் சம்மதம் தெரிவிக்க மறுக்கிறார்.

88. "The officers will find women better worth their values".
Low culture does not give sensational value to a woman.
Sensational value is that which makes something real to a Man.
Earth going round the Sun is not sensationally real to us.
Hospitality is not a reality in sensation to people of low culture.
Pain is thus real. But a prick need not pain as the body and the pin are the same.
It is the same to the philosophy of the Mind, not the sensation of the vital.
The descent of Mind on the vital or the body makes pain unreal to the vital.
Its descent to the body makes death unreal to the body, especially when it is the spirit that descends or the Supermind.
Bribe hurts a sensitive Man.
Incorruptibility is a mental value.
Its descent to the vital makes the vital sensitivity possible.
Chastity is a mental value, often raised to spirit.
Woman often marry out of compulsion Men they abhor.
A woman who marries a debauchee finds her very body sensitive enough not to conceive for him.
A pure man of high values of mental idealism will be sensitive to the very words of a wife physically pure, but mentally not chaste.

He cannot stand the touch of the woman.
In a similar situation a chaste wife's flesh will creep at an impure touch of the husband.
Ego has made selfishness vitally sensitive.
Money and social status have so become sensational values in human kind.
In the future evolving humanity, Men and Women given to animal behaviour will be written off.
Viewed from this point of view, Lily Dale and Emily Wharton stand out as shining examples of feminine virtue of purity. Mercedes may not qualify.
Elizabeth has not sought entry into the qualifying list.
Chastity in India raised to the spiritual level has acquired a cultural value.
Women who violate the culture in a modern atmosphere will develop compunction in later years.
"அதிகாரிகளுக்கு அவர்களுடைய தகுதிக்கு ஏற்ற பெண்கள் கிடைப்பார்கள்."
தாழ்ந்த நாகரிகம் பெண்ணுக்கு உணர்வுபூர்வமான மதிப்பினை அளிப்பதில்லை.
உணர்வுபூர்வமான மதிப்புதான் மனிதனுக்கு உண்மையாக இருக்கிறது.
சூரியனை பூமி சுற்றுவது உணர்வுபூர்வமாக நமக்கு உண்மையாகப்படவில்லை.
தாழ்ந்த கலாச்சாரத்தில் இருப்பவர்களுக்கு விருந்தோம்பல் உணர்வில் உண்மையாகப் படுவதில்லை.
உணர்வில் வலி உண்மையாக இருக்கிறது. ஆனால் ஊசியால் குத்துவது வலிக்கும் என்று கூறமுடியாது, ஏனெனில் உடலும் ஊசியும் ஒன்றுதான்.
இது மனத்தின் தத்துவத்திற்கும் ஒன்றேதான். உயிரின் உணர்வுக்கு அல்ல.
உயிரிலோ அல்லது உடலிலோ மனம் இறங்கும்பொழுது வலியை உயிர் உணராது.
அது உடலில் இறங்கும்பொழுது, முக்கியமாக ஆன்மா அல்லது சத்திய ஜீவியம் இறங்கும்பொழுது, உடல் மரணத்தையும் பொய்யாக நினைக்கும்.
லஞ்சம் உணர்வுபூர்வமான மனிதனை பாதிக்கும்.
ஊழல் இல்லாமல் இருப்பது மனத்தின் பண்பு.
உணர்வில் அது இறங்கும்பொழுது உணர்வின் சொரணை சாத்தியமாகும்.
கற்பு மனத்தின் பண்பு, பலசமயங்களில் ஆன்மாவின் அளவுக்கு உயரும்.
கடுமையாக வெறுக்கும் மனிதனை பெண்கள் பல சமயம் கட்டாயத்தினால் திருமணம் செய்து கொள்கின்றனர்.
தீயொழுக்கம் உடையவனை ஒரு பெண் மணந்து கொண்டால், அவனுக்கு கருத்தரிக்க முடியாத அளவிற்கு அவளுடைய உடல் உணர்வுடையதாக இருக்கும்.
மனத்தின் இலட்சியவாதங்களில் உயர்ந்த பண்புகளை உடைய ஒரு ஆண், உடலால் தூய்மையானவளாக இருந்து மனத்தால் கற்பு இல்லாத மனைவியின் வார்த்தைகளுக்கே கூர் உணர்வுடையவனாக இருப்பான்.
அவள் தொடுவதையே அவனால் ஏற்றுக்கொள்ள முடியாது.
அதே போல் கற்புடைய ஒரு மனைவி, தூய்மையற்ற கணவன் தொடுவதையே தாங்கிக்கொள்ள மாட்டாள்.
சுயநலத்தை அகந்தை உயிரில் உணர்வுடையதாக மாற்றியுள்ளது.
பணமும், சமூக அந்தஸ்தும், மனித குலத்தில் உணர்ச்சி மிக்க பண்புகளாக மாறியுள்ளன.
எதிர்காலத்தில் வெளிப்படும் மனிதகுலத்தில் விலங்கு நடத்தையுள்ள ஆண்களும் பெண்களும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டார்கள்.
இந்த கோணத்தில் பார்க்கும் பொழுது லில்லி டேல், எமிலி வார்டன் இருவரும் பெண்மையின் தூய்மைக்கு சிறந்த உதாரணமாக விளங்கினர். மெர்சிடஸ்ஸிற்கு இந்த தகுதி இல்லை.
எலிசபெத்திற்கு அந்த தகுதி இல்லை.
இந்தியாவில் கற்பு ஆன்மீக நிலைக்கு உயர்த்தப்பட்டு கலாச்சாரப் பண்பினை பெற்றுள்ளது.
நாகரிகச் சூழலில் கலாச்சாரத்தை மீறும் பெண்களுக்கு பிற்காலத்தில் மனவுறுத்தல் ஏற்படுகிறது.

89. "Her being there may teach her her own insignificance".
Man instinctively knows his own great significance.
If there is something Man stubbornly refuses to learn, it is his own folly or wrong.
Another excellent peculiarity of Man is he readily expects from all others what he is unable to be – rational, fair, selfless, good.
What makes him act like that is his ego.
Ego is separative, with a vengeance.
Selfishness is an inward movement.
Egoistic selfishness at its perfection prides in accusing everyone else of being what he is.
Man makes his own capacity not to see what he is an outstanding ideal.
Mr. Bennet here rises to that ideal.
He could be like that for various reasons, one of them being a great reader.
Most books of that period instinctively uphold the rightness of condemning a Papist, a Frenchman, one who does not belong to his class or party.
It was a period where prejudice was a policy, even an ideal.

His constant reading reinforced his convictions.
Reading thus became a means to fortify his superstition.
Innovations, instruments in any period serve the aims of the period.
He was an indolent landowner who loved the country and hated London.
Land makes Man tamasic; retiring into the library organizes indolence; hatred of town is shunning change.
He shunned his wife which made him cherish what he was by reading.
Conservation is cherishing the essence of experience.
In practice it matures into adoration of superstition.
His expecting Lydia to learn her own insignificance was his flying in the face of a stark fact that he had never learnt his own meaninglessness.
Society had formulated itself to his consciousness and withdrew.
Society does not compel anyone to change as long as he does not cross it.
Man calls it peaceful life or mental peace.
It is one of the cherished social ideals.
"அங்கிருப்பது, அவளுக்கு அவள் முக்கியம் அல்லதாவள் என்பதைக் கற்றுத் தரலாம்."
மனிதனுக்கு தன்னுடைய சிறப்பான முக்கியத்துவம் உள்ளுணர்வாகத் தெரியும்.
மனிதன் பிடிவாதமாக ஏதாவது ஒன்றை கற்றுக்கொள்ள மறுக்கிறான் என்றால், அது அவனுடைய மடமை அல்லது தவறு ஆகும்.
தன்னால் இயலாத விவேகம், நியாயம், பரநலம், நல்ல குணம் இவற்றை எல்லாம் மற்றவரிடம் எதிர்பார்ப்பது, மற்றொரு சிறப்பான வினோதமான மனிதனிடம் உள்ள குணமாகும்.
அகந்தை அவனை அவ்வாறு நடந்துகொள்ளத் தூண்டுகிறது.
அகந்தை வன்மத்துடன் தனித்திருக்கும்.
உள்ளத்தில் இருக்கும் சலனமே அகந்தையாகும்.
உச்சகட்ட அகந்தையுடன் சுயநலமாக இருப்பவர்கள், அதே போல் மற்றவர்கள் இருப்பதாகக் குற்றம் சாட்டுவதில் பெருமை அடைவார்கள்.
மனிதன், தன்னுடைய உயந்த இலட்சியத்தை பார்ப்பதற்கு மறுக்கும் திறமையை வளர்த்துக்கொள்கிறான்.
திரு பென்னட் அந்த இலட்சியத்திற்கு உயருகிறார்.
பல காரணங்களுக்காக அவர் அவ்வாறு இருக்கலாம், அதில் ஒன்று அவர் அதிகம் படிப்பவர்.
பிரெஞ்சுக்காரரான கத்தோலிக்கரை, அவருடைய வர்க்கத்திலோ அல்லது கட்சியிலோ இல்லாத அவரை, கண்டனம் செய்வதை சரி என்று உறுதி செய்து பல புத்தகங்கள் அக்கால கட்டத்தில் எழுந்தன.
தவறான அபிப்பிராயம் ஒரு கொள்கையாக ஏன் ஒரு இலட்சியமாகக்கூட இருந்த காலகட்டம் அது.
அவருடைய இடைவிடாத படிப்பு அவருடைய திட நம்பிக்கைகளைப் பலப்படுத்தியது.
அவருடைய மூடநம்பிக்கைகளை மேலும் பலப்படுத்த படிப்பு ஒரு வழிவகையாகவும் ஆனது.
எந்த காலத்திலும் புதிய கண்டுபிடிப்புகள், கருவிகள், அந்த கால கட்டத்தின் குறிக்கோள்களுக்கு உதவி புரிகின்றன.
சோம்பல் நிறைந்த நிலச்சுவான்தாராக இருந்த அவருக்கு கிராமம் பிடித்திருந்தது, லண்டன் பிடிக்கவில்லை.
நிலம் மனிதனை சோம்பேறியாக்குகிறது, நூலகத்தில் தஞ்சம் புகுவது சோம்பலை முறைப்படுத்துகிறது, நகரத்தைப் பிடிக்காமல் போவது மாற்றத்தைத் தவிர்ப்பது போலாகிறது.
அவர் மனைவியைத் தவிர்த்தார், அதனால் அவரால் படிப்பதை அனுபவிக்க முடிந்தது.
அனுபவத்தின் சாரத்தை பேணிப் பாராட்டுவதே பாதுகாத்தல் ஆகும்.
நடைமுறையில் அது மூடநம்பிக்கைகளின் பாராட்டாக முதிர்ச்சி பெறுகிறது.
லிடியா, அவள் முக்கியம் இல்லாமல் இருப்பதை பற்றி தெரிந்துகொள்ளட்டும் என்று அவர் எதிர்பார்ப்பது அவர் எவ்வளவு அர்த்தமில்லாமல் இருக்கிறார் என்பதைப் பற்றி அவர் தெரிந்துகொள்ளவே இல்லை என்று அவருக்கே அப்பட்டமாகத் தெரிவிக்கிறது.
சமூகம் அவருடைய ஜீவியத்திற்கு அதனையே உருவகப்படுத்திக் கொண்டு பிறகு பின் வாங்கியது.
சமூகத்தை மீறாதவரை, மாறவேண்டும் என்று அது யாரையும் வற்புறுத்துவதில்லை.
அமைதியான வாழ்க்கை, மன அமைதி என்று மனிதன் அதை அழைக்கிறான்.
போற்றி வளர்க்கப்படும் சமூக இலட்சியங்களில் அது ஒன்று.

90. "She cannot grow many degrees worse".
Man never sees that there are several grades lower than his worst.
When grace comes, he is similarly overwhelmed.
Consciousness overtakes unconsciousness in this fashion.
Technology has always taken Man by such a surprise.
Man who has traversed so many degrees of life below the worst he can now conceive of forgets the stages he has crossed.
He who forgets his own experience cannot imagine what is beyond him.

At every stage in the last three hundred years, the American was thus positively surprised.
Stock market prices rising is of this fashion.
Refugee camps are of the opposite side of this character.
A weak Man, the weakest in his society at every turn faces these alternatives.
The untouchable, the outcaste has a life full of these sudden revelations.
At the time of founding an empire, a clerk rises to the level of Governor–General.
Robert Clive, accused of plunder, declared that in the situation he had been in, he must be appreciated for his self-restraint. So great the world opens to the trail blazer.
The world is wide on either side of Man, infinitely wide.
The dog by the side of a river in spate can only drink by licking the water.
Life opened to Jane like that, to Elizabeth it showed greater heights.
Charlotte's mercenary wedding, Lydia's impulsive non-wedding were the direct causes of Jane and Elizabeth's joy.
The evil Man's active impulse to demolish goodness is employed by Life to construct great good luck unimagined.
The evil Man subconsciously longs for dissolution, **not knowing there is an evolutionary opportunity waiting**.
Human beings in a well established organization unable to grow with its growth choose to dissolve themselves. Life, if it chooses, can use them for positive purposes.
He says Life grows through good as well as evil.
God has nothing but enjoyment. We cannot condemn any of these enjoyments.
We must try to understand them. Mind cannot. Soul can. The Psychic has only the right understanding all the time.
"அவள் மேலும் மோசமாக மாற முடியாது."
மனிதனின் மோசமானதைக் காட்டிலும் கீழான பல நிலைகள் உள்ளன என்பதை மனிதன் பார்ப்பதில்லை.
அருள் வரும்பொழுது அவன் அதேபோல் பெரிதும் சந்தோஷமடைகிறான்.
இதே முறையில் ஜீவியம் கண்மூடித்தனத்தை மீறி விடுகிறது.
தொழில் நுட்பம் எப்பொழுதுமே மனிதனுக்கு இது போன்ற ஆச்சரியத்தை அளித்துள்ளது.
வாழ்க்கையில் இப்பொழுது நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு பல மோசமான நிலைகளை கடந்து சென்றிருக்கும் மனிதன், தான் கடந்து வந்த நிலைகளை மறந்து விடுகிறான்.
யார் ஒருவன் அவனுடைய அனுபவத்தையே மறந்து விடுகிறானோ, அவனுக்கு அப்பால் இருப்பதை அவனால் கற்பனை செய்ய முடியாது.
கடந்த முந்நூறு வருடங்களில் அமெரிக்கர்களுக்கு இவ்வாறு ஒவ்வொரு நிலையிலும் நேர்மறையான ஆச்சரியங்கள் கிடைத்தன.
பங்குச் சந்தை விலை உயர்வது இந்த முறையில்தான்.
இந்த தன்மையில் அகதி முகாம்கள் எதிர்திசையைச் சார்ந்தது.
பலவீனமானவன், அவனது சமூகத்திலேயே மிகவும் பலவீனமாக இருப்பவன், ஒவ்வொரு திருப்பத்திலும் இந்த மாறுபாடுகளை சந்திக்கிறான்.
தீண்டத்தகாதவர்களும், கீழ் ஜாதிக்காரர்களும் எதிர்கொள்வது இந்த திடீர் வெளிப்பாடுகள் நிறைந்த வாழ்க்கையைத்தான்.
ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவும்பொழுது, ஒரு குமாஸ்தா கவர்னர் ஜெனரலாக உயருகிறார்.
நாட்டைச் சூறையாடிய குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்ட ராபர்ட் கிளைவ், தான் இருந்த சூழ்நிலையில் தன்னுடைய சுய கட்டுப்பாட்டிற்காக பாராட்டப்பட வேண்டும் என்று கூறினார். ஒரு முன்னோடிக்கு இவ்வாறு மிகப் பெரிய வாய்ப்பினை அளிக்கும் உலகம் உயர்வானதுதான்.
மனிதனின் இரு பக்கங்களிலும் உலகம் விரிந்துள்ளது, எல்லையில்லாது விரிந்துள்ளது.
ஆற்றில் வெள்ளம் ஓடினாலும் நாய் நக்கித்தான் குடிக்கும்.
அவ்வாறுதான் ஜேனுக்கு வாழ்க்கை திறந்தது, எலிசபெத்திற்கு மேலும் உயர்ந்த நிலைகளைக் காண்பித்தது.
ஆதாய மனப்பான்மையுடன் ஏற்பட்ட ஷார்லெட்டின் திருமணம், உணர்ச்சியால் உந்தப்பட்ட லிடியாவின் உறவு, இவை இரண்டும் ஜேன், எலிசபெத்தின் சந்தோஷத்தால் நேரடியாக நடந்தவை.
நல்லதை அழிக்கும் தீயவனின் தீவிர உந்துதல் கற்பனை செய்திராத அளவிற்கு அதிர்ஷ்டத்தை உற்பத்தி செய்யும்படி வாழ்க்கை அதனை செயல்பட வைக்கும்.
பரிணாமத்தில் ஒரு சந்தர்ப்பம் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறியாமல் தீயவன் ஆழ்மனதில் அழிப்பதற்கு ஏங்குவான்.
சிறப்பாக வளர்ந்துள்ள அமைப்புகளில் இருக்கும் மனிதர்கள் அதனோடு சேர்ந்து வளர முடியாதபொழுது தங்களையே அழித்துக்கொள்ள விரும்புவர். வாழ்க்கை தேர்ந்தெடுத்தால் அவர்களை நேர்மறையான விஷயங்களுக்கு பயன்படுத்திக்கொள்ளும்.
வாழ்க்கை நல்லது கெட்டது இரண்டுடன் சேர்ந்து வளரும் என்று பகவான் கூறுகிறார்.
இறைவனிடம் இருப்பது சந்தோஷம் மட்டுமே. நாம் இந்தச் சந்தோஷங்களைக் குறை கூற முடியாது.
நாம் அதனை புரிந்துகொள்ள முயல வேண்டும். மனத்தால் புரிந்துகொள்ள முடியாது. ஆன்மாவால் முடியும்.
சைத்திய புருஷனால் எப்பொழுதும் சரியாக மட்டும்தான் புரிந்துகொள்ள முடியும்.

91. "without authorizing us to lock her up".
He cannot lock her up. He can lock himself up in the library.
He is unable to act, wants an external sanction for him to act.
He would like to lock up his wife; he is not authorized to do so now.
Locking her up for any length of time, will have no effect on Lydia.
More than one in ten children in USA fall out of the social groove.
It is out of this population the future Individual has to emerge.
For one Individual to emerge, one million must disintegrate.
Those who disintegrate provide the foundation in the subconscient of the society. In USA we see that foundation is being created in the inconscient.
Every great emperor stood on such foundations laid centuries ago.
During those centuries Men thus lost were totally lost.
Nowadays institutions spring up to save them from utter ruin.
Now that knowledge is there, parents cannot only save the children, but as Darcy did, can make them wonders of the future.
The parent must be willing to undergo in his inner life the corresponding changes.
Darcy did it all, Elizabeth cooperated.
Had Darcy commissioned all the forces of Pemberley, spent an enormous amount of Money, without that inner change he would not have traced them.
When traced they might not marry. If married they would not stick together. In the meanwhile Darcy would have developed the same problem at home.
Locking her up is no solution.
It is the only solution Mind can conceive of.
At best it will solve no problem. At worst it will complicate a simple error into a complex insoluble tangle.
There are moments Life acts at once.
Dantes on his way to the altar was led to jail.
Life precipitated results when Dantes took no initiative.
Bennet locking her up in a room may find himself locked up behind bars.
Shortcuts of Mind are sure roads to eternal ruin.
"நாம் அவளை பூட்டித்தான் வைக்க வேண்டும்."
அவளை அவரால் பூட்டி வைக்க முடியாது. அவர் தன்னைத்தான் நூலகத்தில் பூட்டி வைத்துக்கொள்ள வேண்டும்.
அவரால் செயல்பட முடியவில்லை, செயல்படுவதற்கு அவருக்கு வெளியிலிருந்து அனுமதி தேவைப்படுகிறது.
மனைவியை பூட்டி வைக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்; இப்பொழுது அவருக்கு அதற்கு அதிகாரம் இல்லை.
லிடியாவை நீண்ட நேரத்திற்கு அடைத்து வைத்திருந்தாலும் அதனால் ஒரு பயனும் இருக்காது.
பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அமெரிக்க குழந்தைகள் சமூக அமைப்பிலிருந்து வெளி வந்து விடுகின்றனர்.
இந்த மக்கட்தொகையிலிருந்துதான் எதிர்கால தனிமனிதன் வெளிவர வேண்டும்.
ஒரு தனிமனிதன் வெளிவர கோடிக்கணக்கானவார்கள் அழிந்து போக வேண்டும்.
யார் அழிகிறார்களோ அவர்கள் சமூகத்தின் ஆழ் மனதில் அடித்தளத்தை அமைக்கிறார்கள். அமெரிக்காவில் அந்த அடித்தளம் அடிமனதில் அமைக்கப்படுகிறது.
பல நூற்றாண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட அது போன்ற அடித்தளத்தில், ஒவ்வொரு பெரிய பேரரசர்களும் ஆண்டனர்.
அந்த நூற்றாண்டுகளில் இவ்வாறு காணாமல் போன மனிதர்கள் முழுமையாகக் காணாமல் போயினர்.
இன்று அவர்களை முழு அழிவிலிருந்து காப்பாற்ற அமைப்புகள் எழுந்துள்ளன.
இப்பொழுது அந்த அறிவு இருப்பதால் பெற்றோர்கள் குழந்தைகளை காப்பாற்ற மட்டும் செய்யாமல் அவர்களை எதிர்காலத்தின் அற்புதங்களாக ஆக்கலாம்.
பெற்றோர்களுக்கும் அதற்கு ஏற்றவாறு அகத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும்.
டார்சி அனைத்தையும் செய்தான், எலிசபெத் அதற்கு ஒத்துழைத்தாள்.
அகத்தில் மாற்றம் கொண்டு வராமல் பெம்பர்லியின் அனைத்து சக்திகளையும் டார்சி செயல்பட வைத்திருந்தாலும், பெரும் பணத்தை செலவழித்திருந்தாலும், அவனால் அவர்களைக் கண்டு பிடித்திருக்க முடிந்திருக்காது.
கண்டுபிடித்திருந்தாலும் அவர்கள் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கலாம். திருமணம் செய்து கொண்டால் சேர்ந்து வாழாமலும் இருக்கலாம். இதற்கிடையில் வீட்டில் டார்சிக்கும் இதே பிரச்சினை எழுந்திருக்கும்.
அவளை அடைத்து வைப்பது தீர்வல்ல.

இந்த ஒரு தீர்வை மட்டும்தான் மனத்தால் நினைக்க முடிகிறது.
அது எந்த பிரச்சினையையும் தீர்க்காது. எளிமையான ஒரு தவற்றை தீர்க்க முடியாத சிக்கலாகி விடும் வாழ்க்கை உடனடியாக செயல்படும் தருணங்கள் உண்டு.
வழிபாட்டுக்குரிய இடத்திற்குச் செல்லும் வழியில் டான்டே கைது செய்யப்பட்டான்.
டான்டே தன்முனைப்பு எதுவும் எடுக்காத போது வாழ்க்கை பலன்களை கொண்டு சேர்த்தது.
பென்னட் அவளை ஒரு அறைக்குள் பூட்டி வைத்தால், அவர் சிறைக்குப் போக வேண்டி வருவதைப் பார்க்கலாம்.
மனத்தின் குறுக்கு வழி அழிவுக்கு உறுதியான பாதைகளாகும்

With this answer Elizabeth was forced to be content; but her own opinion continued the same, and she left him disappointed and sorry. It was not in her nature, however, to increase her vexations by dwelling on them. She was confident of having performed her duty, and to fret over unavoidable evils, or augment them by anxiety, was no part of her disposition.

இந்த பதிலில் எலிசபெத் திருப்தி அடைய நேர்ந்தது; ஆனால் அவளுடைய அபிப்பிராயம் அப்படியேதான் இருந்தது, அவள் அவரைவிட்டு ஏமாற்றத்துடனும், வருத்தத்துடனும் அகன்றாள். அதைப்பற்றியே நினைத்து வெறுப்படைவதோ, கோபப்படுவதோ அவளுடைய சுபாவத்தில் கிடையாது. தன்னுடைய கடமையை செய்து விட்டோம் என்ற நம்பிக்கை இருந்தது, தவிர்க்க முடியாத தீமைகளை நினைத்து கோபப்படுவதோ அல்லது கவலைப்பட்டு அதை பெரிதாக்குவதோ அவளுடைய விருப்பம் கிடையாது.

92. Mr. Bennet's authority is great. Elizabeth does not protest.
திரு பென்னட்டின் அதிகாரம் பெரியது. எலிசபெத் எதிர்ப்பதில்லை.
93. Elizabeth accepts his refusal as she has her own arrears.
எலிசபெத்திற்கு செய்ய வேண்டிய விஷயங்கள் ஏற்கனவே இருப்பதால் அவள் மறுப்பை ஏற்றுக்கொள்கிறாள்.
94. "It is not in her nature to increase her vexations".
Resilience from disappointment and sorrow augers well.
Her own nature is buoyant. The forgotten proposal of Darcy and the lingering adoration of Wickham were additional sources of her revival.
These may be subconscious.
Invitation to the Lakes was a live source of liveliness.
Mr. Bennet relied on his capacity to ward off a necessity to stir.
She, as she gave up Darcy, gave up hopes of moving her father.
Life moved him in shameful, painful circumstances.
Life is a movement that cannot be stopped.
If the highest faculty in him fails to move him, lower possibilities compel him to move his lower possibilities.
His refusal and her giving up both moved him out of his house through the elopement.
At all points forces co-ordinate.
At all points forces exhibit complementarity.
At all moments, rules are obeyed.
Every moment is live.
Life moves inertly by itself.
Man gives that movement a conscious direction.
He is himself moved and his world too is moved by an inconscient energy.
His conscious movement is by employing the inconscient energy.
Mr. Bennet and Elizabeth acted out of practical ignorance.
She partly overcame that by moving to Mind.
It was not enough in her to move him.
Material forces obey mechanical laws.
Forces of Spirit or Mind are not mechanical.
Hers was an argument, mental argument.
Her mental argument was unable to move his lazy vital.
In moving him, she was really trying to move her mother who was then energized by the invitation.
"அவளுடைய எரிச்சலையே நினைத்து அதை பெரிதாக்கும் சுபாவம் அவளுடையதல்ல."
ஏமாற்றத்திலிருந்தும், வருத்தத்திலிருந்தும் சகஜ நிலைக்கு வருவது நற்குறியைக் காட்டுகிறது.
அவளுடைய சுபாவம் உற்சாகம் நிறைந்தது. டார்சியின் திருமண வேண்டுகோளை மறந்து விடுவதும் விக்காமின் மீது நாட்டம் இன்னமும் இருப்பதும் அவள் மீண்டும் சகஜ நிலைக்குத் திரும்புவதற்கு மேலும் உதவியது.
இவைகள் ஆழ்மனத்தில் இருக்கலாம்.

அவளுடைய கலகலப்பான சுபாவத்திற்கு கிடைத்த ஜீவனுள்ள சந்தர்ப்பம், லேக் எனும் இடத்திற்கு வந்த அழைப்பு.
செயல்படுவதன் அவசியத்தை விலக்க திரு பென்னட் தன்னுடைய திறமையில் நம்பிக்கை வைத்திருந்தார்.
டார்சியை மனதிலிருந்து நீக்கியதைப்போல், தந்தையை செயல்பட வைக்கும் நம்பிக்கையையும் அவள் கைவிட்டாள்.
வாழ்க்கை அவருக்கு அவமானத்தையும், வலியையும் அளித்தது.
வாழ்க்கையின் இயக்கத்தை நிறுத்த முடியாது.
அவருடைய மிக உயர்ந்த திறனால் அவரை அசைக்க முடியவில்லை எனும் பொழுது, தாழ்ந்த சாத்தியங்கள் அவருடைய தாழ்ந்த சாத்தியக் கூறுகளை அசைக்க வற்புறுத்தும்.
அவருடைய மறுப்பு, அவள் கைவிட்டு விடுவது, லிடியா ஓடிப் போவது, இவை அவரை வீட்டை விட்டு வெளியே கிளப்பியது.
எல்லா இடங்களிலும் சக்திகள் ஒருங்கிணைக்கும்.
எல்லா இடங்களிலும் சக்திகள் உடன்பாட்டுத் தன்மையை வெளிப்படுத்துகின்றன.
எல்லாத் தருணங்களிலும் சட்டங்கள் மதிக்கப்படுகின்றன.
ஒவ்வொரு தருணமும் ஜீவனுடன் உள்ளது.
வாழ்க்கை தானாகவே மந்தமாக நகருகிறது.
மனிதன் அந்த சலனத்திற்கு நனவுபூர்வமான வழியைக் காண்பிக்கிறான்.
அவரே செயல்பட ஆரம்பிக்கிறார், அவருடைய உலகமும் ஜட இருளின் சக்தியால் அசைகிறது.
நனவுபூர்வமான அவரது செயற்பாடு ஜட இருளின் சக்தியால் நிகழ்கிறது.
நடைமுறை அறியாமையால் திரு பென்னட்டும் எலிசபெத்தும் செயல்பட்டனர்.
மனத்திற்கு நகர்வதன் மூலம் அவளால் ஓரளவிற்கு அதனை வெற்றி கொள்ள முடிந்தது.
அவரை செயல்பட வைக்க அவளுக்கு அது போதுமானதாக இல்லை.
பொருட்சக்தி இயந்திர கதியில் உள்ள சட்டங்களுக்குப் பணியும்.
ஆன்மா அல்லது மனத்தின் சக்தி இயந்திர கதி படைத்ததல்ல.
அவளுடையது ஒரு விவாதம், மனத்திற்குரிய விவாதம்.
அவளுடைய மனத்தின் விவாதம், அவருடைய உணர்வின் சோம்பேறித்தனத்தை அசைக்க முடியவில்லை.
அவரை அசைப்பதன் மூலம், உண்மையில் அவள் அழைப்பினால் வலிமை பெற்றிருந்த அவளது தாயாரை அசைக்க முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

95. "She was confident of having performed her duty and to fret over unavoidable evils, or augment them by anxiety was no part of her disposition".
Performance of one's duty permits of several definitions.
People perform their duties differently when they are differently affected.
Duties can be mental or emotional or even physically threatening.
She acted from her very subconscious depths when Lydia ran away.
Whether she could have done more with her father is a question, as everywhere there is a limit to a person's endeavour.
It is true that one moves his most if his interests are at stake.
Not to fret over the unavoidable, of course, is a great asset, she had.
It is equally true that there was nothing compelling her to give up her solicitude to Wickham which, of course, she did not give up even after the elopement.
Performance of duties depends upon understanding and capacity.
She never had the understanding that her solicitude for Wickham could hurt Lydia.
Had she had it, there is the question whether she had the capacity to give it up.
At those points, such an ununderstanding or incapacity has a wider purpose to serve.
This seems to be one where the service of Wickham was necessary to all.
To be able to know precisely the service of the worst for the best is wisdom.
Lady Arabella's persecution generated in Mary the intensity of consciousness that could receive the fortune.
Dantes deserved a purer love and the greatest possible wealth. Life gave them to him through jail life.
Dantes' loyalty to his captain brought him a wealth that was as great as the French Revolution and a love that was so pure as to disregard that wealth.
Evil persons serve the good cause by betrayal, self destruction, deceit, etc.
In certain cases as Lady Arabella the persecutor was rewarded.
The rules of psychological strength passing to another, social status changing hands expressing through wealth, luck, goodness, power are, though complex, within our complete reach.

“தன்னுடைய கடமையை செய்து விட்டோம் என்கிற திருப்தி அவளுக்கு இருந்தது, தவிர்க்க முடியாத தீமைகளை நினைத்து கோபப்படுவதோ அல்லது கவலைப்பட்டு அதைப் பெரிதாக்குவதோ அவளுடைய விருப்பம் கிடையாது.”

ஒருவரது கடமைகளுக்கு பலவித விளக்கங்கள் கொடுக்க முடியும்.
மக்கள், தாங்கள் பலவிதமாக பாதிக்கப்படும்பொழுது, தங்களது கடமைகளை பலவிதமாகச் செய்வர்.
கடமைகள் மனத்திற்கோ, உணர்வுக்கோ, அல்லது உடலுக்கோகூட ஆபத்து விளைவிப்பதாக இருக்கலாம்.
லிடியா ஓடிப்போனபோது அவள் தன்னுடைய ஆழ்மனத்தின் உள்ளிருந்து செயல்பட்டாள்.
அவளது தந்தையிடம் மேலும் அதிகமாக முயற்சி எடுத்திருக்கலாமோ என்பது ஒரு கேள்வி, ஆனால் மனிதனின் முயற்சிக்கு எங்கும் ஒரு அளவு இருக்கிறது.
ஒருவன் தான் பாதிக்கப்படும்போதுதான் அதிகமாக முயற்சிகளை எடுக்கிறான் என்பது உண்மை.
தவிர்க்க முடியாதைக் கண்டு கோபப்படாமல் இருப்பது பெரிய குணமாகும், அது அவளிடம் இருந்தது.
விக்காம் மேலுள்ள தன்னுடைய ஆதரவை விடுவதற்கு அவளை எதுவும் வற்புறுத்தவில்லை என்பது உண்மைதான், லிடியா ஓடிப்போன பிறகும்கூட அவளால் அதை விட முடியவில்லை.
கடமைகளை நிறைவேற்றுவது புரிதலையும் திறமையையும் சார்ந்தது.
விக்காமிடம் அவள் காட்டும் அனுதாபம் லிடியாவை பாதிக்கும் என்பது அவளுடைய புரிதலில் இல்லை.
அவளுக்கு அந்த புரிதல் இருந்திருந்தால், அதனை கைவிட அவளால் முடிந்திருக்குமா என்பது கேள்வி.
அந்த இடங்களில் அது போன்ற புரிதலோ அல்லது இயலாமையோ, பெரிய நோக்கத்திற்கு சேவை செய்யும்.
விக்காமுடைய உதவி அனைவருக்கும் அவசியமாகும் இடம் போன்றது இது.
நல்லதற்கு மிக மோசமானது செய்யும் உதவியை துல்லியமாகத் தெரிந்துகொள்வது விவேகமாகும்.
லேடி அரபெல்லாவின் துன்புறுத்தல் அதிர்ஷ்டத்தை பெற்றுக்கொள்ளும் அளவிற்கு மேரியின் ஜீவியத்தில் தீவிரத்தை உற்பத்தி செய்தது.
தூய்மையான காதலும் மிகப் பெரிய செல்வத்தையும் பெறக் கூடிய தகுதி டான்டே-க்கு உள்ளது. சிறை வாழ்க்கை மூலம் வாழ்க்கை அவனுக்கு அவற்றை அளித்தது.
டான்டே-க்கு கேப்டனிடம் இருந்த விசுவாசம் பெரிய செல்வத்தை அவனிடம் கொண்டு சேர்த்தது, அது பிரெஞ்சுப் புரட்சியைப்போல் அவ்வளவு பெரியதாக இருந்தது, அந்த செல்வத்திற்கும் மேலான தூய்மையான காதலையும் அளித்தது.
நல்ல விஷயத்திற்கு தீமை நிறைந்த மனிதர்கள், நம்பிக்கைத் துரோகம், சுய அழிவு, ஏமாற்று இவற்றின் மூலம் உதவி புரிவார்கள்.
லேடி அரபெல்லா போன்ற சில விஷயங்களில், துன்புறுத்துபவருக்கு வெகுமதி அளிக்கப்படுகிறது.
மன வலிமைக்குரிய சட்டங்கள் வேறொருவருக்குச் செல்வதும், சொத்து, அதிர்ஷ்டம், நல்ல குணம், அதிகாரம் இவற்றின் மூலம் சமூக அந்தஸ்து கை மாறுவதும், சிக்கலான விஷயங்களாக இருந்தாலும் நம்மால் முழுமையாகப் பின்பற்றக் கூடியவைதான்.

Had Lydia and her mother known the substance of her conference with her father, their indignation would hardly have found expression in their united volubility. In Lydia's imagination, a visit to Brighton comprised every possibility of earthly happiness. She saw, with the creative eye of fancy, the streets of that gay bathing place covered with officers. She saw herself the object of attention to tens and to scores of them at present unknown. She saw all the glories of the camp -- its tents stretched forth in beauteous uniformity of lines, crowded with the young and the gay, and dazzling with scarlet; and, to complete the view, she saw herself seated beneath a tent, tenderly flirting with at least six officers at once.

லிடியாவிற்கும், அவளுடைய தாயாருக்கும், அவள் தனது தகப்பனாரிடம் பேசிய விஷயத்தைப் பற்றி தெரிய வந்திருந்தால், அவர்களது ஒருமித்த வாக்குச் சாதுர்யத்திலும் கூட அவர்களுடைய கோபத்தை வெளிப்படுத்தியிருக்கவே முடியாது. இந்த உலகத்தில் உள்ள எல்லா இன்பங்களும் பிரைட்டனுக்குச் செல்வதில் கிடைக்கும் என்று லிடியா கற்பனை செய்தாள். அந்த சந்தோஷமான குளிக்கும் இடத்திலுள்ள தெருக்கள் அதிகாரிகளால் நிரம்பியிருப்பது போலவும், பத்து இருபது நபர்களின் கவனத்தை ஈர்க்கும் பொருளாக தான் இருப்பது போலவும், அந்த முகாமின் அத்தனை பெருமைகளையும், கூடாரங்கள் வரிசையாக சீராக ஒரே நேர்கோட்டில் அமைந்திருப்பதையும், சந்தோஷமாக காட்சியளித்த இளவயது அதிகாரிகளால் கூட்டமாக இருந்த அந்த இடம் சிகப்பு நிறத்தினால் பிரகாசித்துக் கொண்டிருப்பதையும், இந்த கற்பனை முழுமை பெற, கூடாரத்தின் அடியில் தான் உட்கார்ந்து கொண்டு ஒரே சமயத்தில் ஆறு அதிகாரிகளுடன் பேசிக் கொஞ்சுவதாகவும் கற்பனை செய்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

96. The well-formed idea of elopement was not in Lydia’s mind, but the energy, motive, imagination, urge to enjoy are there.
லிடியாவின் மனதில் ஓடிப்போகவேண்டும் என்கிற எண்ணம் சரியாக உருவானதாக இல்லாவிட்டாலும் அதற்குரிய சக்தி, நோக்கம், கற்பனை, அதை அனுபவிக்க வேண்டும் என்கிற உந்துதல் ஆகியவை இருந்தன.
97. No one at home is combative or is capable of stirring up domestic discord.

வீட்டில் இருப்பவர்கள் யாருமே சண்டை போடுபவர்கள் அல்ல, குடும்பத்தில் மனஸ்தாபத்தை கிளப்புபவர்களும் அல்ல.

98. Mrs. Bennet moved up socially but now is trying to pull her family down instead of raising it. Lydia is a miniature of Mrs. Bennet. So, she indulges her daughter. Whether the family is going to maintain its status or will move up or slide down is given to the human choice. As she was determined to dissipate, Mr. Bennet rose to the occasion and through Jane and Elizabeth raised the family sky high. In a positive atmosphere a determined negative initiative has its opposite effect.

சமூகத்தில் திருமதி பென்னட்டின் அந்தஸ்து உயர்ந்தது, ஆனால் இப்பொழுது அவள் குடும்பத்தை உயர்த்துவதற்கு பதில் கீழே இறக்கப் பார்க்கிறாள். திருமதி பென்னட்டின் சிறிய வடிவமாக லிடியா இருக்கிறாள். அதனால் அவள் மகளுக்கு அதிக இடம் கொடுக்கிறாள். குடும்பம், இருக்கும் நிலையைக் காப்பாற்றிக்கொள்ளப் போகிறதா அல்லது உயரப்போகிறதா அல்லது கீழ் இறங்கப் போகிறதா என்பது மனித விருப்பம். அவள் அழிப்பதில் உறுதியாக இருந்ததினால், திரு பென்னட், ஜேன் - எலிசபெத் உதவியால் குடும்பத்தை வானுயரத்திற்கு உயர்த்தினார். நேர்மறையான சூழலில், எதிர்மறையான தன்முனைப்பு நேரெதிர் பலனை அளிக்கும்.

99. "Had Lydia and her mother known her secret meeting with her father their indignation would have found expression in their united volubility".

The rule of accomplishment says that any work that is given the maximum sincerity one is capable of giving will smoothly be accomplished.

Before meeting her father Elizabeth had recognized the source of danger was Lydia but, of course, she never suspected any vicious plan on her part. Or she had no special reason to suspect Wickham in that context. Her fear was Lydia's attitude.

Sincerity is more than subtle, can even touch the causal.

No doubt, it is capable of reminding her of the presence of Wickham there.

Such a reminder would have fully alerted her to the real danger.

Had she given up Wickham from her vital, approached her father with the sincerity the situation demanded, events would have taken another course.

Sincerity is to condemn what deserves condemnation.

Palliser took Glencora to Europe refusing the post of Chancellor of the Exchequer.

The Duke told Palliser those offers were rare, not to be repeated.

On his return it was again offered to him in honour of his sincerity.

Sincerity never knows defeat.

She totally believed Wickham as he was sincere to his falsehood in that falsehood in him was not a behaviour or belief but a real existence.

Sincerity goes with the commitment of determination in the substance.

Today one can be more sincere as the spiritual atmosphere supports it.

As civilization increases ease of existence and functioning, technology offers greater comforts, the **Spiritual atmosphere** enables a small Man to exhibit greater sincerity today.

Sincerity is the voice of the awakened soul.

Sincerity that is total is the attitude of the Being; the darkness of that Being can vitiate one's sincerity as Elizabeth's sincerity was ineffective as long as she cherished the falsehood of the scandal.

Darcy was sincere to his Quest; his quest was pure.

His sincerity to her abolished his pride, selfishness, meanness, etc. at one stroke.

"லிடியாவிற்கும், அவளுடைய தாயாருக்கும், அவளுடைய தகப்பனாருடன் ஏற்பட்ட இரகசிய சந்திப்பைப் பற்றி தெரிந்திருந்தால், அவர்களது கோபம் ஒருமித்த வாக்குச் சாதுரியத்தில் வெளி வந்திருக்கும்."

ஒருவர் தன்னால் இயன்றவரை முழு உண்மையுடன் ஒரு வேலையை செய்தால், அந்த வேலை எந்த வித பிரச்சினையும் இன்றி முடிந்து விடும் என்பதுதான் ஒரு வேலையை சாதிப்பதற்குரிய சட்டமாகும்.

எலிசபெத் அவளுடைய தந்தையை சந்திக்கும் முன், ஆபத்தின் பிறப்பிடம் லிடியாதான் என்பதை அறிந்திருந்தாள், ஆனால் அவள் எந்த ஒரு தீய திட்டத்தையும் தீட்டியிருப்பாள் என சந்தேகிக்கவில்லை. இந்த விஷயத்தில் விக்காமைச் சந்தேகிக்க எந்த காரணமும் இல்லை. லிடியாவின் மனோபாவமே அவளுக்கு பயத்தை அளித்தது.

உண்மை சூட்சுமத்தைவிடப் பெரியது, காரண உலகைக் கூடத் தொடலாம்.

விக்காம் அங்கு இருப்பதை அவளுக்கு ஞாபகப்படுத்தும் திறன் அதற்கு உண்டு.

அது போன்ற ஒரு ஞாபகப்படுத்தல், உண்மையான ஆபத்தைப் பற்றி அவளை உஷார்படுத்தியிருக்கும்.

அவள் தன்னுடைய உணர்விலிருந்து விக்காமை விலக்கியிருந்தால், நிலைமையின் தேவைக்கேற்ப உண்மையுடன் அவளுடைய தந்தையை அணுகியிருந்தால், நிகழ்ச்சிகள் வேறு விதமாக நடந்திருக்கும்.

எதைக் கண்டனம் செய்ய வேண்டுமோ அதைக் கண்டனம் செய்வதே உண்மையாகும்.

கருவூலத் தலைவர் பதவியை ஏற்க மறுத்த Palliser, Glencora வை ஐரோப்பாவிற்கு அழைத்துச் சென்றார். அது போன்ற வாய்ப்புகள் மிகவும் அரிதானவை, மீண்டும் மீண்டும் வராது என்று Palliserடம் பிரபு கூறினார். அவர் திரும்பி வந்தபொழுது அவருடைய உண்மைக்கு மரியாதை கொடுத்து அந்த வாய்ப்பு மீண்டும் அளிக்கப்பட்டது.

உண்மைக்கு என்றும் தோல்வி கிடையாது.

விக்காம் பொய்மைக்கு உண்மையானவனாக இருந்தான், அவனை எலிசபெத் முழுமையாக நம்பினாள், அவனுடைய பொய்மை நடத்தையாகவோ அல்லது நம்பிக்கையாகவோ இல்லை, அவனிடம் உண்மையாக குடி கொண்டிருந்தது.

பொருளில் உறுதியின் ஈடுபாட்டில் உண்மை இணைந்து இருக்கிறது.

ஆன்மீகச் சூழல் ஆதரவாக இருப்பதால் இன்று ஒருவர் மேலும் உண்மையாக இருக்க முடிகிறது. வாழ்க்கையையும், அதனுடைய செயற்பாட்டையும் ஆன்மீகச் சூழல் சுலபமாக்குகிறது, தொழிற்நுட்பம் மேலும் சௌகரியங்களை அளிக்கிறது. சிறிய மனிதனும் இன்று ஆன்மீகச் சூழலினால் அதிக உண்மையை வெளிப்படுத்த முடிகிறது.

விழிப்புற்ற ஆன்மாவின் குரலே உண்மையாகும்.

பூரணமாக உள்ள உண்மை ஜீவனின் மனப்பான்மை ஆகும். அது முழுமையாக உள்ளது; எலிசபெத் அவதூற்றின் **பொய்மையைப் போற்றியவரையிலும் அவளுடைய உண்மைக்கு பலன் இல்லாமல் இருந்தது போல், அந்த ஜீவனின் இருள் ஒருவரது உண்மையை சீர் குலைக்கும்.**

டார்சி அவனுடைய தேடலுக்கு உண்மையாக இருந்தான்; அவனுடைய தேடல் தூய்மையானதாக இருந்தது. அவன் அவளிடம் கொண்டிருந்த உண்மை, அவனது பெருமை, சுயநலம், சின்னத்தனம் இவை எல்லாவற்றையும் ஒரே தடவையில் அழித்து விட்டது.

100.“In Lydia’s imagination a visit to Brighton comprises of every possibility of earthly happiness”.

A consecrated act comprises of every possibility of divine joy.

Certainly this is not the consecration vocally voiced to solve problems.

It will be interesting to consider consecration at the levels of Mind, emotions and sensations.

Only Mental consecration will lend itself to words.

To consider the other levels of consecration, one has to enter subtle life, use insight and touch upon intuition.

Open Mind, a Mind of fresh perspective, an alert Mind are daily used concepts.

We are alert, have a fresh view, enjoy an open Mind when we are serious.

As our usual exercise of Mind is vastly different from this seriousness of Mind, the latter is far far removed from the Mind Original unencumbered, ready to consecrate fully.

There are occasions where a leader of volunteers is asked to lead the party, the richest Man speaks to you recognizing your integrity and capacity, the lady you love speaks the same language of your heart. Man involuntarily goes to the original depths of his Mind. Life threatening fears also give the same opening for a second. A serious Man can see outside his opinion. If he tries he can dismantle one opinion and feel the freedom of Mind. **Mental habits are encrustations**. **Ideas are thoughts our Minds have sanctioned and formulated. Preference can be given up with difficulty. Constructions are what we put in. They can be deconstructed.** Such an exercise fully engaged in will give glimpses of the fresh Mind. There in its freshness there will be irresistible urges to call a brother, to consider an important issue or not to do something. These movements are beyond manners, censor, thought. Only Silence can give us access to it. Our mental sensitivities will be entrenched there, the value of my family, the sanctity of chastity, patriotism, the sacredness of purity. These are great, but even they are obstacles as mental sensitivity. **Consecration reaching there can have instantaneous results. If it does not, the whole issue may not have received the benefit of this consecration. Memory disappearing, Silence taking possession, Force entering the body, the body thrilling are signs of the right measure of consecration. To reach there is a total effort. To remain there is yoga in Mind. Yogic credentials come to us when the consecration covers thoughts, emotions, sensation and the physical sensation**. The very best indication of its being right is to forget the issue we started the consecration for.

A further real question arises. One waits for long months or years, but no opening comes.

What is his alternative? It happens for several reasons. The most common is the aspiration to consecrate does not have sufficient concentration. **Consecration needs a greater concentration than to go to the inner being to meet the witness Purusha. The concentration needed for consecration is one whose intensity will help him cross the surface Mind to subliminal Mind via the inner Mind.** Any consecration not backed with sufficient concentration flounders, does not take off. Concentration on the thought fully will meet the Jnana yogic requirement. Here it must have overcome the ego and Time, not only Mind. One who has come to Mother has Her help, if only he surrenders to Her, not relying on his own capacity to concentrate – an egoistic effort – by which he by a slip would allow the ego to become strong by his concentration. **It is very deceptive, but deception will give way before sincerity. Ego cannot cheat sincerity**. **Opening, receptivity, Sincerity are the watchwords.** On seeing his consecration not yielding the result, he should realize that it cannot be done by his unaided efforts. He must understand he walked into the trap of

ego. A simple but totally sincere prayer will get over the obstacle.

The most common obstacle is to make the effort, i.e. egoistic effort thus defeating the purpose. This is a case of subconscious insincerity. Such a Man cannot be helped. We have to wait till he realizes it. Mr. Bennet cannot be made to prevent Lydia from going to Brighton. We must wait for the elopement. Yoga is not for all. Simple devotees delude themselves they are doing yoga by reading or meditating. Such people are to be disillusioned.

There are those who mistake their vital or Mental as the Psychic and try in vain are those who have not entered the zone. I have listed 140 indications as signs for fitness for yoga, e.g. meditation descending on us, Silence seeking us, Mother's subtle Darshan, etc. To them there is a spiritual possibility. **Yoga is for those to whom it has become the one and the only aim. Anything less than that cannot make a beginning. He is not one who prays to solve a problem or seek an opportunity. It is a subconscious awareness that is always aware of the presence inside and outside. A serious effort if rewarded in thirty years, says Mother, is lucky.** In Her atmosphere, complete Faith and total effort She says will give the opening in three months.

Yogic concentration demands the consecration of each heartbeat. **Thus the subconscious becomes conscious**. Heartbeat is a physical act. Before that there is the vital life. Mental life precedes it. There is a mental life, a life of thought that belongs to the body. **It is the body in the Mind**. The two earlier stages are the vital in the Mind and the mental functions in the Mind.

When the running thoughts stop in the Mind, Memory and Thinking are active. **Memory will remain as long as we are in the surface Mind. Only when we reach the subliminal, memory ceases to function**. **Thinking is a faculty. It can be a habit. As long as we believe thought is valuable we cannot get over that faculty.** We all have, especially the devotees, many experiences where non-thinking proved to be more powerful than thinking. **That should move us to Silence, the value of Silence. Till then the faculty of thinking will be active.** The Memory of that faculty is what He calls the censor. Its conquest is preceded by the conquest of the vital and body in the Mind. Before the thought forms at any level – Mind, vital, body – it rises as an urge which splits into innumerable impulses. Consecration proceeding on right lines arrives at the consecration of mental impulses. It will be an attempt to catch air with our hands. General Silence can quiet them. **Now we are face to face with the Mental urge. To get behind that and consecrate it is to win a major initial battle in Silence. It should be followed by the conquest of the vital urge – vital urge in Mind. Finally we face the bodily physical urge in the MIND.** To get behind that urge and then consecrate it is a stupendous task that brings Silence permanently. All these various functions are functions in the Mind relating to itself, the vital and the Mind. In the Mind itself these exist at its level of consciousness and at the level of substance. **Thought at the level of substance is power. Silence at that level moves Matter.** One who is working to control his expectation will find it at all these levels. All these stages are to be repeated at the vital, physical level for the subconscious to become conscious. Consecration of the heartbeat is the physical function of the body now fully under the control of the subconscious. It is a prolonged effort requiring enormous patience, not to be rushed through in human haste.

One who has seen the urge at once knows it is not something at his disposal like the current in a river in spate.

It cannot be handled ordinarily, but it is true Man has dammed the river and utilized the water for other purposes.

Consecration of the urge needs a similar psychological effort, never anything less.

It is the urge or force of the ego. Ego will not on its own offer surrender.

It is the will of the Soul, the Psychic, that can surrender the ego.

The will acts on its knowledge.

The will of the soul surfaces when the will of the Mind exhausts itself.

Such a will is the commitment of determination in the substances.

Conception – clarity – organization of ideas – belief – conviction – decision – determination – commitment is the process of its maturity.

Man cannot do this yoga. It is the Divine that does the yoga. Man's part is surrender is the primary idea to be conceived.

Mind conceives of an idea which it sees.

Even at the level of conception, a clarity is necessary.

Clarity gives strength.

Before the will launches on a belief based on it, the idea that has gained clarity must be organized into power through the structure of one's character.

Belief matures by experience into conviction.

A decision based on it is powerful in the consciousness.

The decision moving to the substance becomes the determination.

The whole Mind accepting the determination is commitment.

A commitment to consecration by itself matures into surrender.

The sense of surrender is a freedom of the cool emergence of the Psychic.
All this can be done by human effort, better still by the withdrawal of it.
Elizabeth forgetting that Darcy proposed, Mother forgetting that He wanted to leave are the exact phenomena we can witness inside when the sincerity is awake and active.
Sincerity is an opening given to receptivity.
We surrender to it to which we are sincere.
“உலகத்திலுள்ள மொத்த சந்தோஷமும் பிரைட்டனுக்குச் செல்வதில் கிடைக்கும் என்று லிடியா கற்பனையில் நம்புகிறாள்.”
சமர்ப்பணம் செய்யப்பட செயலில் தெய்வீகச் சந்தோஷம் அனைத்தும் கிடைக்கும்.
பிரச்சினையைத் தீர்க்க, வாயால் கூறப்படும் சமர்ப்பணம் அல்ல இது.
மனம், உணர்ச்சிகள், உணர்வுகள் என்ற நிலைகளிலுள்ள சமர்ப்பணத்தைக் கருதுவது சுவையுள்ளதாக இருக்கும்.
மனத்தால் செய்யப்படும் சமர்ப்பணத்திற்கு மட்டுமே வார்த்தைகள் வேண்டும்.
மற்ற நிலைகளுக்குரிய சமர்ப்பணத்தை கருதினால் ஒருவர் சூட்சும வாழ்க்கைக்குள் நுழைய வேண்டும், அகப் பார்வையை பயன்படுத்த வேண்டும், உள்ளுணர்வைத் தொட வேண்டும்.
திறந்த மனம், மனத்தின் புதிய பார்வை, விழிப்புள்ள மனம் இவைகள் தினந்தோறும் பயன்படுத்தப்படும் கருத்துகளாகும்.
நாம் தீவிரமாக இருக்கும்பொழுது, விழிப்பாக இருக்கிறோம், புதிய பார்வையுடன் இருக்கிறோம், திறந்த மனத்தை அனுபவிக்கிறோம்.
வழக்கமாக உள்ள நம்முடைய மனத்தின் செயல்பாடு மனத்தின் தீவிரத்திலிருந்து மிகவும் வித்தியாசப்படுவதால், தடைபடாத ஆரம்ப மனத்திடமிருந்து மனத்தின் தீவிரம் வெகு தொலைவில் உள்ளது, முழுமையான சமர்ப்பணத்திற்கு தயாராக உள்ளது.
தொண்டர்களின் தலைவனை கட்சிக்குத் தலைமை தாங்கும்படி கேட்கப்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. அவனது நேர்மையையும், திறமையையும் தெரிந்து கொண்டு பணக்கார மனிதன் அவனிடம் வந்து பேசுவான், காதலிக்கும் பெண்ணும் அவனது அதே பாஷையைப் பேசுவாள். மனிதன் தன்னை அறியாமலேயே மனத்தின் ஆரம்ப ஆழத்துக்குச் செல்வான். அதே விழிப்புணர்ச்சியை வாழ்க்கையில் மிகவும் அச்சுறுத்தும் பயங்கள் ஒரு வினாடிக்கு அளிக்கும். தீவிர அக்கறையுள்ள மனிதனால் அவனுடைய அபிப்பிராயத்தையும் தாண்டி பார்க்க முடியும். அவன் முயற்சி செய்தால் ஒரு அபிப்பிராயத்தை பிரித்தெடுத்து மனத்தின் சுதந்திரத்தை அவனால் உணர முடியும். **மனத்தின் பழக்கங்கள் வலுவாக படிந்திருக்கும். நமது மனம் அனுமதித்து உருவகப்படுத்திய கருத்துகளே எண்ணங்களாகும். முன் விருப்பத்தை மிகவும் கஷ்டப்பட்டு விட்டுவிடலாம். அமைப்பு நாம் ஏற்படுத்துவது. அவற்றை கலைக்க முடியும்.** இது போன்ற செயலை நாம் முழுமையாகப் பயின்றால் புதுமையான மனத்தின் காட்சியை அது நமக்கு அளிக்கும். அந்த புதுமையில் நமக்கு சகோதரனை அழைப்பதற்கு தடுக்க முடியாத உந்துதல் ஏற்படும், முக்கியமான விஷயத்தை கருத்தில் எடுத்துக் கொள்ளத் தோன்றும், ஏதவாது ஒன்றை செய்வதற்கு தடுக்கும். இந்தச் சலனங்கள் எல்லாம் நடத்தை, எச்சரிக்கை, எண்ணம் இவற்றைத் தாண்டி உள்ளன.
மௌனத்தால் மட்டுமே அதனை அடையலாம். நம்முடைய மனத்தின் உணர்வுகள் அங்கு ஊறியிருக்கும், நமது குடும்பத்தின் பண்புகள், கற்பின் தூய்மை, நாட்டுப் பற்று, தூய்மையின் புனிதத்தன்மை இவையெல்லாமே உயர்ந்தவை, ஆனால் இவை யாவும் மனத்தின் உணர்வுகள் போல் தடைகள்தான். **சமர்ப்பணம் இங்கு உடனடிப் பலன்களைத் தரும். அவ்வாறு தராவிட்டால், முழு விஷயமும் சமர்ப்பணத்தின் பலனை பெற்றிருக்காது என்றாகும். ஞாபகம் மறைவது, மௌனம் அதன் இடத்தை எடுத்துக் கொள்வது, சக்தி உடலுக்குள் நுழைவது, உடல் சிலிர்ப்பது இவையெல்லாம் சமர்ப்பணத்தின் சரியான அளவைக் குறிக்கும் அடையாளங்கள். அங்கு சென்றடைவது முழு முயற்சி ஆகும். அங்கு நிலைத்திருப்பது மனத்தின் யோகம். எண்ணங்கள், உணர்ச்சிகள், உணர்வுகள் மற்றும் உடல் உணர்வுகளை சமர்ப்பணம் உள்ளடக்கியிருந்தால், நாம் யோகத்தில் தகுதி பெற்றவர்கள் ஆவோம்.** நாம் எதற்காக சமர்ப்பணத்தை ஆரம்பித்தோம் என்பதை மறந்து விடுவது, அதற்குச் சரியான அறிகுறி ஆகும்.
மேலும் முக்கியமான கேள்வி எழுகிறது. பல மாதங்களுக்கோ அல்லது வருடங்களுக்கோ ஒருவர் காத்திருந்தாலும்,எந்த வாய்ப்பும் வருவதில்லை. அவனுக்கு வேறு வழிதான் என்ன? பல காரணங்களினால் இவ்வாறு நடக்கிறது. முக்கிய காரணம், சமர்ப்பணத்திற்குத் தேவையான மனஒரு நிலைப்படுதல் போதுமானதாக இல்லை. **அகத்தின் ஜீவனை அடைந்து சாட்சி புருஷனைப் பார்ப்பதற்கு தேவைப்படுவதை விட அதிகமாகச் சமர்ப்பணத்திற்கு ஒருமுகப்படுதல் தேவைப்படுகிறது. சமர்ப்பணத்திற்கு தேவைப்படும் ஒருமுகப்படுதலின் தீவிரம், ஒருவரை மேற்பரப்பிலிருந்து உள் மனம் வழியாக அடி மனத்திற்கு அழைத்துச் செல்லும்.**
போதுமான மன ஒருநிலைப்படுதல் ஒரு சமர்ப்பணத்திற்கு இல்லாவிடில், அது தடுமாறும், தொடர முடியாது. எண்ணத்தில் கவனம் செலுத்தினால் ஞான யோகம் சித்திக்கும். மனத்தை மட்டுமல்லாது அகந்தை, காலம் இவற்றையும் தாண்டி அது வந்திருக்க வேண்டும். அன்னையிடம் வந்தவருக்கு அவரிடம் சரணடையும் பொழுது அவருடைய உதவியும் கிடைக்கிறது. ஒருமுகப்படுவதில், அகந்தையுள்ள முயற்சியான தன்னுடைய

திறமையை நம்பாமல் இருப்பது, அகந்தையை வலுப்படுத்தும் சிறிய தவற்றைகூட எழுப்பாது. **ஏமாற்றும் தன்மையுடைய அது உண்மைக்கு வழி விடும்.**

அகந்தை உண்மையை ஏமாற்றாது. வாய்ப்பு, ஏற்புத் தன்மை, உண்மை, இவை எல்லாம் குறிப்பாக அறிவிக்கும் சொற்கள் ஆகும். சமர்ப்பணம் பலன் தராமல் இருப்பதை ஒருவர் பார்க்கும்பொழுது உதவியின்றி சமர்ப்பணம் செய்ய முடியாது என்பதை அவர் உணர வேண்டும். அகந்தை எனும் பொறிக்குள் மாட்டிக் கொண்டு விட்டதை அவர் உணர வேண்டும். முழுமையான உண்மையான பிரார்த்தனை, தடைகளைத் தாண்டிவர அவருக்கு உதவும்.

அகந்தையான முயற்சிதான் முதல் தடை, தோல்வியைத் தரவல்லது. ஆழ்மனம் உண்மை இல்லாமல் இருப்பதை இது உணர்த்துகிறது. அது போன்ற மனிதனுக்கு உதவ முடியாது. அவன் உணரும்வரை காத்திருக்க வேண்டும். லிடியா பிரைட்டனுக்குப் போகாமல் தடுக்கும்படி நடந்துகொள்ள, திருபென்னட்டை மாற்ற முடியாது. நாம் ஓடிப்போகும் நிகழ்வுக்காக காத்திருக்க வேண்டும். யோகம் அனைவருக்கும் உரியதல்ல. தியானம் செய்வதினாலும், புத்தகம் படிப்பதாலும், எளிமையான அன்பர்கள் தாங்கள் யோகம் செய்வதாக நினைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் தெளிவு பெற வேண்டும்.

சிலர் உணர்வையும், மனத்தையும் சைத்திய புருஷன் என்று தவறாக நினைத்துக்கொண்டு வீணாக முயற்சி செய்கின்றனர். 140 அறிகுறிகளை நான், யோகம் செய்ய தகுதிகள் என பட்டியலாக அளித்துள்ளேன்.(உ-ம்). தானாகவே தியானம் நம்முள் இறங்குவது, மௌனம் நம்மை நாடுவது, அன்னையின் சூட்சும தரிசனம் மற்றும் பல. இவர்களுக்கு ஆன்மீகத்தில் சாத்தியங்கள் உண்டு. **யோகம் ஒன்றே குறிக்கோள் என இருப்பவர்களுக்கே யோகம் உரித்தானது.**

இதற்கு குறைவாக உள்ள எதுவுமே ஆரம்பமாக இருக்க முடியாது. பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவோ அல்லது வாய்ப்பினைப் பெறுவதற்காகவோ பிரார்த்தனை செய்பவன் அல்ல அவன். உள்ளும், புறமும் பிரம்மம் இருப்பதை உணரும் ஆழ்மனத்தின் விழிப்பாகும் அது. தீவிரமான முயற்சிக்கு முப்பது வருடங்களில் பலன் கிடைத்தால் மிகவும் அதிர்ஷ்டம் என்று அன்னை கூறுகிறார். அன்னையின் சூழலில் முழுமையான நம்பிக்கைக்கும் தீவிர முயற்சிக்கும் மூன்றே மாதங்களில் வாய்ப்பு கிடைக்கும் என்று அன்னை கூறுகிறார். இதயத் துடிப்பு ஒவ்வொன்றினையும் சமர்ப்பணம் செய்வதே யோக ஒருமுகப்படுத்தலாகும். **இவ்வாறு ஆழ்மனம், மேல்மனமாகிறது.** இதயத் துடிப்பு உடலின் செயல். அதற்கு முன் உணர்வின் வாழ்வு உள்ளது. இதற்கு முன்னால் வருவது மனத்தின் வாழ்வு. **எண்ணத்தின் வாழ்வான மனத்தின் வாழ்வு உடலுக்குரியது.** மனத்தின் உடல் அது. இதற்கு முன்னால் இருக்கும் இரண்டு நிலைகள் மனத்தில் உள்ள உயிர் மற்றும் மனத்தில் இருக்கும் மனத்தின் செயல்பாடுகள்.

ஓடும் எண்ணங்கள் மனத்தில் நின்றால் ஞாபகமும், சிந்தனையும் சுறுசுறுப்பாக இருக்கும். **நாம் மேல் மனத்தில் இருக்கும்வரை ஞாபகம் இருக்கும். அடி மனதிற்குச் செல்லும்பொழுது ஞாபகமும் மறைகிறது. சிந்திப்பது ஒரு திறனாகும். அது ஒரு பழக்கமாகவும் இருக்கலாம். எண்ணம் முக்கியம் எனும் நம்பிக்கை இருக்கும்வரை நம்மால் அதை வெல்ல முடியாது.** சிந்தனையைவிட சிந்தனையற்று இருப்பது மிகவும் சக்தி வாய்ந்தது என்பதை அன்பராகிய நாம் பார்த்திருக்கிறோம். **அது நம்மை மௌனத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும், மௌனத்தின் மதிப்பினை உணர வேண்டும். அதுவரை சிந்தனைக்குரிய திறன் சுறுசுறுப்பாக இருக்கும்.** அத்திறனின் ஞாபகத்தைதான் பகவான் எச்சரிக்கை என்கிறார். இதனுடைய வெற்றிக்கு முன் எழுவது, மனத்தில் உயிர் மற்றும் உடலின் வெற்றி. மனம், உயிர், உடல் ஆகிய ஏதாவது ஒரு நிலையில் எண்ணம் உருவாவதற்கு முன், அது ஆசையாகக் கிளம்பி பல உந்துதல்களாகப் பிரிகிறது. சரியான திசையில் செல்லும் சமர்ப்பணம் மன உந்துதல்களின் சமர்ப்பணமாக வந்து சேருகிறது. அது காற்றை கையில் பிடிப்பது போலாகும். பொதுவான மௌனம் அவற்றை அமைதிப்படுத்தும். **இப்பொழுது நாம் மன உந்துதல்களை எதிர்கொண்டாக வேண்டும். அதற்குப் பின்னால் சென்று அதை சமர்ப்பணம் செய்வது, மௌனத்தின் முக்கியமான ஆரம்ப யுத்தத்தை வெல்வது போலாகும். இதனை, மனத்திலுள்ள உணர்வின் உந்துதலை வெற்றிகொள்வது பின்தொடர வேண்டும். இறுதியாக நாம் உடலின் ஜட உந்துதலை மனத்தில் எதிர் கொள்கிறோம்.** அந்த உந்துதலின் பின்னால் சென்று, அதனை சமர்ப்பணம் செய்வது மௌனத்தை நிரந்தரமாகக் கொண்டு வரும் மிகவும் கடினமான வேலை ஆகும். பலதரப்பட்ட செயல்களான மனத்தின் இச் செயல்கள் அதனுடனேயே தொடர்புகொண்டிருக்கும் உயிர், மனத்துடனும் தொடர்பு கொண்டிருக்கும். மனத்திலேயே இவை ஜீவியத்தின் நிலையிலும் பொருளின் நிலையிலும் இருக்கும். **பொருளின் நிலையிலிருக்கும் எண்ணம் சக்தியாகும். அந்த நிலையில் இருக்கும் மௌனம் ஜடத்தை அசைக்கும்.** ஒருவர் அவருடைய எதிர்பார்ப்பைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தால், இந்த எல்லா நிலைகளிலும் அது இருப்பதைப் பார்ப்பார். ஆழ்மனம், மேல்மனமாக மாற இந்த எல்லா நிலைகளும் உயிர், ஜட நிலைகளில் மீண்டும் தொடர வேண்டும். உடலின் செயலான இதயத் துடிப்பை சமர்ப்பணம் செய்வது இப்பொழுது ஆழ்மனத்தின் முழு கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுகிறது. அதிகமாகப் பொறுமை தேவைப்படும் நீண்ட முயற்சி அது. மனித அவசரத்தில் துரிதமாக செயல்பட முடியாது. வெள்ளத்தின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாதது போல், ஒருவர் அவருடைய உந்துதலை கட்டுப்படுத்தவது தன்னுடைய யத்தனத்தில் இல்லை என்பதைக் காண்பார்.

சாதாரணமாக அதை கையாள முடியாது, இருப்பினும் மனிதன் அணையை கட்டி, அந்த நீரை மற்ற உபயோகத்திற்கு பயன்படுத்திக்கொள்கிறான் என்பது உண்மை.

இதே போன்ற மனரீதியான முயற்சி உந்துதலின் சமர்ப்பணத்திற்கு தேவை, இதை விட குறைவான முயற்சி போதாது.
அது அகந்தையின் சக்தி அல்லது உந்துதல். அகந்தை தானாகவே சரணடையாது.
அது ஆன்மாவின் உறுதி, சைத்திய புருஷனின் உறுதி, அகந்தையை சரண் அடையச் செய்யும்.
விருப்புறுதி அதன் அறிவின் அடிப்படையில் செயல்படும்.
மனத்தின் உறுதி தீர்ந்த பின் ஆன்மாவின் உறுதி மேலேழும்.
அது போன்ற விருப்புறுதி, பொருளில் உள்ள உறுதியின் ஈடுபாடு ஆகும்.
கருத்தை உருவாக்குவது, தெளிவு, எண்ணங்களை முறைப்படுத்துதல், நம்பிக்கை, திட நம்பிக்கை, தீர்மானம், உறுதி, பொறுப்பு இவை யாவும் அது முதிர்ச்சி பெறும் வழிகளாகும்.
மனிதனால் இந்த யோகத்தை செய்ய முடியாது. யோகம் செய்வது இறைவனே. மனிதனின் பங்கு சரணாகதி மட்டுமே என்பது முதலில் புரிந்துகொள்ள வேண்டிய கருத்தாகும்.
மனம் தான் பார்க்கும் கருத்தை புரிந்துகொள்ளும்.
புரிந்துகொள்ளும் நிலையில்கூட ஒரு தெளிவு அவசியமாகிறது.
தெளிவு வலிமை தருகிறது.
அதன் அடிப்படையில் இருக்கும் நம்பிக்கையின் மீது உறுதி செயல்படும் முன், தெளிவு பெற்ற கருத்து, ஒருவரது குணத்தின் அமைப்பின் மூலம், சக்தியாக முறைப்படுத்தப்பட வேண்டும்.
நம்பிக்கை அனுபவத்தினால் திட நம்பிக்கையாக முதிர்ச்சி அடைகிறது.
அதன் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவு ஜீவியத்தில் சக்திவாய்ந்தது.
முடிவு பொருளைச் சென்றடையும்பொழுது உறுதியாகிறது.
உறுதியை முழு மனமும் ஏற்றுக்கொள்வது பொறுப்பாகி விடுகிறது.
சமர்ப்பணத்தை முழு ஈடுபாட்டுடன் செய்யும்பொழுது அது சரணாகதியாக முதிர்ச்சி அடைகிறது.
சைத்திய புருஷன் அமைதியாக சுதந்திரமாக வெளிவருவதே சமர்ப்பணத்தின் உணர்வாகும்.
இவை எல்லாமும் மனித முயற்சியில் செய்ய முடியும், முயற்சியைக் கைவிடுவதன் மூலம் மேலும் சிறப்பாகச் செய்ய முடியும்.
டார்சி திருமண வேண்டுகோள் விடுத்ததை எலிசபெத் மறந்து விடுவதும், பகவான் இவ்வுலகை விட்டுச் செல்ல வேண்டும் என்பதை அன்னை மறப்பதும், உண்மை விழிப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்பொழுது நாம் அகத்துள் பார்க்கக் கூடிய நிகழ்வுகளாகும்.
ஏற்புத் திறனுக்கு ஒரு வாயில் உண்மையாகும்.
நாம் எதற்கு உண்மையாக இருக்கிறோமோ அதற்குச் சரணடைகிறோம்.

101. "She saw with the creative eye of fancy officers, herself the object of attention, herself tenderly flirting with six of them".

All great people are creative at their own level.
Lydia is poetic, creative, imagines possibilities that could be made actualities by the strength of her personality.
It is pure physical energy released in infinite abundance lacking any direction or organization.
An aspirant for the Chief Minister's post while alone in that office was concentrating his gaze on the chair of Chief Minister for half an hour till his friends who missed him came around and collected him. He aspired, his aspiration was focused.
Lydia aspired, her aspiration was not focused.
On receiving the invitation she flew around the house.
She was irresistibly speaking dropping Wickham often.
Irresistible speech is that of energy that cannot be controlled.
She was not looking for marriage or a husband; she was seeking pure enjoyment for enjoyment's sake.
Her mother was fully in tune with this vibration and wanted the daughter to enjoy.
From this physical resource one has to travel through the vital to mental personality which Elizabeth had done.
The mental effort is like that of a breeder of plants who grows his plants for experiment.
The physical energy is that of a goat that eats those plants for food.
Surely the mental height achieved by Bennet must have been great to have produced Elizabeth and that too out of Mrs. Bennet, a bundle of physical energy which produced Lydia.
No wonder even in Elizabeth there was an abundant residue of her mother's falsehood to readily fall a victim to Wickham in spite of her great mental endowment.
Jane Austen allots Lydia six officers for tender flirting!
Unless and until we find the greatness of Lydia's personality and its serious significance to the story, we will fall short of our goal.
To that we must add the heroism of Wickham.
"இள வயது அதிகாரிகளையும், எல்லோருடைய கவனத்தை ஈர்க்கும் பொருளாக தான் இருப்பதையும், அவர்களில் ஆறு பேருடன் தான் பேசிக் கொஞ்சுவதாகவும் கற்பனை செய்து பார்த்தாள்."

எல்லா சிறந்த மனிதர்களும் அவரவர்களுடைய நிலையில் படைக்கும் திறன் உடையவர்கள்தான்.
கவிதை நயமும், படைக்கும் திறனும் பெற்ற லிடியா, அவளுடைய ஆளுமையின் வலிமையால் உண்மையாக்கக் கூடிய எல்லா சாத்தியங்களையும் கற்பனை செய்கிறாள்.
எந்தத் திசையும் இன்றி, சரியாக முறைப்படுத்தப்படாது அளவில்லாது அபரிமிதமாக செலுத்தப்பட்ட ஜட சக்தி அது.
முதல் மந்திரி ஆக வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்த ஒருவர், தனியாக அந்த அலுவலகத்தில் இருந்த பொழுது, முதல் மந்திரியின் நாற்காலியை, அவரைத் தவற விட்ட நண்பர்கள் அங்கு வந்து அவரை அழைத்துச் செல்லும்வரை, அரை மணி நேரமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் ஆர்வத்துடன் இருந்தார், அவருடைய ஆர்வம் ஒரு விஷயத்தை நோக்கிக் குவிந்திருந்தது.
லிடியாவுக்கும் ஆர்வம் இருந்தது, அவளுடைய ஆர்வத்தில் கவனம் குவிந்திருக்கவில்லை.
அழைப்பு வந்தவுடன் அவள் வீடு முழுவதும் பறந்து கொண்டிருந்தாள்.
தடை போட முடியாத அளவிற்கு பேசிக்கொண்டிருந்தாள், அடிக்கடி விக்காமின் பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தாள்.
கட்டுப்படுத்த முடியாத சக்தியே தடுக்க முடியாத பேச்சாக எழும்.
அவள் நாடுவது திருமணமோ அல்லது கணவனோ அல்ல, சந்தோஷத்தை சந்தோஷத்திற்காகவே நாடினாள்.
இந்த அதிர்வுடன் அவளது தாயாரும் இணைந்து இருந்தாள், மகள் சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும் என்று விரும்பினாள்.
இந்த ஜடத்தின் திறமைகளைத் தாண்டி ஒருவர், எலிசபெத் செய்தது போல், உணர்விலிருந்து மனதின் ஆளுமைக்குச் செல்ல வேண்டும்.
மனத்தின் முயற்சி, பரிசோதனைக்காக செடிகளை வளர்ப்பவரது முயற்சி போல் இருக்கிறது.
ஜட சக்தி, ஆடு உணவுக்காக அந்த செடிகளை உண்பது போலிருக்கும்.
ஜடசக்தியின் உருவகமாக இருந்து லிடியாவைப் பெற்றெடுத்த திருமதி பென்னட்டின் மூலம், எலிசபெத் மகளாக பிறப்பதற்கு, திரு பென்னட் மனத்தின் உச்சத்தை அடைந்திருக்க வேண்டும்
எலிசபெத் உயர்ந்த மனத்தின் திறன் பெற்றிருந்த போதும், தாயாரின் பொய்மை அவளிடம் அதிக அளவில் படிந்திருந்ததால், சுலபமாக விக்காமுக்கு பலியானாள்.
மென்மையான காதல் வேட்கைகளில் ஈடுபட ஜேன் ஆஸ்டின் லிடியாவிற்கு ஆறு அதிகாரிகளை அளிக்கிறாள்.
லிடியாவின் ஆளுமையின் உயர்வையும், இக்கதைக்கு அதனுடைய முக்கியமான முக்கியத்துவத்தையும், நாம் கண்டு பிடிக்கும்வரை, நமது இலக்கை நாம் அடைய முடியாது.
அவற்றுடன் நாம் விக்காமின் வீரத்தையும் சேர்க்க வேண்டும்

Had she known that her sister sought to tear her from such prospects and such realities as these, what would have been her sensations? They could have been understood only by her mother, who might have felt nearly the same. Lydia's going to Brighton was all that consoled her for the melancholy conviction of her husband's never intending to go there himself.
இப்படிப்பட்ட நல்ல வாய்ப்புகளிலிருந்தும் இதுபோன்ற உண்மைகளிலிருந்தும் தன்னுடைய சகோதரி தடுத்து நிறுத்த முயற்சி செய்கிறாள் என்று தெரிய வந்தால் லிடியாவின் மனவெழுச்சி எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்? இதே போன்ற உணர்வுகளையுடைய தாயாரால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.
தன்னுடைய கணவருக்கு பிரைட்டனுக்குச் செல்லும் எண்ணமே இல்லை என்பது தாயாருக்கு மிக வருத்தத்தை அளித்தது. அந்த வருத்தத்திற்கு லிடியா அங்கு செல்வது ஒரு ஆறுதலை அளித்தது.

102. "Had Lydia known Elizabeth had tried to prevent her going to Brighton, what would be her sensation".
Habitual offender psychologically matures into a rightful owner.
This is an age old sensation of humankind.
Children pluck away your toy and declare it cannot be sold for less than Rs. 5/-.
It is a crude, silly joke but it graphically expresses the thought of humanity.
The Arab story of the camel's head let into the tent illustrates it. The camel feels a right to eject the owner.
Physicality functions by strength.
That was the rationale of the duel.
The Mind of the physical Man thinks that if he is right he must win.
Thought certainly originates in the body.
Today the world believes Man is mental.
Mind is the seat of thoughts.
The thoughts that govern the life of Europe were all born in Greece 2500 years ago.
Mankind follows those thoughts; in following Man thinks he is Mental.
Only Hamlet saw Mind was born in the common Man.

One cannot count more than twelve or thirteen governing ideas, if he is looking for original ideas.
The entire thinking of European life is an effort of the Mind of the common Man rising to the level of Greek thought.
In the last two hundred years there is no evidence – outside Sri Aurobindo – of Man trying to understand his social existence. Even the effort too is not there.
The sole effort of Mind in economics in society is that of Marx.
Science and economics are part of life, not life as a whole.
The Rishis had not theoretically applied their Minds to life. They shunned it. Their knowledge of life is shining sparks, not a flame. America that lived so successfully for four hundred years does not even try to apply her Mind to their life, nor Europe.
Life is physical vital, not yet Mental in its own sense, a life guided by thought.
"தான் பிரைட்டனுக்குச் செல்வதை எலிசபெத் தடுக்க முயற்சி செய்தாள் என்று லிடியாவிற்குத் தெரிந்திருந்தால் அவளுடைய மனவெழுச்சி எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்."
வழக்கமாக குற்றம்புரிபவர், உரிமையுள்ள சொந்தக்காரராக மனரீதியாக முதிர்ச்சி அடைகிறார்.
இது மனித குலத்தின் பழைமையான உணர்வாகும்.
நம்முடைய பொம்மையை குழந்தைகள் பறித்துக் கொண்டு, ஐந்து ரூபாய்க்கும் கீழே அதனை விற்க முடியாது என்று கூறும்.
இது நாசூக்கற்ற அற்பமான நகைச்சுவையாகும், ஆனால் மனித குலத்தின் எண்ணத்தை தெளிவாக வெளிப்படுத்துகிறது.
ஒட்டகம் ஒரு கூடாரத்திற்குள் தலையை நுழைத்த அரபுக் கதையை இது சித்தரிக்கிறது. அதன் உரிமையாளரை வெளியே தள்ளும் உரிமையை ஒட்டகம் எடுத்துக்கொள்கிறது.
ஜடத்தன்மை பலத்தின் மூலம் செயல்படும்.
இருவர் நேருக்கு நேர் சண்டையிடும் பொழுதுள்ள கோட்பாடு அது.
ஜட மனிதனின் மனம், தான் சரி என்றால், தான் ஜெயிக்க வேண்டும் என்று நினைக்கும்.
எண்ணங்களின் பிறப்பிடம் உடல்.
மனிதன் மனத்தாலானவன் என்று உலகம் இன்று நம்புகிறது.
எண்ணங்கள் மனத்தில் வீற்றிருக்கின்றன.
ஐரோப்பாவின் வாழ்வை ஆட்சி செய்யும் எண்ணங்கள் 2500 வருடங்களுக்கு முன் கிரீசில் பிறந்தனவாகும்.
மனிதகுலம் அந்த எண்ணங்களை பின்பற்றுகிறது; பின்பற்றும் பொழுது மனிதன், தான் மனத்தாலானவன் என நினைக்கிறான்.
சாதாரண மனிதனிடம்தான் மனம் பிறந்தது என்பதை ஹாம்லெட் பார்த்தான்.
சுயமாக எழும் எண்ணங்களை ஒருவர் தேடும் பொழுது, பன்னிரெண்டு அல்லது பதிமூன்றுக்கும் மேல், கட்டுப்படுத்தும் ஆற்றலுடைய எண்ணங்களை எண்ண முடியாது.
கிரேக்க எண்ணங்களின் நிலைக்கு உயரும் சாதாரண மனிதனின் மனத்தின் முயற்சிதான், ஐரோப்பிய வாழ்வின் முழு சிந்தனை ஆகும்.
கடந்த இருநூறு வருடங்களாக, ஸ்ரீ அரவிந்தரைத் தாண்டி மனிதன் அவனது சமூக வாழ்வைப் பற்றி புரிந்து கொள்ள முயன்றதற்கு எந்த ஆதாரமும் இல்லை. பிரயத்தனம்கூட செய்யவில்லை.
சமூகத்தில், பொருளாதாரத்தில் மனிதனின் ஒரே முயற்சி மார்க்ஸ்-ன் முயற்சிதான்.
வாழ்க்கையின் பகுதிதான் விஞ்ஞானமும், பொருளாதாரமும், அதுவே முழு வாழ்க்கை அல்ல.
தத்துவரீதியாக ரிஷிகள் தங்களுடைய மனத்தை வாழ்க்கைக்கு உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை. அதை அவர்கள் தவிர்த்தனர். வாழ்க்கையைப் பற்றிய அவர்களுடைய அறிவு பொறி போல் இருந்ததே தவிர நெருப்புக் சுடர் போல் இல்லை. நானூறு வருடங்களாக வெற்றிகரமாக வாழ்ந்து வரும் அமெரிக்கா அதனுடைய மனத்தை அவர்களுடைய வாழ்வுக்கு பயன்படுத்திக்கொள்ள முயற்சி எடுக்கவில்லை, ஐரோப்பாவும் எடுக்கவில்லை.
வாழ்வு ஜட உணர்வுடையதாக இருக்கிறது, அதனுடைய அர்த்தத்தில் மனமாககூட இல்லை, எண்ணங்கள் வழி நடத்தும் வாழ்வாக உள்ளது.

103. "They could have been understood only by her mother who felt like her".
People consider institutions are there only to serve them.
Even the ocean of energy Man wants for his petty personal use.
After shedding the egoistic view, Man feels like this.
To get rid of ego is a great yogic siddhi.
Mrs. Bennet feels strongly to go to Brighton oblivious of the consequences.
To her family is not a vehicle of culture.
To her there is no danger around, only enjoyment.
She is blind, boorish, and full of initiative.
Thieves, who came to Ramanashram finding no valuables, beat Maharishi for not having them.
Mrs. Bennet is like these thieves.

It is all right for her to live among thieves.
She is the wife of a gentleman who did not control her. His life was one of tapas.
One Man invited as a manager of a newly formed company asked for the company after five years.
Is it possible for us to enter into his scheme of things and take his point of view, as **his point of view does matter for the whole**.
The country was then poised and many things – capital, technology, expertise, information, free communication, etc. – were offered almost free. The greed in him responds to that. Politicians feel the freedom to loot the treasury, bankers do so with public deposits. More and more things become cheaper and cheaper. Some come free. **Society's resources are becoming plentiful**. Man senses that. Wickham was aware of the abolition of the aristocratic privileges. His scandal about Darcy was his way of announcing what came to pass two hundred years later. Lydia with a foresight of the 20th century became a girl of our times. She was a futurist. **The future horizon she and Wickham opened brought to two sisters social benevolence**. We see that benevolence as upward social movement.
"அவளைப் போல் நினைத்த அவளது தாயாரால் மட்டும்தான் அவர்களைப் புரிந்து கொண்டிருக்க முடியும்."
நிறுவனங்கள் தங்களுக்குச் சேவை செய்வதற்குத்தான் இருப்பதாக மக்கள் கருதுகிறார்கள்.
கடல் போன்ற சக்தியை மனிதன் தன்னுடைய சிறிய உபயோகங்களுக்காகவே நாடுகிறான்.
அகந்தையான கண்ணோட்டத்தை விட்டபின் மனிதன் இவ்வாறு நினைக்கிறான்.
அகந்தையை விட்டொழிப்பது மிகப் பெரிய யோக சித்தியாகும்.
பின்விளைவுகளைப் பற்றி அறியாமல் திருமதி பென்னட் பிரைட்டனுக்குப் போவதில் தீவிரமாக இருக்கிறாள்.
அவளைப் பொறுத்தவரை குடும்பம் கலாச்சாரத்தை ஏந்தும் திறன் படைத்ததல்ல.
அவளுக்கு சுற்றிலும் ஆபத்து எதுவும் இல்லை, சந்தோஷம் மட்டும்தான் உள்ளது.
அவள் கண்மூடித்தனமாகவும், நாகரிகமற்றும், தன்முனைப்பு நிறைந்தவளாகவும் இருக்கிறாள்.
ரமணாஸ்ரமத்திற்கு வந்த திருடர்கள், அங்கு விலை உயர்ந்த பொருட்கள் ஒன்றும் இல்லாததைக் கண்டு, அதற்காக ரமணரை அடித்தனர்.
திருமதி பென்னட் அந்தத் திருடர்கள் போல் இருக்கிறாள்.
திருடர்கள் மத்தியில் வாழ்வது, அவளுக்குத் தவறாகத் தெரியவில்லை.
அவளைக் கட்டுப்படுத்தாத மனிதரின் மனைவி அவள், அவருடைய வாழ்க்கை ஒரு தவம்.
ஒரு புதிய நிறுவனத்திற்கு மானேஜராக இருப்பதற்காக அழைக்கப்பட்ட மனிதன், ஐந்து வருடங்களுக்குப் பிறகு அந்த நிறுவனத்தையே தனக்குக் கேட்கிறான்.
அவருடைய கண்ணோட்டம் முழுமைக்கும் பொருந்துவதால், அவரது வழியில் சென்று அவரது கண்ணோட்டத்தை கையாள நம்மால் முடியுமா.
தேசம் அப்பொழுது நல்லதொரு நிலையில் இருந்தது. முதல், தொழில் நுட்பம், திறமை, தகவல், செய்தித் தொடர்பு இவை அனைத்தும் ஏறக்குறைய இலவசமாக வழங்கப்பட்டன. அவனுடைய பேராசை அதற்கு மறுமொழி அளிக்கிறது. அரசு கஜானாவைக் கொள்ளை அடிக்கும் சுதந்திரத்தை அரசியல்வாதிகள் எடுத்துக் கொள்கின்றனர். மக்கள் வைப்புத் தொகையை வங்கிகள் அவ்வாறு செய்கின்றன. பல பொருட்களின் விலை மேலும் மேலும் குறைந்து வருகிறது. சில இலவசமாகவே கிடைக்கின்றது. **சமூகத்தின் வளங்கள் அதிகரித்து வருகின்றன.** மனிதன் அவற்றை அறிவான். பிரபுக்களின் சலுகைகள் ஒழிக்கப்பட்டது விக்காமிற்குத் தெரியும். டார்சியைப் பற்றி அவதூறை அவன் கிளப்பியது இருநூறு வருடங்களுக்குப் பிறகு வரவிருப்பதை அவன் அறிவிக்கும் முறை ஆகும்.
இருபதாம் நூற்றாண்டில் நடக்கவிருப்பதை முன் கூட்டியே அறியக் கூடிய லிடியா, தற்காலத்துப் பெண் போல் இருக்கிறாள். அவள் புதுமை விரும்பி. **எதிர்காலத் திறவுகோலாக இருந்த அவளும் விக்காமும், இரண்டு சகோதரிகளுக்கும் சமூக வளத்தை அளித்தனர்.** அவற்றை சமூக இயக்கத்தின் முன்னேற்றமாக நாம் காண்கிறோம்.

But they were entirely ignorant of what had passed; and their raptures continued, with little intermission, to the very day of Lydia's leaving home.
ஆனால் என்ன நடந்தது என்பதைப்பற்றி அவர்களுக்கு முழுவதுமாகத் தெரியாததால், லிடியா வீட்டைவிட்டு கிளம்பும் நாள்வரை அவர்களுடைய சந்தோஷமான ஆரவாரம் இடைவிடாது தொடர்ந்தது.

104. "They were entirely ignorant of what had passed".
Mind's vision is ignorance of everything except the one thing before it.
It holds up one and holds back all the other things.
That way the infinite can emerge out of the finite.
To make the potential capacities of Mr. Bennet actualities in the society at the highest possible level, Mrs. Bennet intensifies the other side. A Jane and Elizabeth were possible by his withdrawing into the library. A Bingley and Darcy could not be brought there by Mr. Bennet. He had no ambition as his values frowned on ambition. His indolence would maintain the status quo as he had no energy for aspiration. **She had tremendous ambition which became the aspiration of the entire village**. It is her intense aspiration that brought Bingley and Darcy to her. Having achieved

her ambition of bringing those youth there, she was unable to retire into inactivity. Her part was over. It came as a submissive Bingley and proud Darcy. Wickham came to make Elizabeth appreciate Darcy. Of course, he could work for his own appreciation. Elizabeth could never deserve Darcy without her overcoming her mother in her. Jane could never get Bingley on her own merits. As Elizabeth aspired in goodwill for Jane, Wickham aspired for Darcy in ill-will. **The developments in the story are the steps by which Elizabeth overcame her mother in her.** Elizabeth had to do it on her behalf as well as on Jane's behalf. A tail was added to it by way of Lydia. Elizabeth was to take on herself Lydia too on behalf of the family. The mother's ambition brought the opportunity. Her forcing Elizabeth to receive Collins took her to Hunsford. Life allows each person to act as he can so that ultimately its purpose will be served. Had not Wickham gone away with Lydia Mr. Bennet would not have stopped Mrs. Bennet's exuberances. Wickham's precipitation of the elopement made Darcy rise to such noble heights that enabled him to accept Elizabeth as the sister of Lydia and a daughter of Mrs. Bennet. A social view will reveal the story to us. Only an evolutionary view, a view that fully appreciates the role of everyone will reveal the higher intentions of the story.

"நடந்தவற்றைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது."

மனத்தின் பார்வைக்கு, அதற்கு எதிரில் உள்ளதைத் தவிர வேறு ஒன்றும் தெரிவதில்லை.

அது ஒன்றை மட்டும் முன்னிறுத்தி, மற்ற எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளுகிறது.

அந்த வழியில் அந்தத்திலிருந்து அனந்தம் எழலாம்.

திரு பென்னட்டின் சாத்தியமான திறன்களை உயர்ந்த நிலையில் உண்மையாக்க, திருமதி பென்னட் வேறொரு பக்கத்தை தீவிரமாக்கிக் கொண்டு வருகிறாள். அவர் நூலகத்தில் தஞ்சம் புகுந்ததன் மூலம் ஜேனும் எலிசபெத்தும் சாத்தியமாயினர். திரு பென்னட்டால் ஒரு பிங்கிலியையோ,ஒரு டார்சியையோ அங்கு கொண்டு வரமுடியவில்லை. அவருக்கு ஆர்வம் எதுவுமில்லை அதில் நாட்டமுமில்லை. அவருடைய சோம்பேறித்தனம் அவருடைய அந்தஸ்தை பேணிப் பாதுகாத்து வந்தது, ஆர்வத்திற்குரிய சக்தி அவரிடம் இல்லை. **அவளிடம் இருந்த பேரார்வம் மொத்த கிராமத்தின் ஆர்வமாக மாறியது.**

அவளுடைய தீவிரமான ஆர்வமே பிங்கிலியையும், டார்சியையும் அங்கு வரவழைத்தது. இளைஞர்களை அங்கு வரவழைத்ததோடு அவள் தனது வேலையை முடித்துக் கொள்ளவில்லை. அவளுடைய பங்கு முடிந்தது. பிங்கிலி பணியும் சுபாவம் கொண்டவனாகவும், டார்சி கர்வமானவனாகவும் வந்து சேர்ந்தனர். எலிசபெத், டார்சியை பாராட்டுவதற்காக விக்காம் வந்தான். தன்னையும் பாராட்ட வேண்டும் என்பதற்காகவும் அவன் உழைத்தான். எலிசபெத் அவளுக்குள் இருக்கும் தாயாரை வெற்றி கொள்ளாமல் டார்சியை அடைய முடியாது. ஜேன் அவளுடைய திறமையால் மட்டும் பிங்கிலியை அடையவே முடியாது.

ஜேனிடம் எலிசபெத்திற்கு நல்லெண்ணம் இருந்தது போல் டார்சியிடம் விக்காமிற்கு கெட்ட எண்ணம் இருந்தது. **இக்கதையின் நிகழ்வுகள், எலிசபெத் எவ்வாறு அவளுக்குள் இருந்த தாயாரை வெற்றி கொண்டாள் என்பதன் பல படிகள் ஆகும்.** எலிசபெத் தன் சார்பாகவும் ஜேனுடைய சார்பாகவும் அதைச் செய்தாக வேண்டும். இதில் லிடியாவும் சேர்க்கப்பட்டாள். குடும்பத்திற்காக அவள் லிடியாவையும் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். தாயாரின் பேரார்வம் வாய்ப்பைக் கொண்டு வந்தது. காலின்ஸை ஏற்றுக்கொள்ளும்படி எலிசபெத்தை வற்புறுத்துவது அவளை ஹன்ஸ்போர்டுக்கு அழைத்துச் சென்றது. இறுதியில் வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறும் அளவிற்கு வாழ்க்கை ஒவ்வொருவரையும் அவர்களால் இயன்ற அளவு செயல்பட அனுமதிக்கிறது.

விக்காம் லிடியாவுடன் ஓடிப்போகாமல் இருந்திருந்தால் திரு பென்னட்டால் திருமதி பென்னட்டின் பொங்கி வரும் ஆர்வத்தை தடுத்து நிறுத்தியிருக்க முடிந்திருக்காது. விக்காமுடைய இச்செயல் டார்சியை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றது. எலிசபெத்தை லிடியாவின் சகோதரியாகவும், திருமதி பென்னட்டின் மகளாகவும் ஏற்றுக்கொள்ள வைத்தது. சமூகப் பார்வை இக்கதையை நமக்கு வெளிப்படுத்தும். பரிணாமப் பார்வையில் எல்லோருடைய பங்கையும் பாராட்டும் பார்வை, கதையின் உயர்ந்த நோக்கங்களை வெளிப்படுத்தும்.

105."their raptures continued with little intermission to the very day of Lydia's leaving".

Everything in creation understood as it came will reveal its Marvel.

Mrs. Bennet is a Marvel. To see her otherwise is our ignorance.

Ignorance is so constituted to hide the play of knowledge, and perfected on the surface by ego, Mind, Time is, He says, greater than knowledge.

A greater character in a play is the creation of genius.

To act his part in the right spirit is to recreate in human existence the creation of genius in his own imagination.

That part can be that of a king or a non-entity, a beggar.

To act any of these parts requires the same genius.

The Divine casts itself into the part it assumes and lets itself flower as that part.

We call it the creative genius of the actor.

It is the divine creativity of genius in each speck of earth.

The actor lets the part blossom through him receiving it in his genius.

Human choice is to choose with the attitude that the divine creativity is made possible.

Not to prefer any human attitude is the essential qualification.
Devotion to the Divine is the human solicitude to invite the Divine to emerge in the human.
Initially the ego is to be surmounted.
Later the three modes of Self are to be given up and the will in it surrendered.
That enables the Psychic to emerge.
Man chooses so that he may survive, grow and progress.
Human choice becomes effective when Man makes the choice so that he – ego – may no longer be there.
Mr. Bennet's unwillingness to refuse permission to Lydia is egoistic.
Mrs. Bennet's delight is that of expansive ego.
Elizabeth's complaints to her father, her sense of resignation to his refusal are egoistic acquiescence.
Choice is between ego and soul.
Human choice chooses to become Divine.
"லிடியா கிளம்பிச் செல்லும் நாள்வரை, அவர்களது சந்தோஷமான ஆரவாரம் இடைவிடாது தொடர்ந்தது."
ஒவ்வொன்றையும் அவற்றின் நிலையிலேயே புரிந்துகொள்வது அவற்றின் அற்புதத்தை வெளிப்படுத்தும்.
திருமதி பென்னட் ஒரு அற்புதம். அவளை மாறாகப் பார்ப்பது நமது அறியாமையாகும்.
அறிவின் ஆட்டத்தை மறைப்பது போலுள்ளது அறியாமையின் அமைப்பு, மேலும் அகந்தையால் மேல் மனத்தில் சிறப்பாக அமைக்கப்படுகிறது. மனமும், காலமும் அறிவைவிட உயர்ந்தது என பகவான் கூறுகிறார்.
நாடகத்தில் உள்ள பெரிய பாத்திரம் மேதாவித்தனத்தின் படைப்பாகும்.
ஒருவன் அவனுடைய பங்கை சரியான உற்சாகத்துடன் செய்வது, அவனுடைய சுய கற்பனையில் மேதாவித்தனத்தின் படைப்பை மனித சமுதாயத்தில் மீண்டும் உருவாக்குவதுதான்.
அரசனாகவோ அல்லது வெறும் ஆளாகவோ அல்லது ஒரு பிச்சைக்காரனாகவோகூட அந்த பாகம் இருக்கலாம்.
இதில் எந்த ஒரு பாத்திரத்தில் நடிக்கவும் ஒரே மாதிரி மேதாவித்தனம்தான் தேவைப்படுகிறது.
இறைவன், தான் மேற்கொள்ளும் பங்கினை வகித்து அதில் மலர்வான்.
அதை ஒரு நடிகனின் படைக்கும் திறனின் மேதாவித்தனம் என நாம் அழைக்கிறோம்.
பூமியின் ஒவ்வொரு துளியிலும் இறைவனின் மேதாவித்தனத்தின் படைக்கும் திறன் அது.
நடிகன், அவனுடைய திறமையின் மூலம் அவனுடைய பாகத்தை சிறப்பாக மலரச் செய்வான்.
இறைவனின் படைக்கும் திறன் சாத்தியமாகியுள்ளது என்கிற மனோபாவத்தின் மூலம் மனித விருப்பம் செயல்படவேண்டும்.
எந்த ஒரு மனித மனப்பான்மையையும் தேர்ந்தெடுக்காமல் இருப்பதே முக்கியமான தகுதியாகும்.
மனிதன் இறைவனிடத்து கொள்ளும் பக்தியே அவனுள் இறைவனை எழச் செய்யும்.
அகந்தையை முதலில் வெற்றிகொள்ள வேண்டும்.
பிறகு சுயத்தின் மூன்று விதங்களை விட்டுவிட வேண்டும், அதிலுள்ள விருப்புறுதியை சரணடையச் செய்ய வேண்டும்.
அது சைத்திய புருஷனை எழச் செய்யும்.
உயிர்வாழ, வளர்ச்சி அடைய, முன்னேற, மனிதன் தேர்ந்தெடுக்கிறான்.
அகந்தை இல்லாமல் எடுக்கும் மனிதனின் விருப்பம் சிறப்பாகச் செயல்படும்.
லிடியாவிற்கு திரு பென்னட் அனுமதி அளிக்க மறுக்க விரும்பாதது அகந்தையினால்.
திருமதி பென்னட்டின் சந்தோஷம் விரிவடையும் அகந்தையாகும்.
எலிசபெத் அவளுடைய தந்தையிடம் குறை கூறுவது, அவர் தெரிவிக்கும் மறுப்பை அவள் ஏற்றுக்கொள்வது, அகந்தையான உடன்பாடாகும்.
அகந்தைக்கும் ஆன்மாவுக்கும் இடையேதான் தேர்ந்தெடுத்தல்.
மனித விருப்பம் இறைவனாவதற்கு விரும்புகிறது.

Elizabeth was now to see Mr. Wickham for the last time. Having been frequently in company with him since her return, agitation was pretty well over; the agitations of former partiality entirely so. She had even learnt to detect, in the very gentleness which had first delighted her, an affectation and a sameness to disgust and weary. In his present behaviour to herself, moreover, she had a fresh source of displeasure, for the inclination he soon testified of renewing those attentions which had marked the early part of their acquaintance could only serve, after what had since passed, to provoke her. She lost all concern for him in finding herself thus selected as the object of such idle and frivolous gallantry; and while she steadily repressed it, could not but feel the reproof contained in his believing, that, however long, and for whatever cause, his attentions had been withdrawn, her vanity would be gratified, and her preference secured at any time by their renewal.
எலிசபெத் இப்பொழுது கடைசி தடவையாக விக்காமை சந்திக்கப் போவதாக இருந்தது. அவள் திரும்பி வந்ததிலிருந்து அவனை அடிக்கடி சந்திக்க நேர்ந்ததால் அவள் மனதிலிருந்த சங்கடம் எல்லாம் தீர்ந்தது,

முன்பிருந்த விருப்பம் முற்றிலும் மறைந்து போனது. எந்த மென்மையான நடத்தை அவளுக்கு முன்பு சந்தோஷத்தை அளித்ததோ அதுவே இப்பொழுது போலியாகவும் மாறுபாடு இல்லாமலும் இருப்பதைக் கண்டுபிடிக்க முடிந்தது. அது அவளுக்குக் களைப்பையும் வெறுப்பையும் அளித்தது. தற்பொழுது அவன் அவளிடத்தில் நடந்து கொள்ளும்விதம் அவளுக்கு மனக்கசப்பை அளித்தது ஏனெனில் அவர்கள் முதன்முதலில் பழகிய பொழுது இருந்த உணர்வுகளை புதுப்பிக்க விரும்பினான் என்பது, நடந்து முடிந்த விஷயத்தினால், கோபத்தைதான் உண்டாக்கியது. ஆழமான காதல் எதுவும் இல்லாமல், பொழுது போக்கிற்காக அவன் தன்னை விரும்பினான் என்பதைப் புரிந்துகொண்ட எலிசபெத், அவன் மேலுள்ள எல்லா அக்கறையையும் இழந்தாள். ஏதாவது ஒரு காரணத்திற்காக, பல நாட்களாக தன்னிடம் செலுத்திய கவனத்தை திருப்பி வேறு ஒரு இடத்தில் செலுத்தியபின் பிறகு மீண்டும் தன்னிடமே வந்தாலும், தான் அதனை மறுபடியும் ஏற்றுக் கொண்டு மீண்டும் சந்தோஷமடைவோம் என்று அவன் நம்புகிறான் என்பது தெரிந்தது. அது அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

106. Agitation in the company of Wickham is still there after Darcy's letter.
டார்சியின் கடிதத்திற்குப் பிறகு விக்காமை சந்திக்கும்பொழுது, முதலிலிருந்த ஆசையான படபடப்பு இன்னமும் இருந்தது.
107. It is an enjoyment of low falsehood.
தாழ்ந்த பொய்மையின் சந்தோஷம் அது.
108. 'Idle frivolous gallantry' is now blatant and flat. Still her agitation is there a little. She could not bring herself to let him know that he was exposed to her fully. She maintains the old level of politeness. She does not seem in her behaviour displeased with him.
விளையாட்டுத்தனமாகச் செய்த அற்பமான வீரச் செயல் இப்பொழுது வெளிப்படையாகத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. இருப்பினும் அவளுக்கு சிறிதளவு சஞ்சலம் இன்னமும் உள்ளது. அவனைப் பற்றி தனக்கு எல்லாம் தெரிந்து விட்டது என அவனுக்குத் தெரியவருவதில் அவளுக்கு விருப்பம் இல்லை. முன் போலவே மரியாதையுடன் அவள் பழகுகிறாள். அவளுடைய நடத்தையில் அவனைப் பிடிக்காமல் போனதற்குரிய அறிகுறி எதுவும் இல்லை.
109. Affectation to sameness and disgust too do not subside the agitation.
ஒருவரைக் கண்டால் பிடிப்பது மற்றும் பிடிக்காமல் போவது போல் நடிப்பது சஞ்சலத்தைக் குறைப்பதில்லை.
110. His idle frivolous gallantry reveals itself now.
அவனுடைய விளையாட்டுத்தனமான அற்பமான வீரத்தனம் இப்பொழுது வெளிப்படுகிறது.
111. "Elizabeth now saw Wickham for the last time".
Liking of a person is never sufficiently neutralized by his disgusting parts.
One who has received his values in his sensitivity will feel like the heroine of 'wreck'.
Even the original flutterings had not fully subsided in her.
Wickham came to her as she could be approached through falsehood.
She could be approached through falsehood as Darcy was overlaid by mental falsehood of pride, etc.
She was not one who could be approached by the pure families of aristocracy.
Whether such families exist is a question.
Aristocracy rose to great heights of purity and culture but it was always built on cruelty, falsehood, roughness.
Royalty too was like that.
The great Rishis had not gotten rid of the evil foundations.
The Rishis aimed at security from evil, not transformation of evil.
The relationship of good and evil in daily life is an important topic.
The tongue is served by teeth but the tongue has learnt to use the services of teeth without being bitten by it.
Like electricity every great force serves when Man has mastered his relations with it.
There is no morality in it; there is functional skill.
Mother's formula of great rewards for small effort captures it.
Mr. Bennet's effort is one right decision overdue.
Elizabeth's one little effort is to call a spade a spade.
Charlotte's greatest contribution is patient silent attentive listening.
Jane's most commendable greatness is to disbelieve an intrigue.
Elizabeth cannot grow calm in Wickham's presence much less feel an aversion, being the daughter of Mrs. Bennet who is still excited by the red coats.
Human material is made for service and utility, not for change or transformation.
In a mixture of good and bad, bad has all the power of attraction.
"விக்காமை கடைசி முறையாக எலிசபெத் இப்பொழுது பார்த்தாள்."
ஒருவரைக் கண்டால் பிடிப்பது, அவருடைய வெறுக்கத்தக்க விஷயங்களால் போதுமான அளவு சமநிலைப்படாது.

ஒருவருடைய உணர்வில் அவருடைய பண்புகளை ஏற்றுக் கொண்டிருந்தால் அவர், ‘கல்யாணப் பரிசு’ கதாநாயகி போல் உணருவார்.

ஆரம்பத்தில் எழுந்த உணர்ச்சிகளின் படபடப்பு கூட அவளிடம் முழுமையாக அடங்கவில்லை.

பொய்மையின் மூலம் அவளை அடைய முடியும் என்பதால் விக்காம் அவளிடம் வந்தான்.

மனத்தின் பொய்மையான வீண்பெருமை போன்ற சிலவற்றை டார்சி கொண்டிருந்ததால் அவளை பொய்மை மூலம்தான் அணுக முடியும்.

தூய்மையான பிரபுக்களது குடும்பங்களால் அவளை அணுக முடியாது.

அது போன்ற குடும்பங்கள் உள்ளனவா என்பது ஒரு கேள்வி.

தூய்மையிலும், நாகரிகத்திலும் பிரபுத்துவம் உச்ச நிலையை அடைந்தது. ஆனால் கொடுமை, பொய்மை, முரட்டுத்தனம் இவை அதன் அடித்தளமாக எப்பொழுதும் இருந்தன.

அரசு குடும்பங்களும் அதே போல்தான் இருந்தன.

தீமையான அடித்தளங்களை பெரிய ரிஷிகளும் ஒழித்துவிடவில்லை.

தீமையிலிருந்து காப்பாற்றிக் கொள்வதே ரிஷிகளது குறிக்கோளாக இருந்ததே தவிர, தீமையை திருவுருமாற்ற வேண்டும் என்றல்ல.

தினசரி வாழ்க்கையில் நல்லது கெட்டது இவற்றின் உறவே முக்கியமான விஷயமாக இருக்கிறது.

பற்கள் நாக்கிற்கு உதவி புரிகிறது, ஆனால் பற்களிடம் கடிபெறாமல் அவற்றின் உதவியைப் பெற்றுக்கொள்ள நாக்கு பழகிக் கொண்டு விட்டது.

ஒவ்வொரு பெரிய சக்தியுடனும் மனிதன் சிறப்பான உறவு முறையை ஏற்படுத்திக் கொண்டால், மின்சாரம் உதவி புரிவது போல் அவை அவனுக்கு உதவி புரியும்.

அதில் நெறிமுறை எதுவும் இல்லை; செயற்பாட்டுத் திறன் உள்ளது.

சிறிய முயற்சிக்குப் பெரிய பலன்கள் எனும் அன்னையின் விதி இதனை விவரிக்கிறது.

திரு பென்னட்டின் முயற்சி, நீண்ட நாள் பாக்கியாக இருக்கும் ஒரு சரியான முடிவு.

உள்ளதை உள்ளது போல் சொல்வதற்குத்தான் எலிசபெத் சிறிய முயற்சி எடுக்க வேண்டும்.

பொறுமையாக அமைதியாக கவனமாக கேட்டுக் கொள்வதே ஷார்லெட்டின் மிகப் பெரிய பங்களிப்பு ஆகும்.

சூழ்ச்சி எதையும் நம்பாததே ஜேனுடைய மிகவும் பாராட்டத்தக்க உயர்வாகும்.

இன்னமும் சிவப்பு மேலங்கி அணியும் இராணுவ வீரர்களைக் கண்டால் சந்தோஷமடையும் திருமதி பென்னட்டின் மகளான எலிசபெத், விக்காம் முன்னிலையில் அமைதியாக இருக்க முடியாததோடல்லாமல், அவன் மேல் அவளுக்கு வெறுப்பும் எழுவதில்லை.

சேவைக்கு பயனுள்ளவனாக இருப்பதற்கே மனிதன் உருவாகியுள்ளான், மாறுவதற்கோ அல்லது திருவுருமாறவோ அல்ல.

நல்லதும் கெட்டதும் சேர்ந்து உள்ளபோது கெட்டதற்குத்தான் கவரும் சக்தி உள்ளது.

112. “The agitation of former partiality entirely subsided”.

The value of Man is he does not forget what he once loved.

It is a physical value, but still the world worships it.

Should we cherish it, give it up; if so, how to do so?

Any value in the ascent is to be overcome.

Any value in the descent is to be preserved and cherished.

If we want to cherish a value let us convert it from one of ascent into one of descent.

Elizabeth was charmed by his manners, sweet voice.

They represented in him the innate false character of his.

Sweet voice, charming manners are to be cherished, not when they represent falsehood.

You should cherish them in a good character.

Or, if you can, when it falls to your lot, change this false character into good character and then cherish those values.

With Wickham it was not her part or duty.

Darcy took upon himself to accept her abuse and change her by changing himself.

When all is said and done the charm of falsehood is more attractive than the charm of truth.

A woman readily appreciates not the Man of perfect gentlemanly behaviour, but one who takes liberty with her.

It is not only woman’s nature, but it is human nature, seen more often in women.

One should dissociate himself from such vibrations.

Integral yoga tells us that those vibrations are still of value.

It is a double edged sword.

Mastery is of value because it is a double edged sword.

It is not only a key, but a Master key as one He speaks of in Savitri – a Master Act, a Prayer, a King Idea will make miracles commonplace.

“முன்பிருந்த சஞ்சலம் முற்றிலும் காணாமல் போயிற்று.”

ஒரு முறை விரும்பியதை மறக்கமாட்டான் என்பதுதான் மனிதனின் பண்பு.

அது ஜடநிலையிலுள்ள பண்பு, ஆனாலும் உலகம் அதைத் துதிக்கிறது.
அதை நாம் போற்ற வேண்டுமா அல்லது விட்டு விட வேண்டுமா; அவ்வாறெனில் எவ்வாறு செய்வது?
பரிணாமத்தில் எந்த பண்பையும் வெற்றி கொண்டாக வேண்டும்.
சிருஷ்டியில், எந்த பண்பும் பாதுகாக்கப்பட வேண்டும், போற்றப்பட வேண்டும்.
ஒரு பண்பினை நாம் போற்ற வேண்டுமெனில் அதனை பரிணாமத்திலிருந்து சிருஷ்டிக்குரியதாக மாற்ற வேண்டும்.
அவனுடைய நடத்தையாலும் இனிமையான குரலினாலும் எலிசபெத் கவரப்பட்டாள்.
அவை அவனுடன் கூடவே பிறந்த பொய்மையான குணத்தைக் குறிப்பிடுகின்றன.
இனிமையான குரலும் வசீகரமான நடத்தையும் போற்றப்பட வேண்டியவை, ஆனால் அவை பொய்மையின் அடையாளங்களாக இருக்கும்போது அல்ல.
நல்ல குணமுடையவனிடம் இருக்கும்போது நாம் அதைப் போற்ற வேண்டும்.
இல்லாவிடில் நம்மால் முடிந்தால் நம்மிடம் பொய்யான குணம் வரும்பொழுது, அதை நல்ல குணமாக மாற்றி பிறகு அப்பண்புகளைப் போற்ற வேண்டும்.
விக்காமை பொறுத்தவரை, அது அவளுடைய பங்கும் அல்ல, கடமையும் அல்ல.
அவளுடைய நிந்தனையை டார்சி ஏற்றுக்கொண்டு, தன்னை மாற்றிக்கொள்வதன் மூலம் அவளை மாற்ற முயன்றான்.
எவ்வளவுதான் சொன்னாலும் பொய்மையின் கவர்ச்சி உண்மையின் கவர்ச்சியை விட அதிகமாகத்தான் உள்ளது.
சிறப்பான நற்குணம் பொருந்திய நடத்தையை கொண்ட ஆணை ஒரு பெண் உடனடியாக விரும்புவதில்லை, ஆனால் தன்னிடம் உரிமை எடுத்துக்கொள்ளும் ஒருவனை உடனே விரும்புவாள்.
இது பெண்ணின் சுபாவம் மட்டுமல்ல, மனித சுபாவமாகும், பெண்ணிடத்து அதிகமாக வெளிப்படும்.
அது போன்ற அதிர்வுகளிலிருந்து ஒருவர் தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும்.
அந்த அதிர்வுகளுக்கு இன்னமும் மதிப்பு உண்டு என்று பூரண யோகம் கூறுகிறது.
இரண்டு பக்கமும் கூர் உடைய வாள் அது.
ஒரு விஷயத்தில் தேர்ச்சி பெற்றிருப்பது மதிப்பு வாய்ந்தது, ஏனெனில் அது இருபக்கம் கூருடைய வாள் போன்றது .
அது திறவு கோல் மட்டுமல்ல, சாவித்ரியில் பகவான் கூறுவது போல் முக்கியமான திறவு கோல். அது முக்கியமான செயல், ஒரு பிரார்த்தனை, ஒரு சிறப்பான கருத்து, இவையாவும் அற்புதங்களை அன்றாட நிகழ்ச்சிகளாக்கும்.

113. "She saw in the very gentleness which had first delighted her, an affectation and a sameness to disgust and weary".
A changed view gives a changed sensation.
In moving from the physical to the vital, to the mental understanding does not matter. What matters is the sensational value.
In all important discussions, a subtle sense – an insight – matters.
Sensational values of cosmic consciousness reveal the earth going round the sun.
Gaudy rich dress thrills vital sensation.
Mental sensation is shy of it.
Spiritual sensation does not feel the pain.
To the Psychic pain is joy.
Lydia gloated over her marriage which was abominable to Elizabeth.
New ideas accepted from Romance Eternal can have a reverse sensation
i.e. a dull relationship can suddenly become live.
He who effects such a change can mentally concede that such a change is possible at every step.
Knowledge for change of each step is there.
That knowledge becomes a sensation.
Once a step is experienced and the principle conceded, Man has to decide to receive his receptivity.
Facts made Elizabeth change as above to give up falsehood.
In another place as with Mrs. Bennet an event – Lydia's marriage – brought about such a change.
What made Darcy see wonder in place of 'tolerable' was new values.
Those who come to Romance Eternal must know the knowledge for each level, acquire the appropriate values to reach the real goal.
Pemberley first, next Lydia's elopement – Mrs. Gardiner's letter – gave Elizabeth new values.
Jane was disillusioned by the visit of Caroline to Cheapside.
Such changes are better received from inside.
"எந்த மென்மையான நடத்தை அவளுக்கு முதலில் சந்தோஷத்தை அளித்ததோ, அது போலியாகவும் மாறுபாடு இல்லாமலும் இருப்பது களைப்பையும் வெறுப்பையும் அளித்தது."

மாறிய பார்வை மாறிய உணர்வைத் தரும்.
ஜடநிலையிலிருந்து உணர்வுக்கும், அதிலிருந்து மனதிற்குச் செல்லும்பொழுது புரிதல் ஒரு விஷயமே கிடையாது. உணர்வின் மதிப்புதான் முக்கியம்.
எல்லா முக்கியமான விவாதங்களிலும், சூட்சுமமான உணர்வு - அகப் பார்வை- முக்கியமாக இருக்கிறது.
பிரபஞ்ச ஜீவியத்தின் புலனின் மதிப்பு, பூமி சூரியனைச் சுற்றுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது.
பகட்டாக உடை அணிவது உணர்ச்சிகளை சிலிர்க்க வைக்கிறது.
மனத்தின் உணர்வுக்கு அது வெட்கத்தைத் தரும்.
ஆன்மீக உணர்வுகளுக்கு வலி தெரியாது.
சைத்திய புருஷனுக்கு வலி சந்தோஷத்தை அளிக்கும்.
லிடியா அவளுடைய திருமணத்தைப் பற்றி பெருமை அடித்துக் கொண்டது எலிசபெத்திற்கு வெறுக்கத்தக்கதாக இருந்தது.
அமர காதலின் மூலம் புதிய கருத்துகளை ஏற்றுக் கொண்டால் தலை கீழான உணர்வுகள் கிடைக்கும். (உ-ம்) மந்தமான உறவு திடீரென ஜீவனுள்ளதாக மாறும்.
அது போன்ற மாற்றத்தை ஏற்படுத்துபவருக்கு, ஒவ்வொரு படியிலும் அது போன்ற மாற்றம் ஏற்படும் சாத்தியங்கள் உண்டு என்பதை அவர் மனதால் ஒப்புக்கொள்ள வேண்டும்.
ஒவ்வொரு படிக்கான மாற்றத்திற்குத் தேவையான அறிவு அங்கு இருக்கிறது.
அந்த அறிவு உணர்வாக மாறுகிறது.
அந்த ஒரு படியை அனுபவித்து விட்டால், தத்துவத்தை ஒப்புக் கொண்டு விட்டால், மனிதன் அவனுடைய ஏற்புத் திறனை ஏற்றுக்கொள்ள தீர்மானிக்க வேண்டும்.
உண்மைகள் பொய்மையைக் கை விடுவதற்காக மேலே கூறியவாறு எலிசபெத்தை மாற்றியது.
வேறொரு இடத்தில் லிடியாவின் திருமணம் மூலம் திருமதி பென்னட்டிற்கு அம்மாற்றத்தைக் கொண்டு வந்தது.
'பரவாயில்லை' என்று கூறியதையே பிறகு டார்சி அற்புதமாகப் பார்த்தது புதிய பண்புகள் ஆகும்.
அமர காதலுக்குள் வருபவர் ஒவ்வொரு நிலைக்குரிய அறிவை அறிந்திருக்க வேண்டும், உண்மையான இலக்கை அடைய அதற்கேற்ற பண்புகளைப் பெற வேண்டும்.
முதலில் பெம்பர்லி, அடுத்தது லிடியா ஓடிப்போவது, திருமதி கார்டினரின் கடிதம் இவை யாவும் எலிசபெத்திற்கு புதிய பண்புகளை அளித்தன.
காரலின், சீப்சைட்-க்கு போனதை அறிந்து ஜேன் தெளிவு பெற்றாள்.
இது போன்ற மாற்றங்கள் அகத்தில் சிறப்பாகப் பெற்றுக் கொள்ளப்படும்.

114. "She had a fresh source of displeasure, for the inclination he soon testified of renewing those attentions".
Changed understanding changes the attitude.
What was pleasing earlier is now a game seen through, displeasing.
One can know the difference in the other between the pre-marriage and post marriage attitude.
He can know the same in himself, but it never occurs to him.
Introspection, self-criticism, the other man's point of view, self-awareness can unearth inconceivable realities about oneself.
There is a natural disinclination of knowing oneself.
One likes to imagine non-existing endowments in oneself.
Self-knowledge is part of inner life.
The entire institution's history is in records, but it is not the real institution. It consists of people, materials, events, growth, activities.
Our surface life is one of records.
Real life, the real world is inside.
The surface is too small to hold the universe, how can it house the Transcendence?
What one sees before marriage is the surface life, real life is after marriage.
Man does not know his own inner person. Where is the question of knowing another?
Life moves by ebbs and flows. We know one at a time, not both.
Even in reading a novel he who reads for the story misses a good deal.
Behind is the character.
Life and character of life are still behind.
It rarely strikes a reader that the entire world is in the story.
He who knows that never for a moment can conceive that what is in the story is a precise, direct, well defined description of what he is.
The missing tenth Man can never be found, nor can one know the pencil is not broken. These are blatant facts. Life has subtle faculties, occult facts, causal realities.
Rarely readers see the play of human choice in a story.
No story can ever reveal to Man that he is the determinant.

"முதன் முதலில் பழகிய பொழுது இருந்த உணர்வுகளை அவன் புதுப்பிக்க விரும்பியது அவளுக்கு புதியதொரு மனக்கசப்பை ஏற்படுத்தியது."

புரிதல் மாறும்பொழுது மனப்பான்மையையும் மாற்றுகிறது.

முன்னர் இனிமையாக இருந்தது இப்பொழுது விஷயம் புரிந்தவுடன் இனிமையற்று காணப்படுகிறது.

திருமணத்திற்கு முன்பும் திருமணத்திற்கு பின்பும் இருக்கும் மனோபாவத்தில் ஒருவர் மற்றவரிடம் வித்தியாசத்தைக் காண்பர்.

அவனுள்ளேயே இந்த மாற்றம் இருப்பது அவனுக்குத் தெரியும், ஆனால் அவன் இதை உணரவே மாட்டான்.

அகச் சோதனை, சுய விமரிசனம், அடுத்தவர் கண்ணோட்டம், சுய விழிப்புணர்ச்சி, இவை யாவும் ஒருவரைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியாத உண்மைகளை வெளிப்படுத்தும்.

ஒருவர் தன்னைப் பற்றியே தெரிந்துகொள்வதை இயற்கையாகவே விரும்ப மாட்டார்.

தன்னிடம் இல்லாத திறமைகளைப்பற்றி ஒருவர் கற்பனை செய்துகொள்ள விரும்புவார்.

சுய அறிவு அக வாழ்க்கையின் ஒரு பகுதி.

ஒரு நிறுவனத்தின் முழு சரித்திரமும் பதிவாகி இருக்கும், ஆனால் அது உண்மையான நிறுவனமல்ல. அது மனிதர்களை, பொருட்களை, நிகழ்ச்சிகளை, வளர்ச்சிகளை, செயற்பாடுகளை உள்ளடக்கியது.

நமது மேல் மன வாழ்க்கை குறிப்புகளால் ஆனது.

உண்மையான வாழ்க்கை, உண்மையான உலகம் உள்ளே உள்ளது.

பிரபஞ்சத்தைத் தாங்கிக்கொள்ள மேற்பரப்பு மிகவும் சிறியது, அது எவ்வாறு பிரம்மத்தை தாங்கிக் கொள்ள முடியும்?

திருமணத்திற்கு முன் பார்ப்பது மேல் மன வாழ்க்கை, உண்மையான வாழ்க்கை திருமணத்திற்கு பிறகு இருப்பது.

மனிதனுக்கு தன்னையே தெரியாது. மற்றவரை தெரிந்துகொள்வது என்ற கேள்வி எங்கிருந்து எழும்?.

வாழ்க்கை ஏற்ற இறக்கங்கள் நிறைந்தது. நமக்கு ஒரு சமயத்தில் ஒன்று மட்டும்தான் தெரியும், இரண்டும் தெரியாது.

ஒரு நாவலைப் படிக்கும்பொழுது, கதைக்காக படித்தால் பல விஷயங்களை நாம் இழந்து விடுவோம்.

கதாபாத்திரம் பின்னால் இருக்கிறது.

வாழ்க்கையும், வாழ்வின் குணமும் இன்னமும் பின்னால் உள்ளன.

கதையில், உலகம் முழுவதும் அடங்கியிருப்பது படிப்பவருக்குத் தெரிவதில்லை.

அதை அறிந்த ஒருவர் கதையில் துல்லியமாக நேரடியாகச் சிறப்பாக விவரித்திருப்பது தன்னைத்தான் என எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் புரிந்துகொள்ள மாட்டார்.

தொலைந்து போன பத்தாவது மனிதனை கண்டு பிடிக்கவே முடியாது, எழுதுகோல் உடையவே இல்லை என்பதையும் ஒருவர் புரிந்துகொள்ள முடியாது. இவை வெளிப்படையான உண்மைகள். வாழ்க்கையில், சூட்சுமமான திறன்கள், மறைந்துள்ள உண்மைகள், காரண உண்மை நிலைகள் உள்ளன.

மனித விருப்பத்தின் ஆட்டத்தை, கதையை படிப்பவர்கள் உணர்வதில்லை.

எந்த ஒரு கதையும், மனிதன்தான் தீர்மானிப்பவன் என்பதை அவனுக்கு வெளிப்படுத்தாது.

115.“She lost all concern for him in finding herself thus selected as the object of such idle and frivolous gallantry”.

Attention is a fine art that finally matures into affection.

Interest is vital energy released in another.

Attention is a higher, focused form of interest.

In the court where the king is the centre of attraction, attention developed as a human skill at its resourceful readiness becomes a qualification to receive rewards.

The story of a visitor identifying the king who played a trick on him putting a courtier on the throne, himself sitting in his place suggests the level of alertness in the court to receive the attention of the king.

The best of attentions is to know where another’s attention will go next.

People popular with children know all about attention.

He who gets all the attention of a child can secure anyone’s attention.

Those who skillfully save others from an accident are those whose attention will be on everything simultaneously.

Capacity for full sympathetic attention comes from a capacity of selfless self-giving.

It is constitutional ignorance where the Mind is different from the vital.

Attention to be alive must constantly vary in its expression.

Attention, as every other thing, is infinite.

Good manners can be described as the capacity to secure everyone’s attention.

His gallantry was idle and frivolous, but his charm arises from the fact it is idle and frivolous.

Had he been serious, he would not have caught everyone’s attention.

Being idle and frivolous, he is emotionally accessible to everyone.

One can be either frivolous or serious.

Pleasantness combines seriousness with shallowness.
Pleasant behaviour can be false.
Truth that is pleasant to all is **Simplicity.**
"ஆழமான காதல் இல்லாமல் பொழுதுபோக்கிற்காக அவன் தன்னை விரும்பினான் என்பதை புரிந்து கொண்ட அவள், அவன் மேலுள்ள எல்லா அக்கறையையும் இழந்தாள்."
கவனம் இறுதியில் பாசமாக முதிர்ச்சி அடையும் மென்மையான கலையாகும்.
உணர்வின் சக்தியாக விருப்பம் மற்றவரிடம் வெளியிடப்படுகிறது.
விருப்பத்தின் உயர்ந்த குவிந்த தோற்றம்தான் கவனம்.
கவனத்தின் மையமாக விளங்கும் அரசன் வீற்றிருக்கும் அரச சபையில், தன்னிடம் உள்ள திறமைகளின் மூலம் ஒருவன் கவனத்தை மனிதத் திறனாக வளர்த்துக்கொள்ளும் பொழுது, வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும் தகுதி உடையவனாகிறான்.
அரச சபையில் உள்ள ஒருவனை சிம்மாசனத்தில் உட்கார வைத்துவிட்டு, அவனுடைய இடத்தில் அரசன் அமர்ந்ததைக் கண்டு பிடித்த பார்வையாளனைப் பற்றிய கதை, ஒரு அரசரின் கவனத்தைப் பெற அரச சபையினரின் விழிப்புணர்ச்சி எந்த நிலையில் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.
கவனத்தின் சிறப்பே, அடுத்தவரது கவனம் அடுத்து எங்கு செல்லும் என்பதைத் தெரிந்து கொள்வதுதான்.
குழந்தைகளிடம் பிரபலமாக இருக்கும் மனிதர்களுக்கு கவனத்தைப் பற்றி எல்லாம் தெரிந்திருக்கும்.
யார் ஒருவருக்கு ஒரு குழந்தையின் முழு கவனம் கிடைக்கிறதோ, அவர் எல்லோருடைய கவனத்தையும் ஈர்ப்பார்.
ஆபத்திலிருந்து திறமையாக மற்றவர்களைக் காப்பாற்றுபவர்களது கவனம் ஒரே சமயத்தில் எல்லாவற்றிலும் இருக்கும்.
முழு அனுதாபத்துடன் கூடிய கவனிக்கும் திறமை, சுயநலமற்ற சுயார்ப்பணத்தின் திறன் மூலம் வரும்.
மனம் உணர்விலிருந்து மாறுபட்டு இருப்பது அமைப்பின் அறியாமையாகும்.
கவனம் உயிருடன் இருக்க, அதனுடைய வெளிப்பாடுகளில் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்க வேண்டும்.
மற்ற எல்லாவற்றையும் போல் கவனமும் அளவற்றது.
நற்குணம் எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கும் திறனுடையது எனலாம்.
அவனுடைய தைரியம் விளையாட்டுத்தனமாகவும், அற்பத்தனமாகவும் இருந்தது, ஆனால் அவனுடைய கவர்ச்சி அவன் விளையாட்டுத்தனமாகவும், அற்பத்தனமாகவும் இருக்கிறான் என்பதிலிருந்துதான் எழுகிறது.
அவன் தீவிரமானவனாக இருந்திருந்தால், எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்திருக்க மாட்டான்.
அவனுடைய விளையாட்டுத்தனம் மற்றும் அற்பத்தனத்தால், அனைவரும் உணர்ச்சிபூர்வமாக அவனை அணுக முடிகிறது.
ஒருவர் அற்பத்தனமாக இருக்கலாம் அல்லது தீவிரமானவனாக இருக்கலாம்
இனிமை, தீவிரத்தையும், அற்பத்தனத்தையும் இணைக்கிறது.
இனிமையான நடத்தை பொய்யாக இருக்கலாம்.
எல்லோருக்கும் இனிமையாக விளங்கும் உண்மை, **எளிமையாகும்.**

116. "While she steadily repressed it".
What is repressed is the vital reaction. It is repressed by Mind.
Repressed urges resurface strengthened, often in inverse form.
This is the result when the vital is strong and the Mental is weak.
An enlightened Mind denying a weak willing vital vibration is self-restraint that is self-discipline.
Society progresses by progressive individuals.
The majority waits for the society to endorse the pioneers.
The basic secret is the subconscious maturity is expressed by the progressive individuals.
The spiritual truth is beyond this interdependence of the Individual and the society.
The Individual is the key to evolution.
He includes the universe in himself.
He also includes the Transcendent in him.
The Absolute descending into the universe and the Individual is a prior truth.
Mental individuality of thought of Europe matured into the physical individuality of action in America whose earlier form was in production while its present acme is in technology.
The Mind of Greece born in Socrates as a personal possession in 2000 years resurfaced as a public possession – the birth of Mind in the common Man.
Spirit born in individuals in India must be born in the common Man and reveal itself as a personal possession as Mind revealed itself in Hamlet.
Einstein's formula is out of spiritual intuition.
It is Spirit being born not in the field of spirituality but in the field of Mental knowledge.

Spirit is to be born in vital – political, economic - knowledge.
It would be completed when the Spirit is born in physical knowledge – knowledge of physical objects.
"அவள் மெதுவாக அதை அடக்கிக் கொண்டாள்."
உணர்வின் எதிர்வினை அடக்கப்படுகிறது. அது மனத்தால் அடக்கப்படுகிறது.
அடக்கப்பட்ட உந்துதல்கள் மேலும் பலப்பட்டு மீண்டும் எழும், பெரும்பாலும் தலைகீழாக எழும்.
உணர்வு பலம் பொருந்தியதாகவும் மனம் பலவீனமாகவும் இருக்கும்பொழுது ஏற்படும் பலன் இது.
சித்தி பெற்ற மனம் பலவீனமாக விரும்பி எழும் உணர்வின் அதிர்வுகளை மறுப்பது, சுய ஒழுக்கமான சுயக் கட்டுப்பாடு ஆகும்.
முன்னேறும் தனிமனிதர்களால் சமூகம் முன்னேறுகிறது.
முன்னோடிகளை சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பெரும்பாலானோர் காத்திருக்கின்றனர்.
முன்னேறும் தனிமனிதர்களால் வெளிப்படுத்தப்படும் ஆழ்மன முதிர்ச்சியே அடிப்படை இரகசியமாகும்.
தனிமனிதனும் சமூகமும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதைத் தாண்டி இருப்பது ஆன்மீக உண்மை.
தனிமனிதன்தான் பரிணாமத்தின் திறவு கோல்.
அவனுள்ளே பிரபஞ்சம் உள்ளது.
பிரம்மமும் அவனுள்ளே உள்ளது.
பிரம்மம் பிரபஞ்சத்திலும், தனிமனிதனிலும் இறங்குவது முதல் உண்மையாகும்.
ஐரோப்பாவுடைய எண்ணத்தின் மனத் தனித்தன்மை, அமெரிக்காவுடைய செயற்பாட்டின் ஜட தனித்தன்மையாக முதிர்ச்சி அடைந்தது. இதனுடைய ஆரம்ப நிலை உற்பத்தியாக இருந்தது, தற்பொழுதைய உச்ச கட்டம் தொழில் நுட்பமாக உள்ளது.
சாக்ரடீஸிடம் தனி நபர் சொத்தாகப் பிறந்த கிரீசின் மனம், இரண்டாயிரம் வருடங்களுக்குப் பின் பொதுச் சொத்தாக சாதாரண மனிதனிடம் மனமாக மீண்டும் பிறந்தது.
இந்தியாவில் தனிமனிதனில் பிறக்கும் ஆன்மா சாதாரண மனிதனிடத்தில் பிறக்க வேண்டும், ஹாம்லெட்டிடம் மனம் வெளிப்பட்டதுபோல், தனி மனித சொத்தாக வெளிப்பட வேண்டும்.
ஆன்மீக உள்ளுணர்விலிருந்து ஐன்ஸ்டீனின் விதி பிறந்தது.
ஆன்மீகக் களத்தில் பிறந்த ஆன்மா அல்ல அது, மனத்தின் ஞானமாக பிறந்தது.
உணர்வில், அரசியலில், பொருளாதாரத்தில், ஞானமாக ஆன்மா பிறக்க வேண்டும்.
ஆன்மா ஜட அறிவில் பிறக்கும்பொழுது, ஜடப் பொருள்களை பற்றிய அறிவில் பூர்த்தி அடையும்.

117. "Her vanity gratified".

Vanity is what Man wants others to think of him.
Pride is his own estimation of himself.
One grows by achievements physical, vital, mental or spiritual.
Achievements are inner and outer.
He who has not achieved desires the result of achievement – popularity.
Vanity is the illusion of expectation based on non-existent achievement.
It is a phase through which real growth passes.
A great poet in his indulgence called it the last infirmity of human Mind.
Even solid achievements have a vain fringe sometimes.
There are great characters who do not have the taint of vanity.
It happens when one is not aware of social values.
He may have vanity in other areas.
Human foibles are often human necessity.
One exercises his own faculties for the joy of it whose results come to be valued greatly in later ages.
Such people have no way of comparing their attainments with others.
They are oblivious of their merit.
Shakespeare's works were not valued for their worth for centuries.
If he had been unaware of his genius and the merit of his works, there is no wonder.
Sri Aurobindo says all great men know of their greatness.
Jane Austen received £ 40 for Pride and Prejudice and that left no scope for gloating.
Vanity is the vain exertion of one who has no strength or knowledge for any achievement while his ambition is to achieve all.
He is one who gives himself what the world legitimately denies him.
The world has a way of giving the opposite of what he seeks if his seeking has an energetic empty insistence.
Vanity can be proud; pride can be vain.
"அவளுடைய தற்பெருமை திருப்தியடைந்தது."
மனிதன், மற்றவர்கள் அவனைப் பற்றி என்ன நினைக்க வேண்டும் என்று விரும்புவது தற்பெருமை ஆகும்.
அவனைப் பற்றிய அவனுடைய கணிப்பு கர்வம் ஆகும்.

ஒருவரது வளர்ச்சி உடல், உயிர், மனம் அல்லது ஆன்மீகம் இவற்றில் சாதிப்பதில் உள்ளது.
சாதனைகள் அகம், புறம் இரண்டையும் சார்ந்தவை.
யார் ஒருவன் சாதிக்கவில்லையோ, அவன் சாதனையின் பலனான பிரபலத்துக்கு ஆசைப்படுவான்.
இல்லாத சாதனையின் அடிப்படையில் எழும் எதிர்பார்ப்பின் தோற்றமே தற்பெருமையாகும்.
உண்மையான வளர்ச்சி இக்கட்டத்தைத் தாண்டிச் செல்லும்.
இதனை ஒரு பெரிய கவிஞன், மனித மனத்தின் கடைசிப் பலவீனம் என்றான்.
பெரிய சாதனைகளுக்கும் சில சமயங்களில் பயனற்ற சிறு விஷயங்கள் இருக்கும்.
தற்பெருமையின் சாயல்கூட இல்லாமல் உயர்ந்த குணமுடையவர்கள் உள்ளனர்.
ஒருவருக்கு சமூகத்தின் மதிப்புகள் தெரியாமல் இருக்கும்பொழுது இவ்வாறு நடக்கிறது.
வேறு சில இடங்களில் அவருக்கு தற்பெருமை இருக்கலாம்.
மனித குறைபாடுகள் பல சமயங்களில் மனிதனுக்குத் தேவைப்படுகிறது.
சந்தோஷத்திற்காகவே ஒருவர் அவருடைய திறமைகளை பயன்படுத்துவார். அதனுடைய பலன்கள் பெரிதாக மதிக்கப்படும் காலங்கள் பின்னர் எழும்.
இது போன்ற மனிதர்களுக்கு தங்களுக்குக் கிடைத்ததை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவே வழி கிடையாது.
அவர்களுடைய சிறப்பு பற்றி அவர்களுக்கே தெரியாது.
பல நூற்றாண்டு காலங்களாக ஷேக்ஸ்பியரின் படைப்புகள், அவற்றின் மேன்மைக்காக மதிக்கப்படவில்லை.
அவருடைய மேதாவித்தனத்தைப் பற்றியும், அவருடைய படைப்புகளின் மேன்மையைப் பற்றியும் அவருக்குத் தெரியாமல் இருந்திருந்தால், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.
எல்லா பெரிய மனிதர்களுக்கும் தங்களுடைய சிறப்பைப் பற்றித் தெரியும் என ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.
‘Pride and Prejudice’ எழுதியதற்காக ஜேன் ஆஸ்டினுக்கு நாற்பது பவுன்கள் அளிக்கப்பட்டது. அதில் அவருக்குப் பெருமைப்பட ஒன்றும் இல்லை.
அனைத்தையும் சாதிக்க ஆசைப்படும் ஒருவருக்கு எதையும் சாதிப்பதற்கான அறிவோ சக்தியோ இல்லாதபோது, தற்பெருமைதான் இருக்கும்.
உலகம் நியாயமாக ஒருவனுக்கு நிராகரிப்பதை, அவனே அவனுக்கு அளித்துக் கொள்கிறான்.
சக்தி இல்லாமல் ஒன்றை விரும்பினால், ஒருவனுக்கு அவன் விரும்பியதற்கு நேர் எதிரானதை உலகம் அளிக்கும்.
தற்பெருமை கர்வமாக இருக்கலாம்; பெருமை பயனற்றதாகவும் இருக்கலாம்.

118. “And her preference secured at anytime by their renewal”.

Preference is the vital choice.
The physical has less choice. Almost it accepts what touches it.
The vital quickly chooses according to its bent.
Mind sees before it a wider choice as it sees more than the vital.
The Spirit accepts all positively, generally, it does not choose.
The Supramental chooses to transform irrespective of the condition of what is accepted.
Choice arises out of the play in life.
A rich Man has a wide enough choice; a poor Man is denied.
A wise Man has several options to choose from while a stupid Man sees no choice.
Choice expands life.
The Spirit inside has infinite choices.
A small Man never stirs out of his place.
He has a horror of leaving the place where he was born.
At the other extreme the explorer explores all over the world.
An ordinary Man finding marriage is slavery accepts it as such.
A resourceful Man explores other possibilities.
One in quest of Romance never stops exploring and innovating.
To make the best of a bad job is what life teaches us.
Spirit does not see anything bad.
Darcy found nothing bad in Elizabeth.
His assumption became true.
That is the power of spiritual belief.
Elizabeth had no such assumption, belief or faith.
All her interest was in Jane, not in herself.
Once Darcy proposed again, Elizabeth came into her own.
Her own is the highest best anyone can assume.
In her joy she could forget her aunt for three days.

"அவளிடம் கொண்டிருந்த கவனத்தை மீண்டும் புதுப்பித்தாலும் அவள் ஏற்றுக்கொண்டு விடுவாள்."

விருப்பம் என்பது உணர்வின் தேர்ந்தெடுத்தல்.

ஜடநிலை தன் விருப்பப்படி செயல்படுவது குறைவே. அதைத் தொடுவதை அது பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளும்.

உணர்வு அதன் போக்குக்கு ஏற்றவாறு தேர்ந்தெடுக்கும்.

உணர்வைக் காட்டிலும் மனம் அதிகமாகப் பார்ப்பதால், தேர்ந்தெடுப்பதற்கு அதற்கு அதிகமான விஷயங்கள் உள்ளன.

ஆன்மா எல்லாவற்றையும் நல்ல விதமாக ஏற்றுக்கொள்ளும், பொதுவாக அது தேர்ந்தெடுப்பதில்லை.

சத்திய ஜீவியம், தான் ஏற்றுக்கொண்டது எந்த நிலைமையில் இருந்தாலும் திருவுருமாற விரும்புகிறது.

வாழ்வின் ஆட்டத்தில் விருப்பம் எழுகிறது.

பணக்காரன் தேர்ந்தெடுக்கலாம் ஏழைக்கு அது மறுக்கப்படுகிறது.

புத்திசாலியான மனிதனுக்கு விருப்பம்போல் தேர்ந்தெடுக்க நிறைய வாய்ப்புகள் உள்ளன, அதுவே முட்டாளுக்கு இல்லை. தேர்ந்தெடுப்பது வாழ்வை விரிவடையச் செய்கிறது.

ஆன்மாவுக்கு எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளன.

சிறிய மனிதன் தான் இருக்கும் இடத்தை விட்டு அசைவதேயில்லை.

அவன் பிறந்த இடத்தை விட்டு நகருவது அவனுக்கு பயங்கரமாக இருக்கிறது.

தீவிரமாக இருக்கும் ஒருவர் உலகம் முழுவதும் சுற்றி வந்து ஆராய விரும்புவார்.

சாதாரண மனிதன், திருமணம் அடிமைத்தனமாக இருப்பதை பார்த்தும் அதனை அப்படியே ஏற்றுக் கொள்கிறான்.

வசதிகள் இருக்கும் மனிதன் மற்ற சாத்தியக் கூறுகளை கண்டுபிடிப்பான்.

காதலைத் தேடுபவன் ஆராயவும் புதிதாகக் கண்டுபிடிப்பதையும் நிறுத்தவே மாட்டான்.

மோசமானதிலும் சிறந்ததைப் பார்க்க வாழ்க்கை நமக்குக் கற்றுத் தருகிறது.

ஆன்மா எதையும் மோசமாகப் பார்க்காது.

எலிசபெத்திடம் டார்சி மோசமாக எதையும் பார்க்கவில்லை.

அவனுடைய யூகங்கள் உண்மையாயின.

ஆன்மீக நம்பிக்கையின் சக்தி அதுதான்.

எலிசபெத்திற்கு அது போன்ற யூகங்களோ, நம்பிக்கையோ எதுவும் இல்லை.

அவளுக்கு கவனம் முழுவதும் ஜேன் மேல்தான் இருந்தது, தன்னைப் பற்றியும் நினைக்கவில்லை.

டார்சி மீண்டும் திருமண பேச்சை எடுத்த போதுதான் எலிசபெத் தன் நினைவுக்கு வந்தாள்.

எவராலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு உயர்ந்தது அவள்தான்.

அவளுடைய சந்தோஷத்தில் அவளுடைய அத்தையை மூன்று நாட்களுக்கு அவள் மறந்திருந்தாள்.

On the very last day of the regiment's remaining at Meryton he dined, with others of the officers, at Longbourn; and so little was Elizabeth disposed to part from him in good-humour that, on his making some enquiry as to the manner in which her time had passed at Hunsford, she mentioned Colonel Fitzwilliam's and Mr. Darcy's having both spent three weeks at Rosings, and asked him if he were acquainted with the former.

இராணுவம் மெரிடனிலிருந்த இறுதி நாளன்று அவன் மற்ற அதிகாரிகளுடன் லாங்பர்னில் உணவருந்தினான். அவனிடம் நல்ல மனநிலையில் விடைபெற எலிசபெத்திற்கு விருப்பமில்லை. ஹன்ஸ்போர்டில் அவள் எப்படி நேரத்தை செலவழித்தாள் என்று அவனுடைய கேள்விக்கு கர்னல் பிட்ஸ்வில்லியமும், டார்சியும் மூன்று வாரங்கள் ரோஸிங்ஸில் தங்கியிருந்தனர் என்று கூறி முதல் நபரின் அறிமுகம் அவனுக்குண்டா என்று அவனிடம் கேட்டாள்.

119. She sees through his belief, how she is a mere thing for his ruse.
எவ்வாறு அவள் அவனுடைய சூழ்ச்சிக்கு ஒரு சாதாரண விஷயமாக இருந்தாள் என்பதை அவனுடைய நம்பிக்கையின் மூலம் அவள் பார்க்கிறாள்.

120. "On the last day Wickham dined at Longbourn".

Two people meeting is life.

Meeting emotionally is a landmark in life.

First of such meeting, the last of such coming together are lasting marks in one's emotional life.

Emotional memory is neither factual nor rational.

Once a lover, a lover forever.

To love is to live fully.

Those who have no heart or a heart that is dry cannot know what love is.

Those who have a heart know nothing but love. Nothing else matters to them.

Trollope's heroines rise to their emotional heights.

Love makes emotion powerful.

Indian girls believe in past and future lives.
The ideal belief is a girl has been wedded to a Man in his every birth.
This is not spiritually true.
It is emotionally comforting as an ideal, as well as a way of life.
Popular beliefs about karma, rebirth, reward are vastly different from spiritual facts.
Religion gives Man a superstition.
He adorns it in a hundred ways.
There is a great fulfillment in being superstitious whether it is true or not.
Man lives by his beliefs.
In time he raises them to the status of faith.
The word faith has no such dimension.
The Gita advises us not to relieve Man of his superstition.
One – a girl or a follower – can believe in a murderer.
Murder at the hands of a husband or leader is pleasantly acceptable.
Moksha awaits such faith.
It is a spiritual justification.
"கடைசி நாளன்று விக்காம் லாங்பர்னில் விருந்துண்டான்."
இருவர் சந்தித்துக்கொள்வது வாழ்க்கையாகும்.
உணர்வுபூர்வமாகச் சந்தித்துக்கொள்வது வாழ்க்கையில் முக்கியமான கட்டமாகும்.
அது போன்ற முதல் சந்திப்பும் அது போல் இறுதியாக ஒன்று சேர்வதும் ஒருவரது உணர்ச்சிகரமான வாழ்க்கையில் நினைவில் நிலைத்து நிற்கும் அடையாளங்களாகும்.
உணர்வுபூர்வமான ஞாபகம், உண்மையும் கிடையாது, விவேகமானதும் கிடையாது.
ஒரு முறை காதலனாக இருப்பவன் கடைசி வரை காதலன்தான்.
காதலிப்பது முழுமையாக வாழ்வதாகும்.
யாருக்கு உள்ளம் இல்லையோ அல்லது உள்ளம் வறட்சியாக இருக்கிறதோ, அவர்களுக்கு காதல் என்றால் என்ன என்பது தெரியாது.
உள்ளம் இருப்பவர்களுக்கு காதலைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது. வேறு எதுவும் அவர்களுக்கு ஒரு விஷயமே அல்ல.
திராலப்பின் கதாநாயகிகள் உணர்வுபூர்வமாக உயர்ந்த இடத்தை அடைகின்றனர்.
காதல் உணர்வுகளை சக்தியுடையதாக மாற்றுகிறது.
இந்தியப் பெண்கள் முன் ஜென்மம், அடுத்த ஜென்மம் இவற்றை நம்புகின்றனர்.
ஒவ்வொரு பிறவியிலும் அதே ஆணைத்தான் பெண் திருமணம் புரிவதாக ஒரு நம்பிக்கை உள்ளது.
ஆன்மீகரீதியில் இது உண்மை அல்ல.
இலட்சியத்திற்கும் வாழ்க்கை முறைக்கும் அது உணர்வுபூர்வமாக ஆதரவாக உள்ளது.
கர்மம், மறுபிறப்பு, வெகுமதி இவற்றைப் பற்றிய பொதுவான நம்பிக்கைகள், ஆன்மீக உண்மைகளிலிருந்து மிகவும் வித்தியாசமானவை.
மதம் மனிதனுக்கு மூடநம்பிக்கைகளை அளிக்கிறது.
அவற்றை நூறு விதங்களில் அவன் போற்றுகிறான்.
மூட நம்பிக்கைகள் உண்மையோ இல்லையோ, அவற்றை நம்புவதில் ஒரு பெரிய திருப்தி இருக்கிறது.
மனிதன் அவனுடைய நம்பிக்கைகளினால் வாழ்கிறான்.
சமயங்களில் அதற்கு தெய்வ நம்பிக்கை எனும் அந்தஸ்து அளிக்கிறான்.
தெய்வ நம்பிக்கைக்கு அது போன்ற பரிமாணம் கிடையாது.
மனிதனை மூட நம்பிக்கைகளிலிருந்து விடுவிக்க வேண்டாம் என்று கீதை அறிவுறுத்துகிறது.
ஒரு பெண் அல்லது ஒரு சீடரால் கொலைகாரனையும் நம்ப முடியும்.
கணவன் அல்லது தலைவன் கொலை செய்தால், அதை இனிமையாக ஏற்றுக்கொள்வர்.
அது போன்ற நம்பிக்கைக்கு மோக்ஷம் காத்துக் கொண்டிருக்கிறது.
இது ஆன்மீக நியாயப்படுத்தல்.

121. "So little was Elizabeth disposed to part from him in good humour".
Any situation gives rise to a humour in Man.
Good humour is the result of good circumstances.
Good humour arising out of inner disposition raises Man above his circumstances.
Her knowledge of the Man is damaging in the extreme.
It has made her sour towards him.
Her sensations were not sour as her conversation reveals.
His skill in sensing the change in her is a skill in deceit.
He would have made a great diplomat, had he been a gentleman.

He has sensed the danger, danger of frequently meeting Darcy and living in the atmosphere of Darcy's aunt. Still she is not sour. He relates to her expressed behaviour.
He is one who kept his countenance after elopement.
It means all his actions are Mental.
Even his voice, facial expressions, physical gestures are Mental.
Mind in him has fully mastered his vital.
And that Mind is false.
Gambling is the natural relaxation he seeks as his vital has been under a severe discipline all day long.
The intensity of that Mental effort enhances the value of his charm.
Imagine the cruel tyranny his vital was under while in Pemberley.
He is immune to feminine charm, prone to destroy their character.
What he needs is not an affectionate vital exchange that expands the being.
He needs an outlet for his corked up physical energy, denied natural expression as it normally formulates itself.
His sense of deprivation as he grew up among the plenty of Pemberley with absolutely no right to it, is a frustration in the extreme.
He does not want to possess any woman, as his experience is any woman readily gives in.
What is readily available is naturally not attractive.
The life of a clergyman is certainly not for him.
"அவனிடமிருந்து நல்ல மனநிலையில் விடைபெற எலிசபெத்திற்கு விருப்பமில்லை."
எந்த ஒரு நிலைமையும் மனிதனிடம் ஒரு நல்ல மனநிலையை எழுப்புகிறது.
நல்ல மனநிலை நல்ல சூழ்நிலைகளால் உருவாகிறது.
அகத்தின் நிலைப்பாடுகளால் எழும் நல்ல மனநிலை, மனிதனை அவனது சூழ்நிலையிலிருந்து உயர்த்தும்.
அவனைப் பற்றிய அவளுடைய அறிவு, மிகவும் சேதப்படுத்துவதாக இருந்தது.
அது அவன்பால் கசப்பை ஏற்படுத்தியது.
அவளுடைய பேச்சிலிருந்து அவளுடைய உணர்வுகளில் கசப்பில்லை என்பது தெரிகிறது.
அவளிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தை உணரும் அவனுடைய திறன், ஏமாற்றும் திறனாகும்.
அவன் நற்குணம் பொருந்தியவனாக இருந்திருந்தால், அவன் பெரிய அரசியல் நிபுணனாக மாறியிருப்பான்.
டார்சியை அடிக்கடி சந்திப்பதிலும், டார்சியின் சித்தியின் அருகாமையில் இருப்பதிலும் உள்ள ஆபத்தை அவன் உணர்ந்திருந்தான். இருப்பினும் அவளிடம் கசப்புணர்வு இல்லை. அவள் வெளிப்படுத்தும் நடத்தையுடன் அவன் தொடர்புகொள்கிறான்.
ஓடிப்போன நிகழ்ச்சிக்குப் பிறகும் அவன் நிதானத்துடன் நடந்து கொண்டான்.
அவனுடைய எல்லா செயல்களும் மனத்தைச் சார்ந்தவை என்று தெரிகிறது.
அவனுடைய குரல், முக பாவங்கள் மற்றும் உடல் அசைவுகள்கூட மனத்திற்குரியது.
மனம் அவனுடைய உணர்வுகளை முழுமையாக வெற்றி கொண்டுள்ளது.
அந்த மனம் பொய்யானது.
அவனுடைய உணர்வுகள் நாள் முழுவதும் அதிக கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால், சூதாட்டத்தை பொழுது போக்கிற்காக நாடுகிறான்.
மனம் எடுக்கும் முயற்சியின் தீவிரம், அவனது வசீகரத்தின் மதிப்பை கூட்டுகிறது.
பெம்பர்லியில் இருக்கும்பொழுது அவனுடைய உணர்வுகள் எவ்வளவு கடுமையான கொடுமையை அனுபவித்திருக்கும் என்று கற்பனை செய்து பார்க்கலாம்.
பெண்மையின் கவர்ச்சியால் அவன் பாதிக்கப்பட மாட்டான், அவர்களுடைய குணாதிசயத்தை அழிப்பதில் வல்லவன்.
அவனுக்குத் தேவைப்படுவது ஜீவனை விரிவுபடுத்தும் பாசமான உணர்வின் பரிமாற்றம் அல்ல.
அடக்கி வைக்கப்பட்டிருக்கும் ஜட சக்தியை வெளியிட அவனுக்கு ஒரு வடிகால் வேண்டும், இயற்கையாக வெளிப்பட மறுக்கப்பட்ட அச்சக்திகள், சாதாரணமாக அதனையே உருவகப்படுத்திக் கொள்ளும்.
எந்தவித உரிமையும் இல்லாத பெம்பர்லியின் செல்வச் செழிப்பில் வளர்ந்த அவனுக்கு அதனை அவனிடமிருந்து பிடுங்கிக் கொண்டுவிட்ட உணர்வு உச்சகட்ட வெறுப்பை அளித்தது.
எந்த பெண்ணும் உடனடியாக இணங்கி விடுவது அவனுடைய அனுபவமாக இருப்பதால், அவன் எந்த பெண்ணையும் சொந்தமாக்கிக்கொள்ள விரும்பவில்லை.
எது சுலபமாகக் கிடைத்து விடுகிறதோ அதில் நாட்டம் ஏற்படாதது இயற்கை.
பாதிரி வாழ்க்கை நிச்சயமாக அவனுக்கு உகந்தது அல்ல.

122."She mentioned Colonel. Fitz Williams".
For a rumour-monger any person is a potential source of rumour.
Wickham's first unexpressed fear is what the colonel would have told her about him.
We are sorry that rumour can often be false, negative.
News spreading in the society is rumour. It can be positive or negative. No vibration can exist half. It needs both

sides.

Family members speak only the positive side. That creates relationship, not binding intimacy that longs for frequent revivals.

News travels along the length and breadth of a country in a few days.

It is not possible when the vibration is only positive – half.

The foundation of a building is coarse, ugly. It is the nature of the other side.

It never occurred to Wickham that Darcy's daily visits to the Parsonage could have meant anything more than company.

She was not socially or personally polite to him. She was romantically soft to him in her eager politeness.

He was, in his turn, taken in by her unintended courtesy.

He was a diplomat par excellence.

Now that her mind was fully disillusioned, his master stroke about his joy knowing the improved manners of Darcy had no effect on her at all.

Revenge, as love, is causeless. We see it in Dante.

The intensity of revenge, even if it is frivolous in its consequence can be real to him who feels it.

He was trying to retain the ground he had gained with her earlier.

She was trying her feminine best not to let him see her changed Mind.

The psychological meeting ground was as delicate as the meeting of lovers.

He was an adept in making her come out with information.

She was more than willing to supply information inoffensively.

Social intercourse maturing into personal intimacy is a passage valuable to students of psychology in literature.

"அவள் கர்னல் பிட்ஸ்வில்லியம் பெயரைக் குறிப்பிட்டாள்."

வதந்தியைக் கிளப்புபவன், யாரைப் பற்றி வேண்டுமென்றாலும் வதந்தியைக் கிளப்புவான்.

கர்னல் தன்னைப் பற்றி அவளிடம் ஏதேனும் கூறியிருப்பானோ என்பதுதான் விக்காமின் வெளியிடப்படாத பயமாக இருந்தது.

வதந்தி பல சமயம் பொய்யாகவும், எதிர்மறையாகவும் இருப்பது வருந்தத்தக்கது.

சமூகத்தில் செய்தி பரவுவது வதந்தியாகும். அது நல்லதாகவும் இருக்கலாம், கெட்டதாகவும் இருக்கலாம். எந்த அதிர்வும் பாதியாக இருக்காது. அதற்கு இரண்டு பக்கங்களும் வேண்டும்.

குடும்பத்தில் உள்ளவர்கள் நல்லதையே பேசுவார்கள். அது உறவுகளை உருவாக்கும், அடிக்கடி புதுப்பித்துக் கொள்ள ஏங்கும் கட்டுப்படுத்தக்கூடிய நெருக்கங்களை அல்ல.

சில நாட்களிலேயே செய்தி நாட்டின் மூலை முடுக்குகளிலும் பரவிவிடும்.

அதிர்வுகள் நல்லதாக மட்டுமே இருந்தால், இது சாத்தியமில்லை.

வீட்டின் அஸ்திவாரம் முரட்டுத்தனமாகவும் பார்ப்பதற்கு அசிங்கமாகவும் இருக்கும். இயற்கையின் மறு பக்கம் இது.

டார்சி தினமும் பாதிரி விடுதிக்குச் சென்று வருவது, வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமல்லாது அதற்கும் மேலே என்று விக்காமிற்குப் புலப்படவே இல்லை.

சமூக அளவிலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ அவள், அவனிடம் பணிவாக நடந்துகொள்ளவில்லை. காதல் வயப்பட்ட அவள், பணிவான ஆர்வத்துடன் அவனிடம் மென்மையாக நடந்துகொள்கிறாள்.

அவன் பங்கிற்கு, அவன் அவளுடைய இயல்பான மரியாதையால் கவரப்பட்டான்.

அவன் மிகச் சிறப்பான நிபுணனாக இருக்கிறான்.

அவள் இப்பொழுது மிகவும் தெளிவாக இருப்பதால், டார்சியின் நடத்தையில் காணும் முன்னேற்றத்தைக் கேள்விப்பட்டு அவன் காண்பிக்கும் சந்தோஷம், அவளிடம் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

காதலைப் போல் வன்மமும் காரணமின்றி இருக்கும். டான்டே-யிடம் இதனைப் பார்க்கிறோம்.

வன்மத்தின் தீவிரம், அதனுடைய பின் விளைவுகளில் அற்பமானதாக இருந்தாலும், அதை உணருபவருக்கு உண்மையாகப் படும்.

அவளிடம் அவனுக்கிருந்த இடத்தை தக்க வைத்துக்கொள்ள அவன் முயற்சி செய்கிறான்.

அவளுடைய மாறிய மனத்தை அவன் பார்க்க முடியாத வண்ணம் அவள் தன்னால் இயன்றவரை மறைக்க முயற்சி செய்கிறாள்.

மனரீதியாக சந்தித்துக்கொள்ளும் இடம் காதலர்கள் சந்தித்துக்கொள்வது போல் அவ்வளவு நுட்பமாக இருந்தது.

அவளிடமிருந்து தகவலைப் பெறுவதில் அவன் தேர்ச்சி பெற்றவனாக இருக்கிறான்.

புண்படுத்தாத வண்ணம் அவள் தகவலை கொடுக்கத் தயாராக இருந்தாள்.

சமூகப் பரிமாற்றங்கள் தனிப்பட்ட நெருக்கமாக முதிர்ச்சி அடைவது, மனவியல் மாணவர்களுக்கு இலக்கியத்தில் மதிப்பு வாய்ந்த ஒரு பாதையாகும்

He looked surprised, displeased, alarmed; but with a moment's recollection and a returning smile, replied that he had formerly seen him often; and, after observing that he was a very gentlemanlike man, asked her how she had liked him. Her answer was warmly in his favour. With an air of indifference he soon afterwards added –

அவன் ஆச்சரியத்துடனும், அதிருப்தியுடனும், கலவரத்துடனும் பார்த்தான். ஆனால் ஒரே நிமிடத்தில் தன்னை சுதாகரித்துக் கொண்டு ஒரு புன்முறுவலுடன், தான் அவனை முன்பு அடிக்கடி சந்தித்திருப்பதாகவும், அவன் மிகவும் நற்பண்புகள் உடைய நபர் என்று கூறிய பிறகு, அவளுக்கு எந்த அளவு அவனை பிடித்திருந்தது என்று கேட்டான். அவனைப்பற்றி அன்பாகப் புகழ்ந்து பேசினாள். அவன் அதை சிறிதும் பொருட்படுத்தாமல் விரைவில் ---

123. Elizabeth's acquaintance with the colonel raises a fright in him.
எலிசபெத்திற்கு, கர்னலுடன் ஏற்பட்ட நட்பு அவனிடம் பயத்தை உண்டாக்கியது.

124. Sensing no harm from her, he quickly smiles.
அவளிடமிருந்து எந்த கெடுதலும் வராது என்பதை உணர்ந்தவுடன் அவன் உடனடியாகப் புன்னகை புரிந்தான்.

125. Now that she has seen the colonel, he is truthful in the description.
இப்பொழுது அவள் கர்னலை சந்தித்து விட்டதால், கர்னலைப் பற்றி விவரிப்பதில் அவன் உண்மையாக இருக்கிறான்.

126. Her formal behaviour which is not unpleasant is her sanction to elopement.
அவளது பொதுவான நடத்தை இனிமையாக இருப்பது, ஓடிப்போவதற்கு அவள் அனுமதி கொடுப்பது போலாகிறது.

127. "With a moment's recollection and a returning smile".

One of the main assets of human nature is its resilience.
Rats survive in millions in spite of equal number of cats threatening their lives.
A threat is no reason to withdraw from the field.
A threat makes Man equip himself to survive in spite of it.
Man's civilization is a series of overcoming challenges.
Every advance in technology is used for anti-social purposes.
Even pests become immune to pesticides.
Every reform is found to have loopholes effectively exploited by malicious Minds.
Good manners came to existence as the pleasant exterior of benevolent gentle souls.
It was taken by Wickham to entice Elizabeth.
After fifteen days of confinement to bed Mrs. Bennet was ready to announce to the world her triumph in a trice.
Today the basic human material is pessimistic about its future, comfort-minded in existence, cumbersome clumsily in thinking out a way out.
He says the best ideal pursuit of Man is **the discovery of God in Life.**
That will engage all his energies.
Nothing else demands the energies of all the parts of his being.
The need of the Hour is an integrated personality.
This quest united all the parts of his being and further demands their integration.
To a question Nelson Rockefeller replied there was nothing other than the Presidency for him to aspire to.
All other efforts are partial, smaller, beside the point.
Great international organizations speak of limits to growth.
There are no limits to growth for one who wants to develop and evolve.
Man uses an otiose, narrow, ossified, outmoded, inert instrument, intellectuality. Limits to growth are the limits to intellectuality.
Man is infinite, Life is infinite, growth is infinite. There are no limits.
"ஒரே நிமிடத்தில் சுதாகரித்துக் கொண்டு, புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டான்."
மனித சுபாவத்தின் முக்கியமான சொத்துக்களில் ஒன்று, மீண்டும் சகஜ நிலைக்கு திரும்புவதுதான்.
எலிகளின் உயிரை பறிக்க கோடிக்கணக்கான பூனைகள் இருந்தாலும் அதே அளவில் எலிகள் உயிருடன்தான் இருக்கின்றன.
களத்திலிருந்து விலகுவதற்கு அச்சுறுத்தல் ஒரு காரணம் கிடையாது.
அச்சுறுத்தல் இருக்கும் போதிலும் அது மனிதனை உயிர்வாழ அவனை ஆயத்தப்படுத்துகிறது.
மனிதனின் நாகரிகம் தொடர்ந்து சந்திக்க வேண்டிய சவால்களாகும்.
தொழில் நுட்பத்தில் ஏற்படும் ஒவ்வொரு முன்னேற்றமும் சமூகத்திற்கு எதிராக பயன்படுத்தப்படுகின்றன.
பூச்சிகளும் பூச்சி மருந்துகளை தாங்கிக்கொள்ளும் சக்தி படைத்தவைகளாக மாறுகின்றன.

ஒவ்வொரு சீர்திருத்தத்திலும் ஓட்டைகள் உள்ளன, அவற்றை தீய மனம் படைத்தவர்கள் திறம்பட உபயோகப்படுத்திக் கொள்வர்.
தாராள மனம் படைத்த மென்மையான ஆன்மாக்களின் இனிமையான புறத் தோற்றம், நல்ல நடத்தையாக உள்ளது.
எலிசபெத்தை வசீகரிக்க விக்காம் இந்த நடத்தையை கையாள்கிறான்.
பதினைந்து நாட்கள் படுக்கையிலேயே இருந்த திருமதி பென்னட், தன்னுடைய வெற்றியை உலகுக்கு அறிவிக்க கணத்தில் தயாரானாள்.
இன்று அடிப்படை மனித குணம் அதனுடைய எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை இழந்துள்ளது, வாழ்க்கையில் சௌகரியங்களை எதிர்பார்க்கிறது, அதிலிருந்து வெளியே வர அசௌகரியமான திறமையற்ற வழியைத் தேடுகிறது.
மனிதனின் சிறப்பான இலட்சியத் தேடல், **வாழ்க்கையில் இறைவனை கண்டுபிடிப்பதுதான் என பகவான் கூறுகிறார்.**
அது அவனுடைய எல்லா சக்திகளையும் எடுத்துக்கொள்ளும்.
வேறு எதுவும் அவனுடைய ஜீவனின் எல்லா பகுதிகளின் சக்திகளையும் எதிர்பார்க்காது.
அந்த நேரத்தின் தேவை ஒருங்கிணைந்த ஆளுமை.
அந்த தேடல் அவனுடைய ஜீவனின் எல்லா பகுதிகளையும் இணைத்தது. மேலும் ஒருங்கிணைய எதிர்பார்க்கிறது.
ஜனாதிபதி பதவியைத் தவிர வேறு எதிலும் தனக்கு ஆர்வம் கிடையாது என்று ஒரு கேள்விக்கு நெல்சன் ராக்பெல்லர் பதிலளித்தார்.
மற்ற எல்லா முயற்சிகளும் பகுதியாகவும், சிறியதாகவும், விஷயத்திற்கு தொடர்பில்லாமலும் இருக்கும்.
வளர்ச்சியை அளவிற்குட்படுத்துவதைப் பற்றி பெரிய உலகளாவிய அமைப்புகள் பேசுகின்றன.
யார் ஒருவர் முன்னேறி பரிணாமத்தில் வெளி வர விரும்புகிறாரோ அவருக்கு வளர்ச்சியில் எல்லைகளே கிடையாது.
சோம்பல், குறுகிய மனம், கடினம், பழைமை, செயல்படாத கருவி, புத்திசாலித்தனம் இவைகளை மனிதன் பயன்படுத்துகிறான். வளர்ச்சிக்கு அணை போடுவது புத்திசாலித்தனத்திற்கு அணை போடுவது போன்றது.
மனிதன் அனந்தம், வாழ்வு அனந்தம், வளர்ச்சியும் அனந்தம், எல்லைகளே கிடையாது.

128. "Wickham asked Elizabeth how she liked him".
One fundamental attribute of diplomacy is to remain relevant.
One cannot afford to raise a suspicion in the other.
An appearance of innocence, innocuousness is essential.
This question is one such.
Wickham wishes to know whether she has learnt anything of him from the colonel.
Elizabeth did not even touch upon the essential information about Jane which the colonel gave her.
Not like in the first meeting, she has grown alert.
Except that she retained her affectionate solicitude for him, she has grown cautious. This time she never walked into his trap.
To set a trap for another is the most resourceful method of mean people.
He is an adept in it.
The first time she was a victim which he fully exploited to his advantage.
Now she saw through the Man, his game.
Pleasantly, but cautiously, she dealt with him.
The priestly class has developed this strategy all over the world with the rulers and ruled the world till democracy was born.
Outside in society this approach has become the norm in the high councils of life.
Logic and reason thus served Man, his purposes of psychological triumph.
It has ended in self-deception and the annihilation of that class and that method.
Still, rationality is not fully emancipated from that thralldom.
Population is so sensitive that international fora cannot directly deal with it.
Hence the approach 'Limits to Rationality'.
The most universally accepted theme of evolution of Darwin is not rationally justifiable.
It is never sufficiently pointed out.
"எந்த அளவு அவனைப் பிடித்திருந்தது என விக்காம், எலிசபெத்தை கேட்கிறான்."
நிபுணனாக இருக்க ஒரு அடிப்படைத் தகுதி, அதற்கு உகந்தவனாக இருக்க வேண்டும்.
ஒருவர் மற்றவரிடம் எந்த சந்தேகமும் கொள்ளக்கூடாது.
கபடமற்ற தோற்றமும் தீங்கு விளைவிக்காமல் இருப்பதும் முக்கியம்.
இந்த கேள்வி அது போன்றதொன்று.

கர்னலிடமிருந்து, எலிசபெத் ஏதேனும் அவனைப் பற்றி அறிந்துகொண்டாளா என்று தெரிந்துகொள்ள விக்காம் விரும்புகிறான்.
ஜேனைப் பற்றி கர்னல் தன்னிடம் கூறிய முக்கியமான விஷயத்தை எலிசபெத் தொடுவதேயில்லை.
முதல் சந்திப்பின்போது இருந்தது போலல்லாமல், அவள் உஷாராக இருக்கக் கற்றுக்கொண்டு விட்டாள்.
அவள், அவனிடம் பாசமும் அக்கறையும் கொண்டிருந்தபோதும், எச்சரிக்கையாக இருக்கக் கற்றுக் கொண்டு விட்டாள். இம்முறை அவனுடைய வலையில் அவள் சிக்கவில்லை.
சின்ன புத்தி உள்ள மனிதர்கள் மற்றவர்களுக்கு வலை விரிப்பதில் திறமைசாலிகள்.
அதில் அவன் திறமைசாலியாக இருக்கிறான்.
முதல் முறை அவள் பலியானாள், அதை அவன் முழுமையாக தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான்.
இப்பொழுது அவனது சூழ்ச்சியை அவள் தெரிந்துகொண்டு விட்டாள்.
இனிமையாக ஆனால் எச்சரிக்கையாக அவள் அவனைக் கையாளுகிறாள்.
தெய்வப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள், இந்த உபாயத்தை உலகம் முழுவதும் எல்லா அரசர்களுடன் மேற்கொண்டு, மக்களாட்சி உருவாகும்வரை, உலகத்தையே ஆண்டு வந்தனர்.
வெளியே சமூகத்தில் இந்த அணுகுமுறை, வாழ்க்கையின் உயர்ந்த மன்றங்களில் ஒரு நெறியாக மாறிவிட்டது.
மனரீதியான வெற்றிப் பெருமிதத்தை அடைய மனிதனுக்கு தர்க்கமும் விவேகமும் இவ்வாறு உதவி புரிந்துள்ளன.
இது தன்னையே ஏமாற்றிக் கொள்வதிலும், அந்த வர்க்கத்தின் மற்றும் அந்த முறையின் அழிவிலும் முடிந்துள்ளது.
இன்னமும் பகுத்தறிவு அந்த அடிமைத்தனத்திலிருந்து முழுவதும் விடுவிக்கப்படவில்லை.
சர்வதேச மன்றங்கள் நேரடியாக எதிர்கொள்ள முடியாத அளவிற்கு மக்கள் மிகவும் உணர்வுபூர்வமானவர்கள்.
‘பகுத்தறிவுக்கு அணை’ என்ற அணுகுமுறை இதனால்தான்.
உலகம் முழுவதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட டார்வினுடைய பரிணாமத் தத்துவத்தை பகுத்தறிவால் நியாயப்படுத்த முடியாது.
அது போதுமான அளவுக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை.

129. “With an air of indifference he soon afterwardly asked how long Darcy was there.”
Not to be interested is the sure way of getting things done.
Women adopt this strategy, having it as a biological endowment.
Man resorts to it when he, for whatever reason, forgets a work.
One of Man’s social endowments is to adopt it artificially.
Acting as if he is not interested –கிராக்கி**- he has learnt to get his work done.**
Law of life gives an opposite result when it is overdone.
Civilised behaviour is to act readily without making one scarce.
Culture is to behave as if you are receiving when you are giving.
At least we must not resent those who adopt கிராக்கி – this attitude.
Understanding him from his point of view is better.
The fullest appreciation of கிராக்கி – giraki is to see its rightful place in the scheme of things and feel cheerful.
Here one handles one’s sensitivity – mental or physical.
For a normal goodness, it is the hardest part of reversal.
To have the knowledge as a sensation that Mother deals with such a sensitivity as if it never existed will enable him to give it to Her.
He who can do so knows Mother as human nature can know fully.
Such a Mental knowledge of sensation can be taken up by his vital and even his physical.
Success at those levels is successful overcoming of ego.
Beyond this stage whatever capacities that accrue in him he may not be consciously aware of.
Unself-awareness of outstanding capacities belongs to greatness.
It is a condition when consecration turns into surrender.
It is surrender becoming an attitude and moving to become a motive of the being.
Now one realizes the truth of Her idea that there is no greater joy than a consecrated living.
Consecration becomes a constant companion reminding us when we forget.
This perception helps us see the sacredness of the feet of the criminal.
“டார்சி எவ்வளவு நாட்கள் அங்கு இருந்தான் என அவன் தனக்கு சம்பந்தம் இல்லாததுபோல் கேட்டான்.”
ஆர்வம் காண்பிக்காமல் இருப்பது வேலையை முடித்துக்கொள்ளும் உறுதியான வழியாகும்.
உடற்கூற்றின் திறனாக இருக்கும் இந்த உபாயத்தை பெண்கள் மேற்கொள்கிறார்கள்.
ஏதோ ஒரு காரணத்தினால் வேலையை மறந்து விடும்பொழுது ஆண் இந்த வழியை மேற்கொள்கிறான்.
அதை செயற்கையாக ஏற்றுக்கொள்வது மனிதனின் சமூகத் திறமைகளில் ஒன்றாகும்.

ஆர்வம் இல்லாததுபோல் காட்டிக் கொண்டு அவனுடைய வேலையை முடித்துக்கொள்ள அவன் செய்வது கிராக்கி.
அதை சற்று அதிகப்படியாகச் செய்யும்போது வாழ்வின் சட்டம் நேர்மாறான பலனைத் தருகிறது.
ஒருவரை விலக்காமல் உடனடியாகச் செயல்படுவது நாகரிகமான நடத்தையாகும்.
நாம் கொடுக்கும்போது பெற்றுக்கொள்வது போல் நடந்துகொள்வது நாகரிகம்.
கிராக்கியை கடைப்பிடிப்பவர்களைக் கண்டு கோபப்படாமலாவது இருக்கலாம்.
அவனது கோணத்தில் அவனைப் புரிந்துகொள்வது மேலும் நல்லது.
கிராக்கியை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும் எனில் நடக்கும் விஷயங்களில் அதனுடைய சரியான இடத்தைப் பார்த்து மகிழ வேண்டும்.
இங்கு ஒருவர் தனது மனம் அல்லது உடலின் உணர்வுகளைக் கையாள்கிறார்.
சாதாரண நற்குணத்தில் மாற்றத்தின் கடினமான பகுதியாகும் இது.
இது போன்ற உணர்வுகளே தனக்கில்லாதது போல் பாவித்து அன்னை அதனை கையாள்கிறார் என்ற ஞானம் தொடு உணர்வாக இருப்பது, அவனை அதனை அன்னைக்கு அர்ப்பணிக்க வைக்கும்.
யார் ஒருவனால் இவ்வாறு செய்ய முடியுமோ அவன், மனித சுபாவம் அன்னையை எவ்வாறு முழுமையாக அறிந்துகொள்ள முடியுமோ அவ்வாறு அறிந்துகொள்வான்.
இது போன்ற உணர்வின் மன அறிவு, அவனுடைய உயிராலும், உடலாலும்கூட எடுத்துக் கொள்ளப்படலாம்.
அந்த நிலைகளில் வெற்றி என்பது அகந்தையை வெற்றி கொள்வதாகும்.
இந்த கட்டத்தைத் தாண்டி எந்தத் திறமைகள் அவனிடம் குவிந்தாலும் அவனுக்கு அதைப் பற்றி தெரியாமலேயே இருக்கலாம்.
தன்னுடைய மிகப் பெரிய திறமைகளைப் பற்றி தெரியாமலேயே இருப்பது மிக உயர்ந்தது.
சமர்ப்பணம் சரணாகதியாக மாறும் நிலை இது.
சரணாகதி நோக்கமாக மாறுகிறது, இது ஜீவனின் நோக்கமாக மாறுவதற்கு நகருகிறது.
சமர்ப்பணத்தின் மூலம் வாழ்வதைவிட பெரிய சந்தோஷம் வேறு எதுவும் இருக்க முடியாது எனும் அன்னையின் கருத்தில் உள்ள உண்மையை இப்பொழுது ஒருவர் உணர்கிறார்.
நாம் மறந்து விடும்போதெல்லாம் நமக்கு ஞாபகப்படுத்தும் சமர்ப்பணம் நம்முடைய நிரந்தரத் துணையாகி விடுகிறது.
இந்தப் புரிதல் திருடனின் அடியை திருவடியாகப் பார்க்க வைக்கும்.

"How long did you say that he was at Rosings?"
"எவ்வளவு நாட்கள் அவன் ரோஸிங்ஸில் தங்கினான் என்று கூறினாய்?" என்று கேட்டான்.

"Nearly three weeks."
"கிட்டத்தட்ட மூன்று வாரங்கள்."

"And you saw him frequently?"
"அவனை அடிக்கடி சந்தித்தாயா?"

"Yes, almost every day."
"ஆம், பெரும்பாலும் தினமும் சந்தித்தேன்."

"His manners are very different from his cousin's."
"அவனுடைய சகோதரனின் நடத்தையைவிட அவனது நடத்தை மிகவும் மாறுபட்டதாக இருக்கும்."

"Yes, very different. But I think Mr. Darcy improves on acquaintance."
"ஆம், மிகவும் வித்தியாசமாகத்தான் இருந்தது. ஆனால் டார்சியுடன் பழகும்பொழுது அவனை மேலும் நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது."

130. "Mr. Darcy improves on acquaintance" – Elizabeth to Wickham.
Simple lack of knowledge can give us an opposite opinion.
Democracy insists on knowing the other side; hence the opposition in the Parliament.
Lack of knowledge may be due to lack of opportunity to know or hasty impatience.
Elizabeth not knowing Darcy's Mind, basing on the first comment, angrily interpreted his abiding interest in her.
Nature's way of making our ignorance discover more fully is to create an opposite opinion.
This is so because Nature is the objective part of the Spirit.
After Darcy proposed to her, she speaks of him as an acquaintance.
Mentally she keeps the same original distance even after the proposal.
Darcy is not real to her emotions, because of the social distance.

Money alone cannot create that gap.
She felt no such gap between Bingley and her family.
It was not the wealth as the status of Pemberley.
Wickham knew no calumny would emanate about him from Darcy.
But, in these sensitive moments, anything could happen. He was cautious.
A false character spends most of his energy in being cautious.
Truth in him will make all those energies for progress.
To be true is to be entirely free.
Dishonesty, smallness, and fear consume all one's energies.
A false man of deceit renders the society his enemy in his imagination. Hence the suspicion.
Wickham is like a cat on its expedition for rats constantly cautious about the jackal after him.
At the highest level of creativity such as painting, the work is the reward.
Scandal, malice, falsehood, lies when indulged in as a game dispense with any goals and have a way of becoming an end in itself.
Falsehood puts one on eternal alert.
"ஒவ்வொரு அறிமுகத்தின்பொழுதும் டார்சி முன்னேறிக் கொண்டே வருகிறான் என்று எலிசபெத், விக்காமிடம் கூறுகிறாள்."
அறிவில் சிறிய குறைபாடும் எதிரான அபிப்பிராயத்தை அளிக்கும்.
மக்களாட்சி மறு பக்கத்தையும் தெரிந்துகொள்ள வற்புறுத்துகிறது, அதனால்தான் பாராளுமன்றத்தில் எதிர்கட்சி என்று ஒன்று உள்ளது.
தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருப்பது அல்லது அவசரமான பொறுமையின்மையே அறியாமைக்குக் காரணமாக இருக்கலாம்.
டார்சியின் மனத்தை அறியாத எலிசபெத் முதல் அபிப்பிராயத்தின் அடிப்படையில், அவன் தொடர்ந்து தன் மீது கொண்டிருக்கும் விருப்பத்தை கோபத்துடன் புரிந்துகொள்கிறாள்.
நம்முடைய அறியாமையை மேலும் முழுவதுமாக கண்டுபிடிக்க எதிரான அபிப்பிராயத்தை இயற்கை உருவாக்குகிறது.
ஆன்மாவின் உண்மையான பகுதி இயற்கை என்பதால் இவ்வாறு நிகழ்கிறது.
டார்சி அவளுக்குத் திருமண வேண்டுகோள் விடுத்த பிறகு, அவள் அவனைத் தனக்குத் தெரிந்தவன் என்று பேசுகிறாள்.
திருமணப் பேச்சிற்குப் பிறகும் அவள் அவனிடமிருந்து மனத்தளவில் பழையபடி அதே இடைவெளியைத் தொடர்கிறாள்.
சமூக இடைவெளியினால் அவளுடைய உணர்ச்சிகளுக்கு டார்சி உண்மையாகப் படவில்லை.
அந்த இடைவெளியை பணம் மட்டுமே ஏற்படுத்தாது.
பிங்கிலிக்கும் அவளுடைய குடும்பத்திற்குமிடையே அது போன்ற இடைவெளியை அவள் உணரவில்லை.
பெம்பர்லியின் அந்தஸ்தைப்போல் செல்வம் இல்லை.
டார்சியிடமிருந்து தன்னைப் பற்றி எந்த பழிச் சொல்லும் எழாது என்று விக்காமிற்குத் தெரியும்.
ஆனால் இது போன்ற நுட்பமான நேரங்களில் என்ன வேண்டுமானாலும் நிகழலாம், அவன் எச்சரிக்கையாக இருந்தான்.
தவறான சுபாவம் உடையவன் எச்சரிக்கையாக இருப்பதற்கே தன்னுடைய பெரும்பாலான சக்தியை செலவழிப்பான்.
அவனிடம் உள்ள உண்மை, முன்னேற்றத்திற்காக அந்த எல்லா சக்திகளையும் பயன்படுத்திக்கொள்ளும்.
உண்மையாக இருப்பது முழுவதுமாக சுதந்திரமாக இருப்பதாகும்.
நேர்மையின்மை, சின்னத்தனம், பயம் ஆகியவை ஒருவருடைய எல்லா சக்திகளையும் உபயோகப்படுத்திக் கொள்ளும்.
ஏமாற்றும் குணமுடைய பொய்மையான மனிதன், அவனுடைய கற்பனையில் சமூகத்தை பகையாக நினைக்கிறான், அதனால்தான் சந்தேகம் எழுகிறது.
எலியை துரத்தும் பூனை, பின்னால் வரும் நரியைப் பற்றி எப்பொழுதும் ஜாக்கிரதையாக இருப்பதுபோல் விக்காம் இருக்கிறான்.
ஓவியம் வரைவதைப்போல், படைக்கும் திறனின் உச்சக்கட்டத்தில் அந்த வேலையே பரிசுதான்.
அவதூறு, தீமை, பொய்மை, பொய் ஆகியவற்றை ஒரு செயலில் கையாண்டால் எந்த ஒரு இலக்கையும் அவை நீக்கி, அவைகளே செயலின் பலன்களாகி விடும்.
பொய்மை ஒருவரை எப்பொழுதும் விழிப்புடன் வைத்திருக்கும்.

"*Indeed!" Cried Wickham with a look which did not escape her. "And pray, may I ask -- ?" But checking himself, he added, in a gayer tone, "Is it in address that he improves? Has he deigned to add ought of civility*

to his ordinary style! -- for I dare not hope," he continued in a lower and more serious tone, "that he is improved in essentials."

“அப்படியா! என்று விக்காம் கேட்டபொழுது அவனுடைய முகபாவத்தை அவள் கவனிக்கத் தவறவில்லை. “நான் உன்னைக் கேட்கலாமா?” என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சந்தோஷமான குரலில் “எதில் தேறியிருக்கிறான். அவன் பேசும் விதத்திலா? மரியாதை கலந்து பேச வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறானா? ஏனெனில் முக்கியமானவற்றில் அவன் தேறிவிட்டான் என்று எனக்கு நம்பிக்கையில்லை” என்று தணிவான தீவிரமான குரலில் கூறினான்.

131. Elizabeth takes the trouble to soften her new understanding of Darcy. It is not as if Darcy is changed as in Pemberley. When the letter was given, his air was haughty.
டார்சியைப் பற்றி தன்னுடைய புரிதலை மென்மையாக்கிக்கொள்ள எலிசபெத் முயற்சி செய்கிறாள். பெம்பர்லியில் இருந்ததுபோல் டார்சி மாறிவிட்டான் என்பதற்காக அல்ல. கடிதம் கொடுத்தபொழுது அவன் இறுமாப்புடன் இருந்தான்.

132. Wickham does not spare a shade of his understanding to be turned to his advantage. She is soft to him.
தனக்குச் சாதகமாக தன்னுடைய புரிதலை மாற்றிக்கொள்ள விக்காம் எந்த முயற்சியையும் விட்டு வைக்கவில்லை. அவள் அவனிடம் மென்மையாக நடந்துகொள்கிறாள்.

133. “Is it in address that he improves?”

One can improve in his address but remain the same in character. Wickham at that moment does not know what he accuses Darcy of is something exactly describing himself

The exterior vastly differs from the interior.

Together the exterior and the interior constitute one’s conscious personality while his subconscious he is not aware of.

Mother alone explained the mystery of the opposite character between parents and children as in Nehru and Indira.

All that one is not in his life expresses itself in the children is her explanation.

Social life can be ethical or moral.

Not life which is neutral.

It allows itself to be served by good and evil.

Man is so much human that he cannot sanction evil.

The Divine is so true to itself that it cannot discountenance any aspect of Nature, because Nature is nothing but Divine.

There is nothing undivine in existence is Sri Aravindam.

When we think of Nehru, our sensitivity will not admit deceit to be a part of his character.

In our view he is purity itself.

When someone accused him of jealousy in the Parliament, an opposition Member was quick on his legs to contradict it and declared that no one could teach it to him.

Still human character is incomplete without jealousy and all similar things.

It is proudly claimed that there can be nothing in life not found in the Mahabharatha.

This bit of knowledge of human nature is not in that epic.

Mother claims there can be nothing in the world of present or future that is not in Savitri.

It is true because His Life is whole life.

“பேசுவதில் அவன் முன்னேறியிருக்கிறானா?”

ஒருவன் பேசும் பாணியில் முன்னேற்றம் அடையலாம், ஆனால் குணம் அப்படியேதான் இருக்கும். டார்சியை குற்றம் சாட்டும் அந்தத் தருணத்தில் விக்காம் தன்னையே விவரித்துக்கொள்கிறான் என்று அவனுக்குப் புரிவதில்லை.

அகம் புறத்திலிருந்து மிகவும் வித்தியாசப்படுகிறது.

அகம் புறம் இரண்டும் சேர்ந்ததுதான் ஒருவருடைய மேல்மனத்தின் ஆளுமை, அவனுடைய ஆழ்மனத்தை அவன் அறியமாட்டான்.

நேருவுக்கும் இந்திராவுக்கும் இடையே இருந்ததுபோல் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே உள்ள எதிர் எதிரான குணத்தின் மர்மத்தை அன்னை மட்டுமே விளக்கியுள்ளார்.

பெற்றோர்களிடம் வாழ்க்கையில் இல்லாதது, குழந்தைகளிடம் வெளிப்படும் என்று அன்னை கூறியுள்ளார்.

நீதி அல்லது நெறி சமூக வாழ்க்கையில் இருக்கலாம்.

நடுநிலையான வாழ்க்கையில் அல்ல.

நல்லதும் கெட்டதும் அதற்கு சேவை செய்ய அனுமதிக்கிறது.

மனிதன் மனிதாபிமானம் உள்ளவன், அவனால் கெடுதலை அனுமதிக்க முடியாது.

இறைவன் தனக்கே உண்மையாக விளங்குவதால் இயற்கையின் எந்த ஒரு கூற்றின் அமைதியையும் அதனால் குலைக்க முடியாது, ஏனெனில் இயற்கையே இறைவன் ஆகும்.

வாழ்க்கை முழுவதுமே தெய்வீகமானது என்பதுதான் ஸ்ரீ அரவிந்தம்.
நேருவைப் பற்றி நாம் நினைக்கும்பொழுது, ஏமாற்றுவது அவருடைய குணத்தில் இருக்கலாம் என்பதை நம்மால் நினைத்தும் பார்க்க முடியாது.
நமது கருத்துப்படி அவர் தூய்மையே உருவானவர்.
பாராளுமன்றத்தில் ஒருவர் நேருவுக்கு பொறாமை உள்ளது என்று குற்றம்சாட்டிய பொழுது, எதிர் கட்சியிலிருந்து ஒருவர் உடனடியாக எழுந்து அதை எதிர்த்து அவருக்கு அதை எவரும் கற்றுத் தர முடியாது என்று கூறினார்.
இருப்பினும் மனித சுபாவம் பொறாமை போன்ற குணங்கள் இன்றி பூர்த்தியாகாது.
மஹாபாரதத்தில் இல்லாதது பாரதத்தில் இருக்க முடியாது என்று பெருமையாகக் கூறப்படுகிறது.
மனித சுபாவத்தின் இந்த ஒரு சிறிய அறிவு அந்த காவியத்தில் இல்லை.
சாவித்ரியில் இல்லாதது நிகழ்கால உலகிலோ அல்லது எதிர்கால உலகிலோ இருக்க முடியாது என்று அன்னை கூறியுள்ளார்.
பகவானுடைய வாழ்க்கை முழுமையானது என்பதால் இது உண்மை.

134. "Has he deigned to add ought to civility to his ordinary style" he continued in a lower and more serious tone.
A message is more conveyed by its tone than words.
In fact the facial expressions, all the bodily movements, the voice, its various fluctuations give the content to the words.
The words themselves are picked out of a range.
We can go further. The entire physical, vital, subtle atmosphere in the room fixes the character of the message.
Above all, the rasi of the person who brings the message matters.
The time of the day, the particular spot, from whom it comes, to whom it goes, what the message signifies, etc. matter.
A message is a world of its own, having a personality with all those components.
Such a message has a function of communication, a social value, another psychological value, a spiritual significance, etc.
One who knows fully all these significances can give this message a force of determinism.
Such powers are endless. Those powers are subtle, occult, causal, evolutionary, universal, cosmic, spiritual, etc.
Infinite literally means infinite.
One can see the Absolute in the event that is apparently relative.
An event is a cosmic evolutionary unit.
It is a crystal into which one can gaze, see the past or future of the world.
Trikala drishti is that power.
What senses that is the Supramental sense.
Consecration that initiates us into yoga has a glimpse of all this.
Knowledge, works, love are triple forces; the perfection of one spills over into the other two.
In any event, one can see its physical form, vital force, mental formulation, spiritual purity.
The message of any event can be received by any one of the five senses or all the senses as we choose.
"மரியாதை கலந்து பேச வேண்டும் என்று அவன் தீர்மானித்திருக்கிறானா," தணிவான தீவிரமான குரலில் அவன் தொடர்ந்தான்.
வார்த்தைகளைவிட குரலில் ஒரு செய்தி நன்கு தெரிவிக்கப்படுகிறது.
முக பாவங்கள், உடல் அசைவுகள், குரல், அதனுடைய வேறுபாடுகள் யாவும் வார்த்தைகளின் உட்பொருளை அளிக்கின்றன.
பல்வேறு நிலைகளிலிருந்து வார்த்தைகள் எடுக்கப்படுகின்றன.
நாம் மேலும் அடுத்த நிலைக்குச் செல்லலாம். செய்தியின் குணத்தை அந்த அறையில் இருக்கும் ஜடம், உயிர், சூட்சுமச் சூழல் ஆகியவை தீர்மானிக்கும்.
இவை எல்லாவற்றிற்கும் மேல் செய்தியைத் தாங்கி வரும் நபரின் ராசியும் முக்கியமானது.
நேரம், இடம், யாரிடமிருந்து வருகிறது, யாருக்குச் செல்கிறது, செய்தி தரும் குறிப்பு போன்ற விஷயங்கள் முக்கியமாகும்.
ஒரு செய்தி என்பது அதற்கேயான ஒரு தனி உலகமாகும், மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் அம்சங்களைக் கொண்ட ஒரு ஆளுமை அதற்கு உண்டு.
அது போன்ற செய்திக்கு தொடர்பு, சமூக மதிப்பு, வேறொரு மனரீதியான மதிப்பு, ஆன்மீக முக்கியத்துவம் போன்ற செயல்பாடுகள் உண்டு.
இந்த எல்லா முக்கியத்துவங்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்த ஒருவரால், இந்த செய்திக்கு தீர்மானிக்கும் சக்தியை அளிக்க முடியும்.
இது போன்ற சக்திகள் முடிவற்றவை. அந்த சக்திகள் சூட்சுமம், மறைமுகம், காரணம், பரிணாமம், உலகம், பிரபஞ்சம், ஆன்மீகம் போன்றவைகள் ஆகும்.

அனந்தம் என்றால் அனந்தம்தான்.
வெளிப்படையாக ஒன்றையொன்று ஒத்திருக்கும் நிகழ்வில் ஒருவர் பிரம்மத்தைக் காணலாம்.
ஒரு நிகழ்வு பரிணாமத்தில் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகும்.
உலகத்தின் கடந்த காலம் எதிர்காலம் இரண்டையும் காட்டும் கண்ணாடி அது.
அந்த சக்தி திரிகால திருஷ்டியாகும்.
சத்திய ஜீவிய உணர்வு அதை உணர்கிறது.
யோகத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் சமர்ப்பணம் இந்த எல்லா காட்சிகளையும் காணவல்லது.
அறிவு, வேலைகள், அன்பு இவை மூன்று சக்திகள்; ஒன்றின் பூரணத்துவம் மற்ற இரண்டையும் பூரணமாக்கும்.
எந்த ஒரு நிகழ்விலும் ஜடத் தோற்றம், உணர்வின் சக்தி, மனத்தின் உருவகம், ஆன்மீகத் தூய்மை இவற்றை ஒருவர் காணலாம்.
ஐந்து புலன்களில் ஏதாவது ஒன்றின் மூலமோ அல்லது எல்லா புலன்களின் மூலமோ எந்த ஒரு நிகழ்வின் செய்தியையும் பெற்றுக்கொள்ளலாம், தேர்ந்தெடுப்பது நமது விருப்பம்.

"*Oh no!" Said Elizabeth. "In essentials, I believe, he is very much what he ever was."*
"ஓ! இல்லை" என்ற எலிசபெத் "முக்கியமானவற்றில் அவன் எப்படி இருந்தானோ அப்படியேதான் இன்னும் இருக்கிறான் என்று நம்புகிறேன்," என்கிறாள்.

135. "In essentials, he is very much what he ever was" – Elizabeth.
Man does not change in his essentials, unless transformed.
Wickham tells her that he has always been right and there is no reason why she should suspect him, not knowing she was past suspicion, she was in certainty.
No method however perfect it is, will be valid in another plane.
The effectivity of a method is confined to its plane.
In this statement she is anxious to tell him that she never questioned his veracity.
The desire not to offend the object of love when he is mortally offending you is one capacity of human nature.
Settling ancient scores, revenge, wreaking vengeance are activities of one's sensitivities.
They are all very real to themselves eternally.
Time may pass, but they will live in the memory fresh.
Long after the Man is dead, the desire for revenge against him will be alive.
In a place where one has committed suicide, the spirit will live for endless number of years.
Perhaps they too are infinite.
Even when you have triumphed, his sense of revenge may not be extinguished.
Formations have vitality. They are formations, not rational or utilitarian.
They outlive their utility.
No instrument can disappear when its utility is over as instruments are created not only in consciousness but also in substance.
When you migrate to a foreign country your own language is not forgotten.
So also your culture.
Wickham is moving away. Darcy is not there, **but his interest in the scandal is very live, active and energetic.**
His attempted elopement when thwarted did not disappear. It lived in the subtle plane to revive in Lydia.
To unlearn is more difficult than learning.
Transformation is possible only by the descent of the higher.
"முக்கியமானவற்றில் அவன் எப்பொழுதும் போலவே இருக்கிறான்."
முக்கியமானவற்றில் மனிதன் திருவுருமாறினாலன்றி அவன் மாறமாட்டான்.
அவளுக்கு சந்தேகம் இல்லாமல் உறுதியாகத் தெரிந்திருக்கிறது என்பதை அறியாதவனாக, அவன் எப்பொழுதுமே சரியானவன்தான், அவனை சந்தேகிக்க வேண்டிய அவசியமேயில்லை என்று அவளிடம் கூறுகிறான்.
ஒரு செய்முறை எவ்வளவுதான் சரியாக இருந்தாலும் வேறொரு நிலையில் செல்லுபடியாகாது.
ஒரு முறையின் சிறப்பான பலன் அதனுடைய நிலைக்கே உரியது.
அவனுடைய உண்மையைப் பற்றி தனக்கு கேள்வியே கிடையாது என்று அவனிடம் கூறுவதற்கு அவள் ஆவலாக இருக்கிறாள் என்பது இந்த வார்த்தைகளில் வெளிவருகிறது.
காதலிப்பவன் கடுமையாக நம்மை புண்படுத்தும்போதும் அவனை புண்படுத்தக் கூடாது எனும் அவா, மனித சுபாவத்தின் ஒரு திறனாகும்.
பழைய பகையை தீர்த்துக்கொள்வது, பழி வாங்குவது, வன்மம் பாராட்டுவது எல்லாம் ஒருவருடைய உணர்வுகளின் செயல்களாகும்.
அவைகள் அவற்றிற்கே எப்பொழுதும் மிகவும் உண்மையாகும்.
காலம் கடக்கலாம், ஆனால் அவை ஞாபகத்தில் பசுமையாக நிலைத்திருக்கும்.

மனிதன் இறந்த பிறகும் அவனை பழி வாங்கும் ஆசை உயிருடன் இருக்கும்.
ஒருவர் தற்கொலை செய்து கொண்ட இடத்தில் அவரது ஆவி பல வருடங்களுக்கு இருக்கும்.
ஒரு வேளை அவைகளும் அனந்தமாக இருக்கலாம்.
நமக்கு வெற்றி கிடைத்திருந்தாலும் பழி வாங்கும் உணர்வு அணையாமல் இருக்கும்.
உருவானவைகளுக்கு உணர்வுகள் உண்டு. அவைகள் உருவானவைகள், நியாயமானதோ அல்லது உபயோகமானதோ அல்ல.
அவற்றின் பயன்களுக்கும் மேல் அவை நீடித்திருக்கும்.
கருவிகள் ஜீவியத்தில் மட்டும் உருவாவதில்லை, பொருளிலும் உருவாவதால் அவைகளின் வேலை முடிந்தவுடன் அவை மறைந்து விடுவதில்லை.
வெளிநாட்டுக்கு நாம் குடி பெயர்ந்தாலும் நமது மொழியை நாம் மறந்து விடுவதில்லை.
அதே போல்தான் நமது கலாச்சாரமும்.
விக்காம் கிளம்பிக் கொண்டிருக்கிறான். டார்சி அங்கு இல்லை, **ஆனாலும் அவதூற்றின் மேல் அவனுக்கிருக்கும் ஆர்வம் உயிருடன் உள்ளது, சுறு சுறுப்பாகவும் சக்தியுள்ளதாகவும் உள்ளது.**
அவன் ஓடிப்போக எடுத்த முயற்சி தடுக்கப்பட்டபோதும் அது மறையவில்லை. சூட்சும நிலையில் உயிருடன் இருந்து லிடியாவிடம் மீண்டும் உயிர் பெற்றது.
கற்றதை மறப்பது கற்பதைவிட கடினம். மேலிருப்பது கீழிறங்கினால்தான் திருவுருமாற்றம் சாத்தியம்.

While she spoke, Wickham looked as if scarcely knowing whether to rejoice over her words, or to distrust their meaning. There was a something in her countenance which made him listen with an apprehensive and anxious attention while she added –

அவள் பேசும் பொழுது விக்காம் அவள் பேசுவதைக் கேட்டு ஆனந்தப்படுவதா அல்லது அதனை நம்பாமல் இருப்பதா என்று புரியாமல் பார்த்தான். அவளுடைய முகத் தோற்றத்தில் இருந்த ஏதோ ஒன்று அவனை பயத்துடனும், ஆர்வமாக கவனத்துடனும் கேட்க வைத்தது. அவள் மேலும் தொடர்ந்து,

136. "While there was something in her countenance that made him listen to her with an apprehensive and anxious attention".

With all her solicitude for him, he grew apprehensive and anxious.
No one can pretend in the subconscious.
The subconscious communicates itself automatically.
This is how Elizabeth was drawn to Netherfield when Jane was there.
She was drawn there by Darcy.
The traveler with Money announces himself to the robber by this vibration.
A nation's weakness communicates itself to her enemies by this sense.
Man gravitates to a woman who waits for him centred in the subconscious.
When such concentration reaches saturation we see Life Response instantaneously, as Darcy arrived at Pemberley.
From the beginning she was fully attracted to Darcy subconsciously. Her decision saturated the concentration. Hence Darcy's arrival. The subconscious goes into work slowly, gradually.
One can certainly know where his subconscious interests are by the symptoms, but full awareness is not possible.
A devotee's sister fell down from the stairs and broke her hand. He knocked his toe against the door at the same time. 150 miles of separation does not matter. The communication is in the subtle plane.
A phone call from a close friend from across the ocean announces at that exact moment as an emotional richness in the heart.
Spouses who desire the closest relationship can develop their emotional attitudes towards each other concentrated to saturation and reach this stage. **A decision to change the attitude into motive will make the relationship permanent.**
Lydia's attitude to Bingley, Wickham, Collins examined even in the text will reveal itself clearly. Only with Collins it was in the reverse. Hers was not an emotional attitude. It was one of physical sensation.
Sri Aurobindo, speaking of Richard losing the Silence He gave him, says in those days He had not enough patience. A study of subconscious movements, its symptoms, a capacity to 'tolerate' Mrs. Bennet, an attitude to take Elizabeth's abuse as advice, needs such a Patience.
"அவளுடைய முகத் தோற்றத்தில் இருந்த ஏதோ ஒன்று அவனை பயத்துடனும், கவலையுடனும் கேட்க வைத்தது".
அவளுக்கு அவன் மேலிருந்த அக்கறையும் மீறி அவனுக்கு பயமும் கவலையும் எழுந்தன.
ஆழ்மனதில் யாரும் நடிக்க முடியாது.
ஆழ்மனம் தானாகவே தொடர்புகொள்ளும்.
இவ்வாறுதான் ஜேன் நெதர்பீல்டில் இருக்கும்பொழுது எலிசபெத் அங்கு செல்ல நேரிடுகிறது.
டார்சியால் அவள் அங்கு இழுக்கப்பட்டாள்.

பணத்துடன் பிரயாணம் செய்பவர் இந்த அதிர்வால் திருடனை ஈர்க்கிறார்.
நாட்டின் பலவீனம், இந்த உணர்வின் மூலம்தான் பகைவர்களுடன் தொடர்புகொள்கிறது.
ஆழ்மனதின் மையத்தில் ஆணுக்காக காத்துக் கொண்டிருக்கும் பெண்ணை நோக்கி ஆண் ஈர்க்கப்படுகிறான்.
இது போன்ற தீவிரம் முழுமை பெறும்பொழுது டார்சி பெம்பர்லிக்கு வருவதைப்போல், வாழ்வின் மறுமொழியை நாம் உடனடியாகப் பார்க்கிறோம். **ஆரம்பம் முதலே ஆழ்மனதில் அவள் டார்சியின்பால் ஈர்க்கப்பட்டிருந்தாள். அவளுடைய தீர்மானம் தீவிரத்தை நிறைவடையச் செய்தது. அதனால் ஏற்பட்டதுதான் டார்சியின் வருகை. மெதுவாகவும் படிப்படியாகவும் ஆழ்மனம் செயல்படும்.**
ஒருவருடைய ஆழ்மன விருப்பங்கள் எங்குள்ளன என்று அவருக்கு நிச்சயமாக அறிகுறிகள் மூலம் தெரியும், ஆனால் முழுமையாக தெரிந்துகொள்வது சாத்தியமில்லை.
ஒரு அன்பருடைய சகோதரி மாடிப்படியிலிருந்து கீழே விழுந்து கையை உடைத்துக் கொண்டாள். அதே சமயத்தில் அன்பருடைய கால் கட்டை விரல் கதவில் மோதிக் கொண்டது. நூற்றி ஐம்பது மைல் இடைவெளி ஒரு பொருட்டல்ல. தொடர்பு சூட்சும நிலையில் உள்ளது.
கடல் கடந்த நண்பரின் தொலைபேசி அழைப்பு நம் மனம் உணர்ச்சியால் நிரம்பி வழியும் அதே தருணத்தில் வருகிறது
ஒருவரோடொருவருக்கு மிக நெருங்கிய உறவை விரும்பும் தம்பதிகள், அவர்களுடைய மன உணர்வுகளை ஒருநிலைப்படுத்தி முழுமை அடையச் செய்து இந்த நிலையை அடையலாம். மனோபாவத்தை நோக்கமாக மாற்ற முடிவு செய்தால் உறவு நிரந்தரமாகும்.
பிங்கிலி, விக்காம் மற்றும் காலின்ஸ் மேலுள்ள லிடியாவின் அணுகுமுறையை இக்கதையில் ஆராய்ந்தால், அது தெளிவாகப் புலப்படும். காலின்ஸிடம் மட்டும்தான் தலைகீழாக இருந்தது. அவளது மனப்பான்மை உணர்வுபூர்வமானது இல்லை. அது உடல் உணர்வாகும்.
ரிச்சர்டுக்கு அளித்த மௌனத்தை, அவர் இழந்ததைப் பற்றி ஸ்ரீ அரவிந்தர் பேசும்போது போதுமான பொறுமை அந்த நாட்களில் தனக்கு இல்லை என்று கூறுகிறார். ஆழ்மன இயக்கங்களைப் பற்றியும், அதன் அறிகுறிகளையும் ஆராய்வதற்கும், திருமதி பென்னட்டை சகித்துக் கொள்வதற்கும், எலிசபெத்தின் நிந்தனைகளை அறிவுரையாக எடுத்துக்கொள்வதற்கும், அதைப் போன்ற பொறுமை தேவை.

"*When I said that he improved on acquaintance, I did not mean that either his mind or manners were in a state of improvement, but that, from knowing him better, his disposition was better understood.*"
“அவனுடன் பழகப்பழக அவன் தேறி வருகிறான் என்று நான் சொன்னது அவனுடைய மனமோ, நடத்தையோ தேறி வருகிறது என்றல்ல, ஆனால் அவனுடன் மேலும் நன்கு பழக ஆரம்பிக்கும்பொழுது அவனுடைய இயற்கையான குணம் நமக்கு மேலும் நன்கு புரிய ஆரம்பிக்கின்றது.”

137. “From knowing Darcy better, his disposition is better understood” – Elizabeth to Wickham”.
Knowledge at its best can know anything as the very best.
The yogic rule is any defect seen in another is a defect in the one who sees.
This means Wickham’s falsehood is only the falsehood of Elizabeth.
It is in this sense Darcy took her abuse of him because of his love for her.
Mother in her effort in this direction has succeeded with everyone except those who loved cruelty.
Sri Aurobindo says He could not hurt the mosquito that bites him.
We can accept good people readily, but be neutral to bad people.
It never occurs to us that bad people are instruments of perfection to us.
Not to react to people of venomous character is no mean struggle.
When their venom is directed at us, the struggle is a direct failure. If we succeed, it is a greater struggle.
Even such success will give way when meanness is inflicted on us.
One can steel oneself against venom, but meanness is detestable, disgusting.
A yogic attitude makes us discover the meanness buried in us.
Mind cannot justify the meanness that came to us in response to what little we discovered in ourself.
One who has endeavoured yogically to uproot that meanness in himself will know the valuable service meanness from outside does.
Even after the struggle succeeds in uprooting the last vestige of meanness by the service of the meanness that came from outside, our emotions will not readily forgive the other. The question of love is no possibility.
It never strikes us that such an outside meanness tells us we are capable of a love that would ignore their meanness, that our love will not be wounded even by such venom, meanness, depravity, etc.
Such irritations announce to us the unwounded LOVE in us awaiting to surface if only we do not activate our habitual reaction.
Doing so the experience of Love is greater still.
“அவனை மேலும் நன்கு தெரிய ஆரம்பிக்கும் பொழுது, அவனுடைய இயற்கையான குணம் மேலும் நன்கு புரிய ஆரம்பிக்கின்றது என்று எலிசபெத் விக்காமிடம் கூறுகிறாள்.”

அறிவு சிறப்பாக இருக்கும்பொழுது எல்லாம் மிகச் சிறந்ததாக இருப்பதாகவே தெரியும்.
மற்றவரிடம் குறை கண்டுபிடிப்பவனிடம் அதே குறை இருக்கும் என்பதுதான் யோக சட்டம்.
விக்காமின் பொய்மை எலிசபெத்திடம் இருக்கும் பொய்மைதான் என்று அர்த்தமாகிறது.
இந்த அர்த்தத்தில்தான் டார்சி, அவள் மேலுள்ள காதலால் அவளுடைய நிந்தனையை ஏற்றுக்கொள்கிறான்.
இந்த முறையின்படி கொடுமையை விரும்புவர்களைத் தவிர தன்னுடைய முயற்சியில் அன்னை எல்லோரையும் ஜெயித்தார்.
தன்னைக் கடிக்கும் கொசுவைக் கூட தன்னால் துன்புறுத்த முடியாது என்று பகவான் கூறுகிறார்.
நல்ல மனிதர்களை நாம் உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியும், ஆனால் கெட்ட மனிதர்களிடம் நடுநிலைமையோடு நடந்துகொள்ள வேண்டும்.
மோசமான மனிதர்கள் நாம் பூரணத்துவம் எய்த கருவியாக உள்ளனர் என்று நமக்குப் புரிவதேயில்லை.
கடுமையான குணமுள்ளவர்களிடம் எதிர்வினை ஆற்றாமலிருப்பது மிகவும் கடினம்.
அவர்களுடைய கடுமை நம்மை நோக்கித் திசை திருப்பப்படும்பொழுது போராட்டம் நேரடித் தோல்வியைத் தழுவுகிறது. நாம் ஜெயித்தால் அது மேலும் பெரிய போராட்டம் ஆகும்.
சிறுமை நம்மிடம் சுமத்தப்படும்பொழுது அது போன்ற வெற்றிகூட வழி விடும்.
கடுமைக்கு எதிராக ஒருவர் தன்னை பாதுகாத்துக் கொள்ளலாம், ஆனால் சிறுமை வெறுக்கத்தக்கது, அருவருப்பானது.
யோக மனப்பான்மை நம்முள் மறைந்திருக்கும் சின்னத்தனத்தை நம்மை கண்டுபிடிக்க வைக்கிறது.
நாம் சிறிய அளவில் நம்மிடம் கண்டுபிடித்ததற்கு பதிலளிப்பதுபோல் நம்மிடம் வந்த சிறுமையை மனம் நியாயப்படுத்த முடியாது.
யார் ஒருவன் அவனிடமுள்ள சின்னத்தனத்தை யோகத்திறன் மூலம் வேரோடு அழித்துவிட்டானோ, அவனுக்கு எவ்வாறு வெளியிலிருந்து வரும் சிறுமை மிகப் பெரிய உதவியை செய்கிறது என்று புரியும் வெளியிலிருந்து வந்த சிறுமையின் உதவியால், சிறுமையின் கடைசி சுவடையும் போராட்டம் வேரோடு அழித்த பின்பும், மற்றவரை உடனடியாக மன்னிக்க நமது உணர்ச்சிகள் இடம் கொடுக்காது. காதல் என்ற கேள்வியே சாத்தியமில்லை.
அவர்களுடைய சின்னத்தனத்தை புறக்கணித்து அவர்கள் மேல் அன்பு செலுத்த முடியும் என்றும், அது போன்ற கடுமை, சிறுமை மற்றும் ஒழுக்கக்கேடு போன்றவற்றால் நம் அன்பு பாதிக்கப்படாது என்றும், வெளியிலிருந்து வரும் அது போன்ற சிறுமை கூறுகிறது என்று நமக்குத் தோன்றுவதே இல்லை.
நாம் நமது வழக்கமான பதில்களை எழுப்பாமல் இருந்தால், நமக்குள் இருக்கும் தூய்மையான அன்பு மேலெழுந்து வர காத்திருக்கும் என்பதை அது போன்ற எரிச்சல்கள் நமக்கு அறிவிக்கின்றன.
அவ்வாறு செய்யும்பொழுது அன்பின் அனுபவம் மேலும் பெரிதாக இருக்கும்.

Wickham's alarm now appeared in a heightened complexion and agitated look; for a few minutes he was silent, till, shaking off his embarrassment, he turned to her again, and said in the gentlest of accents –
விக்காமினுடைய பயம் மேலும் அதிகரித்தது, அது அவனது முகத் தோற்றத்தில் தெரிந்தது. படபடப்பாக காணப்பட்டான். சில நிமிடங்களுக்கு அவன் மௌனமாக இருந்தான்; பிறகு தன்னுடைய சங்கடமான நிலைமையை உதறித் தள்ளி, அவளை நோக்கி மிகவும் மென்மையான குரலில்,

138. “Wickham’s alarm now appeared in a heightened complexion and agitated look”.
She was full of solicitude for Wickham, but he was touched by life.
To touch a person in his most sensitive point, one word is enough.
Even without that word, one sensation is enough. He is shaken to his very roots.
He was alarmed. It showed as heightened complexion.
This is OPENING, receptivity, sincerity -- a condition in which a devotee should find himself all the time but positively.
She tried her best not to disturb him.
But, the issue, his understanding touched him.
Positively or negatively, Wickham opened to life.
Darcy opened like this to her abuse.
Such openings achieve according to their character.
Referring to Mother an issue each time it comes to mind, it is solved.
It is the subconscious becoming conscious.
Man can do it by his effort.
He can respond to it when it rises from the subconscious.
Personal issues are small incidents.
The world’s problems, if retained in the subconscious, present themselves similarly to the awakened Spirit of Man.
Consecration at that moment solves the problem for the world.

Seeking it egoistically, ego may hurt the Man.
Responding to it when it presents is the right method.
His own needs of evolving consciousness responded to by a devotee, makes him a sadhak.
It is an action befitting the Hour of God.
Such a condition for three months, says Mother, brings the Psychic forward.
At that moment Time enters into Simultaneous Time.
The Life Divine or Savitri requires this opening for reading.
World saving ideas emerge at that moment.
Should the vital or physical open like that, world saving movements or actions will be released.
Should Wickham's apprehension be reception of truth instead, his own false being would have been apprehensive.
A true opening in him, instead of false opening, would have given Georgiana to him.
True or false opening gives the progress.
The false apprehensiveness took a longer route of progress the story does not tell us.
Caroline, in accepting Darcy's wedding, gave a supreme effort to reverse herself by adopting a human attitude.
Instead of the vital human response of a pleasant compromise, had she given a true divine response recognizing the truth of Elizabeth, her own life would have witnessed what Elizabeth received.
Bingley's submission to the ruse retained his own loyalty to Jane deep down and in time his truth worked itself out.
Loyalty to Truth as well as loyalty to Falsehood works out each in their own way.
Haidee's instantaneous, truthful, idealistic action had an instantaneous miraculous emotional reward.
Mercedes was not capable of such a truth.
Charlotte's action is described by Elizabeth as mercenary. It is true.
From her own point of view, even from her own life convictions, Collins was the greatest social occasion in her life.
Her wish to relieve Elizabeth was genuine.
To stand Collins for 24 or 48 hours is the sacrifice of a lifetime.
Her own goodwill to Jane and Elizabeth was fully uncompromisingly true.
He rose to the occasion and raised her in the social horizon.
The inner receptivity, under the eloquent bombardment of Collins was enough to open her whole being.
In all the rest of her life, she would not have made an equal sacrifice.
Lydia's flying through the house is such a physical opening, an opening of her physical consciousness.
Darcy's great opening over months was enough to meet her for two minutes at Pemberley. The second meeting for longer duration was on her inner initiative.
"விக்காமுடைய பயம் மேலும் அதிகரிப்பது அவனுடைய முகத் தோற்றத்தில் தெரிந்தது, படபடப்பாகவும் காணப்பட்டான்."
விக்காமிடம் அவளுக்கு அதிக அக்கறை இருந்தது ஆனால் வாழ்க்கை அவனை தீண்டியது.
ஒருவனது மிகவும் முக்கியமான இடத்தைத் தொடுவதற்கு ஒரு வார்த்தை போதுமானது.
அந்த ஒரு வார்த்தைகூட இல்லாது, ஒரு உணர்வே போதுமானது. அவன் வேரிலேயே ஆட்டம் கண்டு விடுவான்.
அவனுக்கு பயம் எழுந்தது. முகத் தோற்றத்தில் அது வெளிப்பட்டது.
விழிப்பு, ஏற்புத் திறன், உண்மை-- ஒரு அன்பர் நேர்மறையாக எப்பொழுதும் இருக்க வேண்டிய நிலையாகும்.
அவனை தொந்தரவு செய்யக் கூடாது என்று அவள் பெரும் முயற்சி எடுத்தாள்.
ஆனால் விஷயமும் அதன் புரிதலும் அவனை தொட்டது.
நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ விக்காம் வாழ்க்கைக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டான்.
அவளுடைய நிந்தனைக்கு டார்சி இவ்வாறு மலர்ந்தான்.
இது போன்று வாயில் திறப்பது அவர்களுடைய குணத்திற்கேற்ப சாதிக்கும்.
பிரச்சினை மனத்தில் எழும் பொழுதெல்லாம் அன்னையிடம் கூறினால், அது தீரும்.
இது ஆழ்மனம் மேல் மனம் ஆவது.
மனிதன் தன்னுடைய முயற்சியால் இதைச் செய்யலாம்.
அது ஆழ்மனதிலிருந்து எழும்பொழுது அவன் அதற்கு பதிலளிக்கலாம்.
சொந்த விஷயங்கள் எல்லாம் சிறு நிகழ்வுகளாகும்.
உலகத்தின் பிரச்சினைகள் ஆழ்மனதில் தங்க வைக்கப்பட்டிருந்தால், மனிதனின் விழிப்புற்ற ஆன்மாவுக்கு அவை சிறு நிகழ்வுகளாக மாறும்.
அச்சமயத்தில் செய்யப்படும் சமர்ப்பணம் உலகப் பிரச்சினையைத் தீர்க்கும்.
அதை அகந்தையுடன் நாடினால் அகந்தை மனிதனை துன்பத்துக்கு ஆளாக்கும்.
அது வரும்பொழுது அதற்கு பதிலளிப்பதே சரியான முறையாகும்.

வெளிவரும் ஜீவியத்தின் அவருடைய தேவைகளுக்கு ஒரு அன்பர் மறுமொழி அளித்தால், அவர் சாதகனாக மாறுவார்.
அது இறைவன் வரும் தருணத்திற்கு ஏற்ற செயலாகும்.
இது போன்ற நிலைமை மூன்று மாதங்களுக்கு நீடித்தால், சைத்திய புருஷன் வெளிவருவான் என்று அன்னை கூறுகிறார்.
அத்தருணத்தில் காலம் மூன்றாம் நிலைக் காலத்திற்குள் நுழைகிறது.
'தி லைப் டிவைன்' அல்லது 'சாவித்ரியைப்' படிப்பதற்கு இந்த விழிப்பு வேண்டும்.
உலகை காப்பாற்றும் கருத்துகள் அத்தருணத்தில் எழும்.
உணர்வோ அல்லது உடலோ இவ்வாறு விழிப்புற்றால், உலகைக் காப்பாற்றவல்ல இயக்கங்களோ அல்லது செயல்களோ வெளி வரும்.
உண்மையை ஏற்றுக்கொள்வதில் விக்காமிற்கு பயம் இருந்திருந்தால், அவனுடைய பொய்யான ஜீவன் அச்சம் அடைந்திருக்கும்.
பொய்யான விழிப்புக்கு பதில் உண்மையான விழிப்பு அவனிடம் இருந்திருந்தால், ஜார்ஜியானா அவனுக்கு கிடைத்திருப்பாள்.
நிஜமான விழிப்போ அல்லது பொய்யான விழிப்போ, இரண்டும் முன்னேற்றத்தைத் தரும்.
பொய்யான அச்சம் முன்னேற்றத்திற்கு நீண்ட பாதை எடுத்துக்கொண்டதை கதை நமக்கு கூறுவதில்லை.
டார்சியின் திருமணத்தை ஏற்றுக்கொண்ட காரலின், மனித மனப்பான்மையின் மூலம் தன்னை மாற்றிக் கொள்ள பெரும் முயற்சி எடுத்தாள்.
உணர்வுரீதியாக இனிமையான சமரசங்களை மேற்கொள்ளாமல் எலிசபெத்தின் உண்மையை அடையாளம் கண்டு உண்மையான தெய்வீக மறுமொழி அளித்திருந்தால், எலிசபெத்திற்கு கிடைத்த வாழ்க்கையைப்போல் அவளுக்கும் கிடைத்திருக்கும்.
பிங்கிலி சூழ்ச்சிக்கு அடிபணிந்தது, ஜேனிடம் அவன் கொண்டிருந்த விசுவாசத்தை ஆழத்தில் நிலை நிறுத்தியது. காலப்போக்கில் உண்மை அதுவாகவே செயல்பட்டு விஷயம் முடிந்தது.
உண்மைக்கான விசுவாசமும், பொய்க்கான விசுவாசமும், அதனதனுடைய வழியில் விஷயத்தை முடிக்கும்.
ஹெய்டி-யின் உண்மையான இலட்சியமாக கணப் பொழுதில் எழுந்த செயலுக்கு அற்புதமான உணர்வுபூர்வமான பரிசு கணப் பொழுதில் கிடைத்தது.
அது போன்ற உண்மை மெர்சிடஸ்-ஸிடம் இல்லை.
ஷார்லெட்டின் செயல் ஆதாய மனப்பான்மையுடையது என்று எலிசபெத் விவரிக்கிறாள். அது உண்மை.
அவளுடைய பார்வையிலும், அவளுடைய வாழ்க்கையின் திட நம்பிக்கைகளிலும், அவளுடைய வாழ்க்கையில் காலின்ஸ் மிகப் பெரிய சமூக சந்தர்ப்பமாக இருந்தான்.
எலிசபெத்தை விடுவிக்கும் அவளுடைய ஆசை உண்மையானது.
இருபத்தி நான்கு அல்லது நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு காலின்ஸை தாங்கிக்கொள்வது வாழ்நாள் தியாகமாகும்.
அவள் ஜேனிடமும், எலிசபெத்திடமும் கொண்டிருந்த நல்லெண்ணம் சந்தேகத்துக்கு இடமில்லாமல் முழுமையாக உண்மையானது.
அவன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உயர்ந்து, சமூகத்தில் அவளுடைய நிலையை உயர்த்தினான்.
காலின்ஸின் பேச்சுத் திறமை, அவளுடைய முழு ஜீவனையும் திறக்க அவளுடைய ஏற்புத் திறனுக்கு போதுமானதாக இருந்தது.
இதற்குச் சமமான தியாகத்தை அவள் மீதி வாழ்நாளில் செய்திருக்க மாட்டாள்.
வீடு முழுவதும் ஓடிக் கொண்டிருந்த லிடியாவுக்கு இருந்த அது போன்ற ஜடநிலை விழிப்பு, ஜட ஜீவியத்தின் விழிப்பாகும்.
பல மாதங்களாக டார்சிக்கு ஏற்பட்டிருந்த உயர்ந்த விழிப்பு அவளை இரண்டு நிமிடத்திற்கு பெம்பர்லியில் சந்திக்கப் போதுமானதாக இருந்தது. அவளுடைய தன்முனைப்பால் இரண்டாவது சந்திப்பு நீண்ட நேரத்திற்கு இருந்தது.

139. "Shaking off his embarrassment".
Embarrassment is the need to act differently from what you feel.
Embarrassment is emotional manners.
Mind alone can overcome embarrassment.
To overcome embarrassment Mind has to espouse another emotion.
It is histrionics.
One can do so for reasons of culture or falsehood.
Wickham has the capacity. He uses it for falsehood.
His further speech is in the gentlest accents.
It is the accent, in the measure that succeeds, which conveys the message, not the content or the words.
Elizabeth is trying the very opposite.
Her accents were of the finest solicitude while her words speak the language of rationality. **Her inoffensive intention**

gets communicated, not her rational explanation.
Benevolence cannot be communicated by a belligerent tone.
No punishment can be delivered by a sweet voice.
Means and goal must tally with each other.
Harmony accomplishes.
Conflict cannot consummate.
Now that she knows the truth of his conduct, all his diplomacy was lost on her.
Her response physically removed him for the rest of the day.
She was never an emotional object for him ever.
He came there only in response to her deeply felt desire to meet him once before parting.
Goodwill and ill-nature going together as in Charlotte, parting and solicitude as in Elizabeth are natural phenomena if the relationship is to survive. Otherwise one totally forgets the other and he disappears from the scene.
Nothing is abrupt in Nature.
Any event gradually develops.
“அவனுடைய சங்கடத்தை உதறித் தள்ளினான்”.
நாம் நினைப்பது போலல்லாமல் மாறுதலாக நடந்தகொள்ள சங்கட உணர்வு அவசியமாகிறது.
சங்கடமான உணர்வு உணர்ச்சிகரமான நடத்தையாகும்.
மனத்தால் மட்டுமே சங்கட உணர்வை வெல்ல முடியும்.
சங்கட உணர்வை வெல்ல மனம் வேறொரு உணர்ச்சியை மேற்கொள்ள வேண்டும்.
அது நடிப்புத் திறன்.
நாகரிகம் கருதியும் இவ்வாறு இருக்கலாம் அல்லது பொய்மையினாலும் இவ்வாறு நடந்துகொள்ளலாம்.
விக்காமிடம் திறமை இருக்கிறது. அவன் அதனை பொய்மைக்காகப் பயன்படுத்திக்கொள்கிறான்.
அவன் மேலும் பேசுவது மிகவும் பண்புடையதாக இருக்கிறது.
பேசும் முறையே செய்தியைத் தெரிவிப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது, பேசப்படும் விஷயமோ அல்லது வார்த்தைகளோ அல்ல.
இதற்கு நேர்மாறானதை எலிசபெத் முயற்சி செய்கிறாள்.
அவள் பேசும் முறை மிகுந்த அக்கறையுடன் உள்ளது.
அவள் பேசும் வார்த்தைகள் விவேகமாக உள்ளன. **அவளது புண்படுத்தாத நோக்கம் உணர்த்தப்படுகிறது, அவளது விவேகமான விளக்கம் உணர்த்தப்படுவதில்லை.**
உதார குணத்தை கடுமையான குரலால் தெரிவிக்க முடியாது.
இனிமையான குரலில் தண்டனை வழங்க முடியாது.
முறையும் குறிக்கோளும் ஒன்றை ஒன்று ஒத்திருக்க வேண்டும்.
சுமுகம் சாதிக்கும்.
பிணக்கம் பூர்த்தி செய்யாது.
அவனுடைய நடத்தையின் உண்மை இப்பொழுது அவளுக்குத் தெரிந்துவிட்டதால், அவள் மீது அவனது சாதுர்யம் செயல்படவில்லை.
அவள் நடந்துகொண்ட விதம் அன்று முழுவதும் அவனை அங்கிருந்து விலக்கியது.
அவளை எப்பொழுதுமே அவன் உணர்வுபூர்வமாக சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லை.
அவன் கிளம்புவதற்கு முன் அவனை சந்திக்க வேண்டும் என்கிற அவளுடைய ஆசைதான் அவனை அங்கு வரவழைத்தது.
ஷார்லெட்டிடம் நல்லெண்ணம், கெட்ட குணம் இரண்டும் ஒன்றாக இருப்பதும், எலிசபெத்திடம் பிரிவு, அக்கறை இரண்டும் ஒன்றாக இருப்பதும், உறவு நீடிப்பதற்குத் தேவையான இயற்கையான நிகழ்வுகள் ஆகும். இல்லாவிடில் ஒருவர் மற்றவரை முழுமையாக மறந்து அங்கிருந்து மறைந்தே விடுவர்.
இயற்கையில் எதுவுமே திடீரென்று ஏற்படுவதில்லை.
எந்த ஒரு நிகழ்ச்சியும் படிப்படியாக வளரும்.

"*You, who so well know my feelings towards Mr. Darcy, will readily comprehend how sincerely I must rejoice that he is wise enough to assume even the appearance of what is right. His pride, in that direction, may be of service, if not to himself, to many others, for it must deter him from such foul misconduct as I have suffered by. I only fear that the sort of cautiousness, to which you, I imagine, have been alluding, is merely adopted on his visits to his aunt, of whose good opinion and judgment he stands much in awe. His fear of her has always operated, I know, when they were together; and a good deal is to be imputed to his wish of forwarding the match with Miss De Bourgh, which I am certain he has very much at heart."*
“சரியான தோற்றத்தை ஏற்கும் அளவிற்கு டார்சி புத்திசாலியாக மாறிவிட்டான் என்று நான் மனமார சந்தோஷப்படுவதை, டார்சியைப் பற்றி நான் எப்படி உணருகிறேன் என்பதை நன்கு அறிந்த நீ புரிந்து கொள்வாய். அந்த வகையில் அவனுடைய பெருமிதம் அவனுக்கு உதவி புரியாவிட்டாலும், மற்றவர்களுக்கு

பெரிய உதவி செய்யும். என்னிடம் தவறாக நடந்துகொண்டதுபோல் மற்றவர்களிடம் நடந்துகொள்வதை தடுத்து நிறுத்தும். நீ குறிப்பாகச் சொல்வதுபோல் அவனுடைய எச்சரிக்கையான நடத்தை அவனுடைய சித்தி வீட்டிற்குச் செல்லும்பொழுது அவளுடைய நல்ல எண்ணத்திற்கும் அவளுடைய மதிப்பீட்டிற்கும் பெரிதும் மதிப்புக் கொடுப்பதினால் நடந்துகொண்ட ஒன்றாக இருக்கும் என்பதுதான் எனது பயம். அவர்கள் சேர்ந்து இருக்கும்பொழுது அவனுக்கு அவளிடம் பயம் இருக்கும் என்று எனக்குத் தெரியும். மிஸ் டீ பர்க்குடன் ஜோடி சேர வேண்டும் என்ற அவனுடைய விருப்பத்திற்கு உகந்தவாறு அவன் நடந்துகொள்ள வேண்டும், ஏனெனில் அவனுக்கு அவளை மிகவும் பிடிக்கும் என்று எனக்கு நிச்சயம் தெரியும்."

140. She allows him to talk of the foul misconduct of Darcy in spite of her fresh knowledge.
அவளுக்கு உண்மை தெரிந்த பிறகும், டார்சியின் நடத்தையைப் பற்றி அவன் தவறாகப் பேசுவதற்கு அவள் அனுமதி அளிக்கிறாள்.

141. He further fouls Darcy about his 'foul conduct'. She listens patiently. This is the attitude of Romance. Knowing the evil of the man, she disregards it in the hope of seeking Romance in a life with him. Done superstitiously, she is wiped out. Taken to it idealistically, the strength of her ideal makes him turn around. Romance begins to flower. Darcy does it. Elizabeth turns around. To some extent Darcy does it to Wickham. The story ends there. It does not seek eternal Romance or even Romance in life. Only Darcy seeks it in Elizabeth.
டார்சியின் மோசமான நடத்தையைப் பற்றி பேசி அவனை மேலும் தாக்குகிறான். அவள் பொறுமையாகக் கேட்டுக்கொள்கிறாள். இதுதான் காதலின் மனோபாவம். ஒரு மனிதனின் தீய குணத்தைப் பற்றி தெரிந்திருந்தும் வாழ்க்கையில் அவனுடன் காதல் கொள்வதற்கு ஆசைப்படும் ஒரு பெண், அதனை புறக்கணிக்கிறாள். மூட நம்பிக்கையுடன் செய்தால் அவள் அழிந்து விடுவாள். இலட்சியத்துடன் அதில் ஈடுபட்டால் இலட்சியத்தின் வலிமை அவனை மாற்றும். காதல் மலர ஆரம்பிக்கும். டார்சி இதனைச் செய்கிறான். எலிசபெத் மாறுகிறாள். ஓரளவிற்கு விக்காமிடமும் இது போல் டார்சி நடந்துகொள்கிறான். கதை அங்கு முடிகிறது. அது அமர காதலையும் நாடுவதில்லை, அல்லது வாழ்க்கையில் காதலையும் நாடுவதில்லை. டார்சி மட்டுமே அதை எலிசபெத்திடம் நாடுகிறான்.

142. "You, who well knew my feelings towards Darcy" – Wickham to Elizabeth.
To enlist one's sympathetic support, the best method is to make him the standard.
Now, she knows his true feelings for Darcy – vengeful jealousy.
In his first meeting he told her his father was an attorney, "as your uncle is".
False opposition is very successful till it is exposed. Once exposed the tricks turn upon the user. The whole world opposed socialism. On seeing the wide spread waves of socialistic movements, Capitalism stole its thunder and deprived the socialistic movement the power to expand or even survive.
The Congress in India on seeing the communistic trend in Kerala took a stand in favour of labour and introduced land ceiling depriving the Communist party its energetic impetus for growth. Wickham was now exposed. Not knowing he was exposed at Hunsford, he resorted to the old weapon which turned on him and hurt him.
Europe's aristocracy sent her population to USA. Equality of the French Revolution was not enough to establish equality in Europe. The immigrants went to America and established complete equality which made them rich and powerful. It made them steal a march over Europe. Now Europe imitates America. The biggest aspect of imitation is the founding of the EU. **All this does not prevent the Europeans from talking the old language of aristocracy in a hundred different ways. That is the fixity of the physical of human nature.**
Wickham emptied in vain all his old armour on an Elizabeth endowed with fresh information. But he persisted. We see his art in practice. The gentle voice, the sweet accent, the assumed sympathy, the commissioning of commiseration was all tried in vain. She was unmoved but sympathetic.
All that was achieved on that day of parting was he was physically removed to another part of the house for the rest of the day.
As the physical separation of Wickham was effected, Jane Austen tells us Lydia was preparing to leave for Brighton.
Lydia was waiting for Elizabeth to quit Wickham to occupy her place.
"டார்சியைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்று உனக்கு நன்றாகத் தெரியும்," என்று விக்காம் எலிசபெத்திடம் கூறுகிறான்.
ஒருவரது அனுதாபத்துடன்கூடிய ஆதரவு வேண்டுமெனில் அவனை அளவுகோலாக மாற்றிக்கொள்வதே சிறந்த முறையாகும்.
இப்பொழுது அவளுக்கு, அவனுக்கு டார்சியின் மேல் வன்மத்துடன் கூடிய பொறாமை உணர்வு இருப்பது தெரிந்திருக்கிறது.
முதல் சந்திப்பில், அவன் தன்னுடைய தந்தை அவளது மாமாவைப் போல் ஒரு வக்கீல் என்று கூறினான்.
பொய்யான எதிர்ப்பு அதன் சுய ரூபம் வெளிப்படும்வரை வெற்றிகரமாகச் செயல்படும். வெளிப்பட்டுவிட்டால் பயன்படுத்தியவரின் மீதே அது அதனுடைய வேலையைக் காண்பிக்கும். உலகம் முழுவதிலும் பொதுவுடமைக்கு எதிர்ப்பு இருந்தது. பொதுவுடைமை இயக்கங்கள் எல்லா இடங்களிலும் பரவ

ஆரம்பித்ததைப் பார்த்து, முதலாளித்துவம் அதனை அடக்கி, அது வளர்வதற்கோ அல்லது நீடிப்பதற்கோகூட இடம் அளிக்கவில்லை.

கேரளாவில் பொதுவுடமையின் வளர்ச்சியைக் கண்ட காங்கிரஸ் கட்சி, தொழிலாளிகளுக்குச் சாதகமான நிலையை மேற்கொண்டும், நில உச்ச வரம்புச் சட்டத்தை அமுல்படுத்தியும், கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியைத் தடுத்தனர்.

விக்காமைப்பற்றி இப்பொழுது எல்லாம் வெளியே தெரிந்து விட்டது. ஹன்ஸ்போர்டில் அவனைப் பற்றி தெரிந்து விட்டது என்பதை அறியாதவனாக, தனது வழக்கப்படி நடந்துகொள்ள ஆரம்பித்தான். அது அவனுக்கு எதிராகத் திரும்பி அவனைத் தாக்கியது.

ஐரோப்பாவின் பிரபுத்துவம் மக்களை அமெரிக்காவிற்கு அனுப்பியது.

பிரெஞ்சுப் புரட்சியின் சமத்துவம், ஐரோப்பாவில் சமத்துவத்தை ஏற்படுத்த போதுமானதாக இல்லை. அமெரிக்காவிற்குக் குடி பெயர்ந்தவர்கள் அங்கு சமத்துவத்தை முழுமையாக நிலைநிறுத்தி பணக்காரர்களாகவும், சக்தி வாய்ந்தவர்களாகவும் மாறினர். அது அவர்களை ஐரோப்பாவையும் மிஞ்ச வைத்தது. இப்பொழுது ஐரோப்பா அமெரிக்காவைப் பின்பற்றுகிறது. பின்பற்றியதன் மிகப் பெரிய விஷயம் European union அமைக்கப்பட்டதுதான். **ஆனால் இவை எல்லாமும் பிரபுத்துவத்தின் பழைய பாஷையை ஐரோப்பியர்கள் இன்னமும் நூறு வித்தியாசமான வகைகளில் பேசி வருவதை தடுத்து நிறுத்த முடியவில்லை. அது மனித வர்க்கத்தின் மாறாத ஜடத் தன்மை ஆகும்.**

விஷயம் தெரிந்துகொண்ட எலிசபெத்திடம் அவனது திறமைகள் எல்லாம் பயனற்றுப் போயின. ஆனாலும் அவன் விடாது முயற்சி செய்தான். அவன் செயல்படும் விதத்தில் அவனுடைய திறமையைப் பார்க்கிறோம். மென்மையான குரல், இனிமையான உச்சரிப்பு, பொய்யான அனுதாபம், காட்டும் இரக்கம் அனைத்தும் பயனற்றுப் போயின. அவள் இதனால் பாதிக்கப்படவில்லை ஆனால் அனுதாபம் குறையவில்லை.

பிரியும் நாளன்று அவன் தன் கண்ணில் படாதவண்ணம் வீட்டின் வேறொரு பகுதில் அவனை இருக்க வைத்ததுதான் அவளால் செய்ய முடிந்தது.

ஜடநிலையில் விக்காமுடன் பிரிவு ஏற்பட்டபின் லிடியா பிரைட்டனுக்கு போவதற்குத் தயாராகிக் கொண்டிருப்பதை ஜேன் ஆஸ்டின் நமக்குக் கூறுகிறார். **விக்காமை விட்டு எலிசபெத் விலகினால் அந்த இடத்தை எடுத்துக்கொள்வதற்கு லிடியா காத்துக் கொண்டிருக்கிறாள்.**

143. “His pride in that direction may be of service”.

Man is the prime mover; every other thing is his instrument.

Education at Oxford did him a great service.

Ego is the Man here; Man’s ego is his social ego. The personal turn is given by his temperament. It is the force of Nature. His own temperament gets a unique expression in each Man. That uniqueness is at the first stage of Nature and next of the ego. **That uniqueness is the basis of his spiritual Individuality.** Shedding the ego, overcoming the force of Nature, the spiritual element comes into its own to expand into the universe and rise to transcendence.

Darcy readily saw the need to shed his vital ego.

Elizabeth moved from the vital to the Mental.

Darcy had a well developed vital ego and decided to shed it.

To that extent the Force of Nature was shed equally.

It is transformation, but limited.

Even farmers can breed a new variety of flowers.

Language creates its best phrases, sometimes, at the ordinary level of the population.

Glenn Doman is no educationist or thinker or a genius in education.

His practical experience created a very original method of education.

The ten rules of psychic education fully followed in routine acts releases the Psychic, the result of a yogic effort of fifty years or more.

Democracy empowers any voter to rise to any part. The first Lok Sabha had five illiterates as Members.

With third grade education, one became a Chief Minister.

A clown ruled the world for eight years. Stalin presided over a Superpower for thirty years with the education of a worker.

Akbar was illiterate.

Khrushchev learnt reading and writing at 29.

Life remains open fully at all levels.

“அத்திசையில் அவன் செலுத்தும் தற்பெருமை பயனுள்ளதாக இருக்கலாம்.”

மனிதன்தான் முக்கியமான ஆயுதம், மற்ற எல்லாமே அவனுடைய கருவிகள்தான்.

ஆக்ஸ்போர்ட்-ல் கல்வி கற்றதுதான் அவனுக்குப் பேருதவி செய்தது.

மனிதன் இங்கு அகந்தையாக இருக்கிறான்; மனிதனின் அகந்தை சமூக அகந்தையாகும். அவனது மனவுணர்வுகள் அதை தனிமனித அகந்தையாக_மாற்றுகிறது. இயற்கையின் சக்தி அது. அவனது மனவுணர்வுகள் ஒவ்வொரு மனிதனிடமும் தனித்தன்மை வாய்ந்த வெளிப்பாடுகளைப் பெறும்.

அத்தனித்தன்மை அகந்தைக்கு அடுத்ததாக இருக்கும் இயற்கையின் முதற் படியாகும். **அத்தனித்தன்மை அவனுடைய ஆன்மீகத் தனித்துவத்தின் அடிப்படையாகும்.** அகந்தையை கைவிடுதல், இயற்கையின் சக்தியை எதிர்கொள்ளுதல், இவை ஆன்மீக விஷயங்கள், அதன் தனித்தன்மையுடன் பிரபஞ்சமாக விரிவடையவும், பிரம்மத்தை நோக்கி உயரவும் உதவி புரிகின்றன.

உணர்வின் அகந்தையை கைவிட வேண்டும் என்பதை டார்சி உடனடியாகப் பார்த்தான்.

எலிசபெத் உணர்விலிருந்து மனத்திற்கு மாறினாள்.

நன்கு வளர்ந்த உணர்வின் அகந்தை டார்சியிடம் இருந்தது, அதனை விட்டு விடத் தீர்மானித்தான்.

அந்த அளவிற்கு இயற்கையின் சக்தியும் சமமாகக் கை விடப்பட்டது.

அது திருவுருமாற்றம், ஆனால் ஒரு அளவிற்குட்பட்டதாக இருந்தது.

புது விதமான பூக்களை விவசாயிகளால்கூட உருவாக்க முடியும்.

மொழி, சில சமயங்களில் சாதாரண மக்களிடம்கூட சிறந்த சொற்றொடர்களை உண்டாக்க முடியும்.

Glenn Doman ஒரு கல்வியாளரோ, சிந்தனைவாதியோ அல்லது கல்வித்துறையில் ஒரு மேதையோ அல்ல.

அவருடைய நடைமுறை அனுபவம் ஒரு சிறந்த கல்வி முறையை உருவாக்கியது.

பழக்கமான செயல்களில் சைத்தியக் கல்வியின் பத்து விதிகளை முழுவதுமாகக் கடைப்பிடித்தால், சைத்தியபுருஷன் வெளிவருவான்.

இது ஐம்பது வருடங்கள் அல்லது அதற்கு மேலும் எடுக்கும் யோக முயற்சியின் பலனாகும்.

மக்களாட்சி, வாக்காளர் யாவரையும் எந்த நிலைக்கும் உயர வாய்ப்பு அளிக்கிறது. முதல் பாராளுமன்ற மக்களவையில் ஐந்து எழுதப் படிக்கத் தெரியாத உறுப்பினர்கள் இருந்தனர்.

மூன்றாவது வகுப்பு படித்த ஒருவர் முதல் மந்திரியானார்.

ஒரு கோமாளி எட்டு வருடங்கள் உலகை ஆண்டார். தொழிலாளிக்குரிய கல்வியைப் பெற்றிருந்த ஸ்டாலின் ஒரு வல்லரசுக்கு முப்பது வருடங்கள் தலைமை வகித்தார்.

அக்பர் எழுத்தறிவு இல்லாதவர்.

இருபத்தி ஒன்பதாம் வயதில் குருஷ்ஷேவ் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார்.

எல்லா நிலைகளிலும் வாழ்க்கை முழுவதுமாக தன் கதவுகளைத் திறந்து வைத்துள்ளது.

144. "Such foul misconduct as I have suffered".

The response was a smile in Elizabeth which she suppressed, not disgust.

He was able to indulge in that insinuation as he sensed her underlying sympathy.

Here we see the inner outer correspondence.

Nothing comes to us that is not there in us.

The variations are many.

A little anger unconquered in us makes another angry at us.

My timidity, incapable of anger, is temptation for another to be angry at me.

Someone abused the Buddha at length as he had fully dissolved anger.

The Man came to the Buddha as he was one in whom his own anger could be dissolved.

Mr. Bennet's freedom tempted Mrs. Bennet to exploit it.

Elizabeth's falsehood brought Wickham to her.

Jane's capacity to be deluded made Caroline play her tricks on her.

Elizabeth's strength invited Lady Catherine's strength to quarrel.

Stupid Collins was attracted by the stupidity of Mrs. Bennet.

Lydia's resourcefulness at the level of physical initiative and energy went to Wickham who was equally resourceful at the vital level.

Bingley's weakness attracted Darcy's strength.

One can be neutral and reflect the outer event without contributing to the quality positively or negatively.

Meryton reflects the French Revolution.

Civilised India was invaded by barbaric Muslims.

Hitler attacked France and England as they egged him on in his criminal attitude.

USA was attacked by Japan because Japan wanted to be conquered.

USA was provoked by Germany as she was insular and isolated while poised for world leadership.

The rule of action and reaction is one, variations are many.

Pondicherry attracted Sri Aurobindo as the Psychic was well developed in the Southern parts of India.

"என்னிடம் தவறாக நடந்துகொண்டது போல்."

இதற்கு பதிலளிப்பது போல் எழுந்த அவளது புன்னகையை அவள் அடக்கிக் கொண்டாள், வெறுப்பு எழவில்லை.

அவளுக்குள் இருக்கும் அனுதாபத்தை உணர்ந்த அவன் அதை மெதுவாகப் பயன்படுத்திக்கொண்டான்.

இங்கு நாம் அகம் புறம் இவற்றின் தொடர்பை காண்கிறோம்.

நம்மிடம் இல்லாதது எதுவும் நமக்கு வராது.

வேறுபாடுகள் பல.
நம்மிடம் வெற்றிகொள்ளப்படாமல் இருக்கும் சிறிதளவு கோபம், மற்றவரை நம் மீது கோபப்பட வைக்கும்.
நம்முடைய கோழைத்தனம், கோபம்கொள்ளும் இயலாமை, மற்றவரை நம் மீது கோபப்படத் தூண்டும்.
கோபத்தை முழுவதுமாக கரைத்துவிட்ட புத்தரை, ஒருவர் நீண்ட நேரத்திற்கு திட்டிக் கொண்டு இருந்தார்.
மனிதன் தன்னிடமுள்ள கோபத்தை கரைப்பதற்கு புத்தரிடம் வந்தான்.
திரு பென்னட் அளித்த சுதந்திரத்தை, திருமதி பென்னட் முழுவதுமாகப் பயன்படுத்திக் கொண்டாள்.
எலிசபெத்தின் பொய்மை விக்காமை அவளிடம் வரவழைத்தது.
ஏமாறும் திறனுடைய ஜேனை, காரலின் ஏமாற்றுகிறாள்.
எலிசபெத்தின் வலிமை, லேடி காதரின் வலிமையை சண்டையிட அழைத்தது.
திருமதி பென்னட்டின் முட்டாள்தனம், முட்டாள் காலின்ஸை வரவழைத்தது.
ஜடநிலையின் தன்முனைப்பும், சக்தியுமாக இருந்த லிடியாவின் திறமைகள், உணர்வு நிலையில் அதே அளவு திறமைசாலியாக இருந்த விக்காமிடம் சென்றது.
பிங்கிலியின் பலவீனம் டார்சியின் பலத்தைக் கவர்ந்தது.
நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ நிகழ்ச்சிகளின் தரத்திற்கு எந்த வித பங்கும் அளிக்காமல், ஒருவர் நடுநிலையோடு புற நிகழ்ச்சிகளைப் பிரதிபலிக்கலாம்.
பிரெஞ்சுப் புரட்சியை மெரிடன் பிரதிபலிக்கிறது.
நாகரிகத்தில் சிறந்து விளங்கிய இந்தியா மீது பண்பற்ற முஸ்லீம்கள் படையெடுத்தனர்.
ஹிட்லர் குற்றம் புரியும் அவரது மனப்பான்மையை ஊக்குவித்த பிரான்ஸையும், இங்கிலாந்தையும் தாக்கினார்.
ஜப்பான், தான் வெல்லப்படவேண்டும் என்பதற்காக அமெரிக்காவைத் தாக்கியது.
தனித்தும் தனிமைப்படுத்தப்பட்டும் உலகத் தலைமைக்குத் தயார் நிலையில் இருந்த அமெரிக்காவை, ஜெர்மனி தூண்டி விட்டது.
செயலுக்கும் எதிர்வினைக்கும் விதி ஒன்றுதான், வேறுபாடுகள் பல.
இந்தியாவின் தெற்குப் பகுதிகளில் சைத்திய புருஷன் நன்கு வளர்ச்சி அடைந்து இருந்ததால், பாண்டிச்சேரி ஸ்ரீஅரவிந்தரை கவர்ந்தது.

145. "the sort of cautiousness you have been alluding to is merely adopted on his visits to his aunt".
Behaviour can be adapted to a situation, not character.
One cannot think of a defect in another which is not in him.
Unquestioning faith, unsuspecting nature, single minded devotion are phrases expressive of social culture.
Man is like air which is the same everywhere in some aspects, like a tree which differs from other trees in other aspects, while he is unique in his being human.
Man is a miniature of the world or even the universe.
To understand another Man, one has to pay attention to all these aspects.
One who understands himself can understand others.
Those in whom Mind is not developed will have the sense mind awake.
They can feel as others feel.
One whose sense Mind is awake coming into an intellectual atmosphere will impress everyone as a genius as he understands what no one among them perceives.
In the field of acting, music, art, literature, this essential defect is a valuable asset.
Oppressed people having social opportunities will have this tremendous advantage.
Wickham has this advantage.
Enjoying the strength of weakness will go a long way as an opportunity, if positively used.
A temperamental advantage becoming a social opportunity depends upon another factor, any of the social assets, e.g. secretive nature.
Social upward movement throws open its avenues to these people readily.
A proper combination has taken rare individuals to rare heights.
Moksha itself is achieved by many by such routes.
As the Psychic is the spiritual centre, there are similar centres of the whole plane in the vital, mental, planes. They rise like this even if these are not a whole personality.
"நீ குறிப்பாகச் சொல்லும் அவனுடைய எச்சரிக்கையான நடத்தை அவனுடைய சித்தி வீட்டிற்குச் செல்லும் பொழுது அவன் ஏற்படுத்திக்கொண்டதாக இருக்கும்."
சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடத்தையை மாற்றிக்கொள்ளலாம், குணத்தை அல்ல.
ஒருவனிடம் இல்லாத குறையை அவனால் மற்றவனிடம் பார்க்க முடியாது.
கேள்வியே இல்லாத நம்பிக்கை, சந்தேகப்படாத சுபாவம், ஒருமுகப்படுத்திய பக்தி ஆகியவை சமூக கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் சொற்றொடர்கள் ஆகும்.

சில கோணங்களில் எங்கும் ஒரே மாதிரியாக இருக்கும் காற்றைப் போல் மனிதன் இருக்கிறான், வேறு பல விஷயங்களில் மற்ற மரங்களிலிருந்து வித்தியாசப்படும் மரத்தைப்போல் இருக்கிறான், மனிதனாக தனித்தன்மை வாய்ந்தவனாக இருக்கிறான்.

மனிதன் உலகத்தின், ஏன், பிரபஞ்சத்தின் சிறிய பிரதிபலிப்பாகக்கூட இருக்கிறான்.

இன்னொரு மனிதனை புரிந்துகொள்ள வேண்டுமென்றால், ஒருவர் இந்த எல்லா விஷயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

தன்னைப் புரிந்துகொண்டவனே மற்றவர்களைப் புரிந்துகொள்வான்.

மனம் வளர்ச்சியடையாது இருப்பவர்களிடம் உணர்வின் மனம் விழிப்பாக இருக்கும்.

மற்றவர்கள் நினைப்பதுபோல் அவர்களும் நினைப்பார்கள்.

உணர்வின் மனம் விழிப்பாக இருப்பவர் அறிவுபூர்வமான சூழலுக்கு வரும்பொழுது எல்லோரையும் அவர் ஒரு மேதாவி என வியப்பிலாழ்த்தலாம். ஏனெனில் மற்றவர்களால் புரிந்துகொள்ள முடியாததை அவர் புரிந்து கொள்வார்.

நடிப்பு, இசை, கலை, இலக்கியம் போன்ற விஷயங்களில் இந்த முக்கியமான குறைபாடு விலைமதிப்பற்ற சொத்தாகும்.

ஒடுக்கப்பட்ட மனிதர்களுக்கு சமூக வாய்ப்புகள் கிடைக்கும் பொழுது, இந்த பெரும் அனுகூலம் இருக்கும்.

விக்காமிற்கு இந்த அனுகூலம் இருக்கிறது.

பலவீனத்தின் பலத்தை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டால் அது வாய்ப்பாக மாறும்.

மனவுணர்வின் நன்மை சமூக வாய்ப்பாக மாறும்பொழுது வேறொரு காரணக் கூற்றினை சார்ந்து இருக்கும், ஏதாவது ஒரு சமூக சொத்து(உ- ம்) இரகசிய சுபாவம்.

சமூக முன்னேற்றங்கள் இந்த மனிதர்களுக்கு அதனுடைய கதவுகளை உடனடியாகத் திறந்து விடுகின்றன.

சரியான கூட்டமைப்பு அரிதான மனிதர்களை அரிதான உயரத்திற்கு அழைத்துச் சென்றுள்ளது.

அது போன்ற பல வழிகளின் மூலம் மோக்ஷத்தை அடையலாம்.

சைத்திய புருஷன் ஆன்மீக மையமாக இருப்பது போல், நிலை முழுவதிலும் அதே போன்ற மையங்கள் உயிர், மனம் ஆகிய நிலைகளில் உள்ளன. இவைகளின் தன்மை முழுமையாக இல்லாவிட்டாலும்கூட, இது போல உயர்கின்றன.

146. "On whose good opinion and judgment he is much in awe".

Good opinion of another is generally well founded.

Judgment is not a faculty people have, but in the long run we see the judgment of the public or even an individual is usually sound.

He who is in awe of another does not win that good opinion.

When awe arises, the natural tendency is to look down upon one in awe.

Judgment is of an open Mind which no one possesses.

Judgement is the impression produced on the whole of Mind when it is still.

Opinion is what the coordinating intelligence arrives at.

Various faculties are formed in Man in various measures.

Such formation leaves a residue in the Mind as neutral mental capacity.

When not interfered with, that capacity arrives at a conclusion that is its judgment.

In language, these concepts are well sensed, but not precisely defined.

The dictionary says it is the critical faculty, an exact description.

It also says judgment has a dimension of opinion.

Opinion is personal, judgment is a critical impersonal faculty.

The precise sense of the language far exceeds its capacity for exact definition.

Sense is vital, definition is mental.

One is No. 2 and the other is No. 1.

The defining capacity of language is defied because the distance between the vital and mental takes ages.

Sense is better appreciated in poetry.

Definition belongs to precise prose of philosophy.

Sri Aurobindo wondered whether philology will ever become a science.

Idiom conveys the sense.

Grammar conveys the definition.

Idiom is born defying grammar.

Should grammar be again passed over and its precise nature embodied in an idiom, definitions may rise in precision.

"சித்தியின் நல்ல அபிப்பிராயத்திற்கும், மதிப்பீட்டிற்கும் அவன் மிகவும் மதிப்பு கொடுக்கிறான்."

மற்றவரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் பொதுவாக நன்றாக அமைக்கப்பட்டிருக்கும்.

மதிப்பிடும் திறன் மனிதர்களுக்கு இருப்பதில்லை, ஆனால் காலப் போக்கில் பொது மக்களின் மதிப்பீடு அல்லது தனி நபரின் மதிப்பீடு பொதுவாக சிறப்பாக இருக்கும்.

மற்றவரைக் கண்டு வியப்படைபவர் அந்த நல்ல அபிப்பிராயத்தைப் பெறுவதில்லை.
வியப்பு எழும்பொழுது ஒருவரை மட்டமாகப் பார்ப்பதுதான் இயற்கையான போக்காக இருக்கும்.
மதிப்பீடு ஒருவரின் திறந்த மனத்திற்குரியது, அது எவரிடமும் இல்லை.
மனம் அமைதியாக இருக்கும்பொழுது மனம் முழுவதிலும் ஏற்படும் அபிப்பிராயமே மதிப்பீடு ஆகும்.
புத்திசாலித்தனம் ஒருங்கிணைந்து எழுப்புவது அபிப்பிராயம் ஆகும்.
பல்வேறு வகையான அளவில் பல்வேறு திறன்கள் மனிதனிடம் உருவாகும்.
அது போன்ற அமைப்பு மனதில், நடுநிலையான மனத்தின் திறனாகப் படிந்துவிடும்.
குறுக்கிடாமல் இருந்தால் அத்திறன் ஒரு முடிவுக்கு வரும், அதுவே மதிப்பீடாகும்.
மொழியில் இந்த கோட்பாடுகள் நன்கு உணரப்படும், ஆனால் துல்லியமாக வரையறுக்கப்பட்டிருக்காது.
அகராதியில் இதனை முக்கியமான திறன் என்று கூறப்பட்டிருக்கும், துல்லியமான விளக்கம்.
கருத்தின் பரிமாணம் மதிப்பீட்டுக்கு உண்டு என்றும் அது கூறுகிறது.
கருத்து தனிப்பட்டது, மதிப்பீடு ஒரு முக்கியமான பொது திறனாகும்.
மொழியின் துல்லியமான கருத்து, சரியான பொருள் விளக்கத்திற்கான திறனை விஞ்சிவிடும்.
புலனுணர்வு உயிருக்குடையது, பொருள் விளக்கம் மனதிற்குரியது.
ஒன்று இரண்டாவது, மற்றது முதலாவது.
மொழியை விளக்கும் திறன் மறுக்கப்படுகிறது, ஏனெனில் உணர்வுக்கும் மனதிற்கும் உள்ள இடைவெளி நீண்ட காலத்தை எடுத்துக்கொள்கிறது.
உணர்வு கவிதையில் சிறப்பாக உணரப்படுகிறது.
பொருள் விளக்கம், தத்துவத்தின் உரைநடைக்குரியது.
மொழி சாஸ்திரம் என்றாவது விஞ்ஞானமாக மாறுமா என்று ஸ்ரீஅரவிந்தர் வியந்தார்.
மொழிச் சொற்றொடர் உணர்வைத் தெரிவிக்கிறது.
இலக்கணம் விளக்கத்தை தெரிவிக்கிறது.
சொற்றொடர் இலக்கணத்தை மறுத்து உண்டானது.
மீண்டும் இலக்கணத்தைப் புறக்கணித்து, அதன் சரியான குணத்தை சொற்றொடரில் சேர்த்தால், விளக்கம் மிகச் சரியாக எழக்கூடும்.

147.“His fear of her has always operated.” Wickham about Darcy’s aunt.
If anything operates without fail, it is fear.
Fear is a negative vibration of courage.
A positive vibration is incomplete in life without its negative part.
Love is great. Without the experience of hate, love cannot acquire the intensity at which alone it can be fully enjoyed and appreciated.
The various ways in which one completes the other are seen in nut and bolt; sword and handle; paper and pen; Man and woman; day and night; wealth and poverty; life and death.
A day that is without night allows no recharging of energies.
Ebb and flow permits movement.
Death, He says, makes Life immortal.
A fuller enjoyment of the positive side is made possible by the other.
Without Man and Woman the species cannot reproduce itself.
Being and Non-Being emerge out of the Absolute. If one were without the other the Absolute could not enjoy its present freedom in its fullness – of losing its freedom.
Love seeks eternity and intensity.
Without the experience of hatred, love can enjoy the eternity of Time, not the eternity of Timelessness.
In life love and hate reinforce each other.
In Supramental love hatred is transformed into eternal love that is self-existent.
Its existence is with respect to Self, not in reference to something outside.
Love in life can grow insipid with the passage of Time.
Supramental Love is in Simultaneous integrality of Time, i.e. it coexists in Time and Timelessness. It cannot grow insipid. It is capable of charging itself at higher and higher levels. Or, by choice it can cease to exist in its present form.
It is a stage where the relative is Absolute.
“அவளிடம் இருக்கும் பயம் அவனை என்றும் வழி நடத்தியது.” டார்சியின் சித்தி பற்றி விக்காம் கூறுவது.
ஏதாவது ஒன்று தவறாது இயங்கும் எனில் அது பயம்தான்.
தைரியத்தின் எதிர்மறையான அதிர்வுதான் பயம்.
வாழ்வில் நேர்மறையான அதிர்வு அதனுடைய எதிர்மறையான பாகம் இல்லாமல் பூர்த்தியடையாது.
காதல் உயர்ந்தது. வெறுப்பின் அனுபவம் இல்லாமல் காதலின் தீவிரம் எழாது. அப்பொழுதுதான் அதனை முழுமையாக அனுபவிக்க முடியும், பாராட்ட முடியும்.

ஆணியும் மரையும்; வாளும் அதன் கைப்பிடியும்; காகிதமும் பேனாவும்; ஆணும் பெண்ணும்; பகலும் இரவும்; செல்வமும் ஏழ்மையும்; வாழ்வும் மரணமும் போல், ஒன்றை மற்றொன்று பூர்த்தி செய்வதை பல வகைகளில் பார்க்கலாம்.
இரவு இல்லாமல் பகல் மட்டும் இருப்பின் சக்தியை புதுப்பித்துக்கொள்ள முடியாது.
ஏற்றமும் இறக்கமும் சலனத்தை அனுமதிக்கிறது.
மரணம் வாழ்வை அமரத்துவமாக்குகிறது என பகவான் கூறுகிறார்.
நல்ல பகுதியை முழுமையாக அனுபவிக்க வேண்டுமென்றால், அது மற்ற பகுதியால்தான் சாத்தியமாகும்.
ஆணும் பெண்ணும் இல்லாமல் மனித குலம் நீடிக்க முடியாது.
சத், அசத் இரண்டும் பிரம்மத்திலிருந்து வெளி வருகிறது. ஒன்று மற்றது இல்லாமல் இருந்தால் பிரம்மத்தால் தற்பொழுது இருக்கும் தன் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்க முடியாது- சுதந்திரத்தை இழப்பதற்கான சுதந்திரத்தை.
காதல் சாஸ்வதத்தையும் தீவிரத்தையும் நாடுகிறது.
வெறுப்பின் அனுபவம் இல்லையெனில் காதல், காலத்தின் சாஸ்வதத்தை அனுபவிக்கலாம், காலமின்மையின் சாஸ்வதத்தை அனுபவிக்க முடியாது.
வாழ்க்கையில் அன்பும் வெறுப்பும் ஒன்றை ஒன்று பலப்படுத்திக்கொள்கின்றன.
சத்திய ஜீவிய அன்பில் வெறுப்பு சுயமாக இருக்கும் சாஸ்வதமான அன்பாக திருவுருமாறுகிறது.
அது இருப்பது சுயத்தைப் பொறுத்து உள்ளது, வெளியில் உள்ள எதைப் பொறுத்தும் அல்ல.
வாழ்க்கையில் காதல் காலப் போக்கில் ருசியற்றுப் போகலாம்.
சத்திய ஜீவிய அன்பு மூன்றாம் நிலை காலத்துள் உள்ளது. அதாவது அது காலத்துடனும், காலமின்மையுடனும் சேர்ந்து உள்ளது. அது ருசியற்றுப் போகாது. மேலும் மேலும் உயர்ந்த நிலைகளில் அது தன்னையே உயர்த்திக்கொள்ள வல்லது. அல்லது தற்பொழுது இருக்கும் உருவத்தில் அது இல்லாமல் போக விரும்பலாம். பிரம்மத்தை ஒத்திருக்கும் நிலை அது.

148. "Forwarding his match with Miss De Bourgh".
The follies of a lover are pleasant nothings.
The falsehood of a lover is still a strong touch on oneself.
The heinous crime of a lover is casual lapses of youth.
Love does not have the capacity to be offended by a lover.
Love is born after disgust is lost as well as disagreement.
Mental love is capable of not being offended by the lover.
Spiritual love is capable of transforming the lover.
One cannot have supramental consciousness and be disgusted by the folly, falsehood, abuse of the lover.
In its interaction this consciousness penetrates the abuse of the other and transforms it into words of appreciation.
Mind sees the abuse.
Supermind senses the abuse transformed as it receives the abuse into its own dark spots and senses the process of transformation.
Trikaladrshti sees in Lydia's elopement the other two marriages.
The welcome Lydia received had the outer expression of the higher vibration.
Elizabeth's solicitude towards Wickham during the last meeting has that outer expression which is disgusting to us.
Wickham talks of forwarding the match with De Bourgh because in a subtle sense he perceives Darcy forwarding the match with Elizabeth.
In creation for every formation that comes into existence an infinity of their possibilities perish.
Mind dwelling on it by imagination, fantasy, ambition, aspiration gives life to it and at some future time it comes into existence.
It does not mean one should indulge his imagination.
Of the many ways Man levels off, this is one.
A mechanic who enters into the world of splendour and is well on the way to supermanhood stumbling on an opportunity and leveling off as a producer of cars cannot know he has leveled off.
Man usually levels off becoming the owner of a workshop.
"மிஸ் டீ பர்குடன் ஜோடி சேர வேண்டும் என்பதற்காக."
காதலரின் மடமைகள் பொருட்படுத்தப்படாத இனிமை ஆகும்.
காதலரின் பொய்மை இன்னமும் ஒருவரை வலிமையாகத் தொடுகிறது.
காதலரின் கொடுமையான குற்றம் இளமையின் சாதாரண தவறுகள் ஆகும்.
காதலரால் புண்படக்கூடிய திறன் காதலுக்குக் கிடையாது.
வெறுப்பும் கருத்து வேற்றுமையும் மறைந்த பிறகு காதல் பிறக்கிறது.
மானசீகமான காதல் காதலரால் புண்படாது.
ஆன்மீகக் காதல் காதலரை திருவுருமாற்றும்.

காதலரின் மடமை, பொய்மை, நிந்தனை இவற்றினால் ஒருவருக்கு வெறுப்பு எழுந்தால் அவருக்கு சத்தியஜீவிய ஜீவியம் இருக்க முடியாது.
அது ஒன்றுடன் ஒன்று தொடர்புகொள்ளும்பொழுது இந்த ஜீவியம் மற்றவரின் நிந்தனையை ஊடுருவிச் சென்று, அதனை பாராட்டும் வார்த்தைகளாக மாற்றி விடும்.
மனம் நிந்தனையைப் பார்க்கும்.
சத்திய ஜீவியம் அதனுடைய இருண்ட பகுதிகளில் நிந்தனையை பெற்றுக்கொள்ளும்பொழுது நிந்தனை திருவுருமாறுவதை உணருகிறது, திருவுருமாறும் முறையையும் உணருகிறது.
லிடியா ஓடிப்போவதில் மற்ற இரண்டு திருமணங்களையும் திரிகால திருஷ்டி காண்கிறது.
லிடியாவுக்குக் கிடைத்த வரவேற்பில் உயர்ந்த அதிர்வின் புற வெளிப்பாடுகள் தெரிந்தன.
கடைசி சந்திப்பில் எலிசபெத் விக்காமிடம் காண்பித்த அக்கறையில் அதே அதிர்வுகள் இருந்தன, நமக்கு அது வெறுப்பை அளிக்கிறது.
டார்சி எலிசபெத்துடன் ஜோடி சேருவதற்கு எடுக்கும் முயற்சியை சூட்சுமமாகப் புரிந்துகொள்ளும் விக்காம், டார்சி டீ பர்குடன் ஜோடி சேருவதைப் பற்றி பேசுகிறான்.
சிருஷ்டியில் ஒவ்வொரு அமைப்பு உருவாகும்போதும், அவற்றின் எண்ணற்ற சாத்தியங்கள் அழிகின்றன.
கற்பனை, கனவு, பேராவல், ஆர்வம் இவை மூலம் மனத்தில் நிலைத்திருக்கும் அவற்றிற்கு உயிர் கிடைத்து, பின்னால் எதிர்காலத்தில் அவை உருவாகின்றன.
ஒருவர் அவருடைய கற்பனையில் ஈடுபட வேண்டும் என்பது அதன் அர்த்தமல்ல.
மனிதன் சமநிலை அடையும் பல வழிகளில் இது ஒன்று.
ஒரு பொறியாளன் அற்புதமான உலகில் நுழைந்து உயர்ந்த இடத்தை நோக்கிச் செல்லும் வழியில் ஒரு வாய்ப்பு கிடைத்து மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்பவனாக நிலைத்துவிடும்பொழுது, அவன் அந்த நிலையிலேயே நிலைத்து நின்று விடுகிறான் என்பது அவனுக்குத் தெரிவதில்லை.
மனிதன் சாதாரணமாக ஒரு பட்டறையின் உரிமையாளன் என்ற நிலையில் நிலைத்து விடுவான்.

Elizabeth could not repress a smile at this, but she answered only by a slight inclination of the head. She saw that he wanted to engage her on the old subject of his grievances, and she was in no humour to indulge him. The rest of the evening passed with the appearance, on his side, of usual cheerfulness, but with no farther attempt to distinguish Elizabeth; and they parted at last with mutual civility, and possibly a mutual desire of never meeting again.
இதை கேட்டதும் எலிசபெத்திற்கு வந்த புன்முறுவலை கட்டுப்படுத்துவதற்கு கஷ்டமாக இருந்தது. ஆனால் தலையை சற்று சாய்த்து பதில் அளித்தாள். அவன் தன்னுடைய பழைய சோகக் கதையை அவளிடம் மீண்டும் சொல்ல விரும்புகிறான் என்று புரிந்துகொண்டாள். அதை எந்த விதத்திலும் ஆதரிப்பதற்கு அவள் தயாராக இல்லை. அந்த மாலை நேரத்தின் பிற்பகுதி, அவன் பக்கத்திலிருந்து கலகலப்பாக இருப்பதுபோல் தோற்றமளிப்பதில் செலவழிந்தது. ஆனால் எலிசபெத்தை கவருவதற்கு மீண்டும் அவன் முயற்சி எடுக்கவில்லை. அவர்கள் பிரியும்பொழுது ஒருமித்த மரியாதையுடன் பிரிந்தார்கள். இனிமேல் மீண்டும் சந்திக்கவே வேண்டாம் என்ற ஒருமித்த விருப்பமும் இருந்திருக்கலாம்.

149. "She was in no humour to engage him on his old subject of grievances".
For him it was the old subject of his grievances.
For her it was her earlier subject of forging a relationship of emotional solicitude.
Suppose Wickham was not a false character and carried no scandal, who could wean Elizabeth from him.
Because he was false, she could move away from him.
Falsehood has that service in it.
Grievance creates sympathy.
Sympathy is an excellent door for the halls of love.
He certainly created in her intensity, for what or for whom it matters not.
Darcy responded to that intensity.
That is the climax of the story.
The proposal was the first anticlimax and the elopement second climax.
To work out their temperament through the developing events is the course of the story.
Temperament expressing through positive circumstances is instantaneous.
Temperament working out through negative circumstances takes a detour in life.
Social evolution is the growth of temperament through events of life.
Mental evolution is growth of ideas through thought and mental experience.
Spiritual evolution is growth of the aspects of Spirit through the experiences of the parts of the being.
Supramental evolution is the transformation of any event in any plane into its supramental counterpart.
Elizabeth abuses, learns the facts, develops shame, removes herself from the attraction of falsehood, decides to accept

Pemberley, faces the reality of her family, abjectly surrenders to him whose property she accepted but not him, speaks out her right to marry him, asked him to propose again.

"அவனுடைய பழைய சோகக் கதைகளை கேட்டுக்கொள்ளும் மன நிலையில் அவள் இல்லை."

அவனுக்கு அது அவனுடைய சோகங்களைப் பற்றிய பழைய விஷயம்.

அவளுக்கு அது உணர்வுபூர்வமாக அக்கறை கொண்டு உருவாக்கிய ஒரு உறவினைப் பற்றிய முந்தைய விஷயம் ஆகும்.

விக்காம் பொய்யான குணம் உடையவனாக இல்லாது எந்த வித அவதூறும் எழுப்பாதவனாக இருந்திருந்தால், அவனிடமிருந்து எலிசபெத்தை யாராலும் பிரித்திருக்க முடியாது.

அவன் பொய்யானவனாக இருந்ததால் அவள் அவனிடமிருந்து விலக முடிந்தது.

பொய்மையால் அந்த உதவியைச் செய்ய முடிகிறது.

மனக்குறை அனுதாபத்தை உற்பத்தி செய்கிறது.

அனுதாபம் காதலின் அருமையான நுழைவாயில் ஆகும்.

அவளிடம் அவன் அந்த தீவிரத்தை நிச்சயமாக ஏற்படுத்தினான். எதற்காக, யாருக்காக என்பது ஒரு பொருட்டே அல்ல.

அந்த தீவிரத்திற்கு டார்சி பதிலளித்தான்.

கதையின் உச்ச கட்டம் அது.

உச்சகட்டத்திற்கு மாறாக இருந்ததில் திருமண வேண்டுகோள் முதலாவதாக இருந்தது, ஓடிப்போனது இரண்டாவது உச்சகட்டம்.

படிப்படியாக நிகழும் நிகழ்வுகளின் மூலம் அவர்களுடைய மனவுணர்வுகளுக்கு தீர்வு காண்பது கதையின் போக்காகும்.

நேர்மறையான சந்தர்ப்பங்கள் மூலம் மனவுணர்வுகள் வெளிப்படுவது கணப் பொழுதில் நிகழும்.

எதிர்மறையான சந்தர்ப்பங்கள் மூலம் செயல்படும் மனவுணர்வுகள் வாழ்க்கையில் சுற்று வழியைத் தேர்ந்தெடுக்கும்.

வாழ்வின் நிகழ்ச்சிகள் மூலம் வளர்ச்சி அடையும் மனவுணர்வுகளே சமூகப் பரிணாமம் ஆகும்.

எண்ணம் மற்றும் மனத்தின் அனுபவம் மூலம் வளரும் கருத்துகள் மனத்தின் பரிணாமம் ஆகும் .

ஜீவனுடைய பகுதிகளின் அனுபவங்கள் மூலம் ஆன்மாவின் கூறுகளின் வளர்ச்சி ஆன்மீகப் பரிணாமம் ஆகும்.

எந்த நிலையிலும் எந்த நிகழ்ச்சியும் அதனுடைய சத்திய ஜீவியத்தின் மறுபடிவத்திற்கு திருவுருமாறுவது, சத்திய ஜீவியப் பரிணாமம் ஆகும்.

எலிசபெத் திட்டுகிறாள், உண்மைகளை தெரிந்துகொள்கிறாள், அவமானம் அடைகிறாள், பொய்மையின் கவர்ச்சியிலிருந்து விடுபடுகிறாள், பெம்பர்லியை ஏற்றுக்கொள்ள முடிவு செய்கிறாள், அவளுடைய குடும்பத்தின் உண்மை நிலையை எதிர்கொள்கிறாள், அவனுடைய சொத்தை ஏற்றுக்கொண்டு அவனை ஏற்றுக்கொள்ளாது, அவனிடம் பரிதாபமாகச் சரணடைகிறாள், அவனை திருமணம் செய்துகொள்ளும் உரிமையைப் பற்றி பேசுகிறாள், மீண்டும் அவன் திருமண வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று கேட்கிறாள்.

When the party broke up, Lydia returned with Mrs. Forster to Meryton, from whence they were to set out early the next morning. The separation between her and her family was rather noisy than pathetic. Kitty was the only one who shed tears; but she did weep from vexation and envy. Mrs. Bennet was diffuse in her good wishes for the felicity of her daughter, and impressive in her injunctions that she would not miss the opportunity of enjoying herself as much as possible -- advice which there was every reason to believe would be attended to; and in the clamorous happiness of Lydia herself in bidding farewell, the more gentle adieus of her sisters were uttered without being heard.

அங்கு கூடியிருந்தவர்கள் எல்லோரும் பிரிந்தபொழுது லிடியா திருமதி. பாஸ்டருடன் மெரிடன் சென்றாள். அங்கிருந்து மறுநாள் விடியற்காலை கிளம்ப இருந்தனர். அவள் தன் குடும்பத்தினரை விட்டு பிரிந்து செல்லும் பொழுது, பிரிவதினால் ஏற்படும் துயரத்திற்கு பதிலாக கூச்சல்தான் அதிகமாக இருந்தது. கிட்டி மட்டும்தான் பொறாமையினாலும், வருத்தத்தினாலும் கண்ணீர் விட்டாள். திருமதி. பென்னட் தன்னுடைய மகளின் மகிழ்ச்சிக்காக நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தாள். முடியும் அளவிற்கு சந்தோஷமாக இருக்கக் கூடிய எந்த ஒரு வாய்ப்பினையும் நழுவ விட வேண்டாம் என்று மனதில் பதிய வைப்பதுபோல் உத்தரவு இட்டுக் கொண்டிருந்தது, நிச்சயமாகக் கடைப்பிடிக்கப்படும் அறிவுரையாகவும் இருந்தது. ஆரவாரமாக சந்தோஷமாக இருந்த லிடியாவின் விடை பெறுதலில் மிகவும் மென்மையாக விடை கொடுத்த சகோதரிகளின் குரல் கேட்காமலேயே போய் விட்டது.

150. Mrs. Bennet is shameless.

திருமதி பென்னட் வெட்கமில்லாமல் இருக்கிறாள்.

151. "The separation of Lydia from the family was rather noisy than pathetic".

Noisy separation is that of the physical.

The moment Elizabeth was physically removed from Wickham, the role of Lydia – **a physical movement from home**

– began. It has spatial significance.

Time and Space go together.

Often one is self-evident, the other is not.

Sometimes Time goes with space.

Elizabeth meeting Darcy at Pemberley is seen as soon as she decided and there itself. We see Time and space synchronizing.

Space shows the outer events evident to senses.

Time shows the inner decision evident only to the Mind.

Mrs. Bennet’s ruse to leave Jane alone with Bingley at Longbourn failed the first time and succeeded the next time.

Her inexcusable initiative succeeded.

Her failed initiative on sending her on horseback had a lingering momentum and showed itself in the failure of the first time.

The second time, I said earlier, succeeded by the power of the atmosphere.

It was created by Lydia’s elopement and the coming engagement of Darcy.

A strong atmosphere overcoming other factors is the known phenomenon.

Grace achieves more by overcoming obstacles from the devotee than by his cooperation.

Here we see no relationship between Time and Space.

One acceptable explanation is Bingley who accepted the apology of Darcy had not fully moved into his own independence yet.

It is significant that Bingley as well as Darcy proposed on the premises of Longbourn, showing the physical reality of Mrs. Bennet.

Collins too proposed at the Lodge, showing the greater strength of the woman.

Darcy’s first proposal was at Hunsford, second at Longbourn, but the real subtle inner proposal was at Pemberley and more effectively at Lambton.

“லிடியா குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்லும்பொழுது, துயரத்திற்கு பதில் இரைச்சல்தான் அதிகமாக இருந்தது.”

இரைச்சல் மிக்க பிரிவு ஜட நிலைக்குரியது.

எலிசபெத் விக்காமிடமிருந்து விலகியவுடன் லிடியாவின் பங்கு- **அவள் வீட்டை விட்டு கிளம்புவதில் ஆரம்பிக்கிறது**. இது இடம் சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்தது.

காலமும் இடமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை.

பல சமயங்களில் ஒன்று வெளிப்படையாகத் தெரியும், மற்றது அவ்வாறு தெரியாது.

சில சமயங்களில் காலம் இடத்துடன் ஒத்துப் போகும்.

பெம்பர்லியில் எலிசபெத் முடிவு எடுத்த உடனேயே அதே இடத்தில் அவள் டார்சியை சந்திப்பதைப் பார்க்கிறோம். காலமும் இடமும் இணைகின்றன.

புலன்களுக்கு புலப்படும் புற நிகழ்ச்சிகளை இடம் காண்பிக்கிறது.

மனத்திற்கு மட்டும் புலப்படும் அகத்தின் தீர்மானத்தை காலம் காட்டுகிறது.

லாங்பர்னில் பிங்கிலியுடன் ஜேன் தனித்திருக்க திருமதி பென்னட் செய்யும் சூழ்ச்சி முதல் முறை தோற்றது, அடுத்த முறை வெற்றி பெற்றது.

அவளுடைய மன்னிக்க முடியாத தன்முனைப்புக்கு வெற்றி கிடைத்தது.

அவளுடைய தன்முனைப்பின் வேகம் குறைவாக இருந்ததால், குதிரையில் அவளை அனுப்பியது முதல் முறை தோல்வி அடைந்து.

இரண்டாவது முறை, ஆரம்பத்தில் கூறிய படி சூழலின் சக்தியால் வெற்றி அடைந்தது.

லிடியா ஓடிப்போனதும், வரப் போகும் டார்சியின் திருமண உறுதியும் சூழலுக்கு சக்தி அளித்தன.

வலிமையான சூழல் மற்ற விஷயங்களை எதிர்கொள்ளும் என்பது தெரிந்த நிகழ்வாகும்.

அன்பருடைய ஒத்துழைப்பை விட, அவர் எழுப்பும் தடைகளைத் தாண்டி அருள் அதிகமாகச் சாதிக்கும்.

இங்கு நாம் காலத்திற்கும் இடத்திற்கும் இடையே எந்த தொடர்பையும் பார்ப்பதில்லை.

டார்சியின் மன்னிப்பை ஏற்றுக்கொண்ட பிங்கிலி, முழு சுதந்திரம் இன்னமும் அடையவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விளக்கம் ஆகும்.

பிங்கிலி, டார்சி இருவருமே லாங்பர்னில் திருமண வேண்டுகோள் விடுத்தது குறிப்பிடத்தக்கது. இது திருமதி பென்னட்டின் ஜட நிலையின் உண்மையைக் காட்டுகிறது.

காலின்ஸும் லாட்ஜில் திருமணப் பேச்சை எடுத்தான், பெண்ணின் அதிக வலிமையை இது காண்பிக்கின்றது.

டார்சியின் முதல் திருமண வேண்டுகோள் ஹன்ஸ்போர்டிலும் இரண்டாவது லாங்பர்னிலும் இருந்தது, ஆனால் உண்மையாக சூட்சுமமாக அகத்தில் எழுந்த வேண்டுகோள், பெம்பர்லியிலும், மேலும் திறம்பட லாம்ப்டனிலும் எழுந்தது.

152. “Kitty was the only one who shed tears”.

Tears are the physical symbol of the reality of vital defeat.

She does not have the mental restraint of Mary.
Jane and Lizzy were vitally and mentally against it.
Kitty wishes to go to Brighton but was thwarted.
Tear of joy express the vital's triumph of love.
The only instrument of the vital is tears. It responds with it both in triumph and in defeat.
Kitty's consolation was her possession of Lydia's secret.
Kitty coughed once, cried twice, asked her mother why she was winking at her.
Her responses were physical, later matured to negative vocal.
Kitty kept Lydia's secret; Lydia let out Darcy's secret.
Darcy's vital secret was lost by the physical Lydia.
Lydia's physical secret could be kept by Kitty who too is physical.
Kitty shed tears while Lydia triumphed.
At the physical, vital levels, one's success is balanced by the failure of the other.
At the spiritual plane, partially in the mental plane, one's success is accompanied by the success of the rival.
In the spiritual plane one's success flows into another as success.
At the physical, vital level one succeeds by drawing energy from the rival.
Darcy seeking success through transformation, by the touch of supramental consciousness, went out of his way, confessed and made Bingley happy.
In this plane, joy is infectious, not capable of producing the opposite in the other person.
Whatever Wickham sought, whatever he agreed to, it was a great personal success for him that Darcy paid for his debts, his wedding and begged him to accept a proposal, though under an implied threat.
"கிட்டி மட்டுமே கண்ணீர் வடித்தாள்."
உணர்வு அடைந்த தோல்வியின் உண்மை நிலையை ஜடநிலையின் அடையாளமாக கண்ணீர் வெளிப்படுத்துகிறது.
மேரியைப் போல் மனத்தை கட்டுப்படுத்த அவளால் முடியவில்லை.
உணர்வுபூர்வமாகவும், மனதளவிலும் ஜேனும் எலிசபெத்தும் அதற்கு எதிராக இருந்தனர்.
பிரைட்டனுக்கு போக கிட்டி விரும்புகிறாள், ஆனால் அவள் தடுக்கப்பட்டாள்.
காதலில் கிடைக்கும் வெற்றியை உணர்வு வெளிப்படுத்தும்பொழுது சந்தோஷத்தில் கண்ணீர் வரும்.
உணர்வின் ஒரே ஆயுதம் கண்ணீர்தான். வெற்றி, தோல்வி இரண்டிலும் அது எழும்.
லிடியாவைப் பற்றிய இரகசியம் கிட்டிக்குத் தெரிந்திருந்ததுதான் அவளுக்கு கிடைத்த ஒரு ஆறுதல்.
கிட்டி ஒரு முறை இருமினாள், இரண்டு முறை அழுதாள், அவளுடைய தாயாரிடம் ஏன் தன்னைப் பார்த்து கண் சிமிட்டுகிறாள் என்று கேட்டாள்.
அவளுடைய மறுமொழி ஜடநிலையில் இருந்தது, பின்னர் எதிர்மறையான குரலாக முதிர்ச்சி பெற்றது.
லிடியாவின் இரகசியத்தை கிட்டி காப்பாற்றினாள்; டார்சியின் இரகசியத்தை லிடியா வெளியிட்டாள்.
டார்சியின் உணர்வுபூர்வமான இரகசியத்தை ஜட அளவில் இருந்த லிடியாவால் காப்பாற்ற முடியவில்லை.
லிடியாவின் ஜட அளவிலிருந்த இரகசியம், அதே நிலையில் இருந்த கிட்டியால் காப்பாற்றப்பட்டது.
கிட்டி கண்ணீர் வடித்தாள், லிடியா வெற்றிப் பெருமிதத்தில் இருந்தாள்.
ஜட, உணர்வு நிலைகளில் ஒருவரது வெற்றி மற்றவரது தோல்வி மூலம் சமநிலைப்படுத்தப்படுகிறது.
ஆன்மீக நிலையில் மனத்தளவில் ஓரளவுக்கு ஒருவருடைய வெற்றி எதிராளியின் வெற்றியுடன் சேர்ந்தே இருக்கும்.
ஆன்மீக நிலையில் ஒருவரது வெற்றி அடுத்தவருக்கும் வெற்றியாக இருக்கும்.
ஜடம் மற்றும் உணர்வு நிலைகளில் எதிராளியிடமிருந்து சக்தியைப் பெற்றுக் கொண்டு ஒருவர் வெற்றி காண்பார்.
திருவுருமாற்றத்தின் மூலம் வெற்றியை நாடும் டார்சி, சத்தியஜீவியம் தொடுவதன் மூலம் அவனுடைய சுபாவத்தையும் மீறி, உண்மையை ஒப்புக்கொண்டு பிங்கிலியை சந்தோஷப்படுத்தினான்.
இந்த நிலையில் சந்தோஷம் பரவக்கூடியது, வேறொரு நபரில் எதிரானதை உற்பத்தி செய்ய அதனால் முடியாது.
விக்காம் எதை எல்லாம் நாடினானோ எதற்கெல்லாம் ஒப்புக் கொண்டானோ அவனுக்கு அவை பெரிய வெற்றியாக அமைந்தது. டார்சி அவன் கடன்களை அடைத்தான், உள்ளார்ந்த அச்சுறுத்தலோடு அவனை திருமணம் செய்துகொள்ளும்படியும், வேலையை ஏற்றுக்கொள்ளும்படியும் கெஞ்சினான்.

153. "she should not miss the opportunity of enjoying herself as much as possible".
Enjoyment must be within the limits of duty and decorum.
Mrs. Bennet's idea of duty is she must enjoy at all costs.
One who is unashamed of borrowing for the ninth time and one who is sensitive about asking for the money back is a **combination convenient to both.**
Society progresses by the opposites meeting to reconcile themselves.

That is true of works, functions, duties and comforts.
Kindness and affection do not emerge by cruelty and Love meeting.
Cruelty cancels love, does not reconcile with the other.
The man who does not ask back for his money does not help the borrower in any fashion. The borrower goes down steadily.
Of course, after his ruin in this birth he may turn the corner in the next birth.
The possibility of the borrower remaining an inveterate borrower at a higher level is there in the next birth.
That happens when the vibration is not exhausted.
It is not anyone's duty to transform the borrower. It is his own way of life.
Mother says it is childish to interfere in another's karma.
Man does it out of affection under the illusion it is good.
It is not good, but ignorance.
Once can overcome such ignorance with others, not with oneself.
It is a stage where one has knowledge but not strength.
It is a weakness one indulges in as Elizabeth's warmth to Wickham.
One levels off at that point.
Selfish people, insensitive people do not have such problems.
When lending is stopped, the borrower grows responsible.
Sorrow is halved, joy is doubled by sharing.
What is common to both is doubling each in its own direction.
The logic of mathematics and logic of life are both parts of the logic of the infinite.
Higher reason, logic of the infinite remove the mystery of the world.
Mystery is ignorance.
"எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு சந்தோஷமாக இருக்கக் கூடிய வாய்ப்பினை அவள் தவற விடக் கூடாது."
சந்தோஷத்தை அனுபவிப்பது, கடமை மற்றும் நல்லொழுக்கத்தின் எல்லைக்குள் இருக்க வேண்டும்.
கடமை என்பது திருமதி பென்னட்டை பொறுத்தவரை எப்படி வேண்டுமென்றாலும் அனுபவிக்கலாம் என்பதுதான்.
ஒன்பதாவது முறை கடன் கேட்பதற்கு வெட்கப்படாத ஒருவர், கொடுத்த கடனை திருப்பி கேட்க சங்கடப்படும் ஒருவர். **இது இருவருக்கும் சௌகரியமாக உள்ள ஒரு பொருத்தம் ஆகும்.**
எதிரெதிரானது சந்தித்து தங்களுக்குள்ளேயே உடன்பாடாவதன் மூலம் சமூகம் முன்னேறுகிறது.
வேலைகள், விழாக்கள், கடமைகள், சௌகரியங்கள் இவற்றிற்கு இது பொருந்தும்.
கருணையும் பாசமும், கொடுமையும் அன்பும் சந்தித்துக்கொள்வதால் எழுவதில்லை.
கொடுமை அன்பை ரத்து செய்கிறது, மற்றதுடன் சமரசப்படுத்திக் கொள்வதில்லை.
கொடுத்த பணத்தைக் கேட்காதது, கடன் வாங்கியவனுக்கு எந்த விதத்திலும் உதவப் போவதில்லை. கடன் வாங்கியவன் படிப்படியாகக் கீழே போகிறான்.
இந்தப் பிறவியில் அவன் அழிந்து போன பிறகு அடுத்த பிறவியில் திருந்தலாம்.
கடன் வாங்கியவன் அடுத்த பிறவியில் மேலும் அதிகமாகக் கடன் வாங்கி நிலையான கடனாளியாக இருக்க வாய்ப்பு உள்ளது.
அதிர்வுகள் முழுவதும் தீர்க்கப்படாதபோது இவ்வாறு நடக்கிறது.
கடன் வாங்குபவனைத் திருத்துவது எவருடைய கடமையும் கிடையாது. அது அவனுடைய வாழ்க்கை முறையாகும்.
மற்றவரது கர்மாவில் குறுக்கிடுவது சிறு பிள்ளைத்தனம் என்று அன்னை கூறுகிறார்.
நல்லது என்று நினைத்து மனிதன் பாசத்தினால் அதைச் செய்கிறான்.
அது நல்லதல்ல, அறியாமையாகும்.
மற்றவர்களிடம் ஒருவர் அது போன்ற அறியாமையை வெற்றிகொள்ளலாம், தன்னிடமே அல்ல.
இது ஒருவருக்கு அறிவு இருந்து வலிமை இல்லாத நிலை ஆகும்.
இது விக்காமிடம் எலிசபெத்திற்கு அன்பு இருப்பதுபோல், ஒருவர் ஈடுபடும் பலவீனமாகும்.
அந்த இடத்தில் ஒருவர் மாறான நிலையை அடைந்து விடுகிறார்.
சுயநலவாதிகளுக்கும், சொரணையற்ற மனிதர்களுக்கும் இந்த பிரச்சினைகள் கிடையாது.
கடன் கொடுப்பதை நிறுத்தி விட்டால், கடன் வாங்குபவருக்கு பொறுப்பு வரும்.
பகிர்ந்து கொள்வதினால் வருத்தம் பாதியாகிவிடும், சந்தோஷம் இரட்டிப்பாகும்.
ஒவ்வொன்றும் அதனதன் வழியில் இரட்டிப்பாவதுதான் இரண்டுக்கும் பொதுவானது,
கணக்கின் தர்க்கமும், வாழ்வின் தர்க்கமும், அனந்தத்தின் தர்க்கத்தின் பகுதிகளாகும்.
உயர்ந்த நிலை தர்க்கம், அனந்தத்தின் தர்க்கம், உலகத்தின் மர்மத்தை விலக்குகிறது.
மர்மம் அறியாமையாகும்.

154. "Advice which there was every reason to believe would be attended to".

Revolutions, mass killing in civil war, speculation in a rising market are occasions for a free for all.

A great orator addressing a rapt audience does not stop on his own.

Shallow, but scintillating news does not stop half way through.

They come to an end not at the moment, but by the society not responding to it in further rounds.

One Man took 17 M.A. degrees.

It is a sign that the world is outgrowing the mania for degrees.

Unformed characters die without any formations.

Sometimes such people are in situations where a great deal of money or some valuable social material as power is extensively destroyed by them.

Such destructions cure their unformed formulations.

This is a cure from outer conditions.

One who loses several crores to rectify his unformed personality, if he chooses can do it by an inner self-discipline.

Such a discipline yields results if it is based on a higher knowledge.

A higher knowledge understood and accepted, if striven for to acquire the appropriate attitude for its implementation will absorb all the energies of the unformed personality.

Lack of formation scatters the energies that enter into it.

The mental effort taken to understand a higher knowledge saps all that energy.

Nothing is left for frittering away.

Conversion of that knowledge into a work attitude consumes equally greater knowledge.

It is inner self-discipline.

In the story the self-discipline on behalf of the family was essentially taken by Elizabeth.

More energy came from Darcy.

Mr. Bennet's decision helped shape the events.

"அறிவுரை நிச்சயமாகக் கடைப்பிடிக்கப்படும் என்ற நம்பிக்கை இருந்தது."

புரட்சிகள், உள்நாட்டுக் போரில் கூட்டமாகக் கொலை செய்யப்படுவது, உயரும் சந்தையில் முதலீடு செய்வது, இவை எல்லோரும் பங்கு பெறும் இடங்கள்.

பெரிய பேச்சாளர், கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கும் கூட்டத்தில் தானாகப் பேச்சை நிறுத்த மாட்டார்.

வெறுமையான ஆனால் பொறி பறக்கும் செய்தி பாதி வழியில் நின்று விடாது.

அத்தருணத்தோடு அது முடிந்து விடாது, அடுத்தடுத்த சுற்றுகளில் சமூகம் அதை ஏற்றுக்கொள்ளாத போது அது நின்று விடும்.

ஒருவர் பதினேழு முதுகலைப் பட்டங்கள் பெற்றார்.

பட்டங்கள் பெறும் ஆசை உலகில் அழிவதன் அடையாளம் அது.

உருவாகாத பாத்திரங்கள் எந்த உருவமும் பெறாது மரணம் அடையும்.

பெரும் பணமோ அல்லது அதிகாரம் போன்ற விலைமதிப்புள்ள சமூக விஷங்களையோ பெரும் அளவில் நாசம் செய்யும் நிலையில் அது போன்ற மனிதர்கள் சில சமயம் இருப்பார்கள்.

அது போன்ற அழிவு அவர்களுடைய உருவாகாத அமைப்பை குணப்படுத்தும்.

இது புற நிலைகளிலிருந்து எழும் தீர்வாகும்.

தன்னுடைய உருவாகாத குணத்தை சரி செய்ய கோடிக்கணக்கான பணத்தை இழக்கும் ஒருவர், விரும்பினால் அகத்தின் சுய ஒழுக்கத்தால் தன்னை சரி செய்து கொள்ளலாம்.

உயர்ந்த அறிவின் அடிப்படையில் அது போன்ற கட்டுப்பாடு பலன்களை அளிக்கும்.

புரிந்துகொள்ளப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர்ந்த அறிவை செயல் படுத்துவதற்குத் தேவையான கண்ணோட்டத்தைப் பெற முயற்சி செய்வது, உருவாகாத ஆளுமையின் அனைத்து சக்தியையும் உட்கிரகித்துக்கொள்ளும்,

உருவாகாத நிலை, அதனுள் வரும் சக்தியைச் சிதறடிக்கும்.

உயர்ந்த ஞானத்தைப் புரிந்துகொள்ளத் தேவையான முயற்சி அனைத்து சக்தியையும் உறிஞ்சி விடும்.

வீணாக்குவதற்கு எதுவும் மீதம் இருக்காது.

அந்த அறிவை செயலுக்கான அணுகுமுறையாக மாற்ற அதற்கு இணையான சிறந்த அறிவு தேவை.

அது அகத்தில் சுய கட்டுப்பாடு ஆகும்.

கதையில், குடும்பத்திற்கான சுயக் கட்டுப்பாடு, முக்கியமாக எலிசபெத்தால் எடுக்கப்பட்டது.

டார்சியிடமிருந்து அதிக சக்தி வந்தது.

திரு பென்னட்டின் தீர்மானம் நிகழ்வுகளை வடிவமைக்க உதவியது.

Chapter 19: Elizabeth Visits Pemberley
பெம்பர்லிக்கு எலிசபெத் செல்லுதல்

Summary: Mrs. Bennet and Kitty are largely bored and complain often, making Elizabeth wish that her trip with the Gardiners could arrive sooner. The trip is postponed though and will be shortened to a trip to Derbyshire instead. The Gardiners leave their children in the care of Jane as they leave with Elizabeth. When Mrs. Gardiner mentions that she would like to see Pemberley, Elizabeth worries that she might run into Darcy, until she learns that he and his family are not around.
திருமதி பென்னட்டும், கிட்டியும் பொழுது போகாத காரணத்தால் ஏதேனும் குறை கூறிய வண்ணம் இருப்பது, எப்பொழுது தன்னுடைய மாமாவுடனும், அத்தையுடனும் சுற்றுலா கிளம்பப் போகிறோம் என எலிசபெத்தை ஏங்க வைக்கிறது. அவர்களது பிரயாணம் டெர்பிஷயர் வரை சுருக்கப்படுகிறது. ஜேனுடைய பொறுப்பில் தங்களுடைய குழந்தைகளை ஒப்படைத்து விட்டு கார்டினர் தம்பதியினர் எலிசபெத்துடன் கிளம்புகின்றனர். பெம்பர்லியைப் பார்க்க வேண்டுமா என அவளை கேட்கின்றனர். எங்காவது டார்சியை சந்திக்க நேர்ந்திடுமோ என்று பயந்த எலிசபெத், அவனும் அவனது குடும்பத்தாரும் அங்கு இல்லை என்பதை தெரிந்து கொண்டு பிறகு அதற்குச் சம்மதிக்கிறாள்.

Had Elizabeth's opinion been all drawn from her own family, she could not have formed a very pleasing picture of conjugal felicity or domestic comfort. Her father, captivated by youth and beauty, and that appearance of good-humour which youth and beauty generally give, had married a woman whose weak understanding and illiberal mind had very early in their marriage put an end to all real affection for her. Respect, esteem, and confidence had vanished for ever; and all his views of domestic happiness were overthrown. But Mr. Bennet was not of a disposition to seek comfort for the disappointment which his own imprudence had brought on, in any of those pleasures which too often console the unfortunate for their folly or their vice. He was fond of the country and of books; and from these tastes had arisen his principal enjoyments. To his wife he was very little otherwise indebted, than as her ignorance and folly had contributed to his amusement. This is not the sort of happiness which a man would in general wish to owe to his wife; but where other powers of entertainment are wanting, the true philosopher will derive benefit from such as are given.
தன்னுடைய குடும்பத்திலிருந்து அபிப்பிராயத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றிருந்தால் ஒரு நல்ல சந்தோஷமான குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியோ அல்லது குடும்ப சுகம் என்றால் என்ன என்பதைப்பற்றியோ எலிசபெத்தால் தெரிந்துகொண்டிருக்க முடியாது. இளமையாலும், அழகினாலும் கவரப்பட்ட அவளது தகப்பனார் இளமையும் அழகு தரும் நல்ல தோற்றத்தினால் கவரப்பட்டதால், குறுகிய மனமும் புரிந்துகொள்ளும் திறன் குறைவாக இருந்த ஒரு பெண்மணியை திருமணம் செய்து கொண்டிருந்தார். வெகு விரைவிலேயே அவளிடம் கொண்டிருந்த அன்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். மரியாதை, மதிப்பு, நம்பிக்கை எல்லாம் நிரந்தரமாக மறைந்துவிட்டிருந்தன, இல்லற சந்தோஷங்களைப் பற்றிய அவருடைய எண்ணங்கள் எல்லாம் தூக்கி எறியப்பட்டிருந்தன. தங்களுடைய தவறுகளிலிருந்தும், தீய பழக்கங்களிலிருந்தும் ஆறுதல் பெற சில துரதிர்ஷ்டசாலிகள் எந்தவிதமான இன்பங்களில் ஈடுபடுவார்களோ, அதேபோல் தன்னுடைய அவசர புத்தியால் தான் அடைந்த ஏமாற்றத்திற்கு ஆறுதல் பெற அவர் தயாராக இல்லை. அவருக்கு கிராமப்புறங்களும், புத்தகங்களும் பிடிக்கும் என்பதால் அவருடைய முக்கிய சந்தோஷங்கள் இந்த இரசனையின் பேரில்தான் எழுந்தன. அவருடைய மனைவியின் அறியாமையும், முட்டாள்தனமும் எந்த அளவிற்கு அவருக்கு வேடிக்கை அளித்ததோ அந்த அளவிற்குத்தான் அவர் அவளிடம் கடன்பட்டிருந்தார். இதுபோன்ற ஒரு சந்தோஷத்தினை பொதுவாக ஒரு மனிதன் தன்னுடைய மனைவியிடமிருந்து பெற விரும்பமாட்டான், ஆனால் வேறு எந்த ஒரு பொழுதுபோக்கும் இல்லாதபட்சத்தில் ஒரு உண்மையான ஞானி இவை போன்றவற்றிலிருந்துதான் பயன் பெற முடியும்.

1. Mr. Bennet did not seek other women.
   திரு பென்னட் வேறு பெண்களை நாடவில்லை.
2. He has sought no other dissipation.
   வேறு எந்த அழிச்சாட்டியத்திற்கும் அவர் முற்படவில்லை.
3. Elizabeth condones in her father his behaviour towards her mother.
   அவளுடைய தந்தை, தாயாரிடம் நடந்துகொள்ளும் முறையை எலிசபெத் மன்னித்து விடுகிறாள்.
4. Elizabeth is aware of her father’s error in his marriage and how he arrived at his own compromise with her. She does not find him an ideal husband. She finds him a foolish lover who is disillusioned by his success, deciding not to dissipate and settling into his cocoon.
   அவளுடைய தகப்பனார் அவரது திருமண விஷயத்தில் செய்த தவறும் எவ்வாறு அதை அவரே சமாதானம் செய்து கொண்டார் என்பதும் எலிசபெத்திற்குத் தெரியும். அவரை ஒரு இலட்சியக் கணவனாக அவள்

பார்க்கவில்லை. தன்னுடைய வெற்றியில் ஏமாந்த, மேலும் அழிவு ஏற்படுவதை விரும்பாமல் தன் கூட்டிற்குள் வாழும் முட்டாள்தனமான காதலனாகப் பார்க்கிறாள்.

5. Her aversion to Collins arises from the fact he fully resembles Mrs. Bennet. She is determined not to commit her father's error. After her engagement Mr. Bennet warns her that she must not commit the same error in her marriage he committed in his. He fell for her beauty. He thinks Elizabeth is falling for Darcy's wealth. He cannot afford to know that Elizabeth reaps the benefit of his tapas in Darcy who was sent away by her at his proposal to go home and do his tapas before marriage.
காலின்ஸ் முழுவதுமாக திருமதி பென்னட்டைப் போல் இருப்பதால், அவனை அவளுக்குப் பிடிக்காமல் போயிற்று. தன்னுடைய தந்தை செய்த தவற்றை, தானும் செய்ய அவள் தயாராக இல்லை. திருமணம் நிச்சயமானதற்குப் பிறகு திருபென்னட், திருமணத்தில் தான் செய்த தவறை அவளும் செய்யக் கூடாது என்று எச்சரிக்கிறார். மனைவியின் அழகில் அவர் மயங்கினார், டார்சியின் செல்வத்திற்காக எலிசபெத் அவனை விரும்புகிறாள் என அவர் நினைக்கிறார். அவர் செய்த தவத்தின் பலனை எலிசபெத், டார்சியிடமிருந்து பெறுகிறாள் என்பதை அவரால் தெரிந்துகொள்ள முடியாது. திருமண வேண்டுகோளை நிராகரித்து அவனை வீட்டிற்குத் திருப்பி அனுப்பி திருமணத்திற்கு முன் அவனை தவம் செய்ய வைத்தாள்.

6. "Drawing her opinion from her own family conjugal felicity and domestic comfort would not arise".
Man ignores the realities, identifies himself with the non-existing ideal.
Reality is irksome. Ideal contemplation is comforting.
Identifying with the ideal is elevating and expansive.
One can progress by concentrating on the ideal.
Dwelling on the realities one ends in frustration.
Frustration frustrates aspiration.
Man aspires for God.
In its place he places Light, Freedom, Immortality.
He finds himself in fetters, darkness, encumbered by death.
He discovers Nature presents the problem as contradictions.
All problems, he finds, are problems of harmony.
His attempts at the initial harmony yields inertia.
A second higher attempt has given rise to Science.
The final attempt, he understands, will end in Marvel.
Vedanta came half way through and stopped.
We can go to the next step.
Universal Mother does not permit the cessation of inquiry.
Stopping in the middle makes it come back with a vengeance.
A principle He insists upon is not to stop in the middle.
The Rishis did so and ended in moksha.
Mind cannot go beyond that goal.
There was one more step of Supermind.
The Rishis knew that, but would not consider it fully.
Is Supermind the end?
He says Anandamaya, Chaitanyamaya, Satyamaya are beyond.
Still, will they be the real end?
It is open to the Absolute to start afresh.
To know the absoluteness of the Absolute is, in a way, one end.
"தன்னுடைய குடும்பத்திலிருந்து அபிப்பிராயத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றால், ஒரு நல்ல சந்தோஷமான குடும்பத்தைப் பற்றியும், குடும்ப சுகத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள அவளுக்கு வாய்ப்பு கிடைக்காது."
மனிதன் உண்மைகளைப் புறக்கணிக்கிறான், இல்லாத இலட்சியங்களுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறான்.
உண்மை வெறுப்பாக இருக்கிறது. இலட்சியமான கற்பனை சுகமாக இருக்கிறது.
இலட்சியத்துடன் அடையாளப்படுத்திக்கொள்வது நம்மை உயர்த்துகிறது, விரிவடையச் செய்கிறது.
இலட்சியத்தை நோக்கி மனம் குவிந்தால் ஒருவர் முன்னேறலாம்.
உண்மை நிலைகளைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தால் ஏமாற்றம்தான் வரும்.
ஏமாற்றம் ஆர்வத்தை வெறுப்படையச் செய்யும்.
மனிதன் இறைவனுக்கு ஆர்வப்படுகிறான்.
அதன் இடத்தில் அவன் ஒளி, சுதந்திரம், அமரத்துவத்தைப் பொருத்துகிறான்.
அவன், சுதந்திரம் பறிபோன நிலையிலும், இருளிலும், மரணத்தால் சூழப்பட்டும் காண்கிறான்.

இயற்கை பிரச்சினைகளை முரண்பாடாக அளிப்பதைக் கண்டுபிடிக்கிறான்.
எல்லா பிரச்சினைகளும் சுமுகத்தின் பிரச்சினைகளே என்பதைப் பார்க்கிறான்.
முதலில் எழும் சுமுகத்தின் முயற்சி செயலற்றுப் போனது.
இரண்டாவது உயர்ந்த முயற்சியில் விஞ்ஞானம் உற்பத்தியானது.
இறுதி முயற்சி அற்புதத்தில் முடியும் என்று அவனுக்குத் தெரியும்.
வேதாந்தம் பாதி வழிவரை வந்து நின்றுவிட்டது.
நாம் அடுத்த நிலைக்குப் போகலாம்.
தேடுதலை நிறுத்த பிரபஞ்ச அன்னை அனுமதிப்பதில்லை.
நடுவில் நிறுத்தப்பட்டால் வன்மத்துடன் அதை திரும்ப வர வழைக்கும்.
நடுவில் நிறுத்தக் கூடாது என்னும் கருத்தைதான் பகவான் வலியுறுத்துகிறார்.
ரிஷிகள் அவ்வாறு செய்து மோக்ஷத்தை அடைந்தனர்.
அந்த இலக்கைத் தாண்டி மனத்தால் போக முடியாது.
சத்திய ஜீவியத்தின் மேலும் ஒரு நிலை இருந்தது.
ரிஷிகளுக்கு அது தெரியும், ஆனால் அதை முழுமையாகக் கருத மாட்டார்கள்.
சத்திய ஜீவியமே முடிவா?
ஆனந்தமயம், சைதன்யமயம், சத்யமயம் ஆகியவை அதற்கு அப்பால் உள்ளதாக பகவான் கூறுகிறார்.
இருப்பினும் அவைதாம் உண்மையில் முடிவானவையா?
பிரம்மம் அதை மீண்டும் புதிதாகத் தொடங்கலாம்.
ஒரு விதத்தில் பிரம்மத்தின் முழுமையைத் தெரிந்துகொள்வது ஒரு முடிவாகும்.

7. "Her father captivated by youth and beauty and good humour."
Flowers are colourful and fragrant to attract pollinating agents.
Dress, He says, is to attract, especially its colour.
Nature creates the opposites and devises its means of bringing them together.
At least in the Mind thought is not always unidimensional.
Mind is an instrument of ignorance seeking knowledge.
Mind coordinates several facts to fashion a thought, several thoughts to forge an idea.
Several ideas enlighten the will with knowledge to create a Real-Idea.
In coordinating facts or thoughts, mind resorts to selection.
Selection implies rejection.
Mr. Bennet to gain mental experience accepted a brainless emptiness.
Had it not been for marriage, he would have readily rejected her.
Nature that acts through the society does not want the rejection before the experience is gained.
Marriage is one of those devices.
Now society in the West has outlived the usefulness of marriage, but not the wisdom of Nature.
Man in seeking another woman lands exactly on a woman of the same temperament.
Man seeks his mother in his wife.
That is the reason why the mother and wife do not agree.
More than the mother, Man seeks the feminine principle that is his complement.
Ultimately he is trying to bring out the feminine principle in himself.
He becomes the female to God.
The Vedas had this intuition.
Sri Aurobindo has taken it one step further as He moved from the Immutable Self to Self; from Purusha to Ishwara; from Bliss to Delight; from soul to the Psychic.
Scientific thinking comes to Man first by using the products of technology, then by the study of science. **He gives us the taste of the Supramental consciousness as its results in life, before we seek the consciousness.**
"இளமையினாலும், அழகினாலும், நல்ல மனநிலையினாலும் அவளது தந்தை கவரப்பட்டார்."
மகரந்த சேர்க்கைக்காக மலர்கள் வண்ணங்கள் நிறைந்ததாகவும் மணத்துடனும் இருக்கின்றன.
உடை, முக்கியமாக அதன் நிறம், கவருவதற்காக என்று பகவான் கூறுகிறார்.
எதிரானதை இயற்கை உற்பத்தி செய்கிறது, அவைகளை ஒன்று சேர்க்க உபாயங்களைக் கண்டு பிடிக்கிறது.
மனத்தில் மட்டுமாவது எண்ணம் எப்பொழுதும் ஒரே பரிமாணத்தில் இருப்பதில்லை.
மனம் அறிவை நாடும் அறியாமையின் கருவியாகும்
ஒரு எண்ணத்தை ஏற்படுத்த பல விஷயங்களை மனம் ஒன்று சேர்க்கிறது, பல எண்ணங்களை ஒன்று சேர்த்து ஒரு கருத்தை உருவாக்குகிறது.
பல கருத்துகள் உறுதிக்கு ஞானத்தை அளித்து, முழு எண்ணமாக உருவாக்குகிறது.
விஷயங்களையோ, எண்ணங்களையோ ஒருங்கிணைக்கும்பொழுது, மனம் தேர்ந்தெடுக்கிறது.
தேர்ந்தெடுக்கும்பொழுது நிராகரிப்பும் எழுகிறது.

மனத்தின் அனுபவத்தை பெறுவதற்காக, திரு பென்னட் புத்தியில்லாத பெண்ணை மனைவியாக ஏற்றுக்கொண்டார்,
திருமணத்திற்காக இல்லையெனில், அவர் உடனடியாக அவளை நிராகரித்திருப்பார்.
சமூகத்தின் மூலம் செயல்படும் இயற்கை, அனுபவம் கிடைப்பதற்கு முன் நிராகரிப்பை விரும்புவதில்லை.
அதனுடைய ஒரு உபாயம் திருமணம்.
மேற்கத்திய சமூகத்தில் இன்று திருமணம் பயனற்றுப் போய் விட்டது. ஆனால் இயற்கையின் அறிவு பயனற்றுப் போகவில்லை.
வேறொரு பெண்ணை நாடும் மனிதன் சரியாக அதே மனவுணர்வுடைய பெண்ணிடமே போய் சேருகிறான்.
மனிதன், அவனுடைய மனைவியிடம் அவனுடைய தாயாரைக் காண விரும்புகிறான்.
தாயாரும், மனைவியும் ஒத்துப் போகாததற்கு இது ஒரு காரணமாகும்.
தாயார் என்பதைவிட, மனிதன் தன்னை பூர்த்தி செய்துகொள்ள பெண்மையை நாடுகிறான்.
இறுதியில், அவன் தன்னிடம் உள்ள பெண்மையை வெளிக்கொணர முயற்சிக்கிறான்.
இறைவனிடம் அவன் பெண்ணாக மாறுகிறான்.
இந்த உள்ளுணர்வு வேதங்களுக்கு இருந்தன.
ஸ்ரீ அரவிந்தர், மாறுபாடற்ற பிரம்மத்திலிருந்து பிரம்மத்திற்கும்; புருஷனிலிருந்து ஈஸ்வரனுக்கும்; ஆனந்தத்திலிருந்து பேரானந்தத்திற்கும்; ஆன்மாவிலிருந்து சைத்திய புருஷனுக்கும் நகர்ந்து சென்று, இதை மேலும் ஒரு படி முன்னே எடுத்துச் சென்றுள்ளார்.
தொழில் நுட்பத்தின் கண்டுபிடிப்புகளை உபயோகிப்பதன் மூலம் விஞ்ஞான சிந்தனை மனிதனுக்கு முதலில் வருகிறது, பிறகு அதனை ஆராய்வதன் மூலம் வருகிறது. **நாம் ஜீவியத்தை நாடும் முன், வாழ்க்கையில் அதனுடைய பலன்களாக சத்திய ஜீவியத்தை நமக்கு பகவான் அளிக்கிறார்.**

8. "Good humour which youth and beauty generally give".
Nature protects Man initially by its vigour.
Such a life had a longevity of ten years which is seventy years now.
Man giving himself the same protection Nature has given will lack the instinctive natural balance that maintains the equilibrium of energies.
In the accomplished yogis of certain schools, this balance was spiritually restored.
They cannot die a natural death by decomposition.
Coming from above spiritually it is called iccha mrithyu, death at will.
This is a balance and an equilibrium, not an integral one.
The supramental Being has that integral balance.
He is not born of a physical body, nor is he nourished physically.
Man has all the knowledge today to offer himself this balance in other levels.
The yogic balance was physically achieved long ago.
There is enough yogic knowledge to create a vital, mental balance.
Should it ever be achieved, medicine as a profession will be non-existent.
Medicine should take to health, not merely curing diseases.
As medicine has resorted to specialization, now they must seek integralisation.
Law enforced is justice restored.
Development removes injustice at its roots.
Examinations test the level of memory equipment.
Going into the world, the student discovers what he remembers and why.
The student allowed to pick up facts himself at school will be socially mature on leaving school.
Original thinking is not the aim of education.
Schools fostering it become the society to young children.
The emphasis usually falls on one aspect.
It usually falls on Money.
Money can be replaced by Man.
Society, then will be addressing the root causes of all evils.
An education to equip the student to become an integrated Man is possible today, especially with the Internet.
"இளமையும், அழகும் பொதுவாக நல்ல மனநிலையைக் கொடுக்கும்."
இயற்கை அதனுடைய வேகத்தால் மனிதனை ஆரம்பத்தில் காப்பாற்றுகிறது.
பத்து வருடங்களாக இருந்த அதன் வாழ்நாள் இப்பொழுது எழுபது வருடங்களாக மாறி விட்டது.
இயற்கை அளித்த அதே பாதுகாப்பை மனிதன் தனக்கு அளித்துக்கொள்ளும் பொழுது, சக்திகளின் சமன்பாட்டை பாதுகாத்து வரும் இயற்கையான நிலைப்பாட்டை அது பெற்றிருக்காது.
ஒரே எண்ணங்களைக் கொண்ட, சாதித்த சில யோகிகளின் விஷயத்தில், இந்தச் சமன்பாடு ஆன்மீக வழியில் மீண்டும் நிலை நாட்டப்பட்டது.

அவர்கள் உடல் நலிவடைந்து இயற்கையான மரணம் எய்த மாட்டர்கள்.
ஆன்மீகத்தில் இச்சா மிருத்யு என்று சொல்லப்படுகிறது, விருப்பப்படும் பொழுது உயிர் விடலாம்.
இது சமன்பாடும், சமநிலையும் ஆகும், பூரணமானதொன்றல்ல.
சத்திய ஜீவனுக்கு அந்த பூரண சமன்பாடு உண்டு.
அவன் மனித உடலிலிருந்து பிறக்க மாட்டான். அவன் உடல்ரீதியாக போஷிக்கப்படுவதில்லை.
இந்தச் சமன்பாட்டை மற்ற நிலைகளில் தனக்கே அளித்துக்கொள்ள மனிதனுக்கு எல்லா அறிவும் உள்ளது.
யோக சமநிலை வெகு நாட்களுக்கு முன்பே உடலளவில் அடையப் பெற்றது.
உயிர், மனம் இவற்றின் சமன்பாட்டை உருவாக்குவதற்குத் தேவையான அளவு யோக அறிவு உள்ளது.
இது எப்பொழுதேனும் சாதிக்கப்பட்டால், அப்பொழுது மருத்துவம் ஒரு தொழிலாக இருப்பது மறைந்து விடும்.
மருத்துவம், வியாதியை குணப்படுத்துவதோடு நிற்காமல், உடல் ஆரோக்கியத்தையும் கருத வேண்டும்.
மருத்துவம், சிறப்பு மருத்துவமாக மாறி வருகிறது, இப்பொழுது அதை பூரண மருத்துவமாக்க வேண்டும்.
சட்டங்களை அமுல்படுத்துவது, நியாயம் நிலை நிறுத்தப்படுவதாகும்.
முன்னேற்றம் வேரிலேயே அநியாயத்தை அகற்றுகிறது.
ஞாபக சக்தியின் அளவை பரிசோதிப்பதே பரீட்சைகள் ஆகும்.
வெளி உலகத்திற்குள் செல்லும் மாணவன், எது ஞாபகம் இருக்கிறது, ஏன் ஞாபகம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வான்.
பள்ளிக்கூடத்தில் தானாகவே விஷயத்தை கற்றுக்கொள்ள அனுமதிக்கப்படும் மாணவன், பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறும் பொழுது சமூகத்தில் முதிர்ச்சி பெற்றவனாக இருப்பான்.
கல்வியின் இலட்சியம் சுயமாக சிந்திப்பது அல்ல.
அதை பேணிப் பாதுகாக்கும் பள்ளிக்கூடங்கள், இளம் குழந்தைகளுக்கு சமூகமாக மாறுகிறது.
வலியுறுத்தல் பொதுவாக ஒரு விஷயத்தில் ஏற்படுகிறது.
பணத்தில்தான் அது பொதுவாக ஏற்படுகிறது.
பணத்தின் இடத்தில் மனிதனை வைக்கலாம்.
பிறகு எல்லா தீமைகளின் அடிப்படைக் காரணங்கள் மீதும் சமூகம் கவனம் செலுத்தும்.
ஒரு மாணவனை பூரண மனிதனாக மாற்ற கல்வியினால் இன்று சாத்தியமாகும், முக்கியமாக இணையதளத்தின் உதவியுடன்.

9. "a woman of weak understanding and illiberal mind".
Mental growth determines one's understanding.
Mental growth is determined by biological and spiritual inheritance.
Both of them are fixed by the geographical, social, spiritual environment.
Wider spaces generate emotions.
Narrow geographical limits create Mind.
Vast seas or high mountains are conducive to spiritual growth.
They are conducive, not a compulsive inevitability.
There are rules from below.
From above Grace acts, for no ascertainable reason.
Her father was an attorney who handled the facts and rights of the client.
Emphasizing the higher side of the rights, he becomes a champion of human rights.
He was one who earned very well, around £1000 a year.
Either he should have been a luminary or one who successfully manipulated facts.
A Man of values and intelligence can have a child of weak understanding.
A Man of intrigues can have a mean vengeful child.
The goodness and culture of Mr. Gardiner suggests that the father was intelligent and the mother was not.
There was no malice or venom in Mrs. Bennet. Even in Meryton it did not seen to be a malicious atmosphere.
Mind becomes liberal by education.
Perhaps she did not have a governess.
The family might have saved on a governess and spent liberally for their income.
She and her sister were married and well settled by the income and thrift of her parents.
She, on that basis, wished her children to be married and well settled.
She omitted the great fact of earning abundantly for a village attorney and saving £ 5000 to each of the three children.
Her weak Mind looked for results without commensurate effort.
"குறுகிய மனமும், புரிந்துகொள்ளும் திறனும் குறைவாக இருந்த பெண்மணி."
மனத்தின் வளர்ச்சி ஒருவரது புரிந்துகொள்ளும் திறனை தீர்மானிக்கும்.
உடல்ரீதியாகவும், ஆன்மீகரீதியாகவும் மனத்தின் வளர்ச்சி தீர்மானிக்கப்படும்.
இரண்டுமே, பூகோள, சமூக மற்றும் ஆன்மீகச் சூழ்நிலைகளினால் நிலைப்படுத்தப்படுகிறது.
பெரிய அகன்ற இடங்கள் உணர்ச்சிகளை உற்பத்தி செய்யும்.

குறுகிய இடங்கள் மனத்தை உருவாக்கும்.
அகண்ட சமுத்திரமும், உயர்ந்த மலைப் பிரதேசமும் ஆன்மீக வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும்.
அவை உகந்ததாக இருக்குமே தவிர, இருந்துதான் ஆக வேண்டும் என்று நிர்பந்தமில்லை.
அவை கீழிருந்து எழும் விதிகள்.
மேலிருந்து வருவது அருள், உறுதியான காரணம் எதுவுமின்றி வரும்.
அவளுடைய தகப்பனார் ஒரு வக்கீல், கட்சிக்காரரது விஷயங்களையும், உரிமைகளையும் கையாள்பவர்.
உரிமைகளின் சிறப்பை வலியுறுத்தி, அவர் மனித உரிமைகளுக்குப் போராடுபவராக விளங்குகிறார்.
வருடத்திற்கு ஆயிரம் பவுன் என்ற அளவில் அவர் நன்றாக சம்பாதித்தார்.
ஒன்று, அவர் பெரிய மேதையாக இருந்திருக்க வேண்டும் அல்லது வெற்றிகரமாக உண்மைகளைத் திறமையாகக் கையாள்பவராக இருக்க வேண்டும்.
பண்பும், அறிவும் உடைய ஒருவனுக்கு புரியும் திறன் குறைவாக இருக்கும் குழந்தை பிறக்கலாம்.
சதி செய்யும் மனப்பான்மை உடைய ஒரு மனிதன், சின்ன மனம் படைத்த பழிவாங்கும் உணர்வுடைய குழந்தையைப் பெறலாம்.
திரு கார்டினரின் நற்குணமும், நாகரிகமும், அவரது தந்தை புத்திசாலியாக இருப்பதையும், அவரது தாயார் அவ்வாறு இல்லாததையும் காட்டுகிறது.
திருமதி பென்னட்டிடம் கெட்ட எண்ணமோ அல்லது வன்மமோ இல்லை. மெரிடனிலும்கூட தீய சூழ்நிலை இருப்பதாகத் தெரியவில்லை.
கல்வியினால் மனம் பெருந்தன்மை அடைகிறது.
வீட்டிலேயே தங்கி பாடம் சொல்லி கொடுக்கும் ஆசிரியை ஒருவேளை அவளுக்கு இல்லை போலும்.
ஆசிரியை இல்லாததினால் அதற்கு செலவழியும் பணத்தை, அவர்களுடைய வருமானத்திற்காக தாராளமாகச் சேமித்து வைத்திருப்பார்.
அவளது பெற்றோர்களுடைய வருமானம் மற்றும் சேமிப்பின் மூலம் அவளுக்கும், அவளுடைய சகோதரிக்கும் திருமணம் நடந்து சௌகரியமாக வாழ்க்கை நடத்தி வந்தனர்.
அந்த அடிப்படையில், தன்னுடைய குழந்தைகளுக்கும் திருமணமாகி சௌகரியமான வாழ்க்கை கிடைக்க வேண்டும் என்று அவள் விரும்புகிறாள்.
கிராமத்தில் வக்கீலாக இருந்து, தன் மூன்று குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஐந்தாயிரம் பவுன்கள் கொடுத்த பெரிய விஷயத்தைப் பற்றி அவள் தவிர்த்து விட்டாள்.
போதுமான முயற்சி செய்யாமல், அவளுடைய பலவீனமான மனம், பலன்களை எதிர்பார்க்கிறது.

10. "These qualities put an end to all real affection for her".
Affection flows naturally, cannot be forced.
Affection is an emotion. It flows out of an emotional heart; it is drawn by various qualities apart from an affectionate heart.
Folly, insistence on folly, boisterousness do not generate affection in another.
In a woman mainly her feminine nature compels affection.
Mrs. Bennet has no feminine refinements; rather she has all the masculine coarseness.
An illiberal Mind will look roughly in her face.
Coarseness in the face is insensitivity in the feelings.
Absence of refined feelings inside aspires for loud display in behaviour.
She is all initiative; usurps everyone's right, physically dominates.
When all these lead to no positive accomplishments, she complains of nervousness.
A wife who often imagines herself to be nervous to have her way as a stratagem does not incite affection in the husband or respect in the children.
Had she been quiet, doing her work, he would have totally forgotten her.
Her domineering, boisterous, insistent interference constantly keeps her in his Mind.
She ensures she is not forgotten.
When he is in the library we do not see any occasion there that would remind him of her affectionately or with solicitude.
She does not even appear to seek affection or complain of its lack.
Marriage was an end in itself initially.
When the girls grew up, their marriage was the object.
The way Mr. Bennet chose his wife is the same in Nature where the insects reach a flame.
The attraction of the bee to the honey, the predator seeking its prey, the beetles reaching the flame, Man gravitating towards a pretty face are ways of Nature for interaction between the Many.
Life is composed of this interchange, and further with the One.
As the root seeks water, one soul seeks another soul.
One relating to the Many, Many relating to the Many, the Many relating to the One is cosmic life.

"அவள் மீது உண்மையான அன்பு வைக்க, இந்த குணங்கள் யாவும் முற்றுப்புள்ளி வைத்தன."

அன்பு தானாக எழும், கட்டாயப்படுத்த முடியாது.

அன்பு ஒரு உணர்வாகும். உணர்வுபூர்வமாக இருக்கும் உள்ளத்திலிருந்து அது எழும்; பாசமான உள்ளத்தால் மட்டுமல்லாது, பல்வேறு குணங்களால் அது கவரப்படும்.

மடமை, மடமையின் வலியுறுத்தல், கீழ்ப்படியாமை இவை மற்றவரிடம் அன்பை உண்டாக்காது.

ஒரு பெண்ணிடம், முக்கியமாக அவளுடைய பெண்மையின் சுபாவம் அன்பை வரவழைக்கும்.

திருமதி பென்னட்டிடம் பெண்மையின் நளினங்கள் இல்லை, இருந்தது எல்லாம் ஆண்பிள்ளைத்தனமான முரட்டுத்தனம்தான்.

குறுகிய மனம் அவளை முரட்டுத்தனமாகப் பார்க்கும்.

முகம் முரட்டுத்தனமாகக் காணப்படுவது உணர்வுகளில் சொரணை இல்லாமல் இருப்பதாகும்.

அகத்தில் நாசூக்கின்றி இருக்கும் உணர்வுகள், நடத்தையில் ஆர்ப்பாட்டமாக காண்பித்துக்கொள்ள ஆர்வப்படும்.

தன்முனைப்புடன், எல்லோருடைய உரிமைகளையும் அபகரித்துக் கொண்டு அதிகாரம் செய்பவளாக அவள் இருக்கிறாள்.

இவை எல்லாம் அவளுக்கு நல்ல பலன்களை கொடுக்காதபோது, தனக்கு படபடப்பாக இருப்பதாகக் கூறுகிறாள்.

தான் படபடப்பாக இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு அதனை தன்னுடைய உபாயமாக கையாளும் ஒரு மனைவி, கணவனுடைய அன்பைப் பெற முடியாது அல்லது குழந்தைகளிடம் மரியாதையையும் பெற முடியாது.

அவள் அமைதியாக தன்னுடைய வேலைகளைச் செய்து கொண்டிருந்திருந்தால், அவர் அவளை முழுவதுமாக மறந்து விட்டிருப்பார்.

அவளுடைய அதிகாரமும், கீழ்ப்படியாமையும், வலியுறுத்தும் குறுக்கீடும், அவருக்கு அவளை தொடர்ந்து ஞாபகப்படுத்துகின்றன.

தன்னை அவர் மறந்து விடவில்லை என்பதை அவள் உறுதிப்படுத்திக் கொள்கிறாள்.

அவர் நூலகத்தில் இருக்கும்பொழுது அவளை அன்புடனும் அக்கறையுடனும் நினைத்துக்கொள்ள எந்த ஒரு சந்தர்ப்பமும் எழுவதில்லை என்பதை நாம் பார்க்கிறோம்.

அவள் அன்பை நாடுவதாகவும் தெரியவில்லை அல்லது அன்பு காட்டாததற்கு குறை கூறுவதும் இல்லை.

ஆரம்பத்தில் திருமணம் ஒரு குறிக்கோள் போலவே இருந்தது.

பெண்கள் வளர்ந்து விட்டபொழுது, அவர்களது திருமணம் ஒன்றே விஷயமாக இருந்தது.

இயற்கையில், பூச்சிகள் நெருப்பை நோக்கிச் செல்வதைப் போல், திரு பென்னட் மனைவியைத் தேர்ந்தெடுத்தார்.

தேனை நோக்கி தேனீயும், இரையை தேடும் விலங்கும், நெருப்பை நோக்கிச் செல்லும் விட்டில் பூச்சியும், அழகான முகத்தால் ஈர்க்கப்பட்டு ஆண் செல்வதும், பலவற்றிற்கிடையே தொடர்பு ஏற்படுத்தும் இயற்கையின் வழிமுறைகளாகும்.

வாழ்க்கையிலுள்ள இந்த பரிவர்த்தனை பிரம்மம்வரை தொடருகிறது.

வேர் நீரை நாடுவதைப்போல் ஒரு ஆன்மா மற்றொரு ஆன்மாவை நாடுகிறது.

ஒன்று பலவற்றுடனும், பல பலவற்றுடனும், பல ஒன்றுடனும்தொடர்பு கொள்வது பிரபஞ்ச வாழ்வாகும்

11. "Mr. Bennet was not of a disposition to seek comfort for his disappointment in any of those pleasures that console the unfortunate for their folly".

As soon as one meets disappointment, shallow characters turn to other avenues of satisfaction.

Strong characters persist and in most cases are rewarded long after.

Socially the Bennets will be considered lucky.

We look at it as the complements working out reconciliation.

The French Revolution extending its influence across the channel is a view.

The 20th century lived by Lydia in anticipation is a historical view.

There are some dozens of proverbs relating to the story proving the age old human wisdom.

We have taken the story to discover Mother's rules of life.

The mystery of life lies in the exceptions.

The smallest act playing the greatest role is another significance.

One Man's perfection saving the world is from Savitri.

The story explains Silent will in several shades.

Autocratic arrogance subconsciously harbouring aristocratic generosity comes out here.

I have been trying to discover Mother's Marvel in the story.

Individual's irresponsibility compensated by aristocratic responsibility is an aspect of life.

Once a lover, lover forever is the revelation of the heart.

In this world of extreme curiosity, one can be in intense love without anyone knowing it. She only knew it as hatred.

Even that performance found an exception in an old maid's mercenary penetration.
We heard from Mrs. Bennet that had she gone to Brighton with the whole family, the catastrophe would not have happened.
It is the wisdom of the physical Mind after the event.
There is always the other Man's point of view.
"தங்களுடைய தவறுகளுக்கு ஆறுதல் பெற சில துரதிர்ஷ்டசாலிகள் எந்த விதமான இன்பங்களில் ஈடுபடுவார்களோ அதேபோல் திரு பென்னட், தான் அடைந்த ஏமாற்றத்திற்கு ஆறுதல் பெற தயாராக இல்லை."
ஏமாற்றத்தை சந்தித்த உடனேயே அர்த்தமற்ற மனிதர்கள் ஆறுதல் பெற வேறு வழிகளை நாடுகின்றனர்.
வலிமை உள்ளவர்கள் தொடர்ந்து முயற்சி செய்கின்றனர், பலரும் வெகு நாட்கள் கழித்து பலனைப் பெறுகின்றனர்.
பென்னட் குடும்பத்தினர் சமூக அளவில் அதிர்ஷ்டசாலிகளாகக் கருதப்படுகின்றனர்.
சமாதானம் செய்துகொள்ள முயலும் உடன்பாடாக அதை நாம் பார்க்கிறோம்.
பிரெஞ்சுப் புரட்சி கடல் கடந்தும் அதனுடைய தாக்கத்தை ஏற்படுத்துவது ஒரு பார்வையாகும்.
இருபதாம் நூற்றாண்டினை முன்கூட்டியே லிடியா வாழ்ந்து காட்டியது சரித்திர பார்வையாகும்.
மனித அறிவினை வெளிப்படுத்தும் வண்ணம் இக்கதைக்கு பொருந்தும் வகையில் பழைய பழமொழிகள் பல உள்ளன.
அன்னையின் வாழ்வின் சட்டங்களைக் கண்டு பிடிப்பதற்காக நாம் இக்கதையை எடுத்துக் கொண்டுள்ளோம்.
விதி விலக்குகளில் வாழ்க்கையின் மர்மங்கள் இருக்கின்றன.
மிகச் சிறிய செயல் மிகப் பெரிய பங்கு வகிப்பது மற்றொரு முக்கியமான விஷயமாகும்.
ஒரு மனிதனின் பூரணத்துவம் உலகைக் காப்பாற்றும் என்று சாவித்ரி கூறுகிறது.
மௌன உறுதியை கதை பல விதங்களில் விளக்குகிறது.
எதேச்சதிகார அகம்பாவம் உயர்குடியினரின் பெருந்தன்மையை ஆழ்மனதில் போற்றுவது இங்கு வெளி வருகிறது.
இக்கதையில் அன்னையின் அற்புதங்களைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து வருகிறேன்.
தனி நபரின் பொறுப்பின்மை உயர்குடியினரின் பொறுப்பினால் ஈடு செய்யப்படுவது வாழ்க்கையின் ஒரு கூறாகும்.
காதலர், எப்பொழுதுமே காதலர்தான் என்பது உள்ளத்தின் பெரிய வெளிப்பாடாகும்.
தெரிந்துகொள்வதில் மிகவும் ஆர்வமாக இருக்கும் இந்த உலகத்தில், ஒருவருக்குத் தெரியாமலேயே ஒருவர் காதலில் தீவிரமாக இருக்கலாம். அவளுக்கு அது வெறுப்பாக மட்டுமே தெரிந்திருந்தது.
அந்த ஒரு செயல்பாட்டிலும் வயதான பெண்மணி ஆதாய மனப்பன்மையுடன் நுழைந்தது, விதிவிலக்காக இருந்தது.
குடும்பம் முழுவதுடன் தான் பிரைட்டனுக்குச் சென்றிருந்தால் இந்த பேராபத்து நடந்திருக்காது என்று திருமதி பென்னட் கூறுவதை நாம் கேட்கிறோம்.
நிகழ்ச்சிக்குப் பிறகு எழும் ஜட மனத்தின் அறிவாகும் இது.
அடுத்தவரின் கண்ணோட்டம் என்பது எப்பொழுதும் உள்ளது.

12. "He was fond of the country and of books".
Man is conservative, that is physical, which means loves inaction.
The town represents change which means the adventure of insecurity.
Only the deprived population moved to the towns in those days.
From 1900 or even 1800 the privileged moved to town to share the nation's political privileges.
The political privilege is more easily accessible through cultural eminence.
Culture vests with the wealthy.
Landed gentry are wealthy.
Lands were in the hands of the strong which means the brute.
The brute rules by brute strength.
The underprivileged had no strength to oppose the wealthy.
The wealthy employed the underprivileged to suppress their kind.
Unity of the have-nots created Revolutions.
What Revolution brings by violence, evolution brings about smoothly.
Evolution comes by education.
Education is education of equality.
Equality expresses easily in a pretty face.
Romance becomes an evolutionary vehicle of Revolution.
Man becomes a Revolutionary discovering equality in the down-trodden.
The woman in the wife is his downtrodden.

To accord equality to Mrs. Bennet is evolution by Romance.
The French Revolution is represented in Longbourn by her anxiety to visit Brighton with all the family.
It raises the have-nots, ennobles the nobles.
The change humiliates one and threatens the security of the other.
Material victory goes with moral triumph.
The long suffering society is rewarded in the next generation.
The low really are charmed by the falsehood of the high.
Even the triumph does not disenchant the successful low.
“அவருக்கு கிராமப்புறங்களும், புத்தகங்களும் பிடிக்கும்.”
மனிதன் பழைமைவாதியாக இருக்கிறான், அது ஜடத்திற்குரியது, சோம்பேறியாக இருக்க விரும்புகிறான்.
மாற்றம் ஏற்படுவது நகரத்தில், பாதுகாப்பிற்கு ஏற்படும் ஆபத்தை அந்த மாற்றம் துணிந்து எதிர்கொள்ளும்.
ஏழை மக்களே அன்று நகரத்திற்குக் குடி பெயர்ந்தனர்.
1900ஆம் வருடம் அல்லது ஏன் 1800ஆம் வருடம் முதலே, பணக்காரர்கள் நாட்டின் அரசியல் சௌகரியங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக நகரத்திற்குச் செல்ல ஆரம்பித்தனர்.
அரசியல் சௌகரியங்களை கலாச்சார மேன்மை மூலம் சுலபமாக அடைய முடியும்.
பண்பாடு பணக்காரர்களுக்கு உரித்தானது.
நிலச்சுவான்தார்கள் பணக்காரர்களாக இருந்தனர்.
நிலங்கள் பலசாலிகளிடம் இருந்தன, அவர்கள் முரட்டுத்தனமானவர்கள்.
முரடன், முரட்டுத்தனமான பலத்துடன் ஆட்சி செய்வான்.
பணக்காரர்களை எதிர்க்க ஏழைகளுக்கு பலம் கிடையாது.
ஏழை மக்களின் வர்க்கத்தை அடக்குவதற்காக பணக்காரர்கள் அவர்களை வேலைக்கு வைத்துக் கொண்டனர்.
ஏழை மக்களின் ஒற்றுமை புரட்சிகளாக வெடித்தன.
வன்முறையினால் புரட்சி கொண்டு வருவதை பரிணாமம் அமைதியாக கொண்டு வரும்.
படிப்படியான வளர்ச்சி கல்வியினால் எழுகிறது.
சமத்துவத்துக்கான கல்வியே கல்வி ஆகும்.
அழகான முகத்தில் சமத்துவம் சுலபமாக வெளிப்படும்.
புரட்சியின் மாற்றத்தின் கருவியாக காதல் மாறுகிறது.
நசுக்கப்பட்ட மக்களிடம் சமத்துவத்தைக் கண்டு பிடிக்கும்பொழுது மனிதன் புரட்சியாளனாக மாறுகிறான்.
மனைவிக்குள் இருக்கும் பெண் அவனால் நசுக்கப்பட்டவள்.
திருமதி பென்னட்டிற்கு சமத்துவம் அளிப்பது, காதலினால் எழும் முன்னேற்றம் ஆகும்.
தன் குடும்பத்துடன் பிரைட்டனுக்குச் செல்ல அவள் ஆர்வப்படுவது, லாங்பர்னில் பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கம் இருப்பதை உணர்த்துகிறது.
அது ஏழைகளை உயர்த்துகிறது, உயர்ந்தோரை மேன்மைப்படுத்துகிறது.
மாற்றம் ஒருவரை இழிவு படுத்துகிறது, மற்றவரது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.
பொருள்ரீதியான வெற்றி, தார்மீக வெற்றியுடன் சேர்ந்து கொள்கிறது.
அடுத்த தலைமுறையில் நீண்ட காலமாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் சமூகத்திற்கு வெகுமதி அளிக்கப்படுகிறது.
உயர்ந்தவரின் பொய்மையைக் கண்டு, தாழ்ந்தோர் உண்மையில் கவரப்படுகின்றனர்.
தாழ்ந்தோர் வெற்றி பெற்றால்கூட, அது அவர்களை அந்த கவர்ச்சியிலிருந்து விடுவிப்பதில்லை.

13. “her ignorance and folly have contributed to his amusement”.
To be amused by the despised is to retain the relationship.
In difference is subconscious relationship.
It is more comprehensive than the conscious relationship.
The word conscious cannot do its linguistic duty sufficiently or correctly.
Language uses unconscious to denote a subconscious phenomenon.
This method leaves us with no word for the life of the sleeping or stunned person.
Sri Aurobindo calls this usage of conscious vulgar.
We use the word conscious for intentional or wanton action.
Landed men disappointed in the wife turn to other woman.
It is a source of threat to the institution of marriage.
Society has a substantial population of women unfit for marriage.
They enter into domestic service and are available to degenerate men, becoming unwed mothers.
There is an equally substantial male population who cannot enter married life due to poverty.
They suffer a social degradation and settle themselves at a lower level.
Mr. Bennet sought no such diversion. Hence his penance.
Frittering away of physical energy disintegrates the body, desecrates the status.

Mr. Bennet redirected his mental energies to studies.
It broadens the mental horizon.
His tapas yielded results in his children and ended in Pemberley.
Before entering Pemberley Elizabeth chastened its atmosphere by disillusioning his Pride and arrogance.
Her abuse, of which she was later ashamed, elevated his arrogant consciousness.
The wisdom of her abuse was the mantra of his life.
He not only accepted her abuse, but asked his sister to adore her for that abuse.
Surely he took her punishments as grace.
“அவளுடைய அறியாமையும், மடமையும் அவருக்கு வேடிக்கையாக இருந்தன.”
வெறுப்பு அடைந்தவர்களால் சந்தோஷப்படுவது உறவை தக்க வைத்துக்கொள்ள உதவும்.
வேறுபாட்டில் இருப்பது ஆழ்மன உறவாகும்.
மேல் மனத்தின் உறவைவிட, இது மேலும் விரிவானது.
‘conscious’எனும் சொல், மொழிரீதியாக போதுமான விளக்கமோ அல்லது சரியான அர்த்ததையோ கொடுக்கும் திறனுடையதல்ல.
ஆழ்மன நிகழ்வை குறிப்பிடுவதற்கு, தன்னினைவில்லாது எனும் சொல்லை மொழி உபயோகப்படுத்துகிறது.
உறங்குகின்ற அல்லது திகைப்புற்று நிற்கும் மனிதனின் வாழ்விற்கு இந்த முறையில் ஒரு வார்த்தையும் இல்லை.
இதை ஸ்ரீ அரவிந்தர் ‘conscious vulgar’ இன் உபயோகம் என்று கூறுகிறார்.
வேண்டுமென்றே செய்யும் செயலுக்கும் அல்லது நோக்கத்துடன் செய்யும் வேலைக்கும் நாம் conscious எனும் வார்த்தையை பயன் படுத்துகிறோம்.
நிலச்சுவான்தார்கள் மனைவியிடம் அதிருப்தி எழும்பொழுது வேறு பெண்ணை நாடுகின்றனர்.
திருமண அமைப்பிற்கு இது ஆபத்தின் மூல காரணம் ஆகும்.
சமூகத்தில் திருமணத்திற்கு தகுதி இல்லாத பெண்மணிகள் கணிசமான அளவில் உள்ளனர்.
வீட்டு வேலைக்காக உள்ளே நுழைந்து ஆண்களை தரமிழக்க வைத்து, திருமணமாகாத தாயாராகின்றனர்.
ஏழ்மையின் காரணமாக சமமான அளவில் ஆண்களும் திருமண வாழ்க்கையில் நுழைய முடியாமல் உள்ளனர்.
சமூகத்தில் அவர்கள் நிலை தாழ்ந்து போய், தங்களை கீழான நிலைகளுக்கு உட்படுத்திக் கொள்கின்றனர்.
திரு பென்னட் அது போல் தன்னை திசை திருப்பிக் கொள்ளவில்லை. அதனால்தான் அவர் வாழ்வு தவமாக இருந்தது.
ஜட சக்தியை வீணாக்குவதால் உடல் அழிந்து நிலையைக் கெடுக்கிறது.
திரு பென்னட் தன்னுடைய மனத்தின் சக்திகளை, படிப்பதில் திசை திருப்பினார்.
மனத்தின் எல்லைகளை அது விரிவுபடுத்தியது.
அவருடைய தவம் குழந்தைகளிடம் பலன் அளித்து, பெம்பர்லியில் முடிந்தது.
பெம்பர்லிக்குள் நுழையும் முன்பே, எலிசபெத், அவனுடைய தற்பெருமையையும், அகம்பாவத்தையும் அழித்து, அங்கிருக்கும் சூழலை தூய்மைப்படுத்தினாள்.
பின்னர் அவளை வெட்கப்பட வைத்த அவளுடைய நிந்தனை, அவனுடைய அகம்பாவமான ஜீவியத்தை உயர்த்தியது.
அவளுடைய நிந்தனையில் இருந்த விவேகம், அவனது வாழ்வின் மந்திரமாக இருந்தது.
அவன் அவளுடைய நிந்தனையை ஏற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாமல், அவனது சகோதரியிடமும் அவளுடைய நிந்தனைக்காக அவளைப் போற்றும்படி கேட்டுக்கொண்டான்.
அவள் அளித்த தண்டனையை அருளாக அவன் ஏற்றுக்கொண்டான்.

14. “the true philosopher will derive benefit from such as are given”.
Philosophy is the high realm of purity removed from life.
The idealism of philosophy is the inactive inanity of existence.
Philosophy saw pleasure inextricably intertwined with pain.
So the epicurean cannot escape pain as a necessary consequence.
Sri Aravindam does not exclude anything, even life.
Its specific goal is to divinize life.
Love among the sexes is confined to the rich abundance of ideal matrimony; outside it is there in the sisterly affection of the brother.
Love is infinite and does not exclude any relationship.
A drop of divine love will crush the structures of human consciousness.
It is infinitely weighty; it is infinitely rich in its integral complexity.
It exists not only between the opposite sexes, but everywhere in existence.
Divine Love makes life divine life.
Divine Love permeates existence, not confined to the surface existence.
Surface existence is limited to finite dimensions of the separated egoistic limits, created by Mind, within the successive

movements of Time.
Life is not confined to Time or the unmanifest Timeless.
Its wide richness is an infinite abundance where Time and Timelessness coexist, to express Supermind where no separative egoism can survive.
Love is the Self-experience of the Self consciousness of the conscious Self- Being.
Love is the sensation of the All in the Many.
It excludes no human relationship.
Its ultimate enjoyment is in Matter represented by the human body.
For one who rises from below the selfish human love is a necessary self-discipline of safe boundaries.
For one who descends from above the fullness is reached in its emerging with what rises from below after transforming it by its aspiration.
Its richness is unconditional purity of the entire dependence on the Divine.
It is a fullness made possible by its integral completeness transcending Time as well as Timelessness.
"உண்மையான ஞானி, எது கிடைக்கிறதோ அதிலிருந்து பயனை பெற்றுக்கொள்வார்."
தத்துவம் வாழ்விலிருந்து அகற்றப்பட்ட தூய்மையின் உயர்ந்த இடமாகும்.
தத்துவத்தின் இலட்சியவாதம், வாழ்வில் செயலற்று இருக்கும் வெறுமையாகும்.
இன்பத்தை விடுவிக்க முடியாத அளவிற்கு வலியுடன் பின்னிப் பிணைந்துள்ளதாக தத்துவம் பார்க்கிறது.
இன்பத்தை விரும்புவோர் அவசியமான பின்விளைவுகளான துன்பத்திலிருந்து தப்ப முடியாது.
ஸ்ரீ அரவிந்தம் வாழ்க்கை உள்பட எதையும் விலக்குவதில்லை.
வாழ்வை தெய்வீகமாக மாற்ற வேண்டும் என்பதுதான் அதனுடைய குறிப்பிட்ட குறிக்கோள்.
இருபாலாரிடையே அன்பு என்பது இலட்சியமான திருமண வாழ்க்கையில்தான் செழிப்பாக அபரிமிதமாக உள்ளது; இதற்கு வெளியே, ஒரு சகோதரனிடம் சகோதரி காட்டும் பாசத்தில் உள்ளது.
அன்பு அளவற்றது, இதில் எந்த உறவு முறையும் விலக்கல்ல.
மனித ஜீவியத்தை ஒரு துளி தெய்வீக அன்பு தவிடு பொடியாக்கி விடும்.
அது அளவற்ற வலிமை பொருந்தியது; அதனுடைய ஒருங்கிணைந்த உட்சிக்கலில் அது அளவற்ற வளம் பொருந்தியது.
இது எதிரெதிர்பாலோரிடம் மட்டும் இருப்பதில்லை, வாழ்வில் எல்லா இடங்களிலும் இருக்கிறது.
தெய்வீக அன்பு வாழ்வை தெய்வீக வாழ்வாக மாற்றுகிறது.
தெய்வீக அன்பு வாழ்வை ஊடுருவுகிறது மேல் மன வாழ்வோடு மட்டும் நின்று விடுவதில்லை.
காலத்தின் சலனங்களுக்குள் இயங்கும் இவ்வாழ்வில், மனத்தால் உருவாக்கப்பட்ட அகந்தையின் அளவுக்குட்பட்டதாக உள்ளது மேல் மன வாழ்வு.
காலம் அல்லது சிருஷ்டிக்கப்படாத காலமின்மைக்குள் வரையறைக்கப்பட்டதல்ல வாழ்க்கை.
வெளிப்படுத்துவதற்கு காலமும் காலமின்மையும் இணைந்து இருக்கும் இடத்தில், அதனுடைய பரந்த செழுமை அளவற்ற அபரிமிதமாகும்.
வெவ்வேறாக இருக்கும் பாங்குடைய எந்த அகந்தையும் சத்திய ஜீவியத்தில் உயிர் வாழ முடியாது.
தன்னினைவுடன் இருக்கும் சுயஜீவனின் சுய ஜீவியத்தின் சுய அனுபவமே காதல் ஆகும்.
பலவற்றில் இருக்கும் எல்லாவற்றின் உணர்வே காதல் ஆகும்.
அதற்கு எந்த மனித உறவும் விலக்கல்ல.
மனித உடலாக இருக்கும் ஜடத்தில்தான் அதன் இறுதியான சந்தோஷம் இருக்கிறது.
கீழ் நிலையிலிருந்து உயருபவருக்கு சுயநலமான மனித அன்பு பாதுகாப்பான எல்லைக்குள் இருக்கும் அவசியமான சுய கட்டுப்பாடு ஆகும்.
காதல் எழும் பொழுது ஒருவர் தன்னுடைய கீழான குணங்களை திருவுருமாற்றிய பிறகு மேலெழுந்து முழுமை அடைகிறார்.
இறைவன்மேல் முழுமையாக சார்ந்து இருக்கும் நிபந்தனையற்ற தூய்மை அதனுடைய செழிப்பு ஆகும்
அதன் ஒருங்கிணைந்த முழுமையால் சாத்தியமாகும் நிறைவு அது. காலம் மற்றும் காலமின்மையைக் கடந்து செல்கிறது.

Elizabeth, however, had never been blind to the impropriety of her father's behaviour as a husband. She had always seen it with pain; but respecting his abilities, and grateful for his affectionate treatment of herself, she endeavoured to forget what she could not overlook, and to banish from her thoughts that continual breach of conjugal obligation and decorum which, in exposing his wife to the contempt of her own children, was so highly reprehensible. But she had never felt so strongly as now the disadvantages which must attend the children of so unsuitable a marriage, nor ever been so fully aware of the evils arising from so ill-judged a direction of talents; talents which, rightly used, might at least have preserved the respectability of his daughters, even if incapable of enlarging the mind of his wife.

ஒரு கணவனாக ஒழுங்காக நடந்துகொள்ளாத தன்னுடைய தகப்பனாரின் நடத்தையை எலிசபெத் கவனிக்காமல் இல்லை. மிகவும் வருத்தத்துடன் எப்பொழுதும் அதனை கண்டிருக்கிறாள். ஆனால் அவருடைய திறமைகளினாலும் தன்னிடம் பாசமாக நடந்து கொள்வதற்கு நன்றியுடையவளாகவும் இருந்ததினால், எதனை அலட்சியப்படுத்த முடியாதோ அதனை மறக்க பெரு முயற்சி எடுத்தாள். இல்லற கடமைகளிலிருந்தும் அதற்குரிய மரியாதைகளிலிருந்தும் தொடர்ந்து தவறிய தன் தகப்பனாரின் செயலை தன் நினைவுகளிலிருந்து வெளியேற்ற முயற்சி செய்தாள். அவருடைய மனைவியை அவர் குழந்தைகள் வெறுக்கும் அளவிற்கு வெளிக் காண்பித்தது மிகவும் கண்டிக்கத்தக்கது. இது போன்ற பொருந்தாத திருமணத்தால் குழந்தைகளுக்கு இவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்று இப்பொழுது தீவிரமாக உணர்ந்ததுபோல் என்றும் உணர்ந்ததில்லை. சரியான மதிப்பீடு இல்லாமல் அவருடைய திறமைகளை சரியான திசையில் திருப்பாமல் இருந்ததினால் ஏற்படும் தீமைகளைப்பற்றி இதற்குமுன் இந்த அளவு புரிந்துகொள்ளவில்லை. சரியானபடி அவர் தன் திறமைகளை உபயோகித்திருந்தால் அவருடைய மனைவியின் அறிவை பெருக்கியிருக்க முடியாமல் போயிருந்தாலும் அவருடைய பெண்களின் கண்ணியத்தைப் பாதுகாத்திருக்க முடிந்திருக்கும்.

15. "Elizabeth has never been blind to her father's impropriety as a husband".

Propriety is the unwritten law in all walks of life where law does not operate.
In the courts, judgment is final; but a decree is needed to execute.
Law lays down the legal destiny of the society at large.
That is the constitution.
It is brought down to every walk of life.
Propriety, courtesy, procedure, custom, usage, decency are the end expressions of the legal authority of the society reaching the individual through the long arm of government.
Mr. Bennet as a husband was to protect his wife.
He ridiculed her, exposed her to ridicule, rendered her ignorance vulnerable.
It was improper, that too before others, especially his own children.
It was unjustifiable, but we can understand it.
She took away his right which other husbands would not part with.
As she transgressed, he transgressed. Still it was indefensible.
Her own nature was dynamic. She could either submit or be what she was.
It was not given to her to choose a middle course.
Should a middle course arise, it should arise in her children.
Elizabeth was not blind to anything around her.
Closer home one can be blind.
She was fully alive to what went on, not knowing why it was so.
She knew the deficiency of her father from the social view. She was not aware that beyond the social view there is a personal reason for that development.
Responding as a child she winced at his sarcastic darts at her mother.
It was a reaction, not an understanding.
No child can understand a parent adequately.
Parents are incapable of understanding their own children.
Any issue fully understood leaves no grievance in our Minds.
Grievance is ignorance formulated as a mental comprehension.
Jealousy is an effective instrument by which one can compete and progress.
Grievance is the means by which one comprehends oneself.
"ஒரு கணவனாக ஒழுங்காக நடந்துகொள்ளாத தன்னுடைய தகப்பனாரின் நடத்தையை எலிசபெத் கவனிக்காமல் இல்லை."
சட்டம் செயல்படாத வாழ்க்கையின் எல்லா இடங்களிலும், ஒழுக்கம்தான் எழுதப்படாத சட்டம்.
நீதிமன்றங்களில் தீர்ப்பே முடிவானது; ஆனால் அதை நிறைவேற்ற உத்தரவு தேவைப்படுகிறது.
சமூகத்தின் சட்டரீதியான விதியைத் தீர்மானிப்பது சட்டம் ஆகும்.
அதுதான் சட்ட அமைப்பாகும்.
வாழ்வின் எல்லா இடங்களிலும் அது செயல்படுகிறது.
ஒழுக்கம், மரியாதை, செய்முறை, வழக்கம், பயன், கண்ணியம் இவைகள் சமூக சட்டத்தின் அதிகாரத்தின் இறுதி வெளிப்பாடுகள் ஆகும். அரசாங்கத்தின் மூலம் இவை தனி நபரை சென்றடைகின்றன.
திரு பென்னட் கணவன் என்ற முறையில் மனைவியைக் காப்பாற்ற வேண்டும்.
அவர் அவளை கேலி செய்தார், கேலிக்கு ஆளாக்கினார், அவளுடைய அறியாமைக்கு ஊறு விளைவித்தார்.
மற்றவர்முன், முக்கியமாக அவருடைய குழந்தைகள்முன் அவ்வாறு அவர் நடந்து கொண்டது சரியல்ல.
அதனை நியாயப்படுத்த முடியாது. ஆனால் நம்மால் அதைப் புரிந்துகொள்ள முடியும்.
எந்த கணவனும் விட்டு கொடுக்க முடியாத உரிமைகளை, அவள் அவரிடமிருந்து பறித்துக் கொண்டாள்.

அவள் தன்னுடைய எல்லையைக் கடந்தது போல் அவரும் கடந்து சென்றார், இருப்பினும் அது நியாயப்படுத்த முடியாததாக இருந்தது.
அவளுடைய சுபாவம் சுறுசுறுப்பாக தீவிரமுடையதாக இருந்தது. ஒன்று அவள் அடி பணியலாம், அல்லது எவ்வாறு இருந்தாளோ அவ்வாறே இருக்கலாம்.
இதற்கு இடைப்பட்ட ஒரு நிலையை தேர்ந்தெடுக்க அவளால் முடியாது.
இடைப்பட்ட நிலை ஏதேனும் எழ வேண்டுமென்றால், அது அவளுடைய குழந்தைகளிடம்தான் எழ வேண்டும்.
சுற்றி நடப்பவை எல்லாமே எலிசபெத்திற்குத் தெரிந்திருந்தது.
வீட்டிற்கு அருகில் இருப்பது ஒருவருக்குத் தெரியாமல் போகலாம்.
அவளுக்கு என்ன நடக்கிறது என்று நன்றாகத் தெரிந்திருந்தது, ஆனால் ஏன் அவ்வாறு நடக்கிறது என்று தெரியவில்லை.
சமூக கண்ணோட்டத்தின்படி அவளுடைய தந்தையின் குறை அவளுக்குத் தெரிந்திருந்தது. சமூகப் பார்வையையும் தாண்டி அவ்வாறு அவர் நடந்துகொண்டதற்கு ஒரு தனிப்பட்ட காரணம் இருக்கிறது என்பது அவளுக்குத் தெரியவில்லை.
ஒரு குழந்தையாக, அவளுடைய தாயாரை அவர் கேலி செய்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்திருக்கிறாள்.
அது எதிர்விளைவாக இருந்ததே தவிர, புரிந்துகொண்டதன் அடையாளமல்ல.
எந்த ஒரு குழந்தையும் பெற்றோரை சரியாகப் புரிந்துகொள்ள முடியாது.
பெற்றோர்களால் அவர்களுடைய குழந்தைகளை சரியாகப் புரிந்துகொள்ள முடியாது.
ஒரு விஷயத்தை முழுமையாகப் புரிந்துகொண்டு விட்டால் எந்த வருத்தமும் மனதில் எழாது.
மனத்தின் புரிந்துகொள்ளும் திறனாக உருவாகியிருக்கும் அறியாமையே வருத்தம் ஆகும்.
ஒருவர் போட்டியிடுவதற்கும், முன்னேறுவதற்கும் பொறாமை ஒரு ஆற்றல் வாய்ந்த கருவியாகும்.
ஒருவர் தன்னையே அறிந்துகொள்ள உதவுவது வருத்தம்தான்.

16. "grateful for his affectionate treatment of herself".
Partiality to any child is ruinous to other children.
Insufficient energy to attend all children becomes selective partiality.
No parent has energy to attend to all children.
Parents are all the children have. When no attention comes from them, they dry up.
Children are very sensitive to attention.
The child directly becomes refractory when no attention is forthcoming.
Full attention makes a dull child brilliant.
Attention is energy.
Existing intelligence energized stands out.
Children have an accurate knowledge of the attention they receive.
They know what the parents expect and exactly refuse to do it because no attention is received.
It starts as a conscious protest and ends as a subconscious character.
Absence of broad-minded magnanimity leads to partiality.
Partiality is a pride in being able to be selective.
With the passage of time, children wean themselves away earlier than is good for them as an exercise in Individuality.
Encouraging Individuality indirectly leads to the child being unemotional and dry.
That way individuality ends up in selfishness.
Her representation to her father about Lydia and Lydia at last was saved for her sake by Darcy go together.
Society protects people from sliding down.
The power of culture that is conscience is a security against a fall. Also it opens opportunities.
Aspiration for an ideal is an occasion for great opportunities to sail towards him.
Spiritual elevation is social, psychological and even physical elevation.
After all, the physical, vital, Mental are of the Spirit.
"அவளை பாசமாக நடத்தியதற்கு அவள் நன்றி உடையவளாக இருந்தாள்."
ஒரு குழந்தையிடம் காண்பிக்கும் பாரபட்சம் மற்ற குழந்தைகளுக்கு கெடுதலை விளைவிக்கும்.
எல்லா குழந்தைகளையும் கவனிக்க போதுமான சக்தி இல்லாதபோது, சிலரிடம் மட்டும் பாரபட்சமாக நடந்துகொள்ளும்படி அமைந்து விடுகிறது.
எந்த பெற்றோருக்கும் எல்லா குழந்தைகளையும் கவனிக்க சக்தி இருப்பதில்லை.
குழந்தைகளுக்கு இருப்பது பெற்றோர்கள் மட்டுமே. அவர்களிடமிருந்து கவனிப்பு கிடைக்காதபோது அவர்கள் வறண்டு போய் விடுகிறார்கள்.
கவனிப்புக்கு குழந்தைகள் ஏங்குவார்கள்.
கவனிப்பு எதுவும் கிடைக்காத போது, குழந்தைகள் கீழ்ப்படியாதவர்களாகவும், பிடிவாதக்காரர்களாகவும் மாறி விடுகின்றனர்.
முழு கவனம், மந்தமான குழந்தையை புத்திசாலியாக மாற்றுகிறது.

கவனம் சக்தியை அளிக்கும்.
இருக்கும் புத்திசாலித்தனத்திற்கு, மேலும் சக்தி அளித்தால் முதன்மையாக விளங்கும்.
குழந்தைகளுக்கு, அவர்களுக்குக் கிடைக்கும் கவனிப்பை பற்றிய துல்லியமான அறிவு இருக்கும்.
பெற்றோர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். கவனிப்பு கிடைக்காத போது அதை செய்ய அவர்கள் மறுப்பார்கள்.
அது சுய நினைவுடன் எடுக்கும் எதிர்ப்பாக ஆரம்பித்து ஆழ்மன சுபாவமாக முடிகிறது.
பரந்த மனப்பான்மை இல்லாதபொழுது பாரபட்சம் எழுகிறது.
தேர்ந்தெடுக்க முடியும் என்கிற வீண் பெருமை பாரபட்சமாகிறது.
காலப் போக்கில் குழந்தைகள் தாமாகவே அவர்களுக்குகந்த தருணத்திற்கு முன்பே விலகிச் செல்வது, தனித்துவத்தின் ஒரு செயற்பாடாகும்.
தனித்துவத்தை ஆதரிப்பது, மறைமுகமாக அவர்களை உணர்ச்சி அற்றவர்களாகவும், வறண்ட உள்ளம் படைத்தவர்களாகவும் மாற்றி விடுகிறது.
அதன்படி தனித்தன்மை சுயநலத்தில் சென்று முடிவடைகிறது.
லிடியாவிற்காக அவளுடைய தந்தையிடம் பேசியதும், அவளுக்காக டார்சி லிடியாவைக் காப்பாற்றியதும் ஒன்றோடு ஒன்று ஒத்துப்போகின்றன.
மக்கள் கீழ்நிலைக்கு இறங்குவதிலிருந்து சமூகம் காப்பாற்றுகிறது.
கலாச்சாரத்தின் சக்தியான மனசாட்சி, தரம் தாழ்வதிலிருந்து பாதுகாக்கிறது. அது வாய்ப்புகளுக்கும் வழி வகுக்குகிறது.
ஆர்வம் பெரிய வாய்ப்புகளை ஒருவருக்கு அளிக்கிறது.
ஆன்மீக எழுச்சி சமூகரீதியானது, உளரீதியானது, ஜட எழுச்சியும் கூட.
ஜடம், உணர்வு, மனம் எல்லாமே பார்க்கப் போனால் ஆன்மாவுக்குரியது.

17. "the continued breach of conjugal obligations and decorum".
Sri Aurobindo said about Vali, human conduct will not be proper with an infra-human person.
Conjugal obligation and decorum is in its excellent place with a wife.
Mrs. Bennet was no wife to him. She was a maid who occupied the place of a wife.
Such decorum can only be exploited by her.
She was not only one who could understand the intricacies of a decorum's behaviour.
To her it would reveal a greater freedom for her to take initiative.
Society will not permit him to treat her as she deserves.
His own conscience, the conscience of a British husband will not allow it.
Nowhere does Elizabeth regret her mother's deficiencies as, in the words of the author, she censured her father.
Children are not fully aware of the inadequacies of parents as they are unaware of their endowments.
They relate to parents from their point of view.
Parents rarely are aware of the aspiration of the children.
What stands in the way is ego and practical ignorance.
This ignorance is the rich field for realising the divine riches.
Such knowledge opens the Marvel.
The only instance in the story is Darcy's attitude to Elizabeth.
Parents or children taking that attitude to others will be the right solution. Without Darcy's effort at transformation, such an attitude will at once reduce a family to its conditions of a thousand years ago.
Should the head of the family have Darcy's attitude, his family will rise to a status of a family a thousand years hence.
As it is, one can be good, reasonable, patient, law abiding, conforming to the social norms, having in mental view the social ideals.
In practice it reduces to social upward movement.
The next best is to earn Money.
Further down it is to survive where we are.
Not to lose what one has is often a great effort.
"இல்லற கடமைகளிலிருந்தும், அதற்குரிய மரியாதைகளிலும் தொடர்ந்து தவறியது."
வாலியைப் பற்றி ஸ்ரீ அரவிந்தர் பேசும்பொழுது, மனிதனுடைய நடத்தை மனிதனுக்குக் கீழ் நிலையில் உள்ள நபரோடு சரியானதாக இருக்காது என்கிறார்.
இல்லற கடமைகள், அதற்குரிய மரியாதைகள், ஒருவருக்கு மனைவியிடம் சிறப்பாக இருக்கும்.
திருமதி பென்னட் அவருக்கு மனைவியாக இல்லை. மனைவியின் இடத்தில் அவள் ஒரு பணிப் பெண்ணாக இருந்தாள்.
அது போன்ற மரியாதையை அவள் சுய நலத்திற்காகத்தான் பயன்படுத்திக்கொள்வாள்.
மரியாதையான நடத்தையின் நுணுக்கங்களைப் பற்றி புரிந்துகொள்ளும் திறன் படைத்தவள் மட்டும் அல்ல அவள்.

தன்முனைப்பு எடுப்பதற்கான மேலும் சுதந்திரத்தை அது அவளுக்கு அளிக்கும்.
அவளை எவ்வாறு நடத்த வேண்டுமோ அவ்வாறு நடத்த சமூகம் அவரை அனுமதிக்காது.
ஒரு பிரிட்டிஷ் கணவனின் மனசாட்சியான அவருடைய மனசாட்சி அதை அனுமதிக்காது.
அவளுடைய தந்தையின் குறைகளை கண்டித்ததுபோல், அவளுடைய தாயாரின் குறைகளைப் பற்றி அவள் எங்கும் வருத்தப்படுவதாக கதாசிரியரின் வார்த்தைகளில் தெரியவில்லை.
பெற்றோர்களின் பெருமைகள் குழந்தைகளுக்குத் தெரியாததுபோல, அவர்களுடைய குறைகளும் முழுமையாக அவர்களுக்குத் தெரியாது.
அவர்களுடைய கண்ணோட்டத்திலேயே அவர்கள் தங்களுடைய பெற்றோர்களுடன் சம்பந்தப்படுத்திக் கொள்வார்கள்.
குழந்தைகளுடைய ஆர்வத்தைப் பற்றி பெற்றோர்கள் தெரிந்து கொள்வதில்லை.
அகந்தையும் நடைமுறை அறியாமையும்தான் இடையே உள்ளன.
தெய்வீக வளங்களைப் பற்றி தெரிந்துகொள்ள இந்த அறியாமைதான் வளமான களமாகும்.
அது போன்ற ஞானம் அற்புதங்களின் வாயிலைத் திறக்கும்.
எலிசபெத்திடம் டார்சி கொண்டிருக்கும் மனோபாவம் ஒன்றுதான் கதையில் இருக்கும் ஒரே ஒரு எடுத்துக் காட்டு ஆகும்.
பெற்றோர்களோ அல்லது குழந்தைகளோ அந்த மனப்பான்மையை எடுத்துக்கொள்வது சரியான தீர்வாகும்.
திருவுருமாற்றத்திற்கு டார்சி முயற்சி எடுக்காமல் இருந்திருந்தால், அது போன்ற மனோபாவம், ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் இருந்ததைப் போன்ற நிலையை இந்த குடும்பத்திற்கு ஏற்படுத்தியிருக்கும்.
குடும்பத்தலைவனுக்கு டார்சியின் கண்ணோட்டம் இருந்திருந்தால், ஆயிரம் வருடங்களுக்குப்பின் இருக்கக்கூடிய நிலைமைக்கு குடும்பம் உயர்ந்திருக்கும்.
ஒருவர் நல்லவனாக, நியாயமாக, பொறுமையாக, சட்டத்திற்கு மதிப்பு கொடுப்பவனாக, சமூக விதிகளைப் பின்பற்றுபவனாக, சமூக இலட்சியங்களை மனத்தில் ஏற்பவனாக இருக்கலாம்.
நடைமுறையில் அது சமூக மேல்நோக்கிய முன்னேற்றமாக மாறுகிறது.
அடுத்த சிறந்த விஷயம் பணம் சம்பாதிப்பது.
அதற்கும் கீழே, நாம் எங்கிருக்கிறோமோ அதில் நீடித்து இருப்பதேயாகும்.
இருப்பதை இழக்காமல் இருப்பதே பெரும்பாலும் பெரிய முயற்சியாக இருக்கும்.

18. "in exposing his wife to the contempt of her children is highly reprehensible".
Retaliation is second nature, it is involuntary.
When you are determined not to retaliate, the reaction moves to the subconscious and acts.
Man who can listen to endless criticism cannot do so in the presence of another.
Retaliation replaces severance.
Severance is physical.
One vitally retains the relationship which he desires to give up by provoking him to retaliate.
Retaliation ensures continued relationship.
Provocation retains the relationship negatively.
Affection can be given to deny obligations.
Obligations can put an end to affections.
Attitudes can cancel other relationship or create other attitudes positive or negative.
Only the Psychic can harmonise all attitudes.
All life is yoga obliges us to accept life.
Accepting social intercourse is an obstacle to yoga.
The Psychic can reconcile both.
Inner detachment and outer pleasantness will achieve it.
Had Mrs. Bennet had a hundred small domestic occupations that could raise the children as products of culture, her energy would have been fully absorbed.
Most diseases of the body can be so cured by one who understands the balance of energies by reordering his diet and work.
Shifting the concentration of ache in the head to stomach where the energy can be dissipated, the head ceases to ache.
Society and the individual have hundreds of acceptable behaviours which, when followed at random clash.
Creating a harmonizing centre dissolves all the discords.
Physically games and parties, vitally good manners, mentally the other man's point of view, spiritually silence, supramentally a knowledge of the Marvel can remove the disharmony.
"அவருடைய மனைவியை அவளுடைய குழந்தைகள் வெறுக்கும் அளவிற்கு வெளிப்படுத்தியது மிகவும் கண்டிக்கத்தக்கது."
எதிர்தாக்குதல் இரண்டாவது சுபாவம் ஆகும், அது தன்னிச்சையாக நடப்பது.

பதில் கொடுக்காமல் இருக்க வேண்டும் என்று நாம் தீர்மானித்தால், எதிர்வினை ஆழ்மனத்தை அடைந்து செயல்படும்.
முடிவில்லாத விமரிசனத்தை கேட்டுக்கொள்ள இயலும் மனிதனுக்கு, அதை மற்றவர் முன்னிலையில் கேட்டுக் கொள்ள முடியாது.
எதிர்தாக்குதல் துண்டிக்கும் இடத்தை எடுத்துக் கொள்கிறது.
துண்டிப்பது ஜடத்திற்குரியது.
அவன் விட்டு விட வேண்டும் என்று ஆசைப்படும் உறவை, ஒருவர் பதிலளிக்கும் வகையில் அவனது கோபத்தைக் கிளறி, அதை உணர்வுபூர்வமாக தக்க வைத்துக்கொள்கிறார்.
எதிர்தாக்குதல் தொடர்ந்த உறவை உறுதிப்படுத்துகிறது.
கோபமூட்டுவது உறவை எதிர்மறையாக தக்க வைத்துக் கொள்கிறது.
கடமைகளை மறுக்க பாசத்தை அளிக்கலாம்.
கடமைகள் பாசத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.
மற்ற உறவுகளை மனப்பான்மை ரத்து செய்யலாம் அல்லது நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ வேறு மனப்பான்மைகளை உருவாக்கலாம்.
சைத்திய புருஷனால் மட்டுமே எல்லா மனோபாவங்களையும் ஒன்றிணைக்க முடியும்.
வாழ்வனைத்தும் யோகம் என்பது நம்மை வாழ்வை ஏற்றுக்கொள்ள வற்புறுத்துகிறது.
சமூகப் பரிமாற்றங்களை ஏற்றுக்கொள்வது யோகத்திற்குத் தடையாகும்.
சைத்திய புருஷன் இரண்டையும் சமரசப்படுத்தும்.
அகத்தில் துறவு மனப்பான்மையும், புறத்தில் இனிமையும் இதனை சாதிக்கும்.
கலாச்சாரத்தில் சிறந்தவர்களாக குழந்தைகளை வளர்க்க திருமதி பென்னட் நூறு சிறு வீட்டு வேலைகள் செய்திருந்தால், அவளுடைய சக்தி முழுவதும் அதில் செலவழிந்திருக்கும்.
உணவுக்கும் வேலைக்கும் ஒரு ஒழுங்கு முறையைக் கொண்டு வருவதன் மூலம், சக்திகளின் சமநிலையை ஒருவர் புரிந்து கொண்டிருந்தால், அவரால் உடலின் பல நோய்களை குணப்படுத்தி விட முடியும்.
தலைவலியை ஒருமுகப்படுத்துவதன் மூலம் வலியை வயிற்றுப் பாகத்திற்கு நகர்த்தி விட்டால், அங்கு சக்தியை அழித்து விட முடியும் என்பதால் தலை வலி நீங்கிவிடுகிறது.
சமூகமும், தனி நபரும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் நூறு வித நடத்தைகள் உள்ளன, ஒழுங்கற்ற முறையில் பின்பற்றினால் அவை ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும்.
இணக்கமான ஒரு மையத்தை ஏற்படுத்தினால், எல்லா முரண்பாடுகளையும் கரைத்து விடலாம்.
உடலளவில் விளையாட்டு, கேளிக்கைகள், உணர்வுபூர்வமான நல்ல நடத்தை, மனதளவில் அடுத்தவர் கண்ணோட்டம், ஆன்மீகத்தில் மௌனம், சத்திய ஜீவியத்தில் அற்புதத்தின் அறிவு இவை யாவும் சுமுகமின்மையை அகற்றும்.

19. "She felt the disadvantages of the children of an unsuitable marriage".
Children are the most important issue of a marriage.
Socially without the institution of marriage life could not be regulated in the earlier centuries.
Today because of hundreds of government measures to protect the individual, Man can materially survive.
Social services of innumerable kinds have replaced the essential role of a family created around marriage.
In the countries where marriage is on the wane, though Man is materially secure, it is obvious he is like a rudderless ship. At the age of 88 a man married, five years before his death.
Living together for decades with several partners still does not give the psychological security marriage affords.
As long as property is honoured, marriage has a role to play.
Marriage is essential for Man as a psychological institution.
Woman may not need it as much as Man needs. Cultural upbringing of children is entirely out of question in a single parent family. Children directly walk into the centreless social wilderness to entirely destroy themselves.
Out of thousands so degenerated, one individual emerging is Nature's way.
Man who has supplanted Nature in all fields, can do so here also.
Humanity has not embarked on that experiment yet. Even at the level of thought, there is no clear idea still.
The father himself cannot be replaced for the children. How is the mother to be substituted?
Steve Jobs was an orphan, but was brought up in a family.
His life, apparently a shining success, is an intense psychological sore which is seen in his being ejected by his own company and cancer.
Children cannot be deprived of parents **until humanity is generally capable of a love that is the milk of human kindness.**
Elizabeth acutely feels the devastating effect on the children of the unbalanced marriage.
"பொருத்தமற்ற திருமணத்தால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை அவள் உணர்ந்தாள்.'
திருமணத்தில் குழந்தைகள் மிக முக்கியமான விஷயங்கள் ஆவார்கள்.

ஆரம்ப நூற்றாண்டுகளில் திருமண அமைப்பின்றி, சமூகரீதியாக வாழ்க்கையை கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது.
இன்று தனிமனிதனைக் காப்பாற்ற அரசாங்கம் எடுக்கும் நூற்றுக் கணக்கான நடவடிக்கைகளால் மனிதன் பொருள்ரீதியாக உயிர் வாழ முடிகிறது.
திருமணத்தைச் சுற்றி உருவாக்கப்பட்ட குடும்பத்தின் முக்கியப் பங்கினை, கணக்கிலடங்காத வகைகளில் சமூக அமைப்புகள் எடுத்துக் கொண்டுள்ளன.
திருமணத்தின் முக்கியம் குறைந்து கொண்டிருக்கும் நாடுகளில், மனிதன் பொருள்ரீதியாக பாதுகாப்பாக இருந்தாலும், அவன் துடுப்பு இல்லாத படகு போல் இருப்பது வெளிப்படையாகவே தெரிகிறது. மரணம் எய்திய ஐந்து வருடங்களுக்கு முன்பாக ஒருவர், தனது எண்பத்தி எட்டாவது வயதில் திருமணம் செய்து கொண்டார்.
பல துணைகளுடன் வருடக்கணக்காக வாழ்ந்தாலும், திருமணம் அளிக்கும் மனோரீதியான பாதுகாப்பு கிடைப்பதில்லை.
சொத்துக்கு மரியாதை இருக்கும்வரை, திருமணத்துக்கு ஒரு பங்கு உண்டு.
உளரீதியான அமைப்பாக திருமணம் மனிதனுக்கு முக்கியம்.
ஆணுக்குத் தேவைப்படும் அளவிற்கு பெண்ணுக்கு அது தேவைப்படாமல் இருக்கலாம். ஒரு பெற்றோர் மட்டும் இருக்கும் குடும்பத்தில் குழந்தைகளை பண்புடையவர்களாக வளர்ப்பது மிகவும் கடினம். குழந்தைகள் நேராக இலக்கில்லாத பண்படாத இடத்தை நோக்கிச் சென்று தங்களை அழித்துக்கொள்வர்.
இவ்வாறு ஆயிரம் பேர்கள் அழிந்தால் அதில் ஒருவர் தனிமனிதனாக எழுவது இயற்கையின் வழியாகும்.
இயற்கையை எல்லா இடங்களிலும் அப்புறப்படுத்தியுள்ள மனிதன் இங்கும் அதைச் செய்யலாம்.
இன்னும் மனித குலம் அந்தப் பரிசோதனையை மேற்கொள்ளவில்லை. எண்ணத்தில்கூட அது இன்னமும் ஏற்படவில்லை.
குழந்தைகளுக்கு தந்தை இல்லாமலேயே இருக்க முடியாது, பிறகு எவ்வாறு தாயாரை ஈடு செய்ய முடியும்?
ஸ்டீவ் ஜாப்ஸ் ஒரு அநாதை, ஆனால் ஒரு குடும்பத்தில் வளர்க்கப்பட்டார்.
அவருடைய வாழ்க்கை வெளிப்படையாக மிகப் பெரிய வெற்றியாகத் தெரிந்தாலும், அவர் மனதளவில் புண்பட்டிருந்தது, அவருடைய நிறுவனத்திலிருந்து அவர் வெளியேற்றப்பட்டதிலிருந்தும், அவருக்குப் புற்று நோய் வந்ததிலிருந்தும் தெரிகிறது.
மனித குலத்தின் இயற்கையான உணர்வான அன்பை மனித குலம் காண்பிக்காதவரை, குழந்தைகள் பெற்றோர்கள் இன்றி இருக்க முடியாது.
நிலையற்ற திருமணத்தால் மோசமாக பாதிக்கப்படும் குழந்தைகளின் நிலையைக் கண்டு எலிசபெத் மிகவும் வருத்தப்படுகிறாள்.

20. "ill-judged direction of talents" – Austen on Mr. Bennet.
Talents are rare. Proper utilization of them is also equally rare.
A governess would cost £50 a year. Mrs. Bennet needed that money.
It had resulted in two children becoming wild and giddy.
It is mothers who take greater care of the education of children.
Herself not having had its benefit, Mrs. Bennet set herself as the standard for the children to rise, forgetting it was in a world thirty years later.
For the perceptive eye, every five years will show the changes in the society.
It is the woman who is perceptive in this area. It relates to her as fashion.
The changing needs in the personality of the child for better education than the parents are as many as social facets.
Starting from the words of greetings, the imperceptible changes in the dress, lifestyle, attitudes of social preservatives, a mother can be seen constantly insistent in her instructions to her children.
She is thus a conscious agent of social change.
Children are subconscious recipients of emerging new patterns of life which they fully absorb and express as much as the prevailing freedom permits.
Media is a precise exponent of the changes, some they initiate.
Entertainment educates invariably so much that the politics of a country is largely determined by the line the entertainment takes.
It is a favourite theme of mine that every new comfort of life, either by way of change of attitudes or technological innovation, is a source of additional wealth.
The social talents are constantly directing the population towards an unperceived goal.
The receiving centre in Man of all these influences is his ego, its social, psychological, even its spiritual version.
The world is realising the need to outgrow the human ego.
Internet that brings freedom of information strikes at the roots of possessiveness. Free service dissolves the notion of selfish gain, the profit.

“சரியான மதிப்பீடு இல்லாமல் திறமைகளை திசை திருப்பியது-திருமதி பென்னட்டைப் பற்றி ஜேன் ஆஸ்டின்.”

திறமைகள் அபூர்வமானவை. அவற்றைச் சரியாக பயன்படுத்துவது அதனினும் அபூர்வமானது.

வீட்டிலேயே இருக்கும் ஆசிரியைக்கு வருடத்திற்கு ஐம்பது பவுன் செலவழியும். திருமதி பென்னட்டிற்கு அந்தப் பணம் தேவையாக இருந்தது.

இதனால் இரண்டு குழந்தைகள் பண்பற்றவர்களாகவும், சிறுபிள்ளைத்தனம் நிறைந்தவர்களாகவும் இருந்தனர். குழந்தைகளின் கல்வியில் தாயார்கள்தான் அதிக அக்கறை செலுத்துகின்றனர்.

தனக்கு அந்தப் பலன் கிடைக்காததால் திருமதி பென்னட், அவளது குழந்தைகளுக்கு தன்னை ஒரு முன் மாதிரியாக வைத்துக்கொண்டாள். அது முப்பது வருடங்களுக்குப் பிந்தைய உலகம் என்பதை அவள் மறந்து விட்டாள்.

உணரக்கூடியவர்களுக்கு, ஒவ்வொரு ஐந்து வருடங்களிலும் சமூகத்தில் நிகழும் மாற்றங்களைக் காண முடியும். இந்த உணர்வு பெண்களுக்கு அதிகம். இது அவர்களுக்கு ஒரு பழக்கமாகி விட்டது.

பெற்றோர்களைவிட சிறந்த கல்வி குழந்தைகளுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர்களது சுபாவத்தின் மாறிவரும் தேவைகள், சமூகத் தோற்றங்களைப்போல் பல உள்ளன.

ஒருவரையொருவர் வாழ்த்தும் வார்த்தைகளிலிருந்து, ஆடைகளின் நாகரிகத்தில் ஏற்படும் மாற்றங்கள், வாழ்க்கைமுறை, சமூகத்தில் இருப்பவைகளைப் பாதுகாத்து வைத்துக்கொள்ளும் மனோபாவங்கள் இவை அனைத்திலும் தாயார் தொடர்ந்து குழந்தைகளுக்கு அறிவுரைகள் தருவதைப் பார்க்கலாம்.

அவள் இதுபோல் சமூக மாற்றத்திற்கு ஒரு நனவுபூர்வமான காரணகர்த்தாவாக விளங்குகிறாள்.

குழந்தைகள் வாழ்க்கையில் புதிதாக எழும் விஷயங்களை ஆழ்மனதில் ஏற்றுக்கொண்டு, அதை முழுவதுமாக உள்வாங்கிக் கொள்கிறார்கள். நடைமுறையில் உள்ள சுதந்திரம் அனுமதிக்கும் அளவிற்கு அதை வெளிப்படுத்துகிறார்கள்.

மாற்றங்களை துல்லியமாக தெரிவிப்பது ஊடகங்களே. சிலவற்றை அவைகளே ஆரம்பித்து வைக்கும். பொழுதுபோக்குத் துறையின் போக்கு நாட்டின் அரசியலைத் தீர்மானிக்கும் அளவிற்கு மாற்ற இயலாத அறிவைத் தருகிறது.

மாறிய மனப்பான்மையினாலோ அல்லது தொழில் நுட்பத்தின் புதிய கண்டு பிடிப்புகளாலோ ஏற்படும் ஒவ்வொரு புதிய வாழ்க்கை சௌகரியங்களும், கூடுதல் செல்வத்தின் பிறப்பிடமாக இருக்கிறது என்பது எனக்கு பிடித்தமான கருத்தாகும்.

சமூகத் திறமைகள் மக்களைத் தொடர்ந்து புலப்படாத இலக்கினை நோக்கித் திசை திருப்பிய வண்ணம் இருக்கின்றன.

இந்த எல்லா செல்வாக்குகளையும் ஏற்றுக்கொள்ளும் மனிதனின் மையம், அவனுடைய அகந்தை, அதனுடைய சமூக, மனம் சார்ந்த, ஏன் ஆன்மீகப் பதிப்பாகக்கூட இருக்கும்.

மனித அகந்தையை வெல்ல வேண்டும் என்கிற அவசியத்தை உலகம் உணருகிறது.

தகவலைப் பெற்றுக்கொள்வதில் இணையதளம் ஏற்படுத்திய சுதந்திரம், தனக்கே உரியது என்பதை வேரோடு அழித்தது. சுயநலமான நோக்கம், இலாபம் இவற்றை இலவச சேவை கரைத்து விடுகிறது.

21. “Talents rightly directed would have preserved the respectability of the daughters”.

Respectability is the higher psychological worth of the inner life.

Man respects power and Money.

Man recognizes without fail another’s inner worth and respects it.

Respectability may not win husbands but without it no husband will look at a woman.

Energy moves, moves outside in activities that accomplish work.

Outer successful activities accomplish materially and socially.

A nurse with all the information of a doctor is not respected as a doctor.

The nurse possesses information that can serve a doctor.

The outer accomplishments can only serve the inner respectability.

Energy directed inwardly builds capacity and values.

School education and family upbringing build them up.

Kitty and Lydia are devoid of it, are past the age that can be given.

Mary’s education without family upbringing will remain book learning.

That she could not attract one officer to dance with her shows that.

The effort must be that of the father and the mother supported by a governess.

Mrs. Bennet firmly believed in a pretty face, good humour adorned with fine dress.

Maybe it was enough in her time to marry an attorney or an officer.

In one generation expectations change.

Money is always a qualifying adjunct.

Human respectability, feminine virtue, social graces have come into their own.

The Bennet girls could have had a little money.

Respectability could certainly be cultivated in them.
Longbourn is a great background, if not an endowment.
Mr. Bennet, perhaps like Micawber, waits for something to turn up.
Of course he does not voice it.
She does not wait for something to turn up.
She wants to pluck at a gown, hoping to get a sleeve of it.
"சரியானபடி திறமைகளை உபயோகித்திருந்தால், பெண்களின் கண்ணியத்தை அது பாதுகாத்திருக்கும்."
மரியாதை, அக வாழ்வின் உயர்ந்த மனரீதியான மதிப்பாகும்.
மனிதன் அதிகாரத்திற்கும் பணத்திற்கும் மரியாதை அளிக்கிறான்.
மற்றவருடைய அக மதிப்பை கண்டிப்பாக உணர்ந்துகொண்டு அதற்கு மதிப்பு அளிக்கிறான்.
கௌரவம் கணவனை அளிக்காது. ஆனால் கௌரவம் இல்லாத மனைவியை எந்தக் கணவனும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டான்.
சக்தி நகர்கிறது, பணிகளை சாதிக்கும் செயல்களில் நகர்கிறது.
வெளியில் உள்ள வெற்றிகரமான செயல்கள், பொருளாதார மற்றும் சமூகரீதியாக சாதிக்கின்றன.
மருத்துவருக்கு உள்ள அனைத்து அறிவையும் பெற்ற ஒரு செவிலி(நர்ஸ்), ஒரு மருத்துவராக மதிக்கப்படுவதில்லை.
செவிலிக்குத் தெரிந்த விஷயங்கள், ஒரு மருத்துவருக்கு உதவும்.
வெளி சாதனைகள் அக கௌரவத்திற்கு உதவியாக இருக்கும்.
உள்நோக்கி செலுத்தப்பட்ட சக்தி திறனையும் பண்புகளையும் வளர்க்கிறது.
பள்ளியில் பயிலும் கல்வியும், குடும்ப வளர்ப்பும் அவற்றை வளர்க்கின்றன.
கிட்டிக்கும் லிடியாவுக்கும் இவை கிடைப்பதில்லை, அதைப் பெறக்கூடிய வயதைக் கடந்து விட்டார்கள்.
குடும்பத்தின் வளர்ப்பு இல்லாத மேரியின் படிப்பு ஏட்டுச்சுரைக்காயாகவே இருக்கும்.
நடனம் ஆடுவதற்கு ஒரு இராணுவ அதிகாரியைக்கூட அவளால் கவர முடியவில்லை என்பது இதைக் காட்டுகிறது.
முயற்சி, ஆசிரியையின் ஆதரவோடு, தந்தையுடையதும் தாயுடையதுமாக இருக்க வேண்டும்.
திருமதி பென்னட் அழகிய முகத்திற்கும், சிறப்பான ஆடை உடுத்திய நல்ல பழக்கத்திற்கும் முக்கியத்துவம் அளித்தாள்.
ஒரு வக்கீலையோ, இராணுவ அதிகாரியையோ மணக்க அவளது காலத்தில் அவை போதுமானவை போலும்.
ஒரு தலைமுறையில் எதிர்பார்ப்புகள் மாறுகின்றன.
எப்பொழுதுமே பணம் இணைக்கும் தகுதி பெற்றது.
மனிதனின் கௌரவம், பெண்மையின் கற்பு, சமூக நயம், ஆகியவை தாமாகவே நிலை பெற்று விட்டன.
பென்னட் தம்பதியினரின் பெண்களிடம் சிறிது பணம் இருந்திருக்கலாம்.
மரியாதையை அவர்களிடம் உருவாக்கியிருக்கலாம்.
லாங்பர்ன் பெரிய சொத்தாக இல்லாவிடினும், பெரிய பின்னணியாக உள்ளது.
Micawber போல், திரு பென்னட்டும் ஏதாவது ஒன்று நிகழ்வதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்.
ஆனால் அவர் அதை வெளியே சொல்வதில்லை.
அவள் ஏதாவது ஒன்று நிகழ்வதற்குக் காத்துக் கொண்டிருக்கவில்லை.
சிறிய ஒரு பகுதியாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் முழுமைக்கு முயற்சி செய்கிறாள்.

22. "Even if enlarging the mind of the wife".
Mind enlarges by education.
Education sought enlarges the Mind.
Education given will not have that salutary effect.
Formal education is a formidable power.
Geography spatially expands the Mind. Mrs. Bennet did not know Newcastle.
History's contribution is the Time dimension.
Mind expanding in Time and Space is mind enlarging.
Observation is non-formal education.
Physical observation that knows every object at home is physical sensation.
Vital observation belongs to the experience of vital sensation.
Observation is to relate oneself to an object or person.
It is an act of coordination, an exercise of intelligence.
To coordinate thoughts is thinking, reason.
The centre of observation is the ego.
Making an observation an experience is mental growth.
Wide comprehensive observation of the subconscious over a long time presents to the surface as a capacity to accomplish.

The usual motive is to rise in society.
Observation, thinking, assimilation with values as the centre instead of ego shapes the inner value of the Man.
Capacity to accomplish with value formation creates leadership.
Jane's observation is to formulate her own self-formed values.
Elizabeth's observation is character study.
Mary does not observe; only those who are observed, observe.
Kitty's urge is to follow Lydia's lead.
Lydia looks out for fresh officers coming.
Charlotte observes everything from the point of view of each person's values, scope, social values, and possibilities of the moment.
Mrs. Bennet seeks no enlargement of the Mind.
Her centre is her social value attained, waiting to be cashed as marriage for children.
"மனைவியின் அறிவை பெருக்கி இருந்தாலும்கூட."
கல்வியினால் மனம் வளரும்.
கல்வியை நாடினால் மனம் வளரும்.
கல்வி அளிக்கப்படும்பொழுது அந்த அனுகூலமான பலன் கிடைக்காது.
முறையான கல்வி எதிர்க்க முடியாத சக்தியாகும்.
பூகோளம், இடம் சார்ந்த விஷயத்தில் மனத்தை விரிவுபடுத்தும். திருமதி பென்னட்டிற்கு நியூகாசில் பற்றித் தெரிந்திருக்கவில்லை.
காலத்தின் பரிமாணம் சரித்திரம் அளிப்பது.
காலத்திலும் இடத்திலும் மனம் விரிவடைவது மனம் வளர்வதாகும்.
கூர்ந்த கவனிப்பு முறைசார்பற்ற கல்வி ஆகும்.
வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளைப் பற்றிய ஜடரீதியான கூர்ந்த கவனிப்பு ஜடத்தின் உணர்வாகும்.
உணர்வால் கவனிக்கப்படுபவை உயிரின் உணர்வின் அனுபவம் ஆகும்.
ஒரு பொருளுடனோ அல்லது ஒரு நபருடனோ ஒருவர் ஏற்படுத்திக்கொள்ளும் தொடர்பே கூர்ந்த கவனிப்பு ஆகும்.
இது ஒருங்கிணைக்கும் செயலாகும், புத்திசாலித்தனத்தின் செயற்பாடு ஆகும்.
எண்ணங்களை ஒருங்கிணைப்பது சிந்தனை, தர்க்கம் ஆகும்.
கவனிப்பதின் மையம் அகந்தையாகும்.
கூர்ந்த கவனிப்பை ஒரு அனுபவமாக்குவது மன வளர்ச்சியாகும்.
நீண்ட நாளைய ஆழ்மனத்தின் கவனிப்பு, மேல் மனத்தில் சாதிக்கும் திறனாக மாறிவிடும்.
சாதாரணமாக சமூகத்தில் உயருவதே நோக்கமாக இருக்கும்.
அகந்தைக்கு பதில் கவனித்தல், சிந்தனை, பண்புகளை ஒருமைப்படுத்தல், இவை மனிதனின் அகப் பண்புகளை சரியாக வடிவமைக்கும்.
பண்புகளோடு கூடிய சாதிக்கும் திறன் தலைமையை உருவாக்கும்.
ஜேனுடைய கூர்ந்த கவனிப்பு சுயமாக உருவான அவளுடைய பண்புகளை முறைப்படுத்துவதற்கே ஆகும்.
எலிசபெத்தின் கவனிக்கும் தன்மை சுபாவத்தை ஆராயும்.
மேரி கவனிப்பதில்லை, யார் ஒருவர் கவனிக்கப்படுகிறாரோ அவரே கவனிப்பார்.
லிடியாவின் தலைமையைப் பின்பற்றுவதே கிட்டியின் உந்துதல்.
லிடியா புதிதாக வரும் அதிகாரிகளை எதிர்நோக்குகிறாள்.
ஒவ்வொரு நபரின் மதிப்புகள், வாய்ப்பு, சமூகப் பண்புகள், அத்தருணத்தின் சாத்தியங்கள், இவற்றின் கண்ணோட்டத்தில் ஷார்லெட் கவனிக்கிறாள்.
மனத்தின் வளர்ச்சியை திருமதி பென்னட் நாடுவதே இல்லை.
அவளுடைய மையம் அவள் பெற்றிருந்த சமூக மதிப்புகளாகும். குழந்தைகளின் திருமணமாக அதை மாற்ற காத்துக்கொண்டிருந்தாள்.

When Elizabeth had rejoiced over Wickham's departure, she found little other cause for satisfaction in the loss of the regiment. Their parties abroad were less varied than before, and at home she had a mother and sister whose constant repinings at the dulness of everything around them, threw a real gloom over their domestic circle; and though Kitty might in time regain her natural degree of sense, since the disturbers of her brain were removed, her other sister, from whose disposition greater evil might be apprehended, was likely to be hardened in all her folly and assurance by a situation of such double danger as a watering-place and a camp. Upon the whole, therefore, she found, what has been sometimes found before, that an event to which she had looked forward with impatient desire, did not, in taking place, bring all the satisfaction she had promised herself. It was consequently necessary to name some other period for the commencement of actual felicity -- to have some other point on which her wishes and hopes might be fixed, and by again

enjoying the pleasure of anticipation, console herself for the present, and prepare for another disappointment. Her tour to the Lakes was now the object of her happiest thoughts; it was her best consolation for all the uncomfortable hours which the discontentedness of her mother and Kitty made inevitable; and could she have included Jane in the scheme, every part of it would have been perfect.

விக்காம் கிளம்பியது எலிசபெத்திற்கு சந்தோஷத்தை தந்தபோதிலும் படைப்பிரிவு இல்லாததினால் வேறு எந்த காரணத்தினாலும் அவள் திருப்தியடையவில்லை. வெளியில் நடக்கும் விருந்துகள் முன்பு பல வகைகளாக இருந்தன, இப்பொழுது அதுபோன்ற விருந்துகள் குறைவாகவே இருந்தன. தங்களைச் சுற்றி எல்லாமே மிகவும் சுவாரசியமில்லாமல் இருக்கின்றன என்று சதா குறை கூறிக் கொண்டிருந்த தாயாராலும், தங்கையினாலும் குடும்பத்தில் உற்சாகமே இல்லாமல் இருந்தது. கிட்டியின் மனத்தை தொந்தரவு செய்தவர்கள் விலக்கப்பட்டதால் அவள் விரைவில் தன்னுடைய இயல்பு நிலைக்கு வந்துவிடுவாள் என்றாலும், மற்றொரு சகோதரி இருக்கும் நிலை, பெரிய தீங்கை உண்டாக்கும் என்ற பயம் இருந்தது. நீர் ஊற்றுகள் இருக்கும் இடமும், இராணுவ முகாம் என்ற இரட்டிப்பு அபாயம் உள்ள ஒரு நிலையில் அவளுடைய முட்டாள்தனத்தாலும், அசட்டு தைரியத்தாலும் தீங்கு நேரிட மேலும் வாய்ப்புள்ளது. முன்பே தெரிந்திருந்த உண்மை இப்பொழுது அவளுக்குப் புலப்பட்டது. ஏதாவது ஒரு விஷயம் முடிந்தால் நல்லது என்று நினைத்து, நாம் எதிர்பார்த்த அளவுக்கு அது திருப்தியை தராமல் போய்விடின், நாம் செய்ய வேண்டியது, இனிமேல் சந்தோஷமாக இருக்கலாம் என்று வேறு ஒரு சமயத்தை நிர்ணயித்துக் கொள்வது, இந்த ஒரு விஷயம் மட்டும் நடந்து விட்டால் நாம் இனி சந்தோஷமாக இருக்கலாம் என்று தீர்மானிப்பது, தற்பொழுது அடைந்திருக்கும் ஏமாற்றத்திற்கு தனக்குத்தானே ஆறுதல் அளித்துக் கொண்டு அந்தக் காத்திருத்தலில் கிடைக்கும் மகிழ்ச்சியை அனுபவிப்பது, ஒருவேளை அவ்விஷயம் நல்லபடியாக நடக்காமல் போனால் அடுத்த ஏமாற்றத்திற்கும் தயாராக இருப்பதுதான். லேக்ஸிற்கு அவள் போகப்போகும் சுற்றுலாதான் இப்பொழுது அவளுக்கு ஒரு சந்தோஷமான விஷயமாக இருந்தது. அவளது தாயும், கிட்டியும் திருப்தியில்லாமல் இருந்ததினால் ஏற்பட்ட சங்கடமான நேரத்தில் அது மிகச் சிறந்த ஆறுதலாக இருந்தது. இத்திட்டத்தில் ஜேனையும் சேர்க்க முடிந்திருந்தால் எல்லாமே நிறைவாக இருந்திருக்கும்.

23. Wickham's departure brings the invitation to Derbyshire.
விக்காம் புறப்பட்டுச் சென்றவுடன் டர்பிஷயர் அழைப்பு வருகிறது.
24. Lydia's Brighton visit abridges the Lakes into Lambton.
லிடியாவின் பிரைட்டன் விஜயம், லேக் எனும் இடத்திற்குச் செல்ல முடியாமல் லாம்ப்டனுடன் முடிந்து விடுகிறது.
25. "Elizabeth rejoiced over the departure of the regiment".

The great mental disillusionment made her rejoice.

Such genuine rejoicing of the surface Mind is possible when the subconscious clings to its original charm of infatuation.

While in the society, family, work situation, one is influenced by all others.

After some years, the voice of one resembles the voice of the others.

The boss unconsciously adopts the handwriting of the subordinate.

The surface is so much against the depth that one cannot see the truth of it after the event. It is the practical ignorance.

To honour fully and consciously another's practical ignorance is human wisdom of the divine nature.

Results in life are so concrete, so material, so full of reality that they are the symbolic voice of the evolving Divine.

Indian tradition calls the sight of a courtesan prostitute a good omen, silently calling her immorality divine virtue.

The most poisonous King Cobra is worshipped in India recognizing the divinity of its venom.

Human sacrifice is considered uncivilized, barbaric, ignoring the occult wisdom it inheres.

Had there been a human sacrifice on August 15, 1947, one crore of people would not have been uprooted and 200,000 would not have been massacred.

It is rank superstition to object to human sacrifice when the occasion demands.

Objection based on the understanding of the surface Mind is crass superstition.

The millions killed in the world wars are the human sacrifice for the development of the post-war decades.

Avoiding conscious willing sacrifice is to be compensated by Nature's unconscious sacrifice on a massive scale. This is not an idea that can be ventured upon among the civilised population.

"படைப் பிரிவினர் புறப்பட்டுச் சென்றது, எலிசபெத்திற்கு சந்தோஷமாக இருந்தது."

மனத்தில் பெற்ற பெரிய தெளிவு அவளை சந்தோஷப்பட வைத்தது.

ஆழ்மனம், இன்னும் பழைய மயக்கத்தை விடாமல் பிடித்து வைத்துக்கொண்டிருக்கும் பொழுது, மேல் மனம் இவ்வாறு உண்மையாக சந்தோஷப்பட முடிகிறது.

சமூகம், குடும்பம், வேலை செய்யும் சூழ்நிலை இவற்றில், மற்றவர்களின் பாதிப்பு ஒருவருக்கு இருக்கும்.

சில வருடங்களுக்குப் பிறகு, ஒருவரது குரல் மற்றவர்களது குரல் போலவே ஒலிக்கும்.

முதலாளி, ஊழியரின் கையெழுத்தை தன்னை அறியாமலேயே பின்பற்ற ஆரம்பிப்பார்.

ஆழ்மனதிலிருந்து மேல் மனம் மிகவும் வேறுபட்டதாக இருப்பதால் நிகழ்ச்சிக்குப் பிறகு, ஒருவரால் அதன் உண்மையைப் பார்க்க முடியாது. இது நடைமுறை அறியாமை.

மற்றவரது நடைமுறை அறியாமைக்கு, முழுமையாக தன்னினைவோடு மரியாதை கொடுக்கும் மனித விவேகம் தெய்வீகச் சுபாவம் ஆகும்.

வாழ்க்கையில் பலன்கள் அவ்வளவு உறுதியாகவும், பொருள்ரீதியாகவும், உண்மையாகவுமிருப்பதால், அவை வெளிவரும் இறைவனின் அடையாளக் குரலாக விளங்குகிறது.

ஒரு தேவதாசி கண்ணில்பட்டால் நல்ல சகுனம் என்று இந்தியப் பாரம்பரியம் கூறுகிறது, அவளுடைய ஒழுக்கமின்மையை தெய்வீகக் குணம் என மௌனமாக அழைக்கிறது.

மிகக் கடுமையான விஷத்தன்மையுடைய ராஜநாகத்தின் விஷத்தின் தெய்வீகத் தன்மையை மக்கள் உணர்ந்திருப்பதால், இந்தியாவில் அதை வழிபடுகிறார்கள்.

மனித பலி, அதில் உள்ளடங்கியுள்ள மறைபுலனாக இருக்கும் விவேகம் புறக்கணிக்கப்பட்டு, நாகரிகமற்றதாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் கருதப்படுகிறது.

ஆகஸ்ட்15, 1947-ஆம் வருடம் ஒரு மனித பலி நடந்திருந்தால், ஒரு கோடி மக்கள் இடம் பெயர்ந்திருக்க மாட்டார்கள், இரண்டு இலட்சம் பேர்கள் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்.

சந்தர்ப்பங்களுக்குத் தேவை எனும்பொழுது மனித பலிக்கு ஆட்சேபணை தெரிவிப்பது முழுமையான மூடநம்பிக்கையாகும்.

மேல்மனம் புரிந்துகொள்வதை வைத்து ஆட்சேபணை தெரிவிப்பது முட்டாள்தனமான மூடநம்பிக்கையாகும்.

போருக்குப் பிறகு எழும் வளர்ச்சிக்காக, உலகப் போர்களில் கோடிக்கணக்கானவர்கள் இறப்பது மனித பலியாகும்.

தன்னினைவோடும் விருப்பத்தோடும் பலியைத் தவிர்க்க நினைக்கும்பொழுது, இயற்கை தன்னிச்சையின்றி பெரிய அளவில் அதனை ஈடு செய்து விடுகிறது. இது நாகரிகமான மனிதர்களிடையே துணிந்து கூறக்கூடிய கருத்து அல்ல.

26. "mother and sister whose constant repining at the dullness of everything around".

Stagnant waters begin to stink sooner or later.

Life is a flow of energy which is enjoyed by everyone who flows with it.

Its liveliness of the flow is more felt at the mental and spiritual level than at the physical level.

At the physical level one sees only the physical events.

At the spiritual level one feels even the non-movement live.

A mental person mentally views the events around and can occupy herself with books.

A vital person is satisfied with being with others as company is interesting.

Mrs. Bennet and Lydia are physical, can interest themselves only in action.

Maya is the infinitely variable oneness, the consciousness of Brahman.

The rasa of Maya is sensed only by the subliminal.

Variety is the savour of life.

Persons who realize the concrete material reality of an Act know its consequences are inevitable.

Knowing the power of **determinism, Self-conception, Man knows in every event his choice is more powerful than the inevitability of the act.**

Elizabeth is still determined by the family environment.

She is incapable of knowing that life at home is dull because she is going to Pemberley. The flow is preceded by this ebb.

Kitty is repining because she is left behind.

Her depression makes for Elizabeth's elevation.

As long as one is moved by external forces, consecration is unreal.

Once he realizes the concreteness of the act, its consecration is real.

Then his knowledge of his decision, by his choice, instantaneously goes into action.

The spiritual Individual is one to whom life is always real, live, ready to act at the sanction of human choice.

Human choice at this level is a movement in evolution.

The choice releases the physical energy which cannot wait to act.

"சுற்றி இருப்பவை யாவும் சுவாரசியமாக இல்லை என்று தாயாரும், சகோதரியும் தொடர்ந்து குறை கூறிய வண்ணம் உள்ளனர்."

தேங்கி இருக்கும் நீர், விரைவாகவோ அல்லது சிறிது காலத்திற்குப் பிறகோ நாற்றம் அடிக்க ஆரம்பித்து விடும்.

சக்தியின் ஓட்டம்தான் வாழ்க்கை, அதனுடன் சேர்ந்து பயணிக்கின்ற அனைவரும் அதனை சந்தோஷமாக அனுபவிப்பர்.

ஓட்டத்தின் உயிரோட்டம், ஜட நிலையைவிட மனதளவிலும் ஆன்மீக நிலையிலும் அதிகமாக உணரப்படும்.

ஜட நிலையில், ஒருவர் ஜட நிகழ்ச்சிகளை மட்டும்தான் காண்பார்.

ஆன்மீக நிலையில் இயக்கமின்றி இருப்பதையும் ஒருவர் உயிரோட்டத்துடன் இருப்பதாக உணர்வார்.
மனத்தாலான நபர் தன்னை சுற்றி நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளையும் மனதாலேயே பார்ப்பார்,
புத்தகங்களுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு விடுவார்.
மற்றவர்களுடன் சேர்ந்து இருப்பது உணர்வுபூர்வமான மனிதர்களுக்கு சுவாரசியமாக இருப்பதால் அவர்கள் அதில் திருப்தி அடைந்து விடுகின்றனர்.
திருமதி பென்னட்டும், லிடியாவும் ஜட நிலையில் இருப்பவர்கள், அவர்களுக்கு செயல்படத்தான் பிடிக்கும்.
பிரம்மத்தின் ஜீவியமான மாயை அனந்தமாக மாறக்கூடிய ஒருமை.
அடிமனதில்தான் மாயையின் ரஸாவை உணர முடியும்.
பல்வகைதான் வாழ்வின் சுவையாகும்.
ஒரு செயலின் திடமான பொருள்ரீதியான உண்மை நிலையை உணர்ந்து கொள்பவர்களுக்கு, அதனுடைய விளைவுகள் தவிர்க்க முடியாதவைகள் எனத் தெரியும்.
நிர்ணயம், சுய கருத்தாற்றல் இவற்றின் சக்தியை அறியும்பொழுது, ஒவ்வொரு நிகழ்விலும் மனிதனுக்கு அவனுடைய விருப்பம், செயலின் தவிர்க்க முடியாத தன்மையை விட சக்தி வாய்ந்தது எனப் புரியும்.
எலிசபெத் இன்னமும் குடும்பச் சூழ்நிலையால் தீர்மானிக்கப்படுகிறாள்.
தான் பெம்பர்லிக்குச் செல்வதால் வீட்டில் யாவரும் சோர்வாக இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளும் திறன் எலிசபெத்துக்கு இல்லை. ஓட்டத்திற்கு முன் இந்த தளர்வு எழுகிறது.
கிட்டியை அழைத்துப் போகாததால் அவள் குறைப்பட்டுக் கொள்கிறாள்.
எலிசபெத்தின் உற்சாகம், அவளுடைய மனச் சோர்வை ஈடு செய்கிறது.
புற சக்திகளால் ஒருவர் இயக்கப்படும்பொழுது சமர்ப்பணம் உண்மையாக இருக்காது.
செயலின் திடத்தன்மையை ஒருவன் உணரும் பொழுதுதான் சமர்ப்பணம் உண்மையாக இருக்கும்.
பிறகு அவன் விரும்பியவாறு தேர்ந்தெடுத்த அவனது முடிவைப் பற்றிய அவனது அறிவு, உடனடியாக செயல்பட ஆரம்பிக்கும்.
ஆன்மீகத் தனிமனிதனுக்கு வாழ்வு எப்பொழுதும் உண்மையாகவும், உயிரோட்டத்துடனும் இருக்கும், மனித விருப்பத்தின் அனுமதியுடன் செயல்படத் தயாராக காத்திருக்கும்.
இந்த நிலையில் மனித விருப்பம், பரிணாமத்தின் இயக்கமாகும்.
விருப்பம் ஜடசக்தியை விடுவிக்கும், செயல்படுவதற்கு அந்த சக்தியால் காத்திருக்க முடியாது.

27. "Kitty might regain the natural degree of sense, since the disturbers of her brain are removed".
Lydia is the disturbing influence which means her mother.
Kitty is disturbed only when she is led to act as Lydia chooses.
Mary is uninfluenced by it.
The birth of Lydia, an exact replica of her mother, is the end of the chain of children.
The scheme of things will not permit a male child and no more than one child fully representing the mother.
Social forces are largely neutral, do not stir unless disturbed from outside.
That is so because social energies are of Nature.
The Psychic determinism is self-determinism.
Lydia is in the determinism of Nature; Elizabeth is moving towards the determinism of the Psychic.
The Psychic is energized by the movements of Nature.
Nature by its rapid movements evolves the hidden spirit in it.
He speaks of the slow, deliberate pleasure of Nature which thus enjoys its infinity.
The Divine enjoys in Nature as Nature would have the Divine enjoy.
The involution can be endless, infinite.
The evolution begins when the involution ends.
The Hour of God, worked for long, is to end the involution and begin the evolution.
Agriculture can continue for centuries.
The subconscious knowledge collected by working agriculture has come of age to begin the industrial revolution.
Man producing products of his own conception is the Self-conception of Brahman at that level.
The Self-conception and the volume of the products it produces needs self-limitation so that the society of its individual members will be saturated with the enjoyment of its products.
Abolition of monarchy is the dissolution of ego – Democracy.
Overcoming Nature and ushering in divine nature is socialism.
"கிட்டியின் மனத்தை தொந்தரவு செய்தவர்கள் விலக்கப்பட்டதால், அவள் விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பி விடுவாள்."
லிடியா தொந்திரவு செய்பவளாக இருக்கிறாள், அவளுடைய தாயார் தொந்திரவு செய்பவள் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.
லிடியாவின் விருப்பத்திற்கு ஏற்றவாறு செயல்படும்பொழுதுதான் கிட்டிக்கு அமைதி குலைகிறது.
மேரி இதனால் பாதிக்கப்படவில்லை.

தாயாரின் நகலாகப் பிறந்த லிடியா கடைசி குழந்தை ஆவாள்.
இங்கு ஆண் குழந்தைக்கு இடம் கிடையாது, தாயாரை முழுமையாகப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு குழந்தைக்கு மேல் இருக்க முடியாது.
சமூக சக்திகள் பெரும்பாலும் நடு நிலைமையுடன் இருக்கும், வெளியிலிருந்து தொந்தரவு செய்யப்படாமல் இருந்தால் அதற்கு பாதிப்பு ஏற்படாது.
சமூக சக்திகள் இயற்கைக்கு உரியவை என்பதால் அவ்வாறு உள்ளது.
சைத்திய புருஷனின் நிர்ணயம், சுய நிர்ணயம் ஆகும்.
இயற்கையின் நிர்ணயத்தில் இருப்பவள் லிடியா; சைத்திய புருஷனின் நிர்ணயத்தை நோக்கி எலிசபெத் செல்கிறாள்.
இயற்கையின் சலனங்களால் சைத்திய புருஷனுக்கு சக்தி கிடைக்கிறது.
வேகமாக இயங்கும் சலனங்களால் இயற்கை, அதனுள் ஒளிந்திருக்கும் ஆன்மாவை வெளிக் கொண்டு வருகிறது. இயற்கையின் நிதானமான இன்பங்களைப்பற்றி பகவான் பேசுகிறார், இது இவ்வாறு அதனுடைய அனந்தத்தை அனுபவிக்கின்றது.
தெய்வம் எவ்வாறு அனுபவிக்க வேண்டும் என்று இயற்கை விரும்புகிறதோ, அவ்வாறு தெய்வம் இயற்கையில் அனுபவிக்கும்.
சிருஷ்டி முடிவில்லாதது, அனந்தமானது.
சிருஷ்டி முடியும் இடத்தில் பரிணாமம் ஆரம்பிக்கும்.
சிருஷ்டியை முடிக்கவும் பரிணாமத்தை ஆரம்பிக்கவும் இறைவன் வரும் தருணம் நீண்ட காலம் உழைத்தது.
விவசாயம் பல நூற்றாண்டுகளுக்குத் தொடர முடியும்.
விவசாயம் செய்து சேகரித்த ஆழ்மன அறிவு முதிர்ச்சி அடைந்து, தொழில் புரட்சியை ஆரம்பித்து வைத்தது.
மனிதன் தன்னுடைய சுய உருவாக்கத்தால் உற்பத்தி செய்வது, அந்த நிலையில் பிரம்மத்தின் சுய சிருஷ்டி ஆகும்.
சுயமாக உருவாவதும், அது உற்பத்தி செய்யும் பொருட்களின் அளவும் சுயமாக வரையறுக்கப்பட வேண்டும்.
அதனால் சமூகத்திலுள்ள தனி நபர்கள் பொருட்களை அனுபவிப்பதில் பூர்த்தி அடைவார்கள்.
முடியாட்சி அழிவது அகந்தை கரைவதாகும் —மக்களாட்சி மலர்கிறது.
இயற்கையை வென்று தெய்வீகச் சுபாவத்தை அறிமுகப்படுத்துவது பொதுவுடமையாகும்.

28. “her tour to the Lake is the object of pleasure”.
A tour has always been a pleasure to young people.
Travel, being a physical movement, is welcome to a stationary population.
Here, she has the subconscious knowledge of going to visit Pemberley.
Joy in the physical is pleasure.
An event in the physical plane prepares itself in the subtle plane.
The preparation can be direct or indirect or even opposite depending on the character of the person, rather the temperament, but never is abrupt.
An abrupt development is not abrupt, but we miss seeing the development.
It is the sense mind that sees the dualities including the inconscient and superconscient.
Mind that acts on receiving the impressions of the senses is sense mind, manas.
The thinking Mind is buddhi.
Buddhi is Mind that can see unhampered by the senses.
The Rishis turned off the senses and saw through the buddhi the dualities.
The buddhi can see the dualities and can see beyond the dualities, if it chooses.
Its not choosing to see beyond the dualities is ignorance.
My purpose will be fully served if I can show the Marvel in this story.
In reading The Life Divine the greatest result is to understand what He says.
That is intellectual knowledge.
It is like knowing what goes into a dish. It cannot help you make it.
If you are given a dictionary of a foreign language, it cannot help you to speak it.
Learning cooking or speaking a foreign language is an experience.
Synthesis tells us what to do. Even that cannot make us do the yoga.
The first step is to consecrate, next is to remove ego.
No consecration can be practised enough to remove ego by knowing it.
If you are taught cooking or a foreign language, they can be learnt.
These comments will certainly help me to explain every idea in the Book.
To give a full intellectual account of what is there, this story will do.
Understanding the subtle process in the story, the role of subliminal can open further vistas.
“லேக்-ற்கு செல்லப் போகும் சுற்றுலா சந்தோஷமான விஷயமாக இருந்தது.”

இளம் வயதினருக்கு சுற்றுலா எப்பொழுதுமே சந்தோஷமான விஷயம்தான்.
ஒரே இடத்தில் குடியிருக்கும் மக்களுக்கு உடல் அசைவான பிரயாணம் வரவேற்கத்தக்கதாக இருக்கும்.
இங்கு பெம்பர்லிக்குச் செல்லப்போவது அவளுக்கு ஆழ்மன அறிவாக இருந்தது.
ஜடநிலையில் சந்தோஷம் இன்பமாக இருக்கிறது.
ஜடநிலையில் ஒரு நிகழ்ச்சி தன்னையே சூட்சும நிலைக்குத் தயார் செய்து கொள்கிறது.
முன்னேற்பாடு மனவுணர்வுகளைவிட நபரின் குணாதிசயத்தைப் பொறுத்து நேராகவும் இருக்கலாம், மறைமுகமாகவும் இருக்கலாம், ஆனால் ஒருபொழுதும் சம்பந்தம் இல்லாமல் இருக்காது.
திடீரென நிகழும் நிகழ்வு சம்பந்தம் இல்லாமல் இருக்காது, ஆனால் நாம் அந்த நிகழ்வைப் பார்க்கத் தவறி விடுகிறோம்.
புலனறிவு இரட்டைகளான ஜட இருளையும் பிரம்மத்தையும் காண்கிறது.
புலன்களின் பதிவுகளைப் பெற்று செயல்படும் மனம், மனஸ் எனும் உணர்வின் மனமாகும்.
சிந்திக்கும் மனம் புத்தியாகும்.
புத்தி உணர்வுகளால் தடைபடாது பார்க்கும் மனமாகும்.
உணர்வுகளை விட்டகன்று ரிஷிகள் புத்தியினால் இரட்டைகளைப் பார்த்தனர்.
புத்தி இரட்டைகளைப் பார்க்க முடியும், விரும்பினால் அதற்கு அப்பாலும் பார்க்க முடியும்.
அது இரட்டைகளைத் தாண்டி பார்க்க விரும்பாவிடின், அது அறியாமையாகும்.
இக்கதையில் நான் அந்த அற்புதத்தைக் காண்பித்தால், என்னுடைய நோக்கம் முழுமையாக நிறைவேறிவிடும்.
'தி லைப் டிவைன்'-ஐ படிப்பதன் பெரும் பலன், பகவான் கூறுவதை அறிந்து கொள்வதுதான்.
அது அறிவுபூர்வமான ஞானம் ஆகும்.
அது ஒரு உணவுப் பண்டத்திற்கு தேவையான பொருட்களைப் பற்றி தெரிந்துகொள்வது போலாகும். நாம் அதனைத் தயார் செய்ய அந்த அறிவு உதவாது.
வேறு நாட்டு மொழியின் அகராதி நமக்கு கிடைத்தால் அதை வைத்துக்கொண்டு நாம் அந்த மொழியைப் பேச முடியாது.
சமையல் கற்றுக்கொள்வதும், வேறு நாட்டு மொழி பேசுவதும் ஒரு அனுபவமாகும்.
'சிந்தசிஸ்' நாம் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறது. நம்மை யோகம் செய்ய வைக்க அதனால்கூட முடியாது.
முதல் படி சமர்ப்பணம், அடுத்தது அகந்தையை அகற்றுவது.
அகந்தையை அகற்றாமல், சமர்ப்பணத்தைப் பற்றி அறிந்திருந்தாலும் அதைச் செய்ய இயலாது.
சமையலையோ, ஒரு அயல் நாட்டு மொழியையோ கற்றுக் கொடுத்தால், கற்றுக்கொள்ளலாம்.
இந்த விளக்கங்கள் 'தி லைப் டிவைன்'-ல் உள்ள ஒவ்வொரு கருத்தையும் விளக்குவதற்கு உதவும்.
அதில் உள்ளவற்றின் முழுமையான அறிவுபூர்வமான வர்ணனையை அளிக்க இக்கதை போதுமானது.
இந்தக் கதையின் சூட்சும இயங்கு முறையினைப் புரிந்துகொண்டால், அடிமனம் மேலும் வாய்ப்புகளை உருவாக்கும்.

29. "could she have included Jane in the tour, the plan would be perfect".
To make a plan perfect will not achieve the intended goal.
Because she was aware of this truth at 21, she landed in Pemberley.
This knowledge must be the knowledge of the community.
It is a subtle knowledge of a higher accomplishment.
A product can be perfect, not a plan.
A product is an end in itself, not to grow further.
A plan that yields a great result does not end there, it grows.
Perfection at one level seals off at that level, never giving an opening for further growth. It shows the interrelations.
Parts of a machine, though independent in themselves, are so made that they fit into other parts.
Agriculture is a whole in itself, but it allows its produce to be sold.
Selling steps into the next level of institutions, trade.
Trade permits the creation of Money, communication, transport.
Leisure created by physical activities helps create culture.
There are important links.
The double entry system of accounting made it possible for trade to grow.
Unawareness of public finance made the Roman Empire die its death.
The Hellenic culture died in one century as it could not grow spiritual.
Britain where democracy was born, unable to outgrow its sentiment to Royalty, lost its right to found the world government.
Kamaraj who saw the importance of education initiated development in Tamilnadu.
Internet that increased the speed of monetary transactions created abundant wealth out of the subtle atmosphere of trust.

America which extended the concepts of Individuality of Europe to action became the wealthiest of nations.
The atmosphere to give birth to the Individual in India initially gave birth to enormous wealth.
The World Academy Fellows are unconsciously sensing the need for the birth of the Individual.
“ஜேனையும் இந்த பயணத்தில் அவள் சேர்த்திருந்தால், திட்டம் சிறப்பாக இருந்திருக்கும்.”
திட்டத்தை சிறப்பாக ஆக்குவது, நோக்கத்தை அடைய உதவாது.
இருபத்தி ஒன்று வயதிலேயே அவளுக்கு இந்த உண்மை தெரிந்திருந்ததால், அவளுக்கு பெம்பர்லி கிடைத்தது.
இந்த அறிவு சமூகத்தின் அறிவாக இருக்க வேண்டும்.
இது உயர்ந்த சாதனைக்குத் தேவையான சூட்சும அறிவாகும்.
பலன் சிறப்பாக இருக்கலாம், திட்டம் சிறப்பாக இருக்க முடியாது.
பலன் முடிவான விஷயமாகும், அதனால் மேலும் வளர முடியாது.
சிறந்த முடிவை அளிக்கும் ஒரு திட்டம், அங்கேயே முடிந்து விடுவதில்லை, மேலும் வளர்கிறது.
ஒரு நிலையின் பூரணத்துவம், அந்த நிலையிலேயே நின்று விடுகிறது. மேலும் வளர்ச்சிக்கு இடம் அளிப்பதில்லை. இது பரஸ்பர தொடர்பைக் காட்டுகிறது.
ஒரு இயந்திரத்தின் பகுதிகள் தனிப்பட்டதாக இருந்தாலும், மற்ற பகுதிகளுடன் இணைவதுபோல் செய்யப்பட்டுள்ளன.
விவசாயம் ஒரு முழுமையான தொழில் ஆகும். ஆனால் அதன் விளைபொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
விற்பனை, வர்த்தகம் என்கிற அடுத்த நிலையில் நுழைகிறது.
பணம், தொலைத்தொடர்பு மற்றும் போக்குவரத்தை வர்த்தகம் உருவாக்குகிறது.
உடலால் செய்யப்படும் செயல்களால் ஏற்படும் ஓய்வு நேரங்கள், கலாச்சாரத்தை உருவாக்க உதவுகிறது, முக்கியமான இணைப்புகள் உள்ளன.
வரவு செலவு கணக்கு வர்த்தகத்தை வளர்க்க உதவியது.
அரசாங்க நிதி பரிபாலனத்தைப் பற்றி அறியாததால் ரோம் சாம்ராஜ்யம் அழிந்தது.
கிரேக்க கலாச்சாரம் ஆன்மீகமாக வளர முடியாததால் ஒரு நூற்றாண்டிலேயே அழிந்து விட்டது.
மக்களாட்சி பிறந்த பிரிட்டனில், அரசுரிமை உணர்வைத் தாண்டி அவர்களால் வர முடியாததால், உலக அரசாங்கத்தை ஏற்படுத்தும் உரிமையை அவர்கள் இழந்தனர்.
கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்திருந்த காமராஜர், தமிழ் நாட்டில் அதனுடைய வளர்ச்சிக்கு முயற்சி எடுத்தார்.
பண நிர்வாகம் இணைய தளத்தால் வேகப்படுத்தப்பட்டு சூட்சும சூழலின் நம்பிக்கையின் மூலம், அபரிமிதமான செல்வத்தை உருவாக்கியுள்ளது.
ஐரோப்பாவின் தனித்துவத்தை அமெரிக்கா நடைமுறைப்படுத்தியதால் அது பணக்கார நாடாக விளங்குகிறது.
இந்தியாவில் தனி மனிதன் பிறக்கும் சூழல் ஆரம்பத்தில் ஏராளமான செல்வத்தை அளித்தது.
தனி மனிதன் பிறக்க வேண்டும் என்கிற தேவையை World Academy அங்கத்தினர்கள் தங்களையறியாமல் உணருகின்றனர்.

"But it is fortunate," thought she, "that I have something to wish for. Were the whole arrangement complete, my disappointment would be certain. But here, by carrying with me one ceaseless source of regret in my sister's absence, I may reasonably hope to have all my expectations of pleasure realized. A scheme of which every part promises delight can never be successful; and general disappointment is only warded off by the defence of some little peculiar vexation."
“ஏற்பாடுகள் எல்லாம் பூரணமாக இருந்தால் ஏதாவது ஒரு ஏமாற்றம் எழும். அதனால் அதற்கு திருஷ்டி பரிகாரமாக நான் ஆசைப்படுவதற்கு ஏதோ ஒன்று இருப்பது அதிர்ஷ்டம்தான். ஜேன் வராதது ஒரு பெரிய குறை. அந்த வருத்தத்துடன் செல்லும் நான், எதிர்பார்க்கும் சந்தோஷங்கள் எல்லாம் கிடைக்கும் என்று நம்புகிறேன். ஒரு திட்டத்தின் எல்லா பகுதிகளும் சந்தோஷத்தை அளிக்கும் என்றிருந்தால், அது ஒருபொழுதும் வெற்றிகரமாக நிறைவு பெறாது. ஒருவேளை நல்லபடியாக முடியும் என்றால், அதில் ஏதாவது ஒரு சிறிய குறை இருக்க வேண்டும்.” என்று அவள் நினைக்கிறாள்.

30. At this young age, Elizabeth sees the wisdom of a plan left imperfect.
சரியாக திட்டமிடப்படாததைப் பார்க்கும் திறன் இந்த இளம் வயதிலேயே எலிசபெத்திற்கு இருந்தது.
31. Her sister Jane digesting her disappointment cannot be the right companion for her.
தன்னுடைய ஏமாற்றத்தை ஜீரணித்துக்கொள்ளும் அவளுடைய சகோதரியான ஜேன், அவளுக்கு சரியான தோழியாக இருக்க முடியாது.
32. Imagine Jane meeting Darcy at Pemberley, Bingley at Lambton.
பெம்பர்லியில் டார்சியையும், லாம்ப்டனில் பிங்கிலியையும், ஜேன் சந்திப்பதை கற்பனை செய்து பார்க்கலாம்.
33. An imperfect plan in an imperfect atmosphere is Perfect.
குறையுள்ள திட்டம், குறையுள்ள சூழலில், நிறைவுடையதாக இருக்கும்.

34. 'Some little vexation'. Imperfect perfection is a philosophical concept. For a thing to exist in an imperfect atmosphere, it should be imperfect. Should perfection be attempted, it will either break or fail or vanish. It is its imperfection that gives it the value of perfection.
‘சிறிதளவு எரிச்சல்'. குறையுள்ள நிறைவு, தத்துவக் கருத்தாகும். குறையுள்ள சூழலில் ஒரு விஷயம் இருக்க வேண்டும் என்றால் அது குறை உடையதாக இருக்க வேண்டும். நிறைவிற்கு முயற்சி எடுக்கும்பொழுது, அது நின்று போகலாம் அல்லது தோற்றுப் போகலாம் அல்லது மறைந்து போகலாம். அதனுடைய குறையே அதற்கு நிறைவின் மதிப்பை அளிக்கிறது.
35. Elizabeth is aware of this truth and does not wish for Jane to be a part of the tour, though it is most desirable in her view. Later we see it is this imperfection that completes her marriage at Pemberley.
எலிசபெத்திற்கு இந்த உண்மை தெரிந்திருந்தது, அவளுக்கு ஆசை இருந்த போதும், ஜேன் சுற்றுலாவில் கலந்துகொள்வதை அவள் விரும்பவில்லை. இந்தக் குறையே அவளுடைய திருமணத்தை பெம்பர்லியில் பூர்த்தி செய்தது என்பதை நாம் பின்னால் பார்க்கிறோம்.
36. Kitty's complaint is absence of invitation. She wreaks vengeance by being an accomplice to Lydia. She does not have a grievance against anyone in particular. But the nature of grievance is it will wreak its vengeance. For a work to be complete, there should be no grievance for anyone, an impossibility.
கிட்டி, தன்னை அழைக்கவில்லை என்று குறை கூறுகிறாள். லிடியாவிற்கு உடந்தையாக இருந்து அதனைப் பழி தீர்த்துக்கொள்கிறாள். குறிப்பாக எவர் மீதும் அவளுக்கு வருத்தம் ஏற்படுவதில்லை. ஆனால் வருத்தத்தின் தன்மை, பழி தீர்த்துக்கொள்ளும்படி இருந்தது. ஒரு காரியம் பூர்த்தியாக வேண்டும் என்றால் யாருக்கும் எந்த வருத்தமும் எழக் கூடாது. இது சாத்தியமில்லாத ஒரு விஷயம்.
37. "It is fortunate I have something to wish for" – Elizabeth about the tour.
Aspiration keeps us alive.
The Divine created the universe so that it could have something to aspire for – Delight.
Romance is kept alive by the same principle negatively.
Aspiration inspires.
Inspiration releases all possible energy.
Energy employs us to direct and organize it before results are arrived at.
Sri Aurobindo says earth aspires through her tall trees.
Aspiration for communication creates speech.
Spatial aspiration leads to travel as well as transport.
Aspiration for intense employment of energy creates athletic games.
Emotions aspiring for light of self-awareness has created thought and science.
Aspiration for moksha created tapas, Samadhi, yoga.
Aspiration for food production in abundance created growing population.
Aspiration for world government created the United Nations Organisation.
Aspiration for equality created the French Revolution.
Today the same aspiration made a Black President.
Aspiration for upward movement creates urban migration.
Aspiration for employment created the movement of terrorism.
Aspiration to possess national assets to themselves created caste.
A similar aspiration for power created the divine right theory.
Aspiration of the woman for the property of the husband for her children made her chaste.
Aspiration of one who can grow vertically leads to horizontal growth.
Mr. Bennet's aspiration not to interfere with his wife led to elopement.
Aspiration to believe in Caroline's goodness cancelled her marriage.
Aspiration to scandalize Darcy falsely made Wickham a personification of scandal.
Elizabeth's aspiration for the charm of infatuation made her plead for Wickham's promotion in life.
"நான் ஆசைப்பட ஒன்று இருப்பது எனக்கு அதிர்ஷ்டம்தான்—சுற்றுப் பயணத்தைப் பற்றி எலிசபெத்."
ஆர்வம் நம்மை உயிரோட்டத்துடன் வைத்துக்கொள்ளும்.
ஆர்வப்பட ஏதாவது ஒன்று வேண்டும் என்பதற்காக இறைவன் உலகத்தை உருவாக்கினான்.-ஆனந்தம்.
இதே கொள்கையின்படி காதல் எதிர்மறையாக உயிருடன் உள்ளது.
ஆர்வம் ஊக்குவிக்கும்.
ஊக்கம் சாத்தியமாகும் எல்லா சக்தியையும் விடுவிக்கும்.
பலன்கள் கிடைப்பதற்கு முன் சக்தி நம்மை வழி நடத்தும், முறைப்படுத்தும்.
பூமாதேவி அவளுடைய உயரமான மரங்களின் மூலம் ஆர்வப்படுகிறாள் என்று ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.
தொடர்புகொள்ள ஆர்வப்படுவது பேச்சாக எழுகிறது.
இடம் சார்ந்த ஆர்வம் பிரயாணத்திற்கும் போக்குவரத்திற்கும் வழி வகுக்குகிறது.

சக்தியின் தீவிரமான செயற்பாட்டின் ஆர்வம், விளையாட்டை உருவாக்குகிறது.
சுய விழிப்புணர்ச்சிக்கு ஏற்படும் மனவெழுச்சியின் ஆர்வம், எண்ணத்தையும் விஞ்ஞானத்தையும் உருவாக்கியது.
மோக்ஷத்திற்கான ஆர்வம், தவம், சமாதி, யோகத்தை உருவாக்கியது.
அபரிமிதமான உணவு உற்பத்தியின் ஆர்வம், மக்கட் தொகையை பெருக்கியது.
உலக அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற ஆர்வம் ஐக்கிய நாடுகள் சபையாக உருவெடுத்தது.
சமத்துவத்திற்கான ஆர்வம், பிரெஞ்சுப் புரட்சியாக வெடித்தது.
இன்று அதே ஆர்வம் ஒரு கருப்பரை ஜனாதிபதியாக்கியது.
மேலும் முன்னேற வேண்டும் என்கிற ஆர்வம், நகர்புறத்திற்கு குடி பெயர வைக்கிறது.
வேலை கிடைக்க வேண்டும் என்கிற ஆர்வம், தீவிரவாதத்தை உருவாக்கியது.
நாட்டின் வளங்களை தாங்களே பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிற ஆர்வம், ஜாதியை உற்பத்தி செய்தது.
அதிகாரத்திற்கான இதே போன்றதொரு ஆர்வம், இறைவனுக்கு மட்டுமே பதில் கூற வேண்டும் என்கிற கோட்பாட்டை உருவாக்கியது.
தங்களுடைய குழந்தைகளுக்கு கணவனின் சொத்தில் உரிமை வேண்டும் என்ற ஆர்வம், பெண்ணை கற்புடையவளாக்கியது.
உயர உயர வளர வேண்டும் என்கிற ஆர்வம், ஒருவருக்கு பரந்த வளர்ச்சியை அளிக்கிறது.
திரு பென்னட் அவருடைய மனைவி விஷயத்தில் குறுக்கிடக் கூடாது என்கிற ஆர்வம், லிடியா ஓடிப்போவதில் முடிகிறது.
காரலின் நல்லவள் என்று நம்ப ஆசைப்படுவது, திருமணத்தை ரத்து செய்தது.
டார்சியை கெட்டவனாக காண்பிக்க விக்காம் பொய்யாக எடுத்த முயற்சி, அவனை அவதூற்றின் உருவகமாக்கியது.
காதல் மயக்கத்தின் மீது இருந்த எலிசபெத்தின் ஆர்வம், அவளை விக்காமுடைய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக கெஞ்ச வைத்தது.

38. "ceaseless source of regret in my sister's absence".
Jane and Elizabeth are non-physical twins.
Darcy moving towards her celebrates Jane's wedding first.
Elizabeth is the father of the family. Her sense of responsibility gets Lydia married, Jane engaged, before she could think of her own destiny.
Darcy loved her in spite of her not loving him, as Elizabeth was interested in Jane, while Jane never thought of Elizabeth.
Mr. Bennet discharged his responsibility to Jane through Elizabeth.
As all his energies went to her instead of the family, she served the family on his behalf.
Jane was an obsession to Elizabeth.
Physical passion occupying the Mind is obsession.
Vital passion occupying the Mind is inspiration.
Mental passion possessing Mind is revelation.
The divisive powers of Mind divide it from the vital, physical, spirit.
To overcome the mental division of the parts of our being is to overcome our constitutional ignorance.
The father and the mother were incapable of acting as they were. Both acted in the world through Elizabeth. **She acted in her mother falling a victim to Wickham and later in her father moving to her Mind.**
It was Darcy who came to Meryton; Bingley was the social occasion, almost an excuse.
An Alwar in quest of a guru, while he was in Banaras was guided by a star to Tirunelvely where he found the Guru in meditation under a tree. To attract his attention he threw down a stone.
Darcy was guided to Meryton by the invisible star of Elizabeth.
To eternally attract her towards him he powerfully provoked her calling her 'tolerable'.
The first moment of Man meeting the woman is full of significance.
Romance enters as obstacle.
Caste, class, wealth, parents are social obstacles.
Now a days it is the psychological obstacles Man has to overcome.
"என்னுடைய சகோதரி வராதது மிகப் பெரிய குறையாகும்."
ஜேனும் எலிசபெத்தும் உடன் பிறவாத இரட்டைகள் ஆவர்.
டார்சி அவளை நோக்கி வருவது, ஜேனுடைய திருமணத்தை முதலில் முடித்து வைக்கிறது.
குடும்பத்தின் தந்தையாக எலிசபெத் இருக்கிறாள். அவள் தன்னைப் பற்றி நினைப்பதற்கு முன் அவளுடைய பொறுப்புணர்வினால் லிடியாவிற்குத் திருமணம் நடக்கிறது, ஜேனுக்குத் திருமணம் நிச்சயமாகிறது.
ஜேன் ஒரு போதும் எலிசபெத்தைப் பற்றி நினைக்காத போதும் எலிசபெத் ஜேனின் மீது அக்கறை கொண்டிருந்ததுபோல், எலிசபெத் டார்சியைக் காதலிக்காத போதும் அவன் அவளைக் காதலிக்கிறான்.

எலிசபெத் மூலமாக திரு பென்னட் ஜேனைப் பற்றிய தன்னுடைய பொறுப்புகளை நிறைவேற்றினார்.
அவருடைய சக்திகள் அனைத்தும் குடும்பத்திற்குச் செல்லாமல் அவளுக்கே சென்றதால் அவர் சார்பில், அவள் குடும்பத்துக்கு உதவினாள்.
எலிசபெத் மனத்தை ஜேன் எப்பொழுதும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாள்.
ஜடத்தின் ஆர்வம் மனதில் குடி கொள்வது எண்ணத்தின் ஆக்கிரமிப்பாகும்.
உணர்வின் ஆர்வம், மனதில் குடிகொள்வது ஊக்கம் ஆகும்.
மனதின் ஆர்வம், மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது தெளிவாகும்.
மனத்தின் பகுக்கும் சக்தி அதை உணர்வு, ஜடம் மற்றும் ஆன்மாவிடமிருந்து பிரிக்கிறது.
நம் ஜீவனின் பகுதிகளின் மனபாகுபாடுகளை வெற்றிகொள்வது, நமது அமைப்பின் அறியாமையை வெற்றி கொள்வதாகும்.
தாயும், தந்தையும் அவர்களது சுபாவங்களின்படி நடந்துகொள்ள இயலாதவர்கள். இருவரும் வாழ்வில் எலிசபெத் மூலம் செயல் பட்டார்கள். **விக்காமிடம் ஏமாந்தபோது, அவள் தாயாரைப் போல் செயல்பட்டாள். பின்னர் மனதிற்கு மாறியபோது, தந்தை போல் செயல்பட்டாள்.**
டார்சிதான் மெரிடனுக்கு வந்தான்; பிங்கிலி வந்தது ஒரு சமூக சந்தர்ப்பம், அது ஒரு சாக்காக இருந்தது.
காசியில் ஒரு குருவைத் தேடிகொண்டிருந்த ஒரு ஆழ்வாருக்கு, ஒரு நட்சத்திரம் திருநெல்வேலிக்கு வழி காண்பித்தது, அங்கு ஒரு மரத்தின் அடியில் தியானத்தில் இருந்த குருவை சந்தித்தார். அவரது கவனத்தைக் கவர அவர் மீது ஆழ்வார் ஒரு கல்லை எறிந்தார்.
கண்ணுக்குத் தெரியாத நட்சத்திரமான எலிசபெத், டார்சியை மெரிடனுக்குச் அழைத்து வந்தாள்.
அவளை அவன்பால் நிரந்தரமாகக் கவருவதற்கு, அவளை 'பரவாயில்லை' என்று அழைத்து, பலமாகத் தூண்டினான்.
ஒரு ஆணும் பெண்ணும் சந்திக்கும் முதல் தருணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.
காதல் தடையாக நுழைகிறது.
ஜாதி, வகுப்பு, சொத்து, பெற்றோர் ஆகியவை சமூகத் தடைகள்.
இன்று மனரீதியான தடைகளை மனிதன் வெற்றிகொள்ள வேண்டும்.

39. "I may reasonably hope to have all my expectations of pleasure realized".
Reason is to think with a basis.
The thought that has no basis is not reasonable.
The highest work of reason is to find the one substance, the one law, the cementing latest reality connecting and unifying the many, the different, the discordant and disparate.
That is of the Absolute.
Reasons thus can take us to the Transcendent.
Man who aspires to be reasonable aspires for the Transcendent.
She hopes to have all her expectation of pleasure realized.
It is a subconscious awareness of the coming Pemberley.
It is the expectation of pleasure that she has in Mind. Pemberley can give it.
Marriage for woman is the expectation of pleasure afforded by property.
Woman ardently aspires for property as she has to bring up the children when she would not be able to gather food.
Till recently society did not allow the woman to earn her bread. It is another reason she yearns for a house or property.
The lady behaves as if marriage overtakes her.
She is told not to love anyone except in return of his love.
Even for conceiving a child, she has to lie in wait, not go after the male.
Perhaps, as she has to lie quietly delivering her children and feed them remaining stationary, Nature enjoins on her this poise of life.
The biological significance of the woman is to silently to rear the baby in her womb.
The spiritual significance of the woman is to be the stable foundation of the dynamic activity of Man.
Man brings in the resources and the woman organizes them.
Man seeks loyalty from the wife as it heightens the intensity.
The woman's biological, natural tendency is to let many males avail of her as no male's continued services can be relied on.
Property is a concept of society which generated loyalty that is chastity.
"நான் எதிர்பார்க்கும் சந்தோஷங்கள் யாவும் பூர்த்தி செய்யப்படும் என நம்புகிறேன்."
அடிப்படைக் காரணத்தோடு நினைப்பது, விவேகமாகும்.
அடிப்படையில்லாமல் எழும் எண்ணம் அர்த்தமற்றது.
வெவ்வேறான இணக்கமில்லாத வேறுபட்ட பலவற்றை இணைக்கவும், ஒன்று சேர்க்கவும், ஒரு பொருளை, ஒரு சட்டத்தை, ஒரு புதிய உண்மை நிலையைக் கண்டுபிடிப்பது பகுத்தறிவின் மிகப் பெரிய வேலை ஆகும். அது பிரம்மத்திற்குரியது.

பகுத்தறிவு நம்மை பிரம்மத்திற்கு அழைத்துச் செல்லும்.
நியாயமாக இருக்க ஆர்வப்படும் மனிதன், பிரம்மத்திற்கு ஆர்வப்படுகிறான்.
அவள் எதிர்பார்க்கும் சந்தோஷங்கள் யாவும் பூர்த்தி செய்யப்படும் என அவள் நம்புகிறாள்.
அது பெம்பர்லி வரப்போவதன் ஆழ்மன அறிவாகும்.
அவளுடைய மனதில் சந்தோஷத்தின் எதிர்பார்ப்பு இருக்கிறது. அதை பெம்பர்லி அளிக்கும்.
பெண்ணுக்குத் திருமணம் என்பது, சொத்தின் மூலம் கிடைக்கும் சந்தோஷத்தின் எதிர்பார்ப்பு ஆகும்.
உணவை கொடுக்க முடியாத நிலையில் இருக்கும் ஒரு பெண்மணி, குழந்தைகளை வளர்த்து ஆளாக்க வேண்டி இருப்பதால், அவளுக்கு சொத்தின் மேல் தீவிர ஆர்வம் எழுகிறது.
சமீபகாலம் வரை சமூகம் பெண்களை சம்பாதிக்க அனுமதிக்கவில்லை. ஒரு வீடு அல்லது சொத்திற்காக அவள் ஏங்குவதற்கு இது மற்றொரு காரணமாகும்.
ஒரு பெண் அவளை திருமணம் வெற்றிகொள்வது போல் நடந்துகொள்கிறாள்.
அவனுடைய அன்புக்கு பதிலளிப்பதைத் தவிர வேறு யாரிடமும் அவள் அன்பு செலுத்தக் கூடாது என்று அவளுக்குச் சொல்லப்படுகிறது.
ஒரு குழந்தையைப் பெற்றுக்கொள்வதற்கும் அவள்தான் காத்துக் கொண்டிருக்க வேண்டுமே தவிர, அவள் ஆணின் பின்னால் போகக் கூடாது.
குழந்தைகளைப் பெற்றெடுத்து அவர்களை வளர்த்து ஆளாக்கி அமைதியாக ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என்பதால், இயற்கை இந்நிலையை அவளுக்கு அளிக்கிறது.
பெண்களின் உடல்ரீதியான முக்கியத்துவம் அவர்கள் குழந்தையை மௌனமாக கருவறையில் வளர்த்து பாதுகாக்க வேண்டும் என்பதுதான்.
பெண்ணின் ஆன்மீக முக்கியத்துவம், ஆணின் தீவிரமான சுறுசுறுப்பான செயல்பாட்டின் உறுதியான அஸ்திவாரமாக இருப்பதுதான்.
மனிதன் வளங்களைக் கொண்டு வருகிறான், பெண் அதை முறைப்படுத்துகிறாள்.
அது தீவிரத்தை உச்ச கட்டத்திற்கு எடுத்துச் செல்வதால், மனைவியின் விசுவாசத்தைக் கணவன் நாடுகிறான்.
பல ஆண்களுக்கு இடம் அளிப்பது பெண்ணின் உடற்கூற்றின் இயற்கையான சுபாவம், ஏனெனில் எந்த ஆணின் தொடர்ந்த ஆதரிப்பையும் நம்ப முடியாது.
சொத்தின் மூலம் விசுவாசத்தை சமூகம் கற்பாக உற்பத்தி செய்தது.

40. “A scheme of which every part promises delight can never be successful”.
Man’s movement is locomotion, one part advancing when the other remains unmoving.
Beauty, Unity, Truth, Goodness, Knowledge, Power, have all the six components of the human personality each of which grows at a time.
The completion awaits the full growth of the all six.
For each to grow fully, all the energy must be concentrated in one at a given time.
Of the seven or eight principles of evolution, one evolves at a time while the rest are dormant.
On earth the progress started in India, traveled via Greece to Italy and Europe till it reached America.
India started with the spirit and reached the penultimate stage.
Greece took up Mind and its thinking faculty.
Rome developed vital power.
Europe gave the power of thinking to every Man alive.
America took the Mind to impact on physical work.
Next, all of them are to be united so that the ultimate height of the spirit can be reached.
Its basis is the global, territorial unity, a human unity symbolized by the world government.
Its basis is global institutions, especially the financial institution.
Spiritually Man shedding the dividing ego is the starting point.
On another scale, the physicality of Man is to be overcome.
The wars did it effectively.
Terrorism is its effective, symbolic residue.
It is significant that terrorism is based on poverty.
Internet in cyber space is creating unity that is missing on earth.
Its contributions are overcoming Time by speed, overcoming ego by making possessiveness impossible, free service that eliminates profit, global reach by electronics.
“ஒரு திட்டத்தின் எல்லா பகுதிகளும் சந்தோஷத்தை அளிக்கும் என்றால், அது ஒரு பொழுதும் வெற்றி அடையாது.””
மனிதன் எப்பொழுதும் இயங்கிக் கொண்டே இருப்பான், மற்ற பாகம் முன்னேறாமல் நிற்கும்பொழுது ஒரு பாகம் முன்னேறுகிறது.
அழகு, ஒற்றுமை, உண்மை, நற்குணம், அறிவு, சக்தி யாவற்றுக்கும் மனித சுபாவத்தின் ஆறு பாகங்களும் உள்ளன, ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயத்தில் வளரும்.

ஆறும் முழுமையாக வளர்ந்த பின் எழுவது முழுமை.
ஒவ்வொன்றும் முழுமையாக வளருவதற்கு எல்லா சக்தியும் ஒன்றில் ஒரு சமயத்தில் குவிக்கப்பட வேண்டும்.
பரிணாமத்தின் ஏழு அல்லது எட்டு கருத்துகளில் ஒன்றுதான் ஒரு சமயத்தில் எழும், மற்றவை செயலற்று இருக்கும்.
இவ்வுலகில் முன்னேற்றம் இந்தியாவில் ஆரம்பித்து, கிரேக்க நாட்டின் வழியாக இத்தாலிக்கும் ஐரோப்பாவுக்கும் சென்று இறுதியாக அமெரிக்காவை அடைந்தது.
ஆன்மாவின் மூலம் முன்னேற்றத்தை ஆரம்பித்த இந்தியா, இறுதி நிலைக்கு முந்தைய நிலைவரை சென்றடைந்தது.
கிரீஸ் மனதையும் அதன் சிந்திக்கும் திறனையும் எடுத்துக் கொண்டது.
ரோம் உணர்வின் சக்தியை வளர்த்துக் கொண்டது.
ஒவ்வொரு மனிதனுக்கும் சிந்திக்கும் திறனை ஐரோப்பா அளித்தது.
அமெரிக்கா மனத்தின் மூலம் செயல்பட்டு, உடல் உழைப்பில் அதனுடைய தாக்கத்தை வெளிப்படுத்தியது.
அடுத்து அவை யாவும் இணைந்து ஆன்மாவின் உச்ச கட்ட உயர்வை அடைய வேண்டும்.
அதன் அடிப்படை உலகளாவிய தேசங்களின் ஒற்றுமை, மனித ஒற்றுமையாகும். இதன் அடையாளமாக உலக அரசாங்கம் இருக்கும்.
இதன் அடிப்படை உலகளாவிய நிறுவனங்கள், முக்கியமாக பொருளாதார நிறுவனங்கள் ஆகும்.
ஆன்மீகரீதியில், பிரிக்கும் திறனுடைய அகந்தையை மனிதன் களைவதே ஆரம்ப இடமாகும்.
வேறொரு அளவில் மனிதனின் ஜடத்தன்மையை வெற்றிகொள்ள வேண்டும்.
போர்கள் இதை திறம்படச் செய்தன.
அதனுடைய சிறந்த அடையாளமாக மீதமிருப்பது தீவிரவாதம்.
தீவிரவாதம் ஏழ்மையின் அடிப்படையில் எழுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.
இணைய தளம் உலகில் காணாமல் போன ஒற்றுமையை உருவாக்குகிறது.
காலத்தை வேகம் வென்றது, தனதாக்கிக் கொள்வதை சாத்தியமில்லாமல் செய்து அகந்தையை வெற்றி கொண்டது.
இலவச சேவை மூலம் இலாபத்தை அகற்றியது, மின்னணுவியல் மூலம் உலகத்தை எட்டியது, இவை யாவும் அதனுடைய பங்களிப்புகள் ஆகும்.

41. "general disappointment is warded off by the defence of some little peculiar vexation".
A value refuses to form when the work has not crossed the border.
Economic reforms have not addressed the crisis as the central issue is evaded.
Pollution is being controlled, not eliminated, for the same reason.
Indian spirituality relied on karma, as they were still in Force.
The surface Mind includes earth, the solar system, and the material universe.
Again it is the sense Mind that sees the dualities of the Superconscient, inconscient; good and evil, etc.
The Rishis have not seen the whole, by buddhi looking on both sides.
The Gita speaks of the divine nature but insisted on moksha.
The knowledge of the whole or an inkling of it is known to the ancients as evidenced by refusing amrita to the asuras, conquering the gods by Anusuya who invoked the Supreme, alchemy, search for physical immortality இச்சா ம்ருத்யு death at will.
Nehru, as the Vice-President of the Viceroy's Executive council reached a great height, but it was not independence.
The period from August 15, 1947 to January 26, 1950 was a period entirely free of the British rule; but Independence must be ushered in by the constitution coming into force.
Any disease or most diseases can be very nearly cured but not fully, as cure is not health.
Fertiliser cannot make the soil creative of productive energy.
Memorisation cannot replace thinking.
Thinking does not lead to creativity, rather is its bar.
Mind cannot have created this universe.
Prose can never reach the depth of the emotions.
A concubine can give all services, not psychological inspiration.
Copious Money has never built up a spiritual institution.
Mercenaries have never defeated a patriotic army.
Foster parents have no scope to mature as biological parents.
"பொதுவான ஏமாற்றம் ஏதாவது சிறிய குறையால் தடுத்து நிறுத்தப்படும்."
ஒரு வேலை அதன் எல்லையைத் தாண்டி இருக்காவிட்டால், அதற்கு மதிப்பு உருவாவதில்லை.
முக்கியமான விஷயம் தவிர்க்கப்பட்டதால் பொருளாதார சீர்திருத்தம், நெருக்கடிக்கு கவனம் செலுத்தவில்லை.
இதே காரணத்தால்தான் சுற்றுப்புறத் தூய்மைக் கேடு, கட்டுப்படுத்தப்படுகிறது, நீக்கப்படவில்லை.
கர்மா அப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டிருந்ததால், இந்திய ஆன்மீகம் கர்மாவை நம்பியிருந்தது.

மேல் மனத்தில், பூமி, சூரிய மண்டலம், லௌகீக பிரபஞ்சம் ஆகியவை அடங்கியுள்ளது.
பிரம்மம், ஜட இருள், நல்லது, கெட்டது இவற்றின் இரட்டைகளை உணர்வு மனம் பார்க்கிறது.
ரிஷிகள் தங்களுடைய புத்தியினால் இரண்டு பக்கங்களைப் பார்த்து, முழுமையைப் பார்க்கவில்லை.
தெய்வீகச் சுபாவத்தைப் பற்றி பேசும் கீதை, மோக்ஷத்தை வலியுறுத்தியது.
அமிர்தத்தை அசுரர்களுக்குத் தர மறுத்தது, அனுசுயா கடவுளை அழைப்பதன் மூலம் தேவர்களை வென்றது, இரசவாதம், காயகல்பம், இச்சா ம்ருத்யு போன்றவைகளிடமிருந்து பழைய காலத்து மனிதனுக்கு முழுமை பற்றிய அறிவோ அல்லது அதன் அறிகுறிகளோ தெரிந்து இருந்தது தெளிவாகிறது.
வைஸ்ராயின் நிர்வாகக் குழுவின் துணைத் தலைவராக நேரு உயர்ந்த இடத்தை அடைந்தார். ஆனால் அது சுதந்திரம் இல்லை.
15.08.1947 முதல் 26.01.1950 வரை ஆங்கிலேய ஆட்சியிலிருந்து இந்தியா முழுவதுமாக விடுபட்டிருந்தது.
ஆனால் அரசியல் சாசனம் அமலுக்கு வந்த பிறகுதான் சுதந்திரம் செயல்பட வேண்டும்.
எந்த ஒரு வியாதியையும் அல்லது பெரும்பாலான வியாதிகளையும் பெரும்பாலும் குணப்படுத்த முடியும் ஆனால் முழுமையாக குணப்படுத்த முடியாது, ஏனெனில் வியாதி இல்லாமல் இருப்பது ஆரோக்கியம் அல்ல.
உரம், மண்ணிற்கு உற்பத்தி செய்யும் சக்தியை அளிக்காது.
மனப்பாடம் செய்வது சிந்தனை செய்வதற்கு மாற்று ஆகாது.
சிந்தனை படைப்பாற்றலுக்கு வழி கோலாது, தடையாகவே இருக்கும்.
பிரபஞ்சத்தை மனம் படைத்திருக்க முடியாது.
உரைநடை உணர்ச்சிகளின் ஆழத்தை தொடவே முடியாது.
ஆணுடன் திருமணம் செய்யாமல் வாழும் ஒரு பெண்ணால் எல்லா சேவைகளையும் அளிக்க முடியும், ஆனால் மனரீதியாக ஊக்கம் அளிக்க முடியாது.
அதிக அளவு பணம் ஆன்மீக ஸ்தாபனத்தை உருவாக்கியதே இல்லை.
ஆதாய மனப்பான்மை உள்ளவர்கள் தேசபக்தி உடைய இராணுவத்தை தோற்கடித்ததே இல்லை.
வளர்ப்பு பெற்றோர்கள் இரத்த சம்பந்தம் உடைய பெற்றோர்களாக முதிர்ச்சி பெறும் வாய்ப்பே இல்லை.

When Lydia went away, she promised to write very often and very minutely to her mother and Kitty; but her letters were always long expected, and always very short. Those to her mother contained little else than that they were just returned from the library, where such and such officers had attended them, and where she had seen such beautiful ornaments as made her quite wild; that she had a new gown, or a new parasol, which she would have described more fully, but was obliged to leave off in a violent hurry, as Mrs. Forster called her, and they were going to the camp; and from her correspondence with her sister, there was still less to be learnt -- for her letters to Kitty, though rather longer, were much too full of lines under the words to be made public.

லிடியா கிளம்பும் பொழுது, தனது தாயாருக்கும், கிட்டிக்கும் விவரமாக அடிக்கடி கடிதம் எழுதுவதாக வாக்களித்திருந்தாள். ஆனால் அவள் கடிதத்திற்கான நீண்ட எதிர்பார்ப்பிற்கு பிறகே அதுவும் மிகவும் சுருக்கமாகவே அவை வந்து சேர்ந்தன. தாயாருக்கு எழுதிய கடிதங்களில், நூலகத்திலிருந்து அப்பொழுதுதான் அவர்கள் திரும்பியதாகவும், எந்த அதிகாரிகள் தங்களுடன் இருந்தனர் என்றும், அவளை மிகவும் சந்தோஷப்படுத்திய அழகிய ஆபரணங்களை எங்கே பார்த்தாள் என்றும், என்ன புதிய உடை வாங்கினாள் என்றும் அல்லது ஒரு புதிய குடை வாங்கினாள் என்றும் இவைகளைத் தவிர வேறெதுவும் இல்லை. முகாமிற்கு போவதற்காக திருமதி. பாஸ்டர் அழைத்ததால், அவசரமாகக் கிளம்ப வேண்டி இருந்தது, இல்லையெனில் இவைபற்றி மேலும் முழுவதுமாக விவரித்திருப்பாள். தன்னுடைய சகோதரிக்கு எழுதிய கடிதங்களில் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இதைவிட குறைவாகவே இருந்தன. கிட்டிக்கு எழுதிய கடிதங்கள் நீளமாக இருந்த போதிலும், வெளியில் சொல்ல முடியாதவையாக இருந்தன.

42. At any time several events take place. Each is parallel to all others.
எந்த சமயத்திலும் பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அவை ஒவ்வொன்றும் மற்ற அனைத்திற்கும் இணையாகவே இருக்கும்.
43. Some are direct parallels, others are reverse, the rest after a fashion.
சில நேரிடையான இணையாக இருக்கும், வேறு சில எதிரிடையான இணையாக இருக்கும், மீதம் உள்ளவை ஓரளவுக்கு இணையாக இருக்கும்.
44. The events in Lydia's life, her letters, Kitty's secrecy are directly a parallel to the visit to Pemberley, Darcy's changed behaviour, visit of Georgiana and Bingley, Caroline's provocation and finally, Jane's letter.
லிடியாவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவளது கடிதங்கள், கிட்டியின் இரகசியம் ஆகியவை பெம்பர்லி விஜயம், டார்சியின் மாறிய நடத்தை, ஜார்ஜியானா மற்றும் பிங்கிலியின் விஜயம், காரலினின் கோபமூட்டுதல், இறுதியாக ஜேனின் கடிதம் ஆகியவற்றிற்கு நேரான இணையாக உள்ளன.
45. "Lydia promised to write to her mother very often very minutely."
A promise is an intention within one's capacity.
No one promises to another what is not in his reach.

Lydia's promise was a form of speech, none of her intention.
Every promise of goodwill made in Mother's atmosphere is overfulfilled.
What is promised in human dimensions is fulfilled in divine dimensions.
Ego that receives more than it can assimilate uses it against the giver, tries to ruin him.
A promise is the soul's intention in human circumstances.
It can never fail when it is sincere as the higher power acts in a lower plane.
Sri Aurobindo says the Highest has promised the greatest for the earth.
To receive it Man needs sincerity and surrender.
That sincerity must be that of the Inconscient of which the subconscient of the body is made.
The sincerity of the inconscient overcomes the sense Mind.
This is a yoga where Mind is to be passed over in favour of Supermind.
Sense Mind is the extension of Mind in its objectification.
To overcome the sense Mind, one must go in from outside.
Going in so and coming out again, the senses through which the Mind operates purifies them.
Tradition turns off the senses.
We purify them, as Samadhi for us is in the waking consciousness.
Senses serve the divided Mind, but also serve the separative ego.
Integral vision combines the functions of the telescope and the microscope.
Now ego operates Man.
The Silent Purusha operates in Samadhi.
The Ishwara operates in waking Samadhi through the purified senses.
Transcending the sense Mind, neither the inconscient nor the Superconscient is seen but the conscient discovers its Self-existence.
Moving from vital to the Mental, Elizabeth made history for her family. We are to move to the Supermind.
"அவளுடைய தாயாருக்கு, அடிக்கடி விவரமாக கடிதம் எழுதுவதாக லிடியா வாக்களித்தாள்."
ஒருவரது திறனுக்குள் இருக்கும் எண்ணம், வாக்குறுதி.
தன்னால் முடியாததை ஒருவர் மற்றவருக்கு வாக்களிக்க மாட்டார்.
லிடியாவின் வாக்குறுதி ஒரு பேசும் முறையாகும், அவளுடைய நோக்கம் அது அல்ல.
அன்னையின் சூழலில் கொடுக்கப்படும் நல்லெண்ணத்தின் வாக்குறுதி, அதிக அளவில் நிறைவேற்றப்படும்.
மனித பரிமாணத்திற்குள் அளிக்கப்படும் வாக்குறுதி, தெய்வீகப் பரிமாணத்தில் நிறைவேற்றப்படுகிறது.
ஜீரணித்துக்கொள்ளும் அளவிற்கும் மேல் பெற்றுக்கொள்ளும் அகந்தை, கொடுப்பவருக்கு எதிராக அதைப் பயன்படுத்தும், அவரை அழிக்க முயற்சி செய்யும்.
மனித சந்தர்ப்பத்திற்குள் இருக்கும் ஆன்மாவின் எண்ணமே வாக்குறுதியாகும்.
உயர்ந்த சக்தி, தாழ்ந்த நிலையில் செயல்படுவதால், அது உண்மையாக இருக்கும்பொழுது அதற்குத் தோல்வியே ஏற்படாது.
எல்லாவற்றையும்விட உயர்ந்த பிரம்மம், மிகப் பெரியதை உலகுக்கு அளிப்பதாக வாக்கு கொடுத்துள்ளது என்று பகவான் கூறுகிறார்.
அதனைப் பெற்றுக்கொள்ள மனிதனுக்கு உண்மையும் சரணாகதியும் தேவை.
உடலின் ஆழ்மனம் ஜட இருளுக்குரியது, ஜட இருளுக்கு உரியதாக அந்த உண்மை இருக்க வேண்டும்,
ஜட இருளின் உண்மை, உணர்வின் மனத்தை வெற்றிகொள்கிறது.
மனத்தை புறக்கணித்து சத்திய ஜீவியத்திற்கு ஆதரவாக இருக்கும் யோகம் இது.
உணர்வு மனம் மனத்தின் விரிவாக்கமாக உள்ளது.
உணர்வின் மனத்தை வெல்ல வேண்டும் எனில் ஒருவர் புறத்திலிருந்து அகத்திற்குச் செல்ல வேண்டும்.
அவ்வாறு அகத்திற்கு சென்று மீண்டும் புறத்திற்கு வரும்போது மனத்தை செயல்பட வைக்கும் புலன்கள் அவற்றைத் தூய்மைப்படுத்தும்.
பரம்பரை வழக்கம், புலன்களை செயல்படாமல் இருக்கச் செய்து விடுகிறது.
நமக்கு சமாதி என்பது விழித்திருக்கும் ஜீவியத்தில் இருப்பதால், நாம் அவற்றை தூய்மைப் படுத்துகிறோம்.
பிரிந்துள்ள மனத்திற்கு புலன்கள் சேவை செய்கின்றன, ஆனால் வெவ்வேறாக இருக்கும் அகந்தைக்கும் சேவை செய்கின்றன.
தொலைநோக்கி, நுண்நோக்கி, இரண்டினுடைய பணிகளையும் ஒருங்கிணைந்த பார்வை செய்யும்.
இப்பொழுது அகந்தை மனிதனை இயக்குகிறது.
மௌன புருஷன் சமாதியில் இயங்குகிறான்.
தூய்மைப்படுத்தப்பட்டுள்ள புலன்கள் மூலம் விழித்திருக்கும் சமாதியில் இயங்குவது ஈஸ்வரன்.
உணர்வின் மனத்தை கடந்து செல்லும்பொழுது, ஜட இருளையும் காண்பதில்லை, பிரம்மத்தையும் காண்பதில்லை, ஆனால் ஜீவன் அதன் சுய இருத்தலைக் கண்டுபிடிக்கிறது.

உணர்விலிருந்து மனதிற்குச் சென்று, எலிசபெத் அவளது குடும்பத்திற்கு சரித்திரம் படைத்தாள். நாம் சத்திய ஜீவியத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

46. "But her letters were long expected and were very short" – Lydia's letters.

Letter writing as an occupation was developed as a branch of literature in England.

An M.A. received a letter in his 50th year and found he had no previous experience in writing letters. In India no letters are written in the English sense even today.

An English lecturer in a college found it difficult to read a postcard received by him.

Letter writing is the art of stationary life.

Mr. Bennet's stationary, sedentary life robbed him of energy and hence the habit of replying his letters. One letter he replied fifteen days later.

Jane, Elizabeth, Mrs. Gardiner wrote at length and often if necessary.

The dress Man puts on pleases him and he expects to please others by it.

For a lady the dress is all.

In a way letter writing is an intellectual dressing.

Jane's letter delighted Elizabeth who went to them in her leisure.

They distinguish a letter from a note.

The forms of address, subscription are fixed by etiquette and are inviolable.

There was an English Prime Minister who had no compunction to write to his lady friend daily giving out official secrets.

Biographers find more insights from letters than official documents.

Mahatma Gandhiji even in his telegrams to Nehru affectionately refers to his seeing Indu, giving a personal touch to political relationship.

Nehru's letters to his daughter were published as "Discovery of India".

Letter writing is an important development in civilization.

Before the advent of post office, few ever wrote letters outside of business.

Those were days when all the relatives and friends lived in one locality.

Marriage, domestic functions are occasions to communicate.

The acting President of India on the occasion of a marriage in his house called on his invitees in the sacred old Indian tradition.

Entire novels were written composed of letters at one time.

A political leader condemned to life received a letter from his unschooled sister and found her language poetic.

"ஆனால் லிடியாவின் கடிதங்களுக்காக வெகு நாட்கள் காத்துக் கொண்டு இருக்க வேண்டியதாயிற்று, அவை மிகவும் சுருக்கமாக இருந்தன."

கடிதம் எழுதுவது, இலக்கியத்தின் ஒரு கிளையாக இங்கிலாந்தில் உருவானது.

முதுகலை பட்டம் பெற்ற ஒருவர் தன்னுடைய ஐம்பதாவது வயதில் ஒரு கடிதம் கிடைக்கப் பெற்றார், தனக்கு கடிதம் எழுதுவதில் முன் அனுபவம் எதுவும் இல்லாததைப் பார்த்தார்.

இன்றும் இந்தியாவில், ஆங்கிலேய உணர்வுடன் எந்த கடிதமும் எழுதப்படுவதில்லை.

ஒரு கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர், தனக்கு வந்த கடிதம் படிப்பதற்கு கஷ்டமாக இருப்பதைக் கண்டார்.

கடிதம் எழுதுவது, ஒரே இடத்தில் நிலையாக வாழ்பவர்களின் வாழ்க்கை கலையாகும்.

ஒரே இடத்தில் எந்த உடல் உழைப்புமின்றி இருந்த திரு பென்னட்டின் வாழ்க்கை முறை, அவரது சக்தியை இழக்கச் செய்தது. அவருக்கு கடிதங்களுக்கு பதில் எழுதும் பழக்கம் இருந்தது. ஒரு கடிதத்திற்கு அவர் பதினைந்து நாட்களுக்குப் பிறகு பதில் எழுதினார்.

ஜேன், எலிசபெத், திருமதி கார்டினர் மூவரும் விரிவாகக் கடிதம் எழுதினார்கள், அவசியம் ஏற்படும்பொழுது அடிக்கடி எழுதினர்.

மனிதன் உடுத்திக்கொள்ளும் ஆடை அவனை திருப்தி செய்கிறது, மற்றவர்களையும் அதன் மூலம் திருப்தி செய்ய வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கிறான்.

ஒரு பெண்மணிக்கு ஆடைதான் அனைத்துமே.

ஒரு விதத்தில், கடிதம் எழுதுவது அறிவின் ஆடை அலங்காரமாகும்.

ஜேனுடைய கடிதங்கள் எலிசபெத்துக்கு சந்தோஷத்தை அளித்தன, ஓய்வு நேரங்களில் அவற்றை மீண்டும் படிக்கலானாள்.

அவை ஒரு குறிப்பிற்கும் கடிதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்த்துகின்றன.

கடிதம் எழுதும் முறைகள், தெரிவிக்கும் விஷயங்கள், மீற முடியாத நாகரிக வழக்கங்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஒருவர், மனவுறுத்தல் இல்லாமல் தன்னுடைய பெண் தோழிக்கு அலுவலக இரகசியங்களைத் தெரிவித்து தினமும் கடிதம் எழுதி வந்தார்.

வாழ்க்கை வரலாறு எழுதுபவர்கள் அதிகாரபூர்வமான ஆவணங்களைவிட கடிதங்களில்தான் உள்ளார்ந்த விஷயங்களை தெரிந்து கொண்டனர்.
நேருவிற்கு அனுப்பிய தந்திகளில்கூட காந்திஜி, இந்திராவைப் பார்த்த விஷயத்தை குறிப்பிட்டு, அரசியல் உறவில்கூட தனிப்பட்ட அக்கறையைக் காண்பித்தார்.
நேரு அவருடைய மகளுக்கு எழுதிய கடிதங்கள் "*Discovery of India*" எனும் புத்தகமாக வெளியிடப்பட்டது.
கலாச்சாரத்தில் கடிதம் எழுதுவது ஒரு முக்கியமான வளர்ச்சியாகும்.
தபால் அலுவலகம் வருவதற்கு முன், வியாபார விஷயங்களுக்கு மட்டுமே கடிதங்கள் எழுதப்பட்டன.
அந்த நாட்களில் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஒரே இடத்தில் வசித்து வந்தனர்.
திருமணம், குடும்ப நிகழ்ச்சிகள் தொடர்புகொள்வதற்கு சந்தர்ப்பங்களாக அமைந்தன.
இந்தியாவின் தற்காலிக ஜனாதிபதியாக இருந்தவர், தன் இல்லத் திருமணத்திற்கு அனைவரையும் புனிதமான பழைய இந்தியக் கலாச்சாரத்தின்படி நேரில் சென்று அழைத்தார்.
ஒரு சமயத்தில் முழு நாவல்கள் கடிதங்களைக் கொண்டே எழுதப்பட்டன.
ஆயுள் தண்டனை பெற்ற ஒரு அரசியல் தலைவர் பள்ளிக்கூடமே சென்றிராத தன்னுடைய சகோதரியிடமிருந்து வந்த கடிதம் கவிதை நயத்துடன் இருந்ததைக் கண்டார்.

47. "Obliged to leave off in a violent hurry" – Lydia's letter to her mother.
Lydia's energies are in a violent hurry all the time.
The chastening influence of the father waned as one goes down and is very feeble in Lydia.
Lydia and more so Mrs. Bennet were the hippies of Jane Austen.
They released infinite energies of the society disregarding the norms of the society.
Mrs. Bennet destroyed the cultural values unconsciously.
Lydia was oblivious of the very existence of the society.
The energies released were phenomenal. Darcy harnessed them.
The hippies defied, disregarded, destroyed social values of all description.
Tom Peters symbolized the Freedom they aspired for in Management.
In the 80s the hippies were the social leaders.
Society at large or maybe life beyond the society did what Darcy did to the Bennet's family by organizing various revolutions technologically psychologically as well as socially. Technologically the personal computer and Internet were organizations in cyberspace. Psychologically, it was the freedom of women and children, the quest for psychological fulfillment in the spouse. Socially this power became trillions of dollars generated out of human trust in wider than national institutions. None, not even the sadhaks and devotee recognized that

Mother is the Mantra of Mankind
Sri Aurobindo is the Absolute in the relative.

Every person is handling almost all the energies released by the hippie revolution through the PC, Internet, financial institutions. Man realising he is the emerging Individual will have at his disposal as much energy as this revolution has released, as he is universal. No longer it can be directed to material production. **It must go creatively into the vital plane on the global scale to handle the financial crisis from behind, not from the economy but from the political, social plane. It will create the world government.**

"அவசரமாக கிளம்ப வேண்டி இருக்கிறது— தாயாருக்கு எழுதிய லிடியாவின் கடிதம்."
லிடியாவின் சக்தி எப்பொழுதுமே மிக வேகத்தில் இருக்கிறது.
தந்தையின் கட்டுப்படுத்தும் குணம் சிறிது சிறிதாக தேய்ந்து போய் லிடியாவை அடையும்பொழுது மிகவும் குறைவாகவே உள்ளது.
லிடியாவும், திருமதி பென்னட்டும் ஜேன் ஆஸ்டினின் ஹிப்பிகள் ஆவர்.
சமூகத்தின் நெறிகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் அவர்கள் அளவில்லாத சக்திகளை விடுவித்தனர்.
திருமதி பென்னட் கலாச்சாரப் பண்புகளை தன்னையறியாமல் அழித்தாள்.
சமூகம் என்று ஒன்று இருப்பதையே அறியாதவளாக லிடியா இருந்தாள்.
விடுவிக்கப்பட்ட சக்திகள் அபரிமிதமாக இருந்தன. டார்சி அவற்றைப் பயன்படுத்திக்கொண்டான்.
சமூகப் பண்புகள் யாவற்றுக்கும் ஹிப்பிகள் எதிர்ப்பு தெரிவித்து மதிப்புக் கொடுக்காமல் அழித்தனர்.
அவர்கள் ஆர்வப்பட்ட சுதந்திரத்தை டாம் பீட்டர், *Management* என்ற புத்தகத்தில் அடையாளப்படுத்தினார்.
எண்பதுகளில் ஹிப்பிகள் சமூகத் தலைவர்களாக இருந்தனர்.
பென்னட் குடும்பத்திற்கு டார்சி செய்ததை, சமூகமும் அல்லது சமூகத்தை தாண்டிய வாழ்வும், தொழில் நுட்பரீதியாகவும், உளரீதியாகவும், சமூகரீதியாகவும் பல்வேறு புரட்சிகளை முறைப்படுத்தி உதவி செய்தது. இணைய உலகில் கணினியும் இணைய தளமும் நிறுவனங்களாக விளங்கின. மனரீதியாக பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் சுதந்திரம் கிடைத்தது, தம்பதிகளிடையே மனநிறைவின் தேடலும் பூர்த்தியானது. சமூக அளவில் இந்தச் சக்தி மனித நம்பிக்கையின் அடிப்படையில் கோடிக்கணக்கான பணத்தை நாட்டின் நிறுவனங்களைவிட அதிக அளவில் உற்பத்தி செய்தது. எவருமே ஏன் சாதகர்களும், அன்பர்களும்கூட,

மனித குலத்தின் மந்திரம் அன்னை

ஸ்ரீ அரவிந்தர் சிருஷ்டியில் பிரம்மம் ஆவார்
என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை.
கணினி மூலமாகவும், இணைய தளம், நிதி நிறுவனங்கள் மூலமாக ஒவ்வொரு மனிதனும், ஹிப்பி புரட்சி விடுவித்த அனைத்து சக்திகளையும் பயன்படுத்தி வருகின்றான். மனிதன் பிரபஞ்சத்திற்கு உரியவனாக இருப்பதால், வெளிப்படும் தனிமனிதன் தான்தான் என்பதை அவன் உணர்ந்தால், இந்த புரட்சி விடுவித்த அவ்வளவு சக்தியும் அவனுடைய உபயோகத்திற்கு கிடைக்கும். பொருள் உற்பத்திக்கு அவற்றை இனி உபயோகப்படுத்த முடியாது.
பொருளாதார நெருக்கடியை பின்னாலிருந்து கையாள்வதற்கு, உலக அளவில் அது ஆக்கபூர்வமாக உணர்வு நிலைக்குச் செல்ல வேண்டும். பொருளாதார நிலையிலிருந்து அல்லாது அரசியல், சமூக நிலையிலிருந்து செல்ல வேண்டும். இது உலக அரசாங்கத்தை உருவாக்கும்.

48. "Letters to Kitty were much too full of lines under the words to be made public".
Betrayal serves as much as loyalty.
Falsehood offers as much service as truth.
Kitty betrayed the family, served a wider cause of the family.
The result of her migrating to Netherfield and Pemberley confirms it.
Krishna's falsehood helped destroy the evil of Duryodhana.
Falsehood is an essential instrument to Truth in the plane of falsehood.
The German General's betrayal of Hitler saved Paris for civilization.
Sri Aurobindo's father took efforts to shut out Indian culture from his children. The result is He gave up entirely the English upbringing and became a champion of Indian culture.
The long centuries of dark ages absorbed the individual mental greatness of the Greeks into the vast vitally organized social power of **Law** and reemerged in every European nation as the capacity to think for himself in the common Man, thus giving birth to the Reformation, Renaissance and science.
Possessive betrayal of aristocracy created the French Revolution.
European aristocracy that betrayed the serf, created America.
The Indian Brahmin who betrayed the cause of Jnana, knowledge, sent that knowledge to Greece and Europe via Persia.
Persia that received the Indian Jnana invaded and ruled India for five hundred years.
Betraying Indian culture the British imposed English on India which became the instrument to drive them out, making the entry into the life of international politics for India easy.
Charlotte's mean betrayal of Elizabeth giving Lady Catherine a non-existent rumour directly made Darcy come to Elizabeth with a second proposal.
Betrayal is reverse loyalty for the low consciousness.
Betrayal in the occult plane is black magic. It destroys the victim. Should he survive that onslaught, he conquers the occult planes of his own life. Anyone can be loyal or betray the other. **The result is Self-determined by the victim if he is rooted in the soul.**
"கிட்டிக்கு எழுதிய கடிதங்கள் நீளமாக இருந்த போதிலும், வெளியில் சொல்ல முடியாதவைகளாக இருந்தன."
விசுவாசம் செய்யும் அதே சேவையை நம்பிக்கைத் துரோகமும் செய்யும்.
உண்மை அளிக்கும் சேவையை பொய்மையும் அளிக்கும்.
கிட்டி குடும்பத்துக்கு துரோகம் செய்தாள். குடும்ப நலனுக்கு அது உதவியது.
அவள் நெதர்பீல்டுக்குச் செல்வதும், பெம்பர்லி கிடைப்பதும் இதை உறுதி செய்கிறது.
கிருஷ்ணரின் பொய் துரியோதனனின் தீமையை அழித்தது.
பொய்மையின் நிலையில், பொய் உண்மைக்கு ஒரு அத்தியாவசியமான கருவி ஆகும்.
ஹிட்லருக்கு ஜெர்மானிய இராணுவ அதிகாரி செய்த துரோகம், பாரிஸ் நகரத்தை நாகரிகத்திற்கு பாதுகாத்தது.
ஸ்ரீ அரவிந்தரின் தகப்பனார், தன் குழந்தைகளிடம் இந்தியக் கலாச்சாரம் அறவே இருக்கக் கூடாது என்பதற்கு முயற்சிகள் எடுத்தார். இதன் விளைவு, பகவான் ஆங்கிலேய வளர்ப்பு முறையை முழுவதும் கை விட்டு இந்தியக் கலாச்சாரத்தை ஆதரிப்பவராகத் திகழ்ந்தார்.
பல நூற்றாண்டுகளாக இருளில் இருந்த இவ்வுலகம் கிரேக்கர்களின் தனிநபரின் மனத்தின் சிறப்பை, பரந்த உணர்வுரீதியாக முறைப்படுத்தப்பட்டுள்ள சட்டத்தின் சமூக சக்திக்குள் நுழைந்து, ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டிலுமுள்ள மக்களுடைய சுயமாகச் சிந்திக்கும் திறனாக மீண்டும் வெளி வந்து புரட்சியாக, மறுமலர்ச்சியாக, விஞ்ஞானமாக பிறப்பெடுத்தது.
பிரபுத்துவத்தின் துரோகம் பிரெஞ்சுப் புரட்சியை உருவாக்கியது.
அடிமைகளுக்கு துரோகம் செய்த ஐரோப்பாவின் பிரபுத்துவம், அமெரிக்காவை உருவாக்கியது.
அறிவாகிய ஞானத்திற்கு துரோகம் இழைத்த இந்தியப் பிராமணர்கள், அதை பெர்ஷியா வழியாக ஐரோப்பாவிற்கும், கிரேக்க நாட்டிற்கும் அனுப்பினர்.

இந்திய ஞானத்தைப் பெற்ற பெர்ஷியா, இந்தியா மீது படையெடுத்து அதை ஐநூறு வருடங்கள் ஆண்டது. இந்தியக் கலாச்சாரத்திற்கு துரோகம் இழைத்து ஆங்கிலேயர்கள் ஆங்கிலத்தை இந்தியாவின் மேல் திணித்தது, அதுவே அவர்களை வெளியேற்றும் கருவியாக மாறி, உலகளாவிய அரசியல் வாழ்வில் இந்தியா சுலபமாக நுழைய வழி வகுத்தது.

லேடி காதரினிடம் பொய்யான வதந்தியைக் கிளப்பி ஷார்லெட், எலிசபெத்திற்கு செய்த அற்பத்தனமான துரோகம், இரண்டாவது திருமண வேண்டுகோள் விடுக்க டார்சியை நேரடியாக எலிசபெத்திடம் வரவழைத்தது.

தாழ்ந்த ஜீவியத்தின் தலைகீழான விசுவாசம்தான் நம்பிக்கைத் துரோகம்.

மறைபொருளாக விளங்கும் நிலையில் துரோகம் என்பது மாந்த்ரீகமாகும். அதற்கு பலியாகுபவரை அது அழித்து விடும். ஒரு வேளை அவர் அதிலிருந்து பிழைத்துக் கொண்டால், அவர் தன்னுடைய வாழ்க்கையின் மறைபொருள் நிலைகளை வெற்றிகொள்வார். யார் வேண்டுமென்றாலும் மற்றவருக்கு விசுவாசமாக இருக்கலாம், அல்லது துரோகம் செய்யலாம். பலியானவர் ஆன்மா மூலம் செயல்படும்பொழுது, பலன்களைத் தீர்மானிப்பவர் அவராகவே இருப்பார்.

After the first fortnight or three weeks of her absence, health, good-humour and cheerfulness began to reappear at Longbourn. Everything wore a happier aspect. The families who had been in town for the winter came back again, and summer finery and summer engagements arose. Mrs. Bennet was restored to her usual querulous serenity; and by the middle of June Kitty was so much recovered as to be able to enter Meryton without tears: an event of such happy promise as to make Elizabeth hope that by the following Christmas she might be so tolerably reasonable as not to mention an officer above once a day, unless, by some cruel and malicious arrangement at the War Office, another regiment should be quartered in Meryton.

அவள் சென்று பதினைந்து நாட்களுக்குப் பிறகோ அல்லது மூன்று வாரங்களுக்குப் பிறகோ, லாங்பர்னில் உள்ளவர்கள் சகஜ நிலைமைக்குத் திரும்பினர். எல்லாவற்றிலும் சந்தோஷம் தோன்றியது. குளிர் காலத்திற்காக லண்டன் சென்றிருந்த குடும்பங்கள் மீண்டும் திரும்பினர், கோடைக்கால உடைகளும், கோடைக்கால நிகழ்ச்சிகளும் தோன்ற ஆரம்பித்தன. திருமதி. பென்னட் தன்னுடைய வழக்கமான சிடுசிடுவென்று குறை கூறிக் கொண்டிருக்கும் தன்மைக்குத் திரும்பினாள், கிட்டியும் ஜுன் மாத இடையில், மெரிடனிற்கு அழாமல் செல்லும் அளவிற்கு தேறினாள். இவ்வாறு அவள் மாறியது, வேறு ஏதாவது கொடூரமான அல்லது மற்றவர்களுக்குத் தீங்கிழைக்கும் எண்ணத்தில் படை அலுவலகம் படைப்பிரிவை பிரைட்டனுக்கு அனுப்பாமல் இருந்தால், கிட்டி வருகின்ற கிருஸ்துமஸ் விழாவிற்குள் ஒரு அதிகாரியைப் பற்றி ஒரு நாளில், ஒரு தடவைக்குமேல் பேசாமல் இருக்கும் அளவிற்கு தெளிவு பெற்று விடுவாள் என்று எலிசபெத்திற்கு தோன்றியது.

49. Longbourn is a cheerful home. After three weeks of dullness, good humour is revived.
    லாங்பர்ன் குடும்பம் சந்தோஷமான குடும்பமாக இருக்கிறது. மூன்று வாரங்கள் சோர்வாக இருந்த குடும்பம் நல்ல மனநிலைக்கு மீண்டும் திரும்பியது.
50. Everything is having a happier aspect in anticipation of the Pemberley visit.
    பெம்பர்லி விஜயத்தை எதிர்நோக்கி, அனைத்தும் மகிழ்ச்சியுடன் இருக்கின்றன.
51. Pemberley enters the scheme of things at the mention of Derbyshire.
    டர்பிஷயர் என்று குறிப்பிடும்பொழுதே பெம்பர்லி விஷயங்களின் ஏற்பாட்டில் நுழைந்து விடுகிறது.
52. Lambton is the link in space.
    இணைக்கும் இடமாக லாம்ப்டன் உள்ளது.
53. Mrs. Gardiner is the link in human relationship.
    மனித உறவுகளில் திருமதி கார்டினர் இணைக்கும் பாலமாக விளங்குகிறாள்.
54. Wickham is the link in interest.
    அக்கறையில் விக்காம் இணைப்பவனாக இருக்கிறான்.
55. The transition from one act to another greater act takes place via the subtle plane.
    ஒரு செயல் மற்றொரு பெரிய செயலுக்கு மாறுவது, சூட்சும நிலை வழியாக நடைபெறுகிறது.
56. It requires links of all descriptions. Without them it will remain incomplete. The love of Jane for Bingley is one of a few weeks. There were no such links to complete it. Those links were created by Darcy and Elizabeth later.
    இதற்கு எல்லா வித இணைப்புகளும் தேவைப்படும். அவைகள் இல்லாமல் இது பூர்த்தி ஆகாது. ஜேன்-பிங்கிலி காதல் உருவானது சில வாரங்களில்தான். அதை பூர்த்தி செய்ய அது போன்ற இணைப்புகள் இல்லை. டார்சியாலும் எலிசபெத்தாலும் அந்த இணைப்புகள் பின்னர் உருவாக்கப்பட்டன.
57. "After three weeks of her absence health, good humour and cheerfulness began to reappear in Longbourn".
    What ebbs after a time flows, sometimes totally disappears.
    She was away for full three months.
    The absence of good humour, cheerfulness is due to Jane's disappointment.
    The approaching visit to Pemberley announces as the reappearance of cheerfulness.

In a dry riverbed freshes show a few days before by the subsoil filling up.
Freshes never can appear suddenly. It is a gradual process.
No war suddenly bursts out. There are a hundred ways in which it announces.
The post-war rationing of food grains was severe. Black marketeers were rampant. Rajaji came to power. One morning he announced on the radio that rationing was abolished. The country was aghast because all rice will rise in prices. **The black market prices will legally come to stay.** He said he did it by intuition. Observing the arrivals in the market acutely, will reveal the trend of supply. He was right. All other states soon followed suit.
Such an observation can predict the terrorist attacks, outburst of infectious fevers, price trends in the stock market. Ants and animals know the advent of rain and earthquake like that. Women are totally sensitive to a Man's interest in another woman. Silverbridge asked his sister to meet Lady Mabel and quoted the attitude of his father. To her questions he only said his father desired it. At once Mary declared he was engaged to Lady Mabel. The story is not written in a fashion for us to sense the trend of events. Still, with greater acuteness of perception we can slowly unravel the course of events in their antecedents. **The most important clues are negative.** Mrs. Bennet's uncalled for abuse of Darcy at Netherfield ball, if we know the rule of the beneficiary's offence to the benefactor, reveals she was responding to the future proposal of Darcy.
The police state of USSR was an inheritance from the Tsars. Peter the Great was a tyrant. Ivan was Ivan the Terrible. The emotional nature of the Russians demand hard cruel treatment to emerge out in freedom to keep up with the progressive world outside.
"அவள் சென்று மூன்று வாரங்களுக்குப் பிறகு உடல் ஆரோக்கியம், நல்ல மனநிலை, சந்தோஷம், மீண்டும் லாங்பர்னில் திரும்பின."
தளர்வுற்று இருப்பது சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் அதன் ஓட்டத்தை ஆரம்பித்து விடும், சில சமயங்களில் முழுவதுமாக மறைந்து விடும்.
அவள் மூன்று மாதங்களுக்கு வெளியே சென்றிருந்தாள்.
நல்ல மனநிலை, சந்தோஷம் இல்லாதது, ஜேனுடைய ஏமாற்றத்தால் ஏற்பட்டது.
பெம்பர்லி விஜயம் சந்தோஷத்தை மீண்டும் கொண்டு வந்தது.
காய்ந்து இருக்கும் நதிப் படுகையில் நீர்ப்பெருக்கம் வரப் போவது, நிலத்தடி நீர் பெருகுவதிலிருந்து தெரியும்.
நீர்ப்பெருக்கு திடீரென ஏற்படாது. அது படிப்படியாக நிகழும்.
எந்தப் போரும் திடீரென எழாது. நூறு வழிகளில் அதை அறிவிக்கும்.
போருக்குப் பிறகு உணவுப் பஞ்சம் கடுமையாக எழுந்தது. கள்ளச் சந்தைக்காரர்கள் பெருகினர். இராஜாஜி ஆட்சிக்கு வந்தார். ஒரு நாள் அவர் உணவு பங்கீட்டு முறையை ரத்து செய்வதாக வானொலி மூலமாக அறிவித்தார். நாடே திகைத்து நின்றது. ஏனெனில் அரிசி விலை உயரும், **கள்ளச் சந்தை விலைகள் நியாயமானதாக்கப்படும்.** உள்ளுணர்வால் அவ்வாறு செய்ததாக அவர் கூறினார். சந்தையில் பொருட்கள் வருவதை கூர்ந்து கவனித்தால் வினியோகத்தின் போக்கு தெரியும். அவர் செய்தது சரியாக இருந்தது. மற்ற மாநிலங்களும் இதைப் பின் பற்றின.
இது போன்ற கூர்ந்த கவனிப்பு தீவிரவாதத் தாக்குதல்களையும், தொற்று நோய் பரவப் போவதையும், பங்குச் சந்தை நிலவரம் பற்றியும் முன்கூட்டியே அறிவிக்கும். எறும்புகளுக்கும், விலங்குகளுக்கும் முன் கூட்டியே மழை மற்றும் பூகம்பம் வரப்போவது தெரியும். ஆண் மற்றொரு பெண்ணை நாடுகிறான் என்பது உணர்வுரீதியாக ஒரு பெண்ணுக்குத் தெரியும். சில்வர்ப்ரிட்ஜ், தன்னுடைய தந்தையின் மனப்பான்மையை எடுத்துச் சொல்லி தன்னுடைய சகோதரியிடம் லேடி மாபெல்-ஐ சந்திக்கும்படி கூறுகிறான். அவள் கேட்கும் கேள்விகளுக்கு, தந்தையின் ஆசை அது என்கிறான். உடனடியாக மேரி, அவனுக்கு லேடி மாபெல்லுடன் திருமணம் நிச்சயமாகி விட்டதாகக் கூறுகிறாள். நிகழ்ச்சிகளின் போக்கு நமக்குப் புரியும் வண்ணம் கதை எழுதப்படவில்லை. இருப்பினும் புரிதலின் நேர்த்தியினால் நம்மால் முன்னால் நடந்ததை வைத்து நிகழ்ச்சிகளின் போக்கைப் புரிந்துகொள்ள முடியும். **முக்கியமான குறிப்புகள் எதிர்மறையாக உள்ளன.** நன்மை செய்பவருக்கு, பயன் பெற்றவர் செய்யும் அவமதிப்பின் விதிகளைப் பற்றி நாம் அறிந்து கொண்டால், நெதர்பீல்ட் நடனத்தில் டார்சியைப் பற்றி திருமதி பென்னட்டின் தேவையற்ற நிந்தனை, பின்னால் வரப் போகும் டார்சியின் திருமண வேண்டுகோளுக்கு அவள் மறுமொழி அளிக்கிறாள் என்பது புரியும்.
Tsar இடமிருந்து எழுந்ததுதான் அடக்குமுறை அரசான ரஷ்யா. Peter the Great கொடுங்கோலனாக இருந்தான். Ivan கொடூரமானவனாக இருந்தான். உணர்வுபூர்வமான ரஷ்ய மக்களுக்கு முன்னேறிக் கொண்டிருக்கும் வெளி உலகிற்கு ஈடு கொடுக்கும் வகையில் சுதந்திரம் கிடைக்க அவர்களை கடுமையாக நடத்த வேண்டியிருந்தது.

58. "Everything wore a happier aspect. Summer finery and engagements arose".
The whole village, the season, social movements celebrated Lydia's adventure.
Man in his short sightedness may mourn Lydia's unbridled behavior.
The society too may silently frown on it.
But Life is unfailing. It has invisible eyes to see. It celebrates.
What is catastrophe for the finite is release of energies for the infinite.

Man asks others to cooperate, his organization to obey not knowing he is the determinant. He alone is the determinant. Those who come along with him share the results, others become bystanders. Those who go out from inside are crushed out by life. Man cannot get out of a running vehicle. It is total ruin and destruction to come out of a flying plane. Still it is not possible to persuade Men to cooperate.

It is the birthright of Man to betray.

The child cannot desert its mother. The baby doing so perishes at once.
The hippies released the social energy.
Life energy is beyond.
Mental and spiritual energies are still beyond them.
Energy released by Darcy is evolutionary.
It acted through the narrow constricting grooves of society and personality.
The apparently vast results perceived are not the minimum possibilities but a trickle out of the original flood.
Man does not know Mother; nor does he know it is a spiritual privilege to know Her.
He does not see Sri Aurobindo is the Absolute, the Absolute in the relative.
When they are together the Absolute acts in our lives as the relative seeking the delight of creation, expressing Ananda in the material objects of the world. The material objects are more receptive than the human swabhava which is bound by its self-chosen organization.

"எல்லாவற்றிலும் சந்தோஷம் தோன்றியது. கோடைகால உடைகளும், கோடைகால நிகழ்ச்சிகளும் தோன்ற ஆரம்பித்தன."

கிராமம் முழுவதும், பருவகாலம் சமூக இயக்கங்கள் யாவும், லிடியாவின் சாகசத்தைக் கொண்டாடின.
லிடியாவின் கட்டவிழ்த்த நடத்தையைப் பார்த்து, குறுகிய நோக்குடையவர்கள் ஒரு வேளை வருத்தப்படலாம்.
சமூகமும் மௌனமாக அதைப் பார்த்து கோபம் அடையலாம்.
ஆனால் வாழ்க்கை என்றுமே தவறாது. அதற்கு கண்ணுக்குத் தெரியாத கண்கள் உண்டு. அது கொண்டாடும்.
அளவுடையதற்கு பேரழிவாக இருப்பது அனந்தத்திற்கு விடுவிக்கப்படும் சக்திகளாக இருக்கும்.
மனிதன் அவன்தான் தீர்மானிப்பவன் என்று தெரியாமல் மற்றவர்களை ஒத்துழைக்கும் படி கேட்கிறான், அவனுடைய நிறுவனம் கீழ்ப்படிய வேண்டும் என எதிர்பார்க்கிறான், அவன் மட்டுமே தீர்மானிப்பவன். அவனோடு உடன் வருபவர்கள் பலன்களைப் பகிர்ந்துகொள்கின்றனர், மற்றவர்கள் பார்வையாளராகின்றனர். உள்ளிருந்து வெளியே செல்பவர்கள் வாழ்க்கையால் நசுக்கப்படுகிறார்கள். ஓடும் வண்டியிலிருந்து மனிதன் இறங்க முடியாது, பறக்கும் விமானத்திலிருந்து கீழே இறங்குவது முழுமையான அழிவாக இருக்கும். அவ்வாறு இருந்தும் மனிதனை ஒத்துழைக்கச் செய்ய முடியவில்லை.

துரோகம் செய்வது மனிதனின் பிறப்புரிமை.

குழந்தை, தாயாரை கைவிட முடியாது. குழந்தை அவ்வாறு செய்தால் உடனடியாக அழிந்து போகும்.
சமூக சக்திகளை ஹிப்பிகள் விடுவித்தனர்.
வாழ்வின் சக்தி அப்பால் உள்ளது.
மனம் மற்றும் ஆன்மீகச் சக்திகள் அவைகளுக்கும் அப்பால் உள்ளன.
டார்சி விடுவித்த சக்தி பரிணாமத்திற்குரியது.
சமூகம் மற்றும் ஆளுமையின் இறுக்கமான குறுகிய பாதை வழியாக அது செயல்பட்டது.
அறிந்துணர்ந்து கொண்ட வெளிப்படையான பெரிய பலன்கள், குறைந்த பட்ச சாத்தியங்கள் அல்ல, ஆனால் பெரு வெள்ளத்தின் சிறு துளியாகும்.
மனிதனுக்கு அன்னையையும் தெரியாது, அன்னையைத் தெரிந்துகொள்வது ஆன்மீகச் சிறப்புரிமை என்பதும் தெரியாது.
ஸ்ரீ அரவிந்தரை பிரம்மம் என்று அவன் பார்ப்பதில்லை, பிரம்மத்திற்கு ஒப்பானவர் பகவான்.
அவர்கள் சேர்ந்து இருக்கும்பொழுது, பிரம்மம் நமது வாழ்வில் படைப்பின் ஆனந்தத்தை நாடுவது போலவும் உலகத்தின் ஜட பொருட்களில் ஆனந்தத்தை வெளியிடுவது போலவும் செயல்படுகிறது. ஜட பொருட்களுக்கு, சுயமாக தேர்ந்தெடுத்த அமைப்பிற்கு கட்டுப்பட்டு இருக்கும் மனித சுபாவத்தைக் காட்டிலும் அதிக ஏற்புத் திறன் உள்ளது.

59. "Mrs. Bennet was restored to querulous serenity."

A goal without a right endowment is never reached.
Its apparent attainment is a querulous serenity, as the monetary reforms attempted internationally.
Man attempting to solve human problems without making himself the centre will arrive at transitory precarious perches.
The Rishis realized that Life cannot be lived or handled with the Mind and shunned it.
It is a negative knowledge that without Supermind life cannot be under one's control.
The death of Greek civilization is a classical example for the law that life that stops growing is death.
The fall of the Roman Empire is another classical example of a new level of life demands a new power and a new organization.

The failure of Indian spirituality is a supreme lesson that the higher one rises, the stronger and wider the foundation needed.
The Russian experience tells us that emotional population needs violence to think.
The seafaring Britisher endowed with excess wool for export was ushered into trade which by their honour gave them an Empire. **Anachronic obstacles worshipped nationally not only made them lose the opportunity of founding a world government but points to dissolution under the seas.**
France, Italy, Spain, Germany each missed the bus for various reasons.
The Twentieth century drifted into scientific superstition in spite of the warnings of pollution, economic crisis, nuclear armaments, and terrorism, being fond of slavery – slavery to its own creation.
Mr. Bennet insisted on such an attitude with his daughter who pointed out to him the catastrophe but awoke to the reality when the blow struck him.
That much of human response is adequate or abundant for Grace to act through Darcy.
Such an awakening from inside can save the world by one Man's perfection. Such an awakening can only be spiritual universally.
Mr. Bennet was the worst of husbands which qualified him to awaken for a wider purpose. Today human smallness should awake thus.
"திருமதி பென்னட் தன்னுடைய வழக்கமான சிடுசிடுப்பிற்கும், குறை கூறும் தன்மைக்கும் திரும்பினாள்."
சரியான தகுதி இல்லாத இலக்கை அடையவே முடியாது.
அதனை அடைவதன் தோற்றம் சிடுசிடுப்பான அமைதி போன்றது. சர்வதேச அளவில் பொருளாதார சீர்திருத்தத்தை முயன்றதைப் போன்றது.
மனிதன் தன்னை மையமாக வைத்துக்கொள்ளாமல் மனித பிரச்சினைகளைத் தீர்க்க முயன்றால், அவன் நிலையற்ற அபாயகரமான உயரங்களைச் சென்றடைவான்.
வாழ்க்கையை மனத்தால் வாழவும் முடியாது அல்லது கையாளவும் முடியாது என்று உணர்ந்த ரிஷிகள் வாழ்வைத் தவிர்த்தனர்.
சத்திய ஜீவியமின்றி வாழ்க்கையை ஒருவரது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாது என்று நினைப்பது எதிர்மறையான அறிவாகும்.
வாழ்க்கை முன்னேறுவது நின்று விட்டால் அழிவு ஏற்படும் என்பதற்கு கிரேக்க நாகரிகம் அழிந்தது ஒரு சிறந்த உதாரணம் ஆகும்.
புதிய வாழ்க்கை நிலை புதிய அதிகாரத்தையும் புதிய அமைப்பையும் எதிர்பார்க்கும் என்பதற்கு ரோம் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி சிறந்த உதாரணமாகும்.
ஒன்று உயரும்பொழுது அதற்கு வலிமையான அகன்ற அஸ்திவாரம் தேவைப்படும் என்பதற்கு இந்திய ஆன்மீகம் தோல்வி அடைந்தது பெரிய படிப்பினை ஆகும்.
உணர்ச்சிகரமான மக்களுக்கு சிந்தனை வளர, வன்முறை தேவைப்படுகிறது என்பதை ரஷ்யாவின் அனுபவம் நமக்குக் கூறுகிறது.
கடல் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேயரிடம் ஏற்றுமதி செய்வதற்கு கம்பளி அதிகமாக இருந்ததால் அவர்கள் வாணிபத்தில் இறங்கினர், அது அவர்களுக்கு ஒரு சாம்ராஜ்யத்தையே அளித்தது. **காலத்திற்குப் பொருந்தாத தடைகளை நாடு முழுவதும் கொண்டாடி வந்ததால், அது உலக அரசாங்கத்தை நிறுவும் வாய்ப்பினை மட்டும் அவர்களை இழக்கச் செய்யவில்லை, கடலில் மூழ்கப் போவதையும் சுட்டிக் காட்டுகிறது.**
பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், ஜெர்மனி ஆகிய நாடுகள், ஒவ்வொன்றும் வெவ்வேறு காரணங்களுக்காக வாய்ப்பினைத் தவற விட்டன.
சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் கேடு, பொருளாதார நெருக்கடி, அணு ஆயுதங்கள், தீவிரவாதம், இவற்றின் அபாய எச்சரிக்கைகள் இருந்தும் இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞான மூடநம்பிக்கைகளுக்குத் தாவியது. அடிமைத்தனம் பிடித்திருந்ததால் அதனுடைய கண்டுபிடிப்பிற்கே அது அடிமையானது.
திரு பென்னட், பேராபத்தைப் பற்றி அவருக்குச் சுட்டிக் காட்டிய அவருடைய மகளிடம் இது போன்ற மனப்பான்மையை வலியுறுத்தினார், ஆனால் பேரிழப்பு நிகழ்ந்தபொழுது உண்மை நிலையைப் புரிந்து கொண்டார்.
இந்த அளவு மனிதனின் பதில், டார்சி மூலம் அருள் செயல்படுவதற்குப் போதுமானது.
ஒரு மனிதனின் பூரணத்துவம் இது போன்ற அக விழிப்பினால் உலகத்தையே காப்பாற்றும். இது போன்ற விழிப்பு உலகளாவிய அளவில் ஆன்மீகமாக மட்டுமே இருக்க முடியும்.
திரு பென்னட் மிகவும் மோசமான கணவர் ஆவார். அதுவே அவரை பெரிய நோக்கத்திற்குத் தகுதி உடையவராக்கியது. இன்று மனிதனின் சிறுமை அவ்வாறு விழிப்பு அடைய வேண்டும்.

60. "By some cruel malicious arrangement at the war office, another regiment should be quartered in Meryton".
Jane Austen is aware of the character of life that acts on its own inspiration completely disregarding the Herculean labours of Man.
The perfection of the part is no perfection.
What is not sanctioned by Grace cannot be achieved by human ingenuity.

Non-violence can succeed up to the last point, but the real character of life, violence, will have its say.
The labours of the Five Year Plans are laudable, though based on ignorance. It has basically stirred the population which has taken the development into its own hands – the unconscious awakening of the Individual.
Present awakening is for the need for a decent comfortable living.
Those who already enjoy that standard must awaken to the inner need, the need of being a Man of value, honour, conscience, truthfulness, charity, service, human kindness to humans, not to animals.
Evolution does not proceed on those lines at that speed.
The slow deliberate delight of Nature is no longer imperative.
Human choice has come into its own.
Evolution to Supermind offers itself as an option to human choice.
It is not to be exercised only in the exalted moments of inner concentration.
It has to be exercised at all moments, in all small affairs.
One can awaken to prosperity, peace, inner mental calm, discovery of Romance in married life but he is free to awaken to cosmic consciousness, the supramental Marvel.
To have that knowledge is grace; to act on it is Supergrace.
Elizabeth had that grace; she acted to free herself of the malice.
Darcy had that grace by abuse; he acted enough to change them both.
Mrs. Bennet was impervious.
Mr. Bennet took one step when tragedy compelled his indolence.
Jane was oblivious of the outer sense perception or inner intimations.
The French Revolution could have made France the leader of the world.
“வேறு ஏதாவது கொடுமையான ஏற்பாட்டின் மூலம், மற்றவர்களுக்குத் தீங்கிழைக்கும் எண்ணத்தில் போர் அலுவலகம் வேறொரு படைப்பிரிவை பிரைட்டனுக்கு அனுப்பினால்.”
மனிதனின் இமாலய உழைப்புகளை முழுவதுமாக மதிக்காமல், தன்னுடைய சுய ஆர்வத்திலேயே செயல்படும் வாழ்க்கையின் சுபாவத்தைப்பற்றி ஜேன் ஆஸ்டினுக்கு தெரிந்திருந்தது.
பகுதியின் பூரணத்துவம் பூரணத்துவம் அல்ல.
அருள் அனுமதிக்காததை மனிதனின் திறமை சாதிக்காது.
இறுதி நிலைவரை அஹிம்சை வெற்றி பெறும், ஆனால் வாழ்க்கையின் உண்மையான குணமான வன்முறை தீர்மானம் செய்யும்.
அறியாமையின் அடிப்படையில் இருந்தாலும் ஐந்தாண்டு திட்டங்களின் உழைப்பு போற்றுதற்குரியது.
முன்னேற்றத் திட்டங்களை தங்களுடைய கைகளில் எடுத்துக்கொண்ட மக்களை தட்டி எழுப்பியது, இது தனி நபரின் தன்னினைவில்லாத விழிப்புணர்ச்சியாக உள்ளது.
இன்றைய விழிப்புணர்வு ஒரு நல்ல சுகமான வாழ்க்கைக்கான தேவை ஆகும்.
அந்த தரத்தை ஏற்கனவே அனுபவித்துக் கொண்டு இருப்பவர்கள் அகத்தின் தேவைக்கு விழிப்படைய வேண்டும். பண்பு, மரியாதை, மனசாட்சி, உண்மை, தர்மம், சேவை புரியும் தன்மை, விலங்கிடம் அல்லாமல் மனிதனிடம் காட்ட வேண்டிய மனித அன்பு ஆகியவைகளை உடையவர்களாக இருக்க வேண்டும்.
அந்த வேகத்தில் அந்த வழிகளில் பரிணாமம் மேலே செல்வதில்லை.
மெதுவாக ஆழ்ந்து சிந்தித்து எழும் இயற்கையின் ஆனந்தம் இனி அவசியமில்லை.
மனித விருப்பம் தானாகவே செயல்பட ஆரம்பித்து விட்டது.
மனித விருப்பத்திற்கு மாற்றாக சத்திய ஜீவியத்திற்கு முன்னேறுவதற்கு, அது தன்னையே வழங்குகிறது.
அகம் குவிந்திருக்கும் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் மட்டுமே இதைப் பயன்படுத்த வேண்டும் என்பது கிடையாது.
இது எல்லா தருணங்களிலும், எல்லா சிறிய விஷயங்களிலும் செலுத்தப்பட வேண்டும்.
ஒருவருக்கு செல்வ வளம், அமைதி, அக மன அமைதி, திருமண வாழ்க்கையில் காதலை கண்டு பிடிப்பது போன்றவைகளுக்கு விழிப்பு ஏற்படலாம், ஆனால் அவருக்கு சத்தியஜீவிய அற்புதமான பிரபஞ்ச ஜீவியத்திற்கும் விழிப்பு பெறும் சுதந்திரம் உண்டு.
அந்த அறிவு இருப்பது அருள்; அதன் மூலம் செயல்படுவது பேரருள்.
எலிசபெத்திற்கு அந்த அருள் இருந்தது; தீமையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள அவள் செயல்பட்டாள்.
நிந்தனையின் மூலம் டார்சிக்கு அந்த அருள் கிடைத்தது; இரண்டையும் மாற்றுவதற்கு தேவையான அளவிற்கு அவன் செயல்பட்டான்.
திருமதி பென்னட் அணுக முடியாதவளாக இருந்தாள்.
ஆபத்து திரு பென்னட்டின் சோம்பேறித்தனத்தை தட்டி எழுப்பியபொழுது அவர் ஒரு முயற்சி எடுத்தார்.
புறப் புலன்களின் புரிதலையும், அகத்தின் குறிப்புகளையும்பற்றி ஜேன் அறியாதவளாக இருந்தாள்,
பிரெஞ்சுப் புரட்சி பிரான்ஸை உலகத்தின் தலைமையாக்கி இருக்க முடியும்.

The time fixed for the beginning of their northern tour was now fast approaching, and a fortnight only was wanting of it, when a letter arrived from Mrs. Gardiner, which at once delayed its commencement and curtailed its extent. Mr. Gardiner would be prevented by business from setting out till a fortnight later in July, and must be in London again within a month; and as that left too short a period for them to go so far, and see so much as they had proposed, or at least to see it with the leisure and comfort they had built on, they were obliged to give up the Lakes, and substitute a more contracted tour, and, according to the present plan, were to go no farther northward than Derbyshire. In that county there was enough to be seen to occupy the chief of their three weeks; and to Mrs. Gardiner it had a peculiarly strong attraction. The town where she had formerly passed some years of her life, and where they were now to spend a few days, was probably as great an object of her curiosity as all the celebrated beauties of Matlock, Chatsworth, Dovedale, or the Peak.

வடக்கே செல்லவிருந்த சுற்றுலாவிற்காக குறிப்பிட்டிருந்த நேரம் விரைவில் நெருங்கிக் கொண்டிருந்தது. எஞ்சி இரண்டு வாரங்கள் இருக்கையில் அவர்கள் செல்வது தாமதமாகப் போவதையும், செல்லும் எல்லையும் குறைவதைக் குறித்து திருமதி. கார்டினரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. இரண்டு வாரங்கள் கழித்து, ஜூலை மாத இறுதியில்தான் கிளம்ப முடியும் என்ற அளவிற்கு ஏதோ வேலை வந்து விட்டது என்றும், அதன் பிறகு ஒரு மாதத்திற்குள்ளாகவே மறுபடியும் லண்டன் போக வேண்டியிருக்கும் என்பதால் அவர்கள் முடிவு செய்தபடி அதிக தூரம் செல்ல இயலாது என்றும், அதிகம் பார்க்க முடியாது என்றும், அப்படி பார்த்தாலும், பார்க்க நேர்ந்தாலும், நிதானமாகவும், சௌகரியமாகவும், ஓய்வாகவும் பார்க்க முடியாது என்பதால், லேக்ஸ்-ஐ விட்டுவிட்டு, அதற்கு பதிலாக வேறொரு குறுகிய கால சுற்றுலா பயணம் செல்ல முடிவு செய்திருப்பதாகக் கூறப்பட்டிருந்தது. இப்பொழுதுள்ள திட்டத்தின்படி அவர்கள் டெர்பிஷயரை விட்டு அதிக தூரம் வடக்கே செல்ல எண்ணம் இல்லை. அந்தப் பகுதியில் மூன்று வாரங்களுக்கு வேண்டிய அளவிற்கு அவர்களுக்கு அங்கு பார்ப்பதற்கு நிறைய காட்சிகள் இருந்தன. திருமதி.கார்டினருக்கு அந்த இடத்தின் மேல் ஒரு அசாதாரணமான அதிக ஈர்ப்பு இருந்தது. அவ்வூரில் அவள் முன்பு சில வருடங்கள் வாழ்ந்திருக்கிறாள், இப்பொழுது சில நாட்களை அங்கு செலவழிக்கப் போகின்றனர். அங்கு செல்வதில் எவ்வளவு ஆர்வம் இருந்ததோ அவ்வளவு ஆர்வம் இப்பிரபலமான அழகிய இடங்களான மாட்லாக், சாட்ஸ்வொர்த், டொவ்டேல் அல்லது பீக் ஆகிய இடங்களைப் பார்ப்பதற்கும் இருந்தது.

61. Man seeks Wickham, Life gives Darcy. Man grumbles to receive Darcy in place of Wickham.
மனிதன் விக்காமை நாடுகிறான், வாழ்க்கை டார்சியை அளிக்கிறது. விக்காமிற்கு பதில் டார்சியை மனிதன் அதிருப்தியோடு ஏற்றுக்கொள்கிறான்.
62. Later she asks how she could be silly about the Lakes.
லேக்ஸ்-ஐ பற்றி எவ்வாறு அவள் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியும் என பின்னால் அவள் கேட்கிறாள்.
63. We know Mr. Gardiner's work is rescheduled. That changes Elizabeth's plans.
திரு கார்டினரின் வேலையில் மாற்றம் வந்ததால், எலிசபெத்தின் திட்டங்கள் மாறின.
64. We do not know Elizabeth's changed attitude changed Mr. Gardiner's work.
எலிசபெத்தின் மாறிய மனோபாவம் திரு கார்டினரின் வேலையை மாற்றியதா என்பது நமக்குத் தெரியாது.
65. It will be interesting to trace it.
அதனை ஆராய்வது சுவாரசியமாக இருக்கும்.
66. To be able to see the indirect connection between Mrs. Gardiner's Lambton interest, Darcy's coming a day early, Mr. Gardiner's sudden change in schedule will show the determinism of life.
திருமதி கார்டினருக்கு லாம்ப்டனில் இருந்த ஆர்வம், டார்சி ஒரு நாள் முன்னதாகவே வருவது, திரு கார்டினரின் திட்டத்தில் திடீர் மாற்றம், இவற்றினிடையே உள்ள மறைமுகமான தொடர்பைப் பார்க்க முடிவது, வாழ்க்கையின் நிர்ணயத்தைக் காட்டும்.
67. The town of erstwhile residence was a great object of curiosity to Mrs. Gardiner.
திருமதி கார்டினருக்கு தான் முன்னால் வாழ்ந்த இடம் மிகவும் ஆர்வத்திற்குரிய விஷயமாக இருந்தது.
68. The curiosity of Darcy to know wherefrom the light issued in the eyes of Elizabeth is great.
எலிசபெத்தின் கண்களின் ஒளி எங்கிருந்து வருகிறது என்று தெரிந்துகொள்ளும் டார்சியின் ஆவல், மிக உயர்ந்தது.
69. Charlottes' curiosity to know why Darcy came to her house was inexplicable.
டார்சி ஏன் தன்னுடைய வீட்டிற்கு வந்தான் என்று தெரிந்துகொள்ளும் ஷார்லெட்டின் ஆவல் விவரிக்க முடியாதது.
70. Elizabeth had, of course, the curiosity to steal some petrified spars from Derbyshire without Darcy knowing.
டர்பிஷயரிலிருந்து டார்சிக்குத் தெரியாமல் அபூர்வமான கற்களை திருடும் ஆர்வம் எலிசபெத்திற்கு இருந்தது.
71. We see these curiosities in isolation.
இந்த ஆர்வங்களை நாம் தனித்தனியாகப் பார்க்கிறோம்.
72. All of them are connected behind the perceived movements.
அறிந்துணர்ந்திருந்த இயக்கங்களின் பின்னால் அவை எல்லாம் இணைக்கப்பட்டுள்ளன.

73. There the explanation sits awaiting to be discovered.
    விளக்கங்கள், தம்மைக் கண்டுபிடிப்பதற்காக காத்துக் கொண்டிருக்கின்றன.
74. All movements of human energies can thus be reduced not only to curiosity but to all human faculties – they are attitudes, motives, urges, aspiration and a host of things.
    மனித சக்திகளின் அனைத்து இயக்கங்களும் ஆர்வத்திற்குள் மட்டும் அல்லாது மனப்பான்மைகள், நோக்கங்கள், உந்துதல்கள், ஆர்வம் போன்ற அனைத்து மனிதத் திறமைகளுக்குள்ளும் அடங்கும்.
75. Enter through any, you will arrive at the same centre behind.
    எந்த வழியாக நுழைந்தாலும், அதே இடத்திற்குப் பின்னர் வந்து சேருவோம்.
76. "at once delayed its commencement and curtailed its extent".
    The delay goes with the curtailing.
    A delay can be accompanied by extension.
    Jane's visit to dinner became a stay and made them depart altogether.
    Jane's letter to Lambton was delayed cruelly and cancelled the tour.
    Delay is the movement that maintains the equilibrium.
    Delay at one stage can be to hasten a result at another stage.
    Jane's opportunity was cruelly delayed as she could not marry without the coast for Elizabeth cleared, as she was the fountainhead of energy for Jane.
    Hasten slowly is the wisdom of life.
    Speed decides the goal, direction helps, but attitude decides everything.
    One using the wisdom of life can hasten slowly to death by his attitude.
    Attitude accomplishes.
    Charlotte had an excellent attitude of good will. Unfortunately it had a mixture of petulant ill-will.
    Of the various definitions of wisdom is one that says the capacity not to communicate on his own the gathering Light inside is wisdom.
    We see it in small events, as Darcy's intention to search for Lydia.
    Vivekananda chose to speak to Sri Aurobindo silently in the subtle plane about Supermind.
    Sri Aurobindo did not share his ultimate knowledge even with Mother.
    To refuse to express wisdom is to convert it into power.
    Men who do not voice their grievances are inwardly occupied by them.
    Not to cherish them inwardly is death knell to them in consciousness.
    Man does not evaluate himself by the opportunities knocking on his door, but compares himself with the crowd of non-achievers.
    Man is finite; his spirit is infinite.
    Delay is in Time.
    Delay in every sense is divine.
    Delay accomplishes more than haste. Delay is divine haste.
    "சுற்றுப் பயணம் செல்வது தாமதமாகப் போகிறது, செல்லும் தூரம் குறையப் போகிறது."
    தாமதம் குறைக்கப்படுவதுடன் சேர்ந்து வருகிறது.
    தாமதம் விரிவுபடுத்துவதுடன் சேர்ந்து வரலாம்.
    விருந்துக்கு ஜேன் சென்று அங்கு தங்கும்படி ஆனது, அவர்கள் அங்கிருந்து நிரந்தரமாகக் கிளம்பும்படி மாறியது.
    லாம்ப்டனுக்கு ஜேன் எழுதிய கடிதம் மிகவும் தாமதமானதால் பிரயாணம் ரத்து செய்யப்பட்டது.
    சமநிலையைப் பாதுகாக்கும் இயக்கம் தாமதம் ஆகும்.
    ஒரு நிலையில் ஏற்படும் தாமதம், மற்றொரு நிலையில் பலனை துரிதப்படுத்தும்.
    ஜேனுடைய சக்தியின் உற்பத்தி ஸ்தானமாக எலிசபெத் விளங்கியதால், அவளுடைய விஷயம் நிறைவேறாமல் ஜேன் திருமணம் செய்துகொள்ள முடியாது என்பதால் ஜேனுடைய வாய்ப்பு மிகவும் தாமதமாயிற்று.
    நிதானமாக நடப்பதே வாழ்வின் அறிவுடமையாகும்.
    இலக்கை வேகம் முடிவு செய்யும், திசை உதவி புரியும், ஆனால் மனப்பான்மையே எல்லாவற்றையும் தீர்மானிக்கும்.
    வாழ்வின் அறிவுடமையை ஒருவர் ஏற்று நடந்தால் அவருடைய மனோபாவம் அவரது அழிவைத் தாமதப்படுத்தும்.
    மனோபாவம் சாதிக்கும்.
    நல்லெண்ணத்தின் சிறப்பான மனோபாவம் ஷார்லெட்டிடம் இருந்தது. துரதிர்ஷ்டவசமாக அது துடுக்கான கெட்ட எண்ணத்துடன் கலந்து இருந்தது.

அறிவின் பல விளக்கங்களில் ஒன்று, 'நமக்குள் உருவாகும் ஒளியை நாமாகவே வெளியே சொல்லாமல் இருப்பதற்கான திறன்' என்பதாகும்.
லிடியாவைத் தேடும் எண்ணத்தில் டார்சிக்கு இருந்தது போல், சிறு நிகழ்வுகளில் நாம் இதனைப் பார்க்கலாம்.
சுவாமி விவேகானந்தர், சத்திய ஜீவியத்தைப் பற்றி சூட்சும நிலையில் ஸ்ரீஅரவிந்தரிடம் பேசினார்.
ஸ்ரீ அரவிந்தர் தன்னுடைய முடிவான ஞானத்தை அன்னையிடம்கூட பகிர்ந்து கொள்ளவில்லை.
அறிவை வெளிப்படுத்த மறுப்பது, அதனை சக்தியாக மாற்றுவதற்குத்தான்.
அவனுடைய வருத்தங்களை வெளியில் சொல்லாமல் இருக்கும் மனிதன் உள்ளுக்குள் அதை பற்றி எந்நேரமும் நினைத்துக் கொண்டிருப்பான்.
அவற்றைப் பற்றி நினைக்காமல் இருப்பது, ஒருவருக்கு அவரது ஜீவியத்தில் உயிர் போவது போலிருக்கும்.
வாய்ப்புகள் தன்னைத் தேடி வருவதை வைத்து மனிதன் தன்னை கணித்துக்கொள்ள மாட்டான், ஆனால் சாதிக்காதவர்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வான்.
மனிதன் அந்தமானவன்; அவனுடைய ஆன்மா அனந்தமானது.
தாமதம் காலத்தில் உள்ளது.
எல்லா விதத்திலும் தாமதம் தெய்வீகமானது.
அவசரத்தைவிட தாமதம் அதிகமாகச் சாதிக்கும். தாமதம் தெய்வீக அவசரமாகும்.

77. "the leisure and comfort built on" – Mrs. Gardiner's letter to Elizabeth.
Leisure is the essence of civilization.
Leisure in Time is Divine in supreme action.
Comfort enables leisure to be enjoyed.
Mother gave leisure and comfort to Man to seek god.
Culture in values express in Time and Space as leisure and comfort.
Leisure is the absence of Time compelling Man to act fruitlessly.
Today society is advanced and endowed enough to offer Leisure and comfort to all, if they commission the higher organized forces of itself.
Mother saw this Truth in 1920 and offered it to sadhaks.
Companies doing their work by the highest forces available organized integrally can support ten times their present employees in comfort.
Families that have this knowledge and can act on it can support ten times its number in rich leisure and higher comfort.
Organisations that can exercise their higher Minds can create ideas, strategies, attitudes, social skills that will serve this purpose.
Lands and factories produce grains and products.
Leisure and comfort produce culture and values.
The Jnani frowned on work.
The Bhakta loved to serve God in Man.
To the karmayogi, work is worship.
Work must be done in the highest plane of consciousness organized with spirit as the centre. The rest is drudgery. Today drudgery is the fashionable ideal of modern life. Their demands for higher leisure belie their fashion. To mistake leisure for idleness is mental resourcefulness.
Leisure and comfort in a family raises affection to the level of love.
Technological innovation is welcome for its usefulness; but seeking it for its sake is not the best use of one's energy or time.
Leisure and comfort will generate its own technology out of the saturated energies of Man not seeking work.
"நாம் நினைத்தபடி ஓய்வாகவும், சௌகரியமாகவும்" - எலிசபெத்திற்கு திருமதி கார்டினர் எழுதும் கடிதம்.
நாகரிகத்தின் சாரம் ஓய்வு ஆகும்.
ஓய்வு நேரம் இறைவன் சிறப்பாக செயல்படும் நேரமாகும்.
சௌகரியங்கள் ஓய்வு நேரத்தை அனுபவிக்க உதவும்.
மனிதன் கடவுளை நாடுவதற்காக ஓய்வையும் சௌகரியங்களையும் அன்னை தருகிறார்.
பண்புகளின் நாகரிகம் காலத்திலும், இடத்திலும், ஓய்வாகவும், சௌகரியமாகவும் வெளிப்படுகிறது.
நேரத்தின் சிந்தனை இல்லாமல் ஓய்வு நேரங்கள், மனிதனை உபயோகமாகச் செயல்பட வைக்கும்.
சமூகம் அதனுடைய உயர்ந்த முறைப்படுத்தப்பட்டுள்ள சக்திகளின் மூலம் செயல்பட்டால் இன்று எல்லோருக்கும் ஓய்வையும், சௌகரியத்தையும் அளிக்கும் அளவிற்கு, முன்னேற்றமும் வளங்களும் பொருந்தியதாக இருக்கும் சமூகத்தால் அதனை அனைவருக்கும் அளிக்க முடியும்.
1920-ல் அன்னை இந்த உண்மையை உணர்ந்து, அதனை சாதகர்களுக்கு அளித்தார்.
பூரணமாக முறைப்படுத்தப்பட்டுள்ள உயர்ந்த சக்திகளைக் கொண்டு செயல்பட்டு வரும் நிறுவனங்கள், தற்பொழுது வேலை செய்பவர்களைப் போல் பத்து மடங்கு தொழிலாளிகளை சௌகரியமாக ஆதரிக்க முடியும்.

இந்த அறிவு ஒரு குடும்பத்தில் இருந்தால் அதன் வழி செயல்பட்டால் பத்து மடங்கு குடும்ப அங்கத்தினர்களை, மிகவும் ஓய்வாகவும், சிறப்பாக சௌகரியமாகவும் பராமரிக்கலாம்.
நிறுவனங்கள் தங்களுடைய உயர்ந்த அறிவைச் செலுத்தி பயன்படும் வகையில் எண்ணங்கள், உபாயங்கள், மனோபாவங்கள், சமூகத் திறமைகள், இவற்றை உருவாக்கலாம்.
நிலமும் தொழிற்சாலையும், தானியங்களையும் பொருட்களையும், உற்பத்தி செய்கின்றன.
ஓய்வும் சௌகரியமும், கலாச்சாரத்தையும் பண்புகளையும் உற்பத்தி செய்கின்றன.
ஞானி வேலையைக் கண்டு கோபமடைகிறார்.
மனிதனில் இருக்கும் இறைவனுக்குச் சேவை செய்ய பக்தன் ஆசைப்படுகிறான்.
கர்ம யோகிக்கு வேலையே வழிபாடு ஆகும்.
ஆன்மாவை மையமாக வைத்து, வேலையை ஜீவியத்தின் உயர்ந்த நிலையிலிருந்து செய்ய வேண்டும். மற்றது எல்லாம் சுவாரசியமற்றதாக இருக்கும். இன்றைய நவீன காலத்தில் சுவாரசியமற்று இருப்பதே நாகரிக இலட்சியமாக உள்ளது. உயர்ந்த ஓய்வை அவர்கள் நாடுவது அவர்களுடைய பழக்க வழக்கத்தைப் பொய்யாக்குகிறது. ஓய்வு நேரத்தை சோம்பேறித்தனம் எனத் தவறாகப் புரிந்துகொள்வது, மனத்தின் திறன் ஆகும்.
ஒரு குடும்பத்தில் ஓய்வும், சௌகரியமும் இருந்தால் அன்பை, காதல் எனும் நிலைக்கு உயர்த்தும்.
தொழில்ரீதியான கண்டுபிடிப்புகள் அதனுடைய பயன்படும் தன்மைக்காக வரவேற்கத்தக்கவை. ஆனால் அதற்காகவே அவற்றை நாடுவது ஒருவரது சக்தியையோ அல்லது நேரத்தையோ சரியான முறையில் பயன் படுத்துவதாகாது.
வேலையை நாடாத மனிதனிடம் நிறைந்துள்ள சக்தியிலிருந்து, ஓய்வும் சௌகரியமும் சுயமாக ஒரு முறையை உற்பத்தி செய்யும்.

78. "obliged to give up the Lake".
Obligation is action based on knowledge and responsibility.
Cultural obligations can create occasions for Grace to act.
Social obligations extend social possibilities and even create them.
Material obligations are at the level of survival.
Vital obligation creates, sustains, and enriches Romance.
Mental obligation compels one to see the other Man's point of view.
Spiritual obligation is a blessing to all.
Supramental obligation creates a descent on Mankind.
Family obligation enjoins affectionate responsibility to all.
Mental obligation in the family today, can make a family rise ten times in society, enrich it a hundrend times, make them enjoy in all directions.
To realize all one's obligations is to evolve spiritually.
Obligation avails of opportunities.
Obligation awakens opportunities on all sides.
Marital obligations honoured is domestic joy in spiritual peace.
Democracy offers the citizens vast freedoms and expects them to realize their obligations as citizens. In a country where this is done, one can see paradise on earth.
A gentle man obliges anyone in a gentlemanly fashion.
It extends his culture to the society.
Consciousness-responsibility feels the obligation to all the colleagues.
The mother's obligation to children is biological.
The father has no such obligation biologically.
Socially he has an obligation to his family.
The woman is at pains all her life for marriage and property because she is aware that Man has no intrinsic obligations.
Men who remain unmarried or are not able to marry are those who do not have this obligation.
Children today do not wait for the parental obligation to be discharged.
"லேக்-ற்கு போவதை விட்டுக் கொடுக்க வேண்டி இருந்தது."
அறிவு, பொறுப்பு, இவற்றின் அடிப்படையில் எழுவது, கட்டாயங்கள் ஆகும்.
கலாச்சார கட்டாயங்கள், அருள் செயல்படுவதற்கு சந்தர்ப்பத்தை உருவாக்கலாம்.
சமூக கட்டாயங்கள் சமூக சாத்தியங்களை விரிவுபடுத்தும், உருவாக்கவும் செய்யும்.
பொருள்ரீதியான கட்டாயங்கள், உயிர் வாழ்தல் என்ற நிலையில் உள்ளன.
உணர்வின் கட்டாயங்கள் உருவாக்கும், நிலை நிறுத்தும், காதலை வளப்படுத்தும்.
மனத்தின் கட்டாயங்கள், ஒருவரை அடுத்தவர் கண்ணோட்டத்தைக் காண வலியுறுத்தும்.
ஆன்மீகக் கட்டாயங்கள் எல்லோருக்கும் ஆசிர்வாதம் ஆகும்.
சத்திய ஜீவியக் கட்டாயம் மனித குலத்தின் மீது இறங்குகிறது.

குடும்பக் கட்டாயங்கள், எல்லோருக்கும் அன்பான பொறுப்புணர்ச்சியை அளிக்கிறது.
இன்று, மனத்தின் கட்டாயம் ஒரு குடும்பத்தை பத்து மடங்கு சமூகத்தில் உயர்த்தும், நூறு மடங்கு வளமுடையதாக்கும், எல்லா விதங்களிலும் சந்தோஷத்தை அனுபவிக்க வைக்கும்.
ஒருவரது எல்லா கட்டாயங்களையும் உணர்ந்தால் அவர் ஆன்மீகத்தில் வளரலாம்.
கட்டாயம், வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளும்.
கட்டாயம், வாய்ப்புகளை எல்லா பக்கங்களிலும் எழுப்பும்.
திருமண வாழ்க்கையில் ஏற்படும் கடமைகளுக்கு மரியாதை அளித்தால் ஆன்மீக அமைதியில் அது குடும்ப சந்தோஷம் ஆகும்.
குடியரசு, மக்களுக்கு அதிக சுதந்திரத்தை அளிக்கிறது, குடிமகன் எனும் முறையில் அவர்களது கடமைகளை உணரவேண்டும் என்று எதிர்பார்க்கிறது.
இவ்வாறு ஒரு நாட்டில் நடந்தால், அது பூலோக சுவர்க்கமாக இருக்கும்.
நற்குணமுள்ள ஒருவர், எல்லோருக்கும் நற்குணத்துடன் உதவி புரிகிறார்.
அது அவருடைய பண்பை சமூகத்திற்கு எடுத்துச் செல்கிறது.
பொறுப்புணர்வு, தன்னுடன் வேலை செய்பவர்கள் அனைவருக்கும் தான் கடமைப்பட்டவர் என நினைக்கும்.
தாயாருக்கு குழந்தைகளிடம் ஏற்படும் கடமை உணர்வு, இரத்த பாசத்தினால் எழுகிறது.
தந்தைக்கு உடல்ரீதியாக அந்தக் கட்டாயம் இல்லை.
சமூக அளவில் அவருக்கு தன் குடும்பத்தாரிடம் ஒரு கடமை உள்ளது.
திருமணத்திற்கும், ஆஸ்திக்கும் பெண்ணே வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படுகிறாள், ஏனெனில் ஆணுக்கு எந்த உள்ளுறை கட்டாயமும் இல்லை என்று அவளுக்குத் தெரியும்.
திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கும் ஆணிற்கும் அல்லது திருமணம் செய்துகொள்ள முடியாமல் இருப்பவனுக்கும் இந்த கட்டாயம் எதுவும் கிடையாது.
பெற்றோர்கள், அவர்களுடைய கடமையை ஆற்றவேண்டும் என்று குழந்தைகள் இன்று காத்திருப்பதில்லை.

79. “according to this plan they were to go no further north ward than Derbyshire”.
What is chance in the physical plane, is precise definition in the subtle plane.
A little water poured on the ground moves and stops somewhere.
To us it is a chance. It is guided by the gradient, stops at the lowest point.
We see a voluble, foolish man talking endlessly when no one is listening.
His speech, the very words, and parts of them are guided and governed by well defined rules of how thought expresses as speech.
One can observe that in oneself. **The precision of its expression or failure to express will be seen as microscopic**.
1.75ml of liquid transferred to another receptacle will measure there, if measurement is possible as 1.74ml accounting for the missing .01ml the loss in transmission.
Yogic experience enables us to take note of such phenomena in the process of psychology. Given the correct minute of birth of a child, astrology can precisely predict its action, says Sri Aurobindo.
It is the perfection in Nature, some of which we see in the workings of gold lace in silk sarees.
Such precisions may not have use value, but it is a fact of Natural existence. Man has achieved some of it occasionally.
If the claim is true, - the tyre of a plane is replaced sixteen seconds, a sofa is assembled by the machine from its parts in ten seconds – Man knows that in his experience.
To rise from one plane to another, from Nature to Spirit, we know such perfection is indispensable. To discover the soul in Nature, Man’s efficiency should rise to this perfection. One who has successfully overcome the traits of egoistic sense would have seen this precision in the outer response to the inner movements. Forest dwellers, in dealing with animals that attack them have known the value of those small vibrations of fear.
Musicians know too well such shades in their voice and its direct immediate effect on the audience while they are rising to a climax.
Precision precisely matters for perfection.
“இந்தத் திட்டத்தின்படி அவர்கள் டர்பிஷயரைத் தாண்டி வடக்கே செல்லப் போவதில்லை.”
ஜடநிலையில் தற்செயல் என்று கருதப்படுவது சூட்சும நிலையில் துல்லியமான விளக்கமாகும்.
தரையில் சிறிதளவு தண்ணீர் கொட்டினால் அது ஓடி எதாவது ஒரு இடத்தில் நின்று விடும்.
நமக்கு அது தற்செயல். சரிவைப் பொறுத்து, இருப்பதற்குள் தாழ்வான இடத்தில் அது நின்று விடுகிறது.
வாக்குத் திறமையுள்ள ஒரு முட்டாள் யாரும் கேட்காத போதும் பேசிக்கொண்டே இருப்பான்.
அவனுடைய பேச்சு உபயோகப்படுத்தும் வார்த்தைகள் அதன் பகுதிகள் எல்லாம் எவ்வாறு எண்ணம் பேச்சாக வெளிப்படுகிறது எனும் துல்லியமான விதிகளால் வழி நடத்தப்படுகிறது.
வெளிப்படுவதின் தெளிவையும் அல்லது வெளிப்படுவதற்கு முடியாமல் போவதையும் துல்லியமாக ஒருவர் தன்னிடமே பார்க்கலாம். 1.75ml அளவுள்ள ஒரு திரவத்தை வேறொரு பாத்திரத்தில் மாற்றும் பொழுது அதன் அளவை அளக்க முடியும் என்றால் அது 1.74ml ஆக இருக்கும். மாற்றும் பொழுது ஏற்படும் நஷ்டம் .01ml.

மனோரீதியான இயங்கு முறையில் அது போன்ற நிகழ்வினை நாம் கவனிக்க யோக அனுபவம் உதவுகிறது. குழந்தையின் பிறந்த நேரத்தை மிகச் சரியாகக் கொடுத்தால், ஜோதிட சாஸ்த்திரத்தின் கணிப்பு மிகத் துல்லியமாக இருக்கும் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.

பட்டுப் புடவையின் ஜரிகை வேலைப்பாடுகளில் நாம் இயற்கையின் பூரணத்துவத்தைப் பார்க்கிறோம். அது போன்ற நுட்பங்களுக்கு உபயோகம் பெரிதாக இல்லாவிட்டாலும், அது இயற்கையான உண்மையாகும். சில சமயங்களில் மனிதன் இது போல் சிலவற்றை சாதித்துள்ளான். விமானத்தின் டயரை பதினாறு வினாடிகளில் மாற்றுவதும், ஒரு இருக்கையின்(sofa) பாகங்கள் பத்து வினாடிகளில் இயந்திரம் மூலம் சேர்க்கப்பட்டு விடுகிறது என்பதும் உண்மையாக இருப்பின், அதை மனிதன் தன் அனுபவத்தில் தெரிந்துகொள்வான். ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு உயரவேண்டும் என்றால் இயற்கையிலிருந்து ஆன்மாவிற்கு உயர வேண்டும் என்றால் இம் மாதிரியான பூரணத்துவம் இன்றியமையாதது என்று நமக்குத் தெரியும். இயற்கையில் ஆன்மாவைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால், மனிதனுடைய திறன் இந்த அளவுக்கு முழுச் சிறப்படைய வேண்டும். அகந்தையை வெற்றி கொண்ட ஒருவருக்கு அகம் புறம் தொடர்பு தெளிவாகப் புரியும். காட்டில் வசிப்பவர்கள் தங்களைத் தாக்க வரும் விலங்குகளை பயம் எனும் அதிர்வினால் தெரிந்து கொள்வர். பாடகர்கள், பாடலின் உச்ச கட்டத்திற்கு செல்லும்பொழுது தங்களுடைய குரலின் இது போன்ற சாயலையும், அது கேட்பவர்கள் மனத்தை நேரடியாக, உடனடியாக எவ்வாறு தொடுகிறது என்பதையும் மிக நன்றாகத் தெரிந்து வைத்திருப்பர்.

நுட்பம், முழுச் சிறப்புக்கு மிக முக்கியமானது.

80. “to Mrs. Gardiner it had a peculiarly strong attraction”.

A peculiar strong attraction arises from the minutest earlier enjoyment.

Sensitive mothers having observed their growing children are so attracted to their later blossoming, as they remind the mothers of their earlier observation.

One who has romantically enjoyed the company of his girl, has unconsciously sensed the potentials expressing later as actualities.

Married life, for the cultured sensitivity of self-giving generosity, has infinite avenues of this description making it eternally real in its endlessness.

Even an excellent cook knows his work like this.

The indication that one has reached the maximum of perfection in a relationship is **at this point, it thrills.**

God relating to Man who has become feminine renders every touch so thrilling.

Thrill that comes to stay is rapturous ecstasy.

Esctasy is the penultimate state of surrender.

Force passing through Love is made rapturous by infinity.

One who can attain this precision in money transaction unselfishly expressing truth or goodness through power when touched by infinity will earn all the Money that is there in his world in a trice.

Perfect precision producing infinite abundance is an inexorable rule. Nature in all its facets has this status, e.g. waste. It does not require supramental sense to know it. Even a subtle perception can see it.

Grace acting on impervious personality distantly relating to it resorts to this precision.

Sylvia on her way to Australia coming to an Ashram guest house was saved from a plane crash against her vociferous protest.

Our well developed sensitivity in life, touched by Grace by the least vibration, is entitled to protection even as we are entitled to protest!

Elizabeth a little before the tour felt that exhilaration.

‘திருமதி கார்டினருக்கு அந்த இடம் மிகவும் பிரத்யேகமாக பிடித்திருந்தது.”

பிரத்யேகமான அதிக ஆர்வம், முன்னர் கிடைத்திருக்கும் நுட்பமான சந்தோஷங்களால் எழும்.

நுண்ணுணர்வு மிக்க தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளின் வளர்ச்சியை நன்கு கவனித்திருப்பதால், அவர்களுடைய பிற்கால வளர்ச்சியால் மிகவும் கவரப்படுகிறார்கள். ஏனென்றால், அது அவர்களுடைய முந்தைய கவனிப்பை நினைவுபடுத்துகிறது.

காதல் உணர்வுடன் பெண்ணின் துணையில் சந்தோஷத்தை அனுபவித்திருக்கும் ஒருவன், பின்னால் அதை உண்மையாக்கும் திறன்கள் தனக்குண்டு என்பதை அவனை அறியாமலேயே உணர்ந்திருப்பான்.

திருமண வாழ்வு தன்னையே அர்ப்பணித்து பெருந்தமையாக விளங்கும் நாகரிகமான உணர்வுடையவர்களுக்கு, இது போன்ற அளவற்ற வாய்ப்புகளை, அதனுடைய முடிவற்றதில் நிரந்தரமாக உண்மையாக்கும்.

சிறப்பாக சமையல் செய்பவனுக்கும் தன்னுடைய வேலையைப்பற்றி இவ்வாறு தெரிந்திருக்கும்.

ஒரு உறவில் ஒருவர் அதிகபட்ச பூரணத்துவத்தை அடைந்து விட்டார் என்பதற்கு அடையாளம், இந்த இடத்தில் அது சிலிர்க்க வைக்கும்.

பெண்மையின் தன்மைகளை கொண்டிருக்கும் ஒரு ஆணோடு, இறைவன் தொடர்புபடுத்திக்கொள்ளும் பொழுது ஒவ்வொரு தொடுதலும் சிலிர்க்க வைக்கும்.

சிலிர்ப்பு நிலைத்து விடுவது உற்சாகமான பூரிப்பாகும்.
பூரிப்பு, சரணாகதியின் இறுதி நிலைக்கு முந்தைய நிலை.
காதல் வழியாகச் செல்லும் சக்தி அளவில்லாத பரவசத்தை அடைகிறது.
பண விவகாரத்தில் யார் ஒருவருக்கு இந்த தெளிவு கிடைக்கிறதோ, யார் ஒருவர் சக்தியின் மூலம் சுயநலமில்லாமல் உண்மை அல்லது நற்குணத்தை வெளிப்படுத்துகிறாரோ, அவர் அனந்தத்தால் தொடப்படும் பொழுது, உலகத்தில் இருக்கும் செல்வம் முழுவதையும் கணப் பொழுதில் சம்பாதிப்பார்.
சிறப்பான நுட்பம் அளவற்ற அபரிமிதத்தை உற்பத்தி செய்வது மறுக்க முடியாத சட்டமாகும். இயற்கையின் எல்லா பக்கங்களிலும் இந்த நிலை இருக்கிறது, (உ- ம்) விரயம்.
அதைத் தெரிந்துகொள்வதற்கு, அதற்குச் சத்திய ஜீவிய உணர்வு தேவை இல்லை. சூட்சுமமாகக்கூட புரிந்து கொள்ளலாம்.
அணுக முடியாத நபரிடம் அருள் செயல்படுவது, அதனுடன் தொடர்புபடுத்திக்கொள்ளும் பொழுது இந்த தெளிவை மேற்கொள்கிறது.
ஓர் அன்பர் ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும் வழியில், ஆசிரம விருந்தினர் விடுதியில் தங்குவதற்கு பலமாக எதிர்த்த போதும், விமான விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்.
வாழ்க்கையில் சிறப்பாக உருவான நமது உணர்வுகள் அருளின் லேசான அதிர்வுகளால் தொடப்படும் பொழுது, நாம் எதிர்த்தாலும் அது நம்மைக் காப்பாற்றும்.
சுற்றுப் பயணம் செல்வதற்குச் சற்று முன் எலிசபெத்தால் அந்த உற்சாகத்தை உணர முடிந்தது.

81. “The town where she had formerly passed her early life”.
Nostalgia is a great enjoyable sensation even as sentiments are.
In its recollection the memory gains a new life as nothing else can give.
Charles Dickens visiting his childhood home found the road narrow, chicken small.
He would have enjoyed more if his childish eyes came back with wide roads and big chickens.
Romance is an excellently fit field for nostalgia.
The old joys are recreated as fresh raptures.
Nostalgia is the experience of an old sentiment acquiring new vigour by imagination.
In a writer it is imagination that creates.
Physical events cannot always have an imaginative richness.
Imagination fills the drab subtle areas of physicality with emotionally creative movements.
Imagination exists entirely in the subtle plane as dreams.
Dreams are not under one’s control, imagination is.
A writer creates events, plots, characters, conflicts, confluences, events ripening into temperamental intensities of emotions, emotionally real possibilities all of which are real to him long after the writing.
The dress on the woman is an ornament to her while for him who adores her the end of that saree is an ever living sentiment in his imagination. Tagore grew expressive of it.
A lover’s vision is unearthly, if not celestial.
To be in love is to live in eternity.
The hero expressing his courage is lifted to heaven.
To him the body is a vehicle that raises him to celestial heights.
Danger itself thus becomes loveable and attractive.
In Romance the lover always feels the danger of losing his love.
Positively it can be an ever present hope.
“அந்த ஊரில் ஆரம்ப காலத்தில் அவள் வசித்திருக்கிறாள்.”
பழைய நினைவுகளும், மன உணர்வுகளைப்போல் சந்தோஷமான உணர்வுகளாகும்.
பழையதை ஞாபகப்படுத்திப் பார்க்கும்பொழுது வேறு எதனாலும் கொடுக்க முடியாத புதிய உயிர் ஞாபக சக்திக்குக் கிடைக்கிறது.
சார்லஸ் டிக்கென்ஸ், அவருடைய குழந்தைப் பருவத்தில் வாழ்ந்த வீட்டிற்கு சென்றபோது, அவருக்குத் தெருக்கள் குறுகலாகவும், கோழிக் குஞ்சு சிறியதாகவும் இருப்பதாகத் தெரிந்தது.
தெருக்கள் அகலமாகவும், கோழிக் குஞ்சு பெரிதாகவும் தெரிந்த குழந்தைப் பருவத்து பார்வை மீண்டும் வந்திருந்தால் அவர் மேலும் அதிக சந்தோஷம் அடைந்திருப்பார்.
பழைய ஞாபகங்களுக்கு காதல் ஒரு சரியான களமாகும்.
பழைய சந்தோஷங்கள் எல்லாம் புதிய பரவசமாக மறுபடியும் உருவாகும்.
பழைய உணர்வுகளுக்குக் கற்பனையால் புதிய சக்தியளிக்கும் அனுபவமே பழைய ஞாபகங்கள்.
எழுத்தாளரிடம் இருக்கும் கற்பனையே படைக்கிறது.
ஜட நிகழ்ச்சிகளுக்கு எல்லா சமயங்களிலும் கற்பனை வளம் இருக்காது.
ஜடத்தின் மந்தமான சூட்சும இடங்களை கற்பனை உணர்வுபூர்வமான படைக்கும் திறனுடைய இயக்கங்களால் நிரப்பும்.

கற்பனை சூட்சும நிலையில் முழுவதுமாக கனவுகளாக இருக்கிறது.
கற்பனை நம் கட்டுப்பாட்டில் உள்ளது, கனவுகள் அவ்வாறு இல்லை.
ஒரு எழுத்தாளர் நிகழ்ச்சிகளை, கதையின் கருவை, கதாபாத்திரங்களை, பிணக்குகளை, சந்திப்புகளை, உணர்ச்சிகளின் தீவிரமான மன உணர்வுகளாக மாறும் நிகழ்ச்சிகளை, உணர்வுபூர்வமாக உண்மையில் சாத்தியமாகக் கூடியவற்றை படைப்பார். இவை அனைத்தும் எழுதி பல நாட்களுக்குப் பிறகும் அவருக்கு அவை உண்மையாகத் தெரியும்.
ஒரு பெண்ணுக்கு உடை என்பது ஒரு அலங்காரம், ஆனால் அவளைப் போற்றும் ஒருவனுக்கு, அவளுடைய புடவைத் தலைப்பு அவனுடைய கற்பனையில் நிரந்தரமாக இருக்கும் உணர்வாகும். தாகூர் இதனை அழகாக வெளிப்படுத்தியுள்ளார்.
ஒரு காதலரின் பார்வை தெய்வீகமாக இல்லாவிட்டாலும், உலகில் இல்லாத ஒன்றாக இருக்கிறது.
காதல் வசத்தில் இருப்பது அழிவற்ற தன்மையுடையது.
ஒரு வீரன் அவனுடைய தைரியத்தை வெளிப்படுத்தும்பொழுது சுவர்க்கத்தில் இருப்பது போல் உணருவான். அவனுடைய உடல் அவனை தெய்வீக உயரத்திற்கு அழைத்துச் செல்லும்.
ஆபத்து இவ்வாறு விரும்பத்தக்கதாகவும், ஈர்ப்புடையதாகவும் மாறுகிறது.
காதலில் காதலனுக்கு தன் காதலை இழந்து விடுவோமோ என்கிற பயம் எப்பொழுதும் இருக்கும். நேர்மறையாகப் பார்த்தால் அது அவனுக்கு நிரந்தர நம்பிக்கை அளிப்பதாக இருக்கும்.

Elizabeth was excessively disappointed; she had set her heart on seeing the Lakes, and still thought there might have been time enough. But it was her business to be satisfied -- and certainly her temper to be happy; and all was soon right again.
எலிசபெத்திற்கு அதிக ஏமாற்றம் உண்டாயிற்று, லேக்ஸ்-ஐ பார்க்க வேண்டும் என்று மிகுந்த ஆர்வத்துடன் இருந்தாள். அதற்கு நேரம் இருக்கும் என்று இன்னமும் நினைத்தாள். ஆனால் எதிலும் திருப்தியடையும் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கும் அவளது மனோபாவம் எல்லாவற்றையும் விரைவில் சரி செய்தது.

82. The more ready Elizabeth is, the longer it is postponed.
எலிசபெத் மேலும் தயாராக இருக்கும் பொழுது, அது மேலும் தாமதமாகிறது.
83. She is more ready to accept Darcy in her depths.
டார்சியை அவள் ஆழத்தில் ஏற்றுக்கொள்ள மேலும் தயாராக இருக்கிறாள்.
84. "Elizabeth is excessively disappointed".
Excess of anything makes for excellence.
The excessive disappointment is due to excessive surprise that awaits a consciousness rooted in infatuation.
Excess is never disappointing in itself.
Excess indicates growth.
Excess may spoil a local situation as sugar in coffee.
It can always be well utilized.
Life itself directs the course of its proper utilization.
Any problem of the excess arises poignantly when the choice of the Man is egoistically willful.
Wilful insistence harms.
Life lives by balance, restoring it whenever it is disturbed.
Excess flow of the river causes havoc.
Damming it will irrigate lands, produce electricity.
The field of education suffers in modern days from an excessive surplus of overflowing energy.
The system is not able to absorb it.
Children rebel or become refractory.
Internet has brought a flood of ideas on all sides.
It is enough to open the faculties in the children.
Curiosity can never be exhausted.
Thinking organizes an ocean of information into one thought.
Imagination rises to the occasion of endless expanse of ideas.
Judgment is not exhausted by any amount of views.
Opinions are constricting.
Idea formation can rise to an infinite supply of facts.
When the Mind itself opens by a flood of energizing occasions the genius begins to formulate itself.
The occasion to abuse Darcy, says Elizabeth, opened the springs of abusive genius.
"எலிசபெத்திற்கு மிகுந்த ஏமாற்றம் எழுந்தது."
அதிகமாக உள்ள எதுவும் சிறப்பை நோக்கிச் செல்லும்.

காதல் மயக்கத்தில் ஆழ்ந்திருக்கும் ஒருவருக்கு காத்திருக்கும் அதிகப்படியான ஆச்சரியம், அதிகப்படியான ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது.
உபரியாக இருப்பதற்கு ஏமாற்றம் எழாது.
உபரி வளர்ச்சியைக் குறிக்கிறது.
காபியில் சர்க்கரை அதிகமாகி விடுவதைப் போல் உபரி, ஒரு இடத்தின் நிலைமையை கெடுத்து விடலாம்.
அதை எப்பொழுதும் நன்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.
அதை சரியாக உபயோகப்படுத்திக் கொள்வதற்கு வாழ்வே அதன் போக்கை வழி நடத்தும்.
மனிதன் அகந்தையோடு வேண்டுமென்றே தேர்ந்தெடுக்கும்பொழுது உபரியின் மூலமாக எழும் பிரச்சினை கடுமையாக இருக்கும்.
வேண்டுமென்றே செய்வது ஊறு விளைவிக்கும்.
சீர்தூக்கி வாழ்வது வாழ்க்கை, பாதிப்பு ஏற்படும்பொழுது சம நிலையை மீண்டும் நிலைநாட்டும்.
நதியில் வெள்ளம் வந்தால் பேரழிவு ஏற்படும்.
நதியில் அணை கட்டினால் பாசனத்திற்குப் பயன்படும், மின்சாரம் உற்பத்தி செய்யலாம்.
அபரிமிதமான அதிகப்படியான சக்தியினால், கல்வி முறை இன்றைய நவீன காலத்தில் பாதிக்கப்படுகிறது.
கல்வி அமைப்புக்கு, அதை உள்வாங்கிக்கொள்ள முடியவில்லை.
குழந்தைகள் எதிர்க்கின்றனர், அல்லது முரண்டு பிடிக்க ஆரம்பிக்கின்றனர்.
எல்லா பக்கங்களிலும் இணையதளம் எண்ணற்ற கருத்துகளை அளித்துள்ளது.
குழந்தைகளிடமுள்ள திறமைகளை நாம் வளர்த்து விட்டால் போதும்.
ஆர்வம் தீர்க்கப்பட முடியாதது.
சிந்தனை பல விவரங்களை ஒரு எண்ணமாக முறைப்படுத்தும்.
எண்ணங்களின் அளவில்லாத விரிவாக்கத்தை கற்பனை உண்டாக்கும்.
எவ்வளவு வித கருத்துகள் இருந்தும் அவற்றால் தீர்ப்பை தீர்த்துவிட முடியாது.
அபிப்பிராயங்கள் சுருக்கும்.
எண்ணங்கள் உருவாவது அனந்தமான விஷயங்களை அளிக்கும்.
தெம்பூட்டும் சந்தர்ப்பங்களால் மனம் திறந்துகொள்ளும்பொழுது மேதாவி பிறக்க ஆரம்பிக்கிறான்.
டார்சியை திட்டும் சந்தர்ப்பம், எலிசபெத்திடம் நிந்தனையின் மேதாவித்தனத்தை வெளிப்படுத்தியது.

85. "It was her business to be satisfied and her temper to be happy."
To be happy in the given condition is a Psychic temperament.
So, her will told her to be satisfied.
It was the choice of her temperament – human choice – that qualified her finally for the reward of our life.
This temperament and her selfless goodwill for Jane arose from her character.
She was endowed with the character to receive grace.
She had the potential of her mother's falsehood.
The latter surfaced on meeting Wickham, energized his scandal.
The force required for her to move to the Mind arose from the energy of the scandal.
It was enough to move to the Mind, not to free her from falsehood.
The elopement gave strength to this energy for her mind to endorse action.
What was energized was the mental decision, not the vital choice.
It enabled Darcy to act, was not enough to free her vitally.
Consecration raises Mind to Supermind.
Her response was to Pemberley; so Darcy came to meet her there.
She consecrated her idea to Pemberley, not to love nor to Darcy.
Consecration secures the willingness of the Will to the light of Knowledge.
That willingness is the choice.
Whenever problems remain unsolved, passages ununderstood, we can examine inside, the consecration will be in words, not in feeling.
It is the unwillingness to solve the problem.
It is the Taste of Ignorance that cherishes the past view of low consciousness, enshrined in preference or habit.
A systematic analysis at this point that breaks down the whole to its parts will ultimately end, as the dividing Mind ends in atomic existence, the smallest single act where the evil, wickedness, falsehood, wrong will assert its joy of selfish possessiveness, **giving the sensation of right to the will that exercises.**
Mr. Bennet's unwillingness to exert himself to prevent Lydia.
Split it further. We see 1) spirit of contradiction, 2) love to thwart the wife, 3) indolence, 4) subconscious consent to elopement, 5) exercise of authority of the head of the family.
Man fixing on any one of them and insisting on moving it, Mind rises to Supermind.
From Elizabeth's side, she does not want to condemn Wickham in her emotions.

She wants to avoid a crisis without taking commensurate effort.
In the Guru-sishya relationship, progress gets stalled at some point.
At that point the Guru will assert himself, rather than the work.
The sishya will express the spirit of contradiction.
He would like to accomplish the work by his own illumination which he does not have.
Such statements linger forever for some thousand years.
Shankara's illusion lived in his followers for a thousand years.
The point where work stalls is a moment of Grace, a moment of Truth, if one awakes inwardly.
It is a spiritual awakening.
It will reduce to an argument where one is unwilling to accept that 7+3=10 out of prestige.
Lenin says people, at such moments, will change the geometrical axiom to suit their argument.
Royalty in England drives them under the sea.
Caste in India keeps the country divided.
Goldman Sachs goes back to speculation.
These people will plead ignorance. It is not true in the final analysis.
It reduces to possessiveness, prestige, profit, etc. like the English educated Frenchman refusing to answer in English.
Churchill and
De Gaulle both knowing the other's language employed interpreters.
Pollution, crisis, terrorism, disarmament can be reduced to such a small move – if people act, it is a wonder.
"எதிலும் திருப்தி அடைய வேண்டும், எப்பொழுதும் சந்தோஷப்படவேண்டும் என்பதுதான் அவளது சுபாவம்."
இருக்கும் நிலைமையில் சந்தோஷமாக இருப்பது சைத்திய புருஷனின் உணர்வுக்குரியது.
அதனால் அவளுடைய உறுதி அவளை திருப்தி அடைய வைத்தது.
அவளுடைய மனவுணர்வுகளின் விருப்பம், மனித விருப்பம், இறுதியாக வாழ்வின் பரிசைப் பெற்றுக்கொள்ள அவளை தகுதி உடையவளாக்கியது.
இந்த மனவுணர்வும் அவளுக்கு ஜேனிடம் இருந்த சுயநலமற்ற நல்லெண்ணமும் அவளுடைய சுபாவத்தினால் எழுந்ததாகும்.
அருளைப் பெற்றுக்கொள்ளும் திறன் படைத்தவளாக அவள் இருந்தாள்.
தாயாரின் பொய்மை அவளிடம் வித்தாக இருந்தது.
அது அவள் விக்காமைச் சந்தித்தபோது வெளி வந்தது. அவன் எழுப்பும் அவதூற்றுக்கு சக்தி அளித்தது.
அவளை மனத்திற்கு அழைத்துச் செல்லும் சக்தி அவதூற்றின் வலிமையிலிருந்து கிடைத்தது.
மனத்திற்கு நகர அது போதுமானதாக இருந்தது, அவளை பொய்மையிலிருந்து விடுவிக்க அதனால் முடியவில்லை.
லிடியா ஓடிப்போனது இந்தச் சக்திக்கு பலத்தை அளித்தது, செயல்படுவதற்கு அவளுக்கு ஆதரவளித்தது.
மனத்தின் தீர்மானம்தான் வலிமையூட்டப்பட்டதே தவிர, உணர்வின் விருப்பம் அல்ல.
டார்சியை அது செயல்பட வைத்தது, அவளை உணர்வுபூர்வமாக அதனால் விடுவிக்க முடியவில்லை.
சமர்ப்பணம் மனத்தை சத்திய ஜீவியமாக்குகிறது.
அவள் பதிலளித்தது பெம்பர்லிக்கு; அதனால் அங்கு அவளை சந்திக்க டார்சி வந்தான்.
அவளுடைய எண்ணத்தை அவள் பெம்பர்லிக்கு சமர்ப்பணம் செய்தாள், காதலுக்கோ டார்சிக்கோ அல்ல.
சமர்ப்பணம் விருப்புறுதியின் விருப்பத்தை ஞானத்தின் ஒளிக்குப் பெற்றுத் தரும்.
அந்த விருப்பம் தேர்ந்தெடுத்ததாகும்.
பிரச்சினைகள் தீராதபொழுது வழிகளைப் புரிந்துகொள்ள முடியாதபொழுது நம் அகத்தைச் சோதித்துப் பார்த்தால், சமர்ப்பணம் வாயளவில்தான் இருக்கிறது, உணர்வில் இல்லை என்பதைப் பார்ப்போம்.
அது பிரச்சினையைத் தீர்க்க விருப்பமின்மை ஆகும்.
அது, முன்விருப்பத்தினாலோ அல்லது பழக்கத்தினாலோ தாழ்ந்த ஜீவியத்தின் கடந்த கால கருத்தைப் போற்றும் அறியாமையின் ருசியாகும்.
பகுக்கும் மனம் இறுதியில் அணு எனும் அளவில் முடிவதுபோல், இந்த இடத்தில் முறையான ஆராய்ச்சி, முழுமையை சிறு பகுதிகளாக பிரித்து எங்கு தீமை, கொடுமை, பொய்மை, தவறு இவைகளை மிகச் சிறிய ஒரு செயல் சுயநலமாக தனதாக்கிக்கொள்ளும் சந்தோஷத்தை வலியுறுத்துகிறதோ, **அங்கு செலுத்தப்படும் விருப்புறுதிக்கு சரி என்கிற உணர்வை அளிக்கும்.**
லிடியாவைத் தடுக்க திரு பென்னட் முயற்சி எடுக்க விரும்பவில்லை.
இதை மேலும் பிரித்துப் பார்த்தால், நாம் பார்ப்பது 1) முரண்பாட்டின் ஆர்வம்,2) மனைவிக்கு இடையூறு செய்ய விரும்புவது 3) சோம்பல், 4) ஓடிப்போவதற்கு ஆழ்மனத்தின் அனுமதி, 5) குடும்பத் தலைவர் தன் அதிகாரத்தை செலுத்துவது இவைகளாகும்.
இதில் ஏதாவது ஒன்றை மனிதன் தேர்ந்தெடுத்து அதன் மூலம் செயல்பட வலியுறுத்தும்பொழுது, அவன் மனதிலிருந்து சத்திய ஜீவியத்திற்குச் செல்கிறான்.

அவளது உணர்வுகளில் விக்காமைக் கண்டிக்க அவள் விரும்புவதில்லை என்பது எலிசபெத்தின் பக்கத்திலிருந்து எழுகிறது.
போதிய அளவு முயற்சி எடுக்காமல் அவள் நெருக்கடியைத் தவிர்க்க விரும்புகிறாள்.
குரு-சிஷ்ய உறவில் ஏதாவது ஒரு இடத்தில் முன்னேற்றம் நின்று விடுகிறது.
அந்த இடத்தில் வேலைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் குரு தன்னை வலியுறுத்திக் கொள்வார்.
சிஷ்யன் முரண்பாட்டினை வெளிப்படுத்துவான்.
தன்னிடம் இல்லாத அறிவின் தெளிவின் மூலம் அவன் வேலையை சாதிக்க விரும்புவான்.
சில ஆயிரமாண்டுகளாக இது போன்ற செய்திகள் நிரந்தரமாக உலவி வருகின்றன.
சங்கரரின் மாயை ஆயிரமாண்டுகளாக அவருடைய சிஷ்யர்களிடம் இருந்து வந்தது.
ஒருவரின் அகம் விழிப்புறும்பொழுது எங்கு வேலை நின்று விடுகிறதோ, அது அருள் எழும் தருணமாகும், உண்மையின் தருணமாகும்.
அது ஆன்மீக விழிப்பாகும்.
கௌரவம் கருதி 7+3=10 என்பதை ஏற்றுக்கொள்ளாத அளவிற்கு அது விவாதத்தில் இறங்கும்.
அது போன்ற சமயங்களில் மனிதர்கள் அவர்களுடைய விவாதங்களுக்கு ஏற்ப, வடிவியல் உண்மையையும் மாற்றிக்கொள்வர் என்று லெனின் கூறியுள்ளார்.
இங்கிலாந்து அரசுரிமையைப் போற்றுவது அவர்களை கடலுக்குள் மூழ்கடித்து விடும்.
இந்தியாவில் ஜாதிகள் பிரிவினையை ஏற்படுத்தி உள்ளன.
Goldman Sachs பங்குச் சந்தைக்கு மீண்டும் திரும்புகிறது.
இந்த மனிதர்கள் தங்களது அறியாமையை வலியுறுத்துவர். இறுதியாகப் பார்க்கும்பொழுது இது உண்மையல்ல.
ஆங்கிலம் அறிந்த பிரெஞ்சுக்காரர் ஆங்கிலத்தில் பதிலளிக்க மறுப்பதும், Churchill , De Gaulle இருவருக்கும் மற்றவரது மொழி தெரிந்திருந்தும் மொழி பெயர்ப்பாளரை அமர்த்துவதும், சொந்தம் கொண்டாடுவது, கௌரவம், இலாபம் என்பதில் போய் முடிகிறது.
சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் கேடு, நெருக்கடி, தீவிரவாதம், ஆயுத ஒழிப்பு, இவற்றை மக்கள் செயல்பட்டால் மிகச் சிறிய விஷயமாக அதிசயத்தக்க வகையில் மாற்றி விடலாம்.

With the mention of Derbyshire there were many ideas connected. It was impossible for her to see the word without thinking of Pemberley and its owner. "But surely," said she, "I may enter his county with impunity, and rob it of a few petrified spars without his perceiving me."
"டெர்பிஷயர்" என்றதும், அது சம்பந்தப்பட்ட பல எண்ணங்கள் தோன்றின. பெம்பர்லியைப் பற்றியும், அதன் உரிமையாளரைப் பற்றியும் நினைத்துப் பார்க்காமல் அவளால் அந்த வார்த்தையை நினைத்துப் பார்க்க முடியவில்லை. "ஆனால் நிச்சயமாக, நான் அப்பகுதிக்குள் சுதந்திரமாக நுழைவேன், அவனுக்குத் தெரியாமல் அழகிய கற்களை எடுத்து வருவேன்."

86. "With the mention of Derbyshire, many ideas were connected".
It is memory that commissions itself thus.
Memory is an instrument of Time.
It acts on the surface Mind.
Thought, imagination, and ego have their own memories.
At a moment like this one can observe the instantaneousness of the action of consciousness.
Attitudes, likes, past events, future expectations, responses of all the existing beliefs all rise at once simultaneously, meet, decide, and settle down.
Consecration too is instantaneously effective.
As the forces rush, so consecration must simultaneously rise for it to be effective.
Human choice is made at that split second.
It is subconscious.
Man who accepts Mother deeply accepts Her in the depth of his subconscious.
The virginally creative moment He speaks of is this moment when Man remembers Mother.
The Memory should precede the uprush of thoughts, etc.
At least, it should be simultaneous.
Love of Mother shows itself in this ready Memory which is consecration.
Such a love of Mother, its Memory, is the subconscious willingness to become conscious.
That movement calls down the Superconscient and is felt as an elevation or inspiration.
To remain in that inspiration forever is to be a sadhak.
To have that readiness at the occurrence of each thought is to be a devotee.
For yoga the rising subconscient and descending Superconscient meeting in him should ascend to the Transcendent.
To him life will never be a bore.

"டர்பிஷயர் என்று குறிப்படப்பட்டவுடனேயே, அது தொடர்புகொண்ட பல எண்ணங்கள் மனதில் எழுந்தன."
ஞாபகம் அவ்வாறு அதனையே செயல்பட வைக்கிறது.
ஞாபகம் காலத்தின் கருவியாகும்.
அது மேல் மனத்தில் செயல்படும்.
எண்ணம், கற்பனை, அகந்தை இவற்றிற்குத் தனித் தனியே ஞாபகங்கள் உள்ளன.
இது போன்ற ஒரு தருணத்தில் ஜீவியத்தின் உடனடியாகச் செயல்படும் தன்மையைப் பார்க்கலாம்.
மனோபாவங்கள், விருப்பங்கள், கடந்தகால நிகழ்ச்சிகள், எதிர்கால எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகளின் மறுமொழிகள் எல்லாம் கணப்பொழுதில் ஒரே சமயத்தில் எழுந்து, சந்தித்து, முடிவு செய்து பிறகு அமைதியாகின்றன.
சமர்ப்பணமும் உடனடியாகப் பயன் அளிக்கும்.
சக்திகள் வேகமாக நுழையும்பொழுது சமர்ப்பணம் திறம்படச் செயல்பட வேண்டுமெனில் அது கணப் பொழுதில் எழவேண்டும்.
அந்த ஒரு வினாடியில் மனிதனின் தேர்ந்தெடுப்பு நிகழ்கிறது.
அது ஆழ்மன நிகழ்வாகும்.
அன்னையை ஆழத்தில் ஏற்றுக்கொள்ளும் ஒருவன் தன் ஆழ்மனதின் ஆழத்தில் ஏற்றுக்கொள்கிறான்.
பகவான் கூறும் புதியன படைக்கும் தருணம், அன்னையை நினைவுகூரும் மனிதனின் இந்தத் தருணம்தான்.
எண்ணங்கள் எழுவதற்கு முன் அன்னையின் ஞாபகம் வர வேண்டும்.
குறைந்தபட்சம் ஒரே சமயத்திலாவது எழ வேண்டும்.
சமர்ப்பணம் எனும் இந்த உடனடி ஞாபகத்தில் அன்னையின் அன்பு வெளிப்படும்.
அன்னையின் இந்த அன்பு அதன் ஞாபகம் இவை ஆழ்மனம் மேல் மனமாக மாற விரும்புகிறது என்பதைக் காட்டுகிறது.
அந்த சலனம் பிரம்மத்தை கீழே அழைக்கிறது, உயர்ந்த உணர்வாகவும், ஊக்கமாகவும் உணரப்படுகிறது.
அந்த ஊக்கத்தில் என்றும் நிலைத்து இருப்பவன் சாதகனாவான்.
ஒவ்வொரு எண்ணம் எழும்பொழுதும் ஞாபகம் வருவது அன்பருக்கு அடையாளம் ஆகும்.
யோகத்திற்கு உயரும் ஆழ்மனமும் கீழிறங்கும் பிரம்மமும் அவனுள் சந்தித்துக்கொள்வது, பிரம்மத்தை நோக்கி உயர வேண்டும்.
அவனுக்கு வாழ்க்கை சுவாரசியமற்றதாக இருக்கவே முடியாது.

87. "It is impossible for her to see Derbyshire without thinking of Pemberley".
Subconscious interest brings it to memory.
Subconscious indifference will make her forget Pemberley in that situation.
She did forget his proposal after leaving Hunsford.
One who is connected with Mother for thirty years did not remember Mother when his heart was attacked. He never thought of it for three days till he was asked.
A girl coming to Pondicherry was asked in an interview about the interesting places there, and gave an exhaustive list excluding Ashram. Her uncle lives in Pondicherry. Her brother in law is a regular visitor to Ashram. Ashram was not in her consciousness.
A lady educated in Ashram school, who visits Ashram for every Darsan found herself not remembering Mother at the mention of Pondicherry. She remembered someone there.
Kitty did not remember Darcy's name.
Darcy was lodged in her subconscious.
When memory is gradually weakening by yoga and is dissolving, distant meaningless trifles will come to Mind sometime in dreams. **They are the small significant events for his transformation.**
An event so lingers if you have not got its essence into yourself.
Those events whose lessons have been received will be forgotten.
It is true of events, Men, ideas, places, etc.
Nostalgia is taste of ignorance.
Man without drawing the essence of events, can be without nostalgia if he is turned inward, organized in that poise, unaware of the outside world of Men and matters.
The physical consciousness is thus organized for all.
Sensitivity of the physical consciousness will mean either his physical responds or he is physically organized on the surface.
Mother speaks of light in the body which means the physical organization of consciousness does not reach the surface or inner mind.
Each Man can know how he is organized by his problems, response to consecration, the impact he produces on others.
"பெம்பர்லியைப் பற்றி நினைக்காமல் அவளுக்கு டர்பிஷயரை நினைத்துப் பார்க்க முடியவில்லை."
ஆழ்மனத்தின் ஆர்வம் அதை ஞாபகத்திற்கு கொண்டு வருகிறது.

ஆழ்மனத்தின் அலட்சியம் அவளை அந்த சூழ்நிலையில் பெம்பர்லியை மறக்கச் செய்யும்.
ஹன்ஸ்போர்டை விட்டுக் கிளம்பியவுடன், அவள் அவனது திருமண வேண்டுகோளை மறந்து விடுகிறாள்.
முப்பது வருடங்களாக அன்னையை அறிந்திருந்த ஒருவருக்கு இதயம் பாதிக்கப்பட்டபொழுது அவருக்கு அன்னை ஞாபகம் வரவில்லை. மூன்று நாட்களுக்குப் பிறகு அவரைக் கேட்டபொழுதுதான் அவருக்கு ஞாபகம் வந்தது.
நேர்முகத் தேர்வுக்கு பாண்டிச்சேரிக்கு வந்த ஒரு பெண்ணை அங்குள்ள சுவாரசியமான இடங்களைப் பற்றி கேட்டபொழுது, ஆசிரமத்தைத் தவிர மற்ற எல்லா இடங்களைப் பற்றிய விவரங்களையும் கூறினாள்.
அவளுடைய மாமா அங்கு வசிக்கிறார். அவளுடைய உறவினர் ஒருவர் ஆசிரமத்திற்குத் தவறாமல் வருபவர். அவளுடைய நினைவில் ஆசிரமம் இல்லை.
ஆசிரமப் பள்ளியில் படித்த ஒரு பெண்மணி, ஒவ்வொரு தரிசனத்திற்கும் தவறாமல் வருபவர், பாண்டிச்சேரி எனும் பெயரைக் கேட்கும்பொழுது அன்னை ஞாபகம் எழாததைப் பார்த்தார். வேறு யாரோ ஒருவரைப் பற்றிய ஞாபகம்தான் அவருக்கு எழுந்தது.
டார்சியின் பெயர் கிட்டிக்கு ஞாபகம் இல்லை.
அவளுடைய ஆழ்மனதில் டார்சி இருந்தான்.
யோகம் செய்வதன் மூலம் ஞாபகம் சிறிது சிறிதாக மறைந்து கரைந்து போகும்பொழுது, சிலசமயம் அர்த்தமில்லா சிறு **விஷயங்கள் மனத்தில் கனவுகளில் எழும். அவனது திருவுருமாற்றத்திற்கு அவை சிறு முக்கியமான நிகழ்ச்சிகள் ஆகும்.**
நமக்குள் அதன் சாரத்தை உள்வாங்கிக் கொண்டிருக்காவிட்டால் அது அவ்வாறு உலவிக் கொண்டிருக்கும்.
நிகழ்ச்சிகள் அளிக்கும் பாடங்களை நாம் ஏற்றுக்கொண்டிருந்தால் அவை மறக்கப்பட்டு விடும்.
நிகழ்ச்சிகள், மனிதர்கள், கருத்துகள், இடங்கள் இவற்றிற்கும் இது பொருந்தும்.
பழையவற்றை ஞாபகப்படுத்திப் பார்ப்பது, அறியாமையின் ருசியாகும்.
நிகழ்ச்சிகளின் சாரத்தை எடுத்துக்கொள்ளாத மனிதன், தனக்குள்ளேயே வாழும்பொழுது அந்த நிலையில் தன்னை முறைப்படுத்திக்கொண்டு, வெளி உலகத்திலுள்ள மனிதர்களைப் பற்றியும் உலக நடப்புகளைப் பற்றியும் எதுவும் தெரியாமல் இருந்தால், அவனுக்கு பழையதை நினைத்துப் பார்க்கும் பழக்கம் இருக்காது.
எல்லோருக்கும் ஜட ஜீவியம் இவ்வாறு முறைப்படுத்தப்பட்டுள்ளது.
ஜட ஜீவியத்தின் உணர்வுகள், அவனுடைய ஜடம் பதிலளிப்பதை உணர்த்தும் அல்லது மேல் மனத்தில் அவன் உடலால் முறைப்படுத்தப்பட்டுள்ளான் என்பதைத் தெரிவிக்கும்.
உடலின் ஒளியைப் பற்றி அன்னை பேசுகிறார், ஜீவியத்தின் ஜட அமைப்பு மேல் மனத்தையோ அல்லது உள் மனத்தையோ சென்றடைவதில்லை என்றாகிறது.
ஒருவன் எவ்வாறு தன்னை முறைப்படுத்திக் கொண்டிருக்கிறான் என்பதை அவனுடைய பிரச்சினைகள், சமர்ப்பணத்தின் பலன், மற்றவர்கள் மீது அவன் ஏற்படுத்தும் தாக்கம் இவற்றிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

The period of expectation was now doubled. Four weeks were to pass away before her uncle and aunt's arrival. But they did pass away, and Mr. and Mrs. Gardiner, with their four children, did at length appear at Longbourn. The children, two girls of six and eight years old, and two younger boys, were to be left under the particular care of their cousin Jane, who was the general favourite, and whose steady sense and sweetness of temper exactly adapted her for attending to them in every way -- teaching them, playing with them, and loving them.

அவளுடைய எதிர்பார்ப்பு இப்பொழுது இரட்டிப்பானது. அவளது மாமாவும், அத்தையும் வருவதற்கு இன்னும் நான்கு வாரங்கள் இருந்தன. ஆனால் அவையும் கடந்தன, ஒரு வழியாக கார்டினர் தம்பதிகள் அவர்களுடைய நான்கு குழந்தைகளுடன் லாங்பர்ன் வந்து சேர்ந்தனர். ஆறு வயதும், எட்டு வயதும் நிரம்பிய இரண்டு பெண்கள், இரண்டு இளைய ஆண் பிள்ளைகள், ஜேனுடைய பிரத்யேகமான பாதுகாப்பில் இருக்கப் போவதாக ஏற்பாடு ஆகியிருந்தது. பொதுவாக அவளை அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். மாறாத அறிவும் இனிமையான சுபாவமும் உள்ள ஜேனால் எல்லாவிதத்திலும் அவர்களை கவனித்துக்கொள்ள முடியும், அவர்களுக்கு பாடம் கற்று தரவும், அவர்களுடன் விளையாடவும், அன்பு செலுத்தவும் அவளால் முடியும்.

88. It only means it passed away delightfully without her noticing the time.
நேரத்தின் சிந்தனை எதுவுமின்றி அவளுக்கு அது சந்தோஷமாக கடந்து சென்றது என்பதைக் குறிக்கிறது.
89. "The period of expectation is now doubled" – Expecting the tour.
Agents that activate actions are significant symbols.
Desire in the absence of possibility is dormant.
For a brahmachari taken to sannyasa, sex is not so much an urge as for one in family life. Shaw speaks of it.
Ambition in the prewar world was a sin, as there was no scope.
Ambition is aspiration in USA where the scope is everywhere.
Higher consciousness is not bothered by views that oppress the lower consciousness.
Ideals do not constitute an urge to people of low consciousness.
Knowledge reveals itself according to the level of consciousness.

Levels of consciousness differing, knowledge around is not seen, is not taken interest in, is unintelligible when approached, does not yield to comprehension. When exercised, interest instantaneously vanishes even when it is intelligible.
The foreign invasions of India were for trade, empire resulted out of it.
Europe came to know of the Indian spirit by that contact.
For two hundred or even three hundred years, what they got out of it is bare awareness of its existence.
The existence of America was ignored till the war.
The whole world now takes after their way of life, not their real values, because of their pre-eminence.
Indian Spirit will receive attention when she is richly prosperous, territorially united.
Man accepts another's value, not for that value, but for some extraneous, often silly cause.
Japan still insists on its insularity.
Democracy is imposed on them.
May be they are capable of reverting to monarchy if it is possible.
Japan is fully infected by all western evils, not all western values.
It is an immature culture which arose out of its insularity.
Maturity can come by Spirit, not only by education.
"எதிர்பார்ப்பின் காலம் இரட்டிப்பு ஆனது - சுற்றுப் பயணத்தை எதிர்பார்ப்பது."
செயலை தூண்டும் விஷயங்கள் யாவும் முக்கியமான அடையாளங்களாகும்.
சாத்தியம் இல்லாதபோது ஆசை இருப்பது செயலற்றதாக இருக்கும்.
சன்யாசத்தைக் கடைப்பிடிக்கும் பிரம்மச்சாரிக்கு, குடும்ப வாழ்க்கையின் உந்துதல் குடும்பத்தில் இருப்பவருக்கு இருப்பது போலிருக்காது. பெர்னார்ட் ஷா இதைப் பற்றி பேசுகிறார்.
போருக்கு முந்தைய காலத்தில் பேராசை ஒரு பாவமாகக் கருதப்பட்டது, ஏனெனில் அப்பொழுது வாய்ப்பு எதுவும் இல்லை.
எல்லா இடங்களிலும் வாய்ப்பு தென்படும் அமெரிக்காவில் அதிக ஆசையே ஆர்வமாகும்.
தாழ்ந்த ஜீவியத்தை ஒடுக்கும் கருத்துகளைப் பற்றி உயர்ந்த ஜீவியம் கவலைப்படுவதில்லை.
தாழ்ந்த ஜீவியம் உடையவர்களுக்கு இலட்சியங்கள் ஒரு உந்துதலாக இருப்பதில்லை.
ஜீவியத்தின் நிலைக்கு ஏற்ப அறிவு அதனை வெளிப்படுத்திக்கொள்ளும்.
ஜீவியத்தின் நிலை மாறுபடும்போது சுற்றி இருக்கும் அறிவு கண்ணுக்குத் தெரிவதில்லை, அதில் ஆர்வமும் எழுவதில்லை, அணுகும்பொழுது புரிவதில்லை, புரிதலுக்கு உடன்படுவதுமில்லை. அதை செலுத்தும் போது அது புரியும்படி இருந்தும், ஆர்வம் உடனடியாக மறைந்து விடுகிறது.
வியாபாரத்திற்காக அந்நிய நாடுகள் இந்தியா மீது படையெடுத்தன, அதன் பலனாக சாம்ராஜ்யம் பிறந்தது.
அந்தத் தொடர்பால் ஐரோப்பாவிற்கு இந்திய ஆன்மீகம் தெரிய வந்தது.
இருநூறு அல்லது முன்னூறு வருடங்களுக்குப் பிறகும், ஆன்மீகம் இருப்பதை மட்டுமே அவர்கள் தெரிந்து கொண்டனர்.
போர் எழும்வரை அமெரிக்கா புறக்கணிக்கப்பட்டது.
அவர்கள் எல்லோரையும்விட சிறந்தவர்களாக இருப்பதால், இன்று முழு உலகமும் அவர்களுடைய வாழ்க்கை முறையை பின்பற்றுகிறது, அவர்களுடைய உண்மையான பண்புகளை அல்ல.
இந்தியா செல்வச் செழிப்பில் உயரும்பொழுதும் நாடு இணைந்திருக்கும்பொழுதும், அதனுடைய ஆன்மீகத்திற்கு கவனம் கிடைக்கும்.
மற்றவரது பண்பினை மனிதன் ஏற்றுக்கொள்வது அந்தப் பண்பிற்காக அல்ல, சம்பந்தமில்லாத பெரும்பாலும் அற்பமான விஷயத்திற்காக.
ஜப்பான் இன்னமும் அதனுடைய தனிமையை வலியுறுத்துகிறது.
குடியரசு அவர்கள் மீது திணிக்கப்பட்டது.
சாத்தியம் என்றால் அவர்கள் மீண்டும் முடியாட்சிக்கு திரும்பும் திறனுடையவர்கள்.
மேற்கத்திய தீமைகள் முழுவதும் ஜப்பானை ஆட்கொண்டுள்ளது, மேற்கத்திய பண்புகள் அல்ல.
தனிமையால் எழுந்த முதிர்ச்சி பெறாத நாகரிகம் அது.
முதிர்ச்சி ஆன்மா மூலம் கிடைக்கும், கல்வியினால் மட்டுமல்ல.

90. "Four weeks were to pass away and they did pass away".
The doubled expectation becomes quiet when the result is assured.
The Bhakta assured of moksha abridges a lakh of births into the present.
Frustrating expectation arises out of disbelief.
Knowledge of the future abolishes Time.
Time is the Spirit's observing its own movement.
The Spirit that observes its movement is itself in the movement.
Its knowledge is of the movement, not the goal in the end.
Knowledge of the goal, a belief in it, and its certitude abolishes Time.

Mind divides to analyse by coordination. It cannot see the goal except by analysis.
The emotions of the heart do not analyse, they accept the end, by a movement of unity with it.
The heart abolishes Time by certitude.
The body abolishes Time and Space by understanding.
The body's understanding is action instantaneous.
The body being matter is localized.
The heart being emotion extends to Time.
The Mind being thought extends over Time and Space.
The Spirit being silence abolishes Time and Space in a higher sense.
In the ascent Spirit is the highest.
In the descent body is the highest.
The growth of the Psychic moving from Mind to body becomes the Supramental Being at the body.
The sensation of the body taken by life to Mind becomes thought and controls the body.
The thought in the Mental consciousness moving down to the Mental substance becomes the thought of understanding of the body.
Hence the instantaneous action.
The Hour of God, by the sanction of the Highest, abolishes the grades acting through sincerity that is total and surrender that is complete.
"நான்கு வாரங்கள் கடந்தாக வேண்டும், அவைகளும் கடந்தன."
பலன் கிடைப்பது உறுதியானால், இரட்டிப்பான எதிர்பார்ப்பு மௌனமாகி விடுகிறது.
பக்தனுக்கு மோக்ஷம் உறுதியளிக்கப்பட்டால் லட்சக்கணக்கான பிறப்புகளை தற்போதைய நிலைக்குச் சுருக்கி விடுவான்.
அவநம்பிக்கையினால் எரிச்சலான எதிர்பார்ப்பு எழுகிறது.
எதிர்காலத்தைப் பற்றிய அறிவு காலத்தை அழித்து விடுகிறது.
ஆன்மா அதனுடைய சலனத்தை கூர்ந்து கவனிப்பதே காலம் ஆகும்.
தன்னுடைய சலனத்தை கவனிக்கும் ஆன்மா இருப்பதே சலனத்தில்தான்.
சலனத்தைப் பற்றித்தான் அதன் அறிவு உள்ளதே தவிர இறுதியில் உள்ள இலக்கைப் பற்றி அல்ல.
இலக்கினைப் பற்றிய அறிவு, அதில் ஏற்படும் நம்பிக்கை, அதன் உறுதி, இவை காலத்தை நீக்குகின்றன.
ஒருங்கிணைப்பு மூலம் மனம் ஆராய்வதற்காகப் பிரிக்கிறது. ஆராய்வதன் மூலமே அது இலக்கைப் பார்க்கிறது.
மனத்தின் உணர்வுகள் ஆராய்வதில்லை. முடிவை அதனுடன் ஒன்றுபடும் இயக்கத்தால் ஏற்றுக்கொள்கிறது.
மனம் உறுதியால் காலத்தை அழித்து விடுகிறது.
உடல் புரிந்துகொள்வதால் நேரத்தையும், இடத்தையும் அழித்து விடுகிறது.
உடல் புரிந்து கொண்டால் உடனடியாகச் செயல்பட ஆரம்பிக்கும்.
உடல் ஜடமாக இருப்பதால் ஒரு இடத்திலேயே கட்டுப்படுத்தப்படுகிறது.
மனம் உணர்வானதால் காலத்திற்குள் நீள்கிறது.
மனம் எண்ணமாக இருப்பதால் காலத்திற்கும் இடத்திற்கும் நீள்கிறது.
ஆன்மா மௌனமாக இருப்பதால் காலத்தையும் இடத்தையும் ஒரு உயர்ந்த அர்த்தத்தில் அழித்து விடுகிறது.
பரிணாமத்தில் ஆன்மா எல்லாவற்றையும்விட உயர்ந்தது.
சிருஷ்டியில் உடல் எல்லாவற்றையும் விட உயர்ந்தது.
சைத்திய புருஷனின் வளர்ச்சி மனதிலிருந்து உடலுக்கு நகரும் பொழுது, அது உடலில் சத்திய ஜீவனாக மாறுகிறது.
உடலின் உணர்வு வாழ்க்கையால் மனதுக்கு எடுத்துச் செல்லப்படும்போது, எண்ணமாக மாறி உடலைக் கட்டுப்படுத்தும்.
மனத்தின் ஜீவியத்திலுள்ள எண்ணம், மனத்தின் பொருளுக்கு கீழிறங்கிச் செல்லும் பொழுது, உடலின் புரிதலின் எண்ணமாக மாறுகிறது.
அதனால்தான் உடனடியாக செயல்கள் நடக்கின்றன.
இறைவன் வரும் தருணம் உயர்ந்ததின் அனுமதி பெற்று, முழுமையாக இருக்கும் உண்மையின் மூலமும் சரணாகதி மூலமும், செயல்படும் பல்வேறு நிலைகளை நீக்கிவிடுகிறது.

91. "Their children to be left to the care of Jane, their favourite".
Love of children, especially those whom the children love, is goodness.
Goodness is Truth expressing knowledge as a sensation, formed in to sensitivity.
Children readily sense this sensitivity and gravitate towards it.
Natural goodness is a sensation people never fail to apprehend.
Their first impulse is how such goodness can be made to serve them.
Those who are disappointed move away.

Organised falsehood formulated as selfish greed gets offended and tries to harm.
Saints have as a rule become unpopular in their own place.
The local population quickly discovers the enormous power of the saint.
Each individually tries to appropriate it fully and is disappointed.
All such disappointed individuals join together in opposition.
Sri Aurobindo refused to cure a woman brought to him by her husband.
The vital deities are known to respond the first time and generally hold out a hope of reward, occasionally extending it, and destroying them if deserted.
The principle of popularity is the attitude of vital deities presiding over famous temples.
Whatever the benefit, Man is utterly unwilling to seeking it, qualifying for it.
Left to himself he exerts monumentally for every small gain as promotion.
Efficiency, skill, selflessness, goodness can offer multiple gains. He does not countenance them.
What comes free he demands in increasing measure and even makes himself scarce to receive it – கிராக்கி.
An idealist desires to deliver personal benefits. It boomerangs.
Making benefits available impersonally that defect is eliminated.
Man who understands an immense benefit, acquiring that knowledge, offering it to others appears vain in their eyes.
He who accomplishes and is not unwilling to offer the knowledge to those who ask for it will succeed in very little measure.
Tata's accomplishment was not imitated for 150 years.
"குழந்தைகள் விரும்பும் ஜேனின் பாதுகாப்பில் குழந்தைகளை விட்டுச் செல்ல வேண்டும்."
குழந்தைகள் யாரிடம் அன்பு செலுத்துகிறார்களோ அவர்களது அன்பு சிறந்தது.
அறிவை தொடுவுணர்வாக வெளிப்படுத்தி, உணர்திறனாக உருவாக்கிய உண்மையே நற்குணமாகும்.
குழந்தைகள் சுலபத்தில் இவ்வுணர்வினைப் புரிந்துகொள்வர், அதன்பால் ஈர்க்கப்படுவர்.
இயற்கையாகவே நற்குணம் ஒரு உணர்வாகும், அதை மக்கள் புரிந்துகொள்ளத் தவறுவதே இல்லை.
அந்த நற்குணத்தை எவ்வாறு தங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம் எனும் உந்துதலே அவர்களுக்கு முதன்மையாக இருக்கும்.
ஏமாற்றம் அடைந்தவர்கள் அகன்று விடுகின்றனர்.
முறைப்படுத்தப்பட்ட பொய்மை சுயநலமான பேராசையாக உருப்பெறும் பொழுது பாதிக்கப்படுகிறது, புண்படுத்த முயலுகிறது.
பொதுவாக ஞானிகள் அவர்கள் இடத்தில் பிரபலமாக இருப்பதில்லை.
ஞானியின் அபரிமிதமான சக்திகளை அங்குள்ளவர்கள் விரைவாக கண்டுபிடிக்கின்றனர்.
ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அதனை முழுமையாகப் பறித்துக்கொள்ள முயலுகின்றனர், ஏமாற்றம் அடைகின்றனர்.
ஏமாற்றம் அடைந்த எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பை உருவாக்குவர்.
கணவனால் தன்னிடம் அழைத்து வரப்பட்ட பெண்மணியை ஸ்ரீ அரவிந்தர் குணப்படுத்த மறுத்தார்.
உணர்வுரீதியாக இருக்கும் தெய்வங்கள் முதல் முறை காப்பாற்றும், பலன்களுக்கான நம்பிக்கையை உண்டாக்கும், சில சந்தர்ப்பங்களில் பலன்களைத் தரும், கைவிட்டு விட்டால் அழித்துவிடும்.
பிரபலமான கோயில்களில் இருக்கும் உணர்வுரீதியான தெய்வங்களின் மனப்பான்மையே அதன் பிரபலத்திற்கு காரணமாகும்.
பலன் எதுவாக இருந்தாலும் மனிதன் அதை முழுமையாக நாட விரும்புவதில்லை, தகுதியாக்கிக் கொள்வதற்கும் விரும்புவதில்லை.
ஒவ்வொரு சிறிய பலனுக்கும் பெரு முயற்சி எடுத்து அதனை உயர்வாகக் கருதுவான்.
திறமை, திறன், பரநலம், நற்குணம், இவை யாவும் பல்வேறு பலன்களை அளிக்கும். அவன் அவற்றை எதிர்கொள்வதில்லை.
சுலபமாகக் கிடைப்பதை மேலும் அதிக அளவில் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பான், அதை பெற்றுக் கொள்ளவும் கிராக்கி செய்வான்.
ஒரு இலட்சியவாதி, தன்னுடைய சொந்த பலன்களை மற்றவர்களுக்குக் கொடுக்க ஆசைப்படுவான். அது அவனிடமே திரும்பி வந்துவிடும்.
நன்மைகளை பொதுத்தன்மை உடையதாக மாற்றினால் அக்குறை எழாது.
ஒரு மிகப் பெரிய பலனை புரிந்துகொள்ளும் மனிதன் அந்த அறிவைப் பெற்று மற்றவர்களுக்கு அளிக்க முன் வரும்பொழுது, அவர்களது பார்வையில் அது வீண் என்று தோன்றும்.
யார் ஒருவர் சாதனை புரிந்து அந்த அறிவை கேட்பவர்களுக்குக் கொடுக்க மறுக்கிறாரோ, அவர் சிறிதளவே சாதிப்பார்.
டாடாவின் சாதனை நூற்றி ஐம்பது வருடங்களாக எவராலும் பின்பற்றப்படவில்லை.

The Gardiners stayed only one night at Longbourn, and set off the next morning with Elizabeth in pursuit of novelty and amusement. One enjoyment was certain -- that of suitableness as companions; a suitableness which comprehended health and temper to bear inconveniences -- cheerfulness to enhance every pleasure -- and affection and intelligence, which might supply it among themselves if there were disappointments abroad.

கார்டினர் தம்பதிகள் லாங்பர்னில் ஒரே ஒரு இரவு மட்டும் தங்கினர், மறுநாள் காலை அவர்கள் புதுமையையும், பொழுதுபோக்கினையும் தேடி எலிசபெத்துடன் கிளம்பினர். ஒரு சந்தோஷம் உறுதியாக இருந்தது, பொருத்தமான நண்பர்கள்; எந்த அசௌகரியங்களையும் தாங்கிக்கொள்ளும் அளவிற்கு இருந்த ஒரே மாதிரியான உடல் ஆரோக்கியமும் மன நிலையும் எந்த சந்தோஷத்தையும் மிகைப்படுத்தும் உற்சாகமான சுபாவம், அவர்களுடைய பரஸ்பர அன்பும் அறிவும் அவர்கள் வெளியில் செல்லும் இடத்தில் ஏதேனும் ஏமாற்றங்கள் அடைந்தால், அதனை தமக்குள் ஈடுகட்டும் வகையில் இருந்தன.

92. 'In pursuit of novelty and amusement.' Darcy's behaviour is the novelty, his attention is the amusement.
புதுமையையும், பொழுது போக்கினையும் தேடிச் சென்றனர். டார்சியின் நடத்தை புதுமை, அவனது கவனம் பொழுது போக்கு.

93. 'One enjoyment was certain, that of the suitableness of companions'. We hear here the voice of life saying Darcy's temperament will be suitable.
'பொருத்தமான நண்பர்கள் அமைந்ததினால் ஒரு சந்தோஷம் உறுதி'. டார்சியின் மனவுணர்வு பொருத்தமாக இருக்கும் என்று வாழ்க்கை இங்கு கூறுவது நமக்கு கேட்கிறது.

94. '…which comprehended health and temper'. Read 'which comprehended aspiration and eagerness to accept'.
'ஒரே மாதிரியான உடல் ஆரோக்கியமும், மனநிலையும் என்று புரிந்துகொண்டதை', 'ஏற்றுக் கொள்வதற்கு ஆர்வமும், ஆவலும்' என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

95. The first three lines of the page read as if she is writing about Darcy and Elizabeth.
இப்பக்கத்தின் முதல் மூன்று வரிகள் டார்சியைப் பற்றியும், எலிசபெத்தைப் பற்றியும் எழுதுவதாகத் தோன்றுகிறது.

96. "The Gardiners set off in pursuit of novelty and amusement".
They did land in novel amusements in Pemberley and Lambton.
The lack of time for Mr. Gardiner is expressive of hastening Lizzy's marriage.
Her marriage was not in the family agenda or hers.
She received a fascinating proposal in abusive language.
She was flattered by it and forgot it, never wishing to see him again.
Her disgust was so great that Jane could not even share her flattery, and Mr. Bennet even after its consummation cannot appreciate the greatness of it.
The marriage is there in potential. Mrs. Gardiner is to create the circumstances that would make it actual. Hence the novelty and amusement.
Their goodwill persuades her against her reluctance to visit Pemberley.
Goodwill is creative of Good.
Every occasion in the society is an opportunity.
Often it reveals to great initial effort, sometimes to a little effort, at other times to no effort, just for an idea.
The banks of a river can never receive the river water for irrigation.
Far above the course a dam is to be built and canals dug for that benefit.
One can lift the water by any arrangement such as a pump.
The banks have copious ground water to be pumped.
On the banks of a lake with high bunds dry lands can get the water by a siphon.
Great sources of artesian will perennially supply for a simple hole dug into the soil.
The present civilization is the result of Mental resourcefulness in the physical plane.
Now we have at our disposal Supramental resourcefulness in all the planes down below.
This is life, not yoga.
He used His Force to win the war and Indian Independence.
That Force is available for the creation of universal prosperity.
"புதுமையையும், பொழுது போக்கினையும் தேடி கார்டினர் தம்பதியினர் புறப்பட்டனர்."
பெம்பர்லியிலும், லாம்ப்டனிலும் அவர்களுக்கு புதுமையான பொழுதுபோக்கை அனுபவிக்க முடிந்தது.
திரு கார்டினரின் நேரமின்மை லிசியின் திருமணம் துரிதமாவதை வெளிப்படுத்துகிறது.
அவளுடைய திருமணம் குடும்பத் திட்டங்களில் இல்லை, அவளும் அதைப் பற்றி நினைக்கவில்லை.
அவளுக்கு மோசமான வார்த்தைகளால் புதுமையான திருமண வேண்டுகோள் கிடைத்தது.
அது அவளுக்கு சந்தோஷத்தையும் அளித்தது, அவனை மீண்டும் சந்திக்கவே கூடாது என்று அதைப்பற்றி மறந்தும் விடுகிறாள்.

திருமணம் உறுதியான பின், ஜேனுக்கு அவளுடைய சந்தோஷங்களைக்கூட பகிர்ந்துகொள்ள முடியாத அளவிற்கும், விஷயம் பூர்த்தியான பிறகும்கூட திரு பென்னட்டால் அதனுடைய மேன்மையை பாராட்ட முடியாத அளவிற்கும் அவளுடைய வெறுப்பு அவ்வளவு பெரிதாக இருந்தது.

திருமணம் அங்கு வித்தாக இருக்கிறது. அதை உண்மையாக்க திருமதி கார்டினர் சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும். அதனால்தான் புதுமையும் பொழுதுபோக்கும்.

பெம்பர்லிக்குப் போவதில் அவளுக்கு விருப்பம் இல்லாதபோதும் அவர்களுடைய நல்லெண்ணம் அவளை இணங்கச் செய்தது.

நற்குணத்தின் படைப்பு நல்லெண்ணம்.

சமூகத்திலுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பமும் ஒரு வாய்ப்புதான்.

ஆரம்பப் பெரு முயற்சிக்கு அது பல சமயங்களில் வெளிப்படும், சில சமயங்களில் சிறு முயற்சிக்கு வேறு சமயங்களில் எந்த வித முயற்சி இல்லாமலேயே ஒரு கருத்துக்கே அது வெளிப்படும்.

ஒரு நதியின் கரை ஓரத்திற்கு ஒருபொழுதும் நதி நீர் விவசாயத்திற்குக் கிடைக்காது.

நதியின் போக்குக்கு மேலே அணையைக் கட்டி, வாய்க்கால்கள் மூலம் பாசனத்திற்கு உபயோகப்படுத்த வேண்டும்.

விசைக்குழாய் மூலம் நீரை மேலே கொண்டு வரலாம்.

நதியின் அடித்தளத்தில் ஏராளமான நிலத்தடி நீர் உபயோகத்திற்கு உள்ளது.

வரம்பு கட்டப்பட்டு இருக்கும் ஏரியிலிருந்து, நீர்ப்பாசனம் இல்லாத நிலங்கள் இறைகுழாய் மூலம் நீரைப் பெறலாம்.

மண்ணில் ஒரு சிறிய துளையில் பொருத்தப்படும் குழாய் கிணறு மூலம் வற்றாத நீர் கிடைக்கும்.

ஜட நிலையில் உள்ள மனத்தின் வளங்களின் பலன்களே இன்றுள்ள நாகரிகம்.

கீழே இருக்கும் எல்லா நிலைகளிலும் சத்திய ஜீவிய வளங்களை நாம் உபயோகப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு இப்பொழுது நமக்குள்ளது.

இது வாழ்க்கையாகும், யோகமல்ல.

போரில் வெற்றி அடையவும், இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைப்பதற்கும் பகவான் அவரது சக்தியைப் பயன் படுத்தினார்.

உலகளாவிய செல்வ வளத்தை உருவாக்க அந்த சக்தி தயாராக உள்ளது.

97. “Man got his prosperity from land and factory.”

Trade came booming and expanded life, made Money real and allowed it to multiply by itself.

Society is an organization.

It is an organization of people, energy, relationship, movement, knowledge, power and finally an eternal organization of self-organising, self-multiplying forces.

Man is extremely resourceful as well as wedded to blindness.

Wherever the organized forces overlap or interact, as in Education and government, Management and academic education, Money and the market, the generated energy is of a higher order in infinite measure.

In rare occasions Man stumbles on it.

The river bed civilization discovered it in the formation of cities.

Romans saw the knowledge generating power through law and ruled the world for five hundred years.

American settlers found it in freedom and enterprise.

A mere worker Stalin could rule a superpower for thirty years when he stumbled on the organizational power of an organized army.

Today Google has done it more than once.

The woman denied of primary freedom discovered it in values and reached moksha. These are all unconscious.

Becoming Mentally conscious, Western civilization has come into existence.

Spiritually conscious Man cannot exert himself for material survival. It is there all around.

To him vital well being, Mental expansiveness are available.

The expansion of the American retail business is partly due to voluntary self-denial, a denial of the ego.

Non-egoistic rational functioning will bring five hundred years from now here at once.

Sri Aurobindo invites us to yoga.

At least we can respond to yogic life.

“நிலம், தொழிற்சாலை இவற்றிலிருந்து மனிதனுக்கு செல்வம் கிடைத்தது.”

வியாபாரம் தோன்றி வாழ்க்கையை விரிவுபடுத்தியது, பணத்தை உண்மை என மாற்றியது, அதனை தானாகவே பெருக்கிக்கொள்ள அனுமதித்தது.

சமூகம் ஒரு அமைப்பாகும்.

மனிதர்கள், சக்தி, உறவு, இயக்கம், அறிவு, அதிகாரம், இறுதியாக சுயமாக முறைப்படுத்திய, சுயமாக பெருகும் சக்திகளையுடைய நிலையான அமைப்பு சமூகம் ஆகும்.

மனிதனிடம் எல்லாத் திறமைகளும் இருக்கின்றன, ஆனால் அவன் கண்மூடியாக இருக்கிறான்.

எங்கெல்லாம் முறைப்படுத்தப்பட்டுள்ள சக்திகள் ஒன்றின் மேல் ஒன்றாக படிகிறதோ அல்லது ஒன்றோடு ஒன்று தொடர்புகொள்கிறதோ, (உதாரணத்திற்கு கல்வியும் அரசாங்கமும், மேலாண்மையும் செயல்முறை சாராக் கல்வியும், பணமும் சந்தையும்) அங்கு உற்பத்தி செய்யப்பட்ட சக்தி, அளவற்று உயர்ந்ததாக இருக்கும்.
அரிய சந்தர்ப்பங்களில் மனிதன் எதிர்பாராமல் அது போன்ற சந்தர்ப்பங்களை சந்திக்கிறான்.
நதிக் கரையோரம் எழுந்த நாகரிகம், நகரங்களை உருவாக்கியதில் இந்தச் சந்தர்ப்பங்களைக் கண்டுபிடித்தது.
சட்டம் மூலமாக சக்தியை உற்பத்தி செய்யமுடியும் என்ற அறிவைப் பெற்ற ரோமானியர்கள் ஐநூறு வருடங்கள் உலகத்தை ஆண்டனர்.
சுதந்திரத்திலும், தொழில் முன்னேற்றங்களிலும் அமெரிக்காவில் குடியேறியவர்கள் அச்சக்தியைக் கண்டனர்.
முறைப்படுத்திய இராணுவத்தின் அமைப்பின் சக்தியை கண்டுபிடித்த சாதாரண தொழிலாளியாக இருந்த ஸ்டாலின், முப்பது வருடங்கள் ஒரு வல்லரசை ஆண்டார்.
இன்று பலமுறை Google இதனைச் செய்துள்ளது.
அடிப்படை சுதந்திரம் மறுக்கப்பட்ட பெண், பண்புகளில் அதைக் கண்டு பிடித்து மோக்ஷத்தை அடைந்தாள்.
இவை யாவும் தன்னினைவில்லாமல் செய்யப்பட்டன.
நனவுபூர்வமாக மாறும்பொழுது, மேற்கத்திய நாகரிகம் நடைமுறைக்கு வந்துள்ளது.
ஆன்மீகரீதியில் நனவுபூர்வமாக இருக்கும் மனிதன், பொருள்ரீதியான வாழ்வுக்கு தன்னை வற்புறுத்திக் கொள்ள முடியாது. அவனைச் சுற்றி அவை உள்ளன.
அவனுக்கு உணர்வுரீதியான நன்மையும் மனதின் பெருந்தன்மையும் உபயோகத்திற்கு இருக்கின்றன.
அமெரிக்காவின் சில்லறை வியாபாரத்தை விரிவுபடுத்தியதற்கு ஒரு காரணம், தானே ஏற்றுக்கொண்ட அகந்தையின் மறுப்பான சுயமறுப்பாகும்.
அகந்தையின்றி விவேகமாக நடந்துகொண்டால், ஐநூறு வருடங்களுக்குப் பிறகு வரக்கூடியதை இப்பொழுதே பெறலாம்.
ஸ்ரீ அரவிந்தர் நம்மை யோகத்திற்கு அழைக்கிறார்.
நாம் யோக வாழ்க்கைக்காவது பதிலளிப்போம்.

98. "Suitableness which comprises of health and temper to bear inconveniences".
Suitability is the strategy of accomplishment.
Energy, organization, attitude, skill, etc. bring about an accomplishment.
Aspiration, structure, vital understanding Mind, organization of energy give them.
Accomplishment is creation in miniature.
A thought that accomplishes is pure creation – conception.
Limitation is as great a strategy as conception.
Absorption creates infinite intensity.
The intensity can be dark or light.
Involution is as much creation as evolution.
Creation is manifesting the Absolute in the relative.
Spiritual wisdom is to see the relative as Absolute.
Consciousness is the nature of Being.
The nature of consciousness is force.
Being is delight, consciousness is delight, Force is delight.
All the rich potentials we see in society are here.
The play of Being is delight.
The delight is infinite.
All social potentials are infinite.
Man is not to end as a social animal.
Without affirming in the society, Man cannot affirm in Spirit.
He is likely to level off horizontally in the society.
To prevent that pollution and crisis arise.
Man is spiritually infinitely resourceful.
The delights of knowledge are greater than the delights of ignorance.
Ignorance gives the surprise of self-discovery to emerging knowledge.
Ignorance can transform into knowledge instead of allowing knowledge to emerge out of it for delight.
Transformation transfigures.
"எந்த அசௌகரியங்களையும் தாங்கிக்கொள்ளும் அளவிற்கு ஒரே மாதிரியான உடல் ஆரோக்கியமும் மன நிலையும் இருந்தன."
சாதனைக்குத் தகுதி உடையதாக இருப்பது ஒரு உபாயமாகும்.
சக்தி, அமைப்பு, மனோபாவம், திறமை போன்றவை, சாதிக்க வைக்கின்றன.
ஆர்வம், கட்டமைப்பு, மனத்தை உணர்வு புரிந்துகொள்ளுதல், சக்தியின் அமைப்பு அவற்றை அளிக்கிறது.

படைப்பின் சிறிய உருவம்தான் சாதனை.
சாதிக்கும் ஒரு எண்ணம் தூய்மையான படைப்பாகும் - கருத்துருவாக்கம்.
கருத்துருவாக்கம் கருத்தைப்போல் ஒரு பெரிய உபாயமாகும்.
உட்கிரகித்தல் அளவற்ற தீவிரத்தை உருவாக்குகிறது.
தீவிரம் இருளாகவும் இருக்கலாம், ஒளியாகவும் இருக்கலாம்.
சிருஷ்டி படைப்பாகவும் இருக்கிறது, பரிணாமமாகவும் இருக்கிறது.
பிரம்மம் பூமிக்கு இறங்குவதற்கு ஒப்பானது படைப்பு.
ஆன்மீக ஞானம் அதற்கு ஒப்பானதை பிரம்மமாகப் பார்க்கும்.
ஜீவனின் சுபாவம் ஜீவியம்.
ஜீவியத்தின் சுபாவம் சக்தி.
ஜீவன் ஆனந்தமாகும், ஜீவியம் ஆனந்தமாகும், சக்தி ஆனந்தமாகும்.
சமூகத்தில் நாம் பார்க்கும் எல்லா வளமான திறன்களும் இங்குள்ளன.
ஜீவனின் ஆட்டம் ஆனந்தம்.
ஆனந்தம் அளவற்றது.
எல்லா சமூகத் திறன்களும் அளவற்றவை.
சமூக விலங்காக மனிதனின் இறுதிக் கட்டம் இருக்காது.
சமூகத்தில் உறுதிப்படுத்திக்கொள்ளாமல் மனிதன் ஆன்மாவில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாது.
சமூகத்தில் அவனுடைய வளர்ச்சி ஒரு நிலையில் நின்று விட வாய்ப்புள்ளது.
அதை தடுக்க தூய்மைக் கேடும் நெருக்கடியும் எழுகின்றன.
மனிதன் ஆன்மீகரீதியில் அளவற்ற திறமைகள் உடையவனாக இருக்கிறான்.
அறிவின் சந்தோஷங்கள் அறியாமையின் சந்தோஷங்களை விட மிகப் பெரியவை.
வெளிவரும் ஞானத்திற்கு அறியாமை, சுய கண்டுபிடிப்பின் ஆச்சரியத்தை அளிக்கிறது.
சந்தோஷத்திற்காக அறிவு அறியாமையிலிருந்து வெளிவருவதை அனுமதிப்பதைவிட அது அறிவாக திருவுருமாற முடியும்.
திருவுருமாற்றம் உருமாற்றி மேன்மைப்படுத்தும்.

99. "affection and intelligence which might supply cheerfulness among themselves if there were disappointments abroad".
Travel brings out one's best as well as worst.
Travel is a minor project for a family. Its accomplishment brings rich experience primarily through knowledge. It is an intense occasion to know another.
Inconvenience and discomfort require an adjustment cheerfully.
That requires intelligence to understand and affection to rise to the occasion.
Affection that cheerfully accepts discomfort is emotional intelligence.
Family is a miniature society. In cultured families children can receive from the families the experience of an emotional university.
What is taught is valuable.
What is learnt is invaluable.
What comes from the family unseen makes one a valuable member of the society.
Culture has the basis of religion, education and wealth.
Religion has a spiritual basis.
Family has a corporate existence in the cultural market that buys and sells respectability.
Landed aristocracy, religious aristocracy, aristocracy of power, are some varieties of high status.
A family that possesses aristocracy of any type can equip the children to acquire all other aristocracy if they are bent upon it.
Social upward movement is towards aristocracy.
Blood in England is as valuable as caste in India.
One can lose caste, cannot acquire it.
Once lost, lost forever.
There is no institution like the family to usher the next generation into any type of aristocracy or all aristocracy.
Family gives emotional knowledge useable.
Family is an emotional unit of the society.
"அவர்களுடைய பரஸ்பர அன்பும் அறிவும் வெளியில் செல்லும் இடங்களில் அவர்களுக்கு ஏதேனும் ஏமாற்றங்கள் ஏற்பட்டால், அவர்களுக்கு சந்தோஷத்தை அளிக்கும் வகையில் இருந்தன."
பிரயாணம் ஒருவரது சிறந்ததை வெளிக் கொண்டு வரும், மிகவும் மோசமானதையும் வெளிக் கொண்டு வரும்.
பிரயாணம் ஒரு குடும்பத்திற்கு ஒரு சிறிய திட்டம் ஆகும். அது அறிவின் மூலம் சிறந்த அனுபவத்தை அளிக்கிறது. மற்றவரை அறிவதற்கு அது ஒரு முக்கியமான தருணம் ஆகும்.
அசௌகரியத்திற்கும் நிம்மதியின்மைக்கும் ஒரு சந்தோஷமான இணக்கம் தேவை.

அதைப் புரிந்துகொள்வதற்கு புத்திசாலித்தனமும், அதைச் செய்வதற்கு அன்பும் தேவை.
அசௌகரியத்தை மலர்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் அன்பு, உணர்வுபூர்வமான புத்திசாலித்தனம் ஆகும்.
குடும்பம், சமூகத்தின் ஒரு சிறிய பதிப்பாகும். நாகரிகமுள்ள குடும்பத்து குழந்தைகள், உணர்வுகளின் ஏராளமான அனுபவத்தை குடும்பத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
கற்றுக் கொடுக்கப்பட்ட விஷயம் விலைமதிப்பு வாய்ந்தது.
கற்றுக்கொண்ட விஷயம் மதிப்பற்றது.
யாரும் கவனிக்காத வண்ணம் குடும்பத்திலிருந்து வெளி வரும் விஷயம், ஒருவரைச் சமூகத்தில் முக்கியமானவராக ஆக்குகிறது.
கலாச்சாரத்திற்கு மதம், கல்வி மற்றும் செல்வத்தின் அடிப்படை உள்ளது.
மதத்திற்கு ஆன்மீக அடிப்படை உள்ளது.
நாகரிக வாழ்க்கையில் குடும்பம் மரியாதையை பரஸ்பரம் கொடுத்து வாங்குவதன் மூலம் செயல்படுகிறது.
நிலமுடையவர்களின் பிரபுத்துவம், மதத்தின் பிரபுத்துவம், அதிகாரத்தின் பிரபுத்துவம் ஆகியவை, உயர்ந்த சமூக நிலையின் சில வகைகள் ஆகும்.
ஏதோ ஒரு விஷயத்தில் மேற்குடிப் பண்புகளைப் பெற்றுள்ள ஒரு குடும்பம் அவர்களுக்கு விருப்பம் இருந்தால், அவர்களுடைய குழந்தைகளை மற்ற எல்லா விஷயங்களிலும் அதைப் பெற்றுக்கொள்ள தகுதி உடையவர்களாக மாற்றலாம்.
சமூகத்தின் ஏற்றம் பிரபுத்துவத்தை நோக்கிச் செல்லும்.
இங்கிலாந்தில் வர்க்கம், இந்தியாவில் ஜாதியைப் போல் முக்கியமானது.
ஒருவர் ஜாதியை இழக்கலாம், அடைய முடியாது.
ஒரு முறை இழந்தது, நிரந்தரமாக இழந்ததுதான்.
அடுத்த தலைமுறையை, ஏதோ ஒரு மேற்குடிப் பண்பை நோக்கியோ அல்லது எல்லா விதமான மேற்குடிப் பண்புகளை நோக்கியோ செலுத்துவதற்கு, குடும்பத்தைப்போன்ற வேறு ஒரு அமைப்பு கிடையாது.
குடும்பம் உணர்வுபூர்வமான அறிவை பயனுடையதாக்குகிறது.
குடும்பம் சமூகத்தின் ஒரு உணர்வுபூர்வமான பகுதி ஆகும்.

It is not the object of this work to give a description of Derbyshire, nor of any of the remarkable places through which their route thither lay: Oxford, Blenheim, Warwick, Kenelworth, Birmingham, etc., are sufficiently known. A small part of Derbyshire is all the present concern. To the little town of Lambton, the scene of Mrs. Gardiner's former residence, and where she had lately learned that some acquaintance still remained, they bent their steps, after having seen all the principal wonders of the country; and within five miles of Lambton, Elizabeth found from her aunt that Pemberley was situated. It was not in their direct road, nor more than a mile or two out of it. In talking over their route the evening before, Mrs. Gardiner expressed an inclination to see the place again. Mr. Gardiner declared his willingness, and Elizabeth was applied to for her approbation.
டர்பிஷயரைப் பற்றி விவரிப்பது இங்கு உத்தேசம் அல்ல, அல்லது வழியில் வருகின்ற பிரமிக்க வைக்கும் இடங்களைப் பற்றி விவரிப்பதும் இங்கு நோக்கம் அல்ல; ஆக்ஸ்போர்ட், பிலென்ஹீம், வார்விக்,கெனல்வொர்த், பர்மிங்ஹாம் இவைகளைப்பற்றி எல்லாம் போதுமான அளவு தெரியும். டெர்பிஷயரில் உள்ள ஒரு சிறிய பகுதி மட்டுமே தற்பொழுது கவனத்திற்குரியது. திருமதி. கார்டினர் முன்பு வசித்த லாம்ப்டன் என்ற சிறிய ஊரில், அவளுக்குத் தெரிந்தவர்கள் அங்கு இன்னமும் இருக்கிறார்கள் என்பதை சமீபத்தில் தெரிந்து கொண்டதால், அவர்கள் அங்கு சென்றனர். அங்கிருந்த முக்கியமான அதிசயங்களைக் கண்ட பிறகு, லாம்ப்டனிலிருந்து ஐந்து மைல் தூரத்தில்தான் பெம்பர்லி இருக்கிறது என எலிசபெத் தன்னுடைய அத்தையிடமிருந்து தெரிந்துகொண்டாள். அவர்கள் செல்லும் நேர் பாதையில் பெம்பர்லி இல்லை, ஓரிரு மைல் தூரத்தில் இருந்தது. தங்களுடைய பிரயாணத்தைப்பற்றி முன்தினம் மாலை பேசும் பொழுது, அவ்விடத்தை மீண்டும் காண திருமதி. கார்டினரும் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். திரு. கார்டினர் அதற்குச் சம்மதம் தெரிவித்தார், எலிசபெத்தின் விருப்பமும் கேட்கப்பட்டது.

100. 'It is not in the direct road' – In Elizabeth's psychological route, Darcy is not in the direct road.
அது நேர் பாதையில் இல்லை. எலிசபெத்தின் மனதில் டார்சி நேர் பாதையில் இல்லை.

101. "after seeing all the principal wonders of the country".
England is a country of pretty rural scenes.
Their parks are their pride.
Pemberley spread over perhaps, ten thousand acres was beautifully laid out in a naturally beautiful scenery.
Elizabeth at the first sight of Pemberley from a distance voiced her change of attitude.
Wonder is an overwhelming emotion.
Emotions surging leaving the senses paralysed is wonder.
What happened to Elizabeth was exactly that.
She never knew that she was such a wonder to Darcy.

Her senses were overpowered.
His imagination was captivated.
Darcy wondered at the dexterity of her movement and the delicacy of her manners.
Pemberley, the very sight of it, cured her petulant perversity.
The building, its majestic appearance does to the physical appreciation what ceremonies do to nerves.
Akbar was so impressed by the loftiness of Indian religious ideals.
Sri Aurobindo saw Kali emerging out of the idol.
It was a response of stone to the spiritual liveliness in Him.
The very soil where a saint is buried is made sacred.
Mother told a sadhak to go to the Guest House where She had lived and said he could find Her atmosphere there.
Romance is the wonder of a newly emerging relationship.
Descending Silence reveals spiritual wonders of magnificence.
Fully received, it yields wonders in daily life.
Consecrated food while being assimilated gives a thrill of wonder, wonder of digestion.
Negotiation is a wonder of civilization which replaced bloodshed.
“அங்கிருந்த முக்கியமான அதிசயங்களைப் பார்த்த பிறகு.”
அழகிய கிராமப்புறக் காட்சிகளைக் கொண்டது இங்கிலாந்து.
அவர்களது பூங்காக்கள் அவர்களுடைய பெருமை.
பத்தாயிரம் ஏக்கரில் மிக அழகாக அமைக்கப்பட்ட இயற்கை கொஞ்சும் காட்சிகளைக் கொண்டது பெம்பர்லி.
தொலைவிலிருந்தே முதன் முதலாக பெம்பர்லியை கண்ட எலிசபெத், தன்னுடைய மாறிய மனோபாவத்தை வெளிப்படுத்தினாள்.
வியப்பு என்பது தீவிரமான உணர்ச்சியாகும்.
மேலெழும் உணர்ச்சிகள் புலன்களை செயலிழக்கச் செய்யும்பொழுது வியப்பு எழுகிறது.
எலிசபெத்திற்கு ஏற்பட்டது இது போன்ற அனுபவமாகும்.
இந்த அளவிற்கு அவள் டார்சிக்கு ஓர் அற்புதம் என்று அவளுக்குத் தெரியவே இல்லை.
அவளுடைய புலன்கள் அவளை ஆட்கொண்டன.
அவனுடைய கற்பனை கவரப்பட்டது.
அவளுடைய லாவகமான அசைவுகளும், மென்மையான நடத்தையும், டார்சியை ஆச்சரியப்பட வைத்தன.
பெம்பர்லியைப் பார்த்த மாத்திரத்திலேயே அவளுடைய துடுக்கான குதர்க்கம் மறைந்து போனது.
சடங்குகள் உணர்வுகளுக்கு என்ன உணர்ச்சிகளை அளிக்குமோ, அவற்றை அக்கட்டிடமும் அதன் தோற்றமும் ஜடநிலையில் எழும் பாராட்டுக்கு அளிக்கின்றன.
இந்திய மதத்தின் இலட்சியங்களின் மேன்மையால் அக்பர் மிகவும் கவரப்பட்டார்.
விக்கிரகத்திலிருந்து காளி வெளி வருவதை ஸ்ரீ அரவிந்தர் கண்டார்.
அது பகவானின் ஆன்மீக உயிரோட்டத்திற்கு கல் அளித்த பதில் ஆகும்.
புண்ணிய புருஷன் அடக்கம் செய்யப்பட்ட மண் புனிதமாகிறது.
அன்னை முன்னம் தான் வசித்து வந்த விருந்தினர் விடுதிக்கு ஒரு சாதகரை செல்லும்படி கேட்டுக் கொண்டார்.
தன்னுடைய சூழலை அங்கு பார்க்கலாம் என்று சாதகரிடம் கூறினார்.
புதிதாக வெளி வரும் உறவின் அற்புதம்தான் காதலாகும்.
கீழிறங்கும் மௌனம் கம்பீரமான ஆன்மீக அற்புதங்களை வெளிப்படுத்தும்.
முழுமையாகப் பெற்றுக் கொண்டால், அது தினசரி வாழ்க்கையில் அற்புதங்களை அளிக்கும்.
சமர்ப்பணம் செய்யப்பட உணவு ஜீரணம் ஆகும் பொழுது ஆச்சரியத்தில் உடல் சிலிர்க்கும்.
இரத்தம் சிந்துவதை நிறுத்தும் பேச்சு வார்த்தை நாகரிகத்தின் அற்புதமாகும்.

102. “It is not in their direct route”.

Grace when acts thrusts luck on oneself.
Mrs. Gardiner had already seen the place. Now she wanted to see it for Elizabeth’s sake, a clear act of thrusting her into her luck.
Elizabeth was distressed, expressed disinclination.
Here it is Elizabeth being forced into good fortune by her aunt.
Really it is Darcy who insisted on Elizabeth being raised to the throne.
Kamaraj was a town crier, an uneducated Congress volunteer.
In 1940 he became the Chief of Tamilnadu Congress just to keep Rajaji out of it. **That was his eternal heavens**.
From 1946 to 1952 he made four chief Ministers. In 1954 he became the Chief Minister and was there till 1964. This was a second stint of luck that comes to the rare few. He resigned to become the All India Congress committee chief, a post for non-entities. During his tenure the post itself rose in value. He became the most popular Congress leader in India. Hereafter Mother acted in his life. He made two Prime Ministers, missing it himself on the advice of jealous friends. **Mother creates a possibility where no potentiality exists.**

There is some little parallel here with Elizabeth.
I saw this opportunity in a Man's life. Readily he quit the arena lest he should be the recipient of Grace. People buried in hostile circumstances never can receive Grace. To escape the hostile conditions is their grace. Man sees vast inconceivable improvements in his life. That is the time he must capitalize his energies and organize his capacities. **The excuses they give at that time express human resourcefulness to escape grace.** At least in one case I was determined to thrust it on him. In the end, he came to me and said he would be at peace if he withdrew. Human choice is always powerful.
Choice is luck.
"அது அவர்களது நேர் பாதையில் இல்லை."
அருள் செயல்படும்பொழுது அதிர்ஷ்டத்தை ஒருவர் மீது திணிக்கும்.
திருமதி கார்டினர் அந்த இடத்தை ஏற்கனவே பார்த்திருக்கிறாள். இப்பொழுது எலிசபெத்திற்காக மீண்டும் பார்க்க விரும்புகிறாள், அவள் மீது அதிர்ஷ்டத்தை திணிக்கும் தெளிவான செயலாகும்.
எலிசபெத்திற்கு வருத்தம் ஏற்படுகிறது, விருப்பமின்மையைத் தெரிவிக்கிறாள்.
எலிசபெத்தின் மீது அவளுடைய அத்தையின் மூலம் அதிர்ஷ்டம் திணிக்கப்படுகிறது.
உண்மையில் டார்சிதான் அவளை சிம்மாசனத்தில் உட்கார வைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறான்.
காமராஜர் ஒரு தண்டோரா போடுபவர், படிக்காத காங்கிரஸ் தொண்டர்.
1940-ல் இராஜாஜியை தடுப்பதற்காக அவர் காங்கிரஸ் கட்சியின் தலைவராக மாறினார். **அது அவருக்கு நிரந்தர நன்மையாக மாறியது.**
1946-முதல்1952-வரை அவர் நான்கு முதல் மந்திரிகளை உருவாக்கினார். 1954-ல் அவர் முதல் மந்திரியானார், 1964-வரை ஆட்சியில் இருந்தார். இம்மாதிரி அதிர்ஷ்டம் மிகச் சிலருக்கே கிடைக்கும். முக்கியமல்லாத பதவியான அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராவதற்கு தன் மந்திரி பதவியை ராஜினாமா செய்தார். ஆனால் அவருடைய பதவி காலத்தில் அதனுடைய மதிப்பு உயர்ந்தது. அவர் இந்தியாவிலேயே மிகவும் பிரபலமான காங்கிரஸ் தலைவராகத் திகழ்ந்தார். இதற்குப் பிறகு அன்னை அவர் வாழ்க்கையில் செயல்பட்டார். இரண்டு பிரதம மந்திரிகளை உருவாக்கினார், சில பொறாமை பிடித்த நண்பர்களின் அறிவுரையைக் கேட்டு தனக்கு கிடைத்த வாய்ப்பை நழுவ விட்டார். **எந்த வித வாய்ப்பும் இல்லாதபோது அன்னை சாத்தியங்களை உருவாக்குகிறார்.**
இதற்கு சிறிதளவு இணையானதொன்றை இங்கு எலிசபெத்திடம் பார்க்கலாம்.
ஒரு மனிதனின் வாழ்க்கையில் இந்த வாய்ப்பினை நான் பார்த்தேன். அருள் கிடைத்து விடுமோ என்று நினைத்து, உடனடியாக அவர் அந்த இடத்தை விட்டு அகன்றார். தீய சூழ்நிலைகளில் மூழ்கியிருப்பவர்கள் அருளை பெற்றுக்கொள்ளவே முடியாது. தீய நிலையிலிருந்து தப்பித்துக்கொள்வதே அவர்களுக்கு அருளாகும். மனிதன் அவனது வாழ்க்கையில் நினைத்தும் பார்க்க முடியாத அளவிற்கு முன்னேற்றங்களைக் காண்கிறான். இந்தச் சமயத்தில்தான் அவன் தன்னுடைய சக்திகளை சாதகமாக பயன்படுத்த வேண்டும், தன்னுடைய திறமைகளை முறைப்படுத்த வேண்டும். **அந்த விஷயத்தில் அவர்கள் கூறும் சமாதானம், அருளிலிருந்து தப்பிக்க அவர்களுடைய சமயோசித உபாயமாகும்.** ஒரு விஷயத்திலாவது அருளை அவர் மீது திணிக்க நான் தீர்மானமாக இருந்தேன். இறுதியில் அவர் என்னிடம் வந்து, தான் இங்கிருந்து விலகினால் தனக்கு நிம்மதி கிடைக்கும் எனக் கூறினார். மனித விருப்பம் மிகவும் சக்தி வாய்ந்தது.
தேர்ந்தெடுப்பது அதிர்ஷ்டமாகும்.

103. Elizabeth was applied for approbation".
Freedom becomes real not when taken, but when extended.
She is young and a guest, a woman. The question of her having an opinion does not arise. Uncle and aunt treat her as an equal and seek her approval.
The force of law lies in the spirit of implementation.
This is a great valuable social truth.
It is true of our values.
The power of our values lies in the practice of them.
Law, social values, personal values are aspects of a community's culture.
Often, especially in degenerating older cultures, society develops schizophrenia, in the sense Man is corrupt in public life, its opposite in personal life.
It has other expressions too.
Men whose honour is impeccable in every aspect, in their conduct with women exhibit a disgusting corruptibility.
Values are valuable wherever they are followed in whatever measure they are followed.
When Man either individually or collectively should rise to the next level of social existence, values are valueless unless they are perfectly followed.
All the progress China is making in prosperity when evaluated in terms of human dignity will work in the reverse.
The great sense of honour of Japan cannot contribute to the growth of individual value.
What with the Brahman, Sachchidananda, moksha in India as reliability in public or private life is nil.

For seventy years the USSR offered guaranteed employment. On her demise, in view of the individual of value being absent, the mafia reared its head.

Great values are great, laudable, commendable in their own zone, not for the nation unless they are universal and perfect.

The individuality of children will take shape by the treatment to them as Elizabeth now receives.

“எலிசபெத்தின் ஒப்புதல் நாடப்பட்டது.”

சுதந்திரம் எடுத்துக்கொள்ளப்படும்பொழுது உண்மையாக இருக்காது, கொடுக்கும்பொழுதுதான் உண்மையாக இருக்கும்.

அவள் வயதில் சிறியவள், விருந்தினர், ஒரு பெண்மணியும்கூட. அவளுக்கு ஒரு அபிப்பிராயம் இருக்கலாம் என்ற கேள்விக்கே இங்கு இடமில்லை. மாமாவும், அத்தையும் அவளை சமமாக நடத்துகின்றனர் அவளுடைய சம்மதத்தை நாடுகின்றனர்.

சட்டத்தின் வலிமை அதை செயல்படுத்துவதில் உள்ளது.

இது பெரிய விலைமதிப்பற்ற சமூக உண்மையாகும்.

இது நம் பண்புகளுக்கும் பொருந்தும்.

நமது பண்புகளின் சக்தி அதை நடைமுறைப்படுத்துவதில் உள்ளது.

சட்டம், சமூகப் பண்புகள், தனிப்பட்ட பண்புகள் யாவும் சமுதாய கலாச்சாரத்தின் பதிப்புகளாகும்.

முக்கியமாக அழிந்து கொண்டிருக்கும் பழைய நாகரிகங்களில் மனிதன் பொது வாழ்க்கையில் ஒழுக்கமற்றவனாகவும், சொந்த வாழ்க்கையில் அதற்கு மாறாக நடந்து கொள்பவனாகவும் சமூகம் மாறி வருகிறது.

அதற்கு மற்ற வெளிப்பாடுகளும் உள்ளன.

எல்லா விதங்களிலும் மிகவும் கௌரவமான மனிதன், பெண்களிடம் நடந்துகொள்ளும்பொழுது மட்டும் வெறுக்கத்தக்க வகையில் மோசமாக நடந்துகொள்கிறான்.

பண்புகள் எங்கெல்லாம் பின்பற்றப்படுகின்றனவோ, எந்த அளவில் பின்பற்றப்படுகின்றனவோ அதற்கேற்றார்போல் அவை மதிக்கப்படும்.

சமூகத்தில் மனிதன் தனியாகவோ அல்லது எல்லோருடன் சேர்ந்தோ அடுத்த நிலைக்கு உயரும்பொழுது பண்புகளை சிறப்பாகப் பின்பற்றப்படாவிட்டால் அவற்றிற்கு மதிப்பு இல்லை.

செல்வ வளத்தில் சீனாவின் எல்லா முன்னேற்றங்களையும் மனித கண்ணியம் எனும் நோக்கில் கணிக்கும் பொழுது, அது தலை கீழாக இருக்கும்.

ஜப்பானின் சிறந்த மரியாதை உணர்வு தனி நபரின் பண்பை வளர்க்க உதவுவதில்லை.

பிரம்மம், சச்சிதானந்தம், மோக்ஷம், இவை யாவும் இந்தியாவில் இருந்தும் பொது வாழ்க்கையிலும், தனி நபர் வாழ்க்கையிலும், நம்பகத்தன்மை என்பது சற்றும் இல்லை.

எழுபது வருடங்களாக ரஷ்யா எல்லோருக்கும் உறுதியாக வேலை அளித்து வந்தது. ரஷ்யா அழிந்தவுடன் தனி நபர் பண்புகள் எதுவும் இல்லாத காரணத்தால், குற்றம் இழைப்பவர்கள் தலை தூக்கினர்.

உயர்ந்த பண்புகள் அவற்றின் இடத்தில் மட்டுமே உயர்ந்ததாகவும், பாராட்டத்தக்கதாகவும், போற்றத்தக்கதாகவும் இருக்கின்றன.

அவை எல்லா விஷயங்களிலும் இருந்து பூரணமாகவும் இருந்தால் மட்டுமே நாட்டிற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

தற்பொழுது எலிசபெத் பெறுவதுபோல் குழந்தைகளுக்கு தனி கவனம் அளித்தால் அவர்களது தனித்தன்மை உருவாகும்.

"*My love, should not you like to see a place of which you have heard so much?" Said her aunt; "A place, too, with which so many of your acquaintance are connected. Wickham passed all his youth there, you know."*

“எனதருமை லிசி, நீ அதிகம் கேள்விப்பட்டிருக்கும் இடத்தைப் பார்ப்பதற்கு விருப்பம் இல்லையா உனக்கு?” என்று கேட்ட அவளது அத்தை, “உனக்குத் தெரிந்தவர்கள் பலர் சம்பந்தப்பட்ட இடம் வேறு, விக்காம் தன் இளவயது முழுவதும் அங்குதான் கழித்தான் என்பது உனக்குத் தெரியும்,” என்றாள்.

104. Mrs. Gardiner exerts herself to bring Elizabeth to Pemberley.
எலிசபெத்தை பெம்பர்லிக்கு அழைத்து வர திருமதி கார்டினர் முயற்சி எடுக்கிறாள்.

105. Mrs. Gardiner exerted herself to wean Elizabeth from Wickham. The sweetness in her personality actively brings Elizabeth to Darcy. Its outer version is this exertion to persuade Elizabeth to see Pemberley.
விக்காமிடமிருந்து எலிசபெத்தை அகற்ற திருமதி கார்டினர் முயற்சி எடுக்கிறாள். அவளிடம் இருக்கும் இனிமையான சுபாவம் எலிசபெத்தை டார்சியிடம் கொண்டு சேர்க்கிறது. எலிசபெத்திற்கு பெம்பர்லியை காண்பிப்பதில் அவள் எடுக்கும் முயற்சி இதன் வெளிப்பதிப்பாக உள்ளது.

106. Mrs. Gardiner uses the name of Wickham to go to Pemberley.
பெம்பர்லிக்கு அழைத்துச் செல்வதற்கு, திருமதி கார்டினர் விக்காமின் பெயரை உபயோகப்படுத்துகிறாள்.

107. In such situations, man seeks his object through its opposite.

இது போன்ற சந்தர்ப்பங்களில் மனிதன் தனக்கு வேண்டியதை அதற்கு நேர் மாறானதன் மூலம் நாடுகிறான்.

108. Sri Aurobindo got Freedom through Churchill who won the war and made Freedom possible.
போரில் ஜெயித்து சுதந்திரத்தை சாத்தியமாக்கிய சர்ச்சில் மூலம், ஸ்ரீஅரவிந்தர் சுதந்திரம் பெற்றார்.

109. Foolishly Subash Chandra Bose sought freedom through the Japanese.
சுபாஷ் சந்திரபோஸ் முட்டாள்தனமாக ஜப்பானியர்கள் மூலம் சுதந்திரத்தை நாடினார்.

110. Mrs. Bennet seeks Bingley through her unwelcome initiatives.
திருமதி பென்னட் தன்னுடைய வேண்டாத தன்முனைப்புகளால் பிங்கிலியை நாடுகிறாள்.

111. Man seeks God through his ego.
மனிதன் அவனுடைய அகந்தை மூலம் இறைவனை நாடுகிறான்.

112. Mrs. Gardiner insists on Elizabeth visiting Pemberley acting as a good angel.
நல்லெண்ணம் கொண்ட திருமதி கார்டினர், எலிசபெத் பெம்பர்லிக்கு விஜயம் செய்வதை வற்புறுத்துகிறாள்.

113. “Should you not like to see the place of which you have heard so much”.

Man progresses in the measure of his aspiration.
Knowledge is what interest offers.
Education is a great tool of progress as it creates interest.
What is unknown evokes no interest.
The unknowable becomes knowable according to human quest.
Aspiration is the measure of Man.
USSR came down when the population knew of the outside world.
In marriage people seek selfish domination and get frustration.
Seek to know the human greatness in the spouse, you will rise high in your inner worth.
Discover the genius in the child, you will know the scale where genius is the first step.
Economic goal is not for the cultured Man. Seeking it, one ends in limits to growth, pollution, and terrorism.
For Man, economics is a useful plane, not a plane where one has to reach an ideal.
What would you think of a Man or society that idolizes the landed gentry as the ultimate goal of Mankind?
Even education does not qualify to be the ultimate goal.
It led Greece nowhere.
Presently it is an unpardonable superstition to follow an economic goal as an ideal for any nation.
Today we see the distinguished elite speaking with one voice about demography, pollution, speculation.
This is no voice of Mankind.
It is the voice of Babel.
Surely anyone voicing the consciousness of Mankind will be speaking for her conscience.
Conscience itself is something to be overcome.
Such a Man will be heard with respect.

“நீ இவ்வளவு அதிகமாகக் கேள்விப்பட்டிருக்கும் இடத்தைப் பார்க்க உனக்கு விருப்பமில்லையா?”
மனிதன் அவனுடைய ஆர்வத்திற்கேற்ப முன்னேறுகிறான்.
ஆர்வம் அளிப்பது அறிவு.
கல்வி ஆர்வத்தை உருவாக்குவதால் முன்னேற்றத்திற்குப் பெரிய கருவியாக உள்ளது.
தெரியாத விஷயம் எந்த ஆர்வத்தையும் எழுப்பாது.
மனிதனின் தேடலுக்கு ஏற்றார்போல் அறியமுடியாதது அறிய முடிவதாகிறது.
ஆர்வத்தை வைத்து மனிதனை அளவிடலாம்.
ரஷ்ய மக்களுக்கு வெளி உலகத்தைப் பற்றித் தெரிந்தவுடன் USSR மறைந்து போனது.
திருமணத்தில் மக்கள் சுயநலமான அதிகாரத்தை நாடி ஏமாற்றம் அடைகின்றனர்.
தம்பதிகள், மற்றவரிடம் இருக்கும் உயர்ந்ததை தெரிந்துகொள்வதற்கு முயல்வதன் மூலம் அவர்களுடைய அக மதிப்பு உயரும்.
குழந்தையிடம் இருக்கும் மேதாவித்தனத்தைக் கண்டு பிடித்தால், அளவுகோளில் மேதாவித்தனம் முதல் படியாக இருக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம்.
நாகரிகமான மனிதனுக்கு பொருளாதார இலக்கு கிடையாது. அதை நாடும்பொழுது, வளர்ச்சி, தூய்மைக் கேடு, தீவிரவாதம் இவற்றிற்குத் தடை ஏற்பட்டு விடும்.
மனிதனுக்கு, பொருளாதாரம் ஒரு பயனுள்ள நிலையாகும், ஆனால் ஒரு இலட்சியத்தை அடையும் நிலையல்ல.
மனித குலத்தின் முடிவான இலட்சியமாக நிலச்சுவாந்தார்களை, மனிதனோ அல்லது சமூகமோ பூஜிப்பதை பற்றி நாம் என்ன நினைப்போம்?
கல்வியும் முடிவான இலட்சியமாகக் கருதப்பட தகுதி வாய்ந்ததல்ல.
அது கிரேக்க நாட்டை எந்த வகையிலும் வழி நடத்தவில்லை.
தற்பொழுது எந்த ஒரு நாடும் பொருளாதாரத்தை ஒரு இலட்சியமாக பின் பற்றுவது மன்னிக்க முடியாத மூட நம்பிக்கையாகும்.

மக்கட்தொகை, தூய்மைக் கேடு, பங்குச் சந்தை இவற்றைப் பற்றித்தான் பெரிய மனிதர்கள் இன்று ஒரே குரலில் பேசுகின்றனர்.

மனித குலத்தின் குரலல்ல இது.

குழப்பத்தின் குரல் இது.

மனித குலத்தின் உணர்வை ஒருவர் பேசினால் அவர் தன்னுடைய உணர்வை பேசுகிறார்.

மனசாட்சியே வெல்லப்பட வேண்டிய ஒன்று.

அது போன்ற மனிதன் பேசுவது மரியாதையுடன் கேட்டுக்கொள்ளப்படும்.

114.“Wickham passed all his youth there”.

Darcy never came to her Mind.

A gift is valued for its wrapper.

Having seen his mercenary nature, her aunt valued the place he grew up in.

For the woman, a handsome face is of ultimate value.

The Prince of Wales was given an income of £50,000. Glencora with that income said she would let Burgo throw away all that money to win his love. What she did not know was after all that Money was spent, he would be furious at her for not having more. Unless she enjoyed his cruelty there would be nothing for her to enjoy. Of course, Love, cannot survive.

The spending of that Money will raze out any humanity he had.

Spending creates an addiction.

He would not know it was her Money.

She would become detestable for having exhausted her supply.

Hers is a temperament that needed that experience.

Not only a handsome face, but every article that creates that craving for dissipation leading to addiction has that character.

Sackcloth, ashes, bed of nails will be smaller cruelties for the body when one thus aspires for the Non-Being.

That is not an avenue Mankind has so far explored.

Sri Aurobindo offers a path that includes the Non-Being in its journey as his path overcomes ego and Nature thus avoiding evil.

A Mind that contemplates what He offers us now, rises to Supermind.

It is the throne to the beggar maid.

No wonder the surface Mind includes the earth, the universe and the superconscient along with its counterpart the inconscient.

Man can get a glimpse of the magnificence when he contemplates the concept of Waking Samadhi.

His spiritual atmosphere was there for seven and half miles around Pondicherry. Now it is all over the world.

“விக்காம், அவனது இளம் வயது முழுவதையும் அங்குதான் கழித்தான்.”

டார்சி அவளுடைய நினைவுக்கே வரவில்லை.

ஒரு பரிசுப் பொருள், அதைச் சுற்றியுள்ள காகிதத்திற்காக மதிக்கப்படுகிறது.

அவனுடைய ஆதாய மனப்பான்மையைப் பார்த்திருந்ததால், அவளுடைய அத்தை அவன் வளர்ந்த இடத்தை மதிப்பீடு செய்தாள்.

ஒரு பெண்ணுக்கு அழகிய முகம்தான் மதிப்பு வாய்ந்தது.

வேல்ஸ் இளவரசருக்கு 50,000 பவுன் வருமானம் இருந்தது. இந்த அளவு வருமானம் உடைய Glencora, Burgoவின் அன்பைப் பெறுவதற்காக, அவனை அப்பணத்தை முழுவதும் செலவழிக்க அனுமதி அளிப்பதாகக் கூறினாள். அப்பணம் முழுவதும் செலவழிந்தபின் மேற்கொண்டு அவளிடம் பணம் இல்லாததற்காக அவன் அவளிடம் தன் கோபத்தை வெளிப்படுத்துவான் என்று அவளுக்குத் தெரியவில்லை. அனுபவிப்பதற்கு அவனுடைய கொடுமையைத் தவிர அவளுக்கு வேறு ஒன்றும் இல்லை. எப்படியும் காதல் நீடிக்காது.

அந்தப் பணத்தை செலவழிப்பது அவனிடம் மீதமுள்ள எல்லா மனிதத் தன்மையையும் அழித்து விடும்.

செலவழிப்பது செலவழிக்கும் பழக்கத்திற்கு அடிமையாக்கி விடும்.

அவளுடைய பணம் என்று அவனுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

அவளுடைய பணத்தை தீர்த்து விட்டதற்காக அவள் வெறுக்கப்பட்டவளாக மாறுவாள்.

அவளுடைய சுபாவத்திற்கு அந்த அனுபவம் தேவைப்படுகிறது.

அழகிய முகம் மட்டும் அல்ல, அழிவைத் தூண்டி அதற்கு அடிமையாக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் அந்த குணம் உண்டு.

இவ்வாறு அசத்தை நாடும் ஒருவருடைய உடலுக்கு சாக்குத் துணியாலான உடை, சாம்பல், ஆணிகளாலான படுக்கை ஆகியவை சிறிய கொடுமைகளாக இருக்கும்.

இதுவரை மனித குலம் ஆராயாத இடம் அது.

அகந்தையையும் இயற்கையையும் வென்று தீமையைத் தவிர்த்து அசத்தையும் உட்கொண்ட ஒரு பாதையை ஸ்ரீஅரவிந்தர் அளிக்கிறார்.

பகவான் இப்பொழுது நமக்களிப்பதை கவனமாக கருத்தில் எடுத்துக்கொள்ளும் மனம், சத்திய ஜீவியத்திற்கு உயரும்.
அது பிச்சைக்காரிக்கு சிம்மாசனம் அளிப்பது போலாகும்.
பூமி, பிரபஞ்சம், பிரம்மம் அதனுடைய மறுவடிவமாக இருக்கும் ஜடஇருள் யாவும் மேல் மனத்தில் அடங்கியுள்ளதைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.
விழிப்பு நிலையில் சமாதி எனும் கருத்தை மனிதன் கருத்தில் எடுத்துக்கொண்டால், அவனுக்கு பிரம்மாண்டத்தின் க்ஷணத் தோற்றம் கிடைக்கும்.
பகவானின் ஆன்மீகச் சூழல் பாண்டிச்சேரியைச் சுற்றி ஏழரை மைலுக்கு பரவி இருந்தது. இப்பொழுது உலகம் முழுவதும் பரவி உள்ளது.

Elizabeth was distressed. She felt that she had no business at Pemberley, and was obliged to assume a disinclination for seeing it. She must own that she was tired of great houses; after going over so many, she really had no pleasure in fine carpets or satin curtains.
எலிசபெத்திற்கு வேதனை அதிகரித்தது, தனக்கு அங்கு வேலை எதுவும் இல்லை என்பதை உணர்ந்த அவள், பெரிய வீடுகளை பார்த்த அசதியாலும், அங்குள்ள நேர்த்தியான தரை கம்பளங்களிலும் அல்லது பட்டுத் துணியாலான திரைச் சீலைகளில் எந்த வித நாட்டமும் இல்லாத காரணத்தால், அங்கு செல்வதற்கு மறுப்பு தெரிவிக்க நினைத்தாள்.

115. "Elizabeth was obliged to assume disinclination".
One sadak complained to Him when Mother announced that the Supermind would descend in the playground.
He left the ashram before its descent.
Sri Aurobindo treated him as his son, another as his brother.
As the grace comes closer Man readily announces his willingness to depart.
This is a power that can create the CEO of the first company in the world if gratefully received.
It needs Sincerity, Opening, Receptivity, Gratitude, Surrender. With some excuse anyone can be trained to reach that height.
But Man readily goes away and stations himself at a place where we should not go.
The indulgence He practiced was Himalayan.
After meeting Darcy at Pemberley to his question of how she found the place she answered 'delightful' and restrained herself on the sense of politeness. She did not mind being false and insincere. It took her breath away. **She should have told him that truth.**
The word daridhram தரித்ரம் means poverty of falsehood, rather the personification of eternal poverty.
Man is wedded to daridhram and is proud of it.
The vital spirits he worships perpetuate daridhram.
The wealth these temples accumulate is the wealth of poverty.
Money is the foundation of Supermind.
It is the Money earned in truth.
One who has earned several crores trying to earn one lakh by the path of Truth will miserably fail.
The path Money takes follows its character.
It is also true Money can change its character.
To effect such a change Man should have allowed the Psychic to emerge. Even then it is not so easy.
"எலிசபெத் விருப்பம் இல்லாதவள்போல் பாவனை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானாள்."
விளையாட்டு மைதானத்தில் சத்தியஜீவியம் இறங்கும் என்று அன்னை சொன்ன போது ஒரு சாதகர், பகவானிடம் புகார் செய்தார்.
அது இறங்குவதற்கு முன் அவர் ஆசிரமத்தை விட்டு அகன்றார்.
பகவான் அவரை ஒரு மகன் போலவும் மற்றொரு சாதகரை சகோதரர் போலவும் நடத்தினார்.
அருள் அருகில் வரும் போது மனிதன் அங்கிருந்து அகலுவதற்குத் தயாராக இருக்கிறான்.
இதனை நன்றியுடன் ஏற்றுக்கொண்டால் உலகத்திலேயே மிகச் சிறந்த நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஒருவர் அடையலாம்.
அதற்கு உண்மை, திறந்த மனம், ஏற்றுக்கொள்ளும் தன்மை, நன்றி அறிதல் மற்றும் சரணாகதி தேவை.
எவருக்கு வேண்டுமானாலும் இந்த உயர்ந்த நிலையை அடைவதற்கு பயிற்சி அளிக்கலாம்.
ஆனால் மனிதன் உடனே அங்கிருந்து வெளியேறி நாம் போகக்கூடாத இடத்திற்குச் சென்று விடுவான்.
இதற்கு பகவான் செய்தது இமாலய முயற்சி ஆகும்.
டார்சியை பெம்பர்லியில் சந்தித்த பின், அவன் அந்த இடம் எப்படி உள்ளது என்று வினவியதற்கு, அவள் மிகவும் அழகாக இருப்பதாகக் கூறி தன்னை கண்ணியமாகக் கட்டுப்படுத்திக்கொண்டாள். பொய்யாகவும், உண்மையற்றும் இருப்பதற்காக அவள் கவலைப்படவில்லை. அவளுடைய நடத்தை அவளையே ஆச்சரியப்பட வைத்தது. அவள் உண்மையைச் சொல்லியிருக்க வேண்டும்.

தரித்திரம் என்ற சொல் பொய்மையின் ஏழ்மையைக் குறிக்கும், நிரந்தரமான ஏழ்மையின் உருவமாகவும் கருதலாம்.
மனிதன் ஏழ்மையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அதற்காகப் பெருமையும் படுவான்.
உணர்வுபூர்வமான சிறு தெய்வங்களை ஒருவன் தொழுதால், அவை தரித்திரத்தை நிரந்தரமாக நிலைநிறுத்தும்.
இந்தக் கோவில்களில் சேர்ந்து வரும் செல்வங்கள் ஏழ்மையின் செல்வமாகும்.
பணம் சத்திய ஜீவியத்தின் அடிப்படையாகும்.
அது உண்மையின் மூலம் சம்பாதித்த பணம்.
கோடிக்கணக்கில் சம்பாதித்தவரும் உண்மையான வழியில் ஒரு லட்சம் சம்பாதிக்க வேண்டும் என்கிற முயற்சியில் தோற்றுப் போவார்.
பணம் அதனுடைய சுபாவத்தின் வழி நடக்கும்.
பணம் அதனுடைய சுபாவத்தை மாற்றும் என்பதும் உண்மை.
அது போன்ற ஒரு மாற்றம் ஏற்பட வேண்டுமென்றால், மனிதன் சத்திய ஜீவியம் வெளிவர அனுமதித்திருக்க வேண்டும். அப்படியும் அது சுலபமல்ல.

Mrs. Gardiner abused her stupidity. "If it were merely a fine house richly furnished," said she, "I should not care about it myself; but the grounds are delightful. They have some of the finest woods in the country."
திருமதி கார்டினர் அவளுடைய அறிவற்ற செயலை கண்டித்தார். "அது செல்வச் செழிப்புடன் அலங்கரிக்கப்பட்ட நேர்த்தியான இல்லமாக மட்டுமே இருந்திருந்தால் நானே அதைப் பற்றி அக்கறை கொண்டிருந்திருக்க மாட்டேன்; ஆனால் அங்கிருக்கும் தோட்டங்கள் அழகானவை. நாட்டின் தலை சிறந்த காடுகள் அங்குள்ளன," என்றாள்.

116. Mrs. Gardiner does not seek Pemberley because it is a fine house, richly furnished.
திருமதி கார்டினர் பெம்பர்லியை நாடுவதில்லை ஏனெனில் அது நேர்த்தியாக அழகாக அலங்கரிக்கப்பட்ட வீடாக உள்ளது.
117. Elizabeth does not seek Darcy because he is rich and handsome.
டார்சி பணக்காரனாகவும், அழகாகவும் இருப்பதால் எலிசபெத் அவனை நாடுவதில்லை.
118. "The grounds are delightful".
Elizabeth accepted Pemberley. Her aunt talked about the delightful grounds.
Earth is the Mother, Heaven is the Father. So we seek the mother first.
Of course, Elizabeth was dragged to Pemberley against her wishes.
Any great gift to humanity, be it education or insurance went begging to start with.
All India political leaders during their days of early entry used to go to the beach in search of an audience. The moment they started speaking the little crowd melted.
Fernand, Danglars accumulated wealth of falsehood.
Edmond earned his wealth by austerity of love and knowledge.
Raoul's love was intense, but being an inversion of a motherless child, it evoked no response. He could only die.
The grounds are the ground realities.
England is really an agricultural country but the Industrial Revolution came there, as they say, because of successful agriculture.
The best of a species is fit to leap out of it to the next, instead of preserving the existing one.
Her unwillingness to visit Pemberley must be understood from several points of view.

1. Social transition.
2. Personal fitness.
3. First contact with Darcy.
4. Role of goodwill of her aunt.
5. Darcy's aspiration.
6. The French Revolution.
7. Her position in the family.
8. Lydia's elopement.
9. Woman's need for property.
10. Life Response.

"அங்குள்ள தோட்டங்கள் பரவசப்படுத்தும்."
எலிசபெத் பெம்பர்லியை ஏற்றுக்கொண்டாள். அவளுடைய அத்தை அங்குள்ள அழகான தோட்டங்களைப் பற்றி பேசுகிறாள்.
பூமி தாயாகவும் சொர்க்கம் தந்தையாகவும் கருதப்படுவதால் நாம் முதலில் தாயை நாடுகிறோம்.
எலிசபெத் அவளது விருப்பத்திற்கு மாறாகப் பெம்பர்லிக்கு இழுக்கப்படுகிறாள்.

மனித குலம் எந்த பெரிய பரிசையும், அது கல்வியாக இருக்கட்டும், காப்பீடாக இருக்கட்டும், ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆரம்ப நாட்களில் அகில இந்திய அரசியல் தலைவர்கள் மக்களைத் தேடி கடற்கரைக்குச் சென்றனர். அவர்கள் உரை ஆற்றத் தொடங்கியவுடன் அங்குள்ள மக்கள் கலைய ஆரம்பித்தனர்.

Fernand, Danglars இருவரும் பொய்மையை செல்வமாக சேமித்து வைத்திருந்தனர்.

எட்மண்ட் தன்னுடைய அன்பின் தூய்மையினாலும், அறிவின் மூலமும் அவனது சொத்தை ஈட்டினான்.

Raoulன்அன்பு தீவிரமாக இருந்தது, ஆனால் தாயில்லாக் குழந்தையாக எதிரிடையாக இருந்ததினால் அது எந்த எதிர்வினையையும் தூண்டவில்லை. அவன் மரணம் அடைந்தான்.

தோட்டங்கள்தான் அடிப்படை உண்மை நிலை.

இங்கிலாந்து உண்மையில் விவசாயத்தை மேற்கொண்ட நாடாகும், ஆனால் வெற்றிகரமாக விவசாயம் செய்ததினால் அங்கு தொழில் புரட்சி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

வாழும் மக்களில் சிறந்தவர்கள், தற்பொழுதைய நிலையைப் பாதுகாப்பதில் ஈடுபடாமல் அடுத்த நிலைக்குச் செல்வதற்கு உகந்தவர்களாக இருக்கிறார்கள்.

பெம்பர்லிக்குச் செல்வதில் அவளுடைய விருப்பமின்மையை பல்வேறு கோணங்களில் புரிந்து கொள்ள வேண்டும்.

1. சமூக மாற்றங்கள்.
2. தனிப்பட்ட திறன்.
3. டார்சியுடன் ஏற்பட்ட முதல் அறிமுகம்.
4. அவளுடைய அத்தையின் நல்லெண்ணத்தின் பங்கு.
5. டார்சியின் ஆர்வம்.
6. பிரெஞ்சுப் புரட்சி.
7. குடும்பத்தில் அவளுடைய நிலை.
8. லிடியா ஓடிப்போனது.
9. பெண்ணுடைய சொத்தின் தேவை.
10. வாழ்வின் மறுமொழி.

Elizabeth said no more -- but her mind could not acquiesce. The possibility of meeting Mr. Darcy, while viewing the place, instantly occurred. It would be dreadful! She blushed at the very idea, and thought it would be better to speak openly to her aunt than to run such a risk. But against this there were objections; and she finally resolved that it could be the last resource, if her private enquiries as to the absence of the family were unfavourably answered.

எலிசபெத் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. ஆனால் அவள் மனம் ஒப்பவில்லை. அவ்விடத்தைப் பார்க்கும் பொழுது, ஒருவேளை டார்சியை சந்திக்க நேருமோ என்ற எண்ணம் உடனே எழுந்தது. அது மிகவும் கஷ்டமாகிவிடும்! அந்த எண்ணமே அவளுக்கு அவமானத்தைத் தந்தது; அப்படிப்பட்ட ஒரு ஆபத்தை எதிர் கொள்வதற்கு பதில் தன்னுடைய அத்தையிடம் அதைப்பற்றி வெளிப்படையாகப் பேசி விடுவது நல்லது என நினைத்தாள். ஆனால் இதற்கு எதிராகவும் சில ஆட்சேபணைகள் இருந்தன. பெம்பர்லியில் அந்த குடும்பம் ஊரில் இருக்கிறதா என தனிப்பட்ட முறையில் விசாரித்து அதற்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை என்றால் கடைசிப் பட்சமாக தனது அத்தையிடம் பேசலாம் என்ற முடிவுக்கு வந்தாள்.

119. She has the one dread of meeting Darcy.
டார்சியை சந்திப்பதில் அவளுக்கிருந்த பயம்.
120. ‘'She has the one dread of Darcy knowing of Lydia's elopement.'
லிடியா ஓடிப்போனதைப் பற்றி டார்சிக்குத் தெரிய வருவதில் அவளுக்கிருந்த பயம்.
121. Actually she blushes at the idea of his knowing her family as it is. It comes to the surface like this.
அவளுடைய குடும்பத்தின் நிலையைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருந்ததை நினைத்து அவள் உண்மையில் வெட்கப்படுகிறாள். அது மேல் மனதில் பயமாக எழுகிறது.
122. There were objections to speaking it out openly.
அதை வெளிப்படையாகப் பேச முடியாதபடி சில தடைகள் இருந்தன.
123. Human communication does not always further frankness.
மனிதனால் எப்பொழுதும் வெளிப்படையாகப் பேச முடியாத நிலை ஏற்படுகிறது.
124. It often achieves its purpose silently in the subtle plane.
சூட்சும நிலையில் அது பல சமயங்களில் மௌனமாக விஷயத்தை சாதித்துக் கொள்ளும்.
125. Desiring to be rational, if one speaks out in such occasions, you see the work will be at once spoiled.
விவேகமாக நடந்துகொள்ள விரும்பி, அது போன்ற சந்தர்ப்பங்களில் வாய் விட்டு பேசி விட்டால் வேலை உடனடியாக கெட்டுப் போவதை நாம் பார்க்கலாம்.
126. Achievement has gross as well as subtle dimensions.
சாதனைகளுக்கு ஸ்தூலமாகவும், சூட்சுமமாகவும் பரிமாணங்கள் உள்ளன.

127. Private enquiries are always right, allowing for exceptions.
தனிப்பட்ட முறையில் விசாரிப்பது எப்பொழுதுமே சரியாக இருக்கும், சில விதி விலக்குகள் இருக்கின்றன.
128. Usually the exceptions arise when you work against the purpose of life.
பொதுவாக, வாழ்க்கையின் நோக்கத்திற்கு எதிராக வேலை செய்யும்பொழுது விதிவிலக்குகள் எழும்.
129. Now she develops the curiosity we mentioned earlier.
நாம் முன் கூறிய ஆர்வம் அவளுக்கு இப்பொழுது எழுகிறது.
130. "The possibility of meeting Darcy while viewing the place".
Man's only point of view is his own selfish view.
Each Man thinks from the point of view of that with which he has identified.
Dr. Thorne told Mary that Roger's property was given away. She at once exclaimed "To Frank". It only shows Frank was uppermost in her thoughts. He was unconnected with Roger at all.
What thinks in Man is his ego, not his Mind!
She, who forgot his proposal, would find it natural not to think of Darcy on visiting Pemberley. Her aunt never thought of it.
She thought of him as he was there in her subconscious memory.
Man has totally forgotten God. It is God who remembers him.
To understand Man from his memory will give good results.
Jimmy Carter forgot Rosalin's birthday.
A village was ushered into unprecedented prosperity by the tireless work of a single Man against heavy odds. He was forgotten by the entire population at the time of review of the change.
The European Secretary whose state secret was stolen by his wife on getting the news of its discovery ran into the house crying 'Hilda' **to tell his wife first.**
Man loves his enemy dearly.
Dr. Alexander, after 40 years, remembered only T. Govinda Rajan from Annamalai University. His memory was due to the occult fact that he was in the place meant for T. Govinda Rajan.
Man seeking woman is Romance. The woman seeking Man is marriage.
Even when the woman is endowed with property, she needs a husband for social approval.
Property is the biological need, marriage is the social need.
Left to herself Glencora will choose Burgo, Elizabeth Wickham.
"இந்த இடத்தை சுற்றிப் பார்க்கும்பொழுது டார்சியை சந்திக்க நேரலாம்."
மனிதனின் ஒரே கண்ணோட்டம் அவனுடைய சுயநலமான கருத்துதான்.
ஒவ்வொரு மனிதனும் தான் அடையாளப்படுத்திக் கொண்ட கண்ணோட்டத்தின் வழியாகவே சிந்திப்பான்.
Roger உடைய சொத்தை கொடுத்து விட்டதாக Dr. Thorne மேரியிடம் கூறுகிறார். அவள் உடனே 'Frank' ற்கா என்று கேட்கிறாள். அவளுடைய எண்ணங்களில் Frank முன்னணியில் இருப்பது தெரிகிறது. அவனுக்கு Roger உடன் எந்த விதத் தொடர்பும் கிடையாது.
மனிதனுள் இருக்கும் அகந்தைதான் சிந்திக்கிறது, மனம் அல்ல.
டார்சியின் திருமண வேண்டுகோளை மறந்து விட்டிருந்த அவளுக்கு இயல்பாகவே பெம்பர்லிக்குச் செல்லும் பொழுது அவனைப் பற்றி நினைக்கக் கூடாது என்று தோன்றும். அவளுடைய அத்தைக்கு அந்த எண்ணமே இல்லை.
அவளுடைய ஆழமான ஞாபகத்தில் அவன் இருந்ததினால் அவன் ஞாபகம் எழுந்தது.
மனிதன் இறைவனை முழுமையாக மறந்து விட்டான். இறைவன்தான் மனிதனை ஞாபகம் வைத்துக் கொண்டுள்ளான்.
மனிதனுடைய ஞாபகத்தை வைத்து அவனை நன்றாகப் புரிந்துகொள்ளலாம்.
ரோசலினுடைய பிறந்த நாளை ஜிம்மி கார்ட்டர் மறந்து விட்டார்.
பல தடைகளை எதிர்த்து ஒரு தனி மனிதனுடைய உழைப்பு ஒரு கிராமத்தை சிறப்பாக வளமுடையதாக்கியது. மாற்றத்தின் காரணத்தை ஆராயும் பொழுது மொத்த மக்களும் அவரை மறந்து விட்டிருந்தனர்.
ஒரு ஐரோப்பிய காரியதரிசியின் மனைவி அரசு இரகசியத்தைத் திருடி விட்டாள். திருடப்பட்ட செய்தியைக் கேட்டு அவர் **மனைவியை, 'ஹில்டா' என்று அழைத்த வண்ணம் முதலில் அவளுக்கு அச்செய்தியைக் கூற வீட்டிற்குள் ஓடினார்.**
மனிதன் பகைவனை பெரிதும் விரும்புகிறான்.
நாற்பது வருடங்களுக்குப் பிறகு கவர்னர் அண்ணாமலை பல்கலை கழகத்திலிருந்த ஒரு ஆசிரியரை மட்டும் ஞாபகம் வைத்துக் கொண்டிருந்தார். ஆசிரியர் இருந்திருக்க வேண்டிய இடத்தில் அவர் இருந்தது மறைபுலனாக இருக்கும் உண்மை என்பதால் அவருக்கு ஞாபகம் இருந்தது.
ஆண் பெண்ணை நாடுவது காதல். பெண் ஆணை நாடுவது திருமணத்திற்காக.
பெண்ணுக்கு சொத்து இருந்தாலும் சமூக அங்கீகாரம் கிடைப்பதற்காக அவளுக்கு கணவன் அவசியம்.
சொத்து உயிர்ரீதியான தேவை, திருமணம் சமூகரீதியாக தேவை.

அவர்களையே தேர்ந்தெடுக்கச் சொன்னால் Glencora, Burgo வையும், எலிசபெத், விக்காமையும் தேர்ந்தெடுப்பார்கள்.

131. "She blushed at the very idea".

Blushing is subconscious shame.

Men and women blush at the mention of their love, not because they are ashamed of their love, but that their own intimately personal issue of sacred significance is publicly mentioned.

Shame is social, blushing is personal.

Man's inner life is not only private but some of them are sacred.

Accomplishment at that level is necessarily secretive.

A musician creates greatest music in that sanctum sanctorum but wishes to sing it publicly.

Inspiration is private, enjoyment is public.

One is in the comprehending Supermind, the other in the apprehending Supermind.

The private becoming the public is the process of creation.

Sri Aurobindo says creation became possible when the Absolute decided to objectify.

Objectification is there at several levels: Absolute, Sachchidananda, Supermind, etc.

It is by objectification that Spirit produces Time and Space.

Self-conception, Self-limitation, Self-absorption is another process.

Movement of the Moveless is a basic process of creation.

Manifestation of what is in the Timeless emerging out in Time is another essential process.

Involution and Evolution together is creation.

Atman moving to Purusha and Ishwara is another view of the process initiated by Self-conception.

Elizabeth blushing is due to the awareness of her coveting Pemberley.

He says let not the worldly wisdom whisper in your ears.

Elizabeth is a high ideal personified as worldly wisdom.

She does feel a mercenary attitude and blushes at self-recognition.

"அந்த எண்ணம் அவளுக்கு வெட்கத்தை அளித்தது."

வெட்கப்படுவது ஆழ்மனத்தின் அவமானமாகும்.

ஆண்களும், பெண்களும் அவர்களுடைய காதலைப் பற்றிய பேச்சு எழும்போதே வெட்கப்படுவர், அவர்களுடைய காதலை நினைத்து அவமானத்தால் எழும் உணர்வல்ல இது, அவர்களுடைய முக்கியமான அந்தரங்க விஷயம் எல்லோருக்கும் தெரியவந்ததில் ஏற்படும் வெட்க உணர்வாகும்.

அவமானம் பொதுவானது, வெட்கம் தனிப்பட்டது.

மனிதனின் அக வாழ்க்கை அந்தரங்கமானது மட்டுமல்ல, அவற்றில் சில புனிதமானதும் ஆகும்.

அந்த நிலையில் சாதனை கட்டாயம் ரகசியமாக இருக்கும்.

ஒரு இசைக்கலைஞன் அவனுள்ளே மிக உயர்ந்த இசையை உருவாக்குகிறான், ஆனால் அதை பொது மக்கள் மத்தியில் பாடப் பிரியப்படுகிறான்.

ஊக்கம் தனிப்பட்டது, சந்தோஷம் பொதுவானது.

ஒன்று comprehending சத்திய ஜீவியத்தில் உள்ளது, மற்றொன்று வரப்போகும் (apprehending) சத்திய ஜீவியத்தில் உள்ளது.

தனிப்பட்டது பொதுத் தன்மைக்கு மாறுவது படைப்பின் இயக்கமாகும்.

பிரம்மம் தன்னை வெளிப்படுத்தத் தீர்மானித்ததால் சிருஷ்டி சாத்தியமாயிற்று என பகவான் கூறுகிறார்.

பல நிலைகளில் வெளிப்படுதல் உள்ளது: பிரம்மம், சச்சிதானந்தம், சத்திய ஜீவியம், மற்றும் பல.

புறத்தில் ஆன்மா காலத்தையும், இடத்தையும் உற்பத்தி செய்தது.

சுய உருவாக்கம், சுய வரையறுத்தல், சுய கிரகிப்பு, இது மற்றொரு முறையாகும்.

அசையாததின் அசைவே படைப்பின் அடிப்படை முறையாகும்.

காலமின்மையில் இருப்பது காலத்தில் சிருஷ்டியாக வெளிவருவது மற்றொரு முக்கியமான முறையாகும்.

சிருஷ்டி, பரிணாமம் இரண்டும் சேர்ந்ததே படைப்பாகும்.

ஆத்மா புருஷனையும், ஈஸ்வரனையும் நோக்கி நகர்வது, சுய உருவாக்கம் மூலம் தொடங்கி வைக்கப்பட்ட இம் முறையின் மற்றொரு கோணம் ஆகும்.

பெம்பர்லியைக் கண்டு ஆசைப்படுவதை உணர்ந்ததினால், எலிசபெத்திற்கு வெட்கம் எழுகிறது.

உலகத்தினர் கூறுவதை நாம் செவி சாய்க்காமல் இருக்க வேண்டும் என்று பகவான் கூறுகிறார்.

உலகளாவிய ஞானத்தில் எலிசபெத் உயர்ந்த இலட்சியத்தின் உருவகமாக திகழ்கிறாள்.

ஆதாய மனப்பான்மை எழுவதை உணர்ந்து அதற்காக வெட்கப்படுகிறாள்.

132. "it would be better to speak to the aunt openly than to run the risk".

Honesty is the best policy.

A false Man prefers truth if he knows truth will come out later at his cost.

This is not to be truthful; it is to be defensive or protective.

Truth compels the individual by revealing itself to all first.
One who acts with reference to the outside, being true in the measure he will be compelled to be true, is not one who seeks truth.
One who acts with reference to the inside, being true in the measure the inner life requires, is one who is true.
For him honesty is not a policy, but an inner compulsion.
Secrecy has a value with reference to its inner requirement.
In speaking to her father, Elizabeth resorts to truth in the measure it suited her.
Life acted to compel her to speak out at Lambton when Lydia ran away.
We see the outer unfolds in the measure the inner requires. How then is one to be truthful?
Truthful or any such principle does not act all by itself.
It acts in its own context.
There is a truth each context requires.
Elizabeth was not as truthful with her father as the situation required.
At her first meeting we can understand she was taken in as she had a grievance against Darcy.
At Netherfield we can say that Elizabeth could not have missed Darcy's partiality to her.
Even when he asked her to waltz, she put a construction on his request that he wanted to despise her taste. **It was Prejudice. That is the theme of the story. Her acting in Prejudice prompted by his Pride is the theme.** She could act as truthfully as the context permitted, not according to the demands of absolute truth. In all this there was no inclination to falsehood. We see that inclination first when Wickham deserted in favour of £ 10,000. In defending him with her aunt she was not misled. She was consciously trying to make him the recipient of her ideal devotion to Love in spite of his desertion. Her telling her aunt that handsome young men must have something to live upon **was certainly a defence of his falsehood. It was an exercise in falsehood that was in her.**
"ஆபத்தை எதிர்கொள்வதற்கு பதில் அவளுடைய அத்தையிடம் வெளிப்படையாகப் பேசிவிடுவது நல்லது."
நேர்மையே சிறந்த கொள்கை.
ஒரு பொய்யான மனிதன், பின்னால் அதற்கு விலை கொடுக்க வேண்டி வரும் என்று தெரிந்தால், உண்மையையே விரும்புவான்.
இது உண்மையாக இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல; பாதுகாப்பாக இருக்க வேண்டும், தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவாகும்.
முதலில் உண்மை அதனை அனைவருக்கும் வெளிப்படுத்திக் கொள்வதன் மூலம், தனி மனிதனை வற்புறுத்தும்.
வெளி நிகழ்ச்சிகளால் கட்டுப்பட்டு ஒருவன் செயல்படும்பொழுது, அவை அவனை வற்புறுத்தும் அளவிற்கு அவன் உண்மையாக இருந்தால், அவன் உண்மையை நாடும் ஒருவனல்ல.
அகத்தைப் பொறுத்து செயல்படும் ஒருவன் அக வாழ்க்கைக்குத் தேவைப்படும் அளவிற்கு உண்மையாக இருப்பதால், அவனே உண்மையானவன் ஆவான்.
அவனுக்கு நேர்மை ஒரு கொள்கையாக இருக்காது, அகத்தின் வற்புறுத்தலாக இருக்கும்.
அகத்தின் தேவையைப் பொறுத்து இரகசியத்திற்கு மதிப்பு உண்டு.
எலிசபெத் அவளுடைய தந்தையிடம் பேசும்பொழுது, சந்தர்ப்பத்திற்குத் தேவையாக இருந்த அளவிற்கு உண்மையைப் பேசவில்லை.
லிடியா ஓடிப்போனபின், லாம்ப்டனில் அவளை வெளிப்படையாகப் பேசும்படி வாழ்க்கை வலியுறுத்தியது.
அகத்தின் தேவைக்கேற்ப புறம் வெளிப்படுகிறது. பின் எவ்வாறு ஒருவர் உண்மையாக இருக்க முடியும்?
உண்மையாக இருப்பதும், அது போன்ற கொள்கைகளும் தாமாகவே செயல்படாது.
அது அதனுடைய சந்தர்ப்பத்திற்கேற்ப செயல்படும்.
ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஒரு உண்மை தேவைப்படுகிறது.
நிலைமைக்கு ஏற்றவாறு எலிசபெத் அவளுடைய தந்தையிடம் அவ்வளவு உண்மையாக இல்லை.
முதல் சந்திப்பில், அவளுக்கு டார்சி மீது வருத்தம் இருந்ததினால் அவள் நடந்துகொண்டதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.
நெதர்பீல்டில் எலிசபெத், டார்சிக்கு அவள் மேலிருந்த தனி கவனத்தை கவனிக்காமல் இருந்திருக்க முடியாது என நாம் கூறலாம்.
அவன் அவளை நடனத்திற்கு அழைத்த போதும், அவளுடைய இரசனையை அவன் இகழ வேண்டும் என்பதற்காக கேட்கிறான் என நினைத்துக்கொண்டு அவனது வேண்டுகோளை மறுத்தாள். **அது தவறான அபிப்பிராயம். அதுதான் கதையின் கரு. அவனது கர்வத்தால் தூண்டப்பட்ட அவளது தவறான அபிப்பிராயமே இக்கதையின் கரு.** முழுமையான உண்மையுடன் அவள் செயல்படாவிட்டாலும் சந்தர்ப்பங்கள் அனுமதிக்கும் அளவிற்கு அவள் உண்மையாகச் செயல்படலாம், இவை எல்லாவற்றிலும் பொய் பேசும் எண்ணம் அவளுக்கு இல்லை. விக்காம் பத்தாயிரம் பவுனுக்காக அவளை கைவிட்ட போது முதல் முறையாக பொய்மை எழுந்தது. அவளுடைய அத்தையிடம் அவனுக்காகப் பரிந்து பேசும்பொழுதும் அவள் தெரியாமல் பேசவில்லை, அவளைக் கைவிட்ட போதும் அவளுடைய உண்மையான அன்புக்கு உரியவனாக அவன்

இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் பேசுகிறாள். அழகான இளம் வாலிபனுக்கு வாழ்க்கையில் வாழ்வதற்கு ஏதாவது ஒன்று வேண்டும் என்று அத்தையிடம் பேசும்பொழுது **அவனுடைய பொய்மைக்கு ஆதரவாக வாதாடுகிறாள். அவளிடம் இருக்கும் பொய்மையின் செயல் இது.**

133.“As a last resource, if her private enquiries as to the absence of the family”

Man insists on his own way as long as he can have it.

Shrewdness discerns its future advantages.

Life allows him to progress according to his best light.

Here, it chooses to have its own way, and crosses her resourcefulness by giving her the right information and making Darcy come a day early.

That determinism of life always exceeds human determinism.

Human choice can get the better of life by moving inside from life to existence and then from existence to the soul of existence.

Man’s ability to move so is compromised by his taste of the present.

Mother’s Presence, in the form of Her atmosphere, FULLY helps him move further and further, **provided there is an inclination in him towards Her.**

Inclination towards Her is sincerity, opening, receptivity.

It is the deciding moment.

All human progress depends upon Man’s choice in that zone.

Life’s temptation of falsehood, Mother’s Silent Presence ready to respond, human vacillations are graphically seen in this area.

A call to a hostile centre at such a moment is to one not meant for grace.

In every event where the devotee moved up, he can now recollect that he responded to the Presence. In every occasion he failed, he can very clearly recollect now that his own choice was intentionally wrong. **No devotee can fail to rise to the highest position presently inconceivable to him if he decides to make the right choice each time.** In any event recent or distant past, if he can now correct his past choice, he can witness the Miracle of a past bygone given up, buried opportunity coming to life in his favour. He may succeed or fail; but he cannot miss seeing the exact microscopic point where he had the temptation to lapse or the sincerity to rely on Her. Life warned me not to collect Rs. 1500/- a person had cheated. It made him come to the collector and speak the Truth no one can tell the collector. Such a trifle, equal to the word of the Chief Minister’s personal secretary, decided the whole future of the project.

“கடைசிப்பட்சமாக, அந்த குடும்பம் ஊரில் இருக்கிறதா என்று தனிப்பட்ட முறையில் விசாரிக்க தீர்மானித்தாள்.”

மனிதன் அவனால் முடிந்தவரை அவனுடைய விருப்பப்படியே செயல்பட வலியுறுத்துகிறான்.

எதிர்கால நன்மைகளை புத்திகூர்மை தெளிவாகப் புரிந்துகொள்ளும்.

வாழ்க்கை அவனுடைய சிறப்பான வழிக்கேற்ப முன்னேற்றத்தை அளிக்கிறது.

இங்கு அது தன்னுடைய வழியிலேயே செயல்பட்டு அவளுடைய திறமைகளைத் தாண்டி அவளுக்குச் சரியான தகவலை அளித்து, டார்சியை ஒரு நாள் முன்னதாகவே வரவழைக்கிறது.

வாழ்வின் அந்த நிர்ணயம், எப்பொழுதும் மனித நிர்ணயத்தை மிஞ்சிவிடுகிறது.

நாம் அகத்துள் வாழ்க்கையிலிருந்து சமூகத்திற்கும், சமூகத்திலிருந்து சமூகத்தின் ஆன்மாவுக்கும் நகர்ந்து சென்றால், மனித விருப்பம் வாழ்க்கையை வெல்லும்.

அவ்வாறு முன்னேறுவதற்கான மனிதனின் ஆற்றல், நிகழ்காலத்தில் அவனுக்கு இருக்கும் ருசியினால் சமரசம் செய்யப்படுகிறது.

மனிதனுக்கு அன்னையிடம் செல்வதற்கு உகந்த மனநிலை இருந்தால், அன்னையின் சூழல் இருப்பது அவன் மேலும் மேலும் முழுமையாக முன்னேற உதவும்.

அன்னையின்பால் ஈடுபாடு என்பது உண்மை, விழிப்பு, ஏற்புத்திறன் ஆகும்.

இது தீர்மானிக்கும் தருணமாகும்.

எல்லா மனித முன்னேற்றமும் அந்த இடத்தில் மனிதனின் விருப்பத்தைப் பொறுத்து இருக்கிறது.

பொய்மைக்கு வாழ்க்கையின் தூண்டுதல், பதிலளிப்பதற்கு மௌனமாக காத்திருக்கும் அன்னை, மனித சஞ்சலங்கள் இவை யாவையும் இந்த இடத்தில் தெளிவாகத் தெரிகின்றன.

இதுபோன்ற தருணத்தில் தீய சக்திகளை அழைத்தால், அருள் கிடைப்பது தவறும்.

ஒவ்வொரு நிகழ்விலும் ஏற்றம் அடைந்த அன்பர், அந்த தருணங்களில் எல்லாம் தான் அன்னைக்கு செவி சாய்த்ததை நினைவு கூறலாம், தவறிய ஒவ்வொரு முறையும் தன்னுடைய சுய விருப்பம் வேண்டுமென்றே தவறாக இருந்ததைப் பார்க்கலாம். **ஒவ்வொரு சமயமும் சரியான முடிவு எடுத்தால், எந்த ஒரு அன்பருக்கும் நினைத்தும் பார்க்க முடியாத அளவிற்கு ஏற்றம் கிடைக்கும்.** கடந்த காலத் தவறுகளை இப்பொழுது திருத்திக் கொண்டால், கடந்த கால மறைந்த வாய்ப்புக்கள் அவனுக்கு ஆதரவாக மீண்டும் எழுவதை அவன் காணலாம். அவன் வெற்றி அடையலாம் அல்லது அவனுக்குத் தோல்வி ஏற்படலாம், ஆனால் எங்கு அன்னையை தவற விட்டோம், எங்கு உண்மையாக நம்பினோம் என்று துல்லியமாக அவனுக்குத் தெரியும். மோசம் செய்த

ஒருவரது Rs.1500/- பணத்தை, வாங்கவேண்டாம் என்று வாழ்க்கை எச்சரித்தது. அது அவரை ஆட்சியாளரிடம் வரவழைத்து, யாரும் கூற முடியாத உண்மையை அவரிடம் கூற வைத்தது. அந்தச் சிறிய விஷயம், முதல் மந்திரியின் அந்தரங்க காரியதரிசியின் வார்த்தைக்கு சமமானது, திட்டத்தின் முழு எதிர்காலத்தை தீர்மானித்தது.

Accordingly, when she retired at night, she asked the chambermaid whether Pemberley were not a very fine place, what was the name of its proprietor, and, with no little alarm, whether the family were down for the summer. A most welcome negative followed the last question -- and her alarms being now removed, she was at leisure to feel a great deal of curiosity to see the house herself; and when the subject was revived the next morning, and she was again applied to, could readily answer, and with a proper air of indifference, that she had not really any dislike to the scheme. -- To Pemberley, therefore, they were to go.

அதற்கேற்ப இரவு உறங்கும் முன் அங்குள்ள பணிப்பெண்மணியிடம் பெம்பர்லி அழகான இடமா, அதன் உரிமையாளரின் பெயர் என்ன, மேலும் சிறிதும் கலவரமின்றி, கோடைவிடுமுறைக்கு அக்குடும்பத்தினர் அங்கு இருக்கின்றனரா என்று கேட்டாள். அவளது கடைசி கேள்விக்கு இல்லை என்ற வரவேற்கத்தக்க பதில் கிடைத்தது. அவளுடைய பயம் இப்பொழுது நீங்கியதால், அவளுக்கே அந்த வீட்டை நிதானமாகப் பார்க்க வேண்டும் என்று ஆர்வம் உண்டாயிற்று. அடுத்த நாள் காலை இதைப்பற்றி மீண்டும் பேச்சு எழுந்த பொழுதும், இவளுடைய ஒப்புதலை நாடியபொழுதும், சிறிதும் பாதிக்கப்படாதவள்போல் தனக்கு இந்த திட்டத்தில் எந்தவித வெறுப்பும் இல்லை என்று உடனே பதில் கூற முடிந்தது.
அதனால் பெம்பர்லிக்கு அவர்கள் செல்வதாயிற்று.

134. This is an occasion where negative is positive.
கெட்டது நல்லதாக மாறும் சந்தர்ப்பம் இது.
135. 'With proper air of indifference' she agreed.
அவள் வெகு அலட்சியமாக ஒத்துக் கொண்டாள்.
136. Throughout Darcy's courtship, life gives her a proper air of indifference which she consciously acquired here.
டார்சி அவளைக் காதலித்த சமயம் முழுவதும் வாழ்க்கை அவளுக்கு சரியான அலட்சியத்தன்மையை அளித்தது, அவள் இங்கு அறிந்தேதான் அவ்வாறு நடந்துகொள்கிறாள்.
137. The information of the maid confirms it.
வயதான பெண்மணி தகவலை உறுதிப்படுத்துகிறாள்.
138. "She asked the Chambermaid".
The chambermaid is the child that shouted, "the Emperor has no clothes".
The gardener of Nehru kidnapped by an industrialist, supplied with a car and Money, got him access to the household and helped him in his ascendancy.
There are real powerful avenues that can be used either way.
It is a human organization that can wield all the power.
One can construct its corresponding version in his own organization if only he has observed his own family in terms of the outside world that matters to him.
A subtle knowledge of his own mental movements can give the same knowledge.
It is never failing.
Buried in his own vital preferences, he can fully miss such indications.
His indifference is overtaken by grace when it insists by stronger clearer events.
It is frustrating when one is coarse, buried in physical movements or vital interests.
Life is always alive when Man insists on the Mental.
Anyone can recollect such Mental events where one in spite of his warnings chose intentionally the other thing.
Spiritually one is ever awake.
To know is different from being able to act.
It is here the human willingness acts as human choice.
Man is ethical and is guided by right or wrong.
Man sensitive to life movements will find himself functional.
The European Secretary who ran calling his wife 'Hilda' would not take long to know his great misfortune arose out of his great inspiration to please his wife going far out of the way.
In desiring to continue a work or discontinue, one can precisely see his preference.
Every Man is endowed with that sense in the plane he is awake.
Mr. Bennet is awake to poke fun at his wife.
Charlotte is fully awake to every distant possibility of marriage for her.
One can be casual or alert.
"அவள் வீட்டை பராமரிக்கும் பெண்மணியை கேட்டாள்."

'அரசர் ஆடையே அணியவில்லை' எனக் கத்திய குழந்தையைப் போல் அந்த பெண்மணி இருந்தாள்.
நேருவின் தோட்டக்காரனை ஒரு தொழிலதிபர் கடத்தி அவனுக்கு வாகனமும் பணமும் கொடுத்து அவனை வீட்டிற்குள் அனுமதித்து, அவன் முன்னேறவும் உதவி செய்தார்.
சக்தி வாய்ந்த சில இடங்கள் உள்ளன, அவற்றை எப்படி வேண்டுமென்றாலும் பயன் படுத்திக்கொள்ளலாம்.
மனித அமைப்பே அதிகாரம் செலுத்தும்.
தான் சம்பந்தப்பட்ட வெளி உலகத்தின் கண்ணோட்டத்தில், தன்னுடைய குடும்பத்தை அவன் கூர்ந்து கவனித்தால், ஒருவன் தன்னுடைய நிறுவனத்தில் இதற்கு ஒத்த ஒரு பதிப்பை ஏற்படுத்த முடியும்.
அவனுடைய மனதின் இயக்கங்களின் சூட்சும அறிவு, இதே அறிவைக் கொடுக்க முடியும்.
இது ஒரு போதும் தவறுவதில்லை.
அவனுடைய உணர்வுகளின் முன்விருப்பங்களிலேயே அவன் ஆழ்ந்திருப்பதால் அந்த குறிப்பை அவன் உணர தவறி விடுகிறான்.
அவனுடைய அலட்சியத்தை மீறி அருள் செயல்படுவது, உறுதியான தெளிவான நிகழ்ச்சிகள் மூலம் தெரிகிறது.
ஒருவர் முரட்டுத்தனமாக இருந்து ஜடநிலை இயக்கங்களிலும், உணர்வின் ஆர்வங்களிலும் ஆழ்ந்து போயிருப்பது எரிச்சலடைய வைக்கிறது.
மனத்தால் செயல்படும் மனிதனுக்கு வாழ்க்கை எப்பொழுதும் உயிரோட்டத்துடன் இருக்கும்.
அவனுக்கு எச்சரிக்கை கிடைத்தபோதும் அவன் வேண்டுமென்றே மற்றதை தேர்ந்தெடுத்த, இது போன்ற மனரீதியான நிகழ்ச்சிகளை மனிதன் ஞாபகப்படுத்திக்கொள்ள முடியும்
ஆன்மீகரீதியாக ஒருவன் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கிறான்.
தெரிந்துகொள்வது வேறு, செயல்பட இயல்வது வேறு.
இங்குதான் மனித விருப்பம் மனித தேர்ந்தெடுத்தல் போல் செயல்படும்.
மனிதன் நெறியுடன் இருக்கிறான், சரியான வழியிலோ, தவறான வழியிலோ, வழி நடத்தப்படுகிறான்.
வாழ்க்கையின் இயக்கங்களுடன் மனிதன் உணர்வுபூர்வமாக தொடர்பு கொண்டால், அவனை செயல்படுபவனாக அது மாற்றும்.
"ஹில்டா" என்று அழைத்து ஓடிய ஐரோப்பிய காரியதரிசி, அளவுக்கு மீறி மனைவியைத் திருப்தி செய்ய நினைத்ததால்தான் தன்னுடைய துரதிர்ஷ்டம் எழுந்தது என்று தெரிந்துகொள்வதற்கு வெகு நேரம் ஆகாது.
ஒரு வேலையை தொடரலாமா அல்லது வேண்டாமா என்ற தீர்மானத்தில் ஒருவர் அவரது விருப்பத்தை துல்லியமாகப் பார்க்கலாம்.
விழிப்பாக இருக்கும் நிலையில் ஒவ்வொருவருக்கும் அதை உணரும் திறனுண்டு.
திரு பென்னட் தன்னுடைய மனைவியை கேலி செய்வதில் விழிப்பாக இருக்கிறார்.
ஷார்லெட் தன்னுடைய திருமணம் எப்படியாவது சாத்தியமாகுமா என்பதில் விழிப்பாக இருக்கிறாள்.
ஒருவர் கவனக் குறைவாகவும் இருக்கலாம், விழிப்பாகவும் இருக்கலாம்.

139. "What was the name of proprietor".

To pretend not to know what one knows is a strategy to get news.
A strategy is a human device to arrive at a conclusion of Nature or life.
Every accomplishment is based on a strategy natural or artificial.
Attitude in Man is the general human strategy for all accomplishments.
Attitudes are spiritual values in the vital when they are true.
One attitude splits into several or even endless strategies.
Motive is deeper still, based on the body or the being.
Motives can be right or effective or ones that relate to forces of life.
Accomplishments can be traced from opinions, attitudes, motives expressing as strategies that relate to work.
As they are expressing outward, so they can function inward.
Yoga was spread over body, will, Mind, thought, emotions.
Thus asana, pranayama, concentration, inquiry, japa, mantra, yantra arose.
Gita when it advocated surrender went beyond all these and saw an effective centre in human dharma which is to be abandoned.
The goal of the Gita is release of the Spirit.
He aims at transformation of the whole embodied being.
The centre for that function is in the evolving soul, centred in the subliminal.
The surrender He advocates moves Man to the Psychic.
Even that effort He further abridges by asking us to surrender to Mother.
Mother is the highest functioning cosmic centre.
She is running the cosmic life.
Our surrender to Her is to avail of the highest tool spirit has evolved.
Our surrender is negatively to come out of ego as well as Nature.

Positively it is to become the Psychic or better still as Mother.
In democracy Man is capable of rising to the position of the monarch.
The party makes his task light which is otherwise impossible.
A Man of integrity and capacity is sought after by the party.
Sincerity on our part makes Mother come to us and readily accept our surrender of devotion.
“இதன் உரிமையாளரின் பெயர் என்ன.”
தெரிந்ததை தெரியாததுபோல் காண்பித்துக் கொள்வது விஷயம் சேகரிக்கும் ஒரு உத்தி ஆகும்.
இயற்கை அல்லது வாழ்க்கையைப் பற்றிய ஒரு முடிவுக்கு வருவதற்கு பயன்படும் மனிதக் கருவி, உத்தி ஆகும்.
இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ உள்ள உத்தியின் அடிப்படையில்தான் ஒவ்வொரு சாதனையும் பூர்த்தியாகிறது.
எல்லா சாதனைகளுக்கும் பொதுவான மனித உத்தி, மனிதனின் மனப்பான்மைதான்.
மனப்பான்மைகள் உண்மையாக இருந்தால், அவை உணர்வில் ஆன்மீக மதிப்பு வாய்ந்ததாக இருக்கும்.
ஒரு மனோபாவம், பல உபாயங்களாகவும் அல்லது அளவற்ற உபாயங்களாகவும் பிரியும்.
உடல் அல்லது ஜீவனின் அடிப்படையில் நோக்கம் மேலும் ஆழமானது.
நோக்கங்கள் சரியாகவோ அல்லது திறன் வாய்ந்ததாகவோ இருக்கலாம், வாழ்க்கையின் சக்திகளுடன் தொடர்புடையதாகவும் இருக்கலாம்.
ஒரு வேலையின் உத்திகளாக வெளிப்படும் அபிப்பிராயங்கள், மனோபாவங்கள், நோக்கங்கள், இவைகளின் மூலம் சாதனைகளை ஆராய முடியும்.
அவை வெளியில் வெளிப்படுத்துவது போல் அவைகளால் உள்ளேயும் செயல்பட முடிகிறது.
உடல், உறுதி, மனம், எண்ணம், உணர்ச்சிகள் இவற்றில் யோகம் பரவி இருந்தது.
இவ்வாறு, ஆசனம், பிராணாயாமம், ஒருமுகப்படுத்தல், விசாரணை, ஜபம், மந்திரம், யந்திரம் ஆகியவை எழுந்தன.
சரணாகதியை போதித்த கீதை இவை எல்லாவற்றையும் தாண்டிச் சென்று மனித தர்மத்தில் கைவிடப்பட வேண்டிய ஒரு திறனுள்ள மையத்தைக் கண்டு பிடித்தது.
ஆன்மாவை விடுவிப்பதே கீதையின் இலட்சியமாகும்.
முழு ஜீவனின் திருவுருமாற்றமே பகவானின் குறிக்கோள் ஆகும்.
அடிமனதில் மையம் கொண்டிருக்கும் வெளிவரும் ஆன்மாவில், அந்த செயல்பாட்டின் மையம் உள்ளது.
பகவான் கூறும் சரணாகதி, மனிதனை சைத்திய புருஷனுக்கு நகர்த்தும்.
நம்மை அன்னைக்குச் சரணடையச் சொல்லி கேட்டுக்கொள்வதன் மூலம் அந்த முயற்சியைக்கூட பகவான் எளிதாக்குகிறார்.
பிரபஞ்சத்தில் அன்னையே உயர்ந்த செயல்படும் மையமாக விளங்குகிறார்.
அன்னை பிரபஞ்ச வாழ்க்கையை இயக்குகிறார்.
நாம் அன்னைக்கு சரணடைவது, ஆன்மா வெளிக்கொண்டு வந்திருக்கும் உயர்ந்த கருவியை பயன்படுத்திக் கொள்வதாகும்.
எதிர்மறையாக அகந்தையிலிருந்தும், இயற்கையிலிருந்தும் நமது சரணாகதி வெளி வர வேண்டும்.
நேர்மறையாக அது சைத்திய புருஷனாக மாற வேண்டும், அல்லது மேலும் சிறப்பாக அன்னையாகவேகூட மாறலாம்.
மக்களாட்சியில் மன்னனாக உயர மனிதனுக்கு முடியும்.
கட்சி அவனது வேலையை எளிதாக்குகிறது, இல்லாவிடில் இது சாத்தியமில்லாதது.
நேர்மையும் திறமையும் கொண்ட ஒருவனையே கட்சி நாடுகிறது.
நமது பங்கிலிருந்து எழும் உண்மை அன்னையை நம்மிடம் வரவழைக்கும், நமது பக்தியின் சரணாகதியை உடனடியாக ஏற்றுக்கொள்ள வைக்கும்.

140. “A most welcome negative followed”.

There are times when negative is positive.
Not only positive serves, but even the negative serves too, as good as well as evil take life ahead.
In her case a negative made her act and later it was negatived by life for her to accomplish.
Life adjusts to her ignorance.
Suppose she had a rightful knowledge, she would have known that Darcy awaited her. Darcy was coming to her. She saw only Pemberley. Socially it was not delicate for her to throw herself in his way. **Again it is social ignorance**. She, in the clarity of her subtle spiritual knowledge could see Darcy coming to her literally through Pemberley. She must gravitate towards it without the promptings of her aunt, without the ploys with the chambermaid and in heart respond to Darcy, not only to Pemberley.
Every situation the devotee faces or has recently met, successful or not, lends itself to such an analysis.
Analysis yields all the knowledge, an analysis on these lines.
Something more important than the analysis is the prior mental preparation – receptivity.
Our own Mind will readily reveal all the points of resistance, lapse, lack of receptivity, lack of opening, etc.

Address all of them and set them right.
Their moving rightly will partially move other things rightly also.
Now the receptivity of the instrument, knowledge of the environment are there.
What acts is the Will in the right atmosphere.
The will exercises the knowledge it is impelled by.
Action of that will is the human choice.
Such a choice can also be impelled from inside.
It is inspiration.
That being Psychic inspiration is the best.
"மிகவும் வரவேற்கத்தக்க எதிர்மறையானதொன்று நடந்தது."
கெட்டது நல்லதாக இருக்கும் தருணங்களும் உண்டு.
நல்லது மட்டுமே உதவும் என்று கிடையாது, கெட்டதும் நல்லது செய்யும், நல்லதும் கெட்டதும் சேர்ந்து வாழ்க்கையை முன்னோக்கி நடத்திச் செல்லும்.
அவளுடைய விஷயத்தில் எதிர்மறையானதொன்று அவளை செயல்பட வைத்தது, பின்னால் வாழ்க்கையில் அவள் சாதிக்கவேண்டும் என்பதற்காக வாழ்க்கை அதை எதிர்மறையாக்கியது.
அவளுடைய அறியாமைக்கு வாழ்க்கை ஒத்துப் போகிறது.
அவளுக்குச் சரியான அறிவு இருந்திருந்தால், டார்சி அவளுக்காக காத்திருப்பது அவளுக்குத் தெரிந்திருக்கும். டார்சி, அவளை நோக்கி வந்து கொண்டிருக்கிறான். அவள் பெம்பர்லியை மட்டும்தான் பார்க்கிறாள். அவனது பாதையில் அவள் நுழைவது, சமூக கண்ணோட்டத்தில் அவளுக்குச் சங்கடமான செயல் அல்ல. **மீண்டும் இது சமூக அறிவீனம் ஆகும்.** தன்னுடைய சூட்சுமமான ஆன்மீக அறிவின் தெளிவில், பெம்பர்லி மூலம் டார்சி அவளிடம் வருவதை அவளால் காண முடிந்தது. அவளது அத்தையின் தூண்டுதல் இல்லாமல், வேலைக்காரியிடமும் எந்தவித தந்திரமும் செய்யாமல், அவனை நோக்கி அவள் நகர வேண்டும். மனதால், பெம்பர்லிக்கு மட்டுமல்லாமல் டார்சிக்கும் மறுமொழி அளிக்க வேண்டும்.
அன்பர் சந்திக்கும் அல்லது சமீபத்தில் சந்தித்த ஒவ்வொரு சந்தர்ப்பமும், அது வெற்றி அடைந்ததோ அல்லது தோல்வி அடைந்ததோ, அது போன்ற ஆராய்ச்சிக்கு தன்னை உட்படுத்திக்கொள்ளும்.
இந்த முறையில் செய்யப்படும் ஆராய்ச்சி எல்லா அறிவையும் அளிக்கும்.
ஆராய்ச்சியைவிட முக்கியமானது, முன்னதாகவே நம் மனத்தை தயார் படுத்திக்கொள்வதுதான்—ஏற்புத்திறன்.
எதிர்ப்பு, தவறுகள், ஏற்புத் திறன் இல்லாதது, விழிப்புணர்ச்சி இல்லாதது, ஆகியவற்றை நம் மனம் உடனடியாக நமக்கு வெளிப்படுத்தும்.
எல்லாவற்றையும் கவனித்து சரி செய்ய வேண்டும்.
இவை சரியாக செயல்பட்டால் மற்றவைகளை ஓரளவிற்கு சரியாக செயல்பட வைக்கும்.
இப்பொழுது, ஒருவருக்கு ஏற்புத்திறனும் சூழ்நிலையைப் பற்றிய அறிவும் உள்ளன.
சரியான சூழலில் இருக்கும் உறுதியே செயல்படுகிறது.
அறிவை செலுத்துவதற்கு உறுதி தூண்டப்படுகிறது.
அந்த உறுதியின் செயல்பாடு மனித விருப்பமாகும்.
அது போன்ற விருப்பம் உள்ளிருந்தும் தூண்டப்படலாம்.
அது ஊக்கமாகும்.
அது சைத்திய புருஷனின் ஊக்கமாக இருப்பது எல்லாவற்றையும்விட மேலானது.

141. "She was at leisure to feel a great deal of curiosity."
Curiosity requires freedom to act.
The leisure mentioned above is mental freedom.
Such a freedom has so many further dimensions.
Vital, physical below, spiritual above, social around.
The history of civilization can be studied as the flowering of these freedoms over the centuries and the refusal of the society to yield this freedom to individuals.
Freedom comes and is fully appropriated by the strongest, say Man.
Women and children in the family, the worker and the have-nots in the society are denied that freedom.
Society has to cultivate that freedom till it reaches all, which is social culture with respect to this aspect.
Human relationships that foster this freedom are culture.
In one enlightened view, one can see the structures of the society in terms of freedom, rights, light, power, etc., etc.
That enables us to trace its evolution till now.
The future then is a revelation that is a wonder.
To see such a vision in the study of The Life Divine makes the study easy.
Such a Mind cannot lose itself in the wonders of technology.
Nor can that mind whip itself into enthusiasm for travel or shopping.
No economic barbarian can arise out of this culture.

Man's horizon is widening across the globe.
Its riches reveal in politics, human unity and well being.
Man should respond to this movement.
Now he responds from his ego.
To aspire is to enlarge one's spiritual curiosity.
Man knows of oases in the desert.
Ours is truly a land of oases with no scope for the desert.
What is deserted is the human heart, not the world outside.
"மிகப் பெரிய ஆர்வத்தை உணரும் அளவிற்கு ஓய்வாக இருந்தாள்."
ஆர்வம் செயல்படுவதற்கு சுதந்திரம் தேவைப்படுகிறது.
மேலே கூறிய ஓய்வு மனத்தின் சுதந்திரமாகும்.
அது போன்ற சுதந்திரத்திற்கு மேலும் பல்வேறு பரிமாணங்கள் உள்ளன.
கீழே உயிரும், உடலும், மேலே ஆன்மீகம், சுற்றி சமூகம் போன்ற பரிமாணங்கள்.
பல நூற்றாண்டு காலங்களாக மலர்ந்து வரும் இந்த சுதந்திரங்களைப் பற்றியும், தனி நபருக்கு சமூகத்தால் மறுக்கப்பட்டு வந்த இந்த சுதந்திரத்தைப் பற்றியும், நாகரிகத்தின் சரித்திரத்தில் படிக்கலாம்.
சுதந்திரம் கிடைக்கிறது, அது வலிமையானவனால் பறித்துக் கொள்ளப்படுகிறது என்று மனிதன் கூறுகிறான்.
குடும்பத்திலுள்ள பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், சமூகத்திலுள்ள தொழிலாளிகளுக்கும், ஏழைகளுக்கும் அந்த சுதந்திரம் மறுக்கப்படுகிறது.
எல்லோருக்கும் போய்ச் சேரும்வரை அந்த சுதந்திரத்தை சமூகம் வளர்க்க வேண்டும், இந்த விஷயத்தைப் பொறுத்தவரை அது சமூகக் கலாச்சாரம் ஆகும்.
இந்த சுதந்திரத்தை வளர்க்கும் மனித உறவுமுறைகள் பண்பாடு ஆகும்.
சுதந்திரம், உரிமைகள், ஒளி, சக்தி இவற்றின் மூலம் சமூகத்தின் அமைப்பை தெளிவு பெற்ற பார்வையில் ஒருவர் பார்க்கலாம்.
அது நம்மை இன்றுவரை ஏற்பட்டிருக்கும் அதன் பரிணாமத்தை ஆராய உதவும்.
எதிர்காலம் பிறகு ஒரு அற்புதமான வெளிப்படுத்தலாக இருக்கும்.
'தி லைப் டிவைன்' படிக்கும்பொழுது இந்தப் பார்வை இருந்தால், அது படிப்பதை சுலபமாக்கி விடும்.
அது போன்ற மனம் தொழில் நுட்பத்தின் அதிசயங்களில் தன்னை இழந்து விடாது.
பிரயாணம், கடைக்குச் சென்று பொருட்கள் வாங்குவது போன்றவற்றில் எந்த நாட்டமும் இருக்காது.
இந்த கலாச்சாரத்திலிருந்து, பொருளாதார நாகரிகம் இல்லாத மனிதன் வெளி வர முடியாது.
உலக அளவில் மனிதனுடைய எல்லை விரிவடைகிறது.
அரசியல், மனித ஒற்றுமை, நல்வாழ்வு ஆகியவற்றில் அதனுடைய வளங்களைப் பார்க்கலாம்.
மனிதன் இந்த இயக்கத்திற்கு பதிலளிக்க வேண்டும்.
இப்பொழுது அவன் அகந்தையிலிருந்து பதிலளிக்கிறான்.
ஆர்வப்படுவது ஒருவரது ஆன்மீக ஆவலை விரிவுபடுத்துவதாகும்.
பாலைவனச் சோலைகளைப் பற்றி மனிதனுக்குத் தெரியும்.
நமக்குச் சோலைகள் மட்டுமே உள்ளன, பாலைவனம் என்ற பேச்சுக்கே இடமில்லை.
மனித உள்ளம்தான் வறண்டு இருக்கிறதே, தவிர வெளி உலகமல்ல.

142. "with a proper air of indifference".
The polite version of the spirit of contradiction is indifference.
To receive what is given so as to please the giver, the act of giving, the object given is a high act of human generosity.
Condescension becomes contemptible.
Hesitation smells of superiority.
Resistance is an offence to good will.
Man practices all this and more when grace comes to him.
Sri Aurobindo came with the Hour of God, He brought The Mother, and in support of Her, the universal Mother came.
Man was rooted in himself.
He never opened his eyes and saw.
In spite of all this the descent came in 1956.
Every four years its anniversary reveals to us its richer density.
We do not know any of this.
Mother told us all this in Her Agenda.
The knowledge and more so its consciousness remains abstract to us.
In America people are mobile.
No one knows the past of anyone.
Culture is not to know the neighbour.
In India or Europe everyone knows everyone else.

Only the celebrities become vulnerable to prying by the media.
By law the media must be prevented from gathering or publishing details of private life.
Clinton was the worst victim.
It is all done in the name of justice.
This is known as public opinion.
Such scandals kept the Democrats for long from the While House.
What Man has fortified himself from personally, he indulges in publicly.
Diana was the worst victim of this.
It is high time law prevents it.
"மிகவும் அலட்சியமாக."
முரண்பாட்டின் நாசூக்கான பதிப்பே அலட்சியமாகும்.
கொடுப்பவரையும், கொடுக்கும் செயலையும், கொடுக்கப்பட்ட பொருளையும் சந்தோஷப்படுத்துவதுபோல் பெற்றுக்கொள்வது, மனிதப் பெருந்தன்மையின் உயர்ந்த செயலாகும்.
இரக்கம் காண்பிப்பது நிந்தனைக்குரியதாகிறது.
தயக்கம் உயர்வு மனப்பான்மையை உணர்த்துகிறது.
எதிர்ப்பது நல்லெண்ணத்திற்கு குற்றம் இழைப்பது போலாகும்.
அருள் மனிதனைத் தேடி வரும்பொழுது, அவன் இவற்றை எல்லாம் பின்பற்றுவான், இதற்கு மேலும் பின்பற்றுவான்.
இறைவன் வரும் தருணத்தை ஸ்ரீ அரவிந்தர் எடுத்து வந்தார், அன்னையை நமக்களித்தார், அன்னைக்கு ஆதரவாக பிரபஞ்ச அன்னை வந்தார். மனிதன் தனக்குள்ளேயே வேரூன்றி விட்டான்.
அவன் கண்ணைத் திறந்து பார்க்கவே இல்லை.
இவற்றை எல்லாம் மீறி, 1956-ல் சத்திய ஜீவியம் புவியில் இறங்கியது.
நான்கு வருடங்களுக்கு ஒரு முறை அது புவியில் இறங்கிய தினத்தில் அதன் கூடுதலான தீவிரத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது.
நமக்கு இது எதுவும் தெரியாது.
அன்னை தனது 'அஜெண்டா'வில் இவற்றைப் பற்றிக் கூறியுள்ளார்.
அந்த ஞானமும் அதைவிட அதனுடைய ஜீவியமும் நமக்குப் புரியாததாக இருக்கிறது.
அமெரிக்காவில் மக்கள் இடம் பெயர்ந்து கொண்டே இருக்கிறார்கள்.
யாருக்கும் யாரைப் பற்றிய கடந்த காலமும் தெரியாது.
அருகில் வசிப்பவர்கள் யார் என்று அறியக் கூடாத பண்பாடு அது.
இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் எல்லோருக்கும், மற்ற எல்லோரையும் தெரியும்.
பிரபலமானவர்கள் மட்டுமே ஊடகங்களால் நுட்பமான கவனிப்புக்கு உள்ளாகிறார்கள்.
அந்தரங்க வாழ்க்கையைப் பற்றிய விஷயங்களை சேகரிக்கவோ அல்லது பிரசுரிக்கவோ கூடாது எனும் சட்டம் மூலம் ஊடகங்களைத் தடுக்க வேண்டும்.
கிளிண்டன் இதற்கு மிகவும் மோசமாக பலியானார்.
நியாயத்தின் பேரில் இவை எல்லாம் செய்யப்படுகின்றன.
இது பொது மக்கள் அபிப்பிராயம் எனப்படுகிறது.
இது போன்ற அவதூறுகள், வெள்ளை மாளிகையிலிருந்து (அமெரிக்க ஜனாதிபதி பதவியிலிருந்து) குடியரசுக் கட்சியினரை வெகு காலத்திற்கு அப்புறப்படுத்தியது.
தனிப்பட்ட விஷயங்களில் தன்னைச் சுற்றி அரண் அமைத்திருக்கும் மனிதன், பொது வாழ்க்கையில் வெளிப்படையாக ஈடுபடுகிறான்.
இதற்கு டயானா மிகவும் மோசமாக பலியானாள்.
சட்டம் இதனை உடனடியாகத் தடுக்க வேண்டும்.

****

Index

Absolute, 118
Abuse, 49
  need for, 54
Accomplishment, 56, 60, 313, 422
  different sides of, 270
  secret of, 146
Act, 157
Action, 161
Acts, 220
  one sided, 242
Affection, 63, 368
Ambition
  its result, 416
  results of, 321
Anger, 61
Appearance
  deceptive, 209
  perfect, 209
  values of, 429
Appreciation, 193
  desire to win, 79
Aspiration, 93, 188
  forms of, 248
  psychic's, 439
  results of, 389
Atmosphere
  determines, 291
  negative force, 283
  positive force, 283
Atmosphere,, 8
Attachment, 154
Attentiom, 63
Attention, 328
  lack of, 176
Attitude, 256
  concern, 138
  right, 88
  unconcern, 138
Attitudes, 438
Awakening
  leads to, 402
  the need of, 401, 402
  to supramental consciousness, 402
Awareness, 91
Bad
  relationship with life, 324
Beauty
  attraction, 49
Betrayal, 398
  result of, 156
Birthday, 89
Blushing, 434
Body
  energy in, 106
Buddhi, 386
Capacity
  giving up faith in one's, 93
  inherent power, 250
  results, 285
Change, 23
  forced, 180
  voluntary, 180
Changes
  in society, 379
Character
  individual's, 274
  nature of, 341
Characteristic
  suppressing a, 109
Charecteristic
  suppressing a, 109
Charm, 151
  lingering, 152
Chastity, 205
Cheerfulness, 81
Children, 194
Choice
  different aspects of, 331
  making a, 40
Circumstance
  decides bad, 266
  decides good, 266
Civilities, 89
Coarseness, 368
Combining, 110
Comfort
  results of, 406
Compassion, 207
Competition
  abundance prevents, 272
Compliment, 22
Comprehensive theory, 154
Compulsion
  inner, 282
  outer, 282
  power of, 16
Conceal, 121
Concentration, 123
Conception, 422
  out of human, 143

Concern, 208
  lack of, 208
Condescension, 85, 441
Confide, 217
Confidences
  shared, 123
Conflict
  internal, 173
Consciousness, 8, 115
  knowledge depends on, 416
Consecration, 91, 186, 197, 314
  conscious, 233
  its importances, 314
  its results, 314
  results of, 235, 250
Constitutional Ignorance, 390
Contradiction, 441
  spirit of, 123
Control, 246
Correspondence, 167
Courtesy, 27
Creation, 161, 247
  process of, 434
Culture, 16, 157, 164
  values of, 375
Danger, 150
  transforming, 150
Deceit, 49
Decision
  importance of, 276
  resuls, 130
Delay
  aspects of, 405
  results of, 405
Delicious
  divine aspect in it, 143
Deserving
  different aspects of, 225
Destruction
  need for, 181
Detachment
  result of, 63
Determination, 187
Determinism
  life's, 436
  man's, 436
Development
  stages in, 174
Diplomacy, 337
Discipline, 69
Disclosing, 206
Discrimination, 131
Disease
  cause of, 18
Display
  forms of, 280
Divine
  emergence of, 188
  love for the, 121
  man becoming, 47
Divine Love, 372
Dualities, 155, 298
Dullness, 4
Duty, 151
  performance of, 311
Education
  importance of, 381
Ego, 61, 97, 109, 251, 293
  abolishing, 298
  different nature, 257
  dissolving the, 97
  division, 254
  its view, 282
  overcoming, 229
  results of, 247
  seperates, 295
Elevation, 105
Embarrassment
  overcoming, 348
Emotions, 126, 424
  love, 332
Enemy
  taking an interest in, 148
Energy, 12, 184, 270
  absorbing, 106
  absorption of, 115
  channeling, 301
  exhausting one's, 88
  flow of, 78
  functioning of, 397
  importance of, 276
  interest generates, 118
  movement of, 20, 183
  nascent, 280
  nature of, 227
  physical, 318
  physical level, 384
  results of releasing, 400
  spiritual level, 384
  various actions of, 269
Equality, 252
Equilibrium, 163, 178
  balancing, 366
Events

inner significance, 231
nature of, 394
negative, 251
positive, 251
results of, 134
Ever presense, 120
Evil
conquering, 74
outcome of, 227
relationship with life, 288
solicitude for, 143
Evolution, 4, 61, 161, 385
knowledge of, 134
mental, 357
social,, 357
spiritual, 357
supramental, 357
Excess
aspects of, 411
Existence
invisible senses, 261
Expectation, 56
abscence of, 58, 190
Experience
knowledge gained, 276
organises, 259
Experiences
various forms, 239
Experiment
energy in, 106
Faculty
developing a, 168
Faith, 36
Falsehood, 204, 398
destruction of, 181
Family, 79
importance of, 423
Feelings
immortal, 136
Feminine
principles, 238
Food, 27
Force
play of, 78
Forgetting
advantages of, 56
Form, 4, 194
Formations, 343
Forms
immortal, 136
Fortune
negative response to, 193
Freedom, 153, 179, 426
girl's, 240
its dimensions, 440
its value, 426
result of giving, 42
rewards, 300
Fulfilment, 29
Girl
growth of, 72
God
to man, 233
Good
relationship with life, 288, 324
Good will, 420
energy for, 192
power of, 78
Goodness, 418
Goodwill, 22, 129
Grace, 93, 207, 209
acting in one's life, 425
human choice, 425, 430
way of, 197
Gratitude, 14
makes one, 233
results of, *303*
Greed, 293
Growth
infinite, 336
mental, 367
spiritual, 367
Guru
spiritual, 81
Harmony
creating its centre, 377
Hatred
expressions, 212
High
low relating to the, 83
Hour of God, 47
Human choice, 257, 322
its power, 285
Human Choice, 184
Human growth
grades of, 220
Human nature, 144, 210
compromise, 224
transforming, 193
Human organisation
powers of, 437
Human personality, 392
growth of, 392
Human Response, 193

Humour
rsult of, 333
Husband
relationship with wife, 376
Idealism, 270
Ideas
acceptance of, 279
Ignorance, 422
Ill will, 44
Imagination
out of human, 143
results of, 127
Imitation
excels, 166
results of, 350
Imperfection
leads to perfection, 389
Indecision, 186
Indications, 399
Indifference, 208
Individual, 51, 329
emergence of, 309
the emergence of, 294
Individuality, 46, 105, 153, 236, 295, 329
emerging, 56
Indolence, 297
Inferiority, 189
Infinite
infinitesimal, 171
infinitesimal in the, 171
Infinitesimal
infinite in the, 171
infinite is in the detail, 172
Infinity, 120, 129
discoverings, 115
Initiative, 44, 241
Injustice, 195
Inner
acts, 220
correspondence, 67
reflection of, 265
right, 220
inner correspondence, 55
Inner effort
growth, 126
Inner- outer correspondence, 352
Inner realities
guiding, 239
Inner truth, 289
Inner-Outer
correspondence, 242
Inner-Outer correspondence, 345
Inspiration, 184
Instantaneous, 93
Insularity, 288, 416
Integral yoga, 202
Integration, 153
Interest, 117, 208
lack of, 208
Interference, 240
Intimacy, 267
Involution, 385
Irony, 65
Jane Austen
creativity, 213
geniusness, 213
writing of, 72
Jealousy, 186
abscence of, 272
Judgment, 354
Justice, 243
God's, 195
Karma
giving up faith in, 93
Knowledge, 10, 197, 204, 422
abscence of, 67
Accomplishment, 387
effects of, 289
lack of, 339
observation, 217
organising, 217
Language
different aspects of, 138, 354
elegant, 36
Laughter, 271
Laws
grace is beyond, 207
study of life's, 204
Leadership
following of, 295
Leisure
results of, 406
Letter
emotions involved, 215
Letter writing
aspects of, 396
Liberty, 236
Life
accomplishment, 60
facts of, 327
flow of energy, 384
infinite, 336
intentions of, 303
invisible senses, 261

- logic of, 65
- movements of, 310
- negative serving, 439
- opposites of, 355
- positive serving, 439

Life Response, 114
- understanding life, 112

Limitation, 422

Listening, 279
- results of, 231

Literature
- excels, 166

Love, 34, 121, 206
- expressions, 212
- forms of, 131
- its nature, 356
- movement of, 210
- power of, 16
- process, 212

Lover
- nature of, 356

Low
- behaviour of the, 83
- demand of the, 29

Man
- action, 223
- capacities, 223
- different aspects of, 353
- his uniqueness, 351
- infinite, 336
- laws of life, 31
- microscopic vision, 217
- natures of, 307
- qualities of, 306
- responsibilities, 223
- self centered, 248, 433
- the determinant, 291
- the Divine in, 47

Mankind
- goals of, 428

Man's
- movements of, 310
- social endowments, 338

Many
- with respect to One, 368

Marriage, 46, 70, 136, 154
- experiences gained, 365
- its importance, 378
- oppurtunity in, 88
- reasons for problems in, 115
- social norms, 137

Marvel, 74

Masculine
- principles, 238

Meanness, 284

Memory, 232
- aspects of, 414

Mental
- values of, 305

Message
- different aspects of, 342

Methods
- depends upon planes, 343

mind
- great, 49
- small,, 49

Mind, 6, 12, 115, 201
- aspects of, 319
- development, 198
- divides, 295
- functioning, 262
- functions of, 365, 394
- growth of, 63
- its divisions, 394
- making a choice, 63
- powers of, 333
- results of, 356

Mind's
- interference of, 56

Miraculousness, 93

Miserliness
- its conception, 144

Money, 25
- importance of, 430

Mother
- her role, 379

Mother's
- rules of life, 369

Motives, 438

Neglect, 14, 177
- lack of, 176
- reason for, 177

News, 146
- nature of, 129, 216

Nine levels, 107, 202

Nostalgia
- its experiences, 410

Obligation
- different aspects of, 407

Observation
- selective, 300
- values of, 381

Obsession, 192

occasion

types of, 221
Old age, 18
Omen, 261
One
with respect to Many, 368
Opening, 346
depends on character, 346
porogress made, 346
Opportunities
creating, 167
Opportunity
everything is an, 165
Opposite
accepting of the, 199
Opposites, 110
Opposition, 173
movement of, 187
Oppurtunity, 10, 88
Awareness of, 115
being unaware of, 95
marriage provides psychological, 115
response to, 103
Optimism
opportunities, 124
Organaisation
different aspects of, 232
Organisation, 79
aspects of, 278
results of, 421
outer
reflection of, 265
Outer
correspondence, 67
Outer reality, 289
Pain
results of, 226
Parents
relationship with children, 376
Partiality
effects of, 375
Passion
mental, 390
physical, 390
vital, 390
perfection
results of, 387
Perfection, 4, 408
in relationships, 409
infinite abundance, 409
Personality, 3
Conscious of, 341
sub-conscious of, 341
what determines, 3
Perversity, 284, 304
Pets, 107
Physical
functioning, 262
Physicality, 319
Pity, 207
Plane
significance of, 85
Poetry
speaks out, 229
Porgress, 60
Power, 85
improper exercise, 302
not seeking, 189
reservoir of, 104
Practical ignorance, 383
Prayer, 201
Precision, 408
Preoccupation, 162
Pride, 109
inverted, 109
Problem, 93
solution lies in the, 93
solving, 167
solving a, 67
Progress, 88
human, 182
man's choice, 436
Promises, 394
Proposal, 128
Prose
forms of, 229
Prosperity
results of, 320
Prudence, 232
Psychic
emerging, 42
its emergence, 294
its results, 251
role of, 377
Psychic education
results of, 351
Public opinion
its results, 441
Punctuality, 133
values of, 133
Purity
the Divine, 292
Rasi, 147
Rational, 235
Reading

results of, 306
Real idea, 36
Reality, 6
Reason, 23, 58, 391
Receptivity, 346
Recognition, 177
Recollections, 49
Reconciliation, 360
Refusal
its strength, 290
Regression, 329
Relationship, 206
conscious, 371
courtesy in, 27
increase in intensity of, 156
sub-conscious, 371
Remembrance, 197
Resilience, 336
Resistance
to change, 297
Resources
in nature, 420
Respectability, 380
Results
in different planes, 285
Retaliation, 377
Right
attitude for, 88
Right attitude, 136
Rise
qualification to, 54
Romance, 36
Rules
knowledge of, 189
Rumour, 146
spreading, 146
Rumours
negative, 334
positive, 334
Sachchidananda
aspects of, 25
Safety, 151
Samadhi
consecration, 91
Sanction, 14
Sarcasm, 157
results of, 304
Scope, 95
Secrecy
necessity of, 208
Secrets
outcome of, 229
Self Absorption, 95
Self awareness, 79
Self deception, 155
Self importance, 110
Self- righteousness, 284
Self-denial
its goodness, 292
Self-discipline, 246, 362
Selfishness, 18, 40, 193, 293
transformation of, 70
Self-knowledge, 327
Seniority, 272
Sensation, 326
Senses, 6
Sensitivities, 368
physical, 140
vital, 140
Sensitivity, 106, 157, 418
types of, 263
Shame, 434
Siblings, 194
Silence, 314
inner, 122
spiritual, 122
supramental, 122
Silent will, 189
Sincerity, 103, 197, 313, 314, 346
result of, 67
results of, 313
Skill, 184
Slip, 147
Smile, 203
Snob, 3, 83
Social
its ideals, 306
Social force
neutrality of, 385
Social movement, 83
Society, 103
changes of, 259
changes seen, 370
disciplines, 256
influence of the treatment of, 153
invisible senses, 261
laws governing, 374
nature of, 370
protects, 375
Solution, 93
Sorrow
results of sharing, 216
Space, 358
Speaking out

results of, 219
Spirit
aspects of, 417
attributes of, 25
its movement, 417
Spiritual
progress, 252
Spiritual awareness, 252
Spirituality
to safeguard, 288
Sri Aravindam, 159, 170, 372
Sri Aurobindo, 89
consecration, 91
Strategy, 438
Strength
source of, 49
Stupidity, 192, 195
Sub conscious, 65, 148
intention, 179
knowledge of, 99
Sub-conscious, 383
nature of, 344
power of, 415
Substance, 115
Subtle, 91
Subtle indication, 147, 165, 173
Success
different planes, 359
Super Grace, 93
Superiority, 189
Superstition, 111
Suppression
result of, 38
Supramental force
results of, 233
Surface mind, 383
Surprise, 134, 190
emotional knowledge, 127
Surrender, 165, 205
negatively, 438
positively, 438
Swabhava, 186
Sweetness
result of, 51
Sympathy, 190, 207
results of, 227
Synthesis, 386
Teaching, 168
Tears
vital defeat, 359
vital joy, 359
Temperamant
results of, 412
Temperament, 357, 412
working of, 357
Temptation, 129
The Ground
ground realities, 431
The Life Divine, 231, 386
understanding, 74
The Quest, 364
The Whole
Knowledge of, 393
Thought, 58, 157, 391
continuity of, 81
giving up, 186
life responds to, 114
Thoughts, 12
immortal, 136
Time, 117, 358
our perception of, 117
simultaneous, 117
Transformation, 34, 38, 74, 103
overmental, 263
supramental, 263
the touch of, 294
Transition
period of, 179
signs of, 33
Travel, 386
Truth, 23, 204
aspects of, 434
result of realising the, 78
Unpleasantness
recollecting, 51
Value
social, 105
Values, 252, 325, 416
different aspects of, 245
family, 34
its value, 426
power of, 102
Vanity, 128, 330
Violence
need for, 181
Virtue
development of, 174
secret of, 278
Vital, 115, 201
functioning, 262
values of, 305
Voice, 271
Whole
indivisible, 148

seeing the, 42
Wife
relationship with husband, 376
Wisdom
right action, 229
Woman
her different aspects, 139
laws of life, 31
nature of, 70
Women
power of, 205
relationship, 205
Wonder, 424
Work
attitude towards, 117
World
functioning, 234
World Government, 392
Yoga, 81, 106, 151
it's ends, 166
Youth, 18